
ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு

மதுரை-1981



விழா மலர்

4-1-81 — 10-1-81

மலர் வாயில்

“தேமதுரத்
தமிழோசை
உலகமெலாம்
பரவும் வகை
செய்தல் வேண்டும்”

என்பது புதுமைக் கவிஞர் பாரதியாரின் பொன்மொழியாகும். நறைபழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகும் நறுஞ்சுவையை நனி சொட்டச் சொட்ட உலகோர்க்கு அறிமுகப்படுத்தவும், உலகோரை அறியச் செய்யவும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் ஒன்றுதான், உலகத் தமிழ் மாநாட்டினைக் கூட்டுவதாகும்.

“தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந் தென்றன் செவியில்வந்து
பாயுநாள் எந்த நாளோ,
ஆரிதைப் பகர்வார் இங்கே?”

என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பேராவலோடு எழுப்பிய பெரு வினாவாகும். அவருடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில்தான் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த பல்வேறு மொழிகளைப் பேசும் பல பேரறிஞர்கள் தமிழின் எழிலைக் காணவும், தமிழ்க் கவிதைகளின் ஏற்றத்தை அறியவும் மதுரையில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டில் கூடுகின்றனர்.

மனிதனின் சிந்தனைத் திறனால் அறியப்படுவது அறிவு; உணர்வுத் திறனால் உணரப்படுவது உணர்வு. சிந்தனைத் திறனால் அறிவியல் வளர்கிறது; உணர்வுத் திறனால் கலையியல் வளர்கிறது.

மனிதனின் புறத்தோற்றப் பொலிவை நாகரிகம் (Civilisation) என்கிறோம்; அகத்தோற்றப் பொலிவைப் பண்பாடு (Culture) என்கிறோம். நாகரிகம் வளர உறுதுணை புரிவது அறிவியல்; பண்பாடு வளர உறுதுணை புரிவது கலையியல்.

மனிதன் தன் அறிவியற் கருத்துகளையும், கலையியற் கருத்துகளையும், சிந்தனையின் தெளிவையும், உள்ளத்தின் உணர்வையும் வெளிப்படுத்தும் கருவி மொழியாகும். மொழியானது மனிதனின் சிந்தனையைத் தூண்டவும் உணர்வைக் கிளரவும் பயன்படுகிறது; அவற்றை வாயுரை வழியாக வெளிப்படுத்தவும் செய்கிறது; அவற்றைச் செயற்படுத்தவும் வைக்கிறது.

மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ளவும், நாகரிகத்தை வளர்த்துக்கொள்ளவும், பண்பாட்டை மேம்பாடு அடையச் செய்து கொள்ளவும், வரலாற்றை உருவாக்கிக்கொள்ளவும், இலக்கியத்தைச் செழிக்கச் செய்யவும், கலைகளை வளர்க்கவும், அறிவியல் கண்டுபிடிப்புகளை உருவாக்கவும் இன்றியமையாததாகப் பயன்படும் ஒரு பெரும் கருவி மொழியேயாகும்.

தமிழின மக்கள் தங்களின் தொன்மையான வரலாற்றுச் சிறப்புகளையும், நாகரிக வளர்ச்சியையும், பண்பாட்டு மேம்பாட்டினையும், கலை உயர்வையும், சிறப்புத் தன்மைகளையும் உலகுக்கு உணர்த்தவே உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறது.

முதன்முதலாக உலகத் தமிழ் மாநாடு மலேசியாவில் நடைபெற்றது. இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு மொழிப்பற்றை முதன்மையாகக் கொண்டு அரசு கட்டில் ஏறிய அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் தமிழகத் தலைநகராம் சென்னையில், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதன் விளைவால் தமிழுக்குப் பற்பல நற்பயன்கள் உண்டாயின. அதற்கடுத்து மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு பாரீசிலும் நான்காம் உலகத் தமிழ் மாநாடு இலங்கையிலுமாக நிகழ்வுற்றன.

'ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு' அறிஞர் அண்ணா அவர்களின் வழிநிற்கும் மாண்புமிகு முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான ஆட்சித் துணையோடும் தமிழ்ச் சான்றோர்களின் ஒத்துழைப்போடும் சங்கத் தமிழ் வளர்த்த மாமதுரைப் பெருநகரில் சிறப்புற நடைபெறுகிறது. இம் மாநாட்டின் நினைவுச் சிறப்பாக நின்று நிலைத்து, என்றும் ஒளிவீசும்வண்ணம் தமிழ்ப் பெருவிழாப் பொய்கையில் இந்த இலக்கிய மலர் மலர்கின்றது.

தலைவர்களின் வாழ்த்து மணங் கமழ, அறிஞர் பெருமக்களின் கருத்துக் கட்டுரைகள் மகரந்தங்களாக, கவிஞர்களின் இனிய கவிதைகள் தேன்துளிகளாக், தூரிகையாளர்தம் ஓவிய இதழ்களோடு இந்த இலக்கிய மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசனின் வீரமுரசம் நீராட்டிற்குப் போயிருக்க, வழிநடைக் களைப்பால் முரசுகட்டில் என அறியாது வறிதே இருந்த கட்டிலில் தமிழ்ச் சான்றோராகிய மோசிகீரனார் படுத்து உறங்கிவிடுகிறார். முரசினை நீராட்டித் திரும்பிய சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையோ இக் காட்சியைக் கண்டதும் வெகுண்டு வாளெடுத்து வீச நெருங்குகிறான். உறங்குவதோ தமிழறிந்த மோசிகீரனார் என்பதை அறிகிறான்; சினவாள் தமிழ் முன் பணிகிறது. தாய்மைப் பண்போடு அருகில் நெருங்கிப் புலவர்தம் உறக்கம் சிறக்கச் சாமரத்தால் குளிர வீசுகிறான்; தமிழைச் சிறப்பிக்கும் புரவலர்தம் பண்பாட்டைத் தெளிவுறுத்தும் இப் புறநானூற்றுக் காட்சியை முகப்போவியமாகவும், 'வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழக'ச் சிறப்பைப் பின்புற ஓவியமாகவும் கொண்டு அமைந்துள்ள இம் மலரில் விளம்பரப் பக்கங்களில்கூட இலக்கியக் காட்சிகள் மிளிரும் வண்ணம் ஓவியங்கள் இணைக்கப்பட்டுள்ளன. வாழையடி வாழையென வந்த தமிழ்ப் புலவர்களின் திருவுருவப் படங்கள் மலரை அணி செய்கின்றன. ஆய்வியலறிஞர்களின் அரிய கட்டுரைகள் மலரைப் பெருமை செய்கின்றன.

பல்வேறு வகையிலும் இம் மலர் சிறப்புற்று விளங்கிட உறுதுணையாக இருந்த ஆய்வியல் அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும், ஓவியர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவியோர்க்கும், குறுகிய காலத்தில் இம் மலரைச் சிறப்பாக உருவாக்கித் தந்த ஹோ அண்டு கம்பெனி நிறுவனத்தார்க்கும் தமிழின் சார்பாகவும் தமிழ்நாடு அரசின் சார்பாகவும் 'மலர்க் குழுவினர்' தமது கனிந்த நன்றியை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இரா. நெடுஞ்செழியன்
மலர்க்குழுத் தலைவர்

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை

முன்னின்று நடத்தும்

மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சரவை

திரு. எம். ஜி. இராமச்சந்திரன்,
முதலமைச்சர்.

திரு. இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.

திரு. ச. இராமச்சந்திரன்,
மின்துறை அமைச்சர்.

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி,
ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

திரு. எஸ். டி. சோமசுந்தரம்,
வருவாய்த்துறை அமைச்சர்.

திரு. இராம வீரப்பன்,
செய்தி - அறநிலையத்துறை அமைச்சர்.

திரு. செ. அரங்கநாயகம்,
கல்வி அமைச்சர்.

திரு. கா. காளிமுத்து,
வேளாண்மைத்துறை அமைச்சர்.

திரு. சி. பொன்னையன்,
கூட்டுறவு - சட்ட அமைச்சர்.

திரு. ப. குழந்தைவேலு,
ஊரக வளர்ச்சி - உள்ளாட்சித்துறை அமைச்சர்.

திரு. எஸ். இராகவானந்தம்,
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

திரு. டாக்டர் எச். வி. ஹண்டே,
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

திரு. கா. இராசா முகமது,
நீர்ப்பாசனத்துறை அமைச்சர்.

திரு. சு. முத்துசாமி,
போக்குவரத்துத்துறை அமைச்சர்.

திரு. சு. திருநாவுக்கரசு,
தொழில்துறை அமைச்சர்.

திரு. எஸ். என். இராஜேந்திரன்,
கைத்தறி - கதர், பொதுப்பணித்துறை அமைச்சர்.

திரு. எம். விஜயசாரதி,
அரிசன நலத்துறை அமைச்சர்.

திருமதி கோமதி சீனிவாசன்,
சமூக நலத்துறை அமைச்சர்.

மலர்க்குழு

தலைவர்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
தமிழ்நாடு நிதியமைச்சர்

துணைத் தலைவர்

திரு. பாவலர் மா. முத்துசாமி
தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி


உறுப்பினர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன், சட்டமன்ற மேலவை உறுப்பினர்.
,, எம். சங்கரலிங்கம், ,,
,, குமரி அனந்தன், சட்டப் பேரவை உறுப்பினர்.
,, கி. வா. ஜகந்நாதன், ஆசிரியர், கலைமகள்.
,, சை. வே. சிட்டிபாபு, துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
,, ஏ. வி. எம். சரவணன், திரைப்படத் தயாரிப்பாளர்.
,, அகிலன், அகில இந்திய வானொலி நிலையம், சென்னை-4.
,, கவிஞர் சுரதா
,, புத்தனேரி ரா. சுப்பிரமணியம்
டாக்டர் இரா. சனார்த்தனம், சட்டமன்ற மேலவை உறுப்பினர்.
திருமதி இராஜம் கிருஷ்ணன், எழுத்தாளர்.
திரு. மணியன், ஆசிரியர், 'இதயம் பேசுகிறது'.
,, கோபுலு, ஓவியர்.
,, ஆர். குழந்தைவேலு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர்.
டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியன், பள்ளிக் கல்வி இயக்குநர்.
,, மா. நன்னன், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு மைய இயக்குநர்.
,, ஔவை நடராசன், மொழியாக்க இயக்குநர்.
,, சுரேஷ் பிள்ளை

உறுப்பினர் செயலர்

திரு. சிலம்பொலி சு. செல்லப்பன்

அச்சிட்டோர் :
ஹோ அண்டு கம்பெனி, சென்னை-600001-இந்தியா.



''வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே.''

सत्यमेव जयते

राष्ट्रपति भवन नई दिल्ली भारत

RASHTRAPATI BHAVAN NEW DELHI INDIA

September 27, 1980.

I am glad to know that the Fifth International Conference - Seminar of Tamil Studies - is going to be held from January 4th to 10th 1981, at Madurai.

Tamil is one of the oldest languages and contains rich literature. International seminars like this afford an excellent opportunity for the Tamil scholars around the world to come together and exchange experiences.

I wish all success to the International Conference.

(N. SANJIVA REDDY)

सत्यमेव जयते

उप राष्ट्रपति, भारत
नई दिल्ली
VICE-PRESIDENT
INDIA
NEW DELHI
September 26, 1980.

On the occasion of the Fifth International Conference-Seminar of Tamil Studies I send my best wishes for the success of the Conference. The rich treasures of Tamil literature lie mostly unopened to the other countrymen. I myself read the Kural in a French translation by Monsieur Diganon of Pondicherry, but have seen no translation of the Kamba Ramayana. I hope that the Conference will consider making translations in Indian languages.

(M. Hidayatullah)

सत्यमेव जयते

PRIME MINISTER

MESSAGE

Tamil is one of the great languages of the world and also one of the oldest. The works of golden Sangam Age, the wise and elevating Kural, the impassioned songs of Nayanars and Alvars, Kamban's celebrated rendering of the Ramayana and Bharati's hymns to freedom are Tamil's proud contribution to Indian and international literature.

My good wishes for the Fifth International Conference of Tamil Studies.

(Indira Gandhi)

New Delhi
October 4, 1980

GOVERNOR OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

RAJ BHAVAN
MADRAS-600 022

November 24, 1980.

MESSAGE

I am glad to know that the Government of Tamil Nadu is organizing V International Conference-Seminar of Tamil Studies at Madurai in collaboration with the International Association of Tamil Research and Madurai-Kamaraj University. I offer my very warm greetings to all the Tamil scholars who will be coming from different parts of the world to participate in this Conference.

A language may be a vehicle of communication, but it is much more than this; with it is bound up the whole culture of the people who use it. Tamil has a long past and has to its credit a vast literature built up through centuries. The ancient Tamil wisdom is enshrined in immortal works like Tirukkural which has been translated in many languages of the world. Tamil is also enriched by many Tamil translations of classics ancient as well as of a later date. The growth and enrichment of Tamil language during modern times, starting from the days of our freedom struggle and covering a span of more than three decades after India became free, has been phenomenal. The fact that the State is employing Tamil as the official language to the largest extent possible is its another source of strength. Against this background, I can visualise a bright future for Tamil.

Tamil is one of the 15 languages enjoying equal status under the Constitution. The sum total of the culture and civilization of India is expressed through all these languages. I do hope that Tamil will play a dynamic role in promoting national integration. The fact that there are large numbers of Tamil speaking people in several other countries of the world should be a further source of strength to Tamil.

My best wishes for the success of the V International Conference-Seminar of Tamil Studies.

Sadiq Ali

(SADIQ ALI)
Governor of Tamil Nadu.

அமுதத் தமிழ் வளர்ப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
எம். ஜி. இராமச்சந்திரன்

''தமிழுக்கும் அமுதென்று பேர்! — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!''

என்று அழகாக எடுத்துச் சொல்கிறார் பாவேந்தர் பாரதி தாசன்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்''

என்று பெருமிதம் பொங்கிட உரைக்கின்றார் மகாகவி பாரதியார்.

உலகத்தின் இருளை அகற்றுவதில் ஒப்பற்று நிற்பன ''மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று, ஏனையது தன்னேர் இலாத தமிழ்'' என்று தண்டியலங்கார மேற்கோள் பாடல் குறிப்பிடுகின்றது.

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் — இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்''

என்று 'தமிழ்விடு தூது' கோடிட்டுக் காட்டுகிறது.

'இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்' என்று பேசுகிறது பிங்கலம். 'தேனுறை தமிழ்' என்று கல்லாடமும், 'தமிழ் தழீஇய சாயல்' என்று சிந்தாமணியும் போற்று கின்றன.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்து ஓர்ஏன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்"

என்று வில்லிபாரதப் பாயிரம் வியந்து போற்று கின்றது.

"தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
கொழி தமிழ்ப் பெருமை யார் அறிவார்?"

என்று குமரகுருபரர் குறித்து மகிழ்கின்றார்.

"எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழ் அணங்கே" என்று மனோன்மணீயம் ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை மகிழ்ந்து பாடு கின்றார்.

இந்நாட்டவர் மாத்திரமல்லர் - தமிழின் அழகிலும் ஆழத்திலும் ஈர்க்கப்பட்டுத் தம்மை இழந்த அயல்நாட்டவர்களும் சூட்டிய புகழாரங்கள் ஆயிர மாகும்.

டாக்டர் கிரௌல் "தமிழ் மொழியை அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளிக் கலன் என்றும் திருக்குறளை அதில் வைக்கப்பட்ட தங்க ஆப்பிள்" என்றும், "தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது" என்றும் புகழ் கின்றார்.

டாக்டர் கால்டுவெல் அவர்கள் "உலகில் மிகச் சிலவான மொழிகளுக்குத்தான் அறிவியல் அடிப்படையிலான இலக்கணம் அமைந்துள்ளது. அவற்றில் தமிழே முன்னிற்கிறது. தொல்காப்பிய மும் நன்னூலுமே இதற்கு மாபெரும் சான்றுகள்" என்று குறிப்பிடுகிறார்.

அப்படிப்பட்ட அருமைக்கும் பெருமைக்கும் உரிய அன்னைத் தமிழுக்கு விழா நடக்கிறது.

ஆராய்ச்சி அறிஞர்கள் கலந்துகொள்கிற அரங்கம் மாநாட்டின் இதயம் போன்ற இன்றிமையாத பகுதி என்றாலும், அந்த நிகழ்ச்சியைத் திருவிழாவாகப் பெருவிழாவாகக் கொண்டாடுகிற பொறுப்பினைத் தமிழக அரசு உவந்து ஏற்றுள்ளது.

தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல - தமிழ் பேசுகிற உலகின் எல்லாப் பகுதி மக்களும் எழுச்சியோடு எண்ணிப் பெருமிதம் கொள்கின்ற இனிய நிகழ்ச்சி யாக இந்த உலகத் தமிழ் மாநாடு அமைந்துள்ளது.

அறிவுலகப் பேராசான் - நமது ஆருயிர் அண்ணன் பன்னிரு ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு, பாரிசிலும் யாழ்ப்பாணத்திலும் மாநாடுகள் நடைபெற்றன. அண்ணன் ஏந்திய ஒளிவிளக்கினைக் காலத்தின் கட்டளையாக அவருக்குப் பிறகு ஏந்துகின்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அவரின் அன்புத் தொண்டனான நானும், வரலாற்றில் அழியாத இடம் பெற்றிடப்போகும் இந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைக் கொண்டாடுவதில் - கோலாகலப் பெருவிழாவாகக் காண்பதில் - மறைந்த தமிழகத்தின் புகழை மீண்டும் நிலைநாட்டிக் காட்டுவதில் - தமிழன் தானும் தாழான்; எவரையும் தாழ்த்தான் என்பதனை அகிலத் திற்கு அறிவிப்பதில் - மட்டற்ற மகிழ்ச்சி அடை கிறேன்.

மொழி மற்றவர்களுக்கு வழியாக இருக்கலாம்; வாய்க்காலாக இருக்கலாம்; மொழி எண்ணங்களை எடுத்துச் சொல்கிற ஊடகம்தானே என்றும் கூடச் சிலர் பேசலாம். தமிழர்களைப் பொறுத்த வரை தமிழ்மொழி வெறும் வழி மட்டுமில்லை; அதுவே நமக்கு 'விழி'. உணர்ச்சி வயப்பட்டு உற்சாகத்தில் உதிர்கின்ற சொற்களில்லை இவை. இரண்டாயிரம் ஆண்டுகாலத் தமிழகத்தின் எழுச்சி - வீழ்ச்சி - வெளிச்சம் - இருட்டு - மேடு - பள்ளம் - இவற்றை உற்றுப் பார்த்தால் - உணர்ந்து நினைத்தால் ஒன்று புலப்படும். தமிழனின் - தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வும் வளமும் அவனது மொழியோடு இரண்டறக் கலந்து இணைந்து இயைந்து நிற்பதைப் பார்க்கிறோம். மொழி வரலாற்றில் அவனது மொழிக்கு ஊறு நேர்ந்த போதெல்லாம் அவனது அரசியல், பொருளாதார, பண்பாட்டின் அடித்தளங்கள் அசைந்திடக் காண்கிறோம்.

ஆகவேதான் தமிழன் தன்னுடன் - தன் ஊனில் - உதிரத்தில் - உணர்வில் - ஒடுங்கி ஒன்றிக் கலந்த தன் தாய் மொழியை உயிர்மூச்சாகப் போற்றிடத் தலைப்பட்டான்.

ஆங்கிலம் உலகின் பல பகுதிகளில் பரவியுள்ள மொழி; மறுக்கவில்லை. இருந்தும் அது ஆட்சி செய்வோரின் அருமை மொழியாகி - சென்ற இடங் களில் எல்லாம் வார்த்தைகளை, வழக்குச் சொற்களை அள்ளிச் சேர்த்துக்கொண்டது. ஆங்கில அகராதியில் 'மிளகுத் தண்ணீர்' என்கிற சொல்கூட அரங்கேறியிருக்கிறது.

தமிழ்மொழி மாத்திரம் அதற்கு நேர் மாறாகக் கலப்புச் சொற்களைக் களைந்து தனது தனித் தன்மைதனைக் காப்பதிலேயே கருத்தாக இருக்கிறது. இந்திய மொழிகள் சிலவற்றில்தான் இந்த மொழித் தூய்மை இயக்கங்கள் அண்மைக் காலத்திலே தோன்றியிருக்கின்றன.

திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவை வடமொழிச் சொற்களை

விரும்பி ஏற்றுக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். மலையாளச் சொல்லகராதியை உருவாக்கிய சுரானந்த் குஞ்சன் பிள்ளை அவர்களே இக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அருகிலிருக்கிற மற்ற மொழிகள் வடசொற்களை விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கிறபோது, தமிழ் மாத்திரம் வடசொற்களை மாத்திரமல்லாது பிற மொழிச் சொற்களைக்கூட ஏற்காமலேயே தனது தனித்தன்மையோடு விளங்குவதைக் காண்கிறோம். தமிழ் மூத்த முதன்மொழி - மாற்றம் - வளர்ச்சி இவற்றிற்கான கூறுகளைத் தன்னகத்தே இயல்பாகவே கொண்ட தனிமொழி என்பதாலேயே இவ்வாறு மிளிர முடிந்தது.

உலகத்தின் பெரும்பகுதியில் ஆங்கிலம் வழங்கப்பட்டும், பெரும்பாலும் அதன் பயன் கருதி மாத்திரமே பலரும் அந்நாள்தொட்டு அதனைப் பயின்று வந்தனர். ஆனால் நமது தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் மேற்கு நாட்டு அறிஞர்கள் பலரும் பெரும்பாலும் பயன்பாடு கருதி அல்ல - அதன் அழகிலும் ஆற்றலிலும் மயங்கியே கற்றனர்.

மேற்கு நாட்டவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காகவே தமிழ் கற்றனர் என்றால், திருக்குறளை - திருவாசகத்தை இலத்தீனிலும், ஆங்கிலத்திலும், மற்ற மொழிகளிலும் பெயர்ப்பானேன்? இந்தத் தமிழ் இலக்கியக் களஞ்சியத்திலே தம்மையே இழந்தனர் என்பதுதான் உண்மை.

'சிந்து வெளி நாகரிகம்' அழிந்துபட்டதற்கான காரணங்களை ஆராய்ந்த அறிஞர்கள் ஒன்றை உறுதியாகக் குறிக்கின்றனர். மாறிவரும் காலத்தோடு மாற இயலாத நாகரிகம் - வெளி நாகரிகத் தாக்குதல்களைத் தாங்க இயலாத நாகரிகம் - ஆகவே அது அழிந்துபட்டது என்பது அவர்கள் கருத்து. இது மொழி வரலாற்றிற்கு முற்றிலும் பொருந்துவதாகும். இலத்தீன், வடமொழி போன்றவை நடைமுறை மொழிகளாக இல்லாது போனதற்கே அடிப்படைக் காரணம் மக்களால் அது பேசப்படவில்லை என்பது மாத்திரமல்ல - மாறிவரும் காலத் தேவைகளுக்கு ஏற்ப அவைகளால் வளைந்து, நெளிந்து புதிய வடிவங்களைப் பெற இயலவில்லை என்பதுமாகும். ஆங்கிலம் இதற்கு ஒரு விதிவிலக்கு. 'கொச்சை மொழி' கூட இலக்கிய உத்தியாக ஆங்கிலத்தில் இந்த நூற்றாண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. காலவெள்ளத்தால் கரைக்க இயலாத தனி மொழியாகத் தமிழ் திகழ்வதற்குக் காரணம் - அது கவிதையாகப் பிறந்து - உரைநடையாகத் தவழ்ந்து - வசன கவிதையாக வளர்ந்துகொண்டிருக்கிறது. களவியலில் காணப்படுகின்ற 'பாண்டிய நாடு பன்னீரியாண்டு வற்கடம் செல்ல' என்னும் தமிழும், இன்று கடைக்காரர் பேசுகிற தமிழும் முரண்பட்டவை. இருந்தும் எட்டு நூற்றாண்டுகளில் இத்தனை மாறுதல்களுக்குத் தன்னை உட்படுத்திக்கொண்ட தமிழ், இன்னமும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் பல மாறுதல்களுக்கு உட்பட்டாலும் அதன் தனித்தன்மை மாறாது விளங்கும்; காரணம் அது உயர்தனிச் செம்மொழி.

'தமிழ் உருக்க உணர்வைக் காட்டும் இரக்கத்தின் மொழி' என்றே குறித்தார் தனிநாயக அடிகளார். ஒவ்வொரு மொழிக்கும் ஓர் அடிப்படைக் கூறு உண்டு. அவ்வியல்பில் மாத்திரமே அது சிறந்தோங்கி - பொன்றாப் பொலிவுடன் நின்று நிலைபெறும். ஒரு மொழி கவிதைக்குப் பொருத்தமாக இருக்கும்; மற்றொன்று கட்டளை பிறப்பிக்கவே பொருத்தமாக அமையும். 'அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!' என்று உள்ளத்தை உருக்குகின்ற உணர்ச்சிப் பாடல்களே தமிழில் மிக நன்றாக வடிவம்பெறும் என்பது தனிநாயக அடிகளார் கருத்து. இருந்தாலும், ஆற்றலை வெளிப்படுத்துகின்ற 'கலிங்கத்துப்பரணி', அன்புணர்வை வெளிப்படுத்துகின்ற 'தேவாரம்', 'திருவாசகம்' இரண்டுமே தமிழிலே இடம்பெறக் காண்கிறோம். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை என்கிற ஒன்பான் சுவைகளும் ஒருங்கே பரவி நிற்கிற அழகினைத் தொட்ட இடமெல்லாம் தமிழில் தட்டுப்படக் காண்கிறோம். இன்னதுதான் இம் மொழியிலே சிறப்பாக வரும் என்கிற பொது விதிக்கு மாறாகத் தமிழில் எந்த உணர்வினையும் வெளிக்காட்ட இயல்வதைக் காண்கிறோம். மகாகவி பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' இதற்கொரு பெருஞ் சான்று ஆகும்.

வார்த்தைகள் நடந்தால் வசனம்; நடனமாடினால் கவிதை என்பார்கள். வசனம் என்பதோ கண்ணிலே பட்டுக் கருத்திலே தைக்க வேண்டும். கவிதையோ காதினைத் தொட்டுக் கருத்திலே நிலைத்தாக வேண்டும். 'காதினைத் தொட்டு, என்கிறபோது கவிதைப் பெண்ணுக்கு ஒரு சங்கீதச் சலங்கை அவசியமாகிறது. 'இசை'யோடு சொல்லப்படாத கவிதையோடு இதயம் இசையாது; மனம் ஒன்றாது; கவனம் கலக்காது. கவிதையின் வெற்றி கலகலப்பான ஓசையிலே இருக்கிறது. ஒன்று துள்ளலாக விழும்; மற்றொன்று தழுவலாக வரும். எப்படி இருந்தாலும் ஓசை இருக்க வேண்டும்.

கவிஞன் என்ன நடக்கிறது என்றே சொல்லமாட்டான்; ஒலிக் குறிப்பிலும் ஓசைச் சிறப்பிலுமே அதை உணர்த்துவான். பந்தாடுகிற மகளிரைக் குறிக்கிற சிலப்பதிகாரப் பாடற்பகுதியும், உறங்குகின்ற கும்பகர்ணன் எழுப்பப்படுகின்ற கம்ப இராமாயணப் பாடலும் சான்றுகள்.

கற்பனை இன்றேல் கவிதை இல்லை. அதையே தான் 'உள்ளதைச் சொல்வது அறிவியல்; உள்ளதை உணர்ந்து சொல்லுதல் இலக்கியம்' என்கிறோம். உணர்ந்து சொல்லுகிறபோது கற்பனை கூடவே சேர்ந்துகொள்ளுகிறது.

தமிழில் கவிதை வரும்; கற்பனை வரும்; அறிவியல் வருமா? என்றும் சிலர் கேட்கிறார்கள். அறிவியலைச் சொல்லித் தர இயலுமா? என்பது அவர்களது கேள்வி. தங்களால் இயலாததைச் சில பேர் தமிழால் இயலாது என்று கருதிடவும் பேசிடவும் காண்கிறோம். அது தவறு. ஒரு மொழி ஒரு துறையில் பயன்படுத்தப்பட்டால்தான் அதற்குரிய வார்த்தைகள் வரும். உதாரணத்திற்கு, 'காஸ்மோநாட்' என்கிற ஆங்கிலச் சொல் எப்போது வந்தது? ஆங்கிலம் விண்வெளித் 'துறையில் பயன்படுத்தப்பட்ட பிறகுதானே வந்தது? அதுபோலத்தான் தமிழும் பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்படவேண்டும். இதைத்தானே 1913ஆம் ஆண்டில் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் 'நீரில் இறங்குகிற வரை நீச்சல் வராது' என்று குறித்தார்கள்! தமிழில் மருத்துவம் உண்டு; மருந்தியலும் உண்டு. சித்த மருத்துவத்தின் சிறப்பினைச் செர்மானியர் உணர்ந்த அளவிற்கு நாம் உணர்ந்தோமில்லை. 'ஆடாதோடை' என்ற நம் ஊர் மூலிகை வெளிநாடு சென்று மருந்தாகி, 'ஆஸ்துமாவிற்கு இது தான் அருமருந்து' என்று பாட்டிலில் வந்தால்தானே பாராட்டி வாங்குகிறோம்! மூலிகை - அவற்றின் குணம் - பயன்பாடு - அனைத்தும் அடங்கியது சித்தர்களின் இலக்கியக் கருவூலம். காணக் கிடைக்காத காட்டு மூலிகைபோல எத்தனையோ மருத்துவ முறைகள் தமிழ் இலக்கியத்தில் உண்டு.

தமிழில் அறிவியல் கருத்துகளும் இல்லாமல் இல்லை. 'வலவன் ஏவா வான ஊர்தி' என்பதில் 'விமானம் ஓட்டுதலைப்பற்றிய அறிவியல் சிந்தனை' வெளிப்படுகிறது. 'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது நானாழி' என்கிற ஔவையார் பாடலில் பாஸ்கல் விதி வெளிப்படுகிறது. 'அணுவைப் பிளந்து' என்று வருகிற வரியில் அணுவைக் கூறிடலாம் என்கிற குறிப்பு மேலோங்கி வருகிறது. 'செஞ்ஞாயிற்றுச் செலவும், அஞ்ஞாயிற்றுப் பரிப்பும், பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்' என்பதில் வானவியலில் வளர்ந்தமைந்த அறிவு புலப்படுகிறது. குறுந்தொகையில் வருகிற 'சேமச்செப்பு' என்கிற சொற்றொடரில் 'தெர்மாஸ் பிளாஸ்கின்' தத்துவம் தெரிகிறது.

இப்படி வேதியியல், விலங்கியல் மாத்திரமல்ல - தமிழில் தாவர இயல், புவியியல், வானவியல் ஆகியனவும் செழித்து நிற்பதனைக் காணுகின்றோம்.

பழமைக்குப் பழமையான மொழி தமிழ் என்றால் புதுமைக்குப் புதுமையான மொழி தமிழ். அப்படிப்பட்ட 'என்றுமுள தென்தமிழுக்கு'த்தான் இன்று மாநாடு நடக்கிறது.

இந்துக்கள் (வைணவர்கள், சைவர்கள் முதலானோர்), சமணர்கள், பௌத்தர்கள், இசுலாமியர்கள், கிறித்தவர்கள் - இப்படி எல்லாச் சமயத்தவர்களாலும் வளர்க்கப்பட்ட தனிப்பெருமை தமிழுக்கு மாத்திரமே உண்டு. இது ஆங்கிலத்திற்கும், உலகிலேயே அதிகம் பேர் பேசுகின்ற சீன மொழிக்குங்கூட இல்லாத பெருமைகளாகும். நெஞ்சிருக்கும் வரை நினைவிலிருக்கிற ஒரு பெருமை தமிழுக்கு என்னவெனில் - தமிழிலே கவிதை பாடியவர்கள் எந்தக் கவிப் பரம்பரைக்கும் வழிவழியாகச் சொந்தக்காரர்கள் அல்லர். வணிகர்கள், வள்ளல்கள், அரசர்கள், ஆளப்பட்டோர், கணக்கர்கள், கற்றறிந்த பெருமக்கள் இப்படி எல்லாத் தரப்பினரும் தமிழுக்கு அணி செய்தனர். இதுவே தமிழ் மொழிக்கு அமைந்திருக்கிற தலையாய சிறப்பு என்று நான் கருதுகின்றேன்.

இத்தகைய தமிழுக்கு மாநாடு நடக்கிறது என்பதிலே தமிழர்களாகிய நாமெல்லாம் பூரிப்பும் பெருமையும் அடைகிறோம்.

உலகளாவிய பொது நெறித் தத்துவங்களை உடையது தமிழாகும். தமிழர்களின் நாகரிகமோ தொன்றுதொட்ட ஒன்றாகும்.

உலக வரலாற்றினை உணர்ந்து பார்த்தால் - ஏறத்தாழ 1900 ஆண்டுகளுக்கும் முன்னர் - மேற்கில் டிராஜன் என்பவனது ஆட்சிக்காலத்தில் உரோமாபுரிப் பேரரசு உச்சநிலை அடைந்திருந்தபோது - கிழக்கில் பசிபிக் சமுத்திரத்திலிருந்து காஸ்பியன் கடல் வரை - அட்லாஸ் மலைகளிலிருந்து இமாலயத் தொடர் வரை சீனப்பேரரசு எழுந்து சிறந்தபோது, தமிழில் ஆழ்ந்த கருத்தமைந்த அழகான கவிதைகள் சிறந்த - உயர்ந்த - இலக்கியத் தகுதிகளோடு பாடப்பட்டுள்ளன என்பதனை உணருகின்றோம்.

கிரேக்க - உரோமானிய இலக்கியத்தின் இதிகாச காலம், சீனத்தின் உன்னத நேரம், போலவே சங்க காலம் - தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று கருதப்படுகிறது. அப்படிச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மரபிலேதான் - சங்கம் கண்ட சரித்திரப் புகழ் பெற்ற மதுரை மூதூரில் - ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகின்றது.

அகம், புறம் என்று இலக்கியத்தில் கூறுகளைக் காட்டி, களவியல் கற்பியல் என்ற பிரிவுகளையும் நிலைநாட்டி நிற்பது தமிழ் இலக்கியம்.

மற்ற மொழிகள் காதலுக்கு இலக்கியம் படைத்திருக்கலாம்; தமிழ் மொழியோ காதலுக்கு இலக்கணம் கண்ட மொழி. அந்த்

மொழிக்குத்தான் - மூவாத - மூத்தும் முதிராத - தமிழுக்குத்தான் - இப்போது மாநாடு நடக்கிறது.

புதுமைக் கருத்துகள் மாத்திரமல்லாமல் - உலகம் அளாவிய பொதுமைக் கருத்துகளும் அடங்கியது தமிழ் இலக்கியம் என்று மொழிந்தால் அது மிகை யாகாது.

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றன், 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்று எடுத்துச் சொன்ன திருமூலர், தமிழில் எழு தப்பட்டும் 'தமிழ்' என்றுகூட எங்குமே பேசாமல் மனித குலத்திற்கே பெருவிளக்காக எழுந்து வழி காட்டும் ஏற்றமிகு . தமிழாசான் திருவள்ளுவர் போன்றோரால் தமிழ் இலக்கியம் உலக அரங் கிலே இடம் பெறுகிறது.

வேதத்தின் பொலிவு, வேதாகமத்தின் கனிவு - இத்தனைக்கும் - ஒரு நூல் - மானிட வர்க்கத்தின் மாபெரும் தத்துவப் பேழை என்று 'திருக்குறள்' உலகோரால் உணர்ந்து போற்றப்படுகிறது.

திருக்குறளை உலகிற்குச் சொன்னவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் டாக்டர் போப், வீரமா முனிவர், ஆல்பர்ட் சுவைட்சர், வின்சென்ட் சுமித் போன்றோராவர்.

ஒரு மொழிக்கோ, ஓர் இனத்திற்கோ உரிய நூலாக இல்லாமல் உலகிற்கே வழிகாட்டும் ஒப்புயர் வற்ற பெரு நூலாகத் திருக்குறள் விளங்குகிறது.

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

என்றாரே வள்ளுவர். பொறுமை உள்ள புதிய உலகம் காணுதற்கு அந்த ஒரு குறள் வழிகாட்டு வது போதாதா?

வளர்ந்து நின்றுவிட்ட மொழி அன்று தமிழ். அது வளருகின்ற - என்றும் வளர்ந்து சிறந்து ஓங்கு கின்ற உயர்தனிச் செம்மொழியாகும்.

விடுதலை வேள்வியில் பாரதியார் தனது தமிழ்க் கவிதைகளால் நாட்டு மக்களுக்கு வேகமும் விறு விறுப்பும் ஊட்டிடவில்லையா?

''சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்; — இனி அஞ்சிடோம்''

என்று தமிழ் அவனைச் சாகாவரம் பெற்ற சரித்திரக் கவிஞனாக ஆக்கிவிடவில்லையா?

''சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்'' என்று பெண் விடுதலை பேசிய வள்ளுவனுக்குப் பிறகு பாரதியார் பாட வந்தார். அவருக்கும் பிறகு பாவேந்தர் வந்தார்.

''பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே''

என்றல்லவா பாடி வைத்தார்?

கல்லாதவன் விலங்கு - ஆமாம் - அது வள்ளுவர் காலம். பாவேந்தர் காலத்தில் அதுவன்று நிலைமை.

''கல்வி நல்காக் கசடர்க்குத்
தூக்குமரம் அங்கே உண்டாம்''

என்றல்லவா பாடுகின்றார்! கல்லாதவன் பழிக் கப்பட்டது பழங்காலம்; கற்றவனே பிறரைத் திருத்தாமல் இருக்கின்றானே என்ற பழிக்குக் காரணமாவது இக்காலம்.

புத்தம் புதிய புரட்சிக் கருத்துகளுக்குத் தமிழிலே என்றுமே பஞ்சமில்லை.

தமிழ்மொழியின் வேர்கள் பழமையானவை. ஆனால் அதன் பூக்கள் புத்தம் புதியவை.

கடல் தாண்டி வளர்ந்ததோடு மாந்தர் மனத்தையாளும் மங்காத புகழுக்குச் சொந் தமான தமிழுக்கு,

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்''

என்கிற பாரதியின் பாட்டு வரிகளுக்குச் சந்தம் கூட்டும் வகையில் உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது.

வெறும் ஆரவாரத்திலும் — வெற்று முழக்கங் களிலும் கலைந்து போகிற மாநாடாக இது அமைந்துவிடாது. தமிழ்மொழியின் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க எல்லைக் கல்லாக இம் மாநாட்டை அமைக்க முயல்வோம். நமது தமிழ் மொழியில் எவ்வளவோ இலக்கியச் செல்வமிருந் தும், தமிழ்மொழியின் தோற்றம், வளர்ச்சி இவற்றைப்பற்றிய ஆழ்ந்த ஆய்வுகள் பிறர் எதிர் பார்க்கின்ற அளவிற்கு ஏற்றம் பெறவில்லை - முழுவளர்ச்சி அடையவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மொழியியல், எழுத்திலக்கணம், வடிவ இயல், ஒலியியல், உச்சரிப்பு இயல், வேர்ச்சொல் இயல் ஆகிய துறைகளில் மேலைநாட்டு மொழிகள் வளர்ச்சி பெற்ற அளவிற்குத் தமிழ் மொழியில் முயற்சிகள் வளர்ந்தபாடில்லை.

நமது ஒலி உச்சரிப்புப்பற்றிய திட்டவட்டமான கருத்துகள் வரையறை செய்யப்பட வேண்டும். தொல்காப்பியத்தின் பிறப்பியலில் இப்படித்தான் இந்த ஒலி பிறக்கும் என்றெல்லாம் சொல்லப்பட் டிருந்தாலும், தமிழ்ச் சொல் இப்படித்தான்

உச்சரிக்கப்பட வேண்டும் என்கிற கட்டுக்கோப்பை —நிறுவன வாயிலாக நாம் உருவாக்க முற்பட வேண்டும். உதாரணமாக, ஆங்கிலச் சொல்— இப்படித்தான் உச்சரிக்கப்பட வேண்டும் என்பதனைக் கட்டுக்கோப்பாக பி. பி. சி. போன்ற செய்தி நிறுவனங்கள் மற்றும் 'மொழி பேசிக் கருவிகள்' நிறுவுகின்றன. இத்தகைய நிலைகள் தொன்மையான நமது தமிழுக்கும் தோற்றுவிக்கப்பட வேண்டும். இம் மாநாடு இத் துறைகளில் வழிவகை காணும் என்று நம்புகிறேன். வருமானம் தேடும் வழிக்காக மாத்திரமே ஒரு மொழி பயிலப்படுகிறது என்பதில்லை. இலக்கியச் செழுமைக்காகத் தமிழ்மொழி பிற நாடுகளிலும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பிற நாட்டுப் பல்கலைக்கழகங்களிலெல்லாம் தமிழுக்கென்று ஆய்வுத் துறைகள் தோன்றுவதற்கு அரசின் முயற்சி மாத்திரம் போதாது. தமிழின்பால் பற்றுடைய பலரது முயற்சிகளும் இதிலே இணைந்தாக வேண்டும். நமது பெருமைகளை நாமே ஓங்கிய குரலில் ஒலித்துக்கொண்டிருந்தால் போதுமா? மற்றவர்கள் தமிழின் அருமை பெருமைகளை அறிந்துகொள்வதற்கு நாம் ஒவ்வொருவரும் உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

காலத்தின் தேவைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப - எந்தவிதமான புதுமைக் கருத்துகளையும் சொல்லி விளங்கவைக்கிற அளவிற்குத் தமிழ் வளர்ச்சி பெற்றாக வேண்டும். எல்லாமே தமிழில் உண்டு என்பதும், தமிழில் எதுவுமே இல்லை என்பதும் ஆகிய இரண்டும் மிகைக் கூற்றாகச் சிலருக்குப் படலாம். தமிழில் இருப்பதைப் பெருக்க வேண்டும்; இல்லாததை உருவாக்கவேண்டும். இதுவே நமது மொழி வளர்ச்சிக் கொள்கையாக அமைந்திட வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டில் மற்ற மொழிகளில் திறனாய்வுக் கலை வளர்ந்த அளவிற்குத் தமிழில் வளரவில்லை என்பதும் சிந்தனைக்குரியது. திறனாய்வுக்கும்கூடத் திறனாய்வு என்கிற அளவில் மேற்கத்திய மொழிகள் வளர்ந்துள்ள இந்நாளில், நமது மொழியில் திறனாய்வுத் துறையில் தீவிர வளர்ச்சி அமைந்தாக வேண்டும். திறனாய்வு வளர்ச்சி பெறாத இலக்கியத்தில் சுதந்திரமான கருத்துகள் இன்னும் உலவத் தொடங்கவில்லை என்றுதான் பொருள். ஆகவே இந்நிலை மாற்றப்படுவதற்கான வழிகாட்டியாக இந்த உலகத் தமிழ் மாநாடு அமைந்திட வேண்டும்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்று பெரும் பிரிவுகளைப்பற்றிப் பேசுகின்றோம்; என்றாலும் பழங்காலத் தமிழிசை நூல்கள் நமக்கு அகப்படவில்லை என்பது போக - இந்தத் தமிழிசைத் துறையில் ஒருங்கிணைக்கப்பட்ட - ஒருமுகப்படுத்தப்பட்ட - ஒழுங்குபடுத்தப்பட்ட முழுமையான ஆராய்ச்சி நூல் இன்னும் வெளியாகவில்லை என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

'நாடகம்' என்பது தமிழின் பெருங்கூறாக இருந்தும், நாடகம் என்றால் 'மனோன்மணீயம்' என்றேதான் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றோம். அறிஞர் அண்ணா போன்றோர் நாடகத் தமிழுக்குப் பெரும்பணி ஆற்றிய பிறகும், முறையான நாடகத் தமிழுக்கான தொண்டுகள், தொய்வில்லாமல் தொடர்ந்து விரைந்து நடைபெறவில்லை. இயல் வளர்ந்து சிறந்திருக்கிற அளவிற்கு, இசைத் தமிழோ - நாடகத் தமிழோ அறிவியல் நோக்கோடு அமைந்த - ஆய்வு அடிப்படையில் வளர்ச்சி பெற்றபாடில்லை. இந் நிலை மாறிட உலகத் தமிழ் அறிஞர்கள் வழிகாட்டிடவேண்டும்.

திட்டமிட்ட உழைப்பும் - கடினமான பணியும் ஒரு மொழியினை வளர்க்கும் என்பதற்குச் சோவியத்து நாடு பெரும் உதாரணமாகத் திகழ்கிறது. சோவியத்து நாடு விடுதலை பெற்றபோது அங்கு வழக்கிலிருந்த கிர்கிஸ் என்கிற மொழியில் ஒலிக்கூறுகள் இருந்தனவே தவிர, அதற்கென்று வரிவடிவம் அமைந்திருக்கவில்லை. இருந்தாலும் அரை நூற்றாண்டுக் காலத்திற்குள் - அம்மொழிக்கென்று வரிவடிவம் கண்டுபிடிக்கப்பட்டு, அம்மொழியிலேயே எழுதி 'ஆராய்ச்சிப் பட்டம்' பெறுகிற அளவிற்குச் சோவியத்து மக்கள் அம்மொழியினை வளர்த்துள்ளார்கள். அதைப் போலத்தான் மக்களின் - அரசின் - ஆராய்ச்சியாளரின் ஒருங்கிணைந்த பணியினால் தமிழ் மொழியை ஒரு நவீனமான அறிவியல் கருவியாக உருமாற்றலாம் என்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்தச் சூழ்நிலைகளிலும் நமக்கு நம்பிக்கை தருகின்ற ஒன்று நமது அரசு மேற்கொண்டுள்ள எழுத்துச் சீர்திருத்தமாகும். பெர்னாட்ஷா போன்றவர்கள் முயன்றும் ஆங்கிலத்தில் செய்து காட்டமுடியாத எழுத்துச் சீர்திருத்தம் தமிழில் தந்தை பெரியாரின் உந்துதலால் நடப்பது உவப்பினைத் தருகின்றது. வீரமாமுனிவரது சதுரகராதி உருவாக்கப்பட்ட காலத்திற்குப் பிறகு, தந்தை பெரியாரின் நினைவினைப் போற்றுகின்ற தமிழக அரசு இந்த எழுத்துச் சீர்திருத்தப் பணியில் முன்னின்று செயல்படுகிறது.

அரசின் முயற்சியால் ஆட்சிமொழி ஆணையம் அமைக்கப்பட்டு, சட்ட நூல்கள் தமிழில் பெயர்க்கப்படுகின்றன.


அலுவலகங்களிலெல்லாம் தமிழ் மணக்க வேண்டும் என்று நாம் முயன்றாலும் அண்ணாவின் அரசு அமைந்த பிறகுதான், மூவாண்டு முனைப்புத் திட்டத்து அடிப்படையில்,


மூன்றாண்டுகளுக்குள் 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்; என்றும் தமிழ்' என்று விரைந்து செயற் படுகின்றோம். சிறந்த தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்திலும், சீரிய ஆங்கில இலக்கியங்களைத் தமிழிலும் பெயர்க்கின்ற பணியினை அரசு மேற் கொண்டிருக்கிறது. முதிர்ந்து தளர்ந்த தமிழறிஞர் களுக்கு மாதந்தோறும் ஒய்வூதியம் வழங்கப்படு கின்றது. புலவர்களைப் போற்றும் நல்லுணர்ச்சி யால் புலவர்களின் நிறை விழாக்களும் பாராட்டு களும் ஆர்வத்தோடு நமது அரசால் நடத்தப் படுகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உரு வாக்கமும் தொடங்கப்பட்டுள்ளது. மொழியைப் படிப்பது வேறு; மொழியில் படிப்பது வேறு. அறிவியல் அனைத்தும் அன்னை மொழியிலேயே பயிற்றுவிக்கப்படுவதற்கான பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. தமிழ்மொழி வளர்ச்சிக்காக அறிஞர் அண்ணாவின் அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களில் சிலவற்றை மட்டுமே மேலே குறித்தேன். தமிழ் வளர்ச்சிக்கென்று இன்னமும் ஆற்ற வேண்டிய பணிகள் ஆயிர மாயிரம் என்பதை நான் மறக்கவில்லை.

பேரறிஞர் அண்ணாவின் வழியில், தடை பல கடந்து அவர் காட்டிய இலட்சியப் பாதையில் நடை போட நம்மையே நாம் அர்ப்பணித்துக்கொண் டிருக்கிறோம். அவர் நினைவாக எழுச்சிப் பணிகள் ஏராளம் இதுவரை நடைபெற்றிருந்தாலும் மதுரை யிலே நடைபெறுகிற மகத்தான இந்தத் தமிழ் மாநாடு அரும்புகழ்வாய்ந்த - அண்ணனது நினை விற்குப் பெரும் புகழைச் சேர்க்கிற பணியாக மிளிர வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. அழகுத் தமிழுக்கு ஆற்றலையும் புகழையும் சேர்க்க அனைவரும் அயராது உழைப்போம் என்ற உறுதிகொள்ளவும் தமிழ்த் தொண்டாற்ற வும் வாருங்கள் வாருங்கள் என்று வணங்கி இரு கரம் கூப்பி உங்களை அன்போடு அழைக்கின்றேன்.

வாழ்க தமிழ் !

வாழ்க அண்ணா நாமம் !





நான்மாடக்கூடலின் நலங்கிளர் தோற்றம்


வாழையடி
வாழையென
வந்த தமிழ்ப் புலவோர்...

போற்றுதும் போற்றுதும்

புலவர்களைப் போற்றுதும்.........

"இருந்தமிழே உன்னாலிருந்தேன்" எனத் தமிழுக்காக உழைத்துத் தமிழை வளர்த்துத் தமிழால் புகழ் பெற்று, உயிர் தமிழுக்கும் உடல் மண்ணுக்கும் ஈந்த புலவர் பெருமக்கள் பலர். அவர்களால் தமிழ் பெருமையுற்றதையும் தமிழால் அவர்கள் புகழுற்றதையும் நாடறியும். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு "பொழுதும் புதிதுண்ணும் நான்மாடக் கூடலில்" நடைபெறும் நாளில் முத்தமிழ் வளர்த்த இருபாற் புலவர்களையும் ஒருமுகப்பட்டுத் தமிழை வளர்த்தமைக்காக நினைவுகூர்தல் சாலப் பொருத்தமானது.

மறைந்த தமிழறிஞர்கள் அனைவருடைய படங்களையும் தொகுப்பதுதான் சாலப் பொருத்தமானதாகும். அவ்வாறாயின் இம் மலர் முழுவதையுமே புலவர் பெருமக்களின் திருவுருவங்களால் அலங்கரித்துவிட முடியும்.

இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள புலவர்கள் தமிழுக்கு எவ்வளவு தொண்டாற்றியுள்ளார்களோ அவ்வளவு தொண்டு இதன்கண் இடம் பெறாதவர்களும் ஆற்றியுள்ளார்கள் என்பதை யாவரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது. எனினும் இடம், பொருள், காலம் ஆகிய மூன்றின் சுருக்கத்தையும் கருத்துட் கொண்டு இயன்றவரை புலவர் பெருமக்களின் படங்களைத் தொகுத்துள்ளோம்.

தமிழுக்கு உழைத்த அனைவருமே தமிழ்த் தாயின் அரும்பெருஞ் செல்வர்கள்தாம். எனவே, மறைவுற்ற புலவர் பெருமக்கள் அனைவருடைய புகழையும் பெருமையையும் நினைவுகூர்ந்து அவர்களைப் போற்றும் வகையில் இத் தொகுப்பினைத் தமிழ்ப் பெருமக்கள் முன் படைத்துள்ளோம்.


இரா. முத்துக்குமாரசாமி

படங்கள் உதவி :

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1.




சிவஞான முனிவர்
—1785
சிவஞான சித்தியார் சிற்றுரை
தொல்காப்பியச் சூத்திர விருத்தி
கண்டு தமிழ் மணம் பரப்பியவர்



காஞ்சிபுரம் இராமசாமியார்
1735—1817
செந்தமிழ் நூல்களைச் சீருறப்
பதிப்பித்தவர்



தஞ்சை வேதநாயகர்
1774—1864
பேர்பெற்ற பெத்லகேம்
குறவஞ்சி படைத்தவர்




மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்
1815—1876
சிற்றிலக்கியங்களும் புராணங்களும்
சீருடன் படைத்தவர்



ஆறுமுக நாவலர்
1822—1879
வசனநடை கைவந்த வல்லாளர்



இராமலிங்க அடிகளார்
1823—1874
'திரு அருட்பா' தந்தவர்



சி. தியாகராசனார்
1826—1888
திரிசிரபுரம் மகாவித்துவான்
மாணாக்கர்,
தமிழ்ப்பேராசிரியர்; தகும் நூல்காரர்



மாயூரம் ச. வேதநாயகர்
1826—1889
முதல் தமிழ் நாவலை
முடித்தளித்த செம்மல்



எச். ஏ. கிருஷ்ணனார்
1827—1900
‘இரட்சணிய யாத்திரிகம்’
எழிலுடன் படைத்தவர்



பம்மல் விசயரங்கனார்
1830—1895
பந்தமிழில் பாடநூல் படைத்தவர்



சி. வை. தாமோதரனார்
1832—1901
கலித்தொகையையும்
சூளாமணியையும்
கவினுறப் பதிப்பித்தவர்



மாம்பழக் கவிச்சிங்க நாவலர்
1836—1886
மாங்கனியொத்த தேன்கவி நூல்
படைத்தவர்



பூண்டி அரங்கநாதர்
1844—1893
'கச்சிக் கலம்பகம்' கவினுறப்
பாடியவர்



சூளை சோமசுந்தரனார்
1846—1901
சைவசித்தாந்தத்தில்
சண்டமாருதம் அனையார்



வ. த. சுப்ரமணியனார்
1846—1908
அருணகிரியின் அருள்திருப்புகழை
அழகுடன் பதிப்பித்தவர்



தஞ்சை கே. எஸ். சீனிவாசனார்
1850—1929
தமிழ் வரலாறு' தனி நூல் கண்டவர்



சர் பொன்னம்பலம் இராமநாதனார்
1851—1930
பகவத் கீதைக்குச் சைவசித்தாந்த
விளக்கவுரை கண்டவர்



சர் பொன்னம்பலம் அருணாசலனார்
1853—1924
இலங்கையில் தமிழ்ச் சங்கம்
நிறுவியவர்



வெண்பாப்புலி வேலுச்சாமியார்
1854—1926
கொஞ்சு தமிழில்
குறவஞ்சி நூல் படைத்தவர்



பெ. சுந்தரனார்
1855—1897
மன்னுபுகழ் 'மனோன்மணீயம்'
படைத்தவர்



வி. கனகசபையார்
1855—1906
'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு
முற்பட்ட தமிழகம்' எனும்
அரிய நூல் படைத்தவர்



ஆ. சிங்காரவேலனார்
1855—1931
'அபிதான சிந்தாமணி'
அழகுறப் படைத்தவர்



டாக்டர் உ. வே. சாமிநாதனார்
1855—1942
தமிழ் நூல் பதிப்பிப்பதில்
தலையாய புகழ் கண்டவர்



ச. பூபாலனார்
1856—1920
தமிழ் வரலாறு
தகவுடன் வரைந்தவர்



மாகறல் கார்த்திகேயனார்
1857—1916
முதன்முதலாக 'மொழிநூல்' ஆக்கியவர்




வெ. ப. சுப்பிரமணியனார்
1857—1946
கம்பன் சாரத்தைக் கவினுறத் தொகுத்தவர்



ஆ. முத்துத்தம்பியார்
1858—1917
முதல் கலைக்களஞ்சியமான 'அபிதான கோசம்' படைத்தவர்



எஸ். எம். நடேசனார்
1859—1906
தென்னகப் பழங் கதைகளைத் தேனெனத் திரட்டியவர்



தஞ்சை ஆபிரகாம்
1859—1919
'கருணாமிருத சாகரம்' கவினுறப் படைத்தவர்



பண்டித சவரிராயனார்
1859—1923
'தமிழன் ஆண்டிகுவரி' தனி இதழ் நடத்தியவர்



திரு. நாராயணனார்
1861 - 1947
'செந்தமிழ்' பதிப்பாசிரியர்
மாறனலங்காரம் பதிப்பாசிரியர்



பின்னத்தூர் அ. நாராயணசுவாமி
1862—1914
ஏற்றமிகு கலித்தொகையை
எழிலுறப் பதிப்பித்தவர்



கோ. வடிவேலனார்
1863—1936
வேதாந்த வித்தகர்
விரிவான குறளுரை கண்டவர்



ஜே. எம். நல்லசாமி
1864—1920
சித்தாந்த தீபிகையைச்
சீருற நடத்தியவர்



தி. செல்வக்கேசவராயர்
1864—1921
கம்பனும் திருவள்ளுவரும் தமிழுக்குக்
கதியெனச் சொன்னவர்



தி. இலக்குமணனார்
1864—1950
இசைத்தமிழ்ப் பாடல்களை
இன்புற இயற்றியவர்



மு. சி. பூரணலிங்கனார்
1866—1947
தமிழ் இலக்கிய வரலாற்றை
ஆங்கிலத்தில் அழகுற வடித்தவர்



பொ. பாண்டித்துரைத் தேவர்
1867—1911
நான்காம் தமிழ்ச் சங்கம்
நலமுறக் கண்டவர்



அரசஞ்சண்முகனார்
1868—1915
முதற்குறள் விருத்தியை முழுதுங்
கண்டவர்



சீர்காழி முத்துத்தாண்டவராயர்
1868—1930
ஐரோப்பியர்களுக்குத் தமிழ் கற்பித்த
அரும்பெரும் ஆசான்



வி. கோ. சூரியநாராயணனார்
1870—1903
பரிதிமாற் கலைஞராகிப்
பாங்குற நாடகத் தமிழ் வளர்த்தவர்



அ. மாதவையா
1870—1925
பத்மாவதி சரித்திரத்தின்
படைப்பாசிரியர்



ரா. இராகவனார்
1870—1946
பாரி காதையைப் பாங்குறப்
படைத்தவர்



பா. வே. மாணிக்கனார்
1871—1931
பொறியியல் வித்தகர்
அறிவியல் தமிழ் வளர்த்தவர்



வை. மு. சடகோப ராமானுசர்
1871—1910
சிறந்த உரையாசிரியர்
கம்பன் கவியைக்
கவினுறப் பதிப்பித்தவர்



எஸ். கிருட்டிணசாமியார்
1871—1947
சேரன் வஞ்சியைச் சிறப்புற
ஆய்ந்தவர்



இ. வை. அனந்தராமனார்
1872—1931
கற்றோரேத்துங் கலித்தொகையைப்
பதிப்பித்தவர்



வ. உ. சிதம்பரனார்
1872—1936
கப்பலோட்டிய தமிழர்
குறளுரை கண்டவர்



ஞானியாரடிகள்
1873—1942
கந்தன் கருணையைக்
கன்னித்தமிழில் உரைத்தவர்



நா. கதிரைவேலனார்
1874—1907
யாழ்ப்பாணப் பேரகராதியைத்
தொகுத்த பேரறிஞர்



கா. ரா. கோவிந்தராசனார்
1874—1952
இலக்கணப் பெரும்புலவர்



சுவாமி ஞானப்பிரகாசர்
1875—1947
தமிழ்ச் சொற்பிறப்பியல் அகராதியை
ஆக்கியவர்




கா. நமச்சிவாயர்
1876—1937
பெரும் பேராசிரியர், பதிப்பாசிரியர்,
பாடநூலாளர்



மறைமலையடிகளார்
1876—1950
தனித்தமிழியக்கத்தின்
தானைத் தலைவர்



செய்குத்தம்பி பாவலர்
1876 1950
சதாவதானி, தனிப்பெருங் கவிஞர்




கவிமணி தேசிக விநாயகனார்
1876 1954
சிறுவர்க்கேற்ற சிங்காரக் கவி
படைத்த குழந்தைக் கவிஞர்



எஸ். அனவரதவிநாயகனார்
1877 1940
அரிய நூல்களை அழகுடன்
பதிப்பித்தவர்




மு. இராகவனார்
1878 1960
ஆழ்வார்கள் காலநிலையை
ஆராய்ந்துரைத்தவர்



சி. கணேசனார்
1878 1958
தொல்காப்பிய உரைகளை
நன்முறையில் பதிப்பித்தவர்



சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணியனார்
1878 1961
பெரியபுராணப் பேருரையாளர்



இராஜாஜி
1878—1972
இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தவர் - திறக்குறளை ஆங்கிலத்தில் பெயர்த்தவர்



கே. என். சிவராசனார்
1879—1941
பழந்தமிழர் வரலாற்றைப் பாங்குறத் தீட்டியவர்




நாவலர் சோமசுந்தர பாரதியார்
1879—1959
தொல்காப்பிய விளக்கப் பொருளுரை கண்டவர்; இந்திக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தவர்



பெரியார் ஈ. வே. இராமசாமி
1879—1973
தமிழின எழுச்சியைத் தோற்றுவித்தவர்; எழுத்துச் சீர்மையைக் கண்டவர்



அ. சக்கரவர்த்தியார்
1880—1960
தத்துவத்துறை வித்தகர் - நீலகேசியை ஆங்கில முன்னுரையுடன் பதிப்பித்தவர்



வ. வே. சுப்பிரமணியனார்
1881—1925
பலமொழி அறிஞர் - திருக்குறள் பதிப்பித்த தேச பக்தர்




பண்டிதமணி மு. கதிரேசனார்
1881—1953
திருவாசகத்திற்குத் தெள்ளுரை
கண்டவர்



சுப்பிரமணிய பாரதியார்
1882—1921
பாட்டுத்திறத்தாலே வையத்தைப்
பாலித்திடவைத்தவர்



வே. இராசகோபாலனார்
1882—1935
அகநானூற்றை
முதன்முதல் பதிப்பித்தவர்



இரசிகமணி டி. கே. சிதம்பரனார்
1882—1954
கன்னித் தமிழ் ரசித்துக்
கம்பன் புகழ் வளர்த்தவர்




திரு. வி. கலியாணசுந்தரனார்
1883—1953
தமிழ்த்தென்றல்போல்
தண்டமிழ் நடை கண்டவர்



தணிகைமணி வ. சு. செங்கல்வராயர்
1883—1971
தேவார திருவாசகத் திருமுறைகளில்
ஒளிநெறி கண்டவர்




ந. மு. வேங்கடசாமியார்
1884—1944
சேரன் சிலம்புக்குச் சிறப்புரை
கண்டவர்



கவிஞர் செகவீர பாண்டியனார்
1886—1967
குறள்வழிநின்று
குமரேச வெண்பா படைத்தவர்



மணி திருநாவுக்கரசனார்
1888—1931
'செந்தமிழ்ச் செல்வி'யின்
முதல் பொறுப்பாசிரியர்



த. வே. உமாமகேசுவரர்
1888—1953
கரந்தைத் தமிழ்ச் சங்கம் கண்டு
புகழ்கொண்டவர்



கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலனார்
1888—1963
சிலப்பதிகார நாடகம்
மணிமேகலை நாடகம்
இயற்றிப் புகழ் எய்தியவர்




சி. எம். இராமச்சந்திரனார்
1888—1970
கொங்குத் தமிழ் வளர்த்த
கோவைக்கிழார்



நாமக்கல் வெ. இராமலிங்கனார்
1888—1972
விடுதலைப் போரில் வீறுகொண்
டெழுந்து, கன்னித் தமிழில்
கவிதை பாடியவர்



கா. சுப்பிரமணியனார்
1889—1945
தமிழ் இலக்கிய வரலாற்றாளர்
தாகூர் சட்டப் பேராசிரியர்



சேலம் இராமசாமியார்
1889—1950
பகவத் கீதையைப்
பைந்தமிழில் தந்தவர்



ஆ. கார்மேகனார்
1889—
செந்நாப் புலவர்
சிறப்புரை வித்தகர்



புலவர் ப. இராமநாதனார்
1890—1972
சைவ சித்தாந்தப் புலவர்
சிறந்த பதிப்பாசிரியர்



நாகை சொ. தண்டபாணியார்
1891—1922
திருக்குறள் விரிவுரை கண்ட
பெருமான்



எஸ். வையாபுரியார்
1891—1956
பதிப்புத் துறையின் பாங்கறி மன்னர்



பாரதிதாசனார்
1891—1964
புரட்சிக் கவிஞர் எனப்
போற்றப்படுபவர்



சுவாமி விபுலானந்தர்
1892—1947
யாழ் நூல் படைத்து இசைத்தமிழ்
வளர்த்தவர்




சர் ஆர். கே. சண்முகனார்
1892—1953
சேரன் சிலம்புக்குச் சிறப்புரை
கண்டவர்




தி. வை. சதாசிவனார்
1892—1960
பாண்டியர், சோழர் வரலாறுகளைச்
சீருடன் தீட்டியவர்



மயிலை சிவமுத்து
1892—1968
சிறந்த பாடநூலாசிரியர்
திருக்குறளுக்குப் புத்துரை கண்டவர்



ந. சி. கந்தையா
1893—1967
தமிழர் பெருமையைத்
தரணிக்கு உரைத்தவர்



சாமி வேலாயுதனார்
1895—1956
திருக்குறட் சொல்லடைவைத்
திறம்படத் தொகுத்தவர்




வி. ஆர். இராமச்சந்திரனார்
1896—1953
அணிமிகு சிலம்பை
ஆங்கிலமாக்கியவர்



டாக்டர் ரா. பி. சேது
1896—1961
சொல்லின் செல்வர்
சுவையான நூல்கள் படைத்தவர்



கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி
1899—1954
'கல்கி' கண்டவர்
வரலாற்றுக் கலையுலக மன்னர்



சாமி சிதம்பரனார்
1900—1961
கம்பன் பதிப்பாளர்
கன்னித் தமிழ் வளர்த்தவர்



மயிலை சீனி வேங்கடசாமி
1900—1980
சமயங்களின் தமிழ்ப்பணியைச்
சமன்செய்து தந்தவர்




டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
1901—1980
மதுரைப் பல்கலைக்கழக முதல்
துணைவேந்தர்; நுண்மதியாளர்;
நூல் பல படைத்தவர்



திருவரங்க நீலாம்பிகையார்
1903—1945
தனித்தமிழில் தண்டமிழ் நூல்
தீட்டியவர்



மு. அருணாசலனார்
1903—1973
தொல்காப்பிய உரைவளம் தொகுத்த
பேரறிஞர்



புதுமைப்பித்தன்
1906—1948
தமிழ்ச் சிறுகதையின் தனிவேந்தன்



ஈ. த. இராசேசுவரியார்
1906—1955
அறிவியல் தமிழை அணியுற
வளர்த்தவர்



ப. ஜீவானந்தம்
1906—1963
புரட்சி எழுத்தாளர்
புதுமைக் கருத்தாளர்



புலவர் குழந்தை
1906—1972
இராவண காவியம் ஏற்றமுடன்
பாடியவர்



டாக்டர் மா. இராசமாணிக்கனார்
1907—1967
பல்லவர் வரலாறு முதல் பல்வகை
நூல் படைத்தவர்




டாக்டர் அ. சிதம்பரநாதனார்
1907—1967
தரணியெங்கும் ‘தமிழோசை’
பரப்பியவர்



திருவாசகமணி
கே. எம். பாலசுப்பிரமணியம்
1908—1974
திருக்குறளை ஆங்கிலத்தில்
கவிதை வடிவில்
தந்து புகழ் எய்தியவர்



பேரறிஞர் அண்ணா
1909—1969
மறுமலர்ச்சித் தமிழை
மலர வைத்தவர்



டாக்டர் சி. இலக்குவனார்
1910—1971
தொல்காப்பியத்தை
ஆங்கிலத்தில் ஆக்கியவர்




அவ்வை டி. கே. சண்முகம்
1912—1973
நாடகமேடைத் தமிழ் வளர்த்த
நற்றிறமையாளர்



டாக்டர் மு. வரதராசனார்
1912—1974
தீந்தமிழ்க் குறளுக்குத்
தெளிவுரை கண்டவர்



டாக்டர் தனிநாயக அடிகள்
1913—1980
தேமதுரத் தமிழோசை உலகெலாம்
பரப்பியவர்



கவிஞர் வாணிதாசன்
1915—1974
பாரதிதாசனாரின் தலைமாணாக்கர்
தமிழ்நாட்டுத் தாகூர் எனப்
போற்றப்படும் நற்கவிஞர்



எஸ். டி. சுந்தரம்
1921—1979
'கவியின் கனவா'ல்
கன்னித்தமிழ் வளர்த்தவர்



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
1930—1959
மக்கள் கவிஞராய் மலர்ந்து
புகழ்மணம் பெற்றவர்




வீரமாமுனிவர்
1680—1747
தீந்தமிழ்க் காப்பியமாம்
தேம்பாவணி தந்தவர்



சீகன்பால்கு
1683—1719
கிறித்துவ வேதாகமத்தின்
முதல் தமிழாக்கம் செய்தவர்




பெப்ரீசியஸ்
1711—1791
முதல் தமிழ்—ஆங்கில அகராதி
முதல் ஆங்கில—தமிழ் அகராதிகளைத்
தொகுத்தவர்



கால்டுவெல்
1814—1891
திராவிட மொழிகளின்
ஒப்பிலக்கணம் கண்டவர்



ஜான் மர்டாக்
1819—1904
அச்சான தமிழ் நூல்களின்
நூற்றொகை தந்தவர்



ஜி. யு. போப்
1820—1907
திருக்குறள், நாலடியார், திருவாசகம்
ஆகியவற்றை ஆங்கிலத்தில்
பெயர்த்தவர்



சாமுவெல் எப். கிறீன்
1822—1884
நூறாண்டுகட்கு முன்
தமிழில் மருத்துவ நூல் படைத்தவர்



டாக்டர் கிரௌல்
1838—1879
குறளை இலத்தீனிலும்
செர்மனியிலும் மொழியாக்கம்
செய்தவர்




எச். ஏ. பாப்ளி
1879—1960
அணிமிகு குறளை
ஆங்கிலமாக்கியவர்



லாசரஸ்
(19ஆம் நூ.)
குறள் நூல் பகுதியை
ஆங்கிலமாக்கியவர்



ஈராசு பாதிரியார்
(19ஆம் நூ.)
சிந்துவெளி நாகரிகம்
திராவிட நாகரிகம் என நிறுவியவர்



அலைகளின் ஆரவாரத்திற்கிடையே ஓர் அமைதிக் கோயில்!
குமரிமுனையிலுள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம்.

அருந்தமிழர் போற்றிய அழகுக் கலைகள்



மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர்
'*நாவலர்*' **டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**, எம்.ஏ.

தமிழர் நாகரிகம்

அரும்பெருந்தமிழர், ஆற்றல்மிகு தமிழால் வளர்த்த அழகு மிளிர் கலைகள் பல, இன்றும் தமிழகத்தில் ஈடும் எடுப்புமற்றுத் திகழ்ந்து வருகின்றன.

உலகில் எத்துணையோ நாகரிகங்கள் தோன்றி, வளர்ந்து, பல மறைந்தும், சில சிதைந்தும், சில இருந்தும் வருகின்றன என்றும், அவற்றில் குறிப் பிடத்தக்க நாகரிகங்கள் இருபத்திமூன்று என்றும், அவற்றிலும் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை தமிழர் நாகரிகம், ஆரியர் நாகரிகம், சுமேரியர் நாகரிகம், அராபியர் நாகரிகம், எபிரேனியர் நாகரிகம், எகுபதியர் நாகரிகம், கிரேக்கர் நாகரிகம், உரோமானியர் நாகரிகம் ஆகியவை என்றும் ஆராய்ச்சி வல்லுநர் கூறுவர்.

கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தோன்றிய **தமிழர் நாகரிகந்தான்,** தென்னாட்டின் திராவிட நாகரிகமாக மலர்ந்து, சிந்துவெளி நாகரிகமாக (அரப்பா-மொகஞ்சதாரோ நாகரிகமாக) மிளிர்ந்து, பின்னர் சுமேரியர் நாகரிகமாக மாறி, அடுத்து அரா பியர் நாகரிகமாக ஆகி, பின்னர் எபிரேனியர் நாகரிகமாகத் தோன்றி, அடுத்து எகுபதியர் நாக ரிகமாக உருப்பெற்று, பின்னர் கிரேக்கர் நாகரிக மாகச் சிறந்து, அடுத்து உரோமானியர் நாகரிக மாகத் திகழ்ந்து, பின்னர் ஐரோப்பாக் கண்டத்தின் நாகரிகமாகக் காட்சியளிக்கத் தொடங்கியது என்று இந்தியாவிலே நீண்டகாலம் வரலாற்று ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருந்த அருட்டிரு ஈராசுப் பாதிரி யார் (Father Heras) குறிப்பிட்டார். மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ள நாகரிகங்கள் பலவற்றிற்கும் தாய்மையானதாகவும், முன்னோடியானதாகவும் விளங்கியது **திராவிட நாகரிகமே** என்று, அவர் அறுதியிட்டு உறுதியாகக் கூறினார். அது காரணம் பற்றித்தான், தம்மை **"நான் ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்த ஒரு திராவிடன்"** **(I am a Dravidian from Spain)** என்று சொல்லிக்கொள்வதிலே அவர் பூரிப்பும் பெருமையும் கொண்டார்.

நாகரிகமும் பண்பாடும்

உலகிலுள்ள பல்வேறு மக்கள் தொகுப்புகளின் அருமை பெருமைகளையும், சீரையும், சிறப்பையும் அளவிட்டு எடைபோட்டுப் பார்ப்பதற்கு, இரண்டு அளவைகளை வைத்திருக்கிறார்கள் அறிஞர் பெரு மக்கள். ஒன்று **'நாகரிகம்'** (civilization) என்பது; மற்றொன்று **'பண்பாடு'** (culture) என்பது. 'நாகரிகம்' என்பது மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது; 'பண் பாடு' என்பது மாந்தனது அகவுணர்வு வளர்ச்சியின் சீர்மையைக் குறிப்பது. மாந்தன் தனது அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும், உள்ளுணர்வுத் திறனாலும் பேணி வளர்த்துவரும் சுவையான உணவு-அழகான உடை-வசதியான உறையுள்-வாய்ப் பான போக்குவரத்துப் பொறிகள் - வளம் மிகுந்த நாடு - நலம் மிகுந்த நகரங்கள் - கல்விச்சாலைகள் - கலைக் கூடங்கள் - இசை - கூத்து - நாடகம் - நாட்டியம்-ஓவியம்-சிற்பம்-விளையாட்டு-வளர்ந்து நிற்கும் வாணிகம் - சிறந்து செயல்படும் தொழிற்

சாலைகள் - அழகான சாலை - வனப்பான பூஞ்சோலை போன்றவைகளெல்லாம் மாந்தனது புறத்தோற்றப் பொலிவுகளைக் குறிக்கும் நாகரிகத்தின் பாற்பட்டவைகளாகும். மாந்தன் தன் சிந்தனையறிவுத் திறத்தாலும், உள்ளுணர்வுத் திறத்தாலும் உள்ளத்தைப் பண்படுத்திப் பண்படுத்தி அன்புடையவன் - அருளுடையவன் - ஈவுடையவன் - இரக்கமுடையவன் - பண்புடையவன் - பக்குவமுடையவன்-வீரமுடையவன்-தீரமுடையவன்-ஊக்கமுடையவன் - உணர்வுடையவன் - மானமுடையவன் - மரியாதையுடையவன் - பற்றுடையவன் - பணிவுடையவன் - தன்னலங்கருதாதவன் - பிறர் நலம் பேணுபவன் - உடைமையை, உடலை, உயிரை ஈபவன் என்ற வகையில் பெயரெடுப்பது, அகத்தோற்றப் பொலிவை உணர்த்தும் பண்பாட்டின் பாற்பட்டதாகும். நாகரிக வளர்ச்சிக்குப் பண்பாடு துணைபுரியும்; அதுபோலவே பண்பாட்டு வளர்ச்சிக்கு நாகரிகம் உறுதுணையாக இருக்கும்.

தமிழர்கள் மிகப்பெருந் தொன்மைக் காலந் தொட்டு, சிறந்த நாகரிகம் வாய்ந்தவர்களாகவும், உயர்ந்த பண்பாட்டைக் கொண்டவர்களாகவும் வளர்ந்தோங்கி வந்த காரணத்தால்தான், தமிழர்கள் **'அரும் பெருந்தமிழர்'** என்று அறிஞர்களால் போற்றப்படுகின்றனர்.

தமிழின் தனிச் சிறப்புகள்

ஓர் இன மக்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்தோங்கி நிற்க வேண்டுமானால், அந்த இனமக்கள் பல்வேறுவகைப்பட்ட கலையறிவு மிக்கவர்களாக இருக்க வேண்டும். மக்கள் கலையறிவில் வல்லமை பெற வேண்டுமானால், அவர்கள் ஆழ்ந்து பரந்து உயர்ந்த கல்வியறிவு பெற்றவர்களாகத் திகழ வேண்டும். ஒரு சமூகம் சிறந்த கல்வியறிவு பெற வேண்டுமாயின், கற்பிக்கப்படும் மொழி செழுமைவாய்ந்த சிறந்த மொழியாக இயங்க வேண்டும். எனவே, மொழியின் சிறப்பைப் பொறுத்துக் கல்வியறிவும், கல்வியறிவின் திறத்தைப் பொறுத்துக் கலையறிவும், அக் கலையறிவின் ஆற்றலைப் பொறுத்து நாகரிகமும் பண்பாடும் சிறந்து விளங்கும் என்பது தெளிவுபடும்.

தமிழர் நாகரிகமும் பண்பாடும் மிகச் சிறப்பாக விளங்கி வருவதற்குக் காரணம், தமிழ்மொழியின் ஆற்றலும், அது வளர்த்த அழகுக் கலைகளுமே யாகும் என்பது வெள்ளிடைமலை.

ஈடும் எடுப்புமற்ற அழகுக் கலைகள் பலவற்றையும் உருவாக்கும் அளவுக்குத் தமிழ்மொழிக்கு அமைந்த சிறப்பியல்புகள்தாம் யாவை? எனின், கூறுதும்.

(1) தமிழ்மொழி இயற்கையோடு இயைந்து நின்று இயற்கையாகவே தோன்றிய மொழியாகும்!

(2) இயற்கையழகும், செயற்கைப்பொலிவும் ஒருங்கே கொண்ட மொழி – தமிழ்!

(3) தோற்றக் காலத்தைக் கணக்கிடமுடியாத அளவுக்குத் தொன்மை வாய்ந்த மொழி– தமிழ்!

(4) பழைமைக்குப் பழைமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் பொற்புள்ள மொழி–தமிழ்!

(5) காலங்கள் பலப்பல கடந்தும் காலமாகாத மொழி–தமிழ்!

(6) மூத்தமொழி எனினும் முதுமைக்கோலம் பூணாமல், கன்னிக்கோலம் பூண்ட மொழி– தமிழ்!

(7) இனிமையான மொழி; எளிமையான மொழி; வளமையான மொழி–தமிழ்!

(8) தொண்டைக்கு அப்பால் போகாமல், இப்பாலேயே பிறக்கும் வல்லோசை, இடையோசை, மெல்லோசை ஆகியவற்றைக் கொண்ட மொழி–தமிழ்!

(9) எழுத்தோசைகளைக் கூட்டினாலே சொல்லோசை பிறக்கும் என்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட மொழி–தமிழ்!

(10) ஐந்து எழுத்துகளுக்குள்ளாகவே பெரும்பாலான சொற்களையும் உருவாக்கும் திறன் படைத்த மொழி–தமிழ்!

(11) பன்னிரண்டு உயிரெழுத்துகள் தனித்து நின்றும், பதினெட்டு மெய்யெழுத்துகளோடு இரண்டறக் கலந்து நின்றும், மெய்யெழுத்துகளை அணைத்துக்கொண்டும் சொற்களைத் தேவைக்கு ஏற்றபடி உருவாக்கும் அரும்மொழி–தமிழ்!

(12) சிறப்பு 'ழ' கரத்தையும், சிறப்பு 'ற' கரத்தையும், சிறப்பு 'ன' கரத்தையும் தனக்கேயுரிய எழுத்துகளாகக் கொண்ட மொழி–தமிழ்!

(13) உலக மொழிகள் பலவும் 'ந', 'ம' என்ற இரண்டு எழுத்துகளை மட்டுமே மூக்கின் துணையோடு பிறக்கும் மெல்லோசைகளாகக் கொண்டிருக்க, வடமொழி 'ங', 'ஞ', 'ண', 'ந', 'ம' என்ற ஐந்து மெல்லோசை எழுத்துகளை மட்டுமே கொண்டிருக்க, 'ங', 'ஞ', 'ண', 'ந' 'ம', 'ன' என்று ஆறு மூக்கின் வழி மெல்லோசை எழுத்துகளைக் கொண்ட சிறப்பான மொழி–தமிழ்!

(14) தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கோண்ட், கூ, ஓராவன் போன்ற பல மொழி களைப் பெற்றெடுத்த பிறகும், சீரிளமை குன்றாமல் இருக்கும் கன்னிமொழி–தமிழ்!

(15) வரிவடிவில் எழுத்துகள் ஒன்றோடொன்று பிணையாமல், தனித்தனியாக நின்று சொற்களை உணர்த்தும் பாங்குடைய மொழி–தமிழ்!

(16) இல்லாத புதிய ஓசையைப் பெறுவதற்கு, ஆங்காங்குப் பயன்படுத்திக்கொள்வதற்கு, ஆயுதஎழுத்து என்ற பெயரில் 'ஃ'ஐ உடைய மொழி–தமிழ்!

(17) 'குற்றியலுகரம்' என்னும் தனிச் சிறப்பைக் கொண்ட மொழி–தமிழ்!

(18) உயிர் – மெய் – உடன்படுமெய் – குறில் – நெடில் – இடைச்சொல் – உரிச்சொல் – சாரியை – உயிரீற்றுப் புணரியல் – மெய் யீற்றுப் புணரியல் – ஒற்று – எழுவாய் – பயனிலை – செயப்படுபொருள் என்பன போன்ற இயற்கையோடு இயைந்த காரணப் பெயர்களைக் கொண்ட இலக்கணத்தை உடைய மொழி – தமிழ்!

(19) பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கியச் செறிவுடையதாய், இலக்கணக் கட்டுக்கோப்பு உடையதாய், போற்றிக் காப்பாற்றப்பட்டு வரும் மொழி– தமிழ்!

(20) வேறு எந்த மொழியின் துணையில்லாமல் தானே தனித்து இயங்கவல்ல மொழி– தமிழ்!

(21) தொன்றுதொட்டு அறம் – அன்பு – அருள் – அடக்கம் – அமைதி – அறிவு – ஆற்றல் – உண்மை – உழைப்பு – நேர்மை – நாணயம் – உயர்வு – ஒழுக்கம் – இரக்கம் – ஈகை – வீரம் – தீரம் – காதல் – கடமை – நீதி – நெறி போன்ற பண்பாடுகளை வற்புறுத்தி வரும் மொழி – தமிழ்!

(22) 'உவமை' என்னும் அணியை மட்டுமே உலக மொழிகள் பலவும் கையாள, அகப்பொருட் செய்யுள்களில் 'உள்ளுறை உவமம்' என்னும் அணியைத் தனிச் சிறப்பாகக் கையாளும் பெற்றி பெற்ற மொழி – தமிழ்!

(23) அறநெறிகளை வற்புறுத்திக் கூறும் செய் யுட்களையும் நூல்களையும் மிகவாகக் கொண்டுள்ள மொழி – தமிழ்!

(24) இயல் – இசை – இயக்கம் என்னும் முத் தன்மையையுடையது மொழி என்பதை உணர்த்தும் முறையில், 'முத்தமிழ்' என்று போற்றிப் புகழப்படும் மொழி – தமிழ்!

முத்தமிழ்

உலக மொழிகளிலே மொழிக்கு மூன்று என்ற அடைமொழி தந்து 'மூன்று தமிழ்' அதாவது **'முத்தமிழ்'** என்று வழங்கப்படுவது தமிழ்மொழிக்கு மட்டுமே அமைந்த தனிப்பெருஞ் சிறப்பாகும். மொழியின் நுட்பங்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து அறியவல்ல சான்றோர்கள் **'முத்தமிழ்'** என்று அழைக்கலாயினர்.

முத்தமிழ் என்பதற்குப் பொதுப்படையாக 'இயற் றமிழ்', 'இசைத்தமிழ்', 'இயக்கத்தமிழ்' அல்லது 'நாடகத்தமிழ்' என்று கூறுவர். இயலுக்கு என்று ஒரு தமிழ், இசைக்கு என்று மற்றொரு தமிழ், நாடகத்திற்கு என்று வேறோர் தமிழ் என்ற அடிப் படையில் மூன்று வகையான தமிழ்கள் தனித்தனி யாக இருக்கின்றனவா? என்றால், இல்லை! 'இய லால் ஆன தமிழ்', 'இசையால் ஆன தமிழ்', 'நாட கத்தால் ஆன தமிழ்' என்னும் மூன்று வகையான தமிழ்களும் இல்லை! அப்படியாயின் ஏன் முத் தமிழ் என்று பேரிட்டு அழைத்தனர் என்று வினவக் கூடும்.

தமிழ்ச் சான்றோர்கள் மொழியின் நுட்பங்களை நன்கு அறிந்திருந்த காரணத்தால், மொழிக்கு **'இயல்தன்மை'**, **'இசைத்தன்மை'**, **'இயக்கத்தன்மை'** அதாவது **'நாடகத்தன்மை'** ஆகிய மூன்று தன்மை களும் உண்டு என்பதைக் கண்டறிந்தனர்.

எடுத்துக்காட்டாக 'வா' என்ற ஓரெழுத்து ஒரு சொல்லைக் கூர்ந்து கவனிப்போம். 'வா' என்று ஏட்டில் எழுதிக் காட்டும்போது, இயலாக நிற்கின்றது. ஒருவன் தன் குழந்தையை 'வா' என்று அழைப்பதாக வைத்துக்கொள்வோம். அப் பொழுது வாயிலிருந்து அன்பு தோய்ந்த, குழை வான ஓசையுடன் 'வா' என்ற சொல் வெளிப்படும். அதேபோது அவனது உடலில் சில பல மெய்ப்பாடு கள் தோன்றும். அவனுடைய கண்கள் ஒளி வீசும்; முகம் பரந்து விரிந்து மலர்ந்திருக்கும்; குழந்தையை வாரி எடுக்க இரு கைகளும் நீளும். இப்படிச் சில பல மெய்ப்பாடுகள் தோன்றும்.

அவனே அவனது வேலைக்காரனை 'வா' என்று அழைப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது 'வா' என்ற இயலோடு சேர்க்கின்ற ஓசையும் மாறும்; மெய்ப்பாடுகளும் மாறும். அதாவது இசை யும் மாறும்; நடிப்பும் மாறும்; வேலைக்காரனை அழைக்கும்போது குழைவு இருக்காது; அதட்டும் அதிகார ஓசைதான் இருக்கும். அவனது முகத்தில்

மலர்ச்சியான மெய்ப்பாடு தோன்றாது. சினத்தை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள் தோன்றும். இரு கை நீட்டி அழைத்து வரவேற்கமாட்டான்; ஒரு கையால் அசைவு காட்டி ஆணையிடுவான்.

அவனே அவனது நண்பன் ஒருவனை வரவேற்ப தாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது 'வா' என்ற இயலோடு சேரும் இசையும், மெய்ப்பாடு களும் வேறுவிதமாக அமையும். நண்பனை அழைக் கும்போது, 'வா' என்ற சொல்லில் அன்பு இருக்கும். குழந்தையிடம் காட்டிய குழைவு இருக்காது; வேலைக்காரனிடம் காட்டிய அதிகாரத் தன்மை யும் இருக்காது. முகத்திலே புன்சிரிப்பு தவழும்; நண்பனை இருகை கூப்பி வரவேற்பான். நண்பனை அழைக்கும்போது, 'வா' என்ற சொல்லோடு சேரும் இசையும் மாறுபடும்; நடிப்பும் வேறுபடும்.

அவனே தன் அன்பு மனைவியை 'வா' என்று அழைப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவனது ஓசையில் அதாவது இசையிலே மாற்றம் ஏற்படுவதையும், மெய்ப்பாடுகளில் அதாவது நடிப்பிலே மாற்றம் ஏற்படுவதையும் காணலாம். அவன் மனைவியை 'வா' என்று அழைக்கும்போது, அந்தச் சொல்லில் கனிவு, பணிவு, குழைவு, காத லன்பு எல்லாம் மிளிரும். அவனது கண்களிலே அன்பு ஒளி ஒளிரும்; முகம் அன்றலர்ந்த செந் தாமரையாக மலரும்; பற்களெல்லாம் வெளியே தெரிய ஏக்கச் சிரிப்பு இருக்கும்; உடல் முழுவதும் வளையும், நெளியும்; கால்கள் நிலை தடுமாறும்; கைகள் மனைவியைக் கட்டி அணைக்க எட்டி நீளும். இப்படியாக மெய்ப்பாடுகள் முற்றிலும் மாறும்.

'வா' என்ற இயற்சொல், குழந்தை - வேலைக் காரன் - நண்பன் - மனைவி ஆகியோரை அழைக்க முற்படும்போது, இடம் - பொருள் - ஏவலுக்கு ஏற்ப, இசைத் தன்மையையும், இயக்கத் தன்மை யையும் மாறி மாறி வேறு வேறு விதமாகப் பெறு கின்றது. சொல்லுக்கு இசைத் தன்மையும், இயக்கத் தன்மையும் (நடிப்புத் தன்மை) வேறுபடும்போது அந்தச் சொல் உணர்த்தும் பொருளும் வேறுபடு கின்றது. எனவே, மொழிக்கு இயல் தன்மையும் - இசைத் தன்மையும் - இயக்கத் தன்மையும் ஆன மூன்று தன்மைகள் உண்டு என்பதைக் கண்டறிந்த காரணத்தால்தான், பழந்தமிழ்ச் சான்றோர், தமிழ் மொழியை **'முத்தமிழ்'** என்று அழைக்கலாயினர்.

கல்வியும் கலையும்

மொழி, கல்வியைத் தருகிறது; கல்வி, கலையை வளர்க்கிறது. 'கல்வி', 'கலை' என்ற இரண்டு சொற்களும் 'கல்' என்னும் பகுதியின் அடிப்படை யாகத் தோன்றுகின்றன. கல்லுதல் - தோண்டுதல் —ஆழ்ந்து காணுதல் - ஆராய்தல். ஆராய்தல் என் பது 'கல்வி', 'கலை' ஆகிய இரண்டிற்கும் அடிப் படையாக அமைந்த பண்பாகும். கற்கக்கூடியது 'கல்வி'; கற்று வளர்க்கக்கூடியது 'கலை'. கல்வி யின்மூலந்தான் கலையை வளர்க்க இயலும். கல் லாமல் கலையை வளர்க்க முடியாது. 'கல்வி' என் பது பண்பு எனக் கொள்ளப்படுமேயானால், 'கலை' என்பது பயனாகக் கொள்ளப்படும்.

கலைகளுக்கெல்லாம் உயிராக அமைவது அழ காகும். அழகை ஐம்பொறிகளின் வாயிலாக உள் ளம் உணர்கிறது. அழகு என்பது உள்ளத்தால் உணரப்படுவது. அழகு என்பது உள்ளத்தே இயல் பாகத் தோன்றி எழும் உணர்ச்சியாக அமைகிறது.

அறிவியலும் கலையியலும்

மாந்தனின் உள்ளத்தே ஊறியெழுந்து உருப் பெறும் கருத்துகளை, உலகோர் இருவகையாகப் பாகுபடுத்துகின்றனர். ஒருவகையை **'அறிவியல்'** (Science) என்றும், மற்றொரு வகையை **'கலையியல்'** (Art) என்றும் பிரிக்கிறார்கள். எது 'அறிவியல்?' எது 'கலையியல்?' என்றால், மாந்தனது அறிவால் அறியப்படுகின்ற அனைத்தும் 'அறிவியல்' என்றும், உள்ளத்தால் உணரப்படுகின்ற அனைத்தும் 'கலையியல்' என்றும் அறிவுறுத்தப்படுகின்றன.

ஞாயிறு ஒரு பெரிய நெருப்புப் பிழம்பாக இருக்கின் றது; கோள்களெல்லாம் அதனைச் சுற்றி வருகின் றன. உலகம் ஞாயிற்றிலிருந்து ஒன்பது கோடியே இருபது இலட்சம் மைல் தொலைவில் உள்ளது; உலகம் தன்னைத்தானே இருபத்தினான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை சுழற்றிக்கொள்கிறது; உலகம் ஞாயிற்றை 365¼ நாளுக்கு ஒரு முறை சுற்றி வருகிறது என்றெல்லாம், அறிவியல் அறிஞன் அறிவால், ஆராய்ந்து அறிந்து கூறுகிறான். இதனை 'அறிவியல்' என்கிறோம்.

செங்கதிரோன் நீலத்திரைக் கடலைக் கிழித்துக் கொண்டு கிழக்கே எழுந்தான்; விரிகதிர்களைப் பரப்பினான்; காரிருள் கடிது ஓடிற்று; பனிப்படலங் கள் மறைந்தன; செவ்வானம் தோன்றிற்று; கதி ரவன் வானவெளியில் பகல்முழுவதும் உலாவினான்; மாலையில் மேலைக் கடலில்போய் மூழ்கினான்; பின் னர், குளிரடைந்து நிலாவாகத் தோன்றினான்; நில வொளி வீசினான்; சிந்தையில் இன்பத்தேனைத் தெளித்தான் என்று கவிஞன் உள்ளத்தால் உணர்ந்த தைக் கூறுகிறான். இதனைக் 'கலையியல்' என் கிறோம்.

மேலும் ஒரு நாட்டின் புறத்தோற்றப் பொலி வாக விளங்குகின்ற 'நாகரிகத்தை' வளர்க்க 'அறி வியல்' பெருந்துணையாக அமைகிறது; அகத்தோற் றப் பொலிவாக விளங்குகின்ற 'பண்பாட்டை' வளர்க்கக் 'கலையியல்' உற்ற துணையாகத் திகழ்கிறது.

அழகுக் கலைகள்

உலகில் அறிவியற் கலையையும், அழகுக் கலைகளையும் எந்த நாடு செம்மையாகவும், சிறப்பாகவும், முறையாகவும், வகையாகவும் வளர்க்கின்றதோ அந்த நாடு நாகரிக மேம்பாட்டையும், பண்பாட்டு உயர்வையும் மிக நல்ல முறையிலே பெற்று விளங்கும் என்பது கண்கூடு. இந்த இலக்கணத்தை முழுமையாகப் போற்றி வளர்த்த காரணத்தால்தான், பண்டைத் தமிழகம் உலக நாடுகளிடையே நாகரிகத்திலும் பண்பாட்டிலும் மிக மேம்பட்டு விளங்கிற்று.

தமிழகம் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் அறிவியலை வளர்க்கத் தவறிவிட்டது என்றாலும், அழகுக் கலைகளை வளர்க்கத் தவறவில்லை.

தமிழகம் வளர்த்த அழகுக் கலைகளில், இன்றைக்கும் உலகம் போற்றிப் பாராட்டி, வாழ்த்தி, வரவேற்கும் நிலையில் சிலபல அழகுக் கலைகள் தமிழகத்திற்குப் புகழையும் பெருமையையும் சேர்த்துக்கொண்டிருக்கின்றன. அவைகளில் மிகச் சிறப்பித்துச் சொல்லக்கூடியவைகள்:

1. **இலக்கியக்கலை**
2. **இசைக்கலை**
3. **நாட்டியக்கலை**
4. **சிற்பக்கலை**
5. **கட்டடக்கலை**
6. **சித்தமருத்துவக்கலை**
7. **சமையற்கலை**

போன்றவைகளாகும்.

தொல்காப்பியம், திருக்குறள், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, நாலடியார், சிலப்பதிகாரம், மணிமேகலை, கல்லாடம், பெருங்கதை, தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், பெரிய புராணம், சீவகசிந்தாமணி, கம்பர் காவியம், வில்லிபாரதம், பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், இராமலிங்க வள்ளலார் திருவருட்பா, தேம்பாவணி, சீறாப் புராணம், சித்தர் பாடல்கள், பல்வேறுவகைப்பட்ட கலம்பகங்கள் - அந்தாதிகள் - அம்மானைகள் - பிள்ளைத் தமிழ்கள் - பரணிகள் - பள்ளுகள் போன்றவைகள், பாரதியாரின் புதுமைக் கவிதைகள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் புரட்சிக் கவிதைகள் போன்றவைகள் எல்லாம் தமிழ் பெற்றுள்ள இலக்கியச் செல்வங்களாகும். அழிந்துபோன ஏராளமான செல்வங்கள் போக, எஞ்சிய சில இலக்கியச் செல்வங்களே கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தச் செல்வங்களெல்லாம் குன்றாப் புகழ் பெற்றவை என்று சொன்னால், அது மிகையாகாது.

தமிழகத்தின் இசைக்கலை - நாட்டியக் கலை - சிற்பக் கலை - கட்டடக் கலை பற்றிய அருந்தமிழ் நூல்கள் தொன்றுதொட்டு ஏராளமாக இருந்து, இடையிலே அழிந்துபோயிருக்கின்றன. அவற்றைப் பற்றிய மிகச் சிலவான தமிழ் நூல்கள்தாம் இருக்கின்றன. அவைபற்றிய சில நூல்கள் வடமொழியிலும் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. மூலநூல்களான தனித்தமிழ் நூல்கள் பலவும் கிடைக்கப் பெறாத நிலையில், சிற்சில வடமொழி மொழி பெயர்ப்பு நூல்கள் மட்டும் ஆங்காங்குக் காணப் பெறுகின்றன.

தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சில மொழிபெயர்ப்பு நூல்களான வடமொழி நூல்களையும், தமிழறிவும் வடமொழி அறிவும் படைத்த சில தமிழ் வல்லுநர்கள், இடைக்காலத்தில், காலத்தின் போக்குக்கு ஏற்ப எழுதி வைத்த சில வடமொழி நூல்களையும் வைத்துக்கொண்டு, இசைக்கலை - நாட்டியக்கலை - சிற்பக்கலை - கட்டடக்கலை - கோயில் கட்டடச் சிற்பக்கலை போன்றவைகள் வடமொழியிலிருந்துதான் தமிழ்மொழிக்கு வந்தன என்று சில வீணர்கள் வாதாடிக்கொண்டிருக்கின்றனர்.

இந்தக் கலைகளெல்லாம் தமிழ்மொழிக்கு உரிமையுடையனவா? அல்லது வடமொழிக்கு உரிமையுடையனவா? என்ற வினா எழும்பும்போது, ஒரு விளக்கத்தின்மூலம் முழு உண்மையும் புலப்படும் என்று கருதுகிறேன்.

இந்தக் கலைகள் உள்ளபடியே வடமொழிக்கு உரிமையுடையனவாக இருந்திருக்குமேயானால், இந்தியா முழுவதும் எங்கெங்கு வடமொழி வேரூன்றியிருந்ததோ, அங்கெல்லாம், குறிப்பாக வடமொழி பிறந்து வளர்ந்த வடபுலத்தில், 'கருநாடக இசையும்' - 'பரத நாட்டியமும்' - 'கருங்கற் சிற்பங்களும்' - 'வளர்ந்தோங்கிய கோபுரங்களும்' நிலை பெற்றிருக்க வேண்டுமே! அங்கெல்லாம் இத்தகைய சீரிய கலைகள் தோன்றவும் இல்லை; வளரவும் இல்லை; வாழவும் இல்லை என்பதிலிருந்தே, இந்தச் சீரிய கலைகளெல்லாம், தமிழகத்திற்குத் தான் உரிமை வாய்ந்தவை என்பது முக்காலும் உண்மை! உண்மை!! உண்மையே!!! ஆகும் என்பது தெளிவுபடும்.

இந்தக் கலைகளைப் பொறுத்துப் பயன்படுத்தி வருகின்ற சொற்களிலே எவை எவை வடமொழிச் சொற்களாகப் புகுத்தப்பட்டிருக்கின்றனவோ, அவற்றிற்கு நேரான - உண்மையான - பழந்தமிழ்த் தனிச் சொற்களைக் கண்டறிந்து, தமிழுலகத்திற்கு அறிவிக்கவேண்டியது, அந்தந்தத் துறைகளில் ஈடுபாடு கொண்டுள்ள நல்ல தமிழ் அறிஞர்களின் நீங்காக் கடமையாகும்.

சித்த மருத்துவக்கலை தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி, இயற்கையோடு இயைந்து, இயல்பாகப் படிப்படியாக வளர்ந்து, தமிழகத் தட்ப - வெப்ப - உணவு - நீர்ப்பாங்கு - நிலப்பாங்கு ஆகியவற்றிற்கு ஏற்ப, அமைந்த மருத்துவ முறையாகும். இந்த மருத்துவக்கலை, முறையாகவும் சிறப்பாகவும் கண்காணிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தால், தமிழர்க்கு எளிய - மலிவான - உயர்ந்த - உறுதியான - நிலையான மருத்துவ உதவி கிடைக்க வழி பிறக்கும். சித்த மருத்துவர்கள் முயற்சி எடுப்பார்களாக! வழிகாட்டுவார்களாக! தமிழக அரசு துணை நிற்பதாக!

உலக நாடுகளிலேயே அறுசுவை உண்டியைப் பண்படுத்தி, பக்குவப்படுத்தி, பதப்படுத்தி, எளிமையாக, மலிவாக, ஊட்டச் சத்தோடுகூடிய சுவையான, மணமிக்க உணவாகத் தருவது, தமிழகம் தோன்றுதொட்டுப் போற்றி வளர்த்து வரும் சமையற் கலையேயாகும். இந்தச் சமையற்கலையின் அருமை பெருமைகளை அறிந்து, அதனைப் போற்றிக் காப்பாற்றி வளர்த்து வருவோமாக!

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்!''

என்பது பாரதியார் வாக்கு.

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ்என்று சங்கே முழங்கு!''

என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் ஆணை.

வாழ்க தமிழ்! வளர்க அழகுக் கலைகள்!

வெல்க தமிழர்!

தமிழை வளர்க்க ஐந்தாண்டுத் திட்டம் தேவை

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் தலைவர்
'*சிலம்புச்செல்வர்*' டாக்டர் ம. பொ. சிவஞானம்

தமிழினத்தின் கலாசாரத் தலைநகரான மதுரையம்பதியிலே ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறவிருக்கின்றது. தாய்மொழியிடம் பற்றுக் கொண்டுள்ள தமிழருக்குப் பெரு மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி இதைவிட இன்னொன்று இருக்க முடியாது. இந்த நல்ல நேரத்திலே தமிழை வளர்க்க ஓர் ஐந்தாண்டுத் திட்டம் தேவை என்பதனைத் தமிழக அரசுக்கு, தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு, புலவர் பெருமக்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

தமிழின் பெயரால் மாநாடு நடத்தி மகிழ்வதை நான் வெறுக்கவில்லை; விரும்புகிறேன். ஆனால், இதுவரை நான்கு முறை நடந்துள்ள உலகத் தமிழ் மாநாடுகளின் விளைவாகத் தமிழ்மொழி அடைந்த வளர்ச்சி என்ன? விஞ்ஞானத் துறையிலே, சட்டத் துறையிலே, ஆட்சித் துறையிலே தமிழ்மொழி வளர்ச்சியடைந்ததுண்டா? அத்தகைய வளர்ச்சி பற்றி உலகத் தமிழ் மாநாடு சிந்தித்துப் பார்த்ததுண்டா?

இந்த ஆராய்ச்சியும் தேவைப்படுகிறது, மதுரையம்பதி மாநாட்டிலே!

சமஸ்கிருதம் போன்றோ, இலத்தீன் போன்றோ நம் தமிழ்மொழி பேச்சு வழக்கற்றுவிட்ட இலக்கிய மொழி அல்ல; பேச்சு மொழியாகவும் இருந்து வருகிறது. அயல் மாநிலங்களிலும், அயல் நாடுகளிலும் வாழும் தமிழரையும் சேர்த்துப் பார்த்தால், சுமார் 5 கோடி மக்களின் வாழ்க்கை மொழியாகத் தமிழ் இருந்து வருகிறது. ஆனால், அவர்களுடைய வாழ்க்கையிலே எங்கும் எதிலும் தமிழே இடம் பெற்றிருக்கிறதா? இந்த வினாவுக்கு விடை காணவும் உலகத் தமிழ் மாநாடு முயல வேண்டாவா?

பாரதத்துடன் சேர்த்துத் தமிழகமும் ஆங்கிலேயரின் பிடியிலிருந்து விடுதலை பெற்று 33 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்த நீண்ட காலத்திலே ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்றி, தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் தேடத் தமிழக அரசும், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் எந்த அளவுக்குப் பயன் தந்தன என்பதும் உலகத் தமிழ் மாநாட்டிலே ஆராயப்பட வேண்டும்.

முதல் நான்கு மாநாடுகளிலே மொழியியல் நிபுணர்கள் தமிழ் மொழியின் சிறப்புப்பற்றிக் கட்டுரைகள் படித்தார்கள்; விவாதம் நடத்தினார்கள். அதுபோல, இலக்கியப் பேரறிஞர்கள் தமிழ் இலக்கியத்தின் தொன்மைபற்றியும், தனித்தன்மைபற்றியும் கட்டுரை படித்தார்கள்; விவாதம் நிகழ்த்தினார்கள். இதெல்லாம் தேவையென்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், மக்களுடைய அன்றாட வாழ்க்கையிலே தமிழ் பயன்படுகிறதா? இல்லையே! எங்கும் எதிலும் ஆங்கிலமன்றோ முதலிடம் பெற்றிருக்கிறது! இந்த நிலையை மாற்றியமைக்க உலகத் தமிழ் மாநாடு வழிகாட்டுமா?

தமிழ்நாடு சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளாகியும் அந்தச் சுதந்திரத்தைத் தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழியின்மூலம் அனுபவிக்க இன்னமும் வாய்ப்புப் பெறவில்லை.

கடந்துபோன காலத்தை மறப்போம்! வருங் காலத்திலேனும் தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற வழி காண முயல்வோம். அதற்கென ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுப்போம். அந்தத் திட்டத்திலே இடம்பெற வேண்டிய அம்சங்களை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து வரும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் முதல் தரமான ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாகவும், நீதிமன்றங்களில் நிர்வாக மொழியாகவும் தமிழைக் கொண்டு வருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் அம்சமாக இருக்க வேண்டும். இப்படி ஒரு கட்டளையைத் தமிழக அரசுக்கு 23-1-1968-ல் தமிழகச் சட்டமன்றம் ஒரு தீர்மானத்தின்மூலம் பிறப்பித்ததென்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்றதையடுத்துப் பாகிஸ்தான், வங்க தேசம், இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளும் சுதந்திரம் பெற்றன. அந்த நாடுகளிலே சுதந்திரத்துக்குப் பின் ஆங்கிலத்தின் நிலை என்ன? ஆங்கிலத்திடம் இழந்துவிட்ட இடங்களைத் திரும்பவும் பெறுவதிலே அந்த நாடுகளின் மொழிகள் எந்த அளவில் முன்னேற்றமடைந்துள்ளன? இதையெல்லாம் அறிந்துகொள்ளத் தமிழக அரசு முயலவேண்டும்.

நானறிந்தவரை அந்த நாடுகள் சுதந்திரத்திற்குப் பின் ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளிலே பயிற்சி மொழியாகவும், நீதிமன்றங்களிலே நிர்வாக மொழியாகவும் நாட்டு மொழிகளையே பயன்படுத்தத் திட்டம் வகுத்து, சட்டங்கள் செய்து, அதிலே பெருமளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன. அவற்றையெல்லாம் அறிந்துகொள்ள முயல்வோமானால், நாடு விடுதலை பெற்ற பின்னுள்ள 33 ஆண்டுக் காலத்திலே தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக நாம் செய்துள்ளது போதுமானவையல்ல என்பது புலப்படும். ஆம்; சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தை வெறும் ஆரவாரத்திலேயே போக்கிவிட்டோம் என்பது புலப்படும்.

இலங்கையிலேயே, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்ததைப்போல, ஆங்கிலம் ஒன்றே ஆட்சிமொழி என்ற நிலை இன்று இல்லை; ஆட்சியிலே ஆங்கிலம் இரண்டாந்தர மொழியாக்கப்பட்டுவிட்டது. பல்கலைக்கழகப் பாடங்களுக்கான பயிற்சிமொழியாகச் சிங்களமும் தமிழுமே பயன்படுத்தப்படுகின்றன.

1968-ல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்துகொண்டு பேசிய தமிழரான இலங்கை அமைச்சர் ஒருவர், ''இலங்கையரின் வாழ்விலே ஆங்கிலத்தின் ஆதிக்கம் அஸ்தமித்துப் போய்விட்டது'' என்று பெருமிதத்துடன் பேசினார். பொறியியல், மருத்துவம் ஆகிய விஞ்ஞானக் கலைகள் தமிழரைப் பொறுத்தவரையில் தமிழின்மூலமே பயில வழி செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார். அந்த வகையில் தமிழில் தயாரிக்கப்பட்ட விஞ்ஞானப் பாட நூல்களையும் உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்குக் காட்டினார். தமிழ் நாட்டுக்குத் தேவைப்படுமானால் அந்தப் பாட நூற்களை வழங்குவதற்கு இலங்கை அரசு தயார் என்றும் கூறினார். இது நிகழ்ந்து 13 ஆண்டுகள் பறந்தோடிவிட்டன. இன்னமும் இலங்கையளவுகூட நம் நாட்டில் தமிழ்மொழி முன்னேற்றமடையவில்லை.

அயல்நாடுகள் ஒருபுறமிருக்கட்டும். இந்தியாவிலேயே வேங்கடத்திற்கு வெளியேயுள்ள மாநிலங்களிலே, சுதந்திரத்திற்குப் பின் அந்தந்த மாநில மொழிகள் எந்த அளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கின்றன என்பதனை அறிந்துவர, தமிழக அரசு ஒரு குழுவை அனுப்பலாம். உண்மையில், பிற மாநிலங்களிலே ஆங்கில மொழியின் ஆதிக்கம் மக்கள் மனநிறைவு கொள்ளுமளவுக்குத் தேய்பிறையாகி வருகிறது. ஆட்சித் துறையிலே பெருமளவுக்குப் பிரதேச மொழிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் அறிந்து வந்தால் தமிழகத்திலே தமிழை முன்னேற்ற, திட்டம் வகுக்க முடியும்.

தமிழ் வளர்ச்சிக்கென ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் ஐந்தாண்டுக்கு ஐந்து கோடி ரூபாய் செலவழிக்க அத் திட்டத்தில் வழி வகுக்க வேண்டும். இந்தத் தொகையைப் பொது மக்களிடமிருந்தே திரட்டலாம். இது முடியாத காரியம் அல்ல. ஐந்தாண்டுக் காலத்தில் இதற்கெனத் தனியாக, அடுத்தடுத்துப் பரிசுச் சீட்டுகள் நடத்தி, ஐந்து கோடி ரூபாயைத் திரட்டிவிடலாம்.

மக்களிடையே பொது அறிவை வளர்க்கவும் அறிவு நூல்களைத் தமிழிலே கொண்டுவரவும் முயல வேண்டும். ஆங்கிலத்திலுள்ள அறிவு நூல்களை மொழிபெயர்த்துக் கொடுத்தாலே போதும்.

நாடு விடுதலை பெற்ற பின்னர், தமிழ் மொழியின் வளர்ச்சி கருதிப் பல திட்டங்களும் சட்டங்களும் நடைமுறைக்கு வந்துள்ளன. இதனை, 'விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு' என்னும் நூலில் யான் விவரித்துள்ளேன். ஆனால், நாம் இன்னும் எவ்வளவோ செய்திருக்க முடியும்? செய்யத் தவறிவிட்டோம்.


தமிழக அரசின்கீழ் தமிழ் வளர்ச்சித் துறை, மொழிபெயர்ப்புத் துறை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் எனப் பல்வேறு துறைகள் தனித்தனியே இயங்கி வருகின்றன. இந்தத் துறைகளிடையே பணியில் ஒருமைப்பாடு இல்லை. இதனால், தமிழ் வளர்ச்சி எதிர்பார்த்தபடி ஏற்படவில்லை இந்தக் குறை அகல, தமிழ் வளர்ச்சிக்கெனவுள்ள துறைகள் அனைத்தையும் ஒரு வாரியத்தின்கீழ் கொண்டு வர வேண்டும்.

இதுகாறும் யான் எடுத்துக்காட்டியவற்றை யெல்லாம் நடைமுறைப்படுத்த அடுத்தடுத்துப் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்க வேண்டும். 1981-ல் தொடங்கி 1985-ல் முடியக்கூடிய வகையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தமிழக அரசு வகுக்க வேண்டும். இதிலே தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களையும் கலந்துகொள்ள வேண்டும்.

எனது இந்தக் கனவு நனவாகுமா? நனவாக அருளு மாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இறைவனுக்கு அடுத்தபடியாக, தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களை வேண்டுகிறேன்.

வாழ்க, தமிழ் !

வெல்க, தமிழ் !





பழந்தமிழர்தம்
தொழில் - வாணிக வளம்

மாண்புமிகு தமிழ்நாடு ஊரகத் தொழில்துறை அமைச்சர்
கே. ஏ. கிருஷ்ணசாமி, எம்.ஏ., பி.எல்.

பழந்தமிழர்தம் தொழில், வாணிக வளம் தொன்மைச் சிறப்புடையது; வரலாற்றுச் சிறப்புடையது. இதனை அறிவதற்குத் தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழகம் இவற்றின் தொன்மைச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் வழிவகுக்கும். எனவே, இவற்றை ஒரு சிறிது அறிந்து மேற்செல்லல் முறையாகும்.

தமிழ்மொழி

''புனல்சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே 'புதிய நாளை'
மனிதப் பைங்கூழ் முளைத்தே
வகுத்தது! மனித வாழ்வை,
இனியநற் றமிழே நீதான்
எழுப்பினை''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியுள்ளார். இது தமிழின் தொன்மைச்சிறப்பை வெளிப் படுத்தும்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்''

என்றும்,

''வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!''

என்றும் பாரதியார் பாடியுள்ளார். இது தமிழின் இனிமைச் சிறப்பையும், பொருட்சிறப்பையும் வெளிப்படுத்தும்.

தமிழ் முதல்மொழி; மூத்தமொழிகட்கெல்லாம் மூத்தமொழி என்பது மொழி நூலார் நிறுவும் உண்மை.

மொழியியல் அறிஞர் ச. அகத்தியலிங்கம், ''திராவிட மொழிகள் மிகப்பழமையான மொழிகள் என்பதும், மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இந்திய நாட்டில் வழக்கிலிருந்துவந்துள்ளன என்பதும், இன்றைய மொழியியலாளர்களின் கொள்கை. இந்தோ - ஆரிய மொழியாகிய சமஸ்கிருதம் இந் நாட்டில் நுழைவதற்கு முன்னாலேயே திராவிட மொழிகள் வழக்கில் இருந்துள்ளன'' என்று கூறுவது எண்ணத்தக்கது.

இப்பொழுது வழங்கும் எல்லா மொழிகளிலும் தமிழே மிகப் பழைமையானது என்பது ஈராஸ் பாரதியார் கருத்து.

உலகில் இலக்கியவளம் சான்ற பழம்பெரு மொழிகளாக எண்ணப்பெறும் வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றன என்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

வடமொழியின் ஆதிகாவியம் வால்மீகியின் இராமாயணம் என்பர். இதில் தமிழ் வளர்த்த பாண்டியர்பற்றிய குறிப்பு வருகின்றது.

வியாச முனிவரும் மகாபாரதத்தில் தமிழ்நாட்டின் சிறப்பும், பாண்டிய அரசின் சிறப்பும் குறித்துள்ளார்.

தமிழின் தொன்மைச் சிறப்புக்கு இவைபோன்ற எடுத்துக்காட்டுகள் பெருகியுள்ளன.

டாக்டர் ச. அகத்தியலிங்கம் 'திராவிடமொழிகள்' எனும் அவர்தம் நூலில் தொகுத்துக் கூறும் கருத்துகள் தமிழின் பழம்பெரும் சிறப்புக்கு ஏற்ற மளிப்பவை.

'தமிழ்மொழி பன்னெடுங் காலத்திற்கு முன்பே தனக்கென ஒரு பாரம்பரியத்தைத் தோற்றுவித்து வாழ்ந்தது என்பதும், சில மொழிகளைப்போல் வளர்ந்து வீழ்ந்துவிடாத ஒரு வீறுகொண்ட மொழியென்பதும் விளங்கும். பழைமையைக் கண்டது எனினும் பாபிலோனிய மொழியைப் போலவோ அல்லது பண்டைய எகிப்திய மொழியைப் போலவோ அழிந்துவிடவில்லை. ஆக்கம் பல கண்டு இன்னும் வாழக் காண்கிறோம். இலத்தீனைப் போன்றோ அல்லது சமஸ்கிருதத்தைப் போன்றோ வாழ்வில் நலிந்து, கோயில்களிலும் குகைகளிலும் கரந்துறைய வில்லை. அறிஞர்களின் ஆராய்ச்சியில் மட்டு மன்றிப் பாமர மக்களின் மத்தியிலும் வாழக் காண்கிறோம்; வாழும் மொழியாகவும், வளரும் மொழியாகவும், வரலாற்று மொழியாகவும் இருக்கக் காண்கிறோம். ஆங்கிலம், ஃபிரஞ்சு போன்ற பழைமை இல்லாத நிலையில் இல்லை இம் மொழி. எத்தனையோ நூற்றாண்டு வாழ்வு கொண்டு வரலாறு கொண்டு விளங்குகிறது. நாகரிக மொழிகளாகக் கருதப்படும் ஆங்கிலமும் ஃபிரஞ்சும் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வளர்ந்து நின்ற சிறப்பையும் கொண்டுள்ளது. சிந்தனைத் தெளிவும், சிறந்த கற்பனையும் கொண்ட இம் மக்களிடையே தோன்றிய கவிதைகளும் காப்பியங்களும் பல. எண்ணங்களும் எழுச்சிகளும் பலப்பல. அவர்களின் சிந்தனையில் சிந்தி நின்ற காவிய மலர்கள் மிகப்பல! வாடாத எண்ணத்திலும் வற்றாத கற்பனை ஓட்டத்திலும் கருக்கொண்ட வாழ்வு நூல்கள் பலப்பல.''

இத்தகு ஏற்றம் கொண்டு என்றும் சீரிளமைத் திறத்துடன் விளங்கும் தமிழ்மொழி, சொல்வளத்தில் உயிர்வளம்போல் சிறந்தது; இலக்கண வரம்புடைமையில் வளர் அறிவுடன் இலங்குவது; செய்யுள் வகையில் செழிப்பு மிக்கது; பண்பாட்டுச் சிறப்பில் பெரியது!

இனி, இத்தகு மொழி தோன்றிய நிலத்தின் தொன்மையை அறிவோம்.

தமிழகம்

உலகில் முதன்முதல் மக்களினம் தோன்றியது தென்னிந்தியாவில்தான் என்று புவியியல், மானிடவியல் வல்லுநர் சிலர் கருதுகின்றனர்.

கங்கையாற்று வெளியும், இமயமலைத்தொடரும் முன்னொரு காலத்தில் கடலுக்குள் மூழ்கிக் கிடந்தன. இமயமலைத்தொடரில் ஆங்காங்குக் காணப்படும் கடல்வாழ் உயிரிகளின் எலும்புகளே இதற்குப் போதிய சான்றாகும். வட இந்தியா கடலுக்குள் மூழ்கிக் கிடந்த அக்காலத்தில் தென்னிந்தியா காடும் மலையும் செறிந்து, மக்களினமும் ஏனைய உயிர் வகைகளும் வாழ்வதற்கு ஏற்ற இடமாக விளங்கிற்று. கங்கை வெளியும் இமயமும் கடலினின்றும் மேலெறியப்பெற்ற புவியியல் நிகழ்ச்சி இற்றைக்கு ஐந்துகோடி ஆண்டுகட்கு முன்னர் நடை பெற்றிருக்கவேண்டுமென்று புவியியலார் கருதுகின்றனர்.

அறிஞர் ஸ்காட்டு எலியட்டு அவர்கள் 'இழந்த இலெமூரியா' என்னும் நூலில் கூறும் கருத்துகளைக்கொண்டு, தமிழறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் நிறுவும் கருத்து எண்ணத்தக்கது.

''தென்னிந்தியா இலெமூரியாவின் வடபகுதியாக இருந்தகாலத்தில், அந்நூலிற் காட்டிய படத்தின்படி எகிப்து நாடு நீருள் நின்று நிலத்துக்குமேல் நிவந்து தோன்றவில்லை. ஆதலால், எகிப்து நாட்டினும் தமிழகமே பழமையானது என்று கொள்ள வேண்டும்.''

இது கா. சு. பிள்ளை அவர்கள் கருத்து.

கி.மு. 5000 ஆண்டுகட்கு முன்பே நைல் நதிக் கரையில் தோன்றி வளர்ந்து நாகரிகத்தின் சின்னமாக எகிப்திய மொழி விளங்கியது என்று அறிஞர் கூறுவர்.

ஆனால், சிந்துவெளி நாகரிகம் சிறப்புற்றிருந்த அரப்பா, மொகஞ்சதாரோ எனும் இடங்களில் சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் வழங்கிய மொழியில் தமிழ்ச் சொற்கள் நிறைந்துள்ளதென ஈராஸ் பாதிரியார் கூறுகின்றார்.

இவ்வாறு நிலஇயல் அறிஞர்களும், மொழியியல் அறிஞர்களும், இலக்கிய அறிஞர்களும், வரலாற்றறிஞர்களும் காட்டும் சான்றுகளைக்கொண்டு, தமிழகத்தின் தொன்மையை அறியப்புகின், மனித இனம் பிறந்து, அதன் நாகரிகம் சிறந்து விளங்கிய தமிழகத்தின் தொன்மைச் சிறப்பு எல்லை காண முடியாததாக இருப்பதை உணரலாம்.

தாய்நாட்டின் பிறப்புச் சிறப்பிற்குப் பாரதியார் பாடும் பாட்டின் அரும்பொருளே தமிழ்நாடு, இனம், மொழி, இலக்கியம் இவற்றின் தொன்மைச் சிறப்பிற்கும் பொருந்தும்.

''தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்.''

மண்வளத்தின் மாண்பே அங்குள்ள மனிதநலத்தின் மாண்பிலும் மலர்ந்து மணம் வீசுவது இயற்கையின் இலக்கணம். இயற்கையின் பண்புகளில் தாய்மையும் உண்டு; பேய்மையும் உண்டு. மழையில், உயிர்வளர்க்கும் தாய்மழையும் உண்டு; உயிர்களையும் ஊர்களையும் கொல்லும் பேய்மழையும் உண்டு அல்லவா?

தமிழகம் இயற்கை அன்னையின் தாய்மையாம் தங்கத் தொட்டிலில் வளரும் செல்லப்பிள்ளை; செல்வப்பிள்ளை! இங்குப் புனற்பாலையாம் பனி வெளியின் கொடுமையும் இல்லை; மணற்பாலையாம் வெயில்வெளியின் கடுமையும் இல்லை. மக்கள் வாழ்வு, அறம் பொருள் இன்பம் வழியும் கலை வாழ்வாகவும் அறிவு வாழ்வாகவும் அமைந்திட, வாழ்க்கை வளங்கள் பலவும் வழங்கும் இயற்கைப் பெருவளங்கள் நிறைந்திருக்கும் திருநாடு தமிழ் நாடு! கடல் வளம், மலைவளம், கான்வளம், நீர்வளம், நிலவளம், சோலைவளம், உயிர் வளம் எனப் பல வளங்களும் நலம்பாடும் வளநாடு இது! எனவே, இங்கு மக்களின் வாழ்க்கைவளம் உயர் நாகரிகத்தின் ஊற்றாக அமைந்ததில் வியப்பில்லை. அந் நாகரிகத்துக்குரிய தமிழினத்தின் தொன்மைச் சிறப்பை அறிவோம்.

தமிழினம்

தமிழகம் தந்த தமிழினத்தின் பழஞ்சிறப்பு மிகவும் பெரிது. தமிழ் இனம் உலகின் முதல் மனித இனத்தின் சிறப்பொடு தொடர்பு கொண்டது என்பது அறிஞர்கள் கண்ட முடிபு.

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி'' எனவரும் புலமைப் பாட்டு வெறும் உவகை உரையன்று; வரலாற்று உண்மையும், நிலவியல் உண்மையும், மானிட இயல் உண்மையும் உட்கொண்ட உயர்பொருள் உரையாகும்.

உலக நாகரிகங்களுள் மிகவும் பழைமையுடையது, எகிப்திய நாகரிகம் என்பர். அதற்கும் மிக முந்தியது தமிழர்களின் நாகரிகமாகும். உலகின் பழைய நாகரிகங்களைப் படைத்த பல்வேறு இனத்தினர் நாடோடிகளாய்த் திரிந்த அக்காலத்திலேயே தமிழர்கள் நாடும் நாகரிகமும் நற்கலைகளும் கண்டு உயர்ந்திருந்தனர். அறிவார்ந்த அரசியல் அமைப்பும், அன்பார்ந்த சமுதாய ஒருமைப்பாடும், அறமார்ந்த தொழில், வணிகச் சிறப்பும், அருளார்ந்த அழகார்ந்த இலக்கியச் சிறப்பும் அக்காலத்திலேயே தமிழர்கள் கண்டவை!

தமிழர்கள் கடல் வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். இது கி.மு. பத்தாம் நூற்றாண்டிலேயே காணப்படுகிறது. பழந்தமிழர்கள் மேற்கே கிரீஸ், ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்து, மெசப்பொடோமியா, பாலஸ்தீனம், பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகளுடன் அத் தொடர்பு வளர்ந்து பெருகிற்று.

மலேசியா, ஜாவா, வட போர்னியோ ஆகிய நாடுகளுடனும் பழந்தமிழர் மிகவும் வளமானதொரு கடல் வாணிகம் நடத்தி வந்தனர்.

தமிழ் நாட்டின் மணம் பரப்பும் சந்தனம், ஆங்கிலத்தில் 'சந்தல்' (Sandal) ஆனது. மயிலை ஆகுபெயரால் உணர்த்தும் தோகை என்ற சொல் 'துக்கி' என்று ஹீப்ரு மொழியில் வழங்குகிறது.

''தமிழில் அரிசி என்பது கிரேக்கத்தில் 'அரிஸா' எனவும், கருவா (இலவங்கம்) என்ற தமிழ்ச்சொல் 'கார்ப்பியன்' எனவும், இஞ்சி வேர் என்பது 'சின்சிபேரோஸ்' எனவும், பிப்பாலியிலிருந்து 'பெப்பரி' எனவும் பெயர்ந்து சென்ற மொழிகளாகும். கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் ஐரோப்பாவுடன் நடைபெற்ற தென்னிந்திய வாணிகத்தைப் பற்றிய விவரங்கள் பல கிட்டியுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தவை உரோமை வல்லரசர் அகஸ்டசின் காலத்தைச் சார்ந்த ஸ்டிராபோவின் விவரணம், சுமார் கி.பி. 60-ல் தோன்றியுள்ள 'பெரிபுளூஸ்' என்னும் நூல், பிளினியின் 'இயற்கை வரலாறு' (சுமார் கி.பி. 77), தாலமியின் 'பூகோள விவரணம்' (சுமார் கி.பி. 170) என்னும் நூல்களாகும். இவ் வெளிநாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கும் நுண்ணிய விவரங்கள் சங்க நூல்கள் பலவற்றில் காணப்படும் கருத்துகளுக்கு மிகப் பொருத்தமாயிருக்கின்றன.''

''வேதங்களில் குறிப்பிடப்படாத யானை, கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அசிரிய நாட்டு மன்னனுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. நீலிச்சாயம் தோய்க்கப்பட்ட துணிகள் எகிப்துக்கும் பாரசீகத்திற்கும் அனுப்பப்பட்டன. சேரநாட்டின் தேக்க மரம் பிறநாட்டில் கட்டடங்கள் கட்டவும், கப்பல்கள் கட்டவும் உதவியது. யவனர் மிளகு கொண்டு சென்றனர்; பொன்னும், மதுவும் கொண்டு வந்தனர். அவர்கள் வாழ்ந்த குடியிருப்புகளும் தமிழ் நாட்டில் இருந்தன. புதுச்சேரியின் அருகே 'அரிக்க மேடு' என்ற இடத்தைத் தோண்டிப் பார்த்ததில், அவ்விடத்தே அத்தகையதோர் யவனக் குடியிருப்பு இருந்தது என்பது தெரிந்தது. யவனரின் அழகிய புலிச் சங்கிலிகளும், பாவை விளக்குகளும் தமிழ்நாட்டிற்கு வந்தன. ஆர்க்கிமிடீஸ் என்பவர் சைரக்யூசில் உரோமரது முற்றுகையை எதிர்க்கப் பலவகை எந்திரங்களைக் கண்டுபிடித்தனர். அவையெல்லாம் 'யவனப் பொறிகள்' என்ற பெயரோடு தமிழ்நாட்டுக் கோட்டைகளில் இடம்பெற்று விளங்கின.''

"ரோமாபுரியில் இறக்குமதியாகும் தமிழ்நாட்டுச் சரக்குகளின் அளவு ஆண்டுதோறும் பெருகிக் கொண்டே போயிற்று. அதனால் ஆண்டுதோறும் 6,00,000 பவுன் மதிப்புள்ள ரோமாபுரித் தங்கம் தமிழரின் கைக்கு மாறிக்கொண்டே வந்தது. இவ்வளவு பெருந்தொகையில் தம்நாட்டுச் செல்வம் வடிந்து வருவதைக் கண்டு வெருவிய ரோமாபுரி மக்களில் சிலர் தமிழகத்துடன் நடைபெற்று வந்த வாணிகத்தையும், தமிழகத்துப் பண்டங்களின்மேல் ரோமருக்கிருந்த ஆராவேட்கையையும் அவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்." இவை வரலாற்று உண்மைகள்.

வரலாற்றுப் பேரறிஞர் டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் 'தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும்' எனும் புகழ்மிகு நூலில் இவ்வாறெல்லாம் கூறி யுள்ளார்.

கி.மு. 20-ல் கிரேக்கப் பெருவேந்தன் அகஸ்டஸ் அவைக்குப் பாண்டிய வேந்தனின் தூதுவன் சென்றான். தமிழ்நாட்டின் பழைய துறைமுகப் பட்டினமாகிய முசிறியில் அகஸ்டஸின் பெயரால் ஓர் ஆலயம் இருக்கிறது. இரண்டாயிரம் ரோமப் படைவீரர்கள் அடங்கிய படை ஒன்று அங்கு இருந்தது.

தென்னாட்டின் விலையுயர்ந்த வாணிகப் பொருள்களாகிய சங்கு, வைரம், மணிகள், முத்து, பொன் அணிகள் இவைகளைக் குறிப்பிட்டு மௌரியப் பேரரசின் பேரமைச்சர் சாணக்கியர் தமிழர்களின் வாணிகச் சிறப்பைப் புகழ்ந்து பேசியுள்ளார். இவ்வாறு 'தென்னிந்திய வரலாறு' எனும் தம் நூலில் வரலாற்றுப் புகழ் அறிஞர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கூறுகின்றார்.

தமிழக வரலாற்று நூல்களிலும், இந்திய வரலாற்று நூல்களிலும் இவைபோன்ற சான்றுகள் பெருகியுள்ளன. தமிழ் நாகரிகத்தின் பழமைச் சிறப்பிற்கு இவை எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

பழந்தமிழ் மக்கள் உயர் நாகரிகத்தின் உயிர் ஊற்று, உழைப்பின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது என்பதை உணர்ந்திருந்தனர்.

அறிவாளர், உழைப்பாளர், பண்பாளர் ஆகிய முப்பெரும் சீராளர்களாக உள்ள மாந்தர்களே நல்லவர்கள் எனப் பெயர் பெறுகின்றனர்; பெற்றனர்.

இத்தகு நல்லவர்கள் எந்த நிலத்தில் இருப்பினும் அந்நிலம் நன்னிலமாகும்; பொன்னிலமாகும்; புகழ் நிலமாகும்! மலைநிலமாம் குறிஞ்சியானாலும், பள்ள நிலமாம் நெய்தலானாலும், காட்டு நிலமாம் முல்லையானாலும், நாட்டு நிலமாம் மருதமானாலும், அங்கு வாழும் மக்கள் நல்லவர்களானால், நிலமும் நல்ல நிலமாகும்.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!" (புறம், 187)

என்பது புறநானூற்றில் பழம்பெரும் தமிழ் மூதாட்டி ஔவையின் பாட்டு!

உழைப்பால்தான் உலகம்; தொழிலால்தான் உலகம்; அறம்நிறை வாணிகத்தால்தான் உலகம் என்பது தமிழ்க்கொள்கை!

மனித வாழ்வின் நலத்துக்கும் வளத்துக்கும் அடிப்படையாய் அமைந்துள்ள தொழில்களைப் பழந்தமிழர் உயர்வாகப் போற்றினர்; உயிர் எனப் போற்றினர். உணவு, உடை, உறையுள் இவை வாழ்வின் அடிப்படைகள் என உணர்ந்து பயிர்த் தொழில், நெய்தல்தொழில், கட்டடத்தொழில் ஆகிவற்றை முறையே கலைநலம், அறிவு நலம் நிறையப் போற்றினர்.

பயிர்த்தொழில்

உழவுத்தொழிலே உயிர்த்தொழில்; உயர் தொழில். இதனைப் பழந்தமிழ் மக்கள் உணர்ந்து போற்றினர். சங்கத்துச் சான்றோரும் மன்னர்களும் மக்களும் உழவுத் தொழிலுக்கே முதலிடம் தந்தனர்.

சங்ககாலப் பாண்டியன் நெடுஞ்செழியன் எனும் வேந்தனைக் குடபுலவியனார் எனும் புலவர், "உழவர்கட்குப் பணிநலம் பெருக நீர்நிலை பெருகும் நலத்தை மன்னனே நல்க வேண்டும்; இது அவன் கடமை" என அறிவுறுத்துகின்றார். மன்னன் ஊர்ப் புகழ் வேண்டினும் போர்ப்புகழ் வேண்டினும், இம்மை மறுமைச் செல்வம் வேண்டினும் அதற்கு அடிப்படை, அவன் நாட்டில் நீர்வளம் பெருக்க வேண்டும் என்கின்றார் புலவர்!

"மல்லன் மூதூர் வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள!
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோ ரீண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய இகழா து வல்லே

நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண்தட் டோரே
தள்ளா தோரிவண் தள்ளா தோரே'' (புறம். 18)

என்பது குடபுலவியனார் அறிவுரை!

பழந்தமிழ் நெஞ்சமே பின் வள்ளுவர் உழவு அதிகார வாக்காகவும் கம்பரின் ஏர்எழுபதுக் கலையாகவும் மலர்ந்துள்ளது.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை." (குறள். 1031)

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து." (குறள். 1032)

''தேர்வேந்தர் போர்க்களத்துச்
சிலர்வெல்வர், சிலர்தோற்பர்;
ஏர்வேந்தர் போர்க்களத்துள்
இரப்பவரும் தோலாரே!''

''கார்நடக்கும் படிநடக்கும்
காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனில்புகழ்சால்
இயலிசைநா டகம்நடக்கும்
சீர்நடக்கும் திறம்நடக்கும்
திருவறத்தின் செயல்நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும்
பசிநடக்க மாட்டாதே.''
(ஏர் எழுபது)

முக்கூடற்பள்ளில் ஏராளமான நெல்லின் பெயர்கள் காணப்படுகின்றன. இவை பழந்தமிழ்ச் சமுதாயத்தில் வழங்கிய வழிவழிப் பெயர்களே. உழவின் வளமும் நெல் நலமும் தொழில் நலமும் காட்டுவனவே இப் பெயர்கள். நெல்லின் பெயர்களுள் சில பின்வருவன:

முத்துச் சம்பா, பூஞ்சாலி, பூம்பாளை, மச்சுமுறித்தான், சொறிக்குரும்பை, வெள்ளச் சம்பா, மறுவல்லிச் சம்பா, நீலச்சம்பா, வில்லூன்றிச்சம்பா, கடுக்கன் சம்பா, இராசவாணன், கதலிவாழை, சித்திரக்காலி, வாலான், சிறைமீட்டான், மணல்வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச் சம்பா, முத்த நெல், மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், மூங்கிற் சம்பா, கத்தூரிச் சம்பா, வாணன்நெல், காடைக்கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, வெள்ளைச்சம்பா, புத்தநெல், கருங்குறுவை, புனுகுச்சம்பா, செந்தாழை, பெருவெள்ளை, முத்து வெள்ளை, பச்சை, மூவன், இட்டமலை, முண்டன் என்பன நெல்லின் பெயர்களுட் சில!

உழவுத்தொழிலின் நுட்பங்கள் பெருக்கி, நீர் வளம் கொண்டு, நிலவளத்தால் பயிர்வளமும் உயிர் வளமும் பெருக்கினர் பழந்தமிழ் மக்கள்!

நெய்தல் தொழில்

உழவுக்கு அடுத்த இடத்தில் உடைத்தொழில் உயர்ந்தது. பழந்தமிழகத்தில் நெய்தல் தொழில் சிறப்புற்றிருந்தது. ஆண் துணை இல்லாப் பெண்கள் பருத்தி நூல் நூற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

''ஆளில் பெண்டிர் தாளின் செய்த
நுணங்கு நுண் பனுவல்''

என்பது நற்றிணை.

பலவகை ஆடைகள் நெய்யப் பெற்றன. கோசிகம், பீதகம், நுண்துகில், சித்திரக்கம்பி, பொன்னெழுத்து, தேவாங்கு என முப்பதுக்கு மேற்பட்ட வகை ஆடைகள் கடைகளை அலங்கரித்தன. ஆடைகளில் பூத்தொழில் அழகு செய்தது. பாம்பின் தோல், புகை, பனி, அருவிநீர், பாலாவி இவற்றை உவமையாகக் கூறத்தக்க மிக மெல்லிய ஆடைகளும் நெய்யப்பட்டன.

நூலாடை, பட்டாடை நெய்யப்பட்டன. எலி மயிர் ஆடையும் இருந்தது. அறுக்கப்படுவது அறுவை; துணிக்கப்படுவது துண்டு, துணி எனப் பெயர் பெற்றன.

அரசாங்க அலுவலர் அக்காலத்தில் சட்டை அணிந்திருந்தனர். சட்டைக்கு 'மெய்ப்பை' என்பது அக்காலப் பெயர். கஞ்சுகம் என்றும் சட்டைக்குப் பெயர் இருந்தது. தமிழகத்து மிக மெல்லிய ஆடைகள் மௌரிய நாட்டுக்கு அனுப்பப்பெற்றன என்று சாணக்கியரின் பொருள்நூல் பேசுகின்றது.

''நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூறு அடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதி''
(ஊர்காண் காதை, 205-207)

என்பது சிலப்பதிகாரம்,

''நீலக் கச்சைப் பூவா ராடை''

என்பது புறநானூறு (274).

''கொட்டைக் கரைய பட்டுடை''

''அரவுரியன்ன அறுவை''

என்பவை பொருநராற்றுப்படை.

''கண்ணுழை கல்லா நுண்ணூல் கைவினை
வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகு''

என்பது மணிமேகலை.

''மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து''

என்பது முல்லைப்பாட்டடி!

இவ்வாறு நிகரில்லா நெய்தல் தொழிலில் பழந்தமிழ் மக்கள் சிறந்திருந்தனர்.

கட்டடத்தொழில்

கட்டடத்தொழில் பெருங்கலையாகப் பெருகி இருந்தது. மதுரை மாநகரம் தாமரை மலரைப் போன்று இருந்தது. அம்மலரின் இதழ்களே தெருக்கள். தாமரை மலரின் நடுவில் இருக்கும் பொகுட்டே பாண்டியன் அரண்மனை. மலரில் மகரந்தப்பொடி நிறைந்திருப்பதுபோல மக்கள் மதுரையில் வாழ்ந்தனர். இது மதுரையைப்பற்றிப் பரிபாடல் வருணனை. சங்ககாலத் தமிழர் நகர அமைப்பின் கலை அமைப்பையே இது காட்டுகின்றது.

பாண்டியன் அரண்மனை வாயில் உயர்த்தப்பட்ட கொடியுடன், யானை நுழையும் அகலமும் உயரமும் பொருந்தியதாக இருந்தது. உள்ளே அகன்ற முற்றம்; முற்றத்துக்கு அப்பால் மாடமாளிகைகள் உயர்ந்து விளங்கின.

மதுரை நகரில் நிலத்துக்கு அடியில் கழிநீர் செல்லும் வழியாக அமைக்கப்பட்டிருந்த சுருங்கை, யானை செல்லும் அளவு வசதி பெற்றிருந்தது என்றால், அக்காலக் கட்டடக் கலையின் சிறப்பு விளங்கும்.

''சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்''

என வரும் மணிமேகலை அடிகள் மனைகளின் மாண்பு கூறுவன.

பிற தொழில்கள்

சங்கப் பாடல்கள், காப்பியங்கள் பழந்தமிழ் மக்கள் வாழ்க்கைக்கு நலம் கூட்டிய பல்வகைத் தொழிலில் சிறந்திருந்த பான்மையைப் பேசுகின்றன.

அவற்றுள் பொற்கொல்லத் தொழில், தச்சுத் தொழில், தேர்கள் செய்தல், கொல்லத்தொழில், சலவைத் தொழில், போர்க் கருவிகள் செய்யும் தொழில், தோற்கருவிகள் செய்யும் தொழில், உடைகளைத் தைக்கும் தொழில், சரிகைத் தொழில், கயிறுவலைப் பின்னல் தொழில், வாசனைப்பொருள்களைத் தயாரிக்கும் தொழில், முத்தெடுக்கும் தொழில், சங்கு அறுத்துப் பொருள்களைச் செய்யும் தொழில், துணிநெட்டி முதலியவற்றால் பூக்கள், வாடாமாலை, பொய்க்கொண்டை முதலியவற்றைச் செய்யும் தொழில், ஓவியத்தொழில், சிற்பத்தொழில் கட்டடத்தொழில், மட்பாண்டத்தொழில், தந்தத் தொழில், மாலைகட்டும் தொழில், குழல் யாழ் போன்ற இசைக் கருவிகளைச் செய்யும் தொழில், மீன்களைப் பதப்படுத்தல், உப்பு உண்டாக்குதல், மிதவை, ஓடம், படகு, கப்பல் இவற்றைச் செய்யும் தொழில், கன்னாரத் தொழில், சாறு இறக்குதல், சாறு விற்றல், இறைச்சி விற்றல், பனையோலைகளைக்கொண்டு பலவகைப் பொருள்களைச் செய்யும் தொழில் எனப் பல்வகைக் கைத்தொழில்கள் சங்க காலத்தில் சிறந்து விளங்கின.

வாணிக வளம்

கடற்பயிற்சி மிக்கவர் பழந்தமிழ் மக்களாவர். ஆர்கலி, ஆழி, புணரி, முந்நீர், பள்ளம், பவ்வம், பரவை, கடல் முதலிய பல சொற்கள் கடலையே குறித்தன. கலங்களைக் குறிக்கவும் இவ்வாறே பல சொற்கள். அவை: ஓடம், பரிசல், புணை, தோணி, அம்பி, திமில், படகு, கப்பல், நாவாய், வங்கம் முதலியன. இவைகொண்டு தமிழ் மக்களின் கடல் வாணிகச் சிறப்பை உணரலாம்.

'' நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட வுரவோன் மருக''

என்று கரிகாற்சோழனை, வெண்ணிக்குயத்தியார் பாடுகின்றார்.

சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினமும், சேர நாட்டில் முசிறியும், பாண்டிய நாட்டில் கொற்கையும் புகழ்மிகுந்த துறைமுகப் பட்டினங்களாக விளங்கின.

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் குவிந்து கிடக்கும் பொருள்களே வாணிக வளம் கூறும். பட்டினப் பாலை இதைக் கூறுகிறது.

''நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்.''

முசிறித்துறையின் காட்சி பின்வருவது:

மீன்களை விற்று அதற்காகப் பெற்ற நெற்குவியல்கள் நிறைந்திருக்கும். வீடும் தோணியும் வேற்றுமைத் தெரியாமல் விளங்கும் இடத்தே மிளகுப் பொதிகளும், மரக்கலங்கள் தந்த பொன்னாலான பொருள்களும், கடல்படு பொருள்களும் நிறைந்து கிடக்கும்.

''யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்''

என்று அகநானூறு கூறுகின்றது.

கொற்கை முத்து வணிகச் சிறப்பைக் கூறுகின்றது. சிறுபாணாற்றுப்படையும், மதுரைக்காஞ்சியும் இதுபற்றிப் பெருமிதத்துடன் கூறுகின்றன. கொற்கை முத்தின் புகழை அகநானூறு கூறுகிறது.

''மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன''

என்பது பாடல் கூறும் முத்தின் பெருமையாகும்.

மதுரை, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகர்களின் கடைவீதிகள் பெறும் வருணனைச் சிறப்பின்வழி, பத்துப்பாட்டும் சிலம்பும் உள்நாட்டு வணிக வளத்தின் உயர்வு கூறுவதை உணரலாம். எருது, கழுதை வண்டி இவற்றில் பண்டப் பொதிகளை ஏற்றிக் கொண்டு வணிகர் கூட்டங் கூட்டமாய்ச் சென்று வாணிகம் செய்தனர். இக் கூட்டம் வாணிகச்சாத்து எனப்பட்டது. வழிகளில் தாக்கும் ஆறலைக் கள்வரை எதிர்க்கப் படை வீரர்களும் உடன் சென்றனர்.

வேங்கடம் கடந்து, தெலுங்கு நாடுகள், கன்னட நாடுகள், வட இந்திய நாடுகள் ஆகிய இடங்களுக்கும் சென்று தமிழ் வணிகர் வாணிகத்தைப் பெருக்கி வளம் சேர்த்தனர். பண்டமாற்றும், பொன், வெள்ளி நாணயங்களும் பயன்பட்டன.


நவமணி வணிகர் முதல், பிட்டு அப்பம் விற்ற வணிகர்வரை அனைவரும் நடுவுநிலை தவறாது வாணிகம் செய்தனர். இதனைப் பட்டினப்பாலை

''நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை''

என்று கூறும்.

இவ்வாறு அறிவு அறம் இவற்றின் அடிப்படையில் பழந்தமிழர்தம் தொழில் வாணிக வளம் சிறப்புற்றிருந்தது.





காமம் செப்பாது கண்டது மொழிமோ...

தலைவி
நாணப் பனி போர்த்திய
காதற்சிலையாய் அமர்ந்திருக்கிறாள்...
தலைவன்...
தன் சூரியக் கைகளால்... அவளைத்
தீண்ட நினைக்கிறான்...
கூந்தல் மலர்களில்... மொய்க்கும் வண்டுகளை
விரட்டும் பாவனையில்...
தொடுதல் தொடர்கிறது...
தலைவியின் நலன் புகழ்தலாய்க்
கவிதையும் தொடர்கிறது...

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீஅறியும் பூவே!''

— குறுந்தொகை, 2.

கொற்கை முத்து வணிகச் சிறப்பைக் கூறுகின்றது. சிறுபாணாற்றுப்படையும், மதுரைக்காஞ்சியும் இதுபற்றிப் பெருமிதத்துடன் கூறுகின்றன. கொற்கை முத்தின் புகழை அகநானூறு கூறுகிறது.

''மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன''

என்பது பாடல் கூறும் முத்தின் பெருமையாகும்.

மதுரை, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகர்களின் கடைவீதிகள் பெறும் வருணனைச் சிறப்பின்வழி, பத்துப்பாட்டும் சிலம்பும் [illegible] வணிக வளத்தின் உயர்வு கூறுவதை உணரலாம். எருது, கழுதை வண்டி இவற்றில் பண்டப் பொதிகளை ஏற்றிக் கொண்டு வணிகர் கூட்டங் கூட்டமாய்ச் சென்று வாணிகம் செய்தனர். இக் கூட்டம் வாணிகச் சாத்து எனப்பட்டது. வழிகளில் தாக்கும் ஆறலைக் கள்வரை எதிர்க்கப் படை வீரர்களும் உடன் சென்றனர்.

வேங்கடம் கடந்து, தெலுங்கு நாடுகள், கன்னட நாடுகள், வட இந்திய நாடுகள் ஆகிய இடங்களுக்கும் சென்று தமிழ் வணிகர் வாணிகத்தைப் பெருக்கி வளம் சேர்த்தனர். பண்டமாற்றும், பொன், வெள்ளி நாணயங்களும் பயன்பட்டன.

நவமணி வணிகர் முதல், பிட்டு அப்பம் விற்ற வணிகர்வரை அனைவரும் நடுவுநிலை தவறாது வாணிகம் செய்தனர். இதனைப் பட்டினப்பாலை

''நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டி துவன்றிருக்கை''

என்று கூறும்.

[illegible] இவற்றின் அடிப்படையில் பழந்தமிழர்கள் தொழில் வாணிக வளம் சிறப்புற்றிருந்தது.


R. நடராஜன்

நல்ல குறுந்தொகை



மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர்
கா. காளிமுத்து, எம்.ஏ.

கற்பவர் நெஞ்சைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் இயல்புடையது குறுந்தொகை. தொட்ட இடமெல்லாம் மணக்கும் சந்தனம்போல், குறுந்தொகையின் எந்தப் பாடலும் பாடலின் எந்த வரியும் நினைக்க இனிக்கும் தன்மையவாம். பண்டைத் தமிழரின் தனி நாகரிகத்தையும், மாந்தர் தம் உள்ளத்து உணர்வுகளையும், பண்புகளையும் விளக்கும் நூலாக விளங்குவது குறுந்தொகையாகும். வரலாற்றுச் செய்திகளையும் வாழ்வியல் அறங்களையும் இயல்பான உவமைகளோடு எடுத்தியம்பும் குறுந்தொகை முரண்தொடை, அடைமொழி முதலிய இலக்கிய, இலக்கணச் செவ்விகளோடும் சிறப்புறுவதால் ''நல்ல குறுந்தொகை'' என்று சான்றோரால் உவந்து கூறப்பட்டது. 'நல்ல' என்ற அடைமொழியைப் பெற்றிருப்பதற்கான ஏதுக்களில் சிலவற்றை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தலைவன், தலைவி, தோழி, செவிலி, மகட்போக்கிய தாய், காதற்பரத்தை முதலியோர் உள்ளத்து உணர்வுகளைச் சித்திரிக்கும் பாடல்கள் பல நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் பாங்கில் குறுந்தொகையில் அமைந்துள்ளன. 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோலச் சில பாடல்களின் சுவையுணர்ந்து குறுந்தொகையின் சிறப்பை அறியலாம்.

தலைவன்

'மோகத்தைக் கொன்றுவிடு அல்லால் எந்தன் மூச்சை நிறுத்திவிடு' என்று காதல் வெயிலிலே காயும் காதல் தலைவன் ஒருவனைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் வெள்ளிவீதியார். கதிரவனின் வெயில் எறிக்கும் வெம்மையையுடைய பாறையில் உருகி ஓடும் வெண்ணெயைக் கையில்லாத ஊமை ஒருவன் கண்ணாற் காக்க முற்பட்டதைப்போல, நான் இக் காமநோயை அடக்குதற்கும் மற்றவரிடம் அறிவிப்பதற்கும் ஆற்றலற்றவனானேன் என்று புலம்புகின்றான் (58) தலைவன்.

தலைவியைத் தழுவிப் பெறும் இன்பத்திற்கு,

''விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே'' (101)

என்று கூறுகின்றான் ஒரு தலைவன். பூவுலக இன்பமும் தேவருலக இன்பமும் தலைவியிடம் பெறும் காதல் இன்பத்திற்கு ஈடாகா என்று கூறும் அவனுடைய உள்ளம் 'காதலினால் மானிடர்க்கு எல்லாம் உண்டாம்' என்பதை உணர்ந்ததாகும்.

அழகுநலன் கொண்ட தலைவியோடு ஒருநாள் கூடிவாழ்ந்துவிட்டால், பின்பு அரைநாள் வாழ்க்கைகூட வேண்டாமென்று அவலிக்கும் தலைவனையும் காணலாம்.

''பெருந்தோள் குறுமகள் சிறுமெல் ஆகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன்
யானே'' (280)

என்பது அத் தலைவனுடைய புலம்பல் மொழிகளாகும்.

கடும் துன்பத்தில் சிக்கிக்கொண்ட ஒருவரை, மற்றவர் காப்பாற்றினால், ''நீ என்னைக் காப் பாற்றவில்லை, என்னுடைய குடும்பத்தையே காப்பாற்றினாய்'' என்று காப்பாற்றப்பட்டவர் மகிழ்ந்து கூறுவது உலகியல்பாகும். இத்தகைய ஆர்வமொழியைக் குறுந்தொகைத் தலைவனும் கூறக் கேட்கலாம்.

தான் குறிப்பிட்ட நாளில் திரும்பச் செல்லாவிட் டால், தலைவி உயிர்நீப்பது உறுதி என்று எண் ணிய தலைவன், தேரை மிக விரைவாகச் செலுத் தும்படி, தேர்ப்பாகனிடம் கூறினான். மிக விரை வாகச் செல்ல வேண்டும் என்பதற்காகப் புதிய வழியிலே, குறுக்கு வழியிலே தேரைச் செலுத்திய பாகன் குறிப்பிட்ட நாளில் தலைவன் இல்லம் வந்து சேர்ந்தான். அத் தேர்ப்பாகன், நோயினால் வருந்தி உறையும் தலைவி இறந்துபடாமல் தலை வன் அவளைப் பெறுதற்குக் காரணமாகின்றான். இந்நிலையை எண்ணி மகிழ்ந்த தலைவன், அவனை நோக்கி, 'இன்றைக்கு நீ தேரையா தந்தனை? இல்லையில்லை என் உயிரனைய தலைவியையே தந்தனை!' (400) என்று கூறிப் பூரிப்படை கின்றான்.

தலைவி

'கட்புலனாயதோர் அமைதித் தன்மை' என்பதற் கேற்பத் தலைவி படைக்கப்படுகின்றாள். தலைவன் தன்னுடன் இருக்கும்போது அவள் அடைகின்ற மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. தலைவனின் பிரிவை எண்ணி அவள் புலம்பும் புலம்பல்மொழிகளும் எண்ணிலடங்கா. தலைவன் பிரிந்து சென்ற பின்பு ஊரார் அலர் தூற்றுகின்றனர். அலரின் கொடு மையைத் தலைவியால் தாங்க இயலவில்லை. அவலமுறும் அத் தலைவியைச் சித்திரமாகத் தீட்டுகின்றார் பரணர்.

ஆற்றங்கரையில் ஓர் அத்திப்பழம் விழுந்தது. கரையில் வீழ்ந்த அந்த அத்திப்பழத்தை ஏழு நண்டுகள் உண்ண விரும்பின. ஏழு நண்டுகளும் அப் பழத்தைச் சுற்றிச் சூழ்ந்து குழைத்துச் சிதைத் தன. நண்டுகளால் மிதிக்கப்பட்ட அப் பழம் குழை வது போலத் தலைவியும் அலர் தூற்றலால் சிதைந் தாளாம் (24).

''இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே'' (49)

என்று, மறுமையிலும் தன்னுடைய தலைவனையே கணவனாகப் பெற விரும்புகின்றாள் ஒரு தலைவி. 'தாயில்லாத முட்டை சீர்கெட்டு அழிவது போல' என்னுள்ளத்துள் உள்ள காமமும் தலைவன் விரைந்து வரைந்துகொள்ளாத காரணத்தால் பயனற்றுக் கெடும் என்று வாடும் தலைவியின் பரிதாபக் காட்சியையும் (152) காணலாம்.

'பசு இராக்காலத்தில் கிணற்றில் விழுந்துவிட்ட தைக் கண்ட ஊமன், அதனை விளங்கப் பிறருக்குச் சொல்லும் வன்மை இல்லாமையால் மிக வருந்து வதைப் போல யானும் காமத்துயரைப் பிறருக்குச் சொல்லும் வலியின்றி வருந்துகிறேன் என்று அரற்று கின்றாள் (224) ஒருத்தி. தலைவியின் அளப்பரிய காதல் உள்ளத்தைச் சித்திரிக்கும் பாடலையும் காணலாம். தலைவன் செய்யும் இன்னாமை முடிவில் இன்பம் தரும் என்ற நம்பிக்கையுடையவள் தலைவி. எனவே, 'உறவினனான அவன் செய்யும் இன்னாமையைக் காட்டிலும், தேவருலகம் இனிதா குமோ?' என்று வினவுகின்றாள்.

''..............பெருங்கல் நாடன்
இனியன் ஆகலின் இனத்தின் இயன்ற
இன்னா மையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே'' (288)

என்பதே அத் தலைவியின் கேள்விக் கணையாகும்.

தோழி

தலைவியையும் தலைவனையும் இணைத்து வைக்கும் ஒற்றுமைப் பாலமாகவே தோழி படைக் கப்படுகின்றாள். தலைவியின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ளும் தோழி, வரைவின் நிமித்தம் தலைவனை இடித்துரைக்கும் வலிமை யையும் பெற்றுத் திகழுகின்றாள். குறுந்தொகைப் புலவர்கள் படைத்துக்காட்டும் சில தோழியரைக் காண்போம்.

இரவுக் காலத்தில் தலைவியைக் காண வருகின் றான் தலைவன். தலைவன் வரவை உணர்கின் றாள் தோழி. பால்போல் ஒளிவீசும் நிலவைப் பார்த்து, அவனுக்குக் கேட்கும்படி மொழிகின்றாள்.

''கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை நெடுவெண் ணிலவே'' (47)

'தலைவன் இரவுக் காலம் வருவதற்கு, நெடுவெண் ணிலவே நீ நல்லை அல்லை' என்று தோழி நிலவைப் பார்த்துக் கூறினும், சிறைப்புறமாக இருக்கும் தலைவனிடம், 'தலைவியை விரைவில் மணந்து கொள்வாய்' என்று குறிப்பிடுவதே அவளுடைய உள்நோக்கமாகும்.

தலைவி முதுமைப் பருவம் எய்திவிட்டாலும், அவளை வெறுக்காது போற்றவேண்டியது தலைவ னுடைய கடமையாகும் என்று அறிவுறுத்துகின் றாள் தோழி. ''மரையா, தனக்குப் பயன்படாது ஓங்கி வளர்ந்த மூங்கில்களை உடைய சாரலா யினும், தனக்குப் பயன்படும் இலைகளைத் தேடி யுண்டு அதன்கண் அன்புவைத்துத் துயில்வதுபோல, உனக்குப் பயன்படாத மூப்புடையவளாயினும்

உனக்கு ஏற்ற நல்லியல்பு கண்டு இன்புற்று இவள்பால் அன்புவைத்து ஒழுகுவாயாக'' (115) என்று தலைவனுக்கு அறிவுரை கூறும் தோழியின் திறன் பாராட்டுக்குரியதாகும்.

'பாலும் கசந்ததடி, படுக்கையும் நொந்ததடி, கோலக்கிளி மொழியும் செவியில் குத்தல் எடுத்த தடி' என்று கூறித் தலைவனின் பிரிவை எண்ணி வாடுகின்றாள் தலைவி. தலைவியின் துன்பத்தைக் கண்டு பொறுக்க இயலாத தோழி, 'தலைவரை எப் படியும் தேடித்தருவேன்' என்று வாக்குறுதி அளிக் கின்றாள்.

''நிலந்தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோநம் காத லோரே'' (130)

''நிலத்தின் உள்ளேயோ, வானின் வழியோ, கடலில் நடந்தோ செல்ல இயலாத நம் தலைவரை, நாடுகள்தோறும், ஊர்கள்தோறும், முறையாகக் குடிகள்தோறும் தேடினால் அகப்படாமல் தப்பு வாரோ? என்று உறுதியோடு கூறும் தோழியின் நம்பிக்கை உள்ளமே, ஆறுதல் மொழியே தலைவியை வாழவைத்தது எனலாம்.

பொருள்வயிற் பிரிய முனையும் தலைவனிடம் தலைவியின் நிலையைத் தெளிவாக எடுத்தியம்பு கின்றாள் தோழி. ''தாய் மாறுபட்டு வருத்திய பொழுதும் வாய் திறந்து அன்னையே என்று அழும் குழந்தையைப்போல என் தோழியாகிய தலைவி, நீ இன்னா செய்தாலும் இனிது செய்தாலும் உன் னால் பாதுகாக்கப்படவேண்டியவளே! உன்னை யன்றி அவளது துன்பத்தை நீக்குவார் யாரு மில்லை'' (397) என்பதே தோழியின் மொழி களாகும். உலகியலைச் சுட்டிக் காட்டி, தலை வனை விரைவில் திரும்புமாறு அறிவுறுத்தும் தோழியின் நுட்ப அறிவு உணரத்தக்கதாம்.

தலைவனை இகழ்ந்து மொழியும் காதற்பரத் தையர் கூற்றையும் உடன்போகிய மகளை எண்ணி வாடும் மகட்போக்கிய தாயின் மனவெதும்பல் மொழிகளையும், தலைவன்-தலைவியை எதிரே கண்டவர்கள் கழறியதையும், செவிலித்தாயின் செம்மையான செப்பினையும் குறுந்தொகையில் கற்றுச் சுவைக்கலாம்.

நகைச்சுவை

எண் சுவைகளில் நகைச்சுவை தலையாய இடத்தைப் பெறுகின்றது. வாழ்வியல் அறங்களைச் செம்மையாகக் கூறும் இயல்புடையவர்கள் சங்கப் புலவர்கள். வாழ்க்கைக்குத் தேவையான நகைச் சுவையுணர்வைத் தூண்டவல்ல பாடல்களையும் குறுந்தொகையில் கற்று மகிழலாம்.

கொக்கினால் கவ்வப்பட்ட கெண்டை மீன் அதன் வாயினின்றும் தப்பி நீருள் சென்று மறைந் தது. கொக்குச் சென்றிருக்கலாம் என்று எண்ணிய மீன் சிறிது நேரம் கழித்து நீரின் மேலே வருகின்றது. நீரின் மேலே வந்தவுடன் அதன் அருகில் கொக்கின் தோற்றத்தை ஒத்திருந்த தாமரை முகையைப் பார்த்த கெண்டை, அதைக் கொக்கு என்றே கருதி மீண்டும் அஞ்சியது.

''குருகுகொளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமரை வான்முகை வெரூஉம்''

என்பது (127) பாடலாகும். 'அரண்டவன் கண் ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற பழமொழி இங்கே நினைத்தற்குரியதாகும்.

இன்னொரு காட்சியையும் காணலாம். தீயைக் கண்டு அஞ்சும் இயல்புடையது யானை. தினைப் புனம் காக்கும் காவலன் யானையை விரட்டுவதற் காகக் கொள்ளியை மூட்டுகின்றான். கொள்ளியின் ஒளியைக் கண்ட யானை வெருண்டு ஓடிவிடுகிறது. வேறுபுறம் ஓடிய யானை, வானத்தினின்றும் விழும் விண்மீனின் ஒளியைக் கண்டு, தன்னை அச்சுறுத்திய 'கொள்ளி' என்று நினைத்து மீண்டும் அஞ்சுகிறது.

''ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடரொளி வெரூஉம்'' (357)

என்னும் இப்பாடல், 'கொள்ளிக்கட்டையால் அடி பட்ட பூனை மின்மினிப் பூச்சிக்குப் பயந்ததுபோல' என்னும் பழமொழியை நினைவுப்படுத்துவதாகும். இத்தகு சங்கப் பாடல்களை எல்லாம் கற்றுக் கற்று, சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்தவர் பாரதிதாசன்.

''கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்''

என்னும் நகைச்சுவை மிகுந்த பாடலைப் பாவேந்தர் பாரதிதாசன் 'அழகின் சிரிப்பில்' படைத்துள்ளமை இங்கே நினைந்து இன்புறத்தக்கதாம்.

உவமைப்புலவர்கள்

குறுந்தொகையில் நூற்றுக்கணக்கான உவமை கள் இடம் பெற்றுள்ளன. சில இடங்களில் உவமை களே பாட்டுப் பொருளாகின்றன. மற்றும் சில பாக்களுக்குப் பாடிய ஆசிரியர் பெயர் மறைந்து விட்டாலும், அவர்கள் கூறிய உவமைகளே அவர் களுக்குப் பெயராகியுள்ளமையும் நோக்கத்தக்க தாகும். கயமனார் (9), செம்புலப்பெயல்நீரார் (40), அணிலாடு முன்றிலார் (41), நெடுவெண்ணில வினார் (47), மீனெறி தூண்டிலார் (54), விட்ட

குதிரையார் (74), ஓரேருழவனார் (131), கூவன் மைந்தன் (224), காலெறிகடிகையார் (267), ஓரிற் பிச்சையார் (277), கல்பொரு சிறுநுரையார் (290), கள்ளிலாத்திரையனார் (293), குப்பைக் கோழியார் (305), பதடி வைகலார் (323), கவைமகன் (324), வில்லக விரலினார் (370), கங்குல் வெள்ளத்தார் (387), குறியிறையார் (394) என இவ்வாறு பலர் பாடல் அடிகளால் பெயர் பெற்றுள்ளனர். இவர்களுட் பலர் உவமைத்தொடர்களால் பெயர் பெற்றவர்கள் என்பது அறியத்தக்கதாம்.

தலைவன் பிரிவுக் கொடுமையால் நாளும் மெலியும் ஒரு தலைவி, தலைவனுக்காகப் பரிந்து பேசும் தோழியிடம் கீழ்வருமாறு கடிந்து பேசுகிறாள்:

''காமம் தாங்குமதி என்போர் தாம்அஃது
அறியலர் கொல்லோ அனைமது கையர்கொல்
யாம்எம் காதலர்க் காணே மாயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே.'' (290)

கல்லிலே மோதிமோதி உடையும் சிறுசிறு நுரைகள் போலச் சிறிது சிறிதாக உடல்நலம் கெட்டு அழிவதைத் தலைவி நன்கு விளக்குகிறாள். இவ்வுவமையில் புதுமை, இனிமையாகக் கலந்து அவலத்தையும் அமிழ்தமாக்கித் தருகிறது. இதனால் இப் பாடலாசிரியர் 'கல்பொரு சிறுநுரையார்' என்றே அழைக்கப்படுகின்றார்.

தலைவியின் எயிற்று நீரின் இனிமைக்கு அடிக் கரும்பில் வெட்டிய துண்டத்தைத் தின்றதால் உண்டாகும் இனிமையை உவமித்து,

''............................கரும்பின்
காலெறி கடிகைக் கண்ணயின் றன்ன
வாலெயில் ஊறிய வசையில் தீநீர்'' (267)

எனத் திளைக்கும் புலவர் 'காலெறி கடிகையார்' என்ற இனிக்கும் பெயரைப் பெற்றார்.

''வில்லக விரலிற் பொருந்தி'' (370) எனப் பரத்தையும் தலைவனும் ஒன்றுபட்டதற்கு வில்லைப் பிடித்த விரல்களை உவமித்த புலவர் 'வில்லக விரலினார்' என்று சொல்லப்பட்டார்.

தன்னுடைய இரட்டைப் பிள்ளைகள் நஞ்சுண்டு விட்டால், அவ்விருவருக்காகவும் இரங்கும் தாய் போலத் தலைவன் - தலைவி ஆகிய இருவருக்கும் தான் வருந்துவதாகத் தோழி குறிப்பிடுகின்றாள். இப் பாடலில் 'கவைமக நஞ்சுண்டாங்கு' (324) என்ற உவமையைப் பயன்படுத்திய புலவர் 'கவைமகனார்' என்றே கருதப்பட்டார்.

வளைத்துவிட்ட மூங்கிலின் விசைப்பிற்கு விட்ட குதிரையின் விசைப்பினை, 'விட்ட குதிரை விசைப்பினன்ன' (74) என்று உவமை கூறியவர் விட்ட குதிரையாரானார்.

இங்ஙனம் குறுந்தொகையில் பாடலடியால் பெயர் பெற்ற புலவர்களில் உவமைப் புலவர்களே சிறந்து விளங்குகின்றனர். டாக்டர் உ. வே. சா. அவர்கள் பாடலால் பெயர்பெற்ற புலவர் பலர் குறுந்தொகையினாலேயே பெயர் பெற்றுள்ளனர் என்றும், அவர்கள் பாடல் பிற தொகை நூல்களிலும் காணப்பட்டாலும் அவர்களுக்குக் குறுந்தொகை அடிகளாலேயே பெயர் காணப்படுகிறது என்றும், அதனால் குறுந்தொகை, காலத்தால் முந்தியதாகல் வேண்டும் என்றும் கூறுகின்றார்.

கட்புலன் உவமைகள்

அறிவுத் திறன் கொண்ட சங்கத்துச் சான்றோர், தாங்கள் கண்ட காட்சிகளையும் பாடற் பொருளாக்கி மகிழ்ந்தனர். கட்புலன் நிரம்பிய குறுந்தொகைப் புலவர் செவிக்கினிமையாக்கிய சிலபாடல்களையும் காண்போம். கிளி தன் அலகிலே கொண்டுள்ள வேப்பம் பழத்தை, சிவந்த நகங்களையுடையாள் ஒருத்தி நூலை நுழைக்கும் பொருட்டுத் தன் பெருவிரலானும் சுட்டு விரலானும் உகிர் நுனியிலே பற்றிய பொற்காசிற்கு உவமையாக்குகின்றார் (67) அள்ளூர் நன்முல்லையார். கிளி பழத்தைக் கவ்விய காட்சியையும், நூல் நுழைக்கும் பொருட்டுப் பொற்காசைப் பற்றிய காரிகையையும் கண்ட புலவரின் கூர்பார்வையே இவ்வுவமைக்கு வித்திட்டது எனலாம். நம் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன், கிளி கோவைப் பழத்தைக் கொத்திச் செல்வதை ''உளக்கினுள் விளக்கை ஏற்றிச் செல்லல் போல்'' என்று கூறுவது நினைவுகூர்தற்குரியதாம்.

குவிந்த கொத்துகளையுடைய செங்காந்தள் மலரைக் கண்ட புலவர் மதுரைக்கண்ணனார், அதைச் சேவலின் சிவந்த கொண்டைக்கு உவமையாக்கி (107) மகிழ்கின்றார். கண்ணனார் என்னும் பெயர் இவருக்கே சாலவும் பொருந்தும். கருவிளை மலரின் நடுவில் உள்ள புள்ளியைக் கண்ணுற்ற கிள்ளிமங்கலங்கிழார் — 'மயிற்பீலியின் நடுவில் உள்ள கண்போன்று உள்ளது' — என்று கூறி (110) இறும்பூதெய்துகின்றார்.

கருமை நிறம் வாய்ந்த பெரிய குண்டுக்கல்லைக் காணுகின்றார் புலவர் தீன்மதி நாகனார். சிறிய கருமை நிறம் வாய்ந்த பெண் யானை தன்னுடைய கையை மறைத்துக்கொண்டு நின்றால் எப்படி இருக்குமோ அப்படியிருந்தது அக்குண்டுக்கல் என்று (111) மொழிகின்றார். மயிலின் அடியின்கண் அமைந்த விரல்களும் உள்ளங்காலும் போன்று அமைந்திருந்தது நொச்சி இலை என்று புலவர் கொல்லன் அழிசி (138) கூறி மகிழ்வார். ஓதியைக் கண்ணுற்ற புலவர் அள்ளூர் நன்முல்லையார் கருக்கரிவாள் போன்ற முதுகை உடைய ஓதி என்று கூறி, 'ரம்பம்' போன்ற முதுகையுடைய ஓதியையே (140) நம் கண்முன் கொணர்ந்து நிறுத்துகிறார். நீர்

நாயின்மேல் உள்ள வரிகள் பிரம்பின்மேல் உள்ள வரிகள் போன்றே இருப்பதைக் கண்ட ஔவையார் 'பிரம்பின் வரிப்புற நீர் நாய்' என்று கூறி (364) நீர் நாயின் தோற்றத்தைக் கண்ணுக்குப் புலனாக்கு கின்றார்.

செவிப்புலன் உவமைகள்

கண்ணுக்குப் புலனாகிய காட்சியைப் பாடற் பொருளாக்கி உவமை கூறி மகிழ்ந்த புலவர்கள், செவிக்குப் புலனானவற்றையும் நுகர்ந்து, அவற்றை நமக்குச் செவிநுகர் கனிகளாக்கினர்.

வாகையின் வெண்மையான நெற்றுகள் மேல் காற்று மோதுதலால் ஒலித்தன. அவ்வொலி, ஆரி யக் கூத்தர்கள் கயிற்றில் ஏறி ஆடுங்கால் முழங்கும் பறையின் ஓசைபோல் ஒலித்ததாகப் பெரும்பதும னார் என்னும் புலவர் (7) செப்புகின்றார்.

அம்பின் நுனியை உகிரால் வருடும் ஓசையைச் செவிமடுத்த புலவர், அவ்வோசையை ஆண்பல்லி தன் காதல் துணையாகிய பெண்பல்லியை ஒலி செய்து அழைக்கும் ஓசைக்கு ஒப்புமையாக்கு கின்றார்.

''உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்'' (16)

என்று பாடிய புலவர், அம்போடு மிக நெருங்கிய தொடர்புடைய மன்னன் 'பாலை பாடிய பெருங் கடுங்கோ' என்று அறிந்து மகிழலாம். ஓசையை உவமையாக்கி மகிழ்ந்த புலவர் பலரிருக்க, ஓசையை வாழ்க்கையோடு பின்னிப் பிணைத்த புலவர் ஒரு வரும் உண்டு.

மலர்களின் உதிர்வால் உண்டாகும் ஓசையையும் உற்றுக் கேட்டு, அதையும் தம் பாடலில் இடம் பெறச் செய்த பெருமையுடையவர் 'கொல்லன் அழிசி' என்னும் நல்லிசைப் புலவரேயாவார்.

''மயிலடி யிலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே'' (138)

ஊரெல்லாம் துயில, நொச்சி உதிர்த்த மலர்களின் ஓசையைக்கூடக் கேட்டுத் துயிலாத காரிகை யொருத்தி, காளை வரவிற்குக் காத்திருந்தாளாம்.

நெஞ்சையள்ளும் இத்தகைய பாடல்களே இலக் கியத்திற்குச் சுவையும் பெருமையும் நல்குவன வாம்.

மனங்கவரும் உவமைகள்

உள்ளுந்தோறும் உவகை பயக்கும் உவமைகள் பல குறுந்தொகையில் பொதிந்துள்ளன. பொரு ளுக்கேற்ற வகையில் அமைந்த அவ்வுவமைகளில் சிலவற்றைக் காண்போம்.

தாமரை மலரைப் போன்ற அழகிய செம்மை யாகிய திருவடியையும், பவழத்தையொத்த சிவந்த நிறத்தையும், குன்றிமணியையொக்கும் சிவந்த ஆடையையும் உடையவன் முருகன் என்று, குறுந் தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலே உவமை யோடு தொடங்குவதை உற்றறிந்து இன்புறலாம்.

முள்ளிச்செடியின் முள், அணிலினுடைய பல் லைப் போன்று இருக்கிறது என்பதை 'அணிற் பல்லன்ன கொங்கு முதிர் முண்டகத்து' என்று (49) விளக்குவார் அம்மூவனார்.

தலைவனைப் பெற்று இன்பம் துய்க்க இயலா விட்டாலும், அவனைக் கண்டாவது மகிழ்வோம் என்று தலைவி கூறுகின்றாள். தலைவியின் இந் நிலை 'மரத்தின்மே லிருக்கும் தேனிறாலைப் பெற் றுச் சுவைக்க இயலாத குறுங்கால் முடவன், ஒரு கையைக் குடையாகக் குவித்துக்கொண்டு, மற் றொரு கையின் விரலால் தேனிறாலைச் சுட்டிக் காட்டிக்கொண்டு உள்ளங்கையை நக்கியதற்கு ஒப் பாகும்' (60) என்பார் பரணர். உடைந்த வளை போன்று பிறைதோன்றியது (307) என்னும் உவமை நினைவிற்கினியதாகும்.

தலைவியின் உள்ளத்து உணர்வுகளைப் புலப் படுத்தும் பாங்கில் அமைந்தது மதுரை வேளாதத் தன் என்னும் பெரும் புலவரின் சிறிய பாடலாகும்.

''எழுதரு மதியங் கடற்கண் டாஅங்
கொழுகுவெள் ளருவி யோங்குமலை நாடன்
ஞாயி றனையன் தோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத்
தோளே'' (315)

இப் பாடலில் திங்கள் - வீழ்கின்ற வெள்ளருவியின் தோற்றத்திற்கும், கடல்-மலைக்கும் உவமையாயின. தலைவனை ஞாயிற்றுக்கு ஒப்பிடும் தலைவி, தன் னுடைய தோளுக்கு நெருஞ்சி மலரை ஒப்பிடுகின் றாள். தோளுக்கு நெருஞ்சி மலரை ஒப்பிடுவதன் காரணம்தான் என்ன? நெருஞ்சிமலர் ஞாயிற்றையே நோக்கி நிற்கும் இயல்பினது. ஞாயிறு கீழ்த்திசை இருப்பின் கிழக்கு நோக்கியும், மேற்றிசை செல்லின் மேற்கு நோக்கியும், உச்சி வானத்திலிருப்பின் உச் சியை நோக்கியும் நிற்பதாகும். ஞாயிற்றை நோக் கிய நெருஞ்சி போல், தலைவன் எக் கருத்துடைய வனோ அக் கருத்து உடையவளே தான் என்பதை உணர்த்தவே, ஞாயிற்றைத் தலைவனுக்கு உவமை யாக்கிய தலைவி, தன்னுடைய தோளுக்கு நெருஞ் சியை உவமையாக்கினாள். இந் நான்கு வரிப் பாட லில் திங்களையும், ஞாயிற்றையும், அருவியையும், கடலையும், மலையையும் அடக்கி, வாழ்வியல் அறத்தையும் உணர்த்திய புலவரின் திறம் வியந்து போற்றுதற்குரியதாம்.

முரண்தொடை

குறுந்தொகைப் பாடல்களில் நூற்றுக்கு மேற் பட்ட இடங்களில் முரண்தொடை அமையக்

காணலாம். இம் முரண்தொடைப் பகுதிகளை உற்று நோக்கும்பொழுது, அவை மிக இயல்பாக உள்ளன. அணிநலன் என மிகைப்படுத்தித் தோற்றாவாறு பாடலுடன் இணைந்து காணப்படுகின்றன. பாட்டின் மையக் கருத்தாகிய பொருளுணர்ச்சிக்கு இம் முரண்தொடை மிகுதியும் உதவுவதாயுள்ளது.

"சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (18)

என்னும் பாடலில், சிறுமை பெருமையாகிய முரண் சொற்களால் காமம் தாங்காது நலியும் உயிரின் மெலிவும், காமத்தின் வலிமையும் கூறப்பட்டதை யுணரலாம்.

இம் முரண்தொடைகள் பாடலில் சந்த இனிமையைத் தந்து நிற்பதும் கருதத்தக்கதாகும்.

"எம்இல் பெருமொழி கூறித் தம்இல்" (8)

"நல்லுரை இகந்து புல்லுரை தாஅய்" (29)

"காலையும் பகலும் கையறு மாலையும்" (32)

"பெருந்தண் வாடையும் வாரார்
இஃதோ தோழிநம் காதலர் வரவே?" (160)

"காலை வந்து மாலைப் பொழுதில்" (346)

"மாலைப் பெய்த மணங்கமழ் உந்தியொடு
காலை வந்த முழுமுதற் காந்தள்" (361)

"இனிய செய்தநங் காதலர்
இன்னா செய்தல் நோமென் நெஞ்சே!" (202)

"ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்" (176)

இவைபோல முரண் அமைந்துள்ள பகுதிகளைச் சந்தத்தோடு வாய்விட்டுப் படித்துப் பார்த்தால் பாடலின் இனிமையைத் தெற்றென உணரலாம்.

புலவர் தான் கூறவந்த விலங்கையோ, பறவையையோ, ஊரின் எழிலையோ, தலைவியின் அழகையோ முரண்தொடையில் அமைத்துக கூறும்பொழுது அவர் கூற வந்த பொருளையே நாம் கண்ணாற் கண்ட உணர்வினைப் பெறுகின்றோம்.

"சிறுகண் பெருங்களிறு" (88)

"கருங்கால் வெண்குருகு மேயும்" (325)

"பெருங்கடற் கரையது சிறுவெண்காக்கை" (246)

"நெடும்பல் கூந்தல் குறுந்தொடி மகளிர்" (384)

"பெருநீர் வேலியெம் சிறுநல் ஊரே" (345)

"சிறியரும் பெரியரும் வாழும் ஊர்க்கே" (368)

"கையும் காலும் தூக்கத் தூக்கும்" (8)

"கையும் காலும் ஒய்வன ஒடுங்க" (383)

"முன்நாள் இனிய தாகிப் பின்நாள்" (394)

"பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்" (82)

"இன்னா செயினும் இனிதுதலை அளிப்பினும்" (397)

குறுந்தொகையில் காணப்படும் இத்தகு முரண்தொடைகளை ஆய்ந்தால், தொல்காப்பியர்கால நிலையைக் காட்டிலும் சங்கப் பாடல்களில் அது வளர்ச்சிநிலை பெற்றிருப்பதை அறியலாம்.

அடுக்குத்தொடரும் அடைமொழியும்

அடுக்குத்தொடரும் அடைமொழியும் கவிதைக்குத் தனிச் சிறப்பைத் தரவல்லனவாம். அடைமொழி எவ்வாறு அமையவேண்டும் என்பதை இலக்கணிகள் விளக்கியுள்ளனர். அடைமொழியால் உள்ளத்தைக் கவரும் பல பாடல்களைக் குறுந்தொகையில் காணலாம். அடுக்குத்தொடர் அமைந்து ஆர்வத்தைத் தூண்டும் பாடல்கள் பலவும் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளன. சில வற்றைக் காண்போம்.

"நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே" (4)
"தூக்கத் தூக்கும்" (8)
"உரவோர் உரவோர் ஆக" (20)
"அகவன் மகளே அகவன் மகளே" (23)
"நோக்கி நோக்கி வாளிழந் தனவே" (44)
"வானமீனின் வயின் வயின் இமைக்கும்" (150)
"நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்" (130)
"காமம் காமம் என்ப" (136)
"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே" (156)
"பழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப" (173)
"பிறர்பிறர் அறியக் கூறல்" (175)
"நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே" (202)
"செல்வாம் செல்வாம் என்றி அன்றிவண்" (223)
"மெல்ல மெல்ல இல்லா குதுமே" (290)
"சேறும் சேறும் என்றலின்" (325)
"வளர்பிறை போல வழிவழிப் பெருகி" (289)
"மெல்லிய லோயே மெல்லிய லோயே" (368)

மேற்கூறிய அமைப்புகளில் அடுக்குத்தொடர் பயின்று வந்து பாடலுக்குச் சுவையூட்டுவதை அறியலாம். "சிலம்பிற் சிலம்பும் சோலை" (360) என்னும் பாடல் வரியில், முதலில் கூறப்பட்ட 'சிலம்பு' என்னும் சொல் காலில் அணியும் சிலம்பையும், இரண்டாவது கூறப்படும் 'சிலம்பும்' என்னும் சொல் 'ஒலிக்கும்' என்னும் பொருளையும் உணர்த்திச் சிலேடை நயத்தைத் தந்தது எனலாம்.

அடைமொழியின் துணைகொண்டு தாம் படைக்க முனைந்த பொருளைத் தெற்றெனப் படைத்தனர் புலவர் பெருமக்கள். குறுந்தொகையில் காணப்படும் சில அடைமொழிகளையும் காணலாம்.

கருங்கோற்குறிஞ்சி (3), சின்மொழி அரிவை (14), செங்காற்பல்லி (16), கருங்கால்வேம்பு (24), சிறுபசுங்கால்குருகு (25), பெருங்கைவேழம் (37), நெடு வெண்ணிலவு (47), இரும்புலிக்குருளை (47), பசுவீ முல்லை (62), துள்ளுநடைச் சேவல் (85), தூவெள்அருவி (95), மென்னடை மரையா (115), பைங்காற் கொக்கு (122), செவ்விப் பைம்புனம் (131), நடுங்குதலைக்குழவி (132), குறுங்காற் பேடை (139),

வளைவாய்ச் சிறுகிளி, நெடுங்கை வன்மான், குறுங்கை இரும்புலி (141), செங்காற்பேடை (151), சிறு வெண்முகை (162), கொடுவரி இரும்புலி (215), தடமருப்பு யானை (255), ஏந்துகோட்டு யானை (258), திரிமருப்பு எருமை (279), குறுங்கால் அன்னம் (300), கருங்கால் வெண்குருகு, பொன்வரி அலவன் (303), சிறுவெண்காக்கை (313), தீம்புளி நெல்லி (317), நறுவீ ஞாழல் (318), செங்கண் இரும்புலி (321), கொடுங்கால் முதலை (324), பைங்கண் மந்தி (335), திரிமருப்பு இரலை (338), அரிமடப்பிணை (338), சிறுவீ முல்லை (348), தடந்தாள் நாரை (349), நெடுங்காற் கணந்துள் (350), குறுங்காற் கட்டில் (359), நெடுவெண் குப்பை (372) இவை போன்ற அடைமொழிகள் குறுந் தொகையில் பயின்று வந்து, ''நல்ல'' என்ற அடைமொழியைக் குறுந்தொகை பெறுவதற்கு ஒரு காரணம் ஆகின்றன எனலாம்.

வரலாற்றுச் செய்திகள்

தமிழகத்தில் நடைபெற்ற சில போர்ச் செய்தி களையும், இன்னோரன்ன பிற செய்திகளையும் உணர்த்தும் வரலாற்று நூலாகவும் குறுந்தொகை திகழ்கிறது. வடுகர், சேரர் படைத்தலைவன் கட்டி (11), ஒன்றுமொழிக் கோசர் (15), ஆதிமந்தி (31), குட்டநாட்டரசன் (34), பல்வேல் எழினி (80), கழல்தொடி ஆஅய் (84), பெரும்பூண் பொறையன் (89), நெடுந்தேர் அஞ்சி (91), தொண்டியையுடைய சேரன் (128), வல்வில் ஓரி (100), உறந்தையைத் தலைநகராகக் கொண்ட சோழர் (116), சேந்தன் தந்தை அழிசி (258), தொண்டையர் (260), பெண்கொலைபுரிந்த நன்னன் (292), ஆதி யருமனின் ஊர் (293), மதுரையில் வாழ்ந்த அகுதை (298), மலையமான் திருமுடிக்காரி (312), வேந்த ரோடு போரிட்ட விச்சியர் பெருமகன் (328), பசும் பூண் பாண்டியனது ஏவலாளி, அதிகனை வென்று ஆர்ப்பரித்த கொங்கர் (393) முதலான வரலாற்றுச் செய்திகள் ஈண்டு உணர்த்தப்படுகின்றன.

பழக்க வழக்கங்கள் — நம்பிக்கைகள்

பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்களையும், நாகரிகத்தையும், நம்பிக்கைகளையும், பண்பாட்டை யும் உணர்த்தும் ''வாழ்வியல் நூலா''கவே குறுந் தொகை விளங்குகிறது. வாழ்க்கை முறைகளைச் செப்பும் சில பாடல்களைக் காண்போம். கனவு பற்றிய நம்பிக்கை கொண்டிருந்தனர் (30). கொடியவர்களை முருகக்கடவுள் தண்டிப்பார் என்று நம்பினர் (87). தேவர் உலகம் இன்பம் தரக்கூடியது என்று எண்ணினர் (101). காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்று நம்பினர் (210). பேய் உண்டு என்று நம்பினர் (161, 263, 180). திருமணத்திற்குப் பிறகு தலைவியால் தலைவன் வாழ்வு சிறக்கும் என்று நம்பினர் (295). பாம்பாலே திங்கள் விழுங்கப்படும் என்று நம்பினர் (395). தூண்டில் வைத்து மீன் பிடித்தனர் (54). வலை வைத்து மீன் பிடித்தனர் (171). புத்துண வினை முதன்முதலாகக் கடவுளுக்கு இட்டனர் (105). களிமண்ணைக் கூந்தலுக்குத் தேய்த்து நீராடினர் (113). இல்லத்துள் 'வருவீர் உளீரோ' என அழைத்து விருந்து போற்றினர் (118). மணம் பேசுவதற்கு ஆண்டாலும் அறிவாலும் முதிர்ந்த சான்றோர் சென்றனர் (146). ஓலையால் செய்த சிறுபெட்டியில் விதையை வைத்து விதைத் தனர் (155). பிறையைத் தொழுதனர் (178; 307). துர்க்கைக்குப் பலி கொடுத்தனர் (218). பாலை விற்று உணவு பெறுவதும், உப்பை விற்று நெல்லைப் பெறுவதும் ஆகிய பண்டமாற்றுமுறை இருந்தது (221, 269). நாழிகைக் கணக்கர் இரவின்கண் வானத்தை நோக்கிக் காலக் கணக்கை ஆய்ந்தனர் (261). மறி அறுத்து வழிபட்டனர் (263, 362). நீர் சேமித்து வைக்கும் 'சேமச் செப்பில்' வெப்ப நீரைச் சேமித்து வைத்தனர் (277). தலைச் சூலினை யுடைய மகளிர் பசிய புளிச் சுவையின்கண் விருப்பம் கொண்டனர் (287). துணிவெளுப்போர் ஆடைக்குக் கஞ்சியூட்டி வெளுத்தனர் (330). பழத் தைக் கவரும் குரங்கைப் பிடிக்க மரத்தில் வலையை மாட்டி வைத்தனர் (342). பஞ்சில் திரிசெய்து எரித்தனர் (353). தலைவனைப் பிரிந்தோர், அவன் வருவேன் என்று கூறிச் சென்ற நாட்களைச் சுவரில் கோடிட்டு, நாள்தோறும் இன்னும் எத்துணை நாட் கள் உள என ஒற்றி ஆய்ந்தனர் (358). தேய்ந்து மழுங்கிய தடிகொண்டு உழுத்த நெற்றினை உடைத் தனர் (384). மகளிர் பந்தாடி மகிழ்ந்தனர் (396). மாலைப்பொழுதில் நெய்பெய்து விளக்கேற்றினர் (398). இச் செய்திகளைத் தவிர பிற செய்திகளை யும் குறுந்தொகைமூலம் அறிந்து இன்புறலாம்.

மேற்கூறிய சிறப்பு நலன்களோடு கூறாது விடு பட்ட ''உள்ளுறை உவமம்'' போன்ற இன்னோ ரன்ன பிற நலன்களையும் அணியாகக் கொண்டு திகழ்வதால்தான் குறுந்தொகையை ''நல்ல குறுந் தொகை'' என்று எல்லோரும் போற்றுகின்றனர்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே!

செந்தமிழ் நாடெனும் போதினி லேஒரு தெய்வமணம்
வந்து சுகம்பெற வாழ்த்திடு கின்றது; வையகத்தில்
இந்த விதத்தில் இருந்திடுல் நீர்இறை என்றிடவே
முந்திடு கின்றது வள்ளுவன் தந்திடும் மூதுரையே!

மூதுரை பற்பல மோன விளிம்பில் முளைத்தநிலம்;
யாதும்ஊர் யாவரும் கேளிரென் றன்பில் அழைத்தநிலம்;
மாதுறை வாள்ஒரு பாகத்தில் என்று மதித்தநிலம்;
சூதுரை செய்யா ஒருநிலம் என்றும் சுடர்விடுமே!

மேனிலைக் கானதை, வேதனை தீர்த்திடும் மெய்ப்பொருளை
நீநினைக் காதது வேடிக்கை யேஇந்த நீணிலத்தில்!
கூனிக் குறுகுவ தோஒரு ஞானநற் கோபுரமே?
ஊன்நிலைக் காததென் றாயிரம் சங்குகள் ஊதினவே!

ஊதின சங்குகள் ஊதின இன்னும் உறங்குகிறாய்!
மாதிடம் கொண்டதை, மாணிக்கச் சோதியை, மாமலையை
ஆதியில் லாததை, அந்தமில் லாததை, அற்புதத்தைப்
போதிநீ தேடென ஞானியர் பார்வை புகல்வதுவே!

புகலும் மொழியிது கேள்நீ புலியெனப் பொங்கியெழு
அகலும் துயர்தரும் அன்னிய ஆட்சியிங் கப்பொழுதே
யுகம்புதி தாக உருக்கொளும் என்றே உருக்கமுடன்
பகலும் இரவுமாய்ப் பாடிநின் றானந்தப் பாரதியே!

பாரதி யின்திருப் பார்வையி னாலிந்த பாரதத்தில்
வீரம் பிறந்தது; வேகம் பிறந்தது; வெள்ளையதி
காரம் பறந்தது; கைவிலங் கெல்லாம் கழன்றுநல்ல
நேரம் பிறந்தது; நெஞ்சும் தலையும் நிமிர்ந்திடவே!

நிமிர்ந்து நடக்கும் நிலையையுண் டாக்கிநம் நெஞ்சிலுள்ள
சுமையினை நீக்கி, துயரெலாம் போக்கி, சுதந்திரம்வந்(து)
அமைந்தத னால்சுகம் யாவையும் தேக்கிநல் அன்புமணம்
கமழ்ந்திட வாழ்வு கனிந்திடச் செய்தது செந்தமிழே!

திருமதி சௌந்தரா கைலாசம்



தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி
'பாவலர்' **மா. முத்துசாமி**, பி.ஏ., பி.டி.

குதித்துவரும் நீர்ப்பெருக்கே! வான்மு கட்டில்
குவிந்திருக்கும் கருமேக நீர்க்கு விப்பே!
பொதிகைமலைப் பூங்காற்றே! பூங்காற் றுக்கும்
புதுமென்மை தந்தவளே! உன்றன் பாதம்
பதித்தவிடம் எங்கெங்கும் பண்பா டென்னும்
பயிர்செழிக்க வைத்தவளே! தமிழே! உன்தாள்
துதித்தெனது மனந்திறந்து ஒன்று சொல்வேன்;
தூமதுரை தானுன்னை வளர்க்கும் தொட்டில்!

முடியரசர் மூவேந்தர் மடியில் ஆடி
மூவுலகை அரசாட்சி செய்த தாயே!
கொடிமுல்லை தேர்மீது படர்தல் கண்டு
குமிழ்சிரிப்புச் சிரித்தவளே! இன்றிந் நாட்டின்
விடியாத இரவுகளை விடிய வைக்க
விளக்கேற்றுந் திறமுனக்கு வேண்டும் என்று
துடிப்போடு கிடக்குமுளம் மகிழ்வெய் தட்டும்;
தூமதுரை நகரதற்கு வழிகாட் டட்டும்!

எத்தனைநாள் திருக்குறளாம் ஒளிப்பி ழம்பை
இருட்டறையில் வைத்திருந்தோம்? உலக மெல்லாம்
தத்திதத்தி நாக்குழறும் போதே, நல்ல
தமிழ்த்தொல்காப் பியம்படைத்தாய் என்ற உண்மை
இத்தரையில் எத்தனைபேர் உணர்ந்தோம்? அஃதை
இவ்வுலகில் யார்யார்க்கு உணர்த்தி வைத்தோம்?
முத்தமிழே! இதுநடக்க இந்த நாட்டின்
முதுநகராம் மாமதுரை வழிகாட் டட்டும்!

பழம்பெருமை தானதனைப் பேசிப் பேசி
பார்ப்பதிலே பயனிலைதான்! ஒன்று சொல்வேன்!
உழவுநிலம் ஒன்றெனினும் தேவைக் கேற்ப
உற்பத்தி செயவிலையா? அதுபோல் பண்டைக்
கழனியது! உழுகின்ற நெஞ்ச மென்னும்
கலப்பைகளைப் புதுப்பிப்போம்! புதிய சிந்தை
உழவிடுவோம்! உலகத்தின் பார்வை கொள்வோம்;
ஒண்மதுரை நகரதற்கு வழிகாட் டட்டும்!

தென்கோடி முனையிலொரு சிறிய நாடு
  தீந்தமிழ்நன் மொழிபேசும் பழைய நாடு
முன்கோடி ஆண்டுகளை விழுங்கி விட்டும்
  முன்னேற்றம் காணாத இளைய நாடு;
தன்னுதரம் பலமொழிகள் பெற்றுத் தந்தும்
  தான்வளரா மொழியுடைய பேதை நாடு;
என்றான நிலைமையினைப் போக்க வேண்டும்;
  எழில்மதுரை நகரதற்கு வழிகாட் டட்டும்!

கடல்தண்ணீர் உவர்ப்பதிலும் வியப்பே இல்லை;
  காற்றிலிதம் இருப்பதிலும் வியப்பே இல்லை;
உடல்வெயிலில் வியர்ப்பதிலும் வியப்பே இல்லை;
  உலையில்நீர் கொதிப்பதிலும் வியப்பே இல்லை:
திடத்தமிழன் தமிழ்நாட்டில் தூய்மை யாகத்
  தமிழ்பேசி விட்டால்தான் வியப்பு! இந்த
மடமைமனம் தமிழ்நாட்டில் மறைய வேண்டும்;
  மாமதுரை நகரதற்கு வழிகாட் டட்டும்!

இமிழ்கடலுள் முத்திருக்கும்! அதையெ டுக்க
  இமியளவு தயக்கம்நாம் கொள்வ துண்டா?
தமிழ்க்கடலும் அதுபோல்தான்! மூழ்கிப் பார்ப்போம்
  தரமான மணிவகைகள் உலகிற் கீவோம்!
அமிழ்வதற்குத் தலைக்கவசம் இந்த மாநா(டு)
  ஆகட்டும்! அமிழ்ந்தவர்கள் தூய இன்பம்
கமழ்முத்து மணியேந்திக் கரைசே ரட்டும்;
  கவின்மதுரை நகரதற்கு வழிகாட் டட்டும்!

தென்னிலங்கை! இங்கிலாந்து! பாரீசு! ருசியா!
  திசையெட்டுப் புறத்திருந்தும் அறிஞர் பல்லோர்
விண்ணிலங்கு வில்லினது வண்ணங் கள்போல்
  விருப்போடு ஒருங்கிணைந்து குழுமி யுள்ளார்;
பொன்னிலங்கு பூந்தமிழ்நின் புகழ்க்கொ டிக்குப்
  புரிநூலின் இழைபிரித்துப் பின்னு கின்றார்;
மண்ணிலங்கு மொழிகளுக்கு மேலோய் நீ! ஆம்
  மாமதுரை அதைநிறுவ வழிகாட் டட்டும்!

உமிழ்கணையச் செறிப்புநீர் இம்மா நாடு;
  ஒண்தமிழை உதிரத்தில் அதுசேர்க் கட்டும்!
அமிழ்தத்தின் சிறுதூறல்! அதில்ந னைந்தோர்
  அதைப்பருக ஆவேசம் மிகக்கொள் ளட்டும்!
சிமிழ்விளக்கின் சுடர்நாக்கு! உலக மெங்கும்
  தீபங்கள் பலகோடி அதுஏற் றட்டும்!
கமழ்பொதிகை பிறந்தமகள் எழில்பெ றட்டும்;
  கவின்மதுரை நகரதற்கு வழிகாட் டட்டும்!

கூந்தலுக்கு நெய்போலும் இம்மா நாடு;
  கொண்டவனைக் கவர்ந்துவளம் மிகப்பெ றட்டும்!
வேந்தனுக்கு நாற்படைபோல் இம்மா நாடு
  வெற்றியெனும் தேறலினை இதுத ரட்டும்!
மாந்தனுக்கு மதிபோலும் இம்மா நாடு;
  மதிப்புடைய புகழ்மாலை மிகச்சே ரட்டும்!
பூந்தமிழே! உனக்கிதுவோர் புதிய ஆடை
  புதுமதுரை தருவதனால் புகழ்பெ றட்டும்!



ஒளவையார்

‘உரைவேந்தர்’ ஒளவை சு. துரைசாமி

பண்டைத்தமிழ் மக்களிடையே வழங்கிய மக்கள் இயற்பெயர்களுள் ஒளவையார் என்பது நன்கு பயின்றதொன்று. இன்றும் கல்லா இளையர்க்கும் நன்கு தெரிந்திருக்கும் பெயர்களுள் ஒளவையாரென்பது தலையாயதாகும். ஒளவையென்ற பெயரைக் கேள்வியுறாத் தமிழ் மக்களே தமிழகத்தில் இல்லையென்பேமாயின் அது மிகையாகாது. ஒளவையாரென்ற பெயருடையார் பலர் இந்நாட்டில் இருந்திருக்கின்றனர். அவருட் சிறப்பாகச் சங்ககாலத்தொருவரும் இடைக்காலத் திருவரும் கற்றோர் நினைவில் நிலவுகின்றனர். நல்லோர் நலத்தைப் பாராட்டி மகிழும் மக்களுலகம் அவரைத் தீக்குணத்துக்குறையுளாகத் தாமே பொய்புனைந்து வழங்கும் கொடுமையும் ஒரோவழிச் செய்வதுண்டு. கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய நல்லிசைப் புலவர்கள் ஒருவர் பாலொருவர் காழ்ப்பும், பகையும், அழுக்காறும் கொண்டு மானமின்றித் தம்மில் வைதுகொண்டனரென்றும், ஒருகால் கொலைக்குற்றத்திற்கும் சமைந்திருந்தனரென்றும் கதைகள் கூறப்படுகின்றன. இப் படுபொய் நிறைந்த கதைக்குழுவில் ஒளவையார் பெயரும் காணப்படுகிறது. கம்பரும், ஒளவையும் கலாய்த்துக் கொண்டனரென்றும், ஒட்டக்கூத்தரும் ஒளவையும் அறிவால் ஒட்டா தொழுகினரென்றும், கழுவாயில்லாத வழுமலி பொய்க்கதைகள் தமிழகத்தைப் பாழ்செய்து வருகின்றன. பொய்க்கதை ஒளவையை அப்புறப் படுத்தி நோக்கின், மூவர் உண்மையொளி திகழ நிற்கக் காணலாம். அவர் சங்ககாலத்து ஒளவையாரும், ஆத்திசூடி முதலிய அறம்பாடிய ஒளவையாரும், குறள்பாடிய ஒளவையாருமாவர். ஈண்டைக்குப் பொருளாகியவர் சங்ககால ஒளவையார்.

பாணர்வாயில் வைத்து இவர் பாடிய பாட்டுகள் பல காணப்படுதலின் இவரைப் பாண்குடியினர் என்று கருதுவாருமுளர். இவர் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பெரிதும் பாராட்டியுள்ளார். அதியமான் முன்னோர் கரும்பு கொணர்ந்த செய்தியும், அவன் அரிதிற்பெற்ற நெல்லிக்கனியைத் தானுண்ணாது ஒளவைக்கு அளித்த செய்தியும், அவன் கோவலூரெறிந்த செய்தியும், அவன் தன் மகன் பிறந்தானைக் காணச் சென்ற செய்தியும், அவன்பொருட்டு ஒளவை தொண்டைமான்பால் தூது சென்ற செய்தியும், அதியமான் பொருது புண்பட்டு வீழ்ந்த செய்தியும், அவன் மகனான பொகுட்டெழினியின் கொடை நலமும், பரணர், வெள்ளிவீதியார் ஆகிய புலவர் நலமும் இவராற் பாராட்டப்பட்டுள்ளன. இவர் சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தவழிக் கண்டு, ''பாகார் மண்டிலம் தமவேயாயினும் தம்மொடு செல்லா''; ஆகவே, ''மகிழ்சிறந்து, இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி, வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்; வாழச் செய்த நல்வினையல்லது, ஆழுங்காலைப் புணை பிறிதில்லை'' யென்பதும், அதியமான் வேலேறுண்டு இறந்தபோது, ''அருந்தலை யிரும் பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ, இரப்போர்

கையுளும் போகிப் புரப்போர் புன்கண் பாவை சோர, அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவிற், சென்று வீழ்ந்தன்று அவன், அருநிறத் தியங்கிய வேலே'' என்பதும், பகன்றைமலர், ''சூடாது வைகியாங்குப் பிறர்க் கொன்று ஈயாது வீயும் உயிர் தவப் பலவே'' என்பதும் மிகவும் உருக்கத்தைத் தருவனவாகும்.

இவர் பாட்டுகளால் பல இயற்கை நலங்கள் நாம் அறிய வெளியாகின்றன. காட்டில் மலர்ந்த இலவம்பூ, கார்த்திகை நாளில் மகளிர் நிரை நிரையாக எடுத்தேற்றும் விளக்கொழுங்கு போலத் தோன்றும் என்றும், நீர் நீங்குங்கால் அதனிடை வாழும் மீனினம் உடனீங்குமென்றும், காயாம்பூவோடு கூடிய பெருஞ்சினை மயிலின் கழுத்துப் போலிருக்குமென்றும், நீரிலிருக்கும் குவளை கோடைக்காலம் வரினும் வாடாதென்றும், கடற்றுரைக்கண் வேற்றுநாட்டுக் கலங்கள் காற்றால் உந்தப்பட்டு வந்து நிற்குமென்றும், தீதுற்றிறந்த வீரரை வாளிற்போழ்ந்து புல்லிடைப் பரப்பிச் சான்றார், ''மறங்கந்தாக நல்லமர் வீழ்ந்த நீள் கழல் மறவர் செல்வுழிச் செல்க'' எனச் சொல்லி அடக்கஞ் செய்வரென்றும், முதலை எளிதிற் கலங்கும் நீருடைய குழிக்கண் இருப்பினும் களிற்றைக் கொன்றுவிடுமென்றும், எவ்வழி ஆடவர் நல்லரோ அவ்வழி நிலமும் சீர்பெறுமென்றும், களர்நிலத்தைத் தோண்டியெடுத்த உவர்மண் கொண்டு உடைவெளுப்பவள் வெளுப்பாளென்றும் பிறவும் இவர் கூறுவது அறிஞர்க்கு மிக்க இன்பந் தருவதாகும்.

பிரிவின்கண் தலைவி தலைவனை நினைந்து வருந்தும் வருத்தத்தை முளையாகவும், ஊரார் கூறும் அம்பலைச் சினையாகவும், அதனாற் சிறக்கும் காதலைத் தளிராகவும், நாணின்மையை மரமாகவும், அதனாலெழும் அலரை அரும்பாகவும் உருவகம் செய்கின்றார். கார்காலத்தே காதலனைப் பிரிந்துறையும் ஒருத்தி மழைமுகிலைப் பார்த்துக் கூறுவதாக, ''மழையே, ஆரளியிலையோ நீயே பேரிசை, இமையமும் துளக்கும் பண்பினை, துணையிலர் அளியர் பெண்டிர் இஃது எவனே'' என்று கூறுவர். மக்கள் மொழியும் சொற்கேட்டல் பெற்றோர்க்கின்பம் செய்யும் என்பதை, ''யாமொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா, பொருளறிவாரா வாயினும் தந்தையர்க்கு அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை'' யென்று விளங்கக் கூறுகின்றார். அதியமான் சாதல் நீங்க நெல்லிக்கனி தந்த தனிக்கொடை பெற்று வாழ்த்துமிடத்து, நஞ்சினைத் தானுண்டு சாவா மருந்தாகிய அமுதினை இறைவன் அசுரர்க்களித்த செய்தியை உவமமாக்கி, ''நீலமணிமிடற்று ஒருவன் போல, மன்னுக பெரும நீயே'' என்பர். பரிசில் வாழ்க்கையின் இயல்பை, ''வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம் உள்ளியது முடிக்கும் உரனுடை யுள்ளத்து, வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை'' யென்பது இக்காலத்துச் செல்வர்க்கு மனங்கொளற்குரியதொன்று.

இவர் பாடியவற்றுள் அகத்தில் நான்கும், புறத்தில் முப்பத்து மூன்றும், நற்றிணையில் ஏழும், குறுந்தொகையிற் பதினைந்தும் ஆக ஐம்பத்தொன்பது பாட்டுகள் கிடைக்கின்றன.

குறட்பா — நாட்டியம்

‘திருக்குறளார்’ **வீ. முனிசாமி**

உடலுறுப்புகள் அசைவு பெற்று நடைபெறுவது நாட்டியக் கலையின் முதன்மையான இலக்கணமாகும். வாய்ச் சொற்களில்லாமல் — பேச்சு இன்றி, ‘பாவங்களினால்’ உள்ளத்தில் எழுகின்ற எண்ணத்தினை வெளிப்படுத்தி — பார்ப்பவர்கள் தெரிந்து புரிந்து அறிந்து சுவைக்குமாறு செய்தல் வேண்டும். கலைகளில் மிகமிக நுண்ணியதான நாட்டியக் கலையின் குறிப்புகளை ஆங்காங்குக் குறிப்பாக உணர்த்துகின்ற முறைகளைக் குறட்பாக்களில் காணுகின்றோம்.

‘பாவம்’ என்ற சொல் நாட்டியக் கலைக்கு உயிர் போன்றதாகும். கைகளினால், முகத்தினால், மற்றும் அவயவங்களினால் காட்டப்படும் ‘பாவங்களுடனே’ பாடல்களின் ராகம், பாடல்களை முறைப்படுத்துகின்ற தாளம் ஆகிய இயல்புகளை ஒன்றுபடுத்தி, ‘பரதம்’ என்று கூறுவார்கள். இசைக் கலையும் நாடகக் கலையும் இணைந்து சிறப்பளிப்பது நாட்டியக் கலையாகும்.

நாட்டியக் கலையின் உயிரோட்டமாக இருப்பது கண்களின் செயல்களாகும். ஆசிரியர் திருவள்ளுவனார் பொதுப்பட எல்லா உறுப்புகளையும் குறித்துக் காட்டிக் குறட்பாக்கள் அமைத்துள்ளார். கண்களின் இயல்புகளைப்பற்றித் தனிப்பட்ட பல அதிகாரங்களைத் திருக்குறளில் காண முடிகின்றது.

உதாரணமாக, கணணோட்டம், குறிப்பறிதல், (பொருட்பால்), குறிப்பறிதல் (காமத்துப்பால்), குறிப்பு அறிவுறுத்தல், தகைஅணங்கு உறுத்தல், கண்விதுப்பழிதல், படர்மெலிந்து இரங்கல், பசப்புறு பருவரல், உறுப்புநலன் அழிதல், புலவி நுணுக்கம் முதலியன போன்ற அதிகாரங்கள் கண்களின் சிறப்பினை உணர்த்துகின்றன என்று கொள்ளுதல் வேண்டும். பிறர்பால் இரக்கம் கொள்ளும் தன்மையினைக் கண்களே எடுத்துக் காட்டுவனவாகும் என்று கூறவந்த ஆசிரியர் ‘கண்ணோட்டம்’ என்று கூறினார்.

கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை என்ற தொடர் கண்களின் சிறப்பினைக் கூறுவதாகும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டதாகும். ‘குறிப்பறிதல்’ என்ற அதிகாரம், பொருட்பாலில் சிறப்பான உண்மைகளைப் புலப்படுத்துகின்றது. ‘குறிப்பறிதல்’ என்ற இந்தப் பெயரில் காமத்துப்பாலில் ஓர் அதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்திற்கும் ‘குறிப்பு அறிவுறுத்தல்’ என்ற அதிகாரத்திற்கும் உள்ள வேறுபாட்டினைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

நாட்டுத் தலைவனான மன்னனுக்குப் பல வகைகளில் அறிவுரைகள் கூறுகின்ற ஆசிரியர் ‘குறிப்பறிதல்’ என்ற இந்த அதிகாரத்திலும் நுணுக்கமான மறைபொருள் உண்மைகளை விளக்கம் செய்கின்றார்.

பிறருடைய முகக் குறிப்புகளைக் கொண்டே — கண்களின் பார்வைகளைக்கொண்டே — மற்றவர்கள் வாய்விட்டுக் கூறாமலேயே அவர்கள் உள்ளத்தில்

கொண்டுள்ள எண்ணங்களை அறிந்து உணர்ந்து சொல்லக்கூடிய ஆற்றல் படைத்தவர்களைக் 'குறிப்பறிதல்' என்ற இந்த அதிகாரம் எடுத்துக் கூறுகின்றது. இத்தகையவர்களை நாட்டுத் தலைவன் தனக்கு உற்ற துணையாக வைத்திருத்தல் இன்றியமையாததாகும் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

''கூறாமை நோக்கிக் குறிப்பு அறிவான்'' என்ற தொடர் கண்களின் சிறப்பினை உணர்த்துவதாகும். ''நுண்ணியம் என்பார் அளக்குங்கோல்'' என்ற தொடரும், இவை போன்ற பிறவும் கண்களின் சிறப்பினை உணர்த்துகின்றன. ''கடுத்தது காட்டும் முகம்'', ''முகம் நோக்கி நிற்க அமையும்'' என்பன போன்ற தொடர்கள் முகங்களின் இயல்புகளைக் குறிக்கின்றவைகளில் ஒருசில ஆகும். காதலர்கள் ஒருவரையொருவர் நோக்குகின்ற நோக்குகளையெல்லாம் சிறப்பாக, ''தகையணங்கு உறுத்தல்'', ''குறிப்பறிதல்'' (காமத்துப்பால்) என்ற அதிகாரங்களில் காண முடிகின்றது. காதலியானவள் எதிர்நோக்கு நோக்குவதை ''நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல்'' என்ற தொடர் குறித்துக் காட்டுகின்றது. இக் கருத்தினைக் காதலன் வாயிலாக ஆசிரியர் அமைத்துக் காட்டுகின்றார். ''இருநோக்கு இவள் உன்கண் உள்ளது'' என்ற தொடரும் கண்களின் சிறப்பினைக் காட்டுவதாகும். இவ்வாறாக எண்ணிறந்த இடங்களில் உறுப்புகளுக்கு எல்லாம் தலைமையான கண்களின் செயல் கூறப்படுகிறது.

அழகிய நுதலின் (நெற்றியின்) அழகினைக் கூறுகின்ற குறட்பாக்கள் மிகப் பலவாகும். ''கதுப்பினாள் தோள்'', ''அமிழ்தின் இயன்றன தோள்'' என்ற தொடர்களெல்லாம் தோள்களின் அழகினையும் சிறப்பினையும் உணர்த்துவனவாகும். பெண்களின் பாதங்களை (அடிகளை)க் குறிக்கின்ற ஒரு குறட்பா மிக அழகாக அமைந்துள்ளது. ''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்.''

மூங்கில் போன்ற தோள்கள், தளிர் நிறம் போன்ற மேனி, முத்துகள் போன்ற பற்கள், இயல்பான மனம், வேல் போன்ற கண்கள் என்ற அனைத்தையும் ஒரு குறட்பா சுருக்கமாக விளக்குகின்றது.

''முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு''

இவ்வாறு உறுப்புகள் பலவற்றையும் ஆங்காங்கே அழகுபடுத்தியும், அவைகளின் செயல்களைப் புலப்படுத்தியும் வருகின்ற ஆசிரியரின் ஆழ்ந்த கருத்துச் சிந்திக்கத் தக்கதாகும்.

வாய்விட்டுப் பேசாமலேயே தன்னுடைய எண்ணத்தினை, தன்னுடைய உடல் உறுப்புகளின் செயல்களினால் புலப்படுத்தினாள் என்பதற்குப் பற்பல குறட்பாக்கள் எடுத்துக்காட்டுகளாக உள்ளன என்றாலும், இரண்டு குறட்பாக்களை மட்டும் குறித்துக் காட்டலாம்.

''நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.''

''யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.''

நல்ல உறுப்புகளில் ஒன்றான புருவத்தின் செயல்களைக் குறிக்கின்றபோது "கொடும் புருவம்" என்றும், பற்களைக் குறிக்கின்றபோது, ''பணிமொழி வால் எயிறு'' என்றும், இடுப்பினைக் குறிக்கின்றபோது ''நுசுப்பிற்கு'' என்றும் இப்படியாக உறுப்புகளையெல்லாம் ஆசிரியர் குறித்துக் காட்டுகின்றார்கள். இயல்பாகவே அசைகின்ற இயல்பு மகளிர்க்கு அமைந்துள்ளவொன்றாகும் என்பதனைச் சிந்திக்க வேண்டும்.

அசைகின்ற இயல்பும் மெல்ல நகைக்கின்ற இயல்பும் தனிச் சிறப்பாக அமைவனவாகும் என்பதனைக் குறட்பா ஒன்று சிறப்பிக்கின்றது.

''அசையியற்கு உண்டுஆண்டுஓர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.''

இயல்பாகவே பெண்கள் வளையல்கள் அணிந்திருப்பவர்கள் என்ற கருத்தினைக் குறட்பாக்கள் பல நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஒரு குறட்பாவினைக் காணலாம்.

''கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.''

நாயகியைப் பிரிந்து நாயகன் இன்றியமையாப் பணியின்பொருட்டு வெளியூர் சென்றிருக்கின்றான். நாயகன் பிரிவினால் நாயகி மிகுதியும் துன்புறுகின்றாள். உடம்பு மெலிந்துவிடுகின்றது. உடல் மெலிவினை உணர்த்துவதாக வளையல்கள் குறிக்கப்படுகின்றன. கையிலிருந்த வளையல்கள் முன்கை வரிகளைத் தாண்டிக் கழன்றுவிடுவனவாக உள்ளன. இந்த நிகழ்ச்சியினை உணர்த்துகின்ற குறட்பாவில், 'வளையல்கள் பேசுகின்றன' என்ற கருத்தினை அமைத்து ஆசிரியர் நயமாகக் கூறுகின்றார். சிந்திக்கவேண்டிய ஒரு குறட்பா:

''துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.''

காதலர்கள் ஒருவரையொருவர் கண் பார்வைகளினால் நோக்குகின்ற நோக்குகளைப் பற்பல நல்ல சொற்களினாலும் தொடர்களினாலும் ஆசிரியர் திருவள்ளுவனார் விளக்கிக் காட்டுகின்ற பான்மை

சிந்திக்கத் தக்கதாகும். எதிர்நோக்கு, இருநோக்கு, சிறுநோக்கு, நிலன்நோக்கு, சிறக்கணித்தநோக்கு, பொதுநோக்கு, இணை நோக்கு என்பன போன்ற பல இடங்களையும் கண்டு தெளிதல் வேண்டும்.

''கண்தாம் கலுழ்வது'', ''நோக்கிய உண்கண்'', ''கதுமெனத் தாம் நோக்கி,'' ''காம நோய் செய்த என் கண்'', ''வேண்டி அவர்க் கண்ட கண்'', ''அறைபறை கண்ணார்'' என்பன போன்றவைகள் எல்லாம் கண்களுடைய அரிய, நுட்பமான தன்மை களையெல்லாம் விளக்குகின்ற 'கண்விதுப்பு அழி தல்' என்ற அதிகாரத்தில் காணப்படுகின்றன.

மென்மைத் தன்மை நிறைந்த உடம்பு இயல் பாகவே மகளிர்க்குரியதாகும் என்பதனை ''நோனா உடம்பு'' என்ற சொற்களினால் விளக்கிக் காட்டு கின்றார். நல்ல குறட்பா அமைந்துள்ளது.

''காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து''

மகளிர்க்கு மிக மிக இன்றியமையாத கவர்ச்சிகர மான அவயவங்கள் என்று கூறப்படுவனவற்றைத் திருக்குறளிலேயே இரண்டு குறட்பாக்களில்தான் ஆசிரியர் சொல்லிவைத்துள்ளார்.

''கல்லாதான் சொற்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.''

''கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.''

முந்திய குறட்பா பொருட்பாலிலும், பிந்திய குறட்பா காமத்துப்பாலிலும் காணப்படுவன வாகும்.

கல்வி கற்பதற்கும், காதல் புரிவதற்கும் இள மைப் பருவமே – வாலிபப் பருவமே உரியது என்ற காரணத்தினால் கல்வியைப்பற்றியும், காதலைப் பற்றியும் பேசப்படுகின்ற இடங்களில் ஒத்த முறை யில் இந்த உவமைகள் அமைந்தன போலும்!!

உறுப்புகளின் இன்றியமையாத் தன்மையும், அவைகளின் செயல்களுமே நாட்டியக் கலைக்கு முத லிடம் வகிக்கின்றன என்பதனை நினைவுபடுத்த வேண்டியதில்லை. சிறப்பான உறுப்புகள் அனைத் துமே ஆசிரியர் திருவள்ளுவரால் சுட்டிக் காட்டப் பட்டுவிடுகின்றன என்று அறிதல் வேணடும். காமத் துப்பாலில், ''உறுப்பு நலன் அழிதல்'' என்றொரு அதிகாரம் காணப்படுகிறது. திருமணம் நடந்த நாளில் மகளிர் தோள்கள் பூரிக்கின்றன என்பதனைக் குறிக்க வந்த ஆசிரியர்,

''மணந்த நாள் வீங்கிய தோள்''

என்ற தொடரினால் குறிக்கின்றார். ''உறுப்பு நலன் அழிதல்'' என்ற இந்த அதிகாரத்தில், ''நாணின கண்'', ''பனிவாரும் கண்'', ''வாடிய தோள்'', ''தோள் நெகிழ'', ''வாடு தோள்'', ''பேதை நுதல்'', ''பெருமழைக் கண்'', ''ஒள் நுதல் செய்தது கண்டு,'' - எனக் காணப்படுகின்ற இவைகளெல்லாம் உறுப்புகளின் செயல்களைப் புலப்படுத்துவன ஆகும்.

ஒருவர் தோற்றத்தினைக் கண்டபோதே பிறர் கண்டுகொள்ள முடிவதனைப் பொதுவாகக் 'குறிப் பறிதல்' என்ற அதிகாரம் கூறுகின்றது. இதனை விட மிகவும் ஆழமாகச் சிந்திக்கவேண்டிய அதிகாரம் என்று குறிப்பிடும் தகுதி பெற்ற அதிகாரம் ஒன்று உண்டு. அதுதான் 'குறிப்பு அறிவுறுத்தல்'. மற் றவர்கள் உணர்ந்து கொள்ளும்படி வாயினால் பேசாமலேயே உறுப்புகளினால் – உணர்த்துமாறு செய்வதாகும். அதாவது பேசத் தெரியாத உறுப் புகளையே பேச வைப்பதாகும்! கண்கள் பேசுகின்றன என்பதனை ஒரு குறட்பா குறிக்கின்றது.

''கரப்பினும் கைஇகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன்று உண்டு.''

வாயினால் சொல்லாமல் கண்களாலேயே சொல்லி, தன்னுடைய எண்ணத்தினை நிறைவேற்ற வேண்டு மென்று நாயகி சொல்லுகின்றாள். முன்னர், 'கண் கள் உரைத்தன' என்று சொல்லியது போல, 'கண்கள் சொல்லுகின்றன' என்று ஒரு குறட்பா விளக்கம் தருகின்றது.

''பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப
காமநோய் சொல்லி இரவு.'' [கண்ணினால்

பெண்கள் பற்பல சொற்களினால் தங்கள் கருத் துகளைச் சொல்லாமல் மிக மிக நுணுக்கமாகக் கருத்துகளை அமைத்து உணர்த்துவார்கள் என்ற சீரிய உண்மையினைப் 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. காம இன்பத்திற்கு ஊடலும் கூடலும் தேவையென்ற அரிய உண்மையினைப் புலப்படுத்து கின்ற ஆசிரியர் 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரத் தில் நுட்பமான மதி படைத்த நாயகியின் சிறப் பினைக் கூறுகின்ற அருமையான முறை பன்முறை யும் சிந்திக்கத்தக்கதாகும்.

நாட்டியக்கலையின் முழுமையான தன்மையினைக் குறட்பா ஒன்றினால் ஆசிரியர் உணர்த்துகின்ற அமைப்பு வியப்பனை உண்டாக்குவதாகும். அந்த நாயகி வாய் பேசவில்லை; அவளுடைய கண்களே கருத்தினை நாயகன் நன்கு புரிந்துகொள்ளுமாறு செய்துவிட்டன. மூன்று முறை அந்த நாயகி பார்த்தாள் என்று ஆசிரியர் குறிக்கின்றார். தன்னுடைய உடம்பில் மூன்று இடங்களையும் அவள் நோக்கினாள் என்று ஆசிரியர் கூறுகின்றார். ஒரு வார்த்தைகூட அவள் வாய் திறந்து பேசவில்லை

என்றாலும் தன் மனத்திலுள்ள ஆழ்ந்த கருத்தினைப் புலப்படுத்திவிட்டாள் என்று குறட்பா நமக்கு உணர்த்துகிறது.

இந்தக் குறட்பாவில் நினைத்துப் பார்க்க வேண்டிய அரிய உண்மை ஒன்று பொதிந்துள்ளது. அதாவது இவ்வாறு பார்வைகளினால் தன் கருத்தினைப் புலப்படுத்திய அவள் தன்னுடைய நாயகனைப் பார்க்கவில்லை என்பதாகும்.

இந்தக் குறட்பா-நாட்டியம் போல அவள் செய்த செயல்களைக் குறிக்கின்ற சூழ்நிலையினைக் கண்டு அறிதல் வேண்டும்.

நாயகியை விட்டுப் பிரிந்து சென்றிருந்த நாயகன் திரும்பவும் வீடு வந்து சேர்ந்தான். நாயகியுடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றான். பிரிவினால் வருகின்ற துன்பத்தினை அவள் முன்னர் அறிந்துகொண்டிருக்க முடியாதவளாக இருந்தாளானபடியால், முதன்முதலில் நாயகன் பிரிவுக்கு உடன்பட்டுவிட்டாள். பிரிந்த நாயகன் திரும்பி வந்து சேர்ந்தான். மீண்டும் பிரிந்து செல்வானோ என்ற ஐயம் உண்டானது.

பிரிந்தால், துன்பம் அதிகரிக்கும். அவள் உள்ளத்தில் நிறைந்துவிட்ட துன்பத்தினை வாயினால் சொல்லாமல் பார்வைகளினால் உணர்த்திய பான்மை சிகரம் வைத்த நாட்டியக் கலைபோல் தோன்றுகிறது. அவ்வாறு நாயகன் பிரிந்து செல்வானேயானால், அவன் பின்னே தானும் செல்ல வேண்டும் என்று முடிவு செய்துவிட்டாள்.

நாட்டியக் கலையின் இன்றியமையாத சாயல் ஒன்றினை இந்தக் குறட்பா உணர்த்துகின்றது.

'தொடி' என்பது கைகளின் மேற்புறத்தில் அணிந்துகொள்ளப்படுகின்ற வளையல்களாகும். அது சிறந்த அணிகலமாகும். கையில் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருக்கும். நாயகி நினைக்கின்ற நினைப்பு என்னவென்றால், நாயகனைப் பிரிந்து விட்டால், உடம்பு மெலிந்து, 'தொடி' என்கிற வளையல் தான் இருந்த இடத்திலிருந்து, கழன்று விட நேரிடுமே என்று பரிதாபகரமாக அந்தத் தொடியை (தோள் வளையை) நோக்கினாள். அவ்வாறு உண்டாவதற்குக் காரணமாக இருக்கின்ற - மெலிந்துவிடப் போகின்றவைகள் தோள்களாகும். ஆதலால் வருந்தத்தக்க நிலை உண்டாகப்போகின்ற மென்மையான தோள்களையும் பார்த்தாள். இந்த மாதிரியான – துன்பகரமான – செயல்கள் நடவா திருக்க வேண்டுமென்றால், நாயகன் பின்னே சென்றுவிடுவதுதான் நல்லதென்று முடிவு செய்தாள். அவ்வாறு நாயகன் பின்னே செல்வதற்குப் பாதங்கள்தானே உதவவேண்டும்; அதற்காகத் தன்னுடைய அடிகளையும் பார்த்தாள். 'தொடிநோக்கினாள்', 'தோள் நோக்கினாள்', 'அடி நோக்கினாள்'. இந்தக் குறட்பாவில் 'அவள் செய்தது' என்பது பன்முறையும் சிந்திக்கத் தக்கதாகும்.

நாட்டியக் கலையினை உணர்த்துகின்ற குறட்பாவினைக் கண்டு மகிழ்வோமாக.

''தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடி
அஃதுஆண்டு அவள்செய் தது.'' [நோக்கி



வருவார் தோழி!

தலைவன் பொருள்தேடப் போனான்.
தலைவியின் இதயம்
பாலை நிலமாயிற்று...... ஆயினும்
நம்பிக்கைச் சுனை மட்டும் வற்றவில்லை.
அவள் கேட்டிருந்த பாலைநிலக் காட்சிகள்
அவளது நம்பிக்கையின் ஊற்றுக்கண்களாகின்றன.
அங்கே சுனையிலிருக்கும் சிறிது நீரையும்
பிடியை உண்ணவைத்த பிறகுதான்
களிறு உண்ணுமாம்!
இலைகளும் கருகிய கொடிய பகலில்
வருந்தும் பெண்புறாவிற்குத் தனது
சிறகு நிழல் விரித்து ஆண்புறா
ஆறுதல் அளிக்குமாம்!
சுட்டெரிக்கும் நெருப்பொளியில் வாடும்
பெண்மானுக்குத் தன்நிழலைத் தந்து
ஆண்மான் துயர்நீக்குமாம்!
இக் காட்சிகளைக் காணும் வேளையில்
தம் நிலையுணர்ந்த தலைவன்
திரும்புவான் என்கிற நம்பிக்கை அவளுக்கு!

—கலித்தொகை, 11.

என்றாலும் தன் மனத்திலுள்ள ஆழ்ந்த கருத்தினைப் புலப்படுத்திவிட்டாள் என்று குறட்பா நமக்கு உணர்த்துகிறது.

இந்தக் குறட்பாவில் நினைத்துப் பார்க்க வேண்டிய அரிய உண்மை ஒன்று பொதிந்துள்ளது. அதாவது இவ்வாறு பார்வைகளினால் தன் கருத்தினைப் புலப்படுத்திய அவள் தன்னுடைய நாயகனைப் பார்க்கவில்லை என்பதாகும்.

இந்தக் குறட்பா-நாட்டியம் போல அவள் செய்த செயல்களைக் குறிக்கின்ற சூழ்நிலையினைக் கண்டு அறிதல் வேண்டும்.

நாயகியை விட்டுப் பிரிந்து சென்றிருந்த நாயகன் திரும்பவும் வீடு வந்து சேர்ந்தான். [illegible] மகிழ்ச்சியுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றான். பிரிவினால் வருகின்ற துன்பத்தினை [illegible] அறிந்துகொண்டிருக்க முடியாதவளாக இருந்தாளானபடியால், முதன்முதலில் நாயகன் பிரிவுக்கு உடன்பட்டுவிட்டாள். பிரிந்த நாயகன் [illegible] வந்து சேர்ந்தான். மீண்டும் [illegible] என்ற ஐயம் உண்டானது.

பிரிந்தால், துன்பம் அதிகமாகும். அவள் உள்ளத்தில் நிறைந்துவிட்ட துன்[illegible] சொல்லாமல் பார்வைகளினால் [illegible] பான்மை சிகரம் வைத்த நாட்டியக் கலைபோல் தோன்றுகிறது. அவ்வாறு நாயகன் பிரிந்து செல்வானேயானால், அவன் பின்னே தானும் செல்ல வேண்டும் என்று முடிவு செய்[illegible]

நாட்டியக் கலையின் இன்றியமையாத சாயல் ஒன்றினை இந்தக் குறட்பா உணர்த்துகின்றது.

'தொடி' என்பது கைகளின் மேற்புறத்தில் அணிந்துகொள்ளப்படுகின்ற வளையல்களாகும். அது சிறந்த அணிகலமாகும். கையில் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருக்கும். நாயகி நினைக்கின்ற நினைப்பு என்னவென்றால், நாயகனைப் பிரிந்துவிட்டால், உடம்பு மெலிந்து, 'தொடி' என்கிற வளையல் தான் இருந்த இடத்திலிருந்து, கழன்றுவிட நேரிடுமே என்று பரிதாபகரமாக அந்தத் தொடியை (தோள் வளையை) நோக்கினாள். அவ்வாறு உண்டாவதற்குக் காரணமாக இருக்கின்ற மெலிந்துவிடப் போகின்றவைகள் தோள்களாகும். ஆதலால் வருந்தத்தக்க நிலை உண்டாகப்போகின்ற [illegible]மையான தோள்களையும் பார்த்தாள். இந்த மாதிரியான – துன்பகரமான – செயல்கள் நடவாதிருக்க [illegible]ல், நாயகன் பின்னே [illegible]லதென்று முடிவு செய்தாள். அவ்வாறு நாயகன் பின்னே செல்வதற்குப் பாதங்கள் தானே உதவவேண்டும்; அதற்காகத் தன்னுடைய அடிகளையும் பார்த்தாள். 'தொடிநோக்கி[illegible]தோள் நோக்கினாள்', 'அடி நோக்கினாள்'. [illegible]அவள் செய்தது' என்பது [illegible]க்கதாகும்.

[illegible] உணர்த்துகின்ற குறட்பா [illegible]வருமாக.

"[illegible] தோளும் நோக்கி அடி [illegible] செய் தது." [நோக்கி



தண்மை - திண்மை - தொன்மை

மாண்புமிகு தமிழ்நாடு தலைமை நீதிபதி
டாக்டர் மு. மு. இஸ்மாயீல்

முதுமையை மதிப்பதும் பழமையைப் போற்றுவதும் நமக்கு வழக்கம். இந்த வழக்கத்திற்கு அடிப்படையில்லாமல் இல்லை. 'முதுமை' என்னும்பொழுதே ஒரு நீண்டகால வாழ்வு அதற்குப் பின்னணியாக அமைந்திருக்கின்றது. அந்த நீண்டகால வாழ்வினால் அறிவு வளர்ச்சியும் அனுபவ முதிர்ச்சியும் ஏற்பட்டிருக்கும் என்ற காரணத்தினாலேயே, அந்த முதுமைக்கு மதிப்பு உண்டாகிறது. அதுபோலவே, பழமையைப் பாராட்டுவதற்கும் அதுவே காரணம். பழமை என்ற உடனேயே அது நீண்டகாலமாக நிலைநிற்பது என்பது புலனாகின்றது. அவ்வாறு நிலைநிற்பதன் காரணமாகவே அதற்கென ஒரு தனித்தன்மையும் தகுதியும் இருக்கின்றன என்றாகிறது. இருந்தபோதிலும் முதுமை, பழமை, தொன்மை என்கிற ஒன்று மாத்திரம் பெருமைக்கும் பாராட்டுதலுக்கும் காரணமாக அமைந்துவிட முடியாது. நம்முடைய வாழ்க்கையிலே அன்றாடம் நாம் காண்கின்ற ஒரு சிறிய உண்மையினையே இதற்குச் சான்றாகக் கொள்ள முடியும். வயதில் முதிர்ச்சியடைந்தவர்களைப் பெருமைப்படுத்துவது நம்முடைய மரபு. அத்தகைய வயதினால் முதிர்ச்சி அடைந்தவர்களுக்கு உள்ளத்தினால் உயர்ச்சியும் அறிவினால் வளர்ச்சியும் இருக்குமாயின், அவை பிறர்க்குப் பயன்படுவனவாக அமையும். அதுபோலவே, அந்த முதிர்ந்த நிலையிலும் உடல் நலமும் அறிவுத் தெளிவும் இருந்தால்தான் அந்த முதுமையின் பயனைப் பிறர் முழுமையாக அனுபவிக்க முடியும். முதியவர்கள் பலருக்கு அறிவுத் தெளிவு மறைந்துபோவதை நாம் காணத்தான் செய்கின்றோம். அப்பொழுது அவர்களுடைய நிலை பரிதாபத்திற்குரியதாக ஆகிவிடுகின்றதே தவிர, பாராட்டுதலுக்குரியதாக ஆவதில்லை. எனவே, முதிர்ச்சி, அதே சமயத்தில் அறிவுத் தெளிவு, அனுபவத்தின் திண்மை ஆகியவை ஒருங்கே இடம் பெறும்பொழுதுதான் முதுமையின் முழுப் பலனையும் பூரணமாகப் பெற முடியும்.

ஒரு தனி மனிதனுடைய வாழ்வே இப்படி ஆகுமாயின், ஒரு சமூகத்தினுடைய வாழ்வு எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. உலகில் தோன்றியிருக்கும் மனித இனங்களில் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலத்தில், சமுதாய வாழ்வைத் தொடங்கியிருக்கிறது. அப்படித் தொடங்கியிருக்கின்ற மனித இனங்களில் மிகத் தொன்மையானது தமிழர் இனமே என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொன்மையினால் மாத்திரம் தமிழர்களுக்குப் பெருமை வந்துவிடாது. இந்தத் தொன்மை வெறும் தொன்மையாக இருந்துவிடாமல், சிறந்த கோட்பாடுகளையும், உயர்ந்த கலைகளையும், பாராட்டுதற்குரிய பண்புகளையும், போற்றுதற்குரிய குறிக்கோள்களையும், பரந்த உள்ளத்தையும், உயிரினம் முழுவதையுமே ஒன்றாகக் காணும் விசால மனப்போக்கையும், வாழையடி வாழையாகச் சுடர்விட்டு வளர்த்து வந்த தொன்மையாக இருக்குமாயின், அந்தத் தொன்மை எல்லோராலும் மதிக்கக்கூடிய தொன்மையாக ஆகிவிடுகின்றது. நம்மில் பெரும்பாலோர் இந்தத் தொன்மையை மாத்திரம் பேசிக்கொண்டிருக்கின்றோமே தவிர, இந்தத் தொன்மைக்கு ஊட்டம்

அளித்த பண்பாட்டுச் சிறப்பையும், கலைச்செல்வத்தையும், சிந்தனா சக்தியையும், நுண்ணிய உணர்வையும் நாம் பெரிதாகச் சிந்திப்பதில்லை. ஆனால், இவைதாம் அந்தத் தொன்மைக்கு உயிராக அமைந்து இருக்கின்றன.

இவ்வுலகிலே ஆங்காங்குத் தோன்றிய அறிஞர்களும் ஞானிகளும் ஓர் இலட்சிய சமுதாயத்தைக் காண முயன்றிருக்கிறார்கள். இந்த இலட்சிய சமுதாயம் எப்படியெல்லாம் இருக்கவேண்டுமென்று அருமையாகவும் அற்புதமாகவும் விளக்கியிருக்கிறார்கள், வருணித்திருக்கிறார்கள். ஆனால், இவற்றினின்றும் மாறுபட்ட வகையில் தமிழன், ஒரு தனி மனிதன் எப்படி வாழ வேண்டும், விளங்க வேண்டுமென்று பாடியிருக்கிறான், பேசியிருக்கிறான். எந்த ஒரு சமுதாயத்திற்கும் அடிப்படையாக இருப்பவன் தனி மனிதன். அந்தத் தனி மனிதன் அறிவினாலும், அன்பினாலும், பண்பினாலும், ஒழுக்கத்தினாலும், உறவினாலும் சிறப்புடையவனாக இல்லாவிட்டால் அந்தச் சமுதாயம் சிறப்புடையதாகவோ அல்லது உயர்ந்ததாகவோ அமைய முடியாது. காரணம் என்னவென்றால், பல தனி மனிதர்களைத் தன்னுடைய அங்கமாகக் கொண்டதுதான் ஒரு சமுதாயம். எப்பொழுது ஓர் அங்கம் பலவீனப்பட்டுவிடுகின்றதோ, அப்பொழுது அந்த அளவுக்கு அந்தச் சமுதாயத்தினுடைய பெருமையும், திறமையும், தகுதியும், தொன்மையும் குறைவுபடவே செய்யும். ஆக, தனி மனிதனுடைய வாழ்வைச் செம்மையாக ஆக்க முயல்வது, சமுதாயத்தையே செம்மையாக ஆக்க முயல்வதாகும். எனவே, தனி மனிதனை மறந்துவிட்டு ஓர் உயர்ந்த, சிறந்த சமுதாயத்தைப் படைக்கமுடியாது. இதை நன்கு உணர்ந்திருந்தவன் தமிழன். இந்த உணர்ச்சிக்குப் பிரதிநிதியாக இருப்பவன் வள்ளுவப் பேராசான். ஆகையினால்தான், அவனுடைய குறள் தனி மனித ஒழுக்கத்தை வற்புறுத்துவதாக அமைந்திருக்கின்றது. இப்படித் தனி மனிதனைப்பற்றிப் பேசும்பொழுதுகூட வள்ளுவன் ஒரு பெரிய அற்புதத்தைச் செய்திருக்கின்றான். அதாவது, மனித இனங்கள் அனைத்திற்கும் பொதுவாகச் சில உணர்ச்சிகளும் சில பந்தபாசங்களும் உண்டு என்பதை மனத்தில் இருத்திக்கொண்டு, அந்த உணர்ச்சிகளையும் பந்தபாசங்களையும் அடிப்படையாக வைத்து, தன் அறநெறியை வகுக்கும்பொழுது, அப்படி வகுக்கப்பெற்ற அறநெறி உலகிலே எந்தப் பகுதியிலும் வாழ்கின்ற மனித இனத்திற்குப் பொருந்துவதாக அமைந்துவிடுகின்றது. இந்த அடிப்படையில்தான் தமிழனுடைய நாகரிகத்தையும், தமிழனுடைய அறநெறியையும், தமிழன் படைத்த இலக்கியங்களையும் நோக்க வேண்டும். இப்படி நோக்கும்பொழுதுதான், தமிழினத்தினுடைய தொன்மை மாத்திரம் பெரிதாகத் தோன்றாமல், அந்தத் தொன்மையினுடைய பெருமைக்கு அடிப்படையாகவும் காரணமாகவும் விளங்குகின்ற இந்தச் சிறந்த பண்புகள் ஒளிவீசித் திகழ்வனவாக அமைகின்றன.

இப்படிப்பட்ட வள்ளுவன்தான் தொடக்கத்திலேயே தனி மனிதனுடைய அறத்தை மிக அழகாக விளக்கத்தொடங்கிவிடுகின்றான். அதாவது,

"மனத்துக்கண் மா(சு)இலன் ஆதல் அனைத்(து)
ஆகுல நீர பிற" [அறன்

என்று கூறிவிடுகின்றான். இந்தக் குறளினுடைய சிறப்பை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்து விளக்கிக்கொண்டே போகலாம். இந்தக் குறளுக்கு உரை எழுதப்போந்த பரிமேலழகர் 'மனத்தின்கண் குற்றம் உடையன் அல்லனாக; அவ்வளவே அறமாவது; அஃதொழிந்த சொல்லும் வேடமும் ஆரவார நீர்மைய' என்று கூறுவார். இந்தச் சிறு குறளில் கூர்ந்து நோக்கத்தக்கன மூன்று சொற்கள். ஒன்று, மனம் என்பது; இரண்டாவது, மாசு என்பது; மூன்றாவது அனைத்து என்பது. இந்த மூன்று சொல்லாட்சியும் கருத்தாழம் மிக்க சொல்லாட்சி. அனுபவத்தில் ஒன்றை நாம் உணர்ந்திருக்கின்றோம். எதற்கும் ஆதியாகவும் மூலமாகவும் இருப்பது, மனத்திலே உண்டாகின்ற அவாவும் வேட்கையும்தான். மனம், ஒன்றை எண்ணிய பிறகு, அதை வாய் வெளியிடுகின்றது; உடல் செய்கின்றது. மனம்தான் சொல்லையும் செயலையும் இயக்கும் மூலகர்த்தாவாகும். ஆக, இந்த மூலத்தில் களங்கமோ குறையோ இருக்குமாயின், அந்தக் களங்கமும் குறையும், சொல்லிலும் செயலிலும் வெளிப்படுவது தவிர்க்க முடியாததாக ஆகிவிடும். எனவே, எல்லாவற்றிற்கும் மூலமாக இருக்கின்ற மனம் தூய்மை அடையுமாயின், அந்தத் தூய்மை தானாகவே சொல்லிலும் செயலிலும் மிளிரத் தொடங்கிவிடும். ஆகவே, ஒவ்வொன்றுக்கும் அடிப்படையாகவும் அஸ்திவாரமாகவும் இருக்கின்ற மனத்தை இறுகப் பற்றிக்கொண்டான் கவிஞன். அந்த மனத்தைப் பற்றிக்கொண்டு, 'அந்த மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருப்பாயாக' என்று தனி மனிதனுக்கு உபதேசிக்கிறான். ஒரு மனிதன் மனத்தின்கண் களங்கமற்றவனாக, குற்றமற்றவனாக இருத்தலே 'அறம் அனைத்தும்' என்று அவன் கூறுகின்றான். இங்கு மனத்துக்கு அடுத்தாற்போல நாம் காண வேண்டிய சொல் 'மாசு' என்பதாகும். 'மாசு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு, 'மறு', 'அழுக்கு', 'குற்றம்', 'கருமை', 'இருள்', 'மேகம்', 'பாவம்', 'தீமை', 'தூளி', 'அற்பம்' ஆகிய பொருள்கள் அனைத்தும் உண்டு. இந்தப் பொருள்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையல்ல; ஒன்றையொன்று சார்ந்தவையே என்பது தெளிவு. ஆகையினால்தான், மாசு என்ற சொல், அழுக்கு என்றாலும் சரி, குற்றம் என்றாலும் சரி, கருமை என்றாலும் சரி, பாவம் என்றாலும் சரி, அற்பம்

என்றாலும் சரி, எதற்கும் பொருத்தமாக 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்ற சொல்லாட்சியில் அமைந்திருக்கின்றது. மனத்தினால் ஒருவன் அற்பத்தை நினைப்பானானால் அவன் சிறுமைக்கு இடம் கொடுத்துவிடுகின்றான். மனத்தினால் ஒருவன் தீமையை நினைப்பானானால் பிறர்க்கு அவன் கெடுதல் செய்பவனாக ஆகிவிடுகின்றான். மனத்தினால் ஒருவன் பாவத்தை எண்ணுவானாயின், அவன் நன்மையினுடைய பலனை இழந்துவிடுகின்றான். மனத்தை ஒருவன் அழுக்காக்கிக்கொண்டானேயானால், அந்த அழுக்கு அவனுடைய வாழ்க்கையை அழுக்காக்குவதோடு மாத்திரமல்லாமல், அவன் யார் யாருடன் தொடர்போ உறவோ வைத்திருக்கின்றானோ அவ்வனைவரையும் அழுக்காக்கிவிடும். ஆகையினால்தான், 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்பதை முதலில் குறிப்பிட்ட வள்ளுவன், அதுவே அனைத்து அறன் என்று சொல்வான். அதாவது, மனத்துக்கண் மாசிலானாக இருக்கின்ற தன்மை ஒன்றே எல்லா அறத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டதாக அமைந்துவிடுகின்றது. அதாவது, அதற்கப்பாற்பட்ட அறம் வேறு எதுவுமில்லை என்ற கருத்து தொனிக்க வள்ளுவன் இதைச் சொல்கிறான்.

ஆகையினால்தான் இக்குறளுக்குப் பொருள் கூறிய மணக்குடவர், ஒருவன் தன் மனத்தின்கண் குற்றமில்லானாதலே எல்லா அறமும் ஆகும் என்று கூறுவார். அதில் அழுக்கு உண்டாகுமாயின், செய்வனவெல்லாம் ஆரவார நீர்மைய என்று கூறுகின்றார். இந்தக் குறளின் சிறப்பு என்னவென்றால் ஒரு மனிதனுடைய வாழ்விலே நிகழ்கின்ற அனைத்திற்கும் மூலமாக இருக்கின்ற ஒன்றைத் தூய்மைப் படுத்த முயல்வதுதான்; ஏனெனில், அந்த ஒன்று தூய்மை அடைந்துவிடுமாயின், பிற அனைத்தும் தாமாகவே தூய்மையடைந்துவிடும் என்பதால்தான். நாம் ஆங்கிலத்தில் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம்; 'கடலே உப்புச் சத்தை இழக்குமாயின் உப்புக்கு வேறு எங்குப் போவது?' என்று. ஆக, கடலில் இருக்கின்ற உப்பே, உப்புச் சத்தையுடைய பிற பொருள்கள் அனைத்துக்கும் காரணமாக அமைவதுபோல, மனத்தின்கண் மாசில்லாமல் இருக்கின்ற தன்மையே பிற அனைத்தையும் மாசற்ற தன்மையுடையனவாக ஆக்கிவிடும். இந்தக் குறளில் ஆளப்பெற்றிருக்கும் 'அனைத்து' என்ற சொல் மிக விரிந்த பொருளைக் கொடுக்கும். அதாவது, எதையும் தனக்கு அப்பாற்பட்டதாக இருக்கவிடாமல், எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கிக் கொள்ளும் தன்மையை உணர்த்த இந்த 'அனைத்து' என்ற சொல் ஆளப்பெற்றிருக்கின்றது. ஆகவே, 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்பதற்கு அப்பால் வேறு எந்த அறமும் இருக்க முடியாது. எல்லா அறமும் இஃது ஒன்றிலேயே அடங்கிவிடுகின்றது என்பதை வலியுறுத்துவதற்காக வள்ளுவன் இந்தச் சொல்லைப் பயின்றிருக்கின்றான்.

இவ்வாறு வள்ளுவன் தொடங்கிவைக்கும் விழுமிய கருத்தே பிற புலவர்களாலும் வெளியிடப் பெற்றிருக்கின்றது. புறநானூற்றில் இடம் பெற்றிருக்கும் ஒரு பாடல் இவ்வுயர்ந்த இலட்சியத்தின் ஓர் அம்சத்தை வலியுறுத்துவதாக அமையும். தான் எதை விழைகிறான் என்பதை ஒரு கவிஞன் கூறுகின்றான். அப்படிக் கூறுவதற்கு இரு பிராணிகளின் செயலை எடுத்துக்கொண்டு, ஒன்றினுடைய தன்மையை உடையோரின் நட்புத் தனக்கு இல்லாமல் இருக்கவேண்டுமென்றும், இன்னொன்றின் தன்மையை உடையவரின் நட்புத் தனக்கு என்றும் இருக்கவேண்டுமென்றும் விழைகின்றான். அந்த இரு பிராணிகள் எலியும் புலியும் ஆகின்றன. எலி என்ன செய்கின்றது? நன்றாக வளர்ந்து முற்றின கதிரை எடுத்துக்கொண்டு சென்று தனக்காக நிறைத்து வைத்துக்கொள்ளும். புலி என்ன செய்கின்றது என்றால், இடப்பக்கத்தே வீழ்ந்திருக்கின்ற பன்றியை உண்ணாமல், பசித்திருந்து, வலப் பக்கத்திலே படும் களிற்றை உண்ணக் காத்திருக்கும். இத்தகைய எலியினுடைய தன்மையை உடையவர்களுடைய நட்புத் தனக்கு இல்லாமல் இருக்க வேண்டுமென்றும், புலியினுடைய தன்மையை உடையவர்களுடைய நட்புத் தனக்கு என்றும் இருக்க வேண்டுமென்றும் விழைகிறான் அந்தத் தனி மனிதன்.

''விளைபதச் சீறிடம் நோக்கி, வளைகதிர்
வல்சி கொண்டு, அளைமல்க வைக்கும்
எலி முயன்றனையர் ஆகி, உள்ள தம்
வளன் வலி யுறுக்கும் உளம் இலாளரொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ!
கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென,
அன்று அவண் உண்ணாதாகி, வழி நாள்,
பெருமலை விடரகம் புலம்ப, வேட்டு எழுந்து,
இருங்களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலி பசித்தன்ன மெலிவுஇல் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உள ஆகியரோ!''

சங்கக் கால இலக்கியத்திற்கே உரிய சொற்களால் ஆன பாட்டு இது. இதைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன் என்பவர். 'வல்சி' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'அரிசி', 'சோறு', 'உணவு' என்று பொருள். இங்கு அந்தப் பொருளில்தான் 'வளை கதிர் வல்சி' என்ற சொல்லாட்சியில் இடம் பெற்றிருக்கும் 'வல்சி' என்ற சொல் ஆளப் பெற்றிருக்கின்றது. 'அளை' என்ற சொல்லுக்கு 'வளை', 'முழை' என்று பொருள். 'மல்கல்' என்ற சொல்லுக்கு 'நிறைதல்' என்று பொருள். இங்கே எலியானது விளைந்த செவ்வியையுடைய சிறிய இடத்தைப் பார்த்து வளைந்த கதிராகிய உணவைக் கொண்டு முழையின்கண்ணே நிறைய வைக்கும். அத்தகைய எலியைப்போலச் சிறிய முயற்சியராக ஆகி, உள்ள தம்முடைய செல்வத்தை நுகராது, இறுகப் பிடிக்கும் உள்ளம் மிகுதியுள்ளாருடன் பொருந்திய நட்பு,

தமக்கு இல்லையாகுக என்பது இதைப் பாடியவனுடைய விழைவு. நான்காம் வரியில் இடம் பெற்றிருக்கும் 'வளன்' என்ற சொல் 'வளம்' என்பதன் திரிபேயாகும். 'வளம்' என்ற தமிழ்ச் சொல்லுக்குச் 'செல்வம்' என்றுதான் பொருள். அதே வரியில் காணப்படும் 'உளம் இலாளர்' என்ற சொற்றொடருக்கு 'உள்ள மிகுதி இல்லாதவர்'; அதாவது, 'உள்ளத்தில் உயர்வு இல்லாதவர்' என்று பொருள். பிறருடைய உழைப்பினாலும் முயற்சியினாலும் தோன்றிய நெல்லை எலி அறுத்தெடுத்துக் கொண்டுபோய் வளையில் ஒளித்து வைத்துக்கொள்கின்றது. இந்தச் செயல் சிறுமையான செயல். அத்தகைய செயலைப் போல, தம்முடைய செல்வத்தை நுகராமல் இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும் உயர்ந்த உள்ளம் இல்லாதவருடைய நட்பு, தனக்கு இல்லாது ஆகுக என்று கவிஞன் பாடுகின்றான். 'கேண்மை' என்ற சொல் 'நட்பு' என்ற பொருளில்தான் இங்கே ஆளப்பெற்றிருக்கின்றது.

ஆக, எதிர்மறையாக ஒருவருடைய நட்புத் தனக்கு வேண்டா என்று கூறிய புலவன், இப்பொழுது உடன்பாடாக யாருடைய நட்புத் தனக்கு வேண்டும் என்றும் கூறத் தொடங்குகிறான். 'கேழல்' என்ற தமிழ்ச் சொல்லுக்குப் 'பன்றி' என்றுதான் பொருள். 'கடுங்கண்' என்ற சொல்லுக்குக் 'குரூரம்', 'கொடுமை' என்று பொருள். இங்கே, 'கடுங்கண் கேழல்' என்பது குரூரத்தையுடைய பன்றியைக் குறிக்கும். அத்தகைய பன்றி 'இடம் பட வீழ்ந்தென'; அதாவது, 'இடப் பக்கத்தே வீழ்ந்ததாக' என்று பொருள். கொடிய ஒரு பன்றியானது, புலியால் அடிக்கப்பட்டு, இடப்பக்கம் அது விழுமானால் அந்தப் புலி அதைப் புசியாது. இதனை ஏழாவது வரியாகிய 'அன்று அவண் உண்ணாதாகி' என்ற சொற்கள் உணர்த்துகின்றன. அதாவது, தன்னால் அடிக்கப்பட்ட பன்றி, இடப்பக்கமாக விழுமானால் அன்று புலி உண்ணாமல் இருந்து, வழிநாள், அதாவது பிந்தைய நாளில், பெரிய மலையினிடத்து அமைந்திருக்கும் தனது குகையில் தனித்திருந்துவிட்டு, உணவை விரும்பி எழுந்து, பெரிய களிறாகிய ஒருத்தலை நல்ல வலப்பக்கத்தே விழும்படி செய்யும் புலி பசித்திருந்தாற் போல், குறையில்லாத வலியையுடையவரது நட்பு, தன்னுடைய நாள்கள் கழிய, தனக்கு மிகுதியாகக் கிடைக்குமாக என்று அவன் விழைகின்றான். 'விடரகம்' என்ற தமிழ்ச் சொல்லுக்குக் 'குகை' என்று பொருள். 'புலம்பு' என்ற சொல்லுக்குத் 'தனிமை' என்று பொருள். தன்னால் அடிக்கப்பட்ட பன்றி இடப்பக்கமாக விழ, அதை உண்ணாமல், தன்னுடைய குகையிலே தனியாகப் பசித்திருக்கும் புலி என்பதை உணர்த்துவதற்காக வந்த சொற்கள். பின்னர் அது தன் குகையினின்று வெளிப்பட்டு, பெரிய யானையொன்றை நல்ல வலப்பக்கத்தே விழும்படியாக அடிக்கும். 'இருங்களிறு' என்ற சொற்களுக்குப் 'பெரிய யானை' என்று பொருள். 'ஒருத்தல்' என்ற சொல், புல்வாய், புலி, உழை, மரை, கவரி, கராம், யானை, பன்றி, எருமை, கரடி என மிருகங்களின் ஆண்பாலை உணர்த்தும். அப்படி வலப் பக்கமாக யானை விழும்வரையில் உண்ணாமல் பசித்திருந்த புலியைப்போல 'மெலிவு இல் உள்ளத்து உரனுடையாளர் கேண்மை' என்று கவிஞன் குறிப்பிடுகின்றான். இங்கும், 'கேண்மை' என்ற சொல் 'நட்பு' என்றுதான் பொருள்படும். ஆனால், 'மெலிவு இல் உள்ளத்து உரனுடையாளர்' என்ற சொற்கள்தாம் பாடலினுடைய மையக் கருத்தை விளக்குவனவாக அமைந்திருக்கின்றன. 'மெலிவு இல் உள்ளம்' என்ற சொல் 'குறையில்லாத மேற்கோள்' என்று பொருள்படும். 'உள்ளம்' என்ற சொல்லுக்குப் பெரும்பாலும் நாம் 'மனம்' என்ற பொருளைத்தான் கொடுக்கின்றோம். அது வல்லாமல், அந்தச் சொல்லுக்குக் 'கருத்து' என்ற பொருளும் உண்டு. அந்தப் பொருளில்தான், இங்கே அந்தச் சொல் ஆளப்பெற்றிருக்கின்றது. பழைய உரையாசிரியர்கள் அந்தச் சொல்லுக்கு 'மேற்கோள்' என்று பொருள் கொடுத்திருக்கிறார்கள். 'மெலிவு இல்' என்ற சொற்கள் கூர்ந்து நோக்கத் தக்கனவாகும். 'மெலிவு' என்ற சொல்லுக்குத் 'தளர்ச்சி', 'களைப்பு', 'தோல்வி' என்ற பொருள்கள் உண்டு. இங்கே இப் பொருள்கள் அனைத்தும் பொருந்தும்படியாக இச் சொல் இடம் பெற்றிருக்கின்றது. தளர்ச்சியில்லாத, களைப்புறாத, தோல்வியைக் காணாத மேற்கோள் என்றுதான் பொருள்படும். 'உரன்' என்ற சொல்லுக்குத் 'திண்மை' என்று பொருள். ஆக, இங்கே தளர்ச்சியோ, குறைபாடோ, தோல்வியோ இல்லாத, திண்மையுடையவர்களுடைய நட்போடு இயைந்த வைகலும் உளவாக வேண்டுமென்று கவிஞன் விழைகின்றான். 'வைகல்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'நாள்கள்' என்றுதான் பொருள். ஆக, பிறருடைய உழைப்பினால் தோன்றிய பயிரைத் திருடிக் கொண்டு சென்று தனக்காக மறைத்து, நிறைத்து வைக்கின்ற சிறிய முயற்சியுடைய எலியின் தன்மையை ஒத்து, தம்முடைய செல்வத்தை நுகராமல் பிடித்து வைத்திருக்கின்றவர்களோடு சேர்ந்த நட்பு, தனக்குக் கிடைக்காமல் இருக்கவேண்டுமென்றும், அதற்கு மாறாக, தன்னுடைய முயற்சியினாலேயே வீழ்த்தப்பெற்ற பன்றி இடப்பக்கமாக விழுந்தபொழுது அதை உண்ணாமல் பசித்திருந்து, தன்னுடைய குகையிலே தனித்திருந்து, தனக்கு உணவு வேண்டும்பொழுது, வெளி வந்து பெரிய யானையை அடித்து, அதை வலப்பக்கமாக விழச் செய்து உண்ணும் புலியினுடைய தன்மையில் உயர்ந்த மேற்கோளையுடைய திண்மையுடையவர்களுடைய நட்பு இயைந்து, தன்னுடைய நாள்கள் கழிய வேண்டும் என்றும் கவிஞன் இங்கே விரும்புகின்றான்.

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பது ஒரு பழமொழி. புலி இடப்பக்கமாக விழுந்த

தன்னுடைய இரையை உண்ணாது என்பதைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் கூறும். இங்குக் கூர்ந்து நோக்கத்தக்கது என்னவென்றால், புலிக்குப் பன்றியை அடித்து வீழ்த்துவது சுலபம்; யானையை அடித்து வீழ்த்துவதோ கடினம். அப்படியிருந்தும்கூட, பெரு முயற்சியின்றி வீழ்த்தப்பட்ட பன்றியை அது இடப்பக்கம் வீழ்ந்தது என்ற காரணத்தினால் புலி தின்னாது. அதற்கு மாறாக, பெரிய முயற்சி தேவைப்படுகின்ற களிற்றினைக் கொன்று அதை வலப்பக்கமாக விழச் செய்து அதை உண்பதற்காக அப் புலி காத்திருக்கும். அதாவது, புலி போன்ற ஒரு மிருகத்திற்குக்கூட அதைத் தான் எப்படி உண்ண வேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. அந்த நியதிப்படியே அது செயல்படுகிறது. அதுபோலவே, மனிதன் சுலபமாகக் கிடைக்கின்றது என்பதற்காக எதையும் அடைய விழையாமல், மிக்க முயற்சியுடன் கிடைக்கக்கூடிய உயர்ந்த ஒன்றையே அடைய விரும்ப வேண்டும் என்பது இதனால் உணர்த்தப்படும் உண்மை. இந்தப் புறநானூற்றுப் பாடலிலிருந்து எத்தகைய குணம் ஒருவன் தனக்கு இருக்க வேண்டுமென்று விழைகின்றான் என்பது தெளிவாகிறது.

ஆக, வள்ளுவனாகட்டும், இந்தப் புறநானூற்றுப் பாடலைப் பாடியவனாகட்டும், தனி மனிதனுடைய பண்பாட்டிலிருந்தும் குறிக்கோளிலிருந்துமே தொடங்குகிறார்கள். அந்தப் பண்பாடும் குறிக்கோளும் ஓர் இலட்சியத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும்பொழுது, வாழும் நெறியும் ஒழுக்கமும் விழுப்பம் உடையதாக ஆகி, சிறந்ததொரு குடிமகனைப் படைக்கிறது. இத்தகைய குடிமகனால் உண்டாக்கப்படுகின்ற சமுதாயம் தானாகவே சிறந்திருக்கும் என்பதைத் தனியாக எடுத்துக்கூறத் தேவையில்லை.

ஆக, இன்றைய தமிழன் தலை நிமிர்ந்து தன்னுடைய வரலாற்றையும், பண்பாட்டையும், சாதனையையும், ஒழுக்கத்தையும்பற்றிப் பேசுகின்றான் என்றால், அதற்கு வழி வகுத்துக் கொடுத்தவர்கள், அடிகோலியவர்கள், அற்புதமான மனோபக்குவமும், உள்ளத் திட்பமும், சிறந்த இலட்சியமும் கொண்டவர்களாக இருந்து, அதன்படி இலட்சிய வாழ்க்கை பிறரும் வாழ வேண்டுமென்று விரும்பியவர்கள்தாம். எனவே, தொன்மையினால் மாத்திரம் ஒரு சமுதாயம் சிறப்பு அடைய முடியாது. அந்தத் தொன்மையோடு திண்மையும் இருக்குமாயின் அந்தச் சமுதாயம் வலுவுள்ள சமுதாயமாக இருந்து எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றி கொள்ளக்கூடிய சமுதாயமாக வளரும். ஆனால், இப்படி எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றி கொள்கின்ற சமுதாயத்தில் திண்மை இருந்தால் மாத்திரம் போதாது. இந்த வெற்றியின் பயனாகவும், இந்த வெற்றிக்கு உறுதுணையாகவும் இருக்க வேண்டியது தண்மையாகும். 'தண்மை' என்ற அற்புதமான தமிழ்ச் சொல்லுக்கு, 'இன்பம்', 'மென்மை' போன்றபொருள்கள் இருப்பினும், 'குளிர்ச்சி', 'சாந்தம்' ஆகிய பொருள்கள்தாம் சிறக்கும். காரணம் என்னவென்றால், ஒரு கோட்பாட்டின்வழி நின்று, எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றி கொண்டவிடத்து மனநிறைவு உண்டாகின்றது. அந்த மனநிறைவில் இருந்து பிறப்பது குளிர்ச்சியும் சாந்தமும். வடமொழி அறநூல்கள் அனைத்தும் 'சாந்தி' என்பதையே மனித முயற்சியினுடைய, வாழ்வினுடைய இறுதிக் குறிக்கோளாகக் காட்டும். அதுவே சலனமற்ற நிலை. அந்தச் சலனமற்ற நிலையில், விருப்பு வெறுப்புக்கோ, கோபத்துக்கோ, குமுறலுக்கோ, வெறிக்கோ, ஆத்திரத்துக்கோ இடமில்லை. அந்த நிலையைத்தான் 'தண்மை' என்ற அருமையான தமிழ்ச்சொல் குறிக்கும். இந்தக் குளிர்ச்சியும் சாந்தமும் நிலவுகின்ற சமுதாயம், கொடுமையினின்றும் விலகி, அன்பும், அருளும், கருணையும் நிறைந்த சமுதாயமாக வாழ்வதன் காரணமாக, தான் வாழ்வதோடு பிறரையும் வாழ வைக்கும் சமுதாயமாக ஆகிவிடுகின்றது. அத்தகைய சமுதாயத்தைப் படைக்க விரும்பியவன் தான் தமிழன். தமிழிலுள்ள பழம்பெருங் காப்பியங்கள் அனைத்தும், அறநூல்கள் யாவும் இந்த உண்மையையே பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன. இந்த அழியாத உண்மைகளைப் பறைசாற்றிக்கொண்டிருப்பதன் காரணமாகத்தான் தமிழ் மொழி இறவாது என்றும் வாழும் மொழியாக இருக்கிறது.

கலைக் கோயில்கள்– பண்பாட்டுக் கருவூலங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர்

இராம. வீரப்பன்

தமிழகத்தின் கலை, மொழி, சமய உணர்வுகளை வெளிப்படுத்தும் பண்பாட்டு நிலையங்களாகத் தமிழகத் திருக்கோயில்கள் விளங்கி வந்திருக்கின்றன. மக்களுக்குத் தலைவனாகிய மன்னவனைப் போற்றியதுபோல, படைப்புக்குத் தலைவனாக இறைவனைக் கருதியதால், அவனை மன்னர்மன்னன் என்றும் கோவேந்தன் என்றும் கொண்டாடியதன் விளைவாக, கோவேந்தனுடைய இல்லம் எனும் பொருளில் மன்னவர் அரண்மனைகளுக்கு வழங்கிய பெயர், பின்னாளில் 'திருக்கோயில்' என்றே அருள் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது.

வானுயர்ந்த கோபுரங்களும், வனப்பு உயர்ந்த மாமதில்களும், சீருயர்ந்த தேர்களும், தூய திருக்குளங்களும் கோயில் உடைமைகளாகப் போற்றப் பட்டன. எழில் மிகுந்த இக் கோயில்களினால் தமிழகத்தின் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது. கோயில்கள் பழம்பெரும் நாகரிகக் கூறுகளையும் பண்பாட்டு நலன்களையும் பலவகையாகச் சுட்டிக் காட்டுகின்றன. பிரித்தானிய ஆங்கிலக் கலைக் களஞ்சியத்தில் ''கோயில் கட்டும் பெருங் கலைத் திறம் வாய்ந்தவர் தமிழர்'' என்று தமிழினத்தைப் பற்றிக் குறித்திருப்பது நமக்குப் பெருமை தருவதாகும். மேலைநாட்டார் வியந்து போற்றும் கிரேக்கக் கலை வெறும் பொருள் நிலையில் மட்டும் நிற்பது; தமிழ்நாட்டின் சிற்பக்கலையும் கட்டடக் கலையும் அந்த நிலையினும் மிக உயர்ந்து ஆன்ம நிலையின் அடிப்படையில் எழுந்தது என்று அவர்களே போற்றுகிறார்கள்.

காலப்போக்கில் அறிவியல் வளர்ச்சியால் அறிவுத் தெளிவும், புதியன காணும் ஆர்வமும் மக்களிடையே பிறந்துள்ளன. எனினும், பண்டைக் காலத்து மக்கள் கொண்டிருந்த கோட்பாடுகள், சில நம்பிக்கைகளின் அடிப்படையில் பிறந்தன என்றாலும், அந் நம்பிக்கைகள் சமுதாய நல்வாழ்வுக்கு உரம் ஊட்டவல்ல துணையாகவும் அமைந்திருந்தன என்பதை நாம் அறவே மறுப்பதற்கு இல்லை. ஆலயங்கட்கு வழிபாடு கருதிச் செல்பவர்களைப் போலவே, சிற்பக்கலையின் சீர்த்தியைக் கண்டு வியக்கச் சென்று வருபவர்களும் உண்டு. சேலம் திருக்கோயிலின் முன்மண்டபத்தில் காட்சி தருகின்ற நெடிய திருமேனிப் படிமத்தை இராமர் வடிவம் என்று பலரும் கருதியிருந்தனர். ஆனால், ஈரோட்டைச் சார்ந்த பெரும் புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டர் என்பவர் அது வல்வில் ஓரியின் திருமேனி என்றும், வரலாற்றை இங்ஙனம் ஆலயத்துள் வாழ்வித்தனர் என்றும், அவர் சொல்லித் தாம் அறிந்ததாக மாண்புமிகு நீதிபதி செங்கோட்டுவேலன் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள். இதனால் இறையுணர்வோடு, வரலாற்றுணர்வையும் ஊட்டும் கலை நிலையங்களாக ஆலயங்கள் விளங்குதலை அறியலாம். நம்மைக்காட்டிலும், அயல்நாட்டிலிருந்து வரும் பெருமக்கள் பலர், நம் திருக்கோயில்களின் அமைப்பையும் அழகையும் மகிழ்ந்து பாராட்டுவதோடு, ஆலயச் சிற்பங்களைப் பற்றிய நுணுக்கமான செய்திகளையும் ஆர்வத்தோடு கேட்கின்றனர். பழங்காலத்தில் பொது நிலையங்கள் என்பவை மிகச் சிலவாகத்தான் இருந்திருக்கவேண்டும். அவற்றுள் திருக்கோயில் மக்கள்

வாழ்வின் அனைத்து நிலைகளையும் தழுவிய கலை, பண்பாட்டு, நாகரிக மையங்களாகவும் திகழ்ந்தன. இன்று நம்மை வியப்பில் ஆழ்த்தும் சிற்பக்கலைத் திறத்தின் ஊற்றுக் கண்களாகவே ஆலயங்கள் திகழ்ந்துள்ளன. இக் கருத்திலேயே ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'' என்று முன்னோர்கள் குறித்தனர்போலும்.

இக் காலத்துக் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் ஏற்படாத முன்னர், கோயில்கள்தாம், கல்விக்கும் கலை வளர்ச்சிக்கும் பெரும் தொண்டு புரிந்துள்ளன. கோயில்களில் உள்ள மண்டபங்கள் பலவற்றில், கல்வியும் கலைகளும் பயிற்றுவிக்கப் பெற்றன. கோயில்களில் நடன மண்டபம், இசை மண்டபம், புராணப் படன மண்டபம், வியாகரண மண்டபம், தருக்க மண்டபம் முதலியன இருந்தன; இருக்கின்றன. அவ்வவற்றில், அந்தந்தக் கல்வியும் கலைகளும் பயிலப் பெற்றன. 'சரசுவதி பண்டாரம்' என்றும், 'திருக்கைக்கோட்டி' என்றும் பெயர்பெற்றிருந்த ஆலயப் பகுதிகளில், சிறந்த நூலகங்கள் அமைந்து பணியாற்றி வந்தன. பழைய நூல்களைப் பாதுகாத்தும், அந் நூல்களைப் பிரதிகள் செய்தும், படிக்க விரும்புவோர்க்கு அந்நூல்களைக் கொடுத்து வாங்கியும், கோயில்கள் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டுகள் புரிந்துள்ளன.

கோயில்களில், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் முதலிய எல்லாக் கலைகளும் போற்றி ஆதரித்து வளர்க்கப்பெற்றன. பரிபாடல் என்னும் சங்க நூல், திருப்பரங்குன்றம் கோயிற் சுவர்களில் சூரியன், சந்திரன், மன்மதன் - இரதி, அகலிகை - கௌதமர் வரலாறு முதலிய பலப்பல அழகோவியங்கள் தீட்டப்பெற்றிருந்ததைக் கூறுகின்றது.

மாமல்லபுரம் தேர்க்கோயில்களிலும், தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், திரிபுவனம், தாராசுரம், இராமேசுவரம், தாரமங்கலம், பேரூர், சிதம்பரம், திருவரங்கம், திருப்பெருந்துறை, திருவண்ணாமலை முதலான தலங்களிலுள்ள கோயில்களிலும் உள்ள சிற்பங்களால், கோயில்கள் சிற்பக்கலைக்கு அளித்துள்ள பேராதரவு புலனாகின்றது.

நுண் கலைகளில் தலைசிறந்த இசைக்கலை, கோயில்களில் பெரிதும் தழைத்தோங்கி வளர்ந்து வந்தது. கொட்டி மத்தளம், முரலியம், வங்கியம், உடுக்கை, சங்கு முதலிய எண்ணற்ற வகையான வாத்தியங்களை வாசிப்பவர்கள் அங்கே நியமிக்கப் பெற்றிருந்தனர். வேதபாராயணம் செய்பவர்களும், திருமுறை ஓதுபவர்களும், திவ்வியப் பிரபந்தம் இசைப்பவர்களும், நூல் இயற்றும் கவிஞர்களும், பொழிவுகள் ஆற்றும் புலவர்களும் கோயில்களால் ஆதரிக்கப்பெற்றனர்.

நாட்டின் அரசியல் எத்தனையோ குழப்பங்கள் மலிந்திருந்த காலத்தும், நாசகாலத்திலும் கோயில் ஆதரவில் வளர்ந்த பண்டைக்காலத்துத் தமிழிசை, சிலப்பதிகார இசை, சம்பந்தர் போன்றோரது பணியால் தொடர்ந்து மக்களிடையே உணர்வோடு வளர்ந்து சமீபகாலத்தில் கர்நாடக இசை என்ற புதுப் பெயரில் வளர்வதற்கும் கோயில்கள் இடம் கொடுத்தன. கோயில் இருந்திராவிட்டால் இன்று யாரும் கர்நாடக இசை என்றோ பரத நாட்டியம் என்றோ பேச இடமிராது.

கோயில்களில் நடனக் கலையும் நாடகக் கலையும் போற்றி வளர்க்கப்பெற்றன. பல கோயில்களில் நடன மண்டபங்கள் இருந்துவந்தன. தஞ்சைப் பெரிய கோயிலில், 400 நடனப் பெண்கள் 'தளிப்பெண்டுகள்' என்று சொல்லப்பெற்றோர் இராசராச சோழனால் அமர்த்தப்பெற்றனர் என்றும், அவர்களுக்கு நான்கு வீதிகளின் இரு சிறகுகளிலும் தனித்தனி 400 வீடுகள் கட்டித் தரப்பெற்றன என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

> ''மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
> விலங்கல்செய் நாடக சாலை,
> இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
> இராசரா சேச்சுரம்''

என்று, கருவூர்த்தேவர் தஞ்சைக் கோயிலிலிருந்த நடன சாலையினையும் நாடக சாலையினையும் குறிப்பிட்டிருத்தல் காணலாம். நாடகம், நடனம், நிருத்தியம், நிருத்தம், கவுத்துவம் முதலிய கலைகள் பலவும் கோயில்களில் வளர்க்கப்பெற்றன.

சிதம்பரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர் முதலிய கோயில்களில், நடனக்கலையின் 108 கரண வகைகள் சிற்பமாக அழகுற வடிக்கப்பெற்றுள்ளன. கோயில்களில், இசையிலும் நாடகத்திலும் வல்ல கலைஞர்களான நாடக மாராயன், சாக்கைக் கூத்தன், கானம்பாடி, வாத்திய மாராயன் முதலியவர்கள் ஆதரிக்கப்பெற்றனர். தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேச்சுர நாடகம், பிற்காலத்தில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் முதலியனவும், திருப்பாதிரிப்புலியூரில் பூம்புலியூர் நாடகம் போன்றனவும், மற்றும் பக்தியை வளர்க்கின்ற கடவுள் கதைகளும், அடியவர்களின் வரலாறுகளும் கோயில்களில் நடிக்கப்பெற்று வந்தன.

பூத்தொடுப்பது ஒரு கலை. கோயில்தோறும் நந்தவனமும் மாலை கட்டுவோரும் உண்டு. எத்தனை பூக்காரத் தெரு, மாலை கட்டித் தெருக்கள்? தார், கண்ணி, மாலை, பிணையல், தொடையல், சரம் என்று எத்தனை வகைகள்! தமிழ்நாட்டைத் தவிர உலகில் வேறெங்கும் இத்தனை விரிவு இல்லை. இவ்வாறு கலையைத் தந்தது கோயில்.

பண்டைக்காலத்தில் கோயில்களே நீதிமன்றங்களின் பணிகளைச் செய்துவந்தன. பொதுமக்களின் குறை முறையீடுகளைக் கேட்டு விசாரித்து, ஊர்ப்பெருமக்கள் கோயில்களிலேயே நீதி வழங்கி வந்தனர். திருவெண்ணெய்நல்லூர்க் கோயில், திருவாலங்காட்டுக் கோயில் முதலியவற்றில் இன்றும் அத்தகைய வழக்கு மண்டபங்கள் இருத்தலைக் காணலாம்.

இன்றைய சமுதாயத்தில், மக்களுக்கு வருகின்ற பலவகைப் பிணிகளையும் தீர்க்கின்ற மருத்துவமனைகள், ஆங்காங்குப் பணிபுரிந்து வருகின்றன. பண்டைக்காலத்தில் இத்தகைய மருத்துவ மனைகள் பல, கோயில்களின் ஆதரவிலேயே நடைபெற்று வந்தன. காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருமுக்கூடல் என்னும் ஊரில் 'வீர சோழன் ஆதுலர்சாலை' என்னும் மருத்துவமனை இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வாறே திருவாவடுதுறைக் கோயிலின் சார்பிலும் சிறந்ததொரு மருத்துவமனை இருந்ததென்று கல்வெட்டுகளால் தெரிகின்றது. கோயில்களின் சார்பில் சித்தமருத்துவக் கலைஞர்கள், பொதுமக்களின் பலவகை நோய்களுக்கும் மருத்துவம் புரிந்து நோய் தீர்த்து வந்தனர்.

இன்று உடல் ஊனமுற்றோர் சேவை அரசின் சீரிய பணிகளுள் ஒன்று. இதைக் கோயில்கள் செய்தன. விழுப்புரத்திற்கு அருகில் உள்ள திருவாமாத்தூர் கோயிலில், குருடர் பதினாறு பேருக்கு உணவு உறையுள் தந்து, கோயிலில் பதிகம் பாடப் பயிற்சி அளித்து அவ்வேலையில் நியமிக்கப்பெற்றிருந்தனர். அவர்களுக்கு வழிகாட்டித் துணைபுரிய இருவர் நியமிக்கப்பெற்றிருந்தனர். இப்பதினெண்மருக்கும் உணவு முதலியவற்றுக்கான திட்டங்கள் செய்யப்பெற்றிருத்தலை ஒரு கல்வெட்டு விரிவாகக் கூறுகிறது.

தமிழகக் கோயில்களில் எளிய மக்களுக்கும், அநாதைகளுக்கும், யாத்திரிகர்களுக்கும் ஒவ்வொரு நாளும் உணவளிக்கப்பெற்றது. அதற்கென்று கோயில்களில் அறச்சாலைகள் பல அமைந்து பணிபுரிந்துவந்தன.

இக்காலத்தில் பெரும்பாலான ஊர்களில், நிதி நிலையங்களாகிய வங்கிகள் பல அமைந்து, சமுதாய மக்களின் பொருளாதாரச் செழிப்பிற்கு உதவி புரிந்து வருகின்றன. இதுபோலவே, பண்டைக்காலத்தில் கோயில்கள் நிதி நிலையங்களாக விளங்கி மக்கட் சமுதாய நலனுக்குரிய செயல்களைப் புரிந்து வந்தன. கோயிலுக்கு வரும் நன்கொடைகள், அறக்கட்டளைகள் முதலியவற்றைப் பெறவும், பொருள் தேவைப்படும் ஏழை மக்களுக்கு ஓர் அளவான வட்டிக்குக் கடன் தரவும், இவற்றின் தொடர்பான பத்திரங்களையும் ஆவணங்களையும் பாதுகாக்கவும் பலவகை ஏற்பாடுகள் கோயில்களில் நிலவி இருந்தன.

நாட்டில் போதிய மழையின்மையாலும் விளைவு இன்மையாலும் பஞ்ச நிலைமை ஏற்பட்டால், இக்காலத்தில் அரசாங்கம் பலவகைப் பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ளுகின்றது. இதுபோன்ற பஞ்ச நிவாரணப் பணிகளில், கோயில்களும் ஈடுபட்டுப் பொது மக்களுக்குத் தொண்டாற்றியுள்ளன. ஒவ்வொரு சிற்றூரிலும் அறுவடைக் காலத்தில் ஓரளவு நெல் தண்டல் செய்து ஒதுக்கிப் பாதுகாத்து வைக்கப்பெற்றது. பஞ்சம் ஏற்பட்டால், அந் நெல் பொது மக்களுக்குக் கோயில்மூலம் முறையாக வழங்கப்பெற்றது. அறுவடையாகும் நெல்லைச் சேர்த்தல், பாதுகாத்தல், மேற்பார்வையிடுதல், பஞ்ச காலத்தில் குடிமக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தல் முதலிய வேலைகளைக் கோயில்களின் சார்பில், 'பஞ்சவார வாரியத்தார்' என்னும் குழுவினர் கவனித்து வந்தனர்.

''அல்லார் கண்டத்து அண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு,
பல்லாறு இயன்ற வளம்பெருகப்
பரமன் அடியார் ஆனார்கள்,
எல்லாம் எய்தி உண்மைஎன
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார்;
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்''

என்று, பெரியபுராணத்தில், சேக்கிழார் ஒரு சமயம் திருவீழிமிழலையில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது, திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அவ்வூர் மக்கள் எல்லோர்க்கும் சோறு வழங்கிப் பஞ்ச நிவாரணப் பணி புரிந்தமையினைக் கூறியிருத்தல் இங்கு நாம் கருதத்தக்கது.

இந் நாளில், அம்மை முதலிய கொள்ளை நோய்கள் ஏற்பட்டால், அரசாங்கம் விரைந்து நடவடிக்கைகளை எடுத்து, இந் நோய்களைப் போக்கி மக்களைக் காப்பாற்ற முனைகின்றது. இத்தகைய பணிகள் பண்டைக்காலத்தில் நம் கோயில்களின் மூலம் செய்யப்பெற்று வந்தன. திருச்செங்கோடு என்னும் திருக்கொடிமாடச் செங்குன்றூர்த் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் சென்றபொழுது, அப்பக்கங்களில் எல்லாம் நளிர்சுரம் என்னும் கொடிய காய்ச்சல் ஏற்பட்டது என்றும், அதனைத் திருஞானசம்பந்தர் இறைவனைப் பாடித் தொழுது தீர்த்தருளினார் என்றும் பெரிய புராணம் கூறுதல், கோயில்கள் ஆற்றிவந்த பிணிதீர்ப்புப் பணியினை உணர்த்துகின்றது எனலாம்.

இவற்றையெல்லாம் கருதினால், நம் தமிழ்நாட்டில் பழங்காலத்தில் கோயில்களே, கல்வி நிலையங்களாக விளங்கின; கலை வளர்க்கும் கழகங்களாகத் திகழ்ந்தன; ஏழை எளியவர்களை உணவளித்துப் பாதுகாக்கும் அறச் சாலைகளாக அமைந்திருந்தன; மருத்துவ மனைகளாகப் பணிபுரிந்தன; தொழில்தரும் நிறுவனங்களாகத் தொண்டாற்றின; பொதுமக்களுக்குப் பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவி புரியும் நிதி நிலையங்களாக இயங்கின என்னும் உண்மைகளை நாம் நன்கு உணரலாம். சுருங்கக் கூறினால், நம் கோயில்கள் தொன்றுதொட்டே சமுதாய நன்மைகுறித்துப் பற்பல துறைகளிலும் தொண்டாற்றி வந்துள்ளன எனத் துணிந்து கூறலாம்.

இங்ஙனம் நம் தமிழகத்தின் சமய இயல், சமுதாய இயல், கலையியல், கல்வியியல், பண்பாட்டியல், பொருளியல், நாகரிக இயல் முதலிய பல்வேறு துறைகளிலும் தொடர்பு கொண்டு, மக்கட் சமுதாயத்திற்கு நலன்கள் பலவும் செய்து வருகின்ற கோயில்களே, உண்மையில் நமது 'சமுதாய நல நிலையங்கள்' ஆகும் எனக் கூறலாம். இத்துணைச் சிறப்பு மிக்க, நமது கோயில்களைக் கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது, தமிழ் மக்களாகிய நம் எல்லோருக்கும் உரிய தலையாய பெருங் கடமையாகும்.



மேடைத் தமிழ்

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
க. இராசாராம், பி.எ.

உலக வரலாற்றிலேயே பேச்சுக்கலையைப் பண்டை நாளில் தனிச் சிறப்புடனும் தனிப் பெருமையுடனும் போற்றி வளர்த்து வந்தவர்கள் தமிழர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள் ஆக மூன்று இனத்தவர்களே.

கிரேக்கர்கள் அறிவுப் பிரசாரத்திற்கும், அரசியல் நெறிக்கும் பேச்சுக்கலையைப் பக்குவமாகப் பயன்படுத்தினார்கள்.

ரோமானியர்கள், சட்டத்துறையிலும் அரசியல் துறையிலும் பேச்சுக்கலையை நன்றாகப் பயன்படுத்தி அதன் வளர்ச்சி முற்றி முதிர வகை செய்தார்கள்.

பேச்சுக்கலையில், நலத்தையும் நாகரிகத்தையும் ஏற்றி வைத்து, மெருகும் உயர்வும் கொடுத்தவர்கள் நாம்தாம்.

நம்முடைய புறவாழ்க்கையிலும் அக வாழ்க்கையிலும் பேச்சுக்கலையை ஒரு நாகரிகப் பண்பாகக் கையாண்டுள்ளதை உணரலாம்.

குறிப்பறிந்து பேசுவது, பொடி வைத்துப் பேசுவது, சிலேடையாகப் பேசுவது முதலியன நம் முன்னோர்களுக்குக் கைவந்த பாணிகளாகும்.

கவி காளமேகத்தைப் போல் சிலேடை வைத்துப் பாடி ஒரு நிலையான புகழைப் பெற்றவரை வேறு மொழிகளிலே காண முடியுமா என்பது சந்தேகம் தான்!

காதலியின் எண்ணமறிந்து தோழி காதலனிடம் சொல்வதும், அவனது குறிப்பறிந்து காதலியிடம் உரைப்பதும், காதலியின் குறிப்பறிந்து காதலன் நடப்பதும் தலைவன் - தலைவி நாடகங்களாக, ஏராளமான பாடல்கள் நமது சங்க இலக்கியங்களிலே உள்ளன.

நமக்கிருந்த பெருமையெலலாம், சொற்களைக் கையாளும்பொழுது, அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டு நயம்சுரக்க இனிமை கலந்து பேசி வந்தது தான். சிலர் அந்த நிலையிலிருந்து நழுவியருக்கக் கூடும். அதனைக் கேட்ட திருவள்ளுவர், சொல் வன்மை என்ற அதிகாரம் ஒன்றினையே எழுதி உலகிற்குத் தந்தார்.

''சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து''

என்ற குறளைப் பலரும் அறிவார்கள். எனவே பேசும்பொழுது, அது தனிப்படப் பேசுவதாயினும், அன்றி மேடையில் பேசுவதாயினும் சொல்லைக் கையாளுவதில் தனிக்கவனம் இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரது அறிவுரையாகும்.

கிரேக்கரும் ரோமானியர்களும் சிற்பம், ஓவியம்போல, பேச்சுக்கலையை விதி முறைகளைக் கையாண்டு தனிப்பெருமை பெற்ற கலையாகக் கற்றார்கள். நடைமுறையில் தங்களது தாய்

மொழியையும் வளர்க்க, பேச்சுக்கலையை ஒரு வழியாக எண்ணிக் கையாண்டார்கள்; போற்றி உரைத்து மகிழ்ந்தார்கள்.

அக் கலையை வளர்த்து அதனால் ஏற்பட்ட நல்ல விளைவுகளை அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் பயன்படுத்திக்கொண்டார்கள்.

பன்னெடுங்காலமாகத் தமிழர்களாகிய நாம் நமது தாய்மொழியிலே பேசி வந்திருக்கிறோம். நமது நாட்டை ஆண்ட மன்னர்கள் காலத்திலும் சரி, வள்ளல்கள் காலத்திலும் சரி, சிறந்த பேச்சாளர்கள் இருந்திருக்க வேண்டும் என்பது எனது துணிபு. எவ்வளவோ இலக்கியங்கள் அழிந்துபட்டதுபோல, நமது பேச்சுக் கலைஞர்களைப்பற்றிய குறிப்புகளும் மறைந்துபோயிருத்தல்கூடும். நமது நாட்டைப் பல வெளிநாட்டவர் படையெடுத்து வந்து வென்றதில்லை! ஒரே ஒரு நாடு நம்மை வெற்றி கொண்டது. அதுதான் இங்கிலாந்து. அவ்வளவு தான்! தமிழில் பேசிவந்த நிலையே மாறி, அறிஞர் என்றால் அவர் ஆங்கிலத்தில்தான் பேசுவார் என்ற நிலை உருவாயிற்று!

நான் இளைஞனாக இருந்தபோதே, திரு. சர் ஏ. இராமசாமி முதலியாரும், திரு. சத்தியமூர்த்தி போன்றவர்களும், மேடையில் ஆங்கிலத்தில்தான் பேசினார்கள். தந்தை பெரியார் ஈரோடு நகரசபைத் தலைவராக இருந்தபோது, சேலத்தில் மூதறிஞர் இராஜாஜி நகரசபைத் தலைவராக இருந்தார். இருவரும் சபையின் நடவடிக்கைக் குறிப்புகளைப் பதிவேட்டில் ஆங்கிலத்தில்தான் எழுதினார்கள் என்றால், ஆங்கிலத்தின் பிடிப்பு நம்மவர்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்திருக்கிறது என்பதனை அறியலாம்.

மீண்டும் தமிழ் நாட்டில், தமிழில் பேசமாட்டோமா என ஏங்குகின்ற காலம் வந்தது. அப்படியே பேசினாலும், ஆங்கிலம் கலக்காமல் பேசுவது அரிது என்கிற நிலை. நான் பள்ளிக்கூடத்தில் படிக்கிற காலத்தில், பலர், ''எனக்குத் தமிழிலே பேசிப் பழக்கமில்லை. ஆங்கிலத்தில்தான் அழகாகப் பேசுவேன்'' என்று வெளிப்படையாக வெட்கமின்றிக் கூறிக்கொள்ளும் வழக்கமும் நம்மிடமிருந்தது. பல மொழிகளைக் கலந்து பேசிவிட்டு, மணிப்பிரவாள நடைதான் தமிழ்நாட்டு நடை என்று கூறி நமக்கு நாமே மகிழ்ந்துகொள்கிறோம். பேசசுக் கலையில் தக்க வெற்றிபெற, சொற்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த பொறுமை வேண்டும். சொல்லின் பொருள் நயம், ஒலி நயம், இசை நயம் எல்லாவற்றையும் கவனித்தாகவேண்டும். ஒரு சொல் பிசகினாலும், அதனால் பெருத்த விபரீதங்கள் விளைந்துவிடக்கூடும். இப்படிப்பட்ட அருங்கலையில் தாய்மொழியில் பேசுவது குறைந்து, மணிப்பிரவாள நடை ஏற்பட்டுக்கொண்டே போனால் நல்லதா? என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் மட்டும் பெரிதும் கற்றவர்களே, தங்களது பேச்சின் இடையில் ஆங்கில வார்த்தைகளைப் பெய்து பேசுவதைக் காண்கிறேன். அதற்குக் காரணம் 'தங்கள் எதிரிலே உள்ளவர்கள், தங்களுக்கு ஆங்கிலம் தெரியாது' என்று நினைக்கக் கூடாது என்பதற்காக இருக்கலாம் என எண்ணுகிறேன்.

நான் சிறு வயது முதல் அறிஞர் அண்ணாவுடன் தொடர்புகொண்டிருந்தவன். அவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை மிக்கவர்கள். பேசினால் ஒன்று தமிழிலேயே பேசுவார்கள்; அல்லது ஆங்கிலத்திலேயே பேசுவார்கள். மணிப்பிரவாளம் அவரிடம் வந்து நாட்டியமாடியதில்லை. தமிழில் வழக்காற்றில் இல்லாத சொற்களையும் எடுத்து அழகுறப் பேசி, நாட்டின நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் அறிஞர் அண்ணா.

தமிழிலே மேடைப் பேச்சுக்கு மீண்டும் உயிர் ஊட்டியவர்கள் திரு.வி.க., டாக்டர் திரு. வரதராஜுலு தந்தை பெரியார் ஈ.வெ.ரா. என்ற மூவரைத்தான் குறிப்பிடவேண்டும்.

அதன்பின் சிறந்த தமிழ்ப் பேச்சாளர்கள் பலரை நாடு பெற்றது. நான் இளைஞனாக இருந்த பொழுது தருமபுரியில் படித்தேன். அப்பொழுது தருமபுரியில் மின்சாரம் கிடையாது. பொதுக்கூட்ட அறிவிப்பே தண்டோரா மூலம்தான் நடைபெறும். பேச்சாளர்கள் ஒலிபெருக்கி இல்லாமல் தான் பேசுவார்கள். அப்பொழுதிருந்தே பலரது பேச்சுகளைக் கேட்டுக்கொண்டுவருகிறேன். தற்பொழுதோ, சட்டசபையில் தினமும் தமிழ்ச் சொற்பொழிவுகளைக் கேட்கும் நல்வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றேன். மேடைத்தமிழ் அனுதினமும் வளர்ந்துகொண்டே வருகிறது.

மூதறிஞர் இராஜாஜி, ஓர் அறிவுப் பழம். அவரது பேச்சு மிகுந்த கூர்மைவாய்ந்ததாக இருக்கும். இராஜாஜியின் பேச்சிலே தெளிவும் நிதானமும் கலந்திருக்கும். நறுக்குத் தெறித்தாற்போல் சிறுசிறு வார்த்தைகளாக வந்து விழும். குட்டிக்கதைகள் வந்து வந்து அவையோரை மகிழ்விக்கும். தமிழில் பேசினால் தமிழ்தான் இருக்கும். ஆங்கிலத்தில் பேசினால் ஆங்கிலம்தான் தொனிக்கும்.

சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலத்தில, மக்கள் மத்தியில் பல பேச்சாளர்கள் உருவானார்கள். கூடவே பல கலவரங்களும் நடந்தன. எனவே, கருத்துகளை வெகுவேகமாக எடுத்துச் சொல்ல வேண்டிய நெருக்கடி பேச்சாளர்களுக்கு வந்தது. திரு. பொன்னம்பலனார் போன்ற பேச்சாளர்கள் உருவானார்கள். அவரது பேச்சில் கருத்துகள் கோவையாக வந்து விழும். பேச்சு, கேட்க இனிமையாக இருக்கும். சொல்லோட்டமோ மிக விரைவாக இருக்கும்.

அதே காலத்தில் திரு. வி. கலியாணசுந்தனார் அவர்கள், அழகு தமிழில், எதையும் மும்முறை விளக்கம் சொல்லிப் பேசுவது, இசையைக் கேட்பது போல் இருக்கும்.

திரு. சத்தியமூர்த்தி, மணிப்பிரவாள நடைக்குச் சொந்தக்காரர். தேசியத்தின் எதிரிகளுக்குப் பதிலடி தருவதில் வல்லவர். தமிழ்நாட்டில் பாமர மக்களிடையிலே தங்களது பேச்சால், தேசியத்தை வளர்த்த பெருமை திரு. சி. பி. சுப்பையா, திரு. அண்ணாமலைப்பிள்ளை, திரு. உபயதுல்லா போன்றவர்கட்கு உண்டு.

நீதிக்கட்சியும் சிறந்த பேச்சாளர்களைத் தமிழுலகிற்கு நல்கியது. திரு. ஜனகசங்கர கண்ணப்பர், 'திருவாசகமணி' எனப் பிற்காலத்தில் புகழ்பெற்ற திரு. பாலசுப்பிரமணியம், எவ்வளவு நேரம் கேட்டாலும் தெவிட்டாதபடி பேசும் ஆற்றல் பெற்ற 'அஞ்சாநெஞ்சன்' திரு. அழகிரிசாமி, 'குத்தூசி' திரு. குருசாமி போன்றவர்கள் மேடைத் தமிழுக்கு ஏற்றம் தந்தவர்கள்.

சுயமரியாதைக்காரராக வளர்ந்து, பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களிலே ஒருவரான, திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் மேடைத் தமிழுக்கு ஆற்றிய தொண்டு மறக்கமுடியாதது. பாரதியைப் பற்றிப் பேசினால் அவர் பேச்சில் அனல் பறக்கும். கவிதைகளோ துள்ளி விளையாடும்.

தந்தை பெரியாரைப்பற்றி நான் எழுதாமல் இருந்தால், மேடைத் தமிழை வளர்த்த ஒருவரையே மறைத்த மாபெரும் குற்றத்திற்கு ஆளாவேன். கூட்டத்தில் உள்ள படித்தவர்கள் படிக்காதவர்கள் ஆகிய இரு சாராரையும், தனது எளிய நடையால், சாதாரணச் சொற்களால், மக்களது உள்ளத்தை ஈர்த்த மாபெரும் பேச்சாளர் அவர். மேடைத் தமிழுக்குத் தொண்டு செய்த, செய்து வரும் பல தலைவர்களை உருவாக்கித் தமிழகத்திற்குத் தந்த தலைவர் அவர். அலுப்புத் தட்டாமல் இரண்டரை மணி நேரம் அவரது பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். அவ்வளவு சுவையான பேச்சு.

பெரியார் பலரை உருவாக்கியவர் என்றால், அறிஞர் அண்ணா கையாண்ட மேடைத்தமிழ் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைத் தட்டி எழுப்பியது எனச் சொல்லலாம். அண்ணாவின் குரலிலே எழுந்த நாதத்தை வேறெவர் குரலிலும் நான் கேட்டதேயில்லை.

திரு. ஈ. வெ. கி. சம்பத் தனக்கெனத் தனிப் பாணியை வளர்த்துக்கொண்டு மேடைத்தமிழுக்குப் புகழ் சேர்த்தவர். மறைந்த பெருந்தலைவர் திரு. காமராஜர் மக்கள் மனத்தைத் தொடும் வகையில் பேச வல்லவர்.

இப்படி நம்மை விட்டு மறைந்த தலைவர்கள் பலரும் மேடைத்தமிழ் வளரப் பாடுபட்டார்கள். மேடைத் தமிழை நன்கு வளப்படுத்துவதில்தான் பேச்சுக்கலையின் உயிர்நாடியே உள்ளது. பேச்சுக் கலை வளர்வதில்தான் மக்களாட்சியின் எதிர்காலம் உள்ளது.

எனவே, தேவையற்ற மணிப்பிரவாள நடையைத் தவிர்த்து, தூய மேடைத்தமிழை வளர்ப்பதில் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

தமிழில் சொற்களில்லையே என்ற குறைபாடு நமக்கில்லை. திரு. பெ. தூரன் அவர்கள் தலைமையில் இயங்கிய குழு சிறந்த கலைக்களஞ்சியத்தைத் தந்துள்ளது. தமிழில் தற்போது சட்டச் சொற்கள் கண்டுபிடிக்கும் குழு மிகவும் வேகமாகப் பணியாற்றி வருகிறது. விஞ்ஞானச் சொற்களை, ஜப்பானிய மொழியில் உடனடியாக மொழி பெயர்க்கும் பொழுது நம்மால் இயலாது என்று கூறுவது பேதமையல்லவா?

ஜப்பானியர்களே தங்களது மொழியின் மூலம் தமிழ்தான் என எடுத்துச் சொல்லிப் பெருமைப்படும் காலமிது. எனவே, நமது மேடைத்தமிழின் மூலமாக ஏராளமான சொற்களை வழக்காற்றில் கொண்டுவர முடியும். நாடாளுமன்றம், கோப்பு, திரு, வணக்கம், ஆளுநர், மக்கள் நல்வாழ்வு போன்ற எத்தனையோ சொற்கள், கடந்த பதினைந்தாண்டுகளில் நமக்குக் கிடைத்த நல்ல தமிழ்ச் சொற்கள். எனவே, மேடைத்தமிழ், தமிழுக்குச் சிறப்புச் செய்யும் கருவூலம். அதனைப் பேணிக் காப்பது நம் கடமை.



ப. நெடுமாறன், எம்.ஏ., எம்.எல்.ஏ.

இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கும் மேலாகச் சற்றும் இடைவெளி இல்லாத தொன்மையும வரலாற்றுப் பெருமையும் கொண்டது மதுரை மாநகரம். பாண்டியர்களின் தலைநகராகப் பதினான்கு நூற்றாண்டு காலத்திற்கு மேலாக விளங்கியது. நடுவில் சிறிது காலம் களப்பிரர்களின் தலைநகராகவும் திகழ்ந்தது. 15 முதல் 18 நூற்றாண்டுகள் வரை பாண்டிய நாட்டை ஆண்ட முஸ்லிம் சுல்தான்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோரின் தலைநகரமாகத் தொடர்ந்து விளங்கியது.

18 நூற்றாண்டு காலத்திற்கு மேலாக ஒரு நாட்டின் தலைநகரமாகத் தொடர்ந்து விளங்கிய பெருமை இந்தியாவில் மதுரை நகருக்கு மட்டுமேயுண்டு.

சோழர்களின் தலைநகரங்களாக விளங்கிய பூம்புகார், உறையூர், பழையாறை, தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகியவற்றுக்குக்கூட இத்தகைய நெடிய வரலாறு கிடையாது.

சேரர் தலைநகரமான வஞ்சி எதுவெனக் கண்டறிய முடியாத நிலை இன்னமும் உள்ளது.

பல்லவர் தலைநகரமான காஞ்சி நகரம்கூடச் சில நூற்றாண்டுகள் மட்டுமே தலைநகரமாக விளங்கியது.

பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரைக்கு உள்ள இடைவெளியில்லாத பெருமைமிக்க வரலாறு சேர, சோழ, பல்லவப் பேரரசுகளின் தலைநகரங்களுக்குக் கிடையாது.

மதுரையின் தொன்மையைப் பண்டு உலகம் உணர்ந்து பாராட்டியது. கி.மு. 320-ல் இருந்ததாகக் கூறப்படும் கிரேக்க அறிஞர் மெகஸ்தனிஸ் மதுரையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். கி.பி. 75ஆம் ஆண்டில் கிரேக்க அறிஞரான பிளினி தனது குறிப்பில் மதுரையைப் பற்றி எழுதியுள்ளார். கி.பி. 140-ல் வாழ்ந்த தாலமியின் குறிப்புகளிலும் மதுரை இடம் பெற்றுள்ளது. கி.மு. 25-ல் ஆண்ட ரோம் பேரரசனான அகஸ்டஸ் சபைக்கு மதுரைப் பேரரசனின் தூதுவன் ஒருவன் வந்தான் என ஸ்ட்ராபோ என்பவர் குறிப்பிடுகிறார்.

மதுரையிலும் அதைச் சுற்றிலும் உள்ள பல இடங்களில் ரோமாபுரி நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மதுரையில் ரோமர் குடியிருப்பு ஒன்று இருந்தது. சீசரின் 63 தங்க நாணயங்கள் மதுரை மாவட்டம் பழனி வட்டம் கலையம்புத்தூரில் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகப் பழமையான கல்வெட்டுகள், மதுரைக்கடுத்த திருப்பரங்குன்றம், அழகர் மலை, சித்தர் மலை ஆகிய இடங்களில் உள்ளன.

சங்க இலக்கியங்களும் மதுரையின் புகழைப் பாடுகின்றன. சங்கம் மருவிய காவியமான சிலம்பும் மதுரையின் புகழை இசைக்கிறது.

பேரரசுகளின் தலைநகரமாகவும், தொன்மைமிக்க பண்பாட்டின் நிலைக்களனாகவும் மட்டும் மதுரை விளங்கவில்லை. மாறாகத் தமிழன்னையின்

அரசு கட்டிலாகவும் மதுரை தொடர்ந்து விளங்கி வருவதுதான் அதன் பெருமைகளில் எல்லாம் தலையாய பெருமையாகும்.

18 நூற்றாண்டுகாலமாகப் பாண்டியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அரசியல் தலைநகரமாக விளங்கிய மதுரை கி.பி. 1801ஆம் ஆண்டில் வெள்ளையர் ஆட்சிக்குட்பட்டு அரசியல் தலைநகரம் என்ற நிலையை இழந்ததே தவிர, தமிழ்ப் பண்பாட்டுத் தலைநகரம் என்ற பெருமையுடன் இன்றளவும் திகழ்கிறது.

தமிழோடு மதுரையையும் சேர்த்தே இலக்கியங்கள் பாடுகின்றன. மதுரையில் தமிழ் வளர்ந்தது. தமிழ் மணம் கமழ மதுரை திகழ்ந்தது.

தாமரை போல அமைந்தது மதுரை நகரம். தமிழில் தோய்ந்த அந் நகர மக்கள் அம் மலரின் தாதுக்களைப் போன்றவர்கள். அந்த மகரந்தத் தூளை அள்ளியுண்ண வருகின்ற பறவைகளைப் போன்றவர்கள் தமிழ்ப் புலவர்கள். இத்தகைய பெருமை வாய்ந்த மதுரை நகர மக்கள் கோழி கூவி எழுவதில்லை. சேரர் தலைநகரமான வஞ்சி வாழ் மக்களும், சோழர் தலைநகர மக்களும்தான் கோழி கூவி எழுபவர்கள். ஆனால் கூடல் மாநகர மக்களோ நான்மறைகளும் முழங்கப்படும் ஓசை கேட்டு எழுபவர்கள். இலக்கியக் குரல் கேட்டு இலக்கியத் துயில் எழும் இலக்கிய மக்களாக வாழ்ந்தார்கள் மதுரை மக்கள் என்பதைப் பரிபாடல் கீழ்வருமாறு சித்திரிக்கின்றது:

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவம் இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண், பறவை அனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே.''

மதுரையில் தமிழாராய்ச்சி தொன்றுதொட்டு நடைபெற்று வந்திருக்கின்றது என்பதைத் திருக்கோவையார் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறது:

''உயர்பதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ''

'உயர்ந்த பதிலால் சூழப்பட்ட கூடல் மாநகரில் இனிய தமிழ் ஆராயப்படுகிற இடத்தில் நுழைந்து அந்நாளோ' என, தன் தோழனை ஒருவன் கேட்கிறான். இதிலிருந்து அந்நாளிலேயே தமிழ் ஆய்வுக் கூடம் அதாவது தமிழ்ச் சங்கம் மதுரையிலிருந்தது என்பது புலனாகிறது.

புறநானூறும் இதை வலியுறுத்துகிறது.

''தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே.''

''தமிழ் நிறைந்த மதுரையை ஆளுகின்ற அரசே'' என மன்னனைப் புலவர் விளிக்கிறார்.

சிலப்பதிகாரம் பாடவந்த இளங்கோவடிகள் தாம் சேர நாட்டினர் என்பதையே மறந்து ஒரு படி மேலாகப் போய், பின்வருமாறு பாடுகிறார்:

''மலயத் தோங்கி மதுரையில் வளர்ந்து
புலவர் நாவில் பொருந்திய தென்றல்.''

பொதிகை மலையில் பிறந்து மதுரையில் வளர்ந்து புலவர்கள் நாவில் பொருந்திய தென்றலாகத் தமிழை வர்ணிக்கிறார். இன்னொரு இடத்தில் ''தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை'' என்கிறார். தமிழ் எங்கே பிறந்திருந்தாலும் அதை வளர்த்த பெருமை மதுரைக்கே உண்டு என இளங்கோவடிகள் கூறியதைவிட வேறு யார் சிறப்பாகக் கூற முடியும்.

''தென்தமிழ் மதுரை''

என மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனாரும்,

''கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை''

'தமிழ்நிலைக்களனாக விளங்கிய மதுரை' எனச் சிறுபாணாற்றுப்படையும்,

''தமிழ்வையைத் தண்ணம்புனல்''

எனப் பரிபாடலும்,

''தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மதுரை'' என மதுரைக்காஞ்சியும் புகழுகின்றன.

முத்தமிழையும் தந்த பழமையான ஊர் மதுரை எனத் திருத்தொண்டர் புராணம் பாடுகிறது.

''சால்பாய மும்மைத் தமிழ் நல்கிய அங்கண் மூதூர்''

''தண்பணையுடுத்த தமிழ்ப் பெருங்கூடல்'' எனப் பண்டார மும்மணிக்கோவையும்,

''தடம்பணையுடுத்த தண்டமிழ்க்கூடல்'' என மதுரைக் கலம்பகமும்,

''தெய்வத்தமிழ்க்கூடல்'' என மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும்,

''தானின்றுலகம் தழையத் தழைத்த தமிழ் மதுரை'' என மீனாட்சி இரட்டைமணிமாலையும்,

''சிறந்த தண்டமிழ் ஆலவாய்'' எனத் திருவிளையாடற் புராணமும் தமிழையும் மதுரையையும் இணைத்தே பாடுகின்றன.

மதுரையை நிலைக்களனாகக் கொண்டு தமிழ் வளர்ந்தது என்பதைச் சங்க இலக்கியங்களும் பின்னர்த் தோன்றிய இலக்கியங்களும் பறையறைந்து தெரிவிக்கின்றன.

அதனாலேதான் தமிழ்ப்புலமை மிக்கவர்கள் மதுரையில் தமது புலமையை அரங்கேற்றினார்கள். புலவர்கள் பலரும் மதுரையை இருப்பிடமாகக் கொள்வதிலும் தமது பெயருக்கு முன்னால் மதுரை என்பதை அடைமொழியாகச் சூட்டிக் கொள்வதிலும் அளவிலாத பெருமைகொண்டிருந்தனர்.

இறைவனே ஆனாலும், நெற்றிக் கண்ணையே திறந்தாலும் குற்றம் குற்றமே எனக் கூறி, தமிழின் மானங்காத்த நக்கீரன் பிறந்து வாழ்ந்த ஊர் மதுரை. எனவேதான் அவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என அழைக்கப்பட்டார்.

அதைப்போலவே மதுரை என்ற அடைமொழியைத் தமது பெயருக்கு முன் சேர்த்துக்கொண்ட சங்ககாலப் புலவர்கள் வரிசை இது.

மதுரைப் பெருமருதிளநாகனார்.

மதுரைக் கணக்காயனார்.

மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார்.

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

மதுரைத் தமிழக்கூத்தனார்.

மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்.

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்.

மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனார்.

மதுரை வேளாசான்.

நாவுக்கரசர், சம்பந்தர், மணிவாசகர் மற்றும் பல நாயன்மார்களும் ஆழ்வார்களும் இன்தமிழால் இறைவனைத் தொழுத ஊர் மதுரை. நாயக்க மன்னர்கள் காலத்தில் வாழ்ந்த தமிழ் வளர்த்த புலவர்கள் பலர் உண்டு.

''புலவருக்கு ஔடதமான 'நைடதம்', 'வெற்றி வேற்கை', 'கூர்மபுராணம்' போன்ற பல நூற்களை இயற்றிய கொற்கை மன்னன் அதிவீரராம பாண்டியன், 'பிரமோத்திர காண்டம்' இயற்றிய தென்காசி வேந்தன் வரதுங்கராமபாண்டியன் ஆகியோர் மதுரையை ஆண்ட முதல் நாயக்க மன்னன் விசுவநாத நாயக்கரின் குடை நிழலில் (1529-1564) தமிழ் வளர்த்தனர்.

வீரப்ப நாயக்கரின் (1572-1595) காலத்தில் அவரின் அவைக்களப் புலவராக வாழ்ந்த அநதாரிப் புலவர் 'சுந்தர பாண்டியம்' என்ற நூலை இயற்றினார்.

திருமலை நாயக்கர் காலத்தில் (1623-1659) செந்தமிழ்ப் புலவர்கள் பலர் மதுரையில் தமிழ்த் தொண்டு புரிந்தனர்.

அமிழ்தினுமினிய 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்', 'கந்தர் கலிவெண்பா', 'மீனாட்சியம்மை குறம்', 'நீதிநெறிவிளக்கம்' ஆகியவற்றைப் பாடிய குமரகுருபரர் மதுரையில் தமிழ்த்தொண்டும் தெய்வத்தொண்டும் ஆற்றினார்.

கிறித்துவப் பாதிரியான இராபர்ட்-டி-நோபிலி திருமலை நாயக்கரின் ஆதரவுடன் கிறித்துவ உரைநடை நூல்களை இயற்றினார்.

வீரமாமுனிவருக்குத் தமிழ் கற்றுத் தந்த சுப்ரதீபக்கவிராயர் சுவைமிக்க 'கூளப்ப நாயக்கன் காதல்', 'விறலிவிடுதூது' ஆகியவற்றைப் படைத்தார்.

அழகிய மணவாளதாசர் எனும் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் 'அஷ்டபிரபந்தங்களையும்' பாடினார்.

சொக்கநாத நாயக்கர் காலத்தில் (1659-1682) வாழ்ந்த இசுலாமியப் பெரும் கவிஞர் உமறுப் புலவர் 'சீறாப் புராணம்', 'முதுமொழிமாலை' ஆகியவற்றை இயற்றினார்.

விஜயரங்க சொக்கநாதர் காலத்தில் (1706-1802) தாயுமானவர் தெய்வத் தமிழ்ப் பாக்களைப் பாடினார்.

தெள்ளுதமிழ் 'குற்றாலக் குறவஞ்சி' இயற்றிய திரிகூட ராசப்பக் கவிராயர், 'அகராதி நிகண்டு' பாடிய இரேவணச்சித்தர், இறைவனின் திருவிளையாடலை இனிய தமிழ்ப் பாக்களால் பாடிய பரஞ்சோதி முனிவர், 'அருணாசல புராணம்' பாடிய எல்லப்பபூபதிப் புலவர், 'பிரபுலிங்க லீலை' பாடிய சிவப்பிரகாசர் ஆகியோர் மதுரை மண்ணில் தமிழை வளர்த்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் தமிழ்க் கவிஞன் சுப்பிரமணிய பாரதி மதுரை வந்து ஆசிரியராகப் பணியாற்றி, தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகமானான். தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிர் கொடுத்த சங்கரதாஸ் சுவாமிகளும் மதுரையில் இருந்து நாடகத் தமிழை வளர்த்தார்.

மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தோடு தொடர்பு கொண்டு நற்றமிழ் வளர்த்த வீரராகவய்யங்கார், அரசஞ் சண்முகனார், பகாலித்துவான்

ரா. இராகவய்யங்கார், மு. இராகவய்யங்கார், பி.டி. சீனிவாசய்யங்கார், நாராயணய்யங்கார் ஆகியோரும் டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார். ஆ. கார்மேகக் கோனார், திருக்குறள் அட்டாவதானி, தி. ப. சுப்பிரமணியதாஸ், டாக்டர் மா. இராச மாணிக்கனார், ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை, அ. கி. பரந்தாமனார், டாக்டர் அ. சிதம்பர நாதனார் ஆகியோரும் மதுரையில் இருந்து ஆற்றிய தமிழ்த்தொண்டு அளவிடற்கரியது. அதைப் போலவே மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்களாக வீற்றிருந்த டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார் ஆகியோர் நிலையான தமிழ்ப்பணிகள் ஆற்றினர்.

மதுரையில் இருந்து தமிழ்த் தொண்டாற்றிய புலவர் பெருமக்களைக் கண்டோம். இனி, மதுரையில் தமிழ் வளர்த்த தமிழ் மன்றங்களின் வரலாற்றினையும், மதுரையில் நடைபெற்ற தமிழ் விழாக்களின் சிறப்பினையும் காண்போம்.

தமிழ்ச் சங்கம்

மூவேந்தருள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கு மட்டுமே உண்டு. தொன்றுதொட்டே மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதற்கு எண்ணற்ற இலக்கிய ஆதாரங்கள் உள்ளன.

கடல்கொண்ட குமரி நாட்டில் தென் மதுரையில் முதலாவது தமிழ்ச் சங்கத்தை காய்சினவழுதி என்னும் பாண்டிய மன்னன் நிறுவினான். இச் சங்கத்தில் அகத்தியனார், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலிய நூற்றுக்கணக்கான புலவர்கள் இருந்து எண்ணிறந்த நூற்களை வெளியிட்டனர். இத் தென்மதுரையைக் கடல்கொண்டபின் கபாடபுரம் என்ற இடத்தைத் தலைநகராக்கி அங்கு இரண்டாம் தமிழ்ச் சங்கத்தைப் பாண்டியன் கடுங்கோன் நிறுவினான். தொல்காப்பியர் முதலான புலவர்கள் அதில் வீற்றிருந்து தமிழ் வளர்த்தனர்.

கபாடபுரத்தையும் கடல் கொள்ளை கொள்ள, தற்போதுள்ள மதுரை நகரில் மூன்றாம் தமிழ்ச் சங்கத்தைப் பாண்டியன் முடத்திருமாறன் நிறுவினான்.

முச்சங்கங்களைப் பற்றி இறையனார் களவியல் பாயிர உரையிலும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் உரைகளிலும், சங்க இலக்கியங்கள் சிலவற்றின் உரைகளிலும் குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

புலவர் குழாமைத் தொகை, சங்கம், கூடல், கழகம் என்ற பெயர்களால் வழங்கினர் என்பதற்குக் கீழே கண்டவை சான்று பகரும்.

''மதுரைத் தொகையாக்கினான்'' (தேவாரம்)
''மதுரை நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி''
(தேவாரம்)
''கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்''
(திருக்கோவையார்)
''கந்தனையனையவர் கலைதெறி கழகம்''
(கம்பராமாயணம்)

மதுரையில் சங்கம் இருந்தது என்பதற்கு அடுக்கடுக்கான இலக்கியச் சான்றுகள் உள்ளன. அவற்றுள் சில:

'தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்' பாடிய புறப்பாடலில் மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்டு இயங்கிய தமிழ்ச் சங்கத்தைக் குறிப்பிடுகிறான்.

''ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமோடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை.''

அதைப்போலவே கலித்தொகை பின்வருமாறு கூறுகிறது.

''முதுமொழி நீராப் புலன்நா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர்''

'சான்றோரின் செய்யுட்களைத் தம் சொல்லை வளர்க்கும் நீராகக் கொண்டு, அறிவினையுடைய நாவாகிய ஏரினாலே உழுகின்ற புலவர்களின் புதிய கவிகளை உண்ணும் மதில் சூழ்ந்த மதுரை'

என்பது அக் கலித்தொகை அடிகளின் பொருளாம்.

தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார், ''நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து'' எனக் குறிப்பிடுவதால் பாண்டியன் அவையில் சங்கப் புலவர் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றம் நடந்தது எனலாம்.

பரிபாடல் மதுரையைக் குறிப்பிடும்போது ''புலத்தினும் போரிலும் போர்தோலாக்கூடல்'' என்று கூறுகிறது. புலமைவாதத்திலும் போர்த்திறத்திலும் பிறரால் வெல்லப்படாத கூடல் என்பது இதன் பொருளாகும்.

அப்பர் பெருமானும் தம் திருவாயால் மதுரையில் சங்கமிருந்ததை உறுதிப்படுத்துகிறார்.

''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்''

ஏழை தருமிக்குப் பொற்கிழி தர, சுந்தரக் கடவுளே சங்கமேறியதை நாவுக்கரசர் குறிப்பிடுகிறார். திருப்பாவை 'சங்கத்தமிழ்' எனவும், 'சங்கமுகத்தத்தமிழ்' எனவும் பெரிய திருமொழியும் குறிப்பிடுகின்றன.

கவிச்சக்கரவர்த்தி கம்பனும் அகத்தியர் தலைமையில் இயங்கிய தமிழ்ச் சங்கத்தைக் குறிப்பிடுகிறான்.

''தென்றமிழ்நாட் டகன்பொதியில்
திருமுனிவன் தமிழ்ச்சங்கஞ் சேர்கிற்பீரேல்''
(நாடவிட்ட படலம், 30)

பாண்டியன் மெய்க்கீர்த்தியைப் பாடவந்த சின்னமனூர்ச் செப்பேடு 'மகாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என மதுரையிலிருந்த சங்கத்தைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

மதுரையில் தமிழ்ச்சங்கம் இருந்தது; அதன்மூலம் தமிழ் வளர்ந்தது என்பது நிலையான உண்மையாகும்.

மூன்றாம் தமிழ்ச் சங்கம் மறைந்தபின் நெடுங்காலமாக அதனையொத்த ஒரு சங்கம் தோன்றவில்லை. 1901ஆம் ஆண்டு மே 24ஆம் நாள் இராமநாதபுரம் சேதுபதி மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த திரு. பாண்டித்துரைத் தேவர் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார். திரு. பாஸ்கர சேதுபதியவர்களும் இம் முயற்சிக்கு உறுதுணையாக இருந்தார். இச் சங்கத்தின் அங்கங்களாகச் செந்தமிழ்க் கல்லூரி, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சித் துறை, அச்சகம் முதலியன தோற்றுவிக்கப்பட்டன.

1903ஆம் ஆண்டு முதல் 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழ் வெளியிடப்பெற்றது.

இச் சங்கம் தோன்றுவதற்கு முன்னர்த் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழை யார் வேண்டுமானாலும் கற்பிக்கலாம் என்ற நிலை இருந்தது. தமிழை முறையாகக் கற்றவர்கள் இல்லாத குறை நிலவியது. தமிழ்ச் சங்கத்தில் ஐந்து ஆண்டுகள் முறையான தமிழ்க் கல்வி அளிக்கப்பட்டு, தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்குப் 'பண்டிதர்' (புலவர்) பட்டம் வழங்கப்பெற்றது.

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. கார்மேகக் கோனார் போன்ற பெரும் புலவர்கள் இங்குப் படித்த மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

சங்கம் சேகரித்த ஏடுகள் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் உதவின. சி. வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதய்யர், எஸ். வையாபுரிப் பிள்ளை, ரா. இராகவையங்கார் போன்ற பேரறிஞர்களுக்கும், சென்னை, அண்ணாமலை, கேரளப் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சித் துறைகளுக்கும் சங்க ஏடுகள் மிகவும் பயன் தந்தன. 'செந்தமிழ்' இதழ்த் தொகுதிகள் தமிழ் ஆராய்ச்சியாளருக்கு ஒரு புகலிடமாக இன்றளவும் விளங்கிவருகிறது.

ஆசிரியர் மறைமலையடிகள், சுவாமி விபுலானந்தர் போன்ற பேரறிஞர்கள் பலர் கூடித் தயாரித்த தமிழ்ச் சொல்லகராதியைத் தமிழ்ச் சங்கம் மூன்று பாகங்களாக வெளியிட்டது. மேலும் அபிதான சிந்தாமணி, பன்னூற்றிரட்டு, வைத்தியசார சங்கிரகம் போன்ற பெரு நூல்களையும் 150-க்கும் மேற்பட்ட சிறு நூல்களையும் சங்கம் பதிப்பித்தது.

திருவள்ளுவர் கழகம்

மதுரையில் தமிழ்த்தொண்டு புரியும் மற்றொரு அமைப்பு, திருவள்ளுவர் கழகமாகும். தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் இக் கழகத்தினைத் திருக்குறள் அட்டாவதானி திரு. தி. ப. சுப்பிரமணிய தாஸ் தோற்றுவித்தார்.

நான்காம் தமிழ்ச்சங்கம் தோன்றி நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் 1941ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் நாள் இக் கழகம் தமிழவேள் திரு. பி. டி. இராசன் தலைமையில் தோற்றுவிக்கப்பெற்றது. தென்காசியில் இருந்த திரு. தி.ப. சுப்பிரமணியதாஸ் அவர்களை மதுரைக்கு வரவழைத்து இக் கழகத்தைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவர் மதுரை விவேகானந்தா அச்சக உரிமையாளர் திரு. கி. பழநியப்பன் ஆவார். இவர் பல்லாண்டு காலம் இக் கழகத்தின் தலைவராக இருந்து இதன் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார்; இன்று அதன் புரவலராக விளங்குகிறார்.

திருக்குறள் வகுப்புகள், குறள் கருத்தரங்குகள், இலக்கிய மாநாடுகள், நூல்கள் அரங்கேற்றம் ஆகிய பல்வேறு தமிழ்ப் பணிகளைக் கடந்த நாற்பதாண்டு காலமாக இக் கழகம் செய்துவருகிறது. கழக ஆசிரியராகத் திரு. கந்தசாமிப் புலவர் தொண்டாற்றி வருகிறார்.

மீனாட்சி திருக்கோவிலுக்குள்ளேயே இக் கழகம் இருந்து தொண்டாற்றி வருகிறது.

ஆண்டுதோறும் பல்வேறு தமிழ் விழாக்கள், இலக்கியக் கருத்தரங்குகள், கவியரங்கங்கள், இலக்கியப் போட்டிகள் முதலானவற்றை மதுரைத் திருவள்ளுவர் கழகம் நடத்திச் சிறப்புறத் தமிழ்த் தொண்டாற்றி வருகிறது. மாணவர்களுக்கான திருக்குறள் தேர்வுகளை நடத்திச் சான்றிதழ்களும் அளித்து வருகிறது.

மதுரை கண்ட தமிழ் விழாக்கள்

நான்மாடக் கூடல் நன்னகராம் மதுரை தமிழின் நிலைக்களனாக விளங்கிவந்துள்ளது.

தமிழ்மொழி வரலாற்றில் மதுரைக்கு முதன்மையான இடம் என்றென்றும் உண்டு. ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியரும், தமிழ்மறை தந்த திருவள்ளுவரும் தமது நூல்களை அரங்கேற்றத் தேர்ந்தெடுத்த இடம் மதுரையேயாகும்.

காந்தியடிகள் ஆண்டிக்கோலம் பூணத் தேர்ந்தெடுத்த இடம் தமிழ் மதுரையே.

மொழி, சமயம், அரசியல் ஆகிய பல்வேறு துறைகளிலும் முதன்மை பெற்றோர் மதுரையிலேதான்

அதைப் பெற்றார்கள். எனவேதான் தமிழுக்கு விழாக்காண நினைத்தோர் பலரும் மதுரையில் நடத்தினால்தான் தமிழ்கூறும் நல்லுலகின் அங்கீகாரத்தினைப் பெறமுடியும் என நினைத்து மதுரையிலே அவ் விழாக்களை நடத்தினார்கள்.

தமிழ்ச்சங்கப் பொன் விழா

நான்காம் தமிழ்ச்சங்கத்தின் பொன் விழா 1956 மே மாதம் 30 முதல் ஜூன் 5ஆம் தேதி முடிய ஏழு நாள்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

திருவள்ளுவர் கழக வெள்ளி விழா

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் வெள்ளி விழா 1967ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 முதல் 10 வரை மாபெரும் விழாவாக நடத்தப்பெற்றது.

தமிழ் விழாக்கள் பல கண்ட மதுரை அவற்றிற்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டினைக் கொண்டாடுகிறது.

தமிழர் பண்பாட்டின் தொன்மையையும், சாவா மூவாத் தமிழ்மொழியின் சீரிளமைத் திறங் குன்றாப் பெருமையையும் கட்டிக் காத்து வரும் மதுரையில் இவ்விழா நடப்பது எல்லா வகையிலும் சிறப்புடையதாகும்.



தொன்மை தொடங்கி இந்நாள் வரையும்
தென்னக நுதலின் தனிநலப் பொட்டுஅது;
பாண்டியர் முதலாய் ஆண்டவர் எவர்க்கும்
வேண்டிய தலைநகர் வரலாற்று விளக்கு;
சிகர உயர்வினர் நகர்அமைப் பிற்குச்
சிறப்பின் கரத்து இறவாச் சான்றிதழ்;
வடக்கே தன்பெயர் உடைய ஒருநகர்
பெருமையின் நிழலில் இருத்திய ஒளிக்கொடி;
முத்தமிழ்ப் பயிரின் கொத்துப் புகழ்மணம்
இத்தரை பரப்பிய சங்கத் தொட்டில்;
தமிழ்த்தாய் மடியில் அமிழ்தக் குறள்மொழிக்
குழவி தவழ்ந்த பழைமை முற்றம்;
மணிப்பரி பாடல் மதுரைக் காஞ்சி
அணிகளைக் கூடிய அறிவின் மணவறை;
சிலம்பின் ஒருபரல் குலம்வளர் தென்னவன்
கலங்கச் செய்த காட்சிப் பதிவறை;
அயலவர் நூலிலும் பயிலிடம் பெற்ற
கயல்கொடிக் கூட்டப் பழங்கவின் கூடல்;
பெண்மையின் உயர்வை நுண்ணிதின் பேணிய
விண்ணுயர் கோபுர இறைமையின் கருவறை;
நீல மேனிக் கோலப் பெரியோன்
திருவிளை யாடலின் நாடக அரங்கு;
தன்தொல் தலையில் பல்பெயர் பூக்களை
முன்பே சூடிய மாண்பின் திருஇடம்;
முதலிரு எழுத்தால் மதுவைச் சுட்டி
இடைஒழி நிலையில் மடமான் காட்டிப்
பின்இரு எழுத்தில் துரையைத் தோற்றித்
தமிழ்ப்பண் பாடும் தனிப்பண் பாட்டு
உலகத் தலைநகர் நலமுடன் உயர்கவே!

மலையமான்

பாரதியும் தமிழிசையும்

[பாரதியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட இருப்பதையொட்டி அவர் நினைவாக அவர் எழுதிய இக் கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது.]

இரசஞான மில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து ஸங்கீத வித்வான்களிலே பலர் 'ஸங்கீதத்திற்கு நவரஸங்களே உயிர்' என்பதை அறியாதவர்.

முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக ஸங்கதிகளுடன் பாடுவோரே 'முதல்தர வித்வான்கள்'. இந்தக் கீர்த்தனங்களெல்லாம் ஸம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே, முக்காலே மும்மாகாணி 'வித்வான்'களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு 'ரஸம்' தெரிய நியாயம் இல்லை.

நானும் பிறந்தது முதல் இன்றுவரை பார்த்துக்கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராமநீ ஸமான மெவரு', 'மரியாத காதுரா', 'வரமு லொஸகி'...... ஐயையோ, ஐயையோ, ஒரே கதை.

எந்த ஜில்லாவுக்குப் போ, எந்த கிராமத்திற்குப் போ, எந்த 'வித்வான்' வந்தாலும், இதே கதைதான். தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால், திரும்பத் திரும்ப திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

'பூர்விக மஹான்களுடைய பாட்டுக்களை மறந்து போய்விட வேண்டும்' என்பது என்னுடைய கக்ஷியன்று. அவற்றை அர்த்தத்துடன் பாட வேண்டும். பதங்களைப் பிழையாக உச்சரிக்கக் கூடாது. பதங்களை வாய்விட்டுத் தெளிவாகச் சொல்ல வேண்டும். விழுங்கிவிடக்கூடாது. பத்து முப்பது கீர்த்தனங்களையே ஓயாமற் பாடி ஸங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக் கூடாது.

புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டுவரவேண்டும். இப்போது ஸங்கீத வித்வான்களிலே தலைமைப்பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயலவேண்டும். நவரஸங்களின் தன்மைகளையும், இன்னின்ன ராகங்களை இன்னின்ன விதங்களிலே பாடினால், இன்னின்ன ரஸங்கள் உண்டாகும் என்பதையும் கற்றுத் தெரிந்துகொள்ளுதல் அவசியம்.

'பூர்வ காலத்து மஹான்களுக்குத் தெய்வப் பிரஸாதமிருந்தது. எங்களுக்கில்லையே. என்ன செய்வோம்?' என்று புதிய வித்வான்கள் புதிய கீர்த்தனங்கள் அமைப்பதிலே பின்வாங்கக் கூடாது. தெய்வங்கள் இறந்துபோகவில்லை. இப்போதும் அவற்றை உபாஸனை செய்து அவற்றின் அருள்

பெறலாம். தெய்வப் பிரஸாதத்தை ஒருவன் பக்தியாலும், ஜீவ தயையாலும், நேர்மையாலும், உண்மையாலும், இடைவிடாத உழைப்பினாலும் ஸம்பாதிக்க முடியும்.

'நாட்டிலே ஸங்கீதத்திற்குச் சரியான போஷணை செய்யும் ராஜாக்களும பிரபுக்களும் இல்லை. எங்களுக்கு ஜீவனமே கஷ்டமாயிருககிறது. மனக்கஷ்டம் இல்லாமல் இருந்தா லன்றோ ரஸஞானத்தை வளர்த்துக்கொண்டு போகலாம். சில வருஷங்களுக்குள்ளே சில கீர்த்தனங்களை வரப்படுத்திக் கொண்டு ஜீவனத்திற்கு வழிதேட வேண்டிய ஸ்திதி ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்யலாம்?' என்று நினைத்து மனமுடைந்து போக வேண்டாம்.

இப்போது உலக முழுவதிலுமே ராஜாக்களையும் பிரபுக்களையும் நம்பி வித்தை பழகும் காலம்போய் விட்டது. பொது ஜனங்களை நம்பவேண்டும். இனிமேல் கலைகளுக்கெல்லாம் போஷணையும் ஆதரவும் பொது ஜனங்களிடமிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்வான்களுடைய கடமை. பிறகு, நல்ல போஷணை கிடைக்கும். ஒரு பிரபு மாதம் ரூபாய் 100 கொடுப்பான். ஊர் சேர்ந்தால் தலைக்குக் கால் ரூபாயாக வசூல் பண்ணி மாதம் 1,000 ரூபாய் கொடுக்கும். ஊரையே யஜமானனாகக் கொள்ள வேண்டும்.

ஊர்தான் ராஜா. இந்த ராஜாவுக்கு ஆரம்பத்திலே கொஞ்சம் ஞானம் அளித்துப் பழக்கங் கொடுத்தால், வித்தைகளுக்கு எவ்விதமான குறைவும் ஏற்படாது. நவரஸங்களும் சேர வேண்டும். கருணா ரஸமும (அதாவது சோக ரஸமும்) சிருங்கார ரஸமுந்தான் நமது தேசத்தில் நடை பெறுகின்றன. மற்ற வீரம், கோபம (ரௌத்ரம்), வியப்பு, வெறுப்பு, அச்சம், நகைப்பு, சாந்தம் என்ற ரஸங்களின் விலாஸம் பாட்டிலே காணப்படவில்லை. நல்ல பாட்டுப் பாடினால் நல்ல மதிப்புத் தானாகவே வரும். அதிலிருந்து நல்ல வரும்படி ஏற்படும்.

திருஷ்டாந்தமாக, ஹாஸ்ய ரஸம் தோன்றும்படி ஒரு ராகத்தை விஸ்தரிக்கும்போது, அதிலே அர்த்தச் சேர்க்கையில்லாவிடத்தும் ஜனங்கள் கடகட வென்று சிரிக்க வேண்டும்.

ரௌத்ர ரஸம் தோன்றும்படி பாடினால், அதைக் கேட்கும்போது, ஜனங்களுக்கு மீசை துடிக்கவேண்டும்; கண்கள் சிவக்க வேண்டும்.

வீர ரஸமுள்ள பாட்டை ஒரு வித்வான் பாடும் போது, ஜனங்களெல்லாம் தம்மையறியாமல் முதுகு நிமிர்ந்து தலைதூக்கி உட்கார வேண்டும். அவர்கள் விழியிலே வீரப் பார்வையுண்டாக வேண்டும். அப்போதுதான் பாட்டு ஸபலமாகும்.

பொருளிலும் ஓசையிலும் 'ரஸம்' கலக்காத பாட்டு இனிமேல் தமிழ் நாட்டிலேயே வழங்கலாகாது.

முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் இந்த மூன்று பெயருடைய கீர்த்தனைகளைத்தான் வழக்கத்தில் அதிகமாய்ப் பாடுகிறார்கள். இவற்றுள்ளே, தீக்ஷிதரின் கீர்த்தனைகள் பச்சை ஸம்ஸ்கிருத பாஷையிலே எழுதப் பட்டவை. இவை கங்கா நதியைப்போலே கம்பீர நடையும் பெருந்தன்மையும் உடையன. வேறு பல நல்ல லக்ஷணங்களும் இருந்தபோதிலும், ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருப்பதால் இவை நமது நாட்டுப் பொது ஜனங்கள் ரஸானுபவத்துடன் பாடுவதற்குப் பயன்பட மாட்டா.

தியாகையர் தெய்வ வரம் பெற்றவர். தியாகையர் ரஸக் கடல். கர்நாடக ஸங்கீதம் இப்போது உயிர் தரித்திருப்பதற்கு அவரே காரணம். பூர்வ காலத்து ஞானிகளைப் போலே, இவர் இஷ்ட தேவதைக்கு ஆத்ம யக்ஞம் செய்து, தான் அற்று, வித்தை வடிவாகி விளங்கினார். இவருடைய பாட்டுக்களை இக்காலத்துப் பாடகர் அதிக 'ஸங்கதி'களாலும் ரஸநாசத்தாலும், சொற்களைத் திரித்தல், விழுங்குதல் முதலிய செய்கைகளாலும் இயன்ற வரை ஆபாஸமாக்கிவிட்ட போதிலும், இன்னும் அவற்றிலே பழைய ஒளி நிற்கத்தான் செய்கிறது. குப்பையிலே கிடந்து மாசேறி ஒளி மங்கிப் போயிருந்தபோதிலும், மாணிக்கத்தின் குணம் ரத்னப்பரீக்ஷைக்காரனுக்குத் தெரியாதா? அதுபோலவே, ரஸ உண்மை தெரிந்தோர் இத்தனை குழப்பத்துக்கிடையே தியாகையருடைய தொழிலின் ஸ்வரூபத்தை நன்கு கண்டு பிடித்துக் கொள்ள முடியும். கீர்த்தனத்தில் ராக தாளங்களை இசைத்திருக்கிற மாதிரியிலேயே அர்த்தம் தொனிக்க வேண்டும். அதைத்தான் ரஸச் சேர்க்கை என்று சொல்லுகிறோம். இதிலே தியாகையர் மிகவும் சிறப்புக் கொண்டவர்.

திருஷ்டாந்தமாக, 'சக்கனி ராஜமார்க்கமு' என்ற கீர்த்தனத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதிக ஸங்கதிகளும், பின்னல்களும் இல்லாமல் இதன் பல்லவியைச் சுத்தமாகப் பாடிப் பாருங்கள். 'நல்ல ராஜமார்க்கம் இருக்கும்போது சந்துகளில் ஏன் சுற்றுகிறாய், மனதே?' என்ற அர்த்தம் அந்த இசையிலே அகப்படும்.

'மாருபல்க குன்னாவேமி' (ஏன் மறுமொழி சொல்லாமல் இருக்கிறாய்?) என்ற கீர்த்தனத்தின் பல்லவியைப் பாடிப் பாருங்கள். அந்த அர்த்தம் இசையிலே தொனிக்கும்.

'நன்னு ப்ரோவ நீகிந்த தாமஸமா' (என்னைக் காக்க உனக்கு இத்தனை தாமஸமா?) என்ற பல்லவி எடுத்தவுடனேயே அர்த்தம் பளீரென்று வீசும்.

இப்படியே எல்லாக் கீர்த்தனங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி ஏற்படுத்தவேண்டும் என்று தியாகையர் சிரமப்பட்டு வேலை செய்யவில்லை. நெஞ்சிலே உண்மையிருந்தால், ஸங்கீதம் இயற்கையிலே இவ்விதமாகப் பிறக்கும்.

பிற்காலத்தில், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலானவர்களின் பாட்டிலே இந்த லக்ஷணம் இல்லை. 'வரமுலொஸகி' என்ற பாட்டை எடுத்தீர்களானால், இசைக்கும் பொருளுக்கும் ஸம்பந்தமே இல்லை என்பது விளங்கும். சொற்கள், 'வரங்கொடுத்துக் காப்பது உனக்கு அரிதா?' என்று கேட்கின்றன. இசை சண்டைத் தாளம் போடுகிறது. இது நிற்க,

வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்துகொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுக்களை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி ஸங்கீத ஞானத்தை இழந்துபோகும்படி நேரிடும்.

மேலும், 'பாட்டுக்குத் தாளமேயொழிய தாளத்திற்குப் பாட்டில்லை' என்ற விஷயத்தைப் பாடுவோர் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். சில விதக் கூத்துக்களிலே, தாளத்திற்குப் பாட்டுப் பாடுதல் பொருத்தம். அங்கேகூட, முழுவதும் தாளநயத்தையே கருதி இசை நயத்தை நாசம் செய்துவிடக்கூடாது. அப்படியிருக்க, 'பாட்டுக் கச்சேரி' என்று பெயர் வைத்துக்கொண்டு அங்கே இசையின்பங்களைக் கொன்று தாள முழக்கத்தைப் பிரதானமாக்குதல் தகாது. அதிலும் கீர்த்தனங்களைப் பாடும்போது இசையின்பங்களைக் காட்டுதல் முதல் காரியமாகவும், தாளத்தை உபகரணமாகவும் கொள்ளவேண்டும்.

சுமார் 12 வருஷங்களுக்கு முன்பு நான் இரண்டு மூன்று வருஷம் ஸ்ரீகாசியில் வாஸஞ் செய்தேன். அங்கே, பாட்டுக்கச்சேரி செய்ய வரும் ஆண்களுக்கெல்லாம் நேர்த்தியான வெண்கலக்குரல் இருந்தது. பெண்களுக்கெல்லாம் தங்கக் குரல். அங்கிருந்து தென்னாட்டிற்கு வந்தேன். இங்கே, ஓரிரண்டு பேரைத் தவிர மற்றப்படி பொதுவாக வித்வான்களுக்கெல்லாம் தொண்டை சீர் கெட்டிருப்பதைப் பார்க்கும்போது, எனக்கு மிகவும் வியப்புண்டாயிற்று. ஒன்றுபோல எல்லோருக்கும் இப்படித் தொண்டை வலிமை குறைந்தும் நயங் குறைந்தும் இருப்பதன் காரணமென்ன? இதைப்பற்றிச் சில வித்வான்களிடம் கேட்டேன். ''வட நாட்டில், சர்க்கரை, பால், ரொட்டி, நெய் சாப்பிடுகிறார்கள்; புளியும் மிளகாயும் சேர்ப்பதில்லை. இங்கே புளி மிளகாய் வைத்துத் தீட்டுகிறோம். அதனாலே தான் தொண்டை கெட்டுப்போகிறது'' என்றனர். பின்னிட்டு, நான் யோசனை செய்து பார்த்ததில், 'மேற்படி காரணம் ஒரு சிறிது வாஸ்தவம்தான்' என்று தெரிந்துகொண்டேன். ஆனால், அதுவே முழுக்காரணம் அன்று. நம்மவர் தொண்டையை நேரே பழக்குவதில்லை. காட்டு வெளிகளிலே போய் கர்ஜனை செய்ய வேண்டும். நதி தீரங்கள், ஏரிக்கரை, கடற்கரைகளிலே போய்த் தொண்டையைப் பழக்க வேண்டும். சாஸ்திரப்படி ஆஹார ஸாதனம் செய்யும் வழக்கம் தென்னாட்டிலே குறைவுபட்டிருக்கிறது.

தவிரவும், உள்ளத்திலே வீரம் இருக்க வேண்டும். உள்ளத்திலே ஸத்து இல்லாதவர்களுக்கு ஒரு தொழிலும் நேரே வராது, கலைகள் நேர்ப்படுவதைப்பற்றிப் பேசவே வேண்டியதில்லை. உள்ளத்திலே தைர்யம், ஸந்தோஷம், வலிமை முதலிய சுப லக்ஷணங்கள் தமிழரைக் காட்டிலும் வட நாட்டு ஜனங்களிடம் சிறிது அதிகமாகத் தோன்றுகின்றன. முன்னெல்லாம், தமிழ் நாட்டிலேதான் இந்தக் குணங்கள் மிகவும் விசேஷமாக விளங்கின. இப்போது சில வருஷங்களாகக் குறைவுபட்டிருக்கின்றன. இந்தக் குணங்களை நமது ஜனங்களெல்லோருமே பயிற்சி செய்து கொள்ளவேண்டும். ஸங்கீத வித்வான்கள் இவற்றைப் பழக்கப்படுத்தினால்தான், அவர்கள் கண்டத்திலே உவகையும் வீரமும் பிறக்கும், பாட்டிலே களையுண்டாகும்.

—இக் கட்டுரை 1916, மே திங்கள் 3ஆம் நாள் 'சுதேசமித்திரன்' நாளிதழில் வெளியானது.

தமிழ்க் காவலர் அண்ணா

மாண்புமிகு தமிழ்நாடு வருவாய்த்துறை அமைச்சர்
எஸ். டி. சோமசுந்தரம்

அண்ணா அவர்கள் தமது தமிழ்த்தொண்டைத் தொடங்கிய நேரத்தில், தமிழ்த் தாயை அறியாமை என்னும் மாயை மறைத்திருந்தது. அன்று, தமிழ்நாட்டில் பிற மொழிகளின் ஆதிக்கம் வலுப் பெற்றிருந்தது.

ஆட்சியில் ஆங்கிலம்,
ஆலயங்களில் வடமொழி,
இசை அரங்குகளில் தெலுங்கு,
எல்லையிலே இந்தி;

இந்த நிலை கண்டு,

"மணக்க வரும் தென்றலிலே குளிரா இல்லை?
தோப்பில் நிழலா இல்லை? தணிப்பரிதாம் துன்பமிது,
தமிழகத்தின் – தமிழ்த்தெருவில், தமிழ்தான் இல்லை"

என்று மனம் வெதும்பி, அன்னைத் தமிழை அரியாசனத்தில் ஏற்றும் மாபெரும் பணியில் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார், அண்ணா.

மணிப்பிரவாள நடையே தமிழ்நடை என ஏற்றுக்கொள்ளப்பட்டு, எல்லோராலும் கையாளப் பட்டு வந்த நேரத்திலே, அண்ணா, தம் தமிழ்ப் பணியைத் தொடங்கினார்கள்.

மறைமலையடிகள், திரு. வி. க., சோமசுந்தர பாரதியார் போன்ற முதுபெரும் அறிஞர்களெல்லாம் தனித்தமிழ்ப் போரை நடத்தித் தளர்வுற்ற நேரத்தில், துணையாக வந்து நின்றவர், அண்ணா

'அக்ராசனாதிபதியின் பிரசங்கத்தைக் கேட்டுச் சந்தோஷமடைந்த ஜனங்களையே' பார்த்துக் கொண்டிருந்த நமக்கு, 'தலைவரின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த மக்களை' அறிமுகப்படுத்தியவர் அண்ணா. அவர்களால்தான், 'சந்தர்ப்பம்' — 'வாய்ப்பு' ஆயிற்று; 'சத்தியம்' — 'வாய்மை' ஆயிற்று. அவர்கள், 'மொழியை வெறும் கருவி என்று நினைக்காமல், தங்களை வழி நடத்தும் துணைவன், வழி காட்டும் தலைவன், பாடம் போதிக்கும் ஆசான், உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன்' என்று நினைத்தார்கள்.

அண்ணாவின் அடுக்குமொழி தமிழகத்தைப் புயலெனத் தாக்கிப் பொல்லாங்கை அழித்து, தமிழுக்குப் புதுப் பொலிவைத் தந்தது.

அண்ணாவின் அடுக்குமொழியைத் தம் துடுக்குத் தனத்தால் இடக்குப் பேசி, ஒடுக்கப் பார்த்தவர்களெல்லாம், கால வெள்ளத்திலே கரைந்து போனார்கள்.

ஆனால், அண்ணாவின் அடுக்குமொழி மட்டும் நிலைத்து நின்றது. காரணம், அந்த அடுக்கு மொழியிலே கருத்து ஆழமும் இருந்தது; கவிதையின் சுவையும் இருந்தது.

ஒரு கட்சியைத் துவக்கி, 20 ஆண்டுக் காலத்திற்குள், ஒரு நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி,

வரலாற்றிலேயே காண முடியாத ஒரு சாதனையை ஏற்படுத்த முடிந்ததற்குக் காரணம், அண்ணா அவர்களின் சொல்லாற்றல்தான்.

''விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்''

என்ற பொய்யாமொழியாரின் திருக்குறளைப் பொய்யா மொழியாக்கியவர், அண்ணா.

பகுத்தறிவுப் பகலவனாகத் தந்தை பெரியார் அவர்களும், முகிலைக் கிழித்து எழும் முழு நிலவாகப் பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழகத்திலே பவனி வந்தார்கள்.

பெரியார் பாமரர்களைக் கவர்ந்தார்கள்; ஏழை எளியவர்களைக் கவர்ந்தார்கள்; படித்தவர்களையும் சமுதாயத்தின் பிற அங்கங்களையும் அவர்களால் கவர முடியவில்லை.

ஆனால், அவர் தோற்ற இடத்தில் அண்ணா வென்றார்கள், பெரியாரின் பேச்சில் உள்ள சூட்டைக் குறைத்துச் சுவையைப் பெருக்கியதால்.

பெரியாருக்குச் சுவையைச் சேர்க்கத் தெரியாது என்பது அல்ல; சுவையைச் சேர்ப்பதற்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தைக் கருத்துகளைத் தோற்றுவிப்பதில் செலவழிக்க விரும்பினார், பெரியார்.

அண்ணா இருக்கிறார் சுவையோடு சொல்ல; நாம் ஏன் அதையே செய்ய வேண்டும் என்று பெரியார் எண்ணியிருக்கலாம்.

சுரங்கத்திலிருந்து கனிப் பொருள்களைத் தோண்டி எடுப்பவர் ஒருவராகவும், மண்ணையும் பொன்னையும் பிரித்தெடுப்பவர் மற்றொருவராகவும் இருந்தால்தான், அதிக அளவு பொன் சேர்க்க முடியும். அதுபோலவே, எண்ணச் சுரங்கங்களிலிருந்து, பெரியார் அவர்கள் கருத்துகளை வாரிக் கொடுத்தார்கள். அந்தக் கருத்துகளுக்கு மெருகூட்டிப் பொதுமக்களிடையே உலவ விட்டார்கள், அண்ணா.

'சொல்லின் செல்வர்' மறைந்த திரு. ஈ.வி.கே. சம்பத் அவர்களின் கருத்துக்கொப்ப, அண்ணா அரசியலில் தீவிரமாக ஈடுபடாதிருந்திருந்தால், தமிழகத்திற்கு ஒரு நோபல் பரிசு கிடைத்திருக்கும், அண்ணாவின் இலக்கியச் சேவைக்கு.

கிடைக்காமல்போனது நோபல் பரிசு; கிடைத்ததோ, திராவிட சமுதாயத்தின் வீரமிக்க எழுச்சியும் அதன் பிரதிபலிப்பாக விளங்கும் திராவிட அரசும்.

''ஒருவருக்கொருவர் மாறுபாடான கருத்து இருந்தாலும் மதிக்க வேண்டும். அப்படி மதிப்பதாலேயே ஒன்றுபட்டுவிட வேண்டும் என்பதில்லை'' என்ற கருத்துடைய அண்ணா, ஒரு சிறந்த ஜனநாயகவாதி. அவர் முன்பு, யாரும் எக் கருத்தையும் எந்த நேரத்திலும் சொல்ல முடியும். அந்தக் கருத்து, அவர் கொண்ட கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தாலும், அதை அனுமதித்துக் கூர்ந்து கேட்டு, அதற்குத் தேவையான விளக்கங்களை அவ்வப்போது தருவார்கள். மாற்றாரின் கருத்தைக் கேட்க, அவர் என்றும் மறுத்ததே கிடையாது.

''மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் தரும்'' என்ற உண்மையை ஒப்புக்கொண்ட ஓர் உண்மையான ஜனநாயகவாதி, பேரறிஞர் அண்ணா.

''ஒருவரையொருவர் கண்டவுடன் முகமலர்ச்சி, சிரமமின்றி ஏற்பட வேண்டும்; பயன் கருதி அல்ல; அர்த்தமற்று அல்ல. கண்டதும் களிப்பு — நம்மைப் போல ஒருவன் என்ற நினைப்பிலிருந்து அந்தக் களிப்பு மலர வேண்டும். அதுவே, தோழமை'' என்ற எண்ணமுடைய அண்ணாவிற்கு, குடும்பப் பாசம் என்பது அவர்தம் உள்ளத்திலே மலர்ந்தது; உதட்டிலே பிறந்தது இல்லை.

அந்தப் பாசமுடைய நெஞ்சம் பட்ட பாட்டை, பலமுறை நாம் பார்த்திருக்கிறோம்.

தலைவரின் போக்கினால், மனம் வெதும்பி, அண்ணா வெளியேறிய நேரத்தில், அவர்கள் வெளியிட்ட அறிக்கை, அந்தப் பாசத்தின் படப்பிடிப்புத்தான். அஃது ஒரு கண்ணீர்க் காவியம்.

சம்பத் அவர்களும் கவிஞர் அவர்களும் அண்ணாவை விட்டுப் பிரிந்த நேரத்தில், அவர்கள் அடைந்த சொல்லொணாத் துயரம் பாசத்தின் வெளிப்பாடு அல்லவா?

கீழவெண்மணியில், ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் உயிரோடு கொளுத்தப்பட்ட நேரத்திலேயே அண்ணாவின் பாதி உயிர் பிரிந்துவிட்டது; மீதி உயிர்தான் கடைசியில் பிரிந்தது.

தன்னலத்திற்காக, நாட்டையும் மொழியையும் காவு கொடுக்காத களத் தலைவர் அண்ணா. அவரது வெற்றிக்குக் காரணங்கள்:

சகிப்புத் தன்மை (Tolerance)

—எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்றிருந்தார்.

அரவணைத்துச் செல்லுதல் (Accommodation)

—மாறுபட்ட கருத்துடையோரையும் மனம் ஒப்பி ஏற்றுக்கொண்டார்.

பிறர் கருத்து அறிதல் (Consultation)

—கொள்கைகளை நடைமுறைப்படுத்துகிற பொழுது ஏற்படுகிற சிக்கல்களைத் தவிர்க்க, மனம் விட்டு விவாதிப்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிற மனப்பக்குவத்தைப் பெற்றிருந்தார்.

ஒத்துழைத்தல் (Co-operation)

—சமுதாயத்தின் நலனுக்காக எடுக்கப்படுகின்ற முடிவுகளை நிறைவேற்றுவதற்காக மற்றவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதில் அண்ணாவுக்கு இணை அண்ணாதான்.

அண்ணாவின் முன்னோக்கும் அறிவு வியப்பிற்குரியது. ஏழ்மைக்குடியில் பிறந்தவர்களின் கழகமான திராவிட இயக்கம் ஒரு வேளை அரசுகட்டிலில் அமர்ந்தால், சுகபோகங்களில் மயங்கி, மக்களை அது மறந்துவிடப்போகிறதோ என அஞ்சினார். அவரது அச்சத்தை நாசூக்காகக் கூறினார், ''வேலைக்காரி'' நாடகத்தின்மூலம். வேதாசல முதலியாரின் கொடுமைக்கு ஆளாகி, மரக்கிளையில் பிணமாகத் தொங்கினான், கதாநாயகனின் தந்தை. அவரைப் பழி தீர்க்கும் படலத்தில் இறங்கிய கதைத் தலைவனோ, வசதி பல கிடைத்தவுடன், பழையனவற்றை மறந்துவிடுகிறான். அவனுக்குக் கடந்து வந்த காலத்தின் கொடுமைகளை நினைவுபடுத்த, 'மரக்கிளையில் பிணம்...' எனப் பலமுறை நினைவுபடுத்துவார். அண்ணாவின், இந்த அழகுப் படப்பிடிப்பை நெஞ்சிலே நிறுத்தி, அவர்களது இந்த அச்சம் தேவையற்றது என்று விளக்குவதுபோல, நமது லட்சியங்களை மறவாது, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நாட்டுக்கு நல்லது செய்வோம்.

அண்ணாவின்,

எண்ணம் புதுமையானது ;
இதயம் கனிவானது ;
வாழ்வு புனிதமானது.

அவர் காலத்தில் வாழ்ந்தோம் என்ற மகிழ்ச்சியும், அவரோடு வாழ்ந்தோம் என்ற பெருமையும் நமக்கு உண்டு.



மொழியெனும் விழி காப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு மின்துறை அமைச்சர்
ச. இராமச்சந்திரன்

"தாய் நாடா, தாய் மொழியா?" எனக் கேட்டால் ''தாய் நாடுகூட வேண்டா, தாய்மொழி தான் வேண்டும்'' என்றார் அயர்லாந்து நாட்டின் விடுதலை வீரர் திருவாளர் டிவேலரா அவர்கள். அவர் தாய்மொழியையும் விடவில்லை, தாய் நாட்டையும் விடவில்லை என்பது வரலாறு. எனினும், தாய்மொழியை மட்டும் வற்புறுத்திய தற்குக் காரணம், நாடு இல்லையெனினும் தேடிக் கொள்ளலாம் இஸ்ரேலைப் போல; ஆனால், மொழி இல்லையெனின் அவ்வினமே அழிந்து விடுமல்லவா! அந்த மக்கள் ஒன்று என்று காண ஆதாரமே இராது. ஆகவேதான் தாய்மொழியைக் காக்க விரும்பினார் டிவேலரா.

மொழி எப்பொழுது தோன்றியது என்றால், மனிதன் சமூகமாக என்று வாழத் தொடங்கினானோ அன்றுதான். சமூக உறவு மலர மொழி இன்றியமையாதது. சமூகமாக மக்கள் ஒன்று சேரவும் அது துணைநிற்கிறது.

மக்களை அடையாளம் காட்டும் கருவியும் மொழிதான். மொழியை வைத்துத்தான் மக்களை அறிமுகப்படுத்துகின்றனர். தமிழை வைத்துத் தமிழர்கள் என்கிறோம். ஆங்கிலத்தை வைத்து ஆங்கிலேயர்கள் என்கிறோம். உருசிய மொழியை வைத்து உருசியர்கள் என்கிறோம். இதற்கு விதிவிலக்குகள் இருக்கலாம். இது பொதுவான விதி என்பது உலகம் ஒப்பும் உண்மைக்கூற்று.

எவ்வாறு ஒவ்வோர் இன மக்களுக்கும் ஞாலம் தோன்றிய காலத்திலிருந்து ஒப்புவமையிலாத் தனி வரலாறு உண்டோ அதேபோல மொழி வரலாறும் உண்டு. அம் மக்களின் உயர்வு தாழ்வுகளில் இணைந்தும் பிணைந்தும் வரும் வரலாறு அம் மொழிக்கும் உண்டு. தமிழ்மொழி வளர்ந்த வரலாறு தமிழ் மக்கள் வாழ்ந்த வரலாறு தான்.

ஆகவே, மொழிவழி மக்கள் ஒன்று கூடுதல் இயற்கை. அதுவே மதுரைக்கூடலில் உலகத் தமிழர் கூடும் விழாவாகும்.

சாதி மத பேதங்களாலும், பொருளியல் ஏற்றத் தாழ்வுகளாலும், தீண்டாமைக் கொடுமைகளாலும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் சிறுமையுற்றிருப்பது கண்கூடு. மொழி வளர வேண்டுமாயின் அச் சமூகம் வளரவேண்டும். சமூகத்தின் வளர்ச்சி நிலை எதிரொலியே மொழி வளர்ச்சி நிலை. 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' எனக் கூறிய சமுதாய நிலையை ஒப்பு நோக்குமிடத்து இன்று நம் நிலையை 'ஏ, தாழ்ந்த தமிழகமே!' எனப் பேரறிஞர் அண்ணா அழைத்துக் காட்டியது வெளிப்படுத்துகிறது.

மனிதர்கள் குமுகாயமாக வாழத் துணை நின்றது முதன்முதலில் மொழிதான். குமுகாய வளர்ச்சியின் பல படிகளாகப் பின்னர் ஏற்பட்டவைகளே இனம், மதம், சாதி போன்றவை. பின்னர்

ஏற்பட்ட பிளவுகளிலிருந்து சமூகம் விடுபட வேண்டுமெனின் சமுதாயம் அமைவதற்குக் காரண மான மொழியே நமக்குக் கருவியாம். ''இயற்கை யின் சவால்களை எதிர்க்க முடியாமல் கையா லாகாத்தனத்துக்குக் காட்டுமிராண்டி கண்டுபிடித்த சமாதானமே மதம், கடவுள் கொள்கையெல்லாம்'' என்றார் திரு. லெனின் அவர்கள். ஆகவே, இயற்கை யாய் அமைந்த மொழியாம் தமிழின் துணை கொண்டு இச் சமூகக் கொடுமைகளைக் களைந் தெறிய இவ்வுலகத் தமிழ் மாநாடு நமக்கு உதவட்டும்.

உலகிடை 910 வகை மக்கள் உள்ளனர் என்பது ஒரு கணக்கு. எல்லா வகையினரையும் கணக் கிட்டால் இது 1,600 ஆகும் என்பர்; 1,300 தான் என்று சொல்வாரும் உண்டு. அதே போல உலகில் 2,250 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றில் இறந்த மொழிகளும் சேரும். இதை 2,500-லிருந்து 3,000 வரை கணக்கு வைப்பாரும் உண்டு. இவற்றில் வரிவடிவமும் ஒலிவடிவமும் பெற்றுத் தொன்மை யுற்று இறவா மொழியாக இன்றும் உள்ளது நமது தாய்மொழியாம் தமிழ்மொழி. ஒரே மொழி பல மொழிகளாக ஆகி, மொழிக்குடும்பம் ஆவதும் உண்டு. ஒரே சமுதாயத்தினர் நிலப் பரப்பின் பல பாகங்களுக்குச் சென்று குடியமர்ந்ததாலும், கால மும் தூரமும் வேறுபடுத்தியதாலும், அடிக்கடி ஒன்றுகூட இயலாததாலும், முறையான கல்விமுறை யில்லாததாலும், ஒரே மொழி பலவகையாகப் பேசப்பட்டுப் பல மொழிகளாக மாறுவதுண்டு. அங்ஙனமே தமிழ்மொழிக் குடும்பத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகள் அடங்குகின்றன. ஆகவேதான் ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்களிடம் 'உங்கள் கொள்கையோ திராவிடம்; ஆனால் நீங்கள் பேசுவதோ தமிழ், தமிழர் என்று; இஃது எங்ஙனம் பொருந்தும்?' எனக் கேட்டபோது, பளிச்சென்று கூறினார் 'பண்டைத் தமிழரே இன்றைய திராவிடரென்று'.

ஒரே மொழி எவ்வாறு பல மொழிகளாகி, மொழிக்குடும்பம் உருவாகிறதோ அதேபோல் பல மொழிகள் ஒன்றையொன்று விழுங்கி, சில மொழிகளாக ஆவதும் உண்டு. இவ் விஞ்ஞான காலத்தில் உலகின் மொழிகளும் இனங்களும் எண் ணிக்கையில் குறைந்து வருவது நியதியாக உள்ளது. இவற்றில் இயற்கையாகவும் மாற்றங்கள் ஏற்படு கின்றன; செயற்கையிலும் மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன. வெற்றி பெற்ற மொழி வகை யினர் தோல்வியுற்ற மொழி வகையினர்மீது தமது மொழியாதிக்கத்தைச் செலுத்தி, மொழியையும் இனத்தையும் அழிப்பது ஒருவகை. குறிப்பாக, அரேபிய மொழிச் சொற்கள் பல மொழிகளில் இருப்பது இவ்வகை அரசியல் ஆதிக்கம் காரண மாகவே. ஆளுகின்றவர் மொழியும் ஆளப்படு பவர் மொழியும் வேறாக இருக்கும்போது ஏற் படுவது இந்நிலை. சமத்துவம், ஜனநாயகம் வளர்ந்து வரும் தற்காலத்தில் மொழியுரிமை சம மாகவே மதிக்கப்படுவதால் இப் போக்கு இன்று வெகுவாகக் குறைந்துள்ளது. எல்லா மொழி களுக்கும் சமவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, இத்தகைய காரணங்களால் இன்று ஆபத்தில்லை. எனினும், இயற்கையான விஞ்ஞான வளர்ச்சி காரணமாகப் பல மொழிகள் இன்று வீட்டு மொழி களாகவே ஆகிவிட்டன; வீதிக்குக்கூட வர இயல வில்லை. மொழிகள் ஒன்றையொன்று விழுங்கி வருவதை ஆங்கிலத்தில் 'assimilation' எனக் கூறுவர். தமிழையும் பிறமொழிகள் ஜீரணிக்காமல் இருக்க வேண்டுமானால் அதை விஞ்ஞான மொழியாக மாற்றத் திட்டமிடுதல் அவசியம். இம் மொழித் திட்ட வளர்ச்சியின் இன்றியமையாமை கருதியே 'தமிழ்ச் சங்கம்' தொடங்க, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் முடிவெடுத்துள்ளார். கடைச் சங்க காலத்தில் போற்றி வளர்க்கப்பட்ட தமிழ், இன்று தமிழக அரசு அமைக்கும் இச் சங்கத்தின் சீரிய பணியின்மூலம் பெரிதும் காப்பாற்றி வளர்க்கப்படும் என்று நம்பலாம்.

திரைகடலோடிய தமிழர்

மாண்புமிகு தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர்
செ. அரங்கநாயகம்

மொரிஷியஸ் போயிருந்தபோது அங்குள்ள தமிழர்களைச் சந்தித்தேன். அவர்களுடைய முன்னோர் 250 ஆண்டுகளுக்கு முன் அங்குக் குடியேறியிருக்கின்றனர். உழைப்பதற்காக வந்திருக்கின்றனர். தங்களது உழைப்பால் அந்நாட்டைக் கரும்பு விளையும் பூமியாக்கியிருக்கின்றனர்.

ஆரம்பத்தில் தமிழே பேசியிருக்கின்றனர். பின்னர் அங்குள்ள மொழியையும் பேசியிருக்கின்றனர். இப்பொழுது தமிழை மறந்து அங்குள்ள 'கிரிபோல்' மட்டுமே பேசுகின்றனர்.

குடியேறியபோது ஆண்களோடு பெண்களும் கலமேறி, கடல் கடந்து சென்றிருக்கின்றனர். அந்தத் துணிச்சலை இன்று நினைத்தாலும் பிரமிப்பை உண்டுபண்ணுகிறது. மொரிஷியஸ் மட்டுமல்ல; ரீயூனியன், தென்னாப்பிரிக்கா, சீஷெல்ஷ், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பிஜி, இந்தோனேசியா போன்ற இன்னும் எத்தனையோ நாடுகளில் குடியேறியுள்ளனர்.

இந்திய மொழிகளிலேயே உலக மொழியாகத் தமிழ் திகழ்கிறது.

கிரேக்கத்தோடும் யவன நாட்டோடும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாணிபத் தொடர்பு இருந்திருக்கிறது. காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையில் பல்வகைப் பண்டங்கள் கொட்டி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின்மீது ஏற்றுமதி இறக்குமதி சுங்கத் தீர்வைக்காகப் புலி முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது.

''கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்''

என்று நமது வாணிபச் செந்நெறியைப் பட்டினப் பாலை நன்கு விளக்கும்.

வட சீனாவில் ஒரு தமிழ்க் கல்வெட்டும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் வரலாறு தமிழனின் சீன நாட்டுத் தொடர்பைக் கூறும். ஜப்பான் மொழியில் உள்ள 300-க்கும் மேற்பட்ட சொற்கள் தமிழ்ச் சொற்களோடு ஒத்திருக்கின்றன. அங்குள்ள பழக்க வழக்கங்களும் நாட்டுக் கவிதைகளும் தமிழ் நாட்டிலுள்ளவற்றோடு ஒத்துள்ளன.

தாய்லாந்து நாட்டு மன்னரின் முடிசூட்டு விழாவில் நமது திருப்பாவையும் திருவெம்பாவையும் ஓதப்படுகின்றனவாம்.

மிகப் பழங்காலந்தொட்டே தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். வணிகத் தொடர்பும் கலாசாரத் தொடர்பும் வைத்திருக்கின்றனர்.

திரைகடலோடி, திரவியம் தேடியிருக்கின்றனர்.

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்''

என்பது நமது தமிழ்ப் பண்பாட்டின் அச்சாணியாக இருந்திருக்கிறது.

பாரதி கண்ட ஒருமைப்பாடு

தமிழ்நாடு அரசு இரண்டாம் செயலாளர்
திரு. கா. திரவியம், இ.ஆ.ப.

ஆண்மை இழந்து, அறநெறி பிறழ்ந்து, தகுதியைப் பறிகொடுத்து, தன்னம்பிக்கையைக் கைவிட்டுத் தன்மானத்தைப் பணயம் வைத்துப் பிறர் தயவிலே வாழ்ந்துவந்த நிலைகெட்ட மனிதர்களைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல், நொந்து பாடியதற்காக மட்டுமல்ல, பாரதியாருக்கு நாம் கடமைப்பட்டிருப்பது; அஞ்சி அஞ்சிச் செத்தவர்களுக்கும் அபயம் அளித்து, நெஞ்சிலே உரமும் நேர்மைத் திறனும் ஊட்டி, தேசபக்தியுடனும், தெளிவுடனும், துணிவுடனும் உழைக்க வழிகாட்டி, மக்களை உந்தி, ஊக்கமளித்து, உற்சாகப்படுத்தியது மட்டுமல்ல, பாரதியார் பாடல்களின் உயர்வுக்குக் காரணம்; அரசியல் விடுதலைப் போராட்டத்துக்கு அணிவகுப்புப் பாடல்களாய், தேசமெங்கும் திரண்டுவந்த தொண்டர்கள் தண்டுக்கு வழிநடைப் பாடல்களாய், வீரர்களின் கோஷ்டி கானமாய், தியாகிகளின் தாரக மந்திரமாய் விளங்கிய துடிப்பு மிக்க தேசியப் பாடல்கள் பாடியதால் மட்டுமல்ல, அழியாப் புகழ்பெற்ற வரிசையில் அமரராய் பாரதியார் இடம் பெற்றது; காலம் தோற்றுவித்த கவிஞர் அவர். அக் காலத்தின் கண்களையே திறந்தவர் அவர். காலத்தின் கண்ணாடியாக இருந்த அவர் கவிதைகள், வருங்காலத்துக்கு முன்னோடியாகவும் அமைந்தன; பழங்காலப் பெருமையையும் பாரம்பரியத்தின் செழிப்பையும் மனத்திலே பதித்து, நிகழ்காலத்தின் நிலைமைகளை நிதர்சனமாகக் காட்டி, அவலங்களை அம்பலப்படுத்தி, வருங்காலத்தின் வளமையான, வாய்மையான, வாய்ப்புகளுக்கு வழிவகுத்து வலுவூட்டியதால்தான், அவர் படைப்புகள், அவரைக் காலத்தை வென்ற கவிஞராக்கின. அவர் செய்தது, அன்றைக்குத் தேவையான பிரசாரம் மட்டும் அல்ல; அவர் போதித்தவை என்றைக்கும் பொருத்தமான அடிப்படை உண்மைகள், ஆதாரக் கொள்கைகள், அடிநாத உணர்வுகள். தனி மனிதன் தலைநிமிர்ந்து, தரமான, சுதந்திரமான வாழ்வு வாழ்ந்து அதனால் வீடு விளங்கி வளம் பெற்று, வீடுகள் கூடிச் சமூகம் சிறந்து சீருற்று, சமூகச் செழிப்பு சமுதாய மலர்ச்சியாகி, நாடு நலம் பெற்று ஓங்க நல்வழி காட்டி, பீடு நடை போடும் நாடு, தன் புதுமையினாலும் பொதுமையினாலும், தன் வலிமையினாலும் வளமான வாழ்க்கை நெறியினாலும், உலக அரங்கிலே தன் சிந்தனைச் செல்வாக்கை நிலைநாட்டி, தானும் ஆன்மீக அரசாட்சியில் பங்கு கொள்ளும் நிலை ஏற்படவேண்டும் என்பதே அவர் கண்ட கவிக் கனவு. தனி மனிதனில் ஊன்றிய அவர் கவிதை, தரணியைத் தழுவியது. உரிமைக் குரலை எழுப்பிய அவர் கவிதை, உலகப் பொது நோக்கையும் வளர்த்தது. அவர் முழுமையான கவிஞர். முடிவில்லாத இலட்சியப் பயணம் அவர் கவிதை.

'அடிவானம் போலவே, மனிதனின் இலட்சியமும், அதை நோக்கி அவன் முன்னேற முன்னேற, ஓயாது பின் செல்கிறது' என்று கூறினார் மேனாட்டுச் சிந்தனையாளர் ஒருவர். இலட்சியத்துக்கு இறுதி நிலை என்று கிடையாது. ஈடேறிய இலட்சியம், இன்னும் உயர்ந்த, விரிந்த, வளமான இலட்சியத்துக்குச் சாதனமாக அமைகிறது. இலட்சியம் வளர்

கிறது; வலுப்பெறுகிறது; வளமாகிறது; புதுவாழ்வு பெறுகிறது. ஆகவேதான் இலட்சியப் பயணம் முடிவற்றது. பயணத்தை முடித்துவிட்டால், இலட்சியத்தை எய்தியதாக எண்ணிவிட்டால், ஏமாற்றம் புகுகிறது; இறங்குமுகம் தொடங்குகிறது; எதிர் விளைவு தோன்றுகிறது; ஏக்கம் நிறைகிறது. பாரதி பாடிய இலட்சியங்களில் ஒன்றை எய்திவிட்டோம்-அரசியல் விடுதலை. அந்த இலட்சியத்தை எய்தி விட்டோம் என்ற எக்களிப்பிலே, விடுதலை சுதந்திரமாய்ப் படர்ந்து பதிந்து, பரவிப் பரிணமித்து, அரசியல் துறையில் ஆரம்பித்து, அனைத்துத் துறைகளையும் அணைத்து, ஆக்கம் பெற்று, மனிதனின் முழுமையான வாழ்வுக்கும் விமோசனத்துக்கும் வழி வகுக்கும் இலட்சியப் பயணமாய் அமையச் செய்யாமல், அதைத் தொடர்ந்து, துணிவுடனும் தெளிவுடனும் திட உறுதியுடனும் மேற்கொள்ளாமல் தயங்கிவிட்டோம்; தவறிவிட்டோம்; தடைப் பட்டோம். பயணம் முடிந்துவிட்டது, பணி தீர்ந்து விட்டது, பாடுபடுவது ஓய்ந்துவிட்டது என்று எண்ணிவிட்டதால்தான், பங்கு போடுவதிலும், பாகம் பிரிப்பதிலும், பங்காளிச் சண்டையிலும், போட்டி, பொறாமை, பூசல், பிணக்கு, சழக்கு, சச்சரவு, மனக்கசப்பு, மோதல் ஆகியவற்றிலும் மூழ்கிவிட்டோம். பயணத்தைத் தொடர வேண்டுமென்ற தெளிவு பிறந்திருந்தால், பொறுப்புக் கூடியிருக்கும், பண்பு வளர்ந்திருக்கும், பக்குவம் கனிந்திருக்கும்; நாடும் மக்களும் நலம் பல எய்தியிருப்பர். பயிர் செய்து பாடுபட்டது போதும்; அடுத்து வருவது அறுவடை, அளந்து அனுபவிக்கும் காலம், என்று கணித்துவிட்டோம். அறுவடைக்குப் பின் மீண்டும் கழனியை உழுது, புரட்டி, விதைத்து, விளைவித்தால்தான் விவசாயம் வளரும், வாழ்வு தொடரும் என்பதை விளங்கிக்கொள்ளாத அளவுக்கு, சுயநல வேகத்தின் மோகம் வெறியாக மாறி நம் விழிகளை மறைத்துவிட்டது. திடீரென இலட்சியப் பயணத்தை முடித்துவிட்டதால் திகைத்துத் திக்குமுக்காடி, திசைமாறி, துணையிழந்து, தொடர்பு அறுந்து போன சமுதாயத்தில் ஏற்பட்ட களங்கங்கள், குறைபாடுகள், குதர்க்கங்கள், கோணல்கள் ஒரு புறம்; இன்னமும் ஈடேறாத இலட்சியங்களினால் ஏற்பட்ட ஏமாற்ற உணர்வுகள் ஒரு புறம். பாரதி கண்ட பாரதத்தின் பாதையிலே, தடைக் கற்களாகவும், தடுப்புச் சுவர்களாகவும், வேலிகளாகவும், விலங்குகளாகவும் நிற்பவை இவைதாமே!

சஞ்சலம், சந்தேகம், சலனம் மூன்றையும் வெறுக்க வேண்டுமானால், சலவை செய்ய வேண்டும்;—மனத்தையும் நாவையும். "முதலாவது, நாக்கை வெளுக்க வேண்டும்; பொய் சொல்லக் கூடாது; புறம் சொல்லக் கூடாது; முகத்துதி கூடாது; தற்புகழ்ச்சி கூடாது" என்கிறார் பாரதியார்.

"பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறம் சொல்ல லாகாது, பாப்பா"

என்று செல்லக் குழந்தைகளுக்கும் வயது சென்ற குழந்தைகளுக்கும் பாட்டிலே பாடம் சொல்லிக் கொடுக்கிறார் பாரதியார். ஆரம்பப் பாடம்தான்; அதனாலேயே அடிக்கடி அலட்சியம் செய்யப்படுகிற பாடம். எளிமையான போதனைதான்; ஆனால் செயலிலே ஏற்கப்படாத போதனை.

"பொய் தீர்ந்தால் பயம் தீரும்
பயம் தீர்ந்தால் பொய் தீரும்"

என்று பொய்க்கும் பயத்துக்கும் உள்ள பாசப் பிணைப்பை, பாபப் பிணைப்பை, படம் பிடித்துக் காட்டுகிறார் பாரதியார்.

"அச்சத்தை விட்டிடடா — நல் ஆண்மையைக் கைக்கொள்ளடா, இச்சகத் தின்மேலே நீ—என்றும் இன்பமே பெறுவையடா!" என்று அச்சத்தைத் தவிர்க்க அழைப்பு விடுத்து இன்பம் பெற ஆசி கூறுகிறார் பாரதியார். 'அச்சமே நரகம்' என்று எச்சரிக்கிறார் ஓரிடத்தில். 'அச்சம் இருக்கும் வரை நீ அறிவாளியாக மாட்டாய்' என்று அறிவுறுத்துகிறார் பிறிதோரிடத்தில்.

அச்சத்தோடு வளரும் ஒட்டுச் செடி கவலை.

"நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை."

நெஞ்சம் என்னும் கழனியிலே அச்சம் என்ற வித்தை இட்டு, கவலையைப் பயிர் செய்து, கேட்டினை அறுவடை செய்கிறோம். 'கவலையினால் நாடியெல்லாம் தழலாய் வேகும்' என்று காட்டி, கனலாய்ச் சுடும் கவலையை வெல்லுமாறு கவிதையிலே கல்வி புகட்டுகிறார்.

கவலையினும் கொடியது ஒன்றுண்டு. கனன்றெழும் கோபம்; கழுத்தை அறுக்கும் கோபம்; சீறியெழும் சினம்; சுட்டெரிக்கும் சினம்.

"..... சினத்தை முன்னே
வென்றிடுவீர், மேதினியில் மரணமில்லை"

என்று மரணமில்லா, மானமுள்ள வாழ்வு வாழ வழி காட்டுகிறார் பாரதியார்.

'சினங் கொள்வார் தமைத்தாமே தீயாற் சுட்டுச் செத்திடுவார் ஒப்பாவார்; சினங் கொள்வார் தாம் மனங் கொண்டு தம் கழுத்தைத் தாமே வெய்ய வாள் கொண்டு கிழித்திடுவார்'.. என்று சீற்றத்தின் சிறுமையை, கோபத்தின் கேட்டை, சினத்தால் வரும் சீரழிவைச் சித்திரித்துக் காட்டுகிறார் பாரதியார்.

இவ்வாறு பொய்யைப் போக்கி, பயத்தை வென்று, படுகோபத்தை ஆண்டு, பண்பட்ட உள்ளத்தில் அன்பு பூண வேண்டும்.

''அன்பினைக் கைக் கொள்ளடா — இதை
அவனிக்கிங்கு ஓதிடடா!
துன்பம் இனியில்லை — உன்
துயரங்கள் ஒழிந்ததடா!''

என்று அன்பினைக் காட்ட, நிலை நாட்ட, பேண, போற்ற, வளர்க்க, வலுவாக்க, அழைக்கின்றார் பாரதியார்.

''துன்ப நிலைகளும் சோர்வும் பயமுமெல்லாம்
அன்பில் அழியுமடி — கிளியே
அன்புக்கு அழிவில்லை — காண்!''

என்று அன்புக்குள்ள ஆக்க சக்தியை, காக்கும் சக்தியை, ஆராதிக்கின்றார் கவி.

''ஒன்றென்று கொட்டு முரசே — அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே — இந்த
நானில மாந்தருக் கெல்லாம்''

என்று முரசு கொட்டுகிறார், முழுமைக் கவிஞர் பாரதியார்.

அன்பு, ஓர் அக நிலை மட்டுமல்ல; அறவழி மட்டு மல்ல; அறிவொளி மட்டுமல்ல; அதுவே ஓர் ஆக்கம்; ஓர் ஆற்றல். ஆகவேதான் அன்பு, கொள்கையில் இருந்தால் போதாது; செய்கையில் வேண்டும் என்று முடுக்கிவிடுகிறார், முனைப்புக் கவிஞர் பாரதி. இந்த அன்பு, வையகத்தை வாழ்விக்கும் வல்லமை வாய்ந்தது. அன்பினால் அவனிக்கு ஆக்கம் தேடும் ஆற்றலை அருளுமாறு சக்தியினை வேண்டுகிறார் பாரதியார்.

''வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே!''

மாநிலம் பயனுற, மண்ணுலகு மாண்பு பெற, வாழும் வாழ்வே வாழ்வு. அல்லாது வாழ்வ தெல்லாம், பூமிக்குப் பாரம்; நிலச்சுமை.

''சொல்லடி, சிவசக்தி! — நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ''

என்று உரிமைக் குரல் எழுப்புகிறார் பாரதியார்.

உடல் உறுதியும் உளத் திட்பமும் கொண்டு, அச்சம் தவிர்த்துக் கவலை ஒழித்து, சினத்தை வென்று, சிறுமையை விலக்கி, பொய்மையைப் போக்கி, பொறுமையைப் பேணி, அன்புடன் ஆற்றலை இணைத்து, அறிவுடன் அறத்தைப் பிணைத்து, அருளுடன் பொருளைச் சேர்த்து, மனிதன் உழைத்தால், முனைந்து முயன்றால், துணிந்து செயலாற்றினால், மனிதன் சாதிக்க முடி யாததுதான் என்ன?

''மண்ணில் தெரியுது வானம், அது நம்
வசப்பட லாகாதோ?''

அதுவே வாழ்க்கை.

பயனான வாழ்வு வாழ விழைகிறார் பாரதியார்.

''பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்,
கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்,
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்,
யாவுமென் வினையால், இடும்பை தீர்ந்தே
இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும்.''

தன் வினையால் தரணியெலாம் இன்பமுறவேண்டும்; தன் உழைப்பால் உலகில் உயிர் ராசிகள் எல்லாம் அன்பு கொண்டு ஆக்கம் பெறவேண்டும்; அதற்குத் தான் பணியாற்ற வேண்டும், பாடுபட வேண்டும், பயன்பட வேண்டும் என்பதே பாரதியின் பிரார்த் தனை.

''நாட்டினைத் துயரின்றி நன்கமைத் திடுவதும்
உளமெனும் நாட்டை ஒருபிழை யின்றி
ஆள்வதும், பேரொளி ஞாயிறே யனைய
சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்தலும்,
நோக்கமாக் கொண்டு நின்பதம் நோக்கினேன்''

என்று பாரதியார் துதிப்பாடலில் தொழுகையில் அதே அடிநாத உணர்வை மீட்டுவதோடு, உள மெனும் நாட்டை ஒரு பிழையின்றி ஆண்டால் ஒழிய, உலகைத் துயரின்றி அமைக்க உழைத்திடல் அரிது என்ற உண்மையை மீண்டும் உணர்த்து கிறார். ஆகவே. நாடு சிறக்க, பாரதி கண்ட பாரதம் பிறக்க, இன்றியமையா அடிப்படை, உறுதியான அடித்தளம், தன்னை ஆண்ட தனிமனிதனின் பொய்மை எனும் புன்மையைப் போக்கி, பயமெனும் பீடையை விரட்டி, கவலை எனும் களையை நீக்கி, அன்பு வழியைப் போற்றி, அவனியெலாம் சிறக்க அயராது ஆற்றலுடன் உழைத்து, மாநிலம் பயனுற மாண்புடன் வாழும் மனிதனேயாவான்.

நெல்லிக்காய் மூட்டைபோல் சிதறிக் கிடந்த மக்களின் ஒற்றுமையின்மையைக் கண்டு நொந்து, 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்ற பாடலில் வெதும்பிய வேதனையை வெளியிட்டார் பாரதி அன்று.

''கொஞ்சமோ பிரிவினைகள் — ஒரு
கோடியென்றால் அது பெரிதாமோ?''

என்று குறைபட்டுக்கொண்டார் அவர்.

சமூகத்தில், மக்களை ஒன்று கூட்டும் சக்திகளாகப் பயன்படவேண்டிய சமயம், மொழி போன்றவையே, ஒற்றுமைக் குலைவையும் உட்பூசலையும் வளர்ப்பதற்குக் காரணங்களாக அமைந்துவிடுவது வேதனைக்குரிய விபரீதப் போக்கு. மனத்தை மற்றவர்க்குத் திறந்து காட்டும் சாதனம், மொழி. உறவு வளர்க்கவேண்டிய அச் சக்தி, பிளவுபடுத்துவது பேதமை. எங்கள் பாரதத் தாய்,

''செப்பு மொழி பதினெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்''

என்று செம்மாந்து பாடினார் பாரதி. பதினெட்டும் பாரதத்தின் மொழிகள்; அவை வளம் பெறும் அளவுக்கே மக்கள் பலம் பெறுவார். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிக் கொஞ்சியது, இம் மொழிகளில். முந்தையர் ஆயிரயாண்டுகள் வாழ்ந்து மொழிந்தது, இம் மொழிகளில். சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இம்மொழிகளிலே. இன்னுயிர் தந்து எமை வளர்த்தருள் ஈந்த இந்நாட்டில் எங்கள் அன்னையர் தோன்றி மழலைகள் கூறி அறிந்ததும் இம் மொழிகளிலே. அவர் கன்னியராகி நிலவினிலாடிக் களித்ததும் இம் மொழிகளிலே. செப்பு மொழி பதினெட்டும் சிறக்க வேண்டும்; சுதந்திர உணர்வைப் பெருக்க வேண்டும். எந்தம் மொழிகள், இந்திய மொழிகள் என்ற சொந்தத்திலே, சிந்தனை ஒன்றுடையாள் என்றதை வளமாக்கி வலுவூட்ட வேண்டும். அத்தனை இந்திய மொழிகளும் போற்றி வளர்ப்பது, அடிப்படையில் இந்திய எண்ணம்; ஆதார இந்தியச் சிந்தனை. பாரத உணர்வே பண்ணின் சுருதி; பதினெட்டு மொழிகளும் ராகங்கள்.

''சாதி இரண்டொழிய வேறில்லை என்றே தமிழ் மகள் சொல்லியசொல் அமிழ்தம் என்போம்'' என்று ஔவை அருளிய பொதுநெறியை நினைப்பூட்டி, அதை நடைமுறையில் நிலைநிறுத்தப் பாடுகிறார், பாடுபடுகிறார் பாரதியார். புத்தர் முதல் காந்தி வரை, வள்ளுவர் முதல் வள்ளலார் வரை, ஆன்மிகத் தலைவர்களும் ஆன்றோர் பெருமக்களும், சாதி வேற்றுமையைச் சிந்தையிலிருந்து களைய வேண்டுமென்று போதித்து வந்துள்ளபோதிலும், அதைச் சாதித்த பெருமை பாரதத்திற்கு இன்னும் கிட்டவில்லை. பிறப்பால் மனிதரில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் இல்லை, பண்பால் மேலோர் கீழோரே உண்டு, ஒழுக்கத்தால், நடத்தையால், உயர்ந்தார், கடையோர் என்றே உண்டு என்பதைப் பாரதியார் தம் பாட்டுகளிலே படித்துப் படித்து சொன்னார்.

அவர் பாடினார்:

''கேளடா, மானிடவா—எம்மில்
கீழோர் மேலோர் இல்லை;
நீதி நெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர்!''

பிறப்பால் ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கும் சாத்திரச் சுவடிகளைப் பொசுக்கி எரிக்கவேண்டுமென்று புரட்சி ஆர்வத்துடன் புறப்படுகிறார் பாரதியார்.

''மேலவர் கீழவரென்றே—வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம்—இன்று
பொசுக்கி விட்டால் எவர்க்கும் நன்மையுண்டு!''

இந்த நாட்டிலே பிறந்தவர் எவரும் இந்தியர், சாதி சமயம் பாராது நாட்டிற்குச் சொந்தமானவர் என்பதைப் பன்னிப் பன்னி பாடினார் பாரதியார்.

''சாதி மதங்களைப் பாரோம்—உயர்
சன்மமித் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே!''

மனிதப் பிறவி, உயர் ஜென்மம் என்பது மட்டுமல்ல, இத் தேசத்தில் பிறந்ததால் உயர் ஜென்மம் என்ற எக்காள உணர்வு தொனிக்கும்படி பாடுகிறார் பாரதியார். சாதி சமய பேதங்களுக்கு அப்பாற்பட்ட சமுதாயப் பொதுமையைப் போற்றி, அன்பு நெறி நின்று, அவனி செழிக்கச் செய்ய அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றார் பாரதியார்.

''சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்!

இந்தச் சாதியிற் பிறந்தவன் இந்தத் தொழிலைத்தான் செய்யவேண்டும் என்று வகைப்படுத்தும் வருணாசிரம தர்மத்தைக் கைவிட்டு, தகுதியாலும் திறமையாலும், ஆற்றலாலும் அனுபவத்தாலும், பண்பினாலும் பயிற்சியாலும் எந்தத் தொழில் செய்யப் பக்குவம் பெறுகின்றானோ, அத் தொழிலைச் செய்ய வாய்ப்பும் வசதியும் தரவேண்டுமென்று, சாத்திரத்தையும் மீறி சமூகம் முன்வர வேண்டுமென்பதை வலியுறுத்தவே 'தொழில் ஆயிரம் மாண்புறச் செய்வோம்' என்று திட்டம் வகுக்கின்றார் பாரதியார்.

''தகரென்று கொட்டு முரசே—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்!''

என்று முரசு கொட்டி முழக்கம் செய்தார் பாரதியார். சுதந்திர இந்தியாவில், இத் தகர்ப்பு வேலையைச் சட்டம் செய்துவிட்டது. நேரில் வந்தால் பாபம், நிழல் பட்டாலும் சாபம் என்று பரம்பரை பரம்பரையாகப் பலகாலம் கொடுமை செய்து, வேண்டாதார் என்று வெறுத்து ஒதுக்கி, தீண்டாதார் என்று தள்ளி வைப்போரைத் தண்டிக்கச் சட்டம் வந்துவிட்டது. நேரிட்ட குற்றத்தைச் சட்டம் தண்டிக்க முடியும். குற்றம் நேரிடாமல் தடுக்க முடியாது சட்டம்; அதற்குத் துணை நிற்கக்

கூடியது, சமுதாயத்தின் மனச்சான்றே. அம் மனச் சான்றின் மலர்ச்சி மக்களிடையே மணம் பரப்பிப் பரவியுள்ளதா? என்ற கேள்விக்குப் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம் நாம். ''ஊரிலே உள்ள சேரிகளை ஒழித்துவிட்டோம். உள்ளத்திலே உள்ள சேரிகளை ஒழித்தபாடில்லை'' என்று உணர்த்துகின்றார், முன்னாள் குடியரசின் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன். உள்ளத்திலே மாறுதல் ஏற்பட்டால்தான் உண்மையான மாற்றம் சமூகத்தில் ஏற்படும்.

பாரதி நாளன்று அவர் பாடல்களை மனப்பாடம் செய்து மன்றத்திலே ஒப்புவிப்போம். காந்தி பிறந்த நாளன்று, ஆன்மிகத் தூய்மை பற்றியும், அறநெறி வாழ்வு பற்றியும், அன்பு, அகிம்சை பற்றியும், ஆய்வுரைகள் நிகழ்த்தி அஞ்சலி செய்வோம். ஆண்டுக்கொருமுறை கையாண்டு, அதன் பின்பு அலட்சியம் செய்ய வேண்டிய அறநெறிக் கோட்பாடுகளாக, நாணய மதிப்புக்குறைவு செய்துவிட்டோம் இந்த நல்லுரைகளை. ''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளைப் பரங்கியைத் துரை யென்ற காலமும் போச்சே'' என்ற பாடல்களை மேற்கோள் காட்டி, ஓசை நயத்தையும் இசை நிறைவையும் உயர்வாகப் பாராட்டிவிட்டு, சந்தச் சிறப்பைச் சிலாகித்துவிட்டு, சொந்த வாழ்வில் புறக்கணித்து விட்டு, புதுப்புது துரைகளைப் புதுப்புது துறைகளிலே தோற்றுவிக்கின்றோம். மக்களின் மனப்பான்மை மாறாததால்தான், புதிய தலைமுறையிலாவது புத்துணர்வு பூக்கவேண்டுமென,

''சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாபம்''

என்று பாப்பா பாட்டில் போதிக்கின்றார் பாரதியார்.

சாதி ஒழிப்பைப் பொறுத்தவரை, பாரதி கண்ட பாரதம் இன்னும் பக்குவம் பெறவில்லை.

''ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனு மில்லை, சாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வ மெய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரு மொருநிகர்
சமான மாக வாழ்வமே!''

ஏழை, அடிமை என்று எவருமில்லை என்று பாடினார் பாரதியார். சுதந்திரம் வந்த பின் அடிமையென்று எவரும் இல்லைதான் இந்தியாவில். அரசியல் விடுதலை கிட்டிய பின்னும், பொருளாதார, சமுதாய, கலாசார விடுதலை அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் சமாதான சாத்விகப் போராட்டம் நாட்டிலே இன்னும் நடந்துகொண்டிருக்கின்றது. ஏழ்மையை விரட்டி, மக்கள் அனைவரும் ஏற்றம்பெறச் செய்யப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் பல முன்னேறி வருகின்றன. இந்த மௌனப் புரட்சி, மகத்தான புரட்சி இன்னும் இறுதி வெற்றி பெறவில்லை. இறுதியான, உறுதியான வெற்றியை இது பெறவேண்டுமானால், மக்கள் அனைவரும் ஒன்றுகூடி, உண்மையாக உழைக்கவேண்டும். உழைக்கும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் கிட்டவேண்டும். உழைப்பின் பலன் உழைப்பவர்க்கு முழுமையாக உரித்தாக வேண்டும். நாடு செழித்தால்தான், தழைத்தால்தான், அச் செழிப்பின் பங்கு மக்களுக்குச் சேரும். நாடு செழிக்க, மக்கள் கூடி உழைக்க வேண்டும். உழைப்பைப் போலவே ஒற்றுமையும் இன்றியமையாதது. ஒற்றுமையில் உருவாவதுதான் ஒருமைப்பாடு. ஒற்றுமை உணர்வில் ஊன்றியதாய், உள்ளத்தில் உதிப்பதாய், சிந்தனையில் சிறப்பதாய், செயலில் பலப்படுவதாய் இருக்க வேண்டும். மொழிப் பிரிவுகளால், சமய பேதங்களால், சாதிப் பிளவுகளால், மக்களின் ஒற்றுமை உருக்குலைந்து, நெறியற்று, தறிகெட்டு, மக்கள் நிலை இழந்து நிற்கும் நிலையை நொந்து பாரதி பாடினார் அன்று. ஒற்றுமையில் குறுக்கிடும் சக்திகளில், பாரதி காலத்துக்குப் பின் புதிதாக ஒரு சக்தி தோன்றியுள்ளது. அதுதான் அரசியல் காழ்ப்புணர்ச்சி. மக்களாட்சி செம்மையாக இயங்குவதற்கு, அரசியல் விழிப்புணர்ச்சி மக்களிடை பரவுவது அவசியம். ஆனால் விழிப்புணர்ச்சி வேற்றுமை உணர்வாக வலுத்து, விரோத உணர்வாக வளர்ந்து, வெறியாக உருவெடுத்து, சமுதாயத்தைச் சீர்குலைக்கலாகாது. கட்சி என்பது ஒரு சாதனமே; அதுவே குறிக்கோள் அல்ல. கட்சி தலையாயதல்ல; நாடே தலையாயது. நாடு செழிக்கக் கட்சிகள் பாடுபடவேண்டும். கட்சி வளர்க்க, மக்களைப் பகடைக்காய்களாக்கிப் பலி கொடுத்து நாட்டைப் பாழ்படுத்திவிடக் கூடாது. கொடி ஒன்றே, அது நாட்டின் கொடி; குறிக்கோள் ஒன்றே, அது நாட்டின் வளர்ச்சி; கொள்கை ஒன்றே, அது நாட்டுப் பற்று; குலம் ஒன்றே, இந்தியர் குலம்; என்ற பொதுமை உணர்வு, அரசியல் நடவடிக்கைகள் அனைத்துக்கும் அடிப்படையாக, ஆதாரமாக இருக்கவேண்டும்.

பாரதி காட்டிய பாதை, அறிவைச் செலுத்தி, ஆக்கம் கொண்டு ஆண்மையுடன் போராடி, புதியதோர் உலகம் காண்போம் வாருங்கள் என்பது. அந்த உலகத்தில் ஆண்டான் இல்லை, அடிமை இல்லை, ஆண்டானும் அடிமையும் சரிநிகர் சமானமான மனிதர்கள்; அந்த மனிதர்களே கண்கண்ட கடவுள்கள்; இந்த நாட்டின் குடிமக்கள் அனைவரும் இந்த நாட்டின் மன்னர்கள் என்ற முழக்கத்தைச் செய்த பாரதியின் புகழ் வாழ்க!

சமாளித்தலும் சகித்தலும்

குமரி அனந்தன், எம்.ஏ., எம்.எல்.ஏ.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தோற்றிய தாயினும் புதுமையாகவும் இருப்பதுதான் தமிழ்மொழி! அதனால்தான் ''தமிழின் சீரிளமைத் திறம்'' மனோன்மணியம் ஆசிரியரால் போற்றப் பெற்றது.

காலவேகத்திற்கு ஈடுகொடுத்து வளர்வதே ஒரு மொழிக்குச் சிறப்பு. முறிந்துவிடாமல் முன் வளைந்தும், பெயர்ந்துவிடாமல் பின் வளைந்தும் நாளா வட்டத்தில் நேராகியும் ஒன்றி வளர்வதில் தவறில்லை!

ஆனால், மூலத்தை மூடும் அளவிற்குப் 'பிற' வந்துவிடக்கூடாது. சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்த 'தமிழ்' நூல்களில் வடமொழியின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. அந்த 'மணிப்பிரவாள' நடை கொண்ட கட்டுரைகளில் வடமொழிச் சொற்கள் அதிகமாகவும், தமிழ்ச்சொற்கள் அரிதாகவும் இருந்தன!

இன்று சிலர் எழுதும் கட்டுரை - கதைகளில் ஆங்கிலம் அந்த அளவிற்கு ஆதிக்கம் செலுத்துகிறது.

திசைச் சொற்களை, தொல்காப்பியரே வரவேற்றிருக்கிறாரே, இலக்கணம் வகுத்திருக்கிறாரே என்று வினவக்கூடும்! அந்த இலக்கணத்தைப் பின்பற்றி இன்றும் பல சொற்களைப் பயன்படுத்தலாம். ஆனால், தமிழே மூச்சுத்திணறும் அளவிற்குப் பிற மொழிச் சொற்களைப் போட்டு மூடிவிடுவது தேவைதானா?

தமிழில் பல ஏடுகள் வருகின்றன.

அவை வழங்கும் கவர்ச்சியால், கருத்தால், கதையால் ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தோரும் அடிக்கடி படிக்கின்ற பழக்கத்தைக் கொண்டுள்ளனர்! இவ்வேடுகள்மூலமே தமிழை வளர்த்துக்கொள்வதால், இவர்களுக்கு அவை பொழுதுபோக்காக மட்டுமன்றி வழிகாட்டும் ஆசான்களாகவும் விளங்குகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களை மேலோட்டமாகப் படித்துத் தேர்விற்குமட்டும் விடை எழுதித் தேறி, தமிழறிவில் தேறாத ஏராளமான இளைஞர்கள் இப்போது உள்ளனர்!

இன்றுள்ள எழுத்தாளர்கள் புதிய பாணிகளை—வழி முறைகளை—வகுக்க நினைக்கின்றனர்.

எழுத்துகள் மலிந்துள்ள அளவிற்குப் புதிய சொல்லாக்கங்கள் பொலிந்துள்ளனவா?

உணர்ச்சிகளின் பல்வேறு அசைவுகளை; அதிர்வுகளை; நெகிழ்வுகளை எழுத்தாக்கி வெளிப்படுத்தும் வித்தையில் போதிய அளவு வளர்ந்துள்ளோமா?

சிந்தனைக்குரியது. ''அவளது கை அவன்மீது பட்டதும் ஏதோ ஓர் உணர்வு உடலெங்கும் பரவியது.''

''இனந்தெரியாத ஓர் அச்சம் அவனைப் பிடித்து உலுக்கியது.''

''ஏனோ அப்படியிருந்தான்'' — என்றெல்லாம் எழுதப்படுவதை அடிக்கடி படிக்கிறோம்.

குயில் குரல் எழுப்பியபோது காட்டில் எழுந்த இந்த ஒலி 'ஏதோ' ஓர் ஒலி என்றுதான் சொல்லப் பட்டிருக்கும். பின்னர் குயிலுக்குரியது எனக் கண்டு அந்த ஒலிக்கென்றே ஒரு சொல் வந்துவிட்டது. மயிலுக்குரிய குரலும் அடையாளம் காணப் பெற்று, சொல்லொன்றைப் பெற்றுவிட்டது.

குயில் கூவுவதை, மயில் அகவுவதைத் தமிழ் இலக்கியத்தில் கேட்கிறோம்.

இவ்வாறெல்லாம் ஏதோ ஓர் ஒலியை 'இன்ன ஒலி' என்று அடையாளம் காட்டி அதைச் சுட்டும் சொல் இது என்று கூறிவிட்ட நிலையில்தான் தமிழ் வளர்ந்தமொழி என்று பெருமை பெறுகிறது.

இன்றைய நிலை யாது? 'ஏனோக்களையும்', 'ஏதோக்களையும்' போட்டே சமாளித்து எழுத் தாளர்களும், அதைச் சகித்துக்கொள்ள வாசகர் களும் முன்வந்துவிட்டால் குறிப்பிட்ட சூழ்நிலையில் ஏற்பட்ட உணர்வுகளை, சிந்தனையில் பிடித்துச் சொற்களாக வடிக்கும் முயற்சி, குன்றிக் குறைந்து, மங்கி மறைந்துவிடாதா?

சில எழுத்தாளர்கள் ஒன்றினைச் சொல்ல விரும்பு கிறார்கள். அதற்கென அவர்கள் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தும் சொல், சொல்லவந்த கருத்தை முழுமையாக வெளிப்படுத்துவதில்லை. அவர்கள் ஆழ்ந்து சிந்திக்காமல் அகப்பட்ட சொல்லைப் பெய்து எழுதி முடித்துவிடுகிறார்கள்.

இன்று இந்த அரைகுறைத் தனத்தை, நம்மில் பலர் பொறுத்துக்கொள்ளக்கூடும். இதைவிட நல்ல பொருத்தமான சொல்லைப் பெய்திருக்கலாமே என்று வருந்தியவாறே தொடர்ந்து மேலே படித்துக் கொண்டு போய்விடக்கூடும். ஆனால், நாளைய இளைஞர்கள், எழுத்தாளர் பயன்படுத்திய சொல் தான் முற்றிலும் சரியான சொல் என்று எண்ணி விடக்கூடுமே!

மேலே காட்டிய குறைபாடுகள் சுட்டிக் காட்டப் பட வேண்டாவா?

இன்ன இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள 'ஏனோவை' அல்லது 'ஏதோவை' எடுத்துவிட்டு இவ்வாறு எழுதியிருக்கலாம்; இந்த இடத்தில்வரும் சொல்லிற்குப் பதிலாக இச்சொல்லைப் பயன்படுத்தி யிருந்தால் பொருள் முழுமையாக வெளிப்பட்டிருக் கும் — என்றெல்லாம் திருத்தும் பணியைச் சிலர் செய்யலாமே! முற்றக்கற்ற வித்தகர்கள் இன்றைய ஏடுகளையும் படிக்கத்தான் வேண்டும்; அவை பயனுள்ள வழிகளில் செல்கின்றனவா என்று பார்க் கத்தான் வேண்டும். செல்வாக்குள்ள ஏடுகள் சில பக்கங்களை ஒதுக்கி இப் பணியினை ஊக்குவிக்கத் தான் வேண்டும். வினாக்களும், எதிர் வினாக்களும், சர்ச்சைகளும் எழத்தான் செய்யும்! எழட்டுமே!!

''உயர்ந்த கற்பு சீதையுடையதா? கண்ணகி யுடையதா?'' — என்றெல்லாம் பட்டிமன்றங்கள் நடக்கின்றனவே!

''சொல்லாக்கம் சரியா? பிழையா..?''

''சொற்றொடர் பொருந்துமா? பொருந்தாதா?''

என்று வாதிடுவது வளர்ச்சிக்குத் தேவை!

சமாளித்தலும் சகித்தலும், மொழி நலத்திற்கும் வளத்திற்கும் உகந்தனவன்று!

சரிபார்த்தலும் சரியானவற்றைக் காணலுமே மொழிக்கு வளம் சேர்க்கும் வழிகளாகும்!



புதியதோர் உலகு செய்வோம்

எங்கெலாம் மானிடம் இன்முகம் காட்டுமோ
அங்கெலாம் தமிழர்கள் அன்பினைக் காட்டுவார்
உலகெலாம் ஊரெனும் ஊரெலாம் உறவெனும்
கலகமில் வாழ்க்கையைக் கவிதையில் நாட்டுவார்!

அறத்துயர் தமிழர்கள் துயரறக் கூடுவார்
திறத்துயர் மக்களில் சிறப்புற வாழுவார்
குன்றெனும் இடத்திலே நாமென நிற்பவர்
அன்றெனத் தோன்றினால் அன்றே அகலுவார்!

தமிழர்கள் திறமையில் தனிப்புகழ் கொண்டவர்
இமையென விழிகளை எங்கணும் காப்பவர்
அத்தகு தமிழர்தம் அன்புயர் தாயகம்
இத்தரு ணத்திலே எழுந்தது மேலுற !

பொன்னுயர் நாட்டினைப் புதியதோர் உலகமாய்
தன்னுயிர் போலவே தமிழர்கள் காத்தனர்
இந்தநாள் நல்லநாள் இன்பமே நிறையும்நாள்
இந்தியா தமிழரை எதிர்நோக்கி நிற்கும்நாள்!

கற்றவன் மேலவன் கடுந்தொழில் செய்பவன்
உற்றவன் எனும்பெயர் உறுவதே தமிழ்க்கடன்
பசியெனத் தோன்றுவார் பகைவர் ஆயினும்
புசியெனச் சொல்லுவோம் புதியதோர் உலகிலே!

நீரிலா நதியிலே நீர்வரும் விரைவிலே
போரிலா அமைதிகாண் புதியதோர் உலகிலே
எங்கணும் தொழில்மயம் எங்கணும் கலைமயம்
பொங்குமோர் சுகம்வரும் புதியதோர் உலகிலே!

கல்விஇல் லாதவர் கடமைஇல் லாதவர்
இல்லைஎன் றாக்குவோம் இனியதோர் உலகிலே
இனப்பகை மொழிப்பகை எப்பகை யாயினும்
நினைப்பவர் தம்மையே நெருப்பிலே வீழ்த்துவோம்!

சிரிப்பவர் களிப்பவர் ஜெயிப்பவர் என்பவர்
இருப்பிடம் எங்களின் இனியதோர் தாயகம்
ஆடுவோம் ஓடுவோம் ஆனந்தம் பாடுவோம்
கூடுமோர் கொள்கையில் குறிவைத்து நாடுவோம்!

இல்லைஎன் கின்றதோர் சொல்லினைத் தமிழிலே
இல்லைஎன் கின்றவா றேத்துவோம் உலகிலே !
நல்லர சாக்கினை நன்றிஎன் தெய்வமே
வல்லவர் அவர்களால் வாழ்கஎன் தாயகம் !

அரசவைகவிஞர் கண்ணதாசன்

கெட்டபோரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

உலகத்தை நாம்படைக்க வில்லை. இந்த
உலகத்தில் இருப்பவற்றைக் கொண்டு, நாமோ
பலவற்றைப் படைத்துள்ளோம். சாதித் துள்ளோம்
படிப்படியாய் வளர்ந்துள்ளோம். மேலும் இங்கே
கலைபடைத்தோம் காவியங்கள் படைத்தோம். கட்டுக்
கதைகளையும் நாம்படைத்தோம். பொருள்கட் கெல்லாம்
விலைபடைக்க வும்தெரிந்து கொண்டோம். தீய
வேற்றுமைக்கு வித்திடவும் தெரிந்து கொண்டோம்.

ஆசைகளுக் கதிகாரம் கொடுத்தோம். நெஞ்சில்
ஆணவத்தை நாம்வளர்த்தோம். ஆண வத்தால்
நாசத்தை நாகரிக மென்று சொல்லி
நமைநாமே ஏமாற்றிக் கொண்டு வந்தோம்.
நேசத்தை வளர்க்காமல் மேல்கீழ் என்னும்
நிலைமைதனை மாற்றாமல், சமுதா யத்தில்
பாசத்தை வளர்க்காமல், ஒவ்வோர் நாளும்
படைதிரட்டி மிரட்டுவதால் என்ன லாபம் ?

கொலைசெய்தல், சூதாடல், கற்ப ழித்தல்,
கொள்ளையிடல், கட்குடித்தல், இவற்றால் தோன்றும்
கலகங்கள், வேலையில்லாத் திண்டாட் டங்கள்
கண்ணீரைக் காட்டுகின்ற வறுமை இந்தப்
பலநிலைகள் சமுதாயப் போர்க ளாகும்.
பயிரழிக்கும் பூச்சிகளைப் போன்ற தாகும்.
நிலைகுலைத்து நிம்மதியைக் கெடுக்கும் இந்த
நிலைமைதனை உடனேநாம் மாற்ற வேண்டும்.

வெண்ணிலவில் குடியேற முயற்சி செய்யும்
விஞ்ஞான யுகமேநம் யுகமென் றாலும்,
கண்மூடி வழக்கங்கள் சாதி பேதக்
கற்பனைகள் பிரிவினைகள் போராட் டங்கள்
மண்முட்டை உலகிலின்றும் ஒழிய வில்லை.
மதவெறியும் சண்டைகளும் குறைய வில்லை.
பண்பட்ட சமுதாயம் அமைய வேண்டின்
பாழ்படுத்தும் இவற்றையெலாம் ஒழித்தல் வேண்டும்.

ஏற்றத்தாழ் வில்லாத சமுதா யத்தை
இவ்வுலகில் நாம்காண வேண்டு மாயின்
மாற்றுவதை மாற்றித்தான் ஆக வேண்டும்.
மாற்றங்கள் இல்லையெனில் வளர்ச்சி ஏது?
நேற்றிருந்த நிலைவேறு ! சமுதா யத்தின்
நினைவுகளும் நிகழ்ச்சிகளும் இன்று வேறு.
வேற்றுமையால் விளைகின்ற தீமை தன்னை
விரைவில்நாம் வேரோடு சாய்க்க வேண்டும்.

உவமைக்கவிஞர் சுரதா

பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்

போற்றும் பாரத புண்ணிய பூமிக்கு
மேற்கில் சுதந்திரச் சூரியன் உதித்ததால்
கிழக்கு வானம் வெளுக்கவு மில்லை;
மண்டிய காரிருள் மறையவு மில்லை;
இரவே எங்கள் இனியதா யகத்தின்
தேசிய நேரமாய் ஆனது இங்கே!
வானம் விடிந்தும் வாழ்க்கை விடியாமல்
போனது நாம்செய்த புண்ணியம்; பாரதி
'என்று தணியுமிச் சுதந்திர தாகம்'
என்ற பாடலை இன்றும்நாம் பாடலாம்!
விற்க வந்தவர் வாங்கிய நாட்டுக்கு
அற்புத மாயவர் அளித்த சுதந்திரம்
பிர்லா மாளிகை பெரிய வாசலில்
கூர்க்கா வேலைக்குப் போனது— ஏழை
ஏழை யாகவே இருந்தால் தானே
வாழையடி வாழை மரபுகள் தொடரும்!
நிமிர்ந்த மாளிகை நித்தமுங் கட்டியே
வளைந்து போன மனிதர் களுக்கு
வயிறுகள் எரிவதே வழக்க மானதால்
அடுப்புகள் எரிய அவசிய மில்லை!
'ஓட்டு'ப் போடும் ஒரேஒரு நாளவர்
வீட்டுப் பானைக்கு விழாநா ளாகும்!
அந்தநாள் மட்டுமே இந்திய சுதந்திரம்
வந்து போமவர் வாசலில்; இங்கே
குப்புறக் கிடக்கும் கஞ்சிப் பானைகள்
அப்போது மட்டுமே அண்ணாந்து பார்க்கும்!
மேடையில் பேசும் ஒலிபெருக்கி மட்டுமே
வாடகைக் காக வந்ததில் லை; பலர்
மேடையில் பேசும் சமத்துவம் கூட
வாடகைக் காக வந்ததே இங்கே!
தனியுடை மைக்கே பொதுவுடை மையதும்
விநியோகம் செய்யும் விளைபொருள் ஆனதால்
வாழ்த்துவோம் நாமும் வாயுற
வாழிய பாரத மணித்திரு நாடே!

மாண்புமிகு
சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்
புலவர் புலமைப்பித்தன்

புனிதமோடு அதை எங்கள் உயிரென்று காப்போம்

விழிசிவப்பா தணல்சிவப்பா என்று நம்மை
வியப்புறுத்தும் உலைக்களத்தில் பற்றும் செந்தி
குழிவயிற்றின் பசிக்கனல்போல் எரிய, அங்கே
கொல்லனவன் உலைத்துருத்தி ஊதுங் காற்று
தொழில்புரிவோன் பெருமூச்சுப் போல வீசத்
தூக்கிவந்த வல்லிரும்பைப் பழுக்கக் காய்ச்சி
எழிலுறவே சம்மட்டி கொண்டு தாக்கி
எண்ணியவா றுருவுபெற ஆக்கி வைத்தான்.

உடலுயிரைப் பொருளாகக் கருதா திந்த
உலகத்தை உருவாக்க முயன்ற தோள்கள்
கொடுமைகளை மிடிமைகளை வறுமை தந்த
கோணல்களை எத்தனைநாள் சுமக்கும்? மேலும்
அடிமையெனப் படிகளென ஆக்கி வைத்தால்
அத்தனையும் எத்தனைநாள் பொறுக்கும் உள்ளம்?
இடியெனவே முழங்காதோ அந்த வுள்ளம்?
என்றேனும் நிமிராவோ அந்தத் தோள்கள்?

வறுமையெனும் உலைக்களத்தில் அடுக்கி வைத்த
மதம்சாதி பட்டினிநோய் மூடம் என்ற
கவிகளிலே உணர்ச்சியினை மூட்ட, வீசும்
காற்றெனவே பெரும்புரட்சி தோன்ற, அங்கே

உரிமையெனும் போராட்டச் செந்தி பற்றும்
உறிஞ்சிவரும் இரும்புகளை அதனிற் காய்ச்சிச்
சரிவுபடாப் பொதுவுடைமைச் சட்டம் என்ற
சம்மட்டி யாலடித்தால் உருவ மாகும்.

போராடும் உலகத்தைச் சாய்க்க வேண்டின்
புதியதோர் உலகத்தைப் படைத்தல் வேண்டும்;
நீரோடு நிலம்நெருப்பு வானம் காற்று
நிறைபொருள்கள் தனியுடைமை ஒருவர்க்
வேரோடு சாய்க்கின்ற துணிவு வேண்டும்; [கென்றால்
விளையாட்டுப் பேச்சாலே பயனே இல்லை;
யாரோடும் பகைவேண்டா; ஒன்று பட்டால்
யாவுமிங்குப் பொதுவாகும் புதுமை பூக்கும்.

இருட்டுலகில் விடிவெள்ளி எழுதல் கண்டோம்;
இனியதொரு வைகறையும் வருதல் கண்டோம்;
சுருட்டுபவர் எவரென்று தெரிந்து கொண்டோம்;
தூங்கிவந்த விழியிமைகள் மலர்ந்து நோக்க
உருத்துவரும் செங்கதிரோன் எழுந்து விட்டான்;
உலகமெலாம் தெளிவுபெற விளங்கிற் றிங்கே;
பொருள்துறையில் பிறதுறையில் சமமே கண்டு
புனிதமுடன் அதைஎங்கள் உயிர்போல் காப்போம்.

கவிஞர் முடியரசன்

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்

'பேரறிவு படைத்தவர்நாம்!' எனநி மிர்ந்து
பேசுகின்றோம்! பேருயிர்நாம்; உயிரி னத்தில்
ஆறறிவு நமக்கேதான் என்று பேசி
ஆர்ப்பாட்ட மாய்க்கையை வீசு கின்றோம்!
வீரமனம் ஈரமனம் கொண்டு முன்னோர்
விளங்கியதாய் முழங்குகின்றோம்! தமிழன் [இன்று
சாரமற்ற சக்கையென இருக்க லாமா ?
சரித்திரத்தின் பெருமைகளை மறக்க லாமா ?

மனம்மனித உணர்ச்சிகளின் நடன மேடை!
மானம்தான் தமிழனுக்குப் பிறவி ஆடை !
பணம்பண்ணத் தவிக்கின்ற மக்க ளுக்குப்
பண்புகளைக் காப்பாற்றக் கவலை யுண்டா ?
குணப்பெருமை முன்னோரின் பெருமை; கற்றோர்
குறள்கூறும் அன்புடைமை தனைஎ டுத்துத்
தினம்மக்கள் மத்தியிலே சொல்ல வேண்டும்;
தீமைகளை நாம்விரட்டி வெல்ல வேண்டும் !

அன்புள்ள இடத்தினிலே இல்லை வம்பு !
அன்பில்லார் வாழ்க்கையிலே ஏது தெம்பு ?
பண்புகளில் தலைசிறந்த பண்பே அன்பு !
பகைமைக்கும் வரும்கூச்சம் அன்பின் முன்பு !

நண்பர்களின் நெஞ்சமிதன் குடியி ருப்பு !
நம்அன்பின் அடையாளம் புன்சி ரிப்பு !
அன்பேதான் உயிர்ப்பிறப்பின் ஆதி மூலம் !
அன்பின்றேல் உலகிற்கே கேடு காலம் !

வாலாட்டும் நாய்கூட அன்பைக் காட்ட !
வம்புசெய்து வாலாட்டும் மனித ருக்கோ
மேலோட்ட மாய்ப்பழகும் ஈன புத்தி !
மேலான நம்பெரியார் அண்ணா காந்தி
பாலூட்டும் தாய்காட்டும் அன்பு காட்டிப்
பழகினரே மக்களிடம் ! பிறந்து விட்டோம்;
நாளோட்டிக் கதைமுடிப்போம் என்றில் லாமல்
நல்லன்பு வழிநடப்போம்; பெயரெ டுப்போம் !

வாடிக்கொண் டிருந்தமுல்லை தன்பால் அன்பு
வைத்துத்தேர் வழங்கியவன் வள்ளல் பாரி !
ஆடிக்கொண் டிருந்ததொரு மயிலின் மேலே
அன்புவைத்துப் போர்வையினை அளித்தான் பேகன் !
பாடிக்கொண் டிருந்ததமிழ்ப் புலவ ரெல்லாம்
பாங்கான தமிழின்மேல் அன்பு வைத்தார் !
ஈடில்லாத் தமிழர்களே ! உலகம் உய்ய
இதயமெலாம் அன்புநதி யினில்ந னைப்போம் !

கவிஞர் பொன்னிவளவன்

இது எனது என்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

'நான்'
தனது உரத்த ஓசையைப்
பிறர்
உதடுகளிலிருந்தே உறிஞ்சுகிறது.

ஒரு 'நான்'
நிமிர்ந்து திமிர
வளைக்கப் படுகின்ற
முதுகுத் தண்டுகள் எத்தனை ?

எனது, எனது,
என்று 'நான்' ஏறிச்செல்லும்
ஏணிப் படிகளில்
நசுங்கும் தலைகளை யார் கணக்கெடுத்தார்?

வினாடி விரல்களை, 'நான்'
விரிக்கிறது — பலர்
யுக முகத்தில் இரத்தக்கீறல்
விழுகிறது.

பிறரின்
தூக்கங்களைப் பிழிந்து
தனது கனவுகளையும், பிறரின்
பகல் மைதானங்களில்
தனது வசந்த இரவுகளையும்
கொழுக்க வைக்கும், 'நான்'
முள்முள்ளாய்த் தனது காதில்
உச்சரிப் பாவதை
நியாயம் — எத்தனை நாள்கள் பொறுக்கும் ?

'இது எனது ...... இது எனது ......'
இந்தத்
தன்னலப் புன்னகையைச்
சிலர் ஆராதிக்கலாம்.
பலர் அதற்கு முலாம்பூச
முயற்சியும் செய்யலாம்.
சட்டம் அட்சதை போடலாம்...... ஆனால்
மானுட நியாயம்,
அந்தப் புன்னகையைச் சமூகப் பூவை
அரிக்கும் புழு என்றே
பிரகடனப் படுத்தும்.

வீட்டுக்கு வீடு — வைகறை
வித்தியாசப் பட்டால் — இனி,
கிழக்கு
உதைக்கப் படும்!

நீதிநூல் வெளிச்சத்தில்
'இது எனது' ...... 'நமது இவையாக'
மாறிவிடாது — ஏனெனில்
நெருப்பின் சூட்டில் மட்டுமே
நிகழும் இரசவாதம் அது !

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்

எண்ணில வீரர்தம் இன்னுயிர் வழங்கி
ஈட்டிய விடுதலை இன்றெம் நாட்டில்
எப்படி உள்ளது என்பதை எண்ணுவீர் !
"சுக்கா மிளகா சுதந்திரம் ?" என்றார்
நித்திரைக் கவிஞர்கள் மத்தியில் தோன்றிய
முத்திரைக் கவிஞராம் முண்டாசு பாரதி !
தன்னிலை பெற்றநாம் தாயகம் காத்திடத்
தாகம் வளர்ப்போம் தன்னலம் மறப்போம் !

"உடல்பொரு ளாவி மூன்றையும் ஈந்தனர்
முன்னோர்" என்கிற பழங்கதை பேசுதல்
ஒன்றினைத் தவிர, "தாய்நாட் டினுக்காய்
துரும்பையும் ஈந்திடத் தயங்குகின் றனரே"
என்கிற இழிபெயர் வந்திட லாமா ?
இதுவா விடுதலை காக்கின்ற பண்பாம் ?
கடமை யுணர்வெனும் கனலின் நடுவே
நாட்டை மறந்தநம் அயர்வினை எரிப்போம் !

பொதிகை மலைதோன்றி, மதுரை அரங்கேறி,
புலவர்கள் நாவினில் பொருந்திய மொழிதமிழ் !
அவரவர் தாய்மொழி அரியநல் அமிழ்தமே !
பிறமொழிக் கலைகளில் வல்லுநர் ஆயினும்
தாய்மொழி யாளர்கள் இருவர் சேர்ந்திடின்
தத்தம் மொழியிலே, கன்னலும் கைத்திடக்
கலந்து ரையாடல் உலகினில் இயல்பு !
"ஆனால் இங்கோ தமிழரிற் சிலபேர்
திரைப்படம் ஆயினும் தாய்மொழி விரும்பார்
வெறுப்புடன் தம்மொழி தாழ்த்தியும் பேசுவர்"
என்றே யுலகம் இழிமொழி பேசிட
அரைகுறை யாக அறிந்தவோர் மொழியாம்
ஆங்கிலம் தனிலே உரையா டுதலே
உலகத்தில் மேன்மை என்பதும் சரியோ ?
தாய்மொழிப் பற்றெனும் உணர்வாம் கனலிடைத்
தமிழை மறந்தநம் அயர்வினை எரிப்போம் !

பெண்மை தாய்மை, இறைமை என்றே
கண்டார் திரு.வி. கலியாண சுந்தரர் !
பெண்மை வாழ்க என்றே போற்றினர்
பாரதி மற்றும் பலப்பல கவிஞர் !
அந்தப் பெண்மையின் நிலையிந் நாட்டில்
எப்படி உள்ளது ? எவ்விதம் உள்ளது ?
அட்டையில் போடவும் சட்டையில் போடவும்
கட்டாயம் தேவை பெண்களின் படமே !

கணவனை இழந்த காரிகை தனக்குக்
கையும் காலும் இருக்கிற தென்றே
எண்ணியும் பாரா எழுத்தா ளர்கள்
பெண்மையை விற்கிறார் என்றே கதைக்கிறார்
அபத்தக் கதைகள்; ஆபாச வருணனை !
இதனால் பெண்கள் மனங்கவல் கின்றார் ;
தாய்மை உணர்வெனும் கனலின் நடுவே
பெண்மையைத் தூற்றும் அயர்வினை எரிப்போம் !

கவிஞர் திருமதி அரசு மணிமேகலை

ஒரு பொருள் தனிஎனும் மனிதரைச் சிரிப்போம்

அன்புள்ள தோழர்களே
அவனை அழையுங்கள்...

அழிகின்ற பழையயுக
அவமான அடையாளம்
அவனை அழையுங்கள்...

தனியுடைமை நோய்ப்பித்தம்
தலைக்கேறும் நோயாளி;
காலப் புயல் சீறக்
கலகலத்து நொறுங்கி விழும்
பஞ்சாங்கக் கோட்டைக்குள்
பதுங்குகின்ற பெருச்சாளி;
ஒருலகத் தத்துவத்தின்
உதயத்தைக் கைவிரலால்
மறைக்கக் கருதுகின்ற
வரலாற்றுக் கிறுக்கன்...

அன்புள்ள தோழர்களே
அவனை அழையுங்கள்...

சமதருமப் புது வெளிச்சம்
கண்கூசத் தடுமாறும்
அதிசயப் பிராணியதை
அழைத்துவந்து நிறுத்துங்கள்;
உடைமை பொதுவாகும்
உலகத்து மன்றத்தின்
நடுத்தெருவில் நிறுத்துங்கள்;
நவயுகத்து மழலைகளைக்
கூட்டிவந்து தனியுடைமைக்
கொடுவிலங்கைக் காட்டுங்கள்;
'ஏ ஏ ஏ! பழைய யுக
ஈனப் பிறவி' யென்று
காணட்டும்; பிள்ளைகளும்
கைகொட்டி நகைக்கட்டும்!
'கொல்'லென்று சொல்லாமல்
'கொல்'லென்று சிரிக்கட்டும்!

அன்புள்ள தோழர்களே
அவனை அழையுங்கள்...

தன்மான நீரெடுத்துத்
தலைகுளிர ஊற்றுங்கள்;
புரட்சிச் சிவப்பெடுத்துச்
செம்புள்ளி குத்துங்கள்;
மறைந்து வரும் சேரிகளின்
மண்ணெடுத்து நெற்றியிலே
நெறிகெட்ட பேதைக்கு
நிறையவே பூசுங்கள்;
சொத்துச் சுக போகச்
சுரண்டல் மா மன்னனுக்கு
வெள்ளிப் பிரம்பெடுத்து
வீசி விளாசுங்கள்,
தங்கப் பிரம்பெடுத்துச்
சாத்துங்கள்! சாத்துங்கள்!

அன்புள்ள தோழர்களே
அவனை அழையுங்கள்...

நீலநெடு வானம் போல்
நீர்போல் நிலத்தைப் போல்
நெருப்புப் போல் காற்றுப் போல்
நிருமித்த பொருள்களெல்லாம்
மானிடர்க்குப் பொதுவென்ற
மந்திரத்தைச் சொல்லுங்கள்;
தீராத நோயென்று
தெளிவாகி விட்டதென்றால்
ஊருக்குள் 'மியூசியத்'தில்
ஒருபுறத்தில் பூட்டுங்கள்;
தலைமுறைகள் தாம்பார்த்துச்
சரித்திரத்துப் பூச்சியென்று
கை காட்டிக் கை காட்டி
காலமெல்லாம் சிரிக்கட்டும்...

அன்புள்ள தோழர்களே
அவனை அழையுங்கள்......

கவிஞர் சிற்பி

இயல் பொருள் பயன்தர
மறுத்திடில் பசிப்போம்

●

பொருள்களை யல்ல
பூமியையே
புதுப்பிப்போம்.

இங்கே
பொதுவாக்க வேண்டியது
கடமைகளை மட்டுமல்ல
உடைமைகளையும்தான்.

●

எங்கள்
இதய ரேகைகளில்
எழுதிய தல்லவோ
தேசத்தின்
உதயரேகைகள்
ஒவ்வொன்றும் ?

●

நிதியைச்
சிலர்க்கு மட்டுமென்று
நிர்ணயப் படுத்தும்
விதியை எழுதிய
விரல் எது ?

அவ் விரல்—
அடித்தல் திருத்தல்
அறியாததோ ?

●

நலங்கள் அனைவரையும்
நாடிவர வில்லையென்றால்
பசியை எல்லாரும்
பங்கிட்டுக் கொள்வோம் !

●

பசித்திருப்போம் —
உணவை உட்கொண்டால்
உறங்கிடுவோம் என்பதனால்
பசித்திருப்போம் !

●

சுறுசுறுப்போடு
சுற்றி வருவதால்
கடிகாரமுள்
காலத்தின்
ஓட்டப் பந்தயத்திலேயே
கலந்து கொள்கிறது.

உரசப் பயந்து
ஒடுங்கி கிடந்தால்
தீக்குச்சியை
விளக்குக்கூட
விவாகரத்துச் செய்கிறது !

●

இனிமேல்............
அமைதி
நம் கைகளில்
ஆயுதமாகட்டும்.

கருணைக்
கவசம் தரித்த
நமது
பாசப் பாசறைகளில்—

போர்க்கொடியாய்
உயர்த்தப்படட்டும்
நம்முடைய
புன்னகைகள்.

பசியை
நாம் ஒரு
படையெடுப் பாக்குவோம் !

கவிஞர் மு. மேத்தா

ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்

உறவெனும் சிறகினை உலகெலாம் விரிப்போம்
உள்ளத்தின் சன்னலை ஊர்வாழத் திறப்போம்
உரிமையின் பாடலைக் குரலெடுத் திசைப்போம்
உண்மையாம் வீணையை மீட்டியே களிப்போம்
அறிவெனும் மேடையில் நடம்பயின் றிருப்போம்
அன்பெனும் ஓடையில் விளையாடிக் குளிப்போம்
இருளிலாத் துயரிலாச் சமூகம் அமைப்போம்
எல்லார்க்கும் நலமான சமநீதி வகுப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம் !

நல்லறம் நாடோறும் தழைத்திட உழைப்போம்
நலிந்தாரை மகிழ்வெனும் உச்சிக் கழைப்போம்
கல்வியால் முன்னேறும் முறையெலாம் கற்போம்
கண்கவர் மனங்கவர் கலைகள் சமைப்போம்
வெல்லறுந் திறன்மிகு நாட்டைப் படைப்போம்
வீழாத வெற்றியில் நித்தம் திளைப்போம்
'இல்லையே' எனும்சொல்லின் இடுப்பை ஒடிப்போம்
எல்லைகள் இல்லாஓர் உலகை வடிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம் !

புதுமையை வரவேற்று வாழ்த்துப் படிப்போம்
பொல்லாத மடமையின் முதுகெலும் பொடிப்போம்
பொதுமையாம் பூக்காட்டில் முன்னேறி நடப்போம்
பொய்மையாம் காட்டாற்றை மெய்யால் கடப்போம்
'கதிஇலை' எனுங்குரல் கதைகள் முடிப்போம்
கரையேற ஒற்றுமைப் பூச்சரம் தொடுப்போம்
'இதுவிதி, ஊழ்' எனும் ஏய்ப்பைத் தடுப்போம்
ஏற்றமெனும் நாற்றுயர மூச்சுங் கொடுப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம் !

காதலை வீரத்தைக் கண்போலக் காப்போம்
கடமையின் வடிவாகி நற்புகழ் சேர்ப்போம்
தீதிலாத் தன்மான வழியெலாம் ஏற்போம்
திறமைகண் டால்உடன் வணங்கிவர வேற்போம்
கோதிலாக் கொள்கைகள் வளரநீர் வார்ப்போம்
குழப்படி விளைவிக்கும் நெடும்பள்ளம் தூர்ப்போம்
ஏதிலார் நலம்பேணி இன்பமுர சார்ப்போம்
இயற்கையை அறிவியலைப் பேணும்நூல் நூற்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம் !

கவிஞர் பொன்னடியான்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்

நேயமிகு வையத்தில் நிலைபெற்ற மொழிபலவுள் நிமிர்ந்து நிற்கும்
தூயமனம் கொண்டவரே தொல்மொழிகள் ஆய்ந்தவரே சுடர்த மிழ்போல்
ஆயஒரு மொழியதனை யாங்கேனும் கண்டதுண்டோ ஆத லாலே
ஏயவரும் அறியும்படி இயம்பிடுவோம் தமிழிற்கிணை எதுவு மில்லை.

படைத்துள்ள இயக்கியத்தால் பண்பட்ட இலக்கணத்தால் பகரா நின்ற
தடையற்ற சொல்லழகால் தருகின்ற கருத்துயர்வால் சார்ந்த நல்ல
நடுநின்ற மனத்தவரே நன்குணர்ந்து கூறிடுவீர் நானி லத்தில்
வடுவற்ற தமிழ்மொழிபோல் உயர்ந்தமொழி இல்லையென வகுத்தல் பொய்யோ.

காலத்தை வென்றமொழி கணக்கற்ற புலவர்தமைக் கண்டு மேலாம்
சீலத்தை உலகினருக் கீந்தமொழி சீர்த்திமொழி சிறுமை தன்னை
ஆலமென ஒதுக்குமொழி அறிவுலகம் வியக்குமொழி ஆற்ற லுள்ள
கோலமொழி கொன்றொழிக்க இயலாத ஜீவமொழி தமிழாம் அன்றோ.

தட்டுமுனம் தகர்ந்தமொழி தடுமாற்றம் கொண்டமொழி சரண மாகிக்
கெட்டழிந்து போனமொழி கிழடுதட்டி அழிந்தமொழி கீர்த்தி மாய்க்கப்
பட்டமொழி பலவென்று கூறிடுமே வரலாறு பாரின் மீது
மட்டில்லாப் பகைகண்டும் வளையாத திறம்தமிழின் வாகை யன்றோ.

சொல்லாலே நோய்தீர்க்கும் தூயநலம் பெற்றமொழி துன்பம் நீக்க
வல்லமொழி மல்லர்களும் மற்றுமுள சொல்லர்களும் தீர்க்க ஒண்ணாத்
தொல்லைதரு சிக்கலையும் தீர்க்குமொழி துறந்துநின்றார் ஆற்றல் போன்று
கொல்விடத்தை இறக்குமொழி தமிழென்ப தாலதற்கீ டெதுவும் உண்டோ.

அன்புமய மானமொழி அறிவுதனை வளர்க்குமொழி அண்டி வந்த
அன்னியரும் கற்றுநலம் பெற்றமொழி அனந்தங்கலை கொண்டு மேவி
இன்னுமூப் பறியாத இளமையுடன் திகழுமொழி என்ப தாலே
மன்னுலகில் தமிழ்மொழிபோல் உயர்ந்தமொழி இல்லையெனல் வாய்மை யாமே.

கவி கா. மு. ஷெரீப்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

வள்ளுவன் தன்னை இந்த
வையத்திற் களித்த தாலே
தெள்ளுதமிழ் நாடு வானின்
தெய்வப்புகழ் கொண்ட தென்று
அள்ளுதமிழ்க் கவிதை கொண்டு
அமரகவி பாரதி தான்
உள்ளும் புறமு மொன்றாய்
ஓதிவைத்தான் நெஞ்சத் தாலே !

முப்பால் எனப் பகுத்தே
முழுப்பால் என வடித்தே
அப்பால் எதுவு மில்லை —
அறிந்திட—என முடித்தே
எப்பால்—எங்கெ னினும்
இசைப்பால் சுவைப் பதற்கே
இப்பால்—இருந்த வாறே
ஈந்தனர் எமது கோமான் !

அறம்பொரு ளின்ப மென்ற
அடிப்படை மூன்று கொண்டு
திறம்பட வாழ்வ தற்குத்
திருக்குற ளொன்றே யார்க்கும் !
நிறமது பிறப்பில் உண்டு —
நிலையினில் ஒன்றே யென்றார் !
மறமதும் அன்பின் சார்பில்
மலர்வதாம் என்றார்; வென்றார் !

போற்றிடும் பூமிக் கிங்கே
பொன்னான வொரு பெருமை —
நேற்றிருந் தார் ; இன் றில்லை
நெடும்பெ ருமைஇது வென்றார் !
சாற்று மிந்தப் பூமிக்குச்
சத்திய மாய்மறு பெருமை
ஏற்றுமொரு வள்ளு வந்தான்
என்பது வும்பொய் யாமோ ?

மோனத்தின் விளக்கே யான
மோகனக் குமரி வாழ்த்த —
ஞானத்தின் விளக்கே யான
ஞானியரும் போற்றி நிற்க —
வானத்தின் விளக்கே யாகி
வந்தவொரு வள்ளு வர்தான்
தானத்தின் விளக்கே யாகித்
தனியொளியை வீசு கின்றார் !

ஆழியுள் அமிழ்ந்து போன
அரியநிலம் குமரிக் கண்டம் —
தாழியுள் திருக் குறளாய்த்
திரும்பவும் கிடைத்த தென்றே —
வாழிய வாழி யென்று
வளர்புகழ் பாடும் வையம் —
வாழிய வாழி யென்றே
வள்ளுவம் போற்றி நிற்போம் !

கவிஞர் வானம்பாடி

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு

திருவார்ந்த நலத்தினுடை உச்சி! ஓங்கும்
தெளிவார்ந்த கருத்துக்கு முதலாம், இன்பக்
கருவார்ந்த கொண்டல்பெய் அமிழ்தம்! உள்ளக்
கனலிருந்து புறப்பட்ட அறவி ளக்கு!
அருளார்ந்த தமிழ்முனிவன் இளங்கோ தந்த
ஆன்மீக நுட்பத்தின் அன்புக் கன்னல்!
பொருளார்ந்த பெட்டகத்தின் புதுப்ப டைப்பு!
புதுமைக்கும் புதுமைசெய் பண்பின் ஆடி!

காதல்நெறி தளர்ந்தவன்தான் உலகின் மற்றைக்
காணுபிற நெறிகளினைக் கண்ணாய்க் கொண்டு
ஈதலறம் இரக்கமுடன் வளர்ந்த போதும்
இணையில்லாப் பெருஞ்செல்வம் பெற்ற போதும்
நீதிநெறி பிறழ்ந்துமனை வெறுத்த பாவம்
நில்லாது! கொன்றுயிரைக் குடிக்கும் என்று
வேதநெறி அறிகோவ லன்தன் பேரால்
விரும்புதமிழ் நெறியுணர்த்தும் சிலம்புச் செல்வம்!

மூவேந்தர் தனித்துழன்ற வீழ்ச்சி போக்கி
முதுதமிழின் பேராலே தனிஓர் நாடாய்
நாவேந்து தமிழெடுத்தே ஒருமைப் பாட்டை
நந்தமிழாம் செந்தமிழ்க்கே தந்த ஆரம்!
காவேந்து மலைசூழ்ந்த சேர நாட்டுக்
கவிவல்லான், விண்ணிடிக்கும் இமயத்தார்க்கு
மாவேந்தர் தமிழர்மறம் உணர்த்திக் காட்டி
மகுடத்தை வரலாற்றில் சூட்டும் பேறு!

தலைமைகொளும் கலைகளெலாம் அந்த நாளில்
தமிழறிஞர் நமின்மூத்தார் கால டிக்கீழ்
நிலைபேறு பெறுதற்கே தவம்கி டந்த
நிகரில்லாத் தன்மைகளைச் சிலம்பு காட்டும்!
உலைநீரில் அமிழ்அரிசி நெருப்பால் வேகும்
உண்மைபோல் சமயநெறிக் கொள்கை நாட்டும்!
விலைமதியாக் கற்புநெறி, ஊழ்அரசி யல்சேர்
உண்மைஉணர் படிப்பினைகள் சிலம்பின் மாட்சி!

துறவறத்தின் தலைமைக்கோ முத்த மிழ்க்கோ,
சுடர்அறிவுக் கலைஞர்கோ இளங்கோ; ஆய்ந்த
பிறஅறங்கள் பெற்றியெலாம் சிலம்பில் தந்தான்!
பெருமையினை உலகறிய வைப்ப தற்குத்
திறனின்றி நாமிருந்து பயனொன் றுண்டா?
'செகப்பியரின்' நூல்வெல்லும் சிலம்பை வையம்
உறவுகொளும் வழிசெய்வோம்; பிறநாட் டாரும்
ஒப்பும்வகை காவியத்தைச் சுவைக்கச் செய்வோம்!

நெஞ்சையள்ளும் சிலம்பென்றான் 'பார திப்'பேர்
நிலைத்தமகா கவிஞன்;யான் பெருங்க விக்கோ
அஞ்சாமல் அறைகூவல் விடுக்கின் றேனால்
அகிலத்தின் சிலம்புதனிக் கதிரின் வெள்ளம்!
நெஞ்சள்ளும்! காவியஞ்சூழ் சுவைகள் துள்ளும்!
நீணிலத்தின் ஒழுக்கவித்தாம்! சிலம்பு போன்ற
நஞ்செய்யாம் இலக்கியத்திற்(கு) ஈடே இல்லை!
நற்றமிழா உழைகழனி வாழ்வு தேடு!

பெருங்கவிக்கோ

இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

அன்புள்ள தமிழ்மகளே ! ஆசைத் தோழி !
ஆருயிரே நலந்தானா ? எவ்வா றுள்ளாய்?
என்னுயிரில் கலந்திருக்கும் இனிய தேனே !
ஏதேதோ உன்னிடத்தில் பேச வேண்டும் ;
என்னுள்ளே முகிழ்த்திருக்கும் ஏக்க மொட்டை
என்னவளே உன்முன்தான் மலர்த்த வேண்டும்;
என்னருமைத் தமிழ்த்தோழி ! இங்கே வாவா !
இப்படியென் கைபற்று ; என்னை நோக்கு !

எத்தனைநாள் ஆயிற்று உன்னைப் பார்த்து ;
எத்தனைநாள் ஆனதடி உன்கை பட்டு;
முத்தனைய உன்முகத்தைப் பார்த்துப் பார்த்து
முந்நூறு கேள்விகளைக் கேட்க வேண்டும் ;
இத்தனைநாள் நீவளர்ந்து நிலைத்த தற்கும்
இப்போது நீஇங்கே இளைத்த தற்கும்
இத்தரையில் என்னென்ன கார ணங்கள் ?
இனியவளே தமிழேநீ சொல்வாய் என்றேன்.

புன்னகைத்தாள் தலையாட்டிப் புருவங் காட்டிப்
புரிந்ததென்றாள் சிரித்தேன்நான்; ஐயோ பெண்ணி
மென்னகையில் மெல்லமெல்லக் கோபச் சாயல்
மினுமினுக்கத் தொடங்கியது ; கொந்த ளிப்பில்
அன்னநடை யாள்எழுந்தாள் ; எனைப்பி டித்தே
ஆவேச நடைநடந்தாள் ; ஆடிப் போன
என்னுடைய நிலைகண்டே எனைவி டுத்து,
எக்காளக் குரலெடுத்து முழங்க லானாள்.


பேருக்கும் புகழுக்கும் பேரா சைக்கும்
பிறந்துவரும் படைப்புகளால் நொந்து, நெஞ்ச
வேருக்குள் நெருப்புவைத்துப் பொசுக்கி விட்டு
விளையாடும் இலக்கியத்தால் வெந்து, நஞ்சை
ஊருக்குப் புகட்டிவிடும் உத்தே சத்தில்
உருவாகும் எழுத்துகளால் நைந்து, வஞ்சர்
யாருக்காய் எழுதுகிறார் என்று வெம்பி
யார்யாரா லோஅழுதே இளைத்தேன் தோழி.

கண்துடைப்புக் காழ்ப்புகள், வெளிவே டங்கள்,
காசாசை, கயமையிலே தோய்ந்த வஞ்சம்
எண்ணிப்பார் இவைதானே எழுதுங் கூட்டம் ?
எழுத்தாளர் எங்கேடி எழுது கின்றார் ?
விண்ணகத்து நிலவோடும் மீன்க ளோடும்
விளையாட வேகவிக்கு நேர மில்லை ;
மண்ணகத்தில் என்மகிமை கூட்டு தற்கு
மாந்தரிலே எத்தனைபேர் சொல்லேன் தோழி.

பிறநாட்டுச் சாத்திரங்கள் மொழிபெ யர்த்துப்
பெருமைகொண்ட சேதியெலாம் போதும் போதும் ;
பிறநாட்டு நூல்களையே கற்றுக் கற்று
பிசகாமல் படியெடுத்துத் தன்நூல் என்றே
அறங்கெட்டுப் பதிப்பிக்கும் அநியா யங்கள்
அம்மம்மா இன்றோடு போதும் போதும் ;
திறங்கொண்ட துறைகளிலே தமிழின் நூல்கள்
திக்குகளின் விழிவிரியத் தோன்ற வேண்டும் !

கவிஞர்

பொன்மணிவைரமுத்து



நெய்தற் பரப்பிலோர் நினைவுக் காவியம்

* நெய்தலில் நெய்த மேக ஆடைகள்; அவை,
பூமிக்கான கடலின் வரங்கள். அனைத்து
மரங்களுக்கும் வழங்கிய வரிசையை
அந்த மேகங்கள் கட்டுமரங்களுக்கு மட்டும்
கைவிரித்து விட்டனவே !

* மணற் சர்க்கரையின் மனித எறும்புகள்; அவர்கள்
மீனவர்கள் ! உழைப்பின் முகவரிகள்; பூமிக்கு
ஓய்வெடுத்துக்கொள்ள மட்டும் வரும் கடலின் பிள்ளைகள் !
எளிமையின் கோயில்களாய் அவர்களின் குடிசைகள்;
அங்கே விழித்திருக்கும் ஆயிரம் பிரச்சினைகளுக்கு
மத்தியில்தான் அவர்களின் உறக்கங்கள் !

* காற்றைச் சலித்துக் கொண்டிருக்கும் அந்த
வலைகளில் அவ்வப்போது மீன்களும் அகப்படுவதுண்டு.
ஆனால் வாழ்க்கை மட்டும்தான் இன்னும்
அகப்பட மாட்டேன் என்கிறது. விரைவில்
வாழ்க்கையும் அகப்படும். அது நிச்சயம் !

இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

அன்புள்ள தமிழ்மகளே ! ஆசைத் தோழீ !
ஆருயிரே நலந்தானா ? எவ்வா றுள்ளாய்?
என்னுயிரில் கலந்திருக்கும் இனிய தேனே !
ஏதேதோ உன்னிடத்தில் பேச வேண்டும் ;
என்னுள்ளே முகிழ்த்திருக்கும் ஏக்க மொட்டை
என்னவளே உன்முன்தான் மலர்த்த வேண்டும் ;
என்னருமைத் தமிழ்த்தோழீ இங்கே வாவா !
இப்படியென் கைபற்றி ; என்னை நோக்கு !

எத்தனைநாள் ஆயிற்று உன்னைப் பார்த்து
எத்தனைநாள் ஆனதடி உன்னைப் பாட
முத்தனைய உன்முகத்தைப் பார்த்துப் பார்த்து
முந்நூறு கேள்விகளைக் கேட்க வேண்டும் ;
இத்தனைநாள் நீ [illegible]
இப்போது நீஇங்கே இணைந்திருக்கும்
இத்தரையில் என்னென்ன காரணங்கள்
இனியவளே தமிழ்நங்கை சொல்வாய் என்றேன்.

புன்னகைத்தாள் தலையாட்டிப் புருவம் கொட்டிப்
புரிந்ததென்றாள் சிரித்தேன்நான் ஐயோ பெண்ணே
மென்னகையில் மெல்லமெல்லக் கோபச் சாயல்
மினுமினுக்கத் தொடங்கியது ; கொந்த ளிப்பில்
அன்னநடை யாள்எழுந்தாள் ; எனைப்பி டித்தே
ஆவேச நடைநடந்தாள் ; ஆடிப் போன
என்னுடைய நிலைகண்டே எனைவி டுத்து,
எக்காளக் குரலெடுத்து முழங்க லானாள்.

பெருக்கும் புகழுக்கும் பேரா சைக்கும்
பிறந்துவரும் படைப்புகளால் நொந்து, நெஞ்ச
வேருக்குள் நெருப்புவைத்துப் பொசுக்கி விட்டு
விளையாடும் இலக்கியத்தால் வெந்து, நஞ்சை
ஊருக்குப் புகட்டிவிடும் உத்தே சத்தில்
உருவாகும் எழுத்துகளால் நைந்து, வஞ்சர்
யாருக்காய் எழுதுகிறார் என்று வெம்பி
யார்யாரா லோஅழுதே இளைத்தேன் தோழி.

[illegible] கற்புகள் வெளிவே டங்கள்,
[illegible] கயமையிலே தோய்ந்த வஞ்சம்
[illegible] இவைதானே எழுதுங் கூட்டம் ?
[illegible] எங்கேடி எழுது கின்றார் ?
[illegible]வோடும் மீன்க ளோடும்
[illegible] வேறுவிக்கு ஈர மில்லை ;
[illegible] காமகிளை கூட்டு தற்கு
[illegible]லே எத்தனைபோ சொல்லேன் தோழி.

[illegible] மொழிபெ யர்த்துப்
[illegible] செய்தியெல்லாம் போதும் போதும் ;
பிற[illegible]யே கற்றுக் கற்று
பிசகாமல் படியெடுத்துத் தன்னூல் என்றே
அறங்கெட்டுப் பதிப்பிக்கும் அநியா யங்கள்
அம்மம்மா இன்றோடு போதும் போதும் ;
திறங்கொண்ட துறைகளிலே தமிழின் நூல்கள்
திக்குகளில் விழிவிரியத் தோன்ற வேண்டும் !

கவிஞர்

பொன்மணிவைரமுத்து



தமிழனின் பிறந்தகம்

மொழிஞாயிறு ஞா. தேவநேயன்

ஒரு வீட்டிற்கு ஆவணம் போன்றே, ஒரு நாட்டிற்கு வரலாறு உரிமைச் சான்றாகும். ஆயின், ஓர் ஆவணத்தில் எதிரிகளால் ஏதேனும் கரவடமாகச் சேர்க்கப்படலாம். அதுபோன்றே, ஒரு நாட்டு வரலாறும் பகைவரால் அவர்க்கேற்றவாறு மாற்றப்படலாம். ஆதலால், இவ்விருவகையிலும், உரிமையாளர் விழிப்பாயிருந்து தம் உரிமையைப் போற்றிக் காத்துக்கொள்ளல் வேண்டும்.

தமிழக வரலாறு, ஆரியர் தென்னாடு வந்ததிலிருந்து கடந்த மூவாயிரம் ஆண்டாக மறைக்கப்பட்டும் மாற்றப்பட்டும் வந்துள்ளது. இதன் உண்மையான நிலைமையை அறிதற்கு, இந்திய வரலாற்றைத் தெற்கினின்று தொடங்கல் வேண்டும். இந்திய வரலாற்றுத் தந்தையாகக் கருதப்படும் **வின்சென்று சிமிது** (Vincent Smith), தம் 'இந்திய முந்திய வரலாறு' (Early History of India) என்னும் பொத்தகத்தில், பேரா. **சுந்தரம் பிள்ளை**யின் கூற்றைப் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்.

India Proper in the South

"The attempt to find the basic element of Hindu civilization by a study of Sanskrit and the history of Sanskrit in Upper India is to begin the problem at its worst and most complicated point. India, south of the Vindhyas—the Peninsular India—still continues to be India Proper. Here the bulk of the people continue distinctly to retain their pre-Aryan features, their pre-Aryan languages, their pre-Aryan social institutions. Even here, the process of Aryanization has gone indeed too far to leave it easy for the historian to distinguish the native warp from the foreign woof. But, if there is anywhere any chance of such successful disentanglement, it is in the South; and the farther South we go the larger does the chance grow.

The scientific historian of India, then, ought to begin his study with the basin of the Krishna, of the Cauvery, of the Vaigai, rather than with the Gangetic plain, as it has been, now long, too long, the fashion."—[*Tamilian Antiquary*, No. 2 (1908), p. 4.]

இந் நெறிமுறையைக் கடைப்பிடித்துத் தமிழக வரலாறு வரைந்தவர் பி. டி. சீநிவாசையங்கார், வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் என்னும் இருவரே.

ஒரு நாட்டு வரலாறு வரைதற்குப் பயன்படும் மூலவாய்கள் (Sources) பின்வருமாறு ஐவகைப்படும்:

1. மரபு வழக்கு (Tradition);
2. அயல்நாட்டார் குறிப்பு;
3. தொல்பொருட் சான்று (Archaeological evidence);
4. நாட்டிலக்கியம்;
5. நாட்டுமொழி.

பழம் பாண்டி நாடான பண்டைத் தமிழகம் கடலுள் முழுகிப்போனதனாலும், ஆரியர் வருகைக்கு

முற்பட்ட அனைத்திலக்கியமும் அழிக்கப்பட்டுவிட்டதனாலும் தொல்பொருட்சான்றும் பண்டையிலக்கியமும் தமிழக வரலாற்றிற்குப் பயன்படாவாறு அடியோடு இறந்துபட்டன. அதனால், இன்று வரலாற்றுச் சான்றாக உதவுவது பெரும்பாலும் மொழியே.

இற்றை இலக்கியச் சான்றுகள்

தமிழ் தோன்றியது தென்மாவாரியில் முழுகிப் போன குமரி நாடே. ஆதலால், தமிழன் தோன்றியதும் அந் நாடே. குமரிக்கண்டத் தென்கோடியில், பனிமலைத்தொடர் போலும் பன்மலையடுக்கத்துக் குமரிமலைத் தொடரும், அதனின்று பாய்ந்தோடிய பஃறுளியென்னும் கங்கை போலும் பேரியாறும் இருந்தன. அப் பழம்பாண்டி நாட்டையாண்ட பாண்டி வேந்தருள் ஒருவன் நெடியோன் என்பான்.

> ''முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.''
> (புறம். 9 : 10-11)

அவன் காலத்திலோ, பின்போ, ஒரு பெருங் கடல்கோள் நிகழ்ந்து, குமரிமலையும் பஃறுளியாறும் அதன் கரையிற் கட்டப்பட்ட பாண்டியன் தலைநகராகிய (தென்) மதுரையும் உள்ளிட்ட பழம் பாண்டி நாட்டின் தென்பெரும் பகுதியை முழுக்கி விட்டது. அதுவே தமிழிலக்கியங் கூறும் முதற் கடல்கோள். கடல்கோளுக்குத் தப்பிய அல்லது பிற்பட்ட பாண்டியன் ஒருவன், வடதிசையிலுள்ள பனிமலையையும் கங்கையாற்றையுங் கைப்பற்றி, தான் இழந்த குமரிமலைக்கும் பஃறுளியாற்றிற்கும் ஈடு செய்துகொண்டான். இதையே,

> ''அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
> வடிவே லெறிந்த வான்பகை பொறாது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன் வாழி''

என்று பாடினார் **இளங்கோவடிகள்** (சிலப். காடுகாண். 17-22).

அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி வடிவே லெறிந்து வான்பகை கொண்டவன், நெடியோனுக்கு முந்திய வடிம்பலம்ப நின்ற பாண்டியன். நெடியோன் முந்நீர்க்கு விழாக் கொண்டாடி அதனொடு நட்புப் பூண்டவன்.

குமரிக் கண்டத்தின் தென்பகுதி மூழ்கியபின், வடபகுதியில் நெய்தல் நிலத்தில், கதவம் (கபாடம்) அல்லது புதவம் அல்லது அலைவாய் என்று பெயர் பெற்ற இரண்டாம் பாண்டியத் தலைநகர் தோன்றிற்று. பின்பு அதையுங் கடல் கொண்டது. அஃது இரண்டாம் கடல்கோள்.

அதற்குத் தப்பிய பாண்டியன், தன்போல் எஞ்சியிருந்த தன் குடிகளைச் சோழ நாட்டிலும் சேர நாட்டிலும் ஒவ்வொரு பகுதியைக் கைப்பற்றிக் குடியிருத்தினான். இதனையே,

> ''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
> மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
> புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்
> கெண்டை
> வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்''

என்று **முல்லைக்கலி** (104 : 1-4) கூறும்.

''சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னும் இவற்றை, இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்'' என்று **அடியார்க்குநல்லார்** உரைத்ததும் இதுபற்றியதே.

இங்ஙனம், இரு கடல்கோள்களால் குமரிக்கண்டத்தின் தென்கோடியிலிருந்த பஃறுளியாற்றிற்கும் வடகோடியிலிருந்த குமரியாற்றிற்கும் இடைப்பட்ட நில நீட்சியை ''எழுநூற்றுக்காவதவாறு'' (ஏறத்தாழ ஈராயிரம் கல்) என்றும், அந் நிலப்பரப்புப் பகுதிகளை, ''ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரை நாடும், ஏழ்முன்பாலை நாடும், ஏழ்பின்பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ்குணகாரை நாடும், ஏழ்குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும்'' என்றும், **அடியார்க்கு நல்லார்** உரைத்திருப்பது, கடுகளவுங் கட்டுச் செய்தியாயிருக்க முடியாது.

அருச்சுனன் தெற்கே திருநீராட்டிற்கு வந்த பாரதக் காலத்திலும், அதற்குப் பிற்பட்ட **தொல்காப்பியர்** காலத்திலும் (கி.மு. ஏழாம் அல்லது ஆறாம் நூற்றாண்டு) பஃறுளி மதுரை நோக்கி, வடமதுரையென வழங்கிய வைகை மதுரை தோன்றவில்லை; குமரியாறு ஓடிற்று. பின்னர் அதுவும் கடலுள் மூழ்கிற்று. அதன் பின்னரே, ''தொடியோள் பௌவம்'' என்று **இளங்கோவடிகள்** குறிக்கவும், ''தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின்காறுங் கடல்கொண் டொழிதலால்'' என்று **அடியார்க்குநல்லார்** உரைக்கவும் நேர்ந்தது. குமரியாற்றைக் கடல்கொண்டது மூன்றாங் கடல்கோள்.

மணிமேகலை காலத்திற் புகார் கடலுட் புகுந்தது நாலாங் கடல்கோள். இறையனாரகப்பொருளுரையிலுள்ள முக்கழக வரலாறு, முதலிரு கடல்கோள்களைக் குறிக்கின்றது. இது நம்பத்தக்க செய்தியே.

பனிமலை கடலுட் பதுங்கியிருந்த தொன்முது பண்டைக்காலத்தில், நாவலந்தீவின் தென்பாகம் உயர்ந்தும் வடபாகம் தாழ்ந்தும் இருந்தன. பனி

மலை கிளர்ந்து குமரிமலை நாடு மூழ்கியபின், வடபாகம் உயர்ந்தும் தென்பாகம் தாழ்ந்தும், வட தென் திசைகள் முறையே உத்தரம் தக்கணம் எனப் பட்டன. ஒ.நோ.: கீழ்—கீழ்க்கு—கிழக்கு × மேல்—மேற்கு. உ (மேல், உயர்) + தரம் = உத்தரம். தக்கு = தாழ்வு. தக்குத் தொண்டை = தாழ்ந்த குரல் தொண்டை. தக்கு—தக்கணம் (Deccan).

வலத்தை அல்லது வல திசையைக் குறிக்கும் தக்ஷிண (L. dexter—dexterity) என்னும் வடசொல், தக்ஷ் என்னும் மூலத்தினின்று பிறந்ததாதலின், வேறு சொல்லாம். மானியர் உவில்லியம்சு சமற்கிருத ஆங்கில அகரமுதலியில் உத்தர (uttara) என்னும் சொல்லைப் பார்க்க.

தமிழ் தெற்கே தோன்றிய மொழியாதலால், தென்மொழி, தென்கலை, தென்னாடு, தென்னிலம், தென்புலம், தென்புலத்தார், தென்பாலி, தென்னகம், தென்பாண்டி, தென்மதுரை, தென்னன், தென்னவன் முதலிய சொல்வழக்கெழுந்தன.

இராமன் தன் கானக வாழ்க்கையில் அகத்தியரைக் கண்டபோது, பின்னவர் முன்னவனை அன்புடன் வரவேற்றதை, கல்வியிற் பெரியவரும் பாவலருள் மாவலருமான கம்பர்,

"நின்றவனை வந்தநெடி யோனடிப ணிந்தான்
அன்றவனு மன்பொடுத ழீஇயமுத கண்ணான்
நன்றுவர வென்றுபல நல்லுரைப கர்ந்தான்
என்றுமுள தென்றமிழி யம்பியிசை கொண்டான்."
(கம்பரா. அகத். 47)

என்று இனித்த தனித்தமிழ்ப் பாவாற் பாடி, தமிழின் கன்னித் தூய்மையையும், தென்குமரி நாட்டுத் தோற்றத்தையும், என்றுமழியாத் தன்மையையும், அகத்தியர் அதைக் கற்றுத் தேர்ந்ததையும், முத்தமிழிலக்கணம் இயற்றிப் புகழ் பெற்றதையும், ஒருங்கே தெள்ளத் தெரிவித்தார்.

The Tamils indigenous to South India

"Some writers conduct the ancient Dravidians with the self-confidence of a Cook's guide through the North-western or North-eastern mountain passes of India and drop them with a ready-made foreign culture on the banks of the Kaveri or the Vaigai. The slender evidence on which they rely for this elaborate theorizing is the fact that Brahui, a dialect spoken in the northern corner of India, possesses a few words allied to Tamil words. The only legitimate inference from this is that the Tamil language or a language allied to it prevailed up to the North-west province in ancient times. This inference is supported by another fact, viz., that the modern dialects of Northern India now called Sanskritic or Gaudian, have a fundamental grammatical framework and a scheme of syntax, the same as that of the Dravidian dialects, so much so that sentences from the one set of dialects can be translated into any one of the other set of dialects by the substitution of word for word, without causing any breach of idiom. These facts can only prove that people speaking dialects allied to Tamil once inhabited the whole of India and not that these people must necessarily have come into India from outside the country. No single fact has yet been adduced that compels us to believe that the ancient people of India were not autochthones."—(*The History of the Tamils* by P. T. Srinivasa Iyengar, p. 2.)

Where this evolution first took place

The five sub-division of the habitable regions occur contiguous to each other and in a small fraction of the earth's surface in India south of the Vindhyas. It is therefore easy to understand how increase of population and alterations in the natural supply of food-stuffs brought about here at different periods the migration of men from region to region and the consequent development of the different stages of human culture, the hunter, the nomad, the pastoral, the coastal and the agricultural, due to the different stimuli provided by the changing milieu; in other words, the geographical control of the growth of human civilization can be worked out and set forth clear as on a map, by a study of man's progress in this restricted portion of the surface of the earth. Outside India, these five natural regions occur on a vast scale, e.g., the Mullai, the vast steppe land extending from the Carpathians to the foot-hills of the Altais, the Kurinji or the great mountain chain from the Pyrenees to the Himalayas and beyond, forming a great girdle round the waist of mother earth, the Neydal, the coasts of the Mediterranean sea, and the Indian and the Atlantic oceans, and the Pālai, the great desert of Sahara and its continuation in Arabia, Persia and Mongolia." (*Ibid.*, p. 14.)

The myth of the importation of the South Indian languages from outside India

"Certain investigators assume that everything Indian must have been imported at some remote times from outside India. They hold that the speakers of primitive Tamil and other South Indian languages, to whom they give the name of the Dravidian race, must have settled in India from Central Asia. These theorists drag large bodies of ancient along the map of Asia and Europe as easily as chessmen are shifted on the chess-board, and make them wander aimlessly from country to country, merely to support

their baseless theories. It happens that certain words of the Brahui dialect of Baluchistan resemble certain Tamil words. To explain this solitary fact, which is susceptible of various interpretations, they will have it that an ancient Dravidian race, evolved somewhere outside India in the Asiatic highlands, undertook a pilgrimage to India through the north-western gate, and reached the extreme south through strange and devious ways. Foote constructs an itinerary for the wandering of these peoples, which is a specimen of perverse ingenuity without any historical evidence to support it. Surely the neolithians of India were not dumb animals, but spoke languages of their own. The simplest hypothesis under the circumstances is, as Tamil traditional history holds, that the Tamils and other allied peoples were indigenous and their languages were evolved where they are now spoken." (*Stone Age in India* by P. T. Srinivasa Iyengar, pp. 46-47.)

பேரா. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் ஆங்கிலத்தில் எழுதிய 'வரலாற்று முன்னைத் தென்னிந்தியா' (Pre-Historic South India), 'தமிழர் தோற்றமும் பரவலும்' (Origin and Spread of the Tamils) என்னும் இரு வரலாற்று நூல்கள், தமிழர் குமரி நாட்டில் தோன்றிப் பாரெங்கும் பரவியதை நடுநிலையாகவும் மறுப்பிற்கிடமின்றியும் விளக்கிக் கூறுகின்றன.

வடநூல்களுள், சதபத பிராமணம், ஒரு தென்திசைக் கடல்கோளுக்குத் தப்பிய பாண்டியனைத் திரவிடபதியென்று குறிக்கின்றது.

மொழியியற் சான்றுகள்

(1) தமிழும் அதன் திரிபான திரவிட மொழிகளும் இந்தியாவிற்குள்ளேயே வழங்குதலும், அவற்றுள் இலக்கியமுள்ள முதன்மையான நான்மொழியும் தென்னிந்தியாவிற்குள்ளேயே வழங்குதலும், அவற்றுள்ளும் தலைமையான தமிழ் தென்கோடியில் வழங்குதலும், அதன் வழக்கும் தெற்கிற் சிறந்திருத்தலும், வடக்கே செல்லச் செல்ல ஏனைத் திரவிட மொழிகள் இலக்கணமின்றியும் இலக்கியமின்றியும் பண்பாடின்றியும் சொல் வளமின்றியும் கொச்சையாகியும் மேன்மேலும் சிறுத்தும் சிதைந்தும் கலவையாகியும் போவதும், இந்தியாவிற்கு வெளியே சிதைந்த தமிழ் அல்லது திரவிடச் சொற்களன்றி மொழியேதும் வழங்காமையும்.

(2) இந்தியின் அடிப்படைச் சொற்கள் சிதைந்த தென் சொல்லாயிருத்தல்.

முதல்கருப்பொருட் சான்றுகள்

(1) கால வேறுபாடும் இயற்கை நிலைமைகளும் உயிரின வகைகளும் விளைவுப் பொருள்களும் தொன்றுதொட்டு மாறாதிருந்து வருதல்.

(2) சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள காரோதிமம் (காரன்னம்) இன்று ஆத்திரேலியாவிலும் தாசுமேனியாவிலும் மட்டும் இருத்தலும், தென்றிசைப் பெயருக்குக் காரணமான தென்னை மரம் தென்கிழக்குத் தீவுகளில் மட்டும் இயற்கையாக வளர்தலும்.

மறுப்பிற்கு மறுப்பு

மேனாட்டு இடப்பெயரீறுகட்குத் தமிழிலேயே பொருளிருத்தலாலும், குமரி நாட்டிலிருந்து நண்ணிலக் கடற்கரை நாட்டிற்கு முதற்கண் சென்ற மக்கள் நீள் மண்டையராயிருந்ததனாலும், ஊர் என்னும் மருதநிலக் குடியிருப்புப் பெயர் குமரி நாட்டிலேயே தோன்றியமையாலும், பருங்கற் கட்டட அமைப்பே சிறுகற் கட்டட அமைப்பிற்கு முந்துவது இயற்கையாதலாலும், இலாகோவாரி (Lahovary), பாலகிருட்டிணன் நாயர் முதலியோர் தமிழின் அல்லது தமிழரின் தொன்மையை மறுப்பது அறியாமை பற்றியதே யென்று கூறி விடுக்க.

முடிந்த முடிபு

தமிழ், தென்னாட்டிற்கும் தெற்கில் தென்மாவாரியில் முழுகிக் கிடக்கும் தென்கண்டத்தின் தென்கோடி நாடான தென்பாலியில் தோன்றிய தென்மொழியே. அதனால் அதைத் தோற்றி வளர்த்த தமிழன் பிறந்தகமும் அத் தென்புலமே.

இவ்வடிப்படையிலேயே, தமிழின் அமைப்பும் அதன் திரவிடத் திரிபும் ஆரிய வேறுபாடும் தெளிவான விளக்கம் பெறுகின்றன. இவ்வுண்மையை அறியாதார் அல்லது உணராதார் தமிழின் இயல்பை மட்டுமன்றி ஒப்பியன் மொழி நூலையும் அறியாதவரே யாவர்.

சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு



தனிநாயக அடிகள், M.A., M.Litt., Ph.D., D.D.

மற்ற நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டிவரும் இயல்பு இருபதாம் நூற்றாண்டில் விமானப் போக்குவரத்தோடு தோன்றியதோர் பண்பு என்று நினைக்க இடமேயில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே தமிழ்ப் புலவர் இப் பண்பைப் பாராட்டிப் பாடுவாராயினர். விரைவான போக்குவரத்தோடு பல்வேறு அரசுகளை இணைக்கும் கழகங்களே இல்லாத அக் காலத்திலேயே ஒரு நாட்டவர் மற்ற நாட்டினரோடு உறவு பாராட்ட விரும்பியுள்ளனர் என்பதற்கு நாம் அடிக்கடி கூறும் இரு செய்யுட்கள் நமக்கெடுத்து இயம்புகின்றன.

கணியன் பூங்குன்றனார் கூறிய,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் கொள்கை எல்லா நூற்றாண்டுகளுக்கும் பொருத்தமாகி இன்று உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் கோட்பாடாகவும் மிளிர்கின்றது. திருவள்ளுவர் கூறிய,

> "யாதானும் நாடாமா லூராமா லென்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு"
>
> (குறள், 397)

என்னும் திருக்குறட்பா, முன்பினும் நம் காலத்திற்குப் பொருத்தமான அறிவுரையாக விளங்குகின்றது. நாடுகள் பல; மக்கள் பலர். வேற்று நாடுகளின் மக்களையும், தத்துவத்தையும், பண்பையும், மொழிகளையும், இலக்கியங்களையும் நம் நாட்டில் உள்ளவைபோல அறிந்திருக்கவேண்டுமாயின் நம் வாழ்நாட்கள் போதாதாதலால், உயிரிருக்கும்வரை அவற்றைக் கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும் என்பது உள்ளடங்கும் கருத்தாகும்.

தமிழ் மக்கள் அக் காலத்திலேயே தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், நடுமேற்கு நாடுகளுக்கும் சென்றிருந்தனர் என்பதை வரலாற்று முறையில் அறிகின்றோம். கற்றோர்க்கு எங்குச் சென்றாலும் வரவேற்பு உண்டென்றும் அவர் பல நாடுகளுக்குச் சென்று வந்தனர் என்றும், அந் நாடுகளையும் நம் நாட்டினைப் போலக் கருதினரென்றும் அழகாகப் பழமொழி நானூறு நான்காம் செய்யுள் கூறுகிறது.

> "ஆற்றவும் கற்றார் அறிவுடையார், அஃதுடையார்
> நாற்றிசையும் செல்லாத நாடில்லை—அந்நாடு
> வேற்றுநா டாகா; தமவேயாம்—ஆயினால்
> ஆற்றுணா வேண்டுவ தில்."

'ஊர்', 'நாடு', 'கேளிர்' எனும் சொற்கள் தமிழ் மொழியின் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டிருக்கலாம்; ஆயினும் இம் மேற்கோள்கள் காட்டும் பரந்த ஆளுமையும் (Personality) மனித இன நலக் (humanism) கோட்பாடும் இலத்தீன் புலவர் தெறென்ஸ் (Terence) கூறிய "நான் மனிதன்; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று" எனும் அடியொன்றுடனேயே ஒப்பிடத் தகும். (Homo sum; Nil humani a me alienum puto). கோடன் ஓல்போட் (Gorden Allport) எனும் உளநூல்

வல்லுநரின் கூற்றின்படி செறிவுடைய முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதவை. முதல் முதல் அத்தகைய மனிதன், என்றும் விரிந்துகொண்டுவரும் ஈடுபாடுகளை வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்; பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் அவன் எவ்வளவிற்குப் பாடுபடுகிறானோ அவ்வளவிற்கு அவன் தன்னுடைய ஆளுமையை விரியச் செய்து செப்பமாக்குகின்றான். இரண்டாவது, பிறர் தன்னை எங்ஙனம் கணிக்கின்றார்களோ அவ்வாறே தன்னை அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும் (Self-Objectification). மூன்றாவது, தன்னுடைய வாழ்க்கைக்கு ஒற்றுமை நிறைவினைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும் (Unifying Philosophy of life-self-unification).

இலட்சியங்களைக் கடைப்பிடித்தும் கற்பித்தும் வருவதால்தான் சமுதாயம் முன்னேறி மக்களுக்கு வேண்டிய இன்பத்தையும் சீர்திருத்தத்தையும் நல்குகின்றது. இலட்சியங்கள் இல்லாத சமுதாயம் பாழாய்ப் போகும் என்னும் உண்மையைப் பண்டைக்காலத் தமிழரும் நன்குணர்ந்திருந்தனர். இலட்சியம் இல்லாதவன் வெறும் யாக்கை என்பதை "பூட்கை யில்லோன் யாக்கை போல" என்னும் அடியில் புலவர் ஆலத்தூர் கிழார் புறநானூற்றில் நிலைநாட்டுகின்றார்.

விரிவாகும் ஆளுமையை உருவாக்கும் நோக்கம் மக்கள் உள்ளத்தில் என்றும் இருந்தால், சமுதாயம் இன்பத்தை அளிக்கும் சமுதாயமாகக் காணப்படும். எவ்வளவிற்குப் பிறர் நலத்திற்காக மனிதன் பாடுபடுகின்றானோ அவ்வளவிற்கு அவன் ஆளுமை நன்கு வளரும். பிறருக்காகப் பணி செய்வதால்தான் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையைப் பண்புடைய வாழ்க்கையாக்குகின்றான். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் குறிக்கோள், வாழ்க்கையைத் தன்னலம் தேடும் துறையிலிருந்தெடுத்து ஆளுமையை நிறைவாக்கும் பண்பாக்குகின்றது. பிறர் நல இயல் (Altruism) எனும் பண்பு மக்கள் வரலாற்றில் படிப்படியாகத்தான் தோன்றும். நல்ல அறிவு வளர்ச்சியில்லாத சமுதாயத்தில் சொந்த இனத்தாரோடுதான் மனிதன் உறவு கொண்டாடுவான். தன்னுடைய குடும்பத்தையும் தன் சிறு இனத்தையும் (tribe) காப்பாற்றவே முயல்வான். படிப்படியாக அறிவு வளரவளர மக்கள் அனைவரும் எங்கு வாழ்ந்தாலும் தன் இனத்தவரென்றும், எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதல் வேண்டுமென்றும் சிந்தனை அவனுக்குத் தோன்றும்.

வெவ்வேறு பண்பாடுகள் வெவ்வேறு காலத்தில் பிறர் நல இயலைக் கற்பித்து வந்திருக்கின்றன. சீன நாட்டில் கி.மு. 604ஆம் ஆண்டில் பிறந்த லாவோட்சேயும் (Lao-Tse) அவருக்குப் பின்பு கொன்பூசியசும் (Confucius, கி.மு. 551-479) தம் காலத்திலேயே இந்தக் கொள்கையை ஒருவாறு தெளிவாகக் கற்பித்துப் பிறர்பாலும் தமக்குப் பொறுப்புண்டு என்னும் உண்மையை வற்புறுத்தினர். ஆனால் பிளாத்தோ, அரிஸ்டோட்டில் போன்ற கிரேக்கத் தத்துவ வல்லுநர்கள் கிரேக்கக் குடியினரை மட்டுமே தம் சிந்தனைக்குள் உட்படுத்தி, வேறு நாட்டினரைப்பற்றிக் கவலை செலுத்தவில்லை. பிறநாட்டார் தம் இலட்சிய அரசைக் கெடுக்காவண்ணம், தம் இலட்சிய அரசின் தலைநகரைக் கடலோரத்திலோ துறைமுகத்திலோ அமைக்காது அன்னியர் செல்லாதவாறு பத்துக்கல் கடற்கரையிலிருந்து உள்நாட்டில் அமைக்கவேண்டுமென்று கூறினர். பிராமண தருமசாத்திர நூல்கள் பிராமணர் அல்லாதாரைப்பற்றிக் கவனம் செலுத்தவில்லை. பண்டைக் காலத்தில் அவை கூறியது என்னவெனில்: 'விந்திய மலைத்தொடர்க்கும் இமயமலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே கருமபூமி; முத்தி பெறுவதற்கு அப்பூமியிலேயே பிறந்திருக்க வேண்டும்' என்பதே. தமிழ் மக்களிடமோ, ஸ்டாயிக்வாதிகள் கூறியதுபோல மக்கள் அனைவரும் உடன்பிறந்தாரென்றும், பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ வல்லவை அல்லவென்றும் கொண்ட நம்பிக்கை பண்டுதொட்டே நிலவியுள்ளது. இந்திய வரலாற்றின் பண்டைக் காலத்திலேயே இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் அறிஞர் கடைப்பிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது. எனவே, உலக ஒழுக்க இயலை (Ethics) நன்கறிந்து எழுதிய உலகமேதை அல்பேற் சுவைட்சர் திருக்குறளைப்பற்றி "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது" என்று கூறுவார்.

ஆனால், இத்தகைய கொள்கைகள் திருவள்ளுவர் காலத்திற்கு முன்பே தமிழ் மக்களால் போற்றப் பட்டுள்ளன.

தமிழ் இலக்கியத்தை ஆராயும்பொழுது, இப்பிறர்நலக் கொள்கையையும், பிறர் அன்பு உணர்ச்சியையும் முதல் முதல் பரப்புவதற்குக் காரணமாய் இருந்தவர் தமிழ்நாட்டுப் பாணரும் தமிழ்நாட்டுப் புலவருமாவர். பாணர்க்கும் புலவர்க்கும் சொந்த ஊரும் நாடும் உண்டு. ஆயினும் அவர்கள் தமிழ் உலகமெங்கும் சென்று அரசர்களையும் வள்ளல்களையும் மக்களையும் வாழ்த்தி வந்ததால் 'தமிழகம்' என்ற ஓர் ஒற்றுமை உணர்ச்சி உண்டாகியது. அவர்கள் சிறப்பாகக் கருதிய வள்ளல்களும் அரசர்களும் உளர். போர்க்காலத்தில் தம் சொந்த அரசர்களையும் வள்ளல்களையும் பேணினர். ஆயினும் எங்குத் தமிழ் மொழி பேசப்பட்டதோ அங்கெல்லாம் சென்று தம் பரிசில் வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். புலவர் தூதுவராகவும் நண்பராகவும் தமிழ்நாட்டு மன்னர் இடையில் சென்று போரைக் குறைக்கவும் நீதி வளர்க்கவும் முயன்றனர். எனவே,

தமிழ் அரசுகளிடம் நட்பும் உறவும் வளருமாறு பாடுபட்டு வந்தனர்.

பெருநில மன்னரும் குறுநில மன்னரும் உறவினை வளர்க்கக் காரணமாக இருந்தவை உடன்படிக்கைகளுமல்ல; பொது அரசியல் மன்றங்களுமல்ல; அவர்கள் அனைவரும் வளர்த்த தமிழ் மொழியே காரணமாக இருந்தது. அம்மொழி பரவிய நிலம் அனைத்தையும் 'தமிழகம்' என்றும் 'தமிழ்நாடு' என்றும் வாழ்த்தினர். இவ்வாறு வாழ்த்தியதால் மூவேந்தருடைய சொந்த ஆட்சியோ குறுநில மன்னருடைய சொந்த ஆட்சியோ குறையவில்லை. தமிழ், தமிழ் ஆற்றல், தமிழ்கெழுகூடல், தமிழ் கெழுமூவர், தமிழ்ப்பாவை, தமிழ்முழுதறிதல், தமிழ் நன்னாடு, தமிழ் நாட்டகம் என்னும் சொற்களும் சொற்றொடர்களும் பன்முறை சங்க இலக்கியத்திலும் சிலப்பதிகாரத்திலும் தோன்றுகின்றன. இச்சொற்கள் தமிழ் அரசரையும் தமிழ் மக்களையும் பெரும்பாலும் குறித்தாலும், தமிழ் இனத்தாரை ஒற்றுமைப்படுத்தும் கருவி தமிழ்மொழியென்பது தெளிவாகும்.

''தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானம்''
(புறம். 19 : 2)

''தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்''
(புறம். 51 : 5)

''வையக வரைப்பிற் றமிழகங் கேட்ப''
(புறம். 168 : 18)

தமிழ் மூவேந்தரைத் ''தண்தமிழ்க் கிழவர்''(புறம். 35 : 3) என்றும், தமிழ் நாட்டினை, ''பொதுமை சுட்டிய மூவருலகம்'' (புறம். 357) என்றும் தமிழ்ப் புலவர் பாடுகின்றனர். பிறநாடுகளைக் குறிப்பிடும்பொழுது வேற்று நாடோ பிற நாடோ என்று குறித்திடாது, மொழி மாறும் நாடு–மொழி பெயர் தேயம்–என்றே வரையறுத்துக் கூறுகின்றனர். பாணர்க்கும், புலவர்க்கும், இவர்கள் கற்பித்த மக்களுக்கும் இருவேறு பற்றுண்டு; ஒன்று தம் சொந்த மன்னற்கும், மற்றொன்று தமிழ்மொழி பேசும் தமிழ் மக்கள் வாழும் முழு நாட்டிற்கும் ஆகும். தமக்குள்ளே தமிழ் மன்னர் அடிக்கடி போரிட்டனர். ஆனால், வேற்று நாட்டவர் தாக்கும் போது, பன்முறை ஒன்று சேர்ந்து ''வடபுல மன்னர் வாட''ப் (புறம். 52 : 5) போரிட்டனர்.

செந்தமிழ்க் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரம் இவ்விருவேறு பற்றினை ஆழமான கருத்துடன் காட்டுகின்றது. தமிழ்ப் பற்றும் தமிழ் நாட்டுப் பற்றும் இக் காப்பியத்தில் அழகாகத் தோன்றுவதுடன் ஒவ்வொரு தமிழ் அரசின் பற்றும் பண்பாடும் மிளிர்கின்றன. வடபுல மன்னர் தமிழ் ஆற்றலை ஏளனம் செய்வதைத் தாங்க முடியாத அரசன், வடமலை மட்டும் படையெடுத்துச் செல்கின்றான்.

''அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கு''
(சிலப். 26 : 161)

''.................... ....அருந்தமி ழாற்றல்
தெரியாது மலைந்த கனக விசயர்''
(சிலப். 27 : 189–190)

வடநில மன்னரின் ஏளனத்தைத் தாங்க முடியாத தமிழரசர் தமக்குள்ளே போர் செய்யவும் பின் வாங்கியிருக்கமாட்டார்.

பாணரும் புலவரும் இயற்றிய இலக்கியம் பரவப் பரவ பிற தமிழ் அரசுகள்பற்றியும் அங்குள்ள மக்களுடைய வாழ்க்கைபற்றியும் செல்வங்கள்பற்றியும் தமிழ் மக்கள் அறிய வந்தனர். அகப்பாடல்களில் ஐந்து நிலங்கள்பற்றியும் புலவர் வருணித்ததால் தமிழ் நிலத்தின் பற்று மக்கள் உணர்ச்சியில் இடம் பெற்று வளர்ந்தது. சங்க காலத்தின் வரலாற்றைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கும் போர்கள், நட்புறவு, பேரூர்கள், மலைகள், வழிகள் இன்னோரன்ன செய்திகளிலிருந்தே அறிகின்றோம். அரசரின் பெயரும் வள்ளல்களின் பெயரும் அவ்விலக்கியத்தில் இருந்தே நமக்குத் தெரிய வருகின்றன.

அகத்திணை இலக்கியம் பல்வேறு முறைகளில் பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் வளர்த்தது. பெரும்பொழுது, சிறுபொழுது, எல்லா நிலங்களின் கருப்பொருள் இவற்றையெல்லாம் கட்டாயமான முறையில் புலவரும் பாணரும் இலக்கியம் பயில்வோரும் கற்று வந்தனர். தொல்காப்பியர் நிலத்தைப் பிரித்த முறை உலகின் பிரிவாகவே அமைந்தது.

''படுதிரை வையம் பாத்திய பண்பே''
(தொல். 948)

பாலை நிலத்துச் செய்யுட்களில் தலைவன் போர்ப் பொருட்டோ, பொருட் பொருட்டோ, கல்விப் பொருட்டோ, தூதின் பொருட்டோ, வேற்று நாடுகளுக்குச் சென்றதால் அந்த அந்த நாடுகளைப்பற்றி நினைப்பதற்கு வாய்ப்பு இருந்தது. மலைகளும், கொடிய விலங்குகள் உள்ள காடுகளும், முரசொலி கொட்டும் கடலும் தான் செல்ல முடியாத இடங்களைப்பற்றித் தலைவிக்கு எண்ணம் உண்டாக்குகின்றன.

களவொழுக்கத்திலும் கற்பொழுக்கத்திலும் பிற உயிரொன்றைக் காதலிப்பதாலும், குழந்தைகளைப் பேணுவதாலும், இருவருடைய ஆளுமையும் இன்னும் விரிவாக வாய்ப்புண்டு. புலவர் தம் செய்யுட்களில் தலைவன் போலும், தலைவி போலும், செவிலித்தாய் போலும், தோழி போலும் கற்பனை செய்து பாடுவதால் பிறர் தம்மை எவ்வாறு கருதுகின்றனர் என்று அறியும் பண்பும் அவருக்கு எளிதாக அமைந்திருக்கவேண்டும்.

அன்பின் வாழ்க்கையிலும் பிறருடன் கலந்து வாழும் முறைகளிலும் அல்லது பிறர் நல இயலை வளர்ப்பதிலும் தமிழ்ப் பண்பாட்டின் இன்றியமை யாத கொள்கை தோன்றுகின்றது. ஆய் என்னும் வள்ளலைப் போற்றுவதற்குக் காரணம் என்ன வெனின் அவன் நன்மையை நன்மைக்காகவே செய்து வந்தான். பிறர் போற்றுவார்களென்றோ வேறு நலன்களைப் பெறலாமென்றோ அவன் நன்மையில் ஈடுபடவில்லை என்பதே.

''இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்.''

(புறம். 134)

அவர்களுடைய குறிக்கோள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்வதாகும்.

'உண்டாலம்ம இவ்வுலகம்' என்னும் புறப்பாட்டு இந்தப் பண்பை அழகாக எடுத்துக் காட்டுகின்றது. இவ்வுலகம் உண்டு; இவ்வுலகம் உண்டென்பதை மக்கள் அறிவது எங்ஙனம்? இந்திரருடைய அமிழ்தம் கிடைப்பினும் தனியே உண்ணமாட்டார்; புகழெனின் உயிரையும் கொடுத்து வாங்குவர்; பழியென்றால் உலகம் முழுவதையும் பெற்றாலும் செய்யமாட்டார்கள். இத்தகையராகித் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவர் உலகில் இருப்ப தால்தான் உலகம் உண்டு என்று நாம் தெளிவாகக் காட்டலாம்.

''உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ....
....
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் ....
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.''

(புறம். 182)

இவ்வுண்மையையே திருவள்ளுவரும்,

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

(குறள், 996)

என்றும் கூறினார்.

பிறர்க்காக வாழும் மக்கள் இவ்வுலகில் இல்லை யென்றால் — நாம் வாழ்வது அரிது. பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும்.

பண்புடைமையெனும் அதிகாரத்திற்கு உரை கண்ட பரிப்பெருமாள் கூறுவார்: ''பண்புடைமை யாவது யாவர்மாட்டும் அவரோடு அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும், பகுத்து உண்டலும், பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை.''

''அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்''

(குறள், 997)

''நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்''

(குறள், 999)

என்று வள்ளுவரே உரைக்கின்றார். திருவள்ளு வரின் கருத்தையும் பிற ஆசிரியரின் கருத்தையும் ஒவ்வொரு தலைமுறைக்கும் ஏற்றவாறு விளக்குதல் நம்முடைய கடமையாகும். சிரிப்பு (humour) எனும் பண்பைப்பற்றி 18 நூற்றாண்டுகளுக்கு முன் தமிழ்ப் புலவர் கூறியிருப்பது எவ்வளவு வியப்பைத் தருகின்றது.

மன்னரையும் வள்ளல்களையும் புலவர் வாழ்த்தும் போது அவர்களுடைய வீரத்தைப் புகழ்ந்தேத்து வதோடு அன்னாரின் கொடைவன்மை, காட்சிக் கெளியராதல், 'நீர் அன்னசாயல்' இப் பண்பு களையும் பாராட்டுகின்றனர். இத்தகைய நல்ல பண்புடைய மன்னரும் வள்ளல்களும் இருக்கும் நாட்டில் மலர்களும், தென்றலும், சுனையும் சிறப் பான நறுமணத்தையும் தீஞ்சுவையையும் இன்பத் தையும் அளிக்கின்றன. எங்கும் இனிதாயிருக்கும் தென்றல் ஓரியின் கானத்தில் தவழ்ந்து வரும்போது இன்னும் இனிதாயிருக்கும். தண்மையுள்ள சுனை பாரியின் பறம்பில் இன்னும் பன்மடங்குத் தண்மை யுள்ளதாகும். நெல்லிக்கனியை உண்ட பின் தண்ணீரைக் குடித்தால் தீஞ்சுவை நாவிற்குத் தோன்றுகிறது. ஆனால், தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன் பண்ணனுடைய சிறு தோட்டத்தில் உள்ள நெல்லிக்கனியை உண்டபின் நீரைக் குடித்தால் இன்னும் பன்மடங்கு அதன் சுவை தெரியும்.

''தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவை ....''

(அகம். 54 : 13-16)

அமெரிக்காவின் பிறர் நல இயலைப்பற்றிச் சிறந்த ஆராய்ச்சி செய்துவந்த 'Pitrim A. Sonokin' என்பவர் ஒரு நூலில் கூறுவது என்னவெனில், மேலை நாட்டுச் செய்தித் தாள்கள் பெரும்பாலும் குற்ற வாளிகளையும் தீய செயல்களில் ஈடுபடுபவரையும் பற்றியுமே விளம்பரம் செய்துவருகின்றன; ஆனால், நன்மை செய்பவர்கள்பற்றியும் அவர்களின் நற் செயல்கள்பற்றியும் ஒரு சில செய்திகளே தருகின் றன. சமுதாய இயல் ஆராய்ச்சியும் அவ்வாறே குற்றவாளிகளையும் தீயோரையும் நன்கு படித்து வருகின்றது. ஆனால், தூய வாழ்க்கையில் ஈடுபடும் நல்லோரைப்பற்றிப் படிப்பதில்லை. தூயோர் ஒரு சமுதாயத்தின் ஆக்கப் பண்பைக் காட்டுகின்றவர்;

அவர்கள் காட்டும் அன்பும், பற்றும் இல்லையெனில் சமுதாயமே பாழாய்ப் போய்விடும்.

இதுகாறும் வடவேங்கடம் தென்குமரி ஆயிடை உள்ள நிலப் பரப்பில் விரிவான ஆளுமையின் வளர்ச்சியைக் கண்டோம். ஆனால், தமிழ் ஈடுபாடு தமிழகத்தோடு நிற்கவில்லை. பேரரசர் அசோக னின் காலத்திலேயே தமிழ் அரசுகள் நன்கு இயங் கின. காரவேலனின் கல்வெட்டிலிருந்து (கி.மு. 165) தமிழ் அரசுகளின் ஒற்றுமையும் புலப்படு கின்றது. தமிழகம் ஒதுங்கி ஒரு மூலையில் இருக்க வில்லை என்பதற்கு கிரேக்கத் தூதர் மெகஸ்தினிசும், கவுடில்யரின் நூலும், வடமொழிக் காப்பியங்களும், சங்க இலக்கியத்தில் நந்தர்மோரியரைக் குறிப்பிடும் இடங்களும் சான்று பகர்கின்றன.

சமயமும் வணிகமும் காரணமாக வட இந்தியா வுடன் தமிழ் மக்கள் நெருங்கிய தொடர்பை நிலை நாட்டினார்கள். வட இந்திய வணிகப் பொருள்கள் —வடவளம்— தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் குவிந்து கிடந்தன. வடநாட்டுத் தொழில் வல்லு நர் தமிழ்நாட்டு வினைஞரோடு சேர்ந்து அரும் தொழில்களைச் செய்துவந்தனர்.

''மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி..''
(மணி. 19:107-109)

வைதிக சமயம் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கி யதும், இமயமலையும், கங்கைப் பேரியாறும் தமிழ் மக்களாலும் ஒருவாறு வணங்கப்பட்டன. பிராமண சமயம் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலேயே சமண ரும் புத்தரும் வந்து சேர்ந்தனர். தம் சமய நூல்களில் உள்ள சிந்தனையை வடநாட்டு ஆசிரியர் தமிழில் கூறி வந்தனர். இவ்வாறு தமிழ்நாடு வட நாட்டுடன் நெருங்கிய உறவைப் பாராட்டி வந்தது.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறும் மறு பிறப்புத் தத்துவத்தின் பயனாகத் தமிழ்க் காப்பிய மாந்தர் வடநாட்டில் தோன்றினர்; வட நாட்டவர் தமிழ்நாட்டில் தோன்றினர். கண்ணகியும் கோவல னும் கபிலவஸ்துவில் பிறப்பதாகவும் புத்த சமயத் தைக் கடைப்பிடித்து முக்தி பெறுவதாகவும் கூறப் பட்டுள்ளது. கோவலனே முற்பிறப்பில் கலிங்கநாட் டரசன் சேவையில் இருந்ததாகவும், தமிழ் நாட்டில் பிறந்த ஆபுத்திரன் இன்னும் ஒரு பிறவியில் சாவக நாட்டின் அரசனாக இருந்ததாகவும் கூறப்பட் டுள்ளது.

வட இந்தியாவுடன் தொடர்புகள் வளர வளர கங்கையும் இமயமும் அடிக்கடி தொகை நூல்களில் கூறப்பட்டு வருகின்றன. இமயமலை, நீடிக்கும் உறுதிக்கு மேற்கோளாகக் காட்டப்படுகின்றது. அதுவே 'பொன்படு நெடுங்கோட் டிமயம்'. புகழ் விரும்புகின்றவர்கள் இமயக்கோடு போன்ற உயரம் அளவு அப் புகழை நிலை நாட்ட வேண்டும்.

''......................................இமயத்துக்
கோடுஉயர்ந் தன்ன தம்இசை நட்டுத்
தீதுஇல் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே.''
(புறம். 214 : 11-13)

நீண்ட வாழ்க்கைக்கும் பன்மைக்கும் உவமையாகக் குமரி ஆறு, காவேரி போன்ற மணல் நிறைந்த இடங்களைக் கூறுவதுடன், கங்கையையும் இமயத் தில் பெய்யும் மழையையும் உவமையாகச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள் புலவர்கள்.

''இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல் துளியினும் வாழிய பலவே.''
(புறம். 34 : 21-23)

சில புலவர்கள் இமயத்தையும் கங்கையையும் தமிழ் நாட்டு மலைகளுடனும் ஆறுகளுடனும் சேர்த்துப் பாடுகின்றனர்.

''வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்''
(புறம். 6)

''குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின்''
(புறம். 67)

சில வேளைகளில் இத் தெற்கு வடக்கு இணைப்பு, போராலும் வெற்றியாலும் வரும் பயனாகின்றது.

''................பொன்படு நெடுங்கோட்டு
இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி''
(புறம். 39 : 14-15)

''பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி!''
(சிலப். 11 : 19-22)

இன்னும் ஒரு புறப்பாட்டில் இமயமலையே இவ் வுலகைத் தாங்குகின்றது. ஆனால், தெற்கில் ஆய் வள்ளலின் குடியில்லையென்றால் உலகமே பிறழும்.

''வடதிசை அதுவே வான்றோ யிமயம்
தென்றிசை யாஅய் குடியின் றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே.''
(புறம். 132 : 7-9)

வட இந்தியாவில் தென்னாட்டிற்கு இருந்த ஈடுபாடு, ஒருவாறு வெளிநாட்டுத் தொடர்புகளும் இருந்த காலத்திலேதான். வணிகத்தின் பொருட்டு வெளி நாடுகளிலிருந்து வந்த மக்கள் தமிழ்நாட்டில்

வாழ்ந்து வந்தார்கள். இப் பிற நாட்டவர் துறைமுக நகர்களில் தம் இல்லங்களை அமைத்துத் தம் வணிகத்தை நடத்தி வந்தனர். நம் காப்பியங்கள் துறைமுகங்களில் பல்வேறு மொழிகள் பேசப்படு வதைச் சுட்டிக் காட்டுகின்றன. இப் பிற நாட்ட வரைப் 'புலம்பெயர் மாக்கள்', 'மொழிபெயர் தேயத்தோர்', 'யவனர்' என்றும் வருணிக்கின்ற னர். இருவேறு வணிகம் தமிழ்நாட்டில் நடை பெற்று வந்தது. ஒன்று, தமிழ்நாட்டில் உள்ள பொருள்களுக்கு (முத்தும், பவளமும், மிளகும்); இன்னொன்று, இந்தியாவின் கிழக்கே உள்ள நாடு களிலிருந்து வந்த பொருள்களுக்கு. வங்கத்திலிருந் தும், சீனத்திலிருந்தும், கடாரத்திலிருந்தும், சாவ கத்திலிருந்தும் கப்பல்களில் அந்த நாடுகளில் கிடைத்த பொருள்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து அங்கு இறக்கினர்; வசதியுள்ள காலத்திலே அதே பொருள்களை மேற்குத் திசைக் குச் செல்லும் கப்பல்களில் ஏற்றினர். இவ் வணிகம் காற்றைப்பொறுத்து நடைபெற்றது. ஒரு பருவக் காற்றோடு கீழ்த் திசையிலிருந்து கொண்டுவந்து இறக்கினர். இன்னும் ஒரு பருவக்காற்றுடன் மேலை நாடுகளுக்குக் கப்பல்களில் ஏற்றினர். இவ் வணிகம் நடைபெறும் பொருட்டு வேற்று நாடு களிலிருந்து பெருந்தொகையான மக்கள் தமிழ்நாட் டில் வாழ்ந்துவந்திருக்கவேண்டும். இவர்களுள் பலர் அராபியர், உரோமர், கிரேக்கர், சீனர், மலாயர் ஆக இருந்திருக்கவேண்டும். இத்தகைய வரலாற்று நிலையில், வள்ளுவருடைய ''யாதானும் நாடாமால் ஊராமால்'' என்னும் குறட்பா விரிவான புதிய விளக்கத்தைத் தர வல்லது.

திருக்குறளில் 'பூட்கைமகன்' அல்லது இலட்சிய புருடனுடைய இயல்புகள் பல கூறப்பட்டிருக் கின்றன. ஒன்று, பிறர்பால் அன்புடைமை.

> ''அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையா
> ரென்பு முரியர் பிறர்க்கு.''
>
> (குறள், 72)

இல்லற வாழ்க்கையின் நோக்கம் ஈகை, விருந் தோம்பல் போன்ற பண்புகளால் ஆளுமையை வளர்த்தல்.

> ''இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு.''
>
> (குறள், 81)

பகைவருக்கும் நன்மை செய்பவன் சான்றோன்.

> ''இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா
> லென்ன பயத்ததோ சால்பு!''
>
> (குறள், 987)

பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நட்புப் போன்ற அதிகாரங்களில் இச்சான்றோரின் இயல் புகள் எல்லாம் தரப்பட்டிருக்கின்றன. சிலப்பதி காரத்தில் கண்ணகி, கோவலனிடமிருந்து பிரிந் திருந்த காலத்திற்கு வருந்துவது விருந்தோம்பல் செய்யும் வாழ்க்கையை இழந்ததால்தான்.

> ''அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
> துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை''
>
> (சிலப். 16:71-73)

தமிழ் மக்கள் 'சான்றோன்' எனப்படும் இலட்சிய மகனைப் பாராட்டிய காலத்தில் இத்தாலிய நாட்டில் உரோமையர் Sapiens-அறிவுடையோன் எனப்படும் இலட்சிய புருடனைப் போற்றி வந்தனர். இவ்வாறு உலகின் பல பாகங்களில் ஒற்றுமைப் பண்புகளை நாம் காண்டல் கூடும். உரோமைய ருடைய 'சாப்பியன்ஸ்' அல்லது சான்றோன் சமுதாயத்திலிருந்து விலகி, தன் சொந்தப் பண்புகளை வளர்க்கவேண்டும்; நடுநிலைமையும் மனம் கலங்காமையும், நொதுமல் தன்மையும் துலக்கமாய்க் கொண்டவன் உரோமைய சான்றோன். அவன் துன்பத்தால் வருந்துவதும் இல்லை; இன்பத்தால் மகிழ்வதும் இல்லை. அவன் பற்றுகளை அறுப்பவன்; தீயவை செய்யாதவன்.

தமிழ் இலக்கியத்தின் சான்றோன் இருப்பதால் தான் உலகம் இருக்கின்றது. சான்றோர் தம் சான்றாண்மையில் குன்றுவாரெனின் உலகமே தன் தாங்கும் தன்மையில் குன்றும். ஸ்டாயிக் வாதிகளின் படி அவர்களுடைய இலட்சிய புருடர் ஒரு சிலரே. அச் சிலர் தனிமையாகத் தம் இல்லங்களில் வாழ்ந்து வருபவர். திருக்குறளில் சான்றோரோ பலர். ஒவ் வொரு மகனும் சான்றோனாகுதல் கூடும். அவன் அவ்வாறு ஆவதே கல்வியின் நோக்கம். ஒவ்வொரு தாயும் தன் மகன் சான்றோன் ஆதல் கூடும் என்று எதிர்பார்ப்பாள்.

தன் பிள்ளையைச் சான்றோனாக்குதல் ஒவ்வொரு தந்தைக்கும் கடனாகும். தமிழ்ச் சான்றோன் சமு தாயத்திலே வாழ்ந்து தன்னால் இயன்றவரை சமு தாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்வான். உரோ மருடைய சான்றோர் அரிதாகவே சமுதாயத்தில் தோன்றுவர். தமிழ்ச் சான்றோர் பலர் வாழும் ஊரே வாழ்க்கைக்கு இன்பத்தைத் தரும். பிசிராந் தையார் கோப்பெருஞ் சோழனுக்குக் கூறியதுபோல

> ''ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர்யான் வாழும் ஊரே!''
>
> (புறம், 191:67)

கிரேக்க உரோம எழுத்தாளர் தம்முடைய ஒழுக்கத் தத்துவங்களைப் பெரும்பாலும் பரந்து விரிந்த உரைநடை நூல்களாகவே எழுதினர். அத்தகைய நூல்களில் ஒரு பொருளைப் பல்வேறு கோணங்களி லிருந்து ஆராயவும் எடுத்துக்காட்டுகள் - கதைகள்- முதலியவற்றைக் கொண்டு விளக்கவும் கூடும்.

ஆனால், திருக்குறள் குறட்பாக்களாக அமைந்துள்ளது. செனக்கா (Seneca), மார்க்ஸ் அவுரேலியஸ் போன்ற தத்துவஞானிகள் தம் நூல்களின் பல பக்கங்களிலும், பல இடங்களிலும் 'நேரத்தையும் காலத்தையும் வீண் போக்காது அறத்திலும் மெய்யுணர்விலும் ஈடுபடுதல் வேண்டும்; ஏனெனில், வாழ்க்கை நிலையாதது' என்று வற்புறுத்துகின்றனர். வள்ளுவரோ குறட்பாக்களைக் கையாளுவதால் விரித்து விளக்காது ஒரே அடியில் அதே கருத்தைச் சுருங்கச் சொல்லுவார்.

''அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.''

(குறள், 36)

பிளாத்தோவும் அரிஸ்டோட்டிலும் பல நூல்களில் அரசியலைப்பற்றி விரித்துரைக்கின்றனர். திருக்குறளோ அறுநூறு குறட்பாக்களில் ஆயிரத்து இருநூறு அடிகளில், அரசியலுக்கும் குடிகளுக்கும் பொருந்தும் நீதிகளைக் கூறுகின்றது. பிளாத்தோ, அரிஸ்டோட்டில் காலத்தில் கிரேக்க நாட்டில் பரவியிருந்த கொள்கைகளைப் போலத் தமிழ்நாட்டிலும் நல்ல அரசைப்பற்றிய கொள்கைகள் வளம் பெற்றிருந்தன என்பதற்குத் திருக்குறளே சான்று. தமிழ் நாட்டில் பரவிய கருத்துகளைத் தம் சிந்தனையின் கருத்துகளுடன் சேர்த்துத் தம் நூலை யாத்திருக்க வேண்டும் திருவள்ளுவர். வள்ளுவர் கூறும் நீதிகளுக்கு மேற்கொள்ளும் வரலாற்று ஆதாரங்களும் சங்க இலக்கியத்தில் நிரம்பக் கிடைக்கின்றன. மக்கள்நலவாதிக்கு உடல் இன்பமுமுண்டு; மனநல இன்பமுமுண்டு. ஆனால், மனநல இன்பமே மேலானது. புதல்வர் மெய் தீண்டியதால் வரும் இன்பம், அன்னாரின் சிறுகை அளாவிய கூழை உண்பதால் வரும் இன்பம், அன்னாரின் மழலைச் சொற் கேட்பதால் வரும் இன்பம் இவை புலன்களின் இன்பம். ஆயினும் மனநலம், உள்ளத்தின் உவகை இவை அறத்தின் நோக்கமும் பயனுமாம்.

''அறத்தான் வருவதே இன்பம்''

(குறள், 39)

''இருள்நீங்கி இன்பம் பயக்கும்''

(குறள், 352)

''மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்.''

(குறள், 457)

அரிஸ்டோட்டில் ஒழுக்க உணர்ச்சியை ஒருவனுக்குள்ள இசையைச் சுவைக்கும் உணர்ச்சியோடு ஒப்பிடுகின்றார். இசையை நுகரும் உணர்ச்சி இயல்பாகவே சிலரிடம் மிகுதியாகவும் வேறு சிலரிடம் குறைவாகவும் இருத்தல் கூடும். இசை விரும்புபவன் இசையில் ஈடுபடுவது போல ஒழுக்கத்தை விரும்புபவன் நல்லொழுக்கத்தில் ஈடுபட்டு அதனால் வரும் இன்பத்தைப் பெறுகின்றான். அறச்செயல்களை மீண்டும் மீண்டும் செய்வதால் அறப்பயிற்சி இயல்பாகவே வரும் என்றார் அரிஸ்டோட்டில். அவ்வாறே ஒழுக்கமுடையவர் மறந்தும் தீயவை செய்ய முற்படார் என்கின்றார் வள்ளுவர்.

''ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.''

(குறள், 139)

பிளாத்தோவின் அரசியலில் வகுப்பு வேற்றுமைகள் பல உள. குடிகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றார் பிளாத்தோ—காவலர் வகுப்பு, படைவீரர் வகுப்பு, தொழிலாளர் வகுப்பு. குடிகள் தம் பிறப்பால் இவ் வகுப்புகளுக்கு உரியவராகின்றனர். பொன்னை (பொற்குணங்களை)த் தம் உடலமைப்பில் மிகுதியாகக் கொண்டவர் பொன் வகுப்பில் இருக்கின்றனர் என்றும், வெள்ளியைத் தம் உடலமைப்பில் கொண்டவர் வெள்ளி வகுப்பில் சேர்ந்தவரென்றும், இரும்பையும் பித்தளையையும் தம் உடலமைப்பில் கொண்டவர் இறுதியான இரும்பு, பித்தளை வகுப்பில் சேர்ந்தவரென்றும், வகுப்பு வேற்றுமைக்குச் சமாதானம் கூற முடியும் என்பர் பிளாத்தோ. வெள்ளி வகுப்புப் பெற்றோர்க்குச் சிலவேளை பித்தளைக் குழந்தை தோன்றக்கூடும்; சில வேளை பித்தளைப் பெற்றோர்க்குப் பொன் கலந்த புதல்வன் தோன்றக்கூடும். இவ்வாறு மாறுபட்ட குணங்களுடன் புதல்வர் தோன்றுவாராயின் குணங்களுக்கு ஏற்றவாறு அப் புதல்வர் மேல்வகுப்புக்கு ஏறவும் அல்லது தாழ்ந்த வகுப்பிற்கு இறங்கவும் வேண்டும். இத்தகைய வகுப்பு மாற்றம் அரிதாகவே நிகழக்கூடும். ஆனால், இம் மூன்று வகுப்புகளில் பிறந்தவர்கள் பெரும்பாலும் அந்தந்த வகுப்புகளிலேயே வாழ்ந்து தொழிலாற்றி உயிர் துறப்பர். தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்க்குக் குடியுரிமைகள் இல்லை; அன்னார்க்குக் கல்வி உரிமைகளும் இல்லை; ஒழுக்க வாழ்க்கைக்கு உரியவர்களாகவும் கருதப்பட்டிலர். ஒருவன் தன் தொழிலிலிருந்து வருவாய் பெறுவானாயின் அவன் அறநெறி வாழ்க்கைக்கு உரியன் அல்லன் என்பர் அரிஸ்டோட்டில். தமிழ் நூல்களின் மனப்பான்மையோ உலகளவு பரந்துள்ளது. குடிமையையும் குலத்தையும் போற்றினாராயினும் கல்வியையும் உயர்வையும் ஒழுக்க வாழ்க்கையையும் எவர்க்கும் மறுத்தார் அல்லர் திருவள்ளுவர்.

''மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர் [கீழ்இருந்தும்
கீழ்அல்லார் கீழ்அல் லவர்''

(குறள், 973)

என, சாதிக்கொரு ஒழுக்கம் என்பதை மறுத்தார். மேலும், மக்கள் தாம் பிறந்த குடியை உயரச் செய்வதே அவர்க்கு ஆண்மையும் சிறப்புமென்றும் வரையறுத்தார்.

''நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.''

(குறள், 1026)

வகுப்பு வேற்றுமைகளைக் கடந்து மக்கள் அனைவரும் மென்மேலும் முன்னேற்றம் அடைதல் கூடுமென்றும், அவருக்கு முன்னோரிடமிருந்தும் சூழ்நிலையில் இருந்தும் குணங்கள் சில வந்தடைந்தாலும், மக்கள் தம் முயற்சியால், அத் தீய குணங்களை அகற்றுதல் கூடுமென்றும் வள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

''பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்ல தில்லை பொருள்.''

(குறள், 751)

'மதிக்கப்படாதார் அறிவில்லாதார், இழிகுலத்தார். மதிக்கப்படுவாராகச் செய்தல் அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவற்பாற் சென்று நிற்கப்பண்ணுதல்' என்பர் பரிமேலழகர், இக் குறட்பாவை விளக்கி. கி.மு. ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பிராமணருடைய செல்வாக்கு நன்கு பரவியிருந்தது. இந்தியாவின் வடகிழக்கிலோ துறவறமே சிறந்த வழியாகக் கருதப்பெற்று எண்ணிறந்த துறவறக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இத் துறவறக் குழுக்களுள் சிறந்தவர் மகாவீரரின் சமணர், புத்தருடைய துறவிகள், கோசலருடைய ஆசீவகர் ஆகியோராவர். புத்தருடைய அறிவுரைகளும் அவற்றை விளக்கிய ஏனைய நூல்களும் துறவறமே ஈடேற்றத்திற்கு ஒப்பற்ற வழியென்று வலியுறுத்துவதைக் காண்கின்றோம். சங்க இலக்கியங்களும் திருக்குறளும் இல்லறமே ஒப்பற்ற வழியென்று கூறுவதாகப் பலர் கருதுகின்றனர். துறவறத்தை வள்ளுவர் இணையற்ற வாழ்க்கை நிலையாகக் கூறினாராயினும் இல்லறத்தையே நன்றாக விளக்கி இல்லறமே துறவுக்கும் உறுதுணையாக நிற்பது என்பதை நிலைநாட்டுகின்றார். தருமபதத்துடனும், ஏனைய புத்த நூல்களுடனும் சங்க நூல்களை ஒப்பிடும்பொழுது புத்த நூல்கள் துறவறத்தின் சாசனமாக விளங்க, பண்டைத் தமிழ் நூல்கள் இல்லறத்தின் சாசனமாக விளங்குகின்றன.

உரோமப் பேரரசின் சிந்தனையாளரும் ஏறத்தாழ, தமிழ்ப் புலவரைப் போல அதே காலத்தில் 'ஒன்றே உலகம்' என்ற கொள்கையைப் பாராட்டி வந்தனர். ஸ்டாயிக்வாதிகள் உலகில் ஒற்றுமை உண்டென்றும், மக்கள் அனைவரும் ஒரே குலத்தவரென்றும், எல்லா உயிர்களும் தொடர்பாகப் பிரிக்கப்பட்டுள்ளனர் என்றும் கற்பித்தனர். ஒன்றே உலகம் என்ற மனப்பான்மையும் கொள்கையும் முதல் முதல் மேலை நாட்டில் ஸ்டாயிக்வாதிகளால் போற்றப்படுகின்றது. செனக்கா எனும் தத்துவ ஞானி கூறுவார்:

''ஒவ்வொருவனையும், அவனுக்கு எத்தகைய பண்புகள் இருப்பினும், நான் பொருட்படுத்தி அவன் மகன் ஆதலால் போற்ற வேண்டும். எல்லா மக்களின் நாடுகளும் என் தாய்நாடு என்றும், என் தாய்நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு என்றும் நாம் கருதல் வேண்டும்.''

மார்க்ஸ் அவுரேலியஸ் என்னும் பேரரசர் கூறுவார்: ''நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அண்டோரீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்; நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன்.''

இவ்வாறு உலக மாந்தரின் ஒற்றுமைத் தன்மை மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் மக்கட்டன்மையை வளர்க்கவேண்டுமென்று எழுதப்பட்ட நூல் திருக்குறள். திருக்குறளில் தமிழ் என்னும் சொல் ஒருமுறையேனும் தோன்றுவதில்லை. எனவே "மக்கள் அனைவரின் புலவர்", ''உலகப் புலவர்'' என்று போப் அய்யர் திருவள்ளுவரைப் போற்றுவது மிகவும் பொருத்தமாகும்.

மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவர் என்று கருதுவதோடு உயிர்கள் அனைத்தையும் மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று கருதும் பண்பும் திருக்குறளுக்கும் ஸ்டாயிக்வாதிகளுக்கும் பொதுவான ஒரு நம்பிக்கை. மார்க்ஸ் அவுரேலியஸ் கூறுவார்: ''பகுத்தறிவு இல்லாத விலங்குகளையும் ஏனைய உயிர்களையும் பெருந்தன்மையோடு நாம் நடத்துதல் வேண்டும்.''

உரோமர் எழுதும்பொழுது 'நாம்', 'நம்மவர்' என்ற செருக்கோடு உரோமரைக் கருதியே எழுதுகின்றனர். ஆனால், வள்ளுவரோ எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் முறையில் தமிழோ தமிழ்நாடோ என்ற குறிப்பேதும் இல்லாமல் உலகெலாம் தழுவுதற்குரிய பான்மையில் தம் நூலை யாத்துள்ளார்.

விரிவாகும் ஆளுமையைப்பற்றி ஒரு சில உண்மைகளை இங்குத் தந்துள்ளோம். திருவள்ளுவரோ இரண்டு அறிவுரைகளில் இந்த இலட்சியத்தை எவ்வாறு அடையலாம் என்று காட்டியுள்ளார்.

''உள்ளற்க உள்ளம் சிறுகுவ''

(குறள், 798)

என்றும்,

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்''

(குறள், 596)

என்றும் கற்பித்துள்ளார்.

தமிழர் தொல்மரபு

செந்தமிழ்ச்செல்வர், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை

முன்னுரை

தமிழர் தொல்மரபுக்கு மூவகைச் சிறப்புகள் உண்டு. அது பழமையிற் பழமைப் பண்பும் புதுமையிற் புதுமைப் பண்பும் ஒருங்கே அமையப்பெற்றது. அதனுடன் அது தன்னிறை முழுமை, தனித்தன்மை ஆகியவற்றுடன் கூடவே இந்தியா அளாவிய, உலகளாவிய பொதுமையும் உடையது. மூன்றாவதாக, பருவந்தோறும் கடல்நீர் முகந்து சென்று உலகுக்கு வளம் வழங்கும் வான்முகில் போல, அது மறைபட்ட மனித இன ஊழிகள், மாண்ட நாகரிகங்கள் ஆகியவற்றை அளாவி வாழ்ந்து, தன் நீடு வாழ்வின் பட்டறிவு காரணமாக, மனித நாகரிக ஊழிகளிடையே பாலமாய் அமைந்து, ஓர் ஊழிப் பெருவாழ்வின் பயனைப் பின்வரும் ஊழிகளுக்கு வழங்கி, தானும் வளர்ந்து, இந்தியாவையும் நாகரிக உலகையும் வளர்ச்சியில் ஊக்கும் திறமுடையதாய் இலங்குகின்றது.

பழமை புதுமை இணைவு

பழமையிற் பழமை, புதுமையிற் புதுமை, மாறா இளமை ஆகியவற்றை மனித இனம் கடவுளுக்கே உரிய பண்புகளாகக் கருதியுள்ளது. இதனாலேயே மணிவாசகப் பெருமான் இறைவனை,

''முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும்அப் பெற்றியனே!''

என்று பாடியுள்ளார். ஆனால், இதே பண்பினைத் தேசியக் கவிஞர் பாரதியார்,

''தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் – இவள்
என்று பிறந்தவள் என்றுஉண ராத
இயல்பின ளாம்,எங்கள் தாய்!''

என்று பாரத அன்னைமீது சார்த்திப் பாராட்டியுள்ளார். மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரனாரோ இதே முறையில்,

''பல்லுயிரும் பலஉலகும்
படைத்தளித்துத் துடைக்கினும்ஓர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
. . . .
. . . .
உன்உதரத்து உதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
. . . . உலகவழக்கு
அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!''

என்று தமிழன்னையின் கன்னித் தாய்மைப் பண்பைப் பராவியுள்ளார்.

இங்ஙனம் உலகெங்கணும் கடவுள் ஒருவருக்கே உரிமையாக்கப்பெற்ற இந்தக் கன்னித் தாய்மைப் பண்பு பாரத நாட்டு எல்லையில் உலக அன்னையாகிய கடவுளுக்கும் பாரத அன்னைக்கும் ஒருங்கே உரிய ஈரொருமைத் தேசியப் பண்பாகவும், தமிழக

எல்லையினுள் கடவுள், தாய்நாடு, தாய்மொழி ஆகிய முத்திறங்களுக்கும் ஒருங்கே உரிமைப்பட்ட மூவொருமைத் தேசியப் பண்பாகவும் படிப்படியாகச் செறிவுற்று வருவதைக் காண்கிறோம்.

இப் பண்பிணைவு வெறும் சமய மரபோ, அழகிய கவிதை மரபோ அன்று என்பதைத் தமிழக ஆராய்ச்சியும், இந்திய தேசிய, உலக நாகரிக ஒப்பீட்டாராய்ச்சியும் நமக்குத் தெளிவுறக் காட்ட வல்லன.

இன்று உலகில் வாழும் ஆயிரக்கணக்கான மொழிகளிடையே ஈராயிர, மூவாயிர ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொழிப் பழமையும், 25 நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கிய வாழ்வுத் தொடர்ச்சியும் உடைய மொழிகள் சீனமும் தமிழும் மட்டுமே. இவை தம்மளவில் இலக்கியப் பழமை உடையவை மட்டுமல்ல; தம்மைச் சூழ வாழும் மொழிகளுக்கும் நீடு வாழ்வுப் பண்பு பரப்பியுள்ளவை ஆகும். ஏனெனில், உலகில் ஆயிர அல்லது அறுநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கிய வாழ்வுடைய மொழிகள் சீனம் சூழ்ந்த கொரிய, சப்பானிய மொழிகளும், தமிழகம் சூழ்ந்த கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய தமிழின மொழிகளும், பண்டைய உரோமானிய ஆட்சிக்கு உட்பட்ட இத்தாலி, இங்கிலாந்து, பிரான்சு போன்ற மேலை நாட்டு மொழிகளுமேயாகும்.

தவிர, உலகில் தம் பழமையாலும், உயர் நாகரிகச் சிறப்பாலும், தம் கலை இலக்கிய வளத்தின் ஆற்றலாலும், கிரேக்கம், இலத்தீனம், சமஸ்கிருதம் முதலிய மொழிகள் உலகுக்கு வழிகாட்டும் உயர்தனிச் செம்மொழிகளாக உலக நாடுகளால் போற்றப்படுகின்றன. இவற்றை ஒப்பத் தமிழ் மொழியும் உயர்தனிச் செம்மொழியாய்த் திகழ்வதுடன், மேலும் ஒரு பெருஞ் சிறப்பைத் தனதாகக் கொண்டுள்ளது. ஏனெனில், அஃது இன்றைய புத்துலக நாகரிக மொழிகளுடனும் ஒரு புத்துலக நாகரிக மொழியாகத் தொடர்ந்து இளமை நலத்துடன் வாழ்ந்து வளருகிறது. இதனால் அஃது இன்றைய உலகின் உயிர் வளமுடைய ஒரே உயர்தனிச் செம்மொழியாய் விளங்குகிறது.

தன்னிறைவு முழுமை

இந்தியாவை உலகினுள் ஒரு சிறு உலகம் என்று கூறுவதுண்டு. இது போலவே தமிழகத்தையும் இந்தியாவின் செறிவடக்கமான ஒரு சிறிய இந்தியா என்றும், நாகரிக உலகின் ஒரு சிறிய மணிப்பதிப்பு என்றும் கூற இடமுண்டு.

மேலை உலகுக்கு கிரேக்க இலத்தீன மொழிகளும், இசுலாமிய உலகுக்கு அரபும் இடைக்காலப் பழம் பாரசீகமும், இந்தியாவுக்குச் சமஸ்கிருதமும் போல, தமிழகத்துக்கும் அது சூழ்ந்த இந்திய, தென்கிழக்காசியப் பகுதிக்கும் தமிழே நெடுங்காலமாக உயர்தனிச் செம்மொழியாய் இயங்கி வந்துள்ளது. இதனாலேயே இந்திய மொழி இலக்கியங்களில் தமிழ் பக்தி இலக்கியத்தின் செல்வாக்கு மிகுதியாய் உள்ளது. மேலும் சமஸ்கிருத அத்யாத்ம இராமாயணத்திலும், இந்தியத் தாய்மொழிகளின் இராமாயணங்களிலும், தமிழ்க் கவிஞர் கோமான் கம்பனின் சீரிய தமிழ்ப் பண்பின் தடத்தைக் காண முடிகிறது. தவிர பர்மிய மொழி, சிங்களம், மலேசிய, இந்தோனேசிய மொழிகள் ஆகியவற்றில் சங்க இலக்கியத்தின் சாயலைக் காண்கிறோம். இம் மொழிகளின் இராமாயண பாரதங்கள் நமக்கு முழுதும் வந்தெட்டாத சங்ககாலத் தமிழ் பாரத இராமாயணங்களின் பெயர்ப்பாகவே நிலவியிருந்தன என்று அறிகிறோம்.

அகல் உலகின் வேதங்களாக விவிலியமும் திருக்குரானும், இந்தியாவின் வேதங்களாக இருக்காதி மூவேதங்கள் அல்லது நால்வேதங்களும் புத்தரின் திரிபிடகமும் விளங்கி வருவது போல, தமிழகத்துக்கு உலகப் பொது மறையாம் முப்பால் அல்லது நாற்பால் கூறும் திருக்குறளும், சைவரின் வேதமான தேவார திருவாசகங்களும், வைணவரின் வேதமான திருநாலாயிரமும் முத்திற வேதங்களாய் மிளிர்கின்றன. சிவபிரான் தம் தென்முகத் திருவுருவில் (தட்சிணாமூர்த்தி வடிவில்) நான்முகத்துடன் கல்லாலின் கீழிருந்து நால்வர்க்கு அருளிய அறம், பொருள், இன்பம், வீடு என்பனவே நான்மறைகள் என்று சம்பந்தர் தேவாரம் கூறுகிறது.

இந்தியாவின் பழம்பெருஞ் சமயங்களான சைவம், வைணவம், புத்தம், சமணம் ஆகிய நான்குடன், அகல் உலகின் பெருஞ் சமயங்களான கிறித்துவம், இசுலாம் ஆகிய எல்லாச் சமயங்களின் சார்பாகவும் பேரளவான, தனி உயர் சிறப்பும் பண்பும் வாய்ந்த இலக்கியப் பரப்புத் தமிழிலே உள்ளது. உண்மையில் இச் சமயங்களுக்கு உரிமையுடைய மற்ற உலக நாடுகளில், உலக மொழிகளில் சமய சாத்திரங்கள், ஏடுகள் மலிந்துள்ள அளவிற்கு மணிமேகலை போல, சிந்தாமணி போல, சீறாப்புராணம் போல, தேம்பாவணி போல, உயரிய நல்லிலக்கியங்கள் காண்பதரிது என்னலாம். ஈழம் (இலங்கை), மலேசியா போன்ற கடல் கடந்த பகுதிகளிலும் இத்துறை வளம் பெருகியுள்ளன, பெருகுகின்றன.

தற்கால உலகுக்கு மேலை மருத்துவமும், இசுலாமிய உலகுக்கு யூனானியும், இந்தியாவுக்கு ஆயுர்வேதமும் அமைந்துள்ளமை போல, தமிழகத்துக்கு வைத்தியநாதர் என அழைக்கப்படும் சிவபெருமானும் முருகனும் பதினெண் சித்தரும் வளர்த்த சித்த மருத்துவ நெறி தனி நெறியாகத் திகழ்கிறது. மலைவளம், பூண்டுவளம், வைப்புமுறை, நோய்க்குணம் முதலிய ஏட்டுப் பெயர்களே இதன் நேர்க்

காட்சி, அறிவியல் தன்மைகளைப் புலப்படுத்தும். உலகின் பிறநெறிகளுக்கு நாடித் தேர்வு முறையை வழங்கியதும், கற்பம் (சாவாநிலை, ஊறுபடா உடல் உறுதி) என்னும் நெறியை வழங்க இருப்பதும் இதன் தனிச் சிறப்புகள் ஆகும்.

தற்கால உலகுக்கு மேலை வானியல் போல, இந்தியாவுக்கு ஆரியபட்டரும் வராகமிகிரரும் வழங்கிய வானியல் போல, தமிழகத்துக்கும் நேர்க் காட்சிநெறி (திருக்குமுறை) என்ற தனி முறை நிலவி வந்துள்ளது. தமிழில் நாள் அல்லது நாள் மீன் என்றே குறிக்கப்படும் விண்மீன் குழு (27 நட்சத்திரம்) மரபு இத் தமிழ்நெறி இந்தியாவுக்கும் உலகுக்கும் அளித்த அறிவுக் கூறே யாகும். ஆண்டும் மாதமும் இரண்டுமே கதிரவன் அடிப்படையில் கணிக்கப்பட்டதும், நேர்க்காட்சியளவைக் கணிப் பும் இதன் சிறப்புப் பண்புகள் ஆகும். இந்நெறியின் தனி உயர் சிறப்புக்கு நாள் பாகுபாட்டு முறையே சான்று பகரும். இந்தியாவும் இசுலாமிய உலகும் அகல் உலகும் முறையே விடியலிலிருந்து மறு விடியல்வரை, கதிரவன் மறைவிலிருந்து மறு கதிரவன் மறைவுவரை, நள்ளிரவிலிருந்து மறு நள் ளிரவுவரை என நாள் எல்லை கொள்வது போல, சங்க காலம்வரை பழந்தமிழர் நண்பகலிலிருந்து மறு நண்பகல்வரை ஒரு நாளாகக் கணித்தனர்.

சங்க காலம்வரை தமிழர் நள்ளிரவை நடுநாள் அல்லது நடுநாள் யாமம் என்றே குறித்தனர். நண் பகலைப் பகல் என்றனர். ஒரு நாளை மறு நாளி லிருந்து பகுத்துக் காட்டும் எல்லையாதலால், அது பகல் எனப்பட்டது. இச்சொல் வழக்குகள் தமிழரின் நாட் கணிப்பைத் தெளிவாகக் காட்டுகின்றன.

உலகெங்கும் ஆண்டுக் கணிப்பும் மாதக் கணிப்பும் ஒத்திசைவில்லாமல் செயற்கையாக இட்டுக்கட்டப் பட்டவையாயிருக்க, இந்தியாவில் மட்டும் அது வானியல் கணிப்பு முறையில் அமைந்துள்ளது. இது தமிழரின் கதிரவன் நாள்மீன் ஆகியவற்றின் நேர்க் காட்சிக் கணிப்பு முறையின் அடிப்படையிலேயே யாகும். ஏனெனில், இது வேத மரபு அறியாத ஒன்று.

தமிழகம் தனக்கென்று அமைத்துக்கொண்ட கலை முறைகளும் அறிவியல் முறைகளும் இன்னும் பல. இவற்றுள் சில கீழே விரிக்கப்படுகின்றன.

தனித்தன்மை

(அ) முத்தமிழ் மரபு

தமிழர் தொல்மரபுகளில் முதன்மையானது முத் தமிழ் மரபேயாகும். கலைகளிலே மொழித்தொடர்பு கொண்ட கவின் கலைகள் இலக்கியம், இசை, நாடகம் ஆகிய மூன்றே என்று கண்டவர் தமிழர். இதனாலேயே அவர்கள் அவற்றை இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று தமிழ் களாகக் கொண்டனர். ஏனெனில், சிலப்பதிகாரம் மூலமாகவும், அதன் உரைகள்மூலமாகவும் நாம் இயல் இலக்கியம், இயல் இலக்கணம், இசை இலக் கியம், இசை இலக்கணம், நாடக இலக்கியம், நாடக இலக்கணம் என மூன்றிலும் விரிவான இலக்கிய இலக்கணப் பரப்பு இருந்ததாக அறிகிறோம். மூன்று தமிழில் முதல் தமிழைத் தமிழர் இலக்கியம் என்று குறியாமல் இயல் என்றே குறிப்பிட்டது இதனாலேயே யாகும். இம் முத்தமிழ் மரபு தொல் காப்பியத்துக்கு முந்தியது என்று திண்ணமாகக் கூற லாம். ஏனெனில், தொல்காப்பியக் காலத்திலிருந்து சங்க காலம் வரை இது படிப்படியாகத் தேய்ந்து கொண்டே வந்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தராலும், எட்டு, ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் சோழப் பேரரசராலும் ஓரளவு புதுப்பிக்கப்பட்டு அது முற்றிலும் அழியாமல் சில காலம் பாதுகாக்கப்பட்டது.

இன்று தமிழகத்துக்கு நாகரிக உலகிலேயே பெரும் புகழ் அளித்துவரும் கலைகளில் முதன்மையானவை கருநாடக இசையும் பரத நாட்டியமுமேயாகும் என் பதை எவரும் அறிவர். ஆனால், இவற்றுக்குத் தாய் தேவார கால, சோழப்பேரரசர் கால இசை நாட கமே என்பதும், தாய் பெற்ற தாய் அல்லது பாட்டி சங்க கால இசை நாடகம் என்பதும், பாட்டியைப் பெற்ற முப்பாட்டி முத்தமிழ் மரபுக்கால இசை நாடகம் என்பதும் ஆராய்ச்சியால் காணப்படவேண் டிய, காணப்படத்தக்க செய்திகள் ஆகும். ஏனெ னில், கருநாடக இசைக்கும் பரத நாட்டியத்துக்கும் மூல ஏடாகக் கருதப்படும் சமஸ்கிருத பரத நாட் டிய சாத்திரம் தமிழ் மரபிலே நின்று இலக்கியம் அல்லது கவிதை, இசை, நாட்டியம் அல்லது நாடகம் ஆகிய மூன்றுக்கும் பொதுவாகவே இயல்வதாகும். அதனுடன் அது முத்தமிழ் மரபுக்காலத்தவரான ஆதிபரத முனி இயற்றிய பரத நூலன்று. அதன் தழுவல் சுருக்கமேயாகும்.

தவிர, கருநாடக இசையும் பரத நாட்டியமும் மதகுருக்களின் நலனும் சமுதாயத்தில் இன்ப வாழ் வினர் நுகர்ச்சியும் மட்டும் கருதி பக்தி, காதல் என்ற இரு சுவைகளுக்குள்ளும் கட்டுண்டு குறுக்கப்பட்டு, தனிமனிதர் கலைகளாக, சமுதாயக் கலைகள் என்ற நிலையினின்றும் விலகியவை ஆகும். பண்டைத் தமிழர் மரபின் இசை நாடகங்களோ தனிமனிதர் கலைகள் அல்லது தொழிற் கலைகளாக இயங்காமல் மக்கட் கலைகளாக, சமுதாயக் கலைகளாக இயங்கின. அவை எல்லாச் சுவைகளையும் தழுவி வாழ்க்கை முழுவதும் பொருளாகக் கொண்டவை. விரைவு, நளினம், எளிமை, நுகர்ச்சி ஆகிய சமுதாய மக்கட்பண்புகள் கொண்டவை. முத்தமிழ்க் கால இசை நாடக மரபு இதனால் கருநாடக இசைக்கும் பரத நாட்டியத்துக்கும் மட்டும் மூல மரபன்று; இந்தியாவிலும் உலகிலும் உள்ள மற்ற இசை நாடக மரபுகள் எல்லாவற்றுடனும் தொடர் புடையது. சங்க கால இசை மரபு வேதகால இசை

மரபுடனும், சீன, கிரேக்க இசை மரபுகளுடனும் ஒப்புடையதாயிருப்பது இதனை வலியுறுத்தும்.

(ஆ) தமிழக, கேரள நாடக மரபு

உலக வரலாற்றில் நாம் இரு வேறு நாடக மரபுகளைக் காண்கிறோம். முதலாவது, துன்பியல் (tragedy) என்றும் இன்பியல் (comedy) என்றும் இரு பாகுபாடுகளுடன்கூடிய கிரேக்க இலத்தீன் ஐரோப்பிய மரபு ஆகும். இவை முறையே உயர் வகுப்பினருக்காகவும் பொது மக்களுக்காகவும் நடத்தப் பெற்றன. அதனுடன் இவை கிரேக்க தெய்வங்களான தயோனிசியசுக்கும் (சிவபிரான் போன்றவர்) அப்போலோவுக்கும் (திருமால் போன்றவர்) உரிமைப்பட்டவை. முந்தியது கட்டுக்கோப்புடையது, பிந்தியது பல்சுவையுடையது. இரண்டாவது மரபு, கட்டுக்கோப்புத் தளர்வான முழு வாழ்க்கை நாடகம். இது சமஸ்கிருதத்துக்கும், தென்கிழக்காசியா, சீனம், கொரியா, சப்பான் ஆகிய கீழ்த்திசைப் பரப்புக்கும், சேக்சுப்பியர் கால இங்கிலாந்துக்கும் உரியது ஆகும். இந்த இரு மரபுகளில் முந்தியதன் இரு பிரிவுகளும் கேரளத்தின் சாக்கியார் கூத்து (சிலம்பு கூறும் பறையூர்ச் சாக்கையர் கூத்து), துள்ளல் நாடகம் ஆகிய பிரிவுகளுடனும், சிலம்பின் உரைகள் கூறும் வேத்தியல் (வேந்து இயல், அதாவது அரசர் குடிமரபுக்குரியது), பொதுவியல் என்ற பிரிவுகளுடனும் சாந்திக் கூத்து, வினோதக் கூத்து ஆகிய பிரிவுகளுடனும் தொடர்புடையவை ஆகும். பிந்திய மரபோ, தமிழில் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும், மலையாளத்திலும் சமஸ்கிருதத்திலும் சம்பூ என்றும் வழங்கப்படும் காப்பிய (தொல்காப்பிய தோல்) நெறி பின்பற்றிய நாடக மரபு ஆகும். மேலையுலகில் திருமறைகள் (Mysteries), திருவிளையாடல்கள் (Miracles) என்ற வடிவங்களில் வளர்ந்த வளர்ச்சி இது. (இவற்றின் விரிவினைக் கட்டுரையாசிரியரின் 'சிலம்பு தரும் செல்வம்' என்னும் ஏட்டில் காணலாம்).

(இ) முச்சங்க மரபு

நாகரிக உலக வரலாற்றில் சங்கம் வைத்து மொழி, கலை, இலக்கியம் ஆண்ட நாட்டினங்கள் பிரான்சும் தமிழகமுமே. பிரான்சு நாட்டில் இது கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கும் பதினாறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட வளர்ச்சி. தமிழகத்தில் இதன் பழமையெல்லை அறியப்படவில்லையாயினும், தமிழ் மரபுக்குரிய மூன்று சங்கங்களில் மூன்றாவது முடிவுற்ற காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு (கி.பி. 150) என்று திண்ணமாக அறிகிறோம்.

தமிழகத்தில் சங்கம் என்பது மொழியையும், இலக்கியத்தையும், கலை இயல்களையும் ஆக்கவும், அரங்கேற்றி ஆராய்ந்து ஏற்கவும், துடைத்தொதுக்கவும் கல்வி அமைப்புகள் ஆளவும ஏற்பட்ட தேசிய, தேசங் கடந்த நிறுவனம் ஆகும். ஏனெனில், மூவரசு வேறுபாடின்றி இது தமிழகம் முழுமைக்கும் ஒரே அமைப்பாய் இருந்ததுடன், தற்காலக் கேரளம், கருநாடகம், ஆந்திரம், ஈழம் (சிரீலங்கா) ஆகிய பரப்புகளின் புலவர்களையும் கொண்டிருந்தது. பிரகத்தன் என்ற ஆரிய அரசன்கூட அதில் வீறுமிக்க புலவனாயிருந்தான். இதில் புலவர் எண்ணிக்கை (600), பெண்பாலார் தொகை (31), அரசர், வணிகர், சோதிடர்(கணி), மருத்துவர், ஆசிரியர் (கணக்காயர்), தொடக்க ஆசிரியர் (இளம்பால் ஆசான்) ஆகிய புலவர் நிலை வேறுபாடு, பல நாடுகள், நகரங்கள், தெருக்கள் என அவர்களின் பெயர்களால் தெரிய வரும் இடப்பரப்பு, ஆடவரிலும் பெண்டிரிலும் குயவர், குறவர், எயினர் (வேடர்), பேயர் (சண்டாளர் அல்லது புலைக் குடியினர்) உட்பட்ட அவர்கள் இனப்பரப்பு ஆகியவற்றை நோக்க, சங்க காலத்தின் கல்வி நிலையும் சங்கத்தின் விரிந்தகன்று ஆழ்ந்த பெயராண்மை நிலையும் நன்கு விளங்கும். உலகில் எந்த மொழியும் எந்தக் காலத்திலும் காணாத கனவு நிலைக் காட்சியாக இது திகழ்கிறது.

(ஈ) இலக்கண மரபு

இன்றளவும் சமஸ்கிருதத்திலும் ஏனைய நாகரிக உலக மொழிகளிலும் இலக்கணம் என்பது மொழியின் இலக்கணமாக, எழுத்தும் சொல்லும் மட்டும் ஆராய்வதாகவே உள்ளது. தமிழில் எழுத்து, சொல், பொருள் (மூன்றாவதாகிய பொருளே பொருள், யாப்பு, அணி ஆகிய மூன்றும் உள்ளடக்கியது) என்னும் தொல்காப்பிய மரபிலும், சங்க காலம் வரை தொல்காப்பியத்துக்கு எதிரிடையாக வழங்கிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கண மரபிலும் நாம் மொழியின் இலக்கணம் (எழுத்து, சொல்), இலக்கியத்தின் இலக்கணம் (யாப்பு, அணி), இலக்கியத்துக்குப் பொருளான இயற்கையைப் பின்னணியாகக் கொண்ட வாழ்க்கையின் இலக்கணம் (பொருள்) ஆகிய விரிவைக் காண்கிறோம். முத்தமிழ் மரபுக்காலத்தில் இலக்கணம் இன்னும் விரிவானதாக இருந்தது. ஏனெனில், இயல் இலக்கணம், இசை இலக்கணம், நாடக இலக்கணம் ஆகிய அதன் முப்பெரும் பிரிவுகளில், மேற் கூறப்பட்ட பிரிவுகள் அனைத்தும் முதற் பிரிவினுள்ளே அடங்கும். தமிழரின் இலக்கணத்தின் இம் மாபெரு விரிவினுள்ளே, அணியியல் சமஸ்கிருதத்தில் அலங்கார சாத்திரம் என்னும் தனி மரபாகவும், பொருள் தற்கால மேலையுலகில் திறனாய்வு (Criticism) என்னும் தனித்துறையாகவும், இது போலவே யாப்பும் இசையும் நாடகமும் எங்கும் தனித்துறைகளாகவும் வழங்கி வருகின்றன. ஒலிநூல், மொழிநூல், மொழியியல் ஆகிய பிற தனி இயல்களும் முத்தமிழ்க் கால, தொல்காப்பியர் கால இலக்கண மரபில் அடங்கி, இன்று தனிப் பெருந் துறைகளாகப் பிறங்கி வருபவையேயாகும்.

மொழியின் இலக்கிய வடிவத்தை மட்டும் அதன் மெய்யான வடிவமாகக் கருதுபவர் இன்றுகூட உண்டு. ஆனால், தமிழ் இலக்கண மரபு தொல்காப்பிய காலத்துக்கு முன்னிருந்தே 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' என விதிமுறைகளைத் தொடங்கி, பேச்சு மொழியையும் இலக்கிய மொழியையும் இலக்கணத்துக்கு ஒருங்கே உரியனவாகக் கொண்டு பேச்சு மொழியில் மட்டும் வழங்கிய சொல்லைத் 'திசைச் சொல்' என வகுத்துரைத்தனர். இதுபோலவே இலக்கணத்தைப் பின்பற்றித்தான் இலக்கியம் அமைகிறது என்று இன்றும் பலர் நம்புகின்றனர். ஆனால், உரையாசிரியர் அகத்திய சூத்திரம் என்று எடுத்துக்காட்டும் தொல்காப்பியத்துக்கு முற்பட்ட பழஞ் சூத்திரம்,

''இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே,
எள்இன் றாகில் எண்ணெயும் இன்றே!
எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல,
இலக்கியத் தினின்று எடுபடும் இலக்கணம்''

என்று கூறுகிறது. மொழி நடையாலும் கருத்தாலும் இஃது இருபதாம் நூற்றாண்டின் ஓர் அறிஞர் கூறுவதோ என்ற தோற்றம் அளிக்கிறது.

(உ) இலக்கிய மரபு

தொல்காப்பியம் மூலமே, தொல்காப்பியருக்கு முற்பட்ட முத்தமிழ் மரபுக்கால இலக்கியப் பரப்பில் தோல் (இதிகாசம்), தொன்மை (புராணம்), விருந்து (பஞ்ச தந்திரம் போன்ற விலங்குக் கதைகள், பிற்காலத்து 96 பிரபந்தங்கள் அல்லது சிற்றிலக்கியங்கள் போன்ற படைப்புகள்), அங்கதம் (வசைப் பாட்டு), அம்மை, அழகு, வண்ணம் முதலிய படிவங்கள் இருந்தன என்று அறிகிறோம். தவிர, சிலம்பின் உரையால் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் புதிதாகத் தோன்றிய சிந்து முதலிய நாடக மெட்டுகள் முத்தமிழ் மரபுக் காலத்தின் மக்கள் மரபுத் தொடர்ச்சியே என்று அறிகிறோம். ஏழாம் நூற்றாண்டில் புதிது தோன்றியதாக, அல்லது சமஸ்கிருதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் விருத்தம், துறை போன்ற பாவினங்களுக்கும் இது பொருந்தும். உண்மையில் தமிழ் இலக்கணங்கள் காட்டும் மேற்கோள்களான பாவின வகைகள் விருத்தமும் துறையும் காணாத விரிவும் பழமையும் உடையவை.

(ஊ) ஐந்திணை மரபு

இலக்கியத்துக்கு இலக்கியமான உலகவாழ்வையே தொல்காப்பியர் பொருள் எனக் கொண்டார். இதனை அவர் காண்போர் வேறு, நடிப்போர் வேறு என்ற வேறுபாடில்லாத உலகளாவிய அகண்டமான நாடகமாகக் கருதினர். இதில் நிலம் காலம் என்னும் முதற்பொருள்கள், முறையே அந்த நாடகத்துக்குரிய அரங்க மேடை, காட்சிக் களங்கள் ஆகும். மக்கள் எல்லாருமே நாடக உறுப்பினராகவும் பார்வையாளராகவும் ஒருங்கே அமைகின்றனர். அதனுடன் அவர்களும் அவர்கள் உணவு, உடை, உறையுள், வாழ்க்கைச் சூழல்கள், தொழில்கள், கலைகள் (இசை, இசைக்கருவிகள்) ஆடல் பாடல் கேளிக்கைகள், சமுதாய வழிபாடுகள், விழாக்கள், தெய்வங்கள், ஆட்சி, போர்முறைகள் ஆகிய யாவுமே திரைகள், திரைக்காட்சிகள் போன்ற நாடகக் கருவிகளாகிய கருப்பொருள்கள் ஆகின்றன. அவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளே—காதலும் போரும். சமுதாய சமய அரசியல் கலை வாழ்வுகளே நாடகக் கதை நிகழ்ச்சியாகிய உரிப்பொருள் ஆகிறது.

மேலே கண்ட முதல், கரு, உரி என்னும் முப்பொருளையும், அகம், புறம் என்னும் பாகுபாடு இரண்டாகவும், அந்த இரண்டினையுமே எழுதிணை என்னும் கூறுபாடு பதினான்காகவும் வகைப்படுத்துகின்றன. அகத்தின் எழுதிணை, புறத்தின் எழுதிணை ஆகிய இந்த இருமை எழுதிணைகளிலும் உண்மையான தமிழ்க் காதல் அதாவது காதலுடன் இணைந்த மணம், மணத்துடன் இணைந்த காதல் அகத்திலும், உண்மையான தமிழ்ப்போர் அதாவது அறத்துடன் இயைந்த போர் புறத்திலும் முறையே அகன் ஐந்திணை அல்லது அன்பின் ஐந்திணை என்றும் புறன் ஐந்திணை அல்லது பண்பின் ஐந்திணை என்றும் அழைக்கப்பட்டன. இங்கே காதல் என்பது உலகியல் காதலை மட்டுமன்று, ஆன்மிகக் காதலாகிய உயிர்-இறை ஒருமைப்பாடு அதாவது உயரிய சமய வழிபாட்டையும் உட்படுத்தும். அதுபோல, போர் என்பது நட்பையும் கல்வியையும், சமுதாய வழிபாடு விழா கேளிக்கைகளையும், மற்றச் சமுதாய, அரசியல், பொது வாழ்வுச் சமயச் செய்திகளையும் உள்ளடக்கும். இவற்றுள் சமய வழிபாடு அகம் புறம் என்னும் இரண்டிலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், உண்மைக் காதல் எவ்வாறு காதலிருவர் அன்றிப் புறத்தே சமுதாயம் அறியாமல், அக்காதலர் தாமும் தம் இருமை மறந்து உள்ளத்துள் ஒருமைப்பட்டு நுகர்வதாகுமோ அவ்வாறே, உண்மை வழிபாடும் பக்தன் இறைவன் ஆகிய இருவரன்றிப் புறத்தே எவரும் அறியாமல், அவ்வுயிர் இறை ஆகியவரும் இருமை மறந்து உள்ளொருமையுடன் நுகர்வதாகும்.

தமிழ்ப் பண்புக்கு மாறான காதல் (மணமில்லாக் காதல், காதலில்லா மணம்), தமிழ்ப் பண்புக்கு மாறான போர் (முறையற்ற போர்), பயனில் கல்வி, பயனில் வாழ்க்கை (நிலையாமை போதனை), பண்பிலாச் சமய வழிபாடு ஆகியவை அகத்தில் புறமாகிய அகப்புறத்திணை இரண்டாகவும், புறத்தில் புறமாகிய புறப்புறத்திணை இரண்டாகவும் வகுத்துணர்த்தப்பட்டன.

தனிமனித, சமுதாய, அரசியல், சமய, குடும்ப, கலை வாழ்வுகளில் இலக்கு வாழ்வும் (இலக்கு நழுவிய போக்குமாக) இலக்கியம் காட்ட வேண்டிய

இப் பண்புகளையே தமிழ் இலக்கணம், சிறப்பாகத் தொல்காப்பியம் ஐந்திணை மரபாக வகுத்துரைத்துள்ளது.

(எ) தேசிய, அரசியல் மரபுகள்

மனித இன வரலாற்றில் ஆங்கில இனம், டச்சு இனம், போர்ச்சுகீசிய இனம், பினீசிய இனம், அரபு மலேசிய இனங்கள் ஆகியவற்றைப் போலவே தமிழினமும் தொன்றுதொட்டுக் கடலோடி இனமாக வாழ்ந்து வந்துள்ளது. இஃது உலகளாவிய கடல் வாணிகத் தொடர்பாகப் பரவி, பல நாடுகளில் வாணிகக் கழகங்களை நிறுவி யாண்ட வாணிகக் குழுக்களைத் தோற்றுவித்திருந்தது. இதனால் தொல்காப்பியம் முதலிய அகத்திணை இலக்கியங்களில் காதலர் பிரிவு வகைகளில் ஒன்றாகக் கடல் வாணிகப் பிரிவு கூறப்படுகிறது. வாணிகச் செல்வாக்கு மூலம் அரசரால் மதிக்கப்பட்டவர்கள் செட்டி, எட்டி, காவிதி என்ற படிப்படியான உயர் பட்டங்கள் பெற்றனர். பல நாடுகளிலும் தற்காப்புக்காக வாணிகக் குழுக்கள் தனிப் படைகளை வைத்திருந்தன. இவை கைக்கோளர் படைகள் எனப்பட்டன.

அராபியருடனும் மலேசியருடனும் கடல் வாணிகப் போட்டி காரணமாகக் கடற்போர்கள் நிகழ்ந்தன. இது தமிழகப் பேரரசுகளைக் கடலாண்ட, கடல் கடந்த நாடாண்ட பேரரசுகளாக்கின. கலிங்கர் ஆந்திரருடன் பல்லவரும், பாண்டியரும், சோழரும் இலங்கையையும் தென்கிழக்காசியப் பேரரசுகளையும் வென்று தம் நாளைய உலகக் கடற் பேரரசராக ஆண்டனர். பேரரசுகள் (கி.பி. பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்) வீழ்ச்சியடைந்த பின்னும்கூடச் சிற்றரசராகிய பாண்டியரும் கேரள சாமூதிரியும் மற்ற இந்தியப் பேரரசுகளைப் போலவே கடல் வலிமையற்றிருந்த விசயநகரப் பேரரசுக்கு உதவும்படி கடல் கடந்த நாடுகளில் படையெடுத்து வெல்லும் ஆற்றலுடையவராயிருந்தனர்.

(ஏ) குடியரசு மரபு

கிரேக்க உரோம நாடுகளைப் போலவே, இந்தியாவிலும் தமிழகத்திலும் குடியரசுகள் முடியரசினும் முற்பட்ட பழமையுடையவையா யிருந்தன. புத்தர் பிரான் பிறந்த சாக்கியர் குடியும், குப்தப் பேரரசர் பெண் கொண்ட லிச்சாவியர் குடியும், ஆந்திரப் பேரரசும், தமிழரசர் மணத்தொடர்பு கொண்ட வேளிர் குடிகளும் யாவும் குடியரசுகள் அல்லது குடியரசுக் குழுக்களே. பல குடியரசுகளின் இணைவாகவே சேர அரசு அப் பெயர் பெற்றது. கி.பி. பதினான்காம் நூற்றாண்டுவரைகூடச் சேர அதாவது கேரள நாட்டு அரசர் இக் குடியரசுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பெயரளவிலேயே பேரரசராக நிலவினர். இது பாண்டியருக்கும் சோழருக்கும் பொருந்தும். ஏனெனில் சேரர் ஏழு வேளிரின் கூட்டாக அமைந்து சேரர் எனப்பட்டது போலவே, பாண்டியர் ஐந்து வேளிரின் கூட்டாக அமைந்து பஞ்சவர் எனப்பட்டனர். சோழரும் ஐந்துவேளிர்களின் கூட்டாகவே வாழ்ந்தனர். முடியரசர் வலிமையான காலங்களில் குடியரசுப் பண்பு மறைந்து முடியரசர் வலிமையிழந்த காலங்களில் அது மீண்டும் தலை ஓங்கிற்று. ஆந்திர நாட்டில் குடியரசர் சளுக்கர், குறும்பர் என்றழைக்கப்பட்டனர். குடிமன்னராகிய வேளிரே மன்னருக்கு முடிசூட்டும் உரிமையுடையவர்; இதனையே கம்பர் பெருமான் வேளாளர் முடிசூட்டும் உரிமை எனக் கூறியுள்ளார்.

முடியரசின் கீழும் குடியரசுப் பண்புகள் தொடர்ந்தன. ஐம்பெருங் குழு இந்நாளைய பொதுமக்கள் அவை போன்றும், எண்பேராயம் இந்நாளைய மேலவைபோலவும் இயங்கின. பெரியாரைத் துணைக்கோடல், பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரங்கள் மூலம் அரசனுக்கும் அமைச்சருக்கும் திருவள்ளுவர் அறிவு கொளுத்தும்போது, அவர் பெரியார் என்று கூறியது இந்த எண்பேராயத்தையே யாகும். ஏனெனில், அமைச்சரைத் தேர்வதும், அவர்களையோ அரசரையோ வீழ்த்துவதும் இந்தப் பெரியார் அவையின் உரிமைகள் ஆகும்.

இப் பண்புகள் தமிழகத்துக்கு மட்டும் உரியன அல்ல; நாகரிக உலக முழுவதும் பரவியிருந்தவை. பெயர்களில்கூட இதனைக் காணலாம். ஆயம் என்பதன் பகுதியான ஆய் – தலைவன், அறிவன்- தந்தை என்னும் பொருள்கள் உடையது. கிரேக்க நாட்டில் பேராயம் அரியொ பகசு (அறிவர் மலை அல்லது அறிவர் மன்றம்) எனப்பட்டது. பண்டை இங்கிலாந்தில் பேரவை விட்டெனா யெமோட் (Witeno Gemot) அல்லது அறிஞரின் கூட்டம் எனப்பட்டது.

பண்டைக்காலக் குடியரசுகளில் வேள் தலைவனாய் வேள் குடியில் மூத்தவர் அல்லது திறமையுடையவர் என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார். முடியரசில் அரசரே இவ்விடம் ஏற்றார். இந்நாளைய குடியரசுகளின் வகையிலும், இங்கிலாந்தில் அரசர், பிரான்சு அமெரிக்கா இந்தியா முதலிய நாடுகளில் தலைவர் அதே இடம் பெற்றுள்ளார்.

திருவள்ளுவர் பொருட்பாலில் விளக்கும் ஆட்சி முறை இவ்வாறு இன்றைய இங்கிலாந்தைப் போல அரசரைத் தலைவராகக் கொண்ட குடியரசேயாகும். பொருட்பாலின் மூன்றாவது பிரிவாகிய குடியியல் இக் குடியாட்சியின் அடிப்படைப் பண்புகளை, குடியாட்சியை நல்லாட்சியாக்கும் சமதருமப் பண்பு, பொதுவுடைமைப் பண்பு ஆகியவற்றை வலியுறுத்துவதேயாகும்.

(ஐ) கல்வி மரபு

பள்ளி வகுப்புகளுக்கான இலக்கியம் (ஆத்திசூடி முதலியன) வயது வரிசை, வகுப்பு வரிசைப்படி இன்றுள்ள நிலையில் கி.பி. ஒன்பது அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஔவையார் கால முதல் பதினாறாம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியன், பதினெட்டாம் நூற்றாண்டில் குமரகுருபரர் போன்றவர்களால் வளர்க்கப்பட்டதேயாகும். ஆனால், சங்க காலத்தில் இதே மரபு இருந்தது என்பதைப் புலவர் பெயர்களில் வரும் கணக்காயர் (பள்ளியாசிரியர்), இளம்பால் (தொடக்கப்பள்ளி ஆசிரியர்) என்னும் அடைமொழிகள் காட்டும். முதுமொழிக் காஞ்சி, நாலடியார் முதலிய ஏடுகளும், திருக்குறளும், ஆத்திசூடி போன்ற கல்வி வரிசைப்பட்டனவோ என்று கருத இடமுண்டு. அகத்திணை இலக்கியத்தில் பிரிவின் வகையாகக் கூறப்படும் கல்வியிற் பிரிவு மணமானவர்களுக்காதலால் அஃது இன்றைய கல்லூரி, பல்கலைக்கழகக் கல்வி போன்ற உயர் நிலைக் கல்வியே என்பதில் ஐயமில்லை.

திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் நான்கு அதிகாரங்களையும் பொருட்பாலில் இறைமாட்சியை அடுத்து அமைத்திருப்பதை நோக்க, உரையாசிரியர் கருதுவதுபோல அது தனிமனிதர் அல்லது அரசர் கல்விபற்றியது அன்று; பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் உட்பட்ட தேசியக் கல்விபற்றியதே ஆகும் என்று கூறத்தகும். ஏனெனில், கல்லாமை அதிகாரம் கல்லாமை ஒழிப்புக் குறித்ததேயாகும். கேள்வி அதிகாரம் மக்கட் கல்வி முறையேயன்றி வேறன்று. அறிவுடைமை அதிகாரம் வாழ்வில் கல்வியின் பயன்பற்றியதாகும். முச்சங்க மரபு காட்டும் கல்வி நிலையுடன் திருக்குறளில் கூறப்படும் கல்வியின் குறிக்கோளை நோக்க, தமிழர் தேசியக் கல்வி இலக்கு எல்லாரும் எழுத்தறிவு பெறுதல் என்னும் இன்றைய கல்வி இலக்கினும் எத்தனையோ உயரியது என்னலாம். அது வாணிக நலனோ அரசு நலனோ மட்டும் குறித்த தேசியக் கல்வி இலக்கன்று; மனித இன நலன் குறித்த உலகக் கல்வியாகும். 'அறிதோறறியாமை', 'இலங்கு நூல் கற்றார்', 'கற்றதனாலாய பயன்......வாலறிவன் நற்றாள் தொழல்' என்னும் திருவள்ளுவர் குறிப்புகள் அந்த இலக்கை முழு உலக நலனாகிய இறைவனடி சேர்தல்வரை கொண்டு செல்கின்றன.

(ஓ) பண்பு மரபு

பக்தித் துறையிலும் ஒழுக்கத் துறையிலும் உலகின் ஒப்புயர்வற்ற இலக்கியம் படைத்த மொழி தமிழ். உண்மையில் இவ்விரு துறைகளுக்கும் ஒரு முத்தாய்ப்பாக விளங்குவதே திருக்குறள் ஏனெனில் அது பக்தியையும் ஒழுக்கத்தையும் மட்டுமன்றி, கல்வியையும், அறிவையும், காதல், அன்பு, அருள் ஆகியவற்றையும், கலை, அழகு ஆகியவற்றையும், வீரம், ஆற்றல், இன்பம் ஆகியவற்றையும் இணைத்து முதல் அதிகாரத்திலேயே எல்லா மனித இன நலக் குறிக்கோள்களையும் தன்னகம் கொண்ட குறிக்கோளாகக் கடவுளை நமக்குச் சித்திரித்துக் காட்டுகிறது. நாத்திகர்கள்கூட ஏற்கும் கடவுட் குறிக்கோள் இது. மக்களுக்காக ஆட்சி என்ற குடியாட்சிப் பண்பு போல, மக்களுக்காகச் சமயம், மக்களுக்காகக் கடவுள் என்ற தமிழ் வள்ளுவக் குறிக்கோளை இது புலப்படுத்துகிறது.

தமிழில் எல்லாச் சமய இலக்கியங்களும் இத் தமிழ்ப் பண்பில் குளித்து அவ்வச் சமயத்துக்குத் தூய்மையும் உயர்வும் அளித்துள்ளன. புத்தர் தோத்திரமாயினும், அருகன் தோத்திரமாயினும், சைவ வைணவத் தோத்திரமாயினும், கிறித்துவ இசுலாமியத் தோத்திரமாயினும் எல்லாவற்றிலும் இத் தமிழ்ப் பண்பு மிளிர்வது காணலாம். சமயங் கடந்த, நாடு மொழி இனங் கடந்த, உயர்வு தாழ்வு வேறுபாடற்ற, அன்பில் நிறைந்த தன்மையே கடவுட்பண்பு, அதுவே தமிழ்ப்பண்பு. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்', 'வானுலகம் வேண்டேன், நரகும் புக அஞ்சேன், உன் பெயர் கூறும் உரிமை போதும்', 'புழுவாய்ப் பிறக்கினும் உன் அடி வழுவாதிருக்க வேண்டும்', 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', 'மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று' என்ற சீரிய கருத்துகளைத் தமிழிலக்கியத்தில் தொடக்கமுதல் இன்றுவரை தொடர்ந்தே காணலாம்.

தீது தீர்ந்த, வடு நீங்கிய, மாசிலாத, அலகிலாத என்னும் அடைமொழிகளைக் கடவுளுக்கும் பண்புகளுக்கும் வழிவழியாகத் தமிழர் வழங்கியுள்ளனர். திருவள்ளுவரின் அதிகாரங்களில் பெரும்பாலானவை எதிர்மறையாகவே அமைந்துள்ளதன் குறிப்பு இதுவே. தீமையைப் படிப்படியாக விலக்கிய தூய பயிற்சி நலப்பண்பையே தமிழர் யோக முறையாகக் கொண்டிருந்தனர் என்பதை இது காட்டுகிறது. தீமையையே இப்பயிற்சியால் நன்மையாக்கி நன்மைக்கு ஆற்றல் தரும் பண்பாக, இதனை வள்ளுவர் மரபில் நின்ற தமிழ் மரபு கொள்கிறது.

5. முடிவுரை

தமிழ் ஒரு மொழி மட்டுமன்று, ஒரு பண்பு. அது மொழி கடந்த, சமயங் கடந்த, நாடு கடந்த, இனங் கடந்த பண்பு. தமிழ்க் கண்ணோட்டத்துடன் ஒருவர் எம்மொழி பயின்றாலும், எச்சமயம் தழுவினாலும், எந்நாட்டுக்குத் தொண்டாற்றினாலும், அவர் அவ்வம்மொழியையும் சமயத்தையும் நாட்டையும் தம்மையும் உடனடி வெற்றி அதாவது உலகியல் வெற்றி நோக்கி மட்டுமன்று, நிலையான வெற்றியாகிய ஆன்மிக வெற்றி நோக்கியும் உயர்த்தி விடுவர் என்பது உறுதி.

இந்திய மாநிலங்களில் தமிழர்கள்

முனைவர் சாலை இளந்திரையன்

தமிழகத்துக்கு அப்பால், அநேகமாக இந்தியாவின் எல்லா மாநிலங்களிலுமே தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தமிழகத்திலிருந்து இடம் பெயர்ந்து வேறு மாநிலங்களில் குடியேறிய தற்கு அடிப்படையான காரணங்கள் வேறுவேறாக இருக்கலாம்; குடிபெயர்ந்த கால கட்டங்களும் வேறுவேறாக இருக்கலாம். ஆனாலும், பல்வேறு மாநிலங்களிலும், மொழிச் சிறுபான்மையர் என்ற வகையில், அவர்களின் வாழ்க்கை முறை சற்றேறக் குறைய ஒரே விதமாகத்தான் அமைந்திருக் கிறது.

எங்கே, எங்கே?

தமிழகத்தின் அண்டை மாநிலங்களான கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகியவற்றில் வாழும் தமி ழர்களில் பெரும்பாலோர் சென்றேறு குடிகள் அல் லர்; காலங்காலமாக அவர்கள் அங்கேயே வாழ்ந்து வருகிறார்கள். இந்த மாநிலங்களில் புதிய பெரிய தொழிற்களங்கள் தோன்றியதன் காரணமாக, 20/25 ஆண்டுகளில் இந்த மாநிலங்களில் குடியேறி யவர்கள் தவிர, பெரும்பான்மையான தமிழர்கள் அங்கேயே நிரந்தரமாக வாழ்ந்து வருபவர்களே.

இதற்கு முற்றிலும் மாறாக, இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள் பிழைப்பு நாடி யும் வேலை வாய்ப்புத் தேடியும் சென்றிருக்கிறார் கள். ஆங்கில ஆட்சியின் பிற்பகுதியிலும் நாடு விடுதலை பெற்ற பிறகும் இடம் பெயர்ந்தவர்கள் இவர்கள். மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், பீகார், பம்பாய், குஜராத், ஒரிசா, பஞ்சாப், அந்தமான் முதலிய மாநிலங்களில் தமிழர்களின் தொகை கணிசமாக உள்ளது.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் கல்கத்தா நகரம் இந்தியாவின் தலைநகராக இருந்தது. மத்திய அரசில் வேலை பெற்ற சில தமிழர்கள் வங்கத்தின் தலைநகரில் குடியேறினார்கள். தலைநகர், பிறகு தில்லிக்கு மாற்றப்பட்டாலும் கல்கத்தாவில் நிலை யாகத் தங்கிவிட்ட தமிழர்களின் வழி மக்கள் அங் கேயே தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். இது போலவே, தொழில் நகரமாகிய பம்பாயும் பல தமிழர்களைக் கவர்ந்தது. இவர்களின் பெருக்கத் தையும் செல்வாக்கையும் எதிர்த்துச் சிவசேனை என் னும் இயக்கம் கிளர்ச்சி செய்யும் அளவுக்கு, அங்கே தமிழர்களின் கூட்டம் பெருகி இருந்தது. மட் டுங்கா, தாராவி என்னும் நகர்ப்பகுதிகள் தமிழ்ப் பகுதிகள் போலவே காட்சியளிப்பதும் நினைக்கத் தக்கது. குஜராத் மாநிலத்து ஆலைத் தொழிலில் ஈடுபட்டுப் பல ஆயிரம் தமிழர்கள், அந்த மாநிலத் தின் தலைநகரிலும் பிற இடங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

உத்தரப் பிரதேசத்தின் மேற்குக் கோடியில் உள்ள தும் இந்தியாவின் தலைநகருமாகிய தில்லி மாநகரில், இந்தியாவின் எல்லா மொழியினரும் வாழ்கிறார்கள். இங்கு வாழும் தமிழர்களின் தொகை சுமார் மூன்று இலட்சம் இருக்கும் என்று தோன்றுகிறது.

இருவகைத் தமிழர்கள்

ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பது போல, தமிழகத்தை விட்டு வெளியேறி இந்தியாவின் வேறு மாநிலங்களில் குடியேறி இருப்பவர்கள் – வேலை வாய்ப்புத் தேடிச் சென்றவர்கள், பஞ்சம் பிழைக்கச் சென்றவர்கள் என்னும் இரண்டு பிரிவுகளில் அடங்குவார்கள் (கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் வாழும் தமிழர்கள் அந்தஅந்த மாநிலங்களுக்கே உரியோராய்த் தொழில்களிலும் பெரும்பணிகளிலும் ஈடுபட்டு வந்தாலும், சிறுபான்மையர் என்ற வகையில், அவர்களின் நிலை, வேறு மாநிலங்களில் வாழும் தமிழர்களின் நிலையில் இருந்து பெரிதும் வேறுபட்டதாக இல்லை).

அரசினர்ப் பணி அல்லது தனியார்துறைப் பணி காரணமாக அயல் மாநிலங்களில் குடியேறியவர்கள் பெரும்பாலும் மேல் நிலையைச் சேர்ந்த படித்த தமிழர்கள். மேற்குறித்த மூன்று பாரம்பரிய மாநிலங்களில் இத்தகைய நிலை பெற்றிருப்போரும் இந்த வர்க்கத்தினரே.

இதன் காரணமாக, வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களிடையில் இயல்பாகவே இரண்டு வகையினர் உருவாகிவிட்டார்கள்; ஒருவகையினர், படித்துப் பதவி பெற்று அல்லது சொந்தத் தொழில்கள் செய்து வருபவர்கள்; அடுத்த வகையினர், கடுமையான உடல் உழைப்பினால், சற்றே தாழ்ந்த நிலையில் ஒதுங்கி வாழ்பவர்கள். இதிலே முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்புவரை, ஒவ்வோர் இடத்திலும் வாழ்ந்து வருகிற இந்த இரண்டு வகையான தமிழர்களுக்கிடையே எந்தச் சிறிய தொடர்பும் இருந்ததில்லை. இலங்கை நாட்டில் யாழ்ப்பாணத்துத் தமிழர்களும் மலைப்பகுதியின் இந்திய வழியினரான தமிழர்களும் தனிப்பிரிந்து வாழ்ந்தது போலவே, இங்கும், இந்த இருவகைத் தமிழர்களும் வாழ்ந்தார்கள்.

வெளி மாநிலத் தமிழர்கள் இப்படிப் பிரிந்து நின்றதற்கு நம்மிடையே உள்ள சாதிப் பாகுபாடு ஒரு காரணமாக இருக்கலாம். அதைவிட, தொழில் வகையிலும் வருமான வகையிலும் அவர்களிடம் நிலவிய வேறுபாடே அவர்களைப் பிரித்து நிறுத்தியது என்று சொல்லவேண்டும்.

ஒருவகையினர், படித்தவர்கள்; அரசிலோ தனியார் துறையிலோ பதவிகள் வகிப்பவர்கள்; அல்லது சொந்தத் தொழில் வருமானம் உடையவர்கள். எனவே, நிரந்தர வருமானம் உடைய சுகவாசிகள். அடுத்த வகையினர் ஆலைகளிலும், சுரங்கங்களிலும், கப்பல் துறைகளிலும், புதிய கனரகத் தொழிற்சாலைகளிலும் தாழ்ந்த நிலையில் (குறைந்த சம்பளத்தில்) வேலை செய்பவர்கள். இவர்களில் பலருக்கு நிரந்தரமான வேலை கிடையாது. இவர்களில் பெரும்பாலோர் அங்கங்கே கூலி வேலை அல்லது வீட்டு வேலை செய்பவர்கள்; அல்லது ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் முதல் அய்ந்து ரூபாய் வரை கிடைக்கக்கூடிய சில்லறை வியாபாரங்களில் ஈடுபட்டு இருப்பவர்கள். எனவே, வாழ்க்கையையே ஒரு பிரச்சினையாக ஏற்றுக் காலந்தள்ளவேண்டியவர்கள். ஆகவே, இவர்களிடையே நெருங்கிய தொடர்புறவு ஏற்படவில்லை.

தமிழ்க் கல்வி

மொழிச் சிறுபான்மையர் என்ற வகையில் வெளி மாநிலத் தமிழர்களுக்குச் சில உரிமைகள் உள்ளன. அவைகளில் முக்கியமானது தாய்மொழிக் கல்வியைப் பற்றியது. அந்தந்த மாநிலங்கள், அங்கே வாழும் தமிழர்கள் தங்கள் மொழியைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதோடு, தமிழர்கள் தங்கள் கல்வி நிறுவனங்களை நடத்திக் கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது.

இந்த உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு தில்லி, பம்பாய், கல்கத்தா, அய்தராபாத், பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற மாநிலத் தலைநகர்களில், தமிழர்கள் தங்கள் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். தில்லி மாநகரிலே மட்டும் தமிழ்ப் பிள்ளைகளுக்காகத் தமிழர்களே நடத்தும் ஏழு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன.

ஆனாலும், இங்கெல்லாம் வாழ்கின்ற சாதாரணத் தமிழர்கள் இந்தக் கல்வி நிறுவனங்களால் தேவையான அளவு பயன் பெறவில்லை. அவர்களின் தமிழ்க் கல்வி, அந்தந்த மாநில அரசுகள் வழங்கும் சிறிய சலுகைகளை நம்பியே நடைபெற வேண்டி இருந்தது; இன்னமும் இந்நிலை நீடிக்கவே செய்கிறது. சான்றாக, தில்லி மாநகரில், தமிழ்ப் பிள்ளைகளுக்காகவே (ஒன்று முதல் 12 வகுப்பு வரை உள்ள) ஏழு மேல்நிலைப் பள்ளிகள் இருந்தாலும், (பத்துத் தேய்த்தல் என்னும்) வீட்டு வேலை செய்தும் கூலி வேலைகள் செய்தும் வாழும் பல்லாயிரம் எளிய தமிழர்கள், தில்லி நகராண்மைக் கழகத்தார் அமைத்துள்ள தொடக்கத் தமிழ்ப் பள்ளிகளுக்கே செல்லவேண்டியுள்ளது.

வெளி மாநிலத் தமிழர்களின் கல்வியைப்பற்றிப் பேசும்போது, அங்கங்கே உயர் மட்டத்தில் தமிழ்க் கல்விக்கு ஏற்பட்டுள்ள வாய்ப்புகளையும் சிந்திக்க வேண்டும். திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, பெங்களூர், திருப்பதி, அய்தராபாத், காசி, அலகாபாத், கல்கத்தா, பஞ்சாப், இலட்சுமணபுரி, ஆக்ரா, தில்லி ஆகிய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பில் தமிழை ஒரு பாடமாகப் பயில வாய்ப்பு உள்ளது. திருவனந்தபுரம், கோழிக்கோடு, திருவேங்கடவன் (திருப்பதி), உசுமானியா, தில்லி ஆகிய பல்கலைக் கழகங்களில் தமிழ் எம்.ஏ. படிக்கவும் தமிழின் உயர்படிப்பாகிய முனைவர் (டாக்டர்) பட்டத்துக்கு ஆராய்ச்சி செய்யவும் வாய்ப்பு இருந்து வருகிறது.

தமிழ்ச் சங்கங்கள்

வெளி மாநிலத் தமிழர்கள் தமிழ்க் கல்வியிலே காட்டும் ஆர்வத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் தமிழ்ச் சங்கங்கள் அமைத்துக்கொள்வதில் இந்தத் தமிழர்கள் பெருமளவு ஆர்வம் காட்டியே வந்திருக்கிறார்கள். அதுபோலவே, தமிழர்களில் உயர் நிலையினரும் தாழ்நிலையினரும், தத்தம் வழிபடு தெய்வங்களுக்குக் கோயில்கள் கட்டுவதிலும் விழா எடுப்பதிலும் எந்தக் குறையும் வைக்கவில்லை. இவர்களில் பல பேர், வாழ்க்கை முன்னேற்றத்துக்கு வேண்டிய பணிகளில் ஊக்கமாக ஈடுபடவில்லை என்கிற குறை இருக்கலாம்; சைவ, வைணவ மற்றும் சிறுதெய்வ வழிபாட்டுக்கான கோயில்களை எழுப்ப வில்லை என்ற குறையே கிடையாது.

மேற்படி சங்கங்களின் வரிசையில் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம், பம்பாய்த் தமிழ்ச் சங்கம், தில்லித் தமிழ்ச் சங்கம் முதலியவை குறிப்பிடத் தக்கவை. வள்ளுவர், சுப்பிரமணியக் கவிஞர் முதலியோர் பெயரில் அமைந்த தமிழ்ச் சங்கங்களும் சில ஊர்களிலே உண்டு.

தமிழகத்திலிருந்து எளிதான போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இந்த நகரங்களில் மட்டுமல்லாமல் கான்பூர், ஆக்ரா, பூனா, பத்ராவதி, நாகபுரி, சித்தூர், கோலார் தங்கவயல், பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் போன்ற இடங்களிலும் தமிழின் பேரால் சங்கங்களை அமைத்துள்ளார்கள். நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள (அய்.அய்.டி.) தொழிலியல் கல்விக் கழகங்களில் சென்று சேரும் தமிழகத்து மாணவர்களும், அங்கங்கே, தங்கள் தமிழ்ச் சங்கங்களை அமைத்துள்ளார்கள். இலக்கியச் சொற்பொழிவு, இசை நடன நிகழ்ச்சி போன்றவைகளும் இவற்றிலே நடப்பது உண்டு. அந்தந்த மாநில மக்களில் விருப்பமுடையவர்களுக்குத் தமிழைக் கற்பிப்பதிலும் இச் சங்கங்கள் ஈடுபடுவது உண்டு.

தமிழர் அல்லாதவர்களுக்குத் தமிழ் இலக்கியத்தை அறிமுகம் செய்வதிலும் இச் சங்கங்கள் அவ்வப்போது ஆர்வம் காட்டி வந்துள்ளன. கல்கத்தாவிலே உள்ள பாரதி தமிழ்ச் சங்கம், பாரதி இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளது; சங்க இலக்கியத்தின் சில பகுதிகளையும் இச் சங்கம் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது. தில்லித் தமிழ்ச் சங்கம் வ.வே.சு. அய்யரின் கம்பராமாயண ஆய்வையும் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பையும் வெளியிட்டுள்ளது.

இவை தவிர, தமிழ் இதழ்களையும் புத்தகங்களையும்கூட இவை வெளியிடுகின்றன. பம்பாய்த் தமிழ்ச் சங்கம் **அணுவைப்பற்றி** என்னும் தமிழ் நூலையும், சங்கத்தின் வெள்ளி விழாவின்போது நாடக நூல் ஒன்றினையும் வெளியிட்டதோடு, மாதந்தோறும் **ஏடு** என்னும் இதழையும் வெளியிடுகிறது. இச்சங்கத்தோடு தொடர்புடைய முருகையா என்பவர் **விந்தியா** என்னும் அழகிய மாத இதழைச் சிறிது காலம் நடத்திவந்தார்.

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் **கோளத் தமிழ்** என்னும் மாத இதழை வெளியிடுகிறது. பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்திலிருந்து **ஊற்று** (மாத இதழ்) வெளி வருகிறது. தில்லித் தமிழ்ச் சங்கம் **சுடர்** என்னும் ஆண்டிதழை வெளியிடுகிறது. பொதுவாகவே 'சுடர்கள்' சிறந்த கட்டுரை, ஆய்வுரைகளைத் தாங்கி வரும். 1971-ல் தில்லித் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட வெள்ளி விழா மலர் பலராலும் சீரிய இலக்கியப் பெட்டகமாகப் போற்றப்பட்டது.

எழுத்தாளர்கள்

தமிழ்ச் சங்கங்களோடு தொடர்புபட்டவர்களும் தொடர்புபடாதவர்களுமான பல தமிழர்கள், ஆங்காங்கு இருந்து, தமிழ் இதழ்களையும் வெளியிட்டு வருகிறார்கள். திருவனந்தபுரத்திலிருந்து **வஞ்சி நாடு** வார இதழ் பல காலமாக வெளி வருகிறது. **கணையாழி** என்னும் மாத இதழ் சிறிது காலம் தில்லியிலிருந்து வெளி வந்தது. (சென்னை) அறிவியக்கப் பேரவையினர் வெளியிடும் **அறிவியக்கம்** மாத இதழின் சிறப்பாசிரியர் அலுவலகம் தில்லியிலேயே உள்ளது.

பெங்களூரிலிருந்து **தினச்சுடர்** என்னும் நாளிதழ் வெளி வருகிறது. **அந்தமான் முரசு** என்னும் மாத இதழ் அந்தத் தீவிலிருந்து வெளி வருகிறது. இவை தவிர, அவ்வப்போது தோன்றிச் சிறிது காலம் நடந்து, நின்றுவிட்ட சில இதழ்களும் உண்டு.

வெளி மாநிலத் தமிழர்களில் பல எழுத்தாளர்களும் உருவாகியுள்ளார்கள். குறிப்பாக, தமிழகத்தின் பொழுதுபோக்கு இதழ்களில் எழுதுவோரில் பலர் வெளி மாநிலத் தமிழர்களே. ஆயினும், தரம் வாய்ந்த தமிழ் எழுத்தாளர்களில் சிலபேர் தில்லி, திருவனந்தபுரம் போன்ற இடங்களில் வாழ்கிறார்கள். இவர்கள் தங்கள் சங்கங்களையும் அமைத்திருக்கிறார்கள். அவற்றுள் கல்கத்தாத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கமும் குறிப்பிடத்தக்கவை.

பண்பாட்டு இணைவுகள்

பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள் பொருளாதார வசதியிலும், மொழி, கலை போன்ற பண்பாட்டு நடவடிக்கைகளிலும் இருவேறு விதமாக இருப்பது போலவே, பிற மொழி மக்களின் மொழி, கலை, பழக்க வழக்கம் முதலியவைகளால் இவர்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள தாக்கமும் (Influence) இருவேறு விதமாகத்தான் உள்ளது.

வெளி மாநில உயர்நிலைத் தமிழர்களின் பேச்சு மொழியில் அந்தந்த மாநிலத்து மொழியின் சொற்களைவிட ஆங்கிலச் சொற்களே மிகுதியாக உள்ளன.

சான்றாக, கேரளத்தில் வாழும் (தமிழராகிய) ஓர் உயர் அதிகாரியின் வீட்டுத் தமிழில் மலையாள மொழியின் சொற்கள் சில கலந்திருப்பினும் ஆங்கில மொழிச் சொற்கலப்பே அதிகம். அதேபோல், தில்லித் தமிழ் உயர் அதிகாரியும் அவர் மக்களும் பஞ்சாபி, இந்திமொழிச் சொற்கள் சிலவற்றோடு ஆங்கிலச் சொற்களையும் (சிலபோது ஆங்கில வாக்கியங்களையும்) மிகுதியாகக் கலந்தே தமிழைப் பேசுவார்கள்.

வாய்ப்புக் குறைந்த தமிழர்கள், அந்தந்த மொழிப் பகுதிகளில் உள்ள தங்களைப் போன்ற தாழ்நிலை மக்களுடனேயே நெருங்கி வாழ வேண்டியுள்ளது. பலபோது, அவர்களின் மக்கள் (தமிழர்கள் நடத்தும்) தமிழ்ப் பள்ளிகளுக்குச் செல்ல வாய்ப்பு இராது; மாநில அரசு அமைத்துள்ள தமிழ்ப் பள்ளிகள் எங்கெங்கோ இருக்குமாதலால், அங்கேயும் இவர்கள் சென்று தமிழ் படிக்க முடியாது. இந்தக் காரணங்களால் சாதாரணத் தமிழர்களின் குழந்தைகள், பெரும்பாலும் அவர்கள் சென்று குடியேறியுள்ள மாநிலத்தின் மொழியையே படிக்கிறார்கள். இந்தத் தொடர்புகளின் காரணமாக, அயல் மாநிலங்களில் உள்ள சாதாரணத் தமிழர்களின் தமிழ்ப் பேச்சில் அவ்வப் பகுதியில் உள்ள மொழியே மிகுதியாக ஊடுருவி நிற்கிறது.

''முஃப்தாவா குடுக்கிறான்?....அவன் மர்ஜிப்படி செய்துட்டுப் போறான்'' என்றெல்லாம் தில்லித் தமிழர்கள் மிகச் சாதாரணமாகப் பேசுவார்கள். 'முஃப்த்' என்றால் இனாம் அல்லது இலவசம் என்று பொருள்; 'மர்ஜி' என்றால் (அவனுடைய) விருப்பம் போல என்று பொருள்.

ஆடை அணிகலன்களிலும் இந்த வேறுபாடு காணக் கிடக்கிறது. வட மாநிலங்களில் (வெயில் காலத்திலேகூட) வேட்டி கட்டும் தமிழர்கள் மிகமிகக் குறைவு; எல்லோரும் அந்தப் பகுதி மக்களைப் போல், பேண்ட் என்னும் நெடுங்கால் சட்டையே அணிவார்கள். பெண்மக்களில் இளந்தலைமுறையினர் சிலர் பாவாடை, சட்டை, தாவணி அணிவார்கள்; பல பேர், வடநாட்டுப் பெண்களைப் போலவே, சல்வார் (கால்சட்டை), கமீஸ் (நெடுஞ் சட்டை), சுன்னி (மேல் துண்டு) என்பவைகளையே அணிகிறார்கள். இந்தத் தமிழ்ப் பெண்கள் பத்துப் பேர் கூடும் இடங்களிலும், ஆங்கிலம் அல்லது இந்தியிலேயே தங்களுக்குள் பேசிக்கொள்வதால் இவர்களைத் தமிழ்ப் பெண்கள் என்று அடையாளம் காண்பதே கடினம்.

இவர்களில் சில பேர், ஆடைவகையில் கால்சட்டைக்கே தாவிவிட்டாலும், மூக்குத்தி, கழுத்துச் சங்கிலி, வளையல் போன்றவற்றை அணிந்திருப்பார்கள். வட மாநிலங்களில் பெண்கள் மிகுதியான நகைகளை அணிவதில்லை. எனவே, நகை அணிய வாய்ப்பு இல்லாமலும் பாவாடை, தாவணி வாங்க வசதி இல்லாமலும் உள்ள சாதாரணத் தமிழர்களின் பெண்கள் வடநாட்டுப் பெண்கள் போலவே தான் காட்சியளிப்பார்கள்.

உணவுவகையில் தமிழர்கள் மிகுதியாக மாறி இருப்பதாகச் சொல்ல முடியாது; எங்கே வாழ்ந்தாலும் சோறு, சாம்பார், ரசம், மோர் என்ற வகையிலேயே பிற மாநிலத் தமிழர்களின் உணவு அமைகிறது. சில உட்பகுதிகளில் வாழும் தமிழர்கள் சப்பாத்தியை மிகுதியாக உண்ணக்கூடும்; அதேபோல் அந்தந்த மாநிலச் சிறப்பு உணவுக்கும், தங்கள் உணவுத் திட்டத்தில் இடங்கொடுத்திருப்பார்கள். ஆனால், இதிலே பெரிய மாறுதல் ஏற்படவில்லை.

பூரியும் சப்பாத்தியும் தென்னகத்தில் பரவி வருவது போலவே, தென்னகத்து மசால்தோசை வட இந்திய மாநிலங்களில் மிகுதியாக விரும்பப்படுகிறது. உளுந்து வடை, சாம்பார் என்பவைகளுக்கும் வடக்கிலே பெரும் வரவேற்பு உள்ளது. வட நாட்டுப் பெருநகரங்களில், ''மசால் தோசை, வடை சாம்பார் கிடைக்கும்'' என்று எழுதப்படாத உணவுக் கடைகளைப் பார்ப்பதே அரிது. (பெரிய உணவகங்களில் சாம்பாருக்கும் தனி விலை உண்டு.) இதனால், ஆங்காங்குச் சென்று வேலை இல்லாமல் உழன்ற பல எளிய தமிழர்களுக்கு இந்தக் கடைகளில் வேலை கிடைத்துள்ளது.

ஒரு மகிழ்ச்சி

அயல் மாநிலங்களில் தமிழர்களின் வாழ்விலே மேடு பள்ளங்கள் இருந்தாலும், தமிழர்கள் நம்பிக்கையானவர்கள், சுத்தமானவர்கள், திறமைமிக்க உழைப்பாளிகள் என்னும் எண்ணம் எந்த இடத்திலும் இருந்துதான் வருகிறது. ஆங்கிலேயர் காலத்தில் நாடெங்கும் நெடுஞ்சாலைகள் அமைத்ததிலும் இரயில் வழிகளை அமைத்ததிலும் தமிழ்த் தொழிலாளிகளுக்கு மிகுதியான பங்கு உண்டு என்று சொல்லுவார்கள். இன்றைக்கும், இந்தியாவின் பல பகுதிகளில் தமிழர்கள் இந்தப் பணித்துறைகளில் மிகுதியாகவே இருக்கிறார்கள்.

மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் பதவிகள் வகித்துப் பெருஞ்சிறப்பு எய்திய தமிழர் பலர் உண்டு. இன்றும் இந்த மரபு தொடர்ந்து இருந்து வருகிறது. தாங்கள் சென்று வாழும் பகுதிகளில், தாங்கள் தமிழ் என்றும் தமிழ்ப் பண்பாடு என்றும் நினைத்தவைகளைப் பரப்பியும் வந்திருக்கிறார்கள். இவர்களில் பலபேர் போதிய தமிழறிவும் தமிழ்த் தெளிவும் இல்லாதவர்களாக இருந்துவிட்டதால், தமிழின் தலைமையான தனித்தன்மைகளை (குறிப்பாக, சங்க இலக்கியம், மதச் சார்பற்ற தமிழ் வாழ்க்கை போன்றவைகளை) இவர்கள் பிறமொழி மக்களிடம் எடுத்துக் காட்டவில்லை. தில்லி போன்ற இடங்களிலாவது இந்தக் குறை இப்போது சிறிது நீக்கப்பட்டு வருகிறது.

தாயகப் பற்று

தமிழர்கள் இந்தியாவின் எந்த மாநிலத்தில் சென்று வாழ்ந்தாலும், தங்கள் தாய்த் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளவே விரும்புகிறார்கள். பொதுவாக, கோடை விடுமுறையின்போது வெளிமாநிலத் தமிழர்களில் 100-க்கு 85 பேருக்கு மேல், தமிழகத்துக்கு வந்துவிடுகிறார்கள். இந்தியாவில் உள்ள வேறு எந்த மொழியினரையும் விடத் தமிழர்கள் இத்தகைய 'தாயக அன்பு' மிஞ்சியவர்களாகக் காணப்படுகிறார்கள்.

தங்கள் மாநிலங்களை விட்டு வெளியிலே வாழும் வங்காளிகள், பஞ்சாபியர், குஜராத்தியர் போன்றோர் வெப்பம் மிகுந்த கோடை காலத்தில், தங்கள் மாநிலங்களுக்குச் செல்வதைவிட, இமயச் சாரலில் உள்ள சிம்லா, காஷ்மீர், முசூரி போன்ற சுகவாச இடங்களுக்கே செல்லுகிறார்கள்; தமிழர்களோ கோடை மணி அடித்ததும் தங்கள் தாயகம் நோக்கியே பயணப்படுகிறார்கள்.

இத்தகைய 'தாயகப் பற்று' தமிழர்களின் வேறு பல நடவடிக்கைகளிலும் வெளிப்படுகிறது; அங்கங்கே, தமிழின் பேரால் சங்கம் வைத்திருக்கிற வெளிமாநிலத் தமிழர்கள், அடிக்கடி, தாய்த் தமிழகத்திலிருந்து அறிஞர்களை அழைத்து அவர்களின் உரைகளைக் கேட்பதில் பெரிய ஆர்வம் காட்டுகிறார்கள். அவ்வப்போது தமிழகத்தில் உள்ள குழுக்களை அழைத்து இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளை இவர்கள் நடத்துவதும் உண்டு. தமிழ்த் திரைப்பட நடிக, நடிகையர் வந்துவிட்டாலோ, ஓடிப்போய் விழுந்து மொய்த்துக்கொள்வார்கள்.

தாயகத்தின் பெரும்பாலான தமிழர்களைப் போலவே, வெளிமாநிலத் தமிழர்களும் இலக்கியம், இசை, நடனம், நாடகம் என்னும் கலைகளைவிடத் திரைப்படத்தில்தான் மிகுதியான ஈடுபாடு காட்டுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஊரில் ஒரு 10 தமிழ்க் குடும்பங்கள் இருந்தால் போதும்; எப்படியாவது, வாரம் ஒரு தமிழ்ப்படம் திரையிடப்படுவதற்கு ஏற்பாடு செய்துவிடுகிறார்கள்.

அரசியலிலேகூட வெளி மாநிலத் தமிழர்கள், தாங்கள் வாழும் இடத்து அரசியலைவிடத் தமிழகத்து அரசியலிலேயே அதிகமான ஆர்வம் காட்டுவார்கள். இவர்களுக்கு வாக்குரிமை தமிழகத்திலே இராது; அவர்கள் சென்று வாழும் இடங்களிலே தான் இருக்கும். என்றாலும், அவர்கள் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளுக்கே நிதி திரட்டி அனுப்புவார்கள்.

இவ்வளவு பெரிய செய்திகளுக்குப் போக வேண்டியதில்லை; தங்கள் ஊர் வாழை இலை, வாழைத் தண்டு, வாழைக்காய், அப்பளம், வடகம், முறுக்கு, வெற்றிலை, பொழுதுபோக்குப் பத்திரிகைகள் என்னும் இவைகள் இல்லாவிட்டால், வெளி மாநிலத் தமிழர்களில் பலர் சாம்பிக் கூம்பிப் போவார்கள். வெளி மாநிலங்களில், ஓர் இடத்தில் தமிழர்கள் கணிசமாக வாழ்கிறார்கள் என்பதை அறிவதற்கு மேற்படி 'தமிழ்ப் பொருள்'களை விற்கும் பெட்டிக்கடைகளே அடையாளம்.

விட்டும் விடாத தொடர்பு

தமிழகத்துக்கு அப்பால், இந்திய மாநிலங்களில் வாழும் தமிழர்கள், இந்தியக் குடிமக்கள் என்ற முறையில், அவ்வப்பகுதி மக்களோடு சம உரிமையோடு வாழ்கிறார்கள். பிறமொழிப் பகுதிகளில் தங்கள் மொழி, கலை, பண்பாடுகளைக் காத்து வாழ்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள். தங்களுக்குள் வேறுபாடு பாராட்டுவதாலும் சில போது தளர்ந்து நிற்கிறார்கள். ''மழலைத் திருமொழியிற் சில வடுகும் சில தமிழும் குழறித் தரு கருநாடியர்'' என்று தமிழறிந்த கருநாடகத்தாரைக் குறிப்பிட்டது கலிங்கத்துப் பரணி. அதுபோலவே, மொழி, கலை மற்றும் பழக்க வழக்கங்களில் பிறமொழி இன ஊடுருவல்களுக்கு இடந் தந்துள்ள பிற மாநிலத் தமிழர்கள் தாயகத் தமிழர்களுக்கு மிக இனிய உறவினர்களாக விளங்குகிறார்கள். உலகெங்கும் வாழும், சுமார் 7 கோடித் தமிழர்களில் இப்படி, தாயகத்தோடு விட்டும் விடாத தொடர்புடைய தமிழர்கள் பல இலட்சம் பேர் இருப்பது நமது மொழியினத்துக்கே ஒரு புதுமையான வகைமைப்பாட்டைத் தருகிறது அல்லவா?

உலக நாடுகளில் தமிழர்கள்

டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ)

இன்றைய அறிவுலகம் அறிந்த வரையில் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு மேற்பட்ட வரலாற்றுப் பழமை உடையதாய் இலக்கிய இலக்கண வளம் உடையதாய் இன்றும் வழக்கு வன்மை உடையதாய் விளங்கும் ஓர் உயர் தனிச் செம்மொழி தமிழ்தான் என்பது நமக்குப் பெருமையும் ஊக்கமும் அளிக்கின்ற ஓர் உண்மையாகும். இந்த மொழிக்கு உரிய மக்கள், அரசு, நாடு, சமயம் ஆகிய எல்லாவற்றையும்விட மொழிக்கே முதன்மை கொடுத்து வந்திருக்கிறார்கள் என்பது இந்த நாட்டு வரலாற்றை மேம்போக்காகப் பார்த்தாலும் தெளிவாக விளங்கும். தமிழ், தமிழர், தமிழகம் என்னும் சொற்களின் அமைப்பும் இதை நமக்கு நுட்பமாக உணர்த்துகிறது. உலகில் பல்வேறு மொழிகள் மக்களின் பெயராலும் நாட்டின் பெயராலும் பெயர் பெற்றிருக்க, இங்கு மட்டும் மக்களும் நாடும் மொழியின் பெயரால் பெயர் பெற்றிருப்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

இன்று உலகில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட தனி நாடுகள் உள்ளன. இவற்றில் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகள் தமிழோடும் தமிழரோடும் தமிழ்ப் பண்பாட்டோடும் தொடர்புடையனவாக விளங்குகின்றன. இந்தத் தொடர்புகள் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சூழல்களில் பல்வேறு முறைகளில் ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் தொடர்புகளை வரலாற்று நோக்கில் ஆராய்வது மிகவும் பயனுள்ள பணிதான் என்றாலும் அதை இந்தச் சிறு கட்டுரையில் நிறைவேற்ற இயலாது. உலக நாடுகளில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதோடு அது தொடர்புடைய சில செய்திகளையும் சொல்லி, இச் சூழலில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஓரளவுக்குச் சுட்டிக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் ஏராளமாகத் தமிழர்கள் வாழுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். கீழ்க்காணும் எல்லா நாடுகளிலும் குறிப்பிடத்தக்க அளவு தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள்:

இலங்கை (Sri Lanka)
கயானா (Guyana)
குவாடிலோப் (Guadeloupe)
கென்யா (Kenya)
சிங்கப்பூர் (Singapore)
சுரினாம் (Surinam)
ஜமைக்கா (Jamaica)
டிரினிடாடு (Trinidad)
தான்ஸேனியா (Tanzania)
தென்னாப்பிரிக்கா (South Africa)
நியூ காலிடோனியா (New Caledonia)
பர்மா (Burma)
ஃபிரஞ்சு கயானா (French Guiana)
ஃபிஜித் தீவுகள் (Fiji Islands)
மலேசியா (Malaysia)

மார்ட்டினீக் (Martinique)
மோரீசு (Mauritius)
யுகாண்டா (Uganda)
யூ.கே. (U.K.)
யூ.எஸ்.ஏ. (U.S.A.)
யூ.எஸ்.எஸ்.ஆர். (USSR)
ரீயூனியன் (Reunion)

இந்த நாடுகளில் வாழும் தமிழர்களில் பெரும்பாலோர் அவர்கள் வாழும் நாடுகளையே தங்கள் தாய்நாடுகளாக ஏற்றுக்கொண்டவர்கள். ஆனால், அவர்கள் எல்லோராலும் அந்தந்த நாட்டு மொழிகளைத் தங்கள் தாய்மொழிகளாகவும் அந்தந்த நாட்டுப் பண்பாடுகளைத் தங்கள் தாய்ப் பண்பாடுகளாகவும் முழுதாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அவர்கள் தமிழில் பேச வேண்டுமென்றும் தமிழைக் கேட்க வேண்டுமென்றும் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் மிகவும் விரும்புவதாக அறிகிறோம். தமிழ்ப் பண்பாட்டோடும் தமிழகத்தோடும் தங்களுக்கு நிலையான தொடர்புக்கு வாய்ப்பு வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். இயன்றவரையில் அந்தந்த நாடுகளில் தமிழ் மக்கள் பண்பாட்டுக் கழகங்களையும் இலக்கியக் கழகங்களையும் தமிழ் மன்றங்களையும் அமைத்துக் கொண்டு செயற்பட்டு வருவதும் இங்கே குறிப்பிடத் தக்கது. பிறநாடுகளில் வாழும் தமிழர்களில் இத்தகைய வாய்ப்புகளை ஒரு சில நாடுகளில்தான் அவர்களால் உருவாக்கிச் செயற்பட முடிந்திருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சில செய்திகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தம்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் சூழ்நிலை ஏனைய நாடுகளில் வாழும் தமிழர்களின் சூழ்நிலையிலிருந்து வேறுபட்டது. இங்கே உள்ள தமிழர்கட்குத் தமிழிலேயே உயர்கல்வி பெறுகின்ற அளவுக்குத் தமிழ்க்கல்வி வாய்ப்பு உண்டு. இலங்கையில் உள்ள உள்நாட்டு மொழிகளில் தமிழும் ஒன்று என்ற உரிமையோடு தமிழ்மொழி இங்கே வளர்ந்து வருகிறது. தமிழ் நாட்டில் உள்ளது போலவே இங்கும் பல்வேறு பண்பாட்டுக் கழகங்களும் மன்றங்களும் உண்டு. தரமான இதழ்களும் நூல்களுங் கூட இந்த நாட்டிலிருந்து தமிழில் வெளிவருகின்றன.

மலேசியாவில் வாழும் தமிழர்களுக்கும் தமிழில் உயர்கல்வி பெற வாய்ப்பு உண்டு. மலேசியாவிலுள்ள பல்வேறு தமிழ் மன்றங்களும் பண்பாட்டுக் கழகங்களும் இங்கே நூலகங்களையும் படிப்பகங்களையும் அமைத்து நடத்தி வருகின்றன. முதல் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்திய மலேசியாவில் இப்போது தமிழிலேயே நல்ல இதழ்களும் நூல்களும் வெளிவருகின்றன.

சிங்கப்பூரில் மலாய், சீனம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு உள்ள உரிமைகள் தமிழுக்கும் உண்டு. இங்கே பள்ளி இறுதி வகுப்பு வரை தமிழும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. மலேசியாவில் உள்ளதைப் போலவே இங்கும் பல்வேறு தமிழிலக்கியப் பண்பாட்டுக் கழகங்கள் இயங்கி வருகின்றன.

பர்மாவில் வாழும் தமிழ் மக்களுக்குத் தமிழ்க் கல்வி வாய்ப்பு அவ்வளவு எளிதாக அமையவில்லை. இங்கே உள்ள தமிழ்க் குழந்தைகட்குத் தனிப்பட்ட முறையில் தமிழ் கற்பிக்கச் சில ஆசிரியர்கள் உள்ளனர். இரங்கூனில் உள்ள தாகூர்க் கல்லூரியில் மட்டும் தமிழுக்கு இடம் இருப்பதாக அறிகிறோம்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஆகிய இந்த நான்கு நாடுகளிலுமே தமிழ்க் கோயில்கள் உண்டு. தமிழ்ப் பண்பாடு தழுவிய விழாக்களை இந்த நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

ஃபிஜித் தீவுகளில் (Fiji Islands) பெரும்பாலும் ஃபிஜியர்களும் இந்தியர்களுமே வாழ்கிறார்கள். இங்கே உள்ள இந்தியர்களில் குறிப்பிடத்தக்க அளவு தமிழர்களும் உள்ளனர். இந்தத் தீவில் நடி (Nadi) எனும் இடத்தில் உள்ள தென்னிந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம் தமிழ்க் கல்விக்காகவும் தமிழ்ப் பண்பாட்டுக்காகவும் ஆற்றி வரும் பணிகள் பாராட்டத்தக்கன. தமிழ்நாட்டு விழாக்கள், பண்டிகைகள் ஆகியன இங்கே உள்ள தமிழர்களால் இன்றும் கொண்டாடப்படுகின்றன. பல கோயில்களில் தீ மிதிப்பு விழாவும் நடைபெறும். விழாக் காலங்களில் தெருக்கூத்துகளும் உண்டு என அறிகிறோம்.

இங்கே நாம் குறிப்பிட்ட நாடுகளைத் தவிர முன்பே குறிப்பிட்டுள்ள மற்ற நாடுகளில் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் வாழ்ந்து வருகிறார்கள். மொழி நோக்கிலும் பண்பாட்டு நோக்கிலும் இவர்கட்கு நாம் சில இன்றியமையாத உதவிகளைச் செய்து ஒத்துழைப்பு வழங்குவது இருபாலும் மகிழ்வூட்டிப் பயன்விளைக்கும் பணியாம்.

நேரடியாகத் தமிழர்கள் குடியேறிய நாடுகள் ஒருபுறமிருக்க வரலாற்று நோக்கிலும் பண்பாட்டு நோக்கிலும் தமிழகத்தோடு மிக நெருங்கிய தொடர்புடைய நாடுகள் சில உள்ளன. சான்றாகக் கீழ் வரும் நாடுகளைச் சுட்டலாம்:

இத்தாலி (Italy)
இந்தோனேஷியா (Indonesia)
ஈராக் (Iraq)
எகிப்து (Egypt)
எத்தியோப்பியா (Ethiopia)

கம்போடியா (Cambodia)

கிரீஸ் (Greece)

சீனா (China)

தாய்லாந்து (Thailand)

நெதர்லாந்து (Netherlands)

போர்ச்சுகல் (Portugal)

ஜப்பான் (Japan)

வரலாற்றாராய்ச்சியும் பண்பாட்டாராய்ச்சியும் சிறப்பாக வளரவேண்டுமானால் மேற்கண்ட நாடுகளில் நம் வரலாறு பண்பாடுகளுடன் தொடர்புடையனவாகக் காணும் செய்திகளையும் நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு ஒப்பிட்டு ஆராய வேண்டும்.

இனி மொழி நோக்கில் நம்மோடு தொடர்புடைய சில நாடுகளையும் இங்கே குறிப்பிட வேண்டும். சுமேரியன், ஹங்கேரியன், கொரியன் முதலாய மொழிகள் திராவிட மொழிகளோடு இனத்தொடர்பு உடையனவாக இருக்கக்கூடும் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். அத்தகைய மொழியியல் ஆய்வுகள் சிறப்பாக நிறைவேறப் பிற நாட்டின் ஒத்துழைப்பும் மிகவும் இன்றியமையாதனவாம். இந்த நோக்கில் கீழ்க்காணும் நாடுகள் குறிப்பிடத் தக்கன:

ஆஸ்திரியா (Austria)

ஈராக் (Iraq)

ஹங்கேரி (Hungary)

செனிகால் (Senegal)

ஸ்பெயின் (Spain)

துருக்கி (Turkey)

தென் கொரியா (South Korea)

பாக்கிஸ்தான் (Pakistan)

ஃபின்லாந்து (Finland)

வட கொரியா (North Korea)

இப்போதைய சூழலில் நம் நாட்டில் நமக்கு உள்ள இன்றியமையாத பொறுப்புகள் மிகப் பல உள்ளன என்பது உண்மைதான். ஆனாலும் தமிழ் மொழிக்காகவும் தமிழ்ப் பண்பாட்டுக்காகவும் உலக நாடுகளில் உள்ள தமிழர்களுக்காகவும் உலக நோக்கில் விரைவில் நிகழ்த்த வேண்டிய சில இன்றிமையாத பணிகளையும் உணர்ந்து முன்னின்று முனைந்து நிறைவேற்ற வேண்டியதும் நமது பொறுப்புதான் என்பதை இங்கே வலியுறுத்திக் கூற வேண்டும். இந்த வகையில் அரசும் அறிஞர்களும் மக்கள் தலைவர்களும் சிந்தித்துத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டிய நேரம் இது.

மிகச் சுருக்கமாகச் சொன்னால், (1) பிற நாடுகளில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்கவும், (2) வரலாற்றுப் பண்பாட்டு நோக்கில் பிற நாடுகளுடன் தமிழகத்துக்கு உள்ள தொடர்பை நன்கு ஆராயவும், (3) உலக மொழிகளில் பிற நாட்டு மொழிகளோடு தமிழ் மொழிக்கு உள்ள இனத்தொடர்பை நன்கு ஆராயவும் நாம் விரைவில் தகுந்த வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

இத்தகைய பணிகள் உலக நாடுகளிடையே ஒத்துணர்வையும் நல்லுறவையும் வளர்ப்பதோடு மொழியியல், பண்பாடு, வரலாறு ஆகிய துறைகளில் புதிய உண்மைகளையும் நமக்கு வழங்கக் கூடும். தமிழ்த் திரு நெஞ்சங்கள் உலகப் பெரு நோக்கில் பெரும் பயன் விளைக்கும் அரிய ஆய்வுகளுக்குப் புது நெறி அமைக்கும் என நம்புகிறோம்.

துணை நூல்கள்

தமிழக சாவகக் கலைத்தொடர்புகள்
அ. இராகவன், சென்னை (1967)

உலகில் தமிழும் தமிழரும்
பொன். கோதண்டராமன், சென்னை (1976)

அக்கரைச் சீமையிலே
சோமு, சென்னை (1969)


ஒன்றே உலகம்
தனிநாயக அடிகள், சென்னை (1974)

தமிழும் பிற பண்பாடும்
தெ. பொ. மீனாட்சிசுந்தரன், சென்னை (1973)

Some Manuscripts in Grantha Script in Bangkok, BSOAS, Vol. XXXII, pt. 2.
Dr. J. R. Marr, London (1969)

Tamil Studies Abroad
Dr. S. Thaninayakam, Kuala Lumpur (1968)

பாரதிதாசனின் முருகியல் நோக்கு



பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

இயற்கைப் பொருள்கள் இன்பமயமான அமைதி நிலையில் அடங்கிக் கிடக்கின்றன. அவை நம்முடன் பேசுவதுகூடத் தம் இன்பத்திற்கு இடையூறாகிவிடும். அவற்றின் அமைதி நிலையைக் கலைக்காமலிருப்பதே — குலைக்காமலிருப்பதே — நமக்கு ஒரு பேரறமாகும். அந்த அமைதி நிலையில் நாம் கலந்துகொள்ள வேண்டும். அங்ஙனம் கலந்து கொள்ளும் இயல்புடையவனே கவிஞன். அவன் இயற்கையோடு பழகும் திறன் வாய்ந்தவன். இயற்கையை அவன் தழுவும் நிலையே தனி. உறங்கும் குழந்தையைத் தாய் அணைப்பதை நாம் கவனித்திருக்கின்றோம் அன்றோ? குழந்தையைத் தன் மார்போடு தழுவிக்கொள்வாள் அவள். என்றாலும் குழந்தையின் உறக்கம் கெடுவதில்லை. அடுத்த கணத்தில் அவளும் தன்னை மறந்துவிடுவாள். அவ்விதமே கவிஞனும் இயற்கையை அதன் இன்பகரமான அமைதி நிலை கலையாமல் தழுவுவான். தன்னையும் உடனே மறந்து விடுவான். அந்த இன்பப் பெருக்கில் அவன் மிதப்பான். அதிலிருந்து வெளிப்போந்தவுடன் இன்பவெறி பிடித்தவன்போல் சில சமயம் பாடுவான்; சில சமயம் ஆடுவான். இவையெல்லாம் கலைகளாகின்றன. அவன் அநுபவித்த இன்பப் பெருக்கில் ஒன்றிரண்டு திவலைகள் அவன் பாடிய பாட்டிலும் ஆடிய கூத்திலும் இல்லாமல் போகா. அதைப் பார்த்தே நாம் 'கலைகள்! கலைகள்!' என்று கொண்டாடி உள்ளம் பூரிக்கின்றோம்; அவற்றில் ஆழங்கால்பட்டு நம்மையும் மறக்கின்றோம். இதுவே முருகியல் நிலை. இதுவே உலகத்திற்கு மூலமாய் நிற்கும் இன்பப் பெருக்கில் ஒன்றுபட்டு வாழ்வதாகும். இதுவே நம்மை உயர்த்தும். நம்மை அறியாமல் நமது உள்ளம் தேடித் திரியும் நிலையும் இதுவேயாகும்.

பாரதிதாசனின் பாடல்களில் இத்தகைய ஓர் அநுபவ நிலையைக் காணலாம். இயற்கையையும் பிறவற்றையும் அவர் அநுபவித்ததைப் போலவே அவர்தம் பாடல்களின்மூலம் நம் புலன்களின் துணைகொண்டு நாமும் அநுபவிக்கலாம். கவிஞன் தன் அநுபவத்தைத் தேர்ந்தெடுத்த சொற்களால் உணர்வூட்டி நமக்குத் தருகின்றான். உருக்காட்சிகள் (images), சிந்தனை இவற்றின் குறியீடுகளாகச் (symbols) சொற்கள் பணி புரிகின்றன என்பதை நாம் அறிவோம். பர்ட்டன் என்ற திறனாய்வாளரின் கருத்துப்படி கவிதையின் உருக்காட்சி சொற்களின் மூலம் நம் புலன்களைத் தொடுகின்றது. புலன்களின்மூலம் படிப்போரின் உணர்ச்சிகளும் அறிவும் விரைவாகத் தூண்டப்பெறுகின்றன. இதன் காரணமாகக் கவிதையில் உருக்காட்சி அதிகமாகப் பயன்படுகின்றது.[1] அவர் மேலும் கூறுவது: "செலுத்தப்பெறும் புலன்களுக்கேற்ப உருக்காட்சி வகைப்படுத்தப்பெறுகின்றது. ஆகவே, நாம் பெறுவது: கட்புல உருக்காட்சிகள் (visual images)—இவற்றில் வண்ண உருக்காட்சிகளும் வடிவ உருக்காட்சிகளும் அடங்கும், செவிப்புல உருக்காட்சிகள் (auditory images), சுவைப்புல உருக்காட்சிகள் (gustatory images), நாற்றப்புல உருக்காட்சிகள் (olfactory images), ஊறு அல்லது தொடுபுல (நொப்புல) உருக்காட்சிகள்

---

[1] Burton, N., *The Criticism of Poetry* (Longmans and Green & Co. Ltd., London), p. 97.

(tactual images)—இவற்றைத் தவிர இயக்க நிலை உருக்காட்சிகள் (kinaesthetic images), மரபு நிலை உருக்காட்சிகள் (conventional images) என்பவையும் உள்ளன''.[3] இவை தனியாகவும், ஒன்று இரண்டு பலவுமாக இணைந்தும் கலவை உருக்காட்சிகளாகவும் கவிதையில் அமைகின்றன. மேலும், குறியீடுகளாக அமையும் சொற்கள் 'கட்டுண்ட' உருக்காட்சிகளையும் (tied images), விடுதலை உருக்காட்சிகளையும் (free images) உண்டாக்கிப் படிப்போரிடையே ஒத்துணர்வுத் துலங்கலையும் (sympathetic response), ஒட்ட உணரும் துலங்கலையும் (empathetic response) எழுப்புகின்றன. இவற்றால் கவிதையநுபவம்—முருகுணர்ச்சி—கொடுமுடியை எட்டுகின்றது. இந்தக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பாவேந்தரின் பாடல்களை ஆராய்வோம். அப் பெருமானாரின் நோக்கு அவர்தம் கவிதைகளில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் காண்போம்.

கட்புல உருக்காட்சிகள்

உதாரன் விண்ணில் தோன்றும் முழுமதியினை நோக்கி இவ்வாறு பாடுகின்றான்:

''நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து
நிலவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை!
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ? நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ? அமுத ஊற்றோ?
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ?''[3]

அழகிய நங்கையொருத்தி தன் உடல் முழுவதையும் நீலவான் ஆடைக்குள் மறைத்துக்கொண்டு முகத்தை மட்டிலும் காட்டுகின்றாளாம். அதுவே நிலாவாம். இது கட்புல உருக்காட்சி. இந்தப் பாடலில் இதனைத் தவிர, வானச் சோலையிலே பூத்த தனிப்பூ, சொக்க வெள்ளிப் பாற்குடம், காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக் கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்பு போல ஏனைய கட்புல உருக்காட்சிகளும் ஒருங்கிணைந்து ஓர் அற்புதக் கலவைக் காட்சியினை நம் மனத்தகத்தில் தோற்றுவித்து அதனைப் பூரிப்படையச் செய்கின்றது. இன்னும் இதே கவிதையில்,

''பழகும் இருட்டினில் நானிருந்தேன்—எதிர்
பால்நில வாயிரம்போல்—அவள்
அழகு வெளிச்சம் அடித்த தென்மேல்
அடியேன் செய்த தொன்று மில்லை.''[4]

என்னும் பகுதியிலும் கட்புல உருக்காட்சியினைக் கண்டு அநுபவிக்கலாம்.

மேலும், அடியிற்காணும் பாடற் பகுதிகளில் உள்ள உருக்காட்சிகளையும் அநுபவித்து மகிழ்வோம்.

''ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்
ஆனவுன் மெல்லுடல்.''[5]

''தாமரை பூத்த குளத்தினிலே—முகத்
தாமரை தோன்ற முழுகிடுவாள்!—அந்தக்
கோமள வல்லியைக் கண்டுவிட்டான்—குப்பன்

* * *

முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும்—ஒரு
முழுமதி போல நனைந்திருக்கும்—தன்
துகிலினைப் பற்றித் துறைக்கு வந்தாள்!''[6]

இவற்றில் நிற, வடிவக் கட்புல உருக்காட்சிகளைக் கண்டு மகிழலாம்.

முருகு அல்லது அழகு எங்கெங்கெல்லாம் காணப்படுகின்றது என்று கூறுகின்றார் கவிஞர் ஒரு கவிதையில்.

''காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன் அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்!''[7]

இக் கவிதையில் காலை இளம்பரிதி, கடற்பரப்பு, ஒளிப்புனல், சோலை, மலர், மேற்றிசையில் இலகுகின்ற மாணிக்கச் சுடர், ஆலஞ்சாலை, கிளியின் கூட்டம் இவற்றிலுள்ள சொல் அல்லது சொற்றொடர்களால் உணர்த்தப்பெறும் வண்ண, வடிவக் கட்புல உருக்காட்சிகளைக் கண்டு மகிழ்க.

இரவு வரும் காட்சி இனிதாகக் காட்டப்பெறும் பாடற்பகுதி இது.

''மேற்றிசைக் கதிர்ப்ப ழத்தை
விருந்துண்டு நீல ஆடை
மாற்றுடை யாய்உ டுத்து
மரகத அணிகள் பூண்டு
கோற்கிளை ஒடுங்கும் புட்கள்
கோட்டிடும் இறகின் சந்தக்
காற்சிலம் பசையக் காதற்
கரும்பான இரவு தன்னைத்
திருவிளக் கேந்தி வந்து
தெருவினில் வரவேற் கின்றாள்.''[8]

---

[3] Burton, N., *The Criticism of Poetry* (Longmans and Green & Co., Ltd., London), p. 99.
[3] பாரதிதாசன் கவிதைகள்—முதல் தொகுதி—2. புரட்சிக் கவி.
[4] ஷை — ஷை
[5] ஷை — 4. மயில்.
[6] ஷை — 11. மாந்தோப்பில் மணம்.
[7] அழகின் சிரிப்பு — அழகு.
[8] குடும்ப விளக்கு — ஒரு நாள் நிகழ்ச்சி.

மேற்றிசைக் கதிர்ப்பழம், கரும்பான இரவு, திருவிளக்கு இவற்றில் கட்புல உருக்காட்சிகளைக் கண்டு களிக்கலாம்.

அரும்பெருந் தவத்தால் பெற்ற சின்னஞ் சிறு கிளியை – பெண் குழவியை - வேடப்பன் காண்கின்றான்.

''இளகிய பொன்உ ருக்கின்
சிற்றுடல், இருநீ லக்கண்,
ஒளிபடும் பவழச் செவ்வாய்
ஒருபிடிக் கரும்பின் கைகால்
அளிதமிழ் உயிர்பெற் றங்கே
அழகொடும் அசையும் பச்சைக்
கிளியினைக் காணப் பெற்றான்!''[9]

'பேசும் பொற்சித்திரமாக' வளரப்போகும் பச்சைக் கிளியின் மேனியழகினைக் காட்டும் பாங்கில் கட்புலக் காட்சியில் ஈடுபடுகின்றோம்.

''எள்ளிளஞ் சிறிய பூவை
எடுத்துவைத் திட்ட மூக்கும்
வள்ளச்செந் தாம ரைப்பூ
இதழ்கவிழ்ந் திருந்த வாய்ப்பின்
அள்இரண் டும்,சி வப்பு
மாதுளை சிதறச் சிந்தும்
ஒள்ளிய மணிச்சி ரிப்பும்
உவப்பூட்டும் பெண்கு ழந்தை.''[10]

என்னும் பகுதியில் வேடப்பனின் 'செல்வக் களஞ்சியம்' காட்டப்பெறுகின்றது. குழவியின் எள்ளுப் போன்ற மூக்கின் கட்புல வடிவ உருக்காட்சியிலும், தாமரை இதழ் போன்ற சிவந்த உதடுகளின் கட்புல வண்ண உருக்காட்சியிலும் நம் உள்ளம் பறிபோகின்றது.

மாலை நேரக் காட்சியை,

''மேற்றிசையில் வானத்தில் பொன்னு ருக்கு
வெள்ளத்தில் செம்பரிதி மிதக்கும் நேரம்''[11]

என்னும் அடிகளில் கட்புல உருக்காட்சியாகக் கண்டு மகிழலாம். வயலில் பகல் நேரத்தில் இயற்கைக் காட்சியை,

''கடல்மிசை உதித்த பரிதியின் நெடுங்கதிர்
வானெலாம் பாய்ந்தது! பறந்தது வல்லிருள்!
புவியின் சித்திரம் ஒளியிற் பொலிந்தது
இயற்கை தந்த எழிலிடை நடந்தேன்''[12]

என்னும் அடிகளில் கட்புல வண்ண உருக்காட்சிகளாக அநுபவித்து மகிழலாம்.

செவிப்புல உருக் காட்சிகள்

பாவேந்தரின் முருகியல் நோக்கு செவிப்புல உருக்காட்சிகளைப் படைப்பதிலும் செல்லுகின்றது.

''கேளோடும் கிளம்பிவரும் பன்றி – நிலம்
கீண்டுகிழங் கெடுத்த தன்றி – மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ளநரி
குன்றில் - புகும்
ஒன்றி!'' [13]

என்னும் பாடற்பகுதியில் நரி ஊளையிடும் நிகழ்ச்சி காட்டப்பெறுகின்றது. இதிலுள்ள செவிப்புல உருக்காட்சியால் நரி ஊளையிடும் ஒலி நம் மனத்தில் கேட்கின்றது.

அகப்பொருள் இலக்கணத்தில் காதலன், காதலி சந்திக்கும் இடத்தைக் 'குறியிடம்' என்பார்கள். பூங்கோதை 'இற்செறிப்பில்' இருக்கும் காலத்தில் பொன்முடியும் பூங்கோதையும் இரவில் சந்திப்பதாகக் குறியிடம் அமைத்துக்கொள்ளுகின்றனர். நள்ளிரவில் பூங்கோதை வீட்டின் தோட்டத்தில் புகுகின்றான் பொன்முடி. அத்தருணத்தில் காதலன் தான் வருகின்றான் என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றாள் பூங்கோதை. பலகணியின் அருகிருந்து,

'' வீணையிலோர் தந்தி
மெதுவாய் அதிர்ந்ததுபோல்
ஆணழகன் என்றெண்ணி
' அத்தான் ' என் றாள்நங்கை.''[14]

வீணையின் தந்தி அதிர்வினால் கேட்கப்பெறும் 'த்தான்' என்னும் இனிய ஒலி போலவே, மெது வாய்க் கூப்பிடும் பூங்கோதையின் 'அத்தான்' என்னும் ஒலியும் அமைகின்றது. 'அத்தான்' என்னும் சொல்லில் செவிப்புல உருக்காட்சி அமைந்து வீணையின் தந்தி ஒலியையும் பூங்கோதையின் இனிய குரலொலியையும் கேட்கும் வாய்ப்பாக அமைகின்றது.

வானம்பாடியின் இசையில் ஈடுபட்ட கவிஞர்,

''வானந்தான் பாடிற்றா? வானிலவு பாடிற்றா?
தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி
நல்லிசை நல்கிற்றா? நடுங்கும் இடிக்குரலும்
மெல்லிசை பயின்று மிகஇனிமை தந்ததுவோ?

வானூர்தி மேலிருந்து வல்ல தமிழிசைஞன்
தானூதும் வேய்ங்குழலா? யாழா? தனியொருத்தி
வையத்து மக்கள் மகிழக் குரலெடுத்துப்
பெய்த அமுதா? '' [15]

என்னும் கவிதையைத் தருகின்றார். இதில் பல்வேறு செவிப்புல உருக்காட்சிகள் நம்மை வியக்க வைக்கின்றன.

---

[9] குடும்ப விளக்கு — நான்காம் பகுதி — மக்கட்பேறு.
[10] ஷை — ஷை
[11] பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி — 33. எழுச்சியுற்ற பெண்கள்.
[12] ஷை — 56. வியர்வைக் கடல்.
[13] ஷை — 7. காடு.
[14] எதிர்பாராத முத்தம் — நள்ளிருளில் கிள்ளை வீட்டிற்கு.
[15] பாரதிதாசன் கவிதைகள் — இரண்டாம் தொகுதி — 6. வானம்பாடி.

சுவைப்புல உருக்காட்சிகள்

இவ்வகை உருக்காட்சிகள் புரட்சிக் கவிஞரின் பாடல்களில் அதிகமாகக் காணப்பெறவில்லை. இவற்றையும் தேடிக் காண்போம்.

''சின்ன மலர்வாய் சிரிந்தபடி பாலகுடித்தாய்
கன்னலின் சாறே கனிரசமே கண்ணுறங்கு''[16]

என்னும் கண்ணியில் குழந்தையையும் காண்கின்றோம்; கன்னல் சாறு, கனிரசம் இவற்றின் சுவையையும் அநுபவிக்கின்றோம்.

''வீட்டின் உட்புறத்து விளைந்த தான
இனிய யாழிசை கனிச்சாறு போலத்
தலைவன் தலைவியைத் தழுவ லாயிற்று''[17]

என்னும் அடிகளில் கனிச்சாறு போல இனிக்கும் யாழிசையைக் கேட்டாலும் கனிச்சாறின் சுவை நாவில் இனிக்கின்றது; சுவைப்புல உருக்காட்சியைத் துய்க்கின்றோம்.

''புதியநெறிப் 'பாஞ்சாலி சபதம்' போலே
தேனினிப்பில் தருபவர் யார்?''[18]

என்னும் அடிகளில் 'பாஞ்சாலி சபதம்' சுவைப்புல உருக்காட்சியாக நாவில் தேன்போல் இனிப்பதை உணர்கின்றோம். மேலும்,

''வாய்ம ணக்கவே உடல்ம ணக்கவே
வட்டில் நெய்யோடு கட்டித்தயிர் ஏடு
நிறையப் பால்தரும் கறவை!''[19]

''கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு''[20]

''தெள்ளு தமிழில் இசைத்தேனைப் பிழிந்தெடுத்துத்
தின்னும் தமிழ்மறவர்''[21]

''ஆனை அடிபோல் அதிரசத்தைச் சுட்டடுக்கித்
தேனில் துவைத்தெடுத்து தின்என்று தாரேனா''[22]

''தேரடியில் கண்ட அவள்
தேனிதழைத் தந்தவுடன்
'ஊருக்கெனைக் கூட்டிச் செல்க' என்றாள்''[23]

என்னும் அடிகளிலும் சுவைப்புல உருக்காட்சிகளைத் துய்த்து மகிழலாம்.

நாற்றப்புல உருக்காட்சிகள்

இந்த வகை உருக்காட்சிகளும் புரட்சிக் கவிஞரின் பாடல்களில் அமைந்து முருகுணர்ச்சியை நல்குகின்றன.

''மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசு கின்ற
காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!''[24]

என்னும் அடிகளில் மூடத்தனத்தின் முடைநாற்றம் நம் மூக்கில் படுவதையும், கற்பூரத்தின் வாசனையை உணரும் நிலையில் அழகிய பெண் குழந்தையையும் காண்கின்றோம்.

''குப்பை மணக்கக் குடித்தெருவெல் லாம்மணக்க
அப்பம் நிலாப்போல் அடுக்கிவைக்க மாட்
டேனா?''[25]

''நகைமுத்தை மலர்பெய்த நன்னீ ராட்டிக்
குறைவற நறும்புகை குழலுக் கூட்டி
மணக்குநெய் தடவி வாரிப்பூப் பின்னி''[26]

''ஓவியப் பாயின் மீதில்
உட்கார்ந்தோர் மின்இ யக்கத்
தூவிசி றிக்காற் றோடு
சூழ்பன்னீர் மணமும் பெற்றார்''[27]

என்னும் பாடற் பகுதிகளில் நாற்றப்புல உருக்காட்சிகளைக் கண்டு தெளியலாம்.

தொடுபுல (ஊறுப்புல) உருக்காட்சிகள்

இந்த நுண்ணிய உருக்காட்சிகள் ஒன்றிரண்டு பாவேந்தரின் பாடல்களில் தட்டுப்படுகின்றன.

''அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியலே.''[28]

அள்ளி அணைத்திடவேண்டிய பெண்குழவிக் காட்சியில் அன்னத்தூவி, அனிச்ச மலர் இவற்றின் மென்மையையும் உணர்கின்றோம்.

''திடுக்கென்று கண்விழித்தேன் என்தோள் மீது
செங்காந்தள் மலர்போலும் அவள்கை
கண்டேன்''[29]

என்னும் அடிகளில் தொடுபுலன் உருக்காட்சி தென்படுகின்றது.

''உன்அரும் உருவம் காணேன்
ஆயினும் உன்றன் ஒவ்வோர்
சின்னநல் அசைவும் என்னைச்
சிலிர்த்திடச் செய்யும்''[30]

என்னும் பாடற்பகுதியில் தென்றல் என்னும் 'மெல்லிய பூங்காற்று' நம் உடலைத் தொட்டுப் போவது போன்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம்.

---

[16] பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி — 41. ஆண் குழந்தைத் தாலாட்டு.
[17] ஷை — இரண்டாம் தொகுதி — 16. பெற்றோர் இன்பம்.
[18] ஷை — ஷை — 26. மகாகவி.
[19] இசையமுது — கறவை.
[20] ஷை — எழுச்சி.
[21] ஷை — இன்பத்தமிழ்.
[22] ஷை — தாலாட்டு.
[23] காதல் நினைவுகள் — அவள்மேற் பழி.
[24] பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி — 42. பெண் குழந்தைத் தாலாட்டு
[25] இசையமுது — தாலாட்டு,
[26] குடும்ப விளக்கு — மூன்றாம் பகுதி — மணவாழ்த்தும் வழியனுப்பும்.
[27] ஷை — மக்கட்பேறு.
[28] பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி — 42. பெண் குழந்தைத் தாலாட்டு
[29] ஷை — இரண்டாம் தொகுதி — 15. மெய்யன்பு.
[30] அழகின் சிரிப்பு — தென்றல்.

இயக்கநிலை உருக்காட்சிகள்

இவ்வகை உருக்காட்சிகளைப் பாவேந்தரின் பாடல்களில் பல இடங்களில் கண்டு மகிழலாம்.

"படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து
பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர்
வெள்ளம்
அடிசோர்தல் கண்டார்கள் அங்கி ருந்தோர்." [31]

அமுதவல்லியின் கண்ணீர் வெள்ளம் அவள் உடலெல்லாம் பாய்ந்து அவள் காலடி வரையில் ஒழுகி வருவதைக் கண்டு நெகிழலாம்.

இதில் இயக்கநிலை உருக்காட்சி தென்படுகின்றதன்றோ?

"வாளெயிற்று வேங்கையெலாம்
வால்சுழற்றிப் பாயவரும்
காடு—பள்ளம்!
மேடு!" [32]

இதில் மேடு-பள்ளம் நிறைந்த காட்டில் வேங்கையின் இயக்கத்தைக் காணலாம்.

"கீச்சென்று கத்தி — அணில்
கிளையொன்றில் ஓடிப் — பின்
வீச்சென்று பாய்ந்துதன் காதலன் வாலை
வெடுக்கென்று தான்க டிக்கும்!

ஆச்சென்று சொல்லி — ஆண்
அணைக்க நெருங்கும் — உடன்
பாய்ச்சிய அம்பெனக் கீழ்த்தரை நோக்கிப்
பறந்திடும் பெட்டை அணில்!

மூச்சுடன் ஆணோ — அதன்
முதுகிற் குதிக்கும் — கொல்லர்
காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி ஆகக்
கலந்திடும் இன்பத்திலே!" [33]

அணிலின் ஆணும் பெண்ணும் அங்கும் இங்கும் ஓடி இறுதியில் இன்பக் கலவியில் ஆழங்கால்படுவதில் இயக்கநிலை உருக்காட்சிகள் நம்மை மகிழ்வூட்டுகின்றன.

"நள்ளிரவின் அமைதியிலே மணிவி ளக்கும்
நடுங்காமல் சன்னலுக்குள் புகுந்த தென்றல்
மெல்லஉடல் குளிரும்வகை வீசா நிற்கும்
வீணைஇல்லை காதினிலே இனிமை சேர்க்கும்." [34]

இப் பகுதியில் தென்னாடு பெற்ற செல்வத் தென்றலின் இயக்கம் தெள்ளிதின் புலனாகின்றது. இயக்க உருக்காட்சியில் நம் உடலும் தடவப்பெறுவது போன்ற உணர்ச்சியால் பூரிக்கின்றோம், அன்னையின் அன்பினைக் கண்ணிற் காணாமல் அவளின் செயலில் காண்பதுபோல, உருவம் காணப்பெறாத தென்றலின் ஒவ்வொரு சின்னஞ்சிறு அசைவிலும் நம்மைச் சிலிர்த்திடச் செய்யும் செயல்களைக் கண்டு பரவசப்படுகின்றோம்.

"பெண்கள்
விலக்காத உடையை நீபோய்
விலக்கினும் விலக்கார் உன்னை" [35]

என்னும் பாடற்பகுதியில் தென்றலின் குறும்பைக் காட்டி இயக்கநிலை உருக்காட்சியை அநுபவிக்கச் செய்கின்றார் கவிஞர் பெருமான்.

"கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்." [36]

இப்பாடற்பகுதியில் குரங்கின் இயக்கத்தைக் காட்டுபவர் விளக்கினைத் தொட்ட பிள்ளையின் வெடுக்கென இயங்கும் கையின் இயக்கத்தையும் பெற வைக்கின்றார். நாம் இங்கு இரண்டு இயக்கநிலை உருக்காட்சிகளை அநுபவிக்கின்றோம்.

"அகன்றவாய்ச் சட்டி ஒன்றின்
விளிம்பினில் அடிபொ ருந்தப்
புகும்தலை; நீர்வாய் மொண்டு
நிமிர்ந்திடும்; பொன்இ மைகள்
நகும்;மணி விழிநற் பாங்கும்
நாட்டிடும்; கீழ்இ றங்கி
மகிழ்ச்சியாய் உலவி வைய
மன்னர்க்கு நடைகற் பிக்கும்." [37]

புறாக்களின் செயல்களைக் காட்டும் இப் பாடற்பகுதியில் சட்டியில் நீர் பருகும் அதன் போக்கு, தலையை அசைத்து அதன் நாற்புறமும் செலுத்தப்பெறும் அதன் பார்வை, சட்டியை விட்டுக் கீழிறங்கி 'இராச நடை' போடும் அதன் அழகு காட்டும் போக்கில் பல்வேறு இயக்கநிலை உருக்காட்சிகளில் நம் மனம் ஈடுபட்டு மகிழ்கின்றது. இங்ஙனமே, புறாவின் தாயன்பு - தந்தையன்பு காட்டும்,

"தாய்இரை தின்ற பின்பு
தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும்; குஞ்சு
தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கை;

---

[31] பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி — 2. புரட்சிக் கவி.
[32] ஷை — 7. காடு.
[33] ஷை — 9. மக்கள் நிலை — அணில்.
[34] ஷை — குடும்ப விளக்கு — ஒருநாள் நிகழ்ச்சி.
[35] அழகின் சிரிப்பு — தென்றல்.
[36] ஷை — ஆல். [37] ஷை — புறாக்கள்.


ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதிஅந்தம் சொல்லவோ? — நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?
—பாரதிதாசன்

இயக்கநிலை உருக்காட்சிகள்

இவ்வகை உருக்காட்சிகளைப் பாவேந்தரின் பாடல்களில் பல இடங்களில் கண்டு மகிழலாம்.

''படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து
பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர்
வெள்ளம்
அடிசோர்தல் கண்டார்கள் அங்கி ருந்தோர்.''[31]

அமுதவல்லியின் கண்ணீர் வெள்ளம் அவள் உடலெல்லாம் பாய்ந்து அவள் காலடி வரையில் ஒழுகி வருவதைக் கண்டு நெகிழலாம்.

இதில் இயக்கநிலை உருக்காட்சி தென்படுகின்றதன்றோ?

''வாளெயிற்று வேங்கையெலாம்
வால்சுழற்றிப் பாயவரும்
காடு—பள்ளம்!
மேடு!''[32]

இதில் மேடு-பள்ளம் நிறைந்த காட்டில் வேங்கையின் இயக்கத்தைக் காணலாம்.

''கீச்சென்று கத்தி — அணில்
கிளையொன்றில் ஓடிப் — பின்
வீச்சென்று பாய்ந்துதன் காதலன் வாலை
வெடுக்கென்று தான்க டிக்கும்!
ஆச்சென்று சொல்லி — ஆண்
அணைக்க நெருங்கும் — உடன்
பாய்ச்சிய அம்பெனக் கீழ்த்தரை நோக்கிப்
பறந்திடும் பெட்டை அணில்!
மூச்சுடன் ஆணோ — அதன்
முதுகிற் குதிக்கும் — கொல்லர்
காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி ஆகக்
கலந்திடும் இன்பத்திலே!''[33]

அணிலின் ஆணும் பெண்ணும் அங்கும் இங்கும் ஓடி இறுதியில இன்பக் கலவியில் ஆழங்கால்படுவதில் இயக்கநிலை உருக்காட்சிகள் நம்மை மகிழ்வூட்டுகின்றன.

''நள்ளிரவின் அமைதியிலே மணிவிளக்கும்
நடுங்காமல் சன்னலுக்குள் புகுந்த தென்றல்
மெல்லஉடல் குளிரும்வகை வீசா நிற்கும்
வீணைஇல்லை காதினிலே இனிமை சேர்க்கும்.''[34]

இப் பகுதியில் தென்னாடு பெற்ற செல்வத் தென்றலின் இயக்கம் தெள்ளிதின் புலனாகின்றது. இயக்க உருக்காட்சியில் நம் உடலும் தடவப்பெறுவது போன்ற உணர்ச்சியால் பூரிக்கின்றோம். அன்னையின் அன்பினைக் கண்ணிற் காணாமல் அவளின் செயலில் காண்பதுபோல, உருவம் காணப்பெறாத தென்றலின் ஒவ்வொரு சின்னதல் அசைவிலும் நம்மைச் சிலிர்த்திடச் செய்யும் செயல்களைக் கண்டு பரவசப்படுகின்றோம்.

''பெண்கள்
விலக்காத உடையை நீபோய்
விலக்கினும் விலக்கார் உன்னை''[35]

என்னும் பாடற்பகுதியில் தென்றலின் குறும்பைக் காட்டி இயக்கநிலை உருக்காட்சியை அநுபவிக்கச் செய்கின்றார் கவிஞர் பெருமான்.

''கிளையினின்று பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.''[36]

இப்பாடற்பகுதியில் குரங்கின் இயக்கத்தைக் காட்டுபவர் விளக்கினைத் தொட்ட பிள்ளையின வெடுக்கென இயங்கும் கையின் இயக்கத்தையும் பொறவைக்கின்றார். நாம் இங்கு இரண்டு இயக்கநிலை உருக்காட்சிகளை அநுபவிக்கின்றோம்.

''அகன்றவாய்ச் சட்டி ஒன்றின்
[illegible] அடிபொருந்தப்
[illegible] வாய் மொண்டு
[illegible] பொன்இமைகள்
நகும்; [illegible] பாங்கும்
[illegible] றங்கி
மகிழ்ச்சியாய் உலவி வைய
மன்னர்க்கு நடைகற் பிக்கும்.''[37]

புறாக்களின் செயல்களைக் காட்டும் இப் பாடற்பகுதியில் சட்டியில் நீர் பருகும் அதன் போக்கு, தலையை அசைத்து அதன் நாற்புறமும் செலுத்தப்பெறும் அதன் பார்வை, சட்டியை விட்டுக் கீழிறங்கி 'இராச நடை' போடும் அதன் அழகு காட்டும் போக்கில் பல்வேறு இயக்கநிலை உருக்காட்சிகளில் நம மனம் ஈடுபட்டு மகிழ்கின்றது. இங்ஙனமே, புறாவின் தாயன்பு - தந்தையன்பு காட்டும்,

''தாய்இரை தின்ற பின்பு
தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும்; குஞ்சு
தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கை;

---

[31] பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி — 2. புரட்சிக் கவி.
[32] ஷெ — 7. காடு.
[33] ஷெ — 9. மக்கள் நிலை — அணில்.
[34] ஷெ — குடும்ப விளக்கு — ஒருநாள் நிகழ்ச்சி.
[35] அழகின் சிரிப்பு — தென்றல்.
[36] ஷெ — ஆல். [37] ஷெ — புறாக்கள்.



தாய்அருந் தியதைக் கக்கித்
தன்குஞ்சின் குடல்நி ரப்பும்;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!'
அன்புக்கோர் எடுத்துக் காட்டாம்''[38]

என்னும் பாடற் பகுதியிலும் பல இயக்கநிலை உருக்காட்சிகளில் ஆழங்கால் படுகின்றோம்.

''கட்டுக்குள் அடங்கா தாடிக்
களித்திடும் தனது செல்வச்
சிட்டுக்கள்'' [39]

என்னும் பாடற் பகுதியில் 'குறுகுறு'வென்று கொஞ்சு நடை பயிலும் சிறார்களின் நடை காட்டப் பெறுகின்றது. 'சிட்டுக்கள்' என்னும் சொற்படத்தில் சிறார்களையும் காண்கின்றோம்; கோழி, புறா இவற்றின் பார்ப்புகளையும் பார்க்கின்றோம்.

'' 'குறிப்பறி யாமல் நீவிர்
குண்டானிற் கவிழ்ந்த நீர்போல்
கொட்டாதீர்' என்றான்''[40]

பொன்முடி. குண்டான் கவிழும்போது அதில் சிறிதும் நீர் இருப்பதில்லை. அதுபோலப் பண்டாரம் சிறிதும் எஞ்சாமல் பொன்முடியின் 'காதல் மறை'யை, அம்பலத்தில் அவிழ்த்துவிடுகின்றான். நீர் கொட்டும் காட்சியில் இயக்கநிலை உருக்காட்சியைக் கண்டு மகிழலாம்.

இந்த நிலை உருக்காட்சிக்கு ஒரு முத்தாய்ப்பு வைத்ததுபோல்,

''எல்லாம் அசையச் செய்தாய் — உயிர்கள்
எதிலும் அசைவைச் சேர்த்தாய்
சொல்லால் இசையால் இன்பம் — எமையே!
துய்க்கச் செய்தாய்! அடடா!
கல்லா மயில்வான் கோழி — புறவுகள்
காட்டும் சுவைசேர் அசைவால்
அல்லல் விலக்கும் 'ஆடற் கலை'தான்
அமையச் செய்தாய் வாழி!''[41]

என்னும் பாடலில் காட்டுகின்றார் கவிஞர்.

கலவைநிலை உருக்காட்சிகள்

சில பாடல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உருக்காட்சிகள் அமைந்து பொலிவூட்டி முருகுணர்ச்சியை மிகுவிக்கின்றன.

''புறப்பட்ட மங்கைதான் பூங்கொடி என்பவள்
நிறப்பட் டாடை நெகிழ்ந்தது காற்றில்!
பாதச் சிலம்பு பாடிற்று! நிலாமுகம்
சீதளஞ் சிந்திற்றாம்! செவ்விதழ் மின்னிற்றாம்!''[42]

பூங்கொடியின் வருகையைச் சித்திரிக்கும் இவ்வடிகளில் நிறப்பட்டாடையிலும் நிலா முகத்திலும், செவ்விதழ் மின்னுவதிலும் கட்புல உருக்காட்சிகளும், அதன் நெகிழ்ச்சியில் இயக்கநிலை உருக்காட்சியும், சிலம்பு பாடுவதில் செவிப்புல உருக்காட்சியும், முகம் சீதளஞ் சிந்துவதில் தொடுபுல உருக்காட்சியும் அமைந்து பூங்கொடியின் அழகிற்குப் பொலிவூட்டுவதைக் கண்டு மகிழலாம்.

அழகு என்பவளின் இருப்பிடத்தைக் காட்டும் கவிதை இது:

''சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்;
திருவிளக்கிற் சிரிக்கின்றாள்; நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே! செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தி னாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்!''[43]

கட்புல உருக்காட்சிகளும் (சிறுகுழந்தை விழி, திருவிளக்கு, நன்செய் நிறம்), இயக்கநிலை உருக்காட்சிகளும் (மலர் தொடுப்பாளின் விரல் வளைவின் அசைவு, உழவனின் புதுநடை) இதில் அமைந்து இருப்பதைக் காண்க. இந்த உருக்காட்சிகள், கவிஞன் உள்ளத்தில் இடம் பெற்றதுபோல், உருக்காட்சிகள் அமைந்தே பாடலும் நம் உள்ளத்தில் நிலையான இடம் பெற்றுவிடுகின்றது.

அண்டங்கள் கோடி கோடி அனைத்தையும் தன்னகத்தில் கொண்ட ஒரு பெரும்புறத்தில் கூத்தாடுகின்றது காற்று. அது தென்றலாய் உருவெடுப்பதை அடியிற்காணும் பாடற்பகுதிகளில் காணலாம்:

''பொதிகைமலை விட்டெழுந்து சந்த னத்தின்
புதுமணத்தில் தோய்ந்து, பூந் தாது வாரி
நதிதழுவி அருவியின்தோள் உந்தித், தெற்கு
நன்முத்துக் கடலலையின் உச்சி தோறும்
சதிராடி, மூங்கிலிலே பண்எ ழுப்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்ற வைத்து
முதிர்தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதி நோக்கி.

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச், செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தைஉடல் அணுஒவ்வொன் றும்சி லிர்க்கச்
செல்வம்ஒன்று வரும்; அதன்பேர் தென்றற்
காற்று!'' [44]

இப் பாடற் பகுதிகளில் நாற்றப்புல உருக்காட்சி, தொடுபுல உருக்காட்சி, இயக்கநிலை

---

[38] அழகின் சிரிப்பு — புறாக்கள்.
[39] குடும்ப விளக்கு — ஒருநாள் நிகழ்ச்சி.
[40] எதிர்பாராத முத்தம் — நுணுக்கம் அறியாச் சணப்பன்.
[41] பாரதிதாசன் கவிதைகள் — இரண்டாம் தொகுதி — 4. இயற்கைச் செல்வம்.
[42] எதிர்பாராத முத்தம்.
[43] அழகின் சிரிப்பு.
[44] பாரதிதாசன் கவிதைகள் — இரண்டாம் தொகுதி — 9. தென்றல்.

உருக்காட்சி, செவிப்புல உருக்காட்சி, சுவைப்புல உருக்காட்சி ஆகியவை அமைந்துள்ள நேர்த்தி எண்ணி எண்ணி மகிழத் தக்கது.

கவிதையை ஓர் அழகிய அணங்காகக் கற்பனை செய்யும் பாடல்களில் இது ஒன்று:

"தண்ணிலவும் அவள்முகமோ தாரகைகள் நகையோ?
 தளிருடலைத் தொடும்உணர்வோ? நன்மணஞ்சேர் குளிரும்
விண்ணீலம் கார்குழலோ! காணும் எழிலெல்லாம்
 மெல்லியின்வாய்க் கள்வெறியோ! அல்லிமலர்த் தேனின்
வண்டின்ஒலி அன்னவளின் தண்டமிழ்த்தாய் மொழியோ
 வாழியஇங் கிவையெல்லாம் எழுதவரும் கவிதை!
கண்டெடுத்தேன் உயிர்ப்புதையல்! அதோவந்து விட்டாள்
 கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே!" [45]

இதில் கட்புல உருக்காட்சி, தொடுபுல உருக்காட்சி, நாற்றப்புல உருக்காட்சி, சுவைப்புல உருக்காட்சி, செவிப்புல உருக்காட்சி ஆகிய ஐந்து வகை உருக் காட்சிகளும் கலந்த நிலையை அநுபவித்து மகிழ லாம்.

"மெய்யுற, வாய்சு வைக்க,
 விழிஅழ குண்ண, மூக்கு
 வெய்யசந் தனத்தோள் மோப்ப,
 விளைதமிழ் காது கேட்க
 ஐயன்பால் புலன்கள் ஐந்தால்
 அமிழ்தள்ள வேண்டும்!" [46]

இப் பாடற் பகுதியும் ஐவகை உருக்காட்சிகளையும் கொண்டிலங்குகின்றது.

மின்வெட்டுப்போன்ற மணிமொழி உருக்காட்சிகள்

மேற்கண்ட உருக்காட்சிகளைத் தவிர, பல்வேறு இடங்களில் கவிஞரின் சொற்களிலும் சொற் றொடர்களிலும் மின்வெட்டுகள் போன்ற பல்வேறு உருக்காட்சிகள் பாங்குற அமைந்திருப்பதையும் கண்டு மகிழலாம். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காட்டுவோம். செப்புச்சிலை போல் நிற்றல் (குப் பன்), வாடாத பூ முடித்த வஞ்சி (வள்ளி), நெஞ் சம் மூலிகைமேல் மொய்த்திருத்தல், மூலிகையில் ஆசை மோதிடுதல், அச்சுப்பதுமை (வள்ளி), கிட்ட ரிய காதற் கிழத்தி இடும் வேலை விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் போதல், தேன் சுரக்கப் பேசுதல், சாக்குருவி வேதாந்தம், கனிமுத்தம், கடு களவும் ஆடாமல் கண்ணாடிப் பாத்திரத்தைக் கல் தரையில் வைப்பது போல், ஆளிவாய்ப் பாகவதன், வெல்லத் தமிழ்நாடு, தென்றலில் மெல்லச் சிலிர்க் கும் (சிரிக்கும்) முல்லை, கன்னல்தமிழ், வானத்தை வெண்ணிலா வந்து தழுவுதல், பாளைச் சிரிப்பு, ஆணிப்பொன்மேனி, அன்னத்தைத் (அமுதவல்லி) தூக்கி ஆரத் தழுவுதல், அழகு வெளிச்சம், நவ மணிக் களஞ்சியம், இருட் கதவை உடைத்தெறிந் தான் பரிதி, தணல் அள்ளும் பெருவெளி, அமுதப் பண், குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகள், கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள், அணையாத காதல், சதிராடு தேவடியாள்போல், பாதச் சிலம்பு பாடிற்று, இதழ் நிலத்தில் கன உதட்டை ஊன்றி விதைத்தான் முத்தம், துயரில் அழுந்திக் கரையேறி, கள்ளீயும் பாளைபோல் கண்ணீர் விட்டு, மாவின் வடுப்போன்ற விழி, தென்னாட்டு அன்னம் (பெண்), வாழ்க்கை மலர் சொரிகின்ற இன்பத்தேன், கனி இதழ் நெடிதுறிஞ்சி, கனியிதழைக் காதல் மருந் தென்று தின்றான், தேனைச் சொட்டுகின்ற இத ழாள், மலைநிகர் மார்பில் அலைநிகர் கண்ணீர் அருவிபோல் இழிந்தது, என்னுளம் அவனுளம் இரண் டும் பின்னின, நானும் அவனும் தேனும் சுவையும் ஆனோம், காலை மலரக் கவிதை மலர்ந்தது, தையற் சடுகுடு பொறி, தழல்நிற மாம்பழத்தில் தமிழ்நிகர் சுவையைக் கண்டான், உள்ளத்தில் கவிதை வைத்தே உயிரினால் எழுப்பினாள், கிளிப்பேச்சுக்காரி, பண்டிதர்கள் பழங்கதையின் ஓட்டைக்கெல்லாம் பணிக்கை இடல்போல், மணிவிளக்கும் நடுங்காமல் சன்னலுக்குள் புகுந்த தென்றல், பலாப்பழம்போல் வயிறு, வீறார்ப்பு வாழ்வு, மாணிக்க மாம்பழந்தான் மரகதத்தின் இலைக் காம்பில் ஊசலாட, கற்பாரின் நிலையேயன்றிக் கற்பிப்பார் நிலையும் உற்றாள், விரிவாழைப் பூவின் கொப்பூழ், கன்னற் பிழிவே கனிச்சாறே கண்ணுறங்கு, சேவல் கூவிற்று, வானம் சிரித்தது—இந்தச் சொற்றொடர்களில் பொதிந் திருக்கும் பல்வேறு வகை உருக்காட்சிகள் படிப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

கவிதையநுபவம்

நம் உடல் தூண்டல்-துலங்கல் என்னும் உள வியல் தத்துவப்படி இயங்குகின்றது. உள்ளமும் அதற்கேற்பத் துலங்குகின்றது. வெளியுலகிலிருந்து தூண்டல்கள் புலன்களைத் தாக்கும்போது (sensory level) அவற்றிற்கேற்பப் புலன்கள் துலங்குகின் றன. அதாவது, அப் புலன்கள் அத் தூண்டல்களால் கிளர்ச்சியடைகின்றன. அதனால் ஏற்படும் உணர்ச் சியை மனம் அநுபவிக்கின்றது. இந்த உணர்ச்சிப் பெருக்கில் உண்டாகும் இன்பமே—முருகுணர்ச் சியே—சுவையாகும். எடுத்துக்காட்டாக மணப் பொருள்கள் தரும் மணத்தை நாற்றப்புல நரம்பு கள் வாங்கி மூளைக்கு அனுப்புகின்றன. மனம் அப் பொருள்கள் நல்கும் மணத்தை அநுபவிக்கின்றது. எ-டு. ஊதுவத்தியின் மணம். இப்படியே பிறபுலன் களின்மூலம் பெறும் தூண்டல்களால் மனம் அந் தந்தப் பொருள்கள் தரும் சுவைகளைப் பெற்று

---

[45] பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி — 14. எழுதாக் கவிதை.

[46] குடும்ப விளக்கு — முதியோர் காதல்.

அவற்றில் ஈடுபடுகின்றது. இவ்வாறு வெளியுலகத் தூண்டல்களால் அடிக்கடி மனம் பெறும் அநுபவம் பெருமூளையில் பதிவாகிவிடுகின்றது. உலகை இன்ப மயமாகக் கண்டு, உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள். அதற்கு உள்ளத்தில் கனிவுவேண்டும்.

இவ்வாறு பெருமூளையில் பதிவாகியிருக்கும் அநுபவம் கவிதைகளைப் படிக்கும்போது நினைவாற்றலின் காரணமாகத் தூண்டல்களாக (ideational level) மாறுகின்றன. அவை மூளையிலுள்ள பூத்தண்டு (thalamus), மேற்பூத்தண்டு (hypothalamus) என்னும் பகுதிகளின் மூலமாகப் புலன்களை அடையும்போது மூளையில் அற்புதமாக அமைந்திருக்கும் நரம்பு அமைப்புகளைத் தூண்ட, அந்நரம்புகளின் இயக்கத்தால் மாங்காய்ச் சுரப்பிகள் (adrenal glands) போன்ற நாளமிலாச் சுரப்பிகளில் சாறுகளை ஊறச் செய்து குருதியோட்டத்தை மிகுவிக்கின்றது. உடலும் கிளர்ச்சியடைகின்றது. அப்போது கவிதைகளில் வரும் உருக்காட்சிகளைப் புலன்கள் மீண்டும் மனத்தில் தோன்றச் செய்கின்றன. மனம் அக் காட்சிகளை அநுபவித்து மகிழ்கின்றது. இத்தகைய முருகுணர்ச்சியைத் தம் முருகியல் நோக்கால் தம்முடைய கவிதைகளில் ஏற்றி வைக்கின்றனர் கவிஞர்கள். உலக இயல்பிற்குப் படம்போலிருக்கும் அவர்களுடைய கவிதைகளை நாம் பயிலுங்கால் அதே நோக்கை நாம் பயிற்சியால் ஓரளவு பெற்றுவிடுகின்றோம். கவிஞர்கள் உலகப் பொருள்களை அநுபவித்த உணர்ச்சி சுவை வடிவமாக அவர்தம் கவிதைகளில் தேக்கி வைக்கப்பெற்றுள்ளது. அக் கவிதைகளை நாம் பயிலுங்கால் அவற்றிலுள்ள சுவைகளை நம் மனம் அநுபவித்து மகிழ்கின்றது. பாவேந்தரின் பாடல்களைப் பயின்று அநுபவிப்பவர்கள் அவருடைய முருகியல் நோக்கை மானசீகமாகக் கண்டு மகிழலாம்; நம்மிடமும் அந் நோக்கு எழுவதையும் உணர்ந்து மகிழலாம். பாடல்களும் 'மம்மர் அறுக்கும் மருந்தாக' நமக்குக் களிப்பூட்டுவதையும் உணரலாம்.





டாக்டர் இரா. குமரவேலன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

1. விடுதலைக்குப் பின்

இந்திய விடுதலைக்குப் பின் தமிழ் மேடை நாடகங்களில் சில புதிய திருப்பங்கள் உண்டாயின; கலைஞர்களும் எழுத்தாளர்களும் சில புதிய முயற்சிகளை மேற்கொண்டனர். புராண நோயினால் பீடித்துக் கிடந்த கலையும் இலக்கியமும் பகுத்தறிவு மருந்தால் தெளிவுபெறத் தொடங்கின. நீண்ட பெரு நாடகங்களையும் கேலிக்கூத்துகளையும் புறக்கணித்துத் திறமான புது முயற்சிகளைத் தமிழர் விரும்பினர். புராணத்தையும் இதிகாசத்தையும் அடிப்படையாகக் கொண்ட சில நாடகங்களும்கூடப் புதிய நோக்கத்திலேயே எழுதப் பெற்றன. திராவிட இயக்கங்களின் வளர்ச்சி இதற்கு ஒரு முக்கியமான காரணம் எனலாம்.

2. பேரறிஞர் அண்ணா

1944 அளவிலேயே நாடகத் துறையின் விடிவெள்ளியாகத் தோன்றி எழுச்சிமிக்க நாடகங்களைப் படைத்துப் புதுமை செய்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார். அவருடைய சந்திரோதயம், சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம், வேலைக்காரி, ஓர் இரவு, காதல் ஜோதி முதலியன சாதி சமயக் கொடுமைகளைச் சுட்டிக் காட்டின; ஆலயம் மடம் முதலான நிறுவனங்களைத் தாக்கின; பகல் வேடதாரிகளின் முகமூடிகளைக் கிழித்தன; பகுத்தறிவுச் சுடரை எங்கும் ஒளிவீசச் செய்தன. சமுதாய ஏற்றத் தாழ்வுகளைச் சரியாகப் படம்பிடித்துக் காட்டிய அறிஞர் அண்ணா அவர்கள் சீரான சிந்தனைக்குச் செம்மையான பாதை அமைத்துக் கொடுத்தார். அண்ணாவின் நாடகங்களே இன்றைய நாடகங்களின் புதிய முயற்சிகளுக்கு ஆணிவேராகத் திகழ்ந்தன என்று கூறுதல் மிகையாகாது.

3. சமுதாய நாடகங்கள்

அவ்வப்போது ஓரிரு சமுதாய நாடகங்கள் எழுதப் பெற்றாலும் புராண நாடகங்களே இந் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் செல்வாக்குப் பெற்று விளங்கின. கிருஷ்ணன் தூது, கீசக வதம், பாதுகா பட்டாபிஷேகம், சம்பூர்ண ராமாயணம், சிறுத்தொண்டர், மார்க்கண்டேயர் முதலான நாடகங்கள் அரிய காட்சி அமைப்புகளாலும், செவிக்கினிய இசை முழக்கத்தாலும் சிறந்த முறையில் கன்னைய நாயுடு, நவாப் இராசமாணிக்கம் பிள்ளை முதலானோரால் நடத்தப்பட்டு வந்தன. மெல்ல மெல்ல இவற்றின் இடத்தைச் சமுதாய நாடகங்கள் பெறத் தொடங்கின. மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, மறுமணம், காதல் திருமணம், வரதட்சிணை, ஆடம்பர மோகம், சூதாடுதல் முதலியவற்றினைக் கருவாகக் கொண்டு ஆரம்பகாலச் சமுதாய நாடகங்கள் தீட்டப்பெற்றன. ஓரளவு புதுமையாக அமைந்த இந்த நாடகங்கள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுப் பாராட்டைக் குவித்தன. பகுத்தறிவு இயக்கம் இத்தகைய நாடகங்கள் வளரத் துணை நின்றது. இருப்பினும் இவற்றின் எண்ணிக்கை மிகுதியாக அமையவில்லை.

தனித்தன்மையும் துணிச்சலும் மிக்க கலைஞர்கள் தம் அரிய உழைப்பால் புதிய நாடகங்களைப் படைத்து மேடையேற்றி வெற்றியும் அடைந்தனர்.

4. அவ்வை தி. க. சண்முகம் குழு

சங்கரதாஸ் சுவாமிகளின் புராண நாடகங்களில் நடித்துப் பயிற்சி பெற்ற அவ்வை தி.க. சண்முகம் குழுவினர், தாம் புதிய குழுவினைத் தொடங்கிய பின்னர்ப் பல சமுதாய நாடகங்களை மேடை ஏற்றினர். மனிதன், மனிதனும் மிருகமும், உயிரோவியம், இரத்த பாசம், கவியின் கனவு, குமாஸ்தாவின் பெண், இன்ஸ்பெக்டர் முதலான நல்ல நாடகங்களைச் சமுதாய முன்னேற்றம் கருதி நடித்தனர். ஆதிமூலம், சோமசுந்தரம், நாரண துரைக்கண்ணன், சிரீதர், எஸ். டி. சுந்தரம், டி. கே. முத்துசாமி முதலானோர் நல்ல சமுதாய நாடகங்களைப் படைத்தளித்தனர். நாடக மேடையில் கதையளவிலும் கருத்தளவிலும் புரட்சியும் புதுமையும் செய்தவர்கள் தி.க. சண்முகம் குழுவினர்க்கு நாடகக் கதை வழங்கியவர்கள். எதிராசுவின் 'அவ்வையார்' தமிழ் நாடக மேடையில் ஒரு புரட்சியைச் செய்தது. வயதான மூதாட்டியைத் தலைமை மாந்தராகக் கொண்ட இந் நாடகம் ஒரு புதுமைத் திருப்பம். அரு. இராமநாதனின் 'இராஜராஜ சோழன்' மற்றுமொரு சிறந்த படைப்பு. வரலாற்றுணர்வையும், தமிழ்ப் பெருமையையும், பண்பாட்டுச் சிறப்பையும் விளக்கும் அருமையான நாடகம் இது. இங்ஙனம் தி.க. சண்முகம் குழுவினர் புதிய நாடக முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றனர்.

5. சேவா ஸ்டேஜ்

மேடையில் புதிய நாடகங்களைப் படைத்துப் பெருமை கொண்ட மற்றொரு குழு எஸ். வி. சகஸ்ரநாமத்தின் 'சேவா ஸ்டேஜ்'. பி. எஸ். இராமையாவின் சிறந்த நாடகங்களை இக் குழு நடித்தது. சறுக்கு மரம், கை விளக்கு, சத்திய சோதனை முதலிய கருத்து விளக்க நாடகங்களையும், பிரசிடென்ட் பஞ்சாட்சரம், மல்லியம் மங்களம், போலீஸ்காரன் மகள் முதலிய சமுதாய நாடகங்களையும், தேரோட்டி மகன் என்னும் இதிகாச அடிப்படை நாடகத்தையும் சேவா ஸ்டேஜ் குழுவினர் மேடையேற்றினர். தேரோட்டி மகன் மகாபாரதக் கர்ணன் வரலாற்றையே காட்டுகிறது என்றாலும், சாதிப் பிரச்சினை, ஏற்றத்தாழ்வு முதலானவற்றின் தாக்கங்களை விரிவாகச் சுட்டுவது கருதத்தக்கது.

இக் குழுவினர் பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகியவற்றை மேடையில் அரங்கேற்றிக் காட்டியதும் நினைவுகூரத் தக்கது. இலக்கியங்களைச் சுவை குன்றாமல் அரங்கத்தில் படைத்திட முடியும் என்பதற்கு இவர்கள் முயற்சி எடுத்துக்காட்டாகும்.

6. நேஷனல் தியேட்டர்ஸ்

சமுதாய நாடகங்களுக்கு இடையில் மீண்டும் புராண நாடகங்களைப் புதிய முறையில் மேடையேறச் செய்தவர்கள் ஆர். எஸ். மனோகரின் நேஷனல் தியேட்டர்ஸார். ஆனால், இராவணன், சூரபத்மன், சிசுபாலன், துரியோதனன் முதலான எதிர்நிலை மாந்தர்களைத் தலைமை மாந்தர்களாக ஆக்கினார்கள் இக் குழுவினர்க்கு நாடகம் தீட்டியவர்கள். புரட்சிக் கவிஞர் இவற்றிற்கு முன்னதாகவே பிரகலாதா நாடகத்தை 'இரணியன்' தலைமை மாந்தராக விளங்குமாறு வரைந்தவர் என்பது நினைக்கத்தக்கது. ஒரு வகையில் பகுத்தறிவாளர்க்கு இந்நாடக வரிசை வெற்றியே எனலாம். ஏ. எஸ். பிரகாசத்தின் விசுவாமித்திரர், இரா. பழனிச்சாமியின் சுக்கிராச்சாரியார் 1-2, ஆகியவை புராணங்களைப் புதிய கோணத்தில் காணும் நன்முயற்சிகளாகும்.

மதுரை திருமாறனின் 'சாணக்கிய சபதம்', 'காடக முத்தரையன்', 'வேங்கை மார்பன்' முதலான வரலாற்று நாடகங்களையும் மனோகரின் குழுவினர் நடித்தனர். பழந்தமிழ்ப் புலவர் ஒட்டக்கூத்தரின் சுவைமிக்க வரலாறும் இவர்களால் மேடையேற்றப்பட்டது.

நாடக மேடை நிர்வாகத்திலும், ஒலி, ஒளி அமைப்பிலும், தந்திரக் காட்சிகளிலும், முப்பரிமாண அரங்கமைப்பிலும் நேஷனல் தியேட்டர்ஸ் புதிய முயற்சிகளை அவ்வப்போது மேற்கொள்வது பாராட்டத்தக்கது ஆகும். தமிழ் நாடக மேடையின் உண்மையான தொழில்நுட்ப வளர்ச்சியை இக் குழு நிலைநாட்டுகிறது.

7. புதுமை நாடகங்கள்

எம். ஜி. ஆர். நாடக மன்றத்தாரின் 'சுமைதாங்கி', 'அட்வகேட் அமரன்', எஸ். எஸ். ஆர். நாடக மன்றத்தாரின் 'மணி மகுடம்', 'புதுவெள்ளம்', சிவாஜி நாடக மன்றத்தாரின் 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'தங்கப் பதக்கம்', 'வியட்நாம் வீடு' ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்க புதுமை நாடகங்கள் ஆகும். திருவாரூர் தங்கராசு எழுதி, எம். ஆர். இராதா நடித்த 'இரத்தக்கண்ணீர்' ஓர் அற்புதமான புரட்சி நாடகம் ஆகும். இதனையொத்த சமுதாயச் சீர்திருத்த நாடகம் இதற்கு முன்னரும் இல்லை; பின்னரும் தோன்றவில்லை.

கலைஞர் மு. கருணாநிதி 'மணிமகுடம்' தீட்டிய தோடல்லாமல், 'காகிதப்பூ', 'உதய சூரியன்', 'நானே அறிவாளி', 'பரப்பிரம்மம்' முதலிய கருத்து விளக்க நாடகங்களையும், 'சிலப்பதிகாரம்' தழுவிய ஓர் இலக்கிய நாடகத்தையும் எழுதிப் புதுமை செய்துள்ளார்.

8. நடுத்தர வகுப்பினர் கலையுணர்வு

தமிழ் நாடகத்தின் வளர்ச்சியில் எல்லா நிலைகளிலும் ஊக்கமும் அக்கறையும் காட்டியவர்கள் நடுத்தர வகுப்பினரே ஆவர். 1960ஆம் ஆண்டுக்குப் பின் நாடகம் பார்க்கும் நடுத்தர வகுப்பினரின் கலையுணர்வில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. ஆழமான — அழுத்தமான கதையமைப்பு நாடகங்களை இதுவரை பார்த்து வந்த இச் சுவைஞர்கள் எளிய பொழுதுபோக்குடைய நாடகங்களைக் காண விழைந்தனர். உணர்ச்சி மோதல்களும் கருத்து மோதல்களும் கொண்ட உயர்ந்த நாடகங்களைக் காண இவர்கள் விரும்பவில்லை. இதன் விளைவாக நகைச்சுவைக்கு முதலிடம் கொடுத்து எழுதப்பெற்ற நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டன.

தி. க. சண்முகம், எஸ். வி. சகஸ்ரநாமம், எம். ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர்., சிவாஜி கணேசன் ஆகியோரின் நாடகக் குழுக்கள் புற்றீசல் போல் கிளம்பிய வெறும் பொழுதுபோக்கு நாடகங்களை எதிர்த்து நிற்கவில்லை.

முதலிருவரின் வயதும், மற்றவர்களின் அரசியல் ஈடுபாடும் இத்துறையின் நேரிய வளர்ச்சிக்குத் தடையாக நின்றன. பொழுதுபோக்கு நகைச்சுவை நாடகங்களுக்கு இடையேயும் சில கலைஞர்கள் புதிய நாடக முயற்சிகளை மேற்கொண்டனர்.

9. அங்கத நாடகங்கள்

'சம்பவாமி யுகே யுகே' நாடகத்தின் மூலம் புதிய அங்கத நாடக முயற்சியைத் தொடங்கினார் 'சோ' இராமசாமி. நயமான நகைச்சுவையும் நாட்டுநிலை விளக்கமும் இவர் நாடகத்தில் காணப்பெற்றன. 'மனம் ஒரு குரங்கு', 'இரவில் சென்னை', 'முகமது பின் துக்ளக்', 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்', 'யாருக்கும் வெட்கமில்லை', 'சரஸ்வதியின் சபதம்' முதலான சோவின் நாடகங்கள் அனைத்தும் அங்கதச் சுவை கொண்டு விளங்கின. சமுதாயத்தில் காணப்பெற்ற பலவீனங்களை இவர் நாடகங்கள் குத்திக் கிளறிக் காட்டின. அவ்வப்போதைய அரசியல் விமர்சனங்களாக இவருடைய பல நாடகங்கள் விளங்கியதால், எல்லாக் காலத்திற்கும் பொருந்துவனவாக அமையவில்லை. இருப்பினும் 'மனம் ஒரு குரங்கு' முதலான சமுதாய அங்கத நாடகங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை என்பது தகும்.

10. ஒருகாட்சி நாடகம்

ஆடம்பரமான காட்சி அமைப்புகளையும், அடிக்கடி மாறும் திரைகளையும் கொண்டு பழைய நாடகங்கள் நடிக்கப்பெற்றன. அவற்றிலிருந்து நாடகப் போக்கை மாற்றி, 'ஒருகாட்சி நாடகம்' ஆகிய 'ஒன்-செட்' நாடகங்களைச் சிலர் முனைந்து நடத்தினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ரசிகின் ரிக்ரியேஷன்ஸ் கே. பாலசந்தரும், ஐ. எஸ். ஏ. தியேட்டர்ஸ் வி.எஸ். இராகவனும் ஆவர். 'மேஜர் சந்திரகாந்த்' தொடங்கி 'நாணல்', 'நீர்க்குமிழி', 'மெழுகுவர்த்தி', 'சர்வர் சுந்தரம்' முதலான நல்ல நாடகங்களை இவ்வகையில் நடத்தினார் பாலசந்தர். இவர் பாணியைப் பின்பற்றி வேறு பல குழுவினரும் இத்தகைய நாடகங்களை நடத்தினர். இன்றைய மேடையைப் பொறுத்தவரை பெரும்பாலும் ஒற்றைக் காட்சி நாடகங்களே மிகுதி.

நாடக உரையாடல்களுக்கு மிகவும் முக்கியமான இடத்தைக் கொடுத்துக் கதைகளை அமைப்பதால் ஆடம்பரக் காட்சிகள் இல்லாமை குறையாகப் படுவதில்லை.

11. ஒரு தேக்கம்

இதற்குப் பின், கடந்த பத்தாண்டுகளாகத் தமிழ் நாடக மேடையில் ஒரு பெருந் தேக்கநிலை காணப்படுகிறது. மனோகரின் நேஷனல் தியேட்டர்ஸ் தவிர பிற தொழில்முறைக் குழுக்கள் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்தன அல்லது செயல்படாமல் ஒதுங்கின. பயில்முறைக் குழுக்கள் என்று சொல்லப்படுவனவும் திரை, தொலைக்காட்சிகளால் பாதிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. உண்மையில் ஒரே மாதிரியான நாடகங்களை மீண்டும் மீண்டும் பார்த்த சுவைஞர்கள்— மாறுபாடான புதுமை நாடகங்கள் வாராததால்— வெறுப்புற்றுக் கொட்டகைக்கு வருவதைக் கைவிட்டனர் என்றே சொல்லுதல் வேண்டும். இந்தத் தேக்கநிலை ஏறத்தாழப் பத்தாண்டுகளாக நீடிக்கிறது. எங்கேனும் ஒரு மாற்றம் ஏற்பட்டு மீண்டும் நாடகச் சுவையுணர்வு சுவைஞர்களுக்கு வருதல் வேண்டும்; அதற்கு நாடகக் கலைஞர்கள்—தொழில்முறையிலும் பயில்முறையிலும்—எந்த முயற்சியும் எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை.

12. தெருக்கூத்து – மீட்டுருவாக்கம்

இதற்கிடையில் 'தெருக்கூத்து' நாடகங்களையும் 'ஸ்பெஷல்' நாடகங்களையும் புதுப்பிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. வானொலியும் தொலைக்காட்சியும் தெருக்கூத்து நாடகத்திற்குச் சிறிது ஊக்கம் தருகின்றன. தொலைக்காட்சியில் சில கூத்து நாடகங்கள் தொடர்களாக ஒளி பரப்பப்பட்டன. நலிந்துபோன இந்த நாடகக் கலைக்கு அவை உயிரூட்டுவனவாக அமைந்தன. இதுபோலவே உடையப்பா குழுவினர் 'ஸ்பெஷல்' நாடகங்களையும், தமிழ்நாடு இயலிசை நாடக மன்றத்தார் சங்கரதாசரின் சில நாடகங்களையும் மேடையேற்றினர்.

13. கூத்துப்பட்டறை

தெருக்கூத்து நாடகத்தின் மீட்டுருவாக்கப் பணியில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் ந. முத்துசாமி. இவர் தொடங்கிய 'கூத்துப்பட்டறை' தெருக்கூத்து வளர்ச்சிக்கு நற்பணி ஆற்றி வருகிறது. இதன் முயற்சியால் ஏப்ரல் 1980-ல் சென்னையில் கண்ணப்ப தம்பிரானின் 'கீசக வதம்' முதலான சில தெருக்கூத்துகள் நடத்தப்பெற்றன. மீண்டும் புராண வேதாளம் பழைய முறையிலேயே வருகிறது என்றாலும் காலப்போக்கில் புதுமைக்கு இது வழிகாட்டக்கூடும். ந. முத்துசாமி அவர்களின் 'சுவரொட்டிகள்' என்னும் நாடகம் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தெருக்கூத்துப் பாணியில் எழுதி நடிக்கப்பட்டுள்ள நாடகம் இது.

14. பரீட்சா

நாடகத்தை உண்மையியல் விளங்க அரங்கேற்றுதல் என்னும் நோக்கத்துடன் ஒரு புதுமை செய்யும் இயக்கமாகத் தோன்றியது பரீட்சா என்னும் நாடகக் குழு. நாடகாசிரியர் ஞாநியும் நண்பர்களும் நடத்தும் இக்குழு ஏறத்தாழப் பத்து நாடகங்களை அரங்கேற்றியுள்ளது.

ஞாநியின் 'ஏன்?', ந. முத்துசாமியின் 'நாற்காலிக்காரர்', பிரபஞ்சனின் 'முட்டை', இந்திரா பார்த்தசாரதியின் 'போர்வை போர்த்தின உடல்கள்', அறந்தை நாராயணனின் 'மூர் மார்க்கெட்', ஜெயந்தனின் 'மனுஷா மனுஷா', அம்பையின் 'பயங்கள்' முதலானவை இவர்களின் புதிய முயற்சிகள். இவை அனைத்தும் சிறிய நாடகங்கள். சில பாத்திரங்களே இவற்றில் இடம் பெறுகின்றன. பார்வையாளர்களுக்கு இடையே இருந்து பாத்திரங்கள் பங்கேற்பது போலவும் இவை அமைக்கப்படும். சமுதாயத்தின் அழுக்குகளை அப்படி அப்படியே எடுத்து விளக்கும் உரையாடல்களை இவற்றிற் காணலாம். படித்த சமூகத்தினர் அருவருக்கும் சொற்களை இவர்கள் கூசாமல் பயன்படுத்துவர். நாடகத்தின் கரு உயர்ந்தது; கதை சிறியது; காட்சி எளியது; நோக்கம் சிறந்தது.

நாடக மேடைச் சோதனை மிகவும் பாராட்டுதற்குரியதே. சபாக்களின் ஆதரவு இவர்களுக்கு அறவே இல்லை என்றாலும் இவர்கள் மேற்கொள்ளும் முயற்சியே எதிர்கால நம்பிக்கை ஒளியாகத் திகழ்கிறது. நாடகங்களில் உண்மையியல் உரையாடல்கள் உள்ளன; ஓரளவு நடிப்பு உள்ளது; மற்றபடி அரங்கமைப்பு, திரையழகு, ஒப்பனை நலம், இசைச் சிறப்பு, நாடக நுட்பத் திறன்கள் இல்லை. இவற்றால் நாடகத்தின் கருத்து பாதிக்கப்படுகிறது என்பது இவர்கள் கொள்கை. இருப்பினும் இவை நீங்கிய நாடகத்தைத் தமிழ் மக்கள் விரும்புவர் என்று கருதுவது பகற்கனவு. பரீட்சா குழுவினர் கருத்து, உரையாடல் ஆகியவற்றில் அக்கறை காட்டுவதுடன் நில்லாமல், நாடகத்தின் பிற துறைகளிலும் ஓரளவேனும் ஈடுபாடு காட்டுதல் வேண்டும். இவர்கள் தம் தன்முனைப்பை விட்டு நாடகத்துறையில் பிற அறிவாளிகளோடும் சுவைஞர்களோடும் ஒத்துப்போனால் அரிய பல புதுமைகளை நிகழ்த்த முடியும்; ஓர் எழுச்சியை உருவாக்கி நாடகத்திற்கு நலம் பயக்க முடியும். செய்வார்களா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

15. வீதி இயக்கம்

சென்னை நகரில் 'வீதி நாடக இயக்கம்' குறிப்பிடத்தக்க மற்றொரு குழுவாகும். நாடக வளர்ச்சியில் இக் குழுவினர் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். கடற்கரையிலும் பிற இடங்களிலும் மக்களிடையே முன்னறிவிப்பின்றித் தோன்றி, அவர்களையும் தொடர்புபடுத்தி, அவர்களுக்கு மத்தியில் சமுதாயப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட நாடகங்களைக் குறைந்த செலவில் நடத்துவது இவர்கள் நோக்கம். இன்னும் சரியான முறையில் இவ்வியக்கம் செயல்படத் தொடங்கவில்லை. 'பரீட்சா' இயக்கம் போல 'வீதி'யும் நாடகத் துறைக்கு நன்மை செய்யும் என்று உறுதியாக நம்பலாம். வங்காள 'ஜாத்ரா' நாடகங்களைப் போல—பாதல் சர்க்கார் பாணியில்—நாடகங்களை நடத்த விரும்பும் இவ்வியக்க இளைஞர்கள் மக்கள் ஆதரவு பெறுதல் வேண்டும். 'வீதி' இயக்கத்தினர் நாடகங்கள் அடிக்கடி பல்வேறு இடங்களில் சிலருக்கேனும் முன்னறிவிப்புச் செய்து நடத்தப்பெறுதல் வேண்டும். இவர்களின் 'சுயம்வரம்' என்னும் நாடகம் இங்கு நினைவுகூரத் தக்கது. அரசியல் உள்நோக்கம் கொண்டது இந்நாடகம். தன்னை அடைய நினைக்கும் இளவரசர்களின் தன்னல வேட்கையை அறிந்த இளவரசி மாலையைத் தூக்கியெறிந்து எவரையும் மணக்காமல் செல்கிறாள். அங்கதமாகவும், உருவகமாகவும், குறியீடாகவும் விளங்கும் உரையாடல்கள் இதன் சிறப்பு. ஆனால், அரசியல்வாதிகளை நையாண்டி செய்வது ஏற்கெனவே 'சோ' கடைப்பிடித்த முறை. இது நடத்தப்பட்ட தன்மையால் நம்மைக் கவர்கிறது. வேறு சமுதாயச் சீர்திருத்தக் கருவின் அடிப்படையில் இத்தகைய நாடகங்கள் நடத்தப்பெறல் வேண்டும்.

16. நிஜ நாடக இயக்கம்

1977ஆம் ஆண்டு காந்தி கிராமத்தில் நடந்த நாடகப் பயிற்சியரங்கின் விளைவாக முகிழ்த்த ஒரு நாடக இயக்கம் இது. இராமானுசம்—இராமசாமி ஆகியோர் இதனைத் தொடங்கினர். இன்றைய நாடகம் வெறுங் கேலி-நகைச்சுவைக் கூத்து என்ற நிலையில் இருக்கிறது; இதனை மாற்றி உண்மையான நாடகம் உருவாக்கப் பெறுதல் வேண்டும் என்று இக் குழு உறுதியாகக் கருதுகிறது.

நாடகம் என்பது 'தேடல்' அடிப்படையில் அமைதல் வேண்டும்; நாடகத்தின் மையக் கருத்து 'ஜீவனைத் தேடுதல்' ஆக இருத்தல் வேண்டும். ''நாடகம் வெறும் மேடையமைப்பில் இல்லை; காட்சியமைப்பிலும் இல்லை; ஒலி, ஒளி, உடை போன்றவற்றிலும் இல்லை. நடிகனும் பார்வையாளனும் இல்லாமல்தான் நாடகம் போட முடியாது'' என்கிறார் இராமசாமி. ''நடிகன், பார்வையாளன், இயக்குநன்—நாடகம் இந்த மூன்று நிலை இணைப்புகளினூடே செய்து காட்டலே'' என்பது இவ்வியக்கத்தினர் மனக் கோட்பாடு.

1979 செப்டெம்பர் மாதம் பல்கலைக்கழகத்தில் இவர்களின் 'வெத்துவேட்டு' நடத்தப்பெற்றது. ஒரு சூத்திரதாரன், ஆறு நடிகர்கள் கொண்ட இந்த நாடகத்திலும் 'சுயம்வரம்' போல அரசியல் உள்நோக்கம் உள்ளது. குறைந்த ஒப்பனையுடன் நடந்த இந்த நாடகம் மிகவும் சிறியது.

இவர்களின் முயற்சியும் இன்னும் விரிவடைதல் வேண்டும். சோதனையின் வெற்றி உண்மை உழைப்பிலும் தளரா ஊக்கத்திலும் உள்ளது.

17. பிற புதிய முயற்சிகள்

வீதி, பரீட்சா, நிஜ நாடக இயக்கங்கள் ஆகியவற்றின் போக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வேறு சில முயற்சிகளும் மேடை நாடகத் துறையில் காணப்படுகின்றன. காந்தி கிராமப் பயிற்சியின் பின் அதில் கலந்துகொண்டவர்கள் சென்னையில் நடத்திய 'பிணந்தின்னும் சாத்திரங்கள்' ஒரு நல்ல முயற்சி. ஆனால், இது தொடர்ந்து நடத்தப் பெறவில்லை. பல்லவபுரம் மக்கள் மறுமலர்ச்சி இயக்கம் 'பெல்ச்சி' என்னும் புதுமை நாடகத்தை நடத்திக் காட்டியது; கோவையில் 'குமரி' வட்டத்தினர் தெருவோரத்தில் 'கீழ்வெண்மணி' என்னும் நாடகம் நடத்தினர். இதுபோல ஆங்காங்கு நடத்தப்பெறும் 'சிறு' நாடகங்கள் சோதனை நாடகங்களே. இவற்றிலிருந்து முழுமையானதும் முழுநீளமானதும் முற்றி முதிர்ந்ததுமான சிறந்த நாடகங்கள் தோன்றுதல் வேண்டும். இன்றேல் இவ்வியக்கங்களின் அரிய முயற்சிகளும் அறிவார்ந்த சோதனைகளும் விழலுக்கிறைத்த நீராகும்.

18. முயற்சிகள் வெற்றியடைய


மரபு வழியில் பிறந்த புதிய முயற்சிகள்பற்றி இக் கட்டுரையின் முதற்பகுதியில் கண்டோம்; அது கடந்தகாலமாகிவிட்டது. கோமல் சுவாமிநாதனின் 'செக்குமாடுகள்' போன்ற ஓரிரு நாடகங்கள் தவிர, மரபு வழி நாடகங்களில் புதுமையைக் காணுதற்கில்லை. புதிய நாடக இயக்கத்தினரின் முயற்சிகள் நினைவிற் கொள்ளத்தக்கன.

தமிழ் நாடக மேடையின் புத்துருவாக்கத்திற்கான புதிய முயற்சிகள் நமக்கு ஓரளவு மனமகிழ்வைத் தருகின்றன. ஆனால், இவை மிகச் சிறிய இயக்கத்தினரிடையே உருவாகியுள்ளன. 'சபா' நடத்துபவர்களும், 'குழு' வைத்திருப்பவர்களும் இவர்களின் சிறந்த சோதனைகளுக்குச் சிறிதும் இடம் தருவதில்லை. இவ்வியக்கத்தினரும் பிறரை அண்டுவதுமில்லை; அணைப்பதுமில்லை; தனித்தன்மையை நிலைநாட்டவே எண்ணுகின்றனர்.


பொதுவுடைமையை நிலைநாட்டுவதும், புரட்சியை ஆதரித்துப் பேசுவதும், அரசியல் கட்சிகளை அங்கதப் படுத்துவதும், மக்களாட்சி முறையை நையாண்டி செய்வதுமே நாடகப் புரட்சி என்ற கருத்தும் இவர்களிடையே நிலவுகிறது. தமிழ் மண்ணிற்குத் தேவையான—தமிழ் மண்ணில் ஊறிய பண்பாட்டுக் கருத்துகளைப் புது மெருகுடன் தருவதையும் இவர்கள் கடனாகக் கொள்ளுதல் வேண்டும்.

19. முடிவாக

பரீட்சா, வீதி, நிஜ நாடக இயக்கங்கள் ஆகியவற்றிற்கும், இவை போன்ற பிற அமைப்புகளுக்கும், தமிழக அரசும், தமிழ்நாடு இயலிசை நாடக மன்றமும், பள்ளிகளும், கல்லூரிகளும் ஒத்துழைப்பும் ஆதரவும் தந்து போற்றுதல் வேண்டும். அங்ஙனம் இயக்கங்கள் பரவலாகும்போது அவற்றில் ஆங்காங்குக் காணப்பெறும் கொச்சை நடையும், கோமாளிக் கூத்தும், கொள்கைக் கிறுக்கும் மாறிப் புதுமையும் புரட்சியும் மிக்க புதிய நாடகங்கள் தோன்றும். இனி, பழைய தொழில்முறை—பயில்முறை நாடகங்களை நம்புவதில் பயனில்லை; புதுமை இயக்கங்களை ஊக்குவித்தும் ஆர்வமூட்டியும் வளர்த்துப் பார்க்க வேண்டியது தமிழர் கடன்.



வேமனரும் அவ்வையாரும்



முனைவர் பொன் சௌரிராசன்

இன்று தெலுங்கு நாட்டில் அனைவராலும் அறிந்து போற்றப்பெறும் புலவர் பெருமகனார் **வேமன கவி** ஆவார். தெலுங்கு நாட்டில் மட்டுமன்றி, அதனைச் சுற்றிச் சூழ்ந்துள்ள திராவிட மொழி பயிலும் பிற மாநிலங்களிலும் வேமனரின் புகழ் விளக்கம் பெற்றுள்ளது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தாறிலேயே, அதாவது சற்றேறக்குறைய ஐம்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னரேயே 'வேமன்ன பத்தியம்' என்னும் நூல் ஒன்று தமிழ் மொழியில் தோன்றியுள்ளமை இதனை வலியுறுத்தும்.

பதினேழாம் நூற்றாண்டில் இராயலசீமைப் பகுதியாகிய சித்தூர், கடப்பை மாவட்டப் பகுதிகளில் வாழ்ந்தவராகக் கருதப்பெறும் கவி வேமனர் பாடிய பாடல்கள் இரண்டாயிரத்து எழுநூற்றுக்கும் மேலாகும்.[1] இந்தப் பாடல்கள் கூறும் கருத்துகள் பலவகையின. சிறப்பாக மெய்ப்பொருள் உண்மைகளையும், ரசவாத வித்தைகளையும் உரைப்பன பல; அவை தமிழ்நாட்டுச் சித்தர் பாடல்களோடு, சிறப்பாகச் சிவவாக்கியர் பாடல்களோடு ஒப்பிட்டு உணரத் தக்கன. சாதி சமய சீர்திருத்தப் பாடல்கள் சில; அவை இராமலிங்க அடிகளார் பாடல் சிலவற்றோடு இணைத்து வைத்து நோக்கத் தக்கன. அனைவருக்கும் பொதுவாகப் பயன்படும், அனைவராலும் போற்றப்பெறும் அறம், பொருள்பற்றிய பாடல்கள் பல. எனவே, அவை திருக்குறளோடு ஒப்ப வைத்து ஆயப் பெறுவதில் வியப்பில்லை. நீதி நெறிகளை விளக்கிக் கூறும் பாடல் சிலவும் வேமனர் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அவையே இங்கு அவ்வையார் பாடல்களோடு ஆயப் பெறுகின்றன.

கவி வேமனர் வாழ்வுபற்றியும், அவர் பாடல் நலங் குறித்தும் பல நூல்கள் இன்று தெலுங்கில் தோன்றியுள்ளன.[2] அவற்றின்மூலமாக அறியப்பெறுவன: கவி வேமனர் வளமான குடியில் பிறந்தவர். உழவுத் தொழிலில் ஈடுபாடு கொண்டவர். துறவு பூண்டு திகம்பரராகிப் பாமர மக்களின் இன்ப துன்பங்களைக் கண்டு, தெளிந்து அனைவருக்கும் விளங்குமாறு, ஒருமுறை படித்ததுமே உள்ளத்தில் நின்றுவிடும் இயல்புடைய 'ஆடவலதி'[3] என்னும் இனிய பாவகையில் எளிய உவமைகள் அமையப் பாடல் பல பாடியவர் என்பனவாகும்.

இவர் கையாளும் உவமைகள் மக்கள் வாழ்விலிருந்து உருவாயினவாக இருத்தலின் மக்கள் கவிஞராக இவர் இந்த மாநிலத்தில் சிறப்பிக்கப் பெறுகிறார். பின்வரும் பாடல் ஒன்றில் அமைந்துள்ள உவமை அடுக்குகள் மேலே சொன்ன உண்மைக்கு அரண் செய்வன.

---

[1] 'வேமன பத்யமுலு', பதிப்பு: வி. வேங்கடேசுவர சாத்திரிலு.

[2] (அ) வங்கூரி சுப்பாராவ், **வேமன**

(ஆ) ஆருத்ர, **சமக்ர ஆந்திர சாகித்யமு**

(இ) மருபூரி கோதண்டராம ரெட்டி, **பிரஜா கவி வேமன யோகி.**

(ஈ) நார்ல வெங்கடேசுவர ராவ், Vemana, 1969. Published by Sahitya Academy, New Delhi.

[3] 'ஆடவலதி' என்பது ஐஞ்சீர் நான்கடி கொண்ட ஒருவகைப் பா ஆகும்.

கணவன் மனைவி வீட்டுப் போராட்டத்தால் தோன்றும் நெஞ்சத் துன்பத்தை, செருப்பில் புகுந்து கொண்டு காலில் நெருடும் கல்லுக்கும், செவியில் புகுந்துகொண்டு ரீங்காரம் செய்யும் ஈக்கும், கண்ணில் விழுந்து உறுத்தும் தூசுக்கும், காலில் தைத்த முள்ளுக்கும் பின்வருமாறு ஒப்பிடுகின்றார்:

''செப்புலோனி ராயி செவிலோனி ஜோரீக
கண்டியந்து நலுசு காலி முல்லு
இண்டிலோனி போரு இந்திந்த காதையா
விஸ்வதாபி ராமா! வினர வேமா!''

'மந்திரித்துத் தரும் தீர்த்தத்தைத் தலையில் தெளித்துக்கொள்வதைவிட, நாவிதர் தரும் தண்ணீரைத் தலையில் தடவிக்கொள்வது பயன்மிக்கது' என்பதனை,

''மந்த்ர ஜலமுகன்ன மங்கலி ஜலம் கெச்சு'' எனும் இவரது தொடர் இவர்தம் சீர்திருத்தப் போக்கைக் காட்டும்.

'அவ்வையார்' என்றதும் கோலூன்றிய பாட்டி ஒருவரின் உருவமே இன்று மக்கள் கண்முன் தோன்றும்; 'அவ்வைக் கிழவி நம் கிழவி' என்னும் கவிமணி பாடல் வரியும் அவர் நாவில் தவழும். ஆனால், உண்மையில் அவ்வை பெண் ஒருவரின் முதுமையைக் குறிப்பதில்லை. இன்று தெலுங்கில் வழங்கும் 'அவ்வா' என்னும் சொற்பொருளில் அன்று தமிழில் அச்சொல் பயிலவில்லை. வேண்டுமாயின் அறிவின் முதிர்ச்சியை, அனுபவ வளர்ச்சியைக் குறிப்பதாகக் கொள்ளலாம். சங்ககால அவ்வைபற்றி வரும் ''மடவரல் உண்கண் வாணுதல்'' என்னும் புறப்பாட்டுத் தொடர்[4] அழகிய இளைய சங்ககால அவ்வையைக் குறிக்கும்.

அறிவிலும் பண்பிலும் சிறந்த பெண்கள் 'அவ்வை' என்றழைக்கப்பெற்றதாகத் தமிழ்க் கலைக்களஞ்சியம் விளக்குகிறது.[5] சீவக சிந்தாமணி, துறவு பூண்ட பெண்டிரை 'அவ்வை' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறது.[6]

'அவ்வையார் ஒருவர்தாமா? பலரா?' என்பது ஒரு கேள்வி. கற்றார் அனைவரும் 'அவ்வையார் பலர்' என்னும் கருத்தில் அய்யங் கொள்ளார். புராணச் செய்திகள் புகுந்த இடைக்காலத்தில், அற்புதச் செயல்களுக்கு ஆற்றலும் ஆக்கமும் வாய்த்த பிற்காலத்தில் அவ்வையர் பலர், ஒருவராக உருவாக்கப் பெற்றனர். எனினும் அவ்வையார் பெயரில் புலமைச் செல்வியர் பலர் தமிழ்மண்ணில் தோன்றி அவ்வப்போது விளங்கி வந்துள்ள உண்மையைத் தமிழ் இலக்கிய வரலாற்றினை முறையாகப் பயின்றார் எல்லோரும் ஒப்புக்கொள்வர்.

அதியமான் நெடுமான் அஞ்சியால் போற்றப்பெற்ற சங்ககால அவ்வையார்; சுந்தரர், சேரமான் காலத்து அவ்வையார்; நீதி நூல்கள் பாடிய இடைக்கால அவ்வையார்; ஞானக்குறள் பாடிய பிற்கால அவ்வையார் என அவ்வையார் பலர் வாழ்ந்து தமிழை வளப்படுத்தியுள்ளனர். இந்த அவ்வையருள் இடைக்கால அவ்வை சில இனிய தனிப்பாடல்களும் பாடியுள்ளார். பிற்காலத்தே புராணச் செய்திகளுக்கு இணங்க அவ்வை கதை பாடவந்த நாடகத் திறனும் கற்பனை வளனும் வாய்த்த புலவர் சிலர் அவ்வையார் பெயரில் தாங்களே சிற்சில பாடல்களைப் பொருத்தமாகப் பாடி, அவ்வையார் பலர் வாழ்வையும் ஒருவருடையது போல உருவாக்கினர். அவை யாவும் இன்று தனிப்பாடல் திரட்டுகளில் கலந்து அவ்வையார் பாடல்களாக அமைந்துள. இத்தகு அவ்வையார் பலருள் மூதுரை, நல்வழி பாடிய அவ்வையாரும் ஒருவர். அவர் பாடல்களே இங்குத் தெலுங்குக் கவி வேமனர் பாடல்களுடன் ஒப்பிடப் பெறுகின்றன.

சமுதாயம், கல்வி, சமய ஒழுக்கம், இல்வாழ்வு இவைபற்றியெல்லாம் இருவரும் ஒத்த கருத்துடையவர்களாக, ஒருவர் கருத்துக்கு இன்னொருவர் விளக்கம் தருபவராகப் பாடிச் செல்கின்றனர்.

சமுதாயம்

சமுதாயத்தின் அடிப்படை பொருள். ''பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்றார் பொய்யா மொழியார். இதனைச் சற்று விரிவுபடுத்தினாற் போல ''இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள்'' என்கிறார் அவ்வையார். 'தலைப்பாகை, நல்லாடை, பொன்னணிகள் உடையவர்களையே உறவினர் மதிப்பார்கள்' என்கிறார் வேமனர்.

''பாக பச்சடம்பு பைகம்பு சொம்முலு
....
கலுகு வாரினைன கைகோடு பந்துவுல்
.... (522)''

''பரக லேமிசே பந்துவுல் பகவாரு'' (799)

என்னும் பாடலில் 'பொருளின்மையினாலே உறவினர் பகைவர் ஆவர்' என்று மேலும் விளக்கிச் செல்வார். 'கையில் பொருள் இருந்தால் கல்லாதவனைக்கூட எல்லோரும் புகழ்வர்'(நல்வழி, 34) என்கிறார் அவ்வையார். வேமனர் 'பொருள் இருப்பின் இழிந்தவனைக்கூட உலகம் போற்றும்' என்பதைப் ''பூச போகு பசிகி'' எனத் தொடங்கும் பாடலில் (520) குறிப்பார்.

---

[4] புறநானூறு. 89 : 2.

[5] கலைக்களஞ்சியம், பகுதி 2, பக். 756.

[6] சீவக சிந்தாமணி, பா. 2637.

[7] இங்குக் குறிக்கப்பெறும் வேமனர் பாடல் எண்கள், 'வேமன பத்யமுலு' எனும் தமிழ் நூலினைப் பின்பற்றியனவாம்.

வறுமையால் விளைவது பசிக்கொடுமை. 'வயிறே! உன்னோடு வாழ்தல் அரிது' (நல். 11) என்பார் அவ்வையார். வேமனரோ, 'புலியொடும் கலியொடும் வாழலாம்; ஆனால் ஆகலியோடு (பசியோடு) வாழ்தல் இயலாது' (179) என்பார். 'நாழி அரிசிக்காக மானுடத்தின் குறிக்கோளை மறந்து பாவித்துப் பாராண்டும் பாட்டிசைத்தும் மனிதன் வாழ் நாளைப் பாழ்நாளாக்குவதை' (நல். 19) நினைந்து அவ்வையார் வருந்துவார். 'பசி வந்திட மானம், குலம், கல்வி முதலிய பத்தும் பறந்துபோம்' (நல். 26) என்பார் அவ்வையார். 'வாழ்வின் நன்னெறிகளும், தூய முறைகளும் பசியினால் கெடும்' என்பதை, 'ஆகலிவலெ செடுனு ஆசார க்ரமமெல்ல' (402) என்பார் வேமனர்.

சமுதாயப் பண்பினை உருவாக்குவதில் பழங்குடியில் பிறந்து வளர்ந்தோர்க்குச் சிறந்த தோர் இடம் உண்டு. அவர்தம் பண்பினை இருவரும் ஒரேவகை உவமையைக் கொண்டு வெவ்வேறு கோணங்களில் காணுகின்றனர். 'சந்தனம் தேய்ந்தபோதும் மணத்தில் குறைவதில்லை; உயர்குடியில் பிறந்தோர் வளங்கெடினும் பண்பில் கெடுவதில்லை' (மூது. 28) என்பார் அவ்வையார். 'சந்தன மரம் ஒன்றினால் தோப்பொன்று சிறப்புறுவதைப்போல நல்லான் ஒருவனால் குடி உயரும்' என, ''குலமுலோன னொகொடு'' (525) என்னும் பாடலில் குறிப்பர் வேமனர்.

'சாதி இரண்டொழிய வேறில்லை. வறியவர்க்கு இட்டார் உயர்சாதியினர். இடாதார் கீழ்ச்சாதியினர்' (நல். 2) என்பார் அவ்வையார். 'சாதியும் மதமும் விட்டவனே யோகியாவான். உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் சொல்வதில் பயனில்லை' (531) என்று சொல்லி 'வேடுவர் குலத்தில் பிறந்த வான்மீகி நல்ல பிராமணனாவான்' (538) என்று செயற்கரிய செயல் செய்தலே உயர் சாதிக்குக் காரணம் என்று நிலைநாட்டுவார் வேமனர்.

கல்வி

'கல்லாதான் கற்றவன்போல் கவிபாடுதல் மயிலாகத் தன்னை நினைத்துக்கொண்டு ஆடிய வான் கோழிக்கு ஒப்பாகும்' (மூது. 14) என்பார் அவ்வையார். வேமனரோ 'கற்றவர்க்கு இடையே கல்லாதவன் இருப்பது அன்னங்களுக்கு இடையே கொக்கு இருப்பது போன்றதாகும்' என ''கொலனி ஹம்சலகட கொக்கொதுன் னட்லு'' (597) என்பர்.

'தீயாரைக் காண்பதும், அவர் சொல்லைக் கேட்பதும், அவரைப்பற்றிப் பேசுவதும், அவரோடு இணங்கி இருப்பதும் தீது' (மூது. 9) என்பார் அவ்வையார். 'நல் உணவுகளோடு வயிற்றுக்குள் புகுந்த ஈயொன்று அந்த உணவுகளையெல்லாம் குமட்டி வெளிக்கொணர்வது போல, தீயோனை வீட்டில் வைத்துக்கொள்வதால் கேடு நேரும்' என்று கூறுவார் வேமனர்.

சமய ஒழுக்கம்

சமய நம்பிக்கைகளில் விதி ஒன்று. பொய்ச் சான்று கூறுவோன் அழிவான்; வஞ்சகர் துன்புறுவர்; மனம் ஒன்றை விட்டு ஒன்று பற்றும் சஞ்சல இயல்புடையது என்பன யாவும் இதன்கண் குறிக்கப்பெறும். 'இன்ப துன்பங்கள் வினை வயத்தன' (நல். 17), 'பருவத்தாலன்றி எதுவும் பழுக்காது' (மூது. 5) என்பார் அவ்வையார். ''விதி லேக ஜரகது'' (865), ''விதிக்ருத மந்துரு யந்துரு'' (866) என்பன வேமனரின் வாக்குகள்.

'பொய்ச்சான்று கூறுவோன் அழிவதன்றி அவன் குடியும் கெடும்' என்பதனை அவ்வையார் ''வேதாளம்சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே'' (நல். 23) என்னும் பாடலில் ஓவியமாக்கிக் காட்டுவார். வேமனர் 'ஓட்டைப் பாண்டத்தில் நீர் ஊற்றியதைப் போலப் பொய்யன் செல்வம் அவனை விட்டுச் சென்றுவிடும்' என்பதனைத் ''தப்பு பலிகினானு'' (755) என்னும் பாடலில் குறிப்பார்.

'நஞ்சினையுடைய பாம்பைப் போல வஞ்சகர் மறைந்து வாழ்வர்' என்று சுட்டுவார் அவ்வையார். அதற்குக் காரணம் காட்டுவது போல, 'வஞ்சகர் தாம் காணும் அனைவரையும் வஞ்சகராகவே கருதுவர்' என்னும் கருத்தினை,

''தனமதி கபடமு லுண்டின
தனவலெநேகி பட்டமுண்டுதக ஜீவலகுன்'' (703)

என்னும் பாடலில் வேமனர் குறிக்கிறார். 'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம், எண்ணுவனவோ பல கோடிகள்' (நல். 28) என்று சஞ்சல மனத்தின் இயல்பினை உரைப்பார் அவ்வையார். ''மனசுலோன புட்டு மரிகோர்கெ லண்ணிய'' (610) என்னும் பாடலில் மனத்தின் எல்லையிலா ஆசையினைக் குறிக்கிறார் வேமனர்.

இல்வாழ்வு

இல்வாழ்வு என்பது இல்லாளால் அமைவது. அந்த நல்ல வாழ்விற்குப் பொல்லாங்காய் வருவது பரத்தமையாகும். இவ்விரு கூறுகளை இருவரும் பின்வருமாறு எண்ணிப் பார்க்கின்றனர். 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்றும், 'அவள் பொல்லாள் ஆகில் வீடு புலி கிடந்த புதராகிவிடும்' (மூது. 21) என்றும் அவ்வையார் உரைப்பார். வேமனர், 'நல்லவளால் இன்பமும், அல்லவளால் துன்பமும் குடும்பத்தில் விளைகின்றன' என்பதை ''அனுகூல்யமைன'' (198) என்னும் பாடலில் குறிக்கிறார்.

'பரத்தையரின் தொடர்பால் ஞானம், குலம், கல்வி முதலியன கெடுகின்றன' (நல். 36); 'அத் தொடர்பையுடையவன் இம்மை, மறுமைப் பயன்களை இழக்கிறான்' (நல். 20) என்பார் அவ்வையார். 'பரத்தமை பாவம்' (887), 'உத்தமனுக்குப் பொருந்தாச் செயல்' (888) என்பார் வேமனர்.

இருவரும் இனிய எளிய உவமைகளைக் கையாள்வதில் சிறந்து விளங்குகின்றனர். அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவையைப் பொய்யுறவிற்கும், கொட்டி ஆம்பல் முதலிய நீர்க் கொடிகளை உண்மையுறவிற்கும், பொன்னின் குடம் உடைதலை மேலோர் கேட்டிற்கும், மண்ணின் குடம் உடைதலை கீழோர் கேட்டிற்கும் உவமித்துச் சொல்லும் அவ்வையின் திறமையை அனைவரும் நன்கறிவர். இவ்வாறே வேமனரும் உவமைகளைக் கையாண்டு தாம் உணர்ந்ததைக் கற்பார் அனைவருக்கும் உணர்த்துகிறார். 'கரியைப் பாலில் கழுவினாலும் அதன் நிறம் மாறாது' என்னும் உவமையினால் என்ன படித்தாலும் இழிந்தோன் பண்பட்டு உயர்வதில்லை' (573) என்று உணர்த்துவார்.

தாழ்ந்தோர், தற்பெருமை பேசித் தம்பட்டம் அடித்துக்கொள்வர். உயர்ந்தோர் அடக்கமாக இருப்பர். இதனை, 'வெண்கலம் ஒலிப்பது போலப் பொன் ஒலியெழுப்புமா?' என்னும் உவமையில் பின் வருமாறு வேமனர் அழகாகக் குறிப்பார்:

''அல்புடெப்புடு பல்கு ஆடம்பர முகானு
சஜ்சனுண்டு பல்கு சல்ல கானு
கஞ்சு ம்ரோகினட்டு கனகமு ம்ரோகுனா
விஸ்வதாபி ராமா! வினர வேமா!''

பொருள் வெளிப்படையாகப் புலப்படாமல் எண்ணிப் பார்ப்பார்க்கே விளங்குமாறு அமைத்துப் பாடுகின்ற உத்தியை இருவர் பாடல்களிலும் காணலாம்.


''எட்டேகால் லட்சணமே யமனே றும்பரியே'' என்று அவ்வை, ''ஒரு காலடி நாலிலைப் பந்தலடி'' என்று கூறிய புலவனுக்கு விடையிறுத்த பாடலையும், அதனுள் மறைந்திருக்கும் பொருளையும் தமிழ் மக்கள் அறிவர். அதுபோன்றே பின்வரும் வேமனர் பாடலும் முதன்முறை படிக்கும்போது கேலியாகத் தோன்றிப் பின்னர் ஆழ்ந்து எண்ணும்போது அரிய பொருளைத் தருவதாய் அமையக் காணலாம்:

''குக்க தின்னவாடு குருலிங்க ஜங்கம்பு
பந்தி தின்னவாடு பரமயோகி
யேனுகு தினுவாடு யெந்தசுக் ஞானிரா
விஸ்வதாபி ராமா! வினர வேமா!''

இதன் பருப்பொருள்: ''நாயைத் தின்றவன் நற்குரு அடைவான்; பன்றியைத் தின்றவன் பரமயோகி யாவான்; யானையைத் தின்றவன் நல்யோகி யாவான்.''

இதன் நுண்பொருள்: ''எதனையும் பிறர் துய்க்க வொட்டாது எல்லாம் தனக்கென நினைந்து, 'எனது' என்னும் செருக்கால் குரைக்கின்ற நாய்த்தன்மையைக் கொன்றவர்கள் நல்ல குருவினை அடைவர்; தாழ்ந்த இடத்தையும் கெட்ட பொருளையும் தேடித்திரியும் பன்றியின் இழிகுணத்தைக் கொன்றவர்கள் பரமயோகியாவர்; 'நான், நான்' என்ற அகங்காரத்தால் மதங்கொண்ட யானையைப்போல் உள்ளத்தே எழும் ஆணவத்தை வென்றோர் நல்ல ஞானியாவர்.''

இவ்வாறு வேமனரும் அவ்வையாரும் காலத்தால் மாறுபட்டாலும், மொழியால் வேறுபட்டாலும் கருத்தாலும், உணர்த்தும் முறையாலும் ஒன்றுபட்டு விளங்கக் காணலாம்.



"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

சிலம்பின் தொடர்நிலைக் காப்பியம் மணிமேகலை; சாத்தனார் யாத்தது; பௌத்தம் சார்ந்தது. காப்பியத் தலைவி மணிமேகலை; மாதவி பெற்ற மகள்; துறவுச் செல்வி; பசித்தவர்க்கு அன்னை. அவளுக்கு ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி கிடைத்தது. அது,

> "குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
> பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
> நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
> பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
> பசிப்பிணி"

நீக்கும் பான்மையது; அள்ள அள்ளக் குறையாதது. அந்த அமுதசுரபியை ஏந்திய அருள்மகள் மணிமேகலை,

> "மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"

என்னுந் தகைமையால்,

> "ஊர்ஊர் ஆங்கண் உறுபசி உழந்தோர்
> ஆரும் இன்மையின் அரும்பிணி உற்றோர்"

ஆகிய அனைவருக்குமாக அன்னமளிக்கும் அறச்செயல் காட்சி.

'பரத்தையரின் தொடர்பால் ஞானம், குலம், கல்வி முதலியன கெடுகின்றன' (நல். 36); 'அத் தொடர்பையுடையவன் இம்மை, மறுமைப் பயன் களை இழக்கிறான்' (நல். 20) என்பார் அவ்வையார். 'பரத்தமை பாவம்' (887), 'உத்தமனுக்குப் பொருந் தாச் செயல்' (888) என்பார் வேமனர்.

இருவரும் இனிய எளிய உவமைகளைக் கையாள் வதில் சிறந்து விளங்குகின்றனர். அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவையைப் பொய்யுறவிற்கும், கொட்டி ஆம்பல் முதலிய நீர்க் கொடிகளை உண்மையுற விற்கும், பொன்னின் குடம் உடைதலை மேலோர் கேட்டிற்கும், மண்ணின் குடம் உடைதலை கீழோர் கேட்டிற்கும் உவமித்துச் சொல்லும் அவ்வையின் திறமையை அனைவரும் நன்கறிவர். இவ்வாறே வேமனரும் உவமைகளை [illegible] தைக் கற்பார் அனைவருக்கும் உணர்த்துகிறார். 'கரியைப் பாலில் கழுவினாலும் அதன் நிறம் மாறாது [illegible] லும் இழிந்தோன் பண்பட்டு உயர்வதில்லை' (572) என்று உணர்த்துவார்.

தாழ்ந்தோர், தற்பெருமை பேசித் [illegible] அடித்துக்கொள்வர். உயர்ந்தோர் அடக்கமாக இருப்பர். இதனை, 'வெண்கலம் ஒலிப்பது [illegible] பொன் ஒலியெழுப்புமா?' என்னும் [illegible] வருமாறு வேமனர் அழகாக [illegible]

''அல்புடெப்புடு பல்கு ஆடம்பர முகானு
சஜ்சனுண்டு பல்கு சல்ல கானு
[illegible]
விஸ்வதாபி ராமா! வினர வேமா!''

பொருள் வெளிப்படையாகப் புலப்படாமல் [illegible] ணிப் பார்ப்பார்க்கே விளங்குமாறு அமைத்துப் பாடு கின்ற உத்தியை இருவர் பாடல்களிலும் காணலாம்.

''எட்டேகால் லட்சணமே யமனேறு பரியே''
என்று அவ்வை, ''ஒரு காலடி நாலிலைப் பந்தலடி'' என்று கூறிய புலவனுக்கு விடையிறுத்த பாடலை யும், அதனுள் மறைந்திருக்கும் பொருளையும் தமிழ் மக்கள் அறிவர். அதுபோன்றே பின்வரும் வேமனர் பாடலும் முதன்முறை படிக்கும்போது கேலியாகத் தோன்றிப் பின்னர் ஆழ்ந்து எண்ணும்போது அரிய பொருளைத் தருவதாய் அமையக் காணலாம்:


''குக்க தின்னவாடு குருலிங்க ஜங்கம்பு
பந்தி தின்னவாடு பரமயோகி
யேனுகு தினுவாடு யெந்தசுக் ஞானிரா
விஸ்வதாபி ராமா! வினர வேமா!''

[illegible] ''நாயைத் தின்றவன் நற்குரு அடைவான்; பன்றியைத் தின்றவன் பரமயோகி யாவான்; யானையைத் தின்றவன் நல்யோகி [illegible]

இதன் நுண்பொருள்: ''எதனையும் பிறர் துய்க்க [illegible] 'எனது' [illegible] தன்மை யைக் கொன்றவர்கள் நல்ல குருவினை அடைவர்; தாழ்ந்த இடத்தையும் கெட்ட பொருளையும் தேடித் திரியும் பன்றியின் இழிகுணத்தைக் கொன்ற வர்கள் பரமயோகியாவர்; 'நான், நான்' என்ற [illegible] மதங்கொண்ட யானையைப்போல் உள்ள [illegible] ஆணவத்தை வென்றோர் நல்ல ஞானியாவர்.''

இருவரும் [illegible] காலத்தால் [illegible] மொழியால் வேறுபட்டாலும் கருத்தாலும் உணர்த்தும் முறையாலும் ஒன்றுபட்டு விளங்கக் காணலாம்.





தமிழகத் திருக்கோயில்கள்

திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை

''சந்தி பொருத்தித் தகும்சீர் கெடா தடுக்கிப்
புந்தி மகிழ்அற் புதஅணித்தாய்,—முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில்''
—துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

தமிழகத்திற்குப் பலவகைச் சிறப்புகள் உண்டு. அவற்றுள் தலையாய ஒன்று, தமிழகத்தின்கண் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கும் முற்பட்ட, நூற்றுக்கணக்கான கோயில்கள் அமைந்திருத்தல் ஆகும். தமிழகத்திற் போல, இவ்வளவு மிகுதியான, வானளாவி ஓங்கி உயர்ந்த, அற்புதச் சிற்பங்கள் அமையப் பெற்ற, பழமையும் பெருமையும் வாய்ந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க, வளம் நிறைந்த மாபெரும் கோயில்களை, நாம் வேறு எங்கும் காண்டல் இயலாது. கோயில்கள், நமது தமிழகத்தின் பழம்பெறும் நாகரிகத்தையும் பண்பாட்டு நலங்களையும் விளக்கிக்கொண்டிருக்கும் அடையாளங்களாகத் திகழ்கின்றன. தமிழகக் கோயில்களின் அருமை பெருமைகள், அயல்நாட்டு அறிஞர் பெருமக்களின் உள்ளங்களையும் மிகவும் கவர்ந்து, கொள்ளைகொண்டு, பெரிதும் வியப்புறச் செய்து வருகின்றன.

கோயில்கள்

நம்முடைய தமிழகத்தில், நூற்றுக்கணக்கான சைவ, வைணவத் தலங்களும், கோயில்களும் நிறைந்து விளங்குகின்றன. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வைணவத் திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள், வடநாட்டில் 12, திருநாட்டில் 1 நீங்கலாக, தமிழகத்தில் மட்டும், சோழ நாட்டில் 40, பாண்டிய நாட்டில் 18, சேர நாட்டில் 13, நடுநாட்டில் 2, தொண்டை நாட்டில் 22, ஆக மொத்தம் 95 வைணவப் பெருங்கோயில்கள் அமைந்து திகழ்கின்றன. இவ்வாறே அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் முதலிய சைவ நாயன்மார்களால் அருளிச் செய்யப்பெற்ற திருப்பதிகங்கள் கிடைத்துள்ள 275 சிவத்தலங்களில், ஈழநாடு 2, துளுவ நாடு 1, வடநாடு 5 நீங்கலாக, சோழ நாட்டில் 191, பாண்டிய நாட்டில் 14, சேர நாட்டில் 1, கொங்குநாட்டில் 7, நடுநாட்டில் 22, தொண்டை நாட்டில் 32, ஆக மொத்தம் 267 சைவப் பெருங்கோயில்கள் தமிழகத்தில் விளங்கி வருகின்றன.

பண்டைக்காலத்திற் கோயில்கள்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே கோயில் தோன்றிவிட்டது எனலாம். அதுதான் முதற்கோயிலான குகைக் கோயில். அங்கு வணங்கப்பட்ட தெய்வம் 'குகன்' எனப் பெயர்பெற்றான். ஆகவேதான் முருகன், 'குறிஞ்சிக் கிழவன்' என்னும் சிறப்பினைப் பெற்றான். மக்களின் எண்ணிக்கை வளர்ச்சிக்கும் எண்ண வளர்ச்சிக்கும் ஏற்ப, நெய்தல் முல்லை மருதம் ஆகிய மற்றைய மூவகை நிலங்களிலும்கூட மக்களினம் குடியேறி வாழத் தொடங்கிற்று. அங்கெல்லாமும் மக்கள் கோயில்களை அமைக்கத் தவறினார்கள் இல்லை. கொடிக்கூடம், மரநிழல், காவணம், குடில், மண் தளி, சுடுமண் தளி,

மரப் பலகைகளால் சமைத்த அம்பலம், குடைவரை, ஒற்றைக் கற்றளி, கருங்கற் கோயில் என்று படிப் படியாகக் கோயில்கள் வளர்ந்தோங்கின.

மூவாயிரம் ஆண்டுகட்கும் மிக முற்பட்ட தொல் காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூலில், ''இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்'' என்னும் நூற்பாவால், கோயில் என்னும் சொல்லுக்குப் புண ரியல் விதி வகுக்கப்பெற்றுள்ளது.

''மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே''

என வரும் தொல்காப்பிய நூற்பாவால், பண்டைக் காலத்திலேயே கடவுளர்க்குப் படிமைகள்(Idols) என்னும் தெய்வத் திருவுருவங்களின் பிரதிமைகளைக் கோயில்களில் அமைத்து மக்கள் வழிபட்டு வந்தனர் என்பதும்; அக் கோயில்களில் நிகழும் அறச் செயல்கள் நன்கினிது முறையே நடைபெறுகின்றனவா என்று கண்காணித்து, 'அறப்புறம் காவல்' புரிதற் பொருட்டு, அரசர்கள் தத்தம் நாட்டின் எல்லைக் குட்பட்ட பகுதிகள் பலவற்றுக்கும் அவ்வப்போது சென்று மேற்பார்வையிட்டு வந்தனர் என்பதும் தெளிவுற அறியப்படுகின்றன.

''சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு''

என வரும் திருக்குறளால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவள்ளுவர் காலத்திலேயே, நாடோறும் நிகழும் நித்திய பூசையும், அவ்வப்போது நித்தியத்தில் தாழ்வு தீரச் செய்யப்படும் நைமித்திகம் ஆகிய பெருவிழாக்களும் நடைபெற்று வந்தமை செவ்விதின் தெளியப்படுகின்றது.

கோயில் வகைகள்

பண்டைக்காலத்துக் கோயில்களில் ஒருசிலவற்றின் படிவங்களாகவே, மாமல்லபுரத்தில் உள்ள தேர்கள் என்னும் கோயில்கள் அமைக்கப்பெற்றுள்ளன. பண்டைக்காலத்துக் கோயில்களின் அமைப்பில் ஒருசிலவற்றை, அப்பரடிகள் என்னும் திருநாவுக்கரசர் பெருமான், தம்முடைய திருப்பாடல் ஒன்றில், பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

''பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடு எட்டும், மற்றும்
கரக்கோயில், கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்,
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்,
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில், மணிக்கோயில், ஆலக் கோயில்,
திருக்கோயில், சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே!''

(1) பெருங்கோயில்: விண்ணளாவிய விமானங்களும், விரிவான மண்டபங்களும், பெரிய திருச்சுற்றுகளும், திருமாளிகைப் பத்திகளும், மாடப் புரைகளும் கொண்டு, அனைத்து உறுப்புகளுடனும் விளங்குகின்ற திருவாரூர், மதுரை, திருவானைக்கா, திருவண்ணாமலை முதலியன பெருங்கோயில்கள் எனலாம். அம்பர், நன்னிலம் முதலிய தலங்களின் கோயில்கள், பெருங்கோயில்கள் என்று தேவாரப் பாடல்களில் குறிக்கப்பெற்றுள்ளன.

(2) கரக்கோயில்: மரக்கைகள் பரப்பி, அதன் மீது புல் கீற்று அல்லது ஓடு வேய்ந்து அமைக்கப்படுவது. சாலை, அர்த்தசாலை, கூடம் என்று இது மூவகையாக அமைக்கப்படும். தில்லைச் சிற்றம்பலம் இவ்வகையாகும். இவ்வகையான கோயில்கள் இன்றும் கேரளத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. தேர்ச்சக்கரம் போல அமைந்த கோயில் என்றும் இதனைச் சிலர் கூறுவர். கடம்பூர்க் கோயில் 'கரக்கோயில்' என்று போற்றப்பெற்றுள்ளது.

(3) ஞாழற்கோயில்: பல சிறுசிறு மரங்கள் சூழ்ந்த ஒரு கூடாரம் போன்ற இடத்தில், மரங்களின் நிழலில் அமைக்கப்படும் மேடைக் கோயில். இது பெரும்பாலும் வேலி சூழ்ந்த காவணத்தில் அமைக்கப்படும். இக் கோயிலே, பிற்றை நாளில் நூறுகால், ஆயிரங்கால் மண்டபங்கட்கு அடிப்படையாயிற்று எனலாம். ஞாழல்-கொன்றை. முன்னாளில் இதற்குக் கூரை இல்லை.

(4) கொகுடிக்கோயில்: கொகுடி என்பது ஒரு வகை முல்லை. நெருங்கி அடர்ந்து வளர்ந்த முல்லைக் கொடிப் பந்தர்ப் பரப்பின் இடையில் அமைக்கப்பெற்ற கோயில். திருக்கருப்பறியல் என்னும் தலத்தின் கோயில் 'கொகுடிக்கோயில்' எனப்பெற்றது.

(5) இளங்கோயில்: இதைச் சில அறிஞர்கள் 'பாலாலயம்' எனக் கூறுகின்றனர். ஒருசிலர் இளங்கோயில் என்பது திருவுண்ணாழி (கர்ப்பக்கிரகம்) மட்டும் அமைந்த கோயில் என்பர். இவைகள் பின்னே பெரிதாக வளரக்கூடிய நிலையில் அமைக்கப் பெற்றவை. மீயச்சூர்க் கோயில், 'இளங்கோயில்' எனப்பெற்றது.

(6) மணிக்கோயில்: இது வண்ணம் தீட்டிய, சிற்பங்களுடன் கூடிய, அழகிய சுதை வேலையுள்ள கோயிலாகும். திருவதிகைக் கோயில் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு என்பர். பெரிய கோயில்களில், உருத்திராக்கம் போன்ற மணிகளினால் அமைக்கப்பெறும் சிறு சந்நிதிகளே, மணிக்கோயில் எனவும் சிலர் கூறுவதுண்டு. இதனைத் 'திருமுறைக் கோயில்' என்றாற்போலக் கொள்ளலாம்.

(7) ஆலக்கோயில் : நாற்புறமும் நீர் சூழ்ந்த இடத்தில் அமையும் கோயில். தஞ்சை வலிவலம், திருப்புகலூர் முதலிய தலங்களின் கோயில்களை இங்கு நினைவுகூரலாம். 'ஆலம்' என்னும் சொல் லுக்கு நீர் சூழ்ந்த இடம் எனவும் பொருள் உண்டு என்பர். ஒருசிலர் ஆலமரத்தைச் சார்ந்து அமைந்த கோயில் என்பதும் உண்டு. 'கச்சூர் ஆலக்கோயில்' என்பது தேவாரம்.

(8) மாடக்கோயில் : யானைகள் ஏற இயலாத வாறு படிகள் பல கொண்ட, உயரமான இடத்தில் கருவறை அமைந்த கோயில்கள். கோச்செங்கணான் என்னும் சோழப் பேரரசன், இத்தகைய பல கோயில்களைக் கட்டுவித்தான் என்பது வரலாறு. 'வைகல் மாடக்கோயில்' என்பது இவற்றுள் ஒன்று.

(9) தூங்கானை மாடக்கோயில் : தூங்குகின்ற யானையின் பின்புறம் போன்ற அமைப்பில் கட்டப் பட்ட கோயில்கள். இதனைக் 'கஜப்பிருஷ்டம்' என்பர். திருப்பெண்ணாகடம் கோயில், தூங் கானை மாடக்கோயில் என்று தேவாரம் குறிப் பிடுகின்றது. மற்றும் திருவாரூர்க் கோயில் பூங் கோயில் (கமலாலயம்) என்றும், திருவீழிமிழலைக் கோயில் 'விண்ணிழி கோயில்' என்றும் குறிப்பிடப் பெறுகின்றன.

பஞ்சபூதத் தலங்கள்

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களைப் பொது வாகப் பஞ்சபூதத் தலங்கள், அட்டவீரட்டத் தலங்கள், சப்தவிடங்கத் தலங்கள், ஆறுபடை வீடுகள் என்று பலவகைகளில் தனித்தனியாகத் தொகுத்துச் சிறப்பித்துக் குறிப்பிடுவதுண்டு. பஞ்ச பூதங்களாவன, உலகின் இயக்கத்திற்கு இன்றி யமையாத நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐந்து மாகும். இவற்றை முறையே பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்பர். பஞ்சபூதத் தலங்களுள், காஞ்சிபுரமும் திருவாரூரும் பிருதிவித்தலம்; திரு வானைக்கா அப்புத்தலம்; திருவண்ணாமலை தேயுத் தலம்; திருக்காளத்தி வாயுத்தலம்; சிதம்பரம் ஆகாசத்தலம் எனப்படும்.

அட்டவீரட்டத் தலங்கள்

அட்டவீரட்டத் தலங்கள் என்பன, சிவபெரு மானால் எட்டு வகையான வீரச் செயல்கள் நிகழ்த் தப்பெற்ற இடங்களாகும். இவற்றைத் திருநாவுக் கரசர் ''அட்டானம் என்று ஓதிய நாலிரண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார். பிரமனின் தலைகொய்த தலம் திருக்கண்டியூர். அந்தகாசுரனை அழித்த தலம் திருக்கோவலூர். திரிபுரத்தை எரித்த தலம் திருவதிகை. தக்கனின் தலைபறித்த தலம் திருப் பறியலூர். சலந்தராசுரனை அழித்த தலம் திரு விற்குடி. கஜாசுரன் என்னும் யானையின் தோலை உரித்து அழித்த தலம் வழுவூர். காமதகனம் செய்த தலம் திருக்குறுக்கை. காலனைக் காலால் கடிந்த தலம் திருக்கடவூர்.

''பூமன் சிரம்கண்டி; அந்தகன்
கோவல்; புரம்அதிகை;
மாமன் பறியல்; சலந்தரன்
விற்குடி; மா வழுவூர்;
காமன் குறுக்கை; எமன்கடவூர்;
இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும்
சூடிதன் சேவகமே.''

சப்தவிடங்கத் தலங்கள்

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாரூர், திருநள் ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறாயில், திருக் கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என்னும் ஏழு தலங்களும் சப்தவிடங்கத் தலங்கள் என்று கூறப் படும். இவை தியாகராசப் பெருமானுக்குரிய தலங் களாகும். இவற்றில் எழுந்தருளியுள்ள தியாக ராசர்க்கு, முறையே தனித்தனி பெயரும், நடன மும் உண்டு. **(1) திருவாரூர் :** வீதிவிடங்கர், அசபா நடனம்; மேலும் கீழுமாக ஏறி இறங்கியும், முன் னும் பின்னுமாகச் சென்றுவந்தும் அடியவர்கள் மந்திரங்களை வாய்விட்டு உச்சரிக்காமல், மானசீகமாகச் செபிக்கின்ற நிலையில், அவர்களின் உள்ளத்தில் மகிழ்ந்திருந்து இறைவன் ஆடுவது போன்ற நடனம். **(2) திருநாகைக்காரோணம் :** சுந் தரவிடங்கர். பாராவாரதரங்க நடனம்; கடல் அலைகளின் அசைவை ஒத்து ஆடும் நடனம். பாரா வாரம்-கடல். தரங்கம்-அலை. **(3) திருநள்ளாறு :** நகவிடங்கர், உன்மத்த நடனம்; பித்துக் கொண்ட வன் தலைசுற்றி ஆடுவதுபோல ஆடும் நடனம். உன்மத்தம் - பித்துத் தன்மை. **(4) திருமறைக்காடு :** புவனிவிடங்கர், அம்சபாத நடனம்; அம்சம்-அன்னம், பாதம்-கால், காலடி; அன்னம் நடப்பது போன்று ஆடும் நடனம். **(5) திருக்காறாயில் :** ஆதிவிடங்கர், குக்குட நடனம்; குக்குடம் - கோழி. கோழி நடப்பதுபோல் ஆடும் நடனம். **(6) திருவாய்மூர் :** நீலவிடங்கர், கமல நடனம்; நீர் நிறைந்த குளத்தில் ஒற்றைத் தாளில் நிற்கும் தாமரை மலர், காற்றால் தள்ளுண்டு மெல்லென ஆடு வதுபோன்ற நடனம். கமலம் - தாமரை மலர். **(7) திருக்கோளிலி :** அவனிவிடங்கர், பிருங்க நடனம்; மலர்களுக்குள் வண்டு குடைந்து சென்று ஆடுவது போன்ற நடனம். பிருங்கம் - வண்டு.

''சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில்—பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.''

பிள்ளையார் கோயில்கள்

நமது தமிழகத்தில் பிள்ளையார் கோயில்கள் இல்லாத இடங்களே இல்லை. ஒவ்வொரு சிற்றூரி லும், பட்டி தொட்டிகளிலும், தெருவின் மூலை முடுக்குகளிலும், சாலை சந்திகளிலும், ஆற்றங் கரைகளிலும், குளக்கரைகளிலும், ஆலமரத்தடி களிலும், அரசமரத்தடிகளிலும் ஏராளமான பிள்ளையார் கோயில்கள் உள்ளன. பிள்ளையார் கோயில்களில், பிள்ளையார்பட்டி தேசி விநாயகர், திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர், திருவாரூர் வாதாபி விநாயகர், திருவாரூர் மாற்று உரைத்த விநாயகர், மதுரைச் சித்தி விநாயகர், திரு நாரையூர் - திருவெண்ணெய்நல்லூர் - பொல்லாப் பிள்ளையார், திருப்புறம்பயம் பிரளயம் காத்த பிள்ளையார், திருவீழிமிழலை படிக்காசு விநாயகர், திருக்கடவூர்க் கள்ளவாரணப் பிள்ளையார், காஞ்சி புரம் விகடசக்கர விநாயகர், திருச்சிராப்பள்ளி உச்சிப்பிள்ளையார், திருவையாறு ஓலமிட்ட விநாயகர் முதலிய பல பிள்ளையார் சந்நிதிகள் மிகவும் புகழ் பெற்றவை.

முருகன் கோயில்கள்

தமிழகத்தில் எத்தனையோ பல திருத்தலங்களும் கோயில்களும் முருகனுக்கு உரியனவாக மிகவும் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. அவற்றுள் திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திரு ஆவிநன்குடி (பழநி), திருவேரகம் (சுவாமி மலை), குன்றுதோறாடல் (திருத்தணிகை, கதிர்காமம்......), பழமுதிர்சோலை (அழகர் கோயில்) என்னும் திருத் தலங்கள், திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் காலத்தில் இருந்தே, சுமார் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக, முருகனின் புகழ்மிக்க தலங்களாகப் போற் றப் பெற்று விளங்குகின்றன. தமிழகத்தில் பெரும் பாலான கிராமங்களில், ஏராளமான முருகன்கோயில் கள் உண்டு. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாடல்களைப் பெற்றுள்ள திருத்தலங்கள் அனைத் தும், முருகனின் தலங்களாகப் பெரிதும் புகழ்பெற்று விளங்கிவருகின்றன.

அம்பிகையின் தலங்கள்

இவ்வாறே திருவொற்றியூரில் வடிவுடையம்மை, திருமயிலையில் கற்பகாம்பாள், திருக்கழுக்குன்றத் தில் திரிபுரசுந்தரி, காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மை, திருவண்ணாமலையில் உண்ணாமுலையம்மை, சிதம் பரத்தில் சிவகாமியம்மை, திருவானைக்காவில் அகிலாண்டேசுவரி, திருக்கடவூரில் அபிராமியம்மை, திருக்காளத்தியில் ஞானப்பூங்கோதை, திருவையாற் றில் அறப்பெரும்செல்வியம்மை (தருமாம்பாள்), திருவாரூரில் கமலாம்பிகை, நாகப்பட்டினத்தில் நீலாயதாட்சி, திருநள்ளாறில் போகமார்த்த பூண் முலையம்மை, திருநெல்வேலியில் காந்திமதியம்மை, வைத்தீசுவரன் கோயிலில் தையல்நாயகியம்மை, மதுரையில் மீனாட்சியம்மை, இராமேசுவரத்தில் மலைவளர்காதலியம்மை, கன்னியாகுமரியில் பகவதி யம்மை, திருவேற்காட்டில் தேவி கருமாரியம்மை, சமயபுரம் மாரியம்மன், தில்லைக்காளியம்மன், கோயமுத்தூர்க் கோனியம்மன், காரைக்குடிக் கொப் புடையம்மன், திருமுல்லைவாயில் பச்சையம்மன் முதலிய புகழோங்கிய அம்பாள் திருக்கோயில்கள், தமிழகத்தில் சிறப்பாக விளங்கி வருகின்றன.

கூத்தப்பெருமான் கோயில்கள்

தமிழகத்திலுள்ள எல்லாச் சைவக் கோயில்களி லும் கூத்தப் பெருமானுக்கென்று தனிச் சந்நிதி கள் இருப்பினும், கூத்தப் பெருமானுக்கென்றே தனிச்சிறப்புமிக்க சில கோயில்கள் உண்டு. அவற் றைப் பஞ்ச சபை என்பர். இவை புகழ்மிக்க கூத்தப் பெருமான் (நடராசர்) கோயில்கள் ஆகும். திருவாலங்காடு — **இரத்தின சபை,** சிதம்பரம் — **கனக சபை** (பொன்னம்பலம்), மதுரை — **இரசித சபை** (வெள்ளியம்மபலம்), திருநெல்வேலி' — **தாமிர சபை,** திருக்குற்றாலம் — **சித்திர சபை.** கூத்தப்பெருமான் இயற்றும் தாண்டவங்கள் பலவகைப்படும். அத் தாண்டவங்களுள் ஒவ்வொன்றிற்கும் உரிய சிறப் புத்தலம் உண்டு. தில்லைச் சிதம்பரம் ஆனந்தத் தாண்டவம், திருவாரூர் அசபா தாண்டவம்; மதுரை ஆலவாய் ஞானசுந்தரத் தாண்டவம்; திருவாலங் காடு ஊர்த்துவ தாண்டவம்; திருமுருகன்பூண்டி பிரம தாண்டவம்; திருப்புத்தூர் கவுரி தாண்டவம்.

பரிவாரத் தலங்கள்

தமிழகக் கோயில்களின் அமைப்பில், திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமியின் கோயில், ஒருவகை யில் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தது. திருவிடை மருதூர்க் கோயில் கருவறையாக அமைந்திருக்க, அதனைச் சுற்றிச் சூழ்ந்துள்ள பல கோயில்கள், அதற்குப் பரிவார தேவதைகளின் கோயில்களாகக் கொள்ளத்தக்க முறையில் சிறப்புற அமைந்துள்ளன. அதனால், திருவிடைமருதூர்க் கோயிலிலுள்ள இறைவனுக்கு மகாலிங்கம் என்னும் சிறப்புப் பெயர் வழங்கி வருகின்றது. பரிவாரத் தெய்வங்களும், அவற்றிற்குரிய தலங்களும் வருமாறு:

(1) விநாயகர் — திருவலஞ்சுழி.

(2) முருகர் — சுவாமிமலை.

(3) நந்திதேவர் — திருவாவடுதுறை.

(4) சண்டிகேசுவரர் — திருச்சேய்ஞலூர்.

(5) நடராசர் — சிதம்பரம்.

(6) தியாகராசர் — திருவாரூர்.

(7) தட்சிணாமூர்த்தி — ஆலங்குடி.

(8) வைரவர் — சீர்காழி.

(9) அம்பிகை—திருக்கடவூர்.

(10) சூரியன்—சூரியனார்கோயில் (ஆடுதுறை).

(11) சனி பகவான்—திருநள்ளாறு.

ஆதாரத் தலங்கள்

நம்முடைய உடலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, பிரமரந்திரம், துவாதசாந்தம் என்னும் ஆதார நிலையங்கள் உள்ளன என்றும், அவ்வவ்விடங்களில் இறைவனை உள்முகமாக நோக்கித் தியானித்து வழிபடும் முறைகள் இவ்விவை என்றும், அவற்றால் விளையும் சித்திகள் மற்றும் ஆன்மிக நலங்கள் இன்னின்னவை என்றும் யோக நூல்கள் மிக விரிவாக விளக்கிக் கூறுகின்றன. அவ்வமைப்பினையொட்டி, அதற்குப் பொருந்துமாறு, பின்வரும் தலங்களில் கோயில்கள் அமைந்திருக்கின்றன. **மூலாதாரம்** திருவாரூர், **சுவாதிட்டானம்** திருவானைக்கா, **மணிபூரகம்** திருவண்ணாமலை, **அநாகதம்** சிதம்பரம், **விசுத்தி** திருக்காளத்தி, **ஆக்ஞை** காசி, **பிரமரந்திரம்** கயிலை, **துவாதசாந்தம்** மதுரை. பரஞ்சோதி முனிவர், தமது திருவிளையாடற் புராணத்தில், இவ்வாதாரத் தலங்களை அழகுறக் குறிப்பிட்டு விளக்குகின்றார்:

''திருவளர் ஆரூர் மூலம்,
திருவானைக் காவே குய்யம்,
மருவளர் பொழில்சூழ் அண்ணா
மலைமணிப் பூரம், நீவிர்
இருவரும் கண்ட மன்றம்
இதயமாம், திருக்கா ளத்தி
பொருவரும் கண்டம் ஆகும்,
புருவமத் தியமாம் காசி'' (1)

''பிறைதவழ் கயிலைக் குன்றம்
பிரமரந் திரமாம், வேதம்
அறைதரு துவாத சாந்தம்
மதுரை, ஈது அதிகம்...'' (2)

சித்தர்கள் வாழும் தலங்கள்

தமிழகத்தில் உள்ள தலங்கள் பலவற்றில், சித்தர்கள் பற்பலர் பண்டும் இன்றும் என்றும் வாழ்ந்து வருகின்றனர் என்று பெரியோர்கள் கூறுவர். பல தலங்கள் தெய்விகச் சிறப்பும், ஆற்றலும் பெற்றுத் திகழ்ந்தோங்கி விளங்குவதற்குக் காரணம், அவ்விடங்களில் சித்தர்கள் பலர் சமாதிகூடித் தவம் புரிந்து வருவதேயாகும் என்பர். அதன்படி திருமூலர் சிதம்பரத்திலும், திருநந்திதேவர் சீர்காழியிலும், தன்வந்திரி வைத்தீசுவரன் கோயிலிலும், கமலமுனி திருவாரூரிலும், சட்டைமுனி திருவரங்கத்திலும், கருவூர்த்தேவர் கருவூரிலும், போகர் பழநியிலும், சுந்தரானந்தர் மதுரையிலும், மச்சமுனி திருப்பரங்குன்றத்திலும், கும்பமுனி திருவனந்தபுரத்திலும், கோரக்கர் திருப்பருப்பதத்திலும், குதம்பைச் சித்தர் திருக்கழுக்குன்றத்திலும், அகப்பேய்ச் சித்தர் திருமுதுகுன்றத்திலும், பாம்பாட்டிச் சித்தர் திருக்கடவூரிலும், கவரிமான் சித்தர் திருக்காளத்தியிலும், பதஞ்சலி முனிவர் இராமேசுவரத்திலும், இடைக்காட்டுச் சித்தர் திருவண்ணாமலையிலும், இராமதேவர் அழகர்மலையிலும், வான்மீகி முனிவர் எட்டிகுடியிலும் சமாதிகொண்டு வாழ்ந்து வருகின்றனர் என்று அத் தலங்களின் பெருமையை அறிஞர்கள் புகழ்ந்து கூறுவர்.

திருமால் தலங்கள்

நம் தமிழ் நாட்டில், ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற கோயில்கள், 82 உள்ளன. இவற்றுள் காஞ்சிபுரத்தில் மட்டும் அட்டபுயகரம், திருவூரகம், திருக்கச்சி, திருக்கள்வனூர், திருக்கார்வானம், திருக்காரகம், திருத்தண்கா, நிலாத்திங்கள் துண்டம், திருநீரகம், பரமேச்சுரவிண்ணகரம், திருப்பாடகம், திருப்பவளவண்ணம், திருவெஃகா, திருவேளுக்கை என்னும் 14 தலங்கள் உள்ளன.

''ஈரிருப தாம்சோழம், ஈரொன்ப
தாம்பாண்டி,
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு, ஓரிரண்டாம்
— சீர்நடுநாடு
ஆறொடுஈரெட்டு தொண்டை, அவ்வடநாடு
ஆறிரண்டு,
கூறுதிரு நாடுஒன்றாக் கொள்.''

தமிழ்நாட்டில் திருவல்லிக்கேணி, திருவகீந்திரபுரம், திருவரங்கம், திருஎவ்வுளூர் (திருவள்ளூர்), திருக்கச்சி அத்திகிரி, திருக்கடிகை (சோளிங்கபுரம்), திருக்கண்ணங்குடி, திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை, திருக்குடந்தை (சாரங்கபாணி கோயில்), திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி), திருக்குறுங்குடி, திருக்கூடல் (மதுரை), திருக்கோட்டியூர், திருக்கோவலூர், தில்லைத் திருச்சித்திரக்கூடம், திருநறையூர் (நாச்சியார் கோயில்), திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில்), திருவில்லிபுத்தூர், திருவேங்கடம் முதலிய திருமால் தலங்கள் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

திருமால் சந்நிதியுள்ள சிவன் கோயில்கள்

தமிழகத்தின் இரண்டு கண்களைப் போன்று, சைவம், வைணவம் என்னும் இரு சமயங்களும் விளங்கி வருகின்றன. ஆதலின் சைவ, வைணவ சமரச உணர்வை விளக்கும் முறையில், பல சைவர் கோயில்களில் திருமால் சந்நிதிகள் உள்ளன. திருவோத்தூர் ஆதிகேசவப் பெருமாள், கச்சி ஏகம்பம் நிலாத்துண்டப் பெருமாள், கொடிமாடச் செங்குன்றூர் ஆதிகேசவப் பெருமாள், சிதம்பரம் கோவிந்த

ராசப் பெருமாள், சிக்கல் கோலவாமனப் பெருமாள், திருநணா (பவானி) ஆதிகேசவப் பெருமாள், திரு நாவலூர் வரதராசப் பெருமாள், திருநெல்வேலி நெல்லைக் கோவிந்தர், திருப்பழனம் வேணுகோபா லர், திருப்பாண்டிக் கொடுமுடி அரங்கநாதர், திருச் செந்தூர் அரங்கநாதர், திருப்புத்தூர் இலட்சுமி நாராயணர், திருவக்கரைச் சிவன் கோயிலிலும் திரு மால் சந்நிதி உள்ளது. வைணவத் தலங்களுள், அன்பில், திருவித்துவக்கோடு என்னும் தலங்களில் சிவ சந்நிதிகள் உள்ளன. திருவல்லவாழ் என்னும் திருவெள்ளாவில், திருநீறு பிரசாதமாக வழங்கப் படுகிறது. திருவகீந்திரபுரத்தில் பெருமாளுக்குச் சடைமுடியும் நெற்றிக்கண்ணும் உள்ளன.

கோயில்களும் கலைகளும்

தமிழகக் கோயில்கள் **ஓவியம் காவியம்** என்னும் கலைகளின் நிலைக்களமாகத் திகழ்ந்தன. மாமண் டூர்க் குகைக் கோயில் வெளி மண்டபத் தூண்களி லும், மாமல்லபுரம் ஆதிவராக மண்டபத்தின் விதா னத்திலும், தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறை வெளிச்சுற்றுப் புறச் சுவர்களிலும், நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரம் கோயிலிலும், சித்தன்ன வாசல் முதலிய இடங்களிலும் உள்ள, ஆயிரம் ஆண்டுகட்கும் முற்பட்ட, பழமைமிக்க சிறந்த அழகிய ஓவியங்கள் கண்டு களிக்கத்தக்கவை. ஒவ் வொரு கோயிலுக்கும், அதனைச் சார்ந்த தலத்திற் கும் எனக் கோவை உலா தூது மாலை அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்களும், தல புராணங்களும் போன்ற பன்னூற்றுக்கணக்கான இலக்கியச் செல் வங்களாகிய காவியங்கள், மிகப் பலவாகத் தோன்றி விளங்கி வருகின்றன.

கோயில்களில் **இசைக்கலை** பெரிதும் தழைத் தோங்கி வளர்ந்து வந்தது. ஆழ்வார்களும் நாயன் மார்களும் "நாளும் இன்னிசையால்" தமிழ் பரப்பி வந்தனர். கோயில்களில் வகைவகையான தோற் கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, துளைக்கருவி, ஆகிய இசைக்கலைக் கருவிகள் பயிலப்பெற்றன. குடுமியான்மலைச் சிகாநாதர் கோயிலில் உள்ள மகேந்திரவர்மனின் (கி.பி. 600-630) கல்வெட்டு, இசைக்கலை உண்மைகள் பலவற்றை அறிவிக் கின்றது. மதுரைக் கோயிலின் திருச்சுற்றில் கூத்தப்பிரான் முன்னிலையில் உள்ள தூண் ஒன் றில், 35 வகையான தாளங்கள் குறிக்கப்பெற் றுள்ளன. தேவார நாயகம் தமிழ்விரகர் என்னும் பெயர்களையுடைய அலுவலர்கள் பலர், பண்டைக் காலத்திற் கோயில்களில் அரிய பல சிறந்த பணிகள் ஆற்றி வந்தனர்.

கோயில்களில் இசைத்தமிழேயன்றி, நாடகத் தமி ழும் போற்றி வளர்க்கப்பெற்று வந்தது. கதை தழுவி வரும் **நாட்டிய நாடகம்,** மெய்ப்பொருளாகிய உணர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்தும் **நிருத்தியம்,** தாளத்தை அடிப்படையாகக் கொண்ட **நிருத்தம்,** இவற்றோடு தொடர்புடைய **கவுத்துவம்** முத லியன கோயில்களில் போற்றி வளர்க்கப்பட்டன. திருவண்ணாமலை, சிதம்பரம், தஞ்சாவூர் முத லிய கோயில்களில், சிவபிரான் ஆடியருளும் தாண் டவத்தின் 108 கரண வகைகள் சிற்பமாக வடித் துத் தரப்பெற்றுள்ளன. கோயில்களில் ஆடரங்கும் நாடக சாலைகளும் இருந்தன. இசையிலும் நாட கத்திலும் வல்ல நாடகமாராயன், சாக்கைக் கூத்தன், கானம்பாடி, வாத்தியமாராயன் முதலி யோர் பலர் இருந்தனர்.

நம்முடைய முன்னோர்களின் வரலாற்றுச் செய்திகள், ஆட்சிமுறைகள் முதலியவற்றை அறிந்துகொண்டு நாம் பயன்பெறுவதற்கும் கோயில்கள் பெரிதும் துணை புரிகின்றன. கோயில் களில் காணப்பெறும் பல்லவர் சோழர் பாண்டியர் ஆகிய அரசர்கள் பற்பலரும் அமைத்து வைத்த பல்லாயிரக்கணக்கான **கல்வெட்டுகள்,** பண்டைக் காலத்தில் சமயம், சமுதாயம், வரலாறு, இலக்கி யம், மக்களின் வாழ்க்கை நிலை, பழக்க வழக்கப் பண்பாடுகள் முதலியவற்றை அறிவித்து உதவும் பெரும் சான்றுகளாக நின்று நிலவுகின்றன. உத்தர மேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள முதலாம் பராந்தக சோழனின் (கி.பி. 919-921) கல்வெட்டுகள் இரண்டு, இந்நாளிற் போல ஊராட்சி முறை, வாரியங்கள், ஊராட்சித் தேர்தல் முறை, உறுப்பினர் ஆதற்குரிய தகுதிகள், உறுப்பினர் ஆக விரும்புபவர்பால் இருக்கக்கூடாத குற்றங்கள் என்பனவற்றைப்பற்றிய செய்திகளை எல்லாம் தெளிவுற விளக்குகின்றன.

கோயில்களில் புராணங்கள் முதலிய இலக்கியங் களைப் படித்து விளக்கும் பட்டி மண்டபம், நடன மண்டபம், நாடக மண்டபம், தருக்க மண்டபம் முதலியவை இருந்தன. திருவொற்றி யூர்க் கோயிலில் **வியாகரணதான வியாக்கியான மண்டபம்** என ஒன்று இருந்ததாகக் கல்வெட் டுக் கூறுகின்றது. இவற்றிலெல்லாம் பல்வேறு கலைகளும் நூல்களும் பயிலவும் ஆராயவும் பரப் பவும் பெற்றுவந்தன. பண்டைக் காலத்தில்

கோயில்கள், பல்வேறு கலை நூல்களையும் ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்துப் பாதுகாக்கும் நூலகங்களாகவும், விற்றல் வாங்கல் முதலியவற்றிற்குரிய பத்திரப் பதிவுகள் செய்யும் ஆவணக் களரிகளாகவும் பயன்பட்டு வந்தன. இவை **சரசுவதி பண்டாரம், திருக்கைக்கோட்டி** என்னும் பெயர்களைப் பெற்றிருந்தன.

பொதுமக்களின் குறைகளைக் கேட்டு விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் **நீதிமன்றங்களாகவும்** கோயில்கள் பணியாற்றி வந்தன. சுந்தரர்க்கும் இறைவனுக்கும் நேர்ந்த வழக்கு திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலிலும், நீலி என்பவளுக்கும் வணிகன் ஒருவனுக்கும் நேர்ந்த வழக்கு பழைய னூர்த் திருவாலங்காட்டுக் கோயிலிலும் விசாரிக்கப்பெற்றன என்னும் இலக்கியச் செய்திகள் இங்கு நாம் நினைவுகூரத்தகும். திருமாற்பேறு, கூகூர், திருவெறும்பியூர், திருப்பனந்தாள் முதலிய தலங்களின் கல்வெட்டுகளும், கோயில்கள் பண்டை நாளில் நீதிமன்றங்களாகத் திகழ்ந்து வந்த செய்தியினை உணர்த்துகின்றன.

கோயில்கள், பண்டைக்காலத்திற் பலவகை அறச் செயல்கள் நடைபெறுதற்குரிய நிலைக்களமாக இருந்தன. கோயில்களை அடுத்துப் பல திருமடங்களும், அறச்சாலைகளும் தோன்றி நடைபெற்று வந்தன. **திரிபுவனம், எண்ணாயிரம், திருமுக்கூடல், பாகூர்** முதலிய இடங்களில் சிறந்த **கல்வி நிலையங்கள்** அமைந்திருந்தன; அவற்றில் பயிலும் மாணவர்களுக்கு இலவச உண்டி உறையுள் வசதிகளும் மிகப் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மக்களின் மலப்பிணிப்பை அகற்றி, உயிர் நோயைத் தீர்ப்பதற்கென அமைந்த கோயில்களில் அவர்களின் உடற் பிணிகளைத் தீர்த்து உதவுவதற்கும் தக்க வசதிகள் செய்யப்பெற்றிருந்தன. திருமுக்கூடல், திருவாவடுதுறை, திருவாமாத்தூர் முதலிய பல தலங்களில் **மருத்துவ மனைகளும் திக்கற்றோர் இல்லங்களும்** நடத்தப்பெற்றன.

தமிழகக் கோயில்கள், இந்நாளைய நிதிவைப்பு நிலையங்களாகிய **வங்கிகள்** போலவும், பண்டு பொது மக்களுக்குப் பணிபுரிந்து வந்தன. திருப்புத்தூர், குமார மார்த்தாண்டபுரம், காஞ்சி, இராமேசுவரம் முதலிய கோயில்களின் கல்வெட்டுகளால் இவ்வுண்மையை அறியலாம். கோயிலுக்கு வரும் நன்கொடைகளைப் பெறவும், கோயிற் பண்டாரத்திலிருந்து பொருள்களைக் குறித்த வட்டிக்குக் கடன் தரவும், இவற்றின் தொடர்பான பத்திரங்களைப் பாதுகாக்கவும், கோயில் தொடர்புடைய வேலைகள் பலவற்றைக் கவனிக்கவும், அமிர்த கணத்தார் என்னும் குழுவினர் இருந்தனர். இவையெல்லாம் தமிழகக் கோயில்களின் அருமை பெருமைகளை விளக்குவனவாகும்.

வரலாற்றுச் சிறப்புகள்

நமது தமிழகத்தில் மகேந்திரவர்ம பல்லவன் (கி.பி. 600-630) அமைத்த குடைவரைக் கோயில்கள், நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி. 630-660) அமைத்த மாமல்லபுரத்துத் தேர்க்கோயில்கள், இராசசிம்ம பல்லவன் (கி.பி. 685-705) கட்டிய காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், இரண்டாம் பரமேசுவரவர்மன் (கி.பி.705-710) கட்டிய வைகுண்டப்பெருமாள் கோயில், இராசராச சோழன் (கி.பி. 985-1014) எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோயில், இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1044) எழுப்பிய கங்கைகொண்ட சோழபுரம் கோயில், முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1122) அமைத்த மன்னார்குடி இராசகோபாலசுவாமி கோயில், இரண்டாம் இராசராசன் (கி.பி. 1146-1173) அமைத்த தாராசுரம் கோயில், மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1226) தோற்றுவித்த திரிபுவனவீரேச்சுரம் நடுக்கந்தீர்த்தநாதர் கோயில், பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1422-1463) கட்டிய தென்காசிக் கோயில் முதலியன வரலாற்றுப் பெருஞ் சிறப்பு வாய்ந்தவை.

தமிழகக் கோயில்களின் கட்டடக்கலைச் சிறப்பும், சிற்பக்கலை வளனும், **ஜாவா, பாலி, போர்னியோ, பர்மா, மலேயா, இந்தோனேஷியா, சயாம், கம்போடியா, கம்பா** முதலிய கடல் கடந்த அயல் நாடுகளிலும்கூடப் பரவி விளக்கமுற்றன. ஜாவாவிலுள்ள போராபுதூர் (கி.பி. 750-850) புத்தர் கோயிலும், கம்போடியா அங்கோர்தாம் (கி.பி. 802-820) சிவன் கோயிலும், அங்கோர்வாட் (கி.பி. 1110-1150) பெருமாள் கோயிலும், தமிழகக் கோயிற் கட்டடக் கலை, சிற்பக் கலைகளினுடைய வளர்ச்சியின் சிறப்பையும் வளத்தினையும் விளக்குவனவாகும்.

அயலவர் ஈடுபாடு

நமது தமிழகக் கோயில்களை அயல்நாட்டவரும் கண்டு அகம் மிக மகிழ்ந்து போற்றுகின்றனர். ஆட்சன் (Hodgson) என்ற ஆங்கிலேயர், காஞ்சிபுரம் திருவேகம்பர் கோயில் மதிலைச் செப்பனிட்டார். லியோனார்ட் பிளேசு (Leonard Place) என்னும் அயலவர், மதுராந்தகம் பெருமாள் கோயி

லுக்குத் திருப்பணி செய்தார். வில்லியம் காரோ (William Garrow) என்பவர் பவானி சங்கமேசுவரர் கோயில் வேதநாயகி அம்பிகைக்குத் தந்தத்தால் செய்த ஊஞ்சல் ஒன்றை வழங்கி மகிழ்ந்துள்ளார். மதுரைக்கோயில் மீனாட்சியம்மைக்கு ரூஸ் பீட்டர் (Rous Peter) என்னும் வெள்ளையர் தங்கத்தாற் செய்து மணிகள் பதிப்பித்த அங்கவடிகளை(Stirrups) அளித்திருக்கின்றார். கிழக்கிந்தியர் கம்பெனியைச் சேர்ந்த இராபர்ட் கிளைவ் (Robert Clive) நவரத்தின மாலை ஒன்றைக் காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயிலுக்குக் கொடுத்துள்ளார். உலகப் புகழ்பெற்ற சாமர்செட் மாம் (Somerset Maugham) என்னும் புதின நூல் ஆசிரியர், தாம் மதுரைக் கோயிலைக் கண்டு வியந்து, விம்மிதமுற்றதாகத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய செய்திகளால் தமிழகக் கோயில்களின் சிறப்பும் பெருமையும் புலனாகும்.

தமிழகக் கோயில்களின் மாட்சி

கோயில்கள் என்பன வெறும் கட்டடங்கள் அல்ல. கோயில்களின் அமைப்பு முறைகள், எத்தனையோ பல தத்துவ நுட்பங்களையும், யோகஞான அனுபவச் செய்திகளையும் உட்கொண்டனவாகத் திகழ்கின்றன. பண்டைய நம் தமிழ்ச் சான்றோர்களாகிய திருமூலர் போன்ற தவஞானயோகச் செல்வர்கள்,


''உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்.
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்.
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்,
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே!''

என்பன போன்ற பாடல்களினால், கோயில் அமைப்பு முறைகளின் உட்கிடையாக உள்ள தத்துவ நுட்பங்கள் பலவற்றை விளக்கியுள்ளனர்.

முடிவுரை

நமது தமிழகக் கோயில்கள் நமது பழம்பெரும் நாகரிகத்தையும் பண்பாட்டு நலங்களையும் விளக்கிக்கொண்டு நிற்கும் அடையாளங்களாகும். தமிழகக் கோயில்கள் கட்டடக் கலையிலும், சிற்பத் திறனிலும், ஈடும் எடுப்பும் இன்றிச் சிறந்து விளங்குபவை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் புகழ்ந்து பாடித் துதித்தவை. பல்லவரும் சோழரும் பாண்டியரும் போன்ற பேரரசர்கள் பலர், திருப்பணி செய்தனவும், புதிதாக எடுப்பித்தனவும், நன்கொடைகள் பல வழங்கியனவுமாக எண்ணிறந்த கோயில்கள் தமிழகத்தில் உள்ளன. மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவரங்கம், கும்பகோணம், தஞ்சை, மதுரை, இராமேசுவரம் முதலிய எத்தனையோ பல தலங்களிலுள்ள கோயில்கள், இன்றும் நாடோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு மகிழும் மாட்சி உடையனவாகத் திகழ்கின்றன.





பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்.

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார் இயற்றிய இயற்றமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் முதலாக இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறாண்டுகளுக்கு முன் வாழ்ந்த கடைச்சங்கப் புலவர்கள் பாடிய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய சங்க இலக்கியங்கள் ஈறாக நமக்குக் கிடைத்துள்ள பண்டைத் தமிழ் நூல்களில் உலகுயிர்களை இயக்கும் முழுமுதற்பொருள் ஒன்று உண்டு என்னும் இறையுணர்வாகிய தெய்வங்கொள்கையினை வற்புறுத்தும் பகுதிகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. கடவுள் உண்மையினை மறுத்துரைக்கும் இறை மறுப்புக் கொள்கையை வற்புறுத்தும் பகுதி எதுவும் இடம் பெறாமை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தகுவதாகும்.

மனனுணர்வுடைய மக்கட்குலத்தாரால் உள்பொருள்களாக மதித்து எண்ணப்பெற்று வரும் உலகம், உயிர், கடவுள் என்னும் முப்பொருள்களுள் உயிர்த்தொகுதிகளின் வாழ்வுக்கும் ஐம்புல நுகர்ச்சிக்கும் நிலைக்களமாய்க் காணப்பட்டு இயங்கிவரும் உலகின் உண்மையை மட்டும் உடன்பட்டு இவ்வுலகின் வேறாக உயிருண்மையையும் இறையுண்மையையும் உடன்படாதோர் உலகாயதர் எனக் கூறப்படுவர். காணப்படும் இவ்வுலகம் என்றும் உள்ள உள்பொருளே எனப் புலனுணர்வின் நுகர்ச்சித் திறத்தால் வற்புறுத்தும் இன்னோரது கொள்கை அறிவின் திறத்தால் தோன்றிய எல்லாச் சமயக்கொள்கைகட்கும் அடிப்படையாயமைந்ததாகும், பொறிகளாற் காணப்படும் உலகின் உண்மையை மட்டும் உடன்பட்டு உலகில் உடம்புடன் பிறந்து நன்றுந் தீதும் ஆகிய இருவினைகளைச் செய்து அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களை நுகரும் உணர்வுடைய வினை முதலாகிய உயிர்களின் உண்மையினை உள்ளவாறு உணரப் பெறாத சமயங்களும் உயிருண்மையைத் தெளிந்து உணர்வற்ற உலகப் பொருள்களையும் உணர்வுடைய உயிர்த்தொகுதிகளையும் உடனிருந்து இயக்கும் பேரறிவும் பேராற்றலும் வாய்ந்த முழுமுதற் பொருளாகிய கடவுளுண்மையை வற்புறுத்தும் சமயங்களும் உலக மக்கள் பன்னூறாண்டுகளாக இவ்வுலக வாழ்வில் நுகர்ந்துணர்ந்த அழுந்திய அறிவின் பயனாக நாட்டிற் படிப்படியாகத் தோன்றி வளர்ந்தன என்பது தமிழ் முன்னோர் கண்டுணர்த்திய சமய வரலாறாகும்.

சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கட் குலத்தார் உலகப் பெரும் பரப்பில் புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளையும் காலந்தோறும் உண்டாகும் புயல் மழை கடல்கோள் முதலிய பலவகை இடையூறுகளையும் கண்டு அஞ்சினர். அவ்வச்சத்தின் விளைவாக எல்லாவுயிர்கட்கும் மேலாக இவ்வுலகினை ஓர் ஒழுங்குபெற நிறுத்திக் காக்கும் பேரருளும் பேராற்றலும் பேரறிவும் உடைய தெய்வம் உண்டு என எண்ணும் எண்ணமும் அத்தெய்வத்தின் துணை பெற்றால் அச்சமின்றி வாழலாம் என்னும் தெளிவும் உடையராய்த் தமது இடர் நீங்க அத்தெய்வத்தை அன்பினால் வணங்கிப் போற்றும் தெய்வ வழிபாட்டினை மேற்கொண்டனர். இவ்வாறு மக்கட்குலத்தார் தெய்வம்

உண்டு என்னுந் தெளிவு பெற்ற காலம் இதுவென நம்மனோரால் வரையறுக்க முடியாத தொல்பழங் காலமாகும்.

> ''அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
> நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ''

என்றவாறு மக்களினத்தாரிடையே முதன்முதல் தோன்றிய அச்சவுணர்வினாலும் காலஞ் செல்லச் செல்ல அவர்கள் உள்ளத்தே தோன்றிய அன்பின் மிகுதியினாலும் உயிர்க்குயிராகிய இறைவன் உண்டு என்னும் உணர்வு தோன்றி நிலைபெற்று வளர்வதாயிற்று. மக்களது சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத முழுமுதற் கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தன் உண்மையினை மக்கள் உணர்ந்து உய்தி பெற வேண்டும் எனத் தன் பேரருளால் நினைத்த அளவிலேயே மக்கள் உள்ளத்தில் தெய்வம் உண்டு என எண்ணும் தெளிவுண்டாயிற்று. அதன் பயனாகத் தெய்வத்திற்குத் திருக்கோயிலமைத்து வழிபடும் வழிபாட்டுமுறையும் தோன்றுவதாயிற்று. தெய்வவுணர்வு தோன்றியதன் பயனாக மக்கள் அமைத்த தொல்பெருங் கோயில்களுள் திருவாரூர்த் திருக்கோயில் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதனைப் புலப்படுத்தக் கருதிய திருநாவுக்கரசர்,

> ''தேசம்உமை யறிவதற்கு முன்னோ பின்னோ
> திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே''

என ஆரூர்ப் பெருமானை முன்னிலையில் வைத்துப் போற்றுகின்றார். இதனால் உலக மக்கள் கடவுள் உண்டு என்பதனை உணராது வாழ்ந்த காலமும் உண்டென்பது புலனாகும்.

மக்கள் மனத்தே இறையுணர்வு தோன்றி நிலை பெற்ற நெடுங்காலத்திற்குப் பின்புதான் 'கடவுள் இல்லை' எனக் கூறும் இறை மறுப்புணர்வு தோன்றியிருத்தல் வேண்டும். கடவுள் உண்டு என நம்பி வாழ்வோர் கூட்டத்தில் கடவுட்கொள்கைக்கு மாறான தீச்செயல்கள் பிற்காலத்திற் பெருகிக் காணப்பட்ட நிலையில் அவர்களது தீச்செயல்களைக் கண்டிக்கப் போந்தோர் அவர்கள் உண்டென நம்பிய கடவுட் கொள்கையினையும் ஒரு சேர மறுத்துரைக்கத் தொடங்கினர். இத்தகைய சூழ்நிலையில் உருவானதே இறை மறுப்புணர்வாகிய இன்மைக் கொள்கையெனக் கருத வேண்டியுளது.

மக்களால் மதிக்கப்பெறும் பொருள்கள் அனைத்தையும் முதல், கரு, உரி என மூன்று திறமாகப் பண்டைத் தமிழ் முன்னோர் பகுத்துரைத்தனர். உயிர் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைந்த நிலமும் பொழுதும் முதற்பொருள் என வழங்கப்பெற்றன. ஓரறிவுயிராகிய புல் முதல் ஆறறிவுயிராகிய மக்கள் ஈறாகவுள்ள உயிர்த்தொகுதிகளும் உயிரல் பொருள்களும் மேற்குறித்த நிலமும் பொழுதுமாகிய முதற்பொருளின் சார்பிற் கருக்கொண்டு தோற்றுவனவாதலாற் கருப்பொருள் என வழங்கப்பட்டன. உயர்திணை மாந்தர்க்கேயுரிய அகமும் புறமும் ஆகிய ஒழுகலாறுகள் உரிப்பொருள் எனப்பட்டன. மக்களினத்தார் வாழும் நிலத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப அவர்தம் உள்ளத்துணர்வுகளும் செயல்முறைகளும் உருப்பெறுவன என்னும் நுட்பத்தினை ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னரே தமிழ்ச் சான்றோர் நன்குணர்ந்து செந்தமிழ்ப் பொருளிலக்கண மரபினை அமைத்துள்ளார்கள்.

மக்கள் வாழும் நிலத்தியல்புக்கு ஏற்ப அவர்தம் மனத்தியல்பாகிய தெய்வங் கொள்கையும் வழிபாட்டு முறைகளும் தோன்றி நிலைபெறுவனவாதலின் தெய்வங் கொள்கையினையும் அவ்வந் நிலத்துக் கருப்பொருள்களுள் ஒன்றாகவே கொண்டு பண்டைத் தமிழ்ச் சான்றோர் இலக்கணம் வகுத்தனர். இந் நுட்பம்,

> ''தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவும் கருவென மொழிப''
>
> (தொல். அகத். 20)

என வரும் தொல்காப்பிய நூற்பாவால் இனிது விளங்கும். காடுறை யுலகமாகிய முல்லை நிலத்தில் மாயோனாகிய திருமால் வழிபாடும், மைவரையுலமாகிய குறிஞ்சி நிலத்தில் சேயோனாகிய முருகன் வழிபாடும், தீம்புனலுலகமாகிய மருத நிலத்தில் வேந்தனைத் தெய்வமாக எண்ணி வழிபடும் வழிபாட்டு முறையும், பெருமணலுலமாகிய நெய்தல் நிலத்தில் கடற்றெய்வமாகிய வருணனது வழிபாடும் தோன்றி நிலைபெற்றன. நிலத்திற்கேற்பத் தோன்றிய இத் தெய்வ வழிபாடுகளை ''மாயோன் மேய'' எனத் தொடங்கும் அகத்திணையியற் சூத்திரத்தில் தொல்காப்பியனார் முறையே குறித்துள்ளார். முல்லை நிலத்து வாழும் கோவலர்கள் தம்மால் மேய்க்கப்பெறும் ஆனிரைகள் பாலாகிய பயனைத் தருதல்வேண்டிக் காயாம்பூ வண்ணனாகிய திருமாலைப் போற்றிக் குரவைக் கூத்தாடுதலும், குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவர்கள் நறுமலரெழுதரு நாற்றம்போல் உயிர்க்குயிராய் உள்நின்று தோன்றும் தெய்வமணமாகிய வெறியினை அறிந்து போற்றும் சிறப்புடைய வேலனையழைத்து வெறியாடச் செய்து செங்காந்தள் நிறத் திருமேனியுடைய சேயோனாகிய முருகனை வழிபடுதலும், மருத நிலத்து வாழும் உழவர் மலர்தலை யுலகிற்கு உயிரெனச் சிறந்த வேந்தனை வழிபட்டு விழாக் கொண்டாடுதலும், நெய்தல் நிலத்தில் வாழும் பரதவர்கள் தமக்கு வலைவளஞ் சுரத்தல்வேண்டிக் கடற்றெய்வமாகிய வருணனை வழிபடுதலும் பண்டைக் காலத்தே தமிழகத்தில் நிகழ்ந்த நானில மக்களின் தெய்வ வழிபாடுகளாகும். மேற்குறித்த வழிபாடுகளோடு

வெற்றி விளைக்குங் கொற்றவையாகிய பழையோள் வழிபாடும் தறுகண்மைமிக்க தமிழ் மறவர்களாற் சிறப்பாக மேற்கொள்ளப்பெற்றது. குறிஞ்சிக் கடவுளாகிய முருகவேள் வழிபாட்டின் சிறப்பினை 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட் டயர்ந்த காந்தள்' என்ற தொடராலும், முல்லை நிலத் தெய்வமாகிய காயாம்பூ வண்ணனாகிய மாயோனது சிறப்பினை 'மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ்ப் பூவை நிலை' என்ற தொடராலும், கொற்றவை வழிபாட்டின் பயனால் உளதாகும் தறுகண் உணர்வினைச் 'சிறந்த கொற்றவை நிலை' என்ற தொடராலும் ஆசிரியர் தொல்காப்பியனார் புறத்திணையியலிற் சிறப்பாக எடுத்துரைக்கின்றார். இங்ஙனம் மக்களால் வழி படப்பெறும் தெய்வத்தினை நில வகையால் வகுத் துக் கூறிய தொல்காப்பியனார், நிலப்பாகுபாடின்றி எல்லா நிலத்துக்கும் உரிய நிலையில் எங்கும் நீக்க மற நிறைந்து விளங்கும் முழுமுதற் பொருளாகிய இறைவனைக் கடவுள் என்ற பெயராற் சிறப்பித்துப் போற்றியுள்ளார்.

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்''
(தொல். மரபியல், 91)

எனவரும் நூற்பாவில் தூய மெய்யுணர்வே இறை வனது திருமேனி யென்றும் அத்தகைய முதல்வன் ஒருவனே யென்றும் தொல்காப்பியர் தெளிவுபடக் குறித்துள்ளார். இவ்வாறே தெய்வப் புலவர் திரு வள்ளுவரும், 'வாலறிவன்' என்ற தொடரால் இறையியல்பினைத் தெளிய விளக்கியுள்ளமை அறி யத் தருவதாகும்.

தொல்காப்பியனார் குறித்த 'கடவுள்' என்னுஞ் சொல் இன்னவுரு இன்ன நிறம் என்று யாவராலும் அறியவொண்ணாத நிலையில் எல்லாத் தத்துவங் களையுங் கடந்து நின்று உலகுயிர்களை இயக்கி யருளும் முழுமுதற் பொருளைக் குறித்து வழங்கும் காரணப் பெயராகும். எல்லாப் பொருள்களையும் அகத்தும் புறத்தும் இயைந்து நின்று இயக்குபவன் இறைவனாதலின் இயவுள் என்ற பெயரும் அம் முதல்வனுக்கு உரியதாயிற்று. இறைவன் என்ற சொல் யாண்டும் பொருள்கள்தோறும் நீக்கமற நிறைந்து விளங்குபவன் என்னும் பொருளுடைய தாய்க் கடவுளைக் குறித்து வழங்கும் காரணப் பெயராகும். எனவே, உலகு உயிர்கள் ஆகிய எல் லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து அவற்றை இயக்கி நின்று எல்லாத் தத்துவங்களையுங் கடந்து அப்பாற்பட்டு விளங்கும் இறையாகிய முழுமுதற் பொருள் ஒன்று உண்டு எனத் தெளிந்து அதனைக் கடவுள், இயவுள், இறைவன் எனப் பல பெயர் களாலும் போற்றி வழிபடுதலைத் தமது கடமை யாகக் கொண்டனர் என்பது தொல்காப்பியம், சங் கச் செய்யுட்கள் ஆகிய தொன்னூல்களால் இனிது புலனாகின்றது. உலகப் பொதுமறையாகத் திருக் குறளை இயற்றியருளிய தெய்வப் புலவர் திருவள்ளு வர் தமக்கு நெடுங் காலத்திற்கு முற்பட்டு வாழ்ந்த தமிழ் முன்னோர் மேற்கொண்டொழுகிய கடவுட் கொள்கையாகிய இறையுணர்வினைத் திருக்குறளின் முதலதிகாரமாகிய கடவுள் வாழ்த்து என்னும் முதல் அதிகாரத்தும், மெய்யுணர்தல் என்னும் முப்பத்தா றாம் அதிகாரத்தும், ஊழ் என்னும் முப்பத்தெட் டாம் அதிகாரத்தும், இடையிடையே ஏனைய அதிகாரங்களிற் சிலவிடங்களிலும் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

கடவுளைக் குறித்து வழங்கும் காரணப் பெய ராகிய 'இறை' என்னுஞ் சொல், வேண்டுதல் வேண் டாமையிலானாகிய இறைவனைப் போன்று குடி மக்கள் எல்லாரிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நடு நின்று அறவோரைக் காத்தும் அறமில்லாதாரை ஒறுத்துத் திருத்தியும் முறை செய்யும் வேந்தனைக் குறித்த பெயராகவும் வழங்கப்பெறுவதாயிற்று.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்''

எனவரும் திருக்குறள் 'இறை' என்னுஞ் சொல்லின் பொருள் அமைதியினை நன்கு புலப்படுத்துகின்றது. தான் அறநெறியிற் சிறிதும் வழுவாதொழுகித் தன் கீழ் வாழும் குடிமக்களைப் பிறர் நலியாமற் பாது காத்தலையும் செய்யும் அரசன், பிறப்பினால் மகனே யாயினும் எல்லார்க்கும் நடுநின்று முறை செய்த லாகிய சிறப்பினால் கண்கண்ட கடவுள் எனவே மக்களால் உயர்த்துப் போற்றப்பெறுவான் என்பது இத் திருக்குறளின் பொருளாகும். 'இறை' என்னும் பெயராற் குறிக்கப்படுவது எப்பொருளிலும் நீக்க மறத் தங்கிய கடவுள் என்னும் முழுமுதற் பொருளே என்பதனையும் இறைனுக்குரிய பெயராகிய இச்சொல்லினால் மன்னனை வழங்குதல் 'திருவுடை மன்னனைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்றவாறு மன்னனை மதித்துப் போற்றும் உபசார வழக்கே என்பதனையும் இத் திருக்குறள் தெளிவு படுத்தல் அறியத் தகுவதாகும்.

உயிர்களின் வாழ்க்கைக்கு நிலைக்களமாய்த் திக ழும் உலகம் என்றும் உள்ள உள்பொருள் என்ப தனை உணர்ந்த பின்னரே உணர்ச்சிவாயில்களாகிய பொறிகள் வாய்ந்த பல்வேறு உடம்புகளும் அவ் வுடம்புகளில் தங்கி வாழும் உணர்வுடைய உயிர்த் தொகுதிகளும் வேறு வேறெனவும், ஐம்பொறியுணர் வுடன் மனவுணர்வும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற உயிரினம் மக்களினமே எனவும் தெளிவாகவுணர்ந்து, வையத்து வாழ்வாங்கு வாழத் தலைப்படும் வாழ்க்கைமுறை மக்கட் குலத்தாரிடையே தோன்றி நிலைபெற்று வளர்வதாயிற்று. உருவுடையதாய் உணர்விலதாகிய உடம்பினை உணர்வுடையதாய் அருவாகிய உயிர் இயக்குகின்றது என்னும் உண்மை

யினை மக்கள் உள்ளவாறு உணரப்பெற்றனர். இங்ஙனம் உயிரும் உடம்பும் பொருட்டன்மையால் வேறு எனப் பகுத்துணரும் மெய்யுணர்வு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழினத்தார் வாழ்வில் தோன்றி அவர்களாற் பேசப்படும் தமிழ்மொழியின் எழுத்தமைப்பிலேயே நிலைபெற்றுவிட்டதென்பது தமிழெழுத்துகளை உயிர் எனவும் மெய் எனவும் வழங்கும் இலக்கணக் குறியீடுகளைத் தம் முன்னோர் கூற்றாகத் தொல்காப்பியனார் எடுத்தாளுதலானும் ''உடம்பும் உயிரும் வாடியக்காலும்'' எனவும், ''சென்ற வுயிரின் நின்ற யாக்கை'' எனவும் வரும் தொடர்களில் உடம்பும் உயிரும் பொருட்டன்மையால் வேறுபட்ட இருவேறு பொருள்கள் என்பதனைத் தம் காலத்தில் வாழும் மக்கள் எல்லோரும் மறுப்பின்றி ஏற்றுக்கொண்ட பொதுக் கொள்கையாகத் தொல்காப்பியனார் குறிப்பிடுதலானும் இனிது புலனாகும்.

இங்ஙனம் உயிரின் உண்மையினை உள்ளவாறு உணர்ந்தோர், உயிர்கள் செய்யும் நன்றும் தீதும் ஆகிய இருவினைகளையும் அவை காரணமாக உயிர்கள் நுகர்தற்குரிய இன்பமும் துன்பமும் ஆகிய வினைப்பயன்களையும் உணர்ந்து, பிறவுயிர்களுக்கு இடர் விளைக்கும் தீவினையை அகற்றி, எவ்வுயிர்க்கும் நல்லனவே புரியும் நல்லுணர்வுடையராய் வாழ்தல் வேண்டும் எனவும் இங்ஙனம் வாழச் செய்த நல்வினையல்லது ஆழுங்காலைப் புணை பிறிதில்லை எனவும் பண்டைத் தமிழ்மக்கள் வினையுணர்வுடையராய் வாழ்ந்தனர் என்பது பண்டைத் தமிழ் இலக்கியங்களால் உணர்த்தப்படும் தமிழரது வாழ்வியல் முறையாகும்.

நல்லவை செய்வோர் நல்வினைப் பயனாகிய நற்பேறுகளையும் தீயவை புரிவோர் தீவினைப் பயனாகிய துன்பங்களையும் எய்துவர் என்பது வினையுணர்வுடைய சமயத்தார் அனைவர்க்கும் ஒப்ப முடிந்த உண்மையாகும். இவ்வுண்மையினையேற்று உலகத்தோடு ஒத்து வாழும் உணர்வின்றி 'நல்வினையின் பயனாக நன்மையும் தீவினையின் பயனாகத் தீமையும் விளைதல் இல்லை' என்று கூறி வினையுணர்வினை மறுத்துரைக்கும் துணிவுடையராய்த் தம் மனம் போனபடி நடக்கும் இன்மைக் கொள்கையாளர் சிலர் நாட்டில் ஆங்காங்கே தோன்றித் தம் கொள்கையைப் பரப்பினர். இன்மைக் கொள்கை மக்களது பொது நல வாழ்வுக்குப் பெரிதும் இடர்விளைப்பதெனவுணர்ந்த பண்டைத் தமிழ்ச் சான்றோர் இன்னோரது கொள்கையிற் சார்ந்து கெடாதவாறு மன்னரையும் குடிமக்களையுந் திருத்தி நன்னெறிப்படுத்தினர்.

சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய 29ஆம் புறப்பாடலில்,

''நல்லதன் நலனுந் தீயதன் தீமையும்
இல்லையென் போர்க்கு இனன்ஆ கிலியர்''

என மன்னனுக்கு மெய்ப் பொருளை அறிவுறுத்துகின்றார்.

'நல்வினையினது பயனாகிய நன்மையும் தீவினையினது பயனாகிய தீமையும் விளைதல் இல்லையென்று இருவினைப் பயன்களை மறுத்துத் தம் மனம் போனபடி நெறி தவறி நடக்கும் கொள்கையாளருடன் உறவுகொள்ளாதொழிக' என மன்னனுக்கு அறிவுறுத்துவதாக அமைந்தது மேற்காட்டிய தொடராகும்.

ஒருவர் செய்த தீவினைப் பயன் அவரது நிழல் போன்று அவரைத் தொடர்ந்து நுகர்விக்கும் என்பதும், அதனது முதிர்ச்சிக்கு ஏற்ப அவர் எடுத்துள்ள இப் பிறப்பளவிலமையாது இனி வரும் பிறப்புகளிலும் தொடரும் என்பதும் வினையுணர்வுக் கொள்கையாளர் அனைவர்க்கும் ஒப்ப முடிந்ததாகும். ஆகவே, வினையுணர்வுக் கொள்கை என்பது மறுபிறப்பு உண்டென்பார் கொள்கையுடன் பிரிவின்றியமைந்த தொடர்புடையதாதல் நன்கு தெளியப்படும்.

''தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவி'' எனவும், ''ஏழுறு கடவுள் ஏத்திய மருங்கினும்'' எனவும் கடவுட் கொள்கையினை வற்புறுத்தும் தொல்காப்பியத்துள், இரு திணை ஐம்பால்களுள் இன்ன பால் என விளங்காத சொற்கள் சிலவற்றை எடுத்துக் கூறி அவை உயர்திணைப் பொருள்மேல் நிகழ்வன என அறிவுறுத்துவது,

''காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.''
(தொல். சொல்-கிளவி. 58)

என வரும் நூற்பாவாகும்.

'காலம் என்பது முன்னும் பின்னும் நடுவுமாகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது மேலும் கீழும் நடுவுமாகி எல்லாவுயிருந் தோற்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சீவன். உடம்பு என்பது மனம் புத்தி ஆங்காரமும் பூத தன்மாத்திரையும் ஆகி வினையினாற் கட்டுப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு. இதனை மூலப்பகுதி எனினும் ஆம். பால்வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியுமாகிய தன்மையை வரைந்து நிற்கும் பரம் பொருள். பூதம் என்பது நிலம் நீர் தீ வளி ஆகாயம்

ஆகிய ஐம்பெரும் பூதம். ஞாயிறு என்பது தீத் திரளாய் உலகு விளக்குவது. திங்கள் என்பது நீர்த் திரளாய் உலகிற்கு அருள் செய்வது. சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்த்துவது, அச் சொல்லினான் இயன்ற மந்திரம் விடம் முதலியன தீர்த்தலின் தெய்வமாயிற்று' என விளக்கங் கூறுவர் தெய்வச்சிலையார்.

''இதன்கண் பால்வரை தெய்வம்'' எனவும் 'வினை' எனவும் அடுத்தடுத்துச் சொல்லப்பட்டன இவை என அறிதல் வேண்டும். ''பால் வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியுமாகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம் பொருள்'' எனத் தெய்வச்சிலையாரும், 'எல்லோர்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமான இரு வினையையும் வகுப்பது' எனச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் பொருள் கூறியுள்ளார்கள். எனவே, தொல்காப்பியனார் குறித்த 'பால்வரை தெய்வம்' என்ற தொடர் இறைவனாகிய முழுமுதற் பொருளையே குறித்து நின்றமை உரையாசிரியரெல்லார்க்கும் உடன்பாடாதல் புலனாம். இனி, இத் தொடரை யடுத்து 'வினை' எனச் சுட்டப்பட்டது 'ஊழ்' என்பது எல்லாவுரையாசிரியர்க்கும் ஒத்த முடிபாகும்.

''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப''

எனவரும் களவியிற் சூத்திரத்தில் பாலின் இயல்பினையும் அதன் வகையினையும் அதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு நிகழும் தெய்வத்தின் ஆணையினையும் தொல்காப்பியனார் தெளிவாக விரித்துக் கூறியுள்ளார். உயிர்களைப் பிறப்புத்தோறும் அன்பு காரணமாக ஒன்றுபடுத்துவதும் அன்பின்மை காரணமாக வேறுபடுத்துவதும் எனப் பால் (ஊழ்) இருவகைப்படும் என்றும், அவற்றுள் ஒன்றுவித்தலால் உயர்ந்த பாலின் வழி நிகழும் (இறைவனது) ஆணையால் உருவும் திருவும் பண்பும் முதலிய நலங்களால் ஒப்புடைய தலைமகனும் தலைமகளும் ஓரிடத்து எதிர்ப்படுவர் என்றும் மேற்காட்டிய களவியற் சூத்திரம் அறிவுறுத்துகின்றது. இங்குத் தொல்காப்பியனார் குறித்த இருவகைப் பால்களுள் ஒன்றுவிக்கும் பாலினை ஆகூழ் என்றும் வேறுபடுத்தும் பாலினைப் போகூழ் என்றும் ஊழ் என்னும் அதிகாரத்துள் திருவள்ளுவர் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். இக் குறிப்பினை ஒப்பிட்டு நோக்குங்கால் 'ஒன்றே வேறே என்று இருபால்' எனத் தொல்காப்பியர் குறித்தது ஆகூழ் போகூழ் என்னும் இருவகை ஊழினையே என்பது இனிது புலனாகும். எனவே, பால் வரை தெய்வம் என்ற தொடர்க்கு 'எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது' எனச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறிய பொருளே தொல்காப்பியனார் கருத்தினை உள்ளவாறு புலப்படுத்துவதாதல் காணலாம்.

'பால் வரை தெய்வம்' என்னும் தொல்காப்பியத் தொடர் 'பால்' என்பது வேறு, அதனை வரைந்து நுகரச் செய்யும் 'தெய்வம்' என்பது வேறு என்னும் மெய்ம்மையினை விளக்குவதாகும். தெய்வத்தால் வகுக்கப்பெறும் முறைமையே பால், வகை, ஊழ் என்னுஞ் சொற்களால் வழங்கப்படும். இந் நுட்பத்தினை,

''வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது''

என வரும் திருக்குறளில் திருவள்ளுவர் தெளிவாக அறிவுறுத்தியுள்ளமை காணலாம். ஊழ்வினையாகிய வினைப்பயன் தானே உருவெடுத்து வந்து வினை செய்தாரைப் பற்றி நுகர்விக்கும் உணர்வும் ஆற்றலும் உடையதன்று எனவும், உலகத்து எல்லாப் பொருள்களையும் ஓர் ஒழுங்குபெற வகுத்து இயக்கி நிற்கும் மெய்யுணர்வுப் பொருளாகிய இறைவன் வகுத்த முறைமைதானே ஊழ் எனப்படும் எனவும் தெளிவுபடுத்தக் கருதிய திருவள்ளுவர், 'வகுத்தான் வகுத்த வகை' என்ற தொடரால் ஊழ்வினையாவது இதுவென விளக்கியுள்ளார். இத் தொடரில் உள்ள 'வகுத்தான்' என்னும் சொல் உலக முதல்வனாகிய இறைவனையும் 'வகுத்த, வகை' என்றது இன்ன வினை செய்தார் இன்ன பயனை நுகர்தற்குரியர் என அவ்விறைவனால் வகுக்கப்பட்டு வரும் நியதியாகிய ஊழினையும் குறிப்பதாகும். பகுத்தது பால் என வழங்கினாற் போல வகுத்தது வகை என்று ஆயிற்று.

ஒருவர் செய்த நல்வினையின் பயனாகிய இன்பத்தை மற்றொருவர் கவர்ந்து கொள்ளாதபடியும் தாம் நுகர்தற்குரிய தீவினையின் பயனாகிய துன்பத்தை நெகிழவிட்டுத் தப்பி ஓடாதபடியும் அவரவர்களாற் செய்யப்படும் இருவினைப் பயன்களை அவ்வவ்வினைகளைச் செய்த அவரவர்களே நுகரும்படி அரசன் ஆணைபோல் வரையறுத்து நடத்துவது இறைவனது ஆணையாகும். இறைவனது ஆற்றலாகிய ஆணை அவ்வவ்வுயிர்களின் இருவினைப் பயன்களை முன்னிட்டு அவ்வச் செயல்களை நிகழ்த்துவதாகலின், உயிர்கள் செய்த வினையின் பயனாகிய ஊழினைக் கருவியாகக் கொண்டு நிகழும் இறைவனது ஆற்றலாகிய சத்தியினைப் 'பாலது ஆணை' என்றார் தொல்காப்பியனார். பால், ஊழ், வகை, நியதி, விதி என்பன ஒரு பொருட் கிளவி. ஒருபாற் கோடாது நடுவு நிலையில் நின்று நீதி வழங்கும் அரசனது அரசியல் முறையாகிய ஆணை நிகழாதொழியின் எளியோர் பொருளை வலியோர் கவர்ந்துகொள்வர். அதுபோல எல்லாவுயிர்கட்கும் பொருந்த எல்லாப் பொருள்களையும் வகுத்தளித்து இயக்கும் உலக முதல்வ

னாகிய இறைவனது ஆணையென்னும் முறைமை நிகழாதாயின் ஒருவர் செய்த நல்வினையின் பயனை மற்றவர் கவர்ந்துகொள்ளவும் தாம் செய்த தீ வினைப் பயன் தம்மைப் பற்றி வருத்தாதவாறு தப்பியோடவும் இடம் ஏற்படும். செய்தாரை நாடிச் சென்று தன் பயனை நுகர்விக்கும் உணர்வும் ஆற்றலும் இருவினைக்கு இல்லை. நாம் செய்த நன்மையோ தீமையோ ஆகிய இருவினைப் பயன்களையும் நாம்தான் நுகர வேண்டும். தெளிந்த நல்லுணர்வுடன் தாம் செய்த இருவினைப் பயன்களைத் தெரிந்து எடுத்து நுகரும் ஒட்பமும் உணர்வும் சிற்றறிவுடைய உயிர்த்தொகுதிக்கு இல்லை.

நாடாள் வேந்தன் தனது ஆணையைத் தன் கீழுள்ள அதிகாரிகள்பால் வைத்து அவர்களைக் கொண்டு அவ்வத் தொழில் நிகழுமாறு செய்வித்தல் போலவே எல்லாம் வல்ல இறைவனும் தனது ஆணையாகிய முறைமையை உயிர்கள் செய்த இருவினையின்மேல் வைத்து இருவினைப் பயன்களைச் செய்த உயிர்களே நுகரும்படி செய்வன் என்பதனைப் 'பால் வரை தெய்வம்' என்ற தொடரால் அறிவுறுத்துவர் தொல்காப்பியர். உழவர் செய்யும் உழவுத் தொழிலுக்குத் தக்க பயனை விளை நிலம் விளைவிப்பதன்றி அவ்வுழவுத் தொழில் தானே விளைவிக்கமாட்டாது. அதுபோலவே உணவும் விதையும் ஆகத் தொடர்ந்து வரும் வினைப் பயன்களை வினை செய்த உயிர்களோடு கூட்டி நுகர்விப்பவன் உலக முதல்வனாகிய இறைவனேயன்றி, வினை தானே சென்று நுகர்விக்கும் உணர்வும் ஆற்றலும் உடையதன்று என்பது தமிழ் முன்னோர் துணிபாகும். இத் துணிபினையே 'பால்வரை தெய்வம்' என வரும் தொல்காப்பியத் தொடர் நன்கு புலப்படுத்துதல் காணலாம்.

கடவுளை வழிபட்டு உய்தி பெறுதல் மக்களது தலையாய கடமையென்பதும் தமக்குரிய வழிபடு தெய்வத்தின் திருவருளால் குற்றமற்ற பெருஞ்செல்வத்துடன் தம் குடும்பம் வாழையடி வாழையாக இவ்வுலகில் நிலைபெற்று வளம் பெற இன்புற்று வாழலாம் என்பதும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் துணிபாகும். 'நினக்குத் தொழுகுலமாகிய தெய்வம் நின்னைப் புறங்காப்ப, இல்லற முதலிய நல்லறங்களாற் பழியின்றிப் பூத்த செல்வமொடு நன்மக்களைப் பெற்று மக்கள் முதலியோரும் இப்பேறு பெற்றவராகி நீடு வாழ்வீராக' எனத் தம்மால் அன்பு செய்யப்பெற்றாரை வாழ்த்தும் பாடல் புறநிலை வாழ்த்து எனப்படும் என்பர் தொல்காப்பியர். எடுத்துக்கொண்ட செயல் இடையூறின்றி இனிது நிறைவேறுதற்கு ஏதுவாகிய இறைவன் தோன்றாத் துணையாய் நின்று நின்னைப் புறங்காப்பக் குற்றந் தீர்ந்த செல்வத்தோடு வழி வழியாகச் சிறந்து பொலிமின் எனத் தெய்வத்தைக் காவலாகப் புறம் நிறுத்தி வாழ்த்துதலால் இது புறநிலை வாழ்த்து என்னும் பெயருடைய தாயிற்று.

இன்னது நிகழும் என்று அறியாது அஞ்சுதலையுடைய களவுக் காலத்தே, ஒருவனும் ஒருத்தியுமாகிய அன்புடையார் இருவர் நண்பு செய்து ஒழுகுங்கால், அன்பிற் சிறந்த அவர்கள் வருந்தா வண்ணம் தோன்றாத்துணையாய் நின்று அருள் புரிவதோர் கடவுள் உண்டு என உணர்ந்த தோழி, அவ்விருவர்க்கும் திருமணம் இனிது நிறைவேறுதல் வேண்டும் என அவ்விருவர்க்கும் பாதுகாவலாக அமைந்த கடவுளை ஏத்தி வழிபடும் செய்தியினை 'நாமக்காலத்து உண்டு எனத் தோழி, ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்' என்ற தொடராலும், மனைமாட்சியிற் சோர்வில்லாத தலைவியைத் தலைவன் மணந்துகொள்ளுதல் வேண்டித் தெய்வத்தைப் பரவிய தோழி, தான் வேண்டியவண்ணமே அவ்விருவர்க்கும் திருமணம் நிறைவேறிய வழித் தெய்வத்திற்குப் பரவுக்கடன் கொடுத்தல் வேண்டும் என விரும்புந் திறத்தினை 'அற்றமில்லாக் கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினும்' என்ற தொடராலும், தலைவனை மணந்து கற்புக்கடன் பூண்ட தலைமகள் தன் கணவனுக்குக் குல தெய்வமாகிய தெய்வத்தினை அஞ்சியொழுகும் இயல்பினைத் 'தெய்வம் அஞ்சல்' என்னும் மெய்ப்பாட்டினாலும், தலைவனோடு உடன் போகிய தலைவிக்குப் பாலை வழியில் தீங்கு நேராதவாறு அருள் புரிதல் வேண்டும் எனச் செவிலித்தாய் தெய்வத்தை வழிபடுந் திறத்தினைத் 'தெய்வம் வாழ்த்தல்' என்ற தொடராலும் தொல்காப்பியனார் அறிவுறுத்தியுள்ளார். மேல் எடுத்துக்காட்டிய குறிப்புகளால் தொல்காப்பியனார் காலத் தமிழகத்தில் தமிழ் மக்களது குடும்ப வாழ்க்கையில் தெய்வ வழிபாட்டிற்கு அமைந்திருந்த சிறப்புரிமை நன்கு புலனாதல் காணலாம்.

அரசனது வெற்றிக்கு அடையாளமாகிய கொடியானது பிற வேந்தர் கொடியினும் சிறப்புற்று விளங்குதலும் வேந்தன் தன் பகைவர்க்குப் பற்றுக்கோடாகிய அரணையழித்தலும் மன்னன் தன்னைச் சார்ந்தோர் அனைவர்க்கும் வரையாது வழங்குதலும் எனக் குற்றமற்ற சிறப்பினாற் புகழ்தற்குரிய புறத்துறைகள் மூன்றையுங் குறித்து நல்லிசைப்

புலவர் பாடுதற்குரிய பாடாண் திணை பற்றிய பாடல்கள் எல்லாவுயிர்க்குந் தோன்றாத் துணையாய் நின்று இன்னருள் சுரக்கும் முழுமுதற் கடவுளை வாழ்த்திய குறிப்புடன் விரவி வரும். இம் முறையினை,

''கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''

என வரும் சூத்திரத்தால் தொல்காப்பியர் குறித்துள்ளார். உலகில் அரசியல் வாழ்வில் உண்டாகும் வெற்றிகட்கெல்லாம் உயிர்க்குயிராய் விளங்கும் கடவுளின் திருவருளே உறுதுணையாய் நின்று உதவுந் திறத்தைப் புலத்துறை முற்றிய சான்றோர் வேந்தர் முதலியோர்க்கு விளங்க அறிவுறுத்தி அவர்களது உள்ளத்தைத் திருத்துதல் வேண்டும் என்பது ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாதல் மேற்காட்டிய சூத்திரப் பொருளால் நன்கு புலனாம்.

கடவுள், உலகம் என்பவற்றின் வேறாக உயிர் என்பதனைத் தனிப் பொருளாகக் கொண்டு அவ்வுயிர்கள் பல என்பதனைத் தமிழ் நூல்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. உயிர்கள் என்றும் அழிவில்லாதன என்பது தமிழர் கொள்கை. உயிர்கள் என்றும் நிலைபேறுடைய உள்பொருளாதலின் அவற்றை மன்னுயிர் என வழங்குதல் தமிழ் வழக்கு. இப் பழைய வழக்கினைத் 'தொல்லுயிர்' என்ற தொடரால் தொல்காப்பியரும் உடன்பட்டு வழங்கியுள்ளார். 'உயிர் எத்தன்மைத்து என வினாய வழி, உணர்தல் தன்மைத்து என்றல் செவ்வன் இறையாம்' என்பர் சேனாவரையர். இதனால், உணருந் தன்மையுடையது எதுவோ அதுவே உயிர் என வழங்கப்பெறும் என்பது நன்கு விளங்கும்.

எல்லாவுயிர்கட்கும் அறியுந் தன்மை பொதுவியல்பாகும். உயிர்கள் பெற்றுள்ள உடம்பின்கண் அமைந்த உறுப்புகளின் குறைவு மிகுதிகளுக்கு ஏற்ப அவற்றின் உணர்ச்சிவாயில்கள் வேறுபடும் நீர்மையன. இவ்வுலகில் புல் முதல் மக்கள் ஈறாக உள்ள உணர்வுடைப் பொருள்கள் யாவும் உயிர்த் தொகுதிகளேயாம். அவற்றின் அறிவு அவை பெற்றுள்ள பொறிகளின் குறைவு மிகுதிகட்கேற்பக் குறைந்தும் வளர்ந்தும் அமைந்த திறத்தினைப் பண்டைத் தமிழர் நுணுகி ஆராய்ந்து உயிர்களை ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் ஈறாகப் பகுத்துணரும் தெளிவு பெற்றார்கள். காணா மரபினவாகிய உயிர்த் தொகுதிகளை அவை பெற்றுள்ள காணப்படும் உடம்பினாற் கண்டுணர்ந்து உடம்பின்கண் அமைந்துள்ள அறிகருவிகளின் வாயிலாக அறுவகை யுயிர்களாகப் பகுத்த முறையினை,

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''

என மரபியலில் தொல்காப்பியனார் விரித்துக் கூறியுள்ளார். இங்ஙனம் பகுத்துரைக்கப்படும் எல்லாவுயிர்களுக்கும் இன்பத்தின்பால் வேட்கை நிகழும் என்பது ''எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது, தானமர்ந்து வரூஉ மேவற்றாகும்'' (பொருளியல்-29) என வரும் தொல்காப்பிய நூற்பாவால் இனிது விளங்கும். இங்ஙனம் உடம்பொடு கூடி வாழும் உயிர்களை அவை பெற்றுள்ள உடம்பினின்றும் பிரிப்பதொரு தெய்வ ஆற்றல் உண்டென்பதும் அதனை மாற்றும் வன்மை உயிர்கட்கு இல்லை என்பதும் ஆகியவுண்மையினை 'மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்' என்ற தொடராலும், இவ்வுலகிற் பலரும் மாய்ந்தொழியத் தான் மட்டும் மறையாது யாக்கை நிலையாமையை விளக்கும் அடையாளமாக எஞ்சி நிற்பது புறங்காடு மட்டுமே என்பதனை 'மலர்தலை யுலகத்து மரபு நன்கறியப் பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்து' என வரும் துறைப் பொருளானும் தொல்காப்பியர் தெளிவுபடுத்தியுள்ளார். இவ்வாறே 'மன்னாப்பொருட் பிணி' என்ற தொடராற் செல்வம் நிலையாமையையும், 'நாளது சின்மை' என்ற தொடரால் யாக்கை நிலையாமையையும், 'இளமைய தருமை' என்ற தொடரால் இளமை நிலையாமையையும் ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளமை இங்கு மனங் கொளத் தகுவதாகும்.

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை எனப் பல்லாற்றானும் நிலைபேறில்லாத இவ்வுலகியல் வாழ்வினை நன்குணர்ந்தவர்கள் உலக வாழ்வு நிலையற்றதெனக் கருதி விலகுதல் கூடாதென்பதும், இவ்வாறு ஒரு நிலையில் நில்லாத இவ்வுலகியல் கூறுகளைப் பற்றுக்கோடாகப் பற்றி நின்றே உயிர்க்கு உறுதி பயக்கும் நற்பொருள்களைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும் என்பதும், 'இன்னாதம்ம இவ்வுலகம், இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே' என்றவாறு உலகியல் வாழ்வில் நேரும் பல வகைத் தடைகளை எதிர்த்து நின்று நில்லாதவற்றால் நிலையுடையனவற்றையடைதலே காஞ்சித்

திணையாகிய ஒழுகலாறென்பதும் தொல்காப்பியனார் முதலிய பண்டைத் தமிழ்ச் சான்றோர் மேற்கொண்டொழுகிய தமிழ்நெறிக் கொள்கையாகும்.

மக்கட் குலத்தாரை உயர்திணையென உயர்த்துவது மனவுணர்வின்பாற்பட்ட நல்லொழுக்கமே. மேன்மேலும் உயர்வைத் தருவது ஒழுக்கமேயாதலின் அதனைத் தம் உயிரினுஞ் சிறந்ததாகத் தமிழ் முன்னோர் கடைப்பிடித்தொழுகினர். ஒழுக்க நெறியினை அடிப்படையாகக் கொண்டே தமிழ் மக்களது குடும்ப வாழ்வும் அரசியல் வாழ்வும் உருப்பெற்று வளர்ந்தன. இவ்வுலகியல் வாழ்வுக்கு இன்றிமையமையாச் சிறப்புடையதாக அறிவறிந்த நன்மக்களால் வலியுறுத்துரைக்கப்பட்டதே 'கட்டமை ஒழுக்கம்' என்றும், அவ்வொழுக்க நெறியிற் சிறிதும் வழுவாது வாழுஞ் சான்றோரது சால்பினது வெற்றி யாவரும் கண்டு மகிழ்ந்து போற்றுதற்குரிய நல்ல காட்சியாகும் என்பார் 'கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை' என்றும் ஒழுக்கத்தினது விழுப்பத்தினை வற்புறுத்துவர் தொல்காப்பியர். ஒழுக்கத்தைப் பேணாது தலைவன் வழுவியது கண்டு வருந்திய தலைவி, தன் கணவனது பழிநிலைக்கு நாணிய செய்தியைப் 'பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்' என்ற தொடராலும், பெரியோர்க்கு ஒழுக்கமே பெருமை தரும் எனத் தோழி வற்புறுத்தும் செய்தியினைப் 'பெரியோரொழுக்கம் பெரிது எனக் கிளந்து' என்னுந் தொடராலும் அறிவுறுத்துவர் தொல்காப்பியர். உயிரினும் ஓம்பப்படும் ஒழுக்க நெறியினைக் குறிக் கொள்ளாது ஒருவர் பிறர்க்குச் செய்த கொடுஞ்செயல், செய்த அவரையே பற்றி வருத்தும் என்பதனைக் 'கொடியோர் கொடுமை சுடும்' எனத் தம் காலத்தில் வழங்கிய பழமொழியில் வைத்துத் தொல்காப்பியர் அறிவுறுத்துந் திறம் நினைக்கத் தகுவதாகும்.

எல்லாவுயிர்களாலும் விரும்பி நுகரப்படுவது இன்பம். இன்பத்திற்குக் காரணமாக, ஈட்டப்படுவது பொருள். பிறர்க்குத் தீங்கு நினையாது மாசற்ற மனத்துடன் பொருள் செய்தொழுகுதல் அறம். நுகர்தல் வேட்கைமுறை பற்றி இன்பம், பொருள், அறம் எனவும், செய்கைமுறை பற்றி அறம் பொருள் இன்பம் எனவும் எண்ணுதல் மரபு. அறத்தினாற் பொருள் ஆக்கி அப் பொருளால் இன்பம் நுகர்தலே மக்களது நல்வாழ்க்கை முறையாகும். இவ்வாறு மூன்று பகுதிகளாக நிகழும் மக்களது வாழ்வியலை மூன்றன் பகுதி என்பர் தொல்காப்பியர். உலகியல் நூலாகிய திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரும் தொல்காப்பியனார் குறித்த முறையிலேயே அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால்களாகத் திருக்குறளை வகுத்தருளிச் செய்தமை இங்கு ஒப்பு நோக்கற்பாலதாகும்.

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்படும் எனவும், அறத்தின் வழி வாராப் பொருளை அறிவுடையோர் அறவே ஒதுக்குதல் வேண்டும் எனவும், அறத்தான் வருவதே இன்பம் எனவும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் அறிவுறுத்தியுள்ளனர். அறமே வலியுடையது என்பதும் அழுக்காறு அவா வெகுளி முதலிய மன மாசின்றி மக்களாற் செய்யப்படும் எல்லா அறங்களுக்கும் நிலைக்களமாகத் திகழ்வோன் அறவாழியந்தணனாகிய இறைவனொருவனே என்பதும் திருவள்ளுவர் துணிபாகும்.

எனவே, உலக முதல்வனாகிய இறைவன் ஒருவன் உளன் என்றும் அவன் அறக்கடலாக விளங்கும் அருளாளன் என்றும் தெளிந்து, அவனது அருள் வழி நின்று மக்களாற் செய்யப்படும் நற்செயல்களே மெய்ம்மையான நல்லறங்களாகும் என்பதும் இறையுணர்வின்றித் தான் என்னும் முனைப்புடன் செய்யப்படுஞ் செயல்கள் அறமாகா என்பதும் திருவள்ளுவர் கருத்தாதல் உய்த்துணரப்படும்.

''நின்குணம் எதிர்கொண்டோர் அறங்கொண்டோர் அல்லதை
மன்குண முடையோர் மாதவர் வணங்கியோர்
செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோரும் [அல்லதை
சேரா வறத்துச் சீரி லோரும்
அழிதவப் படிவத்து அயரி யோரும்
'மறுபிறப்பு இல்' எனும் மடவோருஞ் சேரார்
நின்னிழல் அன்னோ ரல்லது இன்னோர்
சேர்வார் ஆதலின் யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே''

(பரிபாடல், 5:71-81)

எனக் கடுவன் இளவெயினனார் என்னும் புலவர் திருப்பரங்குன்றத்துச் செவ்வேளைப் பரவிப் போற்றிய பரிபாடற் பகுதி, எல்லாம் வல்ல இறைவன் உண்மையினை யுணர்ந்த சான்றோர் அவனது அருட்குணமாகிய திருவருட் குறிப்பின்வழி ஒழுகித் தெய்வந் தெளிந்த தவச் செல்வர்களை வணங்கிப் பொருளையும் பொன்னையும் போகத்தையும் வேண்டாது இறைவனது திருவருளையும் அதனைப் பெறுதற்குத் தாம் செய்யும் அன்பினையும் அவ்விரண்டாலும் வரும் அறவுணர்வினையும் வேண்டுவர் என்னும் மெய்ம்மையினை விளக்குவதுடன், பெரியோரைப் பணியாதாரும் வெகுளி மிக்க நெஞ்சத்தினரும் அற நெறியில் ஒழுகாதாரும் கூடாவொழுக்கமுடையாரும் 'இப் பிறப்பின் நுகர்ச்சியேயுளது மறுபிறப்பு என்பது இல்லை' என்னும் கொள்கையாளரும் இறைவனது திருவருளுக்கு உரியராகார் என்பதனையும் நன்கு வற்புறுத்துதல் காணலாம்.



'வாகீச கலாநிதி' **கி. வா. ஜகந்நாதன்**

தமிழ்நாட்டில் நெடுங்காலமாக நாளிதழ்களும் வார இதழ்களும் வெளியாகி வருகின்றன. ஒரு நூற்றாண்டுக்கு முன்பே கிறித்துவப் பாதிரிமார்கள் முதன் முதலாக ஒரு வார இதழைத் தொடங்கினார்கள். கிறித்துவ மதக் கொள்கைகளைப் பரப்புவதே அவர்கள் நோக்கமாக இருந்தாலும் ஓரளவு செய்திகளையும் அவை வெளியிட்டன. அக்காலத்தில் இதழ்கள் தமிழ் நாட்டுக்குப் புதியவை ஆதலின் அவற்றை மக்கள் விரும்பிப் படித்தனர். என்றாலும், நாட்டு நடப்புகளை முழுமையாக வெளியிடும் கடமையை அவை செய்யாமையின் மக்களுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. ஆகவே, வீராசாமி செட்டியார் என்பவர் **தினவர்த்தமானி** என்ற நாளிதழைத் தொடங்கி நடத்தி வந்தார்.

அவர் சென்னை மாகாணப் பள்ளியில் (அதுவே இன்று மாநிலக் கல்லூரியாக வளர்ந்து விளங்குகிறது) தமிழாசிரியராக இருந்தார். அவர் 'தினவர்த்தமானி'யில் செய்திகளை வெளியிட்டதோடு பலருக்கும் பயன்படும் கட்டுரைகளையும் எழுதினார். கீத வாத்திய விநோதம், புலவர்கள் வரலாறு முதலியன அதில் இடம் பெற்றன. அறிவுக்கு உணவாக இருந்த அவை மக்களின் கவனத்தை ஈர்த்தன. புலவர்கள் வரலாறுகளில் கற்பனையும் கலந்து அவர் எழுதினார். வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர்களை ஒரே காலத்தில் இருந்தவராகக் காட்டி அவர்களிடையே நிகழ்ந்தனவாகப் பல கற்பனை நிகழ்ச்சிகளை அமைத்துச் சுவை நிரம்பிய கதைகளைப் போல எழுதினார். கால வழு அமைந்தனவாக இருந்தாலும் சுவைபட அமைந்தமையால் அவை தமிழ் மக்களால் போற்றப் பெற்றன. அந்த வகையில் கம்பரும் ஒட்டக்கூத்தரும் ஔவையும் புகழேந்தியும் ஒரே காலத்தில் வாழ்ந்தவராகவும், தமக்குள்ளே இகல்கொண்டு பாட்டுகளைப் பாடியதாகவும் எழுதினார். பிறகு அவற்றையெல்லாம் தொகுத்து, 'விநோதரஸ மஞ்சரி' என்ற பெயரொடு ஒரு புத்தகமாக வெளியிட்டார். பல பதிப்புகள் வெளியாயின. நாட்டில் உள்ளவர்கள் அதில் உள்ள வரலாறுகளையே மெய்யானவையாக எண்ணிப் பேசத் தலைப்பட்டனர். புலவர்களின் கால வரையறையோ, அவர்களின் கவிகளின் தராதரமோ அந்தக் கதைகளில் இல்லை. என்றாலும், ஓரளவு புலவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள அவை உதவின. அதற்கு முன்பே 'தமிழ் நாவலர் சரிதை' என்ற நூல் ஒன்று பல தனிப்பாடல்களைத் தொகுத்துச் சிறு குறிப்புகளுடன் வெளியாயிற்று. சில தனிப்பாடல்களைத் தொகுத்து அமைத்த தனிப்பாடல் திரட்டும் வெளியாயிற்று. சந்திரசேகர பண்டிதர் என்பவர் இந்தத் தனிப்பாடல் திரட்டை வெளியிட்டார்.

செய்தித்தாள்களைத் தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் இயல்பையும் பத்திரிகையின் இன்றியமையாமையையும் உணர்ந்த அமரர் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆங்கில நாளிதழாகிய இந்துவைத் தொடங்கினார். சில ஆண்டுகளுக்குப் பின் தமிழ் இதழ் ஒன்றை வெளியிடலானார். இந்தியத் தேசியக் காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பே, **சுதேசமித்திரன்** என்ற பெயரோடு அந்த நாளிதழை

வெளியிடலானார். முதலில் வார இதழாகவும் பிறகு வாரம் மும்முறையாகவும் அப்பால் நாளிதழாகவும் அது வெளி வரலாயிற்று. நடுநிலையில் நின்று செய்திகளை வெளியிட்டதனால் அது தமிழ் மக்களின் அன்புக்கு உரியதாயிற்று. பத்திரிகை என்றாலே சுதேசமித்திரன் என்ற நினைப்பு மக்களிடையே பரவியது.

செய்திகளை வழங்குவதோடு பல நல்ல பயனுள்ள கட்டுரைகளையும் அதில் வெளியிடலானார். அதனால் அதைப் பலர் போற்றிப் பாதுகாத்து வந்தனர். தபால்மூலம் இதழ்களை அனுப்பும் பழக்கமே அப்போது இருந்து வந்தது. மாலையில் வெளியாகி மறுநாள் காலையில் வெளியூர்களுக்குச் சென்று செய்திகளைப் பரப்பும் பணியை அது செய்து வந்தது.

நாளடைவில் வேறு இதழ்களும் தோன்றின. **தேசபக்தன்** என்ற நாளிதழ் ஒன்று மலரலாயிற்று. திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரை ஆசிரியராகக் கொண்டு அது வெளிவந்தது. நல்ல தமிழில் செய்திகளை அது வழங்கியது. திரு. வி. க. அவர்கள் அதில் சில கட்டுரைகளையும் எழுதிவந்தார். இந்தியாவில் தேசிய உணர்ச்சி முளைத்துக் கால்கொண்ட காலம் அது. ஆகவே, தேசிய உணர்ச்சியை எழுப்பும் கருவியாகவும் 'தேசபக்தன்' இயங்கியது. அதன் பெயரே அந்த உணர்ச்சியை உண்டாக்கும் கருவி அது என்பதைப் புலப்படுத்தியது.

திலகரைத் தம்முடைய தலைவராகக் கொண்டு வளர்ந்து வந்த தேச விடுதலை இயக்கத்தின் கொள்கைகளை அந்தப் பத்திரிகை பரப்பியது. அதனால் அரசினருடைய கண்காணிப்புக்கும் அடக்குமுறைக்கும் அது உள்ளாகியது என்றாலும் அது தன் கடமையை ஆற்றுவதினின்றும் பிறழவில்லை. திரு.வி.க. வுக்குப் பிறகு வ.வே.சு. ஐயர் அந்த நாளிதழின் ஆசிரியரானார். திரு. வி. க. **நவசக்தி** என்ற வார இதழைத் தொடங்கி நடத்தி வந்தார்.

சுதேசமித்திரன், தேசபக்தன் என்னும் இரண்டும் தமிழில் சிறந்த நாளிதழ்களாக நிலவின. செய்திகளுக்குச் சிறப்பை அளித்துத் தமிழ் நடைக்கு அவ்வளவு சிறப்பை அளிக்காமல் இருந்தது சுதேசமித்திரன். செய்திகளை வெளிப்படுத்துவதோடு நல்ல தமிழ் நடையில் அவற்றை விரிந்துரைக்கும் பணியில் தேசபக்தன் சிறந்து நின்றது.

அந்தக் காலத்தில் சில வார இதழ்களும் மாத இதழ்களும் தோன்றின. விசாலாட்சியம்மாள் 'ஹிதகாரிணி' என்ற இதழைத் தொடங்கினார். அவருடைய சகோதரராகிய நடராஜ ஐயர் **லோகோபகாரி** என்ற வார இதழைத் தொடங்கி நடத்தி வந்தார். லோகோபகாரியில் சமய சம்பந்தமான கட்டுரைகள் வெளியாயின. தமிழ்நாட்டில் சமயப் பற்றுடையவர்கள் மிகுதியாக இருந்தமையால் அந்தப் பத்திரிகை மக்களின் ஆதரவைப் பெற்றது. நடராஜ ஐயருக்குப் பின் வடிவேலு செட்டியாரும், பிறகு பரலி சு. நெல்லையப்பரும் லோகோபகாரியை நடத்தி வந்தனர்.

மதுரையில் பாண்டித்துரைத் தேவரின் முயற்சியால் தமிழ்ச் சங்கம் எழுந்தது. புலவர்களுக்குத் தேர்வு வைத்துப் பட்டம் அளிக்கும் பணியை அது புரிந்தது. அந்தச் சங்கத்தின் வெளியீடாகச் **செந்தமிழ்** என்ற பெயரோடு ஒரு மாத இதழ் தோன்றியது. மகாவித்துவான் ரா. இராகவையங்கார் தொடக்கத்தில் அதன் ஆசிரியராக இருந்தார். பல இலக்கிய இலக்கணக் கட்டுரைகள் அதில் வெளியாயின. அதில் வந்த கட்டுரைகள் ஆராய்ச்சியாளர் மேற்கோளாகக் காட்டும் வகையில் சிறந்து விளங்கின. ரா. இராகவையங்காருக்குப் பிறகு அமரர் மு. இராகவையங்கார் அந்த இதழின் ஆசிரியரானார். தமிழ்நாட்டில் வாழ்ந்த பெரும்புலவர்கள் அதில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார்கள்.

வேறு சில மாத இதழ்கள் தோன்றின. **ஆனந்த போதினி** என்ற இதழை நா. முனிசாமி முதலியார் தொடங்கி நடத்தலானார். பல ஆங்கில நாவல்களைத் தமிழில் ஓரளவு தழுவி எழுதிய ஆரணி குப்புசாமி முதலியார் அதன் ஆசிரியராக இருந்தார். நாற்பதே பக்கங்கள் கொண்ட ஆனந்தபோதினியை இரண்டணாவுக்குத் தந்தார்கள். சந்தாதாரர்கள் பலர் சேர்ந்தார்கள். வரையறையாக இன்ன வகையான கட்டுரைகளைத்தான் வெளியிடுவது என்ற திட்டம் அந்தப் பத்திரிகைக்கு இருந்தது. முதலில் தாயுமானவர் பாடல் ஒன்று, பிறகு ஒரு தலையங்கம், அப்பால் கட்டுரைகள், ஒரு நாவலின் சில பக்கங்கள், கடைசியில் அந்த மாதப் பஞ்சாங்கம் என்ற பகுதிகளோடு அந்த மாத இதழ் வெளியாயிற்று. அந்தக் காலத்தில் இருபதினாயிரம் சந்தாதாரர்கள் அதற்கு இருந்தார்கள். ஆண்டுச் சந்தா ஒரு ரூபாய். ஆனந்தபோதினி தமிழ்நாட்டில் சிறந்த மாதப் பத்திரிகை என்ற பெயரைப் பெற்றது. **செந்தமிழ்** புலவர்களுக்கு உகந்த பத்திரிகையாகவும், **ஆனந்தபோதினி** பொது மக்களுக்கு ஏற்ற மாத இதழாகவும் அமைந்தன.

பிறகு பலபல இதழ்கள் தோன்றின. ஆனந்த குணபோதினி என்ற பத்திரிகை தோன்றி, பிறகு அமிர்தகுண போதினி ஆயிற்று. மு.ரா. கந்தசாமிக் கவிராயர் 'விவேகபானு', 'வித்தியாபானு' என்ற பத்திரிகைகளை நடத்தினார்.

1906-ஆம் ஆண்டுக்கு முன்பே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் **இந்தியா** என்ற பெயரோடு ஒரு வார இதழைத் தொடங்கினார். தேசிய உணர்ச்சியை ஊட்டும் கட்டுரைகளை எழுதினார். முதன்

முதலாகக் கார்ட்டூன் என்ற உருவகச் சித்திரங்களை அதில் வெளியிட்டார். ஆங்கில அரசினர் அவருடைய செயலைக் கண்காணித்து வந்தனர். பிரிட்டிஷ் இந்தியாவில் தாம் இருந்தால் அடக்குமுறைக்கு இரையாகவேண்டிவரும் என்பதை அவர் உணர்ந்தார். ஆகவே, தேசிய வீரர்களின் புகலிடமாக அக்காலத்தில் விளங்கிய புதுச்சேரிக்கு அவர் போனார். அரவிந்தர், வ.வே.சு. ஐயர் முதலிய தேசபக்தர்கள் அங்கே சென்று தம் தேசத் தொண்டுகளைச் செய்து வந்தார்கள். பாரதியார் அங்கே சென்று சில காலம் இந்தியாவை நடத்தி வந்தார்.

பங்காருபத்தர் என்பவர் 'கலைமகள்' என்ற மாத இதழைச் சில ஆண்டுகள் புதுச்சேரியில் நடத்தினார்.

வடுவூர் துரைசாமி ஐயங்காரை ஆசிரியராகக் கொண்டு ஆண்டுக்கு எட்டணாச் சந்தாவை உடைய **ஒற்றுமை** என்ற பத்திரிகை சைதாப்பேட்டையில் தோன்றியது. நாவல்களை எழுதும் ஆற்றல்பெற்ற வடுவூரார் **மனோரஞ்சனி** என்ற பெயருடன் ஒரு மாத இதழைத் தொடங்கினார். அது முழுக்க முழுக்க அவருடைய நாவல்களையே வெளியிட்டது. அதன் வெற்றியைக் கண்ட ஆனந்தபோதினி வெளியீட்டாளர், **மனமோகினி** என்ற நாவல் பத்திரிகையாகிய மாத இதழை வெளியிடத் தொடங்கினார்கள். ஆரணி குப்புசாமி முதலியாருடைய ஆங்கிலத் தழுவல் நாவல்கள் அதில் வெளியாயின. ஆனால், அந்த இதழ் தமிழ்நாட்டில் வேரூன்றவில்லை.

அமரர் வை. மு. கோதைநாயகி அம்மாள் **ஜகன் மோகினி** என்ற மாத இதழைத் தொடங்கினார். வடுவூராருடைய முறையைப் பின்பற்றித் தம்முடைய நாவல்களை அதில் அவர் வெளியிட்டு வந்தார். வடுவூரார் நடத்திய மனோரஞ்சனி நின்றுவிட்டதனால் ஜகன்மோகினிக்கு மக்களின் ஆதரவு கிடைத்தது.

பைந்தமிழ், பிரசண்ட விகடன் முதலிய பத்திரிகைகள் தோன்றின. விகடன் என்ற பெயரோடு சில இதழ்கள் நடந்து வந்தன. **ஆனந்த விகடன்** என்ற பத்திரிகை இந்த விகடன் வரிசையில் ஒன்று. அதை ஒரு வீர சைவர் நடத்தி வந்தார். அமரர் எஸ். எஸ். வாசன் அதை விலைக்கு வாங்கித் தாமே நடத்தத் தொடங்கினார். திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் தொண்டாற்றி வந்த அமரர் ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அதில் தொடர்ந்து கட்டுரைகளையும் கதைகளையும் எழுதிவந்தார். பிறகு சென்னைக்கே வந்து அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஆனார்.

அவருடைய பேனாவில் தமிழ் மகள் நடனமாடினாள் — ஆனந்த விகடன் ஒளிவிளக்காகச் சுடரலாயிற்று. தலையங்கங்கள், கட்டுரைகள், கதைகள் எழுதியதோடு சங்கீத விமரிசனத்தையும் கல்கி எழுதினார். தமிழ்நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் ஆனந்த விகடன் புகுந்து மக்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டியது. தேசியப் போர் உச்சகட்டத்தில் இருந்த காலமாதலின் தலையங்கங்கள் காரசாரமாக வெளிவந்தன. தொடர்கதைகளையும் கல்கி எழுதத் தொடங்கினார். நாளுக்கு நாள் கல்கியின் எழுத்தும், அதனால் ஆனந்த விகடனும் மக்களுடைய உரையாடலில் இடம் பெற்றன.

பிறகு கல்கி தம்முடைய பெயராலேயே ஒரு வாரப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். ஆனந்த விகடனுக்கு மதிப்புக் குறையவில்லை. அதுவும் கல்கியும் தமிழர்களின் ஆதரவைப் பெற்று இன்றளவும் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனந்த விகடனுக்கு, கல்கிக்குப் பிறகு தேவன் ஆசிரியரானார். அவருடைய பயணக் கட்டுரைகள் சுவையாக இருந்தன. தேவன் அமரரான பிறகு வெவ்வேறு ஆசிரியர்களின் தொண்டை ஆனந்த விகடன் பெற்றது. ஆசிரியர் இன்னார் என்று தெரியாவிட்டாலும் ஆனந்த விகடன் தனியொரு நிறுவனமாகவே ஆகிவிட்டது.

1932ஆம் ஆண்டு மயிலாப்பூர் 'லா ஜர்னல்' அச்சகச் சொந்தக்காரர்கள் **கலைமகள்** மாத இதழைத் தொடங்கினர். முதல் மூன்று ஆண்டுகள் அமரர் டி. எஸ். இராமசந்திரையர் அதன் ஆசிரியராக இருந்தார். நல்ல வெள்ளைக்காகிதத்தில் அமைந்த அந்த இதழ் முதலில் ஆறணா விலையில் வெளியாகியது. சரித்திரம், சாஸ்திரம், கதை, மகளிர் பகுதி, சிறுவர் பகுதி என்று சில பகுதிகளை வகுத்துக்கொண்டு கட்டுரைகளையும் கதைகளையும் வெளியிடலாயிற்று. ஒவ்வொரு துறையிலும் வல்லுநர்களான சில எழுத்தாளர்களை ஆசிரியக் குழுவாகக் கொண்டு தொடங்கிய அதற்கு அமரர் டாக்டர் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்களின் முழு ஆதரவு கிடைத்தது. பண்டைத் தமிழ் நூல்களை வெளியிட்டுத் தமிழில் புதிய யுகத்தைத் தோற்றுவித்த அந்தப் பெரியார் தம்முடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் புலவர்களின் வரலாறுகளையும் தொடர்ந்து எழுதி வந்தார். தெளிந்த நீரைப் போன்ற அவருடைய நடையும், கட்டுரைகளும், வெளியான நிகழ்ச்சிகளும் தமிழ் மக்களைக் கவர்ந்தன. பதிப்பாசிரியராக விளங்கிய அப் பெருமானுடைய உரைநடை வளத்துக்குப் போக்குவீடாகக் கலைமகள் அமைந்தது. அதோடு சில ஆண்டுகள் பழைய நூல்களைப் பகுதி பகுதியாகக் கலைமகளில் வெளியிட்டு வந்தார். அக்காலத்தில் கலைமகளை எடுத்தால் முதலில் அவருடைய கட்டுரையும் இறுதியில் அவருடைய பதிப்பு நூலும் இருமருங்கும் அணி செய்ததைக் காணலாம். வேறு பல அறிஞர்களும் கலைமகளின் பக்கங்களுக்கு ஊட்டம் ஊட்டி வந்தனர்.

முதலில் சிறுகதைகளுக்கு அவ்வளவு சிறப்பான இடத்தை வழங்காமல் இருந்த கலைமகள் நாளடைவில் சிறுகதைகளுக்கும் நாவல்களுக்கும் பெரும்பாலான பக்கங்களை ஒதுக்கியது. ஆராய்ச்சிக் கட்டுரைகள் வந்தாலும் சிறுகதைகள் தரமாக இருந்தமையால் அவற்றிற்கு மதிப்பு வளர்ந்தது. தமிழ்நாட்டில் தோன்றிய புகழ் மூத்த எழுத்தாளர்கள் யாவருமே அதில் எழுதினார்கள். கலைமகளில் தங்கள் படைப்பு வெளிவருவதில் பெருமை அடைந்தார்கள். இன்றும் கலைமகள் தன் தமிழ்ப்பணியை நல்ல முறையில் ஆற்றி வருகிறது.

தமிழ்ப் பத்திரிகை உலகத்தில் ஒரு புதிய விடிவெள்ளி முளைத்தது. **குமுதம்** என்ற பெயரில் தோன்றிய பத்திரிகை வார இதழாக வளர்ந்து புதிய புதிய துறைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தலாயிற்று. இந்தியாவிலுள்ள பொதுப் பத்திரிகை எதற்கும் இல்லாத வகையில் அதற்கு விற்பனை மிகுதியாயிற்று. அவ்வப்போது முறைகளை மாற்றியும், புதிய துறைகளைத் தோற்றுவித்தும் புதுமைப் பொலிவோடு நடைபோடும் 'குமுதம்' இன்று அநேகமாக ஒவ்வொரு தமிழர் கையிலும் இருக்கும் வகையில் பரந்து விரிந்து விளங்குகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு அமரர் வ.ரா. **மணிக்கொடி** என்ற வார இதழைத் தொடங்கினார். அமரர் கு. சீனிவாசன் அதை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். வ.ரா. தம்முடைய நடைச் சித்திரங்களை அதில் வெளியிட்டார். சில காலம் வார இதழாக இருந்து அது பிறகு புத்தக வடிவில் மாதப் பத்திரிகை ஆயிற்று. திரு. பி. எஸ். ராமையாவும் திரு. கி. ரா.-வும் ஆசிரியர்களாக இருந்து நடத்தி வந்தார்கள். எழுத்தாளர்களின் அன்புக்குப் பாத்திரமான அது, பிறகு நின்றுபோயிற்று. ஆயினும் எழுத்தாளர்கள் அதை இன்றும் நினைவு கூர்ந்து மகிழ்கிறார்கள்.

ஒரு பத்திரிகையில் இருந்து பணியாற்றிய ஆசிரியர்கள் அதிலிருந்து பிரிந்து தனியே இதழ்களைத் தொடங்கி நடத்தியதற்குப் பல சான்றுகளைக் கூறலாம். ஆனந்த விகடனிலிருந்து பிரிந்த அமரர் ரா. கிருஷ்ணமூர்த்தி 'கல்கி'யைத் தொடங்கினார். அப்படியே வஸந்தன் என்பவர் ஒரு பத்திரிகையை நடத்தினார். **இதயம் பேசுகிறது** திரு. மணியன் ஆனந்த விகடனிலிருந்து பிரிந்து, பிறகு தொடங்கி நடத்தி வருவது. **குங்குமம்** என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த திரு. சாவி (சா. விசுவநாதன்) அவர்கள் இப்பொழுது **சாவி** என்ற ஒரு பத்திரிகையை நடத்தி வருகிறார்.

கவிஞர் திரு. கண்ணதாசன் தம் பெயரால் ஒரு பத்திரிகையை நடத்தி வருகிறார். அதில் பெரும்பாலும் கவிதைகளே இடம் பெறுகின்றன. அமரர் பாரதிதாசன் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் மகாகவி **பாரதி தேஜோமண்டலம்** என்ற கவிதைப் பத்திரிகையை வெளியிட்டார். **கவியமுது, வானம்பாடி** என்ற கவிதையிதழ்கள் சில இன்றும் நடந்து வருகின்றன.

நாளிதழ்கள் பல இப்போது தோன்றிவிட்டன. கட்சிச் சார்புள்ளவை பல. **தினமணி** தோன்றி பல ஆண்டுகள் ஆயின. இன்று தமிழ் மக்களின் அமோகமான ஆதரவைப் பெற்று அது நடைபோடுகிறது. வார அநுபந்தமாகிய **தினமணி சுடரில்** பல பயனுள்ள கட்டுரைகள் வெளிவருகின்றன. **தினமணி கதிர்** என்ற வார இதழையும் தினமணி நிறுவனத்தார் நடத்துகின்றனர். சென்னையிலும் மதுரையிலும் தனித்தனி பதிப்பாகத் தினமணி வெளியாகிறது.

மாவட்டங்களில் சில பத்திரிகைகள் தோன்றியுள்ளன. மதுரை, கோவை, நாகர்கோயில் முதலிய இடங்களிலிருந்து சில இதழ்கள் வெளிவருகின்றன. சென்னை மாநகரிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளுக்கு உள்ள மதிப்பை அவை பெறுவதில்லை.

பெரியார் தொடங்கிய **விடுதலையும்**, கம்யூனிஸ்டுக் கட்சியின் இதழாகிய **ஜனசக்தியும்** தம் கட்சிக் கொள்கைகளைப் பரப்பி வருகின்றன. சமயத் துறையில் பல மாதப் பத்திரிகைகள் உள்ளன. அவற்றில் இராமகிருஷ்ண மடத்தார் வெளியிடும் **இராமகிருஷ்ண விஜயமும், ஸ்ரீசித்பவானந்தர்** வெளியிடும் **தர்மசக்கரமும்** குறிப்பிடத்தக்கவை. தமிழ்நாட்டிலுள்ள சைவ மடமாகிய தருமபுரம் ஆதீனத்திலிருந்து **ஞானசம்பந்தம்** என்ற மாத இதழும், திருப்பனந்தாள் காசி மடத்திலிருந்து **குமரகுருபரர்** என்ற திங்கள் இதழும் மலர்கின்றன.

தோன்றி மறைந்த நாளிதழ்களும் வாரப் பத்திரிகைகளும் மாத சஞ்சிகைகளும் பல. **ஹனுமான், ஹிந்துஸ்தான்** என்ற வாரப் பத்திரிகைகள் நல்ல முறையில் நடந்து வந்தவை.

கலைமகள் காரியாலத்தார் வெளியிடும் **மஞ்சரி** ஒரு புதிய முறையில் அமைந்தது. பல மொழிகளிலும் வெளியாகும் பத்திரிகைகளில் உள்ள சுவையான கட்டுரைகளைத் தொகுத்துத் தமிழாக்கி வெளியிடுவது அது.

குழந்தைகளுக்கென்று சில பத்திரிகைகள் தோன்றி மறைந்தன. வரகவி திரு. சுப்பிரமணிய பாரதியார் அந்தக் காலத்தில் **பாலவிநோதினி** என்ற பத்திரிகையைப் பல ஆண்டுகள் வெளியிட்டனர். இப்போது நின்றுவிட்டது. வேறு சில பத்திரிகைகள் இன்னும் நடந்து வருகின்றன.

மாதர்களுக்காக, **மங்கை, மங்கை மலர்** என்ற இதழ்கள் இப்போது நடைபெறுகின்றன. முன்காலத்தில் மாதர் மனோரஞ்சனி என்ற மாத இதழ் ஒன்று இருந்தது. சகோதரி பாலம்மாள் **சிந்தாமணி** என்ற இதழை நடத்தினார்.

குறிப்பிட்ட வகுப்பின் நலனுக்கென்று சில பத்திரிகைகள் தோன்றி மறைந்தன. அந்தணன், குலாலமித்திரன் போன்றவை அவை. இப்போதும் அத்தகைய பத்திரிகைகள் சில உள்ளன.

இலங்கையிலும் மலேசியாவிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நாளிதழ்களும் வார இதழ்களும் நடத்துகிறார்கள். இலங்கை நாளிதழ்களில் **தினகரன், வீரகேசரி** இரண்டும் குறிப்பிடத்தக்கவை. முன்பு **ஈழகேசரி** என்ற வார இதழ் சிறப்பாக நடந்து வந்தது.

மலேசியாவிலும் நாளிதழும் பிற இதழ்களும் உண்டு. தமிழில் உள்ள பத்திரிகைகளின் வரலாற்றை முறையாக எழுதப் புகுந்தால் அது பல பக்கங்களையுடைய பெரிய நூலாக விரியும், அதற்கென்று கங்கணம் கட்டிக்கொண்டு துருவி ஆராய்ந்து செய்திகளைச் சேகரித்து உருவாக்க வேண்டும்.

இந்தக் கட்டுரையில் தமிழ் இதழ்களைப்பற்றிய செய்திகள் எல்லாவற்றையும் சொல்லிவிட முடியாது. ஏதோ ஓரளவு கோடி காட்டலாம். அதைத்தான் என்னால் செய்ய முடிந்தது.





டாக்டர் வா. செ. குழந்தைசாமி

1. பொது

வேடுவப் பருவத்தில் காடுகளில் வாழ்ந்த மனித இனம், வேளாண்மைத் தொழிலில் அடியெடுத்து வைத்தபொழுது மனித சமுதாய நாகரிகத்தின் கட்டம் அரும்பியது. நிலமும் நீரும் மக்கட்கு மகத்தான செல்வங்களாயின. ஆற்றின் கரைகளில் கரையின் பரப்பினில் அரசு அமைத்த இனங்கள் வேளாண்மை யுகத்திற்கு வித்திட்டன. அவ்வாறு வித்திட்டவர்களில் தமிழர்கள் முன்னோடியான இனத்தவராவர். மனித சமுதாயத்தின் ஆரம்ப கால வளர்ச்சிகளும், தமிழினத்தின் பண்டை வரலாறும் நெருங்கிப் பிணைந்தவை; ஓரளவு, இனந் தெரியாது கலந்தவை.

மேற்கில் ஆப்பிரிக்க நிலப் பரப்பிலிருந்து கிழக்கில் ஜப்பானையும் கடந்து, பண்டைத் திராவிடர்களின் தாக்கங்கட்குச் சான்று கூறும் பல தடயங்கள்பற்றிய கட்டுரைகள், பலநாட்டு ஆய்வாளர்களிடமிருந்து, அவ்வப்பொழுது வெளிவந்துகொண்டிருக்கின்றன. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் பற்றிய உண்மைகள், தொல்பொருள் துறையினரும் வரலாற்று ஆய்வாளர்களும் விரிவாகவும் ஆழ்ந்தும் ஆராய வேண்டிய, ஆனால் இதுவரை அந்த அளவில் ஆராயத் தவறிய ஒரு பெரும் புதையலாக அமையக்கூடும்.

வரலாற்றின் பார்வையில் மங்கலாகத் தெரியும் சேய்மைக்காலப் பகுதிகள் போக, ஓரளவு சான்றுகளோடு நாம் பயிலக்கூடிய கால கட்டங்களில் கூட, தமிழர்களைப்பற்றிய விபரங்களில் பல உடைப்புகள் (gaps) தென்படுகின்றன. அவர்கள் இலக்கியத்துறையில் அடைந்திருந்த ஏற்றம்பற்றி நாம் முழுமையாக அறிய முடிகிறது. இலக்கியங்கள் மட்டுமன்றி, இலக்கியக் கலைக்கு இலக்கணம் வகுக்கும் நூல்களும் ஓரளவு கிடைத்துள்ளன. இசை, நாடகம், நடனம் போன்ற நுண்கலைத் துறைகளின் இலக்கணம் பேசும் நூல்கள் அவ்வளவாகக் கிடைக்காவிட்டாலும், இங்கு நமது பாரம்பரியத்தை ஓரளவேனும் அளவிடத் துணை செய்யும் ஆதாரங்கள் இருக்கின்றன. இக் கலைகளை இன்றும் பாரம்பரிய வழியில் பயிற்றுவோர், பயில்வோர், அவைப்படுத்துவோர் (performers) இருக்கிறார்கள். ஆனால், பண்டைத் தமிழர் அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அடைந்திருந்த வளர்ச்சியை மதிப்பிடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இல்லை. பண்டைச் சின்னங்களோ, இத் துறைகள்பற்றி விரிவாகப் பேசும் நூல்களோ இல்லை. ஆனால், இத் துறைகளில் சங்ககாலப் பகுதியிலேயே, அன்றைய மனித வளர்ச்சியை எண்ணும்பொழுது, தமிழர் கணிசமான முன்னேற்றம் கண்டிருந்ததற்கான சான்றுகள், இலக்கியச் செய்திகளாகவும், பரந்த நிலப்பகுதிகளில் சிதறிக் கிடக்கும் பல்வகையான சின்னங்களாகவும் கிடைக்கின்றன.

'வானோர் சிறப்பின் முகில்தோய் மாடங்கள்' இருந்தமைபற்றி இலக்கியம் பேசுகிறது. ஆனால், இன்று தமிழ் நிலத்தில், அழிந்த நிலையில்கூட, அதற்கான சின்னங்கள் இல்லை. அக் கலைபற்றிய இலக்கணம் கூறும் நூல்களும் இல்லை. 'நூலறி

புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு, தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி' நகரமைத்த செய்தி பேசப் படுகிறது. ஆனால், நகரமைப்புப்பற்றிக் கூறும் நூல்களோ, அந் நூல்கள்பற்றிய குறிப்புகளோ இல்லை. தமிழகத்து மன்னர்கள். 'காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கிய' பெருமைக்குரியவர்கள். எனவே வேளாண்மை, நீர்ப் பாசனம் ஆகியவை சார்ந்த தொழில்நுட்பம் கணிசமாக வளர்ந்திருக்க வேண்டுமென நம்புவதற்கு இடமிருக்கிறது. இந்த வரிசையில் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு துறையும் உண்டு. பண்டைத் தமிழினம் கடல் கடந்து, கப்பல் செலுத்தி வாணிபம் செய்த வரலாறு உடையது. மன்னர்கள் கப்பற்படை வலியுடையவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஆயினும் கப்பல் கட்டுதல், கடலில் கலம் செலுத்துதல் போன்ற பொருள்கள்பற்றிய பண்டைத் தமிழ் நூல்கள் இல்லை. ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து, கிழக்கு ஆசியப் பகுதிகள் வரை, இன்னும் இவற்றையும் கடந்து, ஆங்காங்கு இன்று கிடைக்கும் சான்றுகள்; தமிழன்றி மற்ற மொழிகள் மூலம் கிடைக்கும் செய்திகள்; தமிழ் இலக்கியத்தில் காணப்படும் வரலாற்றுப் பொருண்மை கொண்ட கூற்றுகள்; பொருத்தமான ஊகங்கள் ஆகியவற்றைச் சேர்த்து இந்த வரலாற்று உண்மைகள் அறியப்படவேண்டும். இதற்கான வாய்ப்புகளை, நீர்ப் பாசனத் தொழில்நுட்பத்தில் தமிழர் அடைந்திருந்த வளர்ச்சி நிலைபற்றிய சில செய்திகளைக் கூறுவதன்மூலம், அறிமுகப்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

2. நீர்ப்பாசனத் தொழில்நுட்பம்

தமிழ் இலக்கியங்கள் பலவும் நீர்வளத்தின் பெருமை பேசுகின்றன. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய குடபுலவியனார்,[1]

> ''நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
> தட்டோர் அம்ம இவண்தட் டோரே''

என்று கூறுகிறார். பண்டை மன்னர்கள் தமிழகம் முழுவதும் அமைத்த ஏரிகள், அவற்றின் அடிப்படையில் அமைந்த பாசன அமைப்புகள் இன்றும் நாம் எண்ணி வியக்கத்தக்கன. இவை அனைத்திற்கும் சிகரம் போன்று அமைந்தது திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள கல்லணையாகும். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு கரிகாலனால் கட்டப்பட்டு, இன்றும் பயன்பட்டு வரும் ஓர் அரிய கட்டமைப்பு (construction) கல்லணை. இவ்வணை, மணல் தளத்தை அடிப்படையாகக்கொண்டு எழுப்பப்பட்ட ஒரு கட்டடம். நீர்த் தேக்கங்கள் அமைப்பதில், மணல் தளத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டடங்கள் எழுப்புவது ஒரு தனிக் கலையாகும். சற்றுக் கடினமான கலையும்கூட. அணைக்கட்டு எழுப்பிய பின்னும்கூட, அதன் அடியில் இருக்கும் மணல் தளத்தின் வழியாகத் தண்ணீர் துருவிச் செல்வது தொடர்ந்து இருந்து வரும். இப்படிப்பட்ட கட்டமைப்புகளை, கசியும் அடித்தளத்தில் அமைந்த கட்டடங்கள் (Structures on Pervious Foundations) என்று கூறுவார்கள். அணையின்மேல் வழிந்து செல்லும் நீர், அதன் கீழ் கசிந்து செல்லும் நீர் இரண்டாலும் பாதிக்கப்படாத வகையில் இதுபோன்ற அணைகள் அமையவேண்டும். இன்றைய வளர்ச்சி நிலையில் கூட அவை சிக்கல் நிறைந்தவை. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு கல்லணை போன்ற ஒரு சாதனத்தை எழுப்பிய சமுதாயத்தில், சில அடிப்படைப் பொறியியல் முறைகள் இருந்திருக்க வேண்டும். அவற்றை அறிவதற்கான ஏடுகள் தமிழில் இல்லை; அல்லது இதுவரை கிடைக்கவில்லை.

தமிழர்தம் முன்னோர்கள், தாங்கள் வாழ்ந்த நிலப்பரப்பே யன்றி, மேற்கே ஆப்பிரிக்கக் கண்டத்திலிருந்து, கிழக்கே பிலிப்பைன்ஸ் தீவுகள் வரை சென்று, பாசன வசதிகள் அமைத்ததற்கான தடயங்கள்பற்றி இன்று மேலைநாட்டு ஆய்வாளர்களும் மற்றையோரும் பேசுகின்றனர். ஃபிளமிங் (Flemming) என்பவரின் கீழ்க்காணும் கூற்று கருதத்தக்கது:[2]

> "A very highly astonishing discovery of recent research is the remains of irrigation works in South East Africa which do not belong to the cultural influence of Egypt. The high culture of Indian Dravidians who were pushed South by the Indo-germans had enough initiative, once upon a time, to penetrate into the South East Africa and to build magnificent irrigation works there. These installations apparently helped the cultivation of 'mountain paddy'. . . . ."

மலைநெல் பயிரிடுவது தமிழர் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இம் முறையினை அவர்கள் கடல் கடந்தும் பரப்பியிருப்பதாகக் கருதப்படுகிறது. தமிழில் மலைநெல் 'ஐவனம்' என வழங்கப் படுகிறது. வடம வண்ணக்கன் தாமோதரனார் பிட்டங்கொற்றனைப் பாடும்பொழுது,

> "ஐவனம் காவலர் பெய்தீ நந்தின்
> ஒளிதிகழ் திருந்துமணி நளியிரு ளகற்றும்
> வன்புல நாடன் வயமான் பிட்டன்''[3]

எனக் கூறியதாகப் புறநானூற்றில் காண்கிறோம். சிலப்பதிகாரம் காடுகாண் காதையில், மதுரை செல்லும் வழியைக் கோவலனுக்குக் கூறவந்த மறையோன்,

---

[1] புறநானூறு, 18 : 28 - 29.
[2] Flemming, H. W., Wüsten, Deiche and Turbinen, Muster Schmidt Verlag, Gottingen - Berlin - Frankfurt.
[3] புறநானூறு, 172 : 6-8.

'' .... மான் நின்று விளிக்கும்
கானமும் எயினர் கடமும் கடந்தால்
ஐவன வெண்ணெலும் அறைக்கட் கரும்பும்
கொய்பூந் தினையும் கொழும்புனல் வரகும்''

இன்னும் பல்வகைப் பயிர் வகைகளும் விளைந்து செழித்து விளங்கும் தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும் என்று கூறுகிறான். உரை கூற வந்த நாட்டாரவர்கள் 'ஐவனமாகிய நெற்பயிர்' என்கிறார்.

முன்பு ரொடீஷியா (Rhodesia) என்று அழைக்கப்பட்ட ஆப்பிரிக்க நாட்டின், தெற்குப் பகுதியில் குன்றங்களின் சரிவுகள் முழுமையும் மலைநெல் விளைவதற்கேற்ற பாத்திகளாகப் பண்படுத்தப் பட்டிருந்திருக்கின்றன. சுமார் 1.3 மீட்டரிலிருந்து 1.6 மீட்டர் உயரமுள்ள சுவர்களை 10 மீட்டர் இடைவெளியில் எழுப்பி, அதில் சமமான 10 மீட்டர் அகலமுள்ள பாத்திகளை அமைத்திருந்தமை காணப்படுகிறது. இப் பாத்திகள் அமைந்துள்ள பகுதிகள் அனைத்திலும் பாசன வாய்க்கால்களும் இருந்திருக்கின்றன. இவற்றைப்பற்றிக் கூறும் ஃபிளமிங் பின்வரும் முடிவுகளைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.[4]

"A highly developed form of agriculture should therefore have been practised there formerly,...... .... Colleagues of Leo Frobenius, the researcher from Africa could distinguish between older terrace construction which was very carefully laid and newer ones which was not so very well built. From the stone carvings, it can be seen that the best carvings belong to the oldest of times and that there was a gradual decline of this arts From legends, fairy tales, and details of metal extraction processes, Leo Frobenius has concluded that the high culture which gradually declined in East Africa has been associated with the Indian Culture."


இன்றும் பிலிப்பைன்ஸ் நாட்டில், மலைச் சரிவுகளில் நெல் பயிரிடப்படுகிறது. இந்தப் பயிரிடு முறை அந்த நாட்டிற்குச் சொந்தமானதன்றென்றும் கருதப்படுகிறது. மீண்டும் ஃபிளமிங்கின் கூற்றுகள் கவனிக்கத்தக்கன. அவர் பின்வருமாறு கூறுகிறார்:

"The terrace cultivation of paddy is prevalent even to-day in the Phillipines. Even there, the plants have not been built by the natives. They too are probably, likewise to be traced back to the cultural influences from India...."

இலக்கியக் கூற்றுகள், ஆங்காங்கு அழிந்த நிலையில் உள்ள சின்னங்கள், தொல்பொருள் ஆய்வாளர் சிலரின் கருத்துகள், ஊகங்கள் என்ற நிலையில் தமிழர் நீர்ப்பாசனப் பொறியியல் துறையில் அடைந்திருந்த வளர்ச்சிபற்றிய நமது அறிவுநிலை இருக்கிறது. முழுமையான, முறையான ஆய்வுகள் இருப்பதாகத் தெரியவில்லை. கப்பல் கட்டுதல், கடலிற் கலம் செலுத்துதல், நகரமைப்பு, வீடுகள் கட்டுதல், போர்த் தளவாடங்கள் செய்தல் போன்ற பல துறைகளின் நிலையும் இது போன்றதே.

தமிழர் நாகரிக வளர்ச்சி, மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தைச் சேர்ந்தது. எனவே, அவர்களது வளர்ச்சிநிலைபற்றிய ஆய்வு, மானிட இனத்தின் பொது வளர்ச்சிபற்றிய ஆய்வே ஆகும். பண்டைத் தமிழர் பொறியியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அடைந்திருந்த வளர்ச்சிநிலை, ஆழ்ந்தும், விரிவாகவும், தொல்பொருள் துறையினராலும், வரலாற்று அறிஞர்களாலும், மற்றும் தொடர்புள்ள துறையினராலும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

[4] Flemming, H. W., Wusten, Deiche and Turbinen.


தனியொருவனுக்கு உணவிலை யெனில்
சகத்தினை அழித்திடுவோம் !
—பாரதியார்

"........ ...... மான் நின்று விளிக்கும்
கானமும் எயினர் கடமும் கடந்தால்
ஐவன வெண்ணெலும் அறைக்கட் கரும்பும்
கொய்பூந் தினையும் கொழும்புனல் வரகும்"

இன்னும் பல்வகைப் பயிர் வகைகளும் விளைந்து செழித்து விளங்கும் தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும் என்று கூறுகிறான். உரை கூற வந்த நாட்டாரவர்கள் 'ஐவனமாகிய நெற்பயிர்' என்கிறார்.

முன்பு ரொடீஷியா (Rhodesia) என்று அழைக்கப்பட்ட ஆப்பிரிக்க நாட்டின், தெற்குப் பகுதியில் குன்றங்களின் சரிவுகள் முழுமையும் மலைநெல் விளைவதற்கேற்ற பாத்திகளாகப் பண்படுத்தப் பட்டிருந்திருக்கின்றன. சுமார் 1.3 மீட்டரிலிருந்து 1.6 மீட்டர் உயரமுள்ள சுவர்களை 10 மீட்டர் இடைவெளியில் எழுப்பி, அதில் சமமான 10 மீட்டர் அகலமுள்ள பாத்திகளை அமைத்திருந்தமை காணப்படுகிறது. இப் பாத்திகள் அமைந்துள்ள பகுதிகள் அனைத்திலும் பாசன வாய்க்கால்களும் இருந்திருக்கின்றன. இவற்றைப்பற்றிக் கூறும் ஃபிளமிங் பின்வரும் முடிவுகளைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.[4]

"A highly developed form of agriculture should therefore have been practised there formerly. .... Colleagues of Leo Frobenius, the researcher from Africa could distinguish between older terrace construction which was very carefully laid and newer ones which was not so very well built. From the stone carvings, it can be seen that the best carvings belong to the oldest of times and that there was a gradual decline of this arts From legends, fairy tales, and details of metal extraction processes, Leo Frobenius has concluded that the high culture which gradually declined in East Africa has been associated with the Indian Culture."

இன்றும் பிலிப்பைன்ஸ் நாட்டில், மலைச் சரிவுகளில் நெல் பயிரிடப்படுகிறது. இந்தப் பயிரிடு முறை அந்த நாட்டிற்குச் சொந்தமானதன்றென்றும் கருதப்படுகிறது. மீண்டும் ஃபிளமிங்கின் கூற்றுகள் கவனிக்கத்தக்கன. அவர் பின்வருமாறு கூறுகிறார்:

"The terrace cultivation of paddy is prevalent even to-day in the Phillipines. Even there, the plants have not been built by the natives. They too are probably, likewise to be traced back to the cultural influences from India...."

இலக்கியக் கூற்றுகள், ஆங்காங்கு அழிந்த நிலையில் உள்ள சின்னங்கள், தொல்பொருள் ஆய்வாளர் சிலரின் கருத்துகள், ஊகங்கள் என்ற நிலையில் தமிழர் நீர்ப்பாசனப் பொறியியல் துறையில் அடைந்திருந்த வளர்ச்சிபற்றிய நமது அறிவுநிலை இருக்கிறது. முழுமையான, முறையான ஆய்வுகள் இருப்பதாகத் தெரியவில்லை. கப்பல் கட்டுதல், கடலிற் கலம் செலுத்துதல், நகரமைப்பு, வீடுகள் கட்டுதல், போர்த் தளவாடங்கள் செய்தல் போன்ற பல துறைகளின் நிலையும் இது போன்றதே.

தமிழர் நாகரிக வளர்ச்சி, மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தைச் சேர்ந்தது. எனவே, அவர்களது வளர்ச்சிநிலைபற்றிய ஆய்வு, மானிட [illegible] வளர்ச்சிபற்றிய ஆய்வே ஆகும். பண்டைத் தமிழர் பொறியியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அடைந்திருந்த வளர்ச்சிநிலை, ஆழ்ந்தும், விரிவாகவும், தொல்பொருள் துறையினராலும், வரலாற்று அறிஞர்களாலும், மற்றும் தொடர்புள்ள துறையினராலும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

---

[4] Flemming, H. W., Wusten, Deiche and Turbinen.



இக்காலக் கவிதைப் போக்குகள்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

''உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை''

என்னுங் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் குரல் மறுமலர்ச்சிக் கவிதையுலகில் தனியிடம் பெற்றுள்ளது. கவிதைக்கு உருவம் அமையும்போதே இன்பம் விளைகின்றதென்றும், உண்மையைத் தெரிந்துரைப்பதில் குறிக்கோள் நிறைவேறுமென்றும் கவிமணி கவினுறவே உணர்த்துகின்றார்.

எல்லாம் அற்புதப் பொருளாகக் கவிஞன் பார்வையிற் படும்போது 'அறம் பொருள் இன்பம் வீடு' என்பவையே அன்றியும், எளியன எனக் கருதப்படும் எவையுமேகூடக் கவிஞனின் பார்வையில் ஒளி பெறும். எப்பொருளையும் பாடும் பொருளாகக் கொள்ளலாம் என்பது மறுமலர்ச்சி இலக்கிய உலகில் கோலோச்சும் கொள்கையாயிற்று. 'கிழிந்த பழம்பாய்' பெ. தூரன் கருத்தில் ஒரு கவிப் பொருளாயிற்று. 'தொலைபேசி' கே. பி. எஸ். அமீதுக்குரிய பாட்டுச் செய்தியாயிற்று. 'ஒற்றையடிப் பாதை' சிதம்பர ரகுநாதன் கவிப் பார்வையில் பாட்டுப் பொருளாயிற்று. 'பட்ட மரம்' தமிழ் ஒளிக்குப் பசுமைக் கற்பனை தந்தது.

புதுமை, கட்டடக் கலையில் இடம் பெற்றது போலவே,போர் முறையில் இடம் பெற்றது போலவே, மற்றப் (வாழ்வில்) பல துறைகளில் இடம் பெற்றது போலவே கவிதையிலும் இடம் பெற்றது; இடம் பெறுகின்றது. மரபில் ஊன்றிய புதுமையும் தமிழ்க் கவிதைகளில் உண்டு; மரபைப் பெரியதோர் அடிப்படையாகக் கொள்ளாத படைப்புகளும் உண்டு.

பாடல்களில் திரைப்பாடல்கள் மக்களின் கருத்தை விரைவிலும் எளிமையிலும் கவர்கின்றன. இத்துறையில் முற்காலத்தில் பாபநாசம் சிவன், டி. கே. சுந்தர வாத்தியார், கம்பதாசன் ஆகிய கவிஞர்கள் சிறப்பிடம் பெற்றனர். அண்மைக்கால வளர்ச்சியில் கண்ணதாசனும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமும் குறிப்பிடத் தகுந்த பணியாற்றிப் புகழுக்குரியோர் ஆயினர்.

திரைப்பாடல்களில் கவியரசு கண்ணதாசன் பழந்தமிழ் மரபுச் செல்வத்தை விடாது அமைத்துப் போற்றிப் புது வடிவமாக்கியதைச் சில சான்றுகள் காணலாம்.

''அன்று வந்ததும் அதே நிலா
இன்று வந்ததும் அதே நிலா''

என்று பாடுங் கவிஞர்,

''அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே''
—புறநானூறு, 112

என வரும் புறநானூற்றுப் பாடலை மறவாது பாடியுள்ளார்.

''அன்றொரு நாள் அவனுடைய பேரைக் கேட்டேன்
அடுத்த நாளில் அவனுடைய ஊரைக் கேட்டேன்''

என்னும் திரைப் பாடல்,

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.''
—ஆறாம் திருமுறை,
(திருவாரூர்த் திருத்தாண்டகம், 7)

எனும் திருநாவுக்கரசர் பெருமான் வாக்கின் மறு குரலாக ஒலிக்கின்றது. தமிழினத்தின் தொன்மை குறித்துப் பேசுவோர்,

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளோடு
முன்தோன்றி மூத்த குடி''

என்ற புறப்பொருள் வெண்பாமாலை அடிகளைக் குறிப்பிடுவர். இதனை மறவாது கண்ணதாசன்,

''கல்தோன்றி மண்தோன்றுமுன் தோன்று தமிழே
கவிமழையில் ஆடிவரும் கன்னி இளமயிலே''

என்று தமிழ், முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பெயர்ந் தொளிரும் பெற்றியினைப் புலப்படுத்தியுள்ளார்.

''எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்
என்ன பொருத்தமோ!''

என்று இராமலிங்க அடிகளார் பாடிய பாடல்,

''அவர்க்கும் எனக்கும் உறவு காட்டி
அருள்புரிந்தது கதையா?''

என்று மீண்டுமொரு வடிவந்தாங்கி வந்துள்ளது. இக் குரல்,

''உனக்கும் எனக்கும் உறவுகாட்டி
உலகம் சொன்னது கதையா?''

என்ற இசைப்பாடலில் மேலும் தெளிவாக ஒலிக்கக் கேட்கலாம்.

திரைப்பாடல்களின்மூலம் புயல்வேகப் புகழ் எய்திய பாட்டுக்கோட்டையாராம் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் குறிப்பிடத் தக்கவர்; பாவேந்தர் பாரதிதாசனாரின் வழியேற்றுப் பாடிய பாவலர்.

''விதியென்னும் குழந்தை கையில் உலகந் தன்னை
விளையாடக் கொடுத்திட்டாள் இயற்கை யன்னை''

என்று பாடும் பட்டுக்கோட்டையார் தத்துவ நோக் கிலும் பாடி மக்கள் மொழி நடையில் மக்களின் இதயங்களைக் கவர்ந்து காலம் மறவாப் பெருமைக் குரிய பாவலரானார்.

''இரைபோடும் மனிதருக்கே
இரையாகும் வெள்ளாடே''

என்று பட்டுக்கோட்டையார் பாடிய திரைப்பாடல் அரும் வாழ்க்கைத் தத்துவம் கொண்டு திகழ்கின்றது. இரையுண்ணும் வெள்ளாடு இரையாகும் அவலம் போலவே, மனிதரும் உணவு தேடியுண்டு காலனுக்கு உணவாகின்றனர். இதனைப் பாட்டுக்கொரு புலவர் என நாட்டு மக்கள் நலமுற நவிலும் நற்றமிழ்க் கவிஞராம் பாரதியார்,

''தேடிச் சோறுநிதந் தின்று—வெகு
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக வுழன்று—பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்—சில
வேடிக்கை மனிதரைப் போலே—நானும்
வீழ்வேன் என்றுநினைத் தாயோ?''
– பாரதியார் கவிதைகள்

என்று கவிதைக் குரலாக்கினார். தேடிச் சோறு நிதந்தின்று கூற்றுக் கிரையெனப் பின் மாயும் மனித குலத்தின் அவலமும் வெள்ளாட்டின் வேதனைமிக்க வரலாறும் ஒருவகையே என்னும் உண்மையை இரு பெரும் புலவரும் பாடிய நோக்கையுணர்ந்தால் நாம் பாராட்டி வியக்கலாம்.

''செய்யுந் தொழிலே தெய்வம்—அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையுங் காலுந்தான் உதவி—கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி''

என்னும் பட்டுக்கோட்டையாரின் பாடலடிகள் உழைப்பாளரின் உயரிய வேதமாகின்றது; எளிய திரைக்கீதமாகின்றது. ''உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்'' என்று பாரதியார் பாடிய செய்தியில் தொழிலின் கண்ணியம் (Dignity of Labour) மட்டும் உணர்த்தப்பட்டது; பட்டுக்கோட்டையின் மேற்காணும் பாடலில் உழைப்பாளரின் உள்ளக் குரல் புத்துலகிற்கேற்ப இசைக்கின்றது.

''இறைவா! நீ இருட்டைப் படைத்தாய்—நாங்கள்
விளக்கை யுருவாக்கிக் கொண்டோம்; நீ
மணலைப் படைத்தாய்; நாங்கள்
பளிங்கைப் படைத்துக் கொண்டோம்''

என்று இக்பால் பாடிய பாடலில் மனித மேன்மை பேசப்பட்டதுபோல் பட்டுக்கோட்டையார் பாடலி

னும் சந்திரனைத் தொட்ட மனித சக்தி புகழப்பட்டுள்ளது. வாழ்வின் உண்மைகளோடு தத்துவங் கலக்கும் பட்டுக்கோட்டையார் மனிதன் ஒவ்வொருவனுக்கும்,

''சட்டப்படி பார்க்கப் போனா
எட்டடிதான் சொந்தம்''

என்று உருகப் பாடினார். உவமைக் கவிஞர் சுரதா இதே செய்தியைப் பாடும்பொழுது,

''ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா''

என்று நயமுறப் பாடி, பாடையைக் 'காலில்லாக் கட்டில்' என்றும் மரபுணர்த்தி இசைத்தார்.

இற்றைநாட் கவிதையுலகம் உழைப்பவர் உயர்வு பாடினாலும், சமுதாய மாற்றங் குறித்துப் பாடினாலும், மறுமலர்ச்சி, மொழிப்பற்று, மனிதநேயம் ஆகிய எத்துறைபற்றிக் குரல் தந்தாலும் அக்குரல் வழியே நேரடியாகவோ மறைமுகமாகவோ புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் வகுத்த புதுமரபே தலையெடுத்துச் செம்மாந்து நின்று தொடர்ந்து நிலவக் காண்கின்றோம். பாரதியாருக்குப் பின் சீரிய செல்வாக்கு, பாரதிதாசனாரின் பாக்களுக்கே உண்டு.

பிரமதேவன் கலையைத் தொழிலாளரே நடாத்துகின்றனர் என்று பாரதியார் தெளிந்து பாடினார். பாரதிதாசனார்,

''காண்ப தெல்லாம் தொழிலாளி செய்தான்—
அவன்
காணத் தகுந்தது வறுமையாம்
பூணத் தகுந்தது பொறுமையாம்''

என்று முழங்கினார். மனித நேயக் கருத்துகளை வழங்கினார். கடவுள் நம்பிக்கையும் சமயங்களும் தொழில் உலகந் தழைக்கச் செய்து புத்துலகம் படைக்க உதவுந் தொழிலாளர்க்கும் உழைப்பாளர்க்கும் உரிய பலன், உரிமை ஆகியவற்றைத் தருவதில்லை எனக் கருதினார்; ஆகவே,

''கடவு ளென்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை யேவுவோம்''

என்று பாடினார். பாரதிதாசனாருக்குப் பின் மூத்தவர்களில் கம்பதாசனும், தற்போது வாழுங் கவிஞரில் சாலை இளந்திரையன் அவர்களும் மானுடம் பாடிய புலவர்களாகப் புகழெய்தியுள்ளனர்.

சாலை இளந்திரையன் 'பூத்தது மானுடம்' என்றே தனியொரு நூலைத் தந்துள்ளார். 'வீறுகள் ஆயிரம்' எனும் நூலில், 'உலகத் தோற்றம்' என்ற கவிதையில் புது மனப்பான்மையை, சமுதாய மாறுதல் விழையும் சோசலிசத்தை வரவேற்பதும் அறிமுகமாக்கலுமாகப் பாடுங் கருத்து,

''நெஞ்சுகளின் மறுபிறப்பு
சோசலிசம்
திறம்பாத ஒருமைநலம்
சோசலிசம்
வஞ்சகத்தின் மென்னியிலே
புதுயுகத்தின்
வலியகரம் விழுவதுவே
சோசலிசம்''

என்று சோசலிசக் கட்டியங் கூறுகின்றது. சாலை இளந்திரையன் பாடல்களில் வேண்டாத பழமை, மூடநம்பிக்கை ஆகியவற்றை முறியடிக்கும் வலிமை முத்தாய்ப்பாகக் கருத்தை வெளிப்படுத்தத் துணை நிற்கின்றது.

''எழுதிவைத்த புத்தகத்தில்
மூழ்கிப் போவாய்
எதிரிருக்கும் மானுடனைப்
படிக்க மாட்டாய்!''

என்னும் அடிகள் சிந்தனைக்குரியவை.

கம்பதாசன்,

''சூரியனும் ஒரு தொழிலாளி—தினம்
சுற்றும் உலகும் தொழிலாளி
வாரிதி தானும் தொழிலாளி—எதிர்
வந்திடும் காற்றும் தொழிலாளி
மாரி யதுவும் தொழிலாளி—விண்
மலரும் உடுக்கள் தொழிலாளி
பாரில் தொழிலாளர் சக்தியின்றேல்—இந்தப்
பாரும் உண்டோஒரு சீருமுண்டோ?''

என்று பாடி மானுட உயர்வும் தொழிலாளர் மேன்மையும் துலங்கப் பாடினார். மேலும் தொழிலாளர் தம்முள் ஒருவராகவே நின்று குரல் தரும் கம்பதாசன்,

''தண்ணீ ரதனில் தணலெழுங்கால்
சாவின் நிழலில் பிறப்பெழுங்கால்
மண்ணில் பொன்தரும் தொழிலாளர்
மதியில் புவியாள விதியெழாதோ?''

எனக் கேள்வி தொடுக்கும் பான்மை, அவர் பின் வந்த கவிஞர்க்கும் வழிகாட்டும் வகைபெற்றுச் சிறக்கின்றது.

தன்னுணர்ச்சிப் பாவகை

பாவினங்களில் 'லிரிக்' (Lyric) தன்னுணர்ச்சிப் பாக்கள் ஒரு வகையாம். கிரேக்க இலக்கியத்திலும் ஆங்கிலத்திலும் இக்கவிதை வடிவங்கள் சிறந்தன. 'Lyric' என்னும் இசைக் கருவியின் இசைத் துணையோடு பாடித் தனிமையில் களிக்கும் பாவகை 'Lyric' ஆயிற்றென அறிஞர் கருதுகின்றனர்.

இசையுடையது 'லிரிக்' என்னும் கருத்தோடு குறுகிய அளவினதென்றும் கூறுவதுண்டு. குறுகிய பாக்கள் யாவும் 'லிரிக்' வகையைச் சார்ந்தவை என முடிவு கொள்ள இயலாது. ஏனெனில் மற்றொரு செய்தியும் (உள்ளுறை) 'லிரிக்' (Lyrical poems) வகையை நிறுவுகின்றது. இசை வடிவாகி நிற்ப தோடு பொருளமைதியினால் தன்னுணர்ச்சியுள் ளுறையாக வருவது 'Lyrical poems' எனப்படும். கவிஞன் யாருடைய 'தன்னுணர்ச்சி'யையும் தனது அனுபவமாகப் பாடும் 'லிரிக்' ஒருவகைப்பட்டது. கவிஞன் தன் வாழ்வின் அனுபவத்தையே தன்னுணர்ச்சி வெளியீடாகவும், இசைப்பாங்குடனும் உருவாக்குவது மற்றொரு வகையாம்.

தன் வாழ்வினின்றும் முகிழ்த்த பட்டறிவு வெளிப்பாடாக இசைத்த தன்னுணர்ச்சிப் பாவுக்குப் (Lyrical poem) பெருங்கவிஞர் பாரதியாரின் 'நல்லதோர் வீணை செய்தே' எனும் பாடல் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வகையில் கவிஞர் தமிழ் ஒளி,

''முத்து நரைதிரை வந்திட ஆயுள்
முடிந்தது நாமறிவோம்—எனில்
கோத்து நமக்குக் கொடுத்திட்ட மாலையின்
கோலம் அழிந்திடுமோ?

வஞ்சகக் காலன் வருவதும் போவதும்
வாழ்க்கை நியதியடா!—எனில்
செஞ்சொற் கவிதைகள் காலனை வென்று
சிரிப்ப தியற்கையடா''

என்று பாடுந்திறனில் கவிஞர் வாழ்வினும், கவிதைக் கலை காலத்தை வென்று பெருமிதங் கொண்டு சிரிக்கும் செம்மாப்பு நன்கு தெளிவாகின்றது.

'லிரிக்' வடிவிற்குப் பாவேந்தர் பாரதிதாசனாரின் பாடல்களில் சிறந்த சான்றுகள் உள்ளன. 'இசையமுது' கவிதை நூலில் ஒரு பாமணி கோக்கப்பட்ட திறன் வருமாறு:

''அதோ பாரடி அவரே என்கணவர்
புதுமாட்டு வண்டி ஓட்டிப்
போகிறார் என்னைவாட்டி
இருப்பவர் உள்ளே முதலாளி செட்டி
ஏறுகால் மேல்தான்என் சர்க்கரைக் கட்டி
தெரியவில் லையோடி தலையில்துப் பட்டி
சேரனே அவரென்றால் அதிலென்ன அட்டி..''

இப் பாடலில் தலைவி, தன் தோழியிடம் தனை மணந்த கணவனைக் காட்டிப் பேசுவது கிராமிய (சிற்றூர்)ச் சூழலையும் இனிதே விளக்குவதாகின்றது. இக்கவிதை 'லிரிக்' (Lyric) எனப் பாகுபாடு செய்யப்படலாம் எனினும், ''அதோ பாரடி'' என்று தோழியை முன்னிலைப்படுத்துவதால் 'Dramatical Lyric' என்று வகைப்படுத்துதல் சாலவும் பொருந்தும்.

கவிஞர்கள் வாழ்வில் அவர்களைக் கவரும் அனுபவங்கள், அவர்களை அலைக்கழிக்கும் நிகழ்ச்சிகள் யாவுமே 'லிரிக்' வடிவில் வெளிப்பட்டு நிலைபேறடைகின்றன.

'ஏன், ஏன்' என்று மனத்தைக் குடையும் கேள்வியையே ஆழ்ந்து வடித்துக் கவிஞர் 'சோமு' அவர்கள் பின்வரும் பாடலில் தந்துள்ளார்:

''மலரே ஏன்நீ உதிர்கின்றாய்
மங்கையே ஏன்நீ முதிர்கின்றாய்
பகலே ஏன்நீ மாய்கின்றாய்
பால்நிலா ஏன்நீ தேய்கின்றாய்
கடலே ஏன்நீ இரைகின்றாய்
காற்றே ஏன்நீ அலைகின்றாய்
நதியே யாரை நாடுகின்றாய்
நாளே எங்கே ஓடுகின்றாய்!''

இவ் வினாக்கள் நிலைத்துவிட்ட வினாக்கள். தன்னுணர்ச்சிக் கவிதைகளில் இப்பாடல் நிகரற்றது.

தம் வாழ்வின் முற்பகுதியில் தம்மை உலுக்கிய காதலிழப்பைக் கவிஞர் கம்பதாசன்,

''பாட்டு முடியுமுன்னே
மீட்டிய வீணையைப்
பக்கம் வைத்தே நடந்தாய்''

என வருங் கவிதையில் நிலைபேறுடைய நெஞ்சக் குமுறலாக்கிவிட்டார்.

தன்னுணர்ச்சியும் குறையாமல் தத்துவமும் குன்றாமல் வரும் கவிஞர் 'சோமு'வின் பாட்டுக் குரல் இதோ:

''இதயக் கூண்டில் ஒரு பறவை
இரைதா வென்று கூப்பிடுதே
இதயக் கூண்டில் ஒரு பறவை!

நினைவுக் காட்டில் சுற்றியபின்
நிலவின் அணைப்பில் அயராமல்
கனவுக் குமைப்பில் மோனத்தில்
கண்ணை மூடித் தனிமையிலே....''

இதயக் கூண்டில் ஒரு பறவை, அயர்வுக்குப் பின் ஆறுதல் பெறும் நம்பிக்கையைக் கவிஞர்,

''பொழுது புலருமடி—மனப்
பூவும் மலருமடி!
அழுத இருளெல்லாம்—கண்ணே
அகலும் அகலுமடி!''

என்னும் அடிகளில் தோற்றுவிக்கின்றார்.

இயற்கை

இயற்கை ஒரு வற்றாக் களஞ்சியம். காலந் தோறும் கவிஞர்க்கு வாய்த்த கற்பனை நிதியம். சங்கப் புலவர்க்கு முதலாகிக் கருவாகி முன்னின் றது. செஞ்சொற் புனைமாலை பாடிய ஞானசம் பந்தப் பெருமானுக்கும் சமயகுரவர் பிறர்க்கும் கண்டறியாதன காட்டியது. பின்னரும் காவியப் பிரபந்தப் படைப்புகளில் மிளிர்ந்து திகழ்ந்தது. இந்நாளைய புலவர் பெருமக்கட்கும் விருந்தாகி விஞ்சி நிற்பது.

இயற்கைப் புனைவில் சமுதாயக் கருத்துகளை மிடைதல் பாரதிதாசனாரின் திறன். சான்றாக நிலவைப் பாடுங் கவிஞர் நித்த நித்தம் உழைத்து அலுத்துச் சோற்றுக்கு ஏங்கித் தவிக்கும் எளிய மக்களையும் மறக்கவில்லை. எனவே,

''உனைக்காணும் போதினிலே என்னு ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பந் தானோ!''

—புரட்சிக்கவி

என்று பாடினார். அதனைப் பின்பற்றி வாணி தாசர், 'முகில்' என்னும் பாடலில் முகில் வேறு பாடற்ற பான்மை கொண்டதென்று விளக்கு கின்றார்.

''விளைவயல், பொட்டல் என்ற
வேற்றுமை கருதா தென்றும்
அளித்துயிர் ஓம்பு கின்றாய்!
அன்னையே முகிலே வாழி!
விளைவினை மக்க ளெல்லாம்
பொதுவாகத் துய்க்கும் மேன்மை
முளைத்திடில் தமிழர் நாட்டில்
முளைத்திடும் இன்ப வாழ்வே!''

இத்துடன் நிலவைப்பற்றி முடியரசன் பாடும்,

''பொதுவுடைமை ஆட்சியினை யிரவுப் போதில்
புரிகின்ற முழுமதியே''

என்னும் அடியை இயைபுபடுத்திப் பார்த்தல் பயன் தரும்.

ஆங்கிலப் புலவர்களில் சிலர் நகர்ப்புற வருணனை புரிவோர், போப் (Pope) எனுங் கவிஞரை 'Poet of Township' என்பர். ஆயினும் எப்புலவரா யினும் சிற்றூர், சேரி முதலியவற்றின் இயற்கை யழகுகளை விழைந்து பாடுவர். வாணிதாசர், சேரி யில் தாம் கண்ட காட்சியை மெய்ம்மை (Realism) குன்றாது பாடிய திறம் பின்வருமாறு:

சேரி

''அடுப்பினில் புளிக்காக் கூழே
கொதித்திடும்; அழும்பிள் ளைக்குத்
துடுப்பினைத் தூக்கிக் காட்டித்
தேற்றுவாள்; இடது கையின்
மடுப்பினில் தலையை வைத்து
வயிறொட்டித் தூங்கும் ஆளன்
நெடுப்பினில் உழைத்த தோளில்
நெஞ்சமும் கண்ணும் சேர்ப்பாள்!''

பாரதிதாசனாரின் நேர் மாணவர்களில் ஒருவராம் 'தமிழ் ஒளி' இயற்கைப் பாவகையில் தனிப் பெருந் திறன் கொண்ட கவிஞராவார். அவர்தம் 'பட்ட மரம்' எனுங் கவிதை இயற்கை வருணனையில் அவருக்குரிய கற்பனைத்திறன், சொல்லாட்சி முதலியனவற்றை நிறுவுவதாகும்.

முதலில் மனித மனம்போல் மரமும் பெருமூச்சும் விசனமும் அடைகின்றது.

பட்ட மரம்

''மொட்டைக் கிளையொடு
நின்று தினம்பெரு
மூச்சு விடும்மரமே!
வெட்டப் படும்ஒரு
நாள்வரு மென்று
விசனம் அடைந்தனையோ?''

அடுத்த இரண்டு அடிகளில் பட்டுப்போகுமுன் இருந்த நிலையும், பட்ட பின்னர் அடைந்த கோல மும் பேசும் கவிஞர்,

''குந்த நிழல்தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்தஇலை!
வெந்து கருகிட
இந்த நிறம்வர
வெம்பிக் குமைந்தனையோ?''

என்றிசைக்கின்றார். எழில் முற்றும் இழந்ததை,

''கட்டை யெனும்பெயர்
உற்றுக் கொடுந்துயர்
பட்டுக் கருகினையே!
பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே!''

காலப் புயலிற்பட்ட மனிதன் கைநீட்டுவது போல் மரம் தோற்றமளிக்கின்றது. பின்னர், பழ நாளின் பசுமைத் தோற்றம் வெறும் கனவான திறம்,

''பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்ததுவும்
மூடு பனித்திரை
யூடு புவிக்கொரு
மோகங் கொடுத்ததுவும்
ஆடுங் கிளைமிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்ததுவும்
ஏடு தருங்கதை
யாக முடிந்தன!
இன்று வெறுங்கனவே!''

இப் பாடலின் இறுதியும் கற்பனையும் உணர்வுத் தழலும் குன்றாது விளங்குவது கவிஞர் தமிழ் ஒளி யின் இலக்கியத் திறனுக்கு உரைகல்.

மழைத்துளி எனும் பாடல் தூற்றலின் சந்தமே வாய்த்தாற்போல் நம்மை மயக்குவது; கற்பனைப் பார்வை உடையது.

''தந்ததன' மென்று பந்தலில்—மலர்ப்பந்தலில்
வந்து விழுந்தது நீர்த்துளி—மழைநீர்த்துளி
பச்சைப் பசுந்தழைக் காட்டிலே—இலைமேட்டிலே
தைச்சுக் கிடந்தது புன்னகை—மழைமென்னகை!''

இவ்வாறு சந்தவின்பம் மிக்க கவிதைகள் இக்காலக் கவிதைப் போக்குகளை வளப்படுத்தி நிற்கின்றன.

காதல்

''காதல் காதல் காதல்
காதல் போயின்
சாதல் சாதல் சாதல்''

என்று பாடினார் பாரதியார். மேலும் அவர்,

''காதலினால் அறிவெய்தும்—அந்தக்
காதற் கவிதைப் பயிரை வளர்க்கும்''

என்றும் பாடினார். காதலைப் பாடிப் பெருமைப் படுத்தாத கவிஞரில்லை. சங்க இலக்கியம் நுண்ணிய உணர்வுகள் இழையோடக் காதலைப் போற்றியது. முதுமையிலும் காதலைப் போற்ற வேண்டும் என்று முழங்கியது. ஏனெனில் உண்மையான காதல் முதுமையில் வளர்ந்து செப்பமுற்றிருக்கும். தோழி தலைவியைத் தலைவன்பால் ஒப்படைக்கும் போது,

'இவளின் கட்டழகு கண்டு மனமுவந்த தலைவ! ஒரு காலத்தே இவள் ஏந்தெழில் மார்பகங்கள் தளரினும் நீ இவளைக் கைவிட வேண்டா. பொன் வண்ண மேனியைப் போர்த்துமாறு நீலமணி நிறக் கூந்தல் இன்று நெடியதாயிருந்து இவளழகை மேம்படச் செய்கின்றது. வருநாளில் இக் கூந்தல் வண்ணமிழந்து நரைபட்டு முடியப்படும்போதும் இந்நாளில் நின் நெஞ்சகத்தே நிலவும் ஈடுபாடு இத் தலைவிபால் என்றும் இருத்தல் வேண்டும்' என்று கூறுவதாக அமைந்துள்ள நற்றிணைப் பாடல் வருமாறு:

''அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர!
இன்கடுங் கள்ளின் இழையணி நெடுந்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டு யானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னநின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே.''
—நற்றிணை, 10

ஒப்பரிய காதலுணர்வு வயதால் முதுமையால் வாடுவதில்லை என்று பேசப்பட்ட இலக்கிய மரபு, மறுமலர்ச்சிக் காலத்தே பாவேந்தர் பாடலில் தனிவகையான சிறப்பாக மலர்ச்சி பெற்றுள்ளது. குடும்ப விளக்கில் 'முதியோர் காதல்' என்னும் பகுதியே மரபும் புரட்சியுமாகும். அப்பாடல் வருமாறு:

''புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவள்உ டம்பு!
சதிராடும் நடையாள் அல்லள்;
தள்ளாடி விழும்மூ தாட்டி;
மதியல்ல முகம்அ வட்கு,
வறள்நிலம்; குழிகள் கண்கள்!
எதுஎனக் கின்பம் நல்கும்?
இருக்கின்றாள் என்ப தொன்றே.''

காதற் கவிதைகளை இசைப் பாடல் வழியே கேட்கும் இக்காலத்தே,

''காதல் என்பது தேன்கூடு—அதைக்
கட்டுவ தென்றால் பெரும்பாடு''

என்று இசைக்கக் கேட்கின்றோம். கபிலரின் நற்றிணைப் பாடலில்,

''தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல''
— நற்றிணை, 1 : 3 - 4.

என வரும் கருத்தே மிளிரக் காண்கிறோம். காதலைப் போற்றும் வளமார்ந்த சொற்களில் பட்டுக்கோட்டையார்,

''நெஞ்சில் கூடுகட்டி வாழுங் குயிலோ''

என வருணிப்பது பழமையான உணர்வுக்குப் புது வடிவம் தருவதாகும்.

காதலாம் உணர்வு பெருகுவதும் மனிதரின் இதயம் போதா அளவு சிறியதாவதும்,

''கையளவு உள்ளம் வைத்துக்
கடல்போல் ஆசை வைத்து
விளையாடச் சொன்னானடி''

என்னும் கண்ணதாசன் அடிகளில் பாடப் பெற்றுள்ளன. கவிஞர் சுரதா காதலார்வமும் பிரிவுத் துயரமும் தோய்ந்திட,

''செங்கதிர்ச் சுடர்போலே என்கரம்
நீண்டிருந் தால்அந்தச்
சிங்காரச் சிலையை நான்
இங்கிருந்தே தொடுவேன்
எண்ணமெல் லாம்ஓர் இடத்தையே நாடுதே''

என்றுபாடி உவமையாலும் உயர்ந்து திகழ்கின்றார்,

காதலன் வேட்கை புரியுமாறு 'கண்ணம்மா' என்னும் தலைப்பில் பாடிய கவிஞர் தமிழ் ஒளி,

''உள்ளம் எழுதிவிட்டாய்—கண்ணம்மா
ஊற்றுநீ ரோடையிலே
கள்ளம் அழிந்துவிட்டேன்—அடியேன்
காதல்நீ ராடுகிறேன்''

என்று பாடுங்குரல் காதலின் மாட்சி தெரியக் காட்டும்.

'சோமு'வின் பாடலில் இளநெஞ்சின் பேரார்வம் பின்வருமாறு ஒலிக்கின்றது:

''பின்னிய கார்நிறக் கூந்தலிலே—வைத்துப்
பின்னினை யோஇந்த நெஞ்சினையே
பின்னுமக் கூந்தலின் கொண்டையிலே—இசை
பின்னினை பாடல்கள் நெய்தனையே.''

—'இளவேனில்' கவிதைத் தொகுதி

கூந்தலில் மலராகக் காதலிளைஞனின் மனமும் பின்னப்படுவதால் கன்னியின்பால் தன்மனம் சிக்கியிருப்பதாக உணரும் இளநெஞ்சின் சித்திரம் இது; மற்றும் கொண்டை முடிந்த வாகு பற்பல நினைவூட்டும் அழகுப் பாடலாகத் தோன்றுகிறது என்று கவிஞர் உணர்த்துகின்றார். இக் கவிதையின் வண்ணத்தில் ஓரளவு மரபு படிந்திருக்கக் காண்கின்றோம்.

''முருகிற் சிறந்த கழுநீரும்
முற்றா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழன்மடவீர்
செம்பொற் கபாடம் திறமினோ!''

—கலிங்கத்துப்பரணி, கடைதிறப்பு.

என வரும் கலிங்கத்துப்பரணியின் கடைதிறப்புப் பாடல், மறுமலர்ச்சிக் கவிதையின் அழகுக்குப் பின்புலமாகின்றது. 'வெண்ணிலா' என்னும் பாடலில் கவிஞர் 'சோமு' காட்டும் கிராமியக் காதலர் பேசுங்குரலில் ஆண்குரல்,

''முத்துப் போலும் நிலவதிலே (ஒன்)
மூக்குத்தியைக் கண்டாக்கா
பித்துப் பிடிக்குதடி—தங்கரத்தினமே
பேசமுடியு தில்லை—பொன்னுரத்தினமே''

எனப் பாடுந்திறம் சுவையானது. நிலாவொளியே மயக்கும் எழில் வாய்ந்தது. காதலியின் மூக்குத்தியை அந் நிலாவொளியில் பார்த்தால், அன்புப் பைத்தியமாகி நிற்கும் நிலை காதலனுக்கு ஏற்படுதல் இயல்பே. மாறாத இளமையுள்ள காதலி; சிறுமிபோல் சிரிக்கின்றாள். சிரிப்பிலே பலவகை. கன்னத்திலே குழி விழும் மாயச் சிரிப்பு அவள் சிரிப்பு. அதை,

''சின்னப்பய மவ கணக்கா
செறுக்கி நீயும் சிரிக்கையிலே
கன்னத்திலே குளிவிளுது—தங்கரத்தினமே
கண்டுமனம் தவிக்குதடி—பொன்னுரத்தினமே''

என்று கிராமியக் காதலன் பேசும் வண்ணத்திற் கேட்கிறோமே, அது சாலச் சிறப்புடைத்தாகும்.

இத்தகைய மயக்கும் காதல் கவிஞர் பெ. தூரன் பார்வையில் ஒரு கனவுக் காட்சி தந்து மயக்குகிறது.

''தேனிலா ஊறுகின்ற சேல்விழிகள் யான்
கண்டேன்
வேனிலான் வில்போன்ற மென்புருவச் சீர்
கண்டேன்
புன்சிரிப்புப் புதுரோஜாப் பூத்திருக்கும் எழில்
கண்டேன்
கன்னக் குழிக்கவிதை கண்டு களிகொண்டேன்
மதனன் குடியிருக்கும் மார்புகண்டேன்
சென்றணைக்க
அதிவிரைவிற் பாய்ந்தெழுந்தேன்
அடடாநான் கண்விழித்தேன்.''

சங்க இலக்கியம் முதல் பாரதியார் காலம் வரை போற்றப்பட்ட காதல், இக்காலக் கவிஞர் குரலிலும் சிறந்து ஒலித்து, உணர்வில் ஓங்கி, மறுமலர்ச்சித் தமிழினை வளப்படுத்தி வருகின்றது. நாட்டையும் சமுதாய நிலையையும் மொழிப்பெருமையையும் பாடும் இக்காலப் புலவர்கள், காலம் மறவாக் காதலையும் பல்வண்ணக் கோலமாகப் பார்த்து உணர்ந்து பாடல் யாத்து வருகின்றனர்.

முடிவுரை

இவ்வாறாக இக்காலக் கவிதைப் போக்குகள் பல திறத்தனவாய் இலங்கக் காணலாம். பழமையில் வேர்விட்டுப் புதுமையிற் கிளை படர்ந்து செழித்து நிற்கும் ஆலமரமாய்க் கவிதை பிறங்குகின்றது. மரபுக் கவிதைகளில் காணலாகும் மாட்சிகளைக் காண்பதோடு, சமுதாய நோக்கமைந்த சீர்த்தியும் இக்காலக் கவிதைகளில் இலங்கிடக் காணலாம். காதலும் இயற்கையும் சங்ககாலக் கவிதையின் பாடுபொருள்களின் பயனாக அமைய, இக்காலக் கவிதைகளில் சமுதாயப் படப்பிடிப்புப் பாடுபொருளாய்த் துலங்கி, நெஞ்சில் சில அலைகளை ஏற்படுத்துகின்றது. சுருங்கக் கூறின் முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் இக்காலக் கவிதைகள் மக்கட் சிந்தனையார்வத்தினைத் தூண்டிவிடும் போக்கில் நிறைந்தொளிர்தல் காணலாம்.



தமிழ் வளர்ச்சியில் பகுத்தறிவு இயக்கத்தின் பங்கு

பேராசிரியர் டாக்டர் மா. நன்னன்

முதலில் தமிழ் வளர்ச்சி என்றால் என்னவென்பதை வரையறுத்துக் கொள்வது நல்லது. அரங்கின்றி வட்டாடக் கூடாதன்றோ? ஆகவே, இக் கட்டுரையின் தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சி என்றால் என்னவென்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டு அதன்பின் தமிழ் வளர்ச்சியில் பகுத்தறிவு இயக்கம் பெற்றிருக்கும் பங்கினையும் பாங்கினையும் கூறுவது முறையாகும். வளர்ச்சி என்பதற்கும் பருமை அல்லது வீக்கம் என்பதற்கும் வேறுபாடு உண்டு. குழந்தை வளர்கிறது என்பதற்கும், குழந்தை பருத்து இருக்கிறது என்பதற்கும் வேறுபாடு உண்டு. அதைவிட, குழந்தையின் உறுப்புகள் வீங்கி இருக்கின்றன என்பது மிகத் தெளிவான வேறுபாடு உடையதாகும். வளர்ச்சி என்பது பருவத்திற்கு ஏற்றதாகவும் வாழ்வுக்கு உதவக்கூடியதாகவும் இருக்கக்கூடியது. காலத்திற்கு ஒவ்வாத, வாழ்வுக்குப் பயன்படாதவற்றை வளர்ச்சி என்று அழைப்பதைவிட அவை பருத்திருக்கின்றன என்றோ வீங்கியிருக்கின்றன என்றோ கூறுவது பொருந்தும். இவ்வகையில் ஒரு மொழியின் வளர்ச்சி அம் மொழி பேசுவோரின் எண்ணிக்கையையோ அம் மொழியில் வெளிவந்த ஏடுகள், இதழ்கள், நூல்கள் போன்றவற்றின் எண்ணிக்கையையோ அடிப்படையாகக் கொண்டு கூற முடியாது. காலத்திற்கும், மக்களின் கருத்திற்கும், தேவைக்கும் ஏற்ப ஒரு மொழியினுடைய சொற்களும், அவற்றின் பயன்களும், அவற்றைக்கொண்டு வெளிவரும் ஏடு முதலியனவும் ஓங்கவேண்டும். அதுவே உண்மையான வளர்ச்சி. அவ்வகையில் தமிழ் மொழி வளர்ந்து இருக்கிறதா என்று ஆராய்வதும் அவ் வளர்ச்சி எவ்வளவில் உள்ளதென்று கணிப்பதும் இக் கட்டுரையின் நோக்கமன்று. ஆனால், தமிழ் வளர்ச்சியில் பகுத்தறிவு இயக்கம் எந்த அளவு பங்கு கொண்டு இருக்கிறது; அதன் தரமும் விளைவும் யாவை என்பனவற்றைக் குறிப்பிட்ட அளவில் விளக்க முயல்வதே இதன் நோக்கமாகும். ஆகவே, தமிழ் நாட்டில் பேச்சிலும் எழுத்திலும் — ஏடு, இதழ், நூல் போன்றவற்றிலும் பகுத்தறிவு இயக்கம் எந்த அளவு பங்குகொண்டு இருக்கிறது; அதனால் தமிழ் மக்களின் தரம், நோக்கம், விளைவு போன்றவற்றில் ஏற்பட்டிருக்கிற மாறுதலின் அளவு யாது என்பனவற்றை இக் கட்டுரையில் ஓரளவு காணலாம்.

தமிழ் வரலாற்றைப் பொதுவாகவும், தமிழ் இலக்கிய வரலாற்றைச் சிறப்பாகவும் நோக்கினால் தமிழின் வளர்ச்சி காலந்தோறும் வெவ்வேறு நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு நிகழ்ந்திருப்பதைக் காணலாம். சங்க காலத்தில் தமிழ் இலக்கியங்களின் நோக்கம் அகத்திலும் புறத்திலும் அடங்கிப் புலவர்கள் தம் உணர்வுகளை வெளிப்படுத்தவும், தம்மால் மதிக்கத் தகுந்தவர்களைப் பாராட்டவும், தம்மால் நாட்டுக்குத் தேவையானவர்கள் நல்லவர்கள் என்று கருதுபவர்களை வாழ்த்தவும், அதற்கு மாறானவர்களைக் கடியவும், தக்கார்க்குத் தக்க அறிவுரை கூறவும் அவற்றைப் பயன்படுத்தி இருக்கின்றனர். மேலும், இப்புலவர்களின் நோக்கம் இயற்கையைக் கூர்ந்து நோக்கி அதன் உண்மையை

உள்ளவாறு எடுத்து இயம்புவதும் ஆகும். சங்க காலத்தின் பிற்பகுதியில் புலவர்களின் நோக்கம், சமயக் கருத்துகளில் நழுவியிருப்பதைக் காணலாம். சங்கப் பாடல்களில் மட்டுமன்றிச் சங்கம் மருவிய இலக்கியங்களாகக் கூறப்படும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் சமயக் கருத்துகள் வலுவாக இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. சங்க இலக்கியப் பாதையை நன்கு திருப்பி, சமயத்தில் ஈடுபடுத்திய பெருமை அல்லது குறை சாத்தனாரைப் பெரிதும் சார்ந்தது. அதன் பிறகு இடைக் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் எல்லாம் முழுக்க முழுக்கச் சமயப் பாதையிலேயே சாய்ந்து சென்றிருப்பதை நன்கு காணலாம். இடைக்காலத்தின் பிற்பகுதியில் சமயப் போராட்டங்களுக்குப் பிறகு சமய ஒருமைப்பாடு என்னும் நோக்கம் தலைதூக்கியதையும் நாம் காண முடிகிறது. பிற்காலத்தில் நாட்டு உணர்வு, விடுதலை வேட்கை போன்றவை சமய உணர்வோடு இடைமிடைந்து தனித்துத் தலைதூக்கி நின்றதையும் நாம் காண்கிறோம். இச்சூழ்நிலையில்தான் சங்க இலக்கிய நோக்கத்தோடு ஒட்டிய மக்கள் வாழ்வியலை நேரிடையாக எடுத்து இயம்பும் இலக்கிய நோக்கம் தமிழில் ஏற்பட்டது. இந் நிலையில்தான் தமிழ் வளர்ச்சியில் பகுத்தறிவு இயக்கமும் ஈடுபடத் தொடங்கியது.

பகுத்தறிவு இயக்கம் என்பது யாது என்பதை இங்குச் சுட்டுவது தேவையானதாகும். பகுத்தறிவுப் பகலவன் என்றும், தமிழ்த் தலைவர் என்றும் தமிழ் கூறும் நல்லுலகால் போற்றப்படும் தந்தை பெரியார் அவர்கள் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் சுயமரியாதை இயக்கம் என்னும் ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்து, அதை நீதிக்கட்சி, பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், திராவிடர் கழகம் போன்ற பல்வேறு பெயர்களில் வளர்த்துத் தமிழகத்தில் மாபெரும் கருத்துப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார். இன்று தமிழகத்தில் உள்ள எல்லாச் சமயங்களிலும், எல்லாச் சாதிகளிலும், எல்லாக் கட்சிகளிலும், பிற அமைப்புகளிலும் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகள் நேரிடையாகவோ மறைமுகமாகவோ ஓரளவேனும் ஊடுருவி இருப்பதை மறுக்க முடியாது. சமய வழிபாடுகள், சமயச் சொற்பொழிவுகள், சமய எழுத்துகள் ஆகியவற்றில் பெரியாரின் சாயல் படிந்திருப்பதை இன்று யாரும் எளிதாகக் காணலாம். சமுதாய அமைப்புகளில்கூடப் பெரியாரின் கருத்துகள் அலைமோதுவதைக் காணமுடியும். கட்சிகள் என்று எடுத்துக்கொண்டால் பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துடையவர்கள் இல்லாத கட்சி என்று தமிழ் நாட்டில் எந்த ஒரு சிறு கட்சியையும் எடுத்துக் காட்டிவிட முடியாது. தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சிகளிலும் பெரியாரின் தொண்டர்கள் இருக்கின்றனர். சில கட்சிகளில் அவர்கள் கூடுதலாக இருப்பார்கள். வேறு சில கட்சிகளில் அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். ஆகவே, பெரியாரின் கருத்துகள் புகாத கட்சி ஏதுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். கலைத்துறையை எடுத்துக்கொண்டாலும் பெரியாரின் கருத்துகள் ஊடுருவி இருப்பதைக் காணமுடியும். நாடகம், பேசும் படம் ஆகிய துறைகளில் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகள் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணலாம். வழக்கு மன்றங்கள், ஆட்சி மன்றங்கள் ஆகியவற்றிலும், அரசுகள் அமைத்துத் தருகின்ற சட்டங்கள், விதிமுறைகள் ஆகியவற்றிலும், வழக்கு மன்றங்களில் வெளியிடப்படுகின்ற முடிவுகளிலும் பகுத்தறிவுக் கருத்துகள் கோலோச்சுவதை யாரும் காணலாம்.

கலைவாணர் என்று அழைக்கப்படும் என். எஸ். கிருட்டிணன் அவர்களின் படைப்புகளெல்லாம், பகுத்தறிவு அடிப்படையில் இருந்ததையும், அவற்றில் சிறப்பாகக் கிந்தனார், கிலகண்டர், சந்திரஹரி போன்றவை பகுத்தறிவு உணர்ச்சியைக் கிளறும் தன்மை வாய்ந்தவையாக இருந்ததையும் நாம் சுட்டிக் காட்டலாம். நடிகவேள் எம். ஆர். இராதா போன்றாரின் நாடகங்களின் வெற்றியையும் இங்கு நாம் நினைவுகூரலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழகத்தில் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியுமாகிய பெரிய கட்சிகள் இரண்டும் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு இருக்கின்ற கட்சிகளே யாகும். பிற எதிர்க்கட்சிகளிலும் பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் கட்சிகளும் இருக்கின்றன; நிலைமைக்கேற்ப ஓரளவு ஏற்றுக் கொள்ளும் கட்சிகளும் இருக்கின்றன. ஆகவே, தமிழகத்தில் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்கும் இக் கருத்துகளைப் பரப்புவதற்காகப் பெரியாரும் அவரது தளபதியான அண்ணாவும், இவர்களைச் சார்ந்த பிறரும் நடத்திய இயக்கம்தான் பகுத்தறிவு இயக்கம் என்று இக் கட்டுரையில் கொள்ளப்படுகிறது. ஆகவே, தமிழ் வளர்ச்சியில் பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் எந்த அளவு பங்கு பெற்றிருக்கிறதென்பதை இனிக் காண்போம்.

பகுத்தறிவுக் கொள்கை என்பதைத் திட்டவட்டமாக வகுத்து, வரையறுத்து அதை ஓர் இயக்கமாக நடத்தி வெற்றி கண்ட பெருமை பெரியார் அவர்களையே சாரும். ஆயினும், பெரியாருக்கு முன்னால் இதுபோன்ற கருத்துகளை யாரும் கூறவில்லை என்று சொல்லிவிட முடியாது. சித்தர்களும், அகவல் எழுதிய கபிலரும், ஆபுத்திரன் கதை எழுதிய சாத்தனாரும், பிற்காலத்து வந்த இராமலிங்க அடிகளாரும் பகுத்தறிவுக் கருத்துகளை ஓரளவு ஆங்காங்கே கூறிச் சென்றுள்ளனர். இவற்றையெல்லாம் இக் கட்டுரை தன் கணிப்பிற்கு எடுத்துக்கொள்ளவில்லை. ஏனெனில், அவர்களெல்லாம் ஏதேனும் ஒரு வகையில் சமயச் சார்பு உடையவர்களாகவோ, கடவுட்கொள்கை உடையவர்களாகவோ இருந்திருக்கிறார்கள். அதனால்தான் அவர்களின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை. சமயத்தையும் கடவுளையும்

சார்ந்து எழுந்த எந்தப் பகுத்தறிவுக் கொள்கையும் நிலைத்ததும் இல்லை; வெற்றிபெற்றதும் இல்லை. ஆகவே, அவற்றிலிருந்து முழுவதும் விலகி, முற்றிலும் பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டு எழுந்து, வளர்ந்து, நிலைத்து, வெற்றிபெறும் பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்தையே இக் கட்டுரை தன் கணிப்பிற்கு எடுத்துக்கொண்டுள்ளது.

உருசிய, சீன நாடுகள போன்ற பொதுவுடைமை நாடுகளில் பகுத்தறிவு இயக்கங்கள் அரசியலை நோக்கமாகக் கொண்டு புரட்சி முறையைப் பின்பற்றித் தம் கொள்கைகளைப் பரப்பின. ஆனால், பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை அவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பெரியாரின் இயக்கம் அரசியல் நோக்கம் உடையதன்று. அழிவுகளை விளைக்கக்கூடிய புரட்சி முறைகளைப் பெரியார் முற்றிலும் விரும்பாதவர். ஆகவே, சமுதாயத்தைத் திருத்தியமைக்கும் முறையில் அரசியல் நோக்கம் சிறிதும் இல்லாமல் அவர் தம் பகுத்தறிவு இயக்கத்தை வளர்த்தார். அதற்குப் பேச்சையும் எழுத்தையும் பெரிதும் துணையாகக் கொண்டு அவற்றிற்கு உதவியாக அமைதியானதும், வன்முறைக்குச் சிறிதும் இடமில்லாததும், பொதுச் சொத்துக்கோ தனியார் சொத்துக்கோ சிறிதும் அழிவு ஏற்படாததும், சட்டத்திற்கு உட்பட்டதுமான கிளர்ச்சிகளையும் அவர் மேற்கொண்டிருந்தார். ஆகவே, தமிழ் வளர்ச்சியில் பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்தின் பங்கு என்னும் தலைப்பில் பேச்சிலும் எழுத்திலும் அவ்வியக்கம் தமிழில் பெற்றுள்ள இடத்தையும், விளைத்துள்ள முன்னேற்றங்களையும், அவற்றின் அளவுகளையும் இங்குக் காணலாம்.

தந்தை பெரியார் அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தம் இடையறாத சுற்றுப்பயணத்தின்மூலம் தமிழகத்தின் சிற்றூர், பேரூர், நகரம் ஆகிய எல்லா இடங்களிலும் தம் கருத்துகளை எடுத்து முழங்கியிருக்கிறார். மணிக்கணக்கில் கேட்போருக்கோ தமக்கோ, சலிப்போ களைப்போ ஏற்படாமல் பேசுவதில் தந்தை பெரியார் நிகரற்றவர். அதிலும் மக்கள் விரும்பாததும் வெறுக்கக்கூடியதுமான கருத்துகளையும், அவர்கள் உயிரினும் மேலாக நம்பித் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றி வரும் பழக்க வழக்கங்களைத் தகர்க்கும் கருத்துகளையும் அவர்கள் விரும்பும்வண்ணம் எடுத்துரைப்பதில் பெரியார் ஈடற்றவர். உலகிலேயே பெரியாரைப்போல் மிகுதியாகச் சொற்பொழிவு ஆற்றி இருப்பவர்கள் யாரும் இருக்க முடியாது. சிறிய கூட்டமானாலும், மாபெரும் பொதுக்கூட்டம், மாநாடு போன்றவையானாலும் தமக்குத் தோன்றிய கருத்துகளை இயல்பான எளிய தமிழில் விருப்பு வெறுப்புக்கு இடமில்லாமல் துணிந்து பேசிய அவருடைய பேச்சுகள் தமிழகத்துச் சொற்பொழிவு மேடைகளைச் செம்மைப்படுத்தின. அவர்தம் மாணாக்கராகிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரோடு இணைந்தும் பின் பிரிந்து கூடியும் நின்று அம் மேடைத்தமிழுக்கு மெருகேற்றி அணிகலன்கள் பூட்டி நடமிட வைத்தார்கள். இவ்விருவரையும் போலவே இப் பேரியக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சொற்பொழிவாளர்கள் தமிழகமெங்கும் தென்றலாகவும் வாடையாகவும், கொண்டலாகவும் கோடையாகவும் உலாவித் தமிழ்மழை பொழிந்தார்கள். தமிழகத்தின் பக்தி இயக்கமோ பின் வந்த தேசிய இயக்கமோ இந்த அளவுக்குப் பேச்சுக்கலையில் ஈடுபட்டிருக்க முடியாது. அவ்வாறு அங்கிங்கெனாதபடி தமிழகமெங்கும் பேசிய அப் பகுத்தறிவுப் படையின் பெரும் தொண்டினால் தமிழகத்தின் மேடைப்பேச்சே புது வடிவம் பெற்று விளங்குகிறது. இன்றைய பேச்சாளர்கள் சமயத்தைச் சார்ந்தவராயினும், அரசியல் கட்சிக்காரராயினும், இலக்கியச் சொற்பொழிவாளராயினும், பிறர் யாரேயாயினும் தமிழக மேடைகளில் ஒலிக்கின்ற குரல்களில் எல்லாம் பகுத்தறிவு இயக்கத்தின் பாங்கு அமைந்திருப்பதைக் காணலாம். இதுமட்டுமன்றி வணக்கம், வாழ்த்து, நலம் போன்ற விழுமிய தமிழ்ச் சொல்லாட்சிகளை அரியணை ஏற்றியதும் அப் பகுத்தறிவு இயக்கத்தின் பணியேதான். மற்றும் தமிழர்களின் திருமணம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலும் தமிழ் மணம் கமழ்வது பகுத்தறிவு இயக்கம் தந்த கொடையாகும். தமிழ் இலக்கியங்களுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழர்தம் பண்பாடு, கலை போன்றவற்றுக்கும் ஏற்றம் கொடுத்ததும் பகுத்தறிவு இயக்கத்தின் உழைப்புதான்.

இனி, எழுத்துத் துறையில் அவ்வியக்கம் விளைத்துள்ள மாறுதல் குறிப்பிட்டுக் கூறத் தகுந்த சிறப்பு வாய்ந்ததாகும். எழுத்து நடையிலும், சொல்லாட்சியிலும் கருத்துகளை எடுத்துச் சொல்லும் முறையிலும் ஒரு தலைகீழ் மாறுதலை இவ்வியக்கம் ஏற்படுத்தியிருக்கிறது. பெரியார் தாம் பேசினவற்றிற்கெல்லாம் தாம் நடத்திய ஏடுகள் வாயிலாகவும், பிற நூல்களின் வாயிலாகவும் எழுத்து வடிவம் தந்துள்ளார். அப்போதைக்கப்போது விடும் அறிக்கைகளும், அவர் தீட்டும் கட்டுரை, தலையங்கம் போன்றனவும் ஒப்பற்ற உயர்வுடையனவாகும். அண்ணாவின் கைவண்ணம் கிண்கிணி அணிந்த பெண்ணின் நடனம்போல் தமிழ் எழுத்து நடைக்கு ஒரு புதுப் பொலிவைத் தந்தது. பெரியாரின் தொண்டர்களும் அண்ணாவின் தம்பிகளும் எழுதிக் குவித்திருக்கின்றவற்றை ஓரளவு தொகுத்துப் பார்த்தாலும் யாரும் மலைக்காமல் இருக்க முடியாது; அவ்வளவு மிகுதியாக அவர்கள் எழுதிக் குவித்திருக்கிறார்கள். அவற்றை வகுத்து உரைக்கும் முன் பெரியார்தம் அரிய முயற்சியால் விளைந்ததும் இன்றைய தமிழக அரசு ஏற்று நடைமுறைப் படுத்துவதுமான எழுத்துச் சீர்திருத்தத்தைக் குறிப்பிடவேண்டும். அறிவியல் முறையில் விளைந்துள்ள

இவ்வெழுத்துச் சீர்திருத்தம் தமிழுக்கு விளைக்கும் பயனை எதிர்காலம்தான் புரிந்துகொண்டு நுகர முடியும். ஏனென்றால், இன்றைய தமிழ் உலகம் அதை விளங்கிக்கொள்ளத் தயங்குகிறது என்று தோன்றுகிறது. முழுமையான எழுத்துச் சீர்திருத்தம் ஏற்பட்டுவிடுமானால் அது எழுத்திலும் மாணவர்களின் கல்வியிலும் ஏற்படுத்தக்கூடிய மிகப் பெரும் மாறுதலையும், அதனால் மக்கள் வாழ்வில் ஏற்படக்கூடிய மிகப் பெரும் விழுப்பத்தையும், அதனால் மக்கள் வாழ்வில் ஏற்படக்கூடிய கட்டுக்கடங்காத பயனையும் இங்கே சுட்டிக்காட்டத்தான் முடிகிறது. ஆகவே, பின்னால் விளைய இருக்கின்ற அவ்விமயமலை போன்ற பயனுக்கு இப்போது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற எழுத்துச் சீர்திருத்தம் ஒரு சிறு முன்மாதிரி என்றுதான் சொல்ல வேண்டும்.

இனி, பகுத்தறிவு இலக்கியங்களின் பரப்பைக் காணலாம். தமிழகத்தில் சிந்தனை முறையையே மாற்றி அமைத்து மாபெரும் அறிவுப் புரட்சியை ஏற்படுத்த உதவிய பகுத்தறிவு இலக்கியங்களின் பரப்பை முழுமையாகக் காண முடியவில்லை. பெரியார், அண்ணா போன்றவர்கள் படைத்தவை பெரும்பகுதி கிடைக்கின்றன. அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள பெருமக்கள் படைத்தனவும் பெரும்பாலும் கிடைக்கின்றன. ஆனால், இப் பகுத்தறிவு இலக்கியங்களைப் படைத்தவர்கள் அறிஞர்களும் பெருமக்களும் மட்டுமன்றிச் சிற்றூர்களில் வாழ்கின்ற மிகப்பல எளிய மக்களும் ஆவர். அவர்கள் படைத்தனவெல்லாம் அவ்வக் காலத்தே அவ்வப் பகுதிகளில் செல்வாக்குப் பெற்றுச் சமுதாயப் புரட்சிகளைத் தூண்டின என்றாலும் அவற்றையெல்லாம் இப்போது காண முடியவில்லை. அவற்றைத் தொகுக்கின்ற பணியில் இறங்கினால் நூற்றுக்கணக்கில் நாடகங்களும், கவிதைகளும், கட்டுரைகளும், அறிக்கைகளும், வில்லுப்பாட்டுப் போன்ற கலை இலக்கியங்களும், வினாவிடைகளும் கிடைக்கக்கூடும். குறுகிய காலத்தில் சிறு முயற்சியால் திரட்டப்பட்டனவே இக் கட்டுரையின் கணிப்பில் இடம் பெறுகின்றன.

முதலில் பகுத்தறிவு இலக்கியங்களைப் படைப்பவர்களின் எண்ணிக்கையைக் (எமக்குக் கிடைத்த வரை) காணலாம். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் தவிர, நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, பாரதிதாசன், கைவல்யம், குத்தூசி குருசாமி, உடுமலை நாராயண கவி, கா. திரவியம், கி. வீரமணி, திருச்சி ஆனைமுத்து, நெ. து. சுந்தரவடிவேலு, முடியரசன், சுரதா, வாணிதாசன், பொன்னிவளவன், சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன், இரா. செழியன், பேராசிரியர் க. அன்பழகன், புலவர் குழந்தை, ப. உ. சண்முகம், சாமி சிதம்பரனார், கவிஞர் கருணானந்தம், ஏ. பி. செனார்த்தனம், புலவர் புலமைப்பித்தன், க. இராசாராம், ப. சீவானந்தம், தா. பாண்டியன் ஆகியோர் உள்ளிட்ட 130-க்கு மேற்பட்ட பெருமக்களை அறிய முடிகிறது.

அவர்களில் தந்தை பெரியார் அவர்கள் எழுதி வெளியிட்ட எழுத்துகளின் பரப்பைக் காணலாம். திராவிடன், விடுதலை, குடியரசு, உண்மை போன்ற ஏடுகளில் வெளிவந்த அவர்தம் எழுத்துகளைத் தவிரப் பெரியார் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் 114-க்கு மேல் உள்ளன. அவற்றுள் இராமாயண ஆபாசம், கற்ப ஆட்சி, சோதிடப் புரட்டு, பொதுவுடைமைத் தத்துவங்கள், பெண் ஏன் அடிமையானாள், பிரகிருதி வாதம், மதம் என்றால் என்ன, இனிவரும் உலகம், இதிகாசங்களின் தன்மைகள், இராமாயணப் பாத்திரங்கள், தமிழ் இசை நடிப்புக் கலைகள், உண்மைத் தொழிலாளி யார், தத்துவ விளக்கம், திராவிடர் ஆரியர் உண்மை, மொழி, எழுத்து, மொழி ஆராய்ச்சி, சிந்தனைத் திரட்டு, கடவுள், வாழ்க்கை ஒப்பந்தம், சித்திராபுத்திரன் கட்டுரைகள், கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே, தாய்ப்பால் பைத்தியம், அறிவு விருந்து, கடவுளும் மனிதனும், கடவுள் குழப்பம், சுயநலம் பிறர்நலம், பெரியாரின் மரண சாசனம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை தவிரப் பெரியார் அவர்கள் வெளியிட்டுள்ள பிறர் எழுதிய நூல்கள் எழுபதுக்குமேலுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம். ஞானசூரியன், இந்தியாவின் குறைபாடுகள், லெனினும் மதமும், இராமாயண ஆராய்ச்சி, பாரத ஆராய்ச்சி, நான் ஏன் கிருத்துவன் அல்ல, பகுத்தறிவு அல்லது கத்தோலிக்க குருவின் மரண சாசனம், தமிழர் தலைவர், பிர்லா மாளிகையின் மர்மங்கள், பெரியபுராண ஆராய்ச்சிகள், காரல் மார்க்ஸ், கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? போன்றனவே அவை.

இனி, பகுத்தறிவு இயக்கத்தின் சார்பில் வெளிவந்துள்ள இலக்கியங்களை வகைப்படுத்திக் காணலாம். அவற்றை முறையே காப்பியங்கள், கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள் என்னும் ஆறு வகையில் வகுத்து மதிப்பிடலாம். அவற்றுள் காப்பியங்கள் என்னும் பிரிவில் பதினோரு நூல்கள் கிடைக்கின்றன. பாரதிதாசன் அவர்களின் காப்பியங்கள் ஆறும், புலவர் குழந்தை அவர்களின் காப்பியம் ஒன்றும், வாணிதாசன் காப்பியம் இரண்டும், முடியரசன் எழுதின இரண்டும் ஆகப் பதினோரு காப்பியங்கள் நம் நினைவுக்கு வருகின்றன. பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி, குறிஞ்சித்திட்டு போன்றனவும் தமிழ் இலக்கிய உலகில் புது மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன. புலவர் குழந்தையின் இராவண காவியம் இலக்கிய உலகில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியிருக்கிறது. கவிஞர் வாணிதாசன், முடியரசன் ஆகியோர் காப்பியங்களும் நல்ல விளைவை ஏற்படுத்தியுள்ளன.

கவிதை என்னும் தலைப்பில் ஏராளமான நூல்கள் பகுத்தறிவு இயக்கத்தின் சார்பில் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் 80-க்கு மேற்பட்ட நூல்கள் குறிப்பிடத் தகுந்த சிறப்புடையனவாக இருக்கின்றன. ஏனையவும் சிறப்புடையவையே. அவற்றுள் பாரதிதாசன் கவிதை முதற்பாகமும் மற்றும் அவர்தம் அழகின் சிரிப்பு, தமிழ் இயக்கம், குடும்ப விளக்கு, இருண்ட வீடு போன்ற 25-க்கு மேற்பட்ட நூல்கள் இன்றும் தமிழர்களின் நாடி நரம்புகளில் எல்லாம் சூடேற்றிக்கொண்டு வாழ்வதைக் காணலாம். கவியரசு கண்ணதாசன் அவர்களின் கவிதைகள் முதல் இரு தொகுதிகளும், உவமைக் கவிஞர் சுரதாவின் பட்டத்து அரசி, தேன்மழை போன்றனவும், வாணிதாசனின் வாணிதாசன் கவிதைகள், இன்ப இலக்கியம், எழிலோவியம் போன்றனவும், முடியரசன், கவிஞர் கருணானந்தம், புலமைப் பித்தன், சாலை இளந்திரையன் ஆகியோர் யாத்துத் தந்துள்ள கவிதைகளும் அறிவு மணம் பரப்பும் வாடா மலர்களாகத் திகழ்கின்றன.

புதினங்கள் என்று எடுத்துக்கொண்டால் பகுத்தறிவு இயக்கத்தின் சார்பில் வந்த படைப்புகள் 44 அறியக் கிடைக்கின்றன. அறிஞர் அண்ணாவின் தன்னேரில்லாத நாவல்கள் மற்றும் கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இராதாமணாளன், டி. கே. சீனிவாசன், தில்லை வில்லாளன் போன்றோரின் படைப்புகளும் தமிழ்ப் புதின உலகில் உண்மையான புதுமையை விளைத்துள்ளன.

சிறு கதைகள் ஏராளமாக அவ்வப்போது வெளி வந்துள்ளன. அவற்றைக் கணக்கிடாது நூல் வடிவில் வந்துள்ளவற்றை மட்டும் கருதினால் 29 சிறு கதைத் தொகுப்புகள் கிடைக்கின்றன. இக் கதைகள் ஒவ்வொன்றும் சின்னஞ்சிறு கற்கண்டுகளாகவும் மாந்தரின் மடமை நோயைப் போக்கும் சிறுசிறு மாத்திரைகளாகவும் இருக்கக் காண்கிறோம்.

நாடகம் என்னும் பிரிவு, தமிழில் பகுத்தறிவு இயக்கம் ஒன்றினாலேயே புதுவாழ்வு பெற்றதென்று கூறலாம். அந்த அளவிற்கு நாடகம் செப்பனிடப்பட்டுச் சீரணி பூண்டு, புதுமணம் பரப்பிப் பொலிவோடு இன்றும் உலாவரச் செய்த பெருமை பகுத்தறிவு இயக்கத்தையே சாரும். எளிதாக எமக்குக் கிடைத்துள்ள நாடகங்கள் மட்டும் நாற்பதைத் தாண்டுகின்றன. அவற்றுள் அண்ணா எழுதியவை மட்டும் பன்னிரண்டு. அவ்வாறே பாரதிதாசன், கலைஞர் கருணாநிதி, சி.பி. சிற்றரசு, புலவர் குழந்தை, திருவாரூர் தங்கராசு போன்றவர்களால் எழுதப்பட்டுள்ள நாடகங்களும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இனி, கட்டுரைகள் என்று எடுத்துக்கொண்டால் அவற்றைக் கணக்கிடமுடியாது. நூல்களாக வந்தன மட்டும் 130-க்குமேல் உள்ளன. பெரியார், அண்ணா போன்றோரே யன்றி, நாவலர், ஈ.வெ.கி. சம்பத், ஆசைத்தம்பி, மதியழகன், சி.பி. சிற்றரசு போன்றோரின் எழுத்துகள் வைரம் போன்று உறுதியும் ஒளியும் உள்ளனவாகும்.

பகுத்தறிவு இயக்கத்தினால் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவென்று ஏராளமான நாளேடுகளும், திங்களிதழ்களும், கிழமை இதழ்களும் அவ்வப்போது வெளிவந்திருக்கின்றன. ஆங்கிலத்திலும் தமிழிலுமாக வெளிவந்துள்ள அவ்வேடுகளின் எண் 109-ஐக் கடக்கிறது என்றால் யார்தான் வியக்காமல் இருக்க முடியும். இவை யாவும் அணுகுண்டுகளாகவும், கோடையிடிகளாகவும், குறி தப்பாத கணைகளாகவும், பயிர் வளர்க்கும் மழையாகவும், இனிமை தரும் தென்றலாகவும் திகழ்ந்து, தகர்க்கவேண்டியவற்றைத் தகர்க்கவும், படைக்கவேண்டியவற்றைப் படைக்கவும், காக்க வேண்டியவற்றைக் காக்கவும் பயன்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிலவற்றின் பெயர்களை மட்டும் இங்குக் காணலாம். குடியரசு, விடுதலை, ஜஸ்டிஸ், திராவிடன், ரிவோல்ட், திராவிட நாடு, நகரதூதன், சண்டே அப்சர்வர், போர்வாள், பொன்னி, குயில், கதிரவன், தீப்பொறி, மன்றம், புதுவாழ்வு, தோழன், நியூ ஜஸ்டிஸ், ஸ்பார்க், பிராகிரஸ், மாலைமணி, தனிஅரசு, நம்நாடு, தென்னகம், காவியம், அண்ணா, ஹோம்லாண்ட், ஹோம்ரூல், காஞ்சி, திருவிளக்கு, பகுத்தறிவு, முரசொலி, குத்தூசி ஆகியன அவை.

இக் கட்டுரையின் இறுதியில் பகுத்தறிவு இயக்கத் தொடர்பாக இன்று இந் நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிகளைக் கணக்கிட்டால் அவை அறுபதை நெருங்குவதைக் காணமுடிகிறது. இஃது உலகப் பேரறிவாளர்களின் பார்வையை இந்த இயக்கம் எந்த அளவு கவர்ந்து இருக்கிறது என்பதைக் கலங்கரை விளக்கம்போல் எடுத்துக் காட்டும். அவற்றுள் பகுத்தறிவு இயக்கங்கள்பற்றி பதின்மூன்று ஆராய்ச்சிகளும், பெரியார் இயல்பற்றி பதினாறு ஆராய்ச்சிகளும், அண்ணாவின் இலக்கியங்கள்பற்றி பன்னிரண்டு ஆராய்ச்சிகளும், பாரதிதாசன் இலக்கியங்கள்பற்றி எட்டும், கலைஞரின் இலக்கியங்களைப் பற்றி ஒன்பதும் ஆக 58 ஆய்வுகள் எளிதாக அறியப்பட்டன. முயன்று முழுமையாகத் தேடினால் இந்த எண்ணிக்கை மேலும் கூடலாம்.

இதுவரை கூறப்பட்டன யாவும் பகுத்தறிவு இயக்கம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெற்றிருக்கிற பங்கும் பாங்கும் இவையென அறிய ஓர் அளவு பொதுவாகச் சுட்டிக் காட்டப்பட்டனவேயன்றி முழுமையாகத் தொகுத்து விளக்கப்பட்டன அல்ல. இத்துறை ஆய்வாளர் பலருக்கும் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பல முனைகளிலும் பயன்படக் கூடிய பன்மணிச் சுரங்கப் புதையலாகும். ஆய்வு உலகம் இதைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளுமென்று நம்புகிறேன்.



தமிழில் திறனாய்வுக் கலை

கலாநிதி க. கைலாசபதி

உலகிலுள்ள இலக்கியங்களின் வரலாற்றை நோக்கும்பொழுது காலத்துக்குக் காலம் புதிய இலக்கிய வகைகளும் வடிவங்களும் ஒவ்வொரு மொழியிலும் தோன்றி மலர்ச்சி பெறுவதைக் காணலாம். அவ்வாறு தோன்றும் புதிய பிரிவுகளும் துறைகளும் வெவ்வேறு மூலங்களைக் கொண்டிருப்பதையும் நாம் அவதானிக்கலாம். ஒரு பொருள் தோன்றி இயங்குவதற்கு அகக் காரணிகளும் புறக் காரணிகளும் செயற்படுகின்றன. இத்தகைய காரணிகளுள் வேற்றுமொழி இலக்கியத் தொடர்பும் ஒன்று. மேனாட்டு இலக்கியத் தொடர்பினாலும் பரிச்சயத்தினாலும் தமிழில் எழுந்த இலக்கியத் துறைகளில் ஒன்று திறனாய்வுக்கலை. திறனாய்வுக் கலை என்று சிறப்பித்துக் கூறுவதில் தடையெதுவும் இல்லையெனினும், திறனாய்வு என்று பொதுப்படக் கூறுவதே சாலச் சிறந்ததாகும். சிறுகதைக்கலை, மேடைப்பேச்சுக்கலை என்று வழங்குவதைப்போலத் திறனாய்வுக்கலை என்று கூறலாமாயினும் திறனாய்வின் பண்பு, பணி, பயன்பாடு ஆகியவற்றை முழுமையாக நோக்குமிடத்து அதனை மேற்கொள்பவரின் ஈடுபாடு, தனித்திறமை, சுவைத்திறன் என்பவை மாத்திரமன்றிப் பொதுநிலையில் வைத்தெண்ணக் கூடிய அறிவுபூர்வமான முறையிலும் அதன் செயற்பாட்டிற்கு இன்றியமையாததாய்த் தோன்றுகிறது. திறனாய்வு கலையாகக் கருதப்படும் அதேவேளையில் நவீன ஆய்வாளர்கள் சிலரால் அது விஞ்ஞானத்தின் பண்புகளைப் பெற்றிருக்கவேண்டுவதொன்றாயும் விவரிக்கப்பட்டுள்ளது. சமூக விஞ்ஞானவியல் துறைகள் பலவற்றின் துணையைத் திறனாய்வு அவாவி நிற்றலால் பல்துறை அறிவும் பரந்த கல்வியும் திறனாய்வாளனுக்கு இன்று அத்தியாவசியமாயுள்ளன. திறனாய்வைப்பற்றி எழுதும்பொழுது இக் கருத்து நினைந்துகொளற்குரியது.

இருபதாம் நூற்றாண்டிலேயே தனித்த ஒரு துறையாக வளர்ந்துவரும் திறனாய்வு, முற்காலத்தில் இருந்ததா என்னும் கேள்வி அவ்வப்போது எழுப்பப்படுவதுண்டு. அதுபற்றிய விசாரம் இவ்விடத்தில் ஏற்ற ஒன்றன்று. எனினும் கூர்ந்து கவனித்தால் திறனாய்வு நோக்கும் திறனாய்வுப் பண்பும் பழங்காலத்திலிருந்தே கருநிலையில் இருந்து வந்துள்ளமை புலனாகும். உண்மையில் கவிதை பிறந்த வேளையிலேயே அதுபற்றிய கருத்தும் பிறந்துவிட்டது எனலாம். ஆயின், அக் கருத்து ஆய்வுமுறையாகப் பரிணமித்தது மிகவும் பிற்பட்ட காலத்திலேயே என்பதில் ஐயமில்லை. தமிழிலக்கிய வரலாற்றுப் பரப்பை நோக்கினால், சான்றோர் செய்யுட்களைத் தொகை நூல்களாக்கிய ஆசிரியர்களிலிருந்து, இப்பொழுது **திருவள்ளுவமாலை** என வழங்கும் தனிச் செய்யுட்களை இயற்றிய புலவர்கள், பல்வேறு நூல்களுக்குப் பாயிரங்கள் ஆக்கியவர்கள் உட்பட, காலந்தோறும் பழந்தமிழ்ப் பனுவல்களுக்கு உரைகளியற்றி அவற்றுக்கு விளக்கம் தந்து சிறப்புச்செய்த இடைக்கால ஆசிரியர்கள் வரை நூல்களின் உயர்வை உள்ளி இலக்கிய இலக்கணப் பணியாற்றியோரெல்லாம் அடிப்படையில் திறனாய்வு நோக்குடையோராய் இயங்கினர் என்பதில் ஐயமில்லை.

ஆயினும், தொகுப்பாசிரியர்களும், பாயிரங்கள் இயற்றியோரும், உரையாசிரியரும் திறனாய்வைத் தனிச் சிறப்பியல்புகளும் தனிப் பண்புகளும்கொண்ட ஓர் ஆய்வறிவு முயற்சியாகவோ துறையாகவோ கருதினாரல்லர். பழந்தமிழ்ப் பனுவல்களுக்கும் இலக்கியங்களுக்கும் பிற்காலங்களில் வாழ்ந்தவருக்கும் இடைப்பட்ட காலத்தின் அகலத்தால் பொருள் மயக்கமும் தெளிவின்மையும் உணர்வு முரண்பாடுகளும் நிலவிய வேளைகளில் அவற்றை நீக்குமுகமாகப் பழந்தமிழ் நூல்களுக்கும் பிற்காலத்தவருக்கும் இயைபு உண்டாக்க முயன்றதன் விளைவே உரை முயற்சிகள். முற்காலத்து நூல்களை—பாரம்பரியச் சிறப்புடைய பனுவல்களை—பேணிப் பாதுகாப்பதும் அதற்கு அநுசரணையாக அந்நூல்களுக்கு விளக்கக் குறிப்புரைகள் கூறுவதுமே உரையாசிரியரின் பிரதான குறிக்கோள்களாயிருந்தன. இவற்றைச் செய்யும்போது ஆங்காங்கே இடையீடாக நூல்களின் அல்லது நூற் பகுதிகளின் தரத்தையும் நயத்தையும் மனங்கொண்டு சிற்சில 'திறனாய்வு'க் குறிப்புகளையும் கூறிச் சென்றனர். உரையாசிரியர்கள் அனைவரும் இத்தகைய திறனாய்வுக் கூற்றுகளைக் கூறினர் என்பதற்கில்லை. **திவ்வியப் பிரபந்தத்**திற்கு உரையெழுதிய சிலரும், பேராசிரியர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலிய சிலரும் கூரிய திறனாய்வுப் பார்வை பெற்றிருந்தனர் என்று கூறுவது பொருத்தமாகும். உரையாசிரியர்களிடத்து அவ்வப்போது பளிச்சிட்டுத் தெறித்த திறனாய்வுக் கருத்துப் பாய்ச்சல்களுக்கு எடுத்துக்காட்டாகத் **தொல்காப்பியம்** செய்யுளியலில்,

> "மரபே தானும்
> நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று"

என்னுஞ் சூத்திரத்துக்குப் பேராசிரியர் கூறியுள்ள உரைப் பகுதியைக் குறிப்பிடலாம்.

"எனவே, சொல்லும் பொருளும் அவ்வக்காலத்தார் வழங்குமாற்றானே செய்யுள் செய்க என்பதாயிற்று. இதனது பயன், ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து இலவாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய. அதோளி, இதோளி, உதோளி எனவுங் குயின் எனவும் நின்ற இவை ஒரு காலத்துளவாகி இக்காலத்தில வாயின. இவை முற்காலத்துளவென்பதேகொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல் செய்த காலத்துளவாயினும் கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந் தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர். .... இனிப் பொருளும் இவ்வாறே காலத்தானும் இடத்தானும் வேறுபடுதலுடைய. ஒரு காலத்து அணியுங் கோலமும் ஒரு காலத்து வழங்காதனவுள. ஓரிடத்து நிகழும் பொருண் மற்றோரிடத்து நிகழாதனவுமுள. அவ்வக்காலமும் இடனும் பற்றி ஏற்றவாற்றாற் செய்யுள் செய்ய வேண்டுமென்பது. .... மற்றும் நாற்சொல்லியலென்பது வழக்காயின் அது செய்யுட்குரிய திரிசொற்கும் ஏற்றவாறென்னையெனின், அவையுஞ் சான்றோர் வழங்கினவாறன்றி வேறுபட நாட்டப்படாவெனவும் அவற்றுள்ளுங் காலம்பற்றித் திரிந்தனவும் உளவாயினும் அவை தவிர்த்துச் செய்யுள் செய்யப்படும் என்றற்கும் 'நாற்சொல்லியலான்' என அடங்கக் கூறினாரென்பது..............''

பேராசிரியரது உரையிலே விதிமுறையாற் கட்டுப்படுத்துகிற தொனி கேட்கத் தக்கதாயிருப்பினும் இலக்கியவாக்கத்தில் எழும் பிரச்சினைகளை அலசும் தன்மை தெரிகிறது. எனினும் பொதுவில், இடைக்கால உரையாசிரியர்களுக்கு இலக்கியத்திலும் பார்க்க இலக்கணத்திலேயே நாட்டம் கூடுதலாக இருந்தது. முற்காலத்து இலக்கியத் 'திறனாய்வு' இலக்கணம், தத்துவம் (சாத்திரம்) ஆகிய இரண்டிற்கும் துணையாகப் பயன்பட்டது.

இவ்விடத்திலே ஒன்று கூற வேண்டும். திறனாய்வு என்ற கருத்துருவம் பழங்காலத்திலே தோன்றாமற் போனது போலவே, 'இலக்கியம்' என்ற எண்ணப் படிவமும் இருக்கவில்லை. செய்யுள், நூல், பாட்டு முதலிய சொற்கள் இலக்கிய வடிவங்களைக் குறிக்கப் பயன்பட்டன. பொருள் அடிப்படையில் 'இலக்கியம்' என ஒரு பிரிவை முன்னோர் வகுக்கவில்லை. நாலடியாரும், நற்றிணையும், சிவராத்திரி புராணமும், சிலப்பதிகாரமும் புலமையுடையோர் இயற்றிய போற்றற்குரிய நூல்களாகவே கொள்ளப்பட்டன. பெரும்பாலும் பா வகைகளால் தனித்தனி நூலைக் குறிப்பிட்டனரே யன்றி, பண்பின் அடிப்படையில் பல நூல்களுக்குப் பொதுவான அம்சங்களைக் கண்டு இலக்கியம் என்னும் சொல்லால் அவற்றைக் குறித்தாரல்லர். பிற்பட்ட காலத்திலேயே அத்தகைய ஒரு வழக்காறு உண்டாகியது. ''இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்'' என்று **நன்னூல்** கூறுகின்றதாயினும் 'இலக்கியம்' என்பதற்கு விளக்கம் கூற முற்படவில்லை. நூல் என்ற வழக்கே இலக்கணவாசிரியராற் பெரும்பான்மை பயன்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

> "அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே"

என்று நன்னூற் சூத்திரம் கூறுகையில் அச் சந்தர்ப்பத்தில் 'நூல்' என்பதற்குப் பதிலாக 'இலக்கியம்' என்று இருந்திருந்தால் பொருத்தமாயிருக்கும் என எண்ணத் தோன்றுகிறதன்றோ? பயனைப் பிரதானமாகக் கருதாது படிக்கும்போது இன்பமளிப்பதையே முக்கியப் பண்பாகக் கொண்டு 'இலக்கியம்' என்ற பொருளுக்கு வரைவிலக்கணம் கூறும் நிலை மிகவும் பிற்காலத்திலேயே தோன்றியது. எத்தனையோ பா வகைகளைப்பற்றிக் கூறும் தொல்காப்பியர் இலக்கியம் என்ற சொல்லையோ எண்ணத்தையோ குறிப்பிடாமை சிந்திக்கற்குரியது. நிலைமை

அவ்வாறிருக்கையில் இலக்கியத் திறனாய்வு என்ற கருத்து அந் நாட்களிலே தோன்றாமை வியப்புக் குரியதல்லவே! அ. ச. ஞானசம்பந்தன் கூறி யிருப்பது பொருத்தமே.

''மிகச் சிறந்த இலக்கியம் தோன்றி வளர்ந்த தமிழ்மொழியில் என்ன காரணத்தாலோ 'திற னாய்வு' நூல்கள் தோன்றாமற் போய்விட்டன. ஒருவேளை இருந்திருப்பின் அவை நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், கிடைத்த நூல்களை யும் நூற்பகுதிகளையும் கொண்டு பார்த்தால், திறனாய்வு இலக்கியம் தமிழ் நாட்டில் தோன்ற வில்லை என்று கூறுவதே சிறந்தது எனத் தோன் றுகிறது. முடிபு கூறும் இயல்பும், குறைவுநிறைவு கூறும் இயல்பும் படைத்த திறனாய்வு நூல்கள் இல்லை...........''

மேனாட்டார் தொடர்பாலும் தமிழ்ச் சமுதாயத் திலே ஏற்பட்ட மாற்றங்களையொட்டித் தோன்றிய சிந்தனை விருத்தியாலும் இந் நூற்றாண்டிலே உருப் பெற்ற திறனாய்வுத்துறை தனித்து இயங்கும் ஓர் இலக்கியப் பிரிவாக விளங்குகிறது. மேலே நான் குறிப்பிட்டது போல மொழியியல், உளவியல், மானிடவியல், பொருளியல், சமூகவியல், வரலாற் றியல் முதலிய பல்துறைகளின் செல்வாக்கையும் பரஸ்பர செயல்விளைவையும் நவீன இலக்கியத் திறனாய்விற் காணலாமெனினும், அது தன்னளவில் முழுமையான இலக்கியப் பிரிவாகவும் வளர்ந்துள்ள மையைத் தெளிந்துகொள்ளலாம். இவ் விகசிப்பின் விளைவாகத் தற்காலத் திறனாய்வு, முற்காலத்து இலக்கிய ஆராய்ச்சிகளிலிருந்து பல விதங்களில் வேறுபடுகிறது. குறிப்பிடத்தக்க வேறுபாடுகளில் இரண்டினை இங்குக் குறிப்பிடுதல் தகும்.

ஒன்று: இடைக்கால உரையாசிரியர்கள் தமது சொந்தக் கருத்துகளுக்கு முக்கியத்துவமும் முன் னுரிமையும் வழங்கவில்லை. அதாவது ஆய்வாள னது அல்லது உரையாசிரியனின் சுய சிந்தனைக்கோ புதுக் கருத்து மாற்றத்திற்கோ இடமளிக்க வில்லை. தனக்கு முற்பட்ட காலத்து நூலை ஆய்வோன் அந் நூலின் விளக்கத்தில் தனது ஆளு மையைச் செயற்படுத்தல் ஆகாது என்னும் நம் பிக்கை — மரபுணர்ச்சி — ஆழ வேரூன்றியிருந்தது. வேத வழக்கொடும் சான்றோர் வழக்கொடும் மாறு படக் கூறுதல் குற்றம் என்ற கருத்தைப் பேராசிரி யர், நச்சினார்க்கினியர் முதல் சபாபதி நாவலர் ஈறாகப் பலரும் இடித்துரைப்பதைக் காண்கிறோம். இதன் விளைவாகத் தவிர்க்க இயலாதவாறு தமது காலத்து நோக்குகளையும் செல்நெறிகளையும் ஒட் டிச் சில பல நூதன சிந்தனைகளையும் விளக்கங் களையும் கூறிய வேளைகளிலும் அவை மூல நூலா சிரியரின் கருத்துகளே என விடாப்பிடியாக வாதிட்டு வற்புறுத்தினர். புதிய கருத்தையும் மிகப் பழமை யானது என்று கூறுவதனாலேயே போற்றத்தக்க தாக்கினர். இத்தகைய மனப்பான்மைக்கு மாறாக, நவீன திறனாய்வாளர் ஆராய எடுத்துக்கொண்ட நூலைப்பற்றியோ ஆசிரியரைப்பற்றியோ தமது கருத்து என்ன என்பதையே முதன்மைப்படுத்திக் கூறுவர். அதற்கியைய வாசகரும் திறனாய்வாளன் புதிதாக யாது கூறுகிறான் என்பதற்கே முக்கியத் துவம் அளிக்கின்றனர். நமது காலத்திலே நூலா சிரியன் தகைமைபற்றியும், இலக்கிய இரசனை, வாசகர் வேட்கை இவற்றிலும் நிகழ்ந்துள்ள மாற் றங்களை இது பிரதிபலிக்கிறது என்பதில் ஐயமில்லை.

மற்றொன்று: மூல நூலாசிரியருக்குப் புகழ்தேடும் நோக்கத்தினால் தமது கருத்துகளையும் அவர் கருத் தாகக் கூறுவதைப் போலவே, பழைய நூல்களிற் குறை காணவும் கூறவும் கூசி அஞ்சினர் உரையாசிரி யர். குறிப்பாக 'மெய்யுணர்வுடையனாகிய முற்ற உணர்ந்தோன் செய்த' முதனூலை மதிப்புடனும் பய பக்தியுடனும் அணுகினர். முற்பட்ட சான்றோரைப் பற்றிக் குறிப்பிடுகையில் பேராசிரியர், (தொல் காப்பியம், மரபியலில்), ''அவர் புலவுத் துறந்த நோன்புடையாராகலாற் பொய் கூறாராகலானு மென்பது'' என்று கூறுவது இத்தகைய போற்ற லுணர்ச்சிக்குச் சான்று பகரும். இவற்றின் காரண மாக, போற்றக்கூடிய நூல்களுக்கு அன்றி ஏனைய வற்றுக்கு உரையாசிரியர்கள் குறிப்புரைகள் கூற வில்லை. காலத்தை வென்றனவாய்க் கணிக்கப் பெற்ற புகழ்வாய்ந்த நூல்களுக்குப் பலர் உரைகள் இயற்ற முனைந்தனரேயன்றிச் சம காலத்து நூல் களுக்கோ அதிகம் அறியப்படாத ஆக்கங்களுக்கோ கருத்துரை வழங்க எண்ணினாரல்லர்.

நவீனதிறனாய்வின் பிரதான அம்சங்களிலொன்று, மரபுவழி வரும் விதிகளுக்கு அமைய நூல்களை மதிப்பீடு செய்யாமையாகும். இது முறையியல் சம்பந்தமான பிரச்சினையாகும். பண்டைய உரை யாசிரியர்களும், தொகுப்பாசிரியர்களும், அவர் போன்ற பிறரும் சிற்சில இலக்கண இலக்கிய 'விதி கள்', 'பிரமாணங்கள்', 'முறைமைகள்' ஆகிய வற்றை ஏற்றுக்கொண்டு அவற்றின் ஏற்புடைமை யைக் கருதியே ஒரு நூலை அங்கீகரித்தனர். அவர் களைப் பொறுத்தமட்டில் 'விதிகள்' முக்கியமான வையாய் விளங்கின. மரபிலிருந்து வழுவாமை மதிக்கப்பட்டது. முறையைப் பேணியமையாலேயே அதினின்று வழுவுதலை 'முறைமறந்தறைதல்' என்னும் குற்றமாய்க் கருதினர். (இலக்கணக் கொத்து ஆசிரியர் சுவாமிநாத தேசிகர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்). வழுவை நோக்கியே வழு வமைதி என்ற கோட்பாடும் எழுந்ததன்றோ? நவீன திறனாய்வாளரோ புதியன புகுதலையும் புகுத்தப் படுதலையும் இன்றியமையா அம்சங்களாகக் கருதி ஒவ்வொரு நூலையும் மதிப்பிட முற்படுவர். இன் னும் சொல்லப்போனால் தற்புதுமை, இலக்கிய சிருட்டிக்கும் திறனாய்வுக்கும் உயிர் நாடியாய்க்

கொள்ளப்படுகிறது. தமிழ்க் கவிதையுலகிலே ''புது நெறி காட்டிய புலவன்'' என்று போற்றப் படும் சுப்பிரமணிய பாரதியார் புதுமைக்குக் கட்டி யங்கூறியவர். எட்டயபுரம் மகாராஜாவிற்கு எழு திய சீட்டுக் கவியில்,

"சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவ கவிதை எந்நாளும் அழியாத
மகாகவிதை"

என்று தமது கவிதையின் புதுமைத்தன்மையை விதந்துரைக்கிறார். பாரதி யுகத்து ஆக்க இலக்கியங் கள் மட்டுமன்றி ஆய்வறிவுப் படைப்புகளான விமர் சனங்களும் புதுமையை உரைகல்லாகக் கொள்வது எதிர்பார்க்கக்கூடியதே. பழைய உரையாசிரியர் விதிமுறைத் 'திறனாய்வு' செய்தனர் எனக் கொண் டால், நவீனர்கள் விளக்கமுறைத் திறனாய்வு செய் பவர் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். அது மட்டுமன்று. மேலைப்புல மொழிகளிலே திறனாய் வும் ஓர் ஆக்கத்திறன் வாய்ந்த இலக்கிய முயற்சி யாகக் கருதப்படுகிறது. விதிமுறைகளை முதன் மைப்படுத்தித் தான் எட்ட நின்று அபிப்பிராயங் கூறாமல் 'தான்' கலந்த ரீதியான திறனாய்வையே சிருட்டி பூர்வமான இலக்கிய ஆய்வு என்பர். தான் கலக்கும் இப் பண்பு அதாவது ஒரு கலைப் படைப் பிலே ஆழ்ந்து இலயித்து அப் படைப்பின் அனு பவத்தை அனுபவிக்கும் அதே வேளையில், ஆய்வறி வின் துணைக்கொண்டு அதனைப் பகுத்தாய்வதற்கு ஒருவர் தமது ஆற்றலைப் பயன்படுத்துவதும், அவ் வாறு சுவைத்தலிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடுவது பயன்தரும் ஆத்மானுபவம் எனக் கருதுதலுமே நவீன இலக்கியத் திறனாய்வைப் பழைய இலக்கிய இரசனையிலிருந்து பெரிதும் வேறுபடுத்துகிறது என்பர்.

மேற்கு நாடுகளிலிருந்து வந்து சேர்ந்த திறனாய் வுக் கலையின் பண்புகள் அத்தனையும் நமது திற னாய்வில் பொருந்தியுள்ளன என்றோ அது நமது மண்ணில் செழித்து வளருகிறது என்றோ ஆணை யிட்டு உறுதி கூற இயலாது. ஏனெனில், மேற்கு நாட்டுச் சமுதாயங்களின் வளர்ச்சி நிலைக்கும் நமது சமுதாயங்களின் வளர்ச்சி நிலைக்கும் பெரிய வேறு பாடுகள் உண்டு. பௌதீக வாழ்நிலைகளினடியாகத் தோன்றும் தத்துவ அமைப்புகள் மாந்தரின் சிந் தனைச் செயல்முறைகளைப் பெரிதும் பாதிப்பன வல்லவா? அந்த வகையில் விஞ்ஞானத் தொழில் நுட்பக் கருவிகளும் அறிவும் உணர்ச்சியும் மக்கள் வாழ்க்கையிற் பரவிப் படர்ந்திருக்கும் மேற்குலகில், பகுப்பாய்வு ரீதியான திறனாய்வு செயற்படுவதற் கும், பல்வேறு நம்பிக்கைகள் மக்கள்வாழ்க்கையை நெறிப்படுத்தும் நமது நாடுகளில் திறனாய்வு செயற் படுவதற்கும் பாரிய வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். அது குறித்துக் கவலைப்பட வேண்டியது மில்லை. இன்னுமொன்று, தற்காலத்திலே தமிழில் வழங்கும் இலக்கியத் திறனாய்வு முற்று முழுதாகப் பிறநாட்டுத் திறனாய்வின் நகல் என்றோ எதிரொலி என்றோ கருதுதல் தவறாகும். ஏனெனில், மேலை நாடுகளில் நவீன திறனாய்வுக் கொள்கைகளும் நடைமுறைகளும் உருவாக ஏதுவாயிருந்த காரணி கள் ஓரளவில், தமிழ்ச் சமுதாயத்திலும் கடந்த சில காலமாகத் தொழிற்பட்டு வந்திருக்கின்றன. அவற் றின் ஆழம், அழுத்தம், வேகம், செறிவு முதலியன வேறுபடக்கூடுமாயினும் அவற்றின் வரலாற்று முக் கியத்துவத்தையும் உளதாம் தன்மையையும் மறுக்க வியலாது. அதாவது நவீன திறனாய்வு பிறந்து வளர்தற்குரிய சூழல் — பக்குவநிலை — நமது மொழியிலும் உண்டு. வில்பர் ஸ்காற் என்ற விமர் சகர் நவீன திறனாய்வு தழைத்தோங்குதற்குரிய முன்னீடுகள் மூன்றனைக் குறிப்பிடுவர்: பழைய அளவைக் கட்டளைகளிலிருந்து விடுபாடு; திறனாய் வாளர் பயனுள்ள முறையிலே தமது கவனத்தைச் செலுத்தத்தக்க தகுதி வாய்ந்த புத்தம் புதிய ஆக்கங்கள்; எதிர்கால இலக்கியத்தைப்பற்றிய நன்னம்பிக்கை ஆகியன திறனாய்வின் வளர்ச்சிக்கு இன்றியமையாதன. இம் முற்படு தேவைகள் இருப தாம் நூற்றாண்டிலே எமது மொழி, இலக்கியத்தில் மெல்ல மெல்லப் பரிணமித்து வந்துள்ளன என்ப தைக் கண்டு கொள்வது கடினமன்று. **மனோன் மணீயம்** ஆசிரியர் ப. சுந்தரம் பிள்ளை, பரிதிமாற் கலைஞர், வெ. ப. சுப்பிரமணியம் முதலியோர் படைப்புகளிலிருந்து சிறப்பாக மகாகவி பாரதியார், வ. வே. சு. ஐயர், வி. மாதவையா, புதுமைப்பித்தன் முதலியோர் எழுத்துகள் வரை சென்ற நூற்றாண் டின் பிற்பகுதியிலிருந்து இந்நூற்றாண்டின் முதற் காலிலே உருப்பெற்ற நவீனத்துவத்தை அவதானிப் போருக்கு இது எளிதிற் புலனாகும். இவ்வாறு காலத்தின் தேவைகளை ஒட்டியும் அவற்றினால் உந்தப்பட்டும் எழுந்த தமிழ் இலக்கியத் திறனாய்வு குறுகிய வரலாற்றையே கொண்டுள்ளதாயினும் அதன் வளர்ச்சி ஆராயத்தக்கதாயுள்ளது.

வேறுபல மொழிகளிலும் காணப்படுவதுபோலவே தமிழிலும் திறனாய்வு ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிப் பாதையைக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் திற னாய்வாளர்கள் பண்பாட்டு வளர்ச்சி நோக்கிலும் பண்பாட்டுக் கூறுகளையும் விழுமியங்களையும் உரைகல்லாய்க் கொண்டுமே இலக்கிய மதிப்பீடு களை மேற்கொண்டனர். மறுமலர்ச்சியின் ஓர் அம்சமாக இஃது அமைந்தது எனலாம். வி. கனக சபைப் பிள்ளையின் **ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்** *(1904)* என்னும் நூல் வெளி வந்த கால முதல், தொன்றுதொட்டு நிலவி வரும் தமிழர் கலாசாரம்பற்றிய முற்கோள் கருத் தும் முன்னீடுபாடும் தமிழ் இலக்கிய ஆய்வாளர் களை ஆட்டிப் படைத்து வந்துள்ளன. அதன் விளை வாகத் திறனாய்வு பண்பாட்டு விளக்கத்துக்கும் பேணலுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

'பண்பாடு' என்னும் பதமே — சொல்லே — ஆங்கிலத்தில் உள்ள 'culture' என்னும் சொல்லிற்கு ஈடாக இந் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகும். பண்பாட்டு வளர்ச்சி நோக்கில் இரசனைமுறைத் திறனாய்வை உருவாக்கி ஜனரஞ்சகப்படுத்திய (படித்த மத்தியதர வர்க்கத்தினரிடையே என்பது மனங்கொளவேண்டியது) டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்களே, 'பண்பாடு' என்னும் சொல்லையும் வழக்கிற்குக் கொண்டுவந்தார் என்பது தற்செயல் நிகழ்ச்சியன்று. பக்திப் பாடல்கள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், சிற்சில பிரபந்தங்கள், தனிப்பாடல்கள் போன்றவையே பண்பாட்டு முறைத் திறனாய்வாளர்களால் பெரிதும் போற்றிப் பேசப்பட்டது. டி.கே.சி. தனிப்பட்ட முறையில் சமகாலக் கவிஞரான தேசிகவிநாயகம் பிள்ளையையும், தமது இலக்கிய இரசனை வட்டத்தைச்சேர்ந்த 'சோமு' (மீ. ப. சோமசுந்தரம்) போன்றவர்களையும் ஊக்குவித்தாரெனினும் இப் பிரிவைச் சேர்ந்த திறனாய்வாளர்களிற் பெரும்பான்மையோர் பழைய கவிஞர்களின் ஆக்கங்களைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்துவதிலும் அவற்றை மீண்டும் மீண்டும் ஆராய்வதிலும் இன்பங் கண்டனர். பி. எஸ். ராமையா ஒரு சந்தர்ப்பத்திற் கூறியதுபோல, ''அவர்கள் நமது பழைய தமிழ் இலக்கியங்களில் நல்ல தேர்ச்சி உடையவர்கள்; அவற்றில் திளைத்துச் சுவைத்தவர்கள். அவர்கள் கூட்டங்கள் யாவும் தமிழ் இலக்கியச்சுவைக் கூட்டங்கள்தாம். ஆனால், அவர்கள் தமிழ் இலக்கியம் என்று கருதியவை, ஏற்றுக்கொண்டவை யாவும் அன்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் படைக்கப்பட்டவை.''

இத்தகைய ஒரு போக்கிற்கு எதிர் விளைவாகவே நவீன இலக்கியங்களைப் படைப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டுக்கொண்டிருந்த எழுத்தாளர் சிலர், தாமும் தமது சகாக்களும் பிறரும் படைத்துக் கொண்டிருந்த புதிய இலக்கியப் பிரிவுகள் குறித்துச் சர்ச்சைகளும் திறனாய்வுகளும் எழுத முற்பட்டனர். பண்பாட்டுப் பெருமை, சமய நம்பிக்கை, உயர் இலட்சியங்கள், செந்தமிழ்ப் பாரம்பரியம் இவை போன்றவற்றில் இவர்களுக்கு விசேஷ அக்கறை எதுவுமிருக்கவில்லை. அவற்றை முற்றாக நிராகரிக்கவுமில்லை; தூக்கி நிறுத்தவும் முயலவில்லை. கவிதையை பாரதியுடனும், வசன இலக்கியத்தை வேதநாயகம் பிள்ளையுடனும், திறனாய்வை வ. வே. சு. ஐயருடனும் தொடங்கி நவீன தமிழிலக்கிய வரலாறு காண முற்பட்ட இவர்கள், இலக்கியத் தொழிலின் நுட்பங்கள், உத்திகள், நடைமுறைகள், வடிவ ஆராய்ச்சி, உளவியல் செய்திகள் முதலியவற்றில் நிரம்பிய அக்கறை கொண்டவராயிருந்தனர். காலத்தின் தீர்ப்புக்குக் காத்திராமல் சமகாலப் படைப்புகளைத் தாராளமாய்த் திறனாய்ந்தனர் இவர்கள். கு. ப. ராஜகோபாலன், பெ.கோ. சுந்தரராசன், புதுமைப்பித்தன், க. நா. சுப்பிரமணியம், சி. சு. செல்லப்பா, ந. சிதம்பர சுப்பிரமணியன் முதலியோர் இப் பிரிவின் முன்னோடிகள். சிருட்டி இலக்கியக் கர்த்தாக்களாக விளங்கிய இவர்கள் இலக்கிய இரசனையைப் பொழுதுபோக்காக மட்டுமன்றித் தமது முயற்சிகளுக்கு இன்றியமையாத அடிப்படை ஞானமாகவும் கருதினர். ஆகவே, நுட்ப நுணுக்கங்களில் இவர்களுக்கு உள்ளார்ந்த ஈடுபாடிருந்தமை இயல்பே. தொகுத்து நோக்கும் பொழுது இவர்கள் இலக்கியத்தில் பொருளினும் உருவமே பிரதானம் என்ற 'அழகியற்' கோட்பாட்டுக்கு அளவு கடந்த அழுத்தம் கொடுத்தமை புலனாகும். உருவ வாதம் (Formalism) என்று மேனாட்டு அறிஞர் இதனைக் குறிப்பிடுவர்.

உருவ வாதத்தைக் கைப்பிடித்துப் 'பல சிந்தனை மனோதத்துவ இடர்'களில் அகப்பட்டு உழலும் இத்தகைய போக்கிற்கு எதிர்விளைவாகவும், முற்போக்கு இயக்கங்களின் உந்துதலினாலும் முகிழ்த்ததே மார்க்சீயத் திறனாய்வு. திறனாய்வாளன் கலைஞனாக மாத்திரமன்றி விஞ்ஞான நெறியிற் செல்லும் ஆய்வறிவாளனாகவும் இருத்தல் அவசியம் என்பது மார்க்சீயத் திறனாய்வின் குறிக்கோளாகும். மார்க்சீய மூலக்கருத்துகளில் ஒன்று பின்வருமாறு: ''பொருளாதார அடித்தளமே, சமூகத்தின் கருத்து வகைகளை அதாவது, சமூகத்தினுடைய சித்தாந்த மேற்கட்டுக்கோப்பை (அரசியல், சட்ட, சமய, தத்துவார்த்த, கலை, இலக்கியக் கருத்துகளையும் சிந்தனைகளையும்) நிருணயிக்கின்றது.'' உலகப் பொதுவான விதியாக மார்க்ஸ் கூறியதனடியாகவே மார்க்சீயத் திறனாய்வு வளர்ந்துள்ளது. இலக்கியம் என்பது எந்தக் காலத்திலும் நூற்றுக்கு நூறு வீதம் நேரடியான சமுதாயச் சித்திரிப்பு அன்று. புறவுலகை அதாவது காட்சிகளையும் அனுபவங்களையும் எழுத்தாளர் அப்படியே சொல்லில் வடிப்பதில்லை. அனுபவ முழுமையிலிருந்து தற்செயலான, மேற்போக்கான அம்சங்களையெல்லாம் நீக்கிவிட்டு அடிப்படையான சாராம்சத்தை அக உணர்வில் உரைத்து வகை மாதிரிக்குப் பொருத்தமான வடிவத்தில் உருவாக்குகின்றனர். இன்னொரு விதமாய்க் கூறுவதாயின் புறநிலைப்பட்ட யதார்த்தத்தை அகநிலைப்பட்ட யதார்த்தமாக மாற்றியமைக்கின்றனர். வாழ்க்கைக்கும் கலை இலக்கியத்திற்குமுள்ள இயங்கியல் ரீதியான உறவை ஆதாரமாய்க் கொண்டு எழுப்பப்பட்டதே மார்க்சீயத் திறனாய்வு. தமிழ்த் திறனாய்வு உலகில் அதற்குத் தனியானதோர் இடமுண்டு. இன்று பாட நூல் எழுதுவோர்கூட இதனைக் குறிப்பிடுவர். உதாரணமாக, சி. இ. மறைமலை எழுதிய **இலக்கியத் திறனாய்வு** *(1979)* என்னும் அறிமுக நூலிலே 'மார்க்சீயத் திறனாய்வு' என்றோர் இயல் இருக்கக் காணலாம். மார்க்சீயத் திறனாய்வின் முனைப்பான முறையியலும் சாதனையும் என்ன? ஆழமான சமூகவியல் அறிவின் துணையுடன் உருவம், உள்ளடக்கம் என்ற வீண்வாதத்தில் அமிழ்ந்து போகாமல் வரலாற்றுப் பார்வை, சமூக நோக்கு, அழகியல் அக்கறை ஆகிய


வற்றை ஒன்றிணைத்து இலக்கிய ஆக்கங்களைத் திறனாய்வதே மார்க்சீயத் திறனாய்வின் போற்றற்குரிய சாதனையாகும்.

இறுதியாக ஒன்று கூறுவது அவசியம். மேலே சுருக்கமாக விவரித்திருப்பது போல, கடந்த சில பத்தாண்டுகளாகத் தமிழிலே திறனாய்வு பரிண மித்து வந்திருப்பினும் இலக்கியத் துறையிலேயே அது பெருமளவிற் செயற்பட்டு வந்துள்ளமை மனங் கொளற்குரியது. கவின்கலைகள், நாட்டார் கலைகள், கைப்பணிகள் முதலிய ஏனைய சிருட்டித்துறைகள் திறனாய்வினால் இன்னமும் தொடப்படாமலே உள் ளன. சொற்களை மூலப்பொருளாய்க் கொண்டு படைக்கப்படும் இலக்கியம் கலையின் ஒரு பிரிவே யாகும்; முக்கியமான பிரிவாக இருப்பினும் அது ஒரு பிரிவே என்பதை நினைந்து கொள்ளவேண்டும். சிருட்டித்திறன் வெவ்வேறு கலைகளில் வெவ்வேறு வகைகளில் தொழிற்படுகிறது. இரசனையின் செயற் பாடும் அவ்வாறே. ஏனைய கலைகளையும் நன்கு ஆய்ந்து சுவைக்கும் நிலை பரவலாக ஏற்படும் பொழுதே அழகுணர்ச்சி பண்படுகிறது. இலக்கியத் திறனாய்வின் அடிப்படையில் மாத்திரம் ஒரு மொழி யிலே அழகியல் முழுமையாக விருத்தியடையவிய லாது. கலையின் இரகசியமே அடிப்படையில் ஒன்று தான். ஆனால், கலை வடிவங்கள் சமூகப் பண்பில் வேறுபாடுடையன. ஆகவே, அவை சம்பந்தமான அழகியலும் வேறுபடும் தன்மையதே. அதுமட்டு மன்று. வெவ்வேறு கலைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இயங்கும் சூழ்நிலை தோன்றுமிடத்து கலை களின் இரசனை, விளக்கம்பற்றிப் புதிய பரிமாணங் கள் உணரப்படுகின்றன.

ஒருதாரணம் காட்டுவோம். இரசிகமணி எனப் பாராட்டப்பெற்ற டி. கே. சி. ஆரம்பத்திலே கம்பன் கவிதைகளைச் சுவைப்பவராய் இலக்கிய இரசனையில் ஈடுபட்டிருந்தவர். பின்னர் சில காலம் இந்துமத பரிபாலன சபையின் உறுப்பின ராக நியமிக்கப்பட்டார். திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை கூறுவதைக் கேட்போம்:

> ''தமது உத்தியோக முறையில் கோயில்களைச் சுற்றிப் பார்வையிட்டபோது கண்ட சிற்பக்கலை யும் நடனக்கலையும் டி. கே. சி.-க்குப் பேரின் பம் விளைத்தன. இவைகள், கம்பன் கவிதை யில் உள்ள ஈடுபாட்டையும் அனுபவத்தையும் எத்தனையோ மடங்குப் பெருக்கிவிட்டன. கவிதைக் கலையின் அம்சங்களிற் பல இப்பொழுது நூதன முறையில் அவருக்குப் புலப்படலாயின.''

துரதிஷ்டவசமாக கவின்கலைகளையும் நாட்டார் கலைகளையும் திறனாய்வு செய்வோர் நம் மத்தியில் குறைவாகவே உள்ளனர். இதனால் இலக்கியத் திறனாய்வும் பல வழிகளில் குறைபாடுடையதாய் இருப்பதைக் கூர்ந்து கவனிப்போர் கண்டுகொள்வர். எடுத்துக்காட்டாக, மேலை நாடுகளில் 'கலையில் நவீனத்துவம்' என்று ஒருவர் கூறும்பொழுது இலக் கியத்தை மாத்திரம் மனங்கொண்டு கருத்துரைக்க மாட்டார். ஓவியம், சிற்பம் முதலானவற்றிலேயே நவீனத்துவம் மிகத் துல்லியமாக அங்குக் காணப் படும். உருவச் சித்திரங்களைவிட அருவச் சித்திரங் களே நவீனத்துவத்துக்கு எடுத்துக்காட்டுகளாய் அமைவன. அதனால், கலையில் நவீனத்துவம் என் பது பல்துறை சார்ந்த பண்புகளுடன் கூடியதாய்ப் பேசப்படும். பொருள் மட்டுமன்றிச் சொல்வள மும் சிறந்திருக்கும். திறனாய்வு வளர்ச்சிக்கு இது பேருதவியாய் இருக்குமென்பது கூறாமலே புரியும். இத்தகையதொரு நிலை தமிழிலும் உருவாகும் பொழுதே திறனாய்வுக்கலை உண்மையான வளர்ச்சி நிலையை அடையும் என்பதில் ஐயமில்லை.



தமிழும் திரவிட மொழிகளும்

பேராசிரியர் இரா. மதிவாணன்

தமிழ் ஏனைத் திரவிட மொழிகளுக்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்று மொழி ஞாயிறு பாவாணர் திண்ணமாக வரையறுத்துரைக்கிறார். திரவிட மொழிகளில் அமைந்துள்ள தமிழ்க் கூறுகளும், சிறப்பாகத் திரவிட இலக்கியப்போக்கில் ஆழ வேரூன்றியுள்ள தமிழிலக்கிய இலக்கணக் கூறுகளும், சமற்கிருத இலக்கண ஆசிரியர்களால் மறுக்கப்படாவிடினும் அறவே மறைக்கப்பட்டுள்ளன. அங்ஙனம், மறைந்துள்ள இலக்கிய இலக்கணக் கூறுகளைச் சிற்றளவில் புள்நோட்டமாக ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென் திரவிட மொழிகள் மூன்றும் தொடக்கநிலையில் முழுக்க முழுக்க தமிழாகவேயிருந்து நாளடைவில் திரிந்தவை என்பதற்குக் கீழ்க்காணும் சான்றுகளைக் காட்டலாம்:

1. கடைக் கழகக் காலத்திற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இவற்றுக்கு வேற்றுமொழி நிலையிருந்திருப்பின் பழந்தமிழ் நூல்களிலும் வடமொழி நூல்களிலும் அவற்றின் பெயர் சுட்டப்பட்டிருக்கும். ஆந்திரர் என்பது ஆய் அண்டிரன் மரபினரின் இனப் பெயரேயன்றி மொழிப் பெயராகாது.

2. ஏனைத் திரவிட மொழிகளின் தோற்றம் பிராகிருத மொழியின் தோற்றத்துக்குப் பிந்தியது. பிராகிருத மொழி, வேதகால ஆரிய மொழியின் வரவுக்கும் சமற்கிருதத்தின் தோற்றத்துக்கும் இடைப்பட்டது. அப்பொழுது தமிழொன்றே இந்தியாவில் வழங்கிய தனிமொழி. ஏனைத் திரவிட மொழிகளின் அடிப்படை தொல்காப்பிய நெறிக்குப் பொருந்துகின்றதேயன்றி, பாணினி இலக்கண மரபுக்குச் சிறிதும் பொருந்தவில்லை. தொல்காப்பியத்திற்கு மூலநூலானதும், தென்னாட்டில் தோன்றியதுமான ஐந்திர இலக்கணத்தின் வழி வந்த காதந்திர நெறிகளையே தெலுங்கு, மராத்தி, கன்னட மரபு இலக்கண ஆசிரியர்கள் போற்றியுள்ளனர்.

3. ஏனைத் திரவிட மொழிகளில், ழ, ற, ன சிறப்பெழுத்துகளின் ஆட்சியைக் குறைக்க வடமொழியாளர் பெரிதும் முயன்று எழுத்து அழிவுப் பணி செய்துள்ளனர். எனினும், எகர ஒகரக் குறில் ஆட்சியின் அடிப்படையை அவர்களால் சிறிதும் அசைக்க இயலவில்லை. தெலுங்கில் அச்ச தெலுங்கு இயக்கமும், கன்னடத்தில் பழங்கன்னட இயக்கமும், மலையாளத்தில் பச்ச மலையாள இயக்கமும் வடமொழித் தாக்கத்திலிருந்து தத்தம் மொழிகளைக் காக்கப் பாடுபட்டன. தென்னாட்டு மொழிகளில் தமிழ் ஒன்றில்தான் தனித்தமிழ் இயக்கம் முழு வெற்றி பெற்று வாகை சூடியுள்ளது. தமிழைச் சாரச்சார அவற்றின் தனித்தன்மை காக்கப்படுவதும், வடமொழியைச் சாரச்சார அவற்றின் தனித்தன்மை அறவே கெடுவதும் அவற்றின் தமிழ் அடிப்படையைக் காட்டும்.

தமிழிலில்லாதவையாகவும், ஏனைத் திரவிட மொழிகளில் மட்டும் வழங்குவனவாகவும் உள்ள மறைந்துபோன தமிழ்ச் சொற்கள் எண்ணில்லா

தவை. கடைக்கழகக் காலத்திற்கு முன்பே திரவிட மொழிகளில் குடியேறி நிலைத்தபின், தமிழில் வழக்கிழந்த தமிழ்ச் சொற்கள் சிலவற்றை அவ்வம்மொழிகளில் தமிழ் அடிப்படைத் தொன்மையையும், அம்மொழிகள் தமிழிலிருந்து முகிழ்த்தவை என்பதையும் நாட்ட எடுத்துக்காட்டாகப் பட்டியலிட்டுத் தந்துள்ளேன்.

அவை அனைத்தும் செந்தமிழ்ச் சொற்களாகவும் சில திரிபுற்றனவாகவும் இருத்தலை நன்குணரலாம்.

தெலுங்கு	கன்னடம்	மலையாளம்
அடிவாள்புள்—சேவல்	கொள்கொடை—கொடுக்கல் வாங்கல்	வன்தீ—காட்டுத்தீ
கோடகத்தி—குரங்கு (கோத்தி)	துப்பம்—நெய்	உப்பாடு—ஊறுகாய்
நூநெய்—எண்ணெய் (நூ=எள்)	நிறைதரல்—முடிவுறல்	வல்லித்த—இயன்ற
ஊரேகல்—ஊர்வலம்	பொழில்—நகரம்	நெடியரி—முழு அரிசி
கன்னு—மகப்பெறு (பிரசவி)	நடுவு—இடுப்பு	எந்து—எவ்வாறு
நேர்ப்பு—கல்வி, படிப்பு.	அறிகை—விசாரணை, உசாவல்	பின்வலித்தல்—திரும்பப் பெறுதல்
தன்னு—உதை	தோள்மரம்—பக்க மரம்	ஒடுவில்—இறுதியில்
நுவர் (நோரு)— வாய் (நுவல்)	இரியர்—பெரியர்	புல்புறம்—மேய்ச்சல் நிலம்
பால்—பங்கு	முகிழ்—தயிர்	நேர்கேடு—பொய்
நள்—கருமை	முளவு—முயல்	பொக்கம்—உயரம்
காமுகர்—சுவைஞர், ரசிகர்	அமல்—இரட்டை, ஜோடி, ஜதை	கடுங்கை—அக்கிரமம், கொல் குறும்பு.

கன்னடம்

தென்னக நான்மொழிகளுள் பழங்கன்னடம் பழந்தமிழுக்கும் பழகு தமிழுக்கும் ஒரு பொற்பாலமாக விளங்குகிறது. பழங்கன்னட இலக்கியத் தொடர்கள் தமிழினின்றும் வேறுபடுத்தியறிய முடியாதவை என்பதற்கு 'வட்டாராதனை' என்னும் பழங்கன்னட நூலிலிருந்து பின்வரும் வரிகளைச் சான்றாகக் காட்டலாம்.

கன்னடம்—மர்தள கஹலாதி த்வனிகளும் எனித்து எனித்து ஆ புலி கேள்கும் அனித்து அனித்து அஞ்சி குகையொள் அடங்கி இர்தத்து.

தமிழ்—மத்தளம் காகளம் முதலியவற்றின் ஓசைகளை எனைத்து எனைத்து அந்தப் புலி கேட்குமோ அனைத்து அனைத்து அஞ்சிக் குகையுள் அடங்கி இருந்தது.

மைசூர் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் தம் நூலில், தக்கணப் பகுதி முழுவதிலும் வாழ்ந்த பழங்குடிகள் தமிழர்களே என்றும் கன்னடம் கருநாடகம் என்று பெயரிட்டவர்களும் தமிழர்களே என்றும் கூறுகிறார்.[1]

''கன்னடம் வடுகு கலிங்கம் தெலிங்கம்
கொங்கணம் துளுவம் குடகம் குன்றம்
என்பன குடபால் இருபுற சையத்
துடனுறைபு பழகுந் **தமிழ்திரி நிலங்களும்**''

என்றார் அகத்தியனார் என்று நன்னூல் 161ஆம் நூற்பாவுரையில் மயிலைநாதர் குறிப்பிடுகிறார்.

கருநாடு – கரிசல்மண் நிலம் எனப் பொருள்படுவதாகப் பலரும் கருதுகின்றனர். பழந்தமிழ் நிலப்பாகுபாட்டில் குறிஞ்சி முதலாகிய நிலவகையால்லது மண்வகையில் பாகுபாடின்மையின் கல் + நாடு + அகம்—கல்நாடகம் – கன்னடம் எனத் திரிந்தது என்பதே முற்றிலும் உண்மை. இன்றும், மலையாளத்தார் கன்னடத்தை, கன்னாடகம் என்று அழைக்கின்றனர்.

'பெருங்கல் வைப்பின் நாடு கிழவோயே', 'கல்லிறந்தோரே', 'கல்நாடன்' என்னுந் தொடர்களில் 'கல்' மலையும் குன்றும் சார்ந்த நிலப்பகுதியைக் குறித்து வருதலைக் காணலாம்.

கல்நாடு – குன்றுகள் நிறைந்த நாடு. ஆந்திரத்திலுள்ள ராயலசீமைப் பகுதியும் கல்நாடே. அறை – ராய் (தெ.) – கல். கன்னட இலக்கியத்திலும் கல்வெட்டுகளிலும் கருநாடர் என்னும் சொல் பயிலவில்லை. வீரசோழியத்தில் 'கன்னாடர்' என்றும், பிராகிருதத்தில் 'கன்னாட' என்றும், மராத்தியில் 'கானட' என்றும் கன்னடம் குறிப்பிடப்படுகிறது.

[1] பர். எம். எச். கிருட்டிணன்—"கர்நாடக பூர்வ சரித்ரெ" பக். 15.

கருநாடகம் என்னும் சொல் அக்காலத்தில் மராட்டிய மாநிலத்தைக் குறித்தது. கருநாடு என்றால் பெரியநாடு என்று பொருள். கன்னடத்தில் 'கரு மாட' என்னும் சொல் பெரிய மாளிகையைக் குறிக்கிறது. 'தராதந்திரம்' என்னும் மராத்திய நூல் மகாராட்டிரத்திற்குக் 'கர்னாடக்' என்னும் மற்றொரு பெயரிருப்பதாகக் கூறுகிறது. கலிங்கத்துப் பரணியில் கருநாடர், வடுகுந் தமிழும் குழறிப் பேசிய தாகவுள்ளதேயன்றிக் கன்னடம் பேசியதாகக் கூறப்படவில்லை. கன்னட மன்னன் புலிகேசி மராட்டியப் பகுதிவரை ஆண்டதால் தன்னை மகாராட்டிர அரசன் என அழைத்துக்கொள்கிறான். எனவே, மராட்டிய மாநிலத்திற்கு நெடுங்கால முதலே 'கருநாடு' என்று பெயரிருந்தது என்பதும், இத்தமிழ்ச் சொல்லே பெரிய நாடு என்னும் பொருளில் வடமொழியாளரால் 'மகாராட்டிரம்' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பதும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுகிறது.

சிலப்பதிகாரக் கதை கன்னட நாட்டுப்புறங்களில் சந்திராவின் கதையாக வழங்கிவருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்ப் பண்பாட்டுக்கே உரிய அகநானூற்றுத் திருமணமுறை இன்றளவும் கன்னட, தெலுங்கு நாட்டுப்புறங்களில் உயிரோடு நிலவி வருவது பெரிதும் உவப்புக்கும் வியப்புக்கும் உரியதாக இருக்கிறது. மணமக்களை முதுசெம் பெண்டிர் முறையாக வாழ்த்தி, புதுக்குடங்களில் நறுநீர் கொணர்ந்து நீராட்டும் திருமணமுறை அகநானூற்றில் அழகுற விளக்கப்படுகிறது. கன்னட மாநிலத்தையொட்டிய தருமபுரி எல்லைப் பகுதி களில்கூடக் கன்னடப் பெருங்கடை[2]ப் பிரிவினரின் திருமணத்தில் இன்றும் இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது. ஊரிலுள்ள உறவினர் அனைவரும் ஒவ்வொரு குடம் நறுநீர் கொணர்ந்து மணமக்களை நீராட்டி வாழ்த்துகின்றனர். மகளிரே பாடும் திருமண வாழ்த்துப் பாடல்கள் மூன்று மணிநேரம் பாடப்படுகின்றன.[3] அவற்றுள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை நெறிகளும் நகையாட்டுகளும் இழையோடி மணமன்றத்திற்குப் பொலிவூட்டுகின்றன. தெலுங்கு நாட்டுப்புறங்களிலும் ஒரிசாவிலுள்ள தோபி வகுப்பார் திருமணங்களிலும் தமிழகத்துக் கசவர் பழங்குடிகளிடமும் இவ்வழக்கம் இன்றும் உள்ளது.

முழுநிலா நாட்களில் விழாக் கொண்டாடுதல், இன்னியம் அல்லது பறை முழங்க நள்ளிரவில் முதன் முதல் அறுவடை விழாச் செய்தல்[4] ஆகிய பழந்தமிழர் வழக்கங்கள் இன்றும் குடகு மக்களிடை முழுமையாகவும் தஞ்சைத் தாழ்த்தப்பட்டோரிடை ஓரளவும் உள்ளன. இளங்கோவடிகள் மணப் பள்ளியை (மணவறைக்கட்டில்) 'மங்கல நல்லமளி' என்கிறார். குடகு மக்கள் திருமணத்தைக் 'கன்னி மங்கல' என்றும், காது குத்தும் விழாவைக் 'கெமி குத்தி மங்கல' என்றும், புலியைக் கொன்றவனைப் பாராட்டும் விழாவை 'நரி மங்கல' என்றும், பத்துப் பிள்ளை பெற்றவளைப் பாராட்டும் விழாவைப் 'பய்த்தாண்டெக்கு அளெப்ப மங்கல' என்றும் வழங்குகின்றனர்.

தமிழகத்துப் பெரிய புராணம் கன்னடத்துச் சிவனடியார்க்குத் தெய்வமணங் கமழும் பெருநூலாதலால், அது அக்காலத்திலேயே கன்னடப் புலவர்களால் பல நூல்களாகக் கன்னடத்தில் பாடப்பட்டுள்ளது. 63 சிவனடியார்களைப்பற்றிக் கூறும் 'சிவகணத ரகளெகள்', நம்பி ஆரூரரைப்பற்றி மட்டும் கூறும் 'நம்பியண்ணன ரகளெ', சம்பந்தர் வரலாறு கூறும் 'சத்தியேந்திர சோழ சரிதெ', சேரமான் பெருமாள் சரிதம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. சேக்கிழார் 'பிள்ளை நயினார்' எனப்படுகிறார். தமிழகத்துச் சிவனடியார் அறுபத்து மூவரும் 'புராதனர்' என்றும் கன்னட நாட்டுச் சிவனடியார்கள் 'நூதனர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

கன்னட இலக்கண நூலான சப்தமனு தருப்பணம்' 'ழகர' எதுகை கொண்ட 181 உரிச்சொற்களின் பொருள் கூறிப் பழங்கன்னடத்தின் தனித்தன்மையை நிறுவ முயல்கிறது.

தெலுங்கு

தெலுங்கு என்னும் சொல் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பு வழக்கில் இல்லை.[5] ஆந்திரர் என்னும் சொல்லே அம் மக்களைக் குறித்தது. ஆந்திரர்க்குப் பிராகிருதமே ஆட்சிமொழியாக இருந்தது. வடபுலத்துப் பிராகிருதம் பேசிய ஆந்திரர்க்குத் தென்புலத்தார் பேசிய தமிழ் நடுவணிந்தியாவில் திரிபுற்றதால், 'தென்குலு' – தென்மொழியினர் என்னும் பொருளில் தெலுங்கர் புதுப் பெயரிடப்பட்டனர்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுவரை புகழ் பெற்று விளங்கிய ஆந்திர சாதவாகனர் காலத்தில் பிராகிருத இலக்கியங்களே புகழ்பெற்றிருந்தன. தெலுங்கு மொழியின் சுவடே சிறிதும் அறியப்படவில்லை. பிராகிருத இலக்கியங்களில் தெலுங்குச் சொற்களாகச் சுட்டப்படுபவை தமிழ்ச் சொற்களாகவே உள்ளன.

---

[2] தமிழ் மூவேந்தர் காலத்தில் அரண்மனை மேலதிகாரிகளாக இருந்த 'பெருங்கடை' என்பாரின் வழிவந்து இன்று 'பெக்கடெ' மற்றும் எக்கடெ, எக்கிடி என அழைக்கப் படுபவர்.

[3] 'கன்னடப் பழங்குடிகளின் அகநானூற்றுத் திருமணம்'— 'தென்மொழி' - (ஆகத்து, 1977)

[4] குடகு நாட்டில் இரவரிவார்—'புலமை'—ஏப்ரல் - ஜூன், 1975, (பக். 60-70)

[5] The words Telugu or Tenugu were never used before 10th Century to denote either the language or the people or the country. The word 'Andhra' was used in its place. S. Ramakrishna Sastry—*'Annals of Oriental Research'*. Madras University, 1952 (p. 152).

பிராகிருத இலக்கண இலக்கியக் கட்டுக்கோப்பில் தமிழின் தாக்கமே வடமொழித் தாக்கத்தினும் விஞ்சி நின்றது. பிராகிருதப் புலவர்கள் வடமொழியை வல்லொலிமொழி என இகழ்ந்தனர். பிராகிருதம் தமிழைப் போன்றே சமற்கிருதச் சொற்களை மெல்லொலிச் சொற்களாக மாற்றிக்கொள்வதால் பிராகிருதம் பாட்டுமொழி, இன்மொழி எனப் பாராட்டப்பட்டது. கி.பி. முதல் நூற்றாண்டில் ஆளன் என்னும் சாதவாகன மன்னன் எழுநூறு அகப்பாடல்களை 'காதா சப்தசதி' என்னும் பெயரில் நூலாகத் தொகுத்தான். இதிலுள்ள பல பாடல்கள் கடைக்கழகத் தமிழ்ப் பாடல்களின் மொழிபெயர்ப்புகள் போலவே காணப்படுகின்றன. திணை துறை வகுக்கப்படாமல் வெறும் பாடல்களாக உள்ளன. ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடிய புறநானூற்று 175ஆம் பாடலில் வரும் ''என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே'' என்னும் வரி[6] சொற்பிறழாமல் அப்படியே பிராகிருதப் புலவர்களால் எடுத்தாளப் பட்டுள்ளது.

சமற்கிருதத்தில் இத்தகைய தனிநிலைப் பாடல்களான அகப்பாடல் வகை இன்மையால் இந்நூலை கோவர்தனாசாரியார் என்பவர் 'ஆரிய சப்தசதி' என்னும் பெயரில் சமற்கிருதத்தில் மொழிபெயர்த்துள்ளார். இதிலிருந்து தமிழிலக்கண இலக்கியக் கூறுகள் எண்ணிறந்தன பிராகிருதத்திலும் சமற்கிருதத்திலும் காலவெள்ளத்தில் ஊடுருவிச் சென்றுள்ளன என்பதும், பிராகிருத, சமற்கிருத வல்லுநர்கள் அவ்வுண்மையை மறைத்து வருகின்றனர் என்பதும் வெளிப்படுகிறது. வடபுலத்து ஆரிய அரசன் பிருகத்தனுக்குத் (அசோகனுக்குப் பின் மூன்றாவதாகப் பட்டம் பெற்றவன்) தமிழ் அறிவுறுத்தக் கபிலர் 'குறிஞ்சிப் பாட்டு' இயற்றியதும், வடபுலத்தார் அக்காலத்தில் தமிழை விரும்பிப் படித்ததை உறுதிப்படுத்தும்.

பழந்தமிழில் 'தொன்மை' என்றும், இந்திய மொழிகள் அனைத்திலும் 'சம்பு காவியம்' என்றும் அழைக்கப்படும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் அமைப்பு, தமிழிலிருந்து பிறமொழிகள் பெற்ற கொடை என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இதனைச் சமற்கிருதத்துக்கோ பிராகிருதத்துக்கோ சொந்தமானதாகக் கூறுவது அறியாமை. ஆரிய மொழிகளும் பிராகிருதம் உருப்பெறாத அறப்பழங் காலத்திலேயே செய்யுளும் உரைநடையும் விரவி வரும் பாங்கு, தமிழ் மொழிக்கே தனியுடைமையாகக் குமரிநாட்டில் தோன்றி, தொல்காப்பியத்தில் எண்வகை வனப்பு (எட்டுக் காப்பிய வகை)களுள் ஒன்றாகத் 'தொன்மை' என்னும் பெயரில் நிலை பெற்றுள்ளது.

''தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே''

என்று தொல்காப்பியர் கூறுகிறார். இத்தகைய வரலாற்றுப் பின்னணி சமற்கிருதம் உள்ளிட்ட இந்திய மொழிகள் எவற்றுக்கும் அறவே இல்லை.

தெலுங்கில் கி.பி. ஏழாம் நூற்றாண்டுவரை தமிழுக்கே உரிய சிறப்பு ழகரம் இருந்தது என்பது ஆந்திரநாட்டுக் கல்வெட்டுகளால் புலனாகிறது. யுவான் சுவாங் கோதாவரி யாற்றைக் கடந்ததும் தமிழ் நாட்டைக் கண்டதாகக் கூறுகிறான்; இன்றும் குச்சரம், மராத்தி, இந்தி மொழிகளைப் பேசும் மக்களின் பேச்சுமொழியில் ழகர ஒலிப்பு இருப்பதாகக் கூறுகின்றனர். தெலுங்கரில் முற்போக்கு எண்ணமுடைய சிலர் தெலுங்கு எழுத்துகளில் வலியப் புகுத்தப்பட்டிருக்கும் வேண்டாத வட எழுத்துகளில் சிலவற்றையேனும் நீக்கவேண்டும் என்கின்றனர். பங்காரு ஐயா என்னும் தனித்தெலுங்கு அறிஞர், ஆந்திர மண்ணில் தோன்றிய பெருமக்கள் மீது காப்பியம் பாடாமல், பாரத இராமாயண (வடநூற்) காப்பியங்களை என்று தெலுங்கர் பேரிலக்கியமாகக் கொண்டார்களோ அன்றே தெலுங்கின் மேன்மை அழிந்துவிட்டது என்றும், 'தல்லிநுடினி மறசினவாடு சச்சினவாடே' (தாய்மொழியை மறந்தவன் இறந்தவனே) என்றும் 'தெலுகுநுடி நானுடி' என்னும் தந்நூலில் அவருடைய உள்ளக் கொதிப்பை உருக்கமாக எடுத்துரைக்கிறார்.

தெலுங்குப் புலவர் ஒருவர், தெலுங்கு தனி மொழியென்று நிலைநாட்டத் தமிழினின்றும் வேறான தெலுங்குச் சொற்கள் பலவுள்ளன என்றார். அவ்வாறாயின் அவற்றின் வேர்ப்பொருளை விளக்கி நிறுவுக என்றேன். கோடாலு (மருமகள்), வல்லகாடு (சுடுகாடு), நூன (எண்ணெய்) என்னும் முச்சொற்களைக் குறிப்பிட்டு, கோடாலு என்பதை, கோட (மென்மை)+ஆலு (பெண்) எனப் பிரித்தார். ஏனையவை வேர்ப்பொருளறியாத் தொன்மையன என்றார். கோடாலு என்னும் சொல் விளக்கத்தின்படி, மருமகள் மட்டுந்தான் மென்மையான பெண்ணா? மற்றப் பெண்டிர் மென்மையற்றவரா? என வினவினேன்? அவர் மறுமொழியேதும் சொல்லவில்லை.

அவர் தனித்தெலுங்குச் சொற்களாகக் காட்டும் அனைத்தும் தனித்தமிழ்ச் சொற்களே என்றும், அவற்றுக்குத் தமிழிலன்றித் தெலுங்கில் வேரும் பொருளும் காணமுடியாது என்பதையும் பின்வருமாறு விளக்கிக் காட்டினேன்.

---

[6] 'ஆந்திர நாட்டு அகநானூறு', தாய்நாடு பதிப்பகம், 1978, பக். 55.

தெலுங்கு			தமிழ்
1. **கோடாலு** (மருமகள்)	...	...	**கோடல்** — பிறர் வீட்டிலிருந்து கொண்ட பெண். கொளல் — கோடல். தமிழ்மக்கள் 'கொள்வினை' 'கொடுப்பினை' என்று பேசுவதைக் காணலாம்.
2. **வல்லகாடு** (சுடுகாடு)	...	...	**வெள்காடு** — ஆள் இயங்காக் காடு. வெண்களமர் (பிறரைக்கொண்டு வேளாண்மை செய்பவர்), கருங்களமர் (தாமே உழுது உழைப்பவர்) என்னும் சொல்லாட்சிகளில் வெள் — செயற்படாமையைக் குறித்தல் காண்க. இச்சொல் பழங் கன்னடத்திலும் பெள்காடு என வழங்குகிறது.
3. **நூன** (எண்ணெய்)	...	...	**நூ + நெய்** — நல்லெண்ணெய், நூ = எள். தெலுங்கிலும் எள் நூகுல் எனப்படுகிறது. நோலை — எள்ளுருண்டை.

இவ்விளக்கம் கேட்டு அவர் அகமகிழ்ந்தார். ஆரிய இலக்கண இலக்கியக் கூறுகள் தெலுங்கில் விரைந்து புகுத்தப்பட்ட அளவிற்குத் தமிழிலக்கண இலக்கியத் தாக்கம் தெலுங்கு கன்னட மலையாள மொழிகளில் ஏற்படாதது தவக்குறைவேயாகும். ஆண்டாள் வரலாறு ஒன்று மட்டும் கிருட்டிணதேவ ராயரால் தெலுங்கு இலக்கியமாயிற்று.

தெலுங்கு இலக்கண நூலாகிய பால வியாகரணத்தில் ராமுடு, தம்முடு (இராமன், தம்பி) என்னுஞ் சொற்களின் பழைய வடிவத்திற்கு ராமுன், தம்முன் என ஆண்பாலீற்று 'ன்' (னகர) மெய் கூறப்பட்டிருந்தும், ஆரியப் புலவர்களால் தெலுங்கில் பண்டேயிருந்த மெய்யெழுத்து வரிசையில் னகர மெய் களையப்பட்டு நகர மெய்யே எல்லா இடத்திலும் ஆளப்படுகிறது. னகர மெய்யீற்றுச் சொற்களுக்குத் தெலுங்கில் 'த்ருதப்ரக்ரதமு' என்று பெயர் உள்ளது. எழுவாய் (முதல் வேற்றுமை) பெயர் தோன்று நிலையாகவே நின்று வேற்றுமை உருபு எதனையும் கொள்ளாது என்பது தொல்காப்பிய நெறி. இதனையே அனைத்துத் திரவிட மொழிகளிலும் கொண்டிருக்க, தெலுங்கில் முதல் வேற்றுமைக்கு (சமற்கிருத இலக்கணத்தையொட்டி) உருபு கூறப்பட்டிருப்பது திரவிடமொழிக் குடும்பத்துக்கு வடமொழி வெறியர் இழைத்துவரும் கொடுமைகளில் மிகப் பெரிய கொடுமையாகும். ராமுடு, தேவுடு, (இராமன், தேவன்) என வரும் சொற்களில் 'டு' முதல் வேற்றுமை உருபாம். அல்லமு (இஞ்சி) என்பதில் 'மு' முதல் வேற்றுமை உருபாம். கோட (சுவர்) என்னும் சொல்லுக்கு கோடமு என ஏன் முதல் வேற்றுமை உருபு 'மு' வரவில்லை என்று கேட்டால் தக்க மறுமொழி சொல்வாரில்லை.

தெலுங்குச் சொற்களில் பத்து விழுக்காட்டுச் சொற்களுக்கு மட்டும் பெயரீற்றில் 'டு' ஈறும் ஐந்து விழுக்காட்டுச் சொற்களுக்கு மட்டும் 'மு' ஈறும் உள்ளன. எஞ்சிய 85% சொற்கள் எழுவாயாகும் நிலையில், ஈறு எதுவும் பெறாத நிலையில், தெலுங்கில் எழுவாய் பெற்றமைக்குச் சமற்கிருதம் போல் உருபு உண்டு என்பது மிகத் தவறான செய்தி என்பது அறிஞர்கள் ஆராய்ந்து கண்ட முடிபாகும்.

சமற்கிருதத்தின் மேலாண்மையை வலுப்படுத்தவும் மாநில மொழிகளின் தனித்தன்மையைச் சீரழிக்கவும் இலக்கணம் வகுக்கும் முறை கடைப்பிடிக்கப்பட்டால் அந்த இலக்கண முறையைத் தாய்மொழியினர் உண்மையுணர்ந்து உதறித்தள்ளிவிடுவர். ஏனைத் திரவிடமொழியினர் உணர்வும் தெளிவும் பெறும் காலம் தொலைவிலில்லை.

மலையாளம்

மலையாளம் தமிழின் கிளைமொழியாக இருந்து பின் தனிமொழியாக வளர்ந்தது என்று மலையாள இலக்கண நூல் 'கேரள பாணினீயம்' கூறுகிறது. திருவிதாங்கூர் அரசினர் 1941-ல் வெளியிட்ட 1,100 கல்வெட்டுகளில் 838 தமிழ்க் கல்வெட்டுகளும் 217 மலையாளக் கல்வெட்டுகளும் கிடைத்திருக்கின்றன.

சிலப்பதிகாரம் தோன்றிய சேர நாட்டில் அதன் எச்சமாக இன்றும் கண்ணகியின் வரலாறு நல்லம்மை தோற்றப் பாட்டாகப் பாடப்பட்டு வருகிறது. கேரள மலையன்மாரின் தெய்வமான ஒற்றை முலைச்சியைப் பாலை மரத்தடியில் அவர்கள் வழிபடுகின்றனர். சிலப்பதிகாரத்தில் கூறப்படும் எழுதுவரிக் கோலமே இன்றும் மலையாளத்தில் கதகளியாட்டமாக வாழ்ந்துகொண்டிருக்கிறது. நாக பகவதியை வழிபடும் புலையரிடத்தில் தென்னைமடற் குதிரையேறிவரும் பழைய மடலேறும் வழக்கத்தின் எச்சமும், தென் கன்னடத்தில் வேலனின் வெறியாட்டும் இன்றும் உள்ளன. திருவனந்தபுரம் சிவன் கோயிலில் ஆண்டுதோறும் சிலை (மார்கழி)த் திங்களில்

சாக்கியர் கூத்து (சேரன் செங்குட்டுவன் முன் கூத்தச்சாக்கையன் ஆடிய கூத்தின் வகையைச் சார்ந்தது) நடைபெற்று வருகிறது. இவையனைத் தும் பழந்தமிழ்ப் பண்பாட்டின் எச்சங்களாகப் பன்னூறாண்டுகளைக் கடந்தும், தமிழ்க்கலை களைப் போற்றுவாரற்ற நிலையிலும், தப்பித் தவறி வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

பழந்தமிழகத்து நாட்டுப்புறக் கலைகளில் பல இன்றும் மலையாளத்தில் உள்ளன. பாணன் களி, காளி நாடகம், பாணத் தோற்றம், குறத்தியாட்டம், கைகொட்டிக்களி, வெளிச்சப்பாடு, விளக்கைச்சுற்றி யமர்ந்து பாடும் பாடல், விடுகதை அல்லது வினா விடை வடிவிலமைந்த ஏழாமத்தி, யாத்ரகளி, சாக் கியர் என்பார் எட்டுநாள் நடத்தும் கூத்தாகிய கூடியாட்டம், நங்கையரின் நகைமொழிக் கூத் தாகிய பாடகம், பன்னிரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றபின் ஆடவேண்டிய கதகளி, தெய்யாட்டம், மோகினியாட்டம், துள்ளல், களி, கூத்து, குடகு மொழியாரின் கொடிச்சிப்பாட்டு ஆகியவை கலைத்துறை ஆய்வாளர்களால் முறையாக ஆயப் படாமலும் அரசினரால் முழு அளவில் போற்றி வளர்க்கப்படாமலும் உள்ளன. தமிழக அர சேனும் இப் பழந்தமிழ்க் கலைகளை — எவை எம்மா நிலத்தில் நிலவுவதாயினும் — போற்றி வளர்க்க முன்வரின் பண்டைத் தமிழரின் கலைப் பண்பாட்டுக் கூறுகளைப் பாருக்குணர்த்த, பெரிதும் உதவும்.

கன்னட, தெலுங்கு நாட்டுப்புறங்களிலும் தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியில் அமைந்த ஆடல் பாடல் கூத்து வகைகளும், பல்வகைப் பண்களும், நாட்டுப் பாடல்களும் அரிய இசைக்கருவிகளும் பல உள்ளன. அவற்றை விரிப்பின் பெருகும்.

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் பாட்டு, உரை நூல், வாய்மொழி (மந்திரம்), பிசி (விடுகதை யும் வினாவிடை இலக்கியமும்), அங்கதம் (எதிர் நூல், தருக்க வகை), முதுசொல் (பழமொழி) என் னும் அறுவகை நிலைக்களங் (யாப்பு வகை)களும், இருபது வண்ணங்களும், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எண்வகை வனப்பு (காப்பியம்) அமைப்புகளும் கடைக்கழகக் காலத்து நூல்களில்கூட நமக்கு முழு மையாகக் கிடைக்கவில்லை. குமரிநாட்டுத் தலைக் கழகக் காலத்தில் பெருவளநாட்டுச் செங்கோன்மீது **தாப்புலிப்பா** என்னும் பாவால் ''செங்கோன் தரைச் செலவு'' என்னும் நூலை ஏழ்தெங்கநாட்டுப் பஃறுளி யாற்றுத் தலைப்பாய்ச்சல் முத்தூர் அகத்தியன் என் னும் புலவர் பாடினார். அந்தத் தாப்புலிப்பா என் னும் செய்யுள் வகை தொல்காப்பியத்திலும் கூறப் படவில்லை. தொல்காப்பியத்திற்கு நெடுங்காலத் திற்கு முன்பே அப் பாவின் வகை மறைந்ததெனின், கடைக்கழகக் காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்பிருந்தே குமரி நாட்டில் செந்தமிழ் இலக்கண இலக்கிய அணி பூண்டு முத்தமிழாக வளர்ந்த வரலாற்றைத் தமிழர் வெளியுலகிற்கு உணர்த்தினால் உலகமே தமிழரின் தொன்மரபுச் செம்மையைப் போற்றும்.

ஞ், ண், ந், ம், ன் என்னும் ஐந்து மெல்லின மெய் யெழுத்துகளுள் 'ன்' ஒன்றில் காப்பிய ஈற்றடி ஈற்றுச் சீரின் ஈற்றசை இறும் 'இயைபு' என்னும் காப்பிய வகைக்குச் சிலம்பும், மணிமேகலையும், சில தெலுங்கு நூல்களும் சான்றாக உள்ளன. ஞ், ண், ந், ம் என் னும் மெய்யீற்றுக் காப்பியங்களுக்கு இன்று எங்கும் சான்றில்லை. தமிழிலக்கிய வளம், கடந்த பத்தாயிரம் ஆண்டு வளர்ச்சியில் எண்ணாயிரம் ஆண்டுகள் வளர்ந்து கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக அடியோடு தாழ்ந்திருப்பதைக் காண்கிறோம்.

மலையாளத்தில் நடைபெறும் விடுகதை அல்லது வினாவிடை வடிவிலான ஏழாமத்திப் பாடல் வகை தொல்காப்பியத்தில் பிசி என்று கூறப்படுகிறது. இது விடிய விடிய நடைபெறும் பாட்டும் உரை நடையும் கலந்த நகைச்சுவை விருந்தாகும். இது கன்னட நாட்டில் கருங் கூத்தாகவும் (யக்ஷ கானம்), ஆந்திரத்தில் 'புர்ர கத' எனவும் வினாவிடை, கதை யுரைக்கோவை (கதா காலட்சேபம்) களாகவும் நின்று நிலவி வருகின்றன. இன்றைய கதா காலட்சேபங் கள் அனைத்துக்கும் தொல்காப்பியத்தில் கூறப் படும் **பிசியே** மூலமாகும். ஏனைத் திரவிடர் இதன் தமிழ் மூலத்தை அறியாதிருக்கின்றனர். முத்தமிழ் இலக்கண இலக்கியக் கூறுகள் அனைத் துத் திரவிட மொழிகளிலும் ஆழ வேரூன்றியுள்ளன என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

முதுசொல் என்று தொல்காப்பியத்தில் கூறப் படும் பழமொழி இலக்கிய வகை ஒரே கருத்திலும் ஒரே சொல்லாட்சியுடனும் திரவிட மொழிகளில் நிலவி வருவதை ஒப்பிட்டுக் காணலாம். தமிழிலும் மலையாளத்திலும் முறையே பத்தாயிரம் பழ மொழிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

''பழஞ்சொல்லினு பதரில்ல'' என்னும் மலை யாளப் பழமொழி, பழமொழிகளில் பயனில்லாதவை எவையுமில என்று கூறுகிறது. ''ஊணினு மும்பு உப்பேரி; வாக்கினுமும்பு பழஞ்சொல்லு'' என்னும் மலையாளப் பழமொழி உணவு படைக்குமுன் இலையில் உப்பு வைப்பதும், எவருடனும் பேசத் தொடங்குமுன் ஏற்புடைய ஒரு பழமொழியைச் சொல்லிப் பேசத் தொடங்குவதும் சிறந்த பண்பாடு என்பதைக் காட்டுகிறது. பழந்தமிழ் முன்னோர் பழமொழியை (முதுசொல்) ஏன் இலக்கிய நிலைக் களங்களுள் ஒன்றாகக் கொண்டனர் என்பதற்கு விடை தருமாறு இவை அமைந்துள்ளன.

பிராகுவி, குவி, ஒரோவான் போன்ற தமிழினத்தைச் சார்ந்த மொழிகள் வட திரவிட மொழிகள் எனப்படுகின்றன. பத்தாம் நூற்றாண்டளவில் மராத்தி மொழியும் குச்சர மொழியும் (குஜராத்தி) ஐந்திரவிட மொழிகளுள் வைத்தெண்ணப்பட்டன. இன்று அவற்றை ஆரிய இனமொழிகள் என்கின்றனர். ஆரியச் சொல்வளம் அவற்றில் மீதூர்ந்து நிற்பதால் இன்றைய மொழி நூலார் இம்முடிவுக்கு வந்துவிட்டனர். ஒருமொழி தன் தொடக்க காலத்தில் எவ்வினத்திலிருந்து முகிழ்த்தது என்று கண்டறிய மொழி நூலாரை நம்பிப் பயனில்லை. மொழியகழ்வாராய்ச்சியாளர் (Language Archaeologists) தாம் சரியான வரையறை தர முடியும்.

இவ்வாறே கி.மு. 1000 ஆண்டளவில் வட இந்திய மக்களின் பேச்சு மொழியாக இருந்த பைசாச பிராகிருதமும், அதனின்று கிளைத்ததும் இன்றைய வடபுல மொழிகள் அனைத்துக்கும் தாயானதுமான பாலி பிராகிருத மொழிகளும், தமிழினின்று திரிந்த திரவிட மொழிகளேயாகும். ஆதலின், பாலி பிராகிருத மொழிகள் அக்காலத் திரவிடமொழிகளாதலின் அவற்றிலும் தமிழின் தாக்கத்தை அறிதல் இன்றியமையாதது.

ஆரியரின் வருகைக்கு முன்பு இந்தியா முழுவதும், **தமிழகம்** மற்றும் **நாவலம்** என்னும் பெயர்களில் சேரரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. 'குமரியொடு வடவிமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரன்' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆரியர் வந்த புதிதில் சிந்துவெளியின் மேற்பகுதியில் தங்கினர். அங்குத்தான் இருக்கு வேதம் தோன்றியது. இருக்கு வேதத்தில் 'பன்சஜன்' என்னும் சொல்லாட்சி காணப்படுகிறது. அதற்கு இதுவரை எவராலும் சரியாகப் பொருள் கூற இயலவில்லை. சிந்துவெளியில் வாழ்ந்தவர் தமிழரே என்றும் இருக்கு வேதத்தில் வரும் 'பன்சஜன்' என்னும் சொல்லாட்சி தமிழர்களின் ஐந்திணை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) மக்களையே குறித்தது என்றும் திரு. பி. தி. சீனிவாச ஐயங்கார்[7] கூறுவதோடு தமிழறியாத வரலாற்றாசிரியர்களுக்கு இந்த உண்மை எங்கே தெரியப்போகிறது என்று வருந்துகிறார். மேலும், இருக்கு வேதத்தில் வரும் 'பணிஸ்' என்னும் மக்கள் வடநாட்டுத் தமிழ்ப் பண்ணையக்காரர் (விவசாயி)களே என்றும் கூறுகிறார். இன்றும் நிலக்கிழார்களைப் பெரியபண்ணை, சிறிய பண்ணை என்று குறிப்பிடும் வழக்கம் தமிழ் நாட்டில் உள்ளது. சிந்துவெளி நாகரிகக் காலத்தின் தொடர்ச்சியறாமல் வடநாடு முழுவதும் வாழ்ந்த மக்கள் தமிழர்களே என்றும், ஆரியத் தாக்குதலால் வடபுலத்தாரின் தமிழ் பிராகிருத மொழியாயிற்று என்றும் நாட்டவே இஃது இவண் கூறப்படுகிறது.

பிராகிருத மொழி தனிமொழியென்றும் அது சமற்கிருதத்தினின்றும் தோன்றிய மொழியன்று என்றும் பிராகிருத மொழிப் பேராசிரியர்[8] தாம் இந்தியில் எழுதிய நூலில் குறிப்பிடுகின்றார். பிராகிருத மொழியுள் எகர ஒகரக் குறில் எழுத்துகள் உட்படப் பல தமிழ்க்கூறுகள் உள்ளன. பைசாச பிராகிருதச் சொற்கள் துருக்கி, சீனக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

பௌத்த நூல்களில் வரும் 'தமலிகா' (தமிழகம்) என்னும் சொல் இந்தியா முழுவதையும் குறிப்பதாக இருப்பதும், இச் செய்தி 'World Ethnology' என்னும் நூலிலும் இடம் பெற்றிருப்பதும் வட இந்திய மொழிகளில் ஆழ வேரூன்றியுள்ள தமிழின் தாக்கத்தைக் காட்டப் போதுமானவையாகும்.

தொல்காப்பியம் ஐந்திர இலக்கணத்தின் வழிப்பட்டது. பிராகிருத இலக்கண நெறியான காதந்திர மரபும், பாலி மொழியின் இலக்கண நெறியான கச்சாயன மரபும் ஐந்திரத்தின் தாக்கம் பெற்றவை என்று கூறப்படுகின்றன. ஆரியரின் வருகைக்கு முன்னும் பின்னும் ஐந்திர இலக்கணம் இந்தியாவின் ஒரே இலக்கண நூலாக விளங்கியிருந்தது. இது 25,000 நூற்பாக்களைக் கொண்டிருந்தது.[9] பாணினீயத்தைவிடப் பல மடங்குப் பெரியது. சமற்கிருத மொழியும் ஐந்திர இலக்கணத் தாக்கத்தால் உயிரெழுத்து மெய்யெழுத்து முறை வைப்பையும் வளைநா ஒலிகளையும் தமிழிலிருந்து கடன் பெற்றிருக்கிறது.

பெரிதும் ஆரியத் தாக்கம் பெற்ற வட இந்திய மொழிகள், வாக்கிய அமைப்பில் திரவிடமாகவும் சொல்வளத்தில் ஆரியமாகவும் உள்ளன என்று கால்டுவெல் கூறுகிறார்.

வடநாட்டில் நிலவிய சதி (உடன்கட்டையேறுதல்) என்னும் வழக்கம் ஆரிய நாகரிகத்தைச் சார்ந்தது அன்று. கணவன் இறந்தால் மனைவியும் தீப்பாய்ந்து இறப்பது பழந்தமிழரின் வழக்கம். இதனைத் தொல்காப்பியர் 'ஆஞ்சிக்காஞ்சி' என்னும் துறையாகக் குறிப்பிடுகிறார்.

---

[7] The vedic phrase seems reminiscent of the division of the people in to five regional tribes, and that is *Panca Janāh.* This mysterious phrase has been attempted to be explained by various writers, ancient or modern, but by none satisfactorily. I have made the conjecture that it must refer to the fine tribes of pre-Aryan times, but scholars who know nothing of Tamil literature and who refuse to consider the necessity of the historical continuity between pre-Aryan Indian and Aryan India have been unable to appreciate the value of this conjecture.

(P. T. Sreenivasa Iyengar — *History of the Tamils,* Madras University, 1929, (p. 84).

[8] Jagadeesh Chandra Jain — 'Prakrit Sahitya ka Itihas' (p. 19)

[9] தாராநாதர் — 'இந்தியாவில் புத்த சமய வரலாறு' (பக். 296)

மகாராட்டிரப் பிராகிருதத்தின் பேச்சுமொழியாக இன்றும் வாழ்ந்து வரும் மராத்திமொழியின் சொற் பிறப்பியல் அகரமுதலி முன்னுரையில் அதன் ஆசிரியர் திரு. மோல்சுவொர்த்து அம்மொழி ஆரிய இனத்தைச் சார்ந்தது அன்று என்கிறார். ஆரிய மொழியில் இல்லாததும் தமிழின மொழிகளுக்கு மட்டும் உரியதுமான எகர ஒகரக் குறில் ஒலிப்பு மராத்தியிலும் பிற வடபுலத்து மொழிகளிலும் இன்றும் பேச்சு வழக்கில் உள்ளன. மராத்தி மொழியின் இலக்கிய வழக்கிலும், அஃறிணைப் பன்மை பெயர்ச்சொற்களின் ஈறாகவும், மூன்றாம் வேற்றுமை உருபாகவும், தன்மை படர்க்கை நிகழ்கால ஈறுகளாகவும் வரும் ஏகார வரிவடிவம் எகரக் குறிலாகவே ஒலிக்கப்படுகிறது.

வடமாநிலங்களில் கத்தியவாட், தார்வாட் என வல்லின மெய்யீற்றில் இறும் இடப்பெயர்களைக் கல்லாத மக்கள் கத்தியவாடி, தார்வாடி என உயி ரீறாகவே (தமிழைப் போன்று) ஒலிக்கின்றனர். 'Sakunthala' என்னும் பெண்பாற் பெயர்ச்சொல் பிராகிருத மொழியில் 'சவுந்தலா' என்று ஒலிக்கப் படுகிறது. வடநாட்டு மக்களின் பேச்சுமொழி, நாட்டுப்பாடல், விடுகதை, பழமொழி ஆகிய வற்றை நன்கு ஆராய்ந்தால் தமிழே அம் மக்களின் முந்தைய மொழி என்பதை ஐயத்திற்கிடமின்றி வரையறுத்துவிடலாம்.

இன்றைய மொழிநூலார், வெளிப்படத் திர விடச் சொல்வளம் புலப்படும் சிறுபான்மை வட இந்தியக் குறுமொழிகளை வட திரவிட மொழிகள் என்கின்றனர். இன்றைய இலக்கிய மலையாளம் கூட 80 விழுக்காடு வடசொல்லாட்சி பெற்றிருப்ப தால் இன்றைய மொழிநூலாரின் நோக்கில் மலை யாளம் நாளடைவில் ஓர் ஆரிய மொழி எனக் கணிக்கப்பட்டால் வியப்பில்லை.

இந்திய வரலாறு முறையாகத் தெற்கிலிருந்து தொடங்கப்படவேண்டும் என்னும் பேருண்மையை வரலாற்றுப் பேராசிரியர் வின்சென்று சிமித்து வெளி யிட்டார். இந்திய மொழிகளில் தமிழின் தாக்கத் ததை ஆய்வதும் குமரிநாட்டுக் கடலகழ்வாராய்ச் சியும் அதற்குப் பெரிதும் பயன்படும். கல்கத்தா வில் புதிதாக இந்திய அரசினரால் நிறுவப்பட்டுள்ள கடலடி தொல்பொருளாய்வுத்துறை (Marine Archaeological Department) இம் முயற்சியிலீடுபட அரசு ஊக்கவேண்டும்.

பன்னெடுங்காலமாகத் திரவிட மொழிகளுக்கும் வடபுல மொழிகளுக்கும் இணைப்புப் பாலமாகவும் தாய்மை ஊற்றாகவும் இருந்த தமிழிலக்கண இலக் கியங்கள் போற்றுவாரின்மையாலும், வடமொழிக்கு வலியக் கொடுக்கப்பட்ட ஏற்றத்தாலும், வழக் கிழந்தனவெனினும் நாட்டுப்பாடல், பழமொழி, குழந்தைகளின் வாய்மொழியிலக்கியம் முதலிய வற்றில் ஒரேவகை இலக்கியப் பாங்குகள் ஊடுருவி நிற்பதைக் காணமுடிகிறது.

நாட்டுப்பாடல்களில் கும்மி கோலாட்ட வகைகள், திருமண வாழ்த்துப் பாடல்கள், தெய்வ வாழ்த்து (தேவ பாடாண்) வகைகள், விடுகதை, நகை யாட்டு, ஏற்றப்பாட்டு, உலக்கைப் பாட்டு (வள்ளை), ஏர்க்களப் பாட்டு, அறுவடைப்பாட்டு, கால்நடை மேய்ப்புப் பாட்டு வகைகள் அனைத்துத் திரவிட மொழிகளிலும் ஒத்தநெறி தழுவி அமைந்துள்ளன. இடைக்காலக் கன்னட மன்னன் ஒருவன் நாட்டுப் புற மகளிர்க்கென்றே வள்ளைப் பாடல்களை (உலக்கைப் பாட்டு) ஏராளமாக எழுதித் தந்தா னாம். அவற்றுக்கு 'ஒவணிகெ ஒணக்கெ ஹாடு' என்று கன்னடத்தில் பெயர் வழங்குகிறது.

பழங்காலக் குழந்தையிலக்கிய வகைகளைத் தொகுக்கும் முயற்சியில் எவரும் ஈடுபடாதது வருந்துதற்குரியது. அம் முயற்சியிலீடுபட்டால் அரிய பல உண்மைகளைக் காணலாம். பின்வரும் சிறுவர் பாடல் மராத்தியுள்ளிட்ட தென்னாட்டு ஐந்திரவிட மொழிகளிலும் நாட்டுப்புறப்பாடலாக நிலவி வருகிறது.

முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டி
ரண்டு குளம் பாழ் ஒண்ணுலே தண்ணியே இல்லை
தண்ணியில்லாக் குளத்திலே மண்ணெடுத்தவர் மூணுபேரு
ரண்டுபேரு முடவர் ஒருத்தனுக்குக் கையேஇல்லை
கையில்லாத குயவன் செய்த பானை மூணுபானை
ரண்டுபானை பச்சை ஒண்ணு வேகவே இல்லை
வேகாத பானையிலே போட்டரிசி மூணரிசி
ரண்டரிசி பச்சை ஒண்ணு வேகவே இல்லை
வேகாத சோற்றுக்கு வந்தவிருந்து மூணுபேரு
ரண்டுபேரு பட்டினி ஒருத்தன் சாப்பிடவே இல்லை.

இந்த நகையாட்டுச் சிறுவர் பாடல் தமிழிலுள்ள வாறே அடி மாறாமல் சொல் மாறாமல் கன்னடம், மலையாளம், தெலுங்கு, மராத்தி ஆகிய மொழிக் குழந்தைகளிடம் எக்காலத்தில் எப்படிப் பரவியது என்று அறியக்கூடவில்லை. ஏனைத் திரவிடமொழி களில் தமிழின் தாக்கத்தை அறிய இதுபோன்ற துறைகளில் ஆய்வு ஊக்கப்பட வேண்டும்.

இசைத் தமிழ்த் தன்மை



பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை திரு. ப. சுந்தரேசனார்

உலகில் எல்லா நாடுகளிலும் வாழும் மக்களறிவில் தோன்றி விளக்கமடைந்து வளர்ந்துள்ள கலைகளில் இசைக்கலையும் ஓர் ஒப்பற்ற கலையாகும். இந்திய நாட்டு இசைக்கலையும் கருவியிசை, கண்ட (குரல்) இசை எனும் பாகுபாட்டினோடே வளர்ந்து வருவதாகும். ஒவ்வொரு நாட்டிலும் அவ்வந்நாட்டுப் பண்பிற்குமட்டும் ஏற்றவாறே கலைகளும் விளங்கி வருவது இயல்பு.

இந்திய இசையில் நுண்ணொலிகள், அவற்றின் சேர்க்கை, மாறி மாறி ஒலிக்குந் தன்மை, அவ்வவற்றால் கேட்கப்படும் ஒலிக் கூறுபாடுகள், அவற்றின் ஒப்புமை ஒப்புமையின்மை யாவும் கருவிகளின் வழியேதான் மிக்க பழங்கால இந்திய மக்களால் அறிந்துணரப்பெற்றன.

இந்திய இசையிலும் முறைமைபற்றி **வட இந்திய இசை, தென்னிந்திய இசை** எனும் பிரிவுமுறை எக்காலத்தும் உளது. ஒலிவகை ஒன்றா யிருந்தும் இசைவகை (சுரவகை) ஒன்றாயிருந்தும் இசைக்கும் முறைமையே அப் பிரிவுமுறையாகும். பொதுவகையில் வட இந்திய இசை **இராகத் துறையிலும்** தென்னிந்திய இசை **பண் முறையிலும்** பழங்காலந் தொட்டே வழக்கில் இருந்துளது.

பாடிவரும் **பழக்க முறை, இசை வகை இலக்கியமாகும்.** அதனையறிந்தோர், முறை தவறாதிருத்தற் பொருட்டுப் பழக்க வழக்கத் தன்மைகளை அறிமுகப்படுத்தி எழுதி வைத்துப் பாதுகாத்த முறை, **இலக்கணமாகும்.** இலக்கணம் நூல் வடிவில் நெடுங்காலம்வரையிருந்து துணை செய்யும். இலக்கியம் அவ்வக்காலங்களுக்கு ஏற்ப மாற்றமடையும். ஆயினும் இலக்கியமே முதலில் வைத்து எண்ணப்படும். இலக்கணம் அடுத்து வைத்து எண்ணப்படுவது வழக்கு

இக்கருத்து, இசைத்தமிழ்க் கலைக்கும் பொருந்துவதாகும். மக்கள் வழக்கில் பாடி வரும் பழக்க முறை பொதுவியலைச் சார்ந்ததாகும். **இயல், இசை, நாடகம்** யாவுமே வேத்தியலாகவும் பொதுவியலாகவும் இருந்துள்ளன. இசையையும் நாடகத்தையும் மொழியோடு சேர்த்துக் கூறிய பெற்றிமை உலகில் தமிழ்மொழிக்கே தொன்றுதொட்டு அமைந்து உளது. அவ்வமைப்பினை இவ்வாறுங் காணலாகும். எதனையும் எழுதிக் காணுமிடத்துச் சிற்சில நுண்மையும் தன்மையும் புலப்படும் என்பதுறுதி.

தமிழ்

இயல்—தமிழ்—இயற்றமிழ்
தமிழ்—இயல்—தமிழியல்

இசை—தமிழ்—இசைத்தமிழ்
தமிழ்—இசை—தமிழிசை

நாடகம்—தமிழ்—நாடகத்தமிழ்
தமிழ்—நாடகம்—தமிழ்நாடகம்

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே''. ஆதலின், இத்தகு சொற்களின் அமைதி முறைகளில் ஆழ்ந்த பொருள் தன்மை நிறைந்து விளங்குவ தறியலாம். ஆயினும் தனித்தனியே அறிதலே சாலச் சிறப்புடைத்து.

தமிழ்மொழிக்குத் தொல்காப்பியமே சிறந்த முதல் இலக்கண நூலாகும். ''இயைபே புணர்ச்சி'', ''இசைப்பு இசையாகும்'' எனுமிவ்விரண்டு தொல்காப்பிய நூற்பாவிற்கும், இயைந்தொழுகும் எனவும் யாழிசையூப்புக்கும் எனவும் அதாவது ஊடே புகும் எனும் பொருள்பட, **இயைபும், இசைப்பும், புணர்ச்சிக் குறிப்பும், இசைப் பொருண்மையும்** உணர்த்தியவாறு என அதன் உரைக் குறிப்புக் கூறுகின்றது. இசைத்தமிழ்க்கலை **நரம்பின் மறை** என்றும் கூறப்பெற்றது.

ஒலிவகைக் கலைப் பகுதியிலும் நுண்கலை முறைமை பலவாக உள்ளன. ஆதலின் நுண்கலை களில் ஒன்றாய இசைக்கலை ஒப்பற்ற தனித்த மொழி போன்றே விளங்குவதாகும் எனக் கூறப் படும். நுண்ணிய ஒலியணுக்களின் திரட்சியே இசையென்பதும் அறியப்படும்.

அடியார்க்குநல்லார் காலத்து மறைந்த இசை நூல்களின் பெயரும், இருந்த இசை நூல்களின் பெயரும் தெரியவருகின்றன. இசை, தனித்தும் விளங்கும்; மொழியுடன் சேர்ந்தும் விளங்கும். மொழியுடன் சேர்ந்து விளங்குங்கால், மொழிக்கு முன்னின்றும் பின்னின்றும் விளங்கும். இசை முன் னின்று விளங்கினால் அதனைச் சேர்ந்த **தமிழ், இசைத் தமிழ்** எனவும், பின்னின்று விளங்கினால் அதனைச் சார்ந்த தமிழ், **தமிழிசை** எனவும் பெயர் பெறுவதை, சான்றோர்கள் நன்கே நிறுவிப் போந்தனர். இக் கருத்தே இலக்கணத்தில் இடம் பெற்றது. இசைத்தமிழ் இலக்கணம் வெண்பாவா னும், நாடகத்தமிழ் இலக்கணம் ஆசிரியப்பாவா னும் இயற்றப்பெற்றது.

இந்தியத் தென்னகத்தில் சிறப்பாகக் **குறிஞ்சி முல்லை, பாலை, மருதம், நெய்தல்** எனும் ஐந்திணை களும் இயல்பாகவே அமைந்துள்ளன. அம்முறை யில் தமிழகத்தே மிக்க பழங்காலத்தில் முல்லை நிலத்து வாழ்ந்த ஆயர் பெருமக்களால் **குழல்** வழி யும் **யாழ்** வழியும் இசைக்கலை தோற்றுவிக்கப் பெற்று அறிந்துணரப்பெற்றுப் பெருக வளர்க்கப்பெற்றன என்பதே தொன்னூல்களின் முடிபு.

இக் கருத்தினை நம் விபுலானந்த அடிகளார் பெரும்பாணாற்றுப்படைப் பகுதியினின்றும் இவ் வாறு எடுத்துக்காட்டியுள்ளார்:

''தொடுதோல் மரீஇய வடுவாழ் நோனடி
விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
உறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவும் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்றமர் உடுக்கைக் கூழார் இடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
அந்து ணவிர்புகை கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட **கருந்துளைக் குழலின்**
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி..''

(பெரும்பாண். 169-184)

என்பதே அப்பகுதி. அருட்டிரு விபுலாநந்த அடிகள் அவர்கள் இருபதாம் நூற்றாண்டு யாழ் நூலாசிரியர். மேலும் விபுலாநந்தர், தலைச் சங்கத்துக்குமுன் நடந்த இந் நிகழ்ச்சியினைக் கடைச் சங்கக் காலத்துப் புலவராகிய கடியலூர் உருத்திரங்கண்ண னார் கனவு கண்டு, தாம் தொண்டைமான் இளந் திரையனைப் பாடிய பெரும்பாணாற்றுப்படையி னுள்ளே பொதிந்து வைத்தார் எனவும் கூறினார்.

முல்லை நிலத்து ஆயர்கள் கண்ட குழல்களும் பல; யாழ்களும் பல. குழற்கருவிகள் பற்றிய ஒரு சில செய்திகளை நமக்குச் சிலம்பினது உரைப் பகுதி தெளிவுறக் காட்டுகிறது. அவை வருமாறு:

'குழலும் என்றது - வங்கியப் பாடலும் என்ற வாறு. குழல்-வங்கியம். அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என ஐந்துமாம். என்னை?

''ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே
பாங்குறுசெங் காலி கருங்காலி — பூங்குழலாய்
கண்ண னுவந்த குழைக்கிவைக ளாமென்றார்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து.''

'இவற்றுள், மூங்கிலிற் செய்வது உத்தமம்.; வெண்கலம் மத்திமம்; ஏனைய அதமமாம். மூங்கில் பொழுது செய்யும்; வெண்கலம் வலிது; மரம் எப் பொழுதும் ஒத்து நிற்கும்.'

'இக்காலத்துக் கருங்காலி செங்காலி சந்தனம் இவற்றாற் கொள்ளப்படும். கருங்காலி வேண்டு மென்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருக வளர்ந்து நாலு காற்று மயங்கின் நாதமில்லையாமாதலான் மயங்கா நிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமுமின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டி ஒரு புருடாகாரமாகச் செய்து, அதனை நிழலிலே ஆற இட்டு வைத்துத் திருகுதல், பிளத்தல், போழ்ந்துபடுதல் இன்மையை அறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கண வகையான் வங்கியம் செய்யப்படும்.'

'இதன் பிண்டியிலக்கணம் நீளம்: இருபது விரல்; சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒரு பாதி மரனிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைசு பண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்.'

'இனித் துளையளவிலக்கணம்: அளவு இருபது விரல். இதிலே தூம்பு முகத்தின் இரண்டு நீக்கி முதல் வாய்விட்டு இம் முதல்வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினு மிரண்டு நீக்கி நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளை இடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரை என்று கழித்து நீக்கி நின்ற ஏழினும் ஏழு விரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப்படும்.'

'இவ் வங்கியம் ஊதுமிடத்து வளைவாய் சேர்ந்த துளையை முத்திரையென்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழு விரல்பற்றி வாசிக்க.'

'ஏழு விரலாவன: இடக்கையிற் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும், வலக் கையிற் பெருவிரலொழிந்த நான்கு விரலும் ஆக ஏழு விரலுமென்க.'

'இவ் வங்கியத்து ஏழு துளைகளில் இசை பிறக்குமாறு: அஃது ஏழெழுத்தாற் பிறக்கும். எழுத்து ச, ரி, க, ம, ப, த, நி என்பன. இவ் வேழு எழுத்தினையும் மாத்திரைப்படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும்.'

'ஏழிசையாவன; சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இவை பிறந்து இவற்றுள்ளே **பண்கள்** பிறக்கும்.'

ஆசிரியன் நல்லந்துவனாரால் பாடப்பெற்ற பண்டைய இசைப்பாடல்களில் ஒன்றானதும், மருத்துவன் நல்லச்சுதனார் என்பவரால் பண்ணுப் **பாலை யாழில்** இசையமைக்கப்பெற்றதானதும் கிடைத்துள்ள எட்டாவது **பரிபாடலில்** (அடி 22) "**ஏழ் புழை ஐம்புழை யாழிசை கேழ்த்தன்ன**" எனும் அடிகளுக்கு அந்நூல் உரைப்பகுதி 'ஏழு துளையான வங்கியத்தும் ஐந்து துளையான வங்கியத்தும் யாழினும் பிறந்த இசைச் சுருதி யொத்து' எனக் கூறுகிறது.

மரபுத் தன்மைப்படி நோக்குமிடத்து ஏழ்புழைக் கருவிகள் ஏழு இருந்திருத்தல் வேண்டும்; அது போன்றே ஐம்புழைக் கருவிகள் ஐந்து இருத்தல் வேண்டும். **புழை என்பது துளை**. ஏழ்புழைக்கருவிகளில் ஒன்றான ஒரு கருவியையே அடியார்க்குநல்லார் அறிமுகப்படுத்தி இலக்கண மேற்கோள் காட்டினார். அவர் கூறிய அளவு முறைகொண்டு அருட்டிரு விபுலாநந்த அடிகள் பிற்கால ஓசை, ஒலி நூலறிவாலும் விளக்கந் தந்துள்ளார். அவ்விளக்கத்தினையும் ஈண்டுக் காணலாம்.

'நம்மைச் சூழவிருக்கும் பவனத்திலே ஓசையானது ஒரு செக்கண்டுக்கு 1,081 அடி அல்லது 331 மீத்தர் வேகமாகச் செல்லுகிறது என்று கொள்ளலாம்.'

'அடியார்க்குநல்லார் காட்டுகிற வங்கியத்தின் நீளத்தினை எடுத்துக்கொள்வோம். நீளம் இருபது விரல். சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒரு பாதி மரனிறுத்திக் கடைந்து வெண்கலத்தால் அணைசு பண்ணி இடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்...............'

'இனித் துளையளவிலக்கணம்: அளவு இருபது விரல். இதிலே தூம்புமுகத்தின் இரண்டு நீக்கி முதல்வாய் விட்டு இம் முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டு நீக்கி நடுவு நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளை இடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து நீக்கி நின்ற ஏழினும் ஏழு விரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப்படும்' என அடியார்க்குநல்லாரது சொற்களையே நாம் மீண்டும் விளங்கிக்கொள்ளவேண்டிக் குறித்த விபுலாநந்தர்,

'எல்லா இடைப்பரப்புகளும் ஓரளவாக இருத்தல் பொருந்தாது' எனவும் கூறி, 'இப்பொழுது நாம் காணவேண்டியது இக் குழலிலே எழும் முதற் சுவரத்தின் நாதம் ஒரு செக்கண்டுக்கு எத்தனை சிற்றலைகளை உண்டுபண்ணிப் பவனத்திலே பரவுகிறது என்பதேயாம்' எனவும் கூறியதோடன்றி,

'இங்குக் கூறிய விரலளவு அங்குலம் என்பவை ஒரு சாணின் பன்னிரண்டில் ஒரு கூறாகிய முக்கால் 'இஞ்சு' ஆகும். வளைவாயிலிருந்து இரண்டு விரல் கீழாக நிற்பது முத்திரை என்னும் துளை. அதனி னின்று ஒரு விரல் தாழ்ந்து நிற்பது முதற் சுவரத் தின் துளை. இதற்கும் அடைக்கப்பட்ட இடப் புறத்து முகத்திற்கும் **தூரம்** பதினேழு விரலாகும். இதுவே முதற் சுவரத்திற்குரிய குழல் நீளமாகும். இதனை நான்கிற் பெருக்கக் கிடைப்பது **அலை நீளம்.*** அங்ஙனமாதலின் அலைநீளம் 68 விரல் அல்லது 51 'இஞ்சு' ஆகிறது. ஒரு செக்கண்டு என் னும் காலவெல்லையின் முதலிலே புறப்பட்ட அலை யானது 1,081 அடி (ஓசை ஒரு செக்கண்டிலே செல் லும் தூரம்) அகன்று நிற்ப செக்கண்டின் இறுதியிலே புறப்பட்ட அலை துளைவாயிலே நிற்கும்.'

இந்த எல்லைகளுக்கிடையே எத்தனை அலைகள் உண்டென்று காண்பதற்கு 1,081 அடி, அதாவது 12,972 இஞ்சுகளை 51 இஞ்சுகளால் வகுத்துக் காண வேண்டும். அவ்வாறு வகுத்துப் பெற்ற பேறு 254. மேனாட்டார் சட்ஜத்திற்கு 256 முதல் 261 வரை யும் அசைவெண் கொள்வர். ஆதலினால் நாம் ஆராய்ந்த குழலில் இருந்து எழுகின்ற முதற் சுவரத் தினோசை **இளி நரம்பினோசை** என்பது பெறப் பட்டது.

'இனி, ஏழாவது துளையினின்றும் எழுகின்ற சுவ ரத்தினை அளவிடப் புகுவாம். தூம்புமுகத்திலிருந்து 9 விரலில் ஏழாவது துளை நிற்கிறது. இதன் அலை நீளம் 36 விரல் அல்லது 27 இஞ்சு ஆகும். ஆதலின் அதனசைவெண் 12,972÷27=480 ஆகிறது. முதற் சுவரத்தின் அசைவெண்ணினை 256 எனக் கொள்ள லாம். அப்படிக் கொள்ளுமிடத்து ஏற்படுகின்ற வழு நூற்றுக்கு ஒரு வீதமாதலின் கொள்வதில் தவறில்லை. ஏழாஞ் சுவரத்திற்கும் முதற் சுவரத் திற்கும் இடையேயுள்ள அசைவெண் விகிதம் 480/256 ஆகும். இதனைப் பொதுச்சினை நீக்கிக் கொள்ளக் கிடைப்பது 15/8 ஆகும். இதுவே 19ஆம் சுருதியாகிய **கைசிகி** நிஷாதத்திற்குரிய விகித எண். இது பழந்தமிழிசையிலே உழை எனப்படும். அடியார்க்குநல்லார், 'காட்டிய வங்கியம் **இளி முதல் உழையீறாக** இசைத்தது என்பதைக் கணித நூல் கருவியாக மட்டிட்டறிந்து கொண்டோம்' என்றார்.

மேலும் அவர், 'மேற்கூறிய வங்கியத்தை அழுத்த மாக ஊதினால் அதனின்று எழும் அலைகளின் தொகை முன்னையிலும் மூன்று மடங்காகும்..... முன்னின்ற அசைவெண் 256 ஆயின் இப்பொழு துள்ள அசைவெண் 768 ஆகும். இது மேற்றானத் துப் பஞ்சமத்திற்குரியது. பஞ்சமத்தைப் பண்டை யோர் **துத்தம்** என்றனர். இளியினுள்ளே துத்தம் தோன்றுமெனப் பழைய இசையாசிரியர்கள் கூறிய உண்மையினை இது நமக்கு வெளியிட்டுக் காட்டு கின்றது.'

'ஊதப்படுகிற ஏழு துளைகளிலும் நடுவில் நின்ற துளையிலே முன்பு **குரல்** (மத்திமம்) இசைத்தது. இப்பொழுது **இளி** (சட்ஜம்) இசைக்கின்றது. குரலி னுள்ளே இளி தோன்றும் எனும் உண்மையினை இது நமக்கு வெளியிட்டுக் காட்டுகின்றது. ஏழாந் துளையினுள்ளே முன்பு உழை பிறந்தது. இப் பொழுது அத்துளையில் குரல் நரம்பினிசை பிறக் கின்றது. **உழையினுள்ளே குரல்** தோன்றும் எனும் உண்மையை இது நமக்குக் காட்டுகிறது. உழை யுனுட் குரல், குரலினுள் இளி, இளியுனுள் துத்தம் என்பவற்றை நினைவில் வைப்போமாக' எனவே கூறினார்.

''தாரத்துட் டோன்றும் உழையுழை யுட்டோன்றும்
ஒருங் குரல்குரலி னுட்டோன்றிச் — சேருமிளி
யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
கைக்கிளை தோன்றும் பிறப்பு''

என்பது பண்டைய இசைத்தமிழ் வெண்பா. அது கூறும் ஒப்பற்ற உண்மையினை விபுலானந்தர் ஒலி நூற்பகுதி கொண்டும் **இசைத் தமிழ்த் தன்மையினை** நமக்குப் புலப்படுத்தினார்.

அடியார்க்குநல்லார் கூறிய குழலினின்று ஏழிசை தோன்ற அதன் குறியீட்டு எழுத்துகள் **சரிகமபதநி** என்பதே. இதனைப்பற்றியும் நாமறிதல் வேண்டும். பண்டைய இசைத் தமிழ்த் தன்மையில் முதலிசை முதல் எனும் பொருள்பட **தாரம்** எனவே கூறப் பெற்றது. இதனைத் 'தலையினத் தாரஞ் செய்யுந் தாரம்' என்றெடுத்துக்காட்டிய அடியார்க்குநல் லார், 'இவற்றுள் முற்றோன்றியது தாரம், அது வந்தவழிக் கண்டுகொள்க' எனவும் கூறியிருப்ப தறியலாம். விபுலானந்த அடிகளும் ஓரிடத்தில் 'முதலிசையைத் தாரம் எனக் கூறுவது பழந்தமிசை நூற்றுணிபு' எனவும் கூறுவார். இனி, அம்முறையில் குறியீட்டுத் தன்மையுணர எழுத்துகளையும் எழுதிக் காணலாம்.

'ஆங்குள ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் ஏழிசைக்குரிய' என்பது நிகண்டு. பிறப்பு முறை யிலே தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை எனத் தோன்றி ஏழிசைகள், நிரல் அளவு முறைமையில் **தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி** என அமைந்து விளங்கி நிற்கும். இவற்றின் உயிர்க் குறியீட்டு எழுத்துகள் நிகண்டு முறைப்படி,

---

*ஓசையானது பவனத்தினூடே சிற்றலைகளின் வடிவமாகப் பரவும். ஒரு பக்கம் மூடப்பட்ட துளைக்கருவி (புல்லாங்குழல்) ஒன்றினை ஊதி இசையெழுப்ப, குழலின் நீளத்தினைப்போல் நான்கு மடங்கு நீளமுள்ள அலைகள் எழும்.

ஏழிசைகளின் உயிர்க் குறியீட்டு எழுத்துகள்						
தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ

இவ்வட்டவணையைக் கூர்ந்து காணுமிடத்து ஒரே உயிர் எழுத்து ஏழிசைகளுக்கும் வருவதறியலாம். ஆயினும் ஒவ்வோர் இசைக்கேயுரிய குறியீட்டெழுத்துகள் நல்ல கரணியத்துடன் சான்றோர்களால் குறித்து உணரப் பெற்றுள்ளன என்பதும் போதரும். அதாவது ஒரு குறியீட்டெழுத்து எழுதியறியின் அவ்வெழுத்து ஒரு குறிப்பிட்ட இசையேயே குறிக்கும் என்பதாம். முதல் இசையாகிய தார இசையின் குறியீட்டெழுத்து, முதலிசை எனும் பொருள்படியும் முதலெழுத்து மெய்யெழுத்தில் **க** என்பதும்; குரலிசையின் குறியீட்டெழுத்து, மகளிர் குரலினை ஒத்து ஒலிப்பது அறிந்தமையால் **ம** என்பதும்; துத்த இசை மூன்றாமிசையாதலால் ஏழிசைகளில் மூன்றாமிசை **பகை** எனப்படுவதால் **ப** என்பதும் குறியீட்டெழுத்தாயிற்று.

கைக்கிளை இசையின் குறியீட்டெழுத்து ஏற்கெனவே ஐந்தாம் இசையாகிய உழை கிளையாயிருத்தலின் இவ்விசை **சிறிய கிளை** எனும் பொருள்படக் கைக்கிளையானதால் **த** என்பதும் உழையிசையின் குறியீட்டெழுத்து. தாரத்திற்கு உழை **கிளை** ஆதலான் நற்கிளை எனும் பொருள்பட **ந** என்பதும் இளியிசையின் குறியீட்டெழுத்து ஆறாமிசையாக நின்று **பகை**யாகி என ஒலித்தலால் மேற்பகை அல்லது சமப்பகை எனும் பொருள்பட **ச** என்பதும் விளரியிசை ஏழாமிசையாதலால் ஒரு நிரலினை நிறைவு செய்தலால் விளர் எனும் பொருள்பட **விளரி** எனப்பட்டதாலும் **ர** என்பது குறியீட்டெழுத்தாயிற்று. **கமபதநசர** எனும் இசைத் தமிழ்க் குறியீட்டெழுத்துகள் கண்டத்தாற் பாடுங்கால் **கமபதநிசரி** எனப்பட்டது. அன்றியும் அலகுமுறை எண்களை அறிய வேண்டியும் அவ்வவ்வெழுத்து இனங்களும் பயன்படுத்தப்பெற்றன. இவ்வாறே விரிவடையும் எழுத்துகள் அனைத்தையும் **யாழெழுத்துகள்** எனத் தனித்த முறையில் விதந்தோதப் பெற்றன. இவ்வெழுத்துகளை **யாழெழுவல் யாழின் கிளவி** என்றெல்லாம் கூறப்பெறும். யாழிசை யூப்புக்கும் எழுத்துகள் அதாவது யாழின் இசையூடே புகும் எழுத்துகள் என்றும் கூறப்பெறும்.

ஒவ்வோரிசைக்கே உரிய மெய்க் குறியீட்டெழுத்துகள்						
தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
க	ம	ப	த	நி	ச	ரி
குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
ம	ப	த	நி	ச	ரி	க
துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்
ப	த	நி	ச	ரி	க	ம
கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்
த	நி	ச	ரி	க	ம	ப
உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
நி	ச	ரி	க	ம	ப	த
இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை
ச	ரி	க	ம	ப	த	நி
விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி
ரி	க	ம	ப	த	நி	ச

இந் நிரல்களைக் காணுமிடத்து ஆறாம் நிரலான **இளி** முதல் உழையீறாய நிரலே **சரிகமபதநி** எனும் குறியீட்டினைக் கொண்டு விளங்குவதறியலாம். இந் நிரல்தான் அடியார்க்குநல்லார் காட்டிய வங்கிய இலக்கணமும் அதனின்று எழுப்பப்படும் ஒலிமுறை யாகிறது. அவற்றின் குறியீட்டெழுத்துகளுமாகிறது. விபுலாநந்தர் அறிந்து உணர்த்திலரேல் நம்மால் அறிந்துணர இயலவே இயலாது. **சரிகமபதநி** எனும் குறியீட்டெழுத்துள்ள பாலை, **கோடிப்பாலை** எனப்படும். பண்டைய கோடிப் பாலை அதனிசை, அலகுமுறைகள் அவற்றைக் கணித் தறிந்த விபுலாநந்தர், பண்டைய **கோடிப்பாலை.** பிற்கால இசை வல்லுநரால் **கரஹரப்ரியா** எனப் பட்டதென்றார். ஆகவே, சிலம்பு தரும் இசைத் தன்மை, மாதவியின் அரங்கேற்றத்திற்குப் பயன் படுத்தப்பட்டு ஊதியிசைத்த ஒரு குழற்கருவி கோடிப்பாலையை ஊதும் அளவிற்குத் துளையிடப் பட்டதென நமக்குக் காட்டுகிறது. அதுபோன்றே மற்றும் ஆறு பாலைகள், **விளரிப்பாலை, மேற் செம்பாலை, செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை** எனும் ஒவ்வொரு பாலையையும் ஊதும் அளவிற்குக் குழற் கருவிகள் தனித் தனி துளை இயிடப்பட்டிருந்தன என்பதையும் அறிதல் வேண்டும்.

குழற்கருவிகளும் பல என்பதுபற்றி அடியார்க்கு நல்லார், கொன்றை, ஆம்பல், முல்லை என்பன சில கருவி. இதனுள் குழலென்றது வங்கியத்துப் பொதுப் பெயர். இவற்றுட் கூறியது எல்லா முணர்ந்து கருவியாதல் கொள்க. அவ்வாறு கொள் ளுங்கால் கருவியென்பதனை இடுகுறியாகக் கோடுமோ காரணக்குறியாகக் கோடுமோவெனில் காரணக்குறியாகக் கோடும். என்னை காரணமெனில்?

'கஞ்சத்தாற் குமுதவடிவாக அணைசு பண்ணிச் செறித்தலின் ஆம்பற் குழலாயிற்றெனவும், கொன் றைப் பழத்தைத் துருவித் துளைத்து ஊதலிற் கொன்றைக் குழலாயிற்றெனவும், முல்லைக் கொடியால் முப்புரியாகத் தெற்றிய வளையை வளைவாய்க் கட்செறித்து ஊதலின் முல்லைக் குழலாயிற்றெனவும் கொள்க.'

இவ்வுரை குறித்து நோக்குங்கால் குழற்கருவிகளும் பலவென்பது கூறாமலே விளங்கும். இக்காலத்தும் குழற்கருவிகள் பற்பலவாய் தமிழகத்து மக்களிடையே உள்ளன. ஊதும் தொழிலும் நடைபெற்று வருகின்றன. நாதசுரக்கருவிகள், கருங்கல் நாதசுரம், முகவீணை, புல்லாங்குழல், குறுங்குழல், நெடுங்குழல் எனப் பலவாக இருப்பதும் தெரிய வரும். கொம்பு வகைகளும், தாரை, திருச்சின்ன வகைகளும் பலவே. இனி, யாழ்க் கருவிகள்பற்றி அறியலாம். பரிபாடலில் 'யாழிசை கேழ்த்தன்ன' எனுமிடத்தும், 'பருக் கோட்டி யாழ்ப்பக்கம்','கவர் தொடை நல்யாழ்' எனும் பகுதியிலும் சிலப்பதிகாரத்தில் பலவிடத்தும், பத்துப்பாட்டிலும் இன்னும் பழந்தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் ஏன்? இலக்கண நூல்கள் சிலவற்றுள்ளும் **யாழ்** எனும் கருவி அதனதன் உறுப்புகளோடு நன்கு எடுத்துக்காட்டிக் கூறப்பெற்றுள்ளன. யாழ்க் கருவிகளே பற்பலவாம்,

''பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியும் செங்கோடு செப்பினார்—தார்
பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற''

எனும் பாடலைப் பயிலுமிடத்து, 'பின்னுமுளவே பிற' என்ற சொற்களால் ஐந்து நரம்புடைய வில் யாழ் முதல் ஆயிரம் நரம்புகளையுடைய ஆதி யாழ் வரை எத்துணையோ யாழ்க் கருவிகள் இசைத் தமிழ்க் கருவிகளாக இருந்துள்ளமை பெரிதும் தெரியவரும். இக் கருவிகளைப்பற்றி ஒவ்வோர் உறுப்பும் மிகச் சிறந்த உவமைகளோடு சங்கநூல் களில் நன்கே கூறப்பெற்றுள்ளது. இவற்றினை இசைத்தோர் **பாணர்** எனப்பட்டனர். இவர்களுள் பெண்பாலார் **பாணினியார்** அல்லது **பாடினியார்** எனப்பட்டனர். யாழ்க் கருவியின் இசைநலங் களே பிற்கால இசைவல்லுநர் பலரானும் கைக் கொள்ளப்பெற்று வழிமுறைகள் கூறப்பெற்றன. பாணர்கள் என்போர் **பேரியாழ்** இசைப்போர் **பெரும்பாணர்** என்றும், **சிறியாழ்** இசைப்போர் **சிறு பாணரென்றும்** அழைக்கப்பெற்றனர். **ஆற்றுப் படை** எனும் இலக்கியம் பெருவேந்தர், குறுநில மன்னர் முதலானோரைப் பாடும் முறையிருந்தும் பாணர்களை ஆற்றுப்படுத்தும் பெற்றிமையில் பாடுவதையே பழங்காலப் புலவர்கள் பெருமையாகக் கொண்டு விளங்கினர். அத்துணைச் சிறப்பு இசைத்தன்மைக்கும் இசை எழுப்பும் கருவிகளின் தன்மைக்கும் பொருந்தியிருந்துளது.

சகோடயாழும் அதனை இசைத்த பாணர் மரபும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையிலும் தமிழகத்தில் இருந்தது நன்கு தெரிய வருகின்றது. தமிழகத்தில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண் டிற்குப் பின்னர் அரசுச் செல்வாக்கில் எஃகுத் தந்திகள் கட்டிய **வீணைக்** கருவிகள் வழக்கில் வந்த காலத்து அக் கருவிகள் **வேத்தியல்** முறையில் நிரம்பப் பயிலப்பெற்றன. **பொதுவியல்** முறையில் பல்லாயிரம் ஆண்டாக விளங்கிவந்த யாழ்க் கருவிகள் கேட்பாரற்று, செல்வாக்கிழந்து அருகிப் போனதால் எங்கோ அங்குமிங்கும் ஓரிடத்தே மட்டும் இருந்தும் இல்லாததுமாய் வழக்கொழிந்தன என்பர்.

யாழ்க் கருவிகளில் ஒவ்வோரிசைக்கும் ஒவ்வொரு **நரம்பு** கட்டப்பெறுவது மரபு. வீணைக் கருவிக்கு ஒரு தந்தியைக் கட்டி அதன் இடையே மெட்டுகள்

அமைப்பது மரபு. இஃது அடிப்படை. எல்லாவகை முறை பலவாற்றானும் அறியுமிடத்து **யாழ் வேறு வீணை வேறு** என்பதே சிறப்புறத் தெரியவரும்.

யாழ்க் கருவிகளின் பெயர் முறைகளும் பல. **கேள்வி, கைவழி** முதலிய பழஞ் சொற்களைக் காணலாம். அறிவுடைய மனிதனன்றி விலங்கு பறவைகளும் இசையுணர்வுடையனவாக இருந்துள்ளனவாம். பெரிய **யானை,** யாழோசையின் எல்லையிலே தங்குமாம். **குதிரை,** இசை கேட்பின் முனிவு கொள்ளுமாம். யாழே தெய்வம். அன்றி யாழுக்குரிய தெய்வம் **மாதங்கி** எனப்படும். பன்னிரண்டு இராசிகளிலே 'மிதுன ராசியானது யாழ் என்னும் பெயரினால் வழங்கப்பட்டு இணை, யாழுருவத்தினாலே குறியீடு செய்யப்பட்டதென அறிஞர் கூறுவர்' என்றார் விபுலானந்தர்.

பத்துப்பாட்டு எனும் தொகுப்பிலிருந்து நன்கு எடுத்துக்காட்டுகள் மூலம், 'பத்தலினையும், பொல்லம் பொத்திய பச்சையாகிய போர்வையினையும் ஆணியினையும், வறுவாயினையும் மருப்பினையும் திவவினையும் நரம்பின் தொடர்ச்சியினையும் காட்சியினையுமுடைய யாழ்.' எனவும் பிறவும் குறித்து, 'கடைச்சங்க காலத்திலும் அதற்கு முன்னுந் தோன்றிய சான்றோர் செய்யுட்களினுள்ளே **வில்யாழும், சீறியாழும், பேரியாழும்** குறிக்கப்பட்டிருக்கின்றன. **சகோட யாழும், மகரயாழும், செங்கோட்டி யாழும்** மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் பெருங்கதையிலும், சிந்தாமணியிலும் காணப்படுவ' என்று எழுதியுள்ளார். இவ்வாறான குழற்கருவிகளும் யாழ்க்கருவிகளும் முதன்முதல் தந்த ஐந்திசைகளும் ஏழிசைகளும் வருமாறு :

		அலகெனப்படும் சுருதிகளுடன் முதலைந்திசைகளும் — முதலேழிசைகளும்							பண் பெயரும் பாலைப் பெயரும்
	௧ ஐந்திசை	தாரம் 0	குரல் 4	துத்தம் 8	□	உழை 13	இளி 17		ஆசான் திறம் காந்தாரம் மோகனம்
௧	ஏழிசை	தாரம் 0	குரல் 4	துத்தம் 8	கைக்கிளை 12	உழை 13	இளி 17	விளரி 21	மேற்செம்பாலை
	௨ ஐந்திசை	குரல் 0	துத்தம் 4	□	உழை 9	இளி 13	தாரம் 18		செந்திறம் செந்துருத்தி மத்யமாவதி
௨	ஏழிசை	குரல் 0	துத்தம் 4	கைக்கிளை 8	உழை 9	இளி 13	விளரி 17	தாரம் 18	செம்பாலை
	௩ ஐந்திசை	துத்தம் 0	□	உழை 5	இளி 9	□	தாரம் 14	குரல் 18	இந்தளம் வடுகு இந்தோளம்
௩	ஏழிசை	துத்தம் 0	கைக்கிளை 4	உழை 5	இளி 9	விளரி 13	தாரம் 14	குரல் 18	படுமலைப் பாலை
௪	ஏழிசை	கைக்கிளை குரலாய செவ்வழிப்பாலை: கைக்கிளை 0	உழை 1	இளி 5	விளரி 9	தாரம் 10	குரல் 14	துத்தம் 18	பண்கண்டு திறனெய்தாப் பண்

	ச ஐந்திசை	உழை 0	இளி 4	□	தாரம் 9	குரல் 13	துத்தம் 17	□	சாதாளி சுத்தசாவேரி
ரி	ஏழிசை	உழை 0	இளி 4	விளரி 8	தாரம் 9	குரல் 13	துத்தம் 17	கைக்கிளை 21	அரும்பாலை
	ரு ஐந்திசை	இளி 0	□	தாரம் 5	குரல் 9	துத்தம் 13	□	உழை 18	தனாசி சுத்த தனியாசி உதயரவிச் சந்திரிகா
கா	ஏழிசை	இளி 0	விளரி 4	தாரம் 5	குரல் 9	துத்தம் 13	கைக்கிளை 17	உழை 18	கோடிப்பாலை
ள	ஏழிசை	விளரி 0	தாரம் 1	குரல் 5	துத்தம் 9	கைக்கிளை 13	உழை 14	இளி 18	விளரிப்பாலை

அட்டவணையிற் காட்டிய முதலேழிசை நிரல் கறாம், மேற்செம்பாலை, மேசகல்யாணி எனவும்; செம்பாலை, ஹரிகாம்போதி எனவும்; படுமலைப் பாலை, நடபைரவி எனவும்; செவ்வழிப்பாலை, ஒரு மேளமாகக் கருதப்படாமலும்; அரும்பாலை, தீர சங்கராபரணம் எனவும்; கோடிப்பாலை, கரஹரப்பிரியா எனவும்; விளரிப்பாலை ஹனுமத் தோடி எனவும் பிற்கால இசைநூல் பெயரிடப் பட்டு, தற்காலத்திலும் வழக்கில் இருந்து வருவதை விபுலாநந்தர் நன்கு குறித்துக் காட்டியுள்ளார்.

இசைத் தமிழ்த் தன்மையறிந்த சான்றோர்கள், இசைகள் நிற்கும் ஏழிடங்களையும் பகுதிப்படுத்தி யறிந்து (பால்-பகுதி) பாலையெனப் பெயரிட்டு அந் தரம் ஐந்தினையும் பகுதிப்படுத்தியறிந்து சிறு பாலை எனப் பெயரிட்டுக் கணித்தறிந்து பன்னிரு பாலையெனக் கொண்டு நன்கே உணர்ந்தறிந்து, பல்வேறு இசைத்தமிழ் நூல்களை இயற்றியிருந் துள்ளனர்.

''குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா வுழையிளி நான்கு—விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச்
சொன்னார்
களிரிசேர் கண்ணுற் றவர்.''

எனும் முறையறிந்தே இசையையும், அதனதன் அலகுகளையும் நிறுத்துமிடம் நிறுத்தி, நிரனிறை, எதிர் நிரனிறையாகக் கண்டு பாலைப் பெயர்களைப் பொருண் முறையிலும், இராசி முறைமையிலும் அமைத்து, கற்போர்க்கு **இசை நுணுக்கத்தினைத்** தெளிவுற உணர்த்தி, பல்வேறு யாழ்க்கருவிகளிலும் எந்தப் பாலை எவ்வாறு அமைக்கப்பெற்றது என்ப தையும் விளக்கி, 'இவ்வேழு பெரும்பாலையினையும் முதலடுத்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும் எனவும், 'பன்னிரு பாலையினுருத் தொண்ணூற் றொன்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்று மூன்றாதற்குக் காரணமாம் எனக் கொள்க' என்றுங் கூறிய பெற்றிமையெல்லாம் இசைத்தமிழ்த் தன்மை யினையெல்லாம் ஒருங்கே விளக்கும் தன்மைய தாகும்.

பண்களையும் பாலைகளையும் **பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், முல்லையாழ்** எனக் கருவிப் பெயர் கொண்டும் அவை ஒவ்வொன்றையும் **அக நிலை, புறநிலை, அருகியல், பெருகியல்** எனக் கணித்தும், பாலையும், பண்ணுமாவதற்கு நிலைக்களமான இசைகளை மிகப் பழைய தொன்னூல்களைச் சான்றாகக் கொண்டு ஆதியிசைகள் **பதினோராயி ரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்றும்** கூறிப்போந்துள்ளனர்.

பெருகக் காணும் அவாவுடையோர் **யாழ்நூல்** என்னும் பெருநூலிலும் **பஞ்சமரபு** என்னும் தொன் னூலிலும் யான் எழுதி வருகின்ற சிறு நூல்களிலும் **இசைத் தமிழ்த் தன்மை** எனுமிவற்றை ஓரளவு உரைநடை வடிவிலேனும் நன்கே படித்துப் படித்து பயின்று அறிந்துணர்வார்களாக.

உள்ளுறையும் இறைச்சியும்

டாக்டர் ம. ரா. போ. குருசாமி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

வடமொழியில் குறிப்புப் பொருள்பற்றிய கோட்பாடுகளைச் செப்பனிட்டு விதிவகுத்து நூலாக்கி, 'த்வன்யா லோகம்' படைத்தவர் ஆனந்தவர்த்தனர்; கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவருக்குமுன் வடமொழியில் பரதர் என்பார் நாட்டிய இயல்நூல் வகுத்தார். பரத முனிவரின் காலம்பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. அந்தக் கருத்துகளுள் மிகத் தொன்மையினராகக் கொள்ளும் கருத்தினை ஏற்பதாயினும், பரத முனிவரின் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும். பரதரின் நாட்டிய சாத்திரத்திலும் காவியக் குறிப்புப் பொருள்பற்றிச் செய்திகள் உண்டு.

ஆனந்தவர்த்தனருக்குப் பல நூற்றாண்டுக்கு முன்னமே—பரதரின் நூல் தோன்றுதற்கு முன்னரே கவிதையின் குறிப்புப் பொருள்பற்றி விளக்கினவர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கணம் படைத்த தொல்காப்பியர். உலக அரங்கிலேயே குறிப்புப் பொருள் உத்தியினை இறைச்சி, உள்ளுறை, கூற்றெச்சம், குறிப்பெச்சம் என்னும் பெயர்களில் முதன்முதல் விதி வகுத்துக் கொடுத்த பெருமையும் உரிமையும் தொல்காப்பியருக்கேயாகும். இதனை வடமொழி ஆய்வாளர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர்.[1]

குறிப்புப் பொருள் உத்திகளாகத் தொல்காப்பியர் வகுத்தவற்றுள் உள்ளுறையும் இறைச்சியுமே சாலச் சிறப்புடையன. அவற்றைப்பற்றி ஒருவாறு விளக்க முயல்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

எத்துணைச் சதுரப்பாடு கொண்ட மாபெருங் கவிஞனுங்கூட அகமன உணர்வு முழுவதையும் பெயர்த்துச் சொல்லவல்ல சொற்செல்வம் உடையவனாகான். மொழியியலாரும் சுவையியலாரும் திறனாய்வாளரும் தெளிவித்துள்ளபடி மானுடச் சொல் கருதிய பொருளை முற்றிலும் புலப்படுத்தும் திறனுடையதாகாது. சொற்கள் பொருள் புலப்படுத்தும் வகையில் ''முற்ற உணர்த்தாமை, பொருந்த உணர்த்தாமை என்ற இருவகைக் குறைபாடுகள் இருக்கக் காண்கிறோம்'' என்பது பெருந்தகை மு.வ.வின் தெளிவுரை.[2] இந்தக் குறைபாடுகளை நீக்க நினையும் கலைவாணர்கள் சூழ்நிலை விளக்கம், அடைமொழி சேர்த்தல், உவமை முதலான அணிகளின் துணைநாடல் போன்ற உத்திகளைக் கையாளுவர். அவ்வுத்திகளுள் ஒரு முறையே இயற்கைக் காட்சி வருணனை. இயற்கை வருணனை வாயிலாகக் குறிப்புப் பொருள் சுரக்கச் செய்து, சொல்லுக்கு இல்லாத பொருட்பேற்றினைத் தருவர்.

அறிவுத் திறத்தால்மட்டுமன்றி உணர்வுத் திறத்தாலும் ஓங்கிய பெருவீறு கொண்டவன் மனிதன். மானுடப் படைப்பாகிய கலையிலும் அவன்றன் அறிவும் உணர்வும் ஓலக்கம் கொள்ளல் இயற்கை. ஆயின், தேர்ந்த சொல்வளத்தாலும் புலப்படாத

[1] Dr. G. Sundaramurthi — Early Literary Theories in Tamil (In comparison with Sanskrit Theories) — Sarvodaya Ilakkiya Pannai, Madurai (1974)—pp. 7-8.

[2] டாக்டர் மு. வரதராசன்—'மொழி நூல்'—கழக வெளியீடு (1958), பக். 301.

உணர்வுகளை இயற்கை வருணனை வாயிலாகச் சுரக்கச் செய்யும் சீரிய கவி நெறிகளே உள்ளுறையும் இறைச்சியும்.

''தலைவன் தலைவியரின் உள்ளத்து உணர்வுகளை இயற்கை உணர்ந்து ஒன்றிவிட்டதுபோல் அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் மகிழ்ந்தபோது இயற்கையும் திளைத்தது; அவர்கள் துயருற்றபோது இயற்கையும் துயரால் துவண்டது என்றனர். தனி இதயங்களின் துடிப்பைப் பரந்து விரிந்திருக்கும் புறவுலகம் புரிந்துகொண்டது போன்ற ஒருவகை அனுபவம் இந்த நிலையில் ஏற்படுகிறது. இந்த அனுபவம் கைவரும்போது இயற்கையும் மனிதனும் இரண்டறக் கலந்திடும் ஒன்றிய நிலை ஏற்படுவதைக் காணலாம். சில வேளைகளில் தலைவி முதலானவர்களின் உணர்ச்சிகளை இயற்கையோடு இயைத்து விடுவதற்காக, இயற்கைப் பொருள்களுக்கு உயிரும் உணர்ச்சியும் கொடுத்துப் பாடுவதும் உண்டு. இதுபோன்ற பாடல்களில் உள்ளத்து உணர்வின் ஆழமும் அதனோடு பிணைந்த நம்பிக்கையின் உறுதிப்பாடும் புலப்படும். மேலும், மனித உணர்வின் மறுபதிப்பாகவே இயற்கை வருணிக்கப்படுவதையும் காணலாம்....'' இது பெருந்தகை மு. வ. வின் விளக்கம்.[3]

மானிட வாழ்க்கைச் சுவடுகளை விளக்கும் குறியீடுகளாகவே சங்க இலக்கியச் சான்றோர் இயற்கை வருணனைகளைக் கொண்டனர். உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை அவ்வாறே வெளிப்படையாக எல்லா நேரத்திலும் வெளியிட்டு விடுதல் இயலாது; கூடாது. அத்தகைய நிலையில் நயத்தக்க நாகரிகமாக உட்குறிப்பு அமைத்துப் பாடுதற்கும் இயற்கை வருணனை சான்றோர்க்கு உதவியது.

சங்க காலப் புலனெறி வழக்குக்கு வீறு தரும் உள்ளுறையும் இறைச்சியும் இயற்கை வருணனைகளாகவே அமைவது ஈண்டு நினைவுகூரத் தக்கது. இயற்கை யரங்கின் வருணனைக்கு உரியவையெல்லாம் புலனெறி வழக்கின் முதற் பொருளிலும் கருப்பொருளிலும் அடங்கும் என்பதை யாவரும் அறிவர். கருப்பொருள்களுள் தெய்வம் தவிரப் பிறவெல்லாம் உள்ளுறைக்கு நிலைக்களனாம்.[4] 'இறைச்சி' என்னும் சொல்லுக்கே 'கருப்பொருள்' என ஒரு பொருள் உண்டு. எனவே, உள்ளுறை இறைச்சி இரண்டுமே இயற்கை வருணனையாக உருவெடுக்கும் என்பது தெளிவு.

இரண்டுமே இயற்கை வருணனை வாயிலாகக் குறிப்புப் பொருள் உணர்த்தும் என்னும்போது தான் சிக்கல் தொடங்குகிறது. உள்ளுறையாகும் இயற்கைக் காட்சிக்கும் இறைச்சியாகும் இயற்கைக் காட்சிக்கும் வேற்றுமை யாது? இவ்வைய வினா சிக்கலைத் தோற்றுவிக்கிறது.

உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் தொல்காப்பிய விதிகளையும் சங்க இலக்கியப் பாடல்களையும் ஒப்பிட்டும் உறழ்ந்தும் தோய்ந்தும் தேர்ந்தும் பல்வகை விளக்கங்களை அருளியுள்ளனர். எனினும், உள்ளுறை இறைச்சி இவற்றிடையே சிக்கல் நீக்கித் தெளிவு காண்பது இன்னும் கடினமாகவே உள்ளது.

தமிழன்னையின் தொண்டர் பெருமானாகிய ஐயரவர்கள் இலக்கண இலக்கியப் புலமைச் செல்வர் என்பதில் ஐயங் கொள்வோர் ஐயப்பாட்டுக்கு உரியர். பெரும்புலவர் இரா. இராகவ ஐயங்கார் அவர்கள் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர். இப்புலவர்பெருமான்களே யாது காரணத்தாலோ குறுந்தொகையுள் இன்னின்ன உளளுறைகள், இன்னின்ன இறைச்சிகள் எனக் குறியாது விடுத்தனர்; இறைச்சியோ உள்ளுறையோ வரும் இடங்களிலெல்லாம் 'குறிப்பு', 'குறிப்பிற்று', 'கருத்தினது' என்றே பொதுப்படக் குறித்தனர்.

இந்தச் சிக்கலின் கடுமையை மற்றொரு வகையாலும் புலப்படுத்தலாம். 'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே' என்னும் நூற்பா உரையில், இறைச்சிக்கு எடுத்துக்காட்டாக 'ஒன்றே னல்லென் ஒன்றுவென்' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலைத் தந்துள்ளார் இளம்பூரணர். 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக் கொள்ளும்' என்னும் நூற்பாவை விளக்கிய நச்சினார்க்கினியர், இதே குறுந்தொகைப் பாடலை உள்ளுறைக்கு எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார்.

புலவர் பெருமக்கள் நினைந்து போற்றும் பெருமக்கள் ஒரே பாடலை இருவேறு உத்திகளுக்கு எடுத்துக் காட்டாகக் கொள்வதிலிருந்தே, இச் சிக்கலின் கடுமையைப் புரிந்துகொள்ளலாம்.

''........... உள்ளுறை என்றோ இறைச்சி என்றோ கொள்வது கொள்வோரின் மனநிலையைப்பற்றியதாகும். உவமைக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தால் அவை உள்ளுறை உவமம் எனக் கொள்ளப்படுகின்றன. குறிப்புப் பொருளுக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தால் அவை இறைச்சி எனக் கொள்ளப்படுகின்றன'' என்று விளக்கித் தெளிவு காண முயன்றோரும் உளர்.[5] ஆயின், கொள்வோர் கொள்ளும் மனப் போக்குகளுக்கெல்லாம் நெகிழ்ந்து, தொய்வு காட்டி, மறு தோற்றமும் மாறு பெயரும் கொள்ளுமாறு அமைவது இலக்கணச் செம்மையாகாது.

---

[3] டாக்டர் மு. வரதராசன் — 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை'—பாரி நிலையம் (1964), பக். 536-37.

[4] 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக் கொள்ளும் என்ப குறியறிந் தோரே'—தொல். பொருள். அகத். 47.

[5] டாக்டர் ரா. சீனிவாசன்—'சங்க இலக்கியத்தில் உவமைகள்' (1978), பக். 230.

ஐயரவர்களும் மகாவித்துவான் அவர்களும் தயக்கம் காட்டிய துறை என்பதால் கடுமை தெளிவாகிறது. எனினும், ஒருவாறு நெறிப்பட முயன்று தெளிவு கண்டு, இவ்வுத்திகளிடையே நிலவும் வேற்றுமை இஃதெனக் கண்டுணர்த்தியவர்கள் இல்லாமலில்லை. இம் முயற்சியில் இக்காலத்தவருள் பெரும்புலவர் வே. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்களும், டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். நச்சினார்க்கினியரின் கருத்தினை டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் ஏற்கவில்லையெனினும், தொல்லாசிரியர்களுள் நச்சினார்க்கினியரின் தெளிவு காண் முயற்சி போற்றற்பாலது. தொல்காப்பிய உரையினும் அவர் வகுத்த கலித்தொகை உரையினுள் தெளிவும் திட்பமும் காணலாம்.

உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் தெரிவித்துள்ள கருத்துகளையெல்லாம் தொகுத்து வைத்து ஒப்பிட்டு ஆராய்வதாயின் கட்டுரை மிக நீளும். அம் முயற்சி இக் கட்டுரையாளனின் ஆய்வேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கே, உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் இடையேயுள்ள வேற்றுமை புலப்படும் வகையில் சுருங்கிய அளவில் விளக்கம் காண்போம்.

முதற்கண் உள்ளுறையின் தன்மை காணற்பாலது:

திணை யுணர்தற்கு உதவுவன இரண்டு: உள்ளுறை யுவமம் ஒன்று; மற்றொன்று ஏனையுவமம். இவ்விரண்டனுள் கருப்பொருள்களுள் தெய்வம் தவிரப் பிறவற்றை நிலைக்களமாகக் கொண்டு உருவாக்கம் பெறுவது உள்ளுறை யாகும். கவிஞன் தன் மனத்துட் கொண்ட கருத்தினை வெளிப்படையாகக் கூற விழையாமல், குறிப்பிற் சுட்ட நினையும்போது உள்ளுறையுவமம் என்னும் உத்தி அவனுக்குக் கைகொடுக்கிறது. 'யான் சுட்டும் கருத்துக்கு ஒத்த வகையில் இதன் பொருள் அமைவதாகுக' என மனத்துட் கொண்டு பாடுவது உள்ளுறை யுவமமாகும்.

உள்ளுறைபற்றிய சுருக்கமான இவ் விளக்கத்துக்கு ஆதாரமான தொல்காப்பிய நூற்பாக்கள் வருமாறு: [6]

''உள்ளுறை யுவமம் ஏனை யுவமமெனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே.''

''உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே.''

''உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன
உள்ளுறுத் திறுவதை உள்ளுறை உவமம்.''

இனி, இறைச்சிபற்றிச் சுருக்கமாகக் காண்போம். 'இறைச்சி' என்னும் சொல்லுக்குக் 'கருப்பொருள்' என்றே ஒரு பொருள் உண்டு. இப் பொருளினைக் கருதுவதே போதும்; குறிப்புப் பொருள் கொள்ளும் நெறியென 'இறைச்சியை'க் கருத வேண்டியதில்லை என்பது சித்தாந்த கலாநிதி ஔவை துரைசாமிப் பிள்ளையர்களின் கருத்து.[7] ஆனால், தொல்காப்பிய விதிகளையும், அவற்றின் உரை விளக்கங்களையும், சங்கத்துச் சான்றோர் பாடல் உரைகளையும் கருதிப் பார்த்தால் பேராசிரியர் துரைசாமிப் பிள்ளையவர்களின் கருத்தினை ஏற்பதில் தயக்கம் ஏற்படுகிறது.

உரிப் பொருளொடு நேரிடையான தொடர்பினைக் கொள்ளாத குறிப்புப் பொருள் நயம் சான்றது இறைச்சியின் தனித்தன்மை யாகும்.

இறைச்சி என்னும் சொல்லே 'கருப்பொருள்' என்னும் பொருளுடையது; இதிலிருந்தே இறைச்சி என்னும் குறிப்புப் பொருள் உத்தி கருப்பொருளை நிலைக்களமாகக் கொண்டு இயல்வது என்பதை உய்த்துணரலாம். ஆதலாற்றான், 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக் கொள்ளும்' என விதிவகுத்த தொல்காப்பியர், 'இறைச்சி தானும் அதனோரற்றே' என விதி வகுத்திடவில்லை.

இறைச்சியையே வடமொழிவாணர்கள் 'தொனி' என வழங்குகின்றனர் எனலாம்.

கவிதையில் ஆளப்படும் சொற்களுக்குரிய பொருளுக்குப் புறத்தே குறிப்புப் பொருள் சுரப்பது இறைச்சியாகும். 'மணி அடித்து ஓய்ந்தபின் நுட்பமாக ஓர் ஒலியலை பரவுதலை உணரமுடிகிறது. அது போன்றது தொனி' என வடமொழிவாணர்கள் விளக்குவர். சொற்பொருள் மனத்தில் பதிவாயின பின்னரும் ஒரு பொருள் நுட்பம் கவியுளம் காண வல்லார்க்குத் தோன்றும். அந் நுட்பப்பொருள் காணும் நெறியே 'இறைச்சி' எனப்படும். (இறைச்சி, தொனி ஆகியவற்றை இணைத்துக் 'கரந்தைக் கட்டுரை'யில் அறிஞர் வேங்கடராசுலு ரெட்டியார் வரைந்துள்ள கட்டுரை சிறப்பாகக் குறிக்கத்தக்கது.)

இறைச்சிபற்றிக் குறிக்கத்தக்க நூற்பாக்கள் வருமாறு:

''இறைச்சி தானே பொருட்புறத் ததுவே.''

''இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே.''

---

[6] தொல். பொருள். அகத். 46, 47, 48.

[7] ஔவை துரைசாமிப் பிள்ளை — 'ஐங்குறுநூறு' உரை — அண்ணாமலைப் பல்கலைக்கழகம் — முன்னுரை பக். 28.

உள்ளுறைபற்றியும் இறைச்சிபற்றியும் தொல்காப்பியர் கூறிய நூற்பாக்கள் அனைத்தும் இங்கே காட்டப்பெறவில்லை. தெளிவு பெறுதற்கு இன்றியமையாதன மட்டுமே இங்கு எடுத்துக்காட்டப் பெற்றன. இறைச்சி, உள்ளுறை ஆகியவற்றின் வகைகள் புலனெறி வழக்கில் இவ்வுத்திகளை ஏந்தி வரும் மாந்தர், அவர்கள் இவ்வுத்திகள் அமையக் கூற்று வழங்குதற்குரிய சூழல்......முதலியன இவண் நுவலாத விதிகளிலே விளக்கம் பெறுகின்றன.

உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றின் இயல்புகளை மனங்கொண்டு தெளிவு பெறுதற்குப் பின்வரும் விளக்கங்கள் பயன்படும். இவ்விளக்கங்கள் அறிஞர் வேங்கடராசுலு ரெட்டியார் அவர்களின் கட்டுரைப் பகுதிகள்:

> "உள்ளுறை யுவமமாவது — ஒருவர், தாம் கூறக் கருதிய பொருள் 'இதனோடு ஒத்து முடிதல் வேண்டும்' என்று உட்கொண்டு அதற்கு வேண்டுபவற்றை (கருப்பொருளை) உள்ளுறுத்துக் கூறுவது. உள்ளுறை கருப்பொருள்களுள் தெய்வம் ஒழிந்த பிற பொருள் நிலமாக வரும்."[8]

> 'இதனோடொத்துப் பொருள் முடிகென உள்ளுறுத்துரைப்பது என்றதனான், உள்ளுறையானன்றி ஆண்டைப் பொருள் முற்றுப்பெறாது.'[9]

> 'இறைச்சியாவது — சொற்பொருளுக்குப் புறத்ததாயிருக்கும் பொருள் என்பது............அஃதாவது சொற்பொருளுக்குப் புறத்தே தோன்றுங் குறிப்புப்பொருள் இறைச்சி என்பதாம். ......சொற்பொருட்குப் புறத்தே பின்னும் ஒரு பொருள் தோன்றுதல் யாங்கனம் கூடும் எனின், மணியடித்தால் மணியோசையின் பின் நுட்பமாகியதோ ரோசை உண்டாதல் போல, கூடும் என்க.'[10]

பல்கலைச் செல்வர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தந்துள்ள விளக்கங்களையும் காணுதல் பயன்தரும்!

உள்ளுறைக்கு அவர் தரும் விளக்கம்: குறிக் கணக்கியலில் (Algebra) குறியீடுகளாக எழுத்துகள் வரும்; அவ்வெழுத்துகளால் வாய்பாடுகள் பல உருவாகும். அக் குறியீடுகளையே கொண்டு கணிதச் செயற்பாடுகள் நிகழும். ஓர் எல்லையில் அக் குறியீடுகளுக்கு உரிய கணித எண்களை வெளிப்படையாகச் சேர்த்து, முடிவு விடை காண்பர். குறிக் கணக்கியலின் இக் குறியீட்டுத்தொடர் போலவே தொடர் உருவகமாக (Allegory) இயற்கைக் காட்சி இடம் பெற்றுக் கவிதையரங்கில் பொருள் நயம் நல்கும். இங்கு இயற்கை வருணனை ஒரு தொடர் உருவகமே என்பதை மறத்தல் கூடாது. குறிக் கணக்கியலில் குறியீட்டு எழுத்துகளின் இடத்தில் உரிய எண்களைப் பெய்து விடை காண்பர். அதுபோல, இயற்கைக் காட்சியின் உருவகப் பாங்கிலுள்ள குறியீட்டியலை விலக்கி கவிதை மாந்தரின் இயல் செயல்களுள் பொருத்தமானவற்றைப் பெய்து கவிஞனின் அகக் காட்சியினைக் காணல் வேண்டும். குறிக் கணக்கியலில் எந்தக் குறியீடும் பயனற்றதாக இராது; கருப் பொருள்களைக் குறியீடுகளாகக் கொண்டுள்ள தொடர் உருவகத்தின் நிலையும் அதுதான். தொடர் உருவகக் கூறுகள் சிலவற்றின் விளக்கத்தைக் காணலாம். பரத்தையரோடு தொடர்பு கொள்ளும் தலைவனைப்பற்றித் தலைவியின் மன உணர்வும் போக்கும் எத்தகையன என்பதைச் சங்கச் செய்யுட்கள் பல தொடர் உருவகங்களால் புலப்படுத்துகின்றன. தலைவனின் ஊரை வருணிப்பாள் போலக் குறிப்பு நயம்சாரப் பேசுகிறாள் தலைவி. தனக்கே உரியதாகவுள்ள தாமரைப் பொய்கையை விடுத்து வெளியேறுகிறது எருமை. தேன் மிக்க தாமரையைப் புறக்கணித்துவிட்டுச் சேறும் நீருமாகக் குழம்பியுள்ள அளறிலே பின்னிப் பிணைந்து கிடக்கும் கொடியை நாடி மேயப் போகிறது முருட்டு எருமை மாடு. அங்குள்ள மலர்கள் சின்னஞ் சிறியவை, தேன் அற்றவை. இத் தொடர் உருவகத்தில்,

எருமை— தலைவன்.

தாமரைக்குளம்— உரிமைக் குடும்பம்.

தாமரை— தலைவி.

தேன்— தலைவிபாற் பெறும் நெறியான இன்பம்.

அளறு— பரத்தையர் சேரி.

பின்னிப் பிணைந்த கொடி, சிறு மலர்கள்— பரத்தையரும் அவரைச் சார்ந்த தோழியர் முதலாயினாரும்.

இவ்வாறு தொடர் உருவகக் குறியீடு நீக்கி, குறிக் கணக்கியலில் செய்வது போல, மாந்தர் இயல் செயல்களைப் பெய்து நோக்கினால், அங்கதம் சான்ற சதுரப்பாடு புலப்படும். இத்தகைய தொடர் உருவகமே உள்ளுறை எனச் சொல்லப்படுகின்றது; உள்ளுறையில் உள்ளுறுத்தமைத்த குறிப்பு ஒவ்வொரு கூறிலும் இருக்கும்.[11]

சுருங்கச் சொல்லலுக்கும் செறிவுற்ற செய்யுள் யாத்தற்கும் கவிஞனுக்கு இவ்வாறு இயற்கை உதவுகிறது.[12]

இறைச்சிக்குத் தெ.பொ.மீ. தரும் விளக்கம்; குறிப்புப் பொருள் குறியீட்டுப் பாங்கு ஆகிய இயல்பு கொண்ட கவிதைக்கு வளம் ஊட்டுவதற்கு இயற்கை

[8] கரந்தைக் கட்டுரை — பக். 188.

[9] ஷை பக். 188

[10] ஷை பக். 190, 191.

[11] Dr. T. P. Meenakshisundaran — 'A History of Tamil Literature' — Annamalai University (1965), pp. 28-29.

[12] "Thus Nature comes to help the poet to achieve the concentration and economy he aims at"—ibid.

வருணனை உதவுகின்றது. கதை நிகழ்வின் உள்ளகத்தைக் கவிஞன் உணர்ந்தவாறே நாமும் உணர்தற்கு ஏற்ற குறியீடாக இயற்கை வருணனை அமைகின்றது; உயர்தரக் கவிதைகள் எல்லாவற்றுக்குமே இது பொது இயல்புதான். செம்புலப் பெயல் நீர் நிலத்தொடு கலந்துவிடுகின்ற காட்சி காதலர் கலப்புக்கான ஒரு குறியீடாகக் கவிஞரால் பயன்படுத்தப்படுவது இவ்வியல்பின் வழியே நிகழ்வதுதான். சொல்லிச் சென்றவண்ணம் குறித்த காலத்தில் மீண்டு வாராத தலைவனைப்பற்றி நினையும் த்லைவி, அவன் மலையில் வீழும் அருவியைப் பார்க்கிறாள். அக் காட்சியால் புலம்பும் அவள் கூற்றிலே அப் பேதையின் இதயக் குமுறலை நாம் கேட்க முடிகின்றது.

''இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை;
....
இளமழை ஆடும் இளமழை ஆடும்
இளமழை வைகலும் ஆடும் என்முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று;
....
மணிபோலத் தோன்றும் மணிபோலத் தோன்றும்
மண்ணா மணிபோலத் தோன்றும்என் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை.''[13]

'இவ்வுலக அரங்கிலே பொய்தான் எப்படிச் செழித்துச் சிலிர்த்துச் சிறக்கிறது, பார்த்தாயா' எனப புலம்புகின்ற தலைவியின் நெஞ்சக் குமுறலின் குறியீடுகளே இக் குறிஞ்சிக் கலியில் வரும் இயற்கைக் காட்சிகள். இவ்வியற்கைக் காட்சிகள் குறியீடுகளாக அமைகின்ற அவ்வளவில் நின்றொழிவதில்லை; அந்நிலைக்கு மேலும் — பொருட்புறத்ததாக — அக் காட்சிகளில் வேறு உட்குறிப்பு அடி நாதமாக எழுந்து மெல்லெனப் படிக்கின்றவர்களின் இதய அரங்கிலே எழுகின்றது. அவ்வெதிரொலியால் ஓர் உறுதி ஏற்படுகின்றது. சூள் பேணாது பொய்த்தவன் மலையிலே இவ்வாறு வளம் கொழிக்க முடியுமா? இயற்கையின் இவ்வளமே தலைவன் பொய்த்தல் அறியாதவன் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தி விடுகிறது. இவ்வாறு பொருட்புறத்ததாக — மறு எதிரொலியாக — வருவதே இறைச்சி எனப்படும்.[14]

ஆக, உள்ளுறையும் இறைச்சியும் இயற்கை வருணனைகளாக வரும் என்பது இரண்டிடையே உள்ள பொதுத்தன்மை; காட்சிகள் உட்குறிப்புடையன என்பதும் பொதுத்தன்மையே எனலும் பொருந்துவதே.

உள்ளுறைக் காட்சியில் வரும் ஒவ்வொரு கூறும் தவறாமல் உரிப்பொருளின் ஒவ்வொரு கூறுக்கும் உரியதாய்த் தொடர் உருவகப் பாங்கு கொண்டிருக்கும்; அக்காட்சிக்கு உரிய விளக்கம் தெளிவுபட்டாலன்றிக் கவிஞன் கூறக் கருதிய பொருள் நிறைவுறாது.

இறைச்சிக் காட்சியில் வரும் இயற்கை சொல்லாலும் தொடராலும் தரும் பொருளும் காட்சியும் ஒருவகை வெளிப்படைப் பொருள் தரும்; பாடலுக்கு நயமாகவும் இருக்கும்; ஆயின், அவ்வளவில் நின்றுவிடாமல் — மணியோசை அடித்து ஓய்ந்தபின்னும் நுட்பமாக அதிர்வலைகள் எழுப்புவதுபோல — சொற்பொருட் புறத்ததுவான ஒரு நயம் கொண்டிருக்கும்.

இவ்வேறுபாட்டு நயம் உணர்ந்தால், சங்க இலக்கிய வளத்துக்கு நாப் உரியவர்களாவோம்.

பின்னை இலக்கிய நெறியும் இலக்கண இயலும் உள்ளுறை இறைச்சிகளைப் புறக்கணித்து ஒது(ங்)க்கியமையால் தமிழ் இலக்கியத்துக்கு ஏற்பட்ட இழப்பு மிகப் பெரிது.

[13] கலித்தொகை, குறிஞ்சிக்கலி 5.

[14] Dr. T. P. Meenakshisundaran — 'A History of Tamil Literature'—p. 28.



கண்ணொடு கண்

கொங்கு நாட்டின் பேரிலக்கியம் பெருங்கதை; கொங்குவேளிர் யாத்தது.

உதயணன் அக் காப்பியத் தலைவன்; யானையை அடக்கும் திறம் தெரிந்தவன்.

மாமன்னன் பிரச்சோதனன் உதயணனை வஞ்சகத்தால் சிறைப்படுத்தினான். யூகி, உதயணனின் உயிர்த் தோழன்; அறிவில் தெளிந்தவன். பிரச்சோதனனின் பட்டத்து யானை 'நளகிரி'க்கு யூகி மதம் ஊட்டினான். யானை நகரையே கலக்கியது.

யானையை அடக்க யாரால் முடியும்? 'உதயணன்' என்பதே மறுமொழியாயிற்று.

சிறைக் கதவு திறந்தது. உதயணன் யாழ் மீட்டி யானையை அடக்கினான்; யாழில் மயங்கிய யானைமீதேறி மன்னன் பிரச்சோதனனின் மாளிகை சென்றான்.

யானை மதங் கொண்டதற்கான காரணம் யாதென வினவினன் பிரச்சோதனன். அவனுக்கு மறுமொழி சொல்லத்தான் தலை நிமிர்ந்தான் உதயணன். ஆனால் அங்கே...... அங்கே...... விழிகளை ஈர்க்கும் காந்தத்துண்டுகள்! அவை மன்னவன் மகளாம் வாசவதத்தையின் விழிகள்! பார்வைப் பரிமாறல்கள்...... அவை காதலின் தொடக்க வார்த்தைகள்...... ஆம்......

"ஆயத் திடையோள் பாசிழைப் பாவை
யானை மிசையோன் மாமுடிக் குருசில்
இருவரும் அவ்வழி பருகுவனர் நிகழ...... "

(பெருங்கதை—உஞ்சைக்காண்டம் 32 : 25-27)

வருணனை உதவுகின்றது. கதை நிகழ்வின் உள்ளகத்தைக் கவிஞன் உணர்ந்தவாறே நாமும் உணர்தற்கு ஏற்ற குறியீடாக இயற்கை வருணனை அமைகின்றது; உயர்தரக் கவிதைகள் எல்லாவற்றுக்குமே இது பொது இயல்புதான். செம்புலப் பெயல் நீர் நிலத்தொடு கலந்துவிடுகின்ற காட்சி காதலர் கலப்புக்கான ஒரு குறியீடாகக் கவிஞரால் பயன்படுத்தப் படுவது இவ்வியல்பின் [illegible] நிகழ்வதுதான். சொல்லிச் சென்றவண்ணம் குறித்த காலத்தில் மீண்டு வாராத தலைவனைப் பற்றி நினையும் தலைவி, அவன் மலையில் விழும் அருவியைப் பார்க்கிறாள். அக் காட்சியால் புலம்பும் அவள் கூற்றிலே அப் பேதையின் இதயக் [illegible] நாம் கேட்க முடிகின்றது.

"இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தான்உற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை
....
இளமழை ஆடும் இளமழை ஆடும்
இளமழை வைகலும் ஆடும் என்முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று
....
மணிபோலத் தோன்றும் மணிபோலத் தோன்றும்
மண்ணா மணிபோலத் தோன்றும் என்மேனி
துன்னான் துறந்தான் மலை"[13]

'இவ்வுலக [illegible] பொ[illegible] செழித்துச் சிலிர்த்து [illegible] புலம்புகின்ற [illegible] குறியீடுகளே இறைச்சிக் கவிதையில் வரும் இயற்கைக் காட்சிகள். [illegible] அமைகின்ற [illegible] அந்நிலைக்கு [illegible] காட்சிகளில் [illegible] உட்குறிப்பு [illegible] எழுந்து [illegible] அரங்கிலே [illegible] உறுதி ஏற்படுகின்றது. [illegible]

மலையிலே இவ்வாறு வளம் கொழிக்க முடியுமா? இயற்கையின் இவ்வளமே தலைவன் பொய்த்தல் அறியாதவன் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தி விடுகிறது. இவ்வாறு பொருட்புறத்ததாக — மறு எதிரொலியாக — வருவதே இறைச்சி எனப்படும்.[14]

ஆக, உள்ளுறையும் இறைச்சியும் இயற்கை வருணனைகளாக வரும் என்பது இரண்டிடையே உள்ள பொதுத்தன்மை; காட்சிகள் உட்குறிப்புடையன என்பதும் பொதுத்தன்மையே எனலும் பொருந்துவதே.


உள்ளுறைக் காட்சியில் வரும் ஒவ்வொரு கூறும் [illegible] உரிப்பொருளின் ஒவ்வொரு கூறுக்கும் [illegible] தொடர் உருவகப் பாங்கு கொண்டிருக்கும். அக்காட்சிக்கு உரிய விளக்கம் தெளிவுபட்டால் அன்றிக் கவிஞன் கூறக் கருதிய பொருள் நிறைவுறாது.


இறைச்சிக் காட்சியில் வரும் இயற்கை சொல்லாலும் தொடராலும் தரும் பொருளும் காட்சியும் ஒருவகை வெளிப்படைப் பொருள் தரும்; பாடலுக்கு [illegible]யமாகவும் இருக்கும்; ஆயின், அவ்வளவில் நின்றுவிடாமல் — மணியோசை அடித்து ஓய்ந்தபின் [illegible] அதிர்வலைகள் எழுப்புவதுபோல — சொற்பொருட் புறத்ததுவான ஒரு நயம் கொண்டிருக்கும்.

இவ்வேறுபாட்டு நயமும் உணர்ந்தால், சங்க இலக்கிய வளத்துக்கு நாமும் உரியவர்களாவோம்.

பின்னை இலக்கிய நெறியும் இலக்கண இயலும் உள்ளுறை இறைச்சிகளைப் புறக்கணித்து ஒது(ங்)க் [illegible] தமிழ் இலக்கியத்துக்கு ஏற்பட்ட இழப்பு மிகப் பெரிது.

13 கலித்தொகை, குறிஞ்சிக்கலி 5.
14 Dr. T. P. Meenakshisundaran — 'A History of Tamil Literature' — p. 36.


லதா



ஆற்றல்மிகு புதினக்கலை

திருமதி ராஜம் கிருஷ்ணன்

தமிழ்ப் புத்திலக்கியப் பூங்காவில் 'புதினமா'கிய கிளை தோன்றி நூறாண்டுகளாகிவிட்டதை அணிமையில் தமிழகமெங்கும் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் இலக்கிய அன்பர்கள் நினைவு கூர்ந்திருக்கின்றனர். 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற முதல் தமிழ்ப் புதினத்தை உருவாக்கிய மாயூரம் வேதநாயகம் பிள்ளை, தமது முகவுரையில், மேல்நாட்டு உரைநடை இலக்கியங்களில் உள்ள புதியவகைப் படைப்புகளை ஒட்டி, தமிழ் மொழியிலும் அத்தகைய புதுமையை வடிக்க வேண்டும் என்று விழைந்து முனைந்ததாகத் தெரிவிக்கிறார். ஆங்கிலேயர் பாரத நாட்டை ஆண்டதன் பயனாக, ஆங்கில மொழியின் செல்வாக்கு நம்மிடையே பரவியதால் விளைந்த நன்மைப் பாதிப்புகளில் மொழி இலக்கியத்துறை குறிப்பிடத் தகுந்ததாகும். சிறுகதையும் நெடுங்கதையும் சொல்லும் கலை, நமது நாட்டுக்குப் புதியதன்று. காகிதமும் அச்சுக்கலையும் இயைந்திராத பழைய காலத்தில் எழுத்தறிவித்துக் கல்வி பயிற்றுவது சமுதாயத்தின் உயர்நிலை மக்களுக்கே உரியதாக இருந்தது. ஆனால் கல்வியின் வாயிலாக மலரக்கூடிய மனப்பண்பாட்டை எல்லா நிலை மக்களும் எய்தும் வண்ணம் கதை சொல்லும் கலையைப் பயன்படுத்தினர்.

கதை என்ற வடிவுக்கு உள்ளத்தை ஈர்க்கும் கவர்ச்சி மிகுதி. சின்னஞ்சிறு மதலையருக்குத் தாய் அமுதூட்டும்போதோ, பாட்டன் பாட்டியர் கொஞ்சிச் சீராட்டிக்கொண்டு நிலா முற்றத்தில் அமர்ந்திருக்கும்போதோ அவர்கள் பிஞ்சு மனங்களை ஈர்க்கும்வண்ணம் கதைகளைச் சொன்னார்கள். அரசகுமாரன், அரசிளங்குமரி, சிங்கம், நரி, முயல், அரக்கன், முத்தாறு, பவளாறு என்று நடப்பியலுக்கு அப்பாற்பட்டு இக்கதைகள் கற்பனை மிகுந்தனவாக இருந்தாலும், இளம் முகங்களில் ஆர்வமும் ஒளியும் குலவ, உள்ளங்கள் கற்பனையுடன் களிநடம் புரியும் அழகியலில் ஒன்றிவிடும். கதைகள் மக்களின் மனக்களிப்பூட்டும் பொழுதுபோக்காகவே முதலில் தோன்றியிருந்தாலும், பின்னர் அவை மனங்களைச் செம்மையுறச் செய்யும் நீதிகளைப் புகட்டவும், பக்தி, ஆன்மிக நெறிகளை வளர்க்கவும் குறிக்கோள்களைக் கொண்டனவாக விரிந்தன. பகல்நேர அலுவல்களனைத்தும் முடிந்தபின், ஊரின் பொது இடங்களான கோயில் மண்டபங்களிலோ, திறந்தவெளி அரங்குகளிலோ கற்றுணர்ந்த கதைக் கலைஞர் அமர்ந்து, கூடியுள்ள மக்களுக்கு நமது நாட்டின் இதிகாச, காவியக் கதைகளையும், புராண வரலாற்றுக் கதைகளையும் எடுத்துரைத்தார்கள். இடையிடையே பாட்டும், தாளமும், நடிப்பும், நகைச்சுவை நயங்களுமாகக் கதை கூறும் கலைஞர், எல்லோரும் பருகக்கூடிய பாலமுதாகக் கதைகளை வழங்கி, எழுத்தறியா உழவர் மக்களும், வீட்டுப் பெண்களும், குழந்தைகளும் பயன்பெறச் செய்தனர்.

ஒரே ஒரு ஊரில் ஓர் அரசன் இருந்தான் என்றோ, ஒரு காட்டில் நரி ஒன்றிருந்தது என்றோ கதை கூறும் முறை, மேநாடு தழுவிய இலக்கிய முறையில் மாறுபட்டது. ''மாலைக்கதிரவன் பொன்னொளி பரப்பிக்கொண்டிருந்தான்'' என்றோ, நேரடியான உரையாடலிலேயோ கதையைத் தொடங்கும் காட்சி

களைக் கண்முன் காட்டும்வண்ணம் சொற்கோலம் செய்வதும், கதை மாந்தரையும் நிகழ்ச்சிகளையும் உயிர்த்துடிப்புடன் படம் பிடித்தாற்போன்று மனத்தில் பதியச் செய்வதுமான இந்த உரைநடை, புதுமையாம் சாதனைகளைச் செய்தன. சிறுகதை என்பது வெறும் கோட்டுச் சித்திரத்தை ஒத்தது. பென்சிலோ, சாக்குக்கட்டியோ, நகக்கீறோ கூட அத்தகைய வடிவைத் தீட்டிவிடப் போதுமானதாகும். ஆனால், புதினமோ, பல வண்ணங்களில் நுணுக்கங்களான பல்வேறு சாயல்களைக்கொண்டு தீட்டப்பெறும் ஓவியம் போன்றதாகும். முதல் தமிழ்ப் புதினம் என்று கொள்ளப்பெற்றிருக்கும் பிரதாப முதலியார் சரித்திரத்தை இக்காலக் கணிப்பின்படி புதினம் என்று சொல்வதற்கியலாது என்று கருத்துரைப்பாருண்டு. கதைக்குள் கதையாக, சங்கிலிக் கரணைகளால் தொடுக்கப்பட்ட இக்கதை மக்களைக் களிப்பூட்ட வேண்டும் என்ற நோக்கில் நகைச்சுவை மிகுந்திருப்பதுடன், கல்வியின் மேன்மையையும் நல் ஒழுக்கத்தையும் வலியுறுத்துவதாகவும் இருக்கிறது. பெண் கல்வியின் சிறப்பையும், தேவையையும் ஆசிரியர் முனைப்பாக்கி இருக்கிறார்.

புதினம் என்ற சொல்லே, புதுமைகளை உள்ளடக்கிய புனைகதை என்ற பொருளைக் குறிப்பாக்குகிறது. இதுகாறும் உரைநடை இலக்கியத்தில் கண்டிராத வடிவமைப்பும், அறிந்திராத கருத்தும், நுகர்ந்திராததொரு இரசானுபவம் அல்லது சுவை நுகர்ச்சி எனப் புதுமைகளைப் பொருள் விளக்குகிறது, புதினம் என்ற சொல். உரைநடை இலக்கியத்தில் முதன்முதலாகப் புதுமை சேர்த்த காலகட்டத்தில் இக்கதை வடிவு புதினமென்று பெயர்பெற்றதென்றால், இந்த நூற்றாண்டுக் காலத்தில், உருவாகியிருக்கும் எண்ணற்ற புதினங்கள் அனைத்தும் இச் சொல்லுக்குக்கு உகந்தவைதாமா என்ற ஆராய்ச்சியில் இறங்காமலே. புதினங்களின் சில பண்புகளை நோக்கலாம்.

வரலாற்று நூல்கள் அரசியல் மாற்றங்கள், ஆட்சியாளர்பற்றிய தகவல்களையும், போர்கள், பகைவர் சூழ்ச்சி வஞ்சகங்கள், உடன்படிக்கைகள் என்ற செய்திகளையும் சொல்லும். மேலும், அறிவியல் சாதனைகள், தத்துவ மலர்ச்சிகள், கொள்கைகள் பற்றிய தகவல்களையும் குறிப்பாக்கி அளிக்கக்கூடும். ஆனால், புதினங்களோ, சமுதாய வரலாறாகவே, உயிர்த் துடிப்போடுகூடிய வாழ்க்கையைப் படிப்பவருக்கு உணர்த்துகிறது. ஆசிரியரின் ஆற்றலைப் பொறுத்து, புதினக்கலை, வாழ்வின் எல்லாத் தத்துவங்களையும் நுட்பங்களையும் மையப் பொருளாக்கிக் கொள்ள இடமளிக்கிறது. இலக்கியத்தின் நோக்கமே மனித சமுதாயத்தைப் புரிந்துகொள்ள முயலுவதும் அதை விளக்க முயலுவதும் எனலாம். ஒரு தத்துவ இயலாளர் எவ்வாறு உண்மைப் பொருளை விளக்க முயற்சி செய்கிறாரோ, அவ்வாறே, புதினக்கலை கைவந்த ஆசிரியரும் உண்மை காண முனைகிறார். இந்த முயற்சியில் அவருக்கு இரண்டு கூறுகளே உறுதுணைகளாக இருக்கின்றன. ஒன்று புறவயமான யதார்த்தம். மற்றது, அணுகுமுறை.

உலகத்து இசை முழுவதற்கும் ஏழு சுரங்களே அடிநிலையாக அமைந்தாற்போல், மானுடத்துக்குப் பொதுவான உணர்வுகளிலேயே கதைக்கலையும் உயிராற்றல் பெறுகிறது. புதின இலக்கியம், மனித குலம் அனைத்தையுமே தழுவிக்கொள்ளும் அரிய ஆற்றல் வாய்ந்தது. மொழி, நாடு, சமயம் போன்ற எந்தப் பிரிவையும் இது தன்வயமாக்கி மானுடத்தின் மூலாதாரமான உணர்வுகளில் மையங்கொண்டு பேராற்றலை வெளியாக்கும் செல்வாக்கை உடையதாகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கிய ஆசிரியன் டிக்கன்ஸ் படைத்த சிறுவன் ஆலிவர் ட்விஸ்டின் குணச் சித்திரத்தில், உலகெங்குமுள்ள, சமுதாயச் சிறுமையில் அழுந்திய எத்தனையோ கோடிச் சிறுவர்களை இனம் காண இயலுகிறது. உருஷிய ஆசிரியன் தோஸ்த்யேவ்ஸ்கியின் 'குற்றமும் தண்டனையும்' என்ற புதினம், முற்றிலும் வேறுபட்ட தட்பவெப்பநிலை கொண்ட பூப்பகுதியில், பெயர்கள் மனத்தில் நிற்க இயலாததோர் வேற்று மொழிக்குரியவையாக எழுதப்பட்டதுதான். ஆனால் பெயர்கள், இடங்களெல்லாம் மையக்கருத்தில் முக்கியத்துவம் இழந்துவிடுகின்றன. ஏழை மருத்துவ மாணவனாகிய கதாநாயகனின் உள்ளம், தான் செய்த குற்றத்தை மறந்துவிட இயலாமல் துடிக்கும்போது, அந்த நுட்பமான அதிர்வுகளைப் படிப்பவர் மிகத் துல்லியமாக உணர்கிறார். ஒவ்வொரு கட்டத்திலும் அந்தத் துடிப்பு வலிமை பெறும்போது, வாசகரும் தம்மை மறந்து அக் கதாநாயகனுடன் தவிக்கிறார். இறுதியில் அது தாளாமல் வெடித்து, கதாநாயகன் தன் குற்றத்தைத் தானாக ஒப்புக்கொள்ளும் வரையிலும் வாசகரின் மன இறுக்கம், கதாநாயகனின் உள்ளப் பிரதிபலிப்பாகவே இருக்கிறது. புதின ஆசிரியன் தீட்டும் உலகம், வேற்றுமை காணாததோர் மானுடப்பண்பின் விசுவரூபமாக வாசகரை ஆட்கொள்ளுகிறது.

மேநாடு தழுவிய புதினக்கலை, நேராக எந்த நீதிக்கருத்தையும் வலியுறுத்த வேண்டியதில்லை. அது வெறும் கலைவடிவமே என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், சமுதாய உணர்வுடன்கூடிய எந்த இலக்கியப் படைப்பாளரும் இதை ஒத்துக்கொள்வதில்லை. புதினம் வெறும் பொழுதுபோக்குக் கலை அன்று, இலக்கியச் சிறப்பு, புதிய கருத்து, புதிய நோக்கு, புதிய மொழி வளம் ஆகிய அனைத்தும் சமுதாய நலனைக் குறிக்கோளாக்குகின்றன என்று அவர் நம்புகிறார். இத்தகைய ஆசிரியர் தாம் வாழும் காலச் சமுதாயத்தைப்பற்றிய ஆழ்ந்த உணர்வும், அதன் பலவீனமான, அல்லது வன்மை செறிந்த கூறுகளில் ஆழ்ந்த அறிவும் கொண்டு புதி

னங்களைப் படைப்பதன் வாயிலாக, மக்களைச் சமுதாய உணர்வு கொண்டவர்களாக விழிப்பூட்டுகிறார்.

இலக்கியத் துறையில் புதினத்தைப்போல் படைப்பவருக்கும் ஏற்பவருக்கும் எளிமையும் பயன்களும் வாய்ந்த வடிவம் வேறு இல்லை. புதினத்தில் உணர்ச்சிச் செறிவு உண்டு; ஆனால், கவிதையின் மொழியைப்போல் எளிதில் புரிந்துகொள்ள முடியாததல்ல. உரையாடல் ஒயில்களும் நாடகப் பண்பும் காணலாம். ஆனால், நாடக அமைப்புக்குத் தேவையான அரங்கம் போன்றவை வேண்டாம். சொற்றிறன் கொண்டே அவற்றைச் சாதித்து விடலாம். நிகழ்ச்சிகள் சங்கிலித்தொடர்போல் பிணைந்து, ஆர்வமுறுக்கேற்றி, உச்சநிலையில் மெல்ல அவிழ்க்கும் பாங்கில் படிப்பவர் மனங்களை ஈர்த்து, தான் கொண்டிருக்கும் கருத்தையும் மலரின் மணம்போல் பதித்துவிடுகிறது. எனவே, இலக்கியப் படைப்பாளர் மக்களிடையே தம் செல்வாக்கைப் பதிப்பதற்கு ஏற்றதோர் வடிவு, புதினமே என்று கூசாமல் கூறலாம்.

தமிழ்ப் புதினங்களின் பொற்காலம், தமிழ்நாட்டில், இந்திய அரசியல் விடுதலைப் போராட்ட காலத்தில் தோன்றிய மாத, வார, இதழ்களின் தோற்றத்தில் கால்கோள் கொண்டு இந்நாள் மிகப் பெரிய அளவில் மாடங்களும் கூடங்களும் விந்தை விதானங்களும் கலைநயமிக்க நுண்ணிய வேலைப்பாடுகளுமாக விரிந்ததோர் மாளிகையாக வளர்ச்சி பெற்றிருக்கிறதெனலாம். கிராமத்து மரத்தடியிலும், கோயில் மண்டபங்களிலும் நூற்றுக்கணக்கில் தான் மக்கள் கூட இயலும். ஆனால், இந்த வார, மாத இதழ்கள் உலகின் எந்த மூலையிலிருக்கும் தமிழரையும் ஒன்று சேர்க்கும் திறம் வாய்ந்ததாய், வேறு எந்த இந்திய மொழியிலும் இல்லாத அளவுக்கு வாசகர்களிடம் செல்வாக்குப் பெற்றிருப்பதைப் பல இலட்சக்கணக்கில் அவை விற்பனையாவதன் வாயிலாக விளக்குகின்றன. இந்தப் பரவலான வெற்றி, இவற்றில் வெளியாகும் நீண்ட கதைகள் அல்லது புதினத் தொடரில் நிலைகொண்டிருக்கிறதென்றால் பொய்யில்லை.

பத்திரிகைகள் பரவலாகத் தோன்றுமுன்பே புதினங்கள் முழுப்புத்தகமாக வெளியான காலத்தில் தமிழிலக்கிய வானில் தோன்றியிருந்த படைப்பாளர் அனைவருமே நாட்டு விடுதலைக்கான போராட்டக் கிளர்ச்சியால் பாதிக்கப்பட்டிருந்தவர்தாம். இலக்கியம் மற்றும் தாய்மொழியின் வளர்ச்சியில் ஆர்வம், சமுதாயச் சீர்கேடுகளை மாற்றியமைக்க வேண்டும் என்ற குறிக்கோள் ஆகிய உந்துதல்கள் அவர்களுடைய படைப்புகளை உணர்ச்சி செறிந்தவைகளாகவும் வீறுகொண்டவைகளாகவும் உருவாக்கின. *1910–17* ஆகிய கால வரையில் புதினக் கிளையில் பூத்த சில புதுமைகள், இன்றும் வியப்பூட்டும் வண்ணம் திகழ்கின்றன. 'தமிழ்ப்படிப்பில் அபிமானம் உண்டாக்க' என்ற குறிக்கோளுடன் ஓர் புதுமைப் புதின இதழை வெளியிட்டிருக்கும் ஆசிரியர் ம. கோ. விஜயராகவ முதலியார் என்பவர், இன்றும் ஆங்கிலத்திலேயே குறிக்கப்பெறும் பல வழக்குச் சொற்களுக்குத் தமிழாக்கம் செய்திருக்கிறார். பையுருள் (சைக்கிள்); பணக்கூடம் (பாங்க்); மிதப்புக் கணக்கு (கரெண்ட் அக்கௌண்ட்); வைப்பீடு (கிரெடிட்); பணமுறி (ரூபாய் நோட்டு); கொடுமுறி (செக்); புகுமுறி (நுழைவுச் சீட்டு); தீயவி இயந்திரம் (நெருப்பணைக்கும் இயந்திரம்); திருத்தகம் (பெனிடயன்ஷரி); தீர்ப்பாளர் (ஜட்ஜ்); ஒழுக்காளர் (மாஜிஸ்ட்ரேட்) என்ற சொற்களை அவர் கையாண்டிருப்பதைக் காணலாம்.

இந்தத் தொடக்ககாலத்தில் பெண் விடுதலைக்கு ஆவேசமாகக் குரல் கொடுத்த புத்திலக்கியப் படைப்பாளிகளில் இருவரைக் குறிப்பிட வேண்டும். அமரகவிஞர் பாரதியும், வ. ரா என்றழைக்கப்பெற்ற வ. ராமசுவாமியும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். பாரதி சந்திரிகையின் கதை என்றதோர் புதினத்தைத் தொடங்கி முடிக்கவில்லை. வ. ரா. ஏறக்குறைய அதேகாலத்தில் 'சுந்தரி' என்ற புதினத்தையும், இருபது ஆண்டுகள் சென்ற பின்னர் 'விஜயம்' என்ற புதினத்தையும் உருவாக்கி இருக்கிறார். இம்மூன்று புதினங்களிலும் நாயகியர் ஒரே மாதிரியாகக் கன்னிமை மலருமுன்பே கைம்மை நிலை எய்தியவர்கள். மூடச் சனாதன அமைப்பின் விதிகளை இரு ஆசிரியர்களும் தகர்க்க முயன்று பெண்மையாம் பேரொளிக்கு மாண்பு செய்ய முன் வந்திருக்கின்றனர். தமது புத்தமுதப் பாக்களால் உலகின் முன் தமிழகத்தின் பெருமையைச் சோதிச்சுடராய் விளக்கி வைத்த பாரதியின் சீர்திருத்த ஆவேசம், வ. ரா. வின் புதின நடையில் பொங்கி வருகிறது. இவர்களுக்கு முன் பல புதினப் படைப்பாளர் பெண் கல்விக்காகக் குரல் கொடுத்தனர்; பெண்ணைப் போற்றுதற்குரியவளென்றனர். ஆனால், இந்தச் சமுதாயத்தின் வேலியாகத் திகழ்ந்த சனாதன தர்மத்தின் பாதுகாவலர்கள் என்று சொல்லிக்கொண்டவர் மனங்களில் தைக்கும்வண்ணம், பெண்ணுக்கிழைக்கப் பெற்ற கொடுமைகளுக்காகப் போராடியிருக்கவில்லை.

இப் புதினங்களில் இளம் கைம்பெண்கள் மறுவாழ்வு பெறப் போராடுவதுதான் நோக்கம் என்றாலும், ஒளிக்கதிர் இருளில் மூழ்கிய பெரிய அவலத்தைத் துளைக்கப் பாய்கையில் முழு அவலங்களையும் படம்பிடிக்கின்றன. சாதிச் சண்டைகள், சைவ வைணவத் தகராறுகள், பண்டார சந்நிதி – பாஷாண்டிகளின் வரலாறுகள், வீரியமற்று அடிமை வாழ்வில் உழலும் உயர்குலத்தார் நிலை, சீட்டாட்டம், கஞ்சா, தாசி வீடுகள், வீண் வம்பு என்று அடிமைச் சேற்றில் புழுக்களைப்போல் குலுகுலுக்கும் அந் நாளைய இளைஞர்களின்

நடவடிக்கைகள் ஆகிய பல அவலங்களை அப் புதினக் கண்ணாடியில் காண இயலுகிறது.

நாட்டு விடுதலைக்குப் பின்னர், சமுதாய உணர்வோடு இலக்கியம் படைத்தல் என்ற நோக்கு, பத்திரிகைத் தேவைகள், வாணிப நோக்கு என்ற கிளைகள் தோன்றிவிட்டதால், இலக்கியப் படைப்பாளரிடையேயும் பிரிவுகள் தோன்றிவிட்டன. என்றாலும், இலக்கிய ஆசிரியர்கள் சமுதாயம் சார்ந்த பொறுப்புகளோ, பாதிப்புகளோ இன்றி, பொழுது போக்கையே குறிப்பாக்கிப் புதினங்களைப் புனைகின்றனர் என்று முற்றிலுமாகத் தீர்த்துவிட இயலாது.

அரசியல் விடுதலை எய்திய பிறகு, நாட்டின் சமுதாய வாழ்விலே புறவயமான ஆரவாரங்கள் தெரியாதவண்ணம் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அறிவியல், தொழில்நுட்பச் சாதனைகள் மக்களின் வாழ்க்கை முறைகளைப் பல படிகளிலும் பாதித்திருக்கின்றன. இந்த மாறுதல்களிடையே வாழும் ஓர் இலக்கியப் படைப்பாளியின் சிந்தனையே புதிய உண்மைகள் பாதிக்கும்போது, புனைகதைப் படைப்பின் சில பழமையான முறைகள் தகர்ந்து விடுகின்றன.

மண்ணைப் பேணி தன்னிறைவு காண வாழ்ந்திருந்த பழங்குடியினரான மலைமக்களின் வாழ்வில், வன்மைக்கு ஆதாரம் பணம் என்ற மாற்றம், முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. நாட்டின் ஆக்கத்துக்காகத் தீட்டப்பெற்ற பல திட்டங்களில் பரந்துபட்ட பாரத நாட்டின் பலமொழி, பல இனக் குழுக்கள் கொண்ட மக்களை ஒருங்கிணைக்கும் தொழிற்களங்கள் தோன்றின. கிராமங்களில், எப்போதோ பொழியும் வானையும் மண்ணையும் நம்பி முடங்கியிருந்த மக்கள் நீர்வளம் தேக்கி நிலவளம் பெருக்க எழுப்பிய அணைத்திட்ட இடங்களுக்குப் பெயர்ந்தார்கள். பழைய மரபுகள் தடம் புரண்டபோது, இளைய – முதிய தலைமுறை மக்களிடையே பண்பாட்டு மதிப்பீடுகளின் காரணமாகப் பிளவுகள் தோன்றின.

அரசியல் அரங்கிலும் அமைதிக் காட்சிகளே சுருள விழவில்லை. மக்களாட்சி மலர்ந்தாலும், அதன் உயிர்நாடியான தேர்தல் முறைகளின் பல அநுபவங்களில் இந்நாடு பாதிப்புக்குள்ளாயிருக்கிறது. அரசியல் பொருளாதாரக் கொள்கை மோதல்கள், அழிவுப்பாதையிலும் முன்னேற்றம் கண்டிருக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகள் எல்லாம் உலக அரங்கிலும் விடுதலை பெற்றுத் தன்னிறைவு காண முன்னேறும் நாடென்ற அளவில் நமக்குப் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. இந்தியா முழுமைக்குமான விடுதலைப் பத்திரத்தை ஆங்கில அரசு நமக்கு அளித்திருந்தும் மேற்கோரத்துக் கோமந்தக பூமி போர்த்துகீசியக் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட மேலும் பதினான்காண்டுகளாயின. அரசியல் விடுதலைக் களத்தில் காந்தியடிகள் கண்ட வன்முறையற்ற அறநெறி கோவா விடுதலைப் போராட்டத்தில் வெற்றி காணவில்லை.

இத்தகைய சமகால வரலாற்று நிகழ்ச்சிகள் ஓர் இலக்கியப் படைப்பாளியின் புதின ஆர்வத்தைக் கிளர்த்தாமலிருக்கவில்லை. ஆனால், வெறும் நிகழ்ச்சிகள், செய்திகள், புதினமாகிவிடுமா? பாலைப் பதப்படுத்தி வெண்ணெயையும் மண மிகுந்த நெய்யையும் கொண்டு வருவது போன்றதொரு செயலாகும் அது.

கதைக்கலைக்கென்று சில மரபுகள் நிலைபெற்றிருக்கின்றன. கதைமாந்தரின் தனிப்பட்ட உணர்ச்சிகளின் மோதல்கள், நிகழ்ச்சிப் பின்னல்களின் நெருக்கடி கட்டத்துக்கு ஏறி வாசகரை ஈர்க்கும் முறை, சமுதாயத்தில் உண்மை நிலையைச் சாராமலும் நின்றுவிடலாம். ஆனால், தனிமனித உணர்வுகளை, ஒரு குழு அல்லது பாதிக்கப்பட்ட சமுதாயத்துக்குப் பொதுவான பிரதிபலிப்பாகச் சித்திரிக்கும்போது, புதினங்கள் ஆற்றல் மிகுந்தவைகளாகின்றன. வேலையில்லாமல் திண்டாடும் பட்டக் கல்வி பெற்ற ஓர் இளைஞனின் நிலையையும், வரதட்சணைக் கொடுமையால் திருமணமாகாமல் நிற்கும் ஒரு பெண்ணையும் கதை மாந்தர்களாகக் கொண்டு அவர்களுடைய மன உணர்வுகளையும், அவர்களுடைய அநுபவ நிகழ்ச்சிகளையும்கொண்டு புதினம் புனையும்போது, அந்தச் சமுதாய நிலையைப் பல கோணங்களில் அறிவுறுத்திப் பிரச்சினைக்குத் தெளிவு காணச் சிந்தையைக் கிளர்த்தும் பட்டைக் கண்ணாடிபோல் அப் புதினம் திகழ்கிறது.

மனித வாழ்க்கையின் போராட்டங்கள் பல்வேறு வடிவங்களில் நிகழ்வதை இலக்கியப் படைப்பாளரின் கூர்ந்த நோக்கு அணுகும்போது, அழகிய பூங்காக்களிலும், ஆற்றோரங்களிலும், நிலவு மாடங்களிலும் இளைஞரான ஆணையும் பெண்ணையும் சந்திக்க வைத்தும் இனிய மொழிகளில் உரையாடச் செய்தும் புதினங்களுக்குப் புதுமைக் கவர்ச்சிகள் அளிக்கும் பாங்குகள் தகர்ந்துவிடுகின்றன.

பொறிகளின் இயக்கங்களும் மானுட இயக்கங்களும் போட்டிபோடும் இரைச்சல்கள் இயற்கையின் எழிலார்ந்த கோலங்களைச் சிதைக்கும்போதும், பாறைகளைத் துளைக்கும் வெடியோசைகளில் ஆறு கலங்கும் அதிர்ச்சியிலும் மக்களின் வாழ்வு வன்மை பெறும் கூறுகள் பொதிந்திருப்பதைப் படைப்பாசிரியர் உணருகிறார். இரைச்சலும் புழுதியும் பொங்கெழுச்சிகளும் தன்வயமாக்கிய சூழலில் மக்களின் நுண்ணுணர்வுக் கோலங்களைப் படைப்பாசிரியர் தரிசிக்கிறார். மெய்சிலிர்க்க வைக்கும் முழுமையாக அவரது சிந்தையை ஆட்கொள்ளும் அந்தப்

பாறைத் துகள் படிந்த பேரோசை இயக்கங்களில் ஜீவனுள்ளதோர் உண்மை ஒளியிழையாய்ச் சுடரிடுகிறது. இயற்கையின் முரட்டுத்தனங்களை அடக்கி வென்று, அதைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள வேறுபட்ட மனிதத் தொகுதிகள் ஒருங்கிணையும் பாங்கில் மானுடம் வாழத் துடிக்கும் உண்மை என்றும் எப்போதும் சாசுவதமாகப் புலனாகிறது. நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்யவேண்டாம். ஆனால், கரியில் பொதிந்திருக்கும் கல்லின் நீரோட்டமறிந்து அதைப் பட்டை தீட்டி உயர்ந்த தன்மையை ஒளிரச் செய்வதுபோன்று, அந்தக் களத்திலிருந்த எலும்பும், நிணமும், சதையும் எடுத்து அளித்துத் தாம் உணரும் உண்மையொளியை இயல்பாகப் பொதித்துப் புதினமாக வழங்குகிறார் ஆசிரியர்.

இவ்வாறு புதினம் வழங்கும் கலையில் ஈடுபடும் போது, படைப்பாசிரியருக்கு, ஒவ்வொரு முயற்சியிலும் புதிய அனுபவமும் புதிய ஆற்றலும் பெறும் பயன் கொடையாகவாய்க்கிறது. இரவைப் பகலாக்குவதும், பகலை இரவாக்குவதுமான தடம் புரளும் அறிவியல்-கலாசார மோதல்கள் பல வாழ்க்கைப் பிரச்சினைகளை உருவாக்கியிருக்கின்றன. குடும்பத்தின் சக்தி, பெண்ணின் இயக்கத்தில் மையம் கொண்டிருந்தாலும், சில மரபுகள் அறியாமை இருளில் பெண்ணைச் சுழல வைத்திருந்தன. இந்நாள் அந்தச் சக்தி அறியாமையிலிருந்து மீளும்போது, பழைய அச்சுகளும் அமைப்புகளும் ஆட்டம் காண்பதால் குழப்பங்களுக்கு வழிவகுக்கின்றன. மனிதகுல வாழ்க்கையில் பெரு நம்பிக்கையும் உறுதியும் கொண்ட படைப்பாசிரியருக்கு வாழ்க்கையின் ஒவ்வொரு சாயலும் சிந்தையைத் தூண்டும் வண்ணமாகவே தொடர்புகொள்கிறது. எனவே, கலாசாரம், பண்பாடு ஆகிய நிலைகளை ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும் வரையறுக்கும் அவசியம் புதின ஆசிரியருக்கு ஏற்படுகிறது.

இந்தக் கலையில் வல்லோருக்கு, கருப்பொருளாகத் தேர்ந்துகொள்ள அசையாப் பொருள்களுங் கூட மேலாம் தத்துவங்களை விளக்கும் கருவூலங்களாகி உதவுகின்றன. வானியல் நுட்பம் கண்டு தெளியும் அறிவியலாளனும், எழுத்தறிவற்றதொரு பாமரனும் ஒரே நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றனர். ஐந்து வயதுக் குழந்தையும் தொண்டு கிழவரும் ஏற்றத்தாழ்வில்லாத வகையில் புதினத்தின் சிறப்புக்குக் காரணமாகலாம். விலங்குகளும் விதிவிலக்கல்ல. படைப்பாளரின் ஆர்வத்துக்கேற்ப அவருடைய எல்லைகள் விரிந்து செல்கையில், அவர் திறனுக்கு அறைகூவலாகச் சில அனுபவங்கள் வாய்ப்பதுண்டு. ஏற்கெனவே தமிழ் மொழியில் இல்லாத சில சொற்களை, எளிதில் பொருள் விளங்கும் வண்ணம் அளிக்கவேண்டிவரும். தமிழ் மாநிலத்துக்கப்பால் ஒரு வாழ்க்கைக் களத்தைப் புதினத்துக்குத் தேர்ந்து கொள்ளும்போது, அம்மக்களின் பழக்க வழக்கங்கள் தமிழ் வாசகருக்குப் பரிச்சயமில்லாமலிருக்கையில் அவ்வாழ்க்கையைச் சிறிதும் அந்நியத்தன்மை மேவியிராத இயல்புடன் பொருட்சுவை குன்றாமல் ஒட்டு மொத்தமாக வழங்குவது ஒரு பிரச்சினை. 1971-72ஆம் ஆண்டுகளில், பாரத நாட்டில் வரலாற்றுச் சிறப்புடைய நிகழ்ச்சி ஒன்று நடந்தது. வன்முறைச் செயல்களிலீடுபட்டுக் கொடிய குற்றங்களைப் புரிந்து ஒளிகாணா உலகில் தலைமறைவாக வாழ்ந்த மறவர்களும் மனம் திருந்தி அன்பு வழியில் மாறிடலாம் என்ற தத்துவத்தைச் செயல்முறையாக்கத் துணிந்த நிகழ்ச்சி அது. வடமேற்கு, மைய பாரதத்தில் சம்பல் ஆற்றின் கரைகளில், இடைவிடாத மண்ணரிப்பினால் தோன்றிய மிக விந்தையான நிலப் பகுதிகள் பரவியிருக்கின்றன. இப்பகுதி, பல நூற்றாண்டுக்காலமாகச் சட்டத்துக்கும் தண்டனைக்கும் அஞ்சிய குற்றவாளிகளின் மறைவிடமாக இருந்து வந்திருக்கிறது. ஒரு சோதனை முயற்சிதான் என்றாலும், நானூற்றுக்கும் மேற்பட்ட கொடிய மறவர்கள் தங்கள் கொலைக்கருவிகளைக் கீழே வைத்துக் காவல்துறையினரிடம் சரணடைந்தார்கள்.

இவ்வரலாற்று நிகழ்ச்சியை மையமாகக் கொண்ட புதினத்தைப் புனைய, அந்தப் பிரதேச மக்களின் வாழ்வு, அவர்களுடைய வன்முறைச் செயல்களுக்குக் காரணமான தனிப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றை ஆசிரியர் நுட்பமாக ஆராய வேண்டியது அவசியமாகிறது. கொடிய கொள்ளை, கொலைகளைப் புரிந்த கதாநாயகனின் மனமாற்றத்தைச் சித்திரிக்கும் சாதனையைச் செய்வதற்கு வெறும் செய்தித் திரட்டல் மட்டுமே போதுமானதாகாது. அந்த மண்ணின் மக்களை, அவர்கள் துடிப்புகளை, கிளர்ச்சிகளைச் சொந்தத் தமிழில் கொண்டுவருவதற்கு, சொல்லாகிய கருவி உயிராற்றல் பெற வேண்டும். கருப்பொருளும் உருவமைப்பும் ஒன்றோடொன்று பிரிக்க இயலாமல் இயல்பாக ஒன்றிவிடும் வண்ணம் வெவ்வேறு களங்களில் வெவ்வேறு சிறப்புடன் புனையப்பெறும் புதினங்களில் சொற்களுக்கும் பல பரிமாணங்கள் கூடுகின்றன; இந்தப் புதுமைகளின் ஆற்றல் மேலும் சிறந்து விளங்குகிறது.



சமூக நாவல்களில் பகுத்தறிவுப் போக்கு

டாக்டர் தா. வே. வீராசாமி, எம்.ஏ., பிஎச்.டி.

தமிழிலக்கியத்தில் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இன்று வரை சமூக நாவல் என்ற இலக்கிய வகை புதிதாகத் தோன்றி வளர்ந்து வருகிறது. மாயூரம் வேதநாயகர் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திர'த்தில் 'சோதிடப் பைத்தியம்' என்ற தனி அதிகாரத்தில் பகுத்தறிவுப் போக்கின் துளிர் வெளிப்படுகிறது. சோதிடம் சொல்லி உலகை ஏமாற்றி வருவதுபற்றிய உண்மையைச் சோதிடர் வாயிலாகவே வெளிப்படுத்துகிறார் வேதநாயகர்.

''சாஸ்திர சகுனங்கள் பார்த்து, சாதகங்கள் பார்த்து, பொருத்த நிமித்தங்கள் பார்த்து அவர்களைக் (சோதிடருடைய நான்கு பெண் மக்களை) கலியாணம் செய்து கொடுத்தேன். அந்த நாலு பேரும் அமங்கலியாய்விட்டார்கள். 'மந்திரம் கால் மதி முக்கால்' என்பது போல என்னுடைய புத்தியைக் கொண்டு பிழைக்கிறேனே அல்லாது சாஸ்திரத்தைக் கொண்டு பிழைக்கவில்லை... சாஸ்திர விஷயத்தில் சகலருக்கும் இருந்த நம்பிக்கை நாளுக்குநாள் குறைந்துவிட்டது''[1] என்று நாவலில் வரும் சாஸ்திரியாரே கூறுகிறார். மேலும்,

''நமக்கு வருகிற நன்மை தீமைகள் நமக்குத் தெரியாமல் இருக்க அசேதன ஜந்துக்களாகிய பல்லிகளுக்கும் பட்சிகளுக்கும் தெரிந்து அவைகள் நமக்குத் தெரியப்படுத்தக்கூடுமா?'' என்ற கேள்வி வாயிலாகப் பிரதாபரின் 'சாஸ்திரப் பேய்' பறந்தோடிவிட்டதைப் புலப்படுத்துகிறார். இவ்வாறு சோதிடம், சகுனம் பார்த்தல் போன்ற மூட நம்பிக்கையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற ஆர்வம் புலப்படுகிறது. ஆயினும், அது பகுத்தறிவுப் போக்கினை வெளிப்படையாகக் குறிக்காவிடினும் நாவல் என்ற இலக்கிய வகை தோன்றிய இயந்திரப் புரட்சிக் காலத்திற்கேற்ற அறிவியக்க நெறிக்குகந்த கருத்துகளை வெளிப்படுத்தும் போக்கு எனலாம்.

இந் நிலையின் வளர்ச்சியை மாயூரம் வேதநாயகரின் இரண்டாம் நாவலான 'சுகுண சுந்தரி'யும் வெளிப்படுத்துகிறது. கதைத் தலைவியாம் சுகுண சுந்தரி குழந்தைகள் பள்ளி ஆண்டு விழாவில் குழந்தை மணம்பற்றிக் கண்டித்துப் பேசுகிறாள். உடன்கட்டை ஏறும் கொடுமையை எடுத்துக் கூறுகிறாள். இவற்றை நிறுத்துதற்கு அறிவாளிகள் சிந்தித்து முயற்சி செய்யுமாறு வேண்டுகிறாள்.[2]

இதன்படி வேதநாயகர் குழந்தை மணம், உடன்கட்டை ஏறுதல் போன்ற சமூகக் கொடுமைகளைக் களைதல் வேண்டும் என்பதையும் அதற்கு அறிவாளிகளின் சிந்தனை முதலில் தூண்டப்பெறவேண்டும் என்று கருதிய நோக்கையும் காண முடிகிறது. இம் முயற்சி பகுத்தறிவுப் பாதைக்குத் தமிழ் நாவல்கள் தூவிய முதல் விதை எனலாம்.

சாதி வேறுபாடுகள் அக்காலத்தில் வேர்விட்டுப் பரவியிருந்தன. வண்ணான், அம்பட்டன், தோட்டி போன்றவர்கள் இழிந்தவர்கள் என்ற மனப்பான்மை

[1] வேதநாயகம் பிள்ளை, 'பிரதாப முதலியார் சரித்திரம்', பக். 46. தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி, 1976.

[2] வேதநாயகம் பிள்ளை, 'சுகுண சுந்தரி', பக். 56-61, சக்தி காரியாலயம், சென்னை, 1957.

பரவியிருந்தது. எனினும், விதவையர் மறுமணம் செய்துகொள்ளும் வகையில் சமுதாயம் வளர வேண்டும் என்று படித்தவரிடையே புதிய சிந்தனை பரவ வாய்ப்புக் கிடைத்தது. இது முதல் நிலைக்கு மாறானது. பழமையை எதிர்த்துக் கேள்வி கேட்கும் எண்ணத்தைத் தமிழ் நாவல்களின் தொடக்க நிலையிலேயே அறியமுடிகிறது.

அறிவைப் பெருக்கிக்கொள்ளப் பல வழிகளில் முயலவேண்டும். நாம் யார்? உலகம் எப்படி உண்டாயிற்று? மழை, இடி, மின்னல் இவற்றால் நாம் அடையும் இலாப நட்டமென்ன?... பூகம்பம், எரிமலை இவற்றிற்குக் காரணம் என்ன? கடவுளென்று ஒருவரைப்பற்றி எல்லா ஊராரும் எல்லாக் கொள்கையரும் பேசுகின்றார்களே, அவரால் நாம் அடையும் நன்மை தீமை யாது? என்று அறிவியல் அடிப்படையில் நியூட்டன் கண்டுபிடித்த உண்மைகளை ஏற்கும் நெறியில் குருசாமி சர்மாவின் 'பிரேம கலாவத்யம்' (1893) என்ற நாவல்[3] செல்லும்.

இவ்வாறு தமிழின் தொடக்ககால நாவல்கள் மனித வாழ்வில் உள்ள சாதி சமயக் குறைகளைப் பற்றிச் சிந்திக்கவும் அறிவியல் முறைப்படி உலகை ஆராயவும் வேண்டிய அடிப்படை எண்ண விதைகளை ஆங்காங்கே தூவிச் சென்றுள்ளன. அவை பிற்காலத்தில் தோன்றிய பகுத்தறிவுப் போக்குக்கு ஓரளவு வலிமையூட்டும் ஆற்றல்களாக விளங்கின.

அக்காலத்தில் நாவல் என்ற பெயரையே வெறுத்தவர்களும் இருந்தனர். நாவல் படித்தால் மக்கள் கெட்டுப் போவார்கள் என்று எண்ணிய பழங்கருத்துக்கு எதிராக நாவலைப் படிக்க முயற்சி செய்வதே ஒரு சமூகப் புரட்சியாக அமைந்தது. அந்நிலையில் ஒரு கொள்கையை வற்புறுத்தி அதன் வெற்றி தோல்விகளை விளக்கிச் செல்வது தமிழ்ச் சமூக நாவல்களின் ஒரு பகுதிக்குரிய பணியாக மாறியது.[4] அம்மாற்றத்தை உணராமல் குடும்பம் என்ற வேலிக்குள் நின்று எழுதிய நாவலாசிரியர்கள்கூடச் சமுதாயம் கைம்பெண்களுக்கு இழைக்கும் அநீதியையும், மருத்துவர்கள் ஏழை மக்களைக் கொடுமைப் படுத்தும் பாதகத்தையும் வெளிப்படுத்துகின்றனர். சமூகத்தை மாற்ற வேண்டும் என்ற உணர்வின்றி எழுதும் இவ்வகை எழுத்துகள்கூட அத்தகைய மாற்றங்கள் வெளிப்படுவதைத் தடுக்க முடியவில்லை என்பதே இதன் நிலை.

கல்வி கற்று அதனால் பெற்ற அறிவினால் சமூகக் கொடுமைகளை நீக்க வேண்டும் என்ற அறிவியக்க வளர்ச்சிக்குத் துணைபுரிந்த அ. மாதவையாவின் நாவல் 'முத்து மீனாக்ஷி' (1903). அது மனிதனை நல்லவன் கெட்டவன் எனப் பார்க்க வேண்டுமே ஒழியச் சூத்திரன், பிராமணன் எனப் பார்ப்பதில் பொருளில்லை எனச் சாதி வேற்றுமையை அறிவடிப்படையில் ஆய்ந்து தன் கருத்தை வெளியிடுகிறது. மேலும் விதவையர் மறுமணம் புரிந்துகொள்ள வேண்டும் என மறுமலர்ச்சி வாழ்வுக்கு முதற்குரல் கொடுக்கிறது. 'சாதி மதம் என்பவை எல்லாம் ரூபாயைப் பொறுத்தவைகளே' எனப் பொருளியல் பார்வைக்கும் வழி அமைத்துக் கொடுக்கிறது. இவ்வாறு அறிவின் அடிப்படையில் பழமையின் கொடுமைகள் களையப்பட வேண்டும் என்ற அறிவுப் பார்வையை முழு உணர்வு நிலையில் சமூக அடிப்படையை மாற்றுவதற்காக மாதவையாவின் படைப்புகள் வெளிவந்தன.

பாரதியாரின் 'சந்திரிகையின் கதை' கலப்பு மணம், விதவை மணம் போன்றவற்றை வெளிப்படையாக ஆதரித்தது. இதன் தொடர்ச்சியாக, மறைமலையடிகளின் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்ற நாவல் கைம்பெண்கள் படும் துன்பத்தையும் மேல்சாதிக்காரர்களின் சாதி வெறியையும் கூறிக் கலப்பு மணத்தை வற்புறுத்தும். எனினும் அது பகுத்தறிவுப் போக்கில் அறிவியல் அடிப்படையில் சமூகக் குறைகளை நீக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்பதை அந் நாவலில் காணப்பெறும் ஆவி உருவம், ஒளிவட்டம், சமயச் சிறப்பு ஆகிய செய்திகளால் அறிய இயலும்.

II

இந்நிலையில் அரசியல் மாற்றங்கள் பல நேர்ந்தன. அத்துடன் சமூகப் புரட்சியும் தலை எடுத்தது. பெரியார் இராமசாமியின் சீர்திருத்தக் கொள்கையால் சமூகத்தில் காணப்பெறும் மூட நம்பிக்கைகளையும், சாதி வேறுபாடுகளையும், கடவுட் கொள்கையையும் மாற்றி அமைக்கும் பகுத்தறிவு நெறி பரவியது. படித்த நடுத்தர மக்களிடையே பகுத்தறிவுப் பார்வை செல்வாக்குப் பெறத் தொடங்கியது. பெண் விடுதலை இயக்கம், பொருந்தா மணத்திற்கு எதிர்ப்பு, சாதிக் கட்டுப்பாட்டைத் தகர்த்தல், விதவை மணத்திற்கு ஆதரவு, பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புதல் போன்றவை அறிவியக்கத்தால், சுயமரியாதை எண்ணத்தால், மேல்சாதிக்காரரின் பிடிப்பை எதிர்க்கும் முயற்சியால் வலிவு பெறத் தொடங்கின.

அவற்றிற்கு முன்னோடியாக மாதவையாவின் படைப்பு விளங்கியது. அதைத் தொடர்ந்து பாரதியாரின் சீடராக விளங்கிய வ.ரா. வின் படைப்புகள் துணை புரிந்தன. வ.ரா.வின் 'சுந்தரி' (1917) வாயிலாகச் சீர்திருத்தக் கருத்துகள் வெடித்து வெளிவந்து பகுத்தறிவுப் பாதைக்கு மேலும் உரமூட்டின. அவர் எழுதிய 'சுந்தரி' புதிய நெறியைப் புலப்படுத்தியது.

---

[3] குருசாமி சர்மா, 'பிரேமகலாவத்யம்', பக். 79-80, பி. டி. பாணி கம்பெனி, சென்னை, 1940

[4] தா. வே. வீராசாமி, 'தமிழில் சமூக நாவல்கள்', பக். 29, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

'கோதைத் தீவு', பாரதியாரின் 'ஞான ரத'க் கற்பனையைத் தழுவியது. எனினும் பகுத்தறிவுப் பார்வை வாயிலாகக் கட்டாயத் திருமணம், சீதனம் போன்ற பழக்க வழக்கங்களுக்கும் கற்பைப்பற்றிய பழங்கால நம்பிக்கைகளுக்கும் புதிய உருமாற்றம் தந்தது. பட்டினத்தார் பாடல், அகலிகை வாழ்வு, சாவித்திரி நிலை பற்றிய பழைய மதிப்பீடுகளைப் புதுக்கிப் புதிய மதிப்பீட்டிற்கு வழிசெய்தது.

இத்தகைய எண்ணங்கள் சீர்திருத்த இயக்கப் படையினர்க்குப் புதிய வலிவும் பொலிவும் ஊட்டின. இவ் வளர்ச்சிநிலையைப் பகுத்தறிவு இயக்க இலக்கியப் படைப்புகளில் நன்கு காண முடிகிறது.

இந் நிலையில் பொழுதுபோக்கிற்கெனத் துப்பறியும் நாவல்கள் எழுதிய பல நாவல் ஆசிரியர்களும் சமூகக் குறைபாடுகளையும் சமயத்தால் ஏற்படும் தீங்குகளையும் ஆங்காங்குக் குறித்துச் சென்றனர். துப்பறியும் கலையைக் காட்டும் போக்கிலே சீர்திருத்தக் கருத்துகளையும் ஒளிவு மறைவின்றி எடுத்துக்காட்டினார் ஜே. ஆர். ரங்கராஜு. பணத்திற்காகச் சோதிடர்கள் எத்தகைய கேடுகள் புரிந்தனர் என்பதைக் காட்டியதுடன், காவல் துறையிலும் நீதித்துறையிலும் பணிபுரிவோர் கையூட்டுப் பெற்றதையும் அஞ்சாமல் வெளிப்படுத்தினார். மதத் தலைவர்களாக விளங்கிய மடாதிபதிகள் செய்யும் கொடுமைகளைச் 'சந்திரகாந்தா' போன்ற நாவல்களில் நாடறியச் செய்தார். வடுவூரார் எழுதிய பல நாவல்களால் சமுதாயத்தில் காணும் குறைகள் வெளிப்படுகின்றன. அவர் எழுதிய 'மேனகா'வில் சமய வேறுபாட்டை நீக்கி இந்து-முஸ்லிம் உறவு வற்புறுத்தப்பெறும். வை. மு. கோதைநாயகி போன்றோர் பெண்கள் மறுமணம் புரிதல், வரதட்சிணைக் கொடுமையைப் போக்க முயலுதல் ஆகிய சமூகச் சீர்திருத்த நெறிகளுக்குத் தம் நாவல்கள் வாயிலாக ஓரளவு வழிகாட்டினர்.

புகழ்பெற்ற நாடக நடிகையாக விளங்கிய டி. பி. ராஜலக்ஷ்மி போன்றவர்கள் ஆண்களிடம் பெண்கள் படும் கொடுமையை விளக்கும் நாவல்கள் எழுதிப் பெண் விடுதலைக்குரிய வழிகளை நாடுமாறு செய்தனர்.

சூனியம், மாந்திரீகம் போன்ற மூட நம்பிக்கைகளைக் களையும் உணர்வு, மோட்சம் நரகம் என்று ஏமாற்றும் மதச் சூழ்ச்சிகள் ஆகியவற்றைத் தம் சொந்த வாழ்வடிப்படையில் உணர்ந்து எழுதினார் கிரிஜாதேவி என்பவர். அவருடைய 'மோகன ரஞ்சினி' என்ற நாவல் இவ்வழியில் சிறந்து நிற்கிறது.

பிற்காலத்தில் பகுத்தறிவு இயக்கத்தில் முன்னணியில் பங்கு பெற்ற இராமாமிர்த அம்மையார் 'தாசிகளின் மோச வலை அல்லது மதி பெற்ற மைனர்' என்ற நாவல் (1936) வாயிலாகத் தேவதாசி முறையை ஒழிப்பதற்கு முன் வந்தார். பொட்டுக்கட்டும் முறையை ஒழிக்கும் மாநாடு முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் தலைமையில் நடைபெற்றுத் தேவதாசிகளுக்கும் முறையான நல்வாழ்வு இல்லறத்தில் கிடைக்கவேண்டி முயற்சி செய்தது. அதன் அடிப்படையில் அம்மையார் நாவல் வெளிவந்து சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட பெண்கள் பகுதிக்கு விடுதலை தரப் பேரளவில் உதவி செய்தது. பெரியார் பெண் விடுதலை இயக்கத்திற்குப் பாடுபட்ட நிலையும் அம்மையார் அதற்கு இடைவிடாமல் துணை புரிந்தமையும் இதற்கு அடிப்படையாகும்.

'தேவதாசி முறைக்கு அடிப்படையாக இருக்கும் கடவுள், மதம், ஸ்மிருதி, ஆகமம், புராணம் ஆகியவற்றை முதலில் ஒழிக்க வேண்டும். இவற்றை ஒழித்துவிட்டால் தேவதாசிக்கூட்டம் இருப்பதற்கே நியாயமிருக்காது' என்று சமூகக் குறையைப் போக்குவதற்குரிய பகுத்தறிவுப் போக்கு நன்கு வெளிப்படுகிறது.

இத்தகைய போக்கிற்கு நல்லுரம் ஊட்டியது சுயமரியாதை இயக்கம். அத்துடன் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், இங்கர்சால், டார்வின், ஸ்பென்சர், ஹக்ஸ்லி, மார்க்ஸ் போன்றவர்களின் கருத்துகள் தமிழகத்தில் பரவியதன் விளைவு எனலாம். இத்தகையவர்களில் லெக்கி, ஸ்டீபன், பெயின், காலின்ஸ், டின்டால், வால்டேர் முதலான வேத விரோதிகளைப் படித்துப் பாவ புண்ணியங்கள் இல்லை; நரகம், மோட்சம் இல்லை; உலக சுகமே சுகம் என்ற வாழ்வு நடத்திய அனந்தையன் கதையைப் 'பிரதாப முதலியார் சரித்திர'த்தில் கண்டாலும்[5] அவை எல்லாம் பகுத்தறிவுக் கொள்கை தமிழ் மக்களிடம் பரவுதற்குரிய சூழல் சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதைச் சுட்டும். எனினும் பெரியாரின் இயக்கமே தமிழ் நாவல் உலகில் பகுத்தறிவுப் போக்கிற்கு வடிவமும் வளர்ச்சியும் தந்தது எனலாம்.

III

காந்தியப் பற்றுக்கொண்ட கல்கி போன்றவர்கள் தீண்டாமை விலக்கு, வரதட்சிணைக் கொடுமை போன்றவற்றைத் 'தியாக பூமி' போன்ற நாவல்களில் பரப்பினாலும், பெண்ணுக்கு மறுமணம், கற்பு நெறியில் புதுமை போன்றவற்றை நாரண துரைக்கண்ணனின் 'உயிரோவியம்', அகிலனின் 'சிநேகிதி' போன்ற நாவல்கள் வெளியிட்டாலும், பெரியாரின் பின் வந்த இளைஞர்களைப் போன்று சமுதாய மறுமலர்ச்சியும் மாற்றமும் பகுத்தறிவு அடிப்படையில் எழவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்த

[5] வேதநாயகம் பிள்ளை, 'பிரதாப முதலியார் சரித்திரம்'' பக். 189-190, தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி, 1976.

வில்லை; மறைமலையடிகள்போல் பாதுகாக்கவே நினைத்தனர். எனவே, நாவலில் பகுத்தறிவுப் போக்கிற்கு முழுப் பொறுப்பாளிகள் பெரியாரின் வழிவந்த இளைஞர்களே ஆவர்.

IV

பெரியாரின் பகுத்தறிவு மணம் கமழ அறிஞர் அண்ணா எழுத்தோவியங்களைத் தீட்டினார். பெண்ணுக்குச் சமுதாயத்தில் இழைக்கப்பெறும் கொடுமையைத்தான் தம்முடைய பல நாவல்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

பெற்றோரின் வறுமையால் இளம் பெண்கள் கிழவர்கட்கு மனைவியாகித் துன்பப்படும் கொடுமை அண்ணாவின் பல நாவல்களில் வெளிப்படுகிறது. டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்த 'குமாஸ்தாவின் பெண்' எனும் நாடகத்தைப் பார்த்து அதன் போக்குப் பழம்போக்காக இருப்பதை உணர்ந்த அண்ணா குமாஸ்தாவின் பெண்ணுக்குப் பகுத்தறிவுப் பாதையைக் காட்டினார். சமுதாயத்தை எதிர்க்கும் திறன் படைத்த பெண்ணாகத் தாம் படைத்த காந்தாவை மாற்றுகிறார். சமூகக் கொடுமைகளைக் களைந்தெறிய முற்பட்டுத் தூக்குமேடை ஏறவும் அவள் அஞ்சவில்லை.

ஆனால் உண்மைக் காதலுக்கு உதவ முடியாதவை யாக மதம், சாதி, பூர்வகர்மபலன் ஆகியவை விளங் குவதையும் இவற்றையெல்லாம் எதிர்த்துப் பேசு பவனை நாத்திகன் என்று பழிப்பதையும் அண்ணா வெளிப்படுத்துகிறார்.[6] இளம் உள்ளங்கள் ஒன்றை ஒன்று அடைய முயன்றாலும் வறுமை அவர்களைப் பிரித்துப் பெண்ணைக் கிழவனுக்கு மனைவியாக்கி அலைக்கழிப்பதையும், காதலில் தோல்வியுற்ற இளை ஞன் அமைதியை நாடித் துறவியொருவனை அடைந்தபோது அங்கு மதவேடத்தில் தீமை நெளி வதையும் காட்டி, இறுதியில் இளம் உள்ளங்களை ஒன்று சேர்த்து வைக்கிறார் அண்ணா தம் 'கபோதி புரக் காத'வில். மதத் தலைவர்கள் கபட வேடதாரி களாக விளங்கும் நிலையைச் சுவையாகக் காட்டு கிறது இந் நாவல்.

மனித வாழ்வைச் சாதி எப்படிச் சாய்க்கிறது என் பதைக் 'குமரிக் கோட்டத்தில்' காட்டுகிறார் அண்ணா. கலப்பு மணம் புரிவதைப் பகுத்தறிவு ஏற்பதையும், வைதிகம் பதைபதைப்பதையும் தெளி வாகக் காட்டுகிறார். கோயிலாகக் கட்டியதை மாற்றிவிடுகிறார். கோயிலின் ஆயிரக்கால் மண்ட பம் சிறுவர்க்குப் பள்ளிக்கூடமாகிறது; கோயில் பிரகாரம் பாட்டாளி மக்களின் வீடுகளாகின்றன; திருக்குளம் மக்கள் குளிக்குமிடமாகிறது; குமரக் கோட்டம் குமரிக்கோட்டமாகி அன்பும் அறிவும் பரப்பும் அறிவு நிலையம் ஆகிறது. மாவட்டச் சுயமரியாதைச் சங்கக் கட்டடமாகிச் சாதிபேதம் ஒழிந்த இடமாக மாறுகிறது[7] எனக் குமரிக்கோட்டம் வாயிலாகப் பகுத்தறிவுப் போக்கின் நயம்புரி கொள் கையைப் புலப்படுத்துகிறார் அண்ணா.

பணத்தாசையால் பெண்கள் படாதபாடு பட்டு அழும் கதையை 'ரங்கோன் ராதா'வால் அறிய முடிகிறது. சோதிடப்பித்து, பூசை போடுதல், பெண் களைப் பேய் பிடிக்கும் என்ற நம்பிக்கை, ரட்சை, தாயத்து, மந்திரித்த கயிறு, குளிகை, மக்களை ஆட்டிப் படைப்பதைப் போலவே பித்தளையைப் பொன்னாக்கும் இரசவாதம் மக்களை மயக்கி வாழ் வைக் குலைப்பதையும், நரபலி இடுவதையும் காட்டு கிறார் அண்ணா. இதனால், சமூகம் வெறும் சாக் கடைச் சேறு நிரம்பிய இடம் எனக் காட்டி அத னைத் தூய்மைப்படுத்தப் பகுத்தறிவே தக்க வழி யாகக் காட்டுகிறார் அண்ணா.[8]

'பார்வதி, பி.ஏ.'[9] பல்வேறுபட்ட மக்களைக் காட்டி, படித்த பெண் எப்படி உலகில் தன்னைக் காத்துக் கொள்வாள் என்பதை வெளிப்படுத்தும். சீர்திருத்த இயக்கத்தைப் பரப்பும் பாவையாகப் பணிபுரிந்து நாட்டுத் துரோகிகளை வெளிப்படுத் தித் தான் விரும்பியவனையே பதிவுத் திருமணம் செய்யும் நன்மையில் நாவல் முடிகிறது.

இந் நாவல்களில் சீர்திருத்தப் போக்கு வெளிப்படு வதால் அதன் ஒளியிலே கதையின் போக்கு, மாந்தர் நிலை ஆகியவற்றைக் காணவேண்டியுள்ளது.

பொருந்தா மணம் கூடாது; முதியவர்க்கு இளம் பெண்ணை மணம் முடிப்பது அப் பெண்ணின் அழி வுக்கு வழி செய்கிறது. வெளிப் பகட்டில் மயங்காது, மூட நம்பிக்கையில் மூழ்காது, பகுத்தறிவு ஒளியில் வாழ வேண்டும் என்ற கருத்தோட்டமே மிக்கிருப் பதால் நாவலுக்குரிய மற்றப் பகுதிகள் பின்புலத் திற்குச் சென்றுவிடுகின்றன.

அண்ணாவின் பாதையில் ஏராளமான இளைஞர் கள் எழுதத் தொடங்கினர். பகுத்தறிவைப் பரப்பு வதை முன்வைத்துப் பற்பல நாவல்களை எழுதத் தொடங்கினர். உணர்ச்சி, எழுச்சி, புதிய கருத்தை நாடெங்கும் பரப்ப வேண்டும் என்ற தங்கு தடை யற்ற ஆர்வம், சமூகக் குறைகளைப் பகுத்தறிவால் தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கை ஆகியவை இந்த இளைஞர்களின் படைப்பில் ஒளிவிட்டன.

அண்ணாவின் வார ஏடாகிய 'திராவிட நாடு' பல இளைஞர்களின் புதிய படைப்பிற்கு நாற்றங்கா லாக அமைந்தது. கலைஞர் மு. கருணாநிதி போன்ற

---

[6] அறிஞர் அண்ணா, 'குமாஸ்தாவின் பெண்', பக். 25, அன்பு நிலையம், சென்னை, 1970.

[7] அறிஞர் அண்ணா, 'குமரிக்கோட்டம்', பக். 63, திராவிடப் பண்ணை, திருச்சி, 1975.

[8] அறிஞர் அண்ணா, 'ரங்கோன் ராதா', பக். 222, பாரி நிலையம், சென்னை, 1955.

[9] அறிஞர் அண்ணா, 'பார்வதி, பி.ஏ.' ராணி முத்து, சென்னை, 1969.

பல இளம் எழுத்தாளர்கள் தங்கள் துடிப்புள்ள எழுத்துகளை எழுதத் தொடங்கினர். கலைஞர் எழுதிய 'சுருளிமலை' என்ற நாவல் ஒரு சிறு பையனையும் அவன் வாழ்ந்த சிற்றூரையும் பற்றியது. எனினும், அவ்வூர் போன்ற பல சிற்றூர்களில் தேங்கிக் கிடக்கும் மூடநம்பிக்கைகளைச் சாடும் வகையில் அந் நாவல் விளங்குகிறது. குடித்துவிட்டு ஆடுபவனையும் தெய்வமென மக்கள் போற்றியதை எள்ளி நகையாடிப் பகுத்தறிவூட்டி மூடநம்பிக்கையிலிருந்து மீட்சி பெறத் துணை செய்கிறது. இதுபோன்றே நாள், கிழமை போன்ற மூடநம்பிக்கையில் மக்கள் அலைமோதும் அவலத்தை அவருடைய 'வெள்ளிக்கிழமை' வெளிப்படுத்தும். 'புதையல்' மூடநம்பிக்கையைக் களைய முற்படுகிறது.

ஆடும் மாடும் போல ஆணும் பெண்ணும் வாழ்கின்றனர். ஆடு புல்லைத்தான் தின்னும். மாடு புல்லையும் தின்னும் வைக்கோலையும் தின்னும். சமுதாயம் அனுமதிக்கும் ஆணோடுதான் வாழமுடியும் பெண்ணால். ஆனால்... அது அனுமதிப்பவளோடும், அனுமதிக்காதவளோடும் வாழ முடியும். ஆனால்?... என்ற அடிப்படையில் டி. கே. சீனிவாசனின் 'ஆடும் மாடும்' என்ற நாவல் உருவாகியுள்ளது.

காதல் மணம், சீர்திருத்தம் என்று பேசுகிறவர் ஒழுக்கம்பற்றிக் கவலைப்படவேண்டும். பேசும் கொள்கையும் செய்யும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக இந் நாவல் செல்கிறது. மூடநம்பிக்கையால் விலங்குகளாக மாறியவர்களை மனிதர்களாக மாற்றும் பகுத்தறிவுப் பாதையில் சீனிவாசனின் தனிமுயற்சி நன்கு வெளிப்படுகிறது.

பெரியார் தொடங்கிய இயக்கத்தில் அண்ணா காட்டிய பாதையில் ஏ.வி.பி. ஆசைத்தம்பி கலப்பு மணம், விதவை மணம் குறித்துப் பற்பல சிறுசிறு நாவல்களை எழுதினார். மனிதவாழ்வைச் சாதி மதக் கூண்டு, சிறையாக மாற்றியுள்ளதைத் தில்லை வில்லாளன் காட்டினார். முகவை மாவட்டப் பின்னணியில் பற்பல நம்பிக்கைகளை எடுத்துக் காட்டிய தென்னரசின் நாவல்கள், பொருந்தா மணம்பற்றிய கொடுமையை இராதாமணாளன், பி. சி. கணேசன் முதலானவரின் நாவல்கள் விளக்கிப் பகுத்தறிவைப் பரப்ப முற்பட்டன. கடல் கடந்த நாடுகளில் வெளிவரும் 'தமிழ் நேசன்' இதழில் பேராசிரியர் பாண்டுரங்கனின் 'கடல் மழை' என்ற நாவல் வெளிவந்து சமூகத்தின் வளர்ச்சிக்குப் பகுத்தறிவும், பொருளாதார மாற்றமும் தேவை என்பதை வற்புறுத்தியது. இந்நிலையில் தமிழ் நாவல் பகுத்தறிவுப் போக்கில் தனி இடம் பெற்றுள்ளது.

பகுத்தறிவுப் போக்கு என்பது தமிழ் நாவல்களின் வாயிலாக எண்ணற்ற இளைஞர்களை ஈர்த்தது. பெண்களின் அவலநிலை மக்களிடையே பரவிக்கிடக்கும் மூடநம்பிக்கை ஆகியவற்றைக் களைய இப்போக்குப் பெரிதும் தலையாய துணை செய்தது. அறிவியக்கக் கருத்தைப் பரப்பும் நோக்கு, தலையாய நோக்காக இருந்ததால் நாவல் இலக்கிய உருவத்தில் இவர்கள் பேரார்வம் காட்டவில்லை.

நாட்குறிப்பு, தன் வரலாறு கூறும் போக்கு எனும் வழிகளை அண்ணா கையாண்டார். அவர் காட்டிய நெறியையே பல கலைஞர்களும் பின்பற்றினர். அழகு தமிழைப் பல்வேறு புதுக் கோலம் பூணச் செய்து, ஆங்காங்கே புராணச் செய்திகளைக் கூறி, அவற்றைப் பகுத்தறிவுக் கண்கொண்டு பார்க்குமாறு தூண்டும் போக்கும் இந்நாவல்களில் வெளிப்படும். நாவலினிடையே 'தாரா' போன்ற நாடகக் கூறுகள்[10] கலந்து புதுவேகம் ஊட்டும் முயற்சிகளும் தென்படும். புதுப்புது உவமை, உருவகங்களை மின்வெட்டுப்போல் அள்ளித் தெளித்த சீனிவாசனின் பங்கும் இதில் உண்டு. பகுத்தறிவைப் பரப்பும் தலைமை நோக்கமே இத்தகைய நாவல்களின் போக்காக விளங்கியது. இன்றைய நிலையில் இத்தகைய நாவலின் வளர்ச்சி குன்றியே காணப் பெறுகிறது.

[10] அறிஞர் அண்ணா, 'ரங்கோன் ராதா', பக். 230-246, பாரி நிலையம், சென்னை, 1955.

தமிழ் மருத்துவ மாண்பு

டாக்டர் சிற்சபை

காட்டில் வாழும் மிருகங்களும் பறவைகளும் உண்பதற்கேற்ற உணவு இவையென்பதையும் உண்ணத் தகாதன இவையென்பதையும் அறியும் ஓர் இயற்கை உணர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. அவற்றிற்கு நோய் வந்தால் அதனை நீக்கிக் கொள்ளும் திறன் அவைகளிடம் உண்டென்பது யாவரும் அறிந்ததே.

அவ்வாறே மனிதரிடமும் தம் நோய்களைத் தீர்த்துக்கொள்வதற்கு வேண்டிய அறிவு இயற்கையாக உண்டு. மக்களின் கல்வி, நாகரிக அறிவு பெருகப் பெருக மருத்துவ அறிவும் பெருகிற்றென்றே கொள்ளல் வேண்டும். தமிழ்நாட்டு மக்களது கலைப் பெருக்கத்தில் சிறப்பாக மருத்துவக்கலை மிகவும் சிறப்பெய்தியிருக்கிறது.

நோய் வாராமல் தடுத்துக்கொள்ளும் இயற்கை முறை, நோய் வந்தபின் தீர்க்கும் ஆற்றல், உடலை நெடுநாள் அழியாமல் காப்பாற்றும் திறன் இவை அனைத்தும் தமிழ் மருத்துவத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளன.

இப்போது விந்திய மலைக்குத் தெற்கே கன்னியாகுமரி வரையில் உள்ள நாட்டு மக்களின் மருத்துவத்தைத் தமிழ் மருத்துவம் எனவும், சித்த மருத்துவமெனவும் கூறுவர். தமிழ் மக்களது மருத்துவமாதலால் இதைத் **தமிழ் மருத்துவ**மெனவும், பல்வேறு சித்திகளில் வல்ல அறிஞர்களான சித்தர்கள் தம் உள்ளொளியினால் வரையறுக்கப்பட்டு ஏற்ற முறையில் அமைக்கப்பெற்றதும், பதினெண் சித்தர்கள் கொண்ட மருத்துவ அவையினரால் அவ்வப்போது ஏற்கப்பெற்றதுமான மருத்துவமானதால் **சித்த மருத்துவ**மெனவும் கூறப்படுகிறது.

தமிழ் மருத்துவமெனும் சித்த மருத்துவத்தைப் பயில்பவர்கள் சரநூல் பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்திருக்கின்றனர். அதனால்தான் அவர்கட்குத் தசநாடிகளின் பண்பு அறிவது சுலபமாக இருந்திருக்கிறது. மனித உடம்பின் அமைப்பைச் சித்த மருத்துவர் நுண்ணிய முறையில் அறிந்திருந்தனர். ஐம்புலன்கட்கு எட்டிய இவ்வுடலைக் கூறிட்டு, ஒவ்வொரு பாகத்தையும் கருவிகளையும் விவரித்து, அவ்வவற்றின் எடைகளையும் தந்திருக்கின்றனர். வேண்டியபோதெல்லாம் உடலை அறுத்துச் சந்தேகமின்றி நேரே கண்ணாரக் கண்டும் வந்தனர்.

அந்தக் காலத்தில் மேல்நாட்டினர் பன்றி, குரங்கு, நாய், மாடு இவற்றின் உறுப்புகளைப்பற்றியே அறிந்திருந்தனர். 1543ஆம் ஆண்டுதான் வெசலிஸ் (Vesalius) என்னும் பெல்சிய மகனார் முதன் முதலில் மனித உடலை அறுத்து, அதன் உள்ளுறுப்புகளைச் செவ்வனே பார்த்து, மனிதனின் அமைப்பு, மிருகத்தின் அமைப்பைப் போன்றது அன்று என்பதை எடுத்துக் காட்டினர்.

தமிழ் மருத்துவர்கள் உடலுறுப்புகளின் அமைப்பினை அறிந்ததுமன்றி, அவ்வுடலில் அடர்ந்து கிடக்கும் எழுபத்தீராயிரம் நரம்புகளின் தன்மைகளையும், அந்த நரம்புகள் முடிச்சுறும் இடங்களையும் தெரிந்திருந்தனர். அவ்விடங்களில் காயங்கள்

ஏற்படின் உயிருக்கு ஏற்படக்கூடிய தீமைகளையும் அறிந்து, அவற்றை நீக்கும் வகைகளையும் சித்தர்கள் தமது வர்ம நூலில் கூறியுள்ளனர்.

மனித உடலில் அமிர்தம் உண்டென்றும், தலை முதல் பாதம் வரையில் சுழன்று வருகிறதென்றும் அறிவித்தனர். சூரிய வெப்பத்தினால் கொதிப்பெய்திய மத்திய ரேகையை அடுத்த கடல்நீர் நீரோட்டமாக வடதுருவம் நோக்கி அமிர்தம் போன்ற கொதிப்பைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது போலவும் சந்திரனது கவர்ச்சியினால் கடலில் அலைப்பெருக்கு நிகழ்வது போன்றும் உடலில் அமிர்தப் பெருக்கு நிகழ்கின்றது என்பதையும் கண்டறிந்திருக்கின்றனர்.

மாலுமிகள் நீரோட்டங்களையும் அலைப்பெருக்கையும் படகோட்டும்போது கவனிப்பதுபோல் அறுவைச் சிகிச்சை, அட்டை விடல், கோடாரி இடல், சுட்டிகை முதலிய சிகிச்சைகளைச் செய்கையில் மருத்துவர் அமிர்தநிலையைக் கவனிக்க வேண்டுவது சித்த மருத்துவத்தில் உண்டு.

அண்டத்தை ஒரு சக்தி இருந்து இயங்க வைப்பது போல் மனித உடலையும் ஓர் சக்தி இருந்து அதனை இயங்க வைக்கின்றது. அண்டத்தில் உள்ள அமைப்பும் இடையறா இயக்கமும் பிண்டத்திலும் உண்டு. அண்டத்தில் மண், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகியவையும், நவக்கிரகங்களும், நட்சத்திரங்களும் இருப்பனபோல் பிண்டத்திலும் அவை போன்றவை உள்ளன. அண்டத்தில் உண்டாகும் தட்ப வெப்ப மாறுபாட்டாலும் நவக்கிரகங்கள் இடம் விட்டு இடம் மாறுகையில் ஏற்படும் மாற்றங்களாலும் பூமி நடுக்கம் (மண்), வெள்ளப் பெருக்கு (நீர்), எரிமலைக் குழப்பங்கள் (நெருப்பு), புயல் அடித்தல் (காற்று), இடி முழக்கங்கள் (வான்) உண்டாகும்.

அதுபோல் பிண்டத்திலும் ஐம்பூதங்களால் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. அப்போது வாத பித்த கபங்கள் தம் நிலையில் புரண்டு கோளாறுகளை உண்டாக்குகின்றன என்பதை அறிந்த சித்தர் சட்டமுனி என்பவர்,

''அண்டத்தில் உள்ளதே பிண்டம் — பிண்டத்தி
அண்டம் — அண்டமும் பிண்டமும் ஒன்றே — லுள்ளதே
அறிந்துதான் பார்க்கும் போதே.''

என்று தன் ஞானத்தில் கண்டனர். இவ்வாறு சித்தர்கள் கண்ட உண்மையை உபயோகப்படுத்திய மருத்துவ ஆய்வாளர், மேஜர் - ஜெனரல் சர் லியனாட் ரோஜர்ஸ் (Major - General Sir Leonard Rojers) என்பவர் வெப்பநிலை, மழை, ஊதைக் காற்று இவற்றிற்கும் நோய்கள் உண்டாவதற்கும் தொடர்பு இருத்தலை யறிந்தனர்.

இதன்வழி இந்திய நாட்டில் தோன்றும் கொள்ளை நோய்களாகிய வாந்திபேதி, அம்மை ஆகியவை எப்பருவத்தே, எவ்விடத்தே உண்டாகும் என்பதை முன்னரே கூறும் பெருமை தமிழ் மருத்துவர் பெற்றனர்.

புலனுக்கு எட்டிய உடலின் அமைப்பையும் அதன் இயற்கைத் தொழில்களையும் அறிவதுடன் நின்றுவிடாது, தமிழர் புலனுக்கு எட்டாத சூக்கும சரீரத்தின் அமைப்பையும் அதன் தொழில்களையும் அச் சடலத்தே குடிகொண்டு உலாவும் உயிரின் பண்பையும் அறிந்து, உடலுக்கும் உயிருக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டனர். இவ்வாறு கண்ட சித்த மருத்துவப் பெரியோர் மனித அமைப்பு, தொண்ணூற்றாறு தத்துவங்களுடன்கூடியது எனத் தீர்மானித்தனர்.

''முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருஞ்
செப்ப மதிலுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிலுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.''

(திருமந்திரம், 154)

கரு உற்பத்தி, கரு வளரும் முறை, ஆண் பெண் அலியாக அமையும் வரலாறு, கருப்பையில் கருத் தங்கக்கூடிய நாள்கள், ஆண் பெண் எந்தெந்த நாள்களில் கூடினால் கருத்தரிக்கும், எந்தெந்த நாள்களில் கூடினால் கருத்தரியாது, ஆண் பிள்ளையையோ, பெண் பிள்ளையையோ விரும்பியவாறு பெறுவதற்கு ஏற்ற வழிகள் இவை யாவும் சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன. கரு நன்கு வளர்வதற்கு ஏற்ற மருத்துவங்களையும் கூறியுள்ளனர்.

ஆறாதாரத்தின் இயல்பையறிந்து, அதன் வழி வாசியை எழுப்பி, உடலில் இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிகளை மாற்றியமைக்குந் திறனும் பெற்றிருந்தனர்.

''போவதா மெய்யின் மூலச்
சுழியினிற் பொலிபி ராணன்
ஆவதாம் வாயுவைக் கும்பித்
தரியநேத் திரமை யத்தில்
தூவிரு நாசி பாயுஞ்
சுவாசமூன் றொன்றைக் கட்டின்
சாவதில் லாம லொன்றுந்
சகத்திற்சஞ் சரிக்க லாமே.''

(பரராச சேகரம்)

நிமிடத்திற்கு எழுபத்திரண்டு தரம் குவிந்து விரியும் இரத்தாசயத்தைச் செயலற்று நிற்கச் செய்யவும், நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறுதரம் இடைகலை பின்கலையாகப் பாயுஞ் சுவாசத்தைச் சுழிமுனையில் நிறுத்தி, ஆயுளைப் பெருக்கும் திறமையையும், பூமியில் புதைக்கப்

பட்டால் உயிர் துறவாது இருக்கும் வல்லமையையும், இவை போன்ற ஏனைய பிற செயற்கரிய சித்திகளையும் பெற்றனர் தமிழ்நாட்டுச் சித்தர்கள். இவையன்றி, சதாவதானம் செய்யும் திறனும் பெற்றிருந்தனர்.

மனிதற்கு உண்டாகும் நோய்கள் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டென அறிந்து, அவற்றையுண்டாக்கும் காரணங்களையும், அக் காரணங்கள் எவ்வாறு உடலில் அக்கினி, வாயு, கபம் இவற்றின் ஏற்றத் தாழ்வை யுண்டாக்குகின்றன என்பனவற்றையும், அவ்வப்போது அவற்றின் குறி குணங்களையும் விரிவாகக் கூறியிருக்கின்றனர். நோய் ஏற்பட்டபின் அதை அறிதற்கு ஏற்ற வழிகளையும் கூறியிருக்கின்றனர். கை நாடி பார்த்து நோயைக் கண்டறியும் நாடிநூல் சித்த மருத்துவத்தில் சிறப்புப் பெற்றுள்ளது.

நோய்க்கூறுகளின் வன்மைக்குத் தக்கவாறு மூலிகைகள், இரச, உபரச, உப்பு, பாடாணங்கள், உலோகங்களைக் கொண்டு மருந்துகள் தயாரித்து வியாதிகட்குக் கொடுத்து அவற்றைப் பற்றறப் போக்கும் ஆற்றல் சித்த மருந்துகளுக்கே சிறப்பாக அமைந்துள்ளது. இரச, உபரச, பாடாணங்களைச் சேர்த்துச் செய்யும் மருந்துகள் தயாரிப்பின்போது அப்பொருள்களின் பஞ்சபூத வகைப்படி முறையாகச் சேர்த்துச் செய்யப்படும் மருந்துகளே சிறந்த சித்த மருந்துகளாகும்.

இதுவன்றி, இம் மருந்துகளைச் சேர்த்து அரைப்பதற்கு வேண்டிய செயநீர், திராவகம், உருக்கினம் என்பவற்றைச் செய்யப் புகும்போது மருந்துப் பொருள்களின் சத்துரு மித்துரு அறிந்து, உப்புப் புளி, நாத விந்து தெரிந்து கைபாகம் செய்பாகம் தவறாமல் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. சித்தமருந்து செய்கையில் கையாளும் முறைகள் நசுக்கல், கசக்கல், பிழிதல் முதலாக முப்பத்தெட்டு வகைப்படும்.

ஓர் மருந்தையே பல்வேறு நோய்கட்கும் அனுபானங்களை மாற்றிக் கொடுக்கும் முறை தமிழ் மருந்தெனும் சித்த மருந்துகட்கே சிறப்பானதாகும்.

மருந்துகளிற் சிலவற்றை உண்ணுங்காலத்தில் உண்டி, உடை, குளிப்பு, முழுக்கு முதலியவற்றை ஏற்ற வகையில் அமைத்துப் பத்தியங் கொள்ளும் வழக்கம் சித்த மருத்துவத்தில்தான் அதிகமாகக் கையாளப்படுகிறது. இரச பாடாணங்களாலாகிய மருந்துகளை உபயோகிக்கும்போது கடும் பத்தியம் மேற்கொள்வர். பத்திய உணவுவகைகள் விரிவாகக் கூறப்பட்டிருப்பதைப் பதார்த்தகுண சிந்தாமணி என்னும் நூலிற் காணலாம்.

மனநோய்க்கு மருத்துவம்

உடலில் ஏற்படும் நோய்களன்றி, மனத்தினை வாட்டும் பிணிகளையும் அறிந்து, அவை மனிதனைச் சாராவண்ணம் மனத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஞான நூல்களையும், நீதி நெறிகளைப் போதிக்கும் நூல்களையும் ஏற்படுத்தினர் சித்தர்கள். மனம் நோயுற்றபோது அதனை நீக்குவதற்கு மணிமந்திர தந்திரங்களையும் ஔடதங்களையும் உபயோகித்து அந்நோயைப் போக்கும் வகைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

விஷ மருத்துவம்

உயிரை உடனே போக்கக்கூடிய பாம்புக்கடி விஷத்திற்கு மணி மந்திர தந்திரங்களை உபயோகித்து உயிர் பிழைக்கவைக்கும் சித்தர்களின் ஆற்றல் இக்காலத்திலும் பல கிராமங்களில் நிகழ்வதைக் காணலாம். உடலில் எவ்வகை விஷக்கிருமிகள் தீண்டினாலும் விஷம் உடலில் தீங்கு செய்யாமல், தீண்டிய விஷக்கிருமிகளையே மாளச் செய்யும் உடற் பக்குவத்தைப் பெறுவதற்கு வெள்ளைப் பாஷாணத்தைக் கடுகில் நான்கில் ஒன்றாகிய சிறு அளவில் உட்கொண்டு பழகி, ஆண்டுகள் செல்லச் செல்ல 2 கிராம் நிறையளவில் பழகிக்கொண்டிருக்கின்றனர் சித்த மருத்துவத்தைப் பின்பற்றுபவர்கள்.

புற்றுநோய்க்கு மருத்துவம்

சில காலமாகப் புற்றுநோயைப்பற்றிய ஆய்வு அனைத்து நாடுகளிலும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இன்னமும் முடிவான மருந்து வெளிவரவில்லை. சமீபகாலமாகச் சேராங்கொட்டையினால் தயாரிக்கப்பட்ட மருந்துகளினால் புற்று நோய் குணமடைகின்றன என்ற உண்மையை வடநாட்டில் ஆயுர்வேதம் பயின்ற நவீன மருத்துவர்கள் கண்டறிந்திருக்கின்றனர். அவர்கள் 'Semicarpus Anacardium Fort' என்ற பெயரில் ஓர் சிறந்த மருந்தைச் சேராங்கொட்டையைக் கொண்டு தயாரிக்கின்றனர்.

புற்றுநோய்க்குத் தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்கும் நவீன மருத்துவர்களில் சிலர் இதைப் பெருஞ் சஞ்சீவியாகக் கருதி நோயாளர்களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். இம் மருந்து எளிதில் கிடைக்காத அளவில் விற்பனையாகின்றது.

சேராங்கொட்டையினால் தயாரிக்கப்படும் சித்த மருந்துகளுக்கு வல்லாதி என்று பெயர். மேக வல்லாதி, இடி வல்லாதி, சிறு வல்லாதி, இராமபாறை வல்லாதி, சித்தர் வல்லாதி, கலி வல்லாதி, இலகு வல்லாதி, பால் வல்லாதி என்ற பல பெயர்களில் தயாரிப்புகள் உள்ளன

இவை அனைத்தும் புற்றுநோய்களைக் குணப் படுத்தவல்லன. பல சித்த மருத்துவர்கள் இப் பொழுதும் இம் மருந்துகளைத் தயாரித்துக் கொடிய புற்றுநோய்களைக் குணப்படுத்தி வருகின்றனர் விளம்பரமில்லாமல். சித்த மருத்துவத்தில் தலை சிறந்த நிபுணராக விளங்கிய பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் சேராங்கொட்டையில் தயாரித்த அற்புத மருந்தினைக் கொண்டு பல புற்றுநோய் களைக் குணப்படுத்தியதை நான் நேரில் கண்டிருக் கிறேன்.

அவரைப் பின்பற்றி அவரது புதல்வர் டாக்டர் ஆனந்தகுமார், G.C.I.M., அவர்கள் தற்போது மத்திய அரசாங்கச் சித்த மருத்துவ ஆய்வுக்கூடத்தில் புற்று நோயாளர்களுக்குச் சேராங்கொட்டையினால் தயா ரிக்கப்பட்ட மருந்துகளைக் கொடுத்துச் சிகிச்சை செய்து வருவதாக அறிகின்றோம். உலகிலுள்ள புற்றுநோய் ஆய்வாளர்கள் தமிழகத்திலுள்ள தமிழ் மருத்துவமென்னும் சித்த மருத்துவத்தில் சிலகாலம் தங்கள் கவனத்தைத் திருப்பினால் உலகிற்கே பயன் படத்தக்க சஞ்சீவியைக் காணமுடியும்.

இரச, உபரச உபயோகம்

நெருப்பில் புகைந்தோடும் பாதரசத்தை நெருப்புக்கு ஓடாமல் கட்டி, அதனை மணியாக்கி உடலில் அணிந்து நோய் வாராமல் தடுக்கவும், வீரி யத்தைக் கூட்டவும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர் சித்த மருத்துவர். நோய்களைப் போக்குவதில் மூலிகைகளால் செய்யப்பட்ட மருந்துகளைப் பார்க் கிலும் இரசம், கெந்தகம், தாதுப் பொருள்களா லாகிய மருந்துகளே வீரியமுடையன என்பது சித்த மருத்துவத்தின் கோட்பாடாகும். இரச பாடாணக் கட்டுகள், களங்குகள், குரு குளிகைகள் சிறந்த மருந்துகள்.

கற்ப உபயோகம்

மனிதருக்கு ஏற்படும் நோய்களை வாராது தடுப் பதும், நோய் ஏற்பட்டபோது நீக்குவதும், உடல் நலிவுற்றபோது அதை நீக்கி உடலைப் பொலிவுற அமைப்பதும் போன்றவற்றுடன் சித்தர்கள் திருப்தி யடைந்தார்களில்லை. இயற்கையாக ஏற்படும் நரை, திரை, மூப்பை நீக்கும் வழிகளையும் அமைத்தனர். அதற்காகக் கற்பங்களை உபயோகித்தனர்.

''அஞ்சி யூதி யழியாமல் காயந்தான்
மஞ்சிய கற்பம் வழங்கினோம் நூற்றெட்டு
தஞ்ச முறவே தான்தின்ன வல்லார்க்கு
பஞ்ச நரைபோய் பதின்கோடி வாழ்வரே.''
(திருமூலர் ஞானம், 500)

வகார வித்தை

வகார வித்தை யென்பது வேதை யென்றும் வாதம் என்றும் கூறப்படும். உலகில் உள்ள பொருள்கள் யாவும் தம் உருவில் நின்றும் மாறு வதற்கு இயற்கையால் தரப்பட்ட கருவிகள் வெடித் தல் (வான்), உராய்தல் (அனிலம்), உருக்கல்—புகைதல் (அனலம்), கசிதல்—கரைதல் (நீர்), துருப் பிடித்தல்—உளுத்தல் (மண்) என்பன.

இவற்றால் தம் உருவில் சிதைவுறா வகையில் பொருள்களை மாற்றியமைப்பதே வேதை. அதாவது உளுத்துப் போகும் பொருள்களை உளுக் காமலும், துருப் பிடிக்கும் பொருள்களைத் துருப் பிடிக்காமலும், கரையும் பொருள்களைக் கரையா மலும், கசிவுள்ள பொருள்களைக் கசியாமலும், உருகிப்புகையும் பொருள்களை உருகிப் புகை யாமலும், உராயும் பொருள்களை உரைபடாமலும், வெடிக்கும் பொருள்களை வெடிக்காமலும் கட்டு வதே மாற்றியமைத்தல், வேதை எனப்படுவதாகும்.

தாம்பரத்தின் களிம்பை நீக்க அதற்குத் தகுந்த முறையில் இரசத்தைத் தாம்பரத்திற்கு ஊட்ட, அஃது ஊட்டம் பெற்றுப் பத்தரை மாற்றுத் தங்க மாகுமென்று சித்த நூல்கள் கூறுகின்றன. அமெரிக்க நாட்டு விஞ்ஞானி ஒருவர் பத்தரை மாற்றுத் தங்கத்திலிருந்து எடுத்த சுத்தமான பாதரசத்தை நமது பாரதநாட்டு விஞ்ஞானி சர் சி. வி. இராமன் அவர்கட்குக் கொடுத்ததாகச் செய்தி சில ஆண்டு கட்குமுன் வந்தது.

''வேதையா லுலகமெலாம் வேதிக்க பரிசவேதி
ஓதைநீ ருலகுவப்ப உண்ணின்மா மேருவென்ன
பூதலத்த வர்க்குப்பஞ்ச பூததேகம் பொன்னாகும்
காதைய தல்லகற்பங் காயசித் திக்குமாமே''
(திருமூலர்)

என்றபடி வேதையென்னும் வகார வித்தையால் உடல் அழியாது பொன்போல் காயகற்பம் பெறு மென்பதனால் மருத்துவர் வேதையை அறிய வேண்டுமென ஏற்படுத்தியுள்ளது சித்த மருத்துவம். இரசவாதம் என்பது பாதரசம் என்னும் பொருளின் மூலமாய்ச் செய்யப்படும் வித்தை, வேடிக்கை, வினோதம், மாரணம் முதலியவைகளுக்குப் பெய ராகும்.

விஞ்ஞான வளர்ச்சி மிகவும் வளர்ந்துவரும் இக் காலத்திலும் காணவியலாத பல அற்புதச் சாதனை களைப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் ஞான முதிர்ச்சியில் கண்டறிந்து மக்களுக்கு எக்காலத்தும் பயன்படச் செய்திருப்பது தமிழ் மருத்துவத்துக்கே உரிய மாண்பாகும். இதனை ஆய்வாளர்கள் போற்றி மேலும் ஆய்வு செய்தால் உலக மக்களுக்கு மிகப்பெரிய நன்மை ஏற்படும்.

சங்க நூல்களில் எழில்மிகு பூக்கள் எட்டு

பி. எல். சாமி, இ.ஆ.ப.

1. குறிஞ்சி

''கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே.''
— குறுந்தொகை, 3

''கருங்காற் குறிஞ்சி மதனில வான்பூ
ஓவுக்கண் டன்ன இல்வரை இழைத்த
நாறுகொள் பிரசம் ஊறுநா டற்கு.''
— நற்றிணை, 268

''இலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்து.''
—மதுரைக்காஞ்சி, 299–300

''கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ.''
— மதுரைக்காஞ்சி, 613-614

''கருங்கோற் குறிஞ்சி யடுக்கம் பாட''
— புறம். 374

குறிஞ்சி ஒரு மலைச் செடியாகும். மலையில் 1,850 மீட்டருக்கு மேல் இயற்கையில் காணப்படுவதாகும்; மலைச்சாரலில் வளர்வதாகும். குறிஞ்சி மலரையும், குறிஞ்சி பூக்கும் மலை அடுக்கத்தையும் புறநானூறு கூறியுள்ளது. குறிஞ்சிச் செடியின் பூ வெளிர் நீலமாக இருக்கும். அரும்பாக உள்ள போது சிறிது வெண்மையாக இருக்கும். குறிஞ்சிச் செடியின் காம்புகளின் கணுக்கள் கருமையாக இருக்கும். ஆதலின் 'கருங்கால்' என்று சங்க நூல்கள் கூறுகின்றன. குறிஞ்சிச் செடியினங்கள் ஒன்பது ஆண்டுகளிலிருந்து பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு தடவை மலைச்சாரலில் கூட்டம் கூட்டமாகப் பூக்கின்றன. குறிஞ்சிப் பூவில் இயற்கையாகத் தேன் கூடுதலாக உள்ளது என்று செடி நூலார் கூறுவர். குறிஞ்சிச் செடிகள் ஒரே பருவத்தில் கூட்டம் கூட்டமாகப் பூக்கும்போது மலைத் தேனீக்கள் குறிஞ்சித் தேனை உறிஞ்சி, பெரிய தேன் கூடுகளைக் கட்டுகின்றன. குறிஞ்சி பூக்கும் காலத்தில் தேன் கூடுகளில் குறிஞ்சி மலரின் நறுமணத்தோடு கூடிய தேனே கலப்பில்லாமல் காணப்படும். அதனால் இந்தத் தனிப் பூத்தேனை (Unifloral honey) குறிஞ்சி நாடனுடைய உயர்ந்த நட்பிற்கு ஒப்புமையாகக் கூறியுள்ளனர். குறிஞ்சிச் செடி பூக்குங் காலத்தில் நடு இந்தியாவிலும், அந்தமானிலும் உள்ள பழங்குடிகள் தேன் விழாவே (Honey festival) கொண்டாடுகின்றனர். பைகர்கள் என்போர் குறிஞ்சிச் செடிகளை இடையில் அணிந்து ஆடுகின்றனர். குறிஞ்சிச் செடியை 'Strobilanther Kunthianus' என்று அறிவியலில் அழைப்பர்.

2. மருதம்

''முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலால.''
—பொருநராற்றுப்படை, 189-190

''ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்.''
—குறுந்தொகை, 50

''பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதி னொள்ளிணை ரட்டி.''
—திருமுருகாற்றுப்படை, 27-28

''உளைப்பூ மருதத்துக் கிளைக்குரு கிருக்கும்.''
— ஐங்குறுநூறு, 7

''வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிரும்.''
— நற்றிணை, 350

மருத மரத்தின் பூ சிவப்பாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மருதத்தின் பூவை, 'உளைப்பூ' என்றழைத்தனர். இதன் பூவிதழ் ஓரத்தில் நெளிந்து காணப்படுவதால் 'உளைப்பூ' என்றனர். பூவிதழ் உதிர்ந்து தரையடியில் அழகாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளதும் உண்மைதான். மருதப் பூவின் புல்லிதழ் கருந்தகடு போலக் காணப்படும் என்று கூறுவதும் பொருத்தமான செய்தியாகும். புல்லிதழ் கரும்பச்சையாக இருக்கும். சங்க காலத்தில் மருதமரம் காவிரிக் கரையிலும் வைகைக் கரையிலும் நிறைய இருந்து துறைகளை அணி செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. சங்க காலத்து மருத மரத்தை இக்காலத்தில் காண்பது அரிதாக உள்ளது. இப்போது கூறப்படும் பிள்ளை மருது, கரு மருது ஆகியவை சங்க கால மருதன்று. சங்க கால மருத மரத்தை மணி மருது, பூ மருது என்று இக்காலத்தில் அரிதாக அழைக்கின்றனர். மருத மரத்தின் பூ மிக அழகாக இருப்பதால் நாகரிகத் திணைக்கு மருதம் என்று பெயரிட்டனர். மருத மரத்தின் அறிவியல் பெயரில் 'அரசிக்குரிய பூ' என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். அறிவியலில் 'Lagerstroemia Flos–Regina' என்றழைப்பர். ஆங்கிலத்தில் 'Queen's Flower' என்றழைப்பர்.

3. காந்தள்

காந்தள் ஒரு கொடியாகும். கார் காலத்தில் திடீரென்று பூக்கும். பெரும்பாலும் வேலிகளில் தவழும் கொடியாகும். இதைக் கார்த்திகைப் பூ, கலப்பைக் கிழங்கு என்றும் அழைப்பர். கார்த்திகைத் திங்களில் இதன் பூ அகல் விளக்குப் போலப் பூப்பதால் கார்த்திகை விளக்கிற்கு ஒப்பிட்டுக் கார்த்திகைப் பூ என்றழைக்கின்றனர். காந்தள் பூ மிக அழகிய பூவாகும். காந்தள் பூவின் மொக்கு மலரும்போது இதழின் நுனி மட்டும் சிவந்து அடிப்பகுதி பச்சையாகக் காணப்படும். நன்கு மலர்ந்தபோது இதழ்கள் சிவந்து காணப்படும். காந்தள் மலர்ந்து இதழ்கள் மேலே தூக்கியிருப்பதை மகளிரின் கைவிரல்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவது சங்க கால வழக்காகும்.

''காந்தள் முகைபுரை விரல்'' என்று புறநானூறு (144ஆம் பாடல்) கூறியுள்ளது.

''கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்
எடுத்த நறவின் குலையலங் காந்தள்.''
— கலித்தொகை, 40

காந்தள் பூவிற்கு அகல் விளக்கை ஒப்பிட்டுக் கூறுவதைக் காணலாம்.

''குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.''
—குறுந்தொகை, 1.

''தோடார் தோன்றி குருதி பூப்ப.''
—முல்லைப்பாட்டு, 96

என்று சங்கப் பாடல்களில் காந்தள் நிறத்தை இரத்தச்சிவப்புடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். இந்தப் பல ஒப்புமைகளைக் கண்டுதான் சீனர்களின் பல நிற ஒளிவிளக்கு (Chinese Lantern) என்று காந்தள் பூவை மலேயாவில் அழைக்கின்றனர்.

காந்தள் மலர் முதிரும்போது மேல்நோக்கிய இதழ் கீழ் நோக்கிச் சோர்ந்துவிடும். இதையும் சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர். அவ்வாறு சோர்ந்து கீழே செல்லும் இதழ்களை மகளிர் கையில் சோர்ந்து செல்லும் வளையல்களுக்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளனர். சங்கநூல்களில் கூறப்பட்ட அழகிய பூக்களில் காந்தளைச் சிறப்பானதாகக் கூறலாம். ஆங்கிலத்தில் 'The Glory Lily' என்றும், அறிவியலில் 'Gloriosa Superba' என்றும் அழைப்பர்.

4. கொன்றை

கொன்றைப்பூ மஞ்சள் நிறமாக இருக்கும். இதன் பூக்கள் மாலை போலத் தொகுத்துக் காணப்படும். இதன் பூக்களைச் சங்க காலத்தில் வழங்கிய உருண்டையான பொற்காசுகளுக்கு ஒப்பிட்டுச் சங்கப் பாடல் கூறும்.

''வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றை.''
—குறுந்தொகை, 21

''ஆடுகளப் பறையின் வரிநுணல் கறங்க
ஆய்பொன் அவிரிழை தூக்கி யன்ன
நீடிணர்க் கொன்றை கவின்பெற.''
—அகம், 364

''அடர்பொன் னென்னச் சுடரிதழ் பகரும்.''
—ஐங்குறுநூறு, 430

''தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
காசின் அன்ன போதீன் கொன்றை.''
—குறுந்தொகை, 148

பொன்னால் செய்த கிண்கிணி போல உருண்டையான தெனக் கொன்றைப் பூவைக் கூறியதும் பொருத்

தமே. பொன்னிழை போன்றும் பொற்காசு மாலை போன்றும் பூத்ததாகக் கூறியதும் பொருத்தமே.

கொடியிணர், நீடிணர் என்னும் சொற்கள் நீண்ட, கொத்தாக, தொடராகக் கொன்றைப் பூக்கள் இருப்பதைக் கூறுகின்றன. 'கொன்றைக் கோதை நிலை' என்று ஐங்குறுநூறு (462) கூறியுள்ளது. கொன்றையை 'Indian Laburnam' என்றழைப்பர். அறிவியலில் 'Cassia Fistula' என்றழைப்பர்.

5. கோங்கு

கோங்கு மரம் பளப்பளப்பான மஞ்சள் நிறப் பூக்களை உடையது. அதனால்பொன் போன்று கோங்கு பூத்ததாகச் சங்க நூல்கள் கூறும்.

''பொரியரைக் கோங்கின் பொன்மருள் பசுவீ
விரியிணர் வேங்கையொடு வேறுபட மிலைச்சி.''
— ஐங்குறுநூறு, 367

''புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்ப''
— கலித்தொகை, 33

நன்கு பூத்த பூ சுரிதகம் என்றழைக்கப்படும் அணிகலன் போன்று இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

''கைவல் வினைவன் தையுபு சொரிந்த
சுரிதக வுருவின வாகிப் பெரிய
கோங்கம் குவிமுகை யவிழ.''
— நற்றிணை, 86

கோங்கம் பூ பொன் தராசுத் தட்டுபோல இருந்ததாகக் 'கோங்கலர் பொன்செய் கன்னம் பொலிய' என்று அகநானூற்றுப் பாடல் (317) கூறியுள்ளது. கோங்கு பூக்கும் பருவத்தில் கிளைகளில் இலைகளை உதிர்த்துவிடும்.

''அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செஞ்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே.''
— நற்றிணை, 202

''புல்லிதழ்க் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ
வைகுறு மீனின் நினையத் தோன்றி.''
— நற்றிணை, 48

கோங்கு வரிசையாகப் பூப்பதைக் கார்த்திகை விளக்குப்போலப் பூக்கும் என்றும், விடியற்காலையில் ஒளிவீசும் விண்மீனைப்போலத் தோன்றும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் பூவைத் தலைகீழாகப் பார்க்கும்போது கோயில் குடைபோலத் தெரியும். அதனால் குடைப்பூ என்று அழைத்தனர். சங்க நூல்களில் கூறப்பட்ட அழகிய பூக்களில் கோங்கமும் ஒன்றாகும். ஆனால், இலையுதிர் காடுகளில்தாம் கோங்கத்தைக் காணமுடியும். கோங்கை 'Yellow Silk Cotton tree' என்றும், அறிவியலில் 'Cochlospermum Gossypium' என்றும் அழைப்பர்.

6. இலவம்

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள இலவம் தற்காலத்தில் பஞ்சுக்காக வளர்க்கப்படும் வெண் பூவுடைய இலவம் அன்று. இலையுதிர் காடுகளில் செக்கச் செவேலென்று பூக்கும் முள்ளிலவமாகும். இதன் பூவிதழ் தடித்தும் பூப் பெரிதாகவும் காணப்படும்.

''வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு
இலையில மலர்ந்த முகையில் இலவம்.''
— அகம். 11

''நிழற்படக் கவின்ற நீளரை இலவத்து
அழலகைந் தன்ன அலங்குசினை யொண்பூ.''
— அகம். 245

''இலையில மலர்ந்த வோங்குநிலை இலவம்
மலையுறு தீயிற் சுரமுதற் றோன்றும்.''
— ஐங்குறுநூறு, 338

இலையை யுதிர்த்த இலவ மரத்தில் எங்கும் நெருப்புப்போன்று சிவந்த பூக்கள் காணப்படுவதைச் சங்கப் புலவர்கள் நன்கு கண்டு கூறியுள்ளனர். குன்றுச் சரிவில் பல இலவ மலர்கள் ஒருங்கே பூத்திருந்ததை மலையே தீப்பற்றி எரிந்ததுபோலத் தோன்றிற்று என்று ஐங்குறுநூறு கூறியுள்ளது.

''பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலைஇறந் தோரே.''
— அகம். 185

''இலையில மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகு பெடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி''
— அகம். 11

கார்த்திகைப் பெருவிழா விளக்குப் போல இலவம் மலர்ந்திருந்ததாகவும் கூறியுள்ளனர். இலவ மரத்தை 'Red Silk Cotton tree' என்றழைப்பர். அறிவியலில் 'Bombase Malabaricum' என்றழைப்பர்.

7. முருக்கு

அழகிய சிவந்த பூக்களில் முருக்கும் ஒன்றாகும். இந்த மரம் ஊர்களில் எளிதாகக் காணப்படும். வீட்டிற்கு வேலியாகவும் வளர்ப்பதுண்டு. பல அழகிய உவமைகளால் இந்தப் பூவைச் சங்கப் புலவர்கள் விளக்கியுள்ளனர்.

''பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வல்லுகிர் வயப்பிணவு.''
— அகம். 362

''உதிரந் துவரிய வேங்கை யுகிர்போல்
எதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க எதிருநர்''
— ஐந்திணையைம்பது, 31

உதிரம் தோய்ந்த புலியின் வளைந்த நகத்திற்கு ஒப்பிட்டுள்ளது அழகிய உவமையாகும்.

''குவிமுகை முருக்கின் கூர்நுனை வையெயிற்று
நகைமுக மகளி ரூட்டுகிர் கடுக்கும்.''
— அகம். 317

''அழலகைந் தன்ன காமர் துதைமயிர்
மனையுறை கோழி மறனுடைச் சேவற்
போர்புரி யெருத்தம் போலக் கஞலிய
பொங்கழல் முருக்கி னொண்குரல் மாந்தி.''
— அகம். 277

மகளிரின் சிவப்புச் சாயம் பூசிய நகத்திற்கும், சேவற் கோழியின் சிவந்த கொண்டைக்கும், பொங்கும் நெருப்பிற்கும் முருக்க மரத்தின் மலர் ஒப்பிடப் பட்டிருக்கின்றது. முருக்க மரம் காடுகளில் கூட்ட மாகப் பூக்கும். பூக்கும்போது காடு எரிவதுபோன்று தொலைவில் தெரியும். அதனால், ஆங்கிலத்தில் 'Flame of the Forest' என்று இம் மரத்தை அழைப்பர். முருக்கின் பூந்தாதைக் கருங்குயில் கொழுதி அருந்தும் என்று அகநானூறு (229) கூறியுள்ளது. முருக்க மரத்தில் மகரந்தச் சேர்க்கை பறவைகளால் ஏற்படுகிறது. என்னும் அறிவியற் செய்தியையும் இயற்கைச் செய்தியாக அகநானூறு கூறுவதைக் கவனிக்க வேண்டும். அறிவியலில் முருக்க மரத்தை 'Butea Frondasa' என்றழைப்பர்.

8. கவிர்

முருக்க மரத்தோடே மிகவும் ஒத்துள்ள கலியாண முருங்கையைச் சங்க நூல்கள் 'கவிர்' என்றழைக்கும். கவிர் மரத்தின் பூ கருஞ்சிவப்பாக இருக்கும்.

''தளிர்புரை கொடிற்றிற் செறிமயி லெருத்திற்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ வன்ன
நெற்றிச் சேவ லற்றம் பார்க்கும்.''
— அகம். 367

''பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலிற் றணியும்.''
— புறம், 326

''கவிரித ழன்ன காண்பின் செவ்வாய்
அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை.''
— அகம். 245

கவிரின் மலர் சேவற்கோழியின் சிவந்த கொண்டைக்கும் மகளிரின் செவ்வாய்க்கும் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். கவிரை ஆங்கிலத்தில் 'Indian Coral tree' என்று அழைப்பர். அறிவியலில் 'Erythrihina Indica' என்றழைப்பர்.





அகத்திணை மருங்கின் புறத்திணைத் தமிழர்

வாழ்வை அகம், புறம் எனப் பகுத்து அவற்றிற்குத் தனித் தனியே இலக்கணம் கண்ட தனிச் சிறப்பு, தமிழர்கட்கு மட்டுமே உண்டு. அதனாற்றான் நாமக்கல் கவிஞர் பெருமிதத்துடன் பாடுகிறார்:

தமிழன் என்றோர் இனமுண்டு;
தனியே அவற்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை மொழியாகும்;
அன்பே அவனுடை வழியாகும்.

மானம் பெரிதென உயிர்விடுவான்;
மற்றவர்க் காகத் துயர்படுவான்;
தானம் வாங்கிடக் கூசிடுவான்;
'தருவதுமேல்' எனப் பேசிடுவான்.

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்

''பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வல்லுகிர் வயப்பிணவு.''
— அகம். 362

''உதிரந் துவரிய வேங்கை யுகிர்போல்
எதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க எதிருநர்''
— ஐந்திணையைம்பது, 31

உதிரம் தோய்ந்த புலியின் வளைந்த நகத்திற்கு ஒப்பிட்டுள்ளது அழகிய உவமையாகும்.

''குவிமுகை முருக்கின் கூர்நுனை வையெயிற்று
நகைமுக மகளி ரூட்டுகிர் கடுக்கும்.''
— அகம். 317

''அழலகைந் தன்ன காமர் துதைமயிர்
மனையுறை கோழி
போர்புரி யெருத்தம் போலக் கஞலிய
பொங்கழல் முருக்கி னொண்குரல் மாந்தி.''
— அகம். 277

மகளிரின் சிவப்புச் சாயம் பூசிய நகத்திற்கும், சேவற் கோழியின் சிவந்த கொண்டைக்கும், பொங்கும் நெருப்பிற்கும் முருக்க மலர் ஒப்பிடப் பட்டிருக்கின்றது. முருக்க மரம் காடுகளில் கூட்டமாகப் பூக்கும். பூக்கும்போது காடு எரிவதுபோன்று தொலைவில் தெரியும். அதனால், ஆங்கிலத்தில் 'Flame of the Forest' என்று இம் மரத்தை அழைப்பர். முருக்கின் பூந்தாதைக் கிளிகள் கொழுதி அருந்தும் என்று அகநானூறு கூறியுள்ளது. முருக்க மரத்தில் மகரந்தச் சேர்க்கை பறவைகளால் ஏற்படுகிறது. என்னும் அறிவியற் செய்தியையும் இயற்கைச் செய்தியாக அகநானூறு கூறுவதைக் கவனிக்க வேண்டும். அறிவியலில் முருக்க மரத்தை 'Butea Frondasa' என்றழைப்பர்.

8. கவிர்

முருக்க மரத்தோடே மிகவும் ஒத்துள்ள கலியாண முருங்கையைச் சங்க நூல்கள் 'கவிர்' என்றழைக்கும். கவிர் மரத்தின் பூ கருஞ்சிவப்பாக இருக்கும்.


''தளிர்புரை கொடிற்றிற் செறிமயி லெருத்திற்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ வன்ன
நெற்றிச் சேவ லற்றம் பார்க்கும்.''
— அகம். 367

''பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலிற் றணியும்.''
— புறம், 326

''கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி''
''... கவிரின் ... செவ்வாய்
...ழை ...''
— அகம். 245

கவிரின் மலர் சேவற்கோழியின் சிவந்த கொண்டைக்கும் மகளிரின் செவ்வாய்க்கும் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். கவிரை ஆங்கிலத்தில் 'Indian Coral tree' என்று அழைப்பர். அறிவியலில் 'Erythrina Indica' என்றழைப்பர்.





இந்தியநூலக இயக்கம்

வே. தில்லைநாயகம், எம்.ஏ., எம்.எல்.எஸ்., பி.டி.

1 நூல்

11 நூல் என்றால் என்ன?

நுவலப்பட்டது நூல் என்று பெயர் பெற்றது. நூலக இயல் கருத்துப்படி, நூல் என்பது,

1 ஒரு கருவி; ஒருவர் கருத்தை அடுத்தவருக்கு எடுத்துரைக்க உதவும்;

2 ஒரு குறிப்பிட்ட உருவில் அடங்கி இருக்கும்;

3 ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதில் எடுத்துச் செல்ல ஏற்றதாய் இருக்கும்;

4 பயன்படுத்துவார் கையாள வசதியாய் இருக்கும்;

5 (அ) கல்வி அறிவு தந்து, (ஆ) நடைமுறை நிலை தெரிவித்து, (இ) கடமைகளைச் சுட்டிக் காட்டி, உரிமைகளைப் பாதுகாத்து, (ஈ) பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்து, (உ) கலாசாரத்தைக் காக்கும் முதலிய ஐந்து செயல் பண்பு (Functions) களைக் கொண்டிருக்கும்.

12 வேறு பெயர்கள்

ஆதி நாளில் இருந்து தமிழன் ஒவ்வொரு பொருளுக்கும், அதன் பண்பு, நலன், பயன்படு விதம், உரு அமைவு, நிறச் சாயல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பெயர் வைத்திருக்கிறான். இம்முறையில் நூல் ஏடு, ஓலை, சுவடி, தூக்கு, பனுவல், புத்தகம் என்று பெயர்பெற்றிருக்கிறது.

13 எழுதப்படும் பொருள்

மனிதனை ஓர் உருவாக்கிக் காட்டுவது எலும்புக் கூடு என்பதை ஒவ்வொருவரும் அறிவோம். அது போலவே நூலுக்கு எலும்பு போன்றது அது எழுதப் பயன்படும் பொருள்கள் (Writing Materials) ஆகும்.

இதற்கு இலை, பட்டை, பலகை, தோல், துணி, உலோகங்கள், கல், ஆமை ஓடு, சங்கு, சிப்பி, பிராணிகளின் எலும்பு, காகிதம் முதலியன பயன் பட்டுள்ளன.

14 எழுதும் பொருள்

இலையில் தொடங்கிக் காகிதம் வரை எழுதப் படும் பொருள்களிலே, தன் கருத்தைப் பதிக்க எழுதும் பொருள் – எழுத்தாணி – பேனா – தேவை பட்டன. எழுத்தாணி கண்டான் தமிழன். ஊணோடு கூறை எழுத்தாணி (ஏலாதி, 63) என்ற வரி எழுத்தாணியின் பழமை பேசுகிறது. நாணல் தண்டு, பறவை இறகு எலும்பு முதலியன தேவைக்கு ஏற்பச் சீவியமைக்கப்பட்டுப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

15 மை

எழுதப்படும் பொருளின்மேல் எழுதும் பொருளால் எழுத மசி என்றும் மை என்றும் கூறப்படும் திரவப் பொருள் கறுப்பு வண்ணத்திலும், பிற பல்வேறு வண்ணங்களிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை வைத்திருந்த மைக்கூடுகள் மொகஞ்சதாரோ,

நாலந்தா, தட்சசீலம் முதலிய இடங்களில் நடந்த ஆய்வுகளில் கிடைத்துள்ளன.

16 நுண் உடல்

நூலின் அடிப்படையான எழுதப்படும் பொருளோடு, எழுது பொருளோடு நூல் பெருமை நின்று விடுவதில்லை.

ஒரு நூலின் பெருமை, அது கொண்டுள்ள மொழி (Language), நடை (style), தரம் (Standard), ஓவியம் (Illustration), தேசப்படம், கலைச் சொல் (Technical term), நூல் தொகை (Bibliography), சொல் அடைவு (Index) முதலியன கொண்டு நிர்ணயிக்கப்படும்.

17 தரம்

நூலில் பல தரங்கள் (Standards) உண்டு. இவற்றைப் பொதுவாக ஐவகையாகக் கொள்ளலாம். அவையாவன:

1 கருமூலம் கொண்டவை (Seminal materials)
2 ஆய்வுப் பொருள் கொண்டவை (Research materials)
3 விளக்கம் தருபவை (Expositary materials)
4 தொடக்க நிலையின (Elementary materials)
5 அறிக்கை நிலையின (Reporting materials)

இப்படி வரும் நூல்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்துவார் பரிசீலிக்க வேண்டும். தங்களுக்கு வேண்டியவற்றை வேண்டிய முறையில் விவேகமாகப் பயன்படுத்திக்கொள்ளப் பழக வேண்டும்.

18 உயிர்

ஒவ்வொரு நூலும் ஒன்று அல்லது பல கருத்துகளைக் கொண்டுதான் உருவாக்கப்படுகிறது. இக் கருத்துதான் நூலின் உயிராகும். இக் கருத்து அடிப்படையில் நூல்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன:

1 தகவல் தருபவை (Informative materials)
2 புத்துயிர் தருபவை (Recreative materials)
3 உயிர்ப்புத் தருபவை (Inspirative materials)

ஆனால், ஒவ்வொரு நூலும் ஒன்றை மட்டும் கொண்டு இருப்பது இல்லை. ஏனெனில் இவை ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உள்ளவை; இணைபவை; பிணைபவை. எனவே ஒவ்வொரு நூலையும் ஆய்ந்து, உயர்ந்து நிற்கும் கருத்திணைக் கொண்டு வகை காண வேண்டும்.

19 வளர்ச்சி

இன்று ஆயிரக்கணக்கான நூல்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு மொழிகளில், பல்வேறு தரங்களில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. யுனெசுகோ 1977 புள்ளி விவர ஆண்டேடு தரும் கணக்குப்படி 1976-ல் மட்டும் உலகம் முழுமையும் ஐந்து இலட்சத்து தொண்ணூற்றோராயிரம் நூல்கள் வெளியாகியுள்ளன. அவற்றில் பெரும் பகுதி நூலகங்களுக்குச் செல்கின்றன. எனவே நூலகங்களில் அவை எப்படிப் பயன்படுகின்றன என அறிய நூலகம் என்றால் என்ன என்று பார்ப்போம்.

2. நூலகம்

21 என்ன ?

அகம் என்பது இடம் என்று பொருள்படும். இதையே இல்லம், இருப்பிடம், உறையுள், வீடு என்றும் குறிப்பிடுவது உண்டு. இத்தகு இடம் நூலைத் தன்னிடத்தே கொண்டபோது நூல்—அகம்—நூலகம் என்று பெயர் பெற்றது. இது ஆங்கிலத்தில் 'Library' என்று குறிக்கப்படுகிறது. இதையே பண்டாரம், சரசுவதி பண்டாரம், புத்தக பண்டாரம், ஏடகம், சுவடிச் சாலை, சுவடியகம், புத்தகச் சாலை, நூல் நிலையம் என்றும் கூறுவதுண்டு.

22 ஏன் ?

221 சிந்திக்கிறான் : ஒவ்வொரு நூலும் உருவாகக் காலம் பிடிக்கிறது. சிந்தனையாளன் சிந்தித்துச் சிந்தித்துக் கருத்தை உருவாக்குகிறான். உருவாக்கியதை நூலாக வடிக்கத் துடிக்கிறான்.

222 பதிக்கிறான் : இதைக் காலத்திற்கேற்ப கிடைக்கும் எழுதுபொருளில்—களிமண் கட்டி, செங்கல், மரப்பட்டை, பலகை, உலோகத் தகடு, காகிதம் முதலிய பொருள்களில் பதித்து வைக்கிறான்.

223 சேர்க்கிறான் : இதைப் பிறரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நினைக்கிறான் மனிதன்; பாதுகாத்து வைக்கிறான். இது ஒன்று, நூறு ஆயிரம் என்றிருக்கும்போது தனி மனிதனால் முடிகிறது. இதிலும் அவனுக்குத் தேவையானதை மட்டும் சேர்க்கிறான்.

224 அமைக்கிறான் : இந்த நிலை மாறுகிறது. பலவற்றைப் பலருக்கும் பயன்படுமாறு பாதுகாக்க வேண்டும் என்ற நிலை பிறக்கிறது. இதற்கு ஓர் அமைப்புத் தேவைப்படுகிறது. இந்த அமைப்பே நூலகம் என்று பெயர் பெறுகிறது.

23 எப்படி ?

பரிணாம வளர்ச்சி—நிகழ்வாக்கம் (Evolution) போலவே நூலகமும் மெல்ல மெல்ல, காலப் போக்கில் வளர்ந்து, முன்னேறிக் கொண்டிருக்கிறது. இது எப்படி?

24 சேர்த்து வைக்குமிடம்

பாதுகாக்கப்படவேண்டிய நூல்கள் பத்திரமாய் இருக்கக் கோயில்களில், மடங்களில், பணக்காரர் மாளிகைகளில் சேர்த்து வைக்கப்பட்டன.

25 படி எடுக்குமிடம்

அடுத்து நூலகம் ஒரு நூலைப் பார்த்து, மற்றொரு படி எழுதுமிடமாய் இருந்திருக்கிறது. சிதம்பரம் கோயிலில் இருந்த நூலகம் இந்த வேலையில் ஈடுபட்டிருந்தது என்கிறது கல்வெட்டுக் குறிப்பு ஒன்று.

26 கேட்டால் கொடுக்குமிடம்

காலப் போக்கில் அறிவு பரவியது. காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது. அச்சுக் கலை முன்னேறியது. நூல்கள் வெளியீடு பெருகியது. சேர்த்து வைக்குமிடம் என்றிருந்த நிலைமை மாறியது. நூலகம் கேட்டால் கொடுத்து வாங்குமிடம் என்ற நிலை பிறந்தது.

27 பணி நிலையம்

இன்றைய நூலகம் காலத்திற்கு ஏற்ப மாறி வருகிறது. இன்று அறிவுக் கூடமாய், ஆய்வு நிலையமாய், சமுதாய மையமாய் மாறும் போக்கில் நூல் உதவும் பணி நிலையமாய் மாறி வருகிறது.

28 இன்றைய நோக்கம்

நூலகம் என்பது கல்வி, உலக நடப்பு, அரசியல், பொருளாதாரம், கலாசாரம் முதலிய ஐந்து துறைகளில் பாடுபட்டு வருகிறது.

29 இலக்கணம்

நூலகம் உலக அறிவு முழுமையும் காட்டும் வகையில் நூல்களைச் சேகரிக்கவேண்டும்; சேகரித்தவற்றைப் பகுக்கவேண்டும்; பட்டியிடவேண்டும்; அடுக்கவேண்டும்; அனைவரும் அறியச் செய்யவேண்டும். இதற்கு வாசகரோடு தொடர்புகொண்டு விரையாது, வெகுளாது, விரும்பி, முகம் மலர்ந்து, கொள்வோன் கொள்வகையறிந்து, அவர் உளங்கொள, கோட்டமில் மனத்தோடு நூலும் – நூல் கருத்தும் – கொடுத்துதவ வேண்டும்.

3. நூலக இயக்கம்

31 அறிக்கைகள்

இன்று உலக நாடுகள் ஒவ்வொன்றும், நூலகப் பணிக்காக – தங்கள் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. இம் முயற்சியின் போக்கை ஆண்டறிக்கைகளாக வெளியிடுகின்றன. இத்தகு அறிக்கைகளையெல்லாம் தொகுத்து, ஒரு பெரிய நூலாக – யுனெசுகோ புள்ளி விவர ஆண்டேடு (Unesco Statistical Year Book) என்ற தலைப்பில் ஆண்டுதோறும் யுனேசுகோ அமைவனம் வெளியிட்டு வருகிறது.

32 புரிவது என்ன ?

இந்தப் புள்ளிவிவரங்களைச் சற்று ஊன்றிப் பார்த்தால் சில நாடுகள் – ஐக்கிய அமெரிக்க நாடுகள், உருசியா, செர்மனி, பிரிட்டன், ஃபிரான்சு, சப்பான் முதலிய நாடுகள்–முன்னேறியிருப்பதையும் சில நாடுகள் – ஆப்பிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள், தென் அமெரிக்க நாடுகள் – பின்நிலையில் இருப்பதையும் காணலாம். இது ஏன்?

33 சமூகம்

சமூகப் பண்பு உடையதாக, நாகரிகம் உடையதாக, முன்னேறும் கருத்துக் கொண்டதாக, கல்வித் தேவையை உணர்ந்ததாக, பொருளாதார முன்னேற்றம் உள்ளதாக இருக்கும் நாடுகள் முன்னேறி வருகின்றன. இந்த நிலையில்லாத நாடுகள் பின்தங்கி நிற்கின்றன. இந்த நிலையை மாற்றுவது எப்படி?

34 முயற்சிகள்

நூலக முயற்சி – விரைந்து செயல்பட வேண்டும். இது தனி முயற்சியில், சமூக முயற்சியில், அரசு முயற்சியில், சட்ட முயற்சியில் நடக்க வேண்டும். இதில் சட்ட முயற்சிதான் சிறப்பானதாகும். அது எப்படி அமைய வேண்டும்?

35 சட்ட முயற்சி

நூலகச் சட்டம் பொதுவாக எளிதாக, காலத்திற்கேற்ப முன்னேறும் வகையில், அரசியல் மாற்றத்திற்கு ஆளாகிவிடாத நிலையில் அமைய வேண்டும். நாட்டிலுள்ள எல்லா நூலக முறைமைகளையும் ஒருங்கிணைத்துத் தேசிய, மாநில, மாவட்ட, தல நூலகப் பணி செய்முறைகளைத் திட்டவட்டமாகச் செயல்படுத்த வேண்டும்.

கல்விச் செலவில் பத்தில் ஒரு பகுதியைக் கட்டாய நூலகப் பணிக்காக ஒதுக்க வேண்டும்.

36 அரசு

அரசின் கடமையானது சட்டம், பணம், ஒருங்கிணைப்பு என்ற மூன்று நிலையில் நடந்தேற வேண்டும். இதில் சட்டம் பணத்தையும் ஒருங்கிணைப்பையும் ஓர்மைப்படுத்தும். பணம் கொடுப்பது அரசின் கடமையாகும்; ஒருங்கிணைப்பு பணச் செலவைக் குறைக்கும்; சட்டம் சரிவர வேலைசெய்ய உதவும்; இது பிறரைச் செயற்படத் தூண்டும்.

37 நூலகத்தர்

அரசே ஒவ்வொரு கடமையையும் கண்காணித்துக் கொண்டிருக்க முடியாது; கூடாது. எனவே அரசின் சார்பில் பொறுப்பேற்கும் நூலகத்தர் (Library Authorities) – நூலக நிருவாகத் தொடர்பு கொண்டவர்கள் – நூலக முன்னேற்றத்தில் கருத்துக்கொண்டவராய், நூலகப் பணியாளர்களை ஊக்குபவராய்ச் செயற்பட வேண்டும்.

38 நூலகர்

நூலகப் பணியின் முன்னேற்றம் நூலகர்கள் முயற்சியில்தானுள்ளது. எனவே நூலகப் பணியாளர்கள் நூல்களைப் படித்துணர்ந்து, நூற்றொகை ஆற்றல் பெற்று, நூல்களைப் பகுத்துப் பட்டியிட்டு, நூல்களைக் கட்டுக் கட்டி, நூலடுக்கில் அடுக்கி, வாசகர் தரமுணர்ந்து தேவையுணர்ந்து விருந்துறவுப் பான்மையில் பணிபுரிய வேண்டும்.

39 ஐந்து காலங்கள்

இத்தகு முயற்சி நமது இந்திய நூலக இயக்க வரலாற்றில் எப்படி நடந்துள்ளது என்பதை எளிதாக உணர்ந்து, முழுமையாகப் புரிந்துகொள்ள இந்திய வரலாற்றைக் காலமுறையில் (1) சங்க காலம்; (2) சமய காலம்: (3) இசுலாமியர் காலம்; (4) ஆங்கிலேயர் காலம்; (5) சுதந்திர காலம் என்று – ஐந்து பெரும் பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

4. சங்க காலம்

41 எழுதாக்கிளவி

வாழ்வு தொடங்கியபோது, எல்லாம் வாய்மொழியாகவே இருந்தன. இதையே தமிழில் எழுதாக்கிளவி என்கிறோம்.

42 முதலாம் சங்கம்

முதல் சங்கம் கடல்கோளுக்கு முன் பரந்திருந்த நிலப் பகுதியில் குமரிக்குத் தென்பால் இருந்த – தென்மதுரையில் திகழ்ந்தது. இக்காலப் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, அகத்தியம் முதலிய நூல்கள் கடல்கோளால் மறைந்து போயின.

43 இரண்டாம் சங்கம்

இரண்டாம் சங்கம் கபாடபுரத்திலிருந்து தமிழாய்ந்தது. கலி, குருகு, வெண்டாளி, வியாழமலை முதலியன இக்காலத்தவையாகும். அகத்தியமும் தொல்காப்பியமும் சிறப்பானவை.

44 மூன்றாம் சங்கம்

மூன்றாம் சங்கம் உத்தர மதுரையில் 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்தது. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு முதலியன இக்காலத்தன.

45 தொல்காப்பியம்

காலத்தால் முந்திய தொல்காப்பியத்தில் நூல் பற்றிய விளக்கம் (1335), நூல்வகை (1336), நூல் அமைப்பு (1590-1610) முதலியன பற்றி வருவது ஆச்சரியப்படத்தக்கதாகும். இவ்வளவெல்லாம் நூல்பற்றி வரும் காலத்தில் நூலகம் இல்லாமலிருந்திருக்க முடியாது.

46 எட்டுத்தொகை

எட்டுத்தொகையில் ஏராளமான இடங்களில் நூல் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. சான்றுக்குச் சில:

ஆறு உணர்ந்த ஒருமுது **நூல்**
(புறநானூறு, 166:4)

பயன்தெரி **பனுவல்** பைதீர் பாண
(நற்றிணை, 167:6)

நுணங்கு நுண் **பனுவல்** புலவன்
(அகநானூறு, 345:6)

47 பத்துப்பாட்டு

பத்துப்பாட்டில் பல இடங்களில் நூல் பற்றிய குறிப்புகள் காண்கிறோம். சான்றுக்குச் சில:

மாலை மார்ப **நூலறி** புலவ (திருமுருகு. 261)

நூலோர் புகழ்ந்த மாட்சி (பெரும்பாண். 487)

நூல்நெறி மரபு (சிறுபாணாற்றுப்படை, 230)

48 பதினெண்கீழ்க் கணக்கு

"புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள் தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும் – மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள்
தெரிந்து தேற்றும் புலவரும் வேறு"
(நாலடியார், 318)

என்ற நாலடியார் பாடல், நூலகம் இருந்து, வாசகர் வேண்டிய கருத்தைக் காணமுடியாது – நூலகர் குறிப்புதவி சரியாகக் கொடுக்காத காரணத்தால் – மனம் நொந்த நிலையில் பாடிய செய்யுள் என்றால் உயர்வு நவிற்சியாகாது.

49 நூலக நிலை

அன்றைய பகுப்பு (Classification), தொல்காப்பியர் பகுப்பு — நூல்களைத் 'திணை, கருப்பொருள், உரிப்பொருள், நிலம், காலம்' முதலிய அடிப்படையில் அமைந்த பகுப்பு — இன்றைய டாக்டர் அரங்கநாதன் 'ஆளுமை, பொருண்மை, சக்தி, நிலம், காலம்' என்ற அடிப்படையில் அமைத்துள்ள பகுப்புக்கு முன்னோடியாக அமைந்துள்ளது ஆச்சரியமாயுள்ளது.

5. சமய காலம்

51 சமயத் தோற்றம்

மனிதன் இயற்கையின் அதிசயங்கள் ஏராளமாய் நடந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவற்றிற்குக் காரண காரியத் தொடர்புகள் புரிந்துகொள்ள முடியாதபோது தன்னிலும் அதிக சக்தி உள்ள ஏதோ ஒன்று இயங்குவதாக நினைத்தான். சமயம் பிறந்தது.

52 சமய வளர்ச்சி

இம்முறையில் படிப்படியாக இயற்கைப் பொருள், ஆவி, போலிப் பொருள், தெய்வம், தனித் தெய்வம், பல தெய்வம், ஒரு தெய்வம், ஒரே தெய்வ வணக்கம் என்று மனிதன் முன்னேறினான். இம் முயற்சிக்குத் துணையாகப் பல நூல்கள் எழுந்தன. அவற்றைப் பாதுகாக்க நூலகங்கள் பிறந்தன. சான்றுக்குச் சில.

53 இந்து சமயம்

இந்து சமயச் சார்பாக எழுந்த நூல்கள் சுருதிகள், சுமிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தரிசனங்கள் என்று பொருள் அடிப்படையில் ஆறு பெரும் பிரிவுகளாகக் கருதப்படுகின்றன. இக்கால நூலகங்கள் பற்றிய திட்டவட்டமான குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் திட்டமிட்டு உருவாக்கிய நூல்கள் பரவ, திட்டமிட்ட அமைப்பு — நூலக அமைப்பு — இருந் திருக்க வேண்டும் என நம்பலாம்.

54 சமண சமயம்

நூலக இயக்க வளர்ச்சியில் சமணம் முதலிடம் பெறுகிறது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் நடமாடும் நூலகங்களாயிருந்த துறவிகள் மடிந்தனர். அவர்கள் வளர்த்து வந்த கருத்துகளும் மறைந்தன. இதைப் புதுப்பிக்கும் வகை புத்தக ஆரோகணம் — திரும்ப எழுதித் தொகுக்கும் முயற்சி — தொடங்கியது. இவற்றைப் போற்றிப் புரக்க ஞானபூசை — சரசுவதி பூசை — நடந்தேறின. கிரந்த தானங்கள் நடந்தன. சமணத் துறவிகள் நூலகர்களாகச் செயல் பட்டனர்.

இந்த நூல்களுக்கு, சமண அடிப்படைக் கருத்துகளான 'உயிர், பொருண்மை, இயக்க ஊடகம் — அமைதி ஊடகம், இடம், காலம்' என்ற ஐந்து அடிவகைப் பகுப்பு இன்றைய அரங்கநாதனின் பகுப்பு முறைக்கு ஒத்திருப்பது வியக்கத் தக்கதாகும்.

55 பௌத்த சமயம்

பௌத்த சமயம் நூலக இயக்கத்திற்கு நல்லாதரவு நல்கியுள்ளது.

மணிமேகலையில் வரும் ஆபுத்திரன் அடைக்கலம் புகுந்த செழுங்கலை நியமம் — மதுரையில் இருந்த செழுங்கலை நியமம் — என்ற சொல் நூலகத்தைக் குறிப்பிடுவதாகும்.

ஆந்திரப் பிரதேச குண்டூர் மாவட்டத்தில் உள்ள நாகார்ச்சுனம் என்ற இடத்தில் அமைந்திருந்த பருவத விகாரையின் ஐந்தாவது மாடியில் புறா வடிவத்திலமைத்திருந்த 100 அறைகளைக் கொண்ட நூலகம் இருந்தது என்கிறது பாகியான் குறிப்பு.

கனிஷ்கரின் (கி.பி. 78-123) தலைநகரான புருசபுரம், முதலாம் குமாரகுப்தர் (கி.பி. 414-455) நிறுவிய நளாந்தா கல்வி நிலையம், விக்கிரமசிலம், ஓதாந்தபுரி, சோமபுரி, சகதளம், கனேரி, வல்லபி, பாடலிபுரம், தம்லக், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் பௌத்த பள்ளிகளின் ஒரு பகுதியாகப் பெரும் நூலகங்கள் திகழ்ந்திருந்தன எனச் சீன யாத்திரிகர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

56 வைணவச் சமயம்

வைணவ நூல்களில் சிறப்பான ஒன்று பௌஷ்கர சம்ஹிதை. இது நாராயணனும் பிரம்மாவும் உரையாடும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஞானப் பிரதிட்டை — அறிவு அமைப்பு — என்ற பகுதி 21 சூத்திரங்கள் கொண்டது.

இதில் நூலக அமைப்பு, நூல்கள் சேர்ப்பு, நூல்கள் காப்பு, நூல் போற்றல், நூல் பயன்பற்றி விதந்தோதப்படுகின்றன. இம்முறையில் சீரங்கம், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் நூலகங்கள் அமைந்திருந்தன என்கின்றன கல்வெட்டுக் குறிப்புகள்.

57 சைவ சமயம்

சைவ சமய ஆச்சாரியார்களிலே குறிப்பிடத் தக்கவரான சங்கராச்சாரியார் (கி.பி. 788 — 820) வாழ்ந்த மடத்தில் ஒரு நூலகம் இருந்திருக்கிறது.

சிதம்பரம் கோயிலின் பின்புறத்தில் இருந்த தேவார ஏடுகள் மீட்கப்பட்டதை மிகத் தெளிவாக விளக்குகிறது உமாபதி சிவம் (கி.பி. 942-1012) எழுதிய திருமுறை கண்ட புராணம்.

கழுமலம், உசாத்தானம், வீழிமிழலை, காறாயில், இடைவாய், திருப்பாலைவனம் முதலிய ஊர்க் கோயில்களில் படிப்பு இடங்கள்—திருக்கைக்கோட்டி மண்டபம் அல்லது திருக்க மண்டபம் அல்லது பிரசங்க மண்டபம் — இருந்திருக்கின்றன.

திருப்பூந்துருத்தி, திருநாகேசுவரம், ஒற்றியூர், வாலீசுரம், செந்தலை, திருக்கோட்டியூர் முதலிய ஊர்க் கோயில்களில் முறையே இராசராச விசயம், சிவதருமம், சோமசித்தாந்தம், திருஞானம், பாரதம், பிரபாகரம் முதலிய நூல்கள் படித்துக் காட்டப் பட்டன என்கின்றன கல்வெட்டுகள்.

58 கல்வெட்டில் நூலகங்கள்

சேரன்மாதேவி, சீரங்கம், சிதம்பரம், காஞ்சி புரம், சிருங்கேரி, நகாய் முதலிய இடங்களில் கிடைத்த கோயில் கல்வெட்டுகள் இவ்விடங்களிலே நூலகங்கள் செயல்பட்ட செய்திகளைச் சிறப்பாகச் செப்புகின்றன.

59 நூலக நிலை

அன்பை வளர்க்கத் தோன்றிய சமயங்கள் ஆணவத்தின் காரணமாக மோதத் தொடங்கியபோது, அனல்வாதம் புனல்வாதம் என்ற பெயரிலே நூல்கள் பாழாக்கப்பட்டன.

அறியாமையின் காரணமாக ஆடிப்பெருக்கில் ஆயிரக்கணக்கான ஏடுகள் அழித்தொழிக்கப் பட்டன.

யாத்திரிகர்கள் என்ற பெயரில் வெளிநாட்டி லிருந்து வந்தவர்கள் — பாகியான், யுவான்சுவாங், ஈத்சிங் போன்றவர்கள் — புனித நூல்களை எடுத்துச் செல்ல அனுமதித்துவிட்டோம்.

ஓலைச் சுவடிகள் சரியாகக் கவனிக்கப்படாத போது வன்மீகம் என்றும் செல் என்றும் பெயர் பெற்ற கறையான்களால் பல்லாயிரஞ் சுவடிகள் பாழடிக்கப்பட்டன.

6 இசுலாமியர் காலம்

61 இசுலாமியர் வருகை

இசுலாமிய நெறியினர் அரேபியாவிலிருந்து கோரி முகம்மது முயற்சியால் கி.பி. 1192-ல் தில்லியில் காலூன்றினர்.

62 அடிமை வம்சம்

அடிமை வம்சத்தில் சிறந்தவர்களான பால்பன் (கி.பி. 1266-1286), பால்பன் மகன் முகம்மது புத்ரான்கான் முதலியோர் தனித்தனியாக நல்ல நூலகங்கள் வைத்திருந்தனர்.

63 கில்ஜி வம்சம்

கி.பி. 1290-ல் கில்ஜி வம்சத்தைத் தொடங்கிய ஜலாலுதீன் கில்ஜி நல்ல நூலகம் அமைத்திருந்தார். இந்த நூலகத்தில்தான் கவிஞரான அமீர்குஸ்ரூ நூலகராயிருந்து பெருமை பெற்றிருக்கிறார்.

64 துக்ளக் வம்சம்

துக்களக் வம்சத்தின் முனைப்பாளரான முகம்மது பின் துக்ளக் நல்ல கல்வியாளர்; சிந்தனையாளர்; எழுத்தாளர். ஏராளமாக நூல்களைத் தொகுத்து நூலகம் வைத்திருந்தார்.

65 லோடி வம்சம்

லோடி வம்சத்தினர் — சிறப்பாக இப்ராகிம் லோடி யின் அரசவையர் காஜிகான் தில்லிக் கோட்டையில் ஒரு நல்ல நூலகம் வைத்திருந்தார்.

66 முகலாய வம்சம்

முகலாய வம்சத்தைத் தொடங்கிய பாபர் பன்மொழி வல்லுநர். சொந்தத்தில் தமக்கு ஒரு நூலகமும், மகள் குல்பதான் பீகத்திற்கு ஒரு நூலகமும் வைத்திருந்தார்.

பாபரின் மகன் உமாயூன் நூலகப் படிக்கட்டி லிருந்து வழுக்கி விழுந்துதான் காயம்பட்டுக் கால மானார் என்ற குறிப்பு அவர் வைத்திருந்த நூலகத் தைக் குறிக்கிறது.

அக்பர் பல்கலைச் செல்வர். அவர் நூலகத்தைத் தனித் துறையாக்கிப் பதினாறு வகைப் பணியாளர் களை வைத்திருந்தார்.

அடுத்து வந்த ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்க சீப் முதலியோர் நூலார்வலர்களாக விளங்கி நூல கத்தை வளர்த்திருக்கின்றனர்.

67 பிற நூலகங்கள்

அரசவை நூலகங்களைத் தவிர இலக்னோ, பாட்னா, இராம்பூர், பில்கிராம், ஜான்பூர், சூரத், புரோச், காண்டேஷ், கத்தியவார், அகமதாபாத், ரோகில்கண்டு, பீடார் முதலிய பகுதிகளிலே இருந்த நூலகங்கள் சிறப்புடையனவாகும்.

68 அதிசயக் காகிதம்

சீனாவில் ஆதிகாலத்தில் பிறந்த காகிதம் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்துகொண்டிருந்தது. இசுலாமியர் காலத்தில் இந்தியாவில் சிறப்பிடம் பெற்றது. இது, நூல்கள் விரைவில் உருவாக உதவியது; நூலகங்கள் பெருக உற்சாகமூட்டியது. அரசாதரவு அதற்கு வலுவூட்டியது.

69 நூலக நிலை

நூலகம் பலருக்கும் பயன்படத் தொடங்கியது. அரசாதரவு அதற்கு ஊக்கம் தந்தது. அயலார் தொடர்பு நூல்கள் மொழி மாற்றம் பெற உதவியது. நூலகங்கள் திட்டமிட்டு வளர்க்கப்பட்டன.

7 ஆங்கிலேயர் காலம்

71 ஆங்கிலேயர் வருகை

கி.பி. 15ஆம் நூற்றாண்டுக் கடைசியில் மேலை நாட்டுக்காரர்கள் இந்தியாவிற்குக் கடல்வழி கண்டனர். போட்டியில் ஆங்கிலேயர் வென்றனர். வணிகத்திற்கு வந்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றத் தொடங்கினர்.

அதில் வெற்றி பெற்றதும் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள நூலகங்களைத் தொடங்கினர். கி.பி. 1784-ல் கல்கத்தாவில் 'வங்க இராயல் ஆசியச் சங்கம்' தொடங்கப்பட்டது. கி.பி. 1804-ல் 'பம்பாய் இலக்கியச் சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது. கி.பி. 1818-ல் 'சென்னை இலக்கியச் சங்கம்' உருவாகியது. இவற்றுடன் செயல்பட்ட நூலகங்கள் வெள்ளையர்களுக்காக மட்டுமே இருந்தன.

72 மக்களுக்கு இல்லையா ?

தஞ்சாவூரையாண்ட இரண்டாவது சரபோசி மன்னர் (கி.பி. 1798-1833) அறிஞர்; அறிவு வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர். அவர் முயற்சியால் 1820-ல் சரசுவதி மகால் நூலகம் உருவாயிற்று.

படித்த இந்தியர்கள் தங்களுக்காக நூலகங்கள் நிறுவ முயன்றனர். குழுவரி (Subscription) நூலகங்கள் தோன்றின. 1830-ல் பம்பாய் நூலகம் செயல்படத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து கல்கத்தா, சென்னை முதலிய இடங்களிலே நூலகங்கள் தோன்றின.

73 கட்டணம் இல்லா நூலகம்

நம் படித்த மக்களில் பெரும்பாலோர் கட்டணம் கட்டி — குழுவரி செலுத்தி — படிக்கும் நிலையில் இல்லை. கட்டணம் இல்லா நூலகம் தேவைப்பட்டது. இதனை, மக்கள் தனியாகவும் குழுவாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆளவந்தார்களுக்குத் தெரிவிக்கலாயினர். விளைவு ?

1896 டிசம்பர் 5ஆம் நாள் பொதுமக்களுக்கான நூலகம் — கட்டணமில்லா நூலகம் — கன்னிமாரா பொது நூலகம் - சென்னையில் செயல்படத் தொடங்கியது. 1903-ல் கல்கத்தாவில் இம்பீரியல் நூலகம் —இன்று அது தேசிய நூலகம்—தொடங்கப்பட்டது.

74 கிராம நூலகங்கள்

இப்படித் தோன்றிய நூலகங்கள் நகரப் பகுதிகளிலேதாமிருந்தன. அப்படியானால் கிராம மக்களுக்கு இல்லையா? என்ற கேள்வி பிறந்தது.

பதில், கெயிக்வாடு உருவிலே பரோடாவிலே பரிணமித்தது. சாதாரணக் குடிமகனாக இருந்து, தத்துப்போனதாலே பரோடா மன்னரான கெயிக்வாடு இதில் முன்னின்றார்.

75 நூலகச் சங்க முயற்சிகள்

1919 நவம்பர் 14-ல் சென்னை கோகலே மண்டபத்தில் முதல் அகில இந்தியப் பொது நூலக மாநாடு நடந்தது. இந்தியப் பொது நூலகச் சங்கம் பிறந்தது. அதன் ஆதரவிலே பல மாநாடுகள் நடந்தன. இதைத் தொடர்ந்து பல்வேறு மாகாணங்களிலே நூலகச் சங்கங்கள் தோன்றின.

76 இரட்டையர் ஆட்சி

1920ஆம் ஆண்டு சென்னை நகராட்சிகள் சட்டத்திலே நூலகங்கள் திறக்கவும் உதவித்தொகை பெறவும் வாய்ப்புகள் கிட்டின.

சென்னை மாகாணத்தில் 1939 சூன் 2 நாளைய 1421 கல்வி ஆணையின் மூலம், பள்ளி நூலகங்கள் பொதுமக்கள் பயனுக்குத் திறந்துவிடப்பட்டன.

77 தனி முயற்சிகள்

1931-ல் பொறியர் கனகசபைப் பிள்ளை மன்னார்குடிப் பகுதியில் நடமாடும் நூலகப் பணியைத் தொடங்கினார்.

1932-ல் மாவட்டக் கல்வி அலுவலர் அப்பர் சுந்தர முதலியாரும் பள்ளி ஆய்வாளர் வில்வராயும் தென்னார்க்காடு மாவட்ட வில்வராய நத்தத்தில் சைக்கிள் நூலக வண்டியில் நூலகப் பணியைத் தொடங்கி நடத்தினர்.

1936-ல் மதுரை மாவட்ட ஆண்டிபட்டிப் பகுதியில் இரட்டைமாட்டு வண்டியில் நூலகப் பணியைத் திருமதி பாலசுப்பிரமணிய ஐயர் தொடங்கி நடத்தினார்.

1939-ல் மதுரை மாவட்டக் கழகம் 'ஞானரதம்' என்னும் உந்து நூலகப் பணியைத் தொடங்கியது.

1942-ல் 13,000 முதியோர் கல்வி நூலகங்கள் இருந்தன என்று அறிக்கையொன்று கூறுகிறது.

78 அற்புத அச்சு

காலப்போக்கில் மக்கள் பெருக்கம் அதிகமாகியது. சிலருக்கு என்று மட்டுமே என்றிருந்த கல்வி பலருக்கும் பரவவேண்டிய நிலை பிறந்தது. எனவே, கருத்தைப் பரப்ப நூல்களைப் பெருக்க அச்சுப் பிறந்தது.

முதல் தமிழ் நூல் – கார்டிலா – 1554-ல் லிசுபனில் அச்சாயிற்று. 1578-ல் கொச்சியில் தம்பிரான் வணக்கம் தமிழில் வெளியிடப்பட்டது. பின்பு பிற மொழிகளிலும் அச்சு நூல்கள் வெளிவரத் தொடங்கின.

79 நூலக நிலை

ஆங்கிலேயர் வருகையால் அச்சகத் தொடர்பு, நூலகத் தொடர்பு பெற்றோம். நூலகத்தைப் பலரும் பயன்படுத்தும் முயற்சி உந்துதல் பெற்றது.

8 சுதந்திர காலம்

81 சூழ்நிலை

1947-ல் சுதந்திரம் பெற்றோம். உரிமையோடு கடமையும் வந்தது. இதற்கு நம்மை தயார்ப்படுத்திக்கொள்ளப் பள்ளிக் கல்வி, புறப்பள்ளிக் கல்வி, தொடர்கல்வி, நூலகக் கல்வி தந்து வருகிறோம்.

82 நன்முறை முயற்சிகள்

இந்த நூலக முயற்சியில் நன்முறை முயற்சிகள் முதலிடம் பெறுகின்றன. இம்முறையில் 1930-ல் வாரணாசியில் நடந்த முதல் ஆசியக் கல்வி மாநாட்டில் அரங்கநாதன் எழுதிய நூலக நன்முறைச் சட்டம் (Model Library Act) விவாதிக்கப்பட்டது.

83 நூலகச் சட்ட முயற்சிகள்

முதல் சட்ட முயற்சி சென்னையில் 1931-ல் தொடங்கியது. தொடர்ந்து பல்வேறு மாநிலங்களிலே முயற்சிகள் நடந்தன.

இதன் விளைவாக 1948-ல் 'சென்னைப் பொது நூலகச் சட்டம்' நிறைவேற்றப்பட்டது. 1960-ல் ஆந்திரப் பிரதேசப் பொது நூலகச் சட்டம் நிறைவேறியது. 1965-ல் மைசூர்ப் பொது நூலகச் சட்டம் வந்தது. 1967-ல் மகாராட்டிரப் பொது நூலகச் சட்டம் பிறந்தது. 1979-ல் வங்கப் பொது நூலகச் சட்டம் வந்துள்ளது. பிற மாநிலங்களிலே முயற்சிகள் நடக்கின்றன.

84 ஆதரவுச் சட்ட முயற்சிகள்

இந்திய அறிவு முயற்சியைக் கட்டுப்படுத்த 1867-ல் அச்சகம், நூல் பதிவுச் சட்டம் (Press and Registration of Books Act of 1867) கொண்டுவந்தனர் ஆங்கிலேயர். இதன் விளைவாக இந்தியாவில் வெளியான நூல்கள் பட்டி பெற்றோம்.

இந்திய அறிவு முன்னேற்றத்தைப் பதிவு செய்து வைக்க 1954-ல் பொது நூலகங்களுக்கு நூல்கள் ஒப்படைக்கும் சட்டம் (Delivery of Books [Public Libraries] Act of 1954) நிறைவேறியது.

1957-ல் உரிமைப் பதிவுச் சட்டம் (Copyright Act of 1957) வந்தது. இதனால் எழுத்தாளர், பதிப்பாளர் தங்கள் நூல்களுக்கு உரிமைப் பதிவு செய்ய வாய்ப்பு வந்துள்ளது.

85 பல்கலைக்கழக முயற்சிகள்

பலருக்கும் உயர்கல்வி தரப் பல்கலைக்கழகங்கள் தோன்றின. இவை கல்விக்குதவ நூலகங்களை அமைத்தன. இப்படி அமைந்த பல்கலைக்கழக நூலகங்கள் சில 1945 முதல் நூலகப் பயிற்சி, நூலகக் கருத்தரங்குகள் முதலியன நடத்தி நூலக இயக்கத்திற்கு உதவி வருகின்றன.

86 நிறுவன முயற்சிகள்

சென்னை நூலகச் சங்கம், சிறப்பு நூலகச் சங்கம், இந்திய நூலகச் சங்கம் போன்றவை அவ்வப்போது மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்தி நூலகக் கருத்தைப் பரப்பி வருகின்றன.

87 ஆராய்ச்சி முயற்சிகள்

டாக்டர் அரங்கநாதன் 1924 முதல் 1972 வரை நூலகராக, பேராசிரியராக, சிந்தனையாளராக, கொடையாளராக, அறிவுரையாளராக, ஆராய்ச்சியாளராக நூலக ஆராய்ச்சியில் ஒரு புதிய அலையை உலகம் முழுதும் பரப்பியுள்ளார்.

88 அரசு முயற்சிகள்

நாட்டைத் திருத்த வந்த நல்ல ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக நூலக முயற்சிகளும் நடந்தேறி வருகின்றன.

89 இன்றைய நிலை

நாடெங்கும் வளர்ந்து வரும் கல்வி உணர்வு, நூல் உணர்வு, நூலக உணர்வைத் திட்டமிட்டு வளர்க்க

முயற்சிகள் நடந்து வருகின்றன. நாடளாவிய நூலகச் சட்டம் நிறைவேற்றப்பட்டுக் கட்டாய நூலகப் பணி நடக்க வேண்டும்.

9 எதிர்காலம்

91 எச்சரிக்கை

''எல்லார்க்கும் எல்லாம்என்று இருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்றது இந்த வையம்
கல்லாரைக் காணும்கால் கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்!''

என்று எச்சரிக்கை விடுத்தார் பாவேந்தர் பாரதிதாசன் அன்று.

92 முயற்சிகள்

இதனை உணர்ந்துதான், படிக்கும் வயது அடைந்த குழந்தைகளுக்கு எல்லாம் கட்டாயக் கல்வி தரவேண்டும் என்கிறது இந்திய அரசியல் சாசனம்.

படியாதவர்களுக்கும், படிக்க வாய்ப்பு இல்லாது போனவர்களுக்கும் முதியோர் கல்வி, சமூகக் கல்வி, எழுத்தறிவிப்புக் கல்வி, உழவர் கல்வி, தொழிலாளர் கல்வி என்று பல்வேறு முறைகளில் கல்வி வசதி செய்து தருகிறோம்.

93 அடிப்படை ஆவணம்

இதற்கு ஓர் அடிப்படை ஆவணம் (Fifteen year Library development progress for Plan periods 4 to 6 in Library Science 1; 1964;281-308) ஒன்றை மறைந்த நூலக இயல் மேதை டாக்டர் அரங்கநாதன் அவர்கள் தந்துள்ளார். அதன் சுருக்கமாவது:

94 பணி முனைகள்

வளர்ந்து வரும் நாட்டிற்குக் கீழ்க்காணும் விதத்தில் பணிமுனைகள் அமைக்கப்பட வேண்டும். அவை யாவன:

1	தேசிய மைய நூலகம்	1
2	மாநில மைய நூலகங்கள்	16
3	நகர மைய நூலகங்கள்	112
4	ஊரக மைய நூலகங்கள்	315
5	கிளை நூலகங்கள்	8,090
6	ஊரகப் பணிமுனைகள் (12,067 உந்து நூலகங்கள்மூலம்)	2,41,466
7	ஆக மொத்தப் பணிமுனைகள்	2,50,000

இதன்படி சற்று ஏறத்தாழ ஒவ்வோர் இரண்டாயிரம் மக்கள் தொகுதிக்கும் ஒரு நூலகப் பணிமுனை (Service point) வேண்டும்.

95 பணியாளர்கள்

மேற்கண்ட பணிமுனைகளை நிர்வகிக்கக் கீழ்க் காணும் முறையில் பணியாளர்கள் தேவை. விவரம் இதோ:

1	நூலகப் பட்டம் பெற்ற தொழிலர்கள்	88,000
2	முதனிலை நூலகப் படிப்புப் படித்த தொழிலர்கள்	11,000
3	எழுத்தர்கள்	18,000
4	தொழில்நுணுக்கர்கள்	14,000
5	உதவுநர்கள்	1,19,000
6	ஆக மொத்தப் பணியாளர்கள்	2,50,000

அதாவது ஒவ்வொரு பணிமுனைக்கும் சராசரி ஒரு பணியாளர் வேண்டும்.

96 நிதி ஆதாரம்

எந்த ஒரு வேலைக்கும் நிதிதான் ஆதாரம். இம்முறையிலே நூலகப் பணிக்கு வேண்டிய தொகை யாவது:

பணியாளர் சம்பளம்	ரூ. 113 கோடி
நூல்கள் முதலியன	ரூ. 113 கோடி
ஆக மொத்தம்	ரூ. 226 கோடி

அடுத்த பதினைந்து ஆண்டுகளில் முழுமை அடையும் நூலகப் பணிக்குத் தேவை ரூ. 226 கோடி. பிற செலவுகளுக்கு ரூ. 133 கோடி வேண்டும்.

அதாவது ஆண்டு ஒன்றிற்கு ரூ. 25 கோடி வேண்டும். எளிதாகத் தலைக்கு ஒரு ரூபாய் நூலகப் பணிக்கு ஒதுக்கீடு செய்து பணியை விரைவு படுத்தலாம்.

97 ஒருங்கிணைப்பு

முன் கூறிய கணக்கு எல்லாம் பொது நூலகத் துறை (Public Library System) கல்வியோடு தொடர்பு கொண்டுள்ள பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நூலக முறைமை (Academy Library System) யோடு ஒருங்கிணைப்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

98 சட்டம்

இதற்கு ஒவ்வொரு மாநிலமும் பொது நூலகச் சட்டம் நிறைவேற்ற வேண்டும். இவற்றை ஒருங்கிணைக்க மத்திய அரசு நூலகச் சட்டம் ஒன்றும் நிறைவேற்றப்பட வேண்டும்.

99 பாடுபடுவோம்

இதற்கு 'ஊருக்கு ஒரு நூலகம்; ஆளுக்கு ஒரு நூல்; அதுவும் நான்கு பேர் — தாய், தந்தை, மகள், மகன் ஆகிய நான்கு பேரும் நடுவீட்டில் ஒன்றாய் அமர்ந்து நாணம் கொள்ளாமல் படிக்கக்கூடிய நூல்' என்ற இலட்சியத்தோடு பாடுபடுவோம்.



குழந்தை இலக்கிய வளர்ச்சி

அழ. வள்ளியப்பா

தமிழில் குழந்தை இலக்கியம் நல்ல முறையில் வளர்ந்து வருகிறதா?

ஆம், ஆயினும் அதன் வளர்ச்சியில் எதிர்பார்த்த அளவு வேகம் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

குழந்தைகளிடையே படிக்கும் பழக்கம் நாளுக்கு நாள் நன்கு வளர்ந்துவருகிறது. எந்தப் புத்தகம் அல்லது பத்திரிகை கண்ணிலே தென்பட்டாலும், உடனே ஆவலாகப் படிக்கத் தொடங்கிவிடுகின்றனர். இன்று அவர்களுக்கு ஏற்றவாறு வெளிவருகின்ற பத்திரிகைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். புத்தகங்களும் ஆண்டுக்கு 60 அல்லது 70 என்ற கணக்கில்தான் வெளிவருகின்றன.

நீண்ட நெடுங்காலமாகப் பாட்டி, தாத்தா அல்லது பெற்றோர் குழந்தைகளுக்கான நாடோடிப் பாடல்களையும் கதைகளையும் கூறிவந்தார்கள். இராமாயணமும் மகாபாரதமும் குழந்தைகளுக்காக இயற்றப்பெறவில்லையென்றாலும், அவற்றையும் அவற்றில் காணப்பெறும் துணைக் கதைகளையும் குழந்தைகளுக்கு எளிய முறையில், ஏற்ற வகையில் கூறிவந்தார்கள். அச்சு வசதி ஏற்பட்ட பிறகு பெரியவர்களுக்கான பத்திரிகைகளையும் புத்தகங்களையும் வெளியிட்டதோடு, அவ்வப்போது, குழந்தைகளுக்கான பத்திரிகைகளையும் புத்தகங்களையும் வெளியிடும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர்.

தமிழில் குழந்தைப் பத்திரிகைகளை வெளியிடும் முயற்சியில் முதல் முதலாக ஈடுபட்டவர்கள் கிறித்தவப் பிரசார சபையினர்தாம். 'பால தீபிகை' (1840), 'சிறுபிள்ளையின் நேசத்தோழன்', 'பாலியர் நேசன்' (1859) போன்ற பத்திரிகைகளை அவர்கள் நடத்தினர். பின்னர், வரகவி அ. சுப்பிரமணிய பாரதியார் நடத்திய 'பாலவிநோதினி' (1918), 'பொக்கிஷ பரணி' (1924) வெளிவந்தன.

குழந்தைப் பத்திரிகை உலகில் ஒரு திருப்பத்தையும் வேகத்தையும் ஏற்படுத்தியது புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரம் என்ற ஊரிலிருந்து 1942-ல் வெளிவந்த 'பாப்பா மலர்' எனும் பத்திரிகைதான். அதிலும், அதைத் தொடர்ந்து வெளிவந்த 'பாலர் மலர்', 'பாப்பா', 'அணில்', 'கண்ணன்', 'பூஞ்சோலை', 'கரும்பு', 'அம்பி' போன்ற பத்திரிகைகளிலும் பெரியவர்கள் மட்டுமன்றி, பள்ளி மாணவர்களும், பல இளைஞர்களும் எழுதத் தொடங்கினர். இளம் உள்ளங்களில் தோன்றும் அற்புதக் கற்பனைகளையும், இளைஞர்கள் எந்தெந்தக் கோணங்களில் உலகத்தைப் பார்க்கிறார்கள் என்பதையும் அப் பத்திரிகைகள் வாயிலாக ஓரளவு அறிந்துகொள்ள முடிந்தது. அக்காலத்தில் எழுதத் தொடங்கிய மாணவர்களில் பலர் இன்று சிறந்த குழந்தை எழுத்தாளர்களாகத் திகழ்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

நம் நாடு விடுதலை பெற்ற பிறகுதான் குழந்தைப் புத்தகங்களை வெளியிடும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். 30 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த புத்தகங்களில் பல, மிகச் சிறிய அளவிலே இருந்தன. மேனாடுகளைப்போல நல்ல தாளில், பெரிய

அளவில், அழகான அச்சில், வண்ணப் படங்களுடன் இப்போது பல நூல்கள் வெளிவந்திருப்பினும், அக் காலத்தில் அத்தகைய நூல்களைக் காண்பதே அரிது.

1950ஆம் ஆண்டு முதல் முதலாகக் குழந்தைப் புத்தகக் காட்சியைச் சென்னையில் நடத்தியது குழந்தை எழுத்தாளர் சங்கம். தமிழில் வெளிவந்த குழந்தைப் புத்தகங்களுடன், இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் போன்ற பிற நாட்டுக் குழந்தைப் புத்தகங்களையும் அக்காட்சியில் வைத்திருந்தது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டிருந்த சில நூல்களைத் தவிர, மற்றவையெல்லாம் மிகச் சிறிய அளவில் கவர்ச்சியின்றி இருந்தன. அவற்றிலும் பெரும்பாலானவை கதைப் புத்தகங்களாகவே இருந்தன. மேனாட்டுப் புத்தகங்களுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தவர்கள், தமிழிலும் குழந்தை நூல்கள் நல்ல முறையில், பல துறைகளிலும் வெளிவர வேண்டுமென ஆசைப் பட்டனர்.

பெரியவர்களுக்காகப் பல துறைகளில் நூல்கள் வெளிவந்திருப்பதைப் போல, குழந்தை நூல்களிலும் இன்று பலதுறை நூல்களைக் காணலாம். இது வரை, பாட நூல்களல்லாத, குழந்தைகளுக்கான பொது நூல்கள் சுமார் 1800 வெளிவந்துள்ளன. எந்தெந்தத் துறையில் ஏறத்தாழ எத்தனை நூல்கள் வெளிவந்துள்ளன என்ற விவரம் கீழே கொடுக்கப் பெற்றுள்ளது :

சிறுகதை	800
நாவல்	100
கவிதை	200
வாழ்க்கை வரலாறு	200
விஞ்ஞானம்	300
நாடகம்	80
பொழுதுபோக்கு, விளையாட்டு, சித்திரக்கதை முதலியன.	120

இவற்றில் 40 சதவிகித நூல்கள் நல்ல படங்களுடனும் நேர்த்தியான அச்சு, அமைப்புடனும் வெளிவந்துள்ளன.

பாடல்கள்

குழந்தைகளின் உள்ளத்தைப் பெரிதும் கவரக் கூடியவை பாடல்களே. வாய்மொழியாக வழங்கி வந்த பல பாடல்களைக் குழந்தைகள் அபிநயத்துடன் மிக மகிழ்ச்சியோடு பாடுவதைக் கண்டும் கேட்டும் களிப்புறுகின்றோம். அவர்களின் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தும் வகையிலே இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும், மகாகவி பாரதியாரும் குழந்தைப் பாடல்களைப் பாடத் தொடங்கினர். அவர்களைப் பின்பற்றியே இன்று பல கவிஞர்கள் பாடி வருகின்றனர்.

நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கா. நமச்சிவாய முதலியார், மயிலை சிவமுத்து போன்ற சிலர் பள்ளிப் பாட நூல்களில் சேர்ப்பதற்காகப் பல பாடல்களை எழுதினார்கள். அப்பாடல்களில் சில குழந்தைகள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததோடு, இன்று வரை அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி வருகின்றன. அக்காலத்தில் ஈழ நாட்டிலும் இத்தகைய முயற்சியில் க. சோமசுந்தரப் புலவரைப் போன்றவர்கள் ஈடுபட்டனர் என்றும் தெரிய வருகிறது. 1935ஆம் ஆண்டில், இலங்கைக் கவிஞர்கள் பலர் இயற்றிய குழந்தைப் பாடல்களைத் தொகுத்து, 'பிள்ளைப் பாட்டு' என்னும் பெயரில் கே. எஸ். அருணந்தி வெளியிட்டிருக்கிறார். தமிழில் முதல்முதலாக வெளிவந்த குழந்தைப்பாடல் தொகுப்பு (Anthology) அதுதான். அதன் பிறகு, இரண்டு மூன்று சிறு தொகுப்புகள் வெளிவந்தன. ஆயினும், 1970ஆம் ஆண்டு வெளிவந்த 'முத்துக் குவியல்' குறிப்பிடத்தக்க ஒரு தொகுப்பாகும். தமிழகத்திலுள்ள கவிஞர்களுடன், இலங்கை, மலேசியா போன்ற வெளிநாட்டுக் கவிஞர்களின் பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இத் தொகுப்பிலுள்ள 130 பாடல்களையும் பல வாரங்கள் சென்னை வானொலியில் ஒலி பரப்பி, அப் பாடல்களை இயற்றிய 63 கவிஞர்களையும் அறிமுகம் செய்தார் பூவண்ணன்.

தமிழில் குழந்தைப் பாடல்கள் எழுதிய கவிஞர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ நூறு இருக்கும். தெய்வத்தைப் பற்றியும், தேசத்தைப் பற்றியும், இயற்கையைப் பற்றியும், மொழியைப் பற்றியும் பெரியோரைப் பற்றியும் பாடியிருப்பதோடு, விஞ்ஞானிகளைப் பற்றியும், விஞ்ஞான விந்தைகளைப் பற்றியும் அவர்கள் பாடியுள்ளார்கள். மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளும் சிறுவருக்கேற்ற கவிதைகளாகப் பாடப்பட்டுள்ளன. பாரதிதாசனைப் பின்பற்றிச் சிலர் சிறுவருக்கான இசைப் பாடல்களையும் பாடியுள்ளனர். சிறுவருக்கான வில்லுப் பாடல்களும் தோன்றியுள்ளன.

குழந்தைகள் கதையும் பாட்டும் சேர்ந்த கதைப் பாடல்களைப் பெரிதும் விரும்புகின்றனர் என்பதை அறிந்து பல கவிஞர்கள் கதைப் பாடல்களையும் இயற்றி வருகின்றனர். சிலர், தங்கள் நூல்களில் பல பாடல்களுக்கு இடையே ஒரு சில கதைப் பாடல்களைத் தந்துள்ளனர். சிலர், 'கதைப் பாடல்கள்' என்று ஒரு பகுதியை ஒதுக்கி, அதில் பல கதைப் பாடல்களை அளித்துள்ளனர். முற்றிலும் கதைப் பாடல்கள் கொண்ட நூலை முதல் முதலாக வெளியிட்ட பெருமை பெ. நா. அப்புஸ்வாமிக்கே உரியது. 'சித்திரக் கதைப்பாட்டு' என்ற பெயரில் நிரம்பப் படங்களுடன் மூன்று தொகுதிகளை (1948-49) அவர் வெளியிட்டார். அதன் பிறகு, சில கவிஞர்கள் தங்களின் கதைப்பாடல்களைத் தனி

நூல்களாக வெளியிட்டனர். 1977-ல் 60 கவிஞர்கள் சிறுவருக்காக எழுதிய கதைப் பாடல்களைத் தொகுத்து, 'சிறுவர் கதைப் பாடல்கள்' என்ற பெயரில் சென்னையிலுள்ள தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் வெளியிட்டுள்ளது.

குழந்தைப் பாடல்களில் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்ற மழலைப் பாடல்கள் (Nursery Rhymes) மிகவும் குறைவாகவே உள்ளன. நகைச்சுவைப் பாடல்கள், வினா-விடைப் பாடல்கள், அபிநயப் பாடல்கள் (Action Songs), சேர்ந்து பாடும் பாடல்கள் (Group Songs), 'சடுகுடு', 'கண்ணாமூச்சி' போன்ற பழைய விளையாட்டுகளுக்குப் பாடல்கள் இருப்பதுபோல், புதுப்புது விளையாட்டுகளுக்கேற்ப புதுப்புது பாடல்கள் நிறைய வெளிவர வேண்டும்.

பரம்பரையாக வழங்கிவரும் குழந்தைகளுக்கான நாடோடிப் பாடல்களை யெல்லாம் திரட்டி, பல வண்ணப் படங்களுடன் வெளியிட்டால், இன்றைய குழந்தைகள் மட்டுமன்றி, வாழையடி வாழையாக வருகின்ற குழந்தைகளும் பாடி மகிழ வாய்ப்பு ஏற்படும்.

குழந்தைகளுக்கான சில பாடல்களுக்குத் தக்க முறையில் இசையமைத்து வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. சென்னையிலுள்ள தொலைக் காட்சி வாயிலாகவும் சில பாடல்களைப் பின்னணி இசையுடன் குழந்தைகள் கேட்டு மகிழ்கின்றனர். நல்ல பல பாடல்களைத் தேர்ந்தெடுத்து, குழந்தைகள் திரும்பப் பாடும் வகையில் எளிய முறையில் இசையமைத்து, இசைத் தட்டுகளில் பதிவு செய்து, நாட்டின் பல பகுதிகளிலும் பரவும்படி செய்தால், நற்பயன் விளையும்.

கதைகள்

குழந்தைகளுக்கெனத் தனிப் பத்திரிகைகள் இல்லாத காலத்தில், பெரியவர்களுக்கான பத்திரிகைகளில் குழந்தைகளுக்காகச் சில பக்கங்களை ஒதுக்கி அவற்றில் சிறு கதைகளை வெளியிட்டு வந்தனர். பெரியவர்களுக்காகச் சி. வி. சுவாமிநாதையர் வெளியிட்ட 'விவேக சிந்தாமணி'யிலும் (1891), அ. மாதவையா வெளியிட்ட 'தமிழர் நேச'னிலும் (1917) குழந்தைப்பகுதி இருந்தது. தமிழர் நேசனில் வெளிவந்த சில குழந்தைக் கதைகள், பின்னர், 'பால விநோதக் கதைகள்' என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்தது.

குழந்தைப் பத்திரிகைகள் நிறைய வெளி வந்த போதும், கலைமகள், ஆனந்த விகடன், கல்கி போன்ற பெரியவர்க்கான பத்திரிகைகளில் சிறுவர் பகுதி தொடர்ந்து வெளிவந்தது. இப் பகுதியில், சிறுகதைகளுடன், குழந்தைகளுக்கான தொடர்கதைகளையும் காண முடிந்தது.

30 ஆண்டுகளுக்கு முன்பு வெளி வந்த குழந்தைப் பத்திரிகைகள் சிறிய அளவிலே, குறைந்த பக்கங்களுடன் வெளிவந்ததால், அவற்றில் இடம்பெற்ற கதைகள் அளவிலே மிகச் சிறியனவாக இருந்தன. 'கண்ணன்', 'பூஞ்சோலை', 'கோகுலம்' போன்ற பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியதும், கதைகளின் நீளம் அதிகமாகியது.

தொடக்க காலத்தில் சித்தியின் கொடுமை, நண்பர்களுக்குள் ஏற்படும் பொறாமை, சாதி வெறியினால் ஏற்படும் சச்சரவுகள் போன்றவற்றை மையக் கருத்துகளாக வைத்தே பலர் கதைகள் எழுதி வந்தார்கள். நாளடைவில், பல்வேறு நிலைக்களன்களையும் கொண்ட கதைகள் எழுதப்பெற்றன. இப்படி வெளிவந்த பல நல்ல கதைகள் பின்னர்ப் புத்தகங்களாக வெளிவந்தன. பத்திரிகைகளில் தொடராக வந்த கதைகளும், வானொலியில் தொடர்ந்து ஒலிபரப்பான சில கதைகளும் நூல் வடிவம் பெற்றுள்ளன. சிறுவர் நாவல்கள் நிறைய வெளிவரக் காரணமாயிருந்தது 'கண்ணன்' பத்திரிகை ஆண்டுதோறும் நடத்திய நாவல் போட்டியேயாகும்.

இன்று குழந்தைக் கதை எழுதுபவர்களில் பலர் தங்கள் பொறுப்பை உணர்ந்து எழுதி வருகின்றனர். 25 ஆண்டுகளுக்கு முன்பு, துப்பாக்கிக் கதைகளையும், கொள்ளை – கொலைக் கதைகளையும் எழுதுவதே சிறந்ததெனக் கருதி, அத்தகைய கதைகளைச் சிலர் எழுதி வந்தனர். பரப்பரப்பூட்டும் அக் கதைகளைச் சற்று வளர்ந்த குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடன் படித்து வந்தனர் என்பது உண்மையே. ஆயினும், அத்தகைய கதைகள் பிள்ளைகளின் உள்ளத்தைக் கெடுத்துவிடுமே என்ற கவலையுடன் சில பெரியவர்கள் அம் மாதிரி எழுதிவந்த எழுத்தாளர்களின் உள்ளத்தை மாற்றப் பெரிதும் முயன்றனர். அதில் வெற்றியும் பெற்றனர்.

மிகச் சிறு குழந்தைகளுக்கான கதைகள், தமிழகத்தின் தனிச் சிறப்பை எடுத்துக் காட்டும் கதைகள், தேச பக்தியை ஊட்டுகின்ற கதைகள், சிறுவருக்கேற்ற தற்கால நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்ட கதைகள், விஞ்ஞான உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட கதைகள், பிறரைப் புண்படுத்தாத நகைச்சுவைக் கதைகள் மிகக் குறைவாகவே உள்ளன. இத்துறைகளில் கதாசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

நாடகம்

இயல், இசை இரண்டையும்விடச் சக்தி வாய்ந்தது நாடகம். குழந்தைகளின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கவும், நற்கருத்துகள் எளிதிலே பதியவும் நல்லதொரு கருவியாகப் பயன்படுவது நாடகம்.

முன்பெல்லாம் பெரியவர்களுக்கான நாடகங்களைத்தாம் பெரியவர்களோடு குழந்தைகளும் சேர்ந்து பார்த்துவந்தார்கள். பள்ளி விழாக்களில் கூடப் பெரியவர்களுக்காக எழுதப்பெற்ற நாடகங்களையே குழந்தைகள் நடித்து வந்தார்கள்.

குழந்தைகளுக்கு, அவர்களின் சூழ்நிலையை வைத்து, அவர்களுக்குப் புரியும்படியான எளிய வசனங்களையும் பாடல்களையும் கொண்ட நாடகங்களை நடத்த வேண்டுமென்ற முயற்சியில் 25 ஆண்டுகளுக்கு முன்பு சிலர் ஈடுபட்டனர். அத்தகைய நாடகங்களை எழுதுவோருக்கு ஊக்கமளிக்கும் நோக்குடன் குழந்தை எழுத்தாளர் சங்கம் 1955-ல் 'குழந்தைகள் நாடக விழா' ஒன்றைச் சென்னையில் நடத்தியது. இந்த விழாவிற்காகவே எழுதப்பெற்ற ஆறு 'ஒரு மணி நேர நாடக'ங்களை, ஆறு சிறுவர் சங்கங்கள் அரங்கேற்றின. இராஜாஜியால் தொடங்கி வைக்கப்பெற்ற அவ்விழா ஒரு வெற்றி விழாவாக இருந்தும், அதைப் பின்பற்றிக் குழந்தைகள் நாடக விழாக்கள் நாடெங்கணும் நடைபெறுமெனச் சிலர் எதிர்பார்த்ததுபோல் நடைபெறவில்லை. ஆயினும் இன்று குழந்தைகளுக்கான நாடகங்கள் பள்ளி விழாக்களிலும், சிறுவர் சங்கங்களிலும் நடிக்கப்பெறுகின்றன. வானொலியிலும் சிறுசிறு நாடகங்களும், தொடர் நாடகங்களும் ஒலிபரப்பாகின்றன. குழந்தைகள் நாடக விழாக்களைச் சில வானொலி நிலையங்கள் நல்லமுறையில் நடத்துவதையும் அறிகிறோம். தொலைக்காட்சியிலும், அடிக்கடி குழந்தை நாடகங்களைக் காணமுடிகிறது. சிறுவர் பத்திரிகைகளிலும் ஓரங்க நாடகங்கள் வெளியாகின்றன. இவையெல்லாம் குழந்தை நாடகங்களை நன்கு எழுதக்கூடியவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள் என்பதை நன்குணர்த்துகின்றன. அத்துடன் குழந்தைகளின் கலைத்திறன் வெளிப்படவும் வாய்ப்பளிக்கின்றன.

தமிழில் குழந்தைகளுக்காக வெளி வந்துள்ள ஏறத்தாழ 80 நாடக நூல்களில், படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற நூல்கள் பாதி இருக்கும். மற்றவற்றில் சில நடிப்பதற்கும், சில படிப்பதற்குமே ஏற்றவையாக இருக்கின்றன.

குழந்தைகளுக்கான நாடகங்கள் பெருக வேண்டுமாயின், நாட்டின் பல பகுதிகளிலும் 'குழந்தைக் கலைக்கூடங்கள்' (Children's Theatres) தோன்ற வேண்டும். குழந்தைகளின் கலைத்திறன் ஓங்கவும் அவர்களின் மகிழ்ச்சி பெருகவும் இத்தகைய கலைக் கூடங்கள் மிகவும் பயன்படும்.

வாழ்க்கை வரலாறு

ஒவ்வொரு துறையிலும் செயற்கரிய செய்த பெரியவர்களைப்பற்றி நம் குழந்தைகளுக்குக் கூறினால் அவர்களது எதிர்காலத்துக்கு அது பெரிதும் உதவியாயிருக்கும். நம் நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தவர்கள், சமூக மேம்பாட்டுக்கு உழைத்தவர்கள், இலக்கிய உலகுக்கு ஏற்றம் தந்தவர்கள், கலைத்துறைக்குப் பெருமை சேர்த்தவர்கள், விஞ்ஞான விந்தைகளைச் செய்து காட்டியவர்கள்—இப்படிப் பலரது வாழ்க்கை வரலாறுகள் இன்று தமிழிலே சிறுவருக்காக வெளிவந்துள்ளன.

எப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவர்கள் பிறந்து வளர்ந்தார்கள், குழந்தைப் பருவத்தில் அவர்கள் எவ்வாறிருந்தார்கள், எப்படி எப்படியெல்லாம் முன்னேறினார்கள், அவர்களிடமிருந்த சிறப்பியல்புகள் யாவை என்பதையெல்லாம் எளிய நடையில் ஆசிரியரே நேரில் கூறுவது போலவும், வினா-விடை முறையிலும் பலர் எழுதியுள்ளனர். இவையெல்லாம் மிகப் பயனுள்ள வரலாறுகள்.

'பூஞ்சோலை' இதழில் நாமக்கல் கவிஞர், திரு. வி. க. போன்றவர்கள் தங்கள் பிள்ளைப் பருவத்தைச் சுவைமிக்க கட்டுரைகளாக எழுதியிருந்தனர். ஆயினும், இரவீந்திரநாத தாகூர், 'என் இளமைப் பருவம்' என்ற தலைப்பில் ஒரு நூலையே எழுதி வெளியிட்டதுபோல் எவரும் தமிழில் வெளியிடவில்லை. தமது பிள்ளைப் பருவத்தைப் பற்றி ஒரு தலைவர் அல்லது அறிஞர் எழுதினால், அது படிக்கும் குழந்தைகளுக்கு மிகவும் சுவையாக இருக்கும்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர், நாமக்கல் கவிஞர், திரு. வி. க. போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களிலிருந்து அவர்களின் பிள்ளைப் பருவத்தை மட்டும் தனியாக எடுத்து வெளியிடலாம்.

சிறுவருக்காகத் தமிழிலே வெளிவந்துள்ள வாழ்க்கை வரலாற்று நூல்களில் பல, பெரியவர்களும் சிறுவர்களும் படிக்கும் வகையில் பொதுவான ஒரு நடையிலே எழுதப்பெற்றுள்ளன. சிறுவர்களை மனக்கண்முன் நிறுத்தி எழுதப்பெற்ற நூல்களும் பல உள்ளன. சில வண்ணப் படங்களுடனும், சில புகைப்படங்களுடனும் வெளிவந்துள்ளன. சித்திரக் கதைகளாகவும் சில வாழ்க்கை வரலாறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒருவரது வாழ்க்கையைப் பிறப்பு முதல் கூறாமல், அவரது வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளை மட்டுமே கூறுகின்ற சில நூல்களும் உண்டு. ஒரே நூலில் பலரது வாழ்க்கையில் நடந்த சுவைமிக்க நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருப்பதையும் காணலாம்.

விஞ்ஞானம்

1957ஆம் ஆண்டில், உலகப் புகழ்பெற்ற நூலகத்துறை வல்லுநர் டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள் தலைமையில் குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒரு குழுவை அமைத்தது. அக் குழு அதுவரை

வெளிவந்திருந்த 263 குழந்தை நூல்களை ஆய்ந்து பார்த்து ஓர் அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கை அறிவியல் நூல்கள் முப்பதுக்கும் குறைவாக இருந்ததைச் சுட்டிக்காட்டியிருந்தது. அன்று முப்பதுக்கும் குறைவாக இருந்த நூல்கள் இன்று முந்நூறாகப் பெருகியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவருக்காக எழுதப்பட்டவையே.

விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளைப் பற்றியும் வெளிவந்துள்ள அந் நூல்களின் பட்டியலைப் பார்த்தவர்கள், "தமிழிலே குழந்தைகளுக்கு இப்படிபட்ட நூல்களெல்லாம்கூட வந்திருக்கின்றனவா!" என வியப்பொடு கேட்கின்றனர்.

பாரதப் பிரதமராக இருந்த நேருஜி, சிறுவருக்கான அறிவியல் நூல்கள் நிறைய வெளிவரவேண்டும், நம் நாட்டுச் சிறுவர்களை மற்ற நாட்டுச் சிறுவர்களைப் போல அறிவியல் துறையிலும் முன்னேறச் செய்யவேண்டும் என்றெல்லாம் அடிக்கடி ஆசையோடு கூறி வந்தார். இதனால், விஞ்ஞான நூல்களைக் குழந்தைகளுக்குத் தரவேண்டுமென்ற எண்ணம் வளர்ந்தது. அதன் விளைவாகப் பல இந்திய மொழிகளிலும் விஞ்ஞான நூல்கள் வெளிவரத் தொடங்கின. சிறுவருக்கான விஞ்ஞான நூல்களை மிகுதியாக வெளியிட்டுள்ள இரண்டு மூன்று இந்திய மொழிகளில், தமிழும் ஒன்று எனத் தெரியவருகிறது.

கதைபோல விஞ்ஞான உண்மைகளைக் கூறுவது, உரையாடல்மூலம் விளக்குவது, முற்றிலும் படங்கள்மூலமே விவரிப்பது எனப் பல முறைகள் கையாளப்பட்டுள்ளன. சிறுவர்கள் சில சோதனைகளைத் தாங்களே வேடிக்கையாகச் செய்து பார்த்து, விஞ்ஞான நுட்பங்களை அறிய உதவும் வகையில் ஏழெட்டு நூல்கள் வெளிவந்துள்ளன. எளிய முறையில், சில விஞ்ஞானக் கருவிகளை எவ்வாறு செய்வது என விளக்கிக்கூறும் சில நூல்களும் உள்ளன.

இளமையிலே சில விஞ்ஞான உண்மைகளையும் நுட்பங்களையும் புரிந்துகொண்டால், சர் சி. வி. இராமனைப் போல, ஜெகதீச சந்திர போஸைப் போல, ஜி. டி. நாயுடுவைப் போலத் தமிழகத்தில் பல விஞ்ஞானிகள் உருவாக வாய்ப்பு ஏற்படுமன்றோ?

பரத நாட்டியக்கலை, புகைப்படக்கலை, பல்வேறு வகையான விளையாட்டுகள், இந்திய மாநிலங்கள், விழாக்கள், விடுகதைகள், புதிர்கள் முதலியன பற்றியும் சிறுவருக்காகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன.

தமிழ் வளர்ச்சிக் கழகம், பெரியவர்களுக்கான கலைக்களஞ்சியத்தைச் சிறந்த முறையில் வெளியிட்டதுபோல், 'குழந்தைகள் கலைக்களஞ்சிய'த்தைப் பத்துத் தொகுதிகளாக வெளியிட்டிருப்பது தமிழ் இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடத் தக்க ஒரு சாதனையாகும்.

அகர வரிசையில் வெளிவந்துள்ள குழந்தைகள் கலைக்களஞ்சியத்தைத் தொடர்ந்து, மேலும் பல கலைக்களஞ்சியங்கள் பல்வேறு முறைகளில் வெளிவரவேண்டும். இக் கலைக்களஞ்சியங்கள் குழந்தைகளுக்கு மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பேருதவியாயிருக்கும்.

கடந்த 30 ஆண்டுகளாகக் குழந்தை இலக்கியம் நல்ல முறையில் தமிழ் மொழியில் வளர்ந்து வருகிறதென்றால், அதற்கு முக்கியக் காரணமாக விளங்குவது 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' என்பதைப் பலரும் அறிவர்.

1950ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற இச் சங்கம் குழந்தைப் புத்தகக் காட்சிகளை நடத்தியும், குழந்தைகள் நாடக விழாவை ஏற்பாடு செய்தும், குழந்தை இலக்கியப் போட்டிகளை நடத்திப் பரிசுகள் வழங்கியும், குழந்தை இலக்கியத்திற்குப் பல்லாண்டுகளாகச் சிறந்த முறையில் பணியாற்றிவரும் எழுத்தாளர்களுக்கும், நீண்ட காலமாகக் குழந்தைப் புத்தகங்களை வெளியிட்டுவரும் பதிப்பாளர்களுக்கும் கேடயங்கள் வழங்கியும், மாநாடுகள் நடத்தி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள குழந்தை எழுத்தாளர்களை ஒன்று கூட்டிக் கருத்தரங்கம், பாட்டரங்கம், உரைக்கோவை எனப் பல நிகழ்ச்சிகள் நடத்தியும், தமிழிலும் பிற மொழிகளிலும் குழந்தை இலக்கியம் வளர்ந்து வருவதை எடுத்துக் காட்டும் வகையில் மலர்கள் வெளியிட்டும் இயன்ற வரையில் தொடர்ந்து தொண்டாற்றி வருகிறது.


ஆண்டுதோறும் நேருஜியின் பிறந்த நாளைக் குழந்தைப் புத்தக வெளியீட்டு விழாவாகக் கொண்டாடுவதும் இச் சங்கப் பணிகளில் ஒன்றாகும். சங்க வேண்டுகோளுக்கிணங்கிப் பல பதிப்பாளர்கள் தயாரிக்கும் குழந்தை நூல்களைத் தக்கவர்களைக் கொண்டு, அவ்விழாவில் வெளியிடச் செய்கிறது. நூலாசிரியர்களும் பதிப்பாளர்களும் அவையோருக்கு உரிய முறையில் அறிமுகப்படுத்தப் பெறுகின்றனர். 1957ஆம் ஆண்டு முதல் இவ்வாறு நேருஜியின் பிறந்த நாளில் வெளியிடப் பெற்ற நூல்களின் எண்ணிக்கை 450! (அதாவது தமிழில் இதுவரை வெளிவந்துள்ள நூல்களில் நான்கில் ஒரு பங்கு!)

அச்சிடப்பெற்ற நூல்களே பெரும்பாலும் அரசினர் பரிசுகளையும் மற்றப் பரிசுகளையும் பெற்று வந்தன. புத்தகமாக வெளியிடுவதற்கான வாய்ப்புக் கிடைக்காமற் போனாலும், புத்தகமாக வெளியிடுவதற்கு ஏற்ற கையெழுத்துப் பிரதிக்கும் பரிசு கிடைக்கும் வாய்ப்பினை அளிக்கிறது இச் சங்கம்.


ஏ. வி. மெய்யப்பச் செட்டியார், ஏவி.எம். அறக் கட்டளையின் சார்பில் ஆண்டுதோறும் இரண்டு தங்கப் பதக்கங்களையும், இரண்டு வெள்ளிப் பதக் கங்களையும், சிறந்த கையெழுத்துப் பிரதிகளுக்கு அளிக்க ஏற்பாடு செய்துள்ளார். கவிதை, சிறு கதை, நாவல், வாழ்க்கை வரலாறு, நாடகம், அறி வியல் என ஆறு துறைகளில் 1972ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் இரு துறைகளுக்கு ஏவி.எம். பரிசுகள் வழங்கப் பெறுகின்றன. ஆண்டுக்கு 4 பிரதி களே பரிசு பெற்றாலும், புத்தகங்களாக வெளியிடு வதற்கான தகுதி, பல கையெழுத்துப் பிரதிகளுக்கு இருப்பதால் அவை பின்னர்ப் புத்தக வடிவம் பெறு கின்றன. இதனால், பல குழந்தை நூல்கள் வெளி வரவும் இப் பரிசுத் திட்டம் மறைமுகமாக உதவு கின்றது.

முதல் முதலாகத் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய விவரத் தொகுப்பு நூலை வெளியிட்ட பெருமை குழந்தை எழுத்தாளர் சங்கத்திற்கு உண்டு. சங்கத்தின் வெள்ளி விழாவையொட்டி 1976-ல் 'தமிழில் குழந்தை இலக்கியம் – ஒரு மதிப் பீடு' என்ற நூலையும் வெளியிட்டுள்ளது. இதில், குழந்தை இலக்கியத்தில் பல்வேறு துறைகளைப் பற்றியும், அந்தந்தத் துறையில் நீண்டகால அனு பவம் பெற்றவர்கள் எழுதியுள்ளனர்.

குழந்தை எழுத்தாளர்களின் மறைந்து கிடக்கும் திறமையை வெளிக் கொணரவும், தொடர்ந்து எழுதி வருவோர்க்கு ஊக்கமளிக்கவும், நல்ல நூல் களை, அதிக அளவில், உயர்ந்த முறையில், குறைந்த விலையில் வெளியிடவும், வெளியிடும் நூல்களைத் தக்க முறையில் குழந்தைகள் பயன்படுத்தவும் தமிழகத்திற்கு ஒரு நிறுவனம் தேவை. 'குழந்தைப் புத்தக டிரஸ்ட்' (Children's Book Trust) போன்ற ஓர் அமைப்பு உருவாக வேண்டுமென்பது குழந்தை இலக்கியத்தில் உண்மையான ஈடுபாடும் ஆர்வமும் கொண்ட பலரது நீண்ட நாள் ஆசை. அந்த ஆசை விரைவில் நிறைவேறுமென எதிர்பார்ப்போமாக!



குறள் காட்டும் வாழ்வு



'முத்தமிழ்க்காவலர்' கி. ஆ. பெ. விசுவநாதம்

வாழ்வு பல வகை. குறள் காட்டும் வாழ்வு ஒரு தனி வகை. அதை உலக மக்களுக்குக் காட்டியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் தமிழகத்துச் சான்றோர்களுள் ஒருவர். அவர் பிறந்து இன்றைக்கு 2011 ஆண்டுகளாயின. அவர் பிறந்தது வளர்ந்தது வாழ்ந்தது அனைத்தும் பாண்டி நாடு; மதுரை.

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மக்களாகவே வாழவேண்டும் என்பது அவரது பேராசை அல்ல, மிகப் பெரிய ஆசை. அதன் விளைவே திருக்குறள். அது காட்டும் வாழ்வே குறள் காட்டும் வாழ்வு. வாழ்வாங்கு வாழ்தல் என்று அது கூறுகிறது. இது வாழவேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள்படும்.

வாழ வேண்டிய முறை என்பது தனக்காக, தன் குடும்பத்துக்காக என்று வாழாமல் பிறருக்காகவும் வாழவேண்டும் என்பதாகும். இவ்வாழ்வு முறையைத் திருக்குறள் கீழ்க்கண்டவாறு பல வகையாக நமக்குக் காட்டுகிறது.

1. எது மக்கள் வாழ்வு ?

ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கு வாழ்வு. தன்னலங்கொண்டு உயரப் பறப்பது பறவை வாழ்வு. தீமை செய்தவருக்குத் தீமை செய்து வாழ்வது தேள், பாம்புகளின் வாழ்வு. தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்களின் வாழ்வு. தீமை செய்தவர்களை மன்னித்து விடுவது மட்டுமன்று, அவர்களுக்கு நன்மையைச் செய்தும் வாழ்வதே மக்கள் வாழ்வு எனக் குறள் கூறுகிறது.

2. வாழ்வுக்குப் பத்து உடைமைகள்

உடலுக்குச் சில உடைமைகளை அணிவது போல உள்ளத்திற்கும் சில உடைமைகளை அணிந்து வாழ்வதே குறள் காட்டும் வாழ்வு ஆகும். அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இப் பத்து உடைமைகளையும் பத்துத் தலைப்புகளில் நூறு குறள்களாக்கி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றைத் தம் உள்ளத்தில் அணிந்து வாழ்ந்தாக வேண்டும் எனக் குறள் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

3. ஒன்பது கட்டளைகள்

பொய்யைச் சொல்லாதே! புலாலை உண்ணாதே! கள்ளைக் குடியாதே! களவை நினையாதே! காமங் கொள்ளாதே! கொலையைச் செய்யாதே! சூதை விரும்பாதே! புறங்கூறாதே! பொறாமையடையாதே! பேராசை கொள்ளாதே! என்ற பத்துக் கட்டளைகளும் நல்வாழ்வு வாழ குறள் இடும் கட்டளைகளாகும்.

4. பழிக்கு அஞ்சி வாழ்தல்

நம் முன்னோர்களாகிய நூலோர்கள் தொகுத்துக் கூறியவற்றுள் எல்லாம் தலையாய அறங்கள்

இரண்டு. அவை பகுத்து உண்ணல் ஒன்று. பல்லுயிர் ஓம்புதல் மற்றொன்று. ஆனால், வாழ் வாங்கு வாழ அவை இரண்டு மட்டும் போதாது. ஒழுக்கமாகவும் நடந்தாக வேண்டும் எனக் குறள் ஒரு புதுவழியைக் காட்டுகிறது. இதைப் "பழியஞ்சு! பகுத்து உண்!" என்ற குறள் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

5. விரும்பி வாழ நான்கு

நகை, ஈகை, இன்சொல், இகழாமை ஆகிய நான்கையும் விரும்பிக் கைக்கொள். அது உன் வாழ்வை வளமாக்கும் என்பதே குறள் காட்டும் வாழ்வு. இந்த நான்கை வரிசைப்படுத்தி யிருப்பதிலும் ஒரு அழகு தோன்றுகிறது. அவை நல்வாழ்வுக்கு எப்போதும் இனிய முகத்தோடு இருத்தல் வேண்டும். அது முடியாவிடில் இயன்றவரை ஏதாவது கொடுத்து அனுப்பிவிடவேண்டும். அதுவும் முடியாவிடில் இனிய சொற்களையாவது சொல்லி அனுப்பிவிட வேண்டும். அதுவும் முடியாவிடில் அவர்களை இகழ்ந்து கூறாமலாவது இருக்கவேண்டும் என்பன. எப்படி? குறள் காட்டும் வாழ்வு?

6. வெறுத்து வாழ நான்கு

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன அவை. பிறரைக் கண்டு பொறாமைப்படாதே! பிறர் பொருளின்மீது ஆசை வைக்காதே! எவர் மீதும் சினம் கொள்ளாதே! எப்போதும் கடும் சொற்களைச் சொல்லாதே! இந்நான்கும் நம் வாழ்வுக்கு ஒளிவீசும் எனக் குறள் கூறுகிறது.

7. வழங்கி வாழ நான்கு

அன்பு உள்ளம் கொண்ட சான்றோர்கள் தம் குருதியை, நரம்பை, தோலை மட்டுமல்ல; தன் எலும்பையும் பிறருக்கு வழங்கி வாழ்வர் என்ற கருத்தை 'எலும்பும் உரியர் பிறர்க்கு' என்ற குறட்சொற்றொடர் கூறிக்கொண்டிருக்கிறது.

8. வாழ்வுக்கு வேண்டிய நட்பு

நட்பு நல்வாழ்வுக்குத் தேவை. ஆகவே, நட்பைக் கைக் கொள்! அதையும் ஆராய்ந்து கொள்! தீ நட்பு கொள்ளாதே! பழமையைத் தள்ளாதே! கூடா நட்பு கூடாதே! சிற்றினம் சேராதே! பெரியோரை வெறுக்காதே! என்ற ஏழு தலைப்புகளில் எழுபது குறள்களைக் கூறி வாழ்வுக்கு வழி காட்டுகிறது குறள்.

9. கற்றபடி நிற்றல்

படி! எல்லாவற்றையும் படிக்காதே! படிக்க வேண்டியவற்றைப் படி! அதையும் பிழையறப் படி! மனதில் உள்ள கசடு அறும்படி படி! கற்றிலன் ஆயினும் கேள்! கற்றவற்றையும் கேட்டவற்றையும் சிந்தித்து உணர்! அந்த அளவோடு விட்டுவிடாதே. அதன்படி நட! எனக் குறள் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

10. உள்ளத்தை உயர்த்தி வாழ்

நல்வாழ்வு வாழவேண்டுமானால் உள்ளத்தை உயர்த்தி வாழ். சிறியன சிந்தியாதே. எப்போதும் பெரியதையே எண்ணு. அழுத்தமாக எண்ணு, ஆழமாக எண்ணு. அப்படியே ஆவாய்! வெள்ளம் உயர உயர மலர் உயர்வதுபோல உன் உள்ளம் உயர உயர நீ உயர்வாய்! நல் வாழ்வு வாழ உள்ளத்தை உயர்த்து! எனக் கூறுகிறது குறள்.

11. யார் பெரியார்?

நாம் ஒரு காலத்தில் பணக்காரர், நிலக்காரர், முதல்காரர் ஆகியவர்களைப் பெரியர் என நினைத்திருந்தோம். அடுத்து, படித்தவர், பட்டம் பெற்றவர், பதவியிலிருப்பவர் பெரியர் என எண்ணினோம். பின், வயதில் முதிர்ந்தோர் பெரியோர் எனக் கருதினோம். இப்பொழுது எழுத்தர்களையும் பேச்சர்களையும் பெரியோர் என எண்ணுகிறோம். குறள் இவற்றை ஒப்பவில்லை. யார் பெரியர்? என்ற கேள்விக்கு — குறள் கூறும் விடை எழுத்தரல்ல, பேச்சரல்ல 'செய்வர் பெரியர்' என்பதே. இதிலிருந்து மலையளவு பேசுவதைவிடக் கடுகளவு செய்து வாழ்வதே நல்லது எனத் தெரிகிறது.

12. நா நலம் என்னும் நலமுடைமை

"நா நலம் என்னும் நலமுடைமை" என்பது அரைக்குறள். அடுத்த அரைக் குறளும்கூட 'அந்த நலம் வேறு எந்த நலத்திலும் இல்லை' என்பதே. அது மட்டுமன்று, 'நா நலம்' என்பதே 'நலமுடைமை' என்பதுதான், இதுதான் அதன் உண்மையான பெயர் என்றும் குறள் கூறிக்கொண்டிருக்கிறது.

அளவோடு பேசுதல், ஆராய்ந்து கூறுதல், சொன்னபடி நடத்தல், சொல்லியபடி இருத்தல், இனியவை கூறுதல், எவரையும் வையாதிருத்தல் ஆகியவை அனைத்தும் நா நலத்தின்பாற் பட்டவை என்று குறள் கூறுகிறது. இதையே, கண்டு ஒன்று சொல்லேல்! சுளிக்கச் சொல்லேல்! சொற்சோர்வு படேல், பழிப்பன பகரேல், மிகைப்படச் சொல்லேல், வெட்டெனப் பேசேல், வாது முற்கூறேல், ஓரஞ் சொல்லேல் என ஔவையும் கூறுகிறார். இவற்றால் நல்வாழ்வுக்கு ஏற்றதுநா நலமே என்று குறள் கூறுகிறது.

13. தோற்றத்தைக் கண்டு மயங்காதே

கருப்பாக இருக்கிறது, கோணலாக இருக்கிறது, நாரும் நரம்புமாக இருக்கிறது என்று வெறுத்து

விடாதே 'வீணை'யை. நீ இன்பத்தை இழந்து விடுவாய்! சிவப்பாக இருக்கிறது, அழகாக இருக்கிறது, நேராக ஒழுங்காக இருக்கிறது என்று நெஞ்சில் வைத்துவிடாதே 'அம்பை'. அது உன்னைக் கொன்றுவிடும். இவை இரண்டு மட்டுமல்ல, வேறு எதனையும் தோற்றத்தைக் கண்டே மயங்கி விடாதே, வாழ்வு பாழாகிவிடும் என எச்சரிக்கை செய்கிறது குறள்.

14. பொருள் தேடும் வழி

பெற்ற தாயின் வயிறு பசிக்கக் காண்பது பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடு பட்டேனும் அத் தாயின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டியது பிறந்த மகனின் கடமை. ஏனெனில், அது அவன் குடியிருந்த கோயில். என்றாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருளைத் தேடி வந்து தாயின் பசியைப் போக்க எண்ணுவது தவறு. எண்ணினால் அத்தகையவரைச் சான்றோர் பழித்து ஒதுக்கி விடுவர் எனப் பிறந்த மகனின் வாழ்வுக்கும் வழி கூறுகிறது குறள்.

15. வினைத்திட்பம்

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டியது பொருளுதவி அல்ல, நண்பர்களின் துணை அல்ல, மனைவி மக்களின் ஒத்துழைப்பல்ல, அரசாங்கத்தின் ஆதரவு அல்ல, வேறு எதுவுமே அல்ல. அவனுக்கு வேண்டியது மன உறுதி ஒன்றே. இதை 'வினைத் திட்பம்' என்பது 'மனத்திட்பம்' என்ற குறள் காட்டுகிறது.

16. மேன்மையடைய வழி

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்பது அரைக் குறள். இதற்குமூன்று பொருள்கள் உள்ளன. ஆடை, அணி, பொன், மணி, பட்டம், பதவி முதலியவற்றால் எவரும் மேன்மையடைய முடியாது; ஒழுக்கம் ஒன்றினாலேயே அதை அடைய முடியும் என்பது ஒன்று. ஒழுக்கத்தினாலேயே உயர்ந்துவிட்ட ஒருவன் பின் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்ய நேர்ந்தாலும் உலகம் அதை நம்பாது. அப்போதும் அவன் மேன்மையையே அடைவான் என்பது மற்றொன்று. ஒழுக்கத்தினால் உயர்ந்த ஒருவர் பின் வறுமையால் தாழ்ந்து போனாலும் கண்டோர் அவரை 'நன்றாக வாழ்ந்தவர்' என்றே உயர்வாகக் கூறி மகிழ்வர் என்பது மூன்று.

'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்பது மறு பாதிக் குறள். இதற்கும் மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று, ஒழுக்கம் தவறியவன் எல்லோராலும் பழிக்கப்படுவான் என்பது. மற்றொன்று, ஒழுக்கம் தவறியவன் பின்பு திருந்தி நல்ல காரியங்களைச் செய்தாலும் உலகம் நம்பாது. அவன் முன் செய்த பாவங்களைப் போக்கவே இவற்றைச் செய்கிறான், எனக் கூறிப் பலரும் பழி தூற்றுவர் என்பது. இன்னொன்று, அவன் செய்யாத – பிறர் செய்த தவறுக்கும் பழி ஏற்க நேரிட்டுவிடும் என்பது. இந்த மூன்றாவது கருத்தை இக் குறளிலுள்ள 'எய்தாப் பழியையும் எய்துவர்' என்ற சொற்றொடர் நமக்கு விளக்குகிறது. எப்படி, குறள் காட்டும் வாழ்வு?

17. செயல் திட்டம்

நல்வாழ்வுக்கு வழி 'நற்செயல்களைச் செய்வது' என்பது திருக்குறளின் கருத்து. இதற்கு 120 குறள்களைப் பன்னிரண்டு தலைப்புகளின்கீழ் கூறுகிறார் வள்ளுவர். அவை: ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கமுடைமை என அடிப்படை மூன்று, அடுத்து இடமறிந்து செய்தல், காலமறிந்து செய்தல், வலியறிந்து செய்தல் என அரைப் பகுதியில் மூன்று; தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என முக்காற் பகுதியில் மூன்று; வினை செயல்வகை, வினைத்திட்பம், வினைத்தூய்மை என இறுதியில் மூன்று; ஆகப் பன்னிரண்டு. இவை அனைத்தும் நல்லவற்றைச் செய்து நல்வாழ்வு வாழக் காட்டும் வழிகள். இதை அந்த அளவோடு அவர் விட்டுவிடவில்லை. 'செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிடினும் வாழ்வு கெடும். செய்யத் தகாதவற்றைச் செய்தாலும் வாழ்வு கெடும்' என எச்சரிக்கையும் செய்கிறது குறள்.

18. மேலல்லார் மேலல்லர்

ஒருவன் மேலேயிருக்கிறான் நாம் பார்க்கிறோம். மற்றொருவன் கீழேயிருக்கிறான் நாம் பார்க்கிறோம். குறள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. மறுக்கிறது. உள்ளபடியே மேலேயும் கீழேயும் பார்க்கின்ற நாம் இதை எப்படி நம்புவது? நம்பாத நம்மையும் நம்ப வைக்கிறது குறள். ஒரு தராசை எடுத்து, இடது தட்டில் ஒரு படிக்கல்லைப் போட்டுத் தராசைத் தூக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். ஒரு தட்டு தாழ்ந்தும் ஒரு தட்டு உயர்ந்தும் காணப்படுகிறது. வள்ளுவர் நம்மை நோக்கிக் கேட்கிறார், ஏன் இந்தத் தட்டு உயரத்தில் இருக்கிறது? அதில் ஒன்றுமே இல்லை; அதனால் உயரத்தில் இருக்கிறது. இன்னொரு தட்டில் சரக்கிருக்கிறது. அதனால் தாழ்ந்து இருக்கிறது. இப்போது குறள் கேட்கிறது. நம்மை, 'உயரத்தில் இருப்பதெல்லாம் உயர்ந்ததா?' என்று. இக் கருத்தை ''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும் கீழல்லார் கீழல் லவர்'' என்ற குறள் விளக்குகிறது. இதனால் உலகிலுள்ள மக்களுள் அறிவில்லாத சிலரும் மேலே இருப்பர்; அறிவுடைய சிலரும் கீழே இருப்பர் என அறிந்து வாழ்வதே வாழ்வு என அறிவுறுத்துகிறது இக் குறள்.

19. குன்றின் அனையாரும் குன்றுவர்

திருக்குறளில் ஒருசொற் குறள்கள் எனப் பல உள. அவற்றில் ஒன்று இது. இக் குறளில் நான்கு குன்றுகளைக் காணலாம். முதல் குன்று மலை. இரண்டாவது குன்று குறுகுதல். மூன்றாவது குன்று இழிசெயல். நான்காவது குன்று குண்டுமணி. குறள் இதுதான். ''குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ குன்றி அனைய செயின்.'' மலைபோன்று உயர்ந்திருக்கும் மக்களும்கூடப் பழிக்கத் தகுந்த இழிசெயல்களை குண்டுமணி அளவு செய்தாலும் கூடக் குறுகிக் குன்றிப்போய்விடுவர் என்பது இதன் பொருள். நல்வாழ்வு வாழ விரும்புகிறவர்களுக்கு இக்குறள் காட்டும் எச்சரிக்கை மிகப் பெரியதாகும்.

20. சிதைவிடத்து ஒல்கார் உரவோர்

நற்செயல்களைச் செய்து நல்வாழ்வு வாழ முன் வருபவருக்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். அதற்குச் சில இடையூறுகளும் வரும். சிலர் தூற்றுவர். சிலர் துன்புறுத்துவர். இவற்றைக் கண்டு கலங்கிவிடக் கூடாது. காட்டில் வாழும் யானையானது தன் உடல் முழுவதும் வேடர்களின் அம்புகளால் தாக்கப் பெற்றுக் குருதி ஒழுகிக்கொண்டிருந்தபோதும் அஞ்சி நடுங்காமல், பீடு நடை நடந்து தன் பெருமையை நிலை நிறுத்தும். அதைப்போலவே 'மன உரம் படைத்த மக்களும் துன்பம் வந்த காலத்துச் சோர்வு அடையமாட்டார்கள்' என்ற கருத்தை, ''புதையம்பிற் பட்டுப் பாடூன்றும் களிறு'' எனக் காட்டானையைக் காட்டி நம்மை நிமிர்ந்து வாழச் செய்கிறது இக்குறள்.

21. மனிதனா ? தெய்வமா ?

வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவனே மனிதன் எனவும், அவன் மனிதனாயினும் மற்றவர்களால் தெய்வமாகக் கருதப்படுவான் எனவும், அவன் இம் மண்ணுலகில் வாழ்ந்தாலும் அது விண்ணுலகாகக் கருதப்படும் எனவும் ஒரு குறள் கூறுகிறது. அது,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்பது.

இவ்வாறு வாழ முடியாதவர்கள் வாழ்வதைவிடச் சாவது நல்லது என வாழ்வுக்கு வழி காட்டிய குறள் சாவுக்கும் வழி காட்டுகிறது.

அவை:

1. விருந்தினர் வீட்டில்' வந்திருக்க அவருக்கு வழங்காமல் நீ மட்டும் உண்ணாதே. அது சாவா மருந்தாக இருப்பினும் நீ அதை உண்டு வாழ்வதை விட உண்ணாமல் சாவது நல்லது.

2. உன்மீது அன்புள்ளவர்கள் உன் நிலையைப் பார்த்து நஞ்சைக் கொடுத்து உண்ணச் சொன்னாலும் அதை மறுக்காது உண்டு சாவதே நல்லது.

3. 'மானத்தை இழப்பதா உயிரை இழப்பதா' என்ற நிலை உனக்கு வந்துவிட்டால் மானத்தை இழவாமல் உயிரை இழந்து மடிவது நல்லது.

4. உன்னைப் புரந்தவர்களும், உன்னால் புரக்கப் பெற்றவர்களும் கலங்கிக் கண்ணீர் வடித்துக் கதறி அழும்படியான ஒரு சாவு உனக்கு வருமானால் அதை அன்போடு ஏற்று மடி. அத்தகைய சாவு ஒன்று தானே வராவிடில் அதைப் பிச்சை எடுத்தாகிலும் ஏற்று மடிவது நல்லது.

5. பொய் பேசியும் புறங்கூறியும் வாழாதே. இவ்விரண்டையும் எப்போதும் செய்ய எண்ணாதே. 'பொய் பேசித்தான் வாழவேண்டும், புறங்கூறித் தான் வாழவேண்டும்' என்ற ஒரு நிலை வந்து விட்டால் நீ உயிர் வாழாமல் இறந்துவிடுவதே நல்லது. அது அறங்கூறும் ஆக்கம் தரும்.

6. சாவைப் போலத் துன்பம் தருவது எதுவும் இல்லை. என்றாலும் இரப்போர்க்கு எதுவும் ஈய முடியாதபோது வாழ்ந்து துன்பப்படுவதைவிட இறந்துபோவதே இனிதாக இருக்கும்.

7. வாழ முடியாதவர்கள் சாவதற்குப் பயப்பட வேண்டியதில்லை. இறப்பதும் பிறப்பதும் உறங்குவதையும் விழிப்பதையும் போன்றது.

இதில் 'அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை எனக் கூறுகிறது ஒரு குறள். வாழ முடியாதவர்களுக்கு இந்த ஏழு குறள்களும் சாவுக்கும் வழி காட்டுகின்றன. இவை தமிழ் வாழ்வும் தமிழரின் வாழ்வும் தமிழகத்தின் வாழ்வுமாகும்.

இவையும் இவை போன்ற பிறவும் மக்களாய்ப் பிறந்தவர்கள் மக்களாக வாழ, குறள் காட்டும் நெறிகளாகும். இவற்றைப் படித்து மகிழ்வதைவிடப் பயன்படுத்தி வாழ்வது நல்லது.

வாழட்டும் தமிழகம்!
வளரட்டும் குறள்நெறி!!



திரைப்பட இயக்குநர் **ப. நீலகண்டன்**

'கப்பல்' என்ற சொல்லின் முழுமையான 'விளக்கம் எந்தக் கலைக்களஞ்சியத்திலும் இல்லை; அது கடலில் மிதந்துகொண்டிருக்கிறது.

இதைப் போலவே, தாஜ்மகாலின் அழகைப்பற்றி எத்தனை வர்ணனைகளைப் படித்தாலும், அதன் உண்மையான அழகைப் புரிந்து துய்க்கவேண்டுமென்றால், ஆக்ராவிலுள்ள யமுனை நதிக்கரைக்குச் சென்றால்தான் முடியும்.

இந்த எளிய உண்மையே, திரைப்படம் என்ற அரிய கலையின் அடிப்படை.

திரைப்படத்தின் முக்கிய அம்சம் காட்சியாகக் காட்டுவதுதான்.

'காதுகள் மறந்துவிடும்; கண்கள் எப்போதும் நினைவு வைத்திருக்கும்' (Ears forget; but eyes always remember) என்று கூறுவார்கள்.

நாம் ஒன்றைப் படிக்கும்போதும் கேட்கும் போதும் அங்கே மொழிக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

ஆனால் அதையே காட்சியாகப் பார்க்கும்போது, மொழியின் முக்கியத்துவம் குறைந்துபோய்விடுகிறது.

'கப்பல்' என்ற சொல்லைப் படிக்க நிச்சயமாகத் தமிழ் தெரிந்திருக்கவேண்டும்.

ஆனால், 'கப்பலை'க் கண்ணால் பார்த்துப் புரிந்துகொள்ளத் தமிழ் வேண்டியதில்லையே! இதைப் போலவே ஆங்கில மொழியிலுள்ள ஒரு கதையைப் புரிந்துகொள்ள ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் ஆங்கிலம் அறியாதார்கூட ஆங்கிலப் படங்களைப் புரிந்து ரசிக்கிறார்கள் அல்லவா?

உலகில் நூற்றுக்கணக்கான மொழிகள் இருந்தாலும், மக்கள் அனைவருமே புரிந்துகொள்ளக் கூடிய உலக மொழி திரைப்படம் ஒன்றுதான்.

ஆனால், இது உதடுகள் பேசும் மொழியல்ல. உள்ளத்தால் பேசும் மொழி; உணர்ச்சிகளால் வடிவம் பெறும் மொழி.

ஒரு திரைப்படம் சிறப்பான வெற்றி பெறுகிறது என்றால், அதன் அடிப்படைக் காரணம் எது? நடிப்பா? இசையா? ஒளிப்பதிவா? உரையாடலா?

ஒரு கதை.........

இரவு நேரம்.........இடியும் மழையும் ஆட்சி செய்துகொண்டிருந்தன.

நான்கு வழிப்போக்கர்கள், பாதையோரத்திலிருந்த பாழடைந்த மண்டபம் ஒன்றைச் சரணடைந்தனர்.

அவர்கள் கால் வைத்ததும், மண்டபம் கிடுகிடுவென்று ஆடத் தொடங்கிவிட்டது.

ஒருவன் சொன்னான்: "நம்மில் யாரோ ஒரு பாவி இருக்கிறான். ஒவ்வொருவராக வெளியேறுவோம். எவன் சென்றதும் மண்டபம் ஆடுவது நிற்கிறதோ, அவன்தான் பாவி!"

மற்றவர்களும் ஒப்புக்கொண்டனர்.

முதலில் ஒருவன் வெளியே சென்றான்............ மண்டபம் ஆடிக்கொண்டேயிருந்தது.

இப்படியே இரண்டாமவனும், மூன்றாமவனும் வெளியே வந்தனர்.

மண்டபத்தின் ஆட்டம் நிற்கவில்லை.

நான்காமவன்தான் பாவியோ?

அவனும் வெளியேறினான். இதுவரை ஆடிக் கொண்டிருந்த மண்டபம், ஆட்டத்தை நிறுத்த வில்லை.........மாறாக, இடிந்து விழுந்தது.

இப்போதுதான் மற்றவர்களுக்குப் புரிந்தது...... 'அவன்தான் புண்ணியவான்; அவனுக்காகவே மண் டபம் இடிந்து விழாமலிருந்தது' என்ற உண்மை.

''படத்தின் வெற்றிக்கு நட்சத்திரங்கள்தாம் முக்கியம்; இல்லை இசைதான் முக்கியம்; இரண்டு மில்லை, ஒளிப்பதிவுதான் முக்கியம்......'' எனச் சொல்வதெல்லாம், தாங்கள்தான் புண்ணியவான் கள் என்று முதல் மூன்று வழிப்போக்கர்களும் எண்ணிக்கொண்டதைப் போல்தான்.

உண்மையில், ஒரு படத்தின் வெற்றிக்கு அடிப் படையான காரணம் கதைதான்.

நல்ல கதை ஒன்று அமைந்துவிட்டால், தாய்க் கோழியைத் தேடி வரும் குஞ்சுகள் போல், நடிப் பும், படப்பிடிப்பும், இதயத்தைத் தொடும் உரை யாடல்களும், இனிய இசையும் தாமே ஓடிவந்து ஒட்டிக்கொள்ளும்.

ஸ்டாலின் கூறினார்: ''ரஷ்யா முன்னேற மூன்று வழிகள் இருக்கின்றன—புரட்சி, புரட்சி, புரட்சி!'' என்று.

அதைப் போலவே, ஒரு திரைப்படம் வெற்றி பெறவும் மூன்று வழிகள் இருக்கின்றன—கதை, கதை, கதை!

சமூகத் தொண்டர்களுக்குச் சத்தியம் வேண்டும்; அரசாங்க ஊழியர்களுக்குக் கடமை வேண்டும்; அரசியல்வாதிகளுக்கு நேர்மை வேண்டும்; பெண்ணுக்குக் கற்பு வேண்டும்; திரைப்படத் துக்குக் கதை வேண்டும்.

மக்கள் எதற்காகத் திரைப்படத்துக்கு வருகிறார் கள்?

பொழுதுபோக்குக்காக மட்டுந்தான் என்று சொல்ல முடியாது.

உறக்கத்தைக் கெடுத்துக்கொண்டு இரவு இரண் டாம் காட்சிக்கு வருகிறார்களே, அவர்களெல்லாம் பொழுது போகவில்லை என்றா வருகிறார்கள்?

கடற்கரை, பூங்கா, நண்பர்களுடன் அரட்டை என்று எத்தனையோ இலவசப் பொழுதுபோக்கு கள் இருக்கின்றனவே....?

அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, திரையரங்கு களில் முட்டி மோதிக்கொண்டு வந்து பணத்தைக் கொட்டிக் கொடுப்பது ஏன்?

திரைப்படம் ஓர் அற்புதமான கலை.

கலையின் முக்கியமான நோக்கம், எந்தக் கலை யானாலும் அது நல்லதையே சொல்ல வேண்டும். நல்லதைச் சொன்னால்தான் அது கலை. இந்தக் கலைகளிலேகூட மிகப் பெரியது 'மனிதன் எப்படி வாழவேண்டும்?' என்ற கலைதான்!

அந்தப் பெரிய கலைக்குத் துணை செய்வதாக, அத்துடன் இணைந்து நிற்பதாகவே திரைப்படக் கலையும் இருக்கவேண்டும்.

நான்கு சுவர்களுக்கு நடுவே இருளில் அமர்ந்து, மணிக்கணக்காக ஒரு வெண்திரையையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அந்த மக்களுக் குப் பயன்படும் வகையில் உருப்படியாக எதையா வது திரையில் காட்டவேண்டாமா?

நாம் காட்டுகின்ற திரைப்படம் காண்போரின் மூளைக்கு வேலை கொடுக்க வேண்டும்; அவர்க ளுடைய கற்பனையைத் தூண்ட வேண்டும்; இதயத் தைத் தொடவேண்டும்; உற்சாகத்தை வழங்கவேண் டும்; தன்னம்பிக்கையை உண்டாக்க வேண்டும்; வாழ்க்கையோடு போராடும் வலிமையைக் கற்றுத் தர வேண்டும்; சமூகத்துக்கும் அரசாங்கத்துக்கும் அவர்களுடைய கடமையை உணர்த்துவதாக இருக்க வேண்டும்......

இவற்றையெல்லாம் சுவையான கதைகளின் வாயி லாகச் செய்ய வேண்டும்.

திரையில் சொல்லப்படும் கதைகள் எப்படி இருக்க வேண்டும்?

''உண்மையான மனிதர்களைப்பற்றியும், உண் மையான பிரச்சினைகளைப்பற்றியும் சொல்வது தான் ஒரு நல்ல கதை'' என்கிறார் ரஷ்ய நாட்டுத் திரைப்பட இயக்குநரான ஐசன்ஸ்டீன்.

வாழ்க்கையின் நிழல் படியும்போதுதான் திரைக் கதை வலிவு பெறுகிறது; பொலிவடைகிறது.

இருக்கின்ற வாழ்க்கையைக் காட்டினால் மட்டும் போதுமா?

அத்துடன், ஓர் இலட்சிய வாழ்க்கையை மான சீகமாக உணரச் செய்து, அதை நோக்கி மக்களை அழைத்துச் செல்வதாகவும் இருக்கவேண்டும்.

எல்லா வகைக் கதைகளுக்குமே இது பொருந்து மென்றாலும், திரைப்படத்தின் சக்தியைக் கருத்தில்

கொண்டு பார்க்கும்போது, திரைக் கதைக்கு இது அதிகமாகப் பொருந்துகிறது.

ஒரு திரைப்படத்தின் வெற்றிக்கு நல்ல கதைதான் காரணம் என்று கூறினேன்.

ஆனால், ஒரு நல்ல கதை இருந்தால் மட்டும் போதாது. அதை ஒரு நல்ல திரைக்கதையாகவும் அமைக்கவேண்டும்.

சமையலுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் இருந்தால்கூட அவற்றை அளவாகச் சேர்த்து, பதமாகச் செய்யும்போதுதான் உணவில் சுவை கூடுகிறது.

திரைக்கதையை அமைப்பதும், இதைப் போன்றதுதான்!

படிக்கின்ற கதையைவிட, படமாகப் பார்க்கின்ற கதையை அமைப்பது கடினமான செயல்.

புத்தகக் கதைக்கும் திரைக்கதைக்கும் ஓர் அடிப்படையான வேற்றுமை உண்டு.

ஒருவன் 'என்ன செய்தான்' என்று சொல்வது புத்தகக் கதை; அதை 'எப்படிச் செய்தான்?' என்று கூறுவதுதான் திரைக்கதை.

எனவே, திரைக்கதையில் வர்ணனைகளைவிடச் சம்பவங்களுக்குத்தான் முதலிடம். உரையாடல்களைவிட உணர்ச்சிகளே முக்கியத்துவம் பெறுகின்றன.

வெறும் சம்பவங்கள் மட்டும் போதா. அவற்றில் நாடகச் சுவை (Dramatic Presentation) இருக்க வேண்டும். எந்தச் சம்பவத்தை எப்படி அமைத்தால் திகைப்பை ஏற்படுத்த முடியும் என்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிந்திக்கவேண்டும். அது புதுமையானதாய் இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அழகிய பெண் என்றால், அவள் உடலில் வளைவுகள் இருக்கும்!

அதைப் போலவே, ஒரு நல்ல திரைக்கதை என்றால், அதில் சுவையான திருப்பங்கள் இருக்க வேண்டும்.

மற்றொன்று. மக்களைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் திரைக்கலைக்கு உண்டு. அந்த ஆற்றலின் நுணுக்கத்தைத் திரைக் கதையில் கையாள வேண்டும்.

எல்லாவற்றிலும் மிக முக்கியமானது—''இந்தக் கதையின்மூலமாக மக்களுக்கு நாம் என்ன சொல்ல விரும்புகிறோம்?'' என்பதுதான்.

எதைச் சொன்னாலும், உண்மையைச் சொல்ல வேண்டும். உண்மையைச் சொல்வதாக எண்ணிக் கொண்டு நாட்டில் நடப்பவை எல்லாவற்றையும் திரையில் காட்டுவதும் கூடாது.

எங்கோ ஓரிடத்தில் நடக்கின்ற சில தவறுகளைப் பெரிதுபடுத்திக் காட்டுவதால் சமூகத்தின் பண்பே கெட்டுப்போகும்.

'நாம் படத்தில் காட்டுகின்ற காட்சிகளை ஊர் மக்கள் மட்டும்தான் பார்க்கிறார்கள்' என்று எண்ண வேண்டாம். நம் வீட்டுக் குழந்தைகளும் பார்க்கிறார்கள்.

''திரைப்படம் மக்களைக் கெடுத்துவிடுகிறது'' என்று சிலர் கூறுகிறார்கள்.

இராவணனும் துரியோதனனும் எந்தத் திரைப் படத்தைப் பார்த்துக் கெட்டுப் போனார்கள்?

திரைப்படம் தோன்றுவதற்கு முன்பே தீயவர்கள் இருந்திருக்கிறார்கள். திரைப்படங்களின் செல்வாக்கு மிகுந்துள்ள இந்தக் காலத்திலும் நல்லவர்கள் இருக்கிறார்கள்.

திரைப்படம் ஓர் உலக மொழி.

ஒரு மொழியைச் சிலர் கொச்சையாகப் பயன்படுத்துவதால், அந்த மொழியே தேவையில்லை என்று கூற முடியுமா?

திரைக்கலை ஒரு கோயில்..........

கோயிலிலுள்ள தெய்வச் சிலைகளைத் திருடுவதற்கென்றே சிலர் வருவது உண்டு. அதனால் கோயிலே கூடாது என்று சொல்கிறோமா?

திரைப்படம் ஒரு வலிமையுள்ள சாதனம். அதனாலேயே அதற்குள்ள பொறுப்பும் அதிகமாகிறது.

வட்டமான பெட்டிக்குள்ளே அடைக்கப்பட்டிருக்கும் படச்சுருள், வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகளை வலியுறுத்துவதாகவே இருக்க வேண்டும்.


நச்சுப் பிரசாரத்தில் ஈடுபட்டால், படப் பெட்டி பாம்புப் பெட்டியாக மாறிவிடும்!

திரை 'வெண்மை'யாகவே இருக்கட்டும்! அதில் 'கறை' படிய வேண்டாம்!

கதைகள் உண்மைகளை விளக்கும் கலைப் படைப்புகளாகவே திகழட்டும்! கலப்படம் செய்து விற்கப்படும் வியாபாரப் பொருள்களாக வேண்டாம்!

'திரையின் வளமான கதை தொடர வேண்டுமென்றால், கதைக்கும் மனசாட்சிக்கும் இடையில் எந்தத் 'திரை'யும் விழுந்துவிடக்கூடாது.

வளர்க திரைக்கலை!



கவலை மறந்தோம்!

காதல் தோணியில் இணைந்தோம்! — நாம்
கவலை மறந்தோம்!

இரண்டு இளமை நதிகள்
இணையும் பருவத் துறையில்
திரளும் வெள்ளப் பெருக்கில்
தளும்பும் அலையில் மிதப்பதான (காதல்)

பருவ வானும் மழையும்
பசியும் அமுத உணவும்
விரும்பி இணைந்து விளையுமின்ப
வேகத்திலே மகிழ்ந்து அசையும் (காதல்)

கொண்டு பார்க்கும்போது, திரைக் கதைக்கு இது அதிகமாகப் பொருந்துகிறது.

ஒரு திரைப்படத்தின் வெற்றிக்கு நல்ல கதைதான் காரணம் என்று கூறினேன்.

ஆனால், ஒரு நல்ல கதை இருந்தால் மட்டும் போதாது. அதை ஒரு நல்ல திரைக்கதையாகவும் அமைக்கவேண்டும்.

சமையலுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் இருந்தால்கூட அவற்றை அளவாகச் சேர்த்து, பதமாகச் செய்யும்போதுதான் உணவில் சுவை கூடுகிறது.

திரைக்கதையை அமைப்பதும், இதைப் போன்றதுதான்!

படிக்கின்ற கதையைவிட, படமாகப் பார்க்கின்ற கதையை அமைப்பது கடினமான செயல்.

புத்தகக் கதைக்கும் திரைக்கதைக்கும் ஓர் அடிப்படையான வேற்றுமை உண்டு.

ஒருவன் 'என்ன செய்தான்' என்று சொல்வது புத்தகக் கதை; அதை 'எப்படிச் செய்தான்?' என்று கூறுவதுதான் திரைக்கதை.

எனவே, திரைக்கதையில் வர்ணனைகளைவிடச் சம்பவங்களுக்குத்தான் முதலிடம். உரையாடல்களைவிட உணர்ச்சிகளே முக்கியத்துவம் பெறுகின்றன.

வெறும் சம்பவங்கள் மட்டும் போதா. அவற்றில் நாடகச் சுவை (Dramatic Presentation) இருக்க வேண்டும். எந்தச் சம்பவத்தை எப்படி அமைத்தால் திகைப்பை ஏற்படுத்த முடியும் என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிந்திக்கவேண்டும். அது புதுமையானதாய் இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அழகிய பெண் என்றால், அவள் உடலில் வளைவுகள் இருக்கும்!

அதைப் போலவே, ஒரு நல்ல திரைக்கதை என்றால், அதில் சுவையான திருப்பங்கள் இருக்க வேண்டும்.

மற்றொன்று. மக்களைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் திரைக்கலைக்கு உண்டு. அந்த ஆற்றலின் நுணுக்கத்தைத் திரைக் கதையில் கையாள வேண்டும்.

எல்லாவற்றிலும் மிக முக்கியமானது—''இந்தக் கதையின்மூலமாக மக்களுக்கு நாம் என்ன சொல்ல விரும்புகிறோம்?'' என்பதுதான்.

எதைச் சொன்னாலும், உண்மையைச் சொல்ல வேண்டும். உண்மையைச் சொல்வதாக எண்ணிக் கொண்டு நாட்டில் நடப்பவை [illegible] திரையில் காட்டுவதும் கூடாது.

எங்கோ ஓரிடத்தில் நடக்கின்ற சில [illegible] பெரிதுபடுத்திக் காட்டுவதால் சமூகத்தில் [illegible] கெட்டுப்போகும்.

'நாம் படத்தில் காட்டுகின்ற காட்சிகளை [illegible] மக்கள் மட்டும்தான் பார்க்கிறார்கள்' என்று [illegible] வேண்டாம். நம் வீட்டுக் குழந்தைகளும் [illegible]கிறார்கள்.

''திரைப்படம் மக்களைக் கெடுத்துவிடுகிறது'' என்று சிலர் கூறுகிறார்கள்.

இராவணனும் துரியோதனனும் எந்தத் திரைப் படத்தைப் பார்த்துக் கெட்டுப் போனார்கள்?

[illegible]


லதா



சேர்ந்து பாடுவோம்

திரைப்பட இசை இயக்குநர் M. B. சீனிவாசன்

சேர்ந்து பாடுவதிலிருந்துதான் இசையே பிறந்தது என்பது மனித வரலாற்றில் மறுக்க முடியாத ஓர் உண்மையாகும்.

விலங்குகளிலிருந்து சிறுகச் சிறுக மாறுபட்டு, மெல்ல மெல்ல வளர்ச்சியுற்றுத் தோன்றிய மனிதன் மற்ற விலங்குகளைப் போலவே, தொண்டை நார்களிலிருந்து ஒலியெழுப்பும் சக்தியைப் பெற்றிருந்தான். ஆரம்ப மனிதன் எழுப்பிய ஒலி பேச்சுமல்ல இசையுமல்ல. இருப்பினும் அவ்வொலியின் மூலம் வெளியுலகத் தொடர்புகொண்டான் அவன்.

விலங்குகளும் பறவைகளும் பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்றவாறு சிறப்பு ஒலிச் சேர்க்கைகளை எவ்வாறு பயன்படுத்திக்கொள்கின்றன என்பதை இன்றுவரை நாம் நேரடியாகக் கண்டும் கேட்டும் வருகின்றோம். தங்கள் இனத்திற்கு ஆபத்து ஏற்படும்போதும், அல்லது தங்கள் இனத்திற்குத் தேவையான உணவு வகைகள் கிடைக்கும்போதும், அல்லது இரு பால் சேர்க்கை ஏற்படவிருக்கும் நேரத்திலும், ஒவ்வொரு இனமும் தனித்தனியான சிறப்பு ஒலிகளை எழுப்புவது உயிரினங்களின் அடிப்படை இயல்பாகிறது.

மனித வரலாற்றைப் புரட்டினாலும், ஒலியைக் கட்டுப்படுத்தி அதைப் பேச்சு, இசை என்று பிரிப்பதற்கு முன்னர், மனிதனும் ஒலியை விலங்குகளைப் போன்றே பயன்படுத்தி வந்தான் என்று தெளிவாகிறது. தன் தேவைகளுக்கேற்ப மனிதன் ஒலியெழுப்பினான் – உறுமினான், கதறினான், ஓலமிட்டான். இசையின் மூல ஊற்று இவ்வொலிகளாகும்.

பல நூற்றாண்டுகள், ஏன் யுகங்கள் ஓடி மறைய, ஏனைய துறைகளைப் போலவே, ஒலியையும் அடக்கிக் கையாளுவதில் மனிதன் தேர்ச்சி அடைந்தான். தன்னைச் சுற்றி நிலவும் பொருள்களைக் குறிப்பிடவும், தன் தேவைகளை வெளிப்படுத்தவும், தன் மனதிலே தோன்றும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் ஒலிச் சின்னங்களை வகுத்துக்கொண்டான். இந்த ஒலிச் சின்னங்கள் சொற்களாக நிலைபெற்று, பேச்சு மொழியைத் தோற்றுவித்தன. அதே நேரத்தில் தன் உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளிக்கொணர வேறுவித ஒலிச் சேர்க்கைகளை உருவாக்கினான். அவனது வாழ்க்கையில் அன்றாடம் அவன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை, அவற்றிலிருந்து எழும் உணர்ச்சிகளை, இந்த ஒலிச் சேர்க்கைகள் பிரதிபலித்தன. இந்த ஒலிச் சேர்க்கைகளே இசையின் ஆரம்ப ஸ்வரங்கள்.

சமுதாய ஜீவியாகத் தோன்றிப் பரிணமித்து வளர்ந்த மனிதன், இந்தத் தொடக்க கால இசையைத் தன் சமுதாயத் தேவைகளுக்குத்தான் பயன்படுத்திக்கொண்டான் என்ற உண்மை மேலோங்கி நிற்கிறது.

வேட்டையாடும்போதும், போருக்குச் செல்லும்போதும், பற்பல சிறு தொழில்களில் ஈடுபடும்போதும், மகிழ்ச்சியில் ஆனந்தக் கூத்தாடும்போதும்

தன் அறிவுக்கு அப்பாற்பட்ட இயற்கையின் சக்தியைத் தொழும்போதும், தனது சமூகத்திற்குப் பெரும் இழப்பு நேரும்போதும், தனித்தனி வகையான இசை வடிவங்களைக் கையாண்டான். இத்தகைய இசை வடிவங்களை எழுப்புவதில் ஒவ்வொரு குடியிலும் வாழ்ந்து வந்த மக்கள் யாவரும், ஆண் பெண் சிறுவர் உட்பட, பங்கு கொண்டனர்.

உலகின் பல பகுதிகளில், ஒவ்வொரு குடியிலும் வாழ்ந்து வந்த அன்றைய மக்கள் ஏனைய குடிகளுடன் தொடர்பற்ற வாழ்க்கை நிலையிலே வாழ்ந்து வந்தனர். அவரவரது வாழ்க்கை முறைகளுக்கேற்ப, அவரவரது மாறுபட்ட மொழிகளும் இசை வடிவங்களும் தோன்றின.

இருப்பினும் இசையைப் பொருத்த அளவில் ஒரு பொது உண்மை வெளியாகிறது. இரு குடி மக்களின், ஏன் இன்று இரு நாட்டினரின், இசையுருவங்கள் எவ்வளவுதான் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தாலும், ஓர் இனத்தார் போருக்குச் செல்லும்போது பயன்படுத்தும் இசை மற்றோர் இனத்தாரின் ஒப்பாரியை ஒத்திருப்பதில்லை. அதே போன்று ஓர் இனத்தார் தொழில் செய்யும்போது பயன்படுத்தும் இசை மற்றோர் இனத்தாரது தாலாட்டுடன் இணைவதில்லை.

சுற்றுச்சார்பு மாறுபட்டிருப்பினும், மனிதவுடலின், உறுப்புகளின் சலனங்கள்; மரம் வெட்ட, பள்ளம் தோண்ட, படகோட்ட மனிதன் மேற்கொள்ளும் அசைவுகள்; சினம், அச்சம், துயரம் போன்ற பொதுவான உணர்வுகள்; இவை யாவும் இசையுருவங்களின் தன்மையை வரையறுத்திருந்தன. இசையின் பொதுத் தன்மையைக் கோடிட்டுக் காட்டின.

ஒரு குடியின் எல்லா மக்களும் சேர்ந்து பாடுவதிலிருந்து பிறந்த இசை, காலப் போக்கிலே பல வாறாகச் செழிப்புற்று, நுணுக்கமுற்று, வளமுற்று ஒரு நுண்கலையாக வளர்ந்தோங்கியது. இசையில் மட்டும் ஏற்பட்ட மாறுதல் அல்ல அது. மனிதன் தன் அடிப்படைத் தேவைகளைத் தேடிக்கொள்வதற்காக மேற்கொண்ட பல நடவடிக்கைகள், நாளாவட்டத்திலே பற்பல நுண்கலைகளாக வளர்ச்சியடைந்துவிட்டன என்பது புலனாகிறது. இசையின் வளர்ச்சியும் இந்த வரலாற்றுப் பொது விதிக்கு விலக்கல்ல.

காடுகளில் சுற்றித் திரிந்த நிலையிலிருந்து வளர்ந்து, கிராமங்களையும் குடியமைப்புகளையும் உண்டாக்கிக்கொண்ட மனிதன், கால்நடைப் பராமரிப்பு, பயிர்த்தொழில் போன்ற செயல்களில் ஈடுபட்டான்; நாகரிகத்திற்கு அடித்தளமிட்டான். தத்தம் சமூகத்தின் தேவைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ள, சமூகத்தினர் ஒவ்வொருவரும் ஒரே அளவில், ஒரே முறையில் உழைக்க வேண்டிய அவசியமில்லை என்ற நிலை உருவாகி, ஒருவரான வேலைப் (தொழில்) பிரிவினை தோன்றிற்று. இயற்கையாகவே சில சிறப்புப் பண்புகளைப் பெற்றிருந்தோர், தத்தம் திறமைகளுக்கேற்ப தனித்தனிப் பணிகளில் ஈடுபட்டனர். குரல் வளம் உடையோர் இசையை ஒரு நுண்கலையாக வளர்த்தனர். தமிழ் நாட்டின் பாணர்கள், நாடோடிப் பாடகர்களாக ஒரு குடியமைப்பிலிருந்து பிற பகுதிகளுக்குச் சென்று, ஆங்காங்கே பாடி மக்களை மகிழ்வித்து, அவ்வப் பகுதித் தலைவர்களிடமிருந்து பரிசு பெற்று வாழ்ந்து வந்தனர் என்பது நாமறிந்ததே. மக்களின் கூட்டு உழைப்புத் தொழிலிலிருந்து பிறந்த இசை ஒரு தனி மனிதனின் தொழிலாகவே மாறிவிட்டது.

உலகெங்கும் இன்று நிலவி வரும் வளர்ச்சியுற்ற இசைச் செல்வங்கள் எந்த அளவு தொடக்ககால நிலையிலிருந்து மாறிவிட்டன என்ற கணிப்பே, மனித சமுதாய முன்னேற்றத்தின் அளவுகோலாக விளங்குகிறது. அதிகம் நம் நாட்டில் நிலவி வரும் இசையின் செழிப்பை நாம் மறக்கலாகாது. உலகின் பல நாடுகளில் மேற்கத்திய இசை இன்று பரவி நிற்கிறது. தற்கால அறிவியல் ஆய்வு முறைகளைக் கையாண்டு, இவ்விசையின் அடிப்படைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் என்றோ தோன்றி இன்று வரை மறையாமல், மேற்கத்திய இசைக்கு இணையாக ஈடாக ஓங்கி நிற்கும் இந்திய உபகண்டத்தின் இசை, ஸ்ருதி, ஸ்வரம் போன்ற பல அடிப்படைகளில் எவ்விதப் பிழையும் இல்லாத இலக்கணத்தை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

ஸ்வரங்களுக்குப் பெயரிடும் வழிமுறைகள் மேற்கத்திய இசையில் முதன்முதலில் தோன்றியதே பத்தாவது நூற்றாண்டில்தான். அது செப்பனிடப்பட்டது பத்தொன்பதாவது நூற்றாண்டில்தான். ஆனால் கிறித்துவ சகாப்தத்தின் தொடக்கத்திலேயே **"ஸரிகமபதநி"** என்ற பெயர்கள் வடமொழி நூல்களிலும், "குரல், துத்தம், கைக்கிளை, உழை இளி, விளரி, தாரம்" என்று பழைய தமிழ் நூல்களிலும், ஏழு ஸ்வரங்களுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என்பதிலிருந்து அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நம் நாட்டில் இசை வளமுற்றிருந்தது என்பது தெளிவு.

பாலஸ்தீனத்திற்குக் கிழக்கிலும், சீனாவுக்கு மேற்கிலும் உள்ள ஒரு பகுதியில்தான் உலகத்திலேயே இசை முதன்முதலில் தோன்றிற்று என்று புராணக் கதைகள் நிலவுவதாக, உலக இசை வரலாற்று அறிஞர்கள் பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது இசையின் மேம்பாட்டை இருபதாவது நூற்றாண்டில் நின்றுகொண்டு நோக்கும்போது, இந்திய உபகண்டத்தில்தான் இசை பிறந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. கிரீஸ் போன்ற மேனாட்டு இசை வல்லுநர்கள், ஒரு ஸ்தாயை நான்கு அல்லது

ஐந்து ஸ்வரங்களாக மட்டும் பிரிந்திருந்த நேரத்திலேயே, நம் நாட்டு இசைவாணர்கள் ஏழு ஸ்வரங்களையும், அவற்றின் மாற்று உருக்களையும், இருபத்திரண்டு ஸ்ருதிகளையும் அறிந்திருந்தனர் என்பது உண்மை. எனவே, கிரேக்க நாட்டு அலெக்சாண்டர் மன்னன் இந்திய வடமேற்குப் பகுதிகளின்மீது படையெடுத்துத் திரும்பியபோது, தென்னகத்திலிருந்து சில இசைக்கலைஞர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்றதாகவும் வரலாற்றிலே கதைகள் உண்டு.

இந்தியாவிலிருந்து வெளியேறிய இசை, பிற்காலத்தில் பல படையெடுப்புகளின் மூலமாக, சில மாற்றங்களுடன் இந்தியாவிற்கே திரும்பி வந்தது. அதனுடன் இந்தியத் துணைக்கண்டத்தின் பல வட்டார இசைப் பண்புகள் ஒன்றோடொன்று மோதி, கலந்து சிறப்புமிக்க இரசாயனச் சேர்க்கையின்மூலம் பல புத்தம் புதிய மெருகுகளை இசைக்குக் கொடுத்து உதவின. இதன் விளைவாக, பத்தாவது நூற்றாண்டிலிருந்து பதினான்காவது நூற்றாண்டிற்கிடையேயுள்ள காலகட்டத்தில், குறிப்பாக விஜயநகரப் பேரரசு ஓங்கி நின்ற நேரத்தில், இந்தியத் துணைக் கண்டத்தின் இசை கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை என்று இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டது. அந்நிய நாட்டு இசைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவ்விரு இசைப் பிரிவுகளுக்கிடையே நிலவும் பொதுத் தன்மைகளை உணர முடிகிறது. ஆனால், ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டு நோக்கும்போது இவற்றின் தனித்தன்மைகள் புலனாகின்றன.

அரச சபைகளிலும், கோவில்களிலும் போற்றி வளர்க்கப்பட்டு நுண்கலையாக, நன்கு வகுக்கப் பட்ட இலக்கணத்திற்கு உட்பட்ட இயலாக, தனிப் பட்ட இசைமேதைகளின் கற்பனைகளிலிருந்து தோன்றிப் பெருகிய படைப்பாக, இன்று உயர்ந்து விளங்கும் நம் நாட்டின் இசையும், மனிதத் தேவைகளுக்கான பொருள்களின் உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்துதான் பிறந்தது என்பதை நாம் மறந்துவிடலாகாது. தனிப்பெரும் இசை மேதைகளின் கச்சேரிகளை நாம் இன்று கேட்டு ரசிக்கும் நேரத்திலும், அந்த மேலான இசை ஒரு காலத்தில் மக்கள் சேர்ந்து பாடும் முயற்சியில்தான் உருவாயிற்று என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஓர் எழில்மிக்க செங்குத்தான வளர்ச்சி நம் இசைக்கு ஏற்பட்டிருந்த போதிலும், பரவலாக, பாமர மக்கள் இன்று வரை சேர்ந்து பாடிவரும் பல நாடோடி இசை வடிவங்கள் தான் அதன் அடித்தளத்திற்கு உரமூட்டின என்பதையும் மறக்கலாகாது.

மனிதர்கள் ஒன்றுபட்டுச் சிலபல பணிகளில் ஈடுபடும்போது அவர்களது உள்ளங்களை ஒன்றுபடுத்த இன்று வரை கூடிச் சேர்ந்து பாடும் முறை வழக்கிலிருந்து வருகிறது. மிகையான பாரங்களைச் சுமக்கும்போதும், கடுமையான உழைப்பை எளிதாக்கிக் கொள்ளவும், வீரத்தை வளர்த்துக்கொள்ளவும், மீளாத் துயரங்களைப் பகிர்ந்துகொண்டு தாங்கிக் கொள்ளவும், இன்று வரை நம் மக்கள் கூடிச்சேர்ந்து பாடுகிறார்கள்.

திரைப்படப் பாடல்கள் ஒலி பெருக்கிகளின்மூலமாக நமது பட்டி தொட்டிகளிலெல்லாம் ஊடுருவிப் பாய்ந்து, பற்பல பொது விழாக்களிலிருந்து நமது பரம்பரை இசையுருவங்களை, இசைக்கருவிகளை வெளியேற்றிக்கொண்டு வருகின்றன. எனவே, பண்டுதொட்டு வழக்கில் இருந்துவந்துள்ள நமது கிராமிய இசை உருவங்களை அழியாமல் பாதுகாக்க மக்களைச் சேர்ந்து பாடும்படி ஊக்குவிப்பது அவசியமாகிறது. இசையுணர்வு நம் மக்களது ரத்த நாடிகளில் பரம்பரை பரம்பரையாக ஓடிக்கொண்டிருக்கிறது. சிறிது ஊக்கமளித்தால் போதும்; இசை வெள்ளம் பெருக்கெடுத்துப் பாயும்.

நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் நற்பணிகள் யாவிலும் முழு மூச்சுடன் சமுதாயச் சக்திகள் இறங்கிப் பணியாற்ற, நாட்டுப் பற்றை வளர்க்க, சமுதாய உறவுகளைப் பண்படுத்த, ஏற்றத் தாழ்வுகளை மட்டமாக்க, கூடிச் சேர்ந்து பாடும் முறை சிறந்த கருவியாகப் பயன்படக்கூடும். இன்று ஒன்றிரண்டு குழுக்கள் இங்குமங்கும் சேர்ந்து பாடினால் மட்டுமே போதாது. நூற்றுக்கணக்கான மக்கள், ஆயிரக்கணக்கான மக்கள், குறிப்பாக இளைஞர்கள், சேர்ந்து பாடினால் அது சமுதாயத்திலே புதிய விறுவிறுப்பைத் தோற்றுவிக்கும் என்பது தெளிவு.

சேர்ந்து பாடுவதிலிருந்து தோன்றி மிகவும் செழிப்படைந்துள்ள நமது இசையை மேலும் வளப்படுத்த, நம் நாட்டைக் காக்க, நம் வாழ்வை மேன்மையுறச் செய்ய – சேர்ந்து பாடுவோம் வாருங்கள்!

மேற்கு ஜெர்மனியில் தமிழ்

அ. தாமோதரன்

தரங்கை வளர்த்த தமிழியல்

தரங்கம்பாடிக் கடற்கரையில் 1706ஆம் ஆண்டு ஆனித் திங்கள் சீகன்பால்கு (Bartholomaeus Ziegenbalg) கால் வைத்த அன்றே ஜெர்மனிக்கும் தமிழுக்குமிடையே உறவென்னும் வித்து ஊன்றப் பட்டுவிட்டது. சமயப் பணிகளை ஆற்றுதற் கேற்ற நிறுவனம் ஒன்றை நிர்மாணிக்கும் பொறுப்பேற்று வந்த சமயப் போதகர் சீகன்பால்கு தமிழில் ஆர்வ முற்று முறையாக அதைக் கற்கத் தலைப்பட்டதே **விதியின்** விளையாடல் போலும்! இல்லையென்றால் லூதரன் மிஷனைத் தமிழகத்தில் தொடங்கும் போதே தமிழியலின் தொடக்கத்திற்கும் சீகன் பால்கு கால்கோள் செய்திருப்பாரா? இவ்வாறு கிறித்தவ மதத்திற்கும் தமிழியற் கல்விக்கும் ஒரே சமயத்தில் தூதுவராக விளங்கிய அந்தப் பெரு மகன் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு துவக்கிவைத்த தமிழியல், அரசியல் மாற்றங்களி னாலும் உலகப் போர்களினாலும் இடையிடையே சிறிது தொய்வுற்றாலும் இன்றளவும் ஜெர்மனியில் செயல்பட்டு வருகிறது என்ற உண்மையை நன்றி யுணர்வோடு குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழ் மக்களிடையே தாம் செய்யவேண்டிய சமயப்பணிகளுக்காகச் சீகன்பால்கு தமிழ்மொழியை விரைந்து கற்றுக்கொண்டது வியப்புக்குரியது அல்ல. ஆனால் அத்துறையில் மென்மேலும் ஈடுபட்டுத் தமிழை ஆழமாகக் கற்றுத் தேர்ந்து உலகநீதி, கொன்றைவேந்தன், நீதிவெண்பா முதலிய தமிழ் நூல்களை மொழிபெயர்த்தது — ஓலைச்சுவடிகளாக இருந்த தமிழ்நூல்களைத் தேடித் தொகுத்து ஒரு நூலகத்தை நிறுவிக்கொண்டது — தமிழ்ச் சுவடிக ளுக்கு ஒரு விளக்கப் பட்டியலை அமைத்துக்கொண் டது — தமிழைப் பயிலும்போதே அகராதிகளைத் தொகுக்கத் தொடங்கியது — தமக்குப் பின் தமி ழைக் கற்போருக்குப் பயன்படுமாறு தமிழ் இலக்க ணம் ஒன்றை வரையறுத்தது — தமிழ்த் தெய்வங் களின் மரபுமுறையை விளக்கிக் காட்டியது — தமிழ் மக்களைப் பற்றிய கலைக்களஞ்சியம் ஒன்றை உரு வாக்கியது போன்ற தமிழ்ப் பணிகளை இவர் நிறை வேற்றியது வியப்புக்குரியதேயாகும். தொலைநோக் கோடு செயலாக்கப்பட்ட இப்பணிகளின் மூலமாகத் தமிழியலுக்கு வலிவான கால்கோளை அமைத்து விட்டதோடு தமிழியல் வரலாற்றில் புது மரபொன் றையும் இவர் உருவாக்கிவிட்டார்.

இவருக்குப்பின் சமயத்தொண்டாற்றத் தமிழகம் வந்த வால்தர் (walther), பப்ரிஸியுஸ் (Fabricius), ப்ரைட்ஹவுப்ட் (Breithaupt), பைஸன் ஹெர்ட்ஸ் (Beisenherx), கிரவுல் (Graul), ரெனியுஸ் (Rhenius), பைத்தான் (Beythan), ஷொமேருஸ் (Schomerus), லேமன் (Lehmann) போன்ற பேரறிஞர்களும் சீகன் பால்கின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழியலை வளர்த்தனர். இலக்கணம், மொழிபெயர்ப்பு, சமயம் முதலிய துறைகளில் தரமான நூல்களை வழங்கி ஜெர்மன் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கு மளவு தமிழை நாடறியச் செய்தனர். இதன் விளை வாக இந்தியவியலோடு தமிழியலும் இணைந்து செயல்படத் தொடங்கியது. தொடக்ககாலத் தமிழியலுக்கு ஜெர்மானியர்கள் ஆற்றிய தொண்டு களைப்பற்றி விரிவான நூல்களும் கட்டுரைகளும்

முன்பே வெளிவந்துள்ளன. பேராசிரியர் தனி நாயகம் தொகுத்து வழங்கிய 'வெளிநாடுகளில் தமிழியல்: ஒரு கட்டுரைத் தொகுதி' (Xavier S. Thaninayagam, Tamil Studies Abroad: a symposium, 1968.) என்னும் நூலில் டாக்டர் ஆல்ப்ரெஹ்ட் வெட்ஸ்லர் (Dr. Albrecht Wetzler), டாக்டர் அர்னோ லேமன் (Dr. Arno Lehmann) ஆகிய இருவரும் எழுதியுள்ள கட்டுரைகளில் அவற்றை விரிவாகக் காணலாம்.

சீகன்பால்கு தொடங்கிவைத்த இப் பெரு மரபு இரண்டாம் உலகப் போர் வரையில் தொடர்ந்தது. போர்க்கால நெருக்கடிகள் மற்றத் துறைகளைப் போலவே கல்வித்துறைகளையும் பேரளவில் பாதித்து விட்டதாலும் போரின் முடிவில் ஜெர்மனி இரு வேறு நாடுகளாகப் பிரிந்துவிட்டதாலும் தமிழ்க் கல்வி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுவிட்டதாகவே தோன்றுகிறது. போர்க்கொடுமைகளிலிருந்து நாடு மெள்ள விடுபட்டுத் துறைதோறும் வளர வளரத் தேக்கநிலை பெற்றிருந்த கல்வித்துறைகளும் ஒவ் வொன்றாகப் புத்துயிர் பெறத் தொடங்கின. பல் கலைக்கழகங்களில் கீழ்த்திசை மொழிகள் ஆங் காங்கே இடம்பெறலாயின.

இந்தியவியல் என்றால் வடமொழியையும் வேதங் களையும் மட்டுமே கற்பது—கற்பிப்பது என்ற பாரம் பரியத்தை மாற்றி அமைக்கும் நோக்கம் ஜெர்மன் இந்தியவியல் அறிஞர்களிடையே முகிழ்க்கத் தொடங்கியது. வடமொழியோடு மற்ற இந்திய மொழிகளையும் திராவிட மொழிகளையும் சேர்த்து இந்தியவியலின் பரப்பை விரிவாக்கும் திட்டம் மேற் கொள்ளப்பட்டது. இந்தப் போக்கு, தமிழியலுக்கு ஜெர்மனியில் மீண்டும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

மேற்கு ஜெர்மனியில் மேற்கு பெர்லின் (West Berlin), மார்புர்க் (Marburg), ப்ரேமன் (Bremen) ஆகிய நகரங்களிலுள்ள பல்கலைக்கழகங் களில் அவ்வப்போது தமிழ் கற்பிக்கப்பட்டிருந்தா லும் ஹம்புர்க் (Hamburg), ஹைடெல்பெர்க் (Heidelberg), கொலோன் (Koeln) ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் மட்டுமே தொடர்ந்து தமிழ் கற்பிக்கப்படுகிறது எனலாம். இவற்றுள்ளும் ஹம்புர்க் பல்கலைக்கழகத்தில் 1978ஆம் ஆண்டுக் குப் பிறகு தமிழ் கற்பித்தல் முன்போலத் தீவிர மாக இயங்கவில்லை. கொலோன் பல்கலைக்கழகத் தில் தமிழ் கற்பித்தலைவிட நூலடங்கல் (Bibliography), அகராதி முதலியவற்றைத் தொகுக்கும் நீண்டகாலத் திட்டங்களுக்கே கடந்த நான்காண்டு களாக முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, மேற்கு ஜெர்மனியில் ஹைடல்பெர்க் பல்கலைக் கழகத்தில் மட்டுமே தமிழைப் பயிற்றுவித்தல் இப் போது சுறுசுறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக் கிறது என்று குறிப்பிடவேண்டியிருக்கிறது.

ஹைடல்பெர்க் பல்கலைக்கழகம்

Suedasien Institut, Abteilung Indologie
Universitaet Heidelberg, Im Neuenheimer Feld 330
69 Heidelberg
West-Germany

வளரும் நாடுகளில் காணப்படும் தற்காலப் பிரச் சினைகளை இந்தியவியலோடு ஒருங்கிணைத்து மேற்கு ஜெர்மனிக்கும் வளரும் நாடுகளுக்குமிடை யேயுள்ள உறவை வளப்படுத்தும் நோக்கத்தில் 1962-ல் உருவான கல்வி நிறுவனமே தெற்காசியக் கழகம். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளைப்பற்றி இக்கழகத்தில் ஆராய்ச்சி கள் நடந்தாலும் இந்தியாவைப்பற்றிய ஆராய்ச்சி களே, மிகுதியாக இங்கு நடைபெற்றுவருகின்றன. இந்தியவியல், வரலாறு, பொருளாதாரம், அரசியல், புவியியல், இனவியல், சாகுபடி நிலக் கொள்கை — கிராமிய முன்னேற்றம்பற்றிய துறை, வெப்ப நாடு களின் சுகாதாரம்பற்றிய துறை என்று ஒன்றோ டொன்று தொடர்புடைய எட்டு பெருந்துறை களைக் கொண்ட கல்விக்கழகம் இது. மொழித்துறை, தத்துவம், கலை, சட்டம், சமுதாயவியல் போன்ற மற்றத் துறைகள் இப் பெருந்துறைகளின் உட்பிரிவு களாக அமைந்துள்ளது என்பது அறியத்தக்கது.

பேராசிரியர் ஹெர்மன் பெர்கர் (Herrman Berger) தலைமையில் இயங்கும் இந்தியவியல் துறை பண்டைய இந்தியவியல் (Classical Indology), மொழி களும் இலக்கியங்களும் (Modern Languages and Literatures), சமய வரலாறும் தத்துவமும் (History of Religion and Philosophy) என்ற மூன்று உட்பிரிவு களை உள்ளடக்கியதாகும். இவற்றில் எதையும் தலைமைப் பாடமாகவோ (Main Subject) அல்லது துணைப் பாடமாகவோ (Subsidiary Subject) தேர்ந்தெடுத்துக்கொள்ளவும் அல்லது வரலாறு, பொருளாதாரம் போன்ற மற்றப் பாடங்களோடு அவற்றை இணைத்துக்கொள்ளவும் பாடத் திட்டத் தில் வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தமிழைத் தலைமைப் பாடமாக எடுத்து எம்.ஏ. அல்லது டாக்டர் பட்டம் வரையில் கற்கும் வாய்ப்புத் தெற்காசியக் கழகத்தில் மட்டுமே உண்டு.

தமிழுக்கெனத் துணைப் பேராசிரியர் பதவி யொன்று நிலையாகவுள்ள இந்த நிறுவனத்தில் திரு. மா. சேசையா என்பவர் 1964-ல் தமிழைத் தொடங்கிவைத்து இரண்டாண்டுகள் பணியாற்றி னார். அவர் இந்த நிறுவனத்திலிருந்து விலகி இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் 1968 ஜுலை முதல் இக்கட்டுரையாளர் தமிழ்த் துணைப் பேரா சிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். அன்றியும் பேராசிரியர் கமில் சுவலபில் (Professor Kamil V. Zvelebil) கோடையில் மாதமிருமுறை வந்து பல்வேறு தலைப்புகளில் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றிவருகிறார்.

தொடக்கநிலை வகுப்பு முதல் இறுதிநிலை இலக்கிய வகுப்பு வரையில் எல்லா நிலைகளிலும் இங்கே தமிழ் கற்பிக்கப்படுகிறது. இலக்கண இலக்கியங்களோடு பேச்சுத்தமிழ், மொழிபெயர்ப்பு முதலியனவும் மாணவர்களின் தரத்திற்கேற்பப் பாடத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. மூன்றாண்டுகள் மொழியைக் கற்ற பிறகு குறிப்பிட்ட பொருளில் எம்.ஏ. அல்லது டாக்டர் பட்டத்திற்கான ஆராய்ச்சியில் மாணவர்கள் ஈடுபடுகிறார்கள். சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி ஆராய்ந்து எம்.ஏ. பட்டம் பெற்ற ஒரு மாணவி இப்போது திராவிடர்க் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் வரலாற்றையும் கொள்கைகளையும் டாக்டர் பட்டத்திற்காக ஆராய்ந்து வருகிறார். ஜெயகாந்தன் சிறுகதைகளில் எச்சங்களின் அமைப்பைப்பற்றி ஒருவரும், அவருடைய நாவல்களில் தமிழ் இலக்கண அமைப்பைப்பற்றி வேறொருவரும் ஆராய்ந்து வருகின்றனர். ரமணமகரிஷியைப்பற்றி ஒரு மாணவரும், மலையனூர் அங்காளம்மனைப்பற்றி இன்னொரு மாணவியும், சித்தர் பாடல்களில் ஆன்மிகக் கொள்கைபற்றி ஒரு மாணவியும் இப்போது ஆராய்ந்து வருவது இங்குள்ள தமிழியலின் போக்கைத் தெளிவுப்படுத்தும். சமயம், தத்துவம், வரலாறு போன்ற தொடர்புடைய துறைகள் ஒரே நிறுவனத்தில் இருப்பதால் தமிழியற் கல்வியை வெவ்வேறு கோணங்களில் மாணவர்கள் அணுகுவது எளிதாக இருக்கிறது எனலாம். மாணவர்களின் தேவைக்கேற்ற ஒரு பெரிய நூலகம் இங்கே இருப்பது இந்தக் கழகத்தின் பெருமையை நிலைநாட்டுவதாகும்.

தமிழைக் கற்பித்தலோடு தமிழியல் தொடர்பான நூல்களை வெளியிடவும் தெற்காசியக் கழகம் ஊக்கம் தருகிறது. இதன் பயனாக இதுவரையில், **திருக்குறள் மேற்கோள் விளக்கம்** *(1970)*, **திருக்குறள் இலக்கணம்** (A grammar of Tirukkural, 1972), **தமிழில் அகராதிகள் : ஒரு நூலடங்கல்** (Tamil Dictionaries: A Bibliography, 1978), **நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும்** *(1980)* என்ற நான்கு நூல்கள் இக் கழகத்தின் உதவியோடு வெளியிடப்பட்டிருக்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் மறைந்துவிட்டதென உறுதியாக நம்பப்பட்டு வந்த கூழங்கைத் தம்பிரானின் நன்னூல் காண்டிகையுரையைக் கண்டுபிடித்துக் காலந்தாழ்த்தாது தமிழுலகுக்கு வழங்கியதை ஒரு பெருமையாகவே தெற்காசியக் கழகம் கருதுகிறது. இது போலவே பல ஆண்டுகளாகக் கையெழுத்துப் பிரதியாக முடங்கிக் கிடந்த சிவஞான சித்தியாரின் ஜெர்மன் மொழிபெயர்ப்பை வெளியிட்ட பெருமையும் இக் கழகத்திற்கு உண்டு.

இருநூற்றுக்கு மேற்பட்ட இரு மொழி அகராதிகளும் சொல்மாலைகளும் தமிழில் காணப்பட்டாலும் அவற்றில் ஒன்றுகூட ஜெர்மன் மொழியோடு இணைந்ததாக இல்லாத குறையை நீக்க ஓர் அகராதித் திட்டமும் ஐரோப்பிய நூலகங்களில் காணப்படும் தமிழ்ச் சுவடிகளுக்கு ஒரு விளக்கப் பட்டியலைத் தொடுக்கும் திட்டமும் நீண்டகாலத் திட்டங்களாக இங்கே மேற்கொள்ளப்பட்டிருப்பது தமிழியலுக்கு வளமை தருவதாகும். இப்போதுள்ள வளர்ச்சியைவிட எதிர்காலத்தில் தமிழியல் மேலும் வளருமென உறுதி கூறலாம். காரணம் தமிழ் பயிலும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகி வருவதேயாகும்.

கொலோன் பல்கலைக்கழகம்

Institut fuer Indologie, Universitaet zu Koeln
Albertus-Magnus-Platz
5 Koeln 41
West-Germany

பேராசிரியர் யானர்ட் (K. L. Janert) அவர்களின் தலைமையில் இயங்கி வரும் இந்தியவியல் துறை 1968ஆம் ஆண்டு முதல் தமிழ் கற்கும் வாய்ப்பைக் கொலோன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. இந்தியவியலின் உட்பிரிவாகத் தமிழ் அங்கே நிலைத்திருப்பதற்குக் காரணம் பேராசிரியர் யானர்ட்டின் பெரு முயற்சியேயாகும். 1968 செப்டம்பர் முதல் இரண்டாண்டுகள் திருமதி மேரி மாசிலாமணி அம்மையார் தமிழ்ப் பயிற்றுவித்தார். இரண்டாண்டு இடைவெளிக்குப் பின்னர், 1972 முதல் டாக்டர் பா. ரா. சுப்பிரமணியன் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். பேராசிரியரின் முழு ஆதரவும் நல்ல நூல்நிலையமும் தகுதியுள்ள தமிழாசிரியரும் இருந்தும் மாணவர்களிடையே தமிழைக் கற்பதற்குரிய ஆர்வம் போதிய அளவு இல்லாததால் தமிழைக் கற்பிப்பதைவிட ஆராய்ச்சித் திட்டங்களுக்கே இப்பொழுது அங்கே முதலிடம் கொடுத்து வருகின்றனர்.

பிறமொழியாளர்கள் தமிழைக் கற்பதோ அல்லது அவர்களுக்குத் தமிழைக் கற்பிப்பதோ இன்றைய சூழ்நிலையில் எளிதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டென்றாலும் கற்பித்தற்குத் தேவையான நல்ல பாட நூல்கள், இருமொழி அகராதிகள் முதலியவை இல்லாமையே தலையாயதாகும். இருமொழி அகராதிகள் தமிழில் தோன்றத் தொடங்கி முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் இக் குறைபாடு நீங்காமல் இருப்பது வியப்பிற் குரியதேயாகும். ஓரிரு நல்ல அகராதிகள் வெளிவந்திருப்பினும் அவை எளிதில் கிடைப்பதுமில்லை. இந் நிலைமையை நன்குணர்ந்த பேராசிரியர் யானர்ட், அகராதி வெளியிடும் திட்டத்தை மேற்கொள்ளலானார். இதன் முதற்கட்டமாக வின்ஸ்லோ பாதிரியார் அரிதின் முயன்று தொகுத்த தமிழ் ஆங்கில அகராதியைத் (M. WINSLOW, A Comprehensive Tamil and English Dictionary of High and Low Tamil, 1862.) தேர்ந்தெடுத்து அதற்கு ஒரு மறுபதிப்பைப் (reprint) பேராசிரியர் யானர்ட் வெளியிட்டுதவினார்.

இன்றைய தமிழை முழுமையாக விளங்கிக்கொள்ள இந்த அகராதியும் ஓரளவே உதவ முடியும் என்பது தெளிவானதும், புதிதாக ஒரு தமிழ் ஆங்கில அகராதியை உருவாக்கும் திட்டத்தை மேற்கொண்டார். இந்த அகராதித் திட்டத்தில் டாக்டர் சுப்ரமணிய னுடன் பணியாற்றக் கேரளப் பல்கலைக்கழகத்தி லிருந்து உதவியாளர்களை அழைப்பதையும் ஈண்டுக் குறிப்பிட்டாக வேண்டும். இதன்படி 1979 ஏப்ரல் முதல் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் கி. நாச்சிமுத்து இப்பணியில் உதவி வருகிறார். இவருக்கு முன்னர் திரு. A. தசரதன் என்ற ஆராய்ச்சி மாணவர் சில மாதங்கள் இத் திட்டத்தில் பணியாற்றியதாகவும் தெரிகிறது. நான்கைந்து ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் இத் திட்டம் இன்னும் சில ஆண்டுகள் தொடருமென்று உறுதியாகக் கூறலாம்.

அகராதிகளைப் போலவே தமிழியலில் பின்தங்கியுள்ள மற்றொன்று நூலடங்கல் துறையாகும். கொலோன் பல்கலைக்கழகம் இந்தத் துறையிலும் பணியாற்றத் தொடங்கியுள்ளது வரவேற்கத் தக்கது. இத்துறையின் முதற்பணியாக மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிடும் 'செந்தமிழ்' பத்திரிகைக்குத் தொடக்கம் முதல் ஓர் அடைவினை விளக்கக் குறிப்புகளோடு டாக்டர் சுப்பிரமணியன் தொகுத்துள்ளார். அச்சேறும் தறுவாயிலிருக்கும் இந்த அடைவு விரைவில் வெளியானால் தமிழியல் மாணவர்களுக்கு மிகவும் பயன்படும் என்பது உறுதி.

ஹம்புர்க் பல்கலைக்கழகம்

Seminar fuer Kultur und Geschichte Indiens
Universitaet Hamburg, Rothenbaumchaussee 62
2 Humburg 13
West-Germany

1970ஆம் ஆண்டு டாக்டர் ஹெல்கா அன்டோன் (Dr. Helga Anton) இந்தியக் கலை— வரலாற்றுத் துறையில் பணியேற்ற பிறகே தமிழ் கற்பித்தல் சிறப்பாக அங்கு ஊக்குவிக்கப்பட்டது. இதற்கு முன் அங்கே வடமொழித் துணைப் பேராசிரியராக உள்ள டாக்டர் சீனிவாசன் பழந்தமிழ்ச் செய்யுட்கள் சிலவற்றை மாணவர்களின் ஆர்வத்தைப் பொறுத்து அவ்வப்போது அறிமுகப்படுத்தி வந்தார். மகாகவி பாரதியாரைப்பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் அன்டோன், தமிழகத்தில் தங்கிப் பேச்சுத் தமிழையும் தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதன் அவர்களிடம் இலக்கியத் தமிழையும் பயின்றவர். ஆரம்ப வகுப்பு முதல் இலக்கிய வகுப்பு வரை அனைத்து நிலைகளிலும் தமிழை அறிமுகப்படுத்தி ஹம்புர்க் பல்கலைக்கழக மாணவர்களிடையே தமிழார்வத்தைத் தூண்டிய பெருமை திருமதி அன்டோன் அவர்களையே சாரும்.

இவர் அங்கே பணியாற்றிய ஏழு ஆண்டுகளில் 'பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழிலக்கிய வளர்ச்சி', 'வானொலி — பத்திரிகை முதலிய செய்தித் துறைகளில் பயன்படுத்தப்படும் தமிழ் நடை' ஆகிய தலைப்புகளில் சிறப்புரையாற்றியது பாராட்டத் தக்கது. பத்திரிகைத் தமிழைத் தொடர்ந்து கற்பித்த அனுபவம் காரணமாக 1975-ல் தம் மாணவி திருமதி D. ஹெல்மன் (Mrs. D. Hellman) என்பவரோடு இணைந்து 'Tamil Usage in Mass Media' என்னும் நூலொன்றைத் தமிழியலுக்கு வழங்கியுள்ளார்.

தமிழுக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் சேர்த்து ஹம்புர்க் பல்கலைக்கழகத்தில் நிலையாக ஒரு பதவியை ஏற்படுத்தி நாளடைவில் திராவிட மொழிகளுக்கெனத் தனித் துறை ஒன்றினை உருவாக்க அன்டோன் பெரிதும் முயன்றார். அவருடைய முயற்சிக்குப் போதிய அளவு நல்லாதரவு இல்லாமையால் மனம் நொந்த திருமதி அன்டோன் இறுதியில் அந்த முயற்சியைக் கைவிட்டதாகத் தெரிகிறது.

சீகன்பால்கு, க்ருண்ட்லெர் (Rev. J. E. Gruendler) போன்ற ஜெர்மன் பாதிரிமார்கள் விரும்பிய அளவு தமிழ்க் கல்வி ஜெர்மனியில் வளரவில்லையாயினும் இப்போதுள்ள வளர்ச்சி புறக்கணித்தற்கு உரியதல்ல. இந்தியவியல் மாணவர்களிடையே இன்றுள்ள தமிழார்வம் தொடர்ந்து நீடித்தால் மேற்கு ஜெர்மனியில் தமிழியலுக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதில் ஐயமில்லை. 'தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்' என்ற பாரதியின் திருவாக்குப் பொய்யா மொழி அல்லவா?

ஈழநாட்டு இடப்பெயர்களில் தமிழின் ஆளுமை

தி. க. இராசேசுவரன்

இலங்கையில் நிலைபெற்ற தமிழர் பாரம்பரியம்

தமிழர் பண்பாட்டின் ஆணிவேராகிய ஐந்திணை வாழ்க்கை முறையினையொட்டியே பெரும்பாலும் நம் ஈழ நாட்டு இடப்பெயர்களும் வழங்கப் படலாயின. தென்னகத்திற்கும் ஈழத்துக்கும் பொதுவான சில இடப்பெயர்களும் ஈழத்துக்கே உரித்தான தனித்துவம் பெற்ற வேறு வகையான இடப்பெயர்களும் இந்நாடு முழுவதும் வழங்கப் படலாயின. ஈழத்து இடப்பெயர்களும், தமிழினதும் தமிழரினதும் தனித்தன்மையை வெளிப் படுத்தித் தமிழர் பண்பாடு கலாசாரமும் நாடு முழுவதுமே பரவியிருந்தமையைப் புலப்படுத்துகின் றன. சிங்களமொழி பேசப்படும் தென்னிலங்கை யில் இன்றும் பல தூய தமிழ் இடப்பெயர்கள் நிலை பெற்றிருக்கின்றன. இவற்றைக் கொண்டு இலங் கையில் தமிழர் பாரம்பரியம் வரலாற்றுக் காலத் துக்கும் முற்பட்டது என்பதை இக் கட்டுரையில் ஆராய்ந்து வலியுறுத்தப்படுகின்றது.

எழுதப்பட்ட இலங்கையின் வரலாற்றுக் காலத் திலும் பல தமிழ் அரசர்கள் இந் நாட்டை ஆண்டு வந்துள்ளனர். அவர்கள் தமக்குச் சிங்களப் பெயர் களை இட்டும் பௌத்த மதத்தைத் தழுவியும் அர சோச்சி வந்துள்ளனர். தமிழுக்கும் சிங்களத்துக்கும் அரச மாட்சி கொடுத்தும் இந்து, பௌத்த மதங் களுக்கு உதவி நல்கியும் நல்லாட்சி நடாத்தினர். இலங்கையிலிருந்த ஆதித் திராவிடப் பழங்குடிகளு டன் தென்னகத்தின் பல சமூகத்தினரும் பல பகுதி களிலுமிருந்தும் காலத்துக்குக் காலம் வந்து குடி யேறி இரண்டறக் கலந்துள்ளனர். தமிழ்கூறு நல் லுலகமாகிய சேர, சோழ, பாண்டிய, தென்கன்னடக் குடிகள் ஈழத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாகக் குடியேறி வந்துள்ளனர். போர்க்காலங்களில் படை யினராகவும் ஆட்சி அலுவலராகவும், இந் நாட்டுக் குத் தேவைப்பட்ட சகல சமூகத்தினரும் வகுப் பினரும், இவ்வாறே தென்னாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டனர்.[1] பெருந்தொகையான போர்ப்படை யினர் ஈழ நாட்டில் தங்கி இங்கிருந்த மற்றை யோருடன் கலந்து வாழ்ந்து இந் நாட்டினராயினர். இங்குள்ள பலரது பெயர்களில் விரவிவரும் பதங் களாகிய நாயக்க, பண்டா, பண்டார, அத்து, தென்ன, கோன், சேன, பெருமா, ஆராட்சி, முதலி முதலியவை இதன் காரணமாக வந்தவையாகும். வட இலங்கையில் சேர, சோழ, பாண்டிய நாடு களில் காணப்படும் இடப் பெயர்களில் சிலவும்,[2] தென்கன்னடப் பகுதிகளில் காணப்படும் சமூகத் தினரின் மக்கட் பெயர்களும் அவ்வகுப்புப் பெயர் களைக் கொண்ட இடப் பெயர்களும்[3] காணப்படு கின்றன. போர்ப்படையினர் போரில்லாத காலங்களில் காடு வெட்டிப் பயிர் செய்த இடங்கள் 'சேனை'[4]கள் என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளன.

---

[1] சி. பத்மநாதன், 'வன்னியர்', பக்கம், 36-39.

[2] நல்லூர், திருநெல்வேலி, புத்தூர், நாகர்கோவில், செட்டிக் குளம், பொன்னேரி (பூநகரி).

[3] மள்ளர் (மல்லர்)-மல்லாகம்; ஆரியர்-அரியாலை; பண்டர்- பண்டத்தரிப்பு, பண்ணாகம்.

[4] பருத்திச்சேனை, மணற்சேனை, செட்டிச்சேனை, குறத்திச் சேனை, மறவன்சேனை முதலியன.

மதுரை நாயக்க மன்னர் காலத்திலும் குடியேற்றங்கள் நடந்துள்ளன. இவ்வாறு வடக்கு, வடமேல், வடமத்திய, கிழக்கு, மத்திய மாகாணங்களில் பெருமளவில் தமிழர் குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன. பதினாறாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் சேலம், தர்மபுரி, தென்னார்க்காடு மாவட்டங்களில் கொடிய பஞ்சம் ஏற்பட்டு மக்கள் குடிபெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பாலோர் வட இலங்கைக்கும் வந்து குடியேறினர். அவ்விதம் குடியேறிய மக்கட் சமூகத்தினரின் பெயரில் பல ஊர்கள் யாழ்ப்பாணத்திலும் உள்ளன.[5]

இடப் பெயர்களை ஆராயும்பொழுது, தமிழில் தற்சமயம் வழக்கொழிந்து வரும் பல அருமையான தமிழ்ச் சொற்கள்[6] சிங்களமொழியினுள் காணக் கூடியனவாக இருக்கின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, பரிபாடல் ஆகிய தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இடங்களைக் குறிக்கும் பெயர்கள் யாவையும் தென்னிலங்கையில் உள்ள (சிங்கள) இடப்பெயர்களில் விரவி வருவதைக் காணலாம். இடப்பெயர்களில் பரவலாகத் தமிழ் மொழிச் சொற்களையும், சிங்களத்திற்கும் தமிழுக்கும் பொதுவான சில வடமொழிச் சொற்களையும் காணக்கூடியதாய் இருக்கின்றது. வரலாற்று உண்மைகளை எவ்விதம் கல்வெட்டுகள், சிற்பங்கள், கட்டடங்கள், குகைகள், ஓவியங்கள், நாணயங்கள், மற்றும் புதைந்து கிடக்கும் தாழிகள், மட்பாண்டங்கள் முதலியன எடுத்துக்காட்டுகின்றனவோ அவ்விதமே இடப்பெயர்களாலும் பல வரலாற்று உண்மைகளை அறியக்கூடியதாயிருக்கின்றது. இவ்வாறு, ஈழ நாட்டிலும் பல பெயர்கள் நாடு முழுவதும் காணப்படுகின்றன. அன்றியும், மொழியமைப்பில் ஏற்பட்ட சில மாற்றங்களையும், கலப்புகளையும் காலத்துக்குக் காலம் வெவ்வேறு சமூகத்தினரிடையே நிலவிய குடிபெயர்ப்பு, குடியமர்வு, இனக்கலப்பு, மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள் யாவற்றையும் ஒருங்கே அறிய இவ்விடப்பெயர் ஆராய்ச்சி உதவுகின்றதென்றால் மிகையாகாது.

பொதுவாக, மக்கட் கூட்டங்கள் முதலில் ஓர் இடத்தில் குடியேறும்போது நீர்நிலைகளும் மற்றும் நிலவளங்களும் உள்ள இடங்களையே தெரிந்தெடுத்தனர். அப்படிக் குடியேறிய இடங்களுக்கு அங்குள்ள குளம், வாவி, ஆறு, மரம் முதலியவற்றின் பெயர்களையும் இட்டு வழங்கலாயினர். இதைப் போன்றே ஊர்ப்பெயர்களின் ஈற்றில் காடு, மலை என்பவையும் சேர்த்து வழங்கப்படுகின்றன. தமிழர் உழவுத் தொழிலுக்கும் இயற்கை வாழ்விற்கும் உயரிய இடமளித்த காரணத்தால் இடங்களின் பெயர்களிலும் இவை முன்னிற்கக் காணலாம்.

இடப்பெயர்களின் 3 பெரும் பகுதிகள் :

1. திணைவகைப் பெயர்கள் — (இயற்கை - நிலப் பகுப்பு, நீர்நிலைகள், புல், செடி, மரம், மிருகம் இவற்றின் பெயர்கள்.)
2. சாதி, சமூகப் பெயர்கள் — (குடியேறிய சாதி, சமூகம், ஆட்சி செய்தோர் பெயர்கள்.)
3. காரணப் பெயர்கள் — (உவப்பான செய்தி, சிறிய, பெரிய, நல்ல போன்ற பெயர்கள்.)

இலங்கை முழுவதும் உள்ள திணைவகைப் பெயர்களில் சில — நொச்சி, முல்லை, தும்பை, வாகை, மருதம், பாலை என்னும் பெயர்களால் இதை உணரலாம்.

முல்லை நிலத்துக்கு : நொச்சிகாமம், கிளிநொச்சி — முல்லைத்தீவு, கணேமுல்லை, இடைக்காடு — தும்பங்கேணி, தும்பங்கடவை — சீதவாக்கை, வாகநேரி. **மருத நிலத்துக்கு :** மருதங்கடவை, மருதோடை, மருதமுனை. **பாலை நிலத்துக்கு** - பாலை, பாலையூர், பாலைத்தீவு என்றும், மற்றும் **குறிஞ்சி நிலத்துக்கு** (கல், கல, தலை, தல, கடு, மலை) மாத்தளை, மிகுந்தலை, கடுகணாவை (கடுகணாவ), குருநாகல் போன்றவைகளையும், **நெய்தலுக்கு :** அம்பந்தோட்ட, அம்பன், கரைதீவு போன்ற பலவற்றையும் குறிக்கலாம்.

உண்மைப் பெயர்களைக் கண்டறிவதில் உள்ள இடர்ப்பாடுகள்

தமிழை, கல்வெட்டு, சாசனங்கள், ஓலை, இவைகளில் எழுதும்போது புள்ளி முதலிய நிறுத்தக்குறிகள் இடப்படுவதில்லையாகையால் பல ஐயப்பாடுகள் எழுவதும் இயல்பே. மேலும், இவை பிராமி, தாமிழி, வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ்க் கிரந்தம் முதலியவற்றில் எழுதப்படும்போதும் சாசனங்கள், கல்வெட்டுக்களைப் படிப்பது சிரமமே. இவ்வகையான காரணங்களால் இடப்பெயர்களின் உண்மையான பழைய பெயர்களைக் கண்டறிவதிலும் இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்தோடு இந்நாட்டை முன்னர் ஆண்ட வெளிநாட்டினரின் மொழிகளாகிய போர்த்துக்கீசியம், டச்சு, ஆங்கில மொழிகளில் இடப்பெயர்கள் எழுதப்பட்டு வழக்காற்றில் திரும்பவும் நாட்டு மொழிகளாகிய தமிழிலும் சிங்களத்திலும் அவை எழுதப்படும்போது பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.[7] வெற்றிலை இடும் பழக்கம் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்டாதலால் பல இடப்பெயர்கள் அதனால் உருமாறி அழைக்கப்படுகின்றன.

---

[5] இடையர்-இடைக்காடு; குறும்பர்-குரும்ப செட்டி, மறவர்-மறவன்புலோ: வடமராட்சி.

[6] ஒய்யல் (ஆறு)-ஓய; ஒக்கம் (எல்லாம்)-ஒக்கம; கா (காடு) கஹாவ; அலந்தை (குளம்)-லந்த; புழை (ஆறு)-பொல; எழுவம் (ஆடு)-எலுவா.

[7] கொழும்பு, நீர்கொழும்பு. காலி, களனிய, மெதவாச்சிய, குருநாகல, பதவிய முதலியன.

இலங்கையில் ஊர்ப் பெயர்களில் எடுத்தாளப்படும் சில தமிழ்ச் சொற்கள்

வளை, வில், கமம், வத்தை பத்தை போன்ற இடங்களைக் குறிக்கும் சொற்கள் தென்னாட்டில் வழக்கிலில்லையென்ற காரணத்தைக் காட்டி இவை சிங்களச் சொற்களே என்ற சிலரது கூற்றை ஏற்க முடியாமல் இருக்கிறது. சோழ மன்னரது ஆட்சி முறை 'மும்முடிச் சோழ மண்டலம்' என அழைக்கப் பட்ட இலங்கையில் நிலைபெற்ற காரணத்தால் அவர்களது சிறந்த நீர்ப்பாசன, கம முறைகள் இங்குப் பரவின. பல பெயர்களும் இதை எடுத்துக் காட்டுகின்றன. குடவோலைமூலம் ஊர் ஆட்சி முறை செய்த 'கணத்தார் கூட்டம்' என்பன இலங்கையில் 'கணத்தார் சபை' எனப்பட்டன. அவையே நாளடைவில் 'கணசபா' 'கண்சபா' 'கண்சபாவ' (Gansabhawa) எனப்பட்டன. சிறந்த பயிர்செய் நிலமுள்ள ஊர்களில் வாரியம், வாடிக்கை, முறை, வாரம் எனும் சொற்கள் விரவி வருகின்றதை நாம் அவதானிக்கலாம். வடக்கில் தனித்தமிழ் அரசுகள் இருந்தனவெனினும் இங்கே சோழர் கால ஆட்சியின் சின்னங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. 'கேதற' என்னும் வீட்டைக் குறிக்கும் சிங்களச் சொல்-எடுத்துக்காட்டாக- 'கந்தனுக்-கே-தரை' என்ற 'உரிமை வழங்கப்பட்ட தரை (நிலம்)' என்னும் தமிழ்த் தொடரேயாகும்.[8] இதிலிருந்தே (Ge Names-வீட்டுப்பெயர்) என்னும் குடும்பப் பெயர்கள் தென்னிலங்கையில் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுவாக, தமிழ் 'ச' கரம் சிங்களத்தில் 'ஹ' வாக மாறும். தமிழ் வல்லின 'ப' அவர்கள் பகுதிகளில் 'பி' B ஒலியுடன் தமிழில் வரும். 'த' சிங்களத்தில் 'தெ' என மாறுபடும் [தமிழ்-தெமிள; தல்-தெல் (எள்ளு)]. தமிழ் 'க' சிங்களத்தில் 'ஜி' G ஒலி கொண்டு வழங்கப்படும். **வளை**—வளைவு என்பதன் திரிபு. வளை, வளைவு, சுற்று என்று தமிழரது இடங்களுக்குப் பெயர் உண்டு. எலிவளை, பன்றி வளை=இருப்பிடம். **கமம்-காமம்**='கம்' என்பதன் பொருள்—நீர், பூமியைப் பிளத்தல் வெட்டுதல் என்பதாகும்—நிலத்தைப் பண்படுத்தி நீர் பாய்ச்சி விளை நிலமாக்கிய இடம் 'கமம்' எனப்படும். 'கமம்' என்னும் சொல் விருப்பத்தைக் குறித்து சில இடங்களில் 'காமம்' எனப்பட்டது. 'கிராம' என்னும் வடசொல்லே 'கம' என்று கொள்ளவும் சிலர் துணிவர். கமம், வளம், நிறைவு, பொலிவு என்னும் பொருள்கொண்ட சொல்.[9] இவை சிறந்த விளை நிலங்களைக் கொண்ட ஊர்களைக் குறிக்கும். அகம் என்ற தமிழ்ச் சொல்லே 'அகம', 'கம', 'கமுவ' எனவும் சிங்களத்தில் திரிந்துள்ளதைப் பல இடப்பெயர்களில் காணலாம். 'நொச்சியகம்'—நொச்சியாகம எனவும் 'ஆண்டியாகர்'—ஆண்டியாகம எனவும் திரிந்துள்ளது.

'விளை,' என்ற தமிழ்ச் சொல்லும் 'வில' எனச் சிங்களத்தில் வருகிறது. ஆகவே விலம், வில், விளை, வளை என்பனவே சிங்களத்தில் வில, வெல எனப் பலவாறு வழங்கப்படுகின்றன. பொதுவாக, தமிழில் ம். ன். ய். லை, மை அமைதிபெற்ற சொற்களுக்குச் சிங்களத்தில், அ, வ (Wa), அம, அய, இய போன்ற விகுதிகளைக் கொடுத்து நீட்டி அழைக்கிறார்கள்.

ஈழநாட்டுக்கு இடப்பட்டுள்ள பெயர்கள்

ஈழம் – இலங்கை (CEYLON, SRI LANKA)

எமது நாட்டிற்கு உள்ள பெயர்கள் அநேகம். இப் பெயர்கள் அனைத்தும் தமிழிலிருந்து வந்தவையேயாகும். வேறெந்த நாட்டிற்கும் இவ்வளவு பெயர்கள் கிடையாதென்பதிலிருந்து இத் தீவின் முக்கியத்துவம் புலப்படும்.

ஆதிகாலத்திலிருந்தே 'ஈழம்', 'இலங்கை' என்ற பெயர்கள் இந் நாட்டுக்கு வழங்கப்பட்டது 'திருநாடு', 'சிவபூமி', 'ஒளிநாடு', 'தாமிரபரணி' என்னும் தமிழ்ப் பெயர்கள் 'ட்ரொநாடே'[10] (Tronate), 'சிலோமே' (Seilome), 'ஓபீர்' (Ophur), 'தாப்ரபேன்'[11] (Tabrobane) என்றும் 'தம்பபண்ணை' (Tambapanne), 'செரன்தீப்' (Serendib), 'இரத்தினதுவீப' (Ratnadweep), 'சீலதீவு' (Sielediba), 'பழைய சீமண்டலம்' எனப் பலவாறான பெயர்கள் பன்னாட்டு மொழிகளிலும் வழங்கப்பட்டு வந்தது. இப் பெயர்கள் தமிழ்மொழிப் பெயர்களின் திரிபேயாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலோ, அதற்கு முன்னரோ வாழ்ந்த திருமூலநாயனார் இலங்கையைச் 'சிவபூமி'[12] என்று குறித்துள்ளார்.

'ஈரான்' என வழங்கும் 'பேர்சியா' நாட்டிலும் ஈழம் (Elam, UR, AR, IL) மற்றும் ஊர், ஆறு, இல் என்னும் விகுதியுடைய பல பெயர்கள் காணப்

---

[8] 'கே' தம்மம் - இன்னாருக்குக் கொடுக்கப்பட்டது (தரை) என்ற பொருளில் வருவது. 4ஆம் வேற்றுமையுருபு. 'கல்வெட்டியல்' த. நா. அரசு தொ. பொ. ஆய்வுத்துறை வெளியீடு-சென்னை,

[9] 'கார்கோள் முகந்த **கமஞ்சூல்** மாமழை'-திருமுருகாற்றுப் படை, திருப்பரங்குன்றம். 7ஆம் வரி. ('கார்கோள் முகந்த கமம் சூல் மாமழை,—கடலினிடத்தே முகந்ததினால் உண்டாகிய **நிறைவினை** உடைத்தாகிய சூலினையுடைய பெரிய முகில்கள்).

[10] Tronate (திருநாடு). Ilerane (ஈழநாடு). "The Temporal and Spiritual Conquest of Ceylon" Fr. Fernao de Queyroz. Trans. S. G. Perera, Colombo, 1930, p. 13.

[11] Ptolemy. 2nd Century A.D.
Cosmos, Indecopleustes-6th Century A.D.

[12] 'மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தண்மா மலையத்தூ
டேறுஞ் சுழுனை இவைசிவ பூமியே' —திருமந்திரம், 2747

'இடைபிங் கலையிம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும் பரமாம் பரமே'
— திருமந்திரம், 2754.

படுகின்றன. இவற்றிலிருந்து நாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்து என்னவெனில், இம்மூவிடங்களையும் தொடுத்து ஒரு நாடு இருந்திருக்க வேண்டும் என்பதும், இந் நாட்டினரிடையே 2000 வருடங்களுக்கு முன் எப்பொழுதோ நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதுமே. மேலும், மேலை நாட்டு அறிஞர்கள் கூறுவது போல் 'இலெமூரியா' (Lemuria) என்னும் கண்டம் அந்நாளில் நாடாக இருந்து பின்னர் கடலில் அமிழ்ந்துவிட்டது என்பதை ஒப்பு நோக்கலாம்.

''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள''

என்ற சிலப்பதிகாரச் செய்யுளில் வருவதுபோல் கடற்கோளினாலோ அன்றி இயற்கையின் சீற்றத்தினாலோ பல நாடுகள் காலத்துக்குக் காலம் அமிழ்ந்து அழிந்திருக்கலாம்[13] என்பது தெளிவு.

ஈழம் : இதன்பொருள் பொன், கள், நெல், ஒளிபொருந்தியது, கிழக்கு என இன்னும் பல. இந் நாட்டில் கரும்பொன் எனப்படும் இரும்பு மட்டும் முன்னரும் கிடைத்திருக்கலாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு முதலாம் இராசராசன் அளித்த கொடைகளில் அவனது மெய்க்கீர்த்தி 'திருமகள் போல—குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும் முரட்டொழில் சிங்களர் ஈழ மண்டலமும்' எனப் பகர்கிறது.[14]

'ஈழத்துணவும் காழகத்தாக்கமும்' என வரும் பட்டினப்பாலை அடிகள், இத் தீவு சிறந்த விளை நிலமாக இருந்ததென்பதையும், அக்காலத்தில் உணவுப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பதையும் குறிக்கும். 'விளைபூமி', 'நிறைபூமி', என்றவற்றால் 'ஈழம்' எனப்பட்டது என்பர்.

இரத்தினக் கல் படுகைகளை 'இல்லம்' என்னும் தமிழ்ப் பெயரால் அழைப்பர். இந்த 'இல்லம்' தான் நாளடைவில் 'ஈழம்' ஆகியிருக்கலாம் என்பர் சிலர். தொன்றுதொட்டே சிவ வழிபாடு இந்நாட்டிலிருந்த காரணத்தால் சிவன் ஒளிமயமானவர் என்னும் பொருளில் 'ஒளிநாடு' என வழங்கப்பட்டு இதுவே பின்னர் எல்லம் ஆயிற்று எனலாம். சிவனொளிபாதமலை என்பதையும் இதனுடன் சேர்த்து ஆராய்தல் வேண்டும். எல்லம்[15] (Elam) என்பதே ஈழம் எனத் திரிந்தும் இருக்கலாம்.

தமிழர் பண்பாடு துலங்கும் பழம்பெரும் ஊர்களும் தலங்களும்

சிவனொளிபாத மலை (Adam's Peak) : இதன் மறு பெயர் 'சிவசோதி பாதம்' ஆகும். இம் மலையைச் சிங்களவர் 'சிரிபாத' எனவும், கிறித்துவர் 'ஆதம் சிகரம்' எனவும் வழங்கி உரிமை கொண்டாடுவர். புத்தர் இம்மலையில் கால் வைத்ததாகப் புத்த சமயத்தினரும், ஆதிமனிதர் ஆதாம் வந்துபோனதாகக் கிறித்துவரும் கூறுவர். வைரம் முதலிய இரத்தினங்களை கிரேக்கர் 'ஆதாம்ஸ்' என்பர். இலங்கையில் இரத்தினங்கள் கிடைத்த காரணத்தால் இம்மலை, 'ஆதாம்ஸ்' சிகரம் எனப்பட்டது. பின்னர் இதுவே 'ஆதம்ஸ்' என்று குறுகிவிட்டது. இது 'சமனொளி'[16] எனவும் அழைக்கப்பட்டது. இம்மலையின் பெருமையினாற்றான், இந் நாட்டிற்கும் 'ஒளிநாடு' என்ற பெயர் வந்திருக்கலாம். இம்மலை நல்ல நேரிய கூம்பு (Conical) வடிவில் அமைந்திருக்கின்றது.

நயினா தீவு: புகழ்பெற்ற நாகபூஷணி அம்மன் கோவிலும் நாகதீப விகார என்னும் பௌத்த கோவிலும் இத்தீவில் உள்ளன. நாகர் இனத்தவரது வழிபாட்டுச் சின்னமாக நாக வழிபாடு இங்கே உள்ளது. இத் தீவு மணிமேகலை நூலில், 'மணிபல்லவம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. அக் காலத்தில் இது சிங்கள வரால் 'ஜம்புகொலபட்டின' எனப்பட்டது என்று 'தீபவம்சம்', 'மகாவம்சம்' என்னும் நூல்களில் காணப்படுகின்றது. இத் தீவின் மேற்குக் கரையில் 'படகுத்துறை' என்ற பெயரில் ஓரிடம் இன்றும் இருக்கின்றது. கி.பி. 12ஆம் நூற்றாண்டு சீனச்சாடிகளும் இங்கே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரத்திலிருந்து 'நயினார்' எனப்படும் சமூகத்தினர், அக்காலத்தில் வந்து குடியேறியதனால் இத்தீவு நயினார் தீவு எனப் பெயர் பெற்றது. இதன் வேறு பெயர்கள் 'மணிநாகத் தீவு', 'நாக நயினார் தீவு' என்பனவாகும்.

கதிர்காமம்

இலங்கையின் தென்பகுதியிலுள்ள கதிர்காமம் என்னும் திருப்பதியில் மாணிக்க கங்கை என்னும் மணியாறு ஓடுகிறது. அவ்வாற்றங்கரையினிலே அறுமுகச் செவ்வேளாகிய முருகன் கோயில் கொண்டுள்ளான். குன்றுதோறும் நின்றருள் புரியும் குமரனை அருணகிரிநாதர்,

''மணிதரளம் வீசி அணி அருவி சூழ மருவு கதிர்காமப் பெருமான் காண்'' என்று உருகிப் பாடுகின்றார். இத்தலத்தைப் 'பழைய கதிர்காமம்' என்றும் 'சுவாமி மலை' என்றும் சொல்வதுண்டு. மணியாற்றின் கரையில் அமர்ந்த முருகன் மாணிக்க வடிவத்தில் விளங்கினான் என்பர். கதிர் + அகம் = கதிரகம் என்றும், பின்னர் இதுவே சிங்களத்தில் கதிறகம (கதிரகம) என அழைக்கப்பட்டும்,

---

[13] ''கடவுள் மாநகர் கடல்கொளப் பெயர்ந்த — விரிதிரை வந்து வியன்நகர் விழுங்க''—மணிமேகலை, 25: 201-202.

[14] 'தஞ்சைப் பெருவுடையார் கோவில் கல்வெட்டுகள் (முதலாம் பகுதி)—பதிப்பாசிரியர் ஆர். நாகசாமி, தமிழ்நாடு அரசு வெளியீடு, 1969.

[15] எல்-ஒளி, சூரியன், சிவன் (எல்+அம்—எல்லம்).

[16] மணிமேகலை, 28: 108.

தமிழரால் கதிர்காமம் எனவும் அழைக்கப்படுவதுமாயிற்று. முருகன் ஒளிமயமானவன் என்பதையும் அவன் ஒளி பொருந்திய மாணிக்க வடிவத்தில் அமர்ந்துள்ளான் என்பதையும் இது குறிக்கும். தினைப்புனங்களால் சூழப்பெற்ற இடமாகையால் கதிர்-அகம் எனப்பட்டது எனவும் கூறுவர். மாணிக்ககங்கை அருகேயுள்ள கீழ்க்கோயிலில் உருவமில்லா வழிபாடு நடைபெறுகின்றது. திரை மறைவில் ஒரு பேழை; இதற்குள் ஒரு யோகியாரால் எழுதப்பட்ட யந்திரம் உள்ளது என்று கூறுவர்.

திருக்கேதீச்சரம் : 'ஈச்சுரம்' என்னும் பெயர்களையுடைய ஊர்கள் ஈழ நாட்டில் பல உண்டு. ஈசன் கோவில் 'ஈச்சுரம்' எனப்படும். (1) திருக்கேதீச்சரம்—இலங்கையில் மேற்குக் கரையில் இராமேசுவரம் தீவிற்கு நேர் கிழக்கே அமைந்த இச் சிவாலயம் கட்டப்பட்ட காலத்தை அறியமுடியாதிருக்கின்றது. மிகமிகப் பழைய காலந்தொட்டே ஈழநாட்டில் புகழ்பெற்ற பல சிவாலயங்கள் இருக்கின்றன. இராவணனது மனைவி மண்டோதரியின் தந்தையாகிய மயன் என்பவனால் இச் சிவாலயம் கட்டப்பட்டதெனப் புராணங்கள் கூறும். இச் சிவாலத்தைத் திருஞானசம்பந்தப் பெருமானும் சுந்தரமூர்த்தி நாயனாரும் அகக்கண்ணால் வழிபட்டுத் தேவாரம் இசைத்துள்ளார்கள்.

திருக்கோணேச்சுரம் (திருகோணமலை) : இப் பழம்பெரும் தலம் இராவணனோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ள பழமை வாய்ந்தது. இது அமைக்கப்பட்ட காலமும் அறியக்கூடியதாயில்லை. இராவணன் காலத்துக் கோவில் கடல் கொள்ளப்பட்டு இதன் அழிபாடுகள் கடலுக்கடியில் இருப்பதாகப் பல ஆழ்கடல் ஆராய்ச்சியாளர் கூறியுள்ளனர். சில விக்கிரகங்களும் அண்மையில் கடலிற் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது இலங்கையின் கிழக்குக்கரையில் வங்கக் கடலோரத்தில் முக்கோண வடிவக் குன்றின்மேல் அமைந்துள்ளது.

மூன்று கோயில்கள் இம் மலைமேல் இருந்துள்ளன[17] (The mountain of three Pagodas). திருகோணமலைத் துறைமுகம் உலகிலே மிகத் தலைசிறந்த இயற்கைத் துறைமுகமாகும். இதனை அணித்தே **'தம்பலகாமம்'** போன்ற பல சைவத் திருத்தலங்கள் உள.

கும்பகர்ணன் மலை : இச் சிறு குன்று வவனியாவுக்கும் முல்லைத்தீவுக்கும் இடையே உள்ளது.

முன்னேச்சுரம் : இத்தலத்தை 'முனீசுவரம்' (Muneeswaram) என்றும் கூறுவர். இதன் முற்காலத்தைய பெயர் 'அழகேசுவரம்' ஆகும். இதைச் சிங்கள மன்னர்களான கயபாகு, ஆறாவது பராக்கிரமபாகு முதலியோரும் வழிபட்டனர் என வரலாறு கூறும். திருக்கோணேசுவர ஆலயத்துக்குத் திருப்பணி செய்த குளக்கோட்டன் இவ்வாலயத்தையும் புனர்நிர்மானம் செய்து இதற்கென 64 கிராமங்களை அளித்துப் பெருஞ் சிறப்புச் செய்தான் என வரலாறு கூறுகின்றது. இதைச் சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்திலும் தமிழ் மக்களே வாழ்ந்துள்ளனர். அக்கிராமங்களாவன — மருதங்குளம், பிராமணியபுரம், வீரபாண்டியம், இரட்டைக்குளம், பூக்குளம், தாமரைக்குளம், காக்காப்பள்ளி, பொத்துவில், மணற்குளம், மண்டைகொண்டான், கழுவாமடு, தீர்த்தக்கரை, மானாவாரி, குசலை, கருக்குப்பனை, கோட்டைப்பிட்டி, ஆனைவிழுந்தான், முத்துப்பந்தி, மருதஞ்சோலை ஆகும்.

யாழ்ப்பாணம் : இப் பெயர் வந்த காரணம் பலவாறாகக் கூறப்படுகின்றதெனினும் தமிழ் மக்களின் பண்பாட்டுக்கு அடிப்படையாகவுள்ள யாழையும் பாணனையும் தொடர்புபடுத்தியுள்ளதொன்றே இன்று நிலைத்து நிற்கின்றது. யாழ் வாசிப்பதில் ஈடிணையற்ற ஒரு பாணனுக்கு அக்காலத்தே குடியிருப்புகளில்லாத 'மணற்றி' எனும் பூமி ஒரு மன்னனால் இவனுக்கு வழங்கப்பட்டதாகவும் அக் காரணத்தால் 'யாழ்ப்பாணன் நாடு' என்பதே 'யாழ்ப்பாணம்' ஆயிற்று என்றும் கூறுவர்.

கியூறோஸ் சுவாமியார் எனும் போர்த்துக்கேய வரலாற்று அறிஞர் இந் நகர் 'யபனப்பட்டணம்' (Jafana Patao) என்று இதனைக் குறித்துள்ளார்.

சிங்கள நூல்களில் 'யாபா பட்டுண' என்று குறித்துள்ளனர். இது நல்லூர் என்று பொருள்படும்.

நல்லூர்: இன்று நல்லூர் எனப்படும் திருப்பதியிலே போர்த்துக்கேயர் காலத்துச் சங்கிலி மன்னனின் அரண்மனை முதலியனவும் 'யமுனாரி' (யமுனா + ஏரி) எனப்படும் திருக்குளமும் இன்றுமிருக்கின்றன. தென்பாண்டி நாட்டிலுள்ள 'செவ்விருக்கை'யெனும் இடத்திலிருந்து வந்த ஆரியச் சக்கரவர்த்தி வழி வந்த மன்னர்கள் சிங்கை நகரென வழங்கிய நல்லூரைத் தலைநகரமாகக் கொண்டு யாழ்ப்பாணப் பகுதியை அரசாண்டனர்.

புத்தளம் (Puttalam): பாம்புப் புற்றுகள் இருந்த காரணத்தால் புற்றளம், புத்தளம் ஆகியது. வெளிநாட்டார் மொழிகளில் 'பட்டாள நகர'மென்றும், 'நாகபட்டினம்' என்றும் இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. பாம்புப் புற்றுகளுடன் பாம்புகள் இருந்த காரணத்தால் 'நாகபட்டினம்' என்ற பெயரும் பிற்காலத்தே 'புத்தளம்' என்ற பெயரும் வருவதாயிற்று.

மன்னார் (Mannar) : இப் பெயர் 'மண் நாடு' என்றதன் திரிபேயாகும். இவ்வூரும் இதனை அடுத்த ஊர்களும் அடிக்கடி மண்மாரிக்கு

---

17 Fr. Fernao de Queyroz, "The Temporal and Spiritual Conquest of Ceylon."

இலக்கான்வை என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறும். வெளிநாட்டு வாணிபத் தொடர்புகள் முற்காலத்தே இருந்த காரணத்தினால் இவ்வூர்ப் பெயரும் 'மண்ணாறு' என்று ஆகி, 'மன்னார்' ஆயிற்று என்க. மன்னார் 'பகைவர் பட்டினம்' என்னும் பொருளையும் பெறும்.

சில பெயர்களின் முன்னைய வடிவங்கள்

கொடிகாமம் — கொடிப்பாலைச் செடி இருந்த இடம். கொடி + கமம் = கொடிகாமம்.

கரணவாய் — கரை+அணை+வைத்த+இடம். இடம் அற்றுப் போக, கரை+அணை+வை—'கரணவாய்' ஆயிற்று.

மண்டான் — மண்+தானை என்னும் பொருளில் வருகின்றது. மண்கும்பான் என்னும் இடத்தில் மணல் கும்பியாக இருத்தலையும் இதற்கு ஒப்பிடலாம்.

சுன்னாகம் — சுண்ணத்தார் (சுண்ணர்+அகம்= சுண்ணாகம்) கல் நீற்றுந் தொழிலுடையோர் இங்கு முதலில் குடியேறினர்.

பண்ணாகம் — பண்ணர், பண்டர்+அகம்=பண்ணாகம். பண்டர் — பண்டாரிகள் எனப்படுவோர் முதலில் குடியேறிய இடம். இதன் அயலூரிலும் அவர்கள் வந்து குடியேறிய இடம் 'பண்டத் தரிப்பு' (தரிப்பு-தங்கிய இடம்).

மல்லாகம் — மழவர், மள்ளர். மல்லர்+அகம் = மல்லாகம். இவ் வகுப்பினர் படைத்தொழில் புரிபவர். இது இவர்கள் குடியேறிய இடம்.

சுழிபுரம் — சோழபுரம், சோழர் எனும் சோழியர் வாழ்ந்த இடம். 'சோழ கங்கர்' என்னும் வன்னியர் போர்ப்படையினராக வந்து தங்கி இருந்தனர். சோழபுரமே 'சுழிபுரம்' ஆயிற்று.

உசன் — உசன் + நயினார் + எல்லை = 'உசன்' ஆயிற்று.

சாவகச்சேரி — சாவகர் + சேரி — இவ்விடத்தில் 1871-ல் சோனகர் காயல் பட்டினத்திலிருந்து வந்து குடியேறினர்.

எழுதுமட்டுவாள் — இது முன்னர் ஆங்கிலத்தில் 'Illondi Mutual' எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதன் உண்மைப் பெயர் 'இலந்தைமோட்டைவில்' ஆகும். மரப்பெயருடன் அரைவட்டக் குளமாகிய வில் சேர்ந்து இப் பெயர் உண்டாயிற்று. இப் பெயர் 'எழுதுமட்டுவாள்' ஆயிற்று.

வவுனியா — வவுனியன் + குளம் வவுனியா ஆயிற்று. இது முன்னர் 'பவானிக்குளம்' எனப்பட்டதாம்.

வடமராட்சி—வடமறவர் + ஆட்சி; வடமர் + ஆட்சி; வட தமிழ்நாட்டு மறக்குலத்தோர் வசித்த இடம்.

தென்மராட்சி— தென்மறவர்+ஆட்சி; தென்மர்+ ஆட்சி; பாண்டி நாட்டு மறக்குலத்தோர் வந்து தங்கிய இடம். இவ்வாறே சாதி, சமூகப் பெயர்களைக்கொண்ட அநேக இடங்கள் உண்டு.[18]

மழவர் (மல்லர்) — மல்லாகம் (மல்லர்+அகம்).

சுண்ணர் (சுண்ணத்தார்) — சுண்ணாகம் (சுண்ணர்+அகம்).

துன்னர் — துன்னாலை (துன்னர்+எல்லை).

சாண்டார் (சான்றார்) — சண்டிலிப்பாய் (சாண்டார்+இருப்பை) சண்டிருப்பாய்.

இடையர் — இடைக்காடு (இடையர்+காடு).

துளுவர் — (தெளுவர்) தெல்லிப்பளை (தெளுவர்+பளை).

பழையர் — பழை;[19] அளவர்—அளவெட்டி, அளவெட்டி (அளவர்+இட்டி).

குறும்பர் — குரும்பசிட்டி (குறும்பர் – சிட்டி).

கோவ்யர் — கோப்பாய் (கோவ்யர்+இருப்பை).
(This sect resemble the Kovs of Nilgris)

மாதாக்கள்—மாதகல் (மாதாக்கள்+எல்லை); எல்லை அற்றுப் போயிற்று.

வடுகர்—வட்டுக்கோட்டை (வடுகர்+கோட்டை). இவர்கள்[20] வேளைக்காரப் படைகளில் இருந்தனர்.

மறவர் (வடமறவர், தென்மறவர்) வடமராட்சி, தென்மராட்சி.

நீர் நிலைகளிலிருந்து வந்த இடப்பெயர்கள்

ஏரி — பூநகரி (பொன்னேரி), வாக்நேரி, வன்னேரி; **குளம்** — மாங்குளம், சிப்பிக்குளம், வன்னியர்குளம், கம்மாளன்குளம், ஈசான்குளம், பேய்க்குளம், சந்தனக்குளம், இத்திக்குளம், புளியங்குளம், பூவரசங்குளம், புற்குளம், ஆலங்குளம், பண்டாரக் குளம், கிரான்குளம், கனகராயன்குளம், அகத்திக் குளம், குருவிக்குளம், மருதங்குளம், செம்புக் குளம், சேறுக்குளம், வன்னிவிளாங்குளம் முதலிய பல.

---

[18] போயிட்டி, தையிட்டி, மாகியயிட்டி, மயிலிட்டி, மானிப்பாய், இளவாலை, வியாபாரிமூலை.

[19] செ. குணசிங்கம், 'கள்ளியங்காட்டுச் செப்பேடுகள்', பிற்சேர்க்கை-வண. சுவாமி. ஞானப்பிரகாசர், R.A.S. CB-Vol. xxiii.- No. 89, pp. 217-219.

[20] கூலிப்பட்டாளத்திலிருந்த பிரிவினர்—"Mercenary Soldiers from South India".

வில் (வில்லு) — கொக்குவில், கோண்டாவில், நுணாவில், மட்டுவில், மந்துவில், பொத்துவில், கொக்காவில், வேயாவில், வேவில், கெருடாவில், மீன்வில்லு, வில்மடுத்தேக்கம்.

ஆறு — கல்லாறு, தொண்டமனாறு, கரடியனாறு. **ஓடை** — கந்தரோடை, மருதோடை, காங்கேயன் ஓடை, கழி ஓடை, மாவடி ஓடை, சூரியோடை, மீராவோடை.

கேணி — சித்தங்கேணி, மாங்கேணி, பனிச்சங்கேணி, தும்பங்கேணி, பத்தர்கேணி, நெடுங்கேணி, மருதங்கேணி, பன்றிக்கேணி, தாமரைக்கேணி, நாவற்கேணி, கருவேப்பங்கேணி, கறுவாக்கேணி. **கண்டி** — பொலி கண்டி, முறி கண்டி, கோயிலாக் கண்டி. **குழி** — நாவற்குழி, முதலைக்குழி. **களப்பு**— மட்டக்களப்பு, தனங்களப்பு. **குடா** — கற்குடா, ஆலங்குடா, பாலைக்குடா, தாழங்குடா, புளியங்குடா, முதலைக்குடா, புன்னைக்குடா, நெல்லிக்குடா, நாவற்குடா. **அம்பன்** — அம்பாந்தோட்ட, அம்பன். **மோட்டை** — நொச்சிமோட்டை, முரசுமோட்டை, புல்மோட்டை, ஈச்சமோட்டை.

குண்டு — தராக்குண்டு, நரிக்குண்டு (அநேகம்). **ஊற்று** — தண்ணீர் ஊற்று (தனி ஊற்று). **ஊருணி** — ஊருணி. **கிணறு** — கொல்லன் கிணறு. **அருவி** — அருவி ஆறு, அருவிச்சேனை. **பள்ளம்** — பள்ளம், ஒட்டுப் பள்ளம்; பள்ளே வெல (பள்ள வில்), பள்ளே கம (பள்ளக்கமம்). **வெள்ளம்** — வெள்ளவத்தை, வெள்ளம் போக்கடி (வெள்ளாம் பொக்கட்டி). **கரை** — கரைவெட்டி (கரவெட்டி), நஞ்சுண்டான் கரை, கரையூர், கோவில்கரை. **துறை** — களுத்துறை, பாணந்துறை, மாத்துறை (மாத்தறை).

வேரப்பொக்குண (Werapokuna): இவ்வூர் முன்னேச் சரத்துக்குப் பக்கலில் உள்ளது. வேரம்+பொக்கணை=வேரப்பொக்கணை. இது மருவி வீரப்பொக்கணை என்றும் தமிழரால் வழங்கப்படுகின்றது. இப்படி மூங்கிலைக் குறிக்கும் வே, வேய, வேர எனும் சொற்களைக் கொண்ட அனேக இடப் பெயர்கள் தென்னிலங்கையில் உண்டு.

தமிழ்ப் பெயர்களைக் கொண்ட தென்னிலங்கை ஊர்கள்

கண்டி (Kandy): இந்த அழகிய நகரை 'நுவர' என்று தென்னிலங்கை மக்கள் அழைப்பர். 16ஆம் நூற்றாண்டுக்குப் பின் இலங்கை வந்த வெளிநாட்டாரால் பல்நுகர (Palnugara) எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது 'பல்நகரம்' (புத்தர் தந்தம்) என்பதின் சிதைவே. நாலாப் பக்கமும் குன்றுகளால் சூழப்பட்ட இந்நகரத்தின் மத்தியில் அழகிய குளம் ஒன்றும், வேறு ஆறுகளும் ஓடுகின்றன. தண்ணீர் தேங்கி நிற்கின்ற காரணத்தால் தமிழில் 'கண்டி' எனப்படுகிறது. இதேபோலக் கண்டி விகுதிப் பெயர்கள் பலவுண்டு—(முறிகண்டி, பொலிகண்டி). புத்தபகவானது புனித தந்தம் (பல்) இங்கேயுள்ள தாதுகோபத்தில் (புத்தர் கோயிலில்) வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு (Colombo): இப் பெயர் வந்த காரணம் இத் துறைமுகத்தில் கற்பாறைகள் இருப்பதனாலேயே. இலங்கையின் மேற்குக் கரையேயுள்ள பல துறைமுகங்களுக்குக் 'கல்' என்னும் சொல் பகுதியாக வருகின்றது. சான்றாக, காலே (Galle), கழுத்துறை (Kalutara), நீர் கொழும்பு (Negombo), கல்கிச (Galkissa), கற்பிட்டி (Kalpitiya) என்பனவற்றைக் குறிக்கலாம்.

சிலாபம் (Chilaw): இவ்வூர் முன்னர் 'சலாவத்துறை' எனப்பட்டது. இது 'சலாபம்' என்னும் சொல்லின் திரிபு. 'சலாபம்' என்றால் முத்துக் குளிக்கும் இடம். 'முத்துச் சலாபம்' என்று பொருள்படும்.

பொலன்னாறுவ (Polonnaruwa): இந் நிலவுலகில் நல்லரசும் வல்லரசும் என்றுமுண்டு. நல்லரசில் மன்னுயிர் இன்புற்று வாழும். வல்லரசில் துன்புற்று வாடும், வீழும். உயிர்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அரசை அறுக்கும் என்று அறநூல்கள் கூறும். இதனாற்றான் முதலாம் இராஜராஜசோழன் என்ற சோழப் பேரரசன், மற்றச் சோழ மன்னரைப்போல், தான் சென்று வென்ற நாடெல்லாம் சிவாலயங்களைக் கட்டினான். தான் வென்ற ஈழ நாட்டிலும், குறிப்பாக, 'இராஜராஜேசுவரம்', 'ஜனநாதமங்கலம்', 'புலத்திநகரம்', 'சதுர்வேத பிரமம்புரம்', 'ஜனநாதபுரம்' என்றெல்லாம் அழைக்கப்படும் 'பொலன்னாறுவ'வில் பல சிவாலயங்களைக் கட்டினானென வரலாறு கூறும்.

பொலம் — பொலன் + ஆறு = பொலன்னாறுவ (Polonnaruwa) என்று சிங்களத்தில் திரிந்தது.(பொன் மலர் = தாமரை மலர். பொலந்தாது = தாமரை மாலை) விளை பெருக்கத்திற்கு வேண்டிய நீரைத் தருவதாலும், நெல்லுக்கும் பொன் என்ற பொருள் உள்ளதாலும், தமிழ்நாட்டில் காவேரி ஆற்றை மதிப்புடன், 'பொன்னி' என்று அழைக்கின்றனர். இதே போன்று, சோழப் பேரரசனின் ஆட்சிக்குட்பட்ட இந் நிலமும் பயன்கருதி இவ்வாறு (குளமும்) 'பொலன்னாறு' என வழங்கப்பட்டு, இடமும் அப் பெயரையே பெறலாயிற்று. இது தமிழில் 'பொலனறுவை', 'பொலன்நறுவை' எனவும் பிழையாக இப்போது அழைக்கப்படுகிறது.

அநுராதபுரம் (Anuradhapura): இப் பட்டினம் பழைய நாட்களில் பெரிய நகரமாகவும் விளங்கியுள்ளது. பல தமிழ் அரசர்கள் இங்கிருந்து ஆட்சி

புரிந்துள்ளனர். புத்தமதத்தினரின் புனித யாத்திரைத் தலங்களில் இதுவும் ஒன்று. மகிந்தனும் அவன் தங்கை சங்கமித்திரையும் புத்தகயாவிலிருந்து புனித வெள்ளரசங் கொம்புகளை எடுத்து வந்து இங்கே நாட்டினர். இவ்விடத்தில் அவ்வரசு இன்றும் இருக்கிறது.'றுவூன் வெலிசாய','ரங்கொட்டு விகார' என்னும் வானளாவும் தாதுகோபங்களும், பெரிய குளங்களாகிய 'நுவரவெவ', 'நச்சதூவ' ஆகியவையும் இந்நகரில் உள்ளன. அநுராதா என்னும் அரசன் பெயரால் இந்நகருக்கு அநுராதாபுரம், 'அநுராதபுரம்' எனும் பெயர் வந்தது என்பர். இது பொருத்தமுடையதாயில்லை. பறங்கி வரலாற்று ஆசிரியர் கியூறோஸ் சுவாமியார் '90 அரசர் ஆண்ட மாளிகை' என்ற கருத்திலேதான் இது 'அனுராசபுரம்' எனப்பட்டது என்பர். இது நெடுங்காலமாகத் தமிழர் வழங்கி வரும் பெயர். சிற்ப வேலைகளில் மிகவும் நுணுக்கமான 'அணு', 'பரமாணு', 'தேர்த்துகள்'[21] என்ற அளவைகள் கொண்ட சிற்பமுறையில் அமைந்த இரதங்கள் (இரதக்கோயில்கள்) அமைந்த காரணத்தால் அணு+ரத+புரம் என்னும் பெயரே இது என்பதே ஏற்றுக்கொள்ளக்கூடியது. அந்நாளில் சிறந்த சிற்பிகள் 'ரதக்காரர்' (தேரர்) என்று அழைக்கப்பட்டனர். கோயில் வகைகளில் குடைக்கோயில், கற்கோயில், தேர்க்கோயில் எனப் பல வகையுண்டு. அவற்றில் தேர்க்கோயில்கள் பல (இரதக் கோயில்) அனுராதபுரத்தின்கண்ணே இருந்தன. இவ்விடத்துப் பழைய சிவன் கோவில் ஈசரின் பெயரும் 'அனுரேசர்' ஆகும். இதன் பழைய நகரில் தமிழர்களது பண்பாட்டுச் சின்னங்கள் அநேகம் உள்ளன.

குருநாகல் (Kurunegala): இதைச் சிங்களத்தில் 'குருநாகல' என்பர். தண்ணீர் தேங்கி நிற்கும் கல்லை குறுந்தக்கல் என்பர். இதுவே 'குருந்தக்கல்' என்றும் அழைக்கப்படும். இப் பெயரே 'குருநாகல' ஆகி, தமிழில் பிழையாக 'குருநாகல்' என வழங்குவர். இங்குள்ள கருங்கல் குன்றின்மேல் தண்ணீர் தேங்கி நிற்கின்றது. மேலே குகைகளும் உள. பல யோகியர் இங்கு வாழ்ந்துள்ளனராம். இம் மலைமேல் குருந்த மரமும் உள்ளது. முன்னாளில் இது சிறந்த சிவத்தலமாயிருந்திருத்தல் வேண்டும்.

எட்டியாந்தோட்டை (Yatiyantota): இவ்வூர் சிங்களத்தில் 'யட்டியந்தோட்ட' எனப்படும். 'எட்டியான்+தோட்டம்' என்பதே இவ்வாறு திரிந்தது. அந்நாளில் கூட்டம் கூட்டமாக ஊர் ஊராகச் சென்று வாணிகம் செய்பவரை 'வாணிகச்சாத்து' எனப்பட்டது. வாணிகத்தைத் திறம்பட நடத்திய வணிகருக்கு 'எட்டி' எனும் பட்டத்தையும் பொற்பூவையும் அளித்துச் சிறப்பித்தனர். இத்தகையோர் தங்கிய இடம் இது.

உண்மை துலங்குவதற்கு வேண்டுவன

ஈழத்தில், தமிழரது வரலாற்றைப்பற்றி மிகச் சில அகச் சான்றுகளே உள்ள காரணத்தால், புறச் சான்றுகளாகிய வெளிநாட்டுப் பிரயாணிகள், வரலாற்று ஆசிரியர், அல்லது வணிகரின் குறிப்புகளை வைத்துக்கொண்டே இதை அறிய முடியும். 'மகாவம்ச' என்னும் சில குறிப்புகளை மட்டும் தந்துள்ளது. உண்மையை அறிய விரும்பும் நடுநிலைக் கண்ணோட்டத்துடன் அகழ்வாராய்ச்சி முதலியன செய்யப்பட்டால் ஈழத் தமிழரின் வரலாறு நன்கு துலங்கலாம்.

வளர்ந்து வரும் இளம் மொழியாகிய சிங்களத்தினுள் வடமொழியும் பாலியும் செல்வாக்கைப் பெற்றிருப்பினும், பொதுவாகவும் சிறப்பாகவும் இடப்பெயர்களைப் பொறுத்தவரை தமிழ்மொழியின் செல்வாக்கே மேலோங்கி நிற்பதைக் காணலாம்.[22]

பழைய காலத்து இடப்பெயர்களையும், ஈழம் பற்றிய வெளிநாட்டாரது குறிப்புகளையும்,[23] இது வரை அகழ்வாராய்ச்சிமூலம் கண்டெடுக்கப்பட்ட தடயங்களையும்,[24] மற்றும் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட சிவாலயங்களின் இருப்பிடங்களையும், அவற்றின் பின்னைய வரலாற்றையும் ஆராயுமிடத்து, இந் நாடு 'திராவிட இலங்கையே' அல்லது 'சிவபூமி'யே என்னும் கருத்து எழுவது இயல்பே.

---

[21] 'மானசாரம்' என்னும் சிற்ப சாத்திர நூலில் இவைபற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

[22] வண. சுவாமி ஞானப்பிரகாசர். சொற்பிறப்பு. ஒ. த. அ. யாழ். 1940. "கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளைப் போன்று சிங்களத்திலும் பெருமளவில் திராவிடச் சொல் வடிவங்கள் உண்டு."

வண. சுவாமி தாவீது, "மைந்தனே" ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம், 1972. பக்கம் 43. "If you desire a through knowledge of Tamizh, then study Simhala from its grass roots."

[23] Warmington, "Commerce between the Roman Empire and India", Page 123. "The Tamils control the north of Ceylon during the first two Centuries, Existence of shrines to Muruga, son of Siva found in the South (Kataragama) Centre and North — all point to the vital role played by the Tamils and the religion Shiva in the culture of this Island from Pre-Vijayan times."

[24] வளவ கங்கைப் பகுதி (தெற்குக் கரை); கதிராவெளி (கிழக்குக் கரை); பொன்பரிப்பு, மாதோட்டம் (மாந்தை), (மேற்குக் கரை); வல்லிபுரம் (வட. கிழ. கரை); வவுனியா, அனுராதபுரம், (மத்திய இலங்கை); முதலிய இடங்களில் 'முதுமக்கள் தாழிகள்' கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை திராவிட-தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களாகும்.

கோட்டகம், சங்கிலிக்கான தரவை, பாண்டுகாஸ்நுவரை, மாத்தளை, கந்தப்பனை, புதுமட்டவாவி முதலிய தென்னிலங்கை ஊர்களில் பழைய தமிழ்க் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



அறிவியல் தமிழ்

டாக்டர் ஜி. ஆர். தாமோதரன்

முன்னுரை

அறிவியல் தொழிலியல் கல்வியில் முன்னேற்றம் காணச் சிறந்த முறை தாய்மொழி வாயிலாகக் கற்பதுதான் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தாய்மொழியில் எல்லாக் கல்வியும் கற்பிக்கப்பெற்றால்தான நம் நாட்டு மாணவர்கள் மிக விரைவில் கல்வியறிவு நிரம்பியவர்களாக விளங்குவார்கள். தாம் கற்ற கல்வியைப்பற்றி மேலும் ஆழ்ந்து சிந்தித்து அறிவு வளம் பெற்றால் பல புதுமைகளைப் படைக்கின்ற ஆற்றலை அவர்கள் பெறுவார்கள். அறிவியல் தொழிலியல் நூற்களைக் கற்கவும், அத் துறைகளில் நூல்களைப் படைக்கவும் வல்ல ஒரு சக்தி வாய்ந்த மொழியாகத் தமிழ் உருவெடுக்க வேண்டும். இங்ஙனம் பயிற்று மொழியாகத் தமிழினைப் பயன்படுத்தும் முயற்சியில் பல்வேறு சிக்கல்கள் குறுக்கிடுகின்றன. அவற்றுள் முக்கியமானது, எல்லாத் துறைச் சொற்களையும் குறிக்கத் தமிழில் போதுமான கலைச்சொற்கள் ஆக்கப்படவில்லையென்பதாகும். பிறமொழிக் கலைச்சொற்கள் பலவற்றிற்கும் இணையான தமிழ்ச்சொற்கள் தேவையான அளவிற்கு இன்னும் வெளி வரவில்லை. இத் துறைகளில் நூல்கள் சீரிய முறையில் வெளிவருவதற்கு அடிப்படைத் தேவை கலைச்சொற் களஞ்சியமாகும். எனவே, கலைச்சொல்லாக்கத்தில் தமிழ் இதுகாறும் அடைந்துள்ள வளர்ச்சியை மனத்தில் கொண்டு, அறிவியல் தொழிலியல் தமிழாக்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை ஆய்வதே நமது குறிக்கோள்.

கலைச்சொல்லாக்க நெறிமுறைகளை வரையறுக்கும் பணியில், இத் துறைகளில் இதுகாறும் அறிமுகப்படுததப்பட்டிருக்கும் கலைச்சொற்களைத் தொகுத்தல் இன்றியமையாததாகும். இக் கலைச்சொற்களைக் கலைச்சொல் அகராதிகள், அறிவியல் நூல்கள், அறிவியல் கட்டுரைகள், கலைக்களஞ்சியம், கலைக்கதிர் போன்ற அறிவியல் இதழ்கள், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடுகள் முதலியவற்றிலிருந்து தொகுக்கலாம். அறிஞர்கள் இக் கலைச்சொற்களைப் படைத்த முறைகளிலிருந்து தமிழாக்க நெறிமுறைகளை உருவாக்க உதவும் சில இயல்புகளைக் கண்டறியலாம். நாம் நமது குறிக்கோளை அடைய இக் கலைச்சொல் தொகுப்புப் பெரிதும் பயன்படும்.

1. மொழிபெயர்ப்பும் புதுச்சொற்படைப்பும்

தமிழ் அறிவியல் நூல்களிலும் கட்டுரைகளிலும் காணும் கலைச்சொற்கள் அமைப்பை மூவகைப் படுத்தலாம். (1) ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து அமைத்தல்; (2) புதுச்சொற்கள் படைத்தல்; (3) ஒலிபெயர்ப்பு (transliteration). இவ்வியல் எங்ஙனம் கலைச்சொற்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன என்பதையும் புதுச்சொற்கள் படைக்கப்பட்டுள்ளன என்பதையும் விளக்குகிறது.

மொழிபெயர்ப்பு

பிறமொழிக் கலைச்சொற்களை மொழிபெயர்ப்பதன்மூலம் தமிழ்மொழியில் கலைச்சொற்களைப்

பெருக்கிக் கொள்ளலாம். பிறமொழிக் கலைச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்கப் பயன்படும் மொழிபெயர்ப்பு முறைகள் பின்வருமாறு:

1. ஆங்கிலச்சொல்லை நேருக்குநேர் பெயர்த்துச் சொல்லாக்கம் செய்யும் முறையில் பல சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

எ. கா. :

eye drop — கண்சொட்டு
air ship — காற்றுக்கப்பல்
injection fold — ஊசி மடிப்பு

2. பிறமொழிச் சொல்லிலுள்ள மூலக்கருத்தை உணர்ந்து மொழிபெயர்க்கும் முறையும் காணப்படுகிறது.

எ. கா. :

life cycle — வாழ்க்கை வரலாறு

3. ஆங்கிலத்தில் சுருக்கக் குறியீடாகக் காணப்படும் 'PL' போன்றவற்றில் விளக்கமான மொழிபெயர்ப்பும் காணப்படுகிறது. சிலர் 'PL Level' என்பதை 'அமிலத்தன்மை வரம்பு' என மொழிபெயர்த்துள்ளனர்.

அறிவியல் துறைகளை விளக்க 'இயல்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

எ. கா. :

ecology — சூழ்நிலையியல்
physics — பௌதிகவியல்

தமிழில் முன்னொட்டு 'மறு', 'எதிர்' என இரு வகையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எ. கா. :

readjustment — மறுநிலை
reaction — எதிர்வினை

'ness' என்ற விகுதி, சில சொற்களில் 'த்துவம்' என வடமொழி விகுதியைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது. இவ் விகுதி வடசொற்களோடுமட்டுமே இணைகின்றது என்பதும், தமிழ்ச் சொல்லோடு இவ்விகுதியை இணைத்த சொல் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடுதற்குரியன.

எ. கா. :

thickness

மருத்துவ ஆங்கிலக் கலைச்சொற்களில் வரும் 'itis' என்ற விகுதிக்கு இணையாகத் தமிழில் 'அழல்' என்னும் சொல்லைக் காணலாம்.

எ. கா. :

Lymphangitis — வடிநீர்க்குழல் அழல்
Laryngitis — மிடற்றழல்
eucephalitis — மூளைநரம்புவட உரையழல்

செயல்வினைகளை எடுத்துக்காட்டும் சொற்கள் 'தல்' விகுதியை இணைப்பதன்மூலம் உருவாக்கப்பட்டுள்ளன.

எ. கா. :

திரளுதல் — (coagulation)
கசிதல் — (exudation)
சிதைதல் — (cracking)
எரியூட்டுதல் — (ignite)

பெரும்பான்மைச் சொற்களிலும் 'tion' விகுதிக்கு இணையாக, 'தல்' விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

சேர்க்கை (combination), பண்பாடு (culture) போன்ற சொற்களும், அடிச்சொற்களோடு விகுதிகளை இணைப்பதனால் ஆக்கப்பட்டவையே ஆகும்.

வினையடியோடு தொழிற்பெயர் விகுதியான 'வு' வைச் சேர்ப்பதன்மூலம் சில சொற்களை உருவாக்கியுள்ளனர்.

எ. கா. :

vibration — அதிர்வு
pour — பாய்வு
leakage — கசிவு

தொகையாற்றல் பெற்ற சொற்கள் சொல்லாக்கத்திற்கு உதவுகின்றன. 'மின்' என்பது மின்சாரத்தைக் குறிக்கும் சொல்.

எ. கா. :

electricity — மின்சாரம்
electro magnetism — மின்காந்தம்

புதுச்சொல் படைப்பு

இரு பெயர்ச்சொற்களை ஒன்றாகச் சேர்த்துத் தொகைகளை உருவாக்குவதன்மூலம் பல புதுச் சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன.

எ. கா. :

உடற்கவசம் — armour
கற்காரை — concrete
உடற்புரதம் — vitamin

பண்புத்தொகைகளும் வினைத்தொகைகளும் சொல்லாக்கச் சொற்களில் மிகுதியாக இடம் பெறுகின்றன.

எ. கா. :

வெண்காரம் — Borax
உழுபொறி — Tractor

இகர விகுதி சேர்த்து வினையடிக் காரணம் பற்றிச் சில தொழிற்பெயர்கள் ஆக்கப்பட்டுள்ளன. கலைச்சொற்களுள் பெரும்பான்மைச் சொற்கள் வினைமுதற் பெயர்களாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

எ. கா. :

plug — சொருகி
rotor — சுழலி
rectifier — திருத்தி

'ஆன்' விகுதியைச் சேர்த்தும் பல சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன.

எ. கா. :

நுரைப்பான் — foaming agent
உமிழ்வான் — emitter
இறைப்பான் — pump

அம், மை, வு, தலை, கை, பாடு முதலிய விகுதிகள் சொல்லாக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வளிமம், தனிமம், நீர்மம், பச்சையம் போன்ற பல சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

'ity' என்ற ஆங்கில விகுதிக்கு இணையாக 'மை' விகுதி சேர்த்துப் புதுச்சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன.

எ. கா. :

porosity — புரைமை
personality — ஆளுமை

நெருங்கிய பொருள் தொடர்புடைய ஒரே துறையைச் சேர்ந்த இரு சொற்களை விளக்கும்போது இலக்கியச் சொல்லாகவும் ஒன்றை வழக்கில் பயின்று வரும் சொல்லாகவும் சில ஆசிரியர்கள் அமைத்துள்ளனர்.

எ. கா. :

mirror — ஆடி
glass — கண்ணாடி

'செய்யா' என்னும் எதிர்மறைப் பெயரெச்ச வாய்பாட்டில் பல கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

எ. கா. :

conservation law — மாறாக் கோட்பாடு
ultra sonic wove — கேளா ஒலி

வழக்குச் சொற்களைப் பிறமொழிக் கலைச்சொற்களுக்கு ஈடாகப் பயன்படுத்துவதும் ஒரு சிறந்த சொல்லாக்க உத்தியாகும்.

எ. கா. :

foundation — கடக்கால்

மொழிபெயர்ப்புகளில் ஒட்டாக்கச் சொற்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சொல்லின் ஒரு பகுதி ஒலி பெயர்ப்பாகவும் ஒரு பகுதி மொழி பெயர்ப்பாகவும் அமைந்திருக்கும்.

எ. கா. :

குவிலென்ஸ்
கன ஹைட்ரஜன்

கலைச்சொல்லாக்கத்தில் முயற்சி எளிமையின் காரணமாக நீளம் குறைந்த சிறிய சொற்றொடர்களே வரவேற்கப்படுகின்றன. ஆசிரியர்கள் இவ்விருவகையிலுமான சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

எ. கா. :

direct current — நேர்மின்சாரம்
— ஒருதிசை மின்னோட்டம்

நெருங்கிய பொருள் தொடர்புடைய கலைச்சொற்கள் தமிழில் தெளிவாக்கப்படவில்லை. அவை தமிழில் ஒரே சொல்லாலேயே குறிக்கப்படுகின்றன. drilling, boring ஆகிய சொற்கள், 'துளையிடும்' என்ற ஒரே சொல்லாலேயே கூறப்பட்டுள்ளன. அதுபோலவே,

rotor, turbine — சுழலி
thrust, momentum — உந்தம்

எனக் குறிக்கப்படுகின்றன.

பெரும்பான்மைத் தாவர, உயிரியல் பிறமொழிச் சொற்களுக்குத் தமிழில் ஏற்கெனவே வழக்குச் சொற்கள் காணப்படும். சிலவற்றிற்குத்தான் புதுச் சொற்களை ஆக்கவேண்டியிருக்கும், ஆனால், வழக்குச் சொற்களைப் பயன்படுத்த சர்வதேசப் பெயர்ச் சட்டம் இடம் கொடுப்பதில்லை. இச் சட்டப்படி கலைச்சொற்களை ஒலிபெயர்த்தே பயன்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் அவற்றை ஒலி பெயர்ப்புச் செய்ததோடு பிறை வளைவிற்குள் பழக்கமான தமிழ்ச் சொற்களையும் கொடுத்துள்ளனர்.

தமிழிலக்கிய நூல்களில் பல கலைச்சொற்கள் காணப்படுகின்றன. சித்தர் பாடல்களில் பல மருத்துவக் கலைச்சொற்கள் உள்ளன. 'Peptic ulcer' என்ற சொல்லிற்குக் 'குன்மம்' என்ற ஒரு மொழி பெயர்ப்பும் காணப்படுகிறது.

பொதுவாக, கலைச்சொல்லாக்கத்தில் ஒருமைப்பாடு காணப்படவில்லை. விகுதிகள் போன்றவற்றை இணைத்துச் சொற்களை ஆக்கிக்கொள்வதில் கட்டுரை ஆசிரியர்கள் வேறுபடுகின்றனர். ஒரே பொருளில் வரும் பிறமொழி விகுதிக்கு இணையாகத் தமிழில் பல விகுதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சான்றாக, 'தல்' விகுதியைக் கூறலாம். கசிவு, சிதைதல் போன்றவை எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

ஒரே பிறமொழிச் சொல்லுக்கு ஒலிபெயர்ப்பும் மொழிபெயர்ப்பும் காணப்படுகின்றன. சில ஆசிரி

யர்களால் மொழிபெயர்க்கப்பட்ட சில சொற்கள், வேறு சிலரால் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளன.

எ. கா. :

fuse — உருவி
பியூஸ்

fosil — எச்சம்
பாசில்

Power, force, energy ஆகிய மூன்று சொற்களையும் மொழிபெயர்ப்பதில் ஓர் ஒழுங்குமுறை காணப்படவில்லை. ஆற்றல், சக்தி, விசை ஆகிய மூன்று சொற்களுமே மொழிபெயர்ப்பாளர்களால் மாற்றி மாற்றிப் பெயர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

2. ஒலிபெயர்ப்பு

பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போது அம் மொழியின் சிறப்பொலிகளைத் தமிழில் எழுதுவதே ஒலிபெயர்ப்பாகும். இன்றியமையாத இடங்களில் பிறமொழி ஒலிகளைத் தமிழொலிப்படுத்தி ஏற்கலாம் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அதற்கேற்ப நன்னூலார் வடமொழி ஒலிகளைத் தமிழ் ஒலிப்படுத்துதற்குரிய முறைகளைத் தம் இலக்கண நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இப்பொழுதுள்ள அறிவியல் நூல்களில் பிறமொழிச் சொற்களைத் தமிழொலிப்படுத்துவதில் ஒரு சீரான முறை காணப்படுவதில்லை. ஒலிபெயர்ப்பாளர்களின் கருத்து வேறுபாட்டினால், ஒலிபெயர்ப்பில் ஒரே சொல் பலவிதமாகவும் ஒலி பெயர்க்கப்பட்டுள்ளது. சான்றாக, வடமொழி எழுத்துகளைக் கலந்து எழுதுவதில் தவறில்லை என்று சிலரும், தமிழ் எழுத்துகளாலேயே எழுதவேண்டும் என்று சிலரும் கருதுவதால் ஒரே சொல் பல அறிஞர்களால் பலவிதமான வடிவ வேறுபாடுகளுடன் ஒலி பெயர்க்கப்பட்டிருக்கும் சூழ்நிலை மிகுதியாகக் காணப்படுகிறது.

தற்போது கையாளப்படும் ஒலிபெயர்ப்பு முறைகள்

1. ஆங்கிலச் சொல்லிலுள்ள ஒலிப்பின் வல்லொலியும் ஒலிப்பிலா வல்லொலியும் தமிழில் ஒரே வடிவத்திலேயே குறிக்கப்படுகிறது.

எ. கா. :

p b — ப
pentod — பெண்டோடு
betatran — பீடட்ரான்
t d — ட
turbine — டர்பைன்
diesel — டீசல் என வரும்.

2. p, t போன்ற வல்லெழுத்துகளைச் சிலர் ஒரு வல்லெழுத்தாலும், சிலர் இரு வல்லெழுத்தாலும் எழுதியுள்ளனர்.

எ. கா. :

isotope — ஐசோடோப்பு
meter — மீட்டர், மீடர்

3. மொழிமுதல் 'N' பெரும்பான்மைச் சொற்களிலும் 'ந' வாகவே பெயர்க்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் 'ன' ஆங்கில 'N' ஐக் குறிக்கிறது.

எ. கா. :

Nylon — நைலான்
dynamo — டைனமோ

4. ஆங்கிலத்தில் இரட்டித்து வரும் மெய்கள் தமிழில் சில சொற்களில் தனித்தும், சில சொற்களில் இரட்டித்தும் வருகின்றன.

எ. கா. :

m m — ம்ம
ammeter — அம்மீட்டர்
m m — ம
gammarus — காமாரஸ்

5. ஆங்கில h, j, s ஆகியவற்றிற்கு முறையே ஹ, ஜ, ஸ ஆகிய வடமொழி எழுத்துகள் ஒலி பெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எ. கா. :

s — ஸ ச
phase — ஃபேஸ்
tonsil — டான்சில்
h — ஹ
heptode — ஹெப்டோடு

சில சொற்களில் மொழி முதலில் ஆங்கில 'h' க்கு உயிரெழுத்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

எ. கா. :

heptode — ஹெப்டோடு, எப்டோடு

6. தமிழ் ஒலியமைப்பில் இடம் பெறாத உரசொலிகளும் மூச்சொலிகளும் ஆங்கில மொழிக் கலைச்சொற்களில் இடம் பெற்றுள்ளன. அவ்வொலிகளைத் தமிழில் பெயர்க்கும்போது, ஒலி பெயர்ப்பாளர்கள் பலவித வடிவ வேறுபாடுகளுடனும் பெயர்த்துள்ளனர். திரு. பா. வே. மாணிக்க நாயக்கரின் கருத்திற்கிணங்க, தமிழில் இல்லாத 'f' ஒலி பகரத்துடன் ஆயுதம் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. சில சொற்கள் ஆயுதம் இன்றியும் காணப்படுகின்றன.

எ. கா. :

farad — பாரட்
flint — ஃபிளின்ட்

ஆங்கில மூச்சின ஒலிகளுக்கு இணையாகத் தமிழில் ஒரு வல்லெழுத்தைச் சில ஆசிரியர்களும், சிலர்

இரு வல்லெழுத்துகளையும் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பிட்ட வல்லெழுத்தின் முன்னர் ஆய்தம் சேர்த்தும் எழுதியுள்ளனர்.

எ. கா. :

th — த, த்த

retinopathy — ரெட்டினாபதி

batholith — பேத்தோலித்து

ch — க, க்க

psychometer — சைக்கோமீட்டர்

chlorin — குளோரின்

7. மெய்களையடுத்து இடம் பெறும் 'y' தமிழில் அகர, இகர, ஐகார உயிர்க் குறியீடுகளைப் பெற்றுவிடுகின்றன.

எ. கா. :

pyrite — பைரைட்டு

cryolite — கிரியோலைட்டு

nymph — நிம்ஃப்

8. ஆங்கிலத்தில் இணைந்துவரும் மூன்று மெய்களையுடைய சொற்களைத் தமிழில் பெயர்க்கும்போது, சில மும்மெய் மயக்கங்களாக ஒலிபெயர்க்கப்பட்டுள்ளன; சில இடையே உயிர் புகுத்தப்பட்டு ஒலிபெயர்க்கப்பட்டுள்ளன.

எ. கா. :

cyclops — சைக்ளாப்ஸ்

streptocccus — ஸ்டிரெப்டோகாகசு

electron — எலெக்ட்ரான்

9. மரபிலக்கணத்தை ஒட்டிய சொற்களும் இவ்விலக்கண விகுதிகளுக்கு நெகிழ்ச்சி கொடுத்துப் பெயர்க்கப்பட்ட சொற்களும் விரவிக் காணப்படுகின்றன. கலைச்சொல் பெயர்ப்பில் இவ்வகை மயக்கங்கள் மரபை ஒட்டியும் அதற்கு மாறாகவும் ஆக இருவித நிலைகளிலுமே அமைந்துள்ளன.

எ. கா. :

pr — ப்ர, புர

prolactin — ப்ரலாக்டின்

prothrombin — புரோத்ராம்பின்

10. ட, ர, ல ஆகிய மூன்றும் தமிழ் மரபின்படி மொழி முதலில் வருவதில்லை. இவற்றை மொழி முதலில் கொண்ட பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்த மொழி முதல் உயிர்த்துணையைப் பயன்படுத்துதல் மரபு. இதுபோன்று தமிழ் ஒலியமைப்பில் க, ச, ட, த, ப முதலியவை மொழியிறுதியில் அமைவதில்லை. இவை மரபை ஒட்டியும், மாறாகவும் வந்துள்ள நிலையைக் காணலாம்.

எ. கா. :

drumlin — ட்ரம்லின்

dolomite — டாலமைட்டு

radar — ரேடார், இரேடார்

lens — லென்ஸ்

ammonite — அம்மோனைட்டு

andesite — ஆண்டெசைட்

watt — வாட், வாட்டு

coke — கோக், கோக்கு

11. ஆங்கிலக் கூட்டுயிர்கள் தமிழில் யகரமாக எழுதப்படுகின்றன.

எ. கா. :

cilia — சிலியா

diorite — டையோரைட்டு

colloid — கொலாய்டு

ஒலிபெயர்ப்புச் சொற்களில் ஒருமைப்பாடு காணப்படாததற்கு ஒலிபெயர்ப்பு விதிகளை ஆக்கிக் கொள்ளாததே முக்கியக் காரணமாகும். சான்றாக, 'nt' என்பது 'ன்ட்' எனவும், 'ண்ட்' எனவும் பெயர்க்கப்பட்டுள்ளது.

எ. கா. :

current — கரென்ட், கரெண்ட்

மேலும், ஒரு தமிழ் வரிவடிவம் பல ஆங்கில எழுத்துகளையும், ஓர் ஆங்கில எழுத்துப் பல தமிழ் எழுத்துகளையும் குறித்து நிற்கின்றன. சான்றாக, 'ச' ஆங்கில s, z, g, c ஆகியவற்றைக் குறிக்கின்றது.

அதுபோலவே க, ச, ஜ ஆகிய மூன்று வடிவங்களும் ஆங்கில எழுத்தான 'g' யைச் சுட்டும் நிலையும் காணப்படுகின்றது.

ஒலிபெயர்க்க வேண்டிய சொற்கள் இவையிவை என்ற வரையறை இல்லாத காரணத்தால் ஒரே சொல்லைச் சில ஆசிரியர்கள் மொழிபெயர்த்தும், சிலர் ஒலிபெயர்த்தும் பயன்படுத்தியுள்ளனர்.

எ. கா. :

fossil — பாசில்

எச்சம்

எனவே, ஒலிபெயர்ப்பு முறைகளை ஆராய்வதற்கு முன், முதற்படியாக ஒலிபெயர்க்க வேண்டிய சொற்களைப்பற்றி வரையறை செய்யவேண்டியது மிக அவசியம்.

3. சொற்றொடரமைப்பு

வாக்கிய அமைப்பு மொழிக்கு மொழி வேறுபடும் ஒன்றாகும். சான்றாகத் தமிழில் செயப்படுபொருள் பயனிலைக்கு முன்னும், ஆங்கிலத்தில் பயனிலைக்குப் பின்னுமாகவும் அமையும். இப்போது வெளிவந்துள்ள அறிவியல் நூல்கள்

பலவற்றிலும் சொற்கள் தொடருகின்ற முறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. பெரும்பாலான மொழிபெயர்ப்புகளும் ஆங்கில மரபை ஒட்டியனவாகவே அமைந்திருக்கின்றன.

1. பொதுவாக, திராவிட மொழிகளில் கட்டிலாச் சொற்களை (free units) இடம் மாற்றி அமைப்பதால் பொருள் சிதைந்துவிடுவதில்லை. ஆனால், ஆங்கில மொழி இவ்வகையான இடமாற்றத்திற்கு இடமளிப்பதில்லை. அறிவியல் தமிழ் நடையில் இங்ஙனம் சொற்களை இடம் மாற்றி அமைத்தால் பொருள் அழுத்தம் குறைந்துவிடுவதோடு கருத்துக் குழப்பமும் ஏற்படும். அதற்குச் சான்றாகக் கீழே காணப்படும் வாக்கியம் அமைந்துள்ளது. "மேலே குறிப்பிட்டபடி மூன்று தனிமங்களுக்கும் பொருந்துவதோடல்லாமல் தலைகீழ் விகித விதி ஏராளமான தனிமங்களுக்கும் பொருந்தும்". இதில் 'தலைகீழ் விகித விதி' என்ற சொற்றொடர் வாக்கியத்தின் நடுவே இடம் பெற்றிருப்பதால் பொருள் மாறுபடுவதில்லையெனினும், இவ் வாக்கியத்தின் பொருளை அறிந்துகொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் இதில் பல மிகைச்சொற்களும் காணப்படுகின்றன. அறிவியல் தமிழில் தேவையான சொற்களை மட்டுமே பயன்படுத்தி எளிய நடையில் எழுத வேண்டும். கருத்துத் தெளிவே இம்மொழியின் உயிர்நாடி; இவ்வாக்கியத்தைத் "'தலைகீழ் விகித விதி' மேலே குறிப்பிட்டபடி மூன்று தனிமங்களுக்கு மட்டுமல்லாமல் ஏராளமான தனிமங்களுக்கும் பொருந்தும்" எனத் தெளிவாக அமைக்கலாம்.

2. இலக்கண விகுதிகளை ஆங்கில அமைப்பைத் தழுவி மொழிபெயர்ப்பதால் படிப்போருக்கு அத் தமிழாக்கம் ஒரு பழக்கமின்மையை மனத்திற்குள் ஏற்படுத்துகிறது. சான்றாக, "இதனால் புடைபெயர்ச்சி எளிதில் கணக்கிடும் அளவு அதிகரிக்கிறது" என்ற வாக்கியத்தைக் கூறலாம். இவ்வாக்கியத்தில் சொற்கள் சரியாக அமைக்கப்பட்டிருப்பினும் 'அளவு' என்ற சொல்லை 'அளவுக்கு' என எழுதும்போது பொருள் அழுத்தம் ஏற்படுவதை உணரலாம்.

3. தமிழ் மொழியமைப்பில் எல்லா வாக்கியங்களும் வினை கொண்டுதான் முடியவேண்டும் என்ற அவசியம் இல்லை. தமிழில் பெயர், குறிப்புவினை, தெரிநிலைவினை ஆகியவை பயனிலையாக அமைவதுண்டு. இங்ஙனம் பெயர்ப்பயனிலையாக அமையும் வாக்கியங்களில் வினைச்சொற்கள் காணப்படுவதில்லை. ஆனால், அறிவியல் தமிழாக்க நூல்களில் 'இருக்கின்றது', 'ஆகும்' என்ற சொற்கள் ஒரு பொருளையும் உணர்த்தாது வருகின்ற நிலையும் காணப்படுகிறது. சான்று: "ஆவி அடர்த்தி காணும் முறையில் விகடர் மேயர் முறை நன்றாகத் தெரிந்த முறையாகும்".

4. சில நூலாசிரியர்கள் சொற்றொடர்களை ஆங்கில வாக்கியத்தில் அமைத்திருப்பது போன்று சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கின்றனர். சான்றாக, "The solar parallax, for instance, turned out to be under nine seconds of arc" என்ற வாக்கியம் "சூரியனில் புடைப்பெயர்ச்சி, உதாரணமாக, 9 வட்ட வில் நொடிகளாக அமைகிறது" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'உதாரணமாக' என்ற சொல்லை வாக்கியத்தின் முதலில் எழுதுவது, பொருளைத் தெளிவாக அறிய உதவும்.

5. பொருளை விளக்கும் நிலையில் அமைகின்ற சொற்கள் (ஆங்கில நூல்களில் காணப்பட்டபோதிலும்) தமிழ் நூல்களில் மொழிபெயர்க்கப்படுவதில்லை. சான்றாக, "Gay Lusacs law of combining volumes of gases" என்பது பெரும்பான்மை வேதியியல் நூல்களிலும், 'கேலூசாக்கின் கூடுகைப் பருமனளவு விதி' எனப் பெயர்க்கப்பட்டுள்ளது. இதனை 'வாயுக்களின் கூடுகைப் பருமனளவு விதி' எனக் கூறுவதால் பொருள் தெளிவாக விளங்கும்.

6. சிறப்புப் பெயரைத் தொடர்ந்தே இயற்பெயர் எழுதப்படல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கூறும் சொற்றொடர் விதி. அதன்படி '1609ஆம் ஆண்டில் ஜொஹன்னஸ் கெப்லர் என்ற ஜெர்மன் நாட்டு வானநூல் வல்லுநர் கோள்கள் இயங்கும் பாதை.......' என்பதை, '1609ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டு வானநூல் வல்லுநர் ஜொஹன்னஸ் கெப்லர் என்பவர் கோள்கள் இயங்கும் பாதை.........' என மாற்றுவதால் எளிமையான மொழிநடையை உருவாக்கலாம்.

அறிவியல் தமிழ்நடை

அறிவியல் தமிழில் ஆசிரியர்கள் தங்கள் மனதிற்குட்பட்டவாறு தமிழாக்கம் செய்கின்றனர். ஒவ்வொரு ஆசிரியரும் தமக்கெனச் சிறப்பான மொழிநடையைக் கையாளுகிறார். இலக்கியத் தமிழில் இதுபோன்ற மாறுபட்ட மொழிநடைகள் வரவேற்கப்படுகின்றன. ஆனால், அறிவியல் தமிழில் குறிப்பிட்ட சில மொழிநடைகளே கையாளப்படுகின்றன. அறிவியல் மொழி கருத்தாழத்திற்கே முதலிடம் கொடுக்கவேண்டும். அறிவியல் விதிகள் முதலியவற்றின் மொழிபெயர்ப்புகளில் வேறுபாடு இருப்பது நல்லதல்ல. அடிப்படை விதிகளில் ஒருமைப்பாடு வேண்டும்.

ஒவ்வொரு அறிவியல் சொல்லையும் பிறைவளைவுக்குள் தரவேண்டும். இது மிகவும் இன்றியமையாததாகும். பெரும்பான்மை அறிவியல் நூல்களிலும் விதிகள் போன்றவை தமிழில் மட்டுமே தரப்பட்டுள்ளன. அவற்றை ஆங்கிலத்திலும் பிறை

வளைவுக்குள் தருவதால், தமிழ்மூலம் அறிவியல் கல்வி பெறும் மாணவன் ஆங்கிலக் கலைச்சொல் லையும் அறிந்துகொள்கிறான். இவ்வறிவு அவனுடைய மேல்நிலைக் கல்விக்குத் துணை புரியும்.

4. தமிழாக்க முறை

இதுகாறும் தற்போது அறிவியல் நூல்களில் கையாளப்பட்டு வரும் தமிழாக்க நெறிமுறைகளைக் குறிப்பிட்டோம். இம் முறைகளில் உள்ள சில குறைபாடுகளையும் அவற்றை அகற்றக் கையாள வேண்டிய சில விதிமுறைகளையும் இனி ஆராய்வோம்.

கலைச்சொற்களில் ஒருமைப்பாடு காணப்பட வில்லை. ஒரே ஆங்கிலச் சொல்லிற்குப் பல தமிழாக்கங்களும், ஒரே தமிழாக்கச் சொல்லிற்குப் பல ஆங்கிலச் சொற்களும் காணப்படுகின்றன. சான்றாக, 'alternating current' என்பதற்கு ஆட லோட்டம், மாறோட்ட மின்சாரம், இருதிசை மின்னோட்டம், மாறுதிசை மின்னோட்டம் முதலிய சொற்களும் ஆக்கப்பட்டுள்ளன. 'buoy', 'float' ஆகிய சொற்கள் மிதவை என்ற ஒரே சொல்லாலேயே குறிக்கப்படுகின்றன.

தமிழ்மொழி ஏனைய மொழிகளைவிடச் சொல் வளத்தில் சிறிதும் குறைந்ததன்று என்பதற்கு நிகண்டுகளே சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன. இவற்றிலிருந்து பல பிறமொழிச் சொற்களுக்கும் இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறியலாம். நாட்டுப்புறங்களிலும் மக்கள் மிகுதியான அறிவியல் சொற்களைப் பயன்படுத்துவதைக் காணலாம். 'winding', 'coil', 'turn' ஆகிய சொற்கள் முறையே சுருணை, சுருள், சுற்று என மொழிபெயர்த்த திரு. இரா. கணேசன் அவர்கள் தாம் அச் சொற்களை அகராதிகளிலிருந்தும் நாட்டுப்புற வழக்கிலிருந்தும் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்.

இலக்கியச் சொற்களையும் பிற அறிவியல் சொற்களுக்கு இணையாகப் பயன்படுத்தலாம். சான்றாக, 'மல்லை' என்ற இலக்கியச் சொல்லை 'parasite' என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகக் குறித்துள்ளார் ஓர் ஆசிரியர். எனவே, நிகண்டுகள், அகராதிகள், இலக்கிய நூல்கள், நாட்டுப்புற வழக்குச் சொற்கள் ஆகியவற்றிலிருந்து பிறமொழிச் சொற்களுக்கு நேரான அறிவியல் சொற்களைக் கண்டெடுக்கலாம்.

பிறமொழிக் கலைச்சொற்களை ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, புதுச்சொற்படைப்பு ஆகிய மூன்று முறைகளில் தமிழாக்கம் செய்யலாம்.

ஒலிபெயர்ப்பு

ஒலிபெயர்ப்புச் சொற்களில் ஒருமைப்பாடு காணப்படவில்லை. ஒரே பிறமொழிச் சொல் பல அறிவியல் அறிஞர்களாலும் பலவிதமான வடிவ வேறுபாடுகளுடனும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் சூழ்நிலை மிக அதிகமாகக் காணப்படுகிறது.

எ. கா. :

Antimony — ஆன்டிமனி
ஆண்டிமணி
ஆணடிமொனி

சில அறிஞர்களால் ஒலி பெயர்க்கப்பட்ட ஒரே சொல் வேறு சிலரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நிலைமையையும் காணலாம்.

எ. கா. :

algae — ஆல்கா
கடற்பாசி
anode — ஏனோட்
நேர்மின்முனை

இதுபோன்ற சிக்கல்களைத் தவிர்க்க, ஒலி பெயர்க்க வேண்டிய சொற்கள் இன்னவை என்பதை முதலில் வரையறை செய்ய வேண்டும்.

ஒலிபெயர்க்கப்பட வேண்டிய சொற்கள்

1. மொழிபெயர்ப்பில் சரியான சொல் கிடைக்காத நிலையில் அதனை ஒலிபெயர்ப்புச் செய்யலாம்.

2. சில பொறிகள், அலகுகள் முதலியவை அவை கண்டுபிடிக்கப்பட்ட நாடு, இடம் ஆகியவைகளின் பெயர்களாலும் கண்டுபிடித்த அறிஞர்களின் பெயர்களாலும் வழங்கப்படுகின்றன. அவற்றை அங்ஙனமே ஒலிபெயர்க்க வேண்டும்.

எ. கா. :

volt — வோல்ட்
watt — வாட்

3. 'Sonar' போன்ற சொற்கள் அப் பொருட் பெயர்களின் முதல் எழுத்துகளால் ஆனவை. (sound navigation and ranging) இவற்றை மொழி பெயர்த்தலைவிட ஒலிபெயர்த்தலே சிறந்தது.

4. ஏற்கெனவே வழக்கிற்கு வந்துவிட்ட, பிற மொழிச் சொற்களை அப்படியே ஆளலாம். (எ.கா.) சிமென்டு, பல்பு, கரென்டு முதலியன.

5. மூலகக் குறியீடுகள், கூட்டுப் பொருள்களின் பெயர்கள், இரசாயனச் சமன்பாடுகள், π θ ° போன்ற குறியீடுகள் முதலியவற்றை அப்படியே எழுதிக்கொள்ளலாம்.

6. உலகப் பொதுக் கலைச்சொற்களை ஒலி பெயர்க்கலாம்.

எ. கா. :

எலெக்ட்ரான், டீசல்.

இதுபோன்ற சில வரையறைகளை வகுத்துக் கொள்வது, ஒலிபெயர்க்க வேண்டிய சொற்களை இனங்கண்டுகொள்ள உதவும்.

ஒலிபெயர்ப்பில் ஒருமைப்பாடு காணப் படாமைக்கு ஒலிப்பெயர்ப்பாளர்கள் ஒவ்வொரு வரும் தத்தமக்கெனச் சில கொள்கைகளைக் கடைப் பிடிப்பதும் ஒரு காரணமாகும். சான்றாக, பிற மொழிச் சொற்களைத் தமிழ் எழுத்துகளாலேயே எழுதவேண்டுமென்று சிலரும், வடமொழி எழுத்து களைக் கலந்து எழுதுவதில் தவறில்லையென்று சிலரும் கருதுகின்றனர்.

எ. கா. :

Benzene — பென்சீன்
பென்ஸீன்
cell — செல்
ஸெல்

இதுபோன்ற நிலையை மாற்றியமைக்க ஒலி பெயர்ப்பில் சில விதிமுறைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, நன்னூ லார் வடமொழி 'ஹ' வைத் தமிழில் பெயர்க்க செய்துள்ள விதியை அறிவியல் ஒலிபெயர்ப்புக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

எ. கா. :

hydrogen — ஐட்ரஜன்
heptode — எப்டோடு

இதுபோன்ற ஒலிபெயர்ப்பு விதிகளை ஆக்கிக் கொள்ளவேண்டும். பிறமொழி ஒலிகளுக்கு ஈடான தமிழ் ஒலிகளையும், கூட்டோசைகளையும் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்யும்போது சில ஆசிரியர்கள் மரபு நெறிப்படி பெயர்க்கின்றனர்; மற்றச் சிலரோ, மரபிலக்கணத்திற்கு நெகிழ்ச்சி யளித்து ஒலிபெயர்க்கின்றனர்.

எ. கா. :

rubber — ரப்பர்
இரப்பர்
rador — இரேடார்
ரேடார்

'uo', 'ua' போன்ற சில கூட்டுயிர்கள் தமிழில் யகர மாகப் பெயர்க்கப்படும் முறை ஒலிபெயர்ப்பிலேயே குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் 'ae' 'au' போன்ற கூட்டுயிர்களைக் கொண்ட கலைச்சொற்களைப் பெயர்க்கும்போது யகரமிட்டு எழுதப்பெறவில்லை. அவற்றிலும் ஒலிபெயர்ப்பில் யகரத்தைப் பயன் படுத்துவது ஒலிபெயர்ப்பில் ஒருமைப்பாட்டைக் காணத் துணை செய்யும்.

எ. கா. :

Saurus — சாரஸ் என்பதைவிட, சயரஸ் என ஒலிபெயர்க்கலாம்.

மொழிபெயர்ப்பும் புதுச்சொற்படைப்பும்

பிறமொழிக் கலைச்சொற்களுக்கு இணையான புதிய சொற்களை நாம் படைத்துக்கொள்கிறோம். சில மொழிபெயர்க்கப்படுகின்றன. புதுச்சொற் படைப்பில், அடிச்சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்துச் சொல்லாக்கம் செய்வது தொன்று தொட்டே கையாளப்பட்டு வருகின்ற ஒரு முறை யாகும். அம், அன், அர், மை, வு, வி, அல், இல், உள், ஐ, கை, படி, பாடு முதலிய பல விகுதிகள் சொல் லாக்கத்திற்குப் பயன்படுகின்றன. ஒவ்வொரு விகுதி யும் இன்ன அமைப்பில் இன்ன பொருளைச் சார்ந்து வரும் என்று அறிந்துகொண்டு சொல்லாக்கம் செய்ய வேண்டும். சொல்லாக்க விகுதிகள் அனைத் தையும் தொகுத்து அவற்றின் அமைப்பையும் பொருளையும் கண்டறிய வேண்டும்.

அடுத்து, சொல்லாக்கத்திற்குப் பயன்படுவது தொகைச்சொற்களாகும். தொகைகளை ஆக்கிக் கொள்வதிலும் மொழி ஓர் ஒழுங்கு முறையைக் கையாளுகிறது. டாக்டர் பொற்கோ அவர்கள் 'கைக்கடிகாரம்' என்ற தொகைச்சொல் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால், 'விரல் மோதிரம்' என்ற தொகை வழக்கில் இல்லை என்று கூறுவர்.

பிறமொழிக் கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்வதில் மொழிபெயர்ப்பு ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. மொழிபெயர்ப்பில் பிறமொழிச் சொல்லை நேருக்கு நேர் ஒலிபெயர்க்கும் முறை காணப்படுகிறது.

எ. கா. :

Electric bell — மின்சார மணி
Cloud chamber — முகில் அறை

சில அறிஞர்கள் மொழிபெயர்ப்புச் சொற்களை இலக்கணப் புணர்ச்சி விதிகளுக்கு முக்கியத்துவம் அளித்துப் படைத்துள்ளனர். (எ.கா.) Bone-என்பு. ஏறக்குறைய வழக்கிறந்த சொல்லாகிவிட்ட இதனைப் பயன்படுத்துவதைவிட, தற்போது வழக்கி லிருக்கும் மிகவும் பழக்கமான 'எலும்பு' என்ற சொல்லே மிகப் பொருத்தமாக இருக்கும். கலைச் சொல் மொழிபெயர்ப்பில் இது போன்ற இலக்கண விதிகளைச் சிறிது தளர்த்துவதன்மூலம் தமிழ் மொழி வளத்தைப் பெருக்கலாம்.

ஆட்சித் தமிழ்

'ஆட்சிமொழிக் காவலர்' கீ. இராமலிங்கனார், எம்.ஏ.

ஆட்சித் தமிழ் என்பது அரசாள்வதற்குப் பயன்படுத்தப்பெறும் தமிழ் என்று பொருளாகும். அரசாள்வதற்கு நாடு என்பது ஒன்று இருத்தல் வேண்டும். அரசன் இருத்தல் வேண்டும். மனித இனம் சிறிது சிறிதாக நாகரிகமுற்று நகரங்களில் வாழத் தொடங்கியதிலிருந்தே முறையான ஆட்சி அமையவேண்டியிருந்திருக்கும். நாடோடிகளாகத் திரிந்துகொண்டிருந்த மக்கள் குடி செய்வதற்காக அமைத்துக்கொண்ட வீட்டையே குடிசெய் என்று சொல்லுகிறோம். குடிசெய் என்னும் சொல் **குடிசை** என்று ஆகிறது. நன்செய், புன்செய், **நஞ்சை, புஞ்சை** ஆவது போல, இப்படியே பூசெய், **பூசை** ஆகியிருக்கிறது. வங்காளச் சட்டமன்றத் தலைவராக இருந்த சமக்கிருதப் பெரும்புலவர் சுனித் குமார் சட்டர்சி என்பவர் இதனைக் கண்டு வியந்து கூறியிருக்கிறார். குடிசையில் வாழ்ந்த மக்கள் பிறகு மண் வீடுகளிலும், கல் வீடுகளிலும் வாழத் தொடங்கினர். இதற்காக அவர்கள் **ஊர்ந்து** சென்று வளமான இடத்தைக் கண்டு அங்கே வீடுகளை அமைத்துக்கொண்டனர். ஊர்ந்து சென்று வாழத்தொடங்கிய இடத்துக்கு **ஊர்** என்று பெயராயிற்று. பெரிய அளவில் மக்கள் நகர்ந்து சென்று சேர்ந்து வாழ்ந்த இடம் **நகரமாயிற்று.** நகரங்கள் பெருகப் பெருக ஆட்சியும் பெருகி வரலாயிற்று.

தமிழகத்தைப் பொறுத்த அளவில் ஆட்சியானது தமிழில் நடத்தப்பெற்று வந்தது. வேறுமொழிக்குப் பழங்காலத்தில் இங்கு இடம் இல்லை. மக்கள் அனைவரும் தமிழர். மன்னனும் தமிழன். எனவே, ஆட்சி தமிழில் நடந்ததில் வியப்பில்லை. தமிழகத்தில் சோழ, சேர, பாண்டியர் என்னும் முக்குலத்து மன்னர்கள் நாட்டை ஆண்டு வந்ததாக வரலாறு கூறுகிறது. முப்பத்திரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மன்னர்கள் தமிழகத்தில் ஆட்சி புரிந்துவந்ததாக அறிகிறோம். வால்மீகி இராமாயணம் கி.மு. 4430-ல் எழுதப்பெற்றதாகவும், வியாச மகா பாரதம் கி.மு. 3067 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்றதாகவும் வடமொழி வல்லுநர்கள் கூறுகிறார்கள். இவை இரண்டும் வடமொழி நூல்கள். அந்நூல்களில் இம் மூன்று நாட்டு மக்களும் தசரதனுடைய ஆட்சி மன்றத்திலும் திரௌபதியின் சுயம்வரத்திலும் கலந்துகொண்டதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, இராமாயண மகாபாரத காலத்திற்கு முன்பே தமிழகத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சி இருந்துவந்தது என்பதை அறிகிறோம். அக்காலத்தில் வடமொழியும் ஒரு மொழியாக்கப்பட்டு வட நாட்டில் வழங்கிவந்தது. ஆயினும் தமிழ் மொழி தனித்து இயங்கி வந்து இருக்கின்றது. 'சமஸ்கிருத்' என்றால் செவ்வையாகச் செய்யப்பட்டது என்று பொருள். அவ்வாறு அம்மொழி செய்யப்படுவதற்கு மூலச் சொற்களை வழங்கியது தமிழ் மொழியாகத்தான் இருக்க வேண்டும்.

அந்தப் பழங்காலத்திலேயே எந்த வகையான மொழிப் போட்டியும் இன்றித் தமிழ் தனித்து இயங்கி வளமான ஆட்சிக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றது. சேர, சோழ, பாண்டியர்களுடைய ஆட்சி மிகச் சிறந்த முறையில் நடந்து வந்தது என்பதைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். வால்மீகி

இராமாயணத்தில் சுக்ரீவன், அனுமனை இலங்கைக்குப் போகும்படி அனுப்புகிற சுலோகத்தில் பாண்டி நாட்டின் தலைநகரில் அரண்மனை வாயில்கள் பொன்னால் அமைக்கப்பெற்றிருக்கும் என்றும், பொதிகையில் அகத்தியர் தமிழின் மேன்மைகளைத் தம் மாணவர்களுக்கு விரித்துரைத்துக்கொண்டிருப்பார் என்றும், இந்த இடங்களைக் கண்டு ஈடுபட்டு அங்கங்கேயே தங்கிவிடாமல் அவற்றைப் பார்த்துவிட்டு, தெற்கே சென்றுவிட வேண்டும் என்றும் சொல்லியிருப்பதைக் காணலாம். எனவே, இராமாயணம் எழுதப்பெற்ற காலமாகிய நாலாயிரத்து முன்னூற்று சொச்சம் ஆண்டுகளுக்கு முன்பே பாண்டிய நாடும், தமிழ் மொழியும் விளக்கமுற்று இருந்தன என்பதை அறிகிறோம். அப்போது பாண்டிய நாட்டில் வளங் கொழிக்கும் தமிழில் ஆட்சி முறை நடந்து வந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இப்படியாகப் பன்னெடுங்காலமாகத் தமிழ் ஆட்சி மொழியாக இருந்து வந்தது தெளிவாகத் தெரிகிறது. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய தமிழன் உலகத்தில் தோன்றிய மக்கள் இனத்திற்குள்ளே முதலில் தோன்றியவன் ஆவான். இந்தியாவின் தென் பகுதியும் அதற்குத் தெற்கே இப்போது கடலாக உள்ள பெருநிலப் பரப்பும் ஒரு காலத்தில் தமிழகமாக இருந்தது என்பதை உலக நிலஇயல் ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆய்ந்து, அலசி எடுத்துரைக்கின்றார்கள். அவர்கள் கூற்றை எப்படியாவது பொய்யாக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு தமிழில் பற்றில்லாத எத்தனையோ பேர் ஏதேதோ எழுதி வந்தும் இதுகாறும் இந்த உண்மைகள் மறுக்கப்பட்டுவிடவில்லை. தமிழ் மக்கள், லெமூரியாக் கண்டம் கடலால் கொள்ளப்பட்டபோது வடக்கேயும் கிழக்கு மேற்கேயும் ஆங்காங்கே சில பகுதிகள் இருந்த கடல் பரப்பு நிலமாகினபோது ஆங்காங்கே குடியேறினர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இந்தியாவில் விந்திய மலைக்கு வடக்கே இருந்த பகுதி கடலாக இருந்து பின்பு நிலமாக மாறியது என்ற செய்தியை விளக்க இன்றும் இமய மலையில் திமிங்கல எலும்புச்சட்டங்களும் சில கடல் உறை பொருள்களும் இருக்கப் பார்க்கிறோம்.

இந்திய வடபகுதியில் உள்ள பாலைவனம் போன்ற நிலப்பரப்பும் அப்பகுதி முன்பு கடலாக இருந்தது என்பதைக் காட்டுகிறது. இந்தியாவின் தென்பகுதியும் அதன் தெற்கே பெருங்கடற் பகுதியாக மாறிவிட்ட நிலப்பரப்பும் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு இருக்கவேண்டும் என்பதை நம்புவதில் தவறில்லை. அப் பகுதி நிலமாக இருந்தபோது அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் உலகமெங்கணும் குடியேறிய காலத்து அவர்களுடன் தமிழ் மொழியின் வேர்களும் உடன் சென்று ஆங்காங்கே அவ் வேர்களைத் துணையாகக் கொண்டு புதுப்புது மொழிகள் ஆக்கப்பெற்று இருக்கின்றன என்னும் உண்மையை உணரலாம். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களும், ஞானகிரி நாடார் அவர்களும், அவர்களுடைய ஆராய்ச்சிப் புலமையை அறிந்த மற்றும் சில அறிஞர்களும், கிரேக்க மொழியிலும், பிறகு லத்தீன் மொழியிலும், அங்கிருந்து மற்ற ஐரோப்பிய மொழிகளிலும், பின்னர் சமஸ்கிருதத்திலும் தமிழ் வேர்கள் இருப்பதை எடுத்தியம்பி வருவதை அறியலாகிறோம்.

தமிழக ஆட்சியில் தனித்தமிழ் மொழி பன்னெடுங் காலமாகப் பயின்று வந்திருந்தது. அண்மையில் ஆங்கிலேயர் நம் நாட்டைப் பற்றிக்கொண்டு அவர்களுடைய ஆட்சிக்கு ஒப்படைத்த பிறகுதான் ஆட்சியானது தமிழ் மொழியில் நடந்து வந்திருந்தது மாறத் தொடங்கியது. அதற்கு முன் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இசுலாமியர், நாட்டின் பல பகுதிகளைப் பிடித்துக்கொண்டு ஆட்சி நடத்திய போதும் பின்னர் நாயக்க மன்னர்கள் தமிழகத்தை ஆண்டபோதும் ஆட்சித் தமிழில் உருது சொற்களும் வட சொற்களும் கலக்கத் தொடங்கின என்றாலும் தமிழே ஆட்சி மொழியாக இருந்து வந்தது. வெள்ளைக்காரர்கள் காலத்தில்தான் அலுவலகங்களிலும், நீதிமன்றங்களிலும் ஆங்கிலமே ஆட்சி மொழியாகிவிட்டது. ஆங்கிலச் சொற்களைத் தமிழ் பேசுகிறவர்களும் பேச்சில் எடுத்தாளலாயினர். இன்று நடந்துவரும் தமிழ் இதழ்களில் ஆங்கிலச் சொற்கள் அப்படி அப்படியே தமிழ் எழுத்தில் எழுதப்பெறுவதைக் கண்டு தமிழர்கள் உள்ளம் பெருந்துன்பம் அடைகிறது.

தமிழைத் தம் தாய்மொழியாகச் சொல்லிக் கொண்டு காலில் முள் தைத்தால் ''அப்பாடா! அம்மாடீ!'' என்று இன்றும் சொல்லிவரும் தமிழர்களில் ஒரு பகுதியினர் தமிழ் தங்கள் அன்னை மொழி என்பதைச் சிறிதும் சிந்தனையில் கொள்ளாமல் இருப்பதைப் பார்த்து நல்ல தமிழ் மனங்கள் நைகின்றன. இத்தகைய கலப்பினால் தமிழ் மொழியின் இனிய இயல்பு அடியோடு கெட்டுவிடுமே என்று கொஞ்சமும் நெஞ்சில் உறுத்தல் கொள்ளவில்லை. பிற மொழிகளுக்கில்லாத பெருங்குறை இங்ஙனமாகத் தமிழ் மொழிக்கு மட்டும் இருந்து வருவதைக் கண்டு மனம் புண்படுகிறது. இதே போக்கில் ஆட்சியிலும் தமிழை எழுதும்போது பிற சொற்களை அஞ்சாமல் கலக்கவேண்டும் என்று சிலர் கூசாமல் சொல்லி வருகின்றனர். இத்தகையவர்களுக்கு ஆட்சியானது நல்ல தமிழில் நடத்தப்படுவது பிடிக்காமலே இருக்கிறது. சிலரே இவ்வாறான எண்ணம் கொண்டவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் கருத்து வலிவான முறையில் அவர்கள் நடத்தும் இதழ்களின் வாயிலாக மக்கள் மனங்களைக் கெடுத்துவருகிறது.

உடனடியாகப் பொருத்தமான தமிழ்ச் சொல்லைக் கண்டு எடுக்கவோ ஆக்கிக்

கொள்ளவோ முடியாத நிலை ஏற்பட்டால் பிறமொழிச் சொற்களைத் தமிழ் மரபுக்கு ஏற்றபடி தமிழ் எழுத்தில் எழுதிக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். ஆனால் அந்த அயல் மொழிகளுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேடி எடுத்தும் புதிய சொற்களை ஆக்கிக் கொண்டும் அந்தப் பிறமொழிச் சொற்களைக் கூடிய விரைவில் அகற்றிவிடும் முயற்சியில் முனைந்து ஈடுபட வேண்டும். நாளாவட்டத்தில் ஆட்சியில் நல்ல தமிழ்ச் சொற்களே விரைவில் வழங்கப்பெறுவதில் கண்ணுங்கருத்துமாக இருத்தல் வேண்டும். தற்காலப் பயன்பாட்டுக்குப் பிறமொழியை ஆட்சியில் கலக்க நேர்வதற்காகத் துன்பப்படத் தேவையில்லை. இன்றியமையாத காலம் வரையில், விரைவில் அவற்றை அகற்றிவிடும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு, அயல் சொற்களை ஆட்சியில் பொறுத்துக்கொள்வது குறையாகாது. உண்மையான முயற்சி இருக்குமானால் ஆட்சியைப் பொறுத்தவரையில் எல்லாச் சொற்களும் தமிழிலேயே இருக்குமாறு அமைத்துவிடமுடியும் என்பது என்னுடைய நம்பிக்கை.

நாட்டுப்புறங்களில் உள்ள தமிழ் மக்கள் நல்ல தமிழ்ச் சொற்களையே விரும்பினார்கள், விரும்புகிறார்கள். புதியனவாக இருந்தாலும் அச்சொற்களை அவர்கள் வரவேற்கிறார்கள். இத்தகைய நல்ல தமிழ் உணர்வை நாட்டில் வளர்த்து வருவதில் சில அரசியல் கட்சிகள் சில ஆண்டுகளாக முனைந்து ஈடுபட்டு வருகின்றன. அவர்களுடைய நன்கொடைதான் நாட்டில் மக்கள் பிறமொழிச் சொற்களை ஒருவிவிட்டு நல்ல தமிழ்ச் சொற்களை ஏற்றுக் கொள்வதிலும் பயன்படுத்துவதிலும் பெரும்பணி புரிந்திருப்பது. அக் கட்சிகள் இன்னமும் அத் திருப் பணியை விரும்பிச் செய்து வருகின்றன.

1950ஆம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்திய ஆட்சி மொழியும் மாநில ஆட்சி மொழிகளும் எவையென்று சுட்டப்பெற்றன. அரசியல் அமைப்புச் செயலுக்கு வந்த பதினைந்தாண்டுகளுக்குள் அந்தந்த மாநிலச் சட்டமன்றத்தில் அந்தந்த மாநிலத்தின் ஆட்சிமொழி எதுவாக இருக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இயற்றிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்துகொள்ளாவிட்டால் மாநிலங்களின் ஆட்சி மொழியும் இந்தியே ஆகிவிடும் என்று சட்டத்தில் குறிக்கப்பெற்று இருந்தது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்னும் முயற்சியைப் பல அரசியல் கட்சிகளும் வேறுபாடு இல்லாமல் ஆதரித்தன. பல கட்சிகளும் ஒன்றுகூடி அண்ணாமலை மன்றத்தில் கலந்து பேசி இந்தி ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று அரசினைக் கேட்டுக்கொண்டனர். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த திரு. கஜபதி நாயக்கர் அவர்கள் நம் மாநிலத்தின் ஆட்சி மொழி தமிழாக இருக்கவேண்டும் என்று ஒரு சட்டவரைவு (Bill) கொண்டு வந்தார். ஆளுநரின் இசைவு அதற்குக் கிட்டவில்லை.

ஆனால் விரைந்து 1956-ல் அரசினரே தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினர். இதைச் செயற்படுத்துவதற்கு இன்றியமையாது தேவையான ஆட்சிச் சொற்களை எதிர்கால நோக்கோடு திருநெல்வேலி, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. இ.மு. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்ற பல துறையின் அலுவலர்களை ஒன்று கூட்டி ஆக்கி அமைத்து முடித்தார். இவருக்குத் தேவையான ஆங்கில ஆட்சிச் சொற்கள் மாவட்ட நடைமுறை நூலில் (District Office Manual) கிடைத்தன. அவற்றை அகர வரிசைப்படுத்திக்கொண்டு அவற்றிற்கே தமிழ் ஆக்கம் செய்வித்து அந்த அகராதியை அச்சிட்டார். 1940-ல் நான் ஆட்சிச்சொற்களைத் திரட்டி அகர வரிசைப்படுத்தி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குத் தந்திருந்ததை அவர்கள் 'ஆட்சிசொல் அகர வரிசை' என்று அச்சிட்டு வழங்கி வந்த நூலில் உள்ள சொற்களையும் திரு. இ. மு. சு. அவர்கள் தம் அகராதியில் எடுத்தாண்டுகொண்டார்.

அந்த அகராதியை அரசினர் ஆய்வுசெய்து ஏற்றுக்கொண்டு அச்சிட்டு வெளியிட்டனர். அதைத் தொடர்ந்து 1958ஆம் ஆண்டு பொங்கல் நாளி விருந்து தமிழில் ஆட்சி நடத்தவேண்டும் என்று அரசு இதழில் (Gazette) அறிவிக்கை (Notification) வெளியாயிற்று. முதலில் தட்டச்சு செய்யப் பெறாமல் கையாலேயே கடிதங்களை எழுதி அனுப்பும் அலுவலகங்களில் தமிழைப் பயன்படுத்தவேண்டும் என்று தெரிவித்திருந்தனர். இந்த அறிக்கை வெளியிடப்பட்ட ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு இது குறிப்பிட்ட அலுவலகங்களில் செயற்படுத்தப் படுகின்றதா? தமிழில் எழுதுவதில் என்ன குறைகள் காணப்பெறுகின்றன? என்பதை அலுவலகங்கள் தோறும் சென்று ஆய்வு செய்து திருத்தமானதும், பொருத்தமானதுமான முறையில் தமிழைப்பயன்படுத்துவதற்கு வழிகாட்டுமாறு ஆட்சிமொழித் தனி அலுவலர்* ஒருவரை அரசு அமர்த்தியது. அப்போது ஆட்சிமொழிக் குழுவின் தலைவராக திரு. சு. வெங்கடேசுவரன், ஐ.சி.எஸ்., அவர்கள் இருந்தார்கள். பின்னால் உயர் நீதிமன்ற முதல் நீதிபதியாக இருந்த திரு. அனந்தநாராயணன், ஐ.சி.எஸ்., அவர்களும், திரு. தி.க. சங்கரவடிவேலு பிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்களும் பிற சிலரும் உறுப்பினராக இருந்தார்கள்.

* முதல் ஆட்சிமொழித் தனி அலுவலராக இக் கட்டுரை ஆசிரியர் நியமிக்கப்பட்டார்.


அடுத்தடுத்து மேற்கொண்டு பல அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழியாக்கப்பெற்றது. தட்டச்சு இயந்திரம் (Typewriting Machine) சீர் செய்யப்பட்டது. அலுவலகங்களில் உள்ள ஆங்கிலத் தட்டச்சர்களுக்குத் தமிழில் தட்டச்சுப் பயிற்சியளிக்கப்பெற்றது. தனியார் ஒருவர் எழுதியிருந்த சுருக்கெழுத்துச் சுவடி காலத்திற்கேற்ற மாறுதல்களுடன் திருத்தி அமைக்கப்பெற்றது. 1964 ஏப்ரல் வரை மாவட்ட ஆட்சியர் (District Collector) அலுவலகம் முதல், கீழ் உள்ள எல்லாத் துறை அலுவலகங்களிலும் ஆட்சி தமிழில் நடந்து வந்தது. ஆட்சி மொழி தமிழாக்கப்பெற்று இன்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் முற்றிலுமாகத் தமிழே ஆட்சித்துறையில் உள்ளது என்று சொல்லுதற்கில்லை.

அண்மையில் தமிழும் ஆட்சிமொழியாக்கப்பட்ட இலங்கை அரசில் தமிழை ஆர்வத்தோடு பயன்படுத்தாவிட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்நாட்டுக் கல்வி அமைச்சர் டாக்டர் நிசன்கா விசயரத்ன என்பவர் எல்லா அலுவலகங்களுக்கும் உத்தரவு அனுப்பியிருப்பதாக 1980 சனவரித் திங்கள் 29ஆம் நாள் 'இந்து' தாள் பக்கம் 7-ல் வெளியான செய்தியிலிருந்து அறிகிறோம். "The Minister has sent a directive to all the departments under his ministry to scrupulously adhere to the Government policy of sending replies in Tamil to letters receive by them in Tamil......... he warned that disciplinary action would be taken against those who contravend his order" என்பது அந்த அறிக்கை. இந்நிலை தமிழகத்திலும் ஏற்பட்டு 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற நிலை மலர வேண்டும்.

இங்கிலாந்தில் நீதிமன்றங்களில் 1731ஆம் ஆண்டு வரையில் பிறமொழியே தீர்ப்புகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த அவமானத்தைப் பொறுக்க முடியாமல் திடுமென அந்த ஆண்டு பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. உடனடியாக ஆங்கிலத்தை நீதிமன்றங்களில் பயன்படுத்த வேண்டும் என்றும், அப்படிச் செய்யத் தவறினால் ஒவ்வொரு தவறுதலுக்கும் 50 பவுன் தண்டம் விதிக்கப்படும் என்றும் பாராளுமன்றம் அறிவித்தது. அதுவரையில் சிறப்பாகக் கருதப்பெறாதிருந்த ஆங்கிலம் திடுமென நீதிமன்ற மொழியாகி விட்டது. பின்னர் உலக உடன்படிக்கைகள் யாவும் எழுதப் பெறுகின்ற உயர்ந்த மொழியாகவும் மேன்மையடைந்துவிட்டது.

நம் அன்னைமொழியும் அவ்வாறு ஆட்சியிலும் நீதிமன்றங்களிலும் வழங்கப்பெறுவதற்கு நம் சட்டமன்றங்கள் அவ்வாறு திட்டமிடும் நாள் அண்மையில் வரவேண்டும் என்று தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

'வாழ்க தமிழ்! வளர்க ஆட்சி மொழி!



சிந்துவெளி எழுத்து வடிவங்கள்

டாக்டர் க. த. திருநாவுக்கரசு

முன்னுரை

இந்தியத் துணைக்கண்டத்தின் மிகத் தொன்மையான எழுத்து வடிவங்களை, முதன்முதல் இந்த நாட்டில் வழங்கிய எழுத்து வடிவங்களைச் 'சிந்துவெளி எழுத்து வடிவங்கள்' என்று தொல்லியல் அறிஞர்கள் சுட்டுகின்றனர். பழைய பஞ்சாபின் மாண்ட்கொமெரி மாவட்டத்தில் (பாகிஸ்தான்), இரவி-சட்லெஜ் ஆறுகளுக்கு இடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட (1920) தொல்பொருள் சின்னம் ஹரப்பா எனப்படுவதாகும். 1922ஆம் ஆண்டில் சிந்து மாநிலத்தில் (பாகிஸ்தான்), லர்க்கானா மாவட்டத்தில் எழுபது அடி உயரமுள்ள மண்மேடு ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டது. இந்தச் சின்னத்தை மொகஞ்சொதாரோ என்பர். இவ்விரு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட தொல்பழங்கால முத்திரைகளில் காணப்படும் எழுத்து வடிவங்களையே, 'சிந்துவெளி எழுத்து வடிவங்கள்' எனப் போற்றி வருகிறோம். சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் மிகப் பழங்காலத்தில் பழக்கத்தில் இருந்த எழுத்து முறையை இப்பெயரால் சுட்டுவது இன்றைய மரபாகும். 1922ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தக் கண்டுபிடிப்புகள் உலக அறிஞர்களின் கருத்தைப் பெரிதும் கவரலாயிற்று; இந்தியத் தொல்லியல் ஆராய்ச்சியில் முதன்மை இடத்தைப் பெறலாயிற்று. சர் ஜான் மார்ஷல் இவ்விரு இடங்களிலும் தொடர்ந்து நடத்திய அகழ்வாராய்ச்சியால் புதியதொரு நாகரிகம் இந்தியாவில் தொல்பழங்காலத்திலேயே சிறப்புற்று விளங்கியமை உலகிற்குத் தெரியவந்தது. உலகின் தொல்பழங்கால நாகரிகங்களோடு ஒத்த சிறப்புடைய தொன்மையான நாகரிகம் இந்திய மண்ணில் சிறப்புற்று விளங்கியமை பலருடைய கருத்தைக் கவர்ந்தது. பண்டை உலகின் வெண்கலக் கால நாகரிகங்களுள் ஒன்றாக இந் நாகரிகம் இன்று போற்றப்படுகிறது.

தோற்றம்

உலகில் வெண்கலக் கால நாகரிகம் சிறப்புற்ற காலத்திலேயே (கி.மு. 3000 அளவில்), எழுத்து முறையை மனிதன் முதன்முதலாகப் பயன்படுத்தத் தொடங்கியதாகக் கூறுவர். உலகில் எந்த நாட்டில் முதன்முதல் எழுத்துமுறை கண்டுபிடிக்கப்பட்டது என்பதை இன்றுவரை உறுதியாக அறிய இயலவில்லை. இந்தப் புதிரோடு சிந்துவெளி எழுத்துகளின் தோற்றமும் பிணைந்து கிடக்கிறது. 1934ஆம் ஆண்டில் சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்த டாக்டர் ஜி. ஆர். ஹன்டர் மொழிந்துள்ள கருத்து இங்கு நம் கருத்தைக் கவருவதாகும்.

''மொகஞ்சொதாரோ, ஹரப்பாவில் கிடைத்துள்ள எழுத்து வடிவங்களை மேற்போக்காக நோக்குகின்றபொழுது, அவை தனித்த இயல்புடையனவாகத் தோன்றுகின்றன. அது சுமேரிய எழுத்தும் அன்று; நமக்குத் தெரிந்த வேறு எந்தத் தொல்பழங்கால எழுத்துகளும் அல்ல. ஆனால், பண்டை நாகரிக எழுத்துகள் பலவற்றோடு சிற்சில ஒப்புமைப் பண்புடையனவாகத் தோன்றுகிறது. இந்த ஒப்புமை இயல்பு, தற்செயலாக அமையும் ஒப்புமைப் பண்பாகவே இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு பொருளைச் சித்திர எழுத்துகளின்

மூலம் புலப்படுத்தும்பொழுது, ஒத்த இயல்பு அவற்றிடையே அமைவது இயற்கை. இதனை யாரும் விலக்க இயலாது. சிந்துவெளி எழுத்துகளில் பேரளவிற்குக் காணப்படும் வடிவங்கள், பிற மொழி எழுத்துகளோடு ஒப்புமையுடையனவாகத் தோன்றலாம். எடுத்துக்காட்டாக,



எனும் வடிவங்களைக் காட்டலாம். இன்றைக்கு நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு இந்த எழுத்துமுறை எதிலிருந்து வளர்ந்துள்ளது எனத் துணிய இயலவில்லை. சுமேரிய எழுத்துமுறைக்கும் சிந்துவெளி எழுத்துமுறைக்கும் பொதுவான தலையூற்று ஒன்று இருந்திருத்தல்கூடும் எனக் கொள்ளுவதே பொருத்தம் உடைத்தாகும்.''[1]

எழுத்து வடிவினைக் கண்டறியும் முயற்சி

சிந்துவெளி எழுத்துகள் இந்திய வரலாற்றின் பெரும் புதிராக—மறை பொருளாகவே இருந்து வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர், இராபர்ட் தாவரே (Robert Davreu) எனும் அறிஞர் 'உலகின் கடைசி புதிர்கள்' பற்றி ஆராய்ந்தார். அவர்,

> சென்ற ஐம்பது ஆண்டுகளாகக் கருத்துடன் நடத்தப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சிக்குப் பின்னரும் சிந்துவெளி நாகரிகம் தொடர்ந்து பலவகைப் புதிர்களின் தலையூற்றாக இருந்து வருவது வியப்பாக இருக்கிறது. ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பின் கூறுகளும், அதனை இன்னும் தெளிவற்ற ஒன்றாக மாற்றி வருகிறதைக் காணுகின்றோம்; புதிய விளக்கங்களுக்கு இடம் தருவதாக அது அமைந்துவிடுகிறது. மற்றவற்றைப் போலவே இப்புதிய விளக்கங்களும் நம்ப இயலாதனவாகத் தோன்றுகின்றன.... அமைப்பு முறையிலும் நுட்பமான விளக்கங்களிலும் பேரீடுபாடு கொண்டிருந்த ஓரின மக்கள், தங்களுடைய வரலாறு, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் பற்றிய பதிவுகளை விட்டுச் செல்லாதது விந்தையாகும். இன்றுவரை நன்கு இனங்கண்டு கொள்ள இயலாத நிலையில் உள்ள அவர்களுடைய எழுத்துமுறை, சிந்துவெளிப் பண்பாட்டைப் புரிந்துகொள்ள உதவும் திறவுகோலைத் தன்னகத்தே ஒருகால் கொண்டு இருக்கலாம்.[2]

என்று கூறியுள்ளமை இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது.

சிந்துவெளி எழுத்து வடிவங்கள் அண்மைக்கால ஆராய்ச்சிகளினால், முத்திரைகளில் மட்டும் அல்லாமல், செப்புத் துண்டுகளிலும், மண்பாண்ட ஓடுகளிலும், அருகிக் காணப்படும் சில கருவிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எழுத்துகள் ஓரளவிற்குச் சீர்மையாகவும் அழகாகவும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை கணிசமான எண்ணிக்கையுடையனவாக இல்லை. சிந்துவெளி எழுத்தின் பட்டியலை விரிவாகவும் செம்மையாகவும் தயாரித்துள்ள திரு. ஐராவதம் மகாதேவன் கருத்துப்படி, 417 குறிகளே அத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன[3] என்பது இங்குக் கருதத்தக்கது! மிகக் குறுகிய வடிவும் செறிவும் உடையனவாக அவை உள்ளன. இதனால், உலகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அறிஞர்கள் பலர், இந்த எழுத்தின் வடிவங்களைக் கண்டு அறிவதில் பேரார்வம் காட்டி வருகின்றனர். ''மினோவன் (கிரேக்க) எழுத்துகள் பைத்தியக்காரர்களிடம் துன்பப்பட்ட அளவிற்கு ஹரப்பா எழுத்துகள் இன்னும் அவர்களிடம் சிக்கிச் சீரழியவில்லை''[4] என்று ஸ்டுவர்ட் பிக்கட் மொழிந்துள்ள கருத்து, சிந்துவெளி எழுத்து ஆராய்ச்சி, நகைப்புக்கு இடம் அளிக்கும் நிலையை இன்னும் அடையவில்லை என்பதைத் தெரிவிக்கிறது.

முதன் முயற்சி

முதல்முதல் 1925-ல் இந்த எழுத்து வடிவத்தை ஆராய்ந்தவர் எல். ஏ. வேடல் (L. A. Waddell) என்பவராவார். அவர் சுமேரிய எழுத்துக்கும் சிந்துவெளி எழுத்து வடிவங்களுக்கும் இடையே ஒப்புமை இருப்பதாகக் கூறினார். சுமேரிய நாகரிகமும் ஆரிய நாகரிகமும் ஒன்றெனக் கருதியவர் அவர். சிந்துவெளி எழுத்துகளில் வேதகாலத் தெய்வங்களின் பெயர்களையும், முனிவர்களின் பெயர்களையும், புராணச் செய்திகள் பலவற்றையும் அவர் சிந்துவெளி எழுத்து வடிவங்களில் படித்துக் காட்டினார்.[5] இதற்கு அவர் அடிப்படையாகக் கொண்ட சான்றுகள் ஐயப்பாட்டிற்கு உரியனவாக உள்ளன; பின்பற்றிய ஆய்வு முறைகளும் அனைவராலும் ஒப்புக்கொள்ளத்தக்கனவாக அமையவில்லை. ஆரிய நாகரிகமே இந்திய நாகரிகங்களுள் சிறந்தது எனும் தவறான அடிப்படையில் செய்யப்பட்ட ஆராய்ச்சியாக இது அமைந்தது.

அம் முத்திரைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் ஆரியச் சார்புடையனவாக உள்ளனவாம். கி.மு. 3100 முதல் வாழ்ந்த சுமேரிய அல்லது பொனீஷியக் கடலோடிகளின் தலைவர்களுடைய பெயர்களாகவும் அவை உள்ளனவாம். அந்த முத்திரைகள்

---

[1] G. R. Hunter, Scripts of Harappa and Mohenjodaro, and ts Connection with other Scripts, London, 1934, p. 12.

[2] Robert Davreu, The World's Last Mysteries, London, 1967, pp. 121-123.

[3] Iravatham Mahadevan, The Indus Script, Texts, Concordance and Tables, Memoirs of the Archaeological Survey of India, New Delhi, 1977, p. 14.

[4] Stuart Piggott, Prehistoric India, Pelicon Books, G.B., 1950, p. 180.

[5] L. A. Waddell, The Indo-Sumerian Script Deciphered, London, 1925, p. 180.

அதிகாரிகளின் பதவி இலச்சினைகள் எனவும், இடுகாட்டு-தாயத்துகள் எனவும் அவர் வகைப்படுத்திக் காட்டியுள்ளார். அவற்றுள் சில சிறப்புமிகு வரலாற்றுப் புகழ் வாய்ந்த மெசபடோமியாவின் சுமேரிய, அக்கேடிய அரசர்களின் பெயர்களாக உள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விளக்கம் கால வரன்முறை வழுவுடையதாக உள்ளது. ஆரியர் இந்தியாவிற்கு வந்தமை கி.மு. 1800-க்கும் கி.பி. 1200-க்கும் இடைப்பட்ட காலமாகும். இவ்வாய்வாளர் இதனை கி.மு. 3000 அளவிற்குக் கொண்டு செல்லுவது இன்றைய நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கருத்திற்கு முரணாக உள்ளது. 'ஊர்-நினா' என்பது அசீரியப் பெயர். இதனை அவர் 'உருவஸ்கா', 'பர்-அம-அகா' எனும் பெயர்களில் இருந்து 'ஹரி அசுவா' எனவும், 'பிரம அசுவா' எனவும் திரித்து வேதகாலப் பெயர்களாகக் கொள்ள முயலுவது மொழியியல் அடிப்படைக் கொள்கைகளுக்குப் பொருந்தவில்லை. இவற்றைப் போன்று மிகப் பல சொற்களுக்கு அவர் தந்துள்ள விளக்கம் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக இல்லை.

ஹீராசுப் பெருந்தகை கூறுவதைப் போன்று "அவருடைய ஆய்வுமுறை தக்க அடிப்படையில் அமையவில்லை. அம்முறையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது ஒரே வகையான குறியீட்டிற்கு எல்லாவிடத்திலும் ஒரே வகையான மதிப்பினை அவர் தாராமையாகும். ஒப்புமைக் கூறுகளைக் கொண்டிராத வடிவங்களுள் ஒன்று மற்றொன்றிற்குச் சமம் என அவர் கொண்டுள்ளமைக்குரிய காரணம் யாதெனப் புலப்படவில்லை. முத்திரைகளின் கீழ்ப்பகுதிகளில் காணப்படும் இனக்குறி விலங்குகளை எல்லாம் எழுத்து வடிவமாக அவர் கொண்டுள்ளமை தவறாகும்."[6]

சுமேரிய எழுத்து வடிவங்களுக்கும் சிந்துவெளி எழுத்துவடிவங்களுக்கும் இடையே காணப்படும் பொதுமைப் பண்பு இரண்டு விழுக்காட்டு அளவினதேயாகும்.[7] எனவே, இந்தக் கருத்தை ஆராய்ச்சியாளர் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர்.

அட்டவணைப்படுத்தியதில் முதல்வர்

1931ஆம் ஆண்டு பிரான்நாத் (Prannath) சிந்துவெளி எழுத்துகளைக் கண்டறிவதற்குச் சில புதிய நெறிமுறைகளைத் தெரிவித்தார். சிந்துவெளி எழுத்துகளை இவர் முதன்முதல் அட்டவணைப்படுத்தித் தந்துள்ளார். இவருடைய தந்துரைகள் தற்காலிகமானவை; ஒருதலைச் சார்பானவை. வேடலைப் போலவே இவரும் 'சுமேரியரும் வேதகால அல்லது அதற்கு முற்பட்ட கால ஆரியரும் ஓரினத்தவரே' என்று துணிந்துள்ளார். "தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லெழுத்துகளில்", சுமேரிய, ஆரியத் தெய்வங்களின் பெயர்களை இவர் கண்டுபிடித்துள்ளதாகக் கூறுகிறார்.[8] இக்கருத்தும் வேடலினுடைய கருத்தினைப் போன்ற குறைபாடுடையதாகவே தோன்றியது.

ஓரசைச் சொற்கள்

அசோகனுடைய பிராமி எழுத்து வடிவமே சிந்துவெளி எழுத்துகளிலிருந்து தோன்றித் திரிந்து வளர்ந்ததாக எஸ். லேங்டன் (S. Langdon) கருதுகிறார். இவர் சிந்துவெளி எழுத்து வடிவங்களை இனங் கண்டுகொள்ளுவதற்குப் பல புதிய ஆக்கமுறையான நெறிமுறைகளை வகுத்துத் தந்தார். சிந்துவெளி எழுத்துக் குறியீடுகள் யாவும் ஓரசைச் சொற்களாக உள்ளன (மெய்யும் உயிரும் சேர்ந்த ஓரசையாக உள்ளன) எனும் உண்மையை உணர்த்திய பெருமை இவருக்கே யுரியதாகும். இவருடைய முயற்சியால் சிந்துவெளி எழுத்துகள் சுமேரிய எழுத்து வடிவங்களோடு தொடர்புடையன அல்ல என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது. ஆனால், சிந்துவெளி எழுத்துக்கும் எகிப்திய அடையாள எழுத்து (Hieroglyphic) முறைக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதை இவர் தெளிவுறுத்தியுள்ளார்.[9]

வலமிருந்து இடம்

சர் ஜான் மார்ஷலின் புகழ்வாய்ந்த "மொகஞ்சொதாரோவும் சிந்துவெளி நாகரிகமும்" எனும் நூலில் (அதி. 23) இக்கருத்து இடம் பெற்றிருக்கிறது. இதே நூலில் (அதி. 22) இதற்கு நேர்மாறான கருத்தினை சி. ஜே. கேட் (C. J. Gadd) என்பவர் தெரிவித்துள்ளார். சிந்துவெளி எழுத்துகள் ஓரளவிற்கு அசை வடிவினவாக உள்ளன என்பதை இவர் அறிவித்துள்ளார். அவ்வசைச் சொற்கள் உணர்த்தும் பெயர்கள், பழைய இந்திய-ஆரிய மொழி ஒன்றினுக்கு உரியதாகும் என இவர் நம்புகிறார். முத்திரைகளில் காணப்படும் குறிகள் பொதுவாகப் பெயர்களாக உள்ளன என்றும், எழுத்துமுறை வலப்புறம் தொடங்கி இடப்புறம் நோக்கிச் செல்லுவதாகவும் கேட் கருதலானார்.

H-173 எனும் முத்திரையில் உள்ள  எனும் குறிகளைப் 'புத்ர' (மகன்) என்று இவர் கொண்டுள்ளார். இவர் இவ்வாறு கொள்ளுவதற்குரிய அடிப்படையை அளவைமுறையில் தெளிவுறுத்தவில்லை. தம்முடைய உய்த்துணர்வால் இவ்வாறு கருதுவதாக இவர் தெரிவித்துள்ளார்.[10]

---

6 Rev. H. Heras, Studies in Proto-Indian Mediterranean Culture, Vol. I, Historical Research Institute, Bombay, 1853, p. 143.

7 Bankabehari Chakravarti, Decipherment of Indus Script: A New Light, India Publications, Calcutta, 1975, p. 7.

8 *Ibid.*, p. 7.

9 Sir John Marshall, Mohejadaro and the Indus Civilization, 3 Vols; London, 1931, ch. 23, Vol. 2, p. 431.

10 C. J. Gadd, 'Seals of Ancient Indian Style found at Ur', Proceedings of the British Academy, London, No. 18, 1932, pp. 671-74.

அதிகாரிகளின் பெயர்கள்

சர் பிளிண்டர்ஸ் பெட்ரி (Sir Flinders Petrie) என்பவர், பண்டைக்கால எகிப்திய முத்திரைகளைப் போன்று சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட முத்திரைகளும் அரசாங்க அதிகாரிகளுடையனவாக இருக்க வேண்டும் என்று நம்புகிறார். இவ்வெழுத்துகள் கால்வாய்களையும் சாலைகளையும் மேற்பார்வை செய்யும் அதிகாரிகளின் பதவிப் பெயர்களையும், நீர்வழிப் போக்குவரவு அதிகாரிகளின் பதவிப் பெயர்களையும் சுட்டுகின்றனவாம். மற்றும் சில விடுதிகளின் பதிவாளர்களையும், விளையாட்டுத்துறை அதிகாரிகளையும் குறிப்பதாகப் பெட்ரி கருதுகிறார்.[11] இந்த ஆய்வாளரை அடியொற்றிச் சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்தால் அவை யாவும் அங்கு வாழ்ந்த ஒவ்வொரு குடிமகனையும் ஒவ்வோர் அதிகாரியாகக் கருத இடமளிக்கும் என சி. எல். பேப்ரி (C. L. Fabri) கிண்டல் செய்கிருர்.[12]

சிந்துவெளி எழுத்துகளும் ஈஸ்டர் தீவு எழுத்துகளும்

ஹங்கேரிய நாட்டு அறிஞர் எம். ஜி. டி ஹெவசே (M. G. de Hevesey), இந்த முத்திரைகளில் உள்ள குறியீடுகளை, ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஈஸ்டர் தீவின் கல்லெழுத்துகளோடு தொடர்புடையனவாகக் கருதலானார். வடிவ அமைப்பில் காணப்படும் சில ஒப்புமைப் பண்புகளே இத்தொடர்புக்குக் காரணம் என்பதை அவர் தெளிவுறுத்தியுள்ளார்.[13]

இவரைப் பின்பற்றி ஹெயினே கெல்டர்ன் (Heine Geldern), பில்லிமோரியா (Bilimoria) என்பவர்களும் இந்தத் தொடர்பினை ஆராய்ந்துள்ளனர். இவர்களுடைய சிந்தனைக் குழப்பமே இத்தகைய ஆய்விற்குக் காரணம் என்பர். ஈஸ்டர் தீவு குறியீடுகளை எழுத்துகள் என்று சொல்லுவதற்கு இல்லை. அவற்றைத் தொகை வகைப்படுத்தி எழுத்துகளாகவோ, அசைகளாகவோ, சொல்லெழுத்தாக (Logograph) வோ இனங்காண இயலவில்லை. இப்படிப்பட்ட குறியீடுகளை ஓரளவிற்கு நன்கு வளர்ச்சியுற்றும் முறைப்படுத்தப்பட்டும் உள்ள சிந்துவெளி எழுத்துகளோடு தொடர்புபடுத்திக் காட்ட முயலுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.[14]

இந்த நாட்டிலே தோன்றிய எழுத்துமுறை

1934 ஆம் ஆண்டு கே. என். தீக்ஷித் (K. N. Dikshit) என்பவர், ''சிந்துவெளியில் வரலாற்றிற்கு முற்பட்ட நாகரிகம்'' எனும் நூலில், ''சிந்துவெளி எழுத்துகள் ஐயத்திற்கு இடமின்றித் தனிப்பட்ட நிலையில் இந்த நாட்டில் தோன்றி வளர்ந்த எழுத்தாகும். மேற்போக்கான ஒப்புமைப் பண்புகள் சில, சுமேரிய, எகிப்திய எழுத்துகளுக்கும் சிந்துவெளி எழுத்துகளுக்கும் இடையில் காணப்படுவது எளிதில் புறக்கணிக்கத் தக்கனவாகும். இவை எதிர்பாராத தற்செயல் நிகழ்ச்சியாகவே தோன்றுகிறது'' என்று அறிவித்துள்ளார்.[15]

ஆரியம் அல்லாத மொழி ஒன்றின் எழுத்துகள்

லேங்டனுடைய கருத்தினை ஏற்றுக்கொண்டு, அம்முறையில் சிந்துவெளிக் குறியீடுகளை முதன் முதல் முறையாகப் பகுத்து ஆராய்ந்தவர் ஜி. ஆர். ஹன்டர் (G. R. Hunter) என்பவராவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்கு அவர் வழங்கிய டாக்டர் பட்ட ஆய்வுரையில் பின்வரும் முடிவுகளை அவர் வெளியிட்டுள்ளார்:

(1) சிந்துவெளி நாகரிகத்தைப் போற்றி வளர்த்த மக்கள் ஆரியர் அல்லர். ஆரியருக்கு முற்பட்ட இந்தியப் பழங்குடி (திராவிடர்) மக்களுடைய நாகரிகமாகும். இந்தப் பழங்குடி மக்களின் வழி வந்தவர்களே இன்று பிராகுவி (Brahuis) மொழி பேசும் மக்களாக இருத்தல்கூடும்.

(2) பிராமி எழுத்துகள் சிந்துவெளி எழுத்துகளிலிருந்து திரிந்து வளர்ந்தனவாகும்.

(3) எழுத்துகள் ஒலியமைப்பு முறையினை (Phonetic) அடியொற்றி அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும், அவை சித்திர எழுத்துகளிலிருந்தும் கருத்துவடிவ எழுத்துகளில் இருந்துமே வளர்ச்சியுற்றுள்ளன.

(4) கி.மு. *3000*-த்திற்கு முன்பே இந்த எழுத்துமுறை தோன்றியிருக்க வேண்டும்.

(5) எகிப்திலிருந்து சில எழுத்து வடிவங்களைக் கடன் வாங்கி இருக்கலாம்; கிரீத் (Crete) எழுத்துமுறையோடு தொடர்பும் இருந்திருக்கலாம்.

(6) இந்த எழுத்துகள் வலத்திலிருந்து இடப்பக்கம் நோக்கியும், பிறகு இடமிருந்து வலமாக எழுதப்படும் முறையுமுடையன.[16]

இவ்வாய்வாளரின் கருத்துகளே முதன்முதலாகத் தக்க அடிப்படையில் சிந்துவெளி எழுத்துகள் இந்தியாவிற்குரிய, திராவிட இன மக்களின் எழுத்துகள் என்பதையும், பிராமி எழுத்துகள் இவற்றின் திரிந்த வடிவங்கள் என்பதையும் அறிவுறுத்தின.

---

[11] Sir W. F. Pertrie 'Mohenjodaro', in 'Ancient Egypt', 1932, pp. 33-40.

[12] C. L. Fabri, Indian Culture, Vol. I, p. 53.

[13] M. G. de Hevesey, 'Sur Une Ecriture Oceantenne Paraisant d' Orgine Neolithic' bulletin de la Societe Prehistorique Francaise, Vol. 30, pp. 234-449.

[14] Ibid, Vol. 32, pp. 146.

[15] K. N. Dikshit, Pre-Historic Civilization of the Indus Valley' 1935, p. 135.

[16] G. R. Hunter, Op. cit., pp. 8-160.

கருத்தோவிய ஒலிவடிவங்கள்

1934-ல் லீப்சிக்கிலிருந்து இத்தாலிய நாட்டு அறிஞரான ஃபியூரோ மெரிக்கி (Peiro Meriggi), ''பெட்ரி கல்வெட்டுகளை விளக்கியுரைத்துள்ளாரே வொழிய, அவற்றில் உள்ள எழுத்துகளை இனங் கண்டறியவில்லை'' என்று உரைத்தார். கருத்து ஓவிய — ஒலி வடிவங்களாகச் சிந்துவெளி எழுத்து கள் உள்ளன என்பது இவருடைய நம்பிக்கை. பெரிதும் இவை ஹிட்டைட் அடையாள எழுத்து களோடு (Hieroglyphic) ஒப்புமையுடையன. முத்திரைகளில் சிறப்புப் பெயர்கள் பொறிக்கப்பட் டிருப்பதாக இவர் கருதவில்லை; ஆட்சியாளரின் இலச்சினை பொறிக்கப்பட்ட முத்திரைகளாகவே அவற்றைக் கொண்டுள்ளார். நில அளவை மேற் பார்வையாளர், அரசனுக்கு வெண்கொற்றக்குடை யினைப் பிடிப்பவர், கோயிலின் தானியக் களஞ்சியக் காப்பாளர் போன்ற பதவிப் பெயர்களே முத்திரை களில் காணப்படுவதாக இவர் குறிப்பிட்டுள்ளார்.[17]

தாள் நாணயமே முத்திரைகள்

1936-ல் மகேந்திர காவியத் தீர்த்தர் என்பவர் புதியதொரு கருத்தினைத் தெரிவித்துள்ளார். சிந்து வெளி முத்திரைகள் உண்மையில் முத்திரைகள் அல்ல. அவை அந்நாட்டுத் தாள் நாணயங்கள் ஆகும். வாணிகத்தில் ஈடுபட்டிருந்த சிந்துவெளி மக்கள் அவற்றைத் தாள் நாணயத்தைப் போன்று பயன்படுத்தி இருக்கவேண்டும். அவை பல்வேறு நாட்டிற்குரியன. அவற்றில் காணப்படும் படங்கள், அந்தந்த நாட்டைச் சுட்டும் குறியீடுகளாகும் என் பர். ஏறக்குறைய பதினொரு முத்திரைகளை இந்த முறையில், இவர் படித்து அறிந்ததாகத் தெரிவித்துள்ளார்.[18]

இவருடைய ஆய்வின் முடிவாகச் சிந்துவெளி எழுத்துகள் ஒருவகையான சம்ஸ்கிருத மொழியைச் சேர்ந்தனவாகத் தெரிகிறது. ஆயினும், வடமொழி வாணர் இவருடைய கண்டுபிடிப்பு, மொழிநூற் கொள்கைக்கு முரணான முறையில் அமைந்துள்ளது என்பர்.

கீழ்வாய் இலக்க வழக்கு

1937-ல் அலன் எஸ். சி. ராஸ் (Allan S. C. Ross) என்பவர் சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்தார்; மொகஞ்சொதாரோவில் பதின்கூற்றுக் கீழ்வாய் இலக்க முறை வழக்கில் இருந்ததைக் கண்டுபிடித் துள்ளார்; சிந்துவெளியில் வழங்கிய மொழி இந்தோனேசியப் பண்டை மொழியோடு தொடர்பு உடையதாகக் கருதுகிறார்.[19]

வாணிகர் வளர்த்த எழுத்துமுறை

''இருக்குவேத காலப் பணியரும் மொகஞ்சொ தாரோ, ஈஸ்டர் தீவு எழுத்துகளும்'' எனும் ஆய் வுரையில், என். எம். பில்லிமோரியா (1939), ''எந்த இரு அறிஞர்களும் இதுவரையில் சிந்துவெளி முத்திரைகளின் பயன்பாட்டைப்பற்றி ஒத்த கருத் துடையவராக விளங்கவில்லை. இதைவிட எழுத்து களைப் படித்தறிவதில் யாரிடத்திலும் ஒத்த கருத்தினைக் காணோம். முத்திரைகளைச் சிலர் வாணிகக் குறிப்புகளைக் கொண்டுள்ளதாகக் கூறு கின்றனர். மற்றும் சிலர் அவற்றை வாணிகக் கடிதங்கள் என்றும் கடன் பத்திரங்கள் என்றும் கூறுகின்றனர். பேராசிரியர் ஹெவசே, முத்திரை கள் வீடுகளிலேயே கிடைத்துள்ளன என்பதால், அவை தெய்வ வழிபாட்டில் தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட படையல் பொருளாக இருக்கவேண் டும் என்பர். விலங்கு தெய்வங்களுக்குப் படைக்கப் பட்ட அம் முத்திரைகளில் காணப்படும் எழுத்து கள், அவற்றைப் படைத்தவர்களுடைய பெயர் களாக இருக்க வேண்டும் என்று அவர் நம்புகிறார்'' என்று தெரிவிப்பதோடு அமையவில்லை. ''இருக்கு வேதத்தில் ஊர்ஊராகச் சுற்றித் திரிந்த வாணி கரே பணியர் என்று சுட்டப்படுகின்றனர். அவர் கள் உலகின் பல்வேறு பகுதிகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். தங்கள் வாணிகக் கணக்கைக் குறித்து வைப்பதற்காக அவர்கள் சிந்து வெளி எழுத்துகளை முதன்முதலாக வடித்து, பயன் படுத்தினர்'' என்றும் இவர் சிந்துவெளி எழுத்தின் தோற்றத்தைக் குறித்து விளக்கியுள்ளார்.[20]

ஆனால், அவ்வெழுத்துகளை எவ்வாறு படித்து அறிவது என்பதற்கு, அவர் யாதொரு நெறிமுறை களையும் வகுத்துத் தரவில்லை. இதனால், இதனை அவருடைய கருத்து எனும் அளவிலேயே சுட்ட வேண்டியுளது. தவத்திரு ஹீராசுப் பெருந்தகை, ஹெவசேயினுடைய கருத்து முற்றிலும் தற்செயல் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்று மறுத்துள்ளார்.

ஹிட்டைட் எழுத்துகளும் சிந்துவெளி எழுத்துகளும்

பேராசிரியர் ரோசனி (Hrozny) ஹிட்டைட் (Hittite) மொழி ஆராய்ச்சி வல்லுநராவர். அவர் சிந்துவெளி எழுத்துகளைப் பலமுறை திரும்பத்திரும்ப ஆராய்ந்து படிக்க முயன்றுள்ளார். ''கருத்தைக் கவரத்தக்க வகையில் சிந்துவெளி எழுத்துகளுக்கும் ஹிட்டைட் எழுத்துகளுக்கும் இடையே ஒப்புமைப் பண்புகள் உள்ளன. நன்கு வளர்ச்சி அடையாத சிந்துவெளி எழுத்துகள் ஹிட்டைட்டின் அடையாள எழுத்துகளை முன் மாதிரியாகக் கொண்டு அமைக் கப்பட்டுள்ளன. ஒரே அசையை அமைப்பதற்குப்

---

[17] P. Meriggi, 'Zur Indus Schrift', Ziestschrift der Dentschen Morgendadischen Gesellschaft, Leipzig, 12, 1934.

[18] Bankabehari Chakaravarti, Op. cit., p. 9.

[19] Allan S. C. Ross, 'The Numeral signs of the Mohenjodaro Script,' Memoirs of the Archaeological Survey of India, No. 57.

[20] Note Nos. 13, 14.

பெரிதும் பலவகையான குறியீடுகளை அது பயன் படுத்துகிறது. ஷ, ஷி, ஷ் அல்லது ச், ச, சி என்னும் ஒலிகளை உணர்த்த ஐம்பது குறியீடுகள் பயன் படுத்தப்பட்டுள்ளன'' என்று ரோசனி கூறுகிறார்.

மேலும், ஷி, சி, குசி எனும் ஒலிகள் பலமுறை, பல்வேறு வகைப்பட்ட ஒலிகளால் சுட்டப்படுகின் றன என்கிறார்.[21] இதிலிருந்து இவர் பின்பற்றிய முறையில் யாதோ குழப்பம் இருப்பதாகத் தெரி கிறது. காலவரன்முறை அடிப்படையிலும் ஹிட் டைட் எழுத்துமுறைத் தொடர்பு பற்றிய செய்திகள் வழுவுடையனவாக உள்ளன. "பொருத்த மற்ற கருதுகோள்களையும் தரவுகளையும் அடிப் படையாகக் கொண்டது இவருடைய ஆராய்ச்சி. காலத்தால் ஆயிரம் ஆண்டுகள் பிற்பட்ட ஹிட் டைட் எழுத்து முறையிலிருந்து சிந்துவெளி எழுத்து கள் தோன்றின என்று கூறுவது வரலாற்று நிகழ்ச்சி களைத் தலைகீழாக மாற்றுவதாகும்'' என்பர் டிரின்ஜர் (Dringer).[22]

தாந்திரிக நூல்களும் சிந்துவெளி எழுத்துகளும்

சுவாமி சங்கரானந்தா, ''சிந்துவெளி மக்கள் பேசுகின்றனர்'' எனும் நூலினை எழுதியுள்ளார். அந்நூலில் சிந்துவெளி எழுத்துகள் பற்றிய ஆராய்ச்சி சிறப்பிடம் பெற்றுள்ளது. அதில் பின்வரும் தரவு களைக் காணுகின்றோம்: (1) சீனருக்கும், இந்துக்க ளுக்கும் எகிப்தியருக்கும் லிபியருக்கும், யூதர்களுக் கும், அராபியர்களுக்கும், போனிசியருக்கும் கிரேக்க ருக்கும் ரோமானியருக்கும் பொதுவான ஒரு தாய்மொழி மிகப் பழங்காலத்தில் இருந்திருக்க வேண்டும், (2) சம்ஸ்கிருதம் தேவர்களால் படைக்கப்பட்டது. பண்டைய மொழியின் ஓரசைச் சொற்களில் புரோகிதர்கள் விபக்திகளையும் பிரத்யயங்களையும் சேர்த்து அதனை வளப் படுத்தினர், (3) இன்றைக்கு நம்மிடையே உள்ள தாந்திரிக நூல்கள் சிந்துவெளி நாகரிகத்தின் காலத்திலேயே வழக்கில் இருந்தன.

இந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு சிந்துவெளி எழுத்துகளை இவர் வடிக்கத் தொடங்கி யுள்ளார். தாந்திரிக நூல்களில் உள்ள மறைபொருள் உடைய சொற்களைக் கொண்டு மொகஞ்சொதாரோ எழுத்துகளை விளக்க இவர் முயன்றுள்ளார். தாந் திரிகச் சொற்கள் யாவும் அடையாள எழுத்துகளைக் கொண்டு அமைக்கப்பட்டவை என்பது இவருடைய நம்பிக்கை. 'பசுபதி முத்திரை' எனச் சொல்லப் படும் மண்தகட்டில் உள்ள எழுத்துகள் சித்திரங் கள் அல்ல என்பது இவருடைய கருத்து. அதனைப் பின்வருமாறு அவர் படித்துள்ளார்: ''எல்லா நீர்வழி (ஆற்று வழி) களையும் பறவைகள் மூடிக் கொண்டுள்ளன.''[23]

சங்கரானந்தாவின் ஆய்வு முறையையும் முடிவு களையும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. தாந்தி ரிகச் சொற்கோவையில் காணப்படும் விளக்கங்கள் கருத்து வகையில் நெகிழ்ச்சியுடையன; வெவ்வேறு மனிதர்களால், வெவ்வேறு வகையாக அவற்றுக்கு வடிவம் கற்பிக்கப்படலாம். அவருடைய விளக்கங் கள் எளிதில் பயன்படுத்த இயலாத இழுபறிப் போக்குடையனவாக உள்ளன. மற்றும் அக் குறி யீடுகளுக்கு மாறிமாறி வரும் பயன் மதிப்பினை அவர் அளிப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை; முடிவுகள் யாவும் தற்சார்பு உடையனவாக உள்ளன.

இதே வகையான சிந்தனைப் போக்கில், பேராசி ரியர் பி. எம். பருவா (B. M. Barua) சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்துள்ளார். தாந்திரிக நூல் களை அடிப்படையாகக் கொண்டு அவற்றைப் படிக்க முயன்றுள்ளார். பசுபதி முத்திரையில் உள்ள குறி யீடுகளை ''அஜல உபாச'' என்று இவர் கொண்டுள் ளார். இத்தொடர், சம்ஸ்கிருத மொழித் தொட ரான ''அச்சல உபாசியா'' என்பதன் தொன்மை வடிவம் என்று குறிப்பிடுகிறார். இதற்கு ''இந்த மலை ஒருவரை வழிபட்டது'' என்று இவர் பொருள் கூறியுள்ளார்.[24] இதே அடிப்படையில் ஆர். எம். நாத் என்பவர் சிந்துவெளி எழுத்துகளை விளக்க முயன்றுள்ளார். குறியீடு B=ப எனவும், மற்றும் பகா (Baga) எனவும், குறியீடு C=க எனவும், Cha=ந எனவும் இவர் கொண்டுள்ளார். இவ் வாறு கொள்ளுவதற்குரிய காரணங்களை இவர் குறிப்பிடவில்லை. மற்றும் தாந்திரிக நூல்களின் பின்னணியில் விளக்க முயலுவதால், சுவாமி சங்க ரானந்தாவுக்கு உண்டான இடர்ப்பாடுகளில் இவ ருடைய ஆய்வும் சிக்கிக்கொள்ளுகிறது.

பழந்திராவிட எழுத்துகள்

சிந்துவெளி எழுத்து ஆராய்ச்சியில் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்தவர் திருத்தந்தை ஹீராசுப் பாதிரியார் ஆவார். பழந்திராவிட மொழியின் எழுத்துகளாக முதன்முதல் கண்டறிந்த பெருமை இவருக்கேயுரியதாகும். இவருடைய ஆய்வினைச் ''சிந்துவெளி எழுத்துகளும் பழந்திராவிட மொழியும்'' எனும் தலைப்பில் விரிவாகக் காணலாம்.

பிரிட்டானியத் தொல்லியல் அறிஞர்களான சர் மார்ட்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler), லியோ னார்ட்டு உல்லி (Leonard Wolley), ஸ்டூவர்ட் பிக்கட் (Stuart Piggott) என்பவர்களும், அவர்களுடைய மாணவர்களும் சிந்துவெளி நாகரிகம் ஆரியர்களா லேயே அழிக்கப்பட்டது. அவர்களுக்கு முன்பு அங்கு வாழ்ந்த மக்கள் ஆரியர் அல்லாத இந்தியப்

---

21 B. Chakrabarti, Op. cit., p. 10.

22 Ibid., p. 10.

23 Sawmi Sankrananda, The Rigvedic Culture of Pre-Historic India, and the Indus People Speak, Varanasi, 1955, p. 48

24 B. M. Barua, ' The Indus Script and the Tantric Code, Indo-Iranica, Vol. I, pp. 15-21.

பழங்குடி மக்களாவர்'' எனும் முடிவிற்கு வந்துள்ளனர்.[25]

ஐம்பத்தாறு எழுத்துகள்

1957-ல் கே. என். சாஸ்திரி என்பவர் ''சிந்து வெளி நாகரிகத்திற்குப் புதிய ஒளி'' எனும் ஆய் வுரையில், சிந்துவெளி எழுத்துகளுக்கும் பிராமி எழுத்துகளுக்கும் இடையேயுள்ள ஒப்புமைப் பண்பு களைத் தக்க சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார். ஆனால் ''ரோஸட்டா கல் (Rosetta Stone)லைப் போன்ற இருமொழி கல்வெட்டுகள் இங்குக் கிடைக்கும் வரை, சிந்துவெளி எழுத்துகள் பெரும் புதிராகவே இருந்துவரும்'' என்று தெரிவித்துள் ளார். சிந்துவெளிக் குறியீடுகளை இவர் பகுத்துப் பகுத்து ஆராய்ந்ததன் பயனாக, அடிப்படைக் குறி யீடுகளான எழுத்துகள் 56 என்று வரையறுத்துள் ளார். இதனைச் சிறப்புமிகு சாதனையாகப் போற் றுவர். இன்றைய இந்திய மொழிகளுள் பெரும் பாலானவற்றின் எழுத்துகள் 56 ஆக இருப்பதை இங்கு நினைவுகூர்தல் வேண்டும்.[26]

சிந்துவெளி எழுத்துகள் வலப்பக்கத்தில் இருந்து இடப்பக்கமாக எழுதப்பட்டுள்ளன எனும் கருத் தினைச் சில அறிஞர்கள் மெய்ப்பிக்க முயன்றுள் ளதை நாம் முன்னரே கண்டோம். இதனை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் டைரக்டர் ஜெனரலாக இருந்த பி.பி. லால் (B. B. Lall) தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார். காளிபங்கனில் (இராஜஸ்தானில் உள்ள ஊர்) கண்டெடுக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகள் இரண்டில் காணப்படும் மட் கலக் குறியீட்டைக் (Graffiti) கொண்டு அவை எவ்வாறு வலமிருந்து இடப்பக்கமாக எழுதப்பட் டுள்ளன என்பதை நிறுவியுள்ளார்.[27]

பிராகிருத மொழி எழுத்துகள்

சுதன்சுகுமார் ராய் என்பவர் 1964-ல் ''சிந்து வெளி எழுத்துகள் ஒருவகை பிராகிருத மொழியின் எழுத்துகளாகும். சிந்துவெளி எழுத்துகளின் வடி வங்கள் திரிந்தும் திரிக்கப்பட்டும் எளிமையாக்கப் பட்ட நிலையில் 'பிராமி' எழுத்துகள் தோன்றி யுள்ளன. இவை யாவும் சிந்துவெளி எழுத்துகளின் வழி வந்தவை; சம்ஸ்கிருதம் அல்லாத பிராகிருத மொழிக்குரிய எழுத்து வடிவமாக அமைக்கப்பட் டவை[28] என்பர்.

வேத, புராணகாலப் பெயர்கள்

பேராசிரியர் வங்கவிகாரி சக்கரவர்த்தி (Banka-behari Chakaravarti) சிந்துவெளி எழுத்துகளை நுட்ப மாக ஆராய்ந்து இரு நூல்களை வெளியிட்டுள்ளார்.[29] இவர் 511 முத்திரைகளில் உள்ள குறியீடுகளை எல்லாம் ஆராய்ந்து அறிந்து (1975-76), அவற்றின் ஒலிப்பு முறையையும், அவற்றால் தெரியவரும் மொழியையும் கண்டுபிடித்துவிட்டதாகத் தெரி வித்துள்ளார். கொச்சை சம்ஸ்கிருதமே சிந்துவெளி யில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி என்பது இவ ருடைய துணிவு. வாணிகர்களின் பெயர்களும் புராண காலத்திற்குரிய அரச குமாரர்களின் பெயர் களும் சிந்துவெளிக் குறியீடுகளில் காணப்படுவதாக இவர் தெரிவித்துள்ளார். இவருடைய கண்டுபிடிப் பின்படி பல பெயர்களுக்கு முன்னால் 'ஸ்ரீ', 'ராஜா' எனும் மதிப்பினைப் புலப்படுத்தும் அடைகள் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இதைவிட வியப் பிற்குரிய மற்றொரு செய்தி, சிந்துவெளி முத்திரை களில் 'சனகன்', 'கோசிகன்' எனும் பண்டைச் சிறப்பு வாய்ந்த அரசர்களின் பெயர்களையும் காண்பதாக இவர் குறிப்பிட்டுள்ளமையாகும்.[30] இவருடைய ஆய்வுமுறை முன்கூட்டியே சில கருத்துகளை மனத் தில் கொண்டு, அவற்றை அந்தக் கல்லெழுத்துகளில் காண முயன்றதாகவே அமைந்துள்ளது.

மராட்டிய அறிஞரான எஸ்.கே. கோலேகாங்கரின் (S. K. Golegaonkar) ஆராய்ச்சியும் இங்குக் குறிப் பிடத்தக்கதாகும். ஆறு உயிரெழுத்துகளும் பதி னான்கு மெய்யெழுத்துகளும் சிந்துவெளி எழுத்து களில் காணப்படுவதாக இவர் கணக்கிட்டுள்ளார். பிற்காலத்தில் இவை பிராமிமொழி எழுத்துகளாக எளிமைப்படுத்தப்பட்டுள்ளனவாம். நானூறு முத் திரைகளில் உள்ள எழுத்துகளை இனம் கண்டு கொண்டதாக இவர் கூறுகிறார். இந்த எழுத்து களைக் கொண்டு வேத, புராண காலப் பெரியார்கள் பலருடைய பெயர்களை இவர் சிந்துவெளி மக்க ளுக்கு உரியனவாக முடிவு செய்துள்ளார்.[31]

திருவாளர் சிகரபுர அரங்கநாத ராவ் (S. R. Rao) எனும் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை அறிஞரின் சிந்துவெளி எழுத்துகள் பற்றிய ஆய்வு, நம்முடைய சிந்தையைக் கவருவதாகும். இவர் சிந்துவெளிப் பண்பாட்டின் சின்னங்கள் ஐம்பதினை அகழ்ந்தெடுத்துள்ளார். மற்றும், மொகஞ்சொ தாரோ சின்னத்தை முதன்முதல் கண்டுபிடித்த ஆர். டி. பானர்ஜியின் கீழ், கள ஆய்வுப் பணியில் பயிற்சி பெற்ற சிறப்பு திரு. ராவிற்குரியதாகும்.

''சிந்துவெளி முத்திரைகள் வாணிகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டனவாகும். அவை சமயச்சார் புடைய தாயத்துகளும் அல்ல; அழகிற்காக அணிந்து கொள்ளப்பட்ட அணிகலன்களும் அல்ல'' என்பது இவருடைய துணிவாகும். லோதல் (Lothal) எனும்

---

[25] Sir Mortimer Wheeler, The Indus Civilization, CUP, Cambridge, 1968, pp. 107-130.

[26] K. N. Sastri, New Light on the Indus Civilization, Delhi, 1957, p- 43.

[27] B. B. Lal, 'Antiquity', Britain, March 1966.

[28] Sudhangshu Kumar Roy, Indus Script-An Appeal to the Orientalists, Calcutta, 1964, p. 42.

[29] Bankabehara Chakaravarti, Op. cit., pp. 23-48.

[30] Ibid., pp. 30, 35.

[31] S. K. Golegaonkar, Mohenjadaro Lipi, Samaj and Samskriti, Poona 1976, p. 32.

சிந்துவெளிப் பண்பாட்டுச் சின்னத்தில், இம் முடிவிற்கு வருவதற்குரிய சான்றுகள் பல கிடைத்துள்ளன என்று இவர் அறிவித்துள்ளார்.[32]

மேலும், வேதகால ஆரியர்களின் மூதாதையரே சிந்துவெளி மக்கள் என்பது இவருடைய நம்பிக்கை. ''பக(ன்), தாரக(ன்), அஷ்டக(ன்), பஞ்சக(ன்), லப(ன்), கர(ன்), (அப)ன், திரிக(ன்), அப்த(ன்), மன(ன்), தாச(ன்) எனும் பெயர்கள் சிந்துவெளி நாகரிகச் சின்னங்களில் கிடைத்துள்ள எழுத்து வடிவங்களால் தெரியவருகிறது. இவை அரசர்களையும் குறுநிலத் தலைவர்களையும் சுட்டுவனவாகும். இப் பெயர்கள் வேதகால தெய்வங்களுக்கும், முனிவர்களுக்கும், அசுரர்களுக்கும் வழங்கிய பெயர்களாகும் என்பர். ''மல்லக, மெலுகா, சப்த அபா, சப்த சிந்து, ஒட்டர எனும் பெயர்கள் வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் நாடுகளையும் குறிப்பனவாகும். ஏக(ம்), பஞ்சக(ம்), சப்தக(ம்) என்னும் பெயர்கள் பல்வேறு வகையான யாகங்களைச் சுட்டுகின்றன. மற்றும் க, ல, ஹ, தக்தி எனும் ஓரசைச் சொற்கள் தெய்வங்களின் பெயர்களாகத் தோன்றுகின்றன. இவை யாவற்றையும் ஒருங்கிணைத்து நோக்குகின்றபொழுது, சிந்துவெளி நாகரிகத்திற்குரிய மக்கள் வேதகால ஆரியரின் மூதாதையர் எனும் முடிவிற்கு வருவதே பொருத்தமாகத் தோன்றுகிறது''[33] என்று 1977-78 அளவில் திரு. ராவ் அறிவுறுத்தியுள்ளார்.

இவருடைய கருத்துப்படி, சிந்துவெளி எழுத்துகள் யாவும் ஒலியியல் அடிப்படையில் அமைக்கப்பட்ட எழுத்துகளாகும்; சித்திர எழுத்துகளிலிருந்து ஒலி வடிவ எழுத்துகள் அமைத்துக்கொள்ளப்பட்ட காலகட்டத்திற்கு இவை உரியனவாம். மூன்றே உயிர் எழுத்துகள்தான் சிந்துவெளி எழுத்துகளில் இடம் பெற்றுள்ளனவாம். இதே வகையான எழுத்துகள், ஒத்த ஒலிமதிப்புடன் எருசலேம் நகருக்கு அருகிலும், சினாய் தீபகற்பத்திலும் செமிடிக் மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளனவாம்.

திரு. ராவ் அவர்கள், சிந்துவெளி எழுத்துகள் கி.மு. 2500-1900-க்கும் இடையே, சிந்துவெளி மக்களால் உருவாக்கப்பட்டன என்பர். இந்த எழுத்துகளைச் செமிடிக் இன மக்கள் கி.மு. 1600-1500-க்கும் இடையில் இங்கிருந்து கடன் வாங்கிக் கொண்டனராம். இவற்றோடு புதிய உயிர்எழுத்துகளைச் சேர்த்து, கிரேக்கர்கள் தங்கள் நெடுங்கணக்கினை அமைத்துக்கொண்டதாகவும் திரு. ராவ் தெரிவித்துள்ளார்.[34] மற்றும் இவர்களுடைய கடன் வாங்கலுக்குக் காரணம், சிந்துவெளி மொழி இந்திய-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாக இருந்தமையேயாகும் என்பர்.

திரு. ஐராவதம் மகாதேவன் மொழியியல், எழுத்தியல், பண்பாட்டியல் சான்றுகளைக் கொண்டு இவருடைய கருத்துகளை மறுத்துள்ளார். ''திரு. ராவின் முடிவுகள் வியப்புக் கலந்த அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன. சிந்துவெளிக் குறியீடுகள் பயிலப்படும் நிகழ்வு நிலையைத் தற்சார்பற்ற முறையில் பகுத்தாராயாமல் செய்யப்பட்ட ஆய்வினால் வெளிப்பட்ட முடிவுகளாகவே இவை தோன்றுகின்றன'' என்பது திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களுடைய கருத்தாகும். ''திரு. ராவினுடைய ஆராய்ச்சி முறையில் குறை இல்லை. ஆனால், சிந்துவெளிக் குறியீடுகள் ஒலிவடிவ எழுத்துகள், அசைகளால் அமைந்தவை, அந்த எழுத்துகளால் அறியப்படும் மொழி வேதமொழியோடு தொடர்புடையவை எனும் அவருடைய முடிவுகள், எதிர்கால ஆராய்ச்சிகளால் புலனாகக்கூடிய உண்மைகளுக்கு முன்னால் நிலைத்துநிற்க இயலாது'' என்று நயமாகத் திரு. மகாதேவன் மறுத்துள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.[35]

சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழித் தொடர்புடையவை எனும் கருத்தினைக் கடந்த பதினைந்து ஆண்டுக்கால ஆராய்ச்சியின் பயனாகப் பின்னிஷ் மொழியாளரும், ருஷிய நாட்டு அறிஞர்களும், தமிழ்நாட்டு அறிஞர் ஒருவரும் கண்டுள்ளனர்.

இதுவரை நாம் கண்ட பல்வேறு அறிஞர்களின் கருத்துகளைத் தொகைவகைப் படுத்துகின்ற பொழுது, மூன்று உண்மைகள் புலனாகின்றன. தொடக்க காலத்திய மேற்குநாட்டு ஆராய்ச்சியாளர்களுள் ஓரிருவரைத் தவிர, மற்றவர்கள் யாவரும் ''சிந்துவெளி எழுத்துகள் ஆரியருக்கு முற்பட்ட — சம்ஸ்கிருத மொழியோடு தொடர்பு இல்லாத ஒரு மொழிக்கு உரியன'' என்று துணிந்துள்ளனர். இந்த எழுத்துகளின் வரிவடிவங்களில் இருந்தே, அசோகன் காலத்திய பிராமி எழுத்துகள் திரிந்து வளர்ந்து இருக்கவேண்டும் என்றும் இவர்கள் கருதுகின்றனர். 1935-க்குப் பிறகு ஒரு சில ஐரோப்பியரும், இந்திய (வட இந்திய) அறிஞர்களுள் பலரும் சிந்துவெளி எழுத்துகள் சம்ஸ்கிருத மொழியின் மூதாதையான ஆரியமொழி ஒன்றிற்குரியனவாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்துள்ளனர்.

இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில், சிந்துவெளி எழுத்துகள் தமிழின் மூல மொழியான பழந்திராவிட மொழிக்குரியவை எனும் கருத்தினை நிலைநாட்ட ஐரோப்பிய அறிஞர் சிலரும், தமிழ்நாட்டு அறிஞர் சிலரும் முயன்று வருவதைக் காணுகின்றோம்.

---

32 S. R. Rao, Lothal and the Indus Civilization, Bombay 1973, pp. 111-113.

33 Ibid., pp. 112-113.

34 Ibid., pp. 113-114.

35 Hindu, News paper, 23-4-1979.

தமிழகக் கனிமவளம்

டாக்டர் **ச. சரவணன்,** எம்.எஸ்ஸி., பிஎச்.டி.

இவ்வுலக நிலப்பரப்பின் வரலாற்றிற்கு அச்சாணி போன்ற பகுதியாகத் தமிழ் நிலப்பரப்பு அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். ஒன்பது கோள்களில் ஒன்றான ஞாலம் சுமார் 500 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் அன்றிருந்த ஞாயிற்றிடமிருந்து பிரிந்தது. தணல் குழம்பாக இருந்த இவ்வையகம் காலப்போக்கில் குளிர் வடைந்து இறுகத் தொடங்கியது. வையகத்தின் ஓயாச் சுழற்சியின் காரணமாக அடர்த்தி மிக்க இரும்பு, நிக்கல் போன்ற கனிப் பொருள்களின் தனிமங்களாலான அணுத்திரள்கள் கோளத்தின் மையப்பகுதியின் கருவாக அமையப்பெற்றன. இக் கருவைச்சுற்றி அடர்வு குறைந்த தனிமங்களைக் கொண்ட அணுத்திரள்கள் பல்வேறு அடுக்குகளாகத் திரண்டு, இறுகி, பல்வேறு வகையான பாறை களைத் தோற்றுவித்தன.

உலகம் தோன்றியதிலிருந்து இன்று வரை உள்ள காலத்தை ஐந்து பேரூழிகளாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு ஊழிக் காலத்திலும் நிலப்பரப்பு வெவ் வேறு வகையில் உருமாற்றமடைந்து காணப்பட்டது என்பதைச் சான்றுகள் மூலமாக ஆய்வாளர்கள் உறு திப்படுத்தியுள்ளனர். இப் பேரூழிக் காலங்களில் தான் தமிழகத்தின் கனிமங்கள் தோன்றின என் பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இத்தொன்மை மிக்க கன்னித் தமிழகத்தின் நிலப் பரப்பில் இயற்கை அன்னை பலவிதமான கனிமங் களை நாடு செழித்திடப் படைத்துள்ளாள். சிறிது காலத்திற்கு முன் வரை தமிழகத்தில் கனிம வளமே இல்லை என்றதொரு கூற்று நிலவியது. ஆனால், சமீப காலங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களின் பயனாக, பல்வேறு கனிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இன்று இக் கனிமங்கள் நம் நாட்டின் வளம் பெருக்குபவையாக உள்ளன.

தமிழ் நாட்டில் கிடைக்கும் முக்கிய கனிமங்களில் குறிப்பிடத்தக்கவை மாக்னசைட், இரும்பு, சுண் ணாம்புக்கல், தங்கம், அலுமினியம், செம்பு, ஜிப் சம், வெர்மிகுலைட், கிராபைட், பெல்ஸ்பார், கண் ணாடி மணல் போன்றவையாகும்.

இற்றைக்கு முன், ஏறத்தாழ 450 முதல் 60 கோடி ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தை ஆர்க் கேயன் பேரூழி என்று குறிப்பிடுகின்றனர். ஆர்க் கேயன் எனப்படும் காலப் பிரிவு தமிழகத்தின் நிலப் பரப்பைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கிய மானது. பொருளாதார முக்கியத்துவம்வாய்ந்த பல கனிமங்கள் இக்காலத்தில்தான் தோன்றின. தமிழ் நாட்டில், சேலத்தில் காணப்படும் மாக்னசைட் கனிப் பொருள்கள் உலகிலேயே மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. (இ)ட்யூனைட் எனப்படும் பாறையின் மாற்றம் காரணமாகத் தோன்றும் மாக்னசைட் ஆர்க்கேயன் காலப்பிரிவில் தோன்றிய தொன்மை மிக்க பாறைப் பிரிவாகும். இம் மாக்ன சைட் மிகவும் நல்ல தரம் வாய்ந்ததாகவும், மாசுப் பொருள்கள் மிகக் குறைவாகவும் பெற்று உள்ள தால் மிகவும் உயர்ந்த தரம் கொண்டதாக உள்ளது. சுமார் 30.4 மீட்டர் ஆழம் வரை காணக் கிடைக் கும் இவற்றின் இருப்பு 44 மிலியன் டன்கள் எனக்

கணக்கிடப்பட்டுள்ளது. மாக்னசைட் அதிக வெப்பம் தாங்கும் பண்பு கொண்டதால் இதனைக் கொண்டு வெப்பந்தாங்கிக் கற்களையும், சாணைக் கற்களையும் தயாரிப்பதுடன் மற்றும் பல்வேறு பொருள்களாகப் பிற துறைகளிலும் பயன்படுத்துகின்றனர்.

இதே போன்று ஆர்க்கேயன் காலப் பிரிவில் தோன்றிய பிற கனிமங்களில் குறிப்பிடத்தக்கவை இரும்புக் கனியும் சுண்ணாம்புக் கற்களும் ஆகும்.

சேலம் மாவட்டத்தில், கஞ்சமலை, கொல்லி மலை, சித்தேரி, கோதுமலை ஆகிய இடங்களிலும், வட ஆர்க்காடு திருவண்ணாமலையை அடுத்துள்ள கௌத்திமலை, வேதியப்பன்மலைக் குன்றுகளிலும், தர்மபுரி மாவட்டத்தில் தீர்த்தமலையிலும் இரும்புக் கனி அதிக அளவில் காணப்படுகிறது. இப் பகுதிகளில் காணப்படும் இரும்பு, படிவுப் படுகைகளாகத் தோற்றுவிக்கப்பட்டன. கஞ்சமலைப்பகுதியில் உள்ள பாறைகளின் வயது ஏறத்தாழ 450 கோடி ஆண்டுகள் என்பது ஆய்வுகள்மூலம் அறியப் பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட இடங்களில் காணப் படும் இரும்பு மாக்னடைட்–குவார்ட்சைட் வகையைச் சார்ந்தது. தமிழகத்தில் 35 முதல் 40 சதவீதம் வரை இரும்புச்சத்துக் கொண்ட இரும்புக் கனியின் இருப்பு சுமார் 610 மிலியன் டன்கள் என அளவிடப்பட்டுள்ளது. கஞ்சமலையின் இரும்பினைப் பயன்படுத்தி, சேலத்தில், எஃகு தயாரிக்க ஆலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இடங்களைத் தவிர, கோவை மாவட்டம் மற்றும் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், தென்ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களிலும் இரும்புப் படிவுகள் உள்ளன.

சுண்ணாம்புக் கல்

ஐந்து வகை சுண்ணாம்புக் கற்கள் தமிழ்நாட்டில் கிடைக்கின்றன. அவை: 1. படிகவய சுண்ணாம்புக் கல்; 2. கடல் வண்டலில் தோன்றிய சுண்ணாம்புக் கல்; 3. பவள சுண்ணாம்புக் கல்; 4. சுக்கான் பாறை; 5. கிளிஞ்சல் சுண்ணாம்புக் கல்.

சேலம், திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மாவட்டங்களில் படிகவய சுண்ணாம்புக் கல் அதிகம் கிடைக்கிறது. சுமார் 350 மிலியன் டன்கள் இருப்பாக உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கடல் வண்டல் சுண்ணாம்புக் கல் திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில் 25 மிலியன் டன் வரை உள்ளது.

தூத்துக்குடி, இராமேசுவரம் தீவுகளுக்கு இடையிலுள்ள மன்னார் வளைகுடாவில் காணப்படும் தீவுகளில் பவளக் கொடிகளில் சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்றன. சென்னை நகரை அடுத்த புளிகாடு ஏரியிலும், கன்யாகுமரி மாவட்டத்திலும் கிளிஞ்சல்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. இவற்றைச் சேகரித்துச் சுட்டு, சுண்ணாம்பு தயாரிக்கின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளில் ஆறு படிகவய சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு சிமெண்ட் தயாரிக்கப்படுகின்றன.

தங்கம்

இந்தியாவில் முதன்முதலாக வெட்டியெடுத்துப் பயன்படுத்தப்பட்ட உலோகம் தங்கம்தான். தென்னிந்தியாவில் பொற்படிவங்களை வெட்டியெடுக்கும் பணியில் விஜயநகர மன்னர் காலத்தில் மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

தங்கம், பிற கனிமங்களான வெள்ளி போன்றவற்றுடனும், குவார்ட்ஸ் வகைக் கொடிகளிலும் இயல் தங்கமாகக் காணப்படுகின்றது. காற்று, மழை, வெப்பம் போன்றவற்றால் தாக்கப்படும் தங்கம் கொண்ட பாறைகள் சிதைவுறும்போது தங்கம் விடுபட்டு, நீரால் அடித்துச் செல்லப்பட்டு, மணலுடன் கலந்து ஆற்றுப் படுகைகளில் காணப் படும். இதனை அரித்து, சலித்து எடுக்கின்றனர்.

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்திலுள்ள வைநாடு தங்கச் சுரங்கங்களில் 1890ஆம் ஆண்டுகளில் தங்கம் வெட்டி எடுக்கப் பட்டு வந்தது. ஆனால், தங்கம் மிகக் குறைந்த அளவு கிடைக்கப்பெற்றதால் வெட்டி எடுக்கும் பணி கைவிடப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி மலைத் தொடரிலும், கோவை மாவட்டம் கோபிசெட்டிப் பாளையத்திலுள்ள பென்சிபெட்டா மலைத்தொடரிலும், தர்மபுரி, சேலம் மாவட்டங்களின் சில பகுதிகளிலும் தங்கம் கிடைப்பதாக அறியப்படுகிறது.

அலுமினியம்

அன்றாட வாழ்வில் அதிகம் பயன்படுத்தப்படும் உலோகங்களில் குறிப்பிடக்கூடியது அலுமினியம் ஆகும். அலுமினியத்தின் பயன்குறித்து நாம் அனைவரும் அறிவோம். அலுமினியம் தனித்துக் கிடைப்பதில்லை. இது நீரடர்ந்த அலுமினியம் ஆக்ஸைட் வடிவில் வெண்பழுப்பு, இளஞ்சிவப்பு நிறங்களில் பாக்சைட் என்ற பெயரால் குறிப்பிடப்படும் கனிமத்தில் இருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.

சேலத்தில் சேர்வராயன் மலைத் தொடர்களில் $5\frac{1}{2}$ மிலியன் டன் பாக்சைட் படிவங்களும், கோடைக்கானல், பழனி மலைத்தொடர்களில் சுமார் $2\frac{1}{2}$ மிலியன் டன் பாக்சைட் படிவங்களும் இருப்பதாக அளவிடப்பட்டுள்ளது. இவற்றில் 45 முதல் 52 சதவிகிதம் வரை அலுமினியம் உள்ளது என்பதனை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

செம்பு

பண்டைக்காலத்திலிருந்தே அறியப்பட்டு, பயன் படுத்தப்பட்ட உலோகங்களில் குறிப்பிடத்தக்க ஓர் உலோகம் செம்பு ஆகும். இது மென்மையான உலோகமாகையால் எவ்வித உருவும் வடிவும் ஏற்கும் ஆற்றல் படைத்தது. பிற உலோகங்களுடன் சேர்ந்தே செம்பு அதிகம் காணப்படுகிறது. பச்சை நிற மேலக்கைட், நீலநிற அசூரைட், தங்க மஞ்சள் நிற சால்கோபைரைட் போன்ற கனிப் பொருள் களில் இருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தி லுள்ள மாமண்டூர் அருகில் பண்டைக்காலச் சுரங் கங்கள் காணப்படும் இடத்தில் செம்பு (ஈயம், துத்தநாகம், வெள்ளி ஆகியவற்றுடன் சேர்ந்து) உள்ளதைக் கண்டறிந்துள்ளனர். இங்கு ஏறக் குறைய 0.91 மிலியன் டன் செம்பு உள்ளது எனக் கணக்கிட்டுள்ளனர். மதுரை மாவட்டம் ஆலங் குளம் பகுதியில் சுமார் 0.36 மிலியன் டன் செம்பு உள்ளதாகக் கண்டறியப்பட்டு உள்ளது.

களிமண்

சுமார் 19.5 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த காலத்தை ஜுராசிக் ஊழி என்று குறிப்பிடு கின்றனர். இவ்வூழியின்போது கோண்டுவானா என்றழைக்கப்படும் நிலப்பரப்பு இருந்தது (இந் தியா, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா, அன் டார்டிகா, தென் ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் ஆகி யவை இணைந்திருந்த பெரு நிலப்பரப்பு). அக் காலத்தில் தோன்றிய களிமண் படிவுகளை கோண்டு வானா படிவுகள் என்று அழைக்கின்றனர். இக் களி மண் நல்ல வெண்மை நிறம் கொண்டது. திருச்சிக்கு அருகில் வெட்டியெடுக்கப்படும் களிமண் கோண்டு வானா வகையைச் சார்ந்தது ஆகும். திருச்சியைத் தவிர, செங்கை, நீலகிரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய இடங்களிலும் இவ்வகைக் களிமண் கிடைக்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் வெள்ளைக் களிமண் இருப்பு 4 மிலியன் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதைத் தவிர, சுமார் 25.33 மிலியன் டன்கள் வெப்பம் தாங்கும் களி மண்ணும் பல்வேறு பகுதி களில் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பீங் கான் சாதனங்கள், ஒப்பனைப் பொருள்கள், மருந்து வகைகள் தயாரிக்கவும் மற்றும் வெப்பம் தாங்கும் உட்காப்பு அணிகளாக அனல் உலைகளிலும் களிமண் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

ஜிப்சம்

தமிழ்நாட்டில் கிடைக்கும் ஜிப்சம் கனிமங் களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை: 1 முற்காலத்தில் (கிரிடேசியஸ் ஊழி) கடல் கொண்டிருந்த பகுதி வற்றியதால் தோன்றியவை; 2. ஆற்று வடிகால் பகுதிகளில் கரிசல் மண்ணோடு கலந்த படிவங்கள்; 3. உப்பளங்களில் உப்புத் தயாரிப்பின்போது கிடைக்கும் துணைப் பொருள்.

ஜிப்சம் அதிக அளவில் வெண்மையானதாகவும், அரிதாக நிறமற்றதாகவும் கிடைக்கிறது. இது மிகவும் மென்மையான கனிமமாகும். திருச்சி மாவட் டத்தின் வடக்கே உள்ள சித்தளை, தெற்கே தாப் பாய், பெரிய குறுக்கை ஆகிய இடங்களுக்கு இடைப் பட்ட பகுதியில் 15½மிலியன் டன் அளவிற்கு ஜிப்சம் கிடைக்கக்கூடும் என அளவிடப்பட்டுள்ளது. கோவை மாவட்டம் பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, தர்மபுரி மாவட்டம் ஆகிய இடங்களில் 8 லட்சம் டன் அளவும், திருநெல்வேலி மாவட்டத் தில் கோவில்பட்டி, சங்கரன்கோயில் ஆகிய பகுதி களில் 68 ஆயிரம் டன்னும், இராமநாதபுரம் மாவட் டம் அருப்புக்கோட்டை, சாத்தூர் பகுதிகளில் 24 ஆயிரம் டன்னும் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள் ளது. இந்தியாவில் வெட்டியெடுக்கப்படும் ஜிப்சத் தின் மொத்த அளவில் பெரும் பகுதி தமிழகத்தி லேயே வெட்டியெடுக்கப்படுகிறது.

கிராபைட்

மிகவும் மென்மையானதும், மிருதுவானதும், கரியின் இயல்பான வடிவில் ஒன்றானதுமான கிராபைட் உயர் வெப்பத்தைத் தாங்கும் திறன் கொண்டது.

இராமநாதபுர மாவட்டத்தில் சிவகங்கைக்கு அரு கில் கிராபைட் படிவங்கள் சுமார் 5 கிலோமீட்டர் தூரத்திற்குத் தொடர்ச்சியாக உள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் இருப்பு சுமார் 2.6 இலட்சம் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று மதுரை மாவட்டத்தில் திருமங்கலத் திற்கு அருகில் கிராபைட் 17,300 டன் அளவிற்கு உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. வட ஆர்க் காட்டில் புதுப்பாளையம், நெல்லை மாவட்டம் குறிஞ்சிப்பாளையம் ஆகிய பகுதிகளிலும் சிறிதளவு கிராபைட் காணப்படுகிறது.

கிராபைட், மின் உலைகளில் மின்கடத்தியாகவும் அணுசக்தித் துறையிலும், (இ)டைனமோக்களில் தூரிகைகளாகவும், வெப்ப கலங்கள் தயாரிக்கவும் நாம் எழுதுகின்ற எழுதுகோல் தயாரிக்கவும் பயன் படுத்தப்படுகிறது.

வெர்மிகுலைட்

அபிரகத்தின் ஒரு வகையையே வெர்மிகுலைட் என்று குறிப்பிடுகின்றனர். இது மற்ற அபிரகங் களைக் காட்டிலும் அதிக அளவில் வெப்பத்தால்

விரிவடையக்கூடியதாகும். விரிவடையும்போது பொன் நிறமாக மாறும். இதில் உள்ள நீர், வெப்பத்தால் ஆவியாகி, ஏடு ஏடாக உள்ள அமைப்பின் ஊடே விரவிச் செல்வதால் விரிவடைந்து பருத்த உருக் கொள்கிறது. வெர்மிகுலைட், வெப்பந்தாங்கிக் கூரைகள், நீரை வெப்பமாக்கும் கருவிகள், குளிர்பதன இயக்கப் பொறி போன்றவைகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. மிகவும் இலேசான வெர்மிகுலைட் வெப்பம் மற்றும் ஒலி காப்புத் தன்மைகளும் பெற்றதாகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூருக்கு அருகில் உள்ள செவ்வாத்தூர், எளவம்பட்டி ஆகிய இடங்களில் சுமார் 30 மீட்டர் ஆழம் வரை வெர்மிகுலைட் கிடைக்கிறது. மொத்த அளவு 3.5 லட்சம் டன் என அளவிடப்பட்டுள்ளது.

பெல்ஸ்பார்

பீங்கான் போன்ற பொருள்கள் செய்யத் தேவைப்படும் மூலப் பொருள்களில் பெல்ஸ்பார் கனிமமும் ஒன்றாகும். சாணைக்கற்கள், கட்டடங்களில் பயனாகும் மேல்பூச்சு, கண்ணாடித் தொழில் போன்றவற்றில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

நல்லவகை பெல்ஸ்பார் திருச்சி மாவட்டத்திலுள்ள மணப்பாறை, கடவூர், ஓடையாப்பட்டி, சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு, இடைப்பாடி, ஓமலூர், ஜலகண்டபுரம், காளிப்பட்டி, சங்ககிரி போன்ற இடங்களிலும், கோவை மாவட்டத்திலுள்ள காட்டனுமலை, பசுமணி, மங்குலிமேட்டுப்பவி, பொன்னாங்கன்னி ஆகிய இடங்களிலும் கிடைக்கின்றது. திருச்சி மாவட்டத்தில் மட்டும் 0.46 மிலியன் டன்களும், சேலத்தில் 0.15 மிலியன் டன்களும் உள்ளதாகக் கணக்கிட்டுள்ளனர்.

பழுப்பு நிலக்கரி

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள நெய்வேலியில் கிடைக்கும் லிக்னைட் எனப்படும் பழுப்பு நிலக்கரி, மூன்றாங்காற் பேருழியின் பிலையோசின் ஊழியில் தோன்றியதாகும். பழுப்பு நிலக்கரிப் படிவுகள் இன்று தமிழகத்தில் பல்வேறு தொழில்கள் வளர அடிப்படையாக அமைந்துள்ளது என்பது நாம் அறிந்த ஒன்றுதான். மின் உற்பத்திக்கும், உரத் தொழிலுக்கும், மற்றும் பல்வேறு வகையான பொருள்கள் செய்யவும் இந்நிலக்கரி பயன்படுத்தப்படுகிறது.

கண்ணாடி மணல்

கண்ணாடியின் பயன் குறித்து நாம் அனைவரும் அறிவோம். மணலில் உள்ள சிலிகா எனப்படும் தனிமம் கண்ணாடி தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருள்களில் ஒன்றாகும். கண்ணாடி தயாரிக்க உகந்த மணல் தென் ஆர்க்காடு மாவட்டக் கடற்கரை ஓரங்களிலும், என்னூருக்கு அருகிலும் கிடைக்கிறது.

மேற் குறிப்பிட்டவை தவிர, ஆபரணக்கற்கள், அபிரகம், மாலிப்டினைட், குருந்தக்கல், கொலம்பைட்-டான்டலைட், கல்நார், பேரைட், குரோமைட், பாஸ்பேட், கந்தகம், தோரியம், செலஸ்டைட் போன்ற கனிமங்கள் சிறு அளவில் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் கிடைப்பதாக அறியப்பட்டுள்ளது.

கரும்பாறைகள்

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக அதிகம் பேசப்பட்டும், வணிகத்துறையில் அந்நியச் செலாவணியை நாட்டிற்கு அதிகம் ஈட்டித் தருவதுமான ஒரு பாறை கரும்பாறையாகும். 'டோலரைட்' என்று நிலப்பொதி ஆய்வாளர்களால் அழைக்கப்படும் இது அதிக அளவில் ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இப் பாறைகள் அதிகக் கடினத்தன்மை கொண்டவை. காற்று, மழை, வெயில் இவற்றால் எளிதில் சிதைவுறுவதில்லை. இவை உயர்ந்த மெருகு பெறும் தன்மை கொண்டவையாகையால் கட்டடங்களின் மேல் விமானங்கள், தரைப் பதிப்புகள், சுவர் பதிப்புகள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. கரும்பாறைகளின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு ஏறத்தாழ 80 சதவீதம் ஆகும்.

தரம் வாய்ந்த கரும்பாறைகள் தமிழ் நாட்டில் தென் ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், கோயமுத்தூர், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் வெட்டியெடுக்கப்படுகின்றன. இவற்றில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலுக்காவிலுள்ள குன்னம் கிராமத்தில் கிடைக்கும் கரும்பாறை உலகத்தின் மிகச் சிறந்த கரும்பாறை வகைகளில் ஒன்றாகும்.

அறிவியலில் அதிக முன்னேற்றத்தைப் பெற்றுள்ள இந்நாளில், நிலப்பொதி ஆய்வாளர்களின் துணை கொண்டு மேலும் பல அரிய கனிமப் படிவங்களைக் கண்டறிந்து, செல்வம் கொழிக்கும் மாநிலமாகத் தமிழகம் விரைவில் மாறும் என்பதில் ஐயமில்லை.



டாக்டர் வ. சுப. மாணிக்கம்

திருக்குறள் காலத்தால் ஈராயிரம் ஆண்டுப் பழமைப்பட்டது என்றாலும் கருத்தாற் பழமையுடையதா? ஆம், ஓரளவு கருத்தாலும் பழமைவாடை கொண்டது. நால்வகை மதில் பற்றிக் கூறும் அரண் அதிகாரச் செய்திகளும் போர் குறித்த களச் செய்திகளும் வழக்கு வீழ்ந்தன என்றே ஒப்ப வேண்டும்.

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.'' (774)

''விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்
திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.'' (775)

என வரும் வேல் மறப்போர் இன்றில்லை. ''குன்றேறி யானைப்போர் கண்டற்றால்'' (758) என்ற மறக்காட்சியும் இன்றில்லை.

பழமை எவ்வளவு

காலங்கடந்த அறநூல் என்று போற்றினாலும், திருக்குறளில் பொச்சாப்பு, ஒருவந்தம், புத்தேளிர், மாண்ட, முதுக்குறைவு, உஞற்றுதல் போன்ற சொற் பழமைகள் உண்டு; அருங்கேடன், நன்னீரை, நிறை நீர, எனல் போன்ற இலக்கண வீழ்ச்சிகள் உண்டு; யாருள்ளித் தும்மினீர்; இருட்டறையில் ஏதில் பிணம் தழுவல், சிவிகைபொறுத்தான், அவிசொரிந்து ஆயிரம் வேட்டல் போன்ற மரபு மறைவுகள் உண்டு. இவ்வாறு எடுத்துக்காட்டினும், இரண்டாயிரம் ஆண்டுத் தொன்மை வாய்ந்த திருக்குறளில் பழமைகளும் வீழ்ச்சிகளும் ஓரிரு விழுக்காட்டிற்குமேல் இல்லை என்பதையும் ஒப்பவேண்டும். இதற்குக் காரணம் வள்ளுவர்காலத் தமிழ்மொழி வழக்காயினும் செய்யுளாயினும் செந்தமிழாக இருந்த நிலையாகும். அதனாலன்றோ தொல்காப்பியமும் சங்கப் பனுவல்களும் இன்றும் விளங்குவனவாக உள. அவை பிறப்பாற் காலப்பழமை படிந்தனவேயன்றி மொழி நடையால் இன்றும் சாலப் புதுமை தவழ்வன. இடைக்காலத்துத் தோன்றிய மயக்குநடைத் தமிழ் நூல்களோடு ஒப்பு நோக்கின், இவ்வுண்மை வெளிப்படையாகும். பழமையான பிறமொழி உலக இலக்கியங்களோடு ஒத்திடினும், நம் தொன்மை இலக்கியங்களின் புதுமைப் பெருவாழ்வு புலப்படும். உலகிற் சிறந்த தொல்லிலக்கியங்கள் தம் மொழியைச் சாகடித்தன; நம் தொன்னூல்களோ எனின், கம்பர் உணர்ந்து பாடியதுபோலத் தமிழ்மொழியை என்றுமுள மொழியாக்கின.

உரைப்பொடிகள்

திருக்குறளுக்குப் பலவுரைகள் வந்துள்ளன; காலந்தோறும் புதுவுரைகள் புறப்படுகின்றன. சில குறள்களுக்கு உரைவேற்றுமைகள் பல்கியுள. பாட வேறுபாட்டாலும், புணர்ச்சி முறையாலும், கொள்கைப் பிடிப்பாலும், தொகையாலும், இலக்கணத் தன்மையாலும், சொற்பொருளாலும், கால இடையீட்டாலும், புலமை மிகையாலும், புலமைக் குறையாலும், நயப்பாட்டாலும், பொருள் வேற்றுமைகள் எழுந்துள.

''இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.'' (223)

என்ற குறளுக்கு எழுந்த உரைகளை நோக்கின் நயவுணர்வு தவிர், பொருளுணர்வில் வேறுபாடில்லை என்பது வெளிப்படை. வேற்றுமை யுரைகளாகப் பரந்துகாணப்படும் இடங்களையெல்லாம் உராய்ந்து பார்ப்பின் அவ்வேற்றுமைகளி பல காரமிலாப் பொடிபோல உரைப்பொடிகளாக வறிதுபடுவதைக் காணலாம்.

''விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.'' (82)

''அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.'' (163)

சாவா மருந்தாகிய அமிழ்தமானாலும் தனித்து உண்ணக்கூடாது என்ற கருத்தும், ஒருவன் தனித்துண்ணுதலே சாவா மருந்து ஆகும் என்ற கருத்தும் பெரிய வேற்றுமைகளா? அறனும் ஆக்கமும் என்ற உம்மைத்தொகையும், அறத்தினால் ஆகிய ஆக்கம் என்ற மூன்றாம் வேற்றுமைத்தொகையும் என்ன பொருள் வேற்றுமையைச் செய்துவிட்டன?

''நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.'' (605)

இக் குறளில் காமக் கலன் என்பதற்கு விரும்பி யேறும் மரக்கலம் எனவும், விரும்பிப் பூணும் அணிகலம் எனவும் பொருள் வேற்றுமை உண்டு. இவை கல்லும் பல்லும் போல முரண்பட்ட வேற்றுமைகள் அல்லவே. இவ்வுரைகள் மூலப்பொருளை மறையா.

''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.'' (338)

குடம்பை என்ற சொல்லுக்குப் பொருள் முட்டை என்பார் பரிமேலழகர்; கூடு என்பார் மணக்குடவர். இவற்றையெல்லாம் உரைக்கிளைகள் என்று கொள்ளவேண்டுமேயன்றி மூலத்தை மறைக்கும் உரைத்திரைகள் அல்லது உரைமூடிகள் என்று பெரிதுபடுத்தலாகாது.

கருத்துப் பூசல்கள்

திருக்குறளின் ஆசிரியர், காலம், அமைப்புப் பற்றித் தோன்றிய, தோன்றி வளர்ந்துவரும் ஆய்வுப் பூசல்கள் எண்ணிறந்தன. திருக்குறள் ஒருவர் செய்த தனி நூலா, தொகுப்பு நூலா எனவும், பாயிரம் எனப்படும் முதல் நான்கு அதிகாரங்களும் திருக்குறளுக்கு உரியனவா எனவும், காமத்துப் பாலை வள்ளுவர் எழுதினரா எனவும், அதிகாரத் தலைப்புகளும் அதிகார வைப்பு முறையும் அதிகாரத்துள் குறள் வைப்பு முறையும் செய்தவர் யார் எனவும் கருத்தோட்டங்கள் உள. கடவுள், தெய்வம், வினை, உயிர், இம்மை, மறுமை, நரகம், வீடு, பிறப்பு, இறப்பு, துறவு, ஊழ் முதலான கொள்கைகள்பற்றியும், சாதி, வேள்வி என்றின்ன ஆரிய வேத நாகரிகக் கலப்புப்பற்றியும், பிறப்பொழுக்கம், அந்தணர், பார்ப்பான், எழுபிறப்பு, அடியளந்தான், இந்திரன், அறுதொழிலோர் நூல், ஆதிபகவன், மலர்மிசை யேகினான் என்றிவற்றின் பொருள்பற்றியும் கருத்துப் பின்னல்கள் உள.

சொற்பழமை, இலக்கண வீழ்ச்சி, மரபு மாற்றம், உரைப்பன்மை, உரை வேற்றுமை, உரைப்பொடிகள், கொள்கைப் பூசல்கள், கருத்து மோதல்கள், கருத்துப் பிறழ்வுகள் என்றாங்குப் பல சிக்கல்கள் திருக்குறட்கு வந்துகொண்டிருக்கின்றன எனவும், இந் இருட்டிரைகளை அகற்றி எல்லாரும் ஒப்ப விளக்கந் தந்தாலல்லது திருக்குறளில் தெளிவுபிறவாது எனவும், கண்டாங்கும் பட்டாங்கும் கற்றாரும் ஆய்வாளரும் மொழியாளரும் குறைபரப்பி வருகின்றனர். இவற்றைத் தெளிவிக்க வேண்டும்; வள்ளுவர் நெஞ்சம் நேர்முகமாகத் தெரிய வேண்டும்; உரை வேற்றுமை குறைய வேண்டும் என்ற வேணவா எனக்கும் நிரம்பவுண்டு. இந்நோக்கில் ஆராய்ச்சிகள் நெறிப்படல் வேண்டும் என்ற ஆராவிருப்பம் குறளன்பர்க்கெல்லாம் வேண்டும்; எனினும் அழுந்திய ஆழமான ஓர் உண்மையை வலியுறுத்துவதற்காகவே இக் கட்டுரையை எழுதுகின்றேன். சிலர் நினைப்பதுபோலக் கருத்துப் போர்கள் பலவிருப்பினும், மேலும் வளரினுங்கூட, அவையெல்லாம் திருக்குறளின் அடிப்படை அறங்களையும் செயலுக்குரிய வாழ்க்கை வள்ளுவங்களையும் தில்லை மறைபோலத் திரையிட்டு மறைக்கவில்லை; குறள் யாப்பு என்ற ஈரடிப் பாத்தியில் அறநெறிப் பயிர்கள் வெற்றிக்கொடி போல வெளிப்படையாகவே இயல்புக் கண்ணாளர்க்கும் காட்சி தந்துகொண்டிருக்கின்றன. திருக்குறளில் வள்ளுவரின் எண்ணங்கள் வெளிப்படை; அவற்றைக் கற்பதற்கும் கேட்பதற்கும் இயல்பான வழக்குத் தமிழறிவு போதும். இதனால் உரைகளும் விளக்கங்களும் வேண்டா என்பது கருத்தன்று. அவை நம் புலமையையும் அறிவையும் பெருக்குவன. இதுவே அவற்றின் பெரும் பயன். அவை செயலைத் தூண்டா; செயலார்வத்தைப் பெருக்கா; நெஞ்சினை நேரடியாக இயக்கா; வாழ்வினை உணர்ச்சிப்படுத்தா; உள்ளத்துள் ஊடுருவிப் பாயா.

குறள் வெளிப்படை

திருவள்ளுவர் தம் நூலின் விளக்கத்துக்குப் பிற்கால உரைகளை எதிர்பார்த்தோ கட்டுரைகளை எதிர்பார்த்தோ எழுதவில்லை. தம் நூல் தானே

விளங்கும். விளங்க வேண்டும் என்ற வெளிப்படை நடையிற்றான் யாத்துள்ளார். மூலக்குறள்களைப் பன்முறை படிக்கப் படிக்க வள்ளுவர் நெஞ்சுக்கும் நம் நெஞ்சுக்கும் உணர்ச்சித் தொடர்பு நெருங்கு வதை உணர்கின்றோம்; குறட்சொற்கள் உயிர்நடை பெற்று நம் உள்ளத்திற் பாய்வதை உணர் கின்றோம்; உரைகள், விளக்கங்கள் என்னும் தீண்டாமைகளைக் கடந்து குறள் வடிவமாக இருக்கும் திருவள்ளுவரின் நெஞ்சத்தினை நம் செயல் நெஞ்சத்தால் தீண்டுகின்றோம். 'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்' என்பது போல மூலக் குறளைத் தீண்டல் வாழ்வின்பம் ஆகும்.

உரையின்றி, விளக்கமின்றித் திருக்குறளின் மூலங் களை அறிந்துகொள்ள இயலாது என்ற ஒரு பெருந் தவறான கருத்து எப்படியோ மக்களுலகிற் பரவிக் கிடக்கின்றது. இது உரையின் குறையன்று; விளக் கத்தின் குறையன்று; கல்விமுறையின் குறையாகும். காலிருப்பினும் செருப்பின்றி நடக்கவியலாது என்ற கருத்து இன்று இல்லையா? நடக்கக்கூடாது என்ற கருத்துக்கூட இன்று பரவக் காண்கின் றோமே.

திருக்குறள் தோன்றியகாலத்து உரையும் உடன் தோன்றவில்லை. ஆயிரம் ஆண்டுகள் கழித்து தான் உரை பெருக்கெடுத்தது. மூலத்தைக் கற்கும் முறை வேறு; உரைகளைக் கற்கும் முறை வேறு. மூலத்தின் பயன் வேறு; உரையின் பயன் வேறு. மூலத்தைக் கற்கும்போது வள்ளுவரை நினைக்கின் றோம்; உரைகளைக் கற்கும்போது உரையாசிரியர் களை நினைக்கின்றோம். குறள் மூலத்தின் பயன் செயல்; குறளுரையின் பயன் விளக்கம். ஆதலின், வாழ்வு வேண்டின், செயலியக்கம் வேண்டின், வள் ளுவர்தம் உறவு வேண்டின், திருக்குறள் மூலங்க ளோடுதான் நமக்கு முதலுறவு வேண்டும். மூலக் குறள்கள் உரைகளைக் காட்டிலும் ஏன், உரைக்கு உரையைக் காட்டிலும் வெளிப்படை.

''தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.'' (7)

''நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.'' (108)

''சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.'' (200)

''எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.'' (299)

''எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.'' (467)

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.'' (666)

''கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம் புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.'' (1101)

இவை போலும் நூற்றுக்கணக்கான குறட்பாக்கள் தம் கருத்துகளை இருட்படை செய்யாமல் ஒளிப் படுத்தி நிற்கின்றன. இவற்றின் பொருளை அறி தற்கும் மேற்கொள்ளற்கும் உரைகள் வேண்டுமா? எழுத்தறிவில்லாருங்கூடக் கேள்வியளவில் இவற்றின் கருத்துகளை உணர்ந்து கொள்ளமாட்டார்களா? 'கற்றிலனாயினும் கேட்க' எனவும், 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' எனவும் அறிவுப்பறை யறைந்த வள்ளுவர் கல்லாரும் கேட்டு விளங்கிக் கொள்ளுமாறுதானே தம் அறநூலை வெளிப்படை நடையில் இயல்பாக எளிதாக யாத்திருப்பார். ஆத லின், வாழ்வும் உணர்ச்சியும் செயலும் வளமும் விரும்பும் தமிழ் மக்கள் திருக்குறளை உரைகளி னின்றும் விடுதலைப்படுத்தி மூலக்குறள்களை நேரே தீண்டுவார்களாக. நீரை உறிஞ்சிவழிக் குடிப்பதைக் காட்டிலும் வாய்வைத்துக் குடிப் பதனால் வரும் சுவை பெருஞ்சுவையல்லவா?





வட்டமாய் உன்கழுத்தில் — ஆரமதை
இட்டவர் ஆரடியோ?

தேமலர்ச் சோலையிலே—வாசமெழு
    தென்றல் உலாவையிலே
மாமண மங்கையைப்போல்—பெரிது
    மகிழ்ந்துநீ தங்கினையோ?

பச்சிலையும் கனியும்—நிறைந்து
    படர்ந்து வளர்ஆலின்
உச்சியிற் சென்றிருந்தால்—எப்படியான்
    உன்னையும் கண்டிடுவேன்?

வட்டமாய் உன்கழுத்தில்—ஒருநாளும்
    வாடாத ஆரமதை
இட்டவர் ஆரடியோ?—எனக்கும்
    இயம்புவையோ? கிளியே!

மாணிக்க மூக்கழகும்—மரகத
    வர்ண வடிவழகும்
காணக்கண் ணாயிரந்தான்—இருப்பினும்
    கண்டு முடிந்திடுமோ?

சாய்ந்து தலைவணங்கி—இனிய
    தமிழைநீ கற்குமுறை
ஆய்ந்த புலவருமே—எழுதி
    அயர்ந்துகை சோர்வார் அம்மா!

— கவிமணி தேசிகவிநாயகனார்

விளங்கும். விளங்க வேண்டும் என்ற வெளிப்படை நடையிற்றான் யாத்துள்ளார். மூலக்குறள்களைப் பன்முறை படிக்கப் படிக்க வள்ளுவர் நெஞ்சுக்கும் நம் நெஞ்சுக்கும் உணர்ச்சித் தொடர்பு நெருங்குவதை உணர்கின்றோம்; குறட்சொற்கள் உயிர்நடை பெற்று நம் உள்ளத்திற் பாய்வதை உணர்கின்றோம்; உரைகள், விளக்கங்கள் என்னும் தீண்டாமைகளைக் கடந்து குறள் வடிவமாக இருக்கும் திருவள்ளுவரின் [illegible] செயல் நெஞ்சத்தால் தீண்டுகின்றோம். 'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்' என்பது போல மூலக் குறளைத் தீண்டல் வாழ்வின்பம் ஆகும்.

உரையின்றி, விளக்கமின்றித் திருக்குறளின் மூலங்களை அறிந்துகொள்ள இயலாது என்ற ஒரு பெருந் தவறான கருத்து எப்படியோ ம[illegible] கிடக்கின்றது. இது உரையின் குறையன்று; விளக்கத்தின் குறையன்று; கல்விமுறையின் குறையாகும். காலிருப்பினும் செருப்பின்றி நடக்கவியலாது என்ற கருத்து இன்று இல்லையா? நட[illegible] என்ற கருத்துக்கூட இன்று பரவக் காண்கின்றோமே.

திருக்குறள் தோன்றியகாலத்து உ[illegible] தோன்றவில்லை. ஆயிரம் ஆண்டுகள் கழித்து எழு[illegible] தான் உரை பெருக்கெடுத்தது. [illegible] முறை வேறு; உரைகளைக் கற்கும் முறை வேறு. மூலத்தின் பயன் வேறு; உரையின் பயன் வேறு. [illegible] மூலத்தைக் கற்கும்போது வள்ளுவ[illegible] றோம்; உரைகளைக் கற்கும்போது [illegible] கின்றோம். குறள் மூலத்தின் பயன் [illegible] செயல்; குறளுரையின் பயன் விளக்கம். ஆதலின், [illegible] வாழ்வு வேண்டின், செயலியக்கம் வேண்டின், வள்ளுவர்தம் உறவு வேண்டின், திருக்குறள் மூ[illegible]ளோடுதான் நமக்கு முதலுறவு வேண்டும். [illegible] குறள்கள் உரைகளைக் காட்டிலும் ஏன், உரைக்கு [illegible] உரையைக் காட்டிலும் வெளிப்படை.

''தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.'' (7)

''நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.'' (108)

''சொல்லுக் சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.'' (200)

''எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.'' (299)

''எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.'' (467)

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.'' (666)

''கண்டுகேட் டுண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.'' (1101)

[illegible]யும் நூற்றுக்கணக்கான குறட்பாக்கள் தம் கருத்துகளை இருட்படை செய்யாமல் ஒளிப் படுத்தி நிற்கின்றன. இவற்றின் பொருளை அறி[illegible] கொள்ளற்கும் உரைகள் வேண்டுமா? எழுத்தறிவில்லாருங்கூடக் கேள்வியளவில் இவற்றின் [illegible] கொள்ளமாட்டார்களா? 'கற்றிலனாயினும் கேட்க' எனவும், 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' எனவும் அறிவுப்பறை [illegible] இல்லாரும் கேட்டு விளங்கிக் [illegible]தானே தம் அறநூலை வெளிப்படை [illegible] இயல்பாக எளிதாக யாத்திருப்பார். ஆத[illegible], வாழ்வும் உணர்ச்சியும் செயலும் வளமும் [illegible] தமிழ் மக்கள் திருக்குறளை உரைகளி[illegible] தலைப்படுத்தி மூலக்குறள்களை [illegible]க. நீரை உறிஞ்சிவழிக் [illegible] காட்டிலும் வாய்வைத்துக் குடிப் [illegible] சுவை பெருஞ்சுவையல்லவா?


சித்ரலேகா

தமிழ்ச் சமய நெறி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ், காலத்தால் மூத்த மொழி; கருத்தாலும் முதிர்ந்த மொழி; தமிழில் இன்றுள்ள முதல் நூல் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல். தொல்காப்பியர் காலம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. இலக்கியம் தோன்றி வளர்ந்த பின்தான் இலக்கணம் தோன்றும் என்பது மொழிநூற் கொள்கை. தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கண நூலைத் தரத்தக்க அளவுக்குத் தொல்காப்பியத்திற்கு முன் இலக்கிய உலகம் சிறந்து விளங்கியிருக்க வேண்டும். மிகச் சிறந்த இலக்கியங் களைக் காணக்கூடிய அளவுக்குத் தமிழ் மொழி சிறந்திருந்த தென்றால், அம் மொழியைப் பேசி வாழ்ந்த மக்கள் சிந்தனையிலும் செயலிலும் மிக வளர்ந்திருக்க வேண்டும் என்பது உய்த்துணரத் தக்கது. உலகில் உள்ள எல்லா மொழிகளுமே எழுத் துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் பெற் றுள்ளன. அவற்றுள்ளும் எழுத்து, சொல் இலக் கணங்களில்கூட முழுநிலை பெற்று விளங்கும் மொழிகள் சிலவே. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமல்லாமல் வாழ்க்கைக்கும் இலக்கணம் கண்ட பெருமை உலகமொழிகளில் தமிழுக்கே உண்டு.

வாழ்வதெல்லாம் வாழ்க்கையல்ல. வாழ்க்கை அருமையானது; பயனுடையது; இன்பத்திற்குரியது என்ற உணர்வுகளுடன் நெறிகளோடு இசைந்து வாழ்தலே வாழ்க்கை என்று தமிழ் வற்புறுத்து கிறது. ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்கின்ற காதல் வாழ்க்கையும், அவர்களே சமுதாயத்திற்குப் பயன்படுமாறு வாழும் கற்பு வாழ்க்கையும் அக வாழ்க்கை. சமுதாய வரம்புக்குள் அடங்கி, அரசு வகுக்கும் சமுதாயப் பொது விதிகளுக்கு இணங்க வாழும் வாழ்க்கை, புற வாழ்க்கை. சுருங்கச் சொன்னால் சமுதாய மாக வாழ்வது புறவாழ்க்கை. சமுதாயத்துக்கு உறுப்பாகச் செய்வன செய்து, துய்ப்பன துய்த்து வாழும் வாழ்க்கை அகவாழ்க்கை. இது, தொல்காப்பியம் காட்டும் முடிவு. இவ் விலக்கண நூல் தோன்றுவதற்கு முன்பே, தமிழ்மொழி பேசும் மக்கள் சிறந்த வாழ்க்கை யுடையவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆயினும், காலத்தின் விளைவுகளால் இங்கும் அங்கு மாகத் தவறுகள் தலைக்காட்டத் தொடங்கிய வுடனேயே வாழ்க்கையைச் செப்பம் செய்யும் கவலை தமிழ்க்குடியினருக்குத் தோன்றியதன் விளைவு, தொல்காப்பியத்தின் பொருளதிகாரம்.

வாழ்க்கை, நெறிமுறைகளுக்கு இசைந்தவாறு அமையவேண்டும் என்ற கவலை அரும்பும் நிலையே சமயத்தின் தோற்றம். இந் நிலையிலேயே சமயம் கால்கொள்கிறது. அங்ஙனமாயின் தொல்காப்பியத் திற்கு முன்பு, தமிழர்க்குச் சமயம் இல்லையா? என்ற வினாத் தோன்றும். தொல்காப்பியத்திற்கு முன்பும் தமிழ்மொழி பேசிய மக்கள் இறை வழிபாடு செய்து வந்துள்ளனர். அவர்களுடைய வாழ்க்கையில் ஒழுங்கு களும், ஒழுக்கங்களும், சமயநெறிக் கோட்பாடுகளும் இருந்தன. ஆயினும், செப்பமாக வடிவமைப்புப் பெற்றது தொல்காப்பியர் காலத்தில்தான். சமயம் என்பதற்குச் செப்பமுறச் செய்யப்பெற்றது, சார்ந்து நின்று ஒழுகுவோரைச் செப்பமுறச் செய் வது என்பது விளக்கம். சமயம் என்பது கடவுளை வழிபடும் நிலையை மட்டும் வற்புறுத்துவதன்று; வாழ்க்கை முழுவதையும் தழுவி நிற்பதே சமயம்.

தமிழ்மொழி, வாழ்க்கையை அணுகி ஆராய்ந்த முறை நம்பிக்கைக்குரியது; நல்லெண்ணத்தின் பாற்பட்டது; அறிவார்ந்தது. தமிழ்ச் சமயத்தில் நம்பிக்கைக் கொள்கை உண்டு. ஆனால், நம்பிக்கை மட்டுமேயன்று. தமிழ்ச்சமயநெறி உலகை, உயிர்க் குலத்தை, வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து கண்டு காட்டும் முடிவுகள் சிறப்புடையன; அறிவுக்கு விருந்தாய் அமைவன. உயிர்கள், அறியாமையி லிருந்து விலக, துன்பத் தொடக்குகளிலிருந்து விலக, சமயம் துணை செய்வது. தமிழ்ச் சமயம் உயிரை நம்புகிறது. உயிர், இல்பொருளன்று. உயிர், பிறி தொன்றன் விளைவுமன்று. உயிர், கடவுளுமன்று; கடவுளின் ஒரு பகுதியுமன்று. உயிர், கடவுளின் பிரதிபலிப்புமன்று; உயிர், கடவுளால் படைக்கப் பட்டதுமன்று; அழிக்கக்கூடியதுமன்று. உயிர், கடவுளின் கைப்பாவையுமன்று. உயிர், அறிவுப் பொருள். ஆயினும், உயிர் முற்றாக அறிந்த அறிவுப் பொருளுமன்று. உயிர், ஒன்றல்ல, பலப்பல. அதன் பொதுவகை ஆறு வகையே! இப் பாகுபாடு அறிவின் அடிப்படையில் அமைந்தது. உயிர்கள் தோன்றி யனவும் அல்ல; அழியக்கூடியனவுமல்ல. உயிர் களுக்குப் பிறப்புமில்லை; இறப்புமில்லை. உயிர்கள் கடவுளாதலுமில்லை. உயிர்கள், உடலைத் துணை கொண்டு அகக்கருவிகள், புறக் கருவிகள் வாயிலாக உலகத்தோடு தொடர்பு கொள்ளுதலையே பிறப்பு என்கின்றோம். இது தமிழ்ச் சமயத்தின் உயிரைப் பற்றிய உயர்தனிக் கொள்கை.

உயிரின் இயற்கை வளர்தல்; மாறுதல். உயிர் களின் அடிப்படை இயல்பு துய்ப்பது. துய்த்தலும் இன்புறுதலும், அவ்வழி வளர்தலும், அன்புநிலையை எய்துதலும் உயிர்களின் பிறப்பு வழிப்பட்ட நோக்கம். உயிர்கள் பிறத்தல், இறத்தல் என்பது நேரடியாக உயிர்களைப்பற்றியதல்ல. உயிர், தன்னுடைய வளர்ச்சிக்குத் துணையாக உடலைத் துணைகொண்டு அறிகருவிகள், செய்கருவிகள் வாயிலாக உலகத்தோடு பொருந்துதலும் நீங்குத லுமே பிறப்பு, இறப்பு ஆகும். இங்ஙனம் அறிகருவி களையும் செய்கருவிகளையும் உடைய உடம்பி னோடு உயிரைப் பொருத்திப் பிறப்பு வாழ்க்கை யொடு இணைத்தலே படைத்தலாகும். உடலைப் பெற்ற உயிர்கள் துய்ப்பனவும் உய்ப்பனவும் பெற்று வளரச் செய்தலே காத்தலாகும். வாழ்க்கையில் துன்பச் சுமை குறைவதற்காகவும், புத்துணர்ச்சி யோடு வளர்வதற்காகவும், மறைக்கத்தக்கனவற்றை மறைத்தலே மறைத்தலாகும். உயிர்களின் இன்ப வாழ்க்கைக்கு ஒவ்வாத தீமையை அழித்தலே அழித்த லாகும். வளர்ந்துவரும் உயிர்கள் என்றும் இன்ப நிலையில் அமர்ந்து வாழச் செய்தல் அருளுதலாகும். இவ்வாறு உயிர்களின் வாழ்நிலைகளை ஐந்து நிலை களாகவும், இவ்வைந்து நிலைகளிலும் உயிர்களுக்குத் துணை செய்யும் ஐந்தொழில்களே கடவுளின் ஐந் தொழில்கள் என்றும் தமிழ் கூறும்.

உயிர்கள் உய்யும் நலம் நோக்கி உடுத்துக்கொண் டதே உடம்பு. 'உடு' என்ற முதனிலையிலிருந்தே 'உடம்பு' என்ற சொல் பிறக்கிறது. உயிர், அறி யும் இயல்பினது. உயிர் ஒரு அறிவுப் பொருளே! ஆயினும் இயற்கையிலேயே அறியாமையில் உயிர் இணைந்து இருக்கிறது. உயிர், அறியாமையினின் றும் விலகி அறிவைப் பெறுதலே வாழ்க்கையின் நோக்கம். உயிர், அறிவுமயமாதலே உயிரின் முதிர்ந்த வளர்ச்சி நிலை. உயிர், அறியாமையை நீக்கிக்கொண்டு அறிவைப் பெறுவதற்கே பேரறி வாகிய கடவுளை நாடுகிறது; துணையாகப் பெறு கிறது. வளர்ந்த அறிவின் இயல்பு வாழ்வித்தலே. வளர்ந்த அறிவு, சிற்றெல்லைகளைக் கடந்தது. அதற்குத் தற்சார்பான குறிக்கோள் இராது. எனவே உலகுயிர்கள் அனைத்தையும் தழுவி நின்று மெல்ல அவற்றை அறியாமையிலிருந்து நீக்கி அறிவில் பூத் துக் குலுங்கச் செய்தலும் அறிவில் இன்புற்றமரச் செய்தலுமே இறைவனின் குறிக்கோள். இது தமிழ்ச் சமயத்தின் சாரம்.

தமிழர் சமயம், இன்று தோன்றி வளர்ந்துள்ள பொருள்முதல் வாதக் கொள்கைக்கும் ஈடு கொடுக் கும் வகையில் அமைந்த சமயமாகும். ஏன்? அக நிலைக் கருத்துமுதல் வாதம் என்று சொல்லப்படு கின்ற கொள்கை, தமிழ்ச் சமயத்திற்கு முரணானது. இக் கொள்கையுடையார் பொருள்களே இல்லை; எல்லாம் கருத்துகளின் பிரதிபலிப்பே என்பர். இது நடைமுறைக்கு ஒத்து வராத ஒன்று. அடுத்து, புற நிலைக் கருத்துமுதல் வாதக் கொள்கை. இக் கொள்கையுடையார் உயிர் என்று ஒன்று இல்லை; 'பரமான்மா' என்று சொல்லப்படுகின்ற கடவுளின் ஒரு பகுதியே ஆன்மா என்பர். பரவெளியாகிய ஆகாயத்தையும் குடத்திற்குள் உள்ள ஆகாயத்தை யும் ஒப்புமை காட்டுவர். இவ்விரண்டிற்கும் பொருள் வேறுபாடில்லாதபோதும் குடத்திற்குள் ளிருப்பதன் காரணமாக ஏற்பட்ட தன்மை வேறு பாட்டை அவர்கள் அறிகிலர். இக் கொள்கை யினால் அவர்கள் 'நானே கடவுள்' என்று தருக் கித் திரியும் இயல்பினராகின்றனர். அது மட்டுமா? உலகம் என்ற ஒன்று இல்லை. துய்ப்பனவும் இல்லை; உய்ப்பனவுமில்லை; எல்லாம் வெறும் மயக்கம் என்பர். உலகம் பொய்யன்று; உயிரும் பொய் யன்று. எனவே, இந்தப் பொய்ம்மைக் கொள்கை மயக்கத்தில் பிறந்தது; மயக்கத்தில் ஆழ்த்துவது, இக் கொள்கை பொருள்முதல் வாதத்தின் முன்னும் தமிழ்ச் சமயத்தின் முன்னும் நிற்க முடியாது. புற நிலைக் கருத்துமுதல்வாதிகள் கடவுளை நம்பு கிறவர்கள், உலகிற்கும் உயிர்களுக்கும் புறத்தே கடவுள் உண்டு; அது முன்னே தோன்றியது; உயிர் உலகம் எல்லாவற்றையும் அக் கடவுளே படைக்கிறது என்ற கொள்கையினர் இவர்கள். இவற்றுள் கட வுள் உண்டு என்ற கொள்கையையும் அது வளர்ந்த அறிவினது என்பதையும் தமிழ்ச் சமயம் ஒத்துக் கொள்கிறது. ஆனால், உயிர்களும் உலகமும்

கடவுளால் படைக்கப்பட்டன அல்ல; உயிர்களும் கடவுளைப் போல் என்றும் உள்ளவை. உலகு, இறைவனின் இயக்கவியல் செயல் வழியது. உலகு, முகிழ்த்து விரிவதற்குக் காரணமாக—முதற்களமாக அமைந்துள்ள மாயையிலிருந்து முகிழ்த்ததேயாம். அதாவது தோன்றியதேயாம் என்பது தமிழ்ச் சமயம் உயிர்கள், கடவுளால் படைக்கப்பட்டன என்றால் உயிர்களின் குறைநிறைகளுக்கும் இன்ப துன்பங்களுக்கும் யார் பொறுப்பு? குறைவிலா நிறைவு, கோதிலா அமுது, நன்றுடையான், தீயதில்லான், இன்பமுடையான், துன்பமில்லான் என்று விளங்குகின்றவனாகிய பரம்பொருளால் குறைகளுடைய பொருள்—உயிர் படைக்கப்பட்டது என்று கூறுவது கடவுட் கொள்கையையே குறைபடுத்துவதாகும். இயற்கையின் பரிணாம வளர்ச்சி, குறைகள் நிறைகளாவதேயாம். நிறைகள், குறைகளாவதல்ல. எனவே, உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டன அல்ல என்ற தமிழ்க்கொள்கை—உயிர்கள் உற்று அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் கடவுள் பொறுப்பாகமாட்டார். அவைகளின் செயற்பாடே அவற்றுக்குக் காரணம் என்ற தமிழ்க்கொள்கை — பொருள்முதல் வாதத்தினை ஈடு கொடுத்து நிற்கின்ற சிறப்புடைய கொள்கை.

தமிழ்ச்சமயம் வாழ்க்கையைப் பொய்ம்மை என்றும் கூறுவதில்லை; வெறுத்து ஒதுக்குவதுமில்லை; ஒதுங்குவதுமில்லை. தமிழ்ச்சமயம் வாழ்வாங்கு வாழ வலியுறுத்துவதேயாம். தமிழ்ச்சமயத்தின் கொள்கை, செயல்கள் மட்டுமே பயன் தருவன அல்ல; சிந்தனை இன்றியமையாதது; செயல்களின் நோக்கமே அளவைக்குரியது என்பதாகும். தமிழ்ச்சமயம் இயற்கையோடிசைந்தது. அது இல்லற வாழ்க்கைதான் உயர்ந்தது என்றோ, துறவற வாழ்க்கைதான் உயர்ந்தது என்றோ பறை சாற்றுவதில்லை. எந்த வாழ்க்கையாயினும் நெறிமுறைகளிற் சிறந்து வாழ்வாராயின் இன்புறுவர் என்பதே தமிழ்ச்சமயக் கொள்கை. எந்நெறியில் நின்றாலும் எத்தொழிலைச் செய்தாலும் சிந்தனையும் செயலும் சிறந்திருக்குமானால் சிறப்புடையதேயாம். செம்பொருளைக் காணத் துணை செய்வதேயாம். துய்த்தல், தூய இன்பத்திற்குத் தடையன்று. ஆனால், மற்றவர் துய்த்தலுக்கு இடையூறாக, மற்றவர் துய்க்க வழங்காமல் தானே துய்க்க ஒருப்படுதல் தமிழ் நெறிக்கு முரணானது. எந்த வகை வாழ்க்கையாயினும் துய்ப்பித்தல் குறிக்கோளாக இருக்க வேண்டும். அங்ஙனம் வாழும் வாழ்க்கை, தமிழ் வாழ்க்கை. இம் மண்ணிலேயே வளர்ந்த நிலையில் இன்ப அன்பினைத் துய்த்து வாழ முடியும் என்ற நம்பிக்கையுடையது தமிழ்ச்சமயம். உயிர்கள் ஞான மயமாகி இன்ப அன்பினில் தங்கித் திருவருளைத் துய்த்து இன்புறுதலே வீடு! இங்ஙனம் வளர்ந்த தமிழ்ச்சமயம் இதுவரையில் உலகில் தோன்றிய தத்துவ இயல்களில் சிறந்ததாக, முடிந்த முடிபாக விளங்கி வருகிறது.

இச் சமய நெறியை, நாம் தமிழ்ச்சமயம் என்று குறிப்பிட்டாலும் இந் நெறி உலகப் பொது நெறி. தமிழ்மொழிச் சிந்தனையாளர்களிடம் தோன்றி வளர்ந்ததால் தமிழ்ச் சமயமாயிற்று. ஆனால், தத்துவச் சிறப்புகளாலும், கொள்கை உயர்வாலும், நடைமுறை வாழ்வியலுக்கு இசைந்திருப்பதாலும், எல்லா வேறுபாடுகளையும் கடிந்து ஒதுக்குதலாலும் இத் தமிழ்ச்சமய நெறி உலகப் பொது நெறியாதற்குத் தகுதியுடையது. இந் நெறி உலகப் பொது நெறியானால் கடவுள் நெறியின் பெயரால் ஒரு குலம் தோன்றும்; சமநிலைச் சமுதாயம் மலரும்; வாழ்க்கை, தன்னம்பிக்கையால் ஆள்வினையால் விரிவடையும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று முழங்கி மக்கள் வாழ்வர். பெண்மை பெருமைப்படுத்தப் பெறும், வழுவிலா மனையறம் சிறந்து விளங்கும். பாரம் ஈசன் பணியே எனக் கொண்டு அந்தணர் வாழ்வர். தமிழ்ச் சமய நெறி கால்கொள்ளும். திசையெல்லாம் ஒரு புதிய சமுதாயம் அமைந்து விளங்கும்.

இன்றைய இலக்கியத்துக்கு ஏற்ற இடம்

அகிலன்

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்."

—பாரதி

1956 ஆம் ஆண்டு என நினைக்கிறேன். டெல்லியிலே மத்திய அரசின் செய்தி ஒலிபரப்புத்துறை, 'தற்கால இந்திய இலக்கியம்' பற்றி ஒரு கருத்தரங்கம் நடத்தியது. பிரதமர் நேரு, விஞ்ஞான பவனத்தில் அதைத் தொடங்கி வைத்தார். இந்தியாவின் ஒவ்வொரு மொழியிலிருந்தும் பிரதிநிதிகளாகச் சிறுகதை ஆசிரியர்களும் திறனாய்வாளர்கள் என்ற முறையில் பல்கலைக்கழக—கல்லூரிப் பேராசிரியர்களும் வந்திருந்தார்கள். தமிழ் மொழியின் சார்பாகச் சிறுகதை படிக்க நானும், கருத்தரங்கில் பங்குகொள்ளப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களும் சென்றிருந்தோம்.

வெவ்வேறு இந்திய மொழிக் கதாசிரியர்களாகிய நாங்கள் எங்கள் சிறுகதைகளைப் படித்தோம். ஏற்கெனவே அவை இந்தியாவின் எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன. ஆகவே, எல்லாக் கதைகளும் இந்தியாவின் எல்லா மொழிகளிலும் ஒரே நேரத்தில் வானொலியில் ஒலி பரப்பப்பட்டன.

அடுத்து, இந்திய மொழிகளின் 'தற்கால இலக்கிய வளர்ச்சி' பற்றிய கருத்தரங்கம் அங்கே நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் பெரும்பாலும் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர்களும் கல்லூரிகளின் மொழித்துறைத் தலைவர்களுமே கலந்துகொண்டார்கள். கருத்தரங்கம் எல்லோருக்கும் பொதுவான ஆங்கில மொழியிலேயே நடைபெற்றது. கட்டுரைகள் படிக்கப்பெற்றன. விவாதங்கள் நடைபெற்றன.

ஒவ்வொரு பேராசிரியரும் அவரவர் மொழியில் தற்கால இலக்கிய வகைகளான—சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கவிதைகள்—எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளன என்பதைத் தக்க ஆதாரங்களுடன் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆசிரியர்களின் பெயர்கள், அவர்களது படைப்புகளின் கருப்பொருள்கள், படைப்புகளின் நிறைகள், குறைகள் இவ்வளவும் அங்கே அலசி ஆராயப் பெற்றன.

எனக்கு அருகே அமர்ந்திருந்த பேராசிரியர் தெ. பொ. மீ. ஆழ்ந்த சிந்தனையில் முழுகியபடியே என்னைப் பார்த்தார். "தமிழ் நாட்டில் நம்முடைய மொழித்துறையும் இலக்கியத்துறையும் இந்த நூற்றாண்டையே இன்னும் எட்டிப் பார்க்கவில்லை. பழைமை வளம் நம்மிடம் மிகுந்திருக்கிறது என்ற சாக்கைச் சொல்லிப் புதுமையை இந்த அளவுக்கு நாம் அறவே புறக்கணித்திருக்க வேண்டியதில்லை. பிற மொழிப் பேராசிரியர்கள் இங்கே அவரவர்

மொழியில் 1950 வரை வெளிவந்த படைப்புகளைக் கூடப் படித்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது'' என்றார்.

பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் பேச்சு முறை வந்தது. வீரமாமுனிவர், வேதநாயகம் பிள்ளை, வ. வெ. சு. ஐயர், புதுமைப்பித்தன், கு.ப.ரா., இவர்கள் வரையிலும்தான் அப்போது அவரால் பேச முடிந்தது. பேராசிரியருக்கே அன்று அவருடைய கருத்துரை மன நிறைவைத் தரவில்லை. அனைத்திந்திய மொழிக் கருத்தரங்கில் தமிழுக்குரிய இடத்தில் அதைக் கொண்டுபோய் வைக்காதது பெருங்குறை என்று எண்ணினார். இதைப்பற்றி என்னிடம் மனம் விட்டுப் பேசினார். சிலநாள்கள் டெல்லியில் நாங்கள் ஒன்றாகப் பழகக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததால், ''இனி நான் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் தீவிரமான கவனம் செலுத்தப் போகிறேன். இதுவரை வெளி வந்துள்ள நல்ல சிறுகதைகளையும் நாவல்களையும் படிக்கப் போகிறேன். ஆய்வு நூல்கள் வந்திருந்தால் அவற்றையும் விடக்கூடாது'' என்றார்.

இந்த முயற்சியில் என் ஒத்துழைப்பை அவர்கள் விரும்பினார்கள். மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேன். குறிப்பிடத்தக்க ஆசிரியர்கள், நூல்கள், ஆய்வாளர்கள் பட்டியலை அவர்களுக்கு அவ்வப்போது அனுப்பி வைத்தேன். டெல்லியிலிருந்து சென்னைக்குத் திரும்பியவுடனேயே அவர்கள் தற்காலத் தமிழ் இலக்கியத் துறையில் முழு மூச்சோடு ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள். அப்போது அவர்களுக்குச் சுமார் 50 வயது இருக்கலாம். மாநிலக் கல்லூரிக்கு என்னை அழைத்து, 'தமிழ் ஹானர்ஸ்' வகுப்பில் பயின்றுகொண்டிருந்த மாணவர்களிடையே நாவலைப்பற்றிப் பேசப் பணித்தார்கள். பிறகு, அந்தப் பேச்சையே கட்டுரை வடிவில் வெளியிடத் தூண்டினார்கள்.

பின்னர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகச் சென்றபோதும், அடுத்து மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக உயர்ந்தபோதும் அவர்கள் தற்காலத் தமிழ் இலக்கியத்தைக் கைவிடவே இல்லை. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்பற்றித் தக்க சான்றுகளுடன் பேசவும் எழுதவும் வல்ல விற்பன்னராகி விட்டார்கள். சாகித்திய அகாடமி ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள 'இன்றைய இந்திய இலக்கியம்' என்ற நூலில் தமிழ் இலக்கியம்பற்றி அவர்களுடைய கட்டுரை வெளிவந்திருக்கிறது. அங்கங்கே சிலருக்கு அவருடைய கணிப்பைப்பற்றி மாறுபட்ட கருத்து இருக்கலாமென்றாலும், இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் அவருக்குள்ள ஆழ்ந்த புலமை பலரை வியப்புறவே செய்யும். தமிழில் முழுமை பெற்ற பேராசிரியர் அவர்; தொல்காப்பியரிலிருந்து அவர் காலத்தில் வாழ்ந்த இளம் எழுத்தாளர்வரை அறிந்தவர் டாக்டர் தெ.பொ.மீ.

டெல்லியில் அவர் பெற்ற அனுபவந்தான் அவர் பணியாற்றிய கல்லூரியிலும் பல்கலைக்கழகங்களிலும் தீவிரமான மாற்றம் ஏற்படக் காரணமாக இருந்தது.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் அவர் தொடங்கி வைத்த பணியை, மிக வேகமாகத் தொடர்ந்து நடத்தினார் — அங்குத் துணைவேந்தராகப் பொறுப்பேற்ற டாக்டர் மு. வரதராசனார். அவர் காலத்தில் தற்காலத் தமிழ் இலக்கிய ஆசிரியர்களின் படைப்புகள் ஆய்வுக்காகப் பல மாணவர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டன.

தவிர, **'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் கருத்தரங்க வரிசை'** என்று ஒரு கருத்தரங்கத் தொடரை மதுரைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கி வைத்தவரும் டாக்டர் மு. வ. தாம். 1974 செப்டம்பர் 9, 10, 11, 12 ஆகிய நான்கு நாள்களிலும் அங்கு என்னுடைய நூல்களைப் பற்றிச் சுமார் 30 கட்டுரைகள் படிக்கப்பெற்றன. அவற்றைப் பின்னர் ஒரு நூலாகவும் தொகுத்து வெளியிட்டது மதுரைப் பல்கலைக்கழகம். அந்த ஆண்டு இறுதியில் டாக்டர் மு.வ. மறைந்துவிட்டார். அடுத்த 1975-ல் டாக்டர் மு. வ. நூல்கள்பற்றிய கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. பிறகு இது நாள்வரை ஒரு குறிப்பிட்ட ஆசிரியரது படைப்புகளை எடுத்துக்கொண்டு விரிவாக ஆராயும் முயற்சி அங்குத் தொடரப்பெற்றதாகத் தெரியவில்லை.

பள்ளி நூல்களில் இன்றைய இலக்கியம்

நான் உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்தில் (1937-40), எங்கள் வகுப்புகளுக்கான பாடநூல்களில் சார்லஸ் டிக்கென்ஸின் நாவலில் ஓர் அத்தியாயம், வாஷிங்டன் இர்விங்கின் சிறுகதை, ஆலிவர் கோல்ட் ஸ்மித், ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் போன்றோரது கட்டுரைகள் முதலியன இடம் பெற்றிருந்தன. சின்னஞ் சிறு வயதிலேயே எங்களுக்கு உலகப் பெரும் எழுத்துலக மேதைகளுடன் அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. பிற்காலத்தில் அவர்களைத் தேடிப் படிக்கும் ஆர்வம் எங்களிடையே தூண்டிவிடப்பட்டது. மேலும் எங்கள் காலத்து உலகத்தின் சமூகப் பொருளாதார கலாசாரப் பிரச்சினைகளையும் நாங்கள் அந்த ஆசிரியர்களிடமிருந்து தெரிந்துகொள்ள முடிந்தது. தற்கால இலக்கியங்கள் தற்கால மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள்பற்றிப் பேசுகின்றன. தற்காலத்துக்கேற்ற வாழ்க்கைப் போராட்டத்துக்கு ஏற்றவர்களாக மாணவர்களை உருவாக்குகின்றன.

ஆனால், நான் அக்காலத்தில் என் தமிழ்ப் பாடநூல்களில் பயின்றவர்களில் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் ஒருவரைத் தவிர, வேறு யாருமே என் நினைவில் நிற்பவர்களாக இல்லை. அவர்தாம்

இருபதாம் நூற்றாண்டு வாழ்க்கையைத் தமது உயிர்த்துடிப்புள்ள — சிந்தனை வளம் மிக்க — நடையில் வெளிப்படுத்தியிருந்தார். அவர் சிறுகதைகளோ நாவல்களோ எழுதவில்லையென்றாலும், என்னை எழுத்தாளனாக உருவாக்கியதில் திரு.வி.க.வுக்கு முக்கியமான பங்கு உண்டு. மற்றவர்கள் 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை' என்ற பாரதி சொல்லுக்கு மாறாகப் பாடநூல்களில் பழங்கதைகளைப் பழைய காலத்து நடையில் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மாணவர்களுடைய வாழ்க்கையின் எதிர்காலப் போராட்டத்துக்கான சிந்தனைகள் எவையும் அந்தக் காலத்துத் தமிழ்ப் பாடநூல்களில் காணப்பெறவில்லை. தமிழ்ப் பாடநூல்கள் பெரும்பாலும் எழுத்தால் உருவாக்கப்பெற்ற தொல்பொருள் காட்சிக் கூடங்களாகவே காட்சியளித்தன. நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நிலைமை ஓரளவு மாறியுள்ளது. ஓரளவுதான் மாறியுள்ளது. சின்னஞ்சிறு வயதிலேயே மாணவர்களுக்கு நாம் சிறந்த சிறுகதைகளையும், நாவல் பகுதிகளையும், கவிதைகளையும் போதிய அளவு அறிமுகப்படுத்த முன்வரவில்லை.

நம்மிடையே உள்ள சிறந்த படைப்பாளர்களைத் தேர்ந்தெடுத்து அறிமுகப்படுத்தினால்தான் அவர்கள் அந்தப் படைப்பாளர்கள் குறிப்பிடும் சமகால வாழ்க்கையை உணரவும் சிந்திக்கவும் முற்படுவார்கள். இன்றைய வாழ்க்கைப் பிரச்சினைகளோடு போராடக்கூடிய இலட்சியங்கள் உருவாவதற்கு அவர்களுக்கு அந்தப் படைப்புகள் வழிகாட்டக் கூடும். மாணவர்களிடமுள்ள படைப்பாற்றல் தூண்டிவிடப்பட்டு, எதிர்காலத்தில் முதல்தரமான கவிஞர்களும் கதாசிரியர்களும் அவர்களிடையே தோன்றுவதற்கான வாய்ப்புகளும் பெருகும். பள்ளிப் பருவம் இளம் நெஞ்சுகளில் எளிதாகப் பதியக்கூடிய பருவம். அந்தப் பருவத்திலேயே நாம் தற்காலத் தமிழ் இலக்கியத்துக்கான ஆர்வத்தை அவர்களிடையே தூண்டிவிடவேண்டும்.

இல்லையேல், இன்று சில பத்திரிகைகளில் 'சிறுகதை' என்ற பெயரிலும் 'நாவல்' என்ற பெயரிலும் வெளிவரும் தரக்குறைவான போலி எழுத்துகளைப் படித்துவிட்டு, இவையே இலக்கிய முயற்சிகள் என்று இளைஞர்கள் மயக்கமுறுவதற்கும் வாய்ப்பு உண்டு. அந்த நிலைமை தமிழ்நாட்டில் ஏற்கெனவே ஏற்பட்டுவிட்டது. வாழ்க்கையை ஆழமாக அலசி ஆராயும் படைப்புகளுக்கும், திரைப்பட வேகத்தில் பத்திரிகைக்காரர் விருப்பத்துக்காக எழுதப்படும் மேனாமினுக்கி எழுத்துகளுக்கும் வேறுபாடு தெரியாமல் இன்றைய இளைஞர்கள் விழிக்கிறார்கள். ஆபாசக் குப்பைகள் அவர்களது நெஞ்சுகளில் கொட்டப்படுகின்றன. வாழ்க்கைப் பிரச்சினைகளிலிருந்து அவர்கள் திசை திருப்பப்பட்டு ஏமாற்றப்படுகிறார்கள்.

இளம் வயதிலேயே மாணவர்களுக்குச் சரியான வழிகாட்டும் பொறுப்பு கல்வித்துறையின் தமிழ்ப் பிரிவுக்கு இருக்கிறதென்று நம்புகிறேன்.

கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் இன்றைய இலக்கியம்

நம்மிடம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வளமான இலக்கியச் செல்வம் இருப்பது உண்மைதான். தொல்காப்பியர் முதல் வள்ளலார் வரை பார்த்தால் ஆங்காங்கே இலக்கியத்தில் இமயம் போன்ற சிகரங்கள் உயர்ந்தோங்கி விளங்குவது மெய்தான். இது 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த' தமிழ்; இளங்கோவையும் கம்பனையும் தந்த தன்னிகரில்லாத மொழிதான்.

நம்முடைய மரபுவழி உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் வாழ்க்கை முறைகளையும் நமது மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டியது நம் தலையாய கடமைதான். ஆனால், அத்தோடு நம் கடமை தீர்ந்துவிடவில்லை. முற்றுப் பெற்றுவிடவில்லை.

அண்மைக்காலமான இந்த இருநூறு ஆண்டுகளில் உலகத்தில் மிகத் தீவிரமான மாறுதல்கள் நடந்துவிட்டன. முடியாட்சி உலகத்தின் பெரும் பகுதிகளில் தவிடு பொடியாகிவிட்டது. உலகத்து மக்களில் சுமார் பாதிப்பகுதி மக்கள் தங்கள்-தங்கள் நாடுகளில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மண்டிக் கிடந்த வறுமையை அறவே விரட்டிவிட்டு வளமாக வாழ்கிறார்கள். வறுமை என்பது ஒழித்துக் கட்டக்கூடிய பிரச்சினையாகிவிட்டது. அறிவியலும் தொழிலியலும் ஜெட் விமான வேகத்தில் பரப்பப்பட்டு வருகின்றன. சந்திர மண்டலத்துக்கு மனிதன் போய் வரும் யுகத்தில் நாம் வாழ்கிறோம்.

நம் நாட்டிலோ இன்னும் அடிப்படைப் பிரச்சினைகளே தீர்க்கப்படவில்லை.

நம்முடைய அடிப்படைப் பிரச்சினைகளான வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சுரண்டல், பிறப்பால் ஏற்றத்தாழ்வு, பெண்மைக்குத் தீமை முதலியவற்றை நாம் ஒழித்தே தீரவேண்டும். இத்தகைய பிரச்சினைகளை இளைஞர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டி, அவர்களை உணர்ச்சிவயப்படுத்தவும் சிந்திக்கத் தூண்டவும் செய்யக்கூடியவை இன்றைய இலக்கியங்களே. இன்றைய வாழ்க்கைப் போராட்டங்களைச் சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள் வாயிலாகத் தக்கவர்கள் சித்திரித்துக் காட்டும்போதுதான் படிப்போருக்கு விழிப்பு ஏற்படும்.

இந்த நூற்றாண்டில், நாட்டு விடுதலைக்கு முன்னும் பின்னும் நமக்கு ஏற்பட்டுள்ள

நெருக்கடிகளின் பிரதிபலிப்பை நாம் இன்றைய தமிழ் இலக்கியங்களில்தான் தேட முடியும். அதிலும் மனிதாபிமானமும் சமுதாயப் பற்றும் தெளிந்த சிந்தனையும் உயிர்த்துடிப்புமிக்க எழுத்தாற்றலும் கொண்ட படைப்பாளர்களிடந்தான் காணமுடியும்.

இத்தகைய எழுத்தாளர்கள் படைப்புகளைத் தேர்ந்தெடுத்துக் கல்லூரிகளில் பாடநூல்களாக வைக்காமல் இருப்பதால் ஏற்படும் இழப்பு எழுத்தாளர்களுக்கல்ல. இந்த நாட்டுக்கு ஏற்படும் இழப்பு அது. கல்விக்கூடங்களுக்கு ஏற்படும் இழப்பு.

எந்த நோக்கத்தோடு தமிழ் மொழிக் கல்வியும் தமிழ் இலக்கியக் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டுமோ, அதில் சரிபாதிகூட இப்போது நிறைவேறவில்லை. இந்தியாவில் உள்ள பிற மொழிப் பல்கலைக்கழகங்கள் தற்கால இலக்கியங்களை முனைந்து தங்கள் மாணவர்களிடையே பரப்பி வருகின்றன. நாம் இங்கே இன்னும் அரைகுறை மனத்தோடு செயல்பட்டு வருகிறோம்.

தலைமைப் பொறுப்புகளில் இருந்த தெ.பொ.மீ., டாக்டர் மு. வ. போன்றவர்களின் இலட்சிய வேகம் அவர்களோடு போய்விட்டதோ என்று இப்போது அஞ்சவேண்டியிருக்கிறது. அவர்கள் தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகத் தொடங்கிவைத்த பணிகள் இப்போது ஏன், எதற்காக, முடக்கி வைக்கப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. மீண்டும் 'மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசும்' போக்கும் அரைத்த மாவையே அரைக்கும் போக்கும் தலைதூக்கத் தொடங்கியிருக்கின்றன.

பொறுப்பில் உள்ள ஒருசிலருக்கு இன்றைய தமிழ் இலக்கியத்தின்மீது ஆர்வம் இல்லாமல் இருக்கலாம். இன்னும் ஒருசிலருக்கு அதன்மீது வெறுப்புக்கூட இருக்கலாம். இன்னும் சிலருக்கு அதைப் படித்துப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாதிருக்கலாம். இத்தகைய காரணங்களுக்காக வளர்ந்துவரும் சமுதாயத்துக்கு நாம் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருக்கக் கூடாது. பொறுப்பிலுள்ள ஒருசிலரின் புறக்கணிப்புக்காகப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தாங்கள் பெறவேண்டிய கல்விச் செல்வத்தை இழந்துவிடக் கூடாது.

நல்லவேளையாக, இடைக்காலத்தில் தெ.பொ.மீ., மு. வ., போன்றவர்களால் ஏற்படுத்தப்பட்ட புது விழிப்பால் பல தமிழாசிரியர்கள் புதுமை இலக்கியத்தின் பக்கம் திரும்பத் தொடங்கியிருக்கிறார்கள். சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் பற்றிச் சிலர் ஆய்வு செய்திருக்கிறார்கள். புதுமை இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட ஒருசில பேராசிரியர்கள் முதுகலை, 'எம்.பில்' போன்ற வகுப்புகளுக்கு இன்றைய இலக்கியத்தை வற்புறுத்துகிறார்கள்.

இனி, வருங்காலத் திட்டத்துக்குப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் இல்லை என்ற குறைபாடு நமக்கு இராது. டாக்டர் தெ. பொ. மீ., டாக்டர் மு.வ. போன்றவர்கள் தங்கள் காலத்திலேயே இதற்கு அடித்தளம் அமைத்துவிட்டார்கள். திறனாய்வுத் துறை இப்போது பரவலாகி இன்றைய இலக்கியத்தையும் தொட்டிருக்கிறது. கல்லூரி ஆசிரியர்களால் பல நூல்களும் எழுதப்பெற்றுள்ளன.

இனி, ஒரு நல்ல முயற்சி பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் அளவில் தொடங்கப் பெறுமானால் அதற்கான ஆசிரியர்கள் இப்போதே உருவாகிவிட்டார்கள். நூல்களும் வந்துகொண்டிருக்கின்றன.

தேவை — தமிழ்க் கல்வித் திட்டத்தில் மாறுதல் ஒன்றுதான்.

தேவையான மாறுதல்கள்

இரு மட்டங்களில் இந்த மாறுதல்கள் நடைபெற வேண்டும். ஒன்று, கல்வித் திட்டத்துக்கான பாடநூல்களில் செய்யப்பட வேண்டிய மாறுதல்கள். இரண்டு, ஆசிரியர் நியமனத்தில் செய்யப்பட வேண்டிய மாறுதல்கள்.

அடித்தளத்திருந்தே, பள்ளிக்கல்விப் பாடத் திட்டத்திலிருந்தே, சிறுகதைகள், கவிதைகள், நாவலின் பகுதிகள், வாழ்க்கைப் பிரச்சினைகளை வெளியிடும் கட்டுரைகள் இவற்றுக்குப் போதிய இடமளிக்கும் முறையில் மாறுதல்கள் நிகழ்த்தப் படவேண்டும். ஆறாம் வகுப்புத் தொடங்கிப் பத்தாம் வகுப்பு வரை இந்த மாற்றங்கள் தேவை.

நாங்கள் பள்ளி வகுப்புகளில் படித்த காலத்தில், எப்படி எங்களுக்கு ஆங்கிலமொழிப் பாடத்தில் சார்லஸ் டிக்கென்ஸ், ஆலிவர் கோல்ட் ஸ்மித், வாஷிங்டன் இர்விங் முதலிய ஆசிரியர்களை அறிமுகப்படுத்தினார்களோ, அப்படியே இங்கும் எழுத்துத் துறையில் வல்லமை பெற்ற ஆசிரியர்கள் அறிமுகம் செய்யப்பெற வேண்டும். ஆசிரியர்களை ஒதுக்கிவிட்டு, 'சிறுகதைகள்', 'நாவல்கள்' என்ற பெயர்களில் பாடநூல்களுக் கென்றே எழுதப்பெறும் உப்புச் சப்பற்ற படைப்புகளைச் சேர்ப்பதால் பயனில்லை. எழுத்தையும் எழுத்துக்குப் பின்னே உள்ள ஆசிரியர் பெயரையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

கல்லூரிகளில் பட்டப் படிப்புக்காக 'இன்றைய இலக்கியம்' என்ற பெயரில் வைக்கப்பெற்றுள்ள துணைப்பாட நூல்கள் சில என் பார்வைக்கு வந்தன. மாணவர்களுக்காக நான் வருந்தினேன். பல்கலைக்கழக மத்திய நிதி உதவிக் குழு இன்றைய இலக்கியங்களை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தச் சொல்கிறது என்பதற்காக வைக்கப் பெற்ற நூல்கள் அவை.

நூலின் தரம், எழுதும் ஆசிரியருக்கு அந்தத் துறையில் உள்ள அனுபவம், ஆற்றல், தகுதி, இவற்றைப் பொருட்படுத்தாமல் சிலரால் இப்போது கல்லூரிகளில் பாடமாக வைப்பதற்கென்றே 'தற்கால இலக்கியங்கள்' தயாரிக்கப்படுகின்றன!

இந்த ஐம்பது ஆண்டுகளில் நம்மிடையே சில தரமான இலக்கியப் படைப்பாளர்கள் தோன்றாமல் இல்லை. குறிப்பாக, ஏனைய இந்திய மொழிகளுடன் ஒப்பிடும்போது நாம் நாவலிலும் சிறுகதையிலும் வளர்ச்சிபெற்றே வந்திருக்கிறோம் என்பது நன்கு தெரியவரும். கவிதைகளும் நம்மிடையே மறுமலர்ச்சி பெற்று வளரத் தொடங்கியுள்ளன.

தற்காலத் தமிழ் இலக்கியப் படைப்பாளர்கள் பட்டியல் உருவாக்கிக்கொண்டு, அவர்களது படைப்புகளில் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றை மாணவர்களுக்கு வழங்குவது ஒன்றும் அவ்வளவு கடினமான செயல் அல்ல. மனம் இருந்தால் வழி பிறக்கும்.

ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும் தற்காலத் தமிழ் இலக்கியத்துக்கென்று ஒருசில தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப் பெற வேண்டும். இந்தப் புத்திலக்கிய வடிவங்களுக்கென்று சில கோட்பாடுகள், வரம்புகள், இலக்கணங்கள் வளர்ந்துள்ளன. அவற்றைப் புரிந்து கொண்டு வகுப்புகளில் பாடம் எடுத்தால் மாணவர்கள் முழுப் பயனையும் பெறுவர்.

போதிய பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் நம்மிடையே இருக்கின்றனர். 'தற்காலத் தமிழ் இலக்கியப் பிரிவு' என ஒன்றை ஏற்படுத்தி, இவர்களை அங்கங்கே பொறுப்பேற்கச் செய்யலாம். முதற்கட்டமாக நமது பல்கலைக்கழகங்களில் 'தற்காலத் தமிழ் இலக்கியப் பிரிவு' (Department of Modern Tamil Literature) தொடங்கப்பெறல் வேண்டும்.

வள்ளுவனும் இளங்கோவும் கம்பனும் சங்கப் புலவர்களும் வள்ளலாரும் எந்தப் பல்கலைக்கழகத்திலும் படித்துப் பட்டம் பெறாதவர்கள். வெளியுலக வாழ்க்கையெனும் பல்கலைக்கழகத்தில் பல இன்ப துன்ப அனுபவங்களைப் பெற்றுப் படைப்பாளர்களாக உருவாகியவர்கள். அவர்களுக்கு வாரிசாக வந்து பல இன்னல்களுக்கிடையே தங்களுடைய படைப்புகளை உருவாக்கி வருபவர்கள்தாம் இன்றைய எழுத்தாளர்கள். அவர்களுக்கு உரிய இடத்தை அளிப்பதால் பயன்பெறப் போவது மாணவர் சமுதாயந்தான். தற்கால வாழ்க்கையின் சிக்கல்களை அவர்கள் உணர்ந்துகொண்டு விழிப்படைவதோடு, அவர்களில் சிலர் எதிர்காலத்தில் மிகச்சிறந்த படைப்பாளர்களாகவும் உருவாகக் கூடும். எனவே, தமிழ்மொழியிடமும் இலக்கியத்திடமும் பற்றுதல் கொண்டுள்ள நாம், தமிழின் எதிர்கால வளர்ச்சியையும் தமிழர் மேம்பாட்டையும் மனத்தில் கொண்டு, இன்றைய தமிழ் இலக்கியத்துக்கு உரிய இடத்தைக் கல்வித்துறையில் அளித்துப் பெருமை அடைவோமாக.

கவிதை வளத்தில் நாட்டுவளம்

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பள்ளு; அதிற் சிறந்தது முக்கூடற்பள்ளு.
உழவின் பெருமையை அழகுற உரைப்பது,

உயர்ந்த தென்னை இளநீர் தந்தது;
இளநீர் தன்னைப் பாக்குச் சுமந்தது;
பாக்கின் காய்களை மாமரஞ் சுமந்தது;
மாவின் கனியைப் பலாமரஞ் சுமந்தது;
பலவின் கனியை வாழை சுமந்தது;
வளையும் வாழைக் குலையை ஆங்கே,
மாதுளங் கொம்போ மகிழ்வாய்ச் சுமந்தது!

நாட்டு வளத்தின் நனிமிகு சிறப்பிது;
பாட்டு வளத்தில் பார்த்திடு வோமா!

* * *

''மீது யர்ந்திடுந் தெங்கிள நீரை,
மிடைந்த பூகஞ் சுமந்து, தன் காயைச்
சூத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும்;
சூதந் தன்கனி தூங்கும் பலாவில்;
ஓதும் அந்தப் பலாக்கனி வாழை
உளுக்க வேசுமந்து ஒண்குலை சாய்க்கும்;
மாது ளங்கொம்பு வாழையைத் தாங்கும்;
வளமை ஆசூர் வடகரை நாடே!''

—முக்கூடற்பள்ளு.

கல்லூரிகளில் பட்டப் படிப்புக்காக 'இன்றைய இலக்கியம்' என்ற பெயரில் வைக்கப்பெற்றுள்ள துணைப்பாட நூல்கள் சில என் பார்வைக்கு வந்தன. மாணவர்களுக்காக நான் வருந்தினேன். பல்கலைக்கழக மத்திய நிதி உதவிக் குழு இன்றைய இலக்கியங்களை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தச் சொல்கிறது என்பதற்காக வைக்கப் பெற்ற நூல்கள் அவை.

நூலின் தரம், எழுதும் ஆசிரியருக்கு அந்தத் துறையில் உள்ள அனுபவம், ஆற்றல், தகுதி, இவற்றைப் பொருட்படுத்தாமல் சிலரால் இப்போது கல்லூரிகளில் பாடமாக வைப்பதற்கென்றே 'தற்கால இலக்கியங்கள்' தயாரிக்கப்படுகின்றன!

இந்த ஐம்பது ஆண்டுகளில் நம்மிடையே சில தரமான இலக்கியப் படைப்பாளர்கள் தோன்றாமல் இல்லை. குறிப்பாக, ஏனைய இந்திய மொழிகளுடன் ஒப்பிடும்போது நாம் நாவலிலும் சிறுகதையிலும் வளர்ச்சி பெற்றே வந்திருக்கிறோம் என்பது நன்கு தெரியவரும். [illegible] கவிதைகளும் நம்மிடையே மறுமலர்ச்சி பெற்று வளரத் தொடங்கியுள்ளன.

தற்கால [illegible] இலக்கியப் படைப்பாளர்கள் பட்டியல் [illegible]

பெற வேண்டும். இந்தப் புத்திலக்கிய வடிவங்களுக்கென்று சில கோட்பாடுகள், வரம்புகள், இலக்கணங்கள் வளர்ந்துள்ளன. அவற்றைப் புரிந்துகொண்டு வகுப்புகளில் பாடம் எடுத்தால் மாணவர்கள் முழுப் பயனையும் பெறுவர்.

போதிய பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் நம்மிடையே இருக்கின்றனர். 'தற்காலத் தமிழ் இலக்கியப் பிரிவு' என ஒன்றை ஏற்படுத்தி, இவர்களை அங்கங்கே பொறுப்பேற்கச் செய்யலாம். முதற்கட்டமாக நமது பல்கலைக்கழகங்களில் 'தற்காலத் தமிழ் இலக்கியப் பிரிவு' (Department of Modern Tamil Literature) தொடங்கப்பெற வேண்டும்.

வள்ளுவனும் இளங்கோவும் கம்பனும் சங்கப் புலவர்களும் வள்ளலாரும் எந்தப் பல்கலைக்கழகத்திலும் படித்துப் பட்டம் பெறாதவர்கள். வெளியுலக வாழ்க்கையெனும் பல்கலைக்கழகத்தில் பல இன்ப துன்ப அனுபவங்களைப் பெற்றுப் படைப்பாளர்களாக உருவாகியவர்கள். அவர்களுக்கு வாரி[illegible] இடையே தங்களுடைய [illegible] உருவாக்கி வருபவர்கள்தாம் [illegible] படைப்பாளர்கள். அவர்களுக்கு உரிய [illegible] அளிப்பதால் பயன்பெறப் போவது [illegible] தற்கால வாழ்க்கையின் [illegible] உணர்ந்துகொண்டு விழிப் [illegible] அவர்களில் சிலர் எதிர்காலத்தில் [illegible] படைப்பாளர்களாகவும் உருவாகக் [illegible] தமிழ்மொழியிடமும் இலக்கியத் [illegible] கொண்டுள்ள நாம், தமிழின் [illegible] யையும் தமிழர் மேம்பாட்டை [illegible] கொண்டு, இன்றைய தமிழ் இலக் [illegible] இடத்தைக் கல்வித்துறையில் [illegible] அளிப்போமாக.



துறவிகளும் போற்றிய தமிழ்



'கலைமாமணி' நாரண துரைக்கண்ணன்

உலக மொழிகளில்—உலக மக்களிடையே வழங்கி வரும் முந்நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் உயர்தனிச் செம்மொழியாக விளங்கிவருவது நம் தாய் மொழியாம் தீந் தமிழ்மொழியேயாம். இது நாம் மட்டும் சொல்லுங் கருத்து அன்று; மொழியியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் வியந்து கூறும் உண்மை யாகும்.

தலைசிறந்த உண்மைப் பொருள்களைத் தக்க சொற்களால் நன்கு விரித்து உரைக்க வல்ல மொழி களே உலகில் பெருமைபெற்று விளங்குகின்றன.

மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் பலவற் றிலும் உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் மொழிவன்மையே இறைவன் அருளிய பெரும் பேறாகும்.

அறிவும் நாகரிகமும் செல்வ வளமும் முதிர்ந்த தமிழ்நாட்டில் பல்வகை நலங்களும் கொண்டு என்றும் பசுமையாக மக்களால் வழங்கப்பட்டுவரும் மொழி தமிழ் ஒன்றேயாம்.

இத்தகைய தீந்தமிழ் மொழி பலவகையிலும் சீர்குலைந்து முதன்மையிழந்ததற்குக் காரணம், தமிழைத் தங்கள் இன்னுயிரினும் மேலாகக் கருதிப் போற்றி வளர்த்து வந்த தமிழ் மாமன்னர்களின் ஆட்சிக்குப் பின், அடுத்தடுத்து வந்த அந்நியர் களின் ஆதிக்கத்தினால் அவர்களுடைய மொழிகள் நம் மக்களிடையே பரவி வேரூன்றியதுதான் என்பது எல்லார்க்கும் தெரியும்.

விடுதலை வேட்கை மிக்க பெருமக்கள் புரிந்த அரும்பெருந் தியாகங்களால் அந்நிய ஆட்சி அகன்று நம் நாட்டுக்குச் சுதந்திரங் கிடைத்த பின்னும், நம் தாய்மொழிக்கு முழு உரிமை கிடைக்கவில்லை. ஆங் கிலம், இந்தி போன்ற பிற மொழிகளின் மேலாதிக் கத்தால் தமிழ் தனக்குரிய தகுதியை இன்னமும் பெறாமல் தவித்துக்கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் வடமொழியான சமஸ்கிருதம் நம் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்தது. அம் மொழிக் குரியவர்கள் தமிழுக்கு நியாயமாகத் தர வேண்டிய உரிமையைக்கூடத் தராமல் மிகவும் பின்னுக்குத் தள்ளிவிட்டார்கள். 'தமிழ் சமஸ்கிருதத்தின் கூட் டுறவுடன்தான் வளரமுடியுமேயொழிய, தனித்து இயங்குந் தகுதி அதற்குக் கிடையாது. சமஸ்கிரு தத்திலுள்ள புராணங்கள், இதிகாசங்கள், காவியங் களைத் தழுவித்தான் வழிநூல்கள், சார்பு நூல்கள் இருக்கின்றன' என்று வடமொழியாளர்கள் வலி யுறுத்திக் கூறிவந்தனர். இதனால் நம் தமிழுக்கு இரண்டாம் இடமே கிடைத்து வந்தது.

திருக்கோயில்களில், திருமணங்களில், பிற சடங்கு களில் எல்லாம் சமஸ்கிருதமே இடம்பெறலாயிற்று. தமிழில் கடவுளுக்கு அர்ச்சனை கிடையாது; மந் திரங்கள் இல்லை; பூசை, வழிபாடு முதலிய சடங்கு கள் கிடையா.

விஞ்ஞானம் விளைவித்து வரும் விந்தைச் செயல் காரணமாக, எல்லாத் துறைகளிலும் எத்தனையோ மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டு வரும்

இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட, சமஸ்கிருதம், இந்தி போன்ற மொழிகள்தாமே பல துறைகளி லும் முன்னணியில் இருக்கின்றன. தமிழ் மக்கள் பலர் சிறிது காலமாக ஓரளவு விழிப்புணர்வு பெற்றுக் கிளர்ச்சி செய்து வந்தும் இன்னமும் தமிழ் அதற்குரிய தகுதியைப் பெறவில்லை.

இந்நிலையில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் நம் தமிழ்மொழி எந்நிலையில் இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். சமஸ்கிருத மொழியின் ஆதிக்கம் உச்சகட்டத்தில் இருந்த காலம் அது. சாத்திரங்கள், தோத்திரங்கள் எல்லாம் சமஸ்கிருதமயமாயிருந்தன. திருக்கோயில்களில் நித்திய நைமித்திகங்கள் நடக்குங் காலங்களில் சமஸ்கிருத மந்திரங்கள்தாம் ஓதப்பட்டு வந்தன. இறைவன் முன்னிலையில் வேத பாராயணம்தான் நடைபெற்று வந்தது. திருவிழாக் காலங்களில் உற்சவ மூர்த்திகளின் ஊர்வலங்களில் சுவாமிக்கு முன்னே வேதபாரகர்கள்தாம் வேத பாராயணம் செய்து கொண்டு சென்றனர். தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகிய தமிழ்த் தோத்திரப் பாடல்களோ சுவாமிக்குப் பின்னால்தான் பாடப் பட்டு வந்தன.

இவ்வித அவல நிலையை மாற்றுவதற்குப் பேரறிஞர்கள் பலர் பல காலமாக முயன்று வந்திருக்கின்றனர். அவர்களில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் **வேதாந்த தேசிகர்** என்னும் வைணவப் பெரியாராவார்.

1269ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் துப்புல் என்னும் கிராமத்தில் அனந்தசூரி, தோதாரம்மை ஆகிய தம்பதியர்க்குத் திருமகனாகப் பிறந்து 20 வயதுக்குள் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் மகா பண்டிதராக விளங்கிய வேங்கடநாதரை, திருமங்கையாழ்வார் பாடி மங்களாசனம் பெற்றிருக்கும் **திருவயிந்திரபுரம் வேதாந்த தேசிகர்** என்றால்தான் வைணவ உலகம் அவரை அறிந்துகொள்ளும்.

இவர் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் நூற்றுக் கணக்கான நூல்களை எழுதியிருக்கிறார். திருவயிந்திரபுரம் திருமால்மீது தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பல பாடல்கள் பாடியிருக்கிறார். 'இவரது சமஸ்கிருத நூல்கள் வால்மீகி, காளிதாசன் போன்றவர்களின் இதிகாச, காவியங்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறப்பு வாய்ந்தனவாயிருக்கின்றன' என்று சமஸ்கிருதப் பெரும் புலவர்கள் வியந்து பாராட்டுகின்றனர். அதுபோலவே 'இவரது தமிழ் நூல்களும் திவ்வியப் பிரபந்தங்களுக்குச் சமமாக மதிக்கத் தக்கனவாய் அமைந்திருக்கின்றன' என்று தமிழ் அறிஞர்கள் போற்றிப் புகழ்கின்றனர்.

வேதாந்த தேசிகர் தமிழில் சிறந்த நூல்களைப் படைத்து மக்களுக்கு வழங்கியதுடன் நிற்கவில்லை. இவர் நம் தமிழ் மொழியின் தனிச் சிறப்பை அனைவரும் அறியச் செய்திருக்கிறார். தாய்மொழிப் பற்று மிகுந்தவரான இவர், 'சமஸ்கிருதம் ஒன்றே சிறந்த மொழி; தமிழ் அதன் நிழலில்தான் வளர முடியும்' என்று வலியுறுத்தி வந்த வடமொழி வல்லாளர்களுக்கு அறைகூவல் விடுக்கும் முறையில், 'தமிழ்மொழி சமஸ்கிருதத்துக்குச் சரிசமமாக மதிக்கத் தக்க சிறப்பு வாய்ந்தது. இருக்கு, யஜுர், சாம வேதங்களுக்கு இணையானவை பன்னீராழ்வார்கள் அருளியுள்ள நாலாயிரப் பிரபந்தங்கள். பரம்பொருளைப் போற்றித் துதிக்கும் பிரபந்தப் பாடல்களில் பொதிந்துள்ள சமய தத்துவப் பேருண்மைகளும் வடமொழி வேதங்களில் உள்ளதைப் போலவே இருந்திருக்கின்றன' என்று சமயம் வாய்க்கையில் எல்லாம் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்.

இவர் வாழ்ந்த காலத்தில் திருமால் திருக்கோயில்களில் நித்திய நைமித்திகப் பூசைகள் நடக்கையிலும் பெருமாளுக்கும் நாச்சியாருக்கும் அருச்சனை செய்கையிலும் சமஸ்கிருதத்தில்தான் மந்திரங்கள் சொல்லப்பட்டு வந்தன. இந் நிலைகண்டு வெகுண்ட வேதாந்த தேசிகர் பெருமாள் திருமுன்னர் பூசை வேளைகளில் திவ்வியப் பிரபந்தப் பாடல்களையும் கட்டாயம் பாராயணம் செய்யவேண்டும் என்று வற்புறுத்தி அது நடைமுறையில் வருவதற்குப் பெருங்கிளர்ச்சி செய்தார்.

இதன் பயனாக, வைணவத் தலங்களில்—கோயில்களில் திவ்வியப் பிரபந்தம் படனஞ் செய்யப்பட்டு வருகிறது. உற்சவ காலங்களில் பெருமாள் ஊர்வலம் வருகையில் உற்சவமூர்த்திக்கு முன்னர் திவ்வியப் பிரபந்தப் பாடல்களை பக்தர்கள் பாடிக் கொண்டு போகும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. வேதபாராணம் சுவாமிக்குப் பின்னர்தான் நடந்து வருகிறது.

'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்று **குமரகுருபர சுவாமிகள்** திருமாலைத் துதிக்கையில் பாடுகின்ற சிறந்த நிலை வேதாந்த தேசிகர் போன்ற ஆன்றோர்களால்தான் ஏற்பட்டிருக்கிறது. தமிழர்க்கே உரியதான தமிழ்த் திருவேங்கடம் எனப்படும் திருப்பதி இன்று ஆந்திர அரசின் ஆளுகைக்குள் இருந்தாலும் திருவேங்கடநாதன் திருமுன் இன்றும் திவ்வியப் பிரபந்தமே பாராயணஞ் செய்யப்பட்டு வருகிறது. பக்தர்கள் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைத் தெலுங்கு எழுத்தில் எழுதி வைத்துக்கொண்டு பாராயணஞ் செய்து வருகின்றனர்.

வேதாந்த தேசிகர் தாம் கொண்டிருந்த சீரிய கொள்கைகளையும் தத்துவப் பேருண்மைகளையும் பாரதம் முழுதும் சுற்றுப் பயணஞ் செய்து பரப்பியிருக்கிறார்.

நூறாண்டுக் காலம் உயிர் வாழ்ந்திருந்த வேதாந்த தேசிகர் இறுதிவரை இல்லறத்திலேயே இருந்தாலும் உலகப்பற்றுச் சிறிதுமில்லாத உண்மைத் துறவியாக இருந்தார். முற்றுந் துறந்த முனிபுங்கவர் போல் வேதாந்த தேசிகர் வாழ்ந்தாலும் தாய் மொழிப் பற்றை மட்டும் விடாமல் கடைசி வரை அவர் அதன் ஆக்கத்துக்காகப் பாடுபட்டு வந்தார்.

அக்காலத்திலிருந்த வடமொழியாளர் பலர் இவரை ஒரு 'தமிழ் வெறியர்' என்று கூறி இன்னல் பல புரிந்தனர். இவர் அவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டார்.

வேதாந்த தேசிகர் இளமையில் சமஸ்கிருதத்தைப் போலவே, தமிழ் இலக்கியங்களை ஆர்வத்துடன் படித்தாலும், திவ்வியப் பிரபந்தத்தை ஆழ்ந்து கற்றுணர்ந்த பின்னர்தான் அப்பாடல்களில் நான்மறைகளின் பொருளெல்லாம் நிரம்பப் பொதிந்து இருப்பதையும், தூய தமிழ்மணம் வீசுவதையும், இனிமை ததும்புவதையும், பன்னீராழ்வார்களும் தமிழைத் தெய்வமாகப் போற்றுவதையும் அறிந்து தமிழ் மொழிமீது ஆராக் காதல்கொண்டு அதற்கு உரிய சிறப்பை ஏற்படுத்துவதற்கு அரும்பாடுபட்டார்.

நம் செந்தமிழ் மொழியில் வேத விழுப்பொருளை மட்டுமல்லாமல் தெய்வத்தையும் கண்டமையால் 'ஞானத் தமிழ்', 'ஒண்தமிழ்', 'தூய தமிழ்', 'சங்கத் தமிழ்', 'நல்லிசைத் தமிழ்', 'இன்தமிழ்', 'சீரார்ந்த தமிழ்', 'சீர்மலி செந்தமிழ்' என்றெல்லாம் **பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார், பூதத்தாழ்வார்** முதலியோர் தமிழ்மொழியை வாயாரப் புகழ்ந்திருக்கின்றனர். **நம்மாழ்வார்**, 'பண்ணில் இனிதான தமிழ்', 'செந்தமிழ் வேதம் தரிக்கும்' என்று தமிழையும், 'பால் ஏய் தமிழர் இசைகாரர்' என்று தமிழரையும் பாராட்டியிருக்கிறார். அதுமட்டுமா! அவர் தம்மைத் 'தமிழ் மாறன்' என்றே பல பாடல்களில் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்.

நம்மாழ்வாரைப் போலவே, சைவ சமயத்தின் பரமாசாரியாரான **திருஞான சம்பந்தர்**, 'நாளும் இன்னிசையால் தமிழ் பாடும் ஞானசம்பந்தன்', 'தமிழ் விரகன் ஞானசம்பந்தன்' என்று பெருமிதத்தோடு தம் பெயரைப் பல பாடல்களில் முத்திரையிட்டிருக்கிறார்.

இம் மெய்ஞ்ஞானிகள் மட்டுமா? **திருநாவுக்கரசர், சுந்தரர், காரைக்கால் அம்மையார், அருணகிரி நாதர், தாயுமானார், பட்டினத்தார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், இராமலிங்க வள்ளலார்** முதலிய அருளாளர்கள் இறைவனைத் தோத்திரிப்பது போலவே, இறைத்தன்மை வாய்ந்த தமிழையும் பலபடப் போற்றியிருக்கின்றனர்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்று **திருமூலர்** கூறியிருப்பதன் உட்பொருளை உணரவேண்டும்.

இறைவனைப் போலவே என்றும் நிலை பெற்றிருப்பது தென்தமிழ் என்ற பேருண்மையை, கம்பர், 'என்றும் உள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்' என்று அகத்தியரைக் குறிப்பிடுகையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தெய்வத்தையே தமிழ்மொழி வடிவாகத் தெரிவித்திருக்கிறார் **திருமங்கையாழ்வார்.**

வள்ளலார், 'தமிழ் மொழியோ மிக எளிதாகச் சுத்த சிவாநுபூதியைக் கொடுக்கும்' என்று விளக்கியிருக்கிறார்.

'தமிழ்' என்பதற்கு அவர் தனி உரையே கூறியிருக்கிறார்.

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் இருந்த சங்கராசாரியார் ஒருவர் இவரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தபோது, 'சமஸ்கிருதமே மாத்ரு பாஷை' என்று சொன்னாராம். உடனே வள்ளலார், 'அப்படியானால் தமிழ் பித்ரு பாஷை என்று சொல்லலாம்' என்று பதிலளித்துத் தமிழின் மேன்மையை நிலைநாட்டியிருக்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த **தண்டபாணி சுவாமிகள்**, 'தமிழ் மொழியே தாரணியில் வழங்கிவரும் மொழிகளில் தலைசிறந்து விளங்குவது' என்று உயர்வாகக் கூறி, நூறு பாடல்கள் பாடியிருக்கிறார். தமிழ்மொழியின் பெருமையுணராது வாதிட்ட வம்பர் இருவருக்குத் தெளிவையுண்டாக்கவே அப் பாடல்களைப் பாடினாராம்.

தொழிலுக்காகத் தமிழைப் படித்துவிட்டு, உண்மையில் மொழிப் பற்றில்லாத போலிப் புலவர்களை கருத்தில் கொண்டு,

''தமிழ் மொழிக்கு உயர்மொழி
தரணியிலே உளதெனில்
வெகுளியற் றிருப்போன்
வெறும்புல வோனே!''

என்று அவர் சாடியிருக்கிறார்.

கல்லாடனார் பாடியிருப்பது போலத் தமிழ்ச் சுவையைத் திரட்டி மற்றவர்க்குத் தெளிதரக் கொடுத்தவன் தென்தமிழ்க் கடவுள் ஆதலால்தான் 'உன் பற்றொழிய வேறு ஒரு பற்றுமில்லை உடையவனே' எனப் பரம்பொருளின் திருவடிகளைப்

பற்றுவதே பெரும் பற்றாக எண்ணிக் காலங்கழித்து வந்த துறவிகள்கூடத் தெய்வத் தமிழ்மீது பற்று மிகக் கொண்டிருந்தார்கள்போலும்.

அகத்தியர், தொல்காப்பியரிலிருந்து அதாவது சங்க காலப் புலவர்களிலிருந்து குமரகுருபரர், சிவப்பிரகாசர் போன்ற பிரபந்தங்கள் இயற்றியவர்கள் வரை தமிழ் இலக்கிய இலக்கணங்கள் செய்தவர்களெல்லாம் துறவிகளாகத்தானே இருக்கிறார்கள்.

தாம் இன்னார் என்று அறிவிக்காமலே, மதுரை சொக்கேசப் பெருமான்மீது தமிழைத் தூது விடுத்துப் பாடியிருக்கிறார் ஒருவர். 'மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது' என்ற அந் நூலில் அவர்,

''இருந்தமிழே! உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்''

என்று கூறித் தமிழ்மீது தமக்குள்ள பற்றை வெளிப்படுத்தியிருக்கிறார்.

நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த மாபெருங் கவிஞர் சுப்பிரமணிய பாரதி, ''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று அறுதியிட்டு உறுதியாகப் பாடியவர், 'தமிழ் மொழியைவிட உயர்ந்த மொழியொன்று உலகில் உண்டு என்று யாரேனும் சொல்வார்களேயானால் அதைக் கேட்டு என் உள்ளங் கொதிக்கிறது' என்று ஆராமையோடு தெரிவித்திருக்கிறார்.

பாரதி வழிவந்த பாரதிதாசனும்,

''தமிழுக்கு அமுது என்றுபேர் — இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்''

என்று உயர்த்திப் பாடியிருக்கிறார்.

முற்றுந் துறந்த முனிவர்களும் மற்றும் ஆன்றோர்களும் வெளிப்படுத்தியுள்ள தமிழ்ப் பற்றானது இன்றைய தலைமுறையினருக்குத் தாய்மொழிப்பற்றையும் இனப்பற்றையும் உண்டாக்கும் என்பது திண்ணம்.





அண்ணாவின் நாடகங்களில் அருந்தமிழ்

டாக்டர் இரா. சனார்த்தனம், எம்.ஏ., பிஎச்.டி., எம்.எல்.சி.

ஓர் எழுத்தாளரை நாட்டு மக்கள் அவரது படைப்புகளின் கருத்திழைகளைக் கொண்டே தெளிவாகவும் அறிவோடும் உணர்ந்துகொள்கிறார்கள்.

ஓர் உண்மை நாடக இலக்கியப் படைப்பாளன், தனது காலத்தின் அறைகூவலை, தான் வாழும் சமூகத்தை, தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை, அறிவால் மட்டுமன்றி உணர்ச்சிவாயிலாகவும் உணர்ந்து அதன் நெஞ்சக்குமுறலைத் தன் படைப்புகளிலே எதிரொலிக்கச் செய்கிறான். அவனது படைப்பிலக்கியங்கள் அந்தந்தக் காலத்தைக் காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன. அவை காலத்தை எதிரொலிக்கச் செய்கின்றன. தன் காலத்தை எதிரொலிக்காதவன் படைப்பாளனே அல்லன் என்றும் கூறலாம். இலக்கியத்தைச் சமூகத்தின் எதிரொலி என்று கூறும்போது அண்ணாவின் நாடகப் படைப்புகளிலும் இந்த உண்மையே நிரம்பியுள்ளது.

அண்ணா வாழ்வின் முக்காற்பங்கு காலம் நம் நாடு அடிமைப்பட்டிருந்த காலம். மாற்றானுக்கு மட்டுமல்லாமல் அறியாமையின் விலங்குகளான வருணாசிரமம், மதம், சாதி, சமயங்களாலும் கட்டுப்பட்டு வாழ்ந்த காலம். விவேகானந்தர், இராமலிங்க அடிகளார், காந்தியடிகள், தன்மான இயக்கத் தலைவர் பெரியார் ஈ.வே. ரா., பாவேந்தர் பாரதிதாசன், எம். என். ராய் போன்றோர் அறைகூவலை, சங்கொலியை, விடுதலைப்பாட்டைக் கேட்ட பின்னும் உறக்கத்திலிருந்தும், தம்மைப் பிணித்துள்ள தளைகளினின்றும் முற்றிலும் மீளா நிலையில் இருந்த காலம்.

அரசியல் வாழ்வு மட்டுமின்றிச் சமுதாய வாழ்வும் சீர்குலைந்து மாந்த உணர்வே அப்போது நசிந்து கிடந்தது. முடைநாற்றம் வீசுகின்ற மூடக்கொள்கைகளும், பிற்போக்கான எண்ணங்களும் பொருளற்ற கட்டுதிட்டங்களும் மாந்தனை மேலும்மேலும் அடிமைச் சேற்றிலே உழலவைத்துக்கொண்டிருந்த காலம் அது.

இந்த நூற்றாண்டில் இந்திய இலக்கியம்—அது எந்த மொழியினதாக இருப்பினும் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு முன் ஏறக்குறைய ஒரே நிலையில்தான் இருந்தது. நாடக இலக்கியம் பெரும்பாலும் பொழுதுபோக்காக மனத்தைக் கவரும் விண்ணகக் கனவுலகின் வாயிலாக விளங்கியது. இல்லையென்றால், கழிகாமமும் அறியாமைப் பின்னல்களும் மண்டிக் கிடந்தன. உயிருணர்ச்சி அற்று உழன்று கிடந்தன.

தமிழின் தன்மான இயக்கம், புதிய தமிழ்க்கலை முன்னேற்றம்பற்றிப் போர்க்குணம் மிக்க கருத்துகளை உருவாக்காமல் இருக்க முடியவில்லை. புரட்சிக்குரிய வழிகளைக் கண்டறியவேண்டியிருந்தது.

இத்தகைய நிலையில் பகுத்தறிவுப் பாசறையில் புகுந்து தளபதியாக விளங்கிய அண்ணா, தன்மான இயக்க எருவுண்டெழுந்த, மாந்தன்மை என்னும்

மணம் பரப்பும் இலக்கியத்தின் பல்வேறு துறைக்கும் சான்றாகும் காவணம் ஆனார். மேனாட்டின் தாக்கங்களால், படித்த மேல்மட்ட இனத்தாருக்கொத்த காதல், வீரம், துன்பம் போன்ற பொதுவுணர்ச்சி மீறிய உணர்வுகளை இலக்கியம் என்று படைத்துக்கொண்டிருந்த காலத்தில், மாந்த வாழ்வின் துலங்கல்களுக்குக் குரல் கொடுத்தார் அண்ணா. அவரின் முன்னோடிகள் இராமலிங்க அடிகள், மாயூரம் வேதநாயகம், பாரதி, வ.ரா., பாவேந்தர் பாரதிதாசன் முதலியோர் ஆவர்.

மக்களைப்பற்றி எண்ணி மக்களுக்காகத் தம் கல்வியறிவினையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும், படைப்பாற்றலையும், பயன்படுத்தியவர் அண்ணா. இருபெரும் உலகப் போர்களுக்கிடையிலும், போரின் பின்னும் இந்தியாவில் மூண்டெழுந்த நாட்டுரிமை வேட்கைக்கும், சீர்திருத்த எண்ணங்களுக்கும் தம் எழுதுகோலைப் பயன்படுத்தி, அடித்தள, நடுத்தர, வாழ்வின் சிக்கல்களையும் வேறுபாடுகளையும் குறித்து அதற்கு முன் இல்லாத புதிய இலக்கியங்களைப் படைத்தவர் அண்ணா. இன்றைய இலக்கியத்தின் பன்முக வளர்ச்சிக்கு அண்ணா வழிகாட்டி என்றால், அது மிகையாகாது. உழைக்கும் இனத்தினர் படும் துன்பமும், மேல் வகுப்பினரான மேட்டுக்குடியினரின் அட்டூழியமும், சமூகத்தில் பணத்திற்கும் பொருளற்ற நடைமுறைகளுக்கும் கொடுக்கப்படும் மதிப்பும், சமுதாயத்தில் புரையோடி நின்ற தீண்டாமை, சாதி வேறுபாடுகள், சமயச் சழக்குகள் இவற்றின் தீமைகளும் அண்ணாவின் உள்ளத்தை பாதித்தன.

படிப்படியான மாறுதல்களின் வழியாகவும், புரட்சியின் போக்காலும் முற்போக்கு ஏற்படலாம் என்பது அண்ணாவின் கருத்து; புரட்சியும் முறையான மாறுதலும் ஒரே சமயத்திலும் நடக்கலாம் என்பது அண்ணாவின் உட்கிடை.

அறிஞர் அண்ணா அவர்கள் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், அறிஞர் எம். என். இராய், பெரியார் ஈ.வே.ரா. போன்றோரின் முற்போக்கு எண்ணங்களைக் கலை வடிவில் தந்த புரட்சி நாடக ஆசிரியர் மட்டுமன்று; பெரும் முன்காணி (தீர்க்க தரிசி) என்பதும் தெளிவாகும்.

அண்ணாவின் அனைத்து நாடகங்களின் முடிவெல்லையைக் காணில் பழையன கழித்தலை எதிர்ப்பவர்கள் தாமே ஒழியும்படியான நிலையை அமைத்துக் கொள்கிறார்கள் என்பதுதான் புரிகிறது. இலக்கிய வானிலும், சமூக உலகிலும் அண்ணாவின் கலை இலக்கிய விதைகள் விண்மீனாகவும் நெல்மணியாகவும் என்றும் விளங்கும்.

அதனால்தான் சமூகச் சீர்திருத்தத்தோடு அரசியலையும் தம் வாழ்வோடு இணைத்துப் 'புதியதோர் உலகம் செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்' என்று பாவேந்தர் குரலுக்குச் செயல் வடிவம் தரத் தொடங்கினார்; கொழுந்தழலானார். அதன் எதிரொலிதான் அண்ணாவின் நாடகங்கள்.

காந்தி ஊழியில் தொண்டராகத் தமிழ்த்தென்றல் திரு. வி. க. விளங்கியதுபோல், பெரியார் ஈ. வே. ரா. ஊழியில் சிந்தனையாளராக அண்ணா காணப்படுகிறாரே தவிர, எந்த ஓர் இனத்திற்கும் தன்னை முற்றிலும் இழக்கவில்லை. பாவேந்தர் பாரதிதாசன் தமிழியக்கமாக விளங்கியதுபோன்று, அண்ணா தமிழக இயக்கமாக விளங்கினார். சிந்தனைமிக்க தலைவர் வரிசையில் ஒருவராக விளங்கினார்.

காந்திய-மார்க்சிய-இலெனினியக் கோட்பாடுகள் கருத்துகள் பலவற்றை அவர் அறிவோடும் உணர்வோடும் ஏற்றுக்கொண்டிருக்கிறாரே தவிர, உணர்ச்சி வேகத்தில் கண்மூடித்தனமாக அப்படியே அவற்றைப் பின்பற்றவில்லை. தாமே ஒரு புத்துணர்வு இயக்கமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

1934-ல் அண்ணா, எழுதத் தொடங்கினார். இறுதி மூச்சு வரை எழுதினார்; பேசினார். *1969*-ல் சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்துத் தமிழக ஆட்சியைக் கைப்பற்றிய இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மறைந்தார். ஏறக்குறைய முப்பது சிறுகதைகளும், ஆறு புதினங்களும், இருபதுக்கும் மேற்பட்ட நீண்ட நாடகங்களும், அரசியல்-பொருளாதார-இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் முன்னூற்றுக்கு மேலும் எழுதிய அண்ணாவின் எழுத்தும் பேச்சும் மக்களுக்காகவே இருந்தன. அவர் நடத்திய 'திராவிட நாடு', 'காஞ்சி' ஆகிய இரு தமிழ் ஏடுகளும், 'தாயகம்' (Home Land), 'தன்னாட்சி' (Home Rule) என்ற ஆங்கில வார ஏடுகளும் அவர் மக்கள் எழுத்தாளர் என்பதையும் காட்டும் சான்றுகளாகும்.

வானொலியிலும் கல்லூரிகளிலும் சிறப்பு மாநாடுகளிலும் அண்ணா எடுத்துப் பேசிய பேச்சுகள் அத்துணையும் மக்கள் நலப் பற்றுடனும் நாட்டுப் பற்றுடனும் விளங்கின. தம் நாட்டின் பழம் பெருமையையும் ஆற்றலையும் நினைத்து நினைத்துத் தானே ஒரு புத்துணர்வு இயக்கமாக இயங்கியவர் அண்ணா. வல்லவர்கள் தங்கள் நற்பெருமைக்குப் பொருந்தும்படியே எல்லாவற்றையும் புரிந்து தொண்டு புரிகிறார்கள் என்பதற்கு அண்ணா ஓர் எடுத்துக்காட்டாவார்.

ஒருவன் ஒரு நாட்டின் குடிமகன் என்பதுபோல், ஓர் ஊழியன் குடிமகனாகவும் வாழ்வான் என்பதைச் சொல்லாமல் செய்து காட்டிய பெருமகன் அண்ணா!

அறிஞர் அண்ணா இன்று நம்மிடையே இல்லை. ஆனால், அவர் தாம் மக்களின் தோழர் என்பதையும், அவர் காலத்தின் தோழர் என்பதையும், அவர் காலத்தின்பாலும் மக்கள்பாலும் பொறுப்புணர்ச்சி கொண்ட தலைமகனாக இருந்தார் என்பதையும், நன்றியுணர்ச்சி உள்ள ஒவ்வொரு தமிழன் நெஞ்சமும் நன்கு உணரும்; அறியும்.

அண்ணா அவர்கள் இறந்தபோது, குடியரசுத் தலைவர் மேதகு வி. வி. கிரி அவர்கள், 'அண்ணா நாடாளுமன்றத்திற்கு வந்தது, அவரைத் தேசத்தின் அரசியல் வாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்தது. நாடெங்கிலும் மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற இது பெருமளவு உதவியது. இந்த அவையில் அவர் ஆற்றிய உரைகள் மரியாதையுடன் கேட்கப்பட்டன. ஏனெனில், அவர் நெஞ்சத் தூய்மையுடனும் பண்பாட்டுடனும் பேசினார்' என்று குறித்தார்கள். அண்ணா, நாட்டு மக்களையே அவர்தம் நல்வாழ்வையே நினைத்ததால்தான் நாடாளுமன்றத்தில் நெஞ்சத் தூய்மையுடனும் பண்பாட்டுடனும் நடந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணா மக்கள் எழுத்தாளர் என்பதற்கான மேற்கோள்களை முன்பகுதியிலே குறித்திருப்பதால் இவ்விடத்தில் மீண்டும் சுட்டிக்காட்டத் தேவையில்லை. முதல் நாடகமாகிய 'சந்திரோதய'த்திலிருந்து இறுதியாகத் தீட்டிய 'இன்ப ஒளி' வரை உள்ள நாடகங்கள் எவையாயினும் பலவிதமான பாடுகளை (சிக்கல்) அடிப்படையாகக் கொண்டவை. கண்ணீரும் புன்னகையும் கரைபுரளும் புண்பட்ட உள்ளத்துடன் எதனையும் எழுதினார். எந்தப் பாட்டினையும் சிக்கலையும் அண்ணா ஒரே நோக்கில் ஆராயவில்லை. வாழ்க்கையின் பற்பல கோணல்மாணல்களை, அவலங்களை, தொல்லைகளை அலசல் (Analytical) பார்வையுடன் அணுகித் தீர்த்துள்ளார்.

அண்ணா, தம் நாடகங்களில் அறிவுரையாளராக எந்த ஒரு பண்போவியத்தையும் படைத்து மேடையில் விடுவதில்லை. அவரவர் பாடுகளை, அவரவர் அறிவாலும் முயற்சியாலும் தீர்த்துக்கொள்ளவே விடுவார்.

அண்ணா, அனைத்து நாடகங்களிலும் பாடுகளுக்கு உள்ளாவார். இடைநிலையிலும், கடைத்தளத்திலும் வாழ் மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் மிட்டா மிராசுகளை, ஜமீன்களை, மதாசாரியார்களை, செல்வக் குடியினரைத் தம் நாடகங்களில் தீயவர் (Villains) களாக்குவர். இறுதி வெற்றி முன்னவர்க் காக்குவதே அண்ணாவின் இயல்பு. அழுத்தப்பட்டோரின், பழிவாங்கும் தன்மையைச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாய் விளங்குவோரைக் கல்வி எரியும் கனலெரியை அறநெறி வழுவாமல் செய்வதில் அண்ணா வல்லவர்.

'பாவையின் பயணம்'— நாடக நூலில் வரும் வனஜா, சித்திரப்பாவை, பதுமை, சோசபைன் முதலியோர் காலங்காலமாய் ஒடுக்கப்பட்ட பெண்ணுரிமையற்ற மாதரினத்தின் எடுத்துக்காட்டுகளாகவும் அந்தப் பழநிலையை எதிர்க்கும் புதுமைப் பெண்களாகவும் விளங்குகின்றனர். நாடகாசிரியர், தாம் யார் பக்கம் இருந்து வாதாடுகிறார் என்பதை நன்கு உணர்த்துகிறார். அண்ணா கையாண்டிருக்கும் மாதர் உரிமைப்பாடு அன்றிலிருந்து இன்றுவரை, நமது சமூகத்தை இமயத்திலிருந்து குமரி வரை நீண்டு பரந்து கிடக்கும் இப்பெரும் நாவல நாட்டைப் பிடித்துத் தின்னும் புரையோடிய புண் என்பதை நாம் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

'ஓர் இரவு' நாடகத்தில் சமூகத்தின் மேல் மட்டத்தினர் புரியும் அட்டூழியத்தால் கருகிய மொட்டான சொர்ணம், அபலைப் பெண்களின் எரிமலை மனத்தின் இயக்கமாகவே சித்திரிக்கப்படுகின்றாள். பெண்கள்மீது பரிவும், இரக்கமும் காட்டாத பேயர்கள்மீது அநீதிக்கு எதிராகிக் கொதித்தெழச் செய்கிறார். இந்திய நாடு விடுதலையடைந்தபோது வாழ்க்கையே குமுறிக்கொண்டிருந்தது; எதிர்க் குரலை எரிமலை போல் தரவேண்டிய கட்டாயம் இருந்தது.

'வேலைக்காரி' நாடகத்திலும் எதிரியாகிய ஆனந்தனின் உயர்வுக்கும், காதல் உணர்வுக்கு ஆட்பட்ட ஏழைப்பெண்ணின் அன்பு வெற்றி பெறுவதற்கும் அண்ணா தம் எழுதுகோலைப் பயன்படுத்தியுள்ளார். சமூகப் பகைவனே சமயவாதியாக வேடமிட்டு ஒழுக்கத்தைச் சாய்ப்பதைக் காட்டுகிறார்.

பொய் புதைந்த பேச்சையும் போலித்தனத்தையும் அண்ணா தம் நாடகங்களில் எள்ளி நகையாடுகின்றார். இவர்தம் சீர்திருத்தப் பகுத்தறிவு நாடகங்கட்குச் சிறப்புப் பொருளாய் அமைந்தவர் சமூக மாந்தர்களே. இவர்களுடைய பேதைமைச் செயல்களும் பகட்டுப் பாவனைகளும் கடந்த இருபதாண்டின் முன் எப்படி நகையம்புக்கும் வசைவில்லுக்கும் இலக்காயிருந்தனவோ அப்படியே இன்றும் அதற்கு இசைவாய் அமைந்துள்ளன. 'சந்திரோதயம்', 'வேலைக்காரி', 'இன்ப ஒளி' நாடகங்கள் பகல் வேடதாரிகளையும் சமயத்தின் பேரால் நடக்கும் நல்லொழுக்கக் கபட வேடங்களையும் நையாண்டி செய்கின்றன.

வாழ்வின் நடுமைப் பருவத்தில் செய்ய எண்ணித் தம் இறுதிக்காலத்தில் எழுதி முடித்த 'இன்ப ஒளி' நாடகத்தில், உலகிலே போர் என்ற சொல்லே இல்லாமல் செய்யும் ஓர் அறிவியல் அறிஞரை அறிமுகப்படுத்தி, அவர் வழி இரு நாடுகளிடை எழும் போரைத் தடுத்து, பின் அவ்வறிவியல் அறிஞர் மாள்வதாக அமைத்துள்ளார். கட்டுக்கடங்கா உணர்ச்சிப் பெருக்கும் உறுதி தளரா உள்ளொளி பெற்ற பண்பும்

கொண்டே ஆன்றோரின் அழகுலகை அண்ணா படைத்துக் காட்டுகிறார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற குரலை இரண்டாம் உலகப் போரில் எதிரொலித்த விண்டல் வில்கியின் குரலையும், பெர்ட்ரண்டு ரசல் குரலையும் இந்த நாடகத்தில் ஒருங்கே கேட்க முடிகிறது.

அமெரிக்க அறிஞர் ஓர் இடத்தில் குறிப்பிட்டது போல 'ஒருவன் நூலாசிரியன் ஆவதற்கு அறிவுத் திறன் மட்டும் போதாது; நூலுக்குப் பின்னால் ஒரு மனிதன் இருக்கவேண்டும்' என்பதை அண்ணா நாடகங்கள் அனைத்திலும் காணலாம்.

காவியப் புலவர் கம்பருக்குத் தன்மேல் இரக்க மில்லையே என்று இராவணனைக் கொண்டு ஒரு கற்பனைக் கதையுறுப்பினர்க்காக 'நீதிதேவன் மயக்கம்' எழுதிய அண்ணா, 'இரக்கம் எங்கே' என்ற நாடகத்தில் ஏழைக்குச் சமுதாயத்தில் இடம் இல்லையே என்று ஏங்கி எண்ணப் பெருமூச்சு விடுகிறார். அன்பின் இயக்கமே கலைகளுக்கு மூல காரணமாவதால், தாழ்ந்தோரின் எழுச்சிக்குப் பரிந்தோம்பிச் செல்லும் தோழமை எந்த இலக்கிய ஆசிரியனுக்கும் இயற்கைப்பண்பின் கூறாகும். அண்ணாவிடம் அந்தப் பண்பே எப்பொழுதும் கனிந்து கொண்டிருந்தது. அறிவை – தெளிவை ஓயாது நாடும் பொறுப்புள்ள மாந்தருக்கே இப் பண்பு வாய்க்கும். எண்ணற்ற ஓரங்க நாடகங்களிலும் ஊரார் உரையாடல்களிலும், பொருளாதாரத்திலும், சாதி மத நுகத்தடிகளாலும், கல்வி வேற்றுமையாலும் அழுத்தப்பெற்ற, புறக்கணிக்கப்பட்ட மக்களின் சார்பிலே இருந்து தமது கலையாற்றலைப் பரிவுடன் அத்தகையோரை உயர்த்தும் பணிக்குப் பயன்படுத்தினார்.

அண்ணாவின் நாடகங்களில் காட்சியளிக்கும் கதை மாந்தர்கள் தமிழக மக்களிடையே மட்டும் பொருந்தி நிற்கவில்லை. அடிமையும், முதலாளியமும், கொடுமையும், ஒடுக்கு முறையும், மூட நம்பிக்கையும் ஆட்சி செய்யும் ஒவ்வொரு நாட்டிலும் பல வகையில் உலாவக் காண்கிறோம் என்பதைப் படிப்போர் உணர்வது திண்ணம்.

புதுமைக்கு வழிகாட்டி

ஒவ்வொரு மாந்தனும் தாம் ஏன் வாழ்கிறோம்; எதற்கு வாழ்கிறோம்; வாழ்வின் குறிக்கோள்தான் என்ன? என்று அறிவதே சிறப்பு. நம் நாட்டில் இதனை மறந்து வாழ்வோரே மிகுதி. அந்த மக்களுக்கு வாழ்வுபற்றிய விளக்கம் தந்து வாழ்வின் பத்தைப் பெறத் தமது எழுதுகோலால் வழிகாட்டியுள்ளார் அண்ணா.

அண்ணாவின் எண்ணங்கள் மேன்மையானவை; கொள்கைப் பிடிப்புள்ளவை. கோட்பாட்டின் இன்றியமையாத அடிப்படைக் கூறுகளில் அவர் எப்போதும் உறுதியுடன் இருந்தார். அவருடைய பிற எழுத்துக்களைப் போல, மேடைப்பேச்சுகளைப் போல, நாடகங்களும் திரைப்படங்களும், ஓர் அமைதியான உறுதியுடனும் நம்பிக்கையுடனும் மிளிர்வதைக் காணலாம்.

சிறு நாடகமாயினும் பெரு நாடகமாயினும், நாடகக் கதையுறுப்பினர்களில் ஏழை எளியவர்கள் வெற்றி பெறுவதைக் காட்டி, வாழ்வில் நம்பிக்கையூட்டுவதில் அண்ணாவின் நாடகங்கள் அனைத்தும் கலங்கரை விளக்கமாக விளங்கின.

அண்ணாவின் நாடகங்கள் தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், புறக்கணிக்கப்படுவோர் தம் எதிரொலியாக மட்டுமல்லாமல் அவர்களைத் தம் நிலையிலிருந்து விடுதலை பெற்று, உரிமை வாழ்வில் உயர்த்தும் கருத்தேணியாகவும் பயன்பட்டன. புதிய எழுச்சியையும், எண்ணத்தையும், நம்பிக்கைகளையும் உண்டாக்கின.

அண்ணாவின் நாடகங்களைப் படித்தாலும் சரி, பார்த்தாலும் சரி, இனிமையில் தோய்ந்துவிடுவோம் என்று கூறமுடியாது. சிக்கல்களின் ஆழமும், வாழ்வியல்பின் கசப்பான உண்மைகளும், அடித்தளத்து உழைக்கும் இனத்தின் துயரமும், அவர்களிடையே மண்டிக்கிடக்கும் மூடப் பழக்க வழக்கங்களும் நம் மனத்தில் உறுத்திக்கொண்டேயிருக்கும். கண் எதிரே உள்ள உரிமைகளை மறந்து கற்பனைப் போதைகளிலே நாம் திளைக்க முடியாது.

அண்ணா கீழே விழுந்து கிடப்பவனை மேலும் காலால் இடறிவிட்டுச் செல்ல முற்படவில்லை. கை கொடுத்து நிறுத்தி அவன் கண்ணீரைத் துடைத்து 'நீ மாந்தன், எல்லோரையும் போல் நீயும் வாழப் பிறந்தவன்' எனக் கூறி, அவனது நாடி நரம்புகளிலே விழிப்புணர்ச்சியை பாயச் செய்து வழி நடத்திக் காட்டுகிறார்.

காலத்தோடு ஓட்டிய ஓட்டம்

காலத்தின் மாற்றத்திற்கும் வேகத்திற்கும் ஏற்ப அண்ணாவின் அரசியல் கோட்பாடுகள் மாறிக்

கொண்டே போயின. அவற்றை எந்த ஒரு நாடகத்திலும் அண்ணா புகுத்தவில்லை. மாறாக, நாட்டு மக்கள் விடுதலை பெறவேண்டும் என்ற பேரவாவும், பெற்ற பின், சமுதாயத்தில் வாழும் மாந்தன் முதலில் தன்னைத் தானே பழைமைத் தளைகளினின்றும் அறியாமை இருட்டினின்றும் விடுவித்துக்கொள்ள வேண்டும் என்ற வேட்கையுமே அவர்தம் நாடகங்களில் நிறைந்திருக்கக் காணலாம்.

சமூகத்தின் மேல் மட்டத்தில் இருந்துகொண்டு தங்களைச் சுற்றிலும் வாழும் மக்கள், எப்படி வாழ்கின்றார்கள் என்பதைப்பற்றி எண்ண மறுத்தவர்களை மட்டும் அவர் சீர்திருத்த நினைக்கவில்லை. தனி மாந்தன் தன்னைத்தானே திருத்திக்கொண்டு விருப்புடன் மக்களோடு மக்களாய் முன்னேறாதவரையில், பாடுகளுக்கு ஒரு முடிவில்லை என்பதையும் உணர்ந்ததால்தான், அவர்தம் நாடகங்களில் வேதாசல முதலியார் (வேலைக்காரி), சிங்காரவேல் (சந்திரோதயம்) முதலியோரைத் தம்தம் பிழைகளை உணர்ந்து திருந்துபவர்களாக உருவாக்கி நடமாட விட்டார்.

''என்மேல் 'ஆரியமாயை' நூலுக்காக வழக்குத் தொடரப்பட்டது. பிரிவு 153 என்பது ஒரு சமுதாயத்தின்மீது வெறுப்பு வளர்ப்பதைக் குறிக்கும். என்னைக் கோர்ட்டுக்கு அழைத்து தண்டம் விதித்துச் சிறைக்கு அனுப்பினார்கள். நான் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்தேன். அங்கே முழு பெஞ்சும் அமர்ந்திருந்தது. அந்தச் சமயம் பெரிய நீதிபதியாகிய கனம் இராஜமன்னார் இருந்தார். திரு. பதஞ்சலி சாத்திரியும், திரு. சந்திரா ரெட்டியும் அங்கிருந்த வேறு இரு நீதிபதிகள். திரு. சந்திரா ரெட்டி இப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர்கள் அனைவரும் என் சார்பில் தீர்ப்பளித்து, அண்ணாதுரை ஒரு ஏற்பாட்டை எதிர்க்கும்போது இப்போதுள்ள பிராமணர் எரிச்சல்பட வேண்டியதில்லை என்று கூறிவிட்டார்கள். மேலும் அவர்கள் தீர்ப்பில், யாராவது கோபப்பட வேண்டுமானால் வசிட்டரும் வியாசரும் அல்லாமல் வரதாச்சாரிகளும் பிறருமல்ல'' என்று கூறினார்கள்.

ஏனென்றால், இவர்கள் அந்த ஏற்பாட்டின் வழி வந்தவர்களே அல்லாமல் அந்த ஏற்பாட்டை உண்டாக்கியவர்கள் அல்லர். ஆகவே, சமுதாய முன்னேற்றத்திற்கான பிரசாரம் நடக்கும்போது பிராமண சமுதாயத்தினர் முக்கியமாக பிராமண இளைஞர்கள் வருந்தவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

இதன்வழி அண்ணா இனப்பகைவர் அல்லர் என்பதும், மாந்தனுணர்வு மிக்கவர் என்பதும் நன்கு புலப்படும். இதனை உறுதிப்படுத்தும் முத்திரைச் சொல்லாகச் சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் மருத்துவப் பேரறிஞருமான திரு. ஏ. எல். முதலியார் அவர்கள், 'அண்ணா அவர்கள் எந்த ஒரு மாந்தருக்கெதிராகவும் எப்பொழுதும் வெறுப்புணர்ச்சி கொண்டதில்லை. நியாய உணர்வை மதித்திடும் பான்மை பெற்றிருந்தார்' என்று குறிப்பிடுகின்றார்.

தமிழ் நாடக இலக்கியத்திற்கு அண்ணாவின் பங்கினை எண்ணிப் பார்த்தால் ஒவ்வொன்றும் வியப்பையே விளைவிக்கும். நாடகம் எழுதுவதற்குப் பல்லுடைக்கும் பண்டிதத் தமிழை ஒதுக்கினார்; பழகு தமிழைக் கையாண்டார்; வழக்கு மொழி என்று இழிந்த கொச்சை மொழியைக் கையாண்டதில்லை. பழகு தமிழைப் பயன்படுத்திப் பைந்தமிழுக்கு உயர்வையும் சிறப்பையும் கூட்டினார்.

அண்ணா தம் கருத்துகளில் தன்னம்பிக்கையும், தொலை நோக்கும், வாழ்வை உறுதிப்படுத்தும் உணர்வையும் கொண்டிருந்தார். அவர் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் தம் நாடகங்களில் புகுத்திக் காலத்தின் கண்ணாடியாக விளங்கினார்.

''செப்பு மொழிபதி னெட்டுடையாள்—எனில்,
சிந்தனை ஒன்றுடையாள்''

என்ற பாரதி மொழிக்கும்,

''தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலம்தான் தீர்ந்த தாலே''

என்று பாவேந்தர் காட்டிய உலக ஒற்றுமையைக் காண மிக ஆர்வத்தோடு அவர் கனவு கண்டார்.

அழகியல் உணர்ச்சியை எழுச்சியை, அன்பியல் விழிப்பை உண்டாக்கவும், மெய்யறிவைப் பெருக்கவும், வாழ்விலும், கலையிலும், இயற்கையிலும், மாந்தனிலும், அழகைக் காணும் ஆற்றல் பெறச் செய்தார் அண்ணா. புதிய வாழ்வின் அன்பு, அறிவு, மேன்மை ஆகிய மாபெரும் செல்வங்களை அண்ணா மிக மிகத் தெளிவாக உறுதியுடன் தம் நாடகங்களில் சித்திரித்தார். மாந்தன் எவ்வாறு இருக்கின்றான்,

எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் தீட்டிக் காட்டினார். வருங்காலத் தலைமுறைக்கு ஒளிமயமான நம்பிக்கை நெறியினைக் காட்டினார். அதனால்தான் அவர் நாடகங்கள் உண்மையும் அன்பும் அழகும் வாய்ந்த மாந்த இனத்தின் தூதனாகவும் வாழ்வை வளமுறுத்தி உறுதிப்படுத்தும் ஆற்றலைச் சுமந்துவரும் இயக்கமாகவும் ஒளிர்கின்றன.

அண்ணாவின் நாடக இலக்கியங்கள், புரட்சியின் உயிரும் புத்துணர்வும் கொண்டவை. கூற வேண்டியவைகளை அழுத்தம் திருத்தமாகக் கூறும் துணிவும், ஆற்றலும், தெளிவும் அவருக்கு இருந்தன. ஆட்சி, அதிகாரம், காவல், சிறை, செல்வர்கள், புனைந்துரை பேசும் வழக்கறிஞர்கள், போலிப் பண்டிதர்கள், வைதீகர்களிலிருந்து சமூகத்தின் மேல் தட்டு – அடித்தளம் வரை அவர் சித்திரிக்காத மாந்தர் யாருமில்லை. சிற்றூர், நகரம், தனி மாந்தன், குடும்பம், நகராட்சி, தற்கால அரசாட்சி, தருமமடாலயங்கள், குடியானவர்கள், மன்னர்கள், பாவலர்கள், நிலக்கிழார்கள் என அவரது எழுதுகோல் தீண்டாத பகுதியே இல்லை எனலாம்.

அகத்திலிருந்து புறத்தைத் திருத்துவோர் பலர். புறத்திலிருந்து அகத்தைத் திருத்துவோர் சிலர். ஆனால், அண்ணா. அகத்திற்கும் புறத்திற்கும் இடையிலிருந்து அகத்தையும் புறத்தையும் திருத்தும் பணியில் ஈடுபட்டார்.

அனைத்து நாடகங்களிலும் தமது நேரிடையான நுகர்வுகள், வாழ்க்கை உணர்த்திய உண்மைகள் மூலம் விழிப்படைந்த உள்ளுணர்வுக் கண்ணோட்டத்துடன் எல்லா உறுப்பினர்களையும் உலவவிடுகிறார். அவர்தம் கருத்துகளிலே ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களையே அவர் நாடக உறுப்பினர்கள் அனைவரும் வெளியிட்டனர்.

புதுமைத் தேட்ட நாடகப் புனைவுகளில் பகுத்தறிவியக்கத்தினரின் முன்னோடியான அண்ணா, இயல்பு நவிற்சியாலும், ஆழத்தாலும், கலை நுட்பத்தாலும் தமிழுலகை வியப்பில் ஆழ்த்திய மாபெரும் நடப்பியல் நாடக இலக்கியத்தை உருவாக்கியவர் ஆவார்.



டாக்டர் இரா. மாணிக்கவாசகம்

முன்னுரை

குறிப்பாகப் பொருளுணர்த்தும் முறையைப் பண்டுதொட்டுத் தமிழ்ப் புலவர்கள் பயின்று வந்துள்ளனர் என்பதைப் பல்வேறு காலங்களில் தோன்றிய பல்துறை நூல்களிலும் காணமுடிகிறது. இவற்றை ஆராயின், இலக்கிய நயம் கருதிச் சிலர் இம் முறையைப் பயன்படுத்தினர் என்பதையும், எளியோர்க்கு எளிதில் விளங்கக்கூடாது என்று கருதிச் சிலர் இம் முறையைப் பயன்படுத்தினர் என்பதையும் அறிய முடிகிறது.

தமது கருத்துகளைப் பலரும் அறிந்துகொள்ளக் கூடாது என்று வேண்டுமென்றே குறிப்பு மொழியையும், குழூஉக்குறிச் சொற்களையும் பயன்படுத்தியவர்களில் சித்தர்கள் முதலிடம் பெறுகின்றனர். இவர்கள் பயின்ற இம் முறையைப்பற்றிச் சிறிது ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கம்.

சொல்லும் பொருளும்

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே''[1] என்பது தொல்காப்பியர் கருத்து.

'எந்த மொழியாயினும் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கலாம். என்றாலும், சொல்வோன் கருத்து, சொல்வோன் திறம், சொல் பரிமாறும் சூழல், கேட்போன் நிலை, கேட்போன் திறம், கேட்கும் சூழல் இவை யாவும் இசையுறப் பொருந்தினாலன்றிச் சொல்லின் பொருள் தெரிவதில்லை. அதாவது, குறிப்பில் குறிப்புணர வல்லார்க்கே சொல் தன்னையும் பொருளையும் விளக்குகிறது[2] எனத் தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள்பற்றி ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்ற பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி கருதுகின்றார்.

எந்தச் சொல்லாக இருந்தாலும் பெரும்பாலான மக்களால் வழங்கப்படும் சூழல்வழி ஏற்பட்ட பொருளையே கருதிவிடுகின்றனர்.

'சீரங்கநாதன்' என்னும் சொல் திருவரங்கத்து ஈசனையே குறிப்பதாகக் கொள்வர். சீர், அங்கத்து, நாதன் ஆகிய ஆன்மாவையும் குறிக்கும் என்பதைச் சிலரே அறிவர்.

எனவே, சொல்லின் பொருள் நுண்ணுணர்வு உடையோர்க்குக் காரணம் உண்டாகும் தன்மை விளங்கத் தோன்றும் என்பது தெளிவு.

''மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா''[3] எனத் தொல்காப்பியர் கூறுதலும் நோக்கத்தக்கது.

குறிப்புமொழி

எந்தச் சொல்லாக இருந்தாலும் சூழல் தெரிந்து பொருள் காண முயல்வதே அறிவுடைமை. எனினும், சூழல் தெரிந்தும் எளிதில் பொருள்

---

[1] தொல். சொல். நூற். 157.

[2] தமிழ் நூற்களில் குறிப்புப்பொருள் — ம. ரா. போ. குருசாமியின் பிஎச்.டி., ஆய்வு ஏடு — பக். 23, 1976, டிசம்பர். (வெளியிடப்பெறாதது).

[3] தொல். சொல். 394.

காணமுடியா வகையில் சில சமயம் அறிஞர்கள் பாடுவதுண்டு. அவற்றையெல்லாம் 'குறிப்புமொழி' யின்கீழ் கொண்டு வருதல் பொருந்தும்.

> ''எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
> பொருட்புறத் ததுவே குறிப்புமொழி என்ப''[4]
> (செய். 179)

எனத் தொல்காப்பியர் குறிப்புமொழிக்கு இலக்கணம் வகுக்கிறார்; அதாவது, நேரடியாக உண்மைப் பொருள் உணர்த்தாது வேறு பொருள் உணர்த்துவது. இந்த நூற்பாவை விளக்கும் வகையில் உரையாசிரியராகிய பேராசிரியர் கீழ்க்காணும் எடுத்துக் காட்டைத் தருகின்றார்:

> ''குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையின்
> அடக்கிய மூக்கின ராம்''

''இதனுட் குடமே தலையாகப் பிறந்தாரெனவும், கொம்பெழுந்த வாயினரெனவும், கையுட்கொண்ட மூக்கினரெனவும் கூறியக்கால் எழுத்தும் சொல்லும் பொருளும் இயல்பிலவாதலும் குறிப்பினான் அதனைக் குஞ்சரமென்று கொண்டவாறும் கண்டு கொள்க'' என்பது எடுத்துக்காட்டு.

சித்தர் இலக்கியங்களில்

குறிப்புமொழி

> ''மாறன்றா ரின்வேர் மயிலவ னாயுதவேர்
> கூறுமொரு நீவியினாற் கூட்டியே—நீறு
> வெண்ணெயுடன் கண்ணில்மதி மேலுமிட [நீவந்த
> கண்ணன்கண் ணாம்மாலைக் கண்.[5]

இப் பாடல் கண்நோய்க்கான மருத்துவம் கூறுவது.

மாறன் — பாண்டியன்; தார் — மாலையாகிய வேம்பு; வேர் — வேப்ப மரத்தின் வேர்; மயிலவன் — மயில் வாகனமுடைய முருகன்; ஆயுதம் — வேல்; வேர் — வேலமரத்து வேர்; நீவியினாற் கூட்டி — குடுவையில் சேர்த்து; மதி — மாதம்; இவை எளிதில் பொருள் விளங்காக் குறிப்பு மொழிகள்; இனி, இப் பாடல் உணர்த்தும் பொருளைக் காண்போம்; 'வேம்பினது வேர், வேலமரத்து வேர் இரண்டையும் குடுவையில் இட்டு எரித்து நீறாக்கி வெண்ணெயில் கலந்து கண்ணில் இட மாலைக் கண் மறைந்து கண்ணனது கண் என ஒளி வீசும்'.

> ''தக்கவரன் பதியெடுத்தோன் நகர்தீ யிட்டோன்
> தந்தையென்ற சினந்தீருந் தரிக்குந் தானே.''[6]

வாயு தொல்லைக்கு மருந்து சொல்லும் பாடலின் இறுதி அடி இது.

அரன்பதி — சிவனது உறைவிடமான கயிலை மலை; எடுத்தோன் — இராவணன்; நகர் — இலங்கை; தீயிட்டோன் — தீயிட்டவனான அநுமன்; தந்தை — வாயு. இவை குறிப்பு மொழிகள்.

குழூஉக்குறி

சித்தர் பாடல்களில் குறிப்பு மொழியாட்சி மட்டுமன்றி, குழூஉக்குறியாட்சியும் மிகுதியும் காணலாம். இதனைப் பரிபாஷை என்பர்.

ஒவ்வொரு குழுவினுள்ளோர் யாதானும் ஒரு காரணத்தில் ஒரு பொருளினது சொற்குறியை யொழித்து வேறொரு சொற்குறியால் கூறுவதைக் குழூஉக்குறி என்று விளக்கம் கூறி, பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்றும், யானைப்பாகர் ஆடையைக் 'காரை' என்றும், வேடர் கள்ளைச் 'சொல் விளம்பி' என்றும் வழங்குவர் என மேற்கோள் காட்டுவர்.

இம் முறையில் சித்தர்கள் குழுவினர் பயன்படுத்திய குழூஉக்குறி ஆட்சி சிலவற்றைக் காணலாம்.

> ''மன்னனுக்குச் செல்காலம் மந்திரிக்குத் தற்காலம்
> பின்னனுக்கு மேற்காலம் பேதமில்லை—இன்னபடி
> ஆனாலு நாடி யஃதுவா நாடிடிற்
> றானாண்டை நோயினர்க்குத் தான்.''[7]

மன்னன் — வாதம்; செல்காலம் — இறந்தகாலம்; மந்திரி — பித்தம்; தற்காலம் — நிகழ்காலம்; பின்னன் — சிலேத்துமம்; மேற்காலம் — எதிர்காலம். இவை குழூஉக்குறிச் சொற்கள். சித்தர் இலக்கியங்களில் மட்டுமே காணுதல்கூடும்.

'வாதபித்த சிலேத்துமங்கள் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் இங்ஙனம் வருதலின் மாறுதலில்லை. மருத்துவன் அந் நாடிகளின் இயக்கத்தை முறையாக ஆராய்ந்து அவ்வவற்றிற்கேற்ப மருத்துவம் செய்யின் நோயாளிக்குப் பிணி நீங்கி வன்மையுண்டாகும்' என்பது இப் பாடலின் பொருள்.

> ''மாங்காய்ப் பாலுண்டு மலைமே லிருப்போர்க்குத்
> தேங்காய்ப்பால் ஏதுக்கடி—குதம்பாய்
> தேங்காய்ப்பால் ஏதுக்கடி.''[8]

இப்பாடலைப் பலரும் அறிந்திருப்பர். மேற்போக்காகப் படிப்பவர்க்கு ஒரு பொருளும், சித்தர்கள் பரிபாஷை அறிந்தவர்க்கு வேறு பொருளும் தரும் தகையது.

---

[4] தொல். செய். 179.
[5] பாடல் 492, தேரையர் வெண்பா.
[6] பாடல் 190, யூகிமுனி வாத வைத்தியம் 200.
[7] பாடல் 8, தேரையர் வெண்பா.
[8] பாடல் 28, குதம்பைச்சித்தர் பாடல்.

'மாங்காயின் பாலை உண்டு மலையின்மேல் இருப்பவருக்குத் தேங்காயின் பால் எதற்கு?' என்பது மேற்போக்காகத் தோன்றும் கருத்து; அல்லது 'மலைமேல் இருப்போர்க்கு மாங்காய்ப்பால் உண்டு; ஆதலின் தேங்காய்ப்பால் எதற்கு?' என்றும் கொள்ளலாம்.

மாங்காய்ப்பால் என்பதை மா, காயம், பால் எனப் பிரித்து, சிறப்புடைய உடம்பின் பாலாகிய அமிர்தம் எனப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

சித்தர் இலக்கியங்களில் சோமபானம், காயாப் பால், கறவாப்பால், சந்திர அமிர்தம், தேன், கள் எனப் பல்வேறு குழூஉக்குறிச் சொற்களால் குறிக்கப்படுவன, உச்சியிலிருந்து வீழ்வதாகக் கூறப்படும் அமுதைக் குறிக்கும்.

''சாவா திருந்திடப் பால்கற—சிரம்
தன்னில் இருந்திடும் பால்கற''[9]

''அண்ணாவின் மேல்வரும் பால்கற—பேர்
அண்டத்தில் ஊறிடும் பால்கற
விண்ணாட்டில் இல்லாத பால்கற—தொல்லை
வேதனை கெடவே பால்கற''[10]

''நிறுத்துமே கபாலத்தின் வாசலாக
நிஷ்களங்க மானதொரு அமுர்தமப்பா
பொறுத்துமே துளிதுளியாய் வீழும்பாரு.''[11]

முதலிய அடிகளை ஒப்பிட்டுக் காணலாம். எனவே, மாங்காய்ப் பால் என்பது சந்திர அமிர்தத்தைக் குறிக்கும்.

மலை என்பது சகஸ்ராரம் என்னும் உச்சிப் பகுதியைக் குறிக்கும். சிற்சபை, சிற்றம்பலம், விந்து, முச்சுடர், முச்சந்தி, சபாத்துவாரம், மணிமேடை, மயானம், கபாடம், சூன்யப்பகுதி, மகாமேரு, வரை, அம்பலம் எனப் பல சொற்களில் குறிக்கப் பெறும் இடமாகும். இதனைத் துவாதசப் பெருவெளி என்றும் குறிப்பர். (துவம் – 2; தசம்–10 =12; ஆறு ஆதாரங்களின் உள்ளும் புறம்புமாகப் பன்னிரண்டு.)

அரிய யோகப் பயிற்சியால் கீழிருக்கும் நஞ்சை மேலேற்றி அமிர்தமாக்கி இறக்கும் பயிற்சியுடையவர்களையே இப்படிக் குறிக்கிறது. 'உச்சியில் பிச்சையெடுத்தல்' என இச் செயலைக் குறிப்பர். உச்சிவேளையில் சோற்றுப் பிச்சை யெடுப்பவர்களைக் குறிப்பது அன்று.

எனவே, சிறப்புமிக்க காயத்தின் பாலாகிய அமிர்தத்தை உண்டு அம்பலத்தில் தன்னை நிறுத்திக் கொள்ளும் பேறு பெற்றவர்களுக்கு, யோகப் பயிற்சியில் ஈடுபடுகின்றவர்கள் உட்கொள்ளுகின்ற மேன்மையான உணவுப் பொருள்களாகிய தேன், காய், பால் முதலியன தேவையில்லை. அதாவது, உணவே தேவையில்லை என்பது இவ்வரிகளின் பொருளாகும்.

மலைமேலிருப்போர்க்கு மாங்காய்ப் பாலுண்டு என்றும், மாங்காய்ப் பாலையுண்டு மலைமேலிருப்போர்க்கு என்றும் மாற்றிப் பொருள் கொண்டாலும் பிழையில்லை.

''நிலையான நிலையதுவு மென்ன சொல்வேன்
நிஷ்களங்க மானதொரு கபால பீடம்
கலையான கலையதுவும் இடகலை பிங்கலையின்
கருவான நாசியது மையம் பற்றி
மலையான கபாலமென்ற பீடம் பற்றி
மகத்தான மூலவரை மேலே சென்று [கிறேன்
தலையான பஞ்சேந்திர முள்ளடக்கம் சாற்று
சிவயோகம் சாற்று வேனே.''[12]

''கருவான மலையதுதான் யென்ன சொல்வேன்''
காசினியில் நாதாக்க ளிருக்கும் ஸ்தானம்''[13]

''ஏறினேன் ஆறுவரை யடுக்கும் கண்டேன்''[14]

''செல்லுமே கொங்கணரு மேலும்போது
சுகமாக ஆறுவரை
அல்லுமே சிலம்பொலியின் சத்தம் கேட்டார்''[15]

''மூச்சா மூச்சடக்கி மேலே நோக்கு
முச்சந்தி யுதயகிரி உச்சி தோணும்''[16]

முதலிய அடிகளைக் காணுதல் நன்று.

இராமலிங்க அடிகளாரின் பாடல் அடிகளையும் இதற்குத் துணையாகக் காட்டுதல்கூடும்.

''கையறவிலாது நடுக்கண் புருவப்பூட்டு
கண்டுகளிகொண்டு திறந்துண்டு நடுநாட்டு''[17]

கை — செயல்; அற — முற்றம்; இலாது — இல்லா வகையில்; நடுக்கண் — கண் நடுவாகிய புருவ மத்தியில்; புருவப்பூட்டு — வரையாகிய பூட்டுள்ளது; கண்டு — அது திறக்கும் வகையறிந்து; களி கண்டு — களித்து; திறந்து — அப் பூட்டைத் திறந்து; உண்டு — உள்ளிருந்து ஒழுகும் அமுரியை

[9] பாடல் 107, இடைக்காட்டுச்சித்தர் பாடல்.
[10] பாடல் 112, இடைக்காட்டுச் சித்தர் பாடல்.
[11] பாடல் 830, அகஸ்தியர் 12,000 — iii காண்டம்.
[12] பாடல் 747, போகர் சப்த காண்டம் — vii காண்டம்.
[13] பாடல் 104, அகஸ்தியர் 12,000 — iv காண்டம்.
[14] பாடம் 7, யாகோபு தாண்டகம் 100.
[15] பாடல் 1318, தேரையர் வைத்தியம் 1500,
[16] பாடல் 31, சுப்பிரமணியர் ஞானம் 500.
[17] பாடல் 147, நாமாவளிகள் — கீர்த்தனைப் பகுதி,— திருவருட்பா, திரு அ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு. 1933.

அருந்தி; நடு — சமநிலையில்; நாட்டு — நிலை பெறுதல்; இவை குழூஉக்குறிச் சொற்கள். பொறி புலன்களது செயலொடுங்கச் சித்தத்தைச் சிவன் பாலே (லலாட நிலையில்) வைக்க, அவ் வீடு திறக்க, உள்ளிருந்து ஒழுகும் அக் கள்ளைப் பருகுபவர்கள் நடுவு நிற்பர் என்பது இவ் வரிகளின் பொருள். அமுதுண்ணும் இச் செயலைத்தான் அமுரி தாரணை எனக் குறிக்கின்றார் திருமூலர்.

''விண்கடந்து நின்றசோதி மேலைவாசலைத் திறந்து
கண்களிக்க உள்ளுளே கலந்து புக்கிருந்தபின்
மண்பிறந்த மாயமும் மயக்கமும் மறந்துபோய்
எண்கலந்த ஈசனோடு இசைந்திருப்பது உண்
மையே''[18]

''உற்றுற்றுப் பார்க்க ஒளிதரும் ஆனந்தம் அதை
நெற்றிக்கு நேர்கண்டு நிலைத்திருப்பது இனி
எக்காலம்''[19]

முதலிய அடிகளையும் ஒப்பிட்டுக் காணுதல் நன்று.

''நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே''[20]

என வரும் திருமந்திரப் பாடல் உணர்த்தும் பொருளும் இதுவே. ஆனால், தோன்றும் மேற்போக்கான பொருள் அகத்தியரின் தென்திசை வருகைபற்றிய புராணக் கதையை உணர்த்துவதாக உள்ளது. முழுக்க முழுக்க பரிபாஷையும் குறிப்புப் பொருள் உணர்த்தும் சொற்களும் நிறைந்தது இப்பாடல்.

குறிப்பும் குழூஉக்குறியும்

இவ்விரண்டு முறைமையும் கலந்த பாடல் ஒன்றினைக் காணலாம்.

''சேந்தனிடந் தந்திரிக்காம் சீதரனூர்
மந்திரிக்காம்
ஏந்து வருணனிட மேந்தலுக்கா—மீந்த
மருத்துவனூர் மூவருக்கும் வாயாது துற்கி
திருத்தலமா மானாலும் தீ''[21]

சேந்தனிடம் — முருகனுக்குரிய இடமாகிய மலைப் பகுதி; தந்திரி — சிலேத்துமம்; சீதரனூர் — மாயோனாகிய திருமாலுக்குரிய இடமாகிய காட்டுப் பகுதி; மந்திரி — பித்தம்; வருணனிடம் — வருணனுக்குரிய இடமாகிய கடல் சார்ந்த பகுதி; ஏந்தல் — வாதம்; மருத்துவனூர் — இந்திரனுக்குரிய இடமாகிய வயல் பகுதி; மூவருக்கும் — முக்குற்ற நோயினரும்; துற்கி திருத்தலம் — துர்க்கைக்குரிய பாலை நிலம்.

முருகனுக்குரிய மலைப் பகுதி சிலேத்துமத்திற்கும்; திருமாலுக்குரிய காட்டுப் பகுதி பித்தத்திற்கும், வருணனுடைய கடல்சார்ந்த பகுதி வாதத்திற்கும் வீறு கொள்ளுதற்கு இடங்களாகும். இந்திரனுக்குரிய வயல் பகுதி முக்குற்ற நோயினரும் வசிக்க ஏற்ற இடங்களாகும். துர்க்கையின் பாலை நிலமும் மேற்கண்டவாறு முக்குற்றங்களும் மீறாதெனினும் பாலை நிலத்தில் வெப்பம் மிகுதியுண்டாம் ஆதலால் உறைவிடமாகக் கொள்ளலாகாது என்பது இதன் பொருள்.

இப் பாடல் சேந்தனிடம், சீதரனூர், வருணனிடம், மருத்துவனூர், துற்கி திருத்தலம் என்பன குறிப்புப் பொருளுணர்த்தும் சொற்கள். தந்திரி, மந்திரி, ஏந்தல், மூவர் என்பன குழூஉக்குறிச் சொற்கள்.

சித்தர் பாடல்களில் இவை போன்று ஆயிரக் கணக்காக மேற்கோள் காட்டுதல்கூடும். ஆனால், அவற்றின் பொருளை அறிந்துகொள்ளுவதுதான் மிகவும் அரிதாகவுள்ளது.

எளிதான, பேச்சு வழக்கில் உள்ள சொற்களையே பெரும்பான்மையும் பயன்படுத்தினர்; எனினும், மேற்போக்காகப் பார்க்கும்போது ஒரு பொருளும், ஆழ்ந்து ஆய்ந்துணர பிறிது ஒரு பொருளும் புலப்படும். இவற்றை 'ஏமாற்றும் எளிமைச் சொற்கள்' (Words of Deceptive simplicity) எனக் குறிக்கலாம்.

மறைபொருட்கூற்று

திருமூலரின், திருமந்திரத்தில் உடம்பைக் குறிக்க சுமார் 35 சொற்களைக் குறிக்கின்றார்.

அத்திப்பழம்	—	தி. ம.	204
கோயில்	—	,,	198
முட்டை	—	,,	207
இடிஞ்சில்	—	,,	208
தோற்பை	—	,,	211
பூட்டும்தறி	—	,,	219
பழம்பதி	—	,,	1529
நிலம்	—	,,	1847
மாயாபுரி	—	,,	2488
உலை	—	,,	2852
பந்தல்	—	,,	196
வேங்கடம்	—	,,	232
பானை	—	,,	235
அச்சு	—	,,	296
சால்	—	,,	403

[18] பாடல் 119, சிவவாக்கியர்.
[19] பாடல் 228, பத்திரகிரியார் மெய்ஞ்ஞானம்.
[20] பாடல் 337, திருமந்திரம், பி. வரதராஜன் பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ், 1978.
[21] பாடல் 632, தேரையர் வெண்பா.

உலைப்பொறி	—	,,	451
ஊர்	—	,,	546
கோட்டை	—	,,	580
தோணி	—	,,	1614
இருட்டறை	—	,,	1991
கூடு	—	,,	2853
நாடு	—	,,	197
பாடி	—	,,	647
கரும்பு	—	,,	788
தண்டு	—	,,	807
அத்தி	—	,,	1206
சீரங்கம்	—	,,	1398
சரீரம்	—	,,	1497
குரம்பை	—	,,	1505
காயத்தேர்	—	,,	1624
மாயப்பை	—	,,	2083
கழனி	—	,,	2837
மன்னுமலை	—	,,	2941
ஐந்தகம்	—	,,	2864

மருத்துவ நூல்களில் குறிக்கப்படும் குழூஉக்குறிச் சொற்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

மலைக்குருவி—குன்றிமணி
சதுர்முகி—சதுரக்கள்ளி
கருப்பி—இரும்பு
சரஸ்வதி—வல்லாரை
சடைமுடி—சரக்கொன்றை
திரிசூலி—சிவனார்வேம்பு
மால்மனை—அரிதாரம்
மால்தொடை—துளசி
மால்தங்கை—பாஷாணம்
மால்எச்சம்—மண்
மால்விந்து—வெள்ளரி விதை
மால் உந்தி—தாமரை
பராசக்தி—வேம்பு
குமரி, கன்னி—சோற்றுக்கற்றாழை
ஜலபந்தனி—கட்டுக்கொடி
பூனைவணங்கி—குப்பைமேனி
யானைவணங்கி—தேள்கொடுக்கு
யானைப்பால்—அத்திப்பால்

மறைபொருள் கூற்றின் காரணம்

இங்ஙனம், இவர்கள் மறைபொருள் கூற்றாகச் சொல்லிச் செல்லவேண்டிய அவசியம் என்ன? என்ற வினா அனைவர்க்கும் எழுவதியல்பே.

பல்வேறு வகையான ஆற்றல்தரும் மூலிகைகளையும், வாழ்வை விரும்பும்வரை நீட்டிக்கும் மூலிகைகளையும், எல்லோருக்கும் விளங்கும் வகையில் கூறினால், அதனால் ஏற்படும் விபரீதத்தை எண்ணிப் பார்க்கவும் முடியாது. ஆகவேதான், நல்வினையால் பக்குவமடைந்தவர்க்கே இந் நூல்கள் கிடைக்கவும் பொருள் விளங்கவும் சொன்னார்கள் என இவர்கள் பாடல்கள் வாயிலாக அறிகின்றோம்.

''வெளிவருமே பரிபாஷை புதையல் தன்னை
விதியான வினையாளன் காண்ப தல்லால்
தெளியாத மூடர்க்கு''[22]

''பாரப்பா பூரணமாய் இந்த நூலைப்
பாரிலுள்ளோர்க் கீயாதே பதனஞ்
சொன்னேன்''[23]

''சொல்லாதே ஒளித்திட்டார் சித்தரெல்லாம்''[24]

''நேர்த்தியடா வுலகத்தில் சொன்னா ருண்டோ
நிசமாகச் சித்தரெல்லாம் மறைத்து
வைத்தார்''[25]

வேண்டுமென்றே மறைவாகச் சித்தர்கள் கூறினார்கள் என்பதற்கான சான்றுகளில் சில இவை.

''உண்டான மூலியைத்தான் குகையி னுள்ளே
ஒளித்துவைத்தார் சித்தரெல்லாம் வெளியா
மென்று
பண்பான சித்தர்க்கு மூலியிட்டுப் பாவிகட்கும்
கர்மிகட்கும் கிட்டுமோ சொல்
செண்டான பூவுலகில் மானுட ரெல்லாம்
செத்தவர்களெழுந் திருப்பார் இடம்கொள் [ளாது
கொண்டான விதியாளி வந்தா னாகில்
கூப்பிட்டுத் தான்கொடுப்பார் சித்தர்
[தானே''[26]

''தாமிந்த சூத்திரத்தைக் கொளியா தீந்தால்
தலைதெறித்துப் போகுமடா சத்திய
மாய்ச் சொன்னேன்
நாமிந்தப் படிசொன்னோம் யோகிக் கீவாய்''[27]

இந் நூற்களை யாருக்காக இயற்றினார்கள் என்பதற்கும், தவறு நேரின் விளைவு என்ன என்பதையும் கூறுகின்ற பாடல்களில் சில இவை.

பின்னுரை

வைத்தியத்தில் மட்டுமல்லாது வாதம், யோகம், ஞானம் ஆகிய பிற துறைகள் சார்ந்த பாடல்களிலும் இத்தகைய குறிப்பு, குழூஉக்குறி ஆட்சியினைக் காணுகிறோம். இவை அனைத்தையும் தொகுத்து தக்க விளக்கத்துடன் அறிஞர் பெருமக்கள் நூலாக வெளியிடின் தமிழில் இதுவரை ஆராயாதுவிட்ட குறை நீங்கும். தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் சித்தர்கள் ஆற்றிய அரும்தொண்டைப் புரிந்துகொண்டவர்களாகவுமாவோம்.

---

22 பாடல் 23, அம்பிகானந்தர் முப்பூ சூத்திரம்.
23 பாடல் 6, அகஸ்தியர் வைத்திய பரிபூரணம் 400.
24 பாடல் 100, சட்டைமுனி கற்பம்.
25 பாடல் 13, இராமதேவர் பட்சினி.
26 பாடல் 267, புலிப்பாணி வைத்தியம் 500.
27 பாடல் 216, அகத்தியர் பூரண சூத்திரம்.

நிதித்துறை வாழ்வும் வரலாறும்

A. M. சுவாமிநாதன், இ.ஆ.ப.

முன்னுரை

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மக்கள் நாகரிகத்தில் உயர்ந்ததொரு நிலையை அடைந்து இருந்தனர் என்பது இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. இந் நாகரிகத்தின் ஓர் அங்கமாக அரசு நிர்வாக இயந்திரமும் சிறந்த முறையில் செயல்பட்டு வந்தது. நல்லரசு நடத்துவதற்குத் தேவையான பொருள் எப்படிப் பெறப்பட்டு எவ்வாறு செலவழிக்கப்பட்டது, நிதியாட்சி எங்ஙனம் நடைபெற்றது என்பவற்றைச் சுருக்கமாக உணர்த்துவதே இக் கட்டுரையின் நோக்கம். திருக்குறள், மற்றச் சங்ககால இலக்கியங்கள், சோழர் காலக் கல்வெட்டுகள் ஆகியவற்றிலிருந்து அறியப்படும் செய்திகளே இக் கட்டுரையின் ஆதாரமாகும்.

நிதியின் இன்றியமையாமை

அரசு இயந்திரம் செவ்வனே செயல்படுவதற்கு நிதி மிக அவசியம் என்பதை வள்ளுவர் எடுத்துரைக்கிறார். அரசருள் சிங்கவேறு போன்று விளங்குவோனுக்கு உரிய ஆறு அங்கங்களுள் நிதி ஒன்று.

> ''படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு.'' (குறள், 381)

பொருள், இருளை விலக்கி ஒளியைத் தரும் விளக்கினைப் போன்று வறுமையை ஒட்டி வளத்தைத் தரும். இப்பொருள் மன்னன் கையில் இருக்குமானால் அது மாற்றாரிடையே நட்பினையும் வளர்க்கும்; பகையை அறுக்கும்.

> ''பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
> எண்ணிய தேயத்துச் சென்று.'' (குறள், 753)

> ''செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
> எஃகதனில் கூரியது இல்.'' (குறள், 759)

படை, நிதி ஆகியவற்றின் முக்கியத்துவம் காரணமாக இவை அரசனின் தனிக்கவனத்தில் இருக்க வேண்டும். அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் போது அவர்களுக்குரிய நான்கு தகுதிகளுள் செல்வமும் ஒன்று; அவர்கள் நாட்டின் செல்வத்தை மேலும் பெருக்கும் ஆற்றல் படைத்தவர்களாக இருக்கவேண்டும் என்றும் அக்காலத்து நூல்கள் எடுத்து இயம்புகின்றன.

பண்டைகாலப் பொது நிதியியல்

இன்றைய நூல்கள் பொது நிதியியலை (Public Finance), வருவாய் (Revenue), செலவு (Expenditure), கடன் (Public Debt.), நிதி ஆட்சி (Financial Administration) என்று நான்காக வகுத்து ஆராய்கின்றன. அக்காலத்தில் அரசு கடன் வாங்கும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே, வள்ளுவர் மற்ற மூன்று துறைகளைப்பற்றியும் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார். அரசின் தன்மையைக் கூறும்போது,

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.'' (குறள், 385)

என்று குறிப்பிடுகிறார். அரசின் வருமான ஆதாரங்களை உண்டாக்குதல் (இயற்றல்), வரிகளைச் செம்மையாக வசூலித்தல் (ஈட்டல்), அரசு நிதியினைச் சரிவரப் பராமரித்தல் (காத்தல்), அதனைப் பல்வேறு பொதுச் செலவினங்களுக்குச் சீராகப் பங்கிடுதல் (வகுத்தல்) ஆகிய இவை எக்காலத்திலும் எத்தரப்பட்ட அரசுக்கும் உள்ள தலையாய கடமை அன்றோ? இக் கடமை சங்க காலத்திலும் பிற்காலத்திலும் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை இப்போது காண்போம்.

1. சங்ககாலம்

(அ) இயற்றலும் ஈட்டலும்

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் அக்கால அரசு வருவாய்களைக் கீழ்க்கண்ட எட்டு இனங்களாகப் பிரிக்கிறார்:

(1) களவு செய்தோர் கையிற் பொருள் கோடல்;

(2) ஆறிலொரு பங்கு (நிலவரி);

(3) சுங்கம்;

(4) அந்தணர்க்கு இறையிலி கொடுக்கும்போது அதில் ஒரு பங்கை அரசுக்குச் சேர்த்துக் கொள்ளுதல்;

(5) பகைவர் நாட்டிலிருந்து பெறப்படுவது;

(6) தமர் இல்வழிப் பிறன் தாயம் கோடல் (வாரிசு இல்லாச் சொத்துகள்);

(7) வாணிகம் செய்தல்;

(8) தண்டம் (நீதிமன்ற அபராதத் தொகை).

சற்றேறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அரசு வாணிகம் செய்து பொருள் ஈட்டும் வழக்கம் இருந்தது என்பது வியப்புக்குரியது. இதே போன்று சுங்கவரி, ஆயத்தீர்வைகள் (Customs, Excise Duties) போன்ற வரிகளின் முன்னோடிகள் அன்றே கைக்கொள்ளப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரம், குறுந்தொகை போன்ற சங்க நூல்களும் அரசு நிதி ஆதாரங்களைக் கறை (வரி), இறை (கப்பம்), திறை (தோற்ற மன்னனின் காணிக்கை), கொண்டி (பிறநாட்டுப் பொருள்களைக் கவர்தல்), இடுபொருள் (பரிசிற் பொருள்), தாயம் (வாரிசு அற்ற பொருள்), படுபொருள் (புதை பொருள்), தண்டம் (அபராதம்), உல்கு (சுங்கம்) என்று பிரித்துரைக்கின்றன. இவற்றுள் தாயம், புதைபொருள், பரிசிற்பொருள் தவிர, மற்றவை அரசினால் பல விதிகளுக்குட்பட்டு இயற்றப்பட்டு ஈட்டப்பட்ட வருவாய்களாகும். அரசு வருவாய் வழிகளை இயற்ற காடு கெடுத்து நாடாக்க வேண்டும்; நீர்நிலைகளைப் பெருக்க வேண்டும்; சாலை வழிகளை அமைத்தல் வேண்டும் என்பன போன்ற பல்வேறு நெறியினைப் பட்டினப்பாலை, புறநானூறு முதலான நூல்களிலிருந்து அறியலாம்.

''நிலன்நெறி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே.''
(புறம். 18)

அன்றைய நிதி ஆதாரங்களை உறுபொருள்(வரி), உல்கு பொருள் (சுங்கம்), தெறுபொருள் (பகைவரிடம் பெறுவது) என்று சுருக்கமாகப் பிரிக்கும் வள்ளுவர் இவற்றை அரசு எவ்வாறு வசூலிக்கவேண்டும் என்பதற்குச் சில கண்டிப்பான நிபந்தனைகளை விதிக்கிறார். ஒரு நீதி நூலை இயற்றியவர் என்ற முறையில் அவர் இலக்கைவிட (aim) வழிக்கே (means) முக்கியத்துவம் அளிக்கிறார்.

''அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.'' (குறள், 754)

''அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.'' (குறள், 755)

தவறான வழியில் வரி வசூலித்துக் கொடுங்கோல் செய்யும் மன்னனை ஒரு பெருவழிக் கொள்ளைக்காரனுக்கு (Highway robber) ஒப்பாவான் என்று அவர் கடிந்துரைக்கிறார்.

''வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.'' (குறள், 552)

மக்களின் சம்மதத்தைப் பெற்று வரி வசூலிக்க வேண்டும் என்பதும், அவர்தம் சக்திக்கு மீறிக் கொடுக்குமாறு துன்புறுத்தலாகாது என்பதும், அவ்வாறு செய்வது அரசைச் சீரழிக்கும் என்பதும் வள்ளுவரது ஆழ்ந்த நம்பிக்கையாகும். அரசின் நான்கு குணங்களைப்பற்றிக் கூறும்போது,

''கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. (குறள், 390)

என்று பாடிய வள்ளுவருக்கு உரை எழுதிய மணக்குடவர், 'அளி' என்பது வரித் தள்ளுபடியைக் குறிக்கும் என்று கொள்கிறார். இவ்வாறே புறநானூற்றிலிருந்து மன்னன், வண்டு மலர் நோகாதவண்ணம் தேன் பருகுதல் போன்று மக்களிடத்தில் வரி வசூலிக்க வேண்டும் என்றும், இதைப் பின்பற்றத் தவறிய மன்னனைப் புலவர்கள் இடித்துரைப்பார்கள் என்றும் செய்திகள் அறியக்கிடக்கின்றன.

அக்காலத்தில் வரி வசூலிப்பு நடைமுறைகளும் ஒழுங்குப்படுத்தப்பட்டு இருந்தன. நிலவரியானது அலுவலர்கள் (காவிதி, கரணத்தியலவர் முதலியோர்) மூலமாகவும் முகவர்கள் மூலமாகவும் வசூலிக்கப்பட்டது. சுங்கம் பெருவழியில் உள்ள சாவடிகளில் வசூல் செய்யப்பட்டது. உள்நாட்டுச் சுங்க வரிகளோடு ஏற்றுமதி, இறக்குமதி வரிகளும் விதிக்கப்பட்டன என்று பெரும்பாணாற்றுப்படை தெரிவிக்கிறது. சுங்கம் செலுத்தப்பட்ட இச் சரக்குகளுக்கு வரி வசூலிக்கப்பட்டதன் அடையாளமாகச் சின்னம் (seal) பொறிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஆ) காத்தலும் வகுத்தலும்

ஈட்டிய பொருளை நன்முறையில் கட்டிக் காப்பதன் அவசியத்தை வள்ளுவர் பொருளதிகாரத்தில் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார். ஆயக்கணக்கர் என்பவர் இக்காலத்து நிதித்துறைச் செயலர் (Finance Secretary) போன்று பண்டாரத்தை (Treasury) நிர்வகிக்கும் பொறுப்பைக் கொண்டிருந்தார். நிதித்துறை பல அலுவலர்களைக்கொண்டு விளங்கியதுடன் அரசின் முக்கிய அங்கமாகவும் திகழ்ந்தது என்று பல நூல்களிலிருந்து தெரிய வருகிறது. அக்காலத்தில் வரவு செலவுப் பட்டியல் (Budjet) எவ்வாறு வகுக்கப்பட்டது என்று தெரியவில்லை. எனினும் குறளில் இருந்து சில பொதுக் கருத்துகள் நமக்குக் கிடைக்கின்றன. செலவினங்களின் பொதுவான பயன், வரவு செலவிற்கிடையே இருக்க வேண்டிய உறவு, வரவை செலவு மிஞ்சின் வரும் கேடு ஆகியவற்றைப் பற்றிக் குறள் அறிவுறுத்துகிறது.

''ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை.'' (குறள், 478)

''அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.'' (குறள், 479)

இவ்வாறு கட்டிக் காத்த செல்வம் நாடு காவல், அயல்நாட்டுறவு (பரிசில்கள் அளித்தும்கூட அயல் நாட்டின் நட்புறவு பெறப்பட்டது), மக்கள் நலப் பணி, அரசு நடைமுறை (Administration), அரண்மனைச் செலவு ஆகியவற்றிற்கு வகுக்கப்பட்டதாகச் சங்க நூல்கள் கூறுகின்றன. அரண்மனைக்காக வீண் செலவு செய்வதைப் புலவர் கண்டித்தனர். ஏழைகளுக்கும் கலைஞர்களுக்கும் பரிசில்கள் கொடுப்பதை உளமாரப் பாராட்டினர். அரசு எடுக்கும் வணிக முயற்சிகள் மூலதனத்தை (Capital) உயர்த்துவதாக இருக்கவேண்டுமெனக் கூறிய வள்ளுவர்,

''ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.'' (குறள், 463)

என்று இக்காலத்துக்கும் பொருந்துமாறு கூறிப் போந்தார்.

2. பிற்காலம்

(i) வருவாய் இனங்கள்

சோழர்கள் காலத்தில் (கி.பி. எட்டு முதல் பத்தாம் நூற்றாண்டு) நிதி நிர்வாகம் இக்காலத்தைப் போன்றே நன்கு முன்னேறிய ஒரு துறையாக இருந்தது. அக்காலத்தின் சில முக்கிய வருவாய் இனங்களைப்பற்றியும் அவை செலவழிக்கப்பட்ட விதம் பற்றியும் இப்போது காணலாம்.

(அ) நிலவரி : இதுதான் அக்கால அரசின் ஆதார வருவாயாகும். கடம்பர்கள், பல்லவர்கள் காலத்திலேயே நிலம் முறையாக அளக்கப்பட்டு (ஏர், நிவர்த்தனை போன்ற அளவுகள்) வரி விதிக்கப்பட்டது. இது சோழர்கள் காலத்தில் இன்னும் சீராக்கப்பட்டது. பல்வேறு சோழ மன்னர்கள் காலத்தில் நஞ்செய், புஞ்செய், தோட்ட நிலங்கள் அவற்றின் வளமைக்குத் தக்கவாறு, 8, 12, 15 தரங்களாகப் பிரிக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டன. பயிர் விளைச்சல் குறைவுபட்டால் 'சாவி' என்ற அடிப்படையிலும், பயிர் இழப்பு ஏற்பட்டால் 'அழிவு' என்ற அடிப்படையிலும் வரித் தள்ளுபடி செய்யப்பட்டது. முதலாம் ராஜராஜன் காலத்தில் (கி.பி. 1002) நிலங்களில் ஒரு முறையான அளவை (Systamatic Surway) நடத்தப்பட்டது. இது போன்ற அளவைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்ட கோல்கள் (Measuring Rods) சிற்றம்பலக்கோல், பங்கிட்ட கோல், ஸ்ரீபாதக்கோல் என்றெல்லாம் பெயரிடப்பட்டிருந்தன. தஞ்சைக் கோவில் கல்வெட்டு ஒன்றின்மூலம் ஒரு வேலியில் $\frac{1}{52,428,800,000}$ பங்கு நிலம்கூடத் துல்லியமாக அளக்கப்பட்டதாகத் தெரிகிறது. நிலம் அளவைத் துறையின் (Surway Department) இரு உயர் அதிகாரிகளுக்கு உலகளந்தான், திருவடிகள் காத்தான் என்ற பட்டப் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. வரி விதிக்கப்பட்ட நிலங்கள் 'தரம் பெற்ற' என்றும், வரி விலக்களிக்கப்பட்ட நிலங்கள் 'தரமிலி' என்றும் குறிக்கப்பட்டன. அக்காலக் கல்வெட்டுகள்மூலம் நிலவரி பல்வேறு அரசர்கள் காலத்தில் விளைச்சலில் 3/40 முதல் 1/6 வரை இருந்ததாக அறியக்கிடக்கிறது.

(ஆ) சொத்து வரி : முழுச் சொத்து மதிப்பின்மீது ஒரு வரி கணக்கிடப்பட்டு வசூலிக்கப்பட்டது (அச் சொத்திலிருந்து வரும் வருமானம் வரியின் அடிப்படையாகக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை). வீடுகள், காலி மனைகள், ஆடுமாடுகள், புதையல்கள், வண்டிகள் முதலியவற்றின்மீது வரி விதிக்கப்பட்டது. ஆனால், காலியாக உள்ள வீடுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(இ) தொழில் வரி : அவரவர் பிறந்த குலத்துக்கியைந்த தொழில் செய்யவேண்டும் என்பது அக்

காலத்துப் பொது கொள்கையாகும். தொழில் வரியும் இந்த அடிப்படையில் (அவர் குலத்தொழில் செய்தாலும் செய்யாவிட்டாலும்) விதிக்கப்பட்டது இவ் வரியோடு தொழில் செய்யும் கருவி (Tool) மீதும் ஒரு வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது. குயவர் வரியில் அவர்தம் திமிரி (Wheel) மீது இடும் வரி, வண்ணார் வரியில் அவர் துவைக்கும் கல்மேல் இடும் (கல்லாயம்) வரி, மரமேறுவோர் வரியில் அவர்தம் ஏணிமேல் இடும் வரி, நாட்டியப் பெண்டிருக்கு அவர்தம் கண்ணாடிகள்மேல் இடும் வரி ஆகியவையும் சேர்க்கப்பட்டன. அநேகமாக எல்லாத் தொழில் செய்வோர்மீதும் வரி விதிக்கப்பட்டது.

(ஈ) வணிக வரி : எல்லாவிதமான பண்டங்கள் மீதும் வரி விதிக்கப்பட்டது. இவை பொதுவாக, ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி, வழி வரி, (Goods in Transit tax) எனப் பிரிக்கப்பட்டிருந்தன. இவ் வரிகள் நீர்நிலைகள், ஓய்விடங்கள், வணிகத் தலங்கள், சாலைகள் இவற்றில் ஏற்படுத்தப்பட்டிருந்த சுங்கச் சாவடிகளில் வசூலிக்கப்பட்டன. சில நேரங்களில் இவ் வரி வசூலிக்கும் உரிமை ஏலத்தின்மூலம் ஒப்பந்தக்காரர்களிடம் விடப்பட்டது. அவர்களில் சிலர் வரிவிகிதத்தை அதிகரித்து வணிகரைக் கசக்கிப் பிழிந்தனர். அப்போது வணிகர்கள் முதலாம் குலோத்துங்க மன்னனிடம் முறையிட, அவன் அவற்றைத் தளர்த்தி 'சுங்கம் தவிர்த்தான்' என்ற பெயர் கொண்டதாகக் கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது.

(உ) தொழிற்சாலைகள் வரி : இவ் வரியானது எண்ணெய் ஆலைகள், நூற்பு ஆலைகள், படகு கட்டும் தளங்கள், உப்பளங்கள் ஆகியவைமீது விதிக்கப்பட்டது.

(ஊ) படைச் செலவு வரி : பிற்காலச் சோழர் காலத்தில் படைச் செலவை ஈடுகட்டுவதற்காக இவ் வரிகள் விதிக்கப்பட்டன. பட்டயக் காணிக்கை, தளநாயகர் மகமை, கோட்டை மகமை என்றெல்லாம் வரிகள் விதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

(எ) சமூக வரிகளும் அபராதங்களும் : சில குறிப்பிட்ட சமூகத்தினரிடம் சில வரிகள் சமூகக் கடமைகளுக்கான செலவிற்காக விதிக்கப்பட்டன. நீதிமன்றங்கள் குற்றமிழைத்தோரிடம் வசூலிக்கும் அபராதங்கள் மூலமாகவும் அரசிற்குச் சிறிது நிதி சேர்ந்தது. வெளியில் கேட்பாரற்றுத் திரியும் ஆடுமாடுகளின் உரிமையாளர்மீது அக்காலத்தில் அபராதம் விதிக்கப்பட்டது என்பதை அறியும்போது நமக்கு வியப்பாக உள்ளதன்றோ?

(ii) வசூல் முறைகள்

வரி வசூல் கீழ்க்காணும் முறைகளில் ஏதாவது ஒன்றின்மூலமாகச் செய்யப்பட்டது.

(1) அலுவலர்மூலம் நேரடி வசூல்;

(2) ஒரு சங்கம் அல்லது குழுவின்மூலம் வசூல் செய்தல்;

(3) ஓர் ஊர் அல்லது நிலப்பகுதியின் வரியை ஒருவரிடம் ஒப்புவித்து அப் பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பையும் அவரிடமே விட்டுவிடுதல்;

(4) ஒரு நிலப்பகுதியை ஒருவரிடம் ஒப்புவித்து அதற்குப் பதிலாக ஆண்டொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொள்ளுதல்.

(iii) வரி வசூல் துறை

சோழர் காலத்தில் புரவு வரித் திணைக்களம் என்ற அமைப்பில் வருவாய்த்துறை சிறந்து விளங்கியது. இது பல பிரிவுகளாக (Section) வகுக்கப்பட்டுப் பல்வேறு வரிக் கணக்குகளைக் கவனித்து வந்ததாகக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இதுதான் இன்றைய வருவாய் வாரியமாக (Board of Revenue) வளர்ந்துள்ளதோ என்று தோன்றுகிறதல்லவா?

(iv) செலவினங்கள்

அக்காலக் கல்வெட்டுகளிலிருந்து அரசின் வருவாய் கீழ்க்கண்ட இனங்களுக்காகச் செலவழிக்கப்பட்டதாகத் தெரிகிறது:

(1) படைச் செலவு : அக்காலத்தில் இதுதான் பெரும் செலவாக இருந்தது. அடிக்கடி போர்கள் நிகழ்ந்தவண்ணமாக இருந்தன. சோழர்கள் காலத்தில் எண்பதில் இருந்து நூறு வரை பல இடங்களில் பெரும்படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இவை கடல் கடந்தும் அனுப்பப்பட்டன.

(2) நாடு காவல் : அக்காலத்தில் இப்போதுள்ளது போல் ஒரு காவல் துறை கிடையாது. காவல் பொறுப்பை அந்தந்த ஊரில் உள்ளோரே ஏற்றிருந்தனர். எனவே, இத்துறையினால், அரசுக்குச் செலவு அதிகமில்லை.

(3) நீதித் துறை : உள்ளூர் பஞ்சாயத்துகள் மூலமாகவே அநேகமாக எல்லா வழக்குகளும் தீர்க்கப்பட்டன. எனவே, இத்துறையிலும் அரசுக்குச் செலவு அதிகமில்லை.

(4) மக்கள் நல்வாழ்வு : இக் காலத்தைப்போன்று கல்வி, மருத்துவம் ஆகியவற்றிற்கு அரசு அதிகம் செலவிடும் வழக்கமும் அக்காலத்தில் இல்லை. கற்பிப்போர் – கற்போர், மருத்துவர் – நோயாளி என்ற நேரடித் தொடர்புதான் இருந்தது.

(5) கோவில் : புதிய கோவில்களைக் கட்டுதல், பழையனவற்றைப் பராமரித்தல், புதிய கட்டளைகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்காக அரசு பெரும் பணம் செலவிட்டது. இவை இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பது மட்டுமல்லாமல், அரசருக்குப் பெரும் புகழ் ஈட்டித் தரும், மக்களுக்குப் பெரும் பயனை அளிக்கும் என்பதுவே இப் பணி பெருமளவில் செய்யப்பட்டதன் காரணங்களாகும்.

(6) பரிசில் வழங்குதல் : இஃது அரசர்களின் முக்கியக் கடமையாகக் கருதப்பட்டது. அநேகமாக எல்லா அரசர்களும் கலை, இலக்கிய வளர்ச்சியில் நாட்டம் கொண்டு பெரும் பரிசில்கள் வழங்கிக் கலைஞர்களையும் புலவர்களையும் ஊக்குவித்தனர்.

(7) பொதுப் பணிகள் : ஏரிகள், குளங்கள் அமைத்தல், அணைகள் கட்டுதல், சாலைகள் போடுதல், சத்திரங்கள் அமைத்தல், மரங்கள் நடுதல் போன்ற முக்கியப் பொதுக் காரியங்களுக்கு அரசு நிதி தாராளமாகச் செலவழிக்கப்பட்டது.

(8) அரண்மனைச் செலவுகள் : அத்தியாவசியமான செலவுகள் மட்டுமன்றி அரசின் பெருமையை விளக்குவதற்காகவும் பெரும் ஆடம்பரச் செலவுகள் செய்யப்பட்டன.

(9) சேமித்தல் : பஞ்சம், போர் ஆகிய காலங்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக வருவாயில் ஒரு பகுதி சேமித்து வைக்கப்பட்டது. இவை பொன்னாகவும், நகைகளாகவும், இரத்தினக் கற்களாகவும் மாற்றப்பட்டு அரசினர் கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. சில அரசர்கள் காலத்தில் வருவாயில் கால்பங்கு சேமித்து வைக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

முடிவுரை

இதுகாறும் கண்டதில் இருந்து பழந்தமிழர் அமைத்த அரசு முறைகளில் நிதி, நிர்வாகம் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது என்பதையும், பொருளைத் திரட்டிக் காத்துத் தகுந்த முறைகளில் அதை வகுக்கும் பணியினைத் தமிழ் மன்னர்கள் தங்களுடைய அலுவலர்கள், அமைச்சர்கள் துணையோடு செம்மையாக நிறைவேற்றினர் என்பதையும் அறிய முடிகின்றது.



இடை ஒடிந்துவிட்டால்...

கவிதைகள்...
உண்மையை அலங்கரிக்கும்
பொய்கள்!
உண்மைதான்...
பூத்துக் கிடக்கும் மலர்களைக் காதலன் தன்
காதலியின் கூந்தலில் சூட்டவென்று
கை நிறையப் பறிக்கிறான்...
மலர்ச்சுமை தாங்காது
இடை ஒடிந்துவிட்டால்...
உள்ளம் அஞ்சுகிறது.
முடிவில்...
காதலியின் பாதங்களுக்கே... அந்த
மலர்களைச் சூட்டி மகிழ்கிறான்!
நிடத நாடு செல்லும் நளன்
தமயந்திக்குக் காட்டும் இனிய காட்சிகளில்
இதுவும் ஒன்று...

"கொய்த மலரைக் கொடுங்கையி னால்அணைத்து
மொய்குழலில் சூட்டுவான் முன்வந்து - தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினான் பாவைஇடைக்(கு)
ஆதாரம் இன்மை அறிந்து.

— நளவெண்பா.

(5) **கோவில் :** புதிய கோவில்களைக் கட்டுதல், பழையனவற்றைப் பராமரித்தல், புதிய கட்டளைகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்காக அரசு பெரும் பணம் செலவிட்டது. இவை இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பது மட்டுமல்லாமல், அரசருக்குப் பெரும் புகழ் ஈட்டித் தரும், மக்களுக்குப் பெரும் பயனை அளிக்கும் என்பதுவே இப் பணி பெருமளவில் செய்யப்பட்டதன் காரணங்களாகும்.

(6) **பரிசில் வழங்குதல் :** இஃது அரசர்களின் முக்கியக் கடமையாகக் கருதப்பட்டது. அநேகமாக எல்லா அரசர்களும் கலை, இலக்கிய வளர்ச்சியில் நாட்டம் கொண்டு பெரும் பரிசில்கள் வழங்கிக் கலைஞர்களையும் புலவர்களையும் [illegible]

(7) **பொதுப் பணிகள் :** ஏரிகள், குளங்கள் அமைத்தல், அணைகள் கட்டுதல், சாலைகள் போடுதல், சத்திரங்கள் அமைத்தல், மரங்கள் நடுதல் போன்ற முக்கியப் பொதுக் காரியங்களுக்கு அரசு நிதி தாராளமாகச் செலவழிக்கப்பட்டது.

(8) **அரண்மனைச் செலவுகள் :** [illegible] செலவுகள் மட்டுமன்றி அரசின் [illegible] விளக்குவதற்காகவும் பெரும் ஆடம்பரச் செலவுகள் செய்யப்பட்டன.

(9) **சேமித்தல் :** பஞ்சம், போர் ஆகிய காலங்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக வருவாயில் ஒரு பகுதி சேமித்து வைக்கப்பட்டது. இவை பொன்னாகவும், நகைகளாகவும், இரத்தினக் கற்களாகவும் மாற்றப்பட்டு அரசினர் கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. சில அரசர்கள் காலத்தில் வருவாயில் கால்பங்கு சேமித்து வைக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

முடிவுரை

இதுகாறும் கண்டதில் இருந்து பழந்தமிழர் அமைத்த அர[illegible]ல் நிதி, நிர்வாகம் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது என்பதையும், பொருளைத் திரட்டிக் காத்துத் தகுந்த முறைகளில் அதை வகுக்கும் பணியினைத் தமிழ் மன்னர்கள் தங்களுடைய [illegible], அமைச்சர்கள் துணை [illegible]வேற்றினர் என்பதையும் [illegible] முடிகின்றது.





தமிழிலக்கியங்களில் கொல்லாமைக் கோட்பாடு

சு. ஸ்ரீபால், ஐ.பி.எஸ்.

'கொல்லாமை' என்பதைத் தலையாய அறமாக அனைத்துச் சமண இலக்கியங்களும் எடுத்துப் பேசுகின்றன. பௌத்த நூல்களும் கொல்லாமை பற்றிப் பேசுகின்றன. தத்துவரீதியாகப் பார்க்கும்போது பௌத்தர்கள் கொல்லாமையை வலியுறுத்தினாலும், புலால் உண்ணாமையை வலியுறுத்தவில்லை. 'கல்பய மாமிசம்', 'அகல்பய மாமிசம்' என்று புலாலை 'ஏற்றுக்கொள்ளக்கூடிய', 'ஏற்றுக்கொள்ள இயலாத' என இருவகைப்படுத்தினர். 'பிறர் கொன்று தரும் புலாலை, இறந்த விலங்குகளின் புலாலை ஏற்பது தவறன்று' என்பது அவர்கள் கொள்கை. ஆனால், கொல்லாமைக் கோட்பாட்டை முழுமையாக வலியுறுத்திய நூல்கள் பெரும்பாலும் சமண இலக்கியங்கள் என்றால் மிகையாகாது. இந்தக் கோட்பாட்டை வாழ்க்கையில் தவறாது பின்பற்ற வேண்டும் என்று பேசிய பிற சமய இலக்கியங்களும் தமிழில் உள்ளன. ஆகவே, கொல்லாமைக் கோட்பாட்டை நாம் தமிழ் இலக்கியங்களில் சமய எல்லைகளைக் கடந்தும் காண முடிகின்றது.

கொல்லாமை என்பது வெறும் எதிர்மறை அறநெறி என்று கூறுவது பொருந்தாது. விலங்குகளைப் பேணாமை, அடைத்து வைத்தல், கயிற்றால் பிணைத்தல், ஊனப்படுத்துதல் ஆகியவற்றைச் செய்யாமல் இருத்தலும் கொல்லாமைக் கோட்பாட்டில் அடங்கும். அனைத்து உயிரினங்கள்பாலும் கருணை காட்டுவதும் கொல்லாமைக் கோட்பாட்டின் ஒருபுறமாகும். 'ஆன்ம நேயஒருமைப்பாடு' என்பதே இந்தக் கோட்பாட்டின் முழுமை வடிவம் என்றும் கொள்ளலாம் என்று கருதுகிறேன். ''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன் பின்சாரப் பொய்யாமை நன்று'' என்பது குறள். தலையாய அறம் கொல்லாமை என்று குறள் உரைக்கிறது. ''அறவினை யாதெனின் கொல்லாமை கோறல் பிறவினை எல்லாம் தரும்'' என்ற குறள், கொல்லாமைக் கோட்பாடே பிறவினைகள் அணுகுவதைத் தவிர்க்கும் என்பதைத் தெளிவாக்குகிறது.

சமணர்கள் கொல்லாமை, பொய்யாமை, களவாடாமை, மிகுபொருள் விரும்பாமை, பிறன் மனை விழையாமை ஆகியவற்றை 'அணு விரதம்' எனக் குறிப்பிடுவர். எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் இந்த விரதங்கள் கடைப்பிடிக்கப் படவேண்டும் என்றும் உரைப்பர். இறந்த விலங்கின் புலாலை ஏற்கலாம் என்ற பௌத்தரின் வாதத்திற்கு எதிர்வாதமாக நகைமிக்க வாதத்தை வைப்பர். ''கொழுத்த ஆடு ஒன்று நம் கண் முன்னால் சென்றால் நாவில் நீர் ஊறும்; என்று இந்த ஆடு சாகும்? அதன் மாமிசத்தை நாம் உண்ணலாம் என்று எண்ணத்தில் 'இம்சை எண்ணம்' தோன்றுகிறது'' என்று எள்ளுவர்.

தமிழ் இலக்கியங்களில் கொல்லாமைக் கோட்பாட்டை எடுத்துக்கூறும் பல பகுதிகளைக் கீழே தருகிறேன். 'அறம் எனப்படுவது ஆருயிர் ஓம்பல், வதம் எனப்படுவது கொல்லா விரதம்' என்ற பொருள் பொதிந்த பாடல்களை நாம் காணலாம்.

''பொய்யாமை நன்று பொருள்நன்று உயிர்நோவக்
கொல்லாமை நன்று கொழிக்குங்கால்.''
—சிறுபஞ்சமூலம், 39

''கொல்லாமை நன்று கொலைதீது எழுத்தினைக்
கல்லாமை தீது கதம்தீது—நல்லார்
மொழியாமை முன்னே முழுதும் கிளைஞர்
பழியாமை பல்லார் பதி.''
—சிறுபஞ்சமூலம், 51

''கொன்றான் கொலையை உடம்பாட்டான்
கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால்
—கொன்றதனை
அட்டான் அடவுண்டான் ஐவரினும் ஆகுமெனக்
கட்டெரிந்த பாவம் கருது.''
—சிறுபஞ்சமூலம், 70

''கொல்லான் உடன்படான் கொல்வார்இனஞ்
சேரான்
புல்லான் பிறர்பால் புலால்மயங்கல்—செல்லான்
குடிப்படுத்துக் கூழ்ஈந்தான் கொல்யானை ஏறி
அடிப்படுப்பான் மண்ணாண்டு அரசு.''
—ஏலாதி, 42

''கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல்......''
—பட்டினத்தார்.

''கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதுஎன் இச்சை
பராபரமே''
—தாயுமானவர்

''உலகுடன் விளங்கவரு சீர்த்திநிலை கொள்ளின்
நிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறும்
அலகில்துயர் அஞ்சிஉயிர் அஞ்சவரும் வஞ்சக்
கொலைஒழிமின் என்றுநனி கூறினர் அறிந்தோர்
—வளையாபதி

''உயிர்கள் ஓம்புமின் ஊன்விழைந்து உண்ணன்மின்
செயிர்கள் நீங்குமின் செற்றம் இகழ்ந்துஓரீஇக்
கதிகள் நல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர்.''
—வளையாபதி

''கொன்றூன் நுகரும் கொடுமையை உள்நினைந்து
அன்றே ஒழிய விடுவானேல்— என்றும்
இடுக்கண் எனவுண்டோ இல்வாழ்க்கைக் குள்ளே
படுத்தானாம் தன்னைத் தவம்.''
—அறநெறிச்சாரம், 63

''புலையும் கொலையும் களவும் தவிர்.''
—கொன்றை வேந்தன், 63

''ஊன் ஊண் துறமின்! உயிர்க்கொலை நீங்குமின்''
—சிலப்பதிகாரம்

''வலைபடைத்தார் ஊன்வேண்டா
அவ்விலைதான் வேண்டி
வலைபடைத்தார்க்கு எம்முயிரை
வைக்கின்றோம் இன்ன
கொலைபடைத்தா னோகொடியன்
என்பனவே போலத்
தலைஎடுத்து வாய்திறப்ப
தாமிவையோ காணீர்''
—நீலகேசி

'' தன்னுயிர் தான்பரிந்து ஓம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க்கு இறைவனாய் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந்து உயர்ந்து போகுமே.''
—சீவக சிந்தாமணி, 3107

'' ஆருயிர் வருத்தம் கண்டால்
அருள்பெரிது ஒழுகி கண்ணால்
ஒருயிர் போல நெஞ்சத்து
உருகிநைந்து உய்ய நிற்றல்
வாரியின் வதங்கட் கெல்லாம்
அரசமா வதம்இ தற்கே
சார்துணை யாகக் கொள்க
தகவும்அத் தயவும் என்றான்.''
—யசோதர காவியம், 247

'' இவ்வுலகின் எவ்வுயிரும் எம்முயிரின் நேர்என்று
அவ்வியம் அகன்றுஅருள் சுரந்து உயிர்வளர்க்கும்
செவ்விமையின் நின்றவர் திருந்தடி பணிந்துஉண்
எவ்வினை கடந்துயிர் விளங்குவிறல் வேலோய்!''
—யசோதர காவியம், 272

யசோதர காவியம் சிறு காப்பியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அந்த நூலில் ஒரு நிகழ்ச்சி விரித்துரைக்கப்படுகிறது. அவந்தி நாட்டில் யசோமதி மன்னனாகவும் புட்பாவலி அரசனின் தேவியாகவும் இருந்து ஆண்டனர். அவர்களுக்கு அபயருகி மகனாகப் பிறந்தான். அரசிளங்குமரன் பொருள் உலகத்தை ஆள மனமில்லாமல் அருள் உலகம் ஆள நாட்டங் கொண்டு நடுங்காத் தவம் புரிவதில் ஈடுபட்டான். உடலில் இணையிலா அழகன். கானகத்தில் திரிந்து தவம் மேற்கொண்டான். மாரிதத்தன் என்ற வேறு ஒரு மன்னன் தன் குலதெய்வம் கண்டமாரிக்குப் பலிவேண்டி அழகுமிக்க அடலேறு கொணர்க என்று தன் காவலரை அனுப்பினான். காவலர் கண்ணில் அபயருகி சிக்கினான். அபயருகியைக் கண்ட மாரிதத்தன் மகிழ்ந்தான். பலியிட முனைந்தான். வாளும் கையுமாக நின்ற மாரிதத்தனைப் பார்த்து அபயருகி உரக்க நகைத்தான். வெகுண்ட மாரிதத்தன் ஏன் என்று வினவ, அதற்கு அபயருகி 'என்னை ஒருமுறை கொல்லும் நீ உன் உயிரைப் பன்முறை கொன்றுகொள்கிறாய்' என்று பகர்ந்தான். அறவுரையும் வழங்கினான். இதனைச் செவிமடுத்த மாரிதத்தன் பிழை பொறுக்க வேண்டி மனம் திருந்தினான் என்று யசோதர காவியம் என்ற சமண காப்பியம் செப்புகிறது.

''அன்னணம் அண்ணல் கூற
அருளுடை மனத் தன் ஆகி
மன்னவன் தன்கை வாளும்
மனத்திடை மறனும் மாற்றி
என்னினி இறைவன் நீயே
எனக்கென இறைஞ்சி நின்று
பன்னுக குமர நுங்கள்
பவத்தோடு பரிவும் என்றான்.''

—யசோதர காவியம், 67

யசோதர காவியத்திலேயே இன்னொரு இடத்தில் மாவுக் கோழியைக் கொல்வதும் பாவம் என்று எடுத்தோதப்படுகிறது. யசோதரன் அல்லல் தீர மாவுக் கோழியைப் பலியிட முனையும்போது, சிந்தனையில் இம்சை எண்ணம் இருப்பதே பாவம் என்று தாய் யசோமதி அறிவுரை கூறுவதைப் பின்வரும் (250, 252 ஆகிய) இரு பாடல்களில் பார்க்கலாம்.

''இன்னுமீது ஐய கேட்க
யசோமதி தந்தை யாய
மன்னவன் அன்னையோடு
மாவினிற் கோழி தன்னைக்
கொன்னவில் வாளில் கொன்ற
கொடுமையிற் கடிய துன்பம்
பின்னவர் பிறவி தோறும்
பெற்றன பேச லாமோ''

''உயிரவண் இல்லை ஏனும்
உயிர்க்கொலை நினைப்பி னால் இம்
மயரிகள் பிறவி தோறும்
வருந்திய வருத்தம் கண்டால்
உயிரினில் அருள்ஒன் றின்றி
உவந்தனர் கொன்று சென்றார்
செயிர்தரு நரகின் அல்லால்
செல்லிடம் இல்லை என்றான்.''

தன்னுடைய வழிப்பயணத்தில் புலால் உண்ணாமையையும் கொல்லாமையையும் போதித்த சீவக கனை சீவக சிந்தாமணியில் திருத்தக்க தேவர் காட்டுகிறார்.

மேருமந்தர புராணம் என்ற இன்னொரு இனிய சமணக் காப்பியம் இந்தக் கொல்லாமைக் கோட்பாட்டைப் போதிக்கும் முறையைப் படிப்போம்.

''வதங்கள்பன் னிரண்டு மேவி
வையகத்து உயிர்கட்கு எல்லாம்
இதம்செய்து வருந்தில் வெந்தீ
இடுவெண்ணெய் போன்று இரங்கிச்
சிதைந்து இன்னாதன செய்தார்க்கும்
இனியவே செய்து சிந்தை
கதம்கடிந்து ஒழுகல் நல்லோர்
கருணையைக் கொடுத்த லாமே.''

கொல்லாமை விரதத்தைப் பின்பற்றாவிட்டால் கொடு நரகு கிடைக்கும் என்று அச்சுறுத்தும் வளையாபதி பாடலை இந்தக் கட்டுரையின் முடிவுரையாகக் கொள்வோம்.

''கொன்றுயிர் நடுங்கச் சென்று
கொலைத்தொழில் கருவி ஏந்தி
நின்றெறி நுடங்கு கண்ணால்
பாவமே நினைந்து செத்தார்
சென்றெறி நரகில் வீழ்வர்
செவ்வனே துன்பம் அஞ்சி
நன்றியில் கொலையி னீங்கி
நற்றவம் புரிமின் என்றான்.''

நாட்டிய நாடகங்கள்



'*கலைமாமணி*' புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

கலை என்பது ஒரு நாட்டின் தனிப் பண்பாட்டின் துல்லியமான அளவுகோலாகும். இயல் இசை நாடகம் என்ற முத்தமிழும் கலையென்ற கோபுரத்தின் மூன்று பொற்கலசங்களாக விளங்குகின்றன.

நாடகம், கூத்து ஆகிய சொற்கள் தொல்காப்பியம் முதலான பழைய நூல்களில் சிறப்பாகக் காணப்படுகின்றன. நாட்டியம் என்ற சொல் பழைய இலக்கியங்களில் மிக அரிதாகவே காணப்படுகின்றது.

''கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே''

என்ற இனிய வரிகள் மிகப் பழைமையான கூத்த நூலில் காணப்படுகின்றன.

தொல்காப்பியத்தில் ''நாட்டிய மரபின் நெஞ்சு கொளினல்லது'' என்ற ஒரு வரி (தொல்.1193-ல்) பளிச்சிடுகிறது. இந்த 'நாட்டிய மரபு' என்ற தொடர் நடனக்கலையின் மரபைக் குறிக்குமா என்ற ஆய்வு இளம்பூரணர் காலத்திலிருந்தே இன்னும் முற்றுப்பெறாமல் தொடர்கிறது.

''நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆலுதல் தூங்கல் வாணி குரவை
நிலயம் நிருத்தம் கூத்தெனப் படுமே''

எனத் திவாகர நிகண்டில் கூத்திற்குப் பல பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 'நாட்டியம்' என்ற சொல் இடம்பெறாதது வியப்பாக உள்ளது.

கதை தழுவிய கூத்தே நாடகம் எனப்பட்டது. பழங்காலத்தில் நாடகம் என்பது நடன நாடகமாகவே விளங்கியது. ஆடல் பாடல் அபிநயம் இணைந்து கதை தழுவி மக்களைக் கவரும் கூத்து வகையே நாட்டிய நாடகம் எனக் கூறுவது பொருந்தும்.

நமக்குக் கிடைத்துள்ள முதல் தமிழ்நூல் தொல்காப்பியந்தான். அதன் நூற்பாக்களில் வரும் குறிப்புகளைக் கொண்டு, தொல்காப்பியருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஏராளமான கலை இலக்கிய நூல்கள் தமிழில் இருந்திருக்க வேண்டும் என யூகிக்க முடிகின்றது. தொல்காப்பியர் காலத்தின் மேல் எல்லை கி. மு. 5320 என அறிஞர் க. வெள்ளை வாரணனார் 'தொல்காப்பியம்—வரலாறு' பக்கம் 126-ல் குறிப்பிடுவதால் அதற்கு முன் விளங்கிய தமிழ்க் கலை இலக்கியங்களின் தொன்மையை எண்ணி எண்ணி வியந்து போற்றலாம்.

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்''

என்ற தொடர் தொல்காப்பியத்தில் (அகத்திணை, 53) காணப்படுகின்றது. எனவே, நாடக வழக்கு என்பது தொல்காப்பியத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் சிறப்பாக விளங்கியிருந்த நாடகப் பாணியையே குறிக்கும் என்பது தெளிவு. இதனால் மிகவும் பழையது எனக் கருதப்படும் எகிப்து நாடக மரபையும்விடத் தமிழ் நாடக மரபு தொன்மையானது என்று தெரிகிறது.

''நாடகத்தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாக உள்ள தொன்னூல்களும் இறந்தன'' என அடியார்க்குநல்லார் குறிப்பிட்டுள்ளார். இந்த நூல்களெல்லாம் பரத முனிவரின் நாட்டிய சாத்திர திற்கு முற்பட்டவை என்பதில் ஐயம் இருக்க முடியாது. ஏனெனில், பரத நாட்டிய சாத்திரம் கி.மு. 200-க்கும் கி.பி.200-க்கும் இடையே தொகுக்கப் பட்டது என்றும், அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்புள்ள மிகப்பழமையான நாட்டிய இலக்கணங் கள் பல, அதில் புதைந்து கிடக்கின்றன என்றும், அந்த மூல சூத்திரங்கள் பாணினியாருக்கும் முற் பட்டவை என்றும் ''இந்திய — மேலைநாட்டு நாடக மேடைக் கலைகள்'' என்ற நூலின் 7ஆம் பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

எனவே, தென்னாட்டில் விளங்கிய கூத்து வகை களே பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்திற்கு இலக்கியங்களாக விளங்கின என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை உரையில் அடியார்க்குநல்லார் குறிப்பிடும் பல இசை நாடக நூல்கள் காலவெள்ளத்தில் அழிந்துவிட்டன என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அதை நாமும் ஓரளவு நம்புகிறோம். ஆனால், அத்தகைய நமது கலைக்களஞ்சியங்கள் அத்தனையும் இயற்கையாக மறையவில்லை; கடல் கொண்டது என்றும், கனல் உண்டது என்றும், கறையான் தின்றது என்றும் பொய்ப்பிரசாரம் செய்து பழியை இயற்கையின்மீது ஏற்றிவிட்டு மக்களைச் சிலர் ஏமாற்றிவந்துள்ளனர் என்று எண்ணவேண்டியுள்ளது.

நலது கலை இலக்கியங்கள் எல்லாம் தமிழின் பகைவர்களால் கட்டுப்பாடாகத் திட்டமிட்டு அழிக் கப்பட்டன என்றும் கருதவேண்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் நமது தமிழ் மூல நூல்களை, பிரா கிருதம் போன்ற மொழிகளில் மொழிமாற்றம் செய்துகொண்டு, அசல் தமிழ் ஏடுகளைத் திட்ட மிட்டு அழித்திருக்கக்கூடும் எனவும் யூகிக்க இட மிருக்கிறது.

கடைச்சங்க காலத்தை அடுத்த களப்பிரா ஆதிக் கக் காலத்தில் அதாவது — கி.பி. 250 முதல் 550 வரை இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்களும், பொருள் இலக்கண நூல்களும் திட்டமிட்டு அழிக் கப்பட்டன என அழுத்தமாகக் கூறியுள்ளார், ஆராய்ச்சி அறிஞர் திரு. மு. அருணாசலம் அவர்கள் (தமிழ் இலக்கிய வரலாறு—10ஆம் நூற்றாண்டு— முன்னுரை, பக்கம் 27-28). இந்தக் கருத்தை மறுக்க இயலாது.

''தமிழின் பகைவர்கள், தம்மை நிலத்தேவர் என் றும் தம் முன்னோர் மொழியைத் தேவமொழி என் றும் கூறி, ஏமாற்றி, தமிழ் நூல்களையெல்லாம் வடமொழியில் மொழிபெயர்த்துக் கொண்டபின் தமிழ் முதல் நூல்களும் தமிழ்த் தூய்மையும் இருக் கும்வரை என்றேனும் தம் ஏமாற்றம் வெளியாகி விடுமென்றும் அறிந்து, அதைத் தடுப்பதற்கு, அரச ரும் பொதுமக்களுமான தமிழ்ப் பேதைகளையும் தன்னலக்காரரையும் துணைகொண்டு, நூலுரை யாலும் பிற செயல்பாட்டாலும் மறைப்பு வினை களையும் அழிப்பு வினைகளையும் செய்து வந்திருக் கின்றனர் என 'வடமொழி வரலாறு' என்ற நூலில் 'மொழி ஞாயிறு' ஞா. தேவநேயப் பாவாணர் அவர் கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத் தக்கது.

இந்தக் காலத்திலேயே நம் கண் முன்னாலேயே தமிழ்க் கலையைத் தாழ்வாகக் கருதுவோரும் பிறருக்கு அடகு வைப்போரும் இருக்கிறார்கள் என்றால், 2000 ஆண்டுகளுக்கு முன் பகைவர்கள் நமது கலை நாகரிகத்தை எவ்வளவு தூரம் சிதைத் திருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

இப்படியாக, நமது கலை இலக்கியங்கள் அழிக்கப் பட்டமையினால்தான், நமது தொன்மையான நாட்டிய — நாடக — கூத்து வகைகளைப்பற்றிய முழுமையான நூல் எதுவும் கிடைக்கவில்லை.

''வாடா வள்ளி வயலர் ஏத்திய'' என்ற தொல் காப்பிய நூற்பா (புறத்திணை. 5) வரியும் ''வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்'' என்ற (பெரும்பா ணாற்றுப்படை, 370ஆம்) வரியும் சுட்டிக் காட்டும் வள்ளிக் கூத்தும், வேலன் வெறியாடல், பாலசரித நாடகங்கள் முதலியவைகளும் நாட்டிய நாடகப் பாணியில் அமைந்த வடிவங்களாகவே இருக்க வேண்டும்.

எட்டுத்தொகையில் காணப்படும் பல பாடல்கள், நாடகப் பாத்திரங்களின் தனிமொழி போலவே உள்ளமையால், தனி நடிப்பு நடனத்திற்கு (Solo Dance) ஏற்றவையாகவே அமைந்துள்ளன. பழந் தமிழ் மக்களின் வாழ்வில் சிறப்பான இடம்பெற்ற குரவைக்கூத்து வகையினைப்பற்றி, நற்றிணை, ஐங் குறுநூறு, மதுரைக்காஞ்சி, புறநானூறு, மலைபடு கடாம் முதலான சங்க இலக்கியங்களில் காணப் படும் குறிப்புகள் ஆதாரமாக உள்ளன.

''வேங்கை முன்றில் குரவை'' (நற்றிணை, 276), ''வெண்மணல் குரவை'' (ஐங்குறுநூறு, 181), ''மன்றுதொறும் நின்ற குரவை'' (மதுரைக் காஞ்சி, 615), ''பரதவர் மகளிர் குரவை'' (மதுரைக் காஞ்சி, 97) இப்படியாகப் பலவகைச் சான்று களைக்காட்ட முடியும். 'மன்றுதொறும் நின்ற குரவை' என மதுரைக்காஞ்சி சுட்டிக் காட்டுவ தால் குரவைக் கூத்து மன்றுகளில் ஆடப்பெற்ற சிறப்புத் துலங்குகிறது.

ஆடல் கலைஞர்கள் கூத்தர் எனவும், ஆடல் மக ளிர் விறலியர் எனவும் அழைக்கப்பட்டனர். அகக்

கூத்து, புறக்கூத்து, வேத்தியல், பொதுவியல், சாந்திக்கூத்து முதலான பாகுபாடுகளைப்பற்றி எல்லாம் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

மாதவி, இந்திர விழாவில் பொதுவியல் வகையில் ஆடிய பதினொரு ஆடல்களும் நாட்டிய நாடக வகையிலேயே அடங்கும். பதினொரு ஆடல்களும் கதை தழுவிய ஆடல்களாகவே குறிக்கப்பட்டுள்ளன.

கம்சன் ஏவிய மத யானையின் கொம்பினைக் கண்ணன் முறிப்பதைக் குறிக்கும் ஆடல் **அல்லியம்.** திரிபுரத்தைச் சிரித்தே எரித்த சிவபெருமான் வெற்றிக் களிப்பால் கைகொட்டி ஆடிய கூத்து **கொடு கொட்டி** எனப்பட்டது. தேரில் முன்னே நின்ற நான்முகன் காணுமாறு பாரதி ஆடியது **பாண்டரங்கம்** என்னும் கூத்து. வாணாசுரனை மாயோன் மல் யுத்தம் செய்து கொல்வதைக் குறிப்பது **மல்லாடல்** என்னும் கூத்து.

சூரபதுமனைக் கொன்றபின் முருகன் கடலின்மீது உடுக்கை அடித்துக்கொண்டு கூத்தாடியது **துடிக் கூத்து.** படைகளை இழந்து அசுரர்கள் தோல்வியுற்ற நிலையில், வீர முருகன் தன் குடையைச் சாய்த்து ஆடியது **குடைக் கூத்து.** வாணாசுரனால் கைதுசெய்யப்பட்ட காமனின் மகன் அநிருத்தனை விடுதலை செய்வதற்காகக் கண்ணன் குடத்தின்மீது ஆடியது **குடக்கூத்து.** ஆண்மை தீர்ந்த பெண்மைக் கோலத்தோடு மன்மதன் ஆடியது **பேடி ஆடல்.** அசுரர்கள் ஏவிய பாம்பு, தேள் போன்ற கொடிய உயிர்களை நசுக்கிக் கொல்வதற்காகக் கொற்றவை ஆடியது **மரக்கால் கூத்து.** அவுணர்களின் போர்க் கோலம் ஒழிவதற்காகத் திருமகள் ஆடியது **பாவைக் கூத்து.** இந்திரனின் மனைவியான அயிராணி வயலில் உழவனின் மனைவி வேடத்தில் ஆடியது **கடையம்** என்னும் கூத்து. இப்படியாகப் பதினொரு ஆடல்களும் மக்களுக்கு நன்கு அறிமுகமான ஏதாவது கதையைப் பின்னணியாகக்கொண்டு சங்க காலத்திலேயே நாட்டிய நாடகமாக ஆடப்பட்டன என்று தெரிகிறது. இவற்றைப் போன்று சிலப்பதிகாரம் காட்டும் ஆடல் பாடல் செய்திகள் ஏராளம்.

களப்பிரர்களின் இருண்ட காலத்தில் மங்கிக் கிடந்த கலைகள் பின்னர் பல்லவர் காலத்தில் மறு மலர்ச்சி பெற்றன. மகேந்திர பல்லவ மன்னன் தானே ‘மத்த விலாசம்’ என்னும் நையாண்டி நாடகத்தை இயற்றினான். ஆனால், இது வடமொழியில் அமைந்தது. ஆயினும், பின்னர் மகேந்திர பல்லவன் திருநாவுக்கரசரின் தூண்டுதலால் தமிழ்க் கலைகளையும் வளர்த்துவந்தான் என்று தெரிகிறது.

பெருங்கதையில் ‘‘கோயில் நாடகக் குழுக்களும் வருக’’ என்ற தொடர் காணப்படுகின்றது. எனவே, எட்டாவது நூற்றாண்டிலும் நாடகக் குழுக்கள் இயங்கிவந்தன என்று தெரிகிறது. கோயில்களில் ஆடப்பட்ட நடன நாடகங்கள் இந்த நாடகக் குழுக்களால் நடத்தப்பட்டிருக்கவேண்டும்.

சோழர்களின் பொற்காலத்தில் அதாவது கி.பி. 850 முதல் 1300 வரை கலைகள் செழிப்பாக வளர்ந்தன. இராஜராஜேச்சுவரம் என்றும் தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜராஜேசுவர நாடகம் ஆண்டு தோறும் வைகாசித் திருவிழாவில் ஆடப்பட்டு வந்தது எனவும், அதற்காக இராஜராஜ சோழன், சாந்திக்கூத்தன் விஜயராஜேந்திர ஆசாரியன் என்பவனுக்கு மானியம் வழங்கினான் எனவும் ஆதாரம் கிடைத்துள்ளது (*S.I.I. Vol. II, No. 67*).

முத்தமிழ்க் கலையை வளர்க்க நானூறு பெண்களையும் தமிழிசை பாடுவோர் நாற்பத்தி எண்மரையும் தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜராஜ சோழன் ஏற்பாடு செய்திருந்தான் என்று ஒரு குறிப்பும் உண்டு.

சோழர் காலத்தில் (கி.பி. 1119) புகழ்பெற்ற **பூம்புலியூர் நாடகமும்** பாட்டுமயமான கூத்துவகையாகவே இருக்கவேண்டும். இதனை இயற்றியவன் வீரைத் தலைவன் பரசமய கோளரி மாமுனி என்று கூறப்பட்டுள்ளது.

முதலாவது இராஜராஜசோழன் காலத்தில் புரட்டாசி பூரட்டாதி விழாவின்போது திருமூல நாயனார் கூத்துவகைகள் ஆடப்பட்டன என்று ஒரு கல்வெட்டில் காணப்படுகின்றது (*S.I.I. Vol. p. IV, 5*).

இராஜராஜ சோழன் காலத்தில் சாக்கைக் கூத்து, சாந்திக்கூத்து முதலானவை ஆடப்பட்ட செய்திகள் கிடைத்துள்ளன. சிவ தாண்டவங்களைப் பயிற்சி பெற்ற சாக்கையர் என்னும் குழுவினர் ஆடிவந்தனர் என்றும், அவர்களுக்குக் கோயில்களில் சாக்கைக்காணி - கூத்தக்காணி என்னும் பெயருடன் நிலங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன என்றும் சாசனங்கள் கூறுகின்றன.

திரு வெள்ளறைச் சாக்கை, சாக்கைமாராயன், விக்கிரம சோழதேவன், விக்கிரமாதித்தன், திருமுது குன்றன், குமரன் சீகண்டன் பாரசிவன், பொன்னன் என்னும் கலாவிநோதப் பேரரையன் முதலான ஆடலாசிரியர்களின் பெயர்களும் சாசனங்களில் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்தில் கூறப்படும் சாக்கையர் கூத்து வகை இன்றும் கேரளாவில் காணப்படுகின்றது.

‘நானாவித நடன சாலை’ ஒன்று இருந்ததாக முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் குறிப்பு உள்ளது. இன்னிசைக் கூத்து ஆடப்பட்ட செய்திகளை இனிக்க இனிக்கக் கூறுகின்றது ஜீவக

சிந்தாமணி. பாட்டு வழங்கிய செய்தியை ஜீவக சிந்தாமணி கூறுவதால் நாட்டிய நாடகங்களுக்குப் பின்னணி இசையில் சிறப்பு நன்கு ஒலிக்கின்றது.

கம்பராமாயணம், வில்லி பாரதம், பெரிய புராணம், திருவிளையாடல் முதலிய இலக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு பிற்காலத்தில் விலாச நாடகங்கள், நொண்டி நாடகங்கள் முதலான தெருக்கூத்து இசை நாடகங்கள் ஆடப்பட்டு வந்திருக்கின்றன.

அருணாசலக் கவிராயரின் 'இராம நாடகம்', கோபாலகிருஷ்ண பாரதியாரின் இசை நாடகங்கள் போன்றவையெல்லாம் நாட்டிய நாடகப் பாங்கு உள்ளவையே. இந்தப் பாடல்களில் பல பிற்காலத்தில் நடன அரங்குகளில் புகழ்பெற்று வந்துள்ள சிறப்பைக் காண்கிறோம்.

பிற்கால இலக்கியங்களான பள்ளு, குறம் முதலான வகைகளும் நாட்டுக் கூத்துவகையில் அடங்கும். ஆயினும், முழுக்க முழுக்க நாட்டிய நாடகங்கள் என்று சொல்லத்தக்க புகழுக்கு உரியவை குறவஞ்சி நாடகங்களே. அறுபதுக்கு மேற்பட்ட குறவஞ்சிகள் உள்ளன. முதன்முதல் தோன்றியது பாபவிநாச முதலியார் இயற்றிய 'கும்பேசர் குறவஞ்சி'தான். ஆயினும், குறவஞ்சி நாடகங்களில் மிகவும் சிறந்ததாகவும் வழிகாட்டியாகவும் விளங்குவது, மேலகரம் மகாகவி திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய 'குற்றாலக் குறவஞ்சி'யே. தேன் போன்ற 119 இசைப்பாடல்கள் அடங்கிய இந்த நாட்டியக் காவியம் அபிநயம் பிடித்து அற்புதமாக ஆடிக் காட்டுவதற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது.

திருக்குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தை அடையாறு 'கலாக்ஷேத்திரா'வின் தலைவியான திருமதி ருக்மிணி தேவி தம் குழுவினருடன் 1944-ல் ஆடி அபிநயித்துக் காண்பித்தார். திருக்குற்றாலக் கோயிலில் 'ரசிகமணி' டி.கே.சி. முன்னிலையில் இதனை அவர் நடத்திப் புகழ்பெற்றார்.

தமிழகத்தில் நடைபெறும் எல்லா நடன நிகழ்ச்சிகளிலும் குறத்தி நடனம் என்பது தவிர்க்க முடியாத ஒரு சம்பிரதாயமாகிவிட்டது. குறவஞ்சி நாடகங்களில் வசந்தவல்லி, மோகினி முதலான பாத்திரங்கள் பந்தாடும் காட்சி அற்புதமானது. இதனைப் பின்பற்றியே கேரள நாட்டில் மோகினி ஆட்டம் புகழ் பெற்றுள்ளது. இவ்வாறு கேரளத்தில் மோகினி ஆட்டம் நிலைபெறுவதற்குக் காரணமாக இருந்தவர் தஞ்சை நால்வரில் ஒருவரான வடிவேலுதான் என்றும், அவர் திருவிதாங்கூர் சுவாதித்திருநாள் மன்னரின் அரசவைக் கலைஞராக இருந்தபோது மோகினி ஆட்டத்திற்கு வழிவகுத்தார் என்றும் வரலாறு உண்டு.

குற்றாலக் குறவஞ்சியைப் போலவே அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற கதையமைப்புடைய பல குறவஞ்சி நாடகங்கள் இயற்றப்பட்டுக் கோயில்களில் நடத்தப்பட்டு வந்துள்ளன.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' என்பது இரண்டாவது சரபோஜி மன்னர் காலத்தில் தோன்றியது. தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடிக் காட்டப்பட்ட சிறப்பு வாய்ந்தது. திருக்கோயில்களில் ஆடப்பட்ட பற்பல குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் இடைக் காலத்தில் ஆடுவாரற்றுத் தேக்கநிலை கண்டன.

விராலிமலைக் கோயிலில் ஆண்டுதோறும் மகா சிவராத்திரியன்று நடத்தப்பட்டு வந்த 'விராலி மலைக் குறவஞ்சி'யை, மதுரை காந்தி ராமகானக் குழுவினர், இசைவாணர் வி. வி. சடகோபன் ஏற்பாட்டில் 1958-ல் தமிழ் இசை விழாவில் ஆடிப் புகழ்பெற்றனர்.

'தியாகேசர் குறவஞ்சி'யைச் சென்னைச் சரஸ்வதி கான நிலையத்தார் 1966-ல் தமிழ் இசை விழாவில் அரங்கேற்றி மறுமலர்ச்சி ஊட்டினர். குறிப்பிடத்தக்க மற்றொரு நாட்டிய நாடகம், கவி குஞ்சர பாரதியார் இயற்றிய 'அழகர் குறவஞ்சி'. இதனைத் திருமதி கமலா தம் நாட்டியாலயாவின் சார்பில் அரங்கேற்றி நடத்திவந்தார். பாபவிநாச முதலியார் இயற்றிய 'கும்பேசர் குறவஞ்சி'யைச் சென்னை நாட்டியக் கலாலயத்தின் சார்பில் அதன் இயக்குநர் திரு. கே. என். தண்டாயுதபாணி பிள்ளை 1967-ல் தமிழ் இசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சி மாநாட்டில் அரங்கேற்றினார்.

'திருமலை ஆண்டவர் குறவஞ்சி'யைத் திரு. வழுவூர் இராமையா பிள்ளையின் பரத நாட்டியக் குருகுலத்தினர் 1970-ல் தமிழ் இசை விழாவில் அரங்கேற்றினர். திருச்செங்கோட்டில் கோயில் கொண்டுள்ள அர்த்தநாரீசுவரரைப்பற்றிய ஒரு குறவஞ்சியைப் பழைய சுவடியைக் கொண்டு நாட்டிய நாடக உருவாக்கித் தமிழிசை விழாவில் 1972-ல் அரங்கேற்றினார், நிருத்யோதயா இயக்குநர் செல்வி பத்மா சுப்பிரமணியம். இந்த 'அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி'யின் நூலாசிரியரது பெயரும் காலமும் தெரியவில்லை.

தில்லைவிடங்கன் மகாவித்துவான் மாரிமுத்தா பிள்ளை இயற்றிய பழமையான 'வருணாபுரிக் குறவஞ்சி'யை அடையாறு திரு. கே. இலட்சுமணன் தமிழ் இசை விழாவில் அரங்கேற்றினார். நடன ஆசிரியர் திரு. கே. என். பக்கிரிசாமி பிள்ளை 1974-ல் மேடையேற்றிய 'சிக்கல் நவநீத ஈசுவரர் குறவஞ்சி' பத்தொன்பதாம் நூற்றாண்டில் திரு. சு. சொக்கலிங்கம் பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டது.

இவை தவிர, இலக்கணப்புலி பேறை செகந்நாத பிள்ளை, மல்லாபுரி மன்னன் சுரகுருவினரின் தெய்வப் பணியை விளக்கும் நாட்டிய நாடகமாகச் 'சுர குரு நாடகத்தை'ப் படைத்துள்ளார். திருக்கழுக் குன்றம் கோயில் திருவிழாக்களில் நடந்துவந்த இந்த நாட்டிய நாடகத்துக்கு மறுமலர்ச்சி கொடுத்து 1969-ல் தமிழ் இசை விழாவில் அரங்கேற்றியவர் குற்றாலம் திரு. எல். கணேசப் பிள்ளையவர்கள்.

சேத்தமங்கலம் கேசவபாரதி இயற்றிய 'கபிலை நாடகம்' திருக்கோகர்ணம் தலத்தில் ஆவணி மூலத் திருநாளில் முன்பு நடந்து வந்ததாகத் தெரிகிறது. இந்த நாட்டிய நாடகத்தையும் தமிழ் இசை விழாவில் 1968-ல் நடத்திக் காட்டினார் திரு. வழுவூர் இராமையா பிள்ளை.

இவ்வாறெல்லாம் தமிழ் இசை விழாவின் பண் ஆராய்ச்சி மாநாடுகளில் அரங்கேற்றி வந்த நாட்டிய நாடகங்கள், பின்னர் எந்த அரங்கிலும் தொடர்ந்து நடைபெறும் வாய்ப்பைப் பெறவில்லை. குற்றாலக் குறவஞ்சியின் தனிச்சுவை மற்றவற்றில் அமையாததும் ஒரு காரணமோ என்னவோ?—ஏன், குற்றாலக் குறவஞ்சியே இப்போது அடிக்கடி நடைபெறக் காணோமே!

'கண்ணப்பர் குறவஞ்சி' போன்ற புராணத் தொடர்புடைய பல நாட்டிய நாடகங்களைச் சிறந்த கட்டுக்கோப்புடன் அருமையாக நடத்திப் புகழ் பெற்று வருவது அடையாறு கலாக்ஷேத்திரம். அயல் நாட்டவரையும் கவரும்வண்ணம் தரமான இசையும், நாட்டியமும், காட்சி உத்திகளும் அமைந்துள்ள சிறப்பை இந்த நாட்டிய நாடகங்களில் காணலாம். ஆயினும், கலாக்ஷேத்திராவின் நாட்டிய நாடகங்களில் பெரும்பாலானவை வடமொழியில் அமைந்துள்ளபடியால் பொதுமக்களைப் பெரிதும் ஈர்க்கவில்லை என்று கூறலாம்.

நாட்டிய நாடகப் படைப்புகளுக்காகவே தம்மை அர்ப்பணித்துக்கொண்டுள்ளவர்கள் நடராஜ்-சகுந்தலா குழுவினர். ஏதாவது புதிய நாட்டிய நாடகத்தை அரசின் ஆதரவோடும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் துணையோடும் நடத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் நடனமேதை நடராஜ். இந்தக் குழுவினரின் 'திருவள்ளுவர்', 'பாஞ்சாலி சபதம்' முதலானவை இலக்கியத் தரம் உடைய சிறந்த படைப்புகள்.

நடனக்கலையில் தனி அனுபவ ஆற்றல் பெற்றுள்ள கமலாவும் சில நடன நாடகத்தினைச் சிறப்பாக மேடையேற்றியுள்ளார்.

நாட்டியப் பேரொளி பத்மினி குழுவினர் 'கண்ணகி', 'இராமாயணம்', 'சாகுந்தலம்' முதலான நாட்டிய நாடகங்களைத் திரு. பி. எஸ். கோபால கிருஷ்ணன் தயாரிப்பில் வெற்றிகரமாக நடத்தினர். 'சாகுந்தலம்' காவியக் கதையை இப்போது செல்வி லதா நட்சத்திர முத்திரையோடு நடத்திப் பெருமை பெற்று வருகிறார்.

தன்னந்தனியாகப் பல வகையான பாத்திரப் பண்புகளை அபிநயத்துடன் ஆடிக்காட்டும் பரதக் கலைச்செல்வி பத்மா சுப்பிரமணியம் அனைத்துலகப் புகழ் பெற்றுள்ளவர். இவர் வெற்றிகரமாக நடத்தி வரும் 'சிலப்பதிகாரம்', 'கிருஷ்ணாய துப்யம் நம', 'இராமாய துப்யம் நம' முதலான நாட்டிய நாடகங்கள் ஈடற்ற பரதக்கலை வடிவங்களாகும். இனிய தமிழ் இலக்கியப் பாடல்களைக் கொண்ட நாட்டிய நாடகங்களுக்கு 'துப்யம் நம' என்று தமிழ் மரபுக்கு மாறான பெயரிட்டுள்ளது விந்தையாகவே உள்ளது.

சரசாலயாவின் சார்பில் சில நாட்டிய நாடகங்களைக் கே. ஜே. சரசா மேடையேற்றியுள்ளார். ஜெயப்பிரியா குழுவினர் 'சுபத்ரா' போன்ற நாட்டிய நாடகங்களைக் காட்சிப் புதுமைகளுடன் நடத்திப் புகழ் பெற்றுள்ளனர். தனி நடிப்பு நாட்டிய நாடகத் துறையில் தமக்கெனப் புதிய பாணியை வகுத்து, 'அம்பாபாலி', 'முருகா சரணம்' போன்ற படைப்புகளால் பெருமை பெற்றுள்ளவர் ஜயதேவி.

திரு. கே. என். தண்டாயுதபாணி பிள்ளையின் தனி முயற்சியால் உருவான 'சிற்றம்பலக் குறவஞ்சி', 'திருவிளையாடல்' முதலான நாட்டிய நாடகங்கள் மக்களை மிகவும் கவர்ந்தன. இவருக்குப் பெரும் புகழ் ஈட்டித் தந்தது, இந்தக் கட்டுரையாளர் இயற்றிய 'சிவகாமியின் சபதம்' நாட்டிய நாடகம் என்பதைக் கலையுலகம் நன்கு அறியும். கல்கியின் ஒரு மாபெரும் வரலாற்று நாவலே நாட்டிய நாடகமாகப் புகழ்பெறும் சாதனை நிகழ்ந்தது. இந்த நாட்டிய நாடகத்திற்கு 108 இராகங்களில் இவர் அமைத்த இசையும் அற்புதமான நாட்டிய முத்திரைகளும் திருமதி சந்திரகாந்தா குழுவினருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தன. இந்தக் குழுவினர் பின்னர் 'அனார்கலி', 'பொன்னியின் செல்வி' போன்ற நாட்டிய நாடகங்களையும் உருவாக்கிப் புகழ் பெற்றனர். பின்னர் இதே கட்டுரையாளர்

இயற்றிய 'காவிரி தந்த கலைச்செல்வி', 'சித்திரப் பாவை', 'ஞானப்பழம்', 'பஸ்மாசுர மோகினி', 'அரை மணிக்குள் இராமாயணம்', 'பாஞ்சாலி சபதம்' முதலான எல்லாமே நாட்டிய நாடகத் துறையில் சிறப்புப் பெற்றுள்ளவை என்பதை அடக்கத்துடன் குறிப்பிடுவது பொருத்தம் என்று கருதுகிறேன்.

'பத்மாவதி திருமணம்', 'பார்வதி திருமணம்' முதலானவையும் என்னால் இயற்றப்பட்டுள்ளன. இப்போது தொன்மைவாய்ந்த தமிழ் வரலாற்றுப் பின்னணியில் ஒரு புதிய நாட்டிய நாடகத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறேன்.

வழக்கமான பரத நாட்டிய நிகழ்ச்சிகளைவிட நாட்டிய நாடகங்களுக்குத் தனிச் சிறப்பு உள்ளது என்பதை அனைவரும் அறிவர். எனவே, புதிய புதிய வரலாற்றுக் கதைகளையும், இலக்கியச் செல்வங்களையும், சமுதாயப் புதுநோக்குள்ள கதைகளையும் புதிய புதிய உத்திகளுடன் நாட்டிய நாடகமாக்கினால் கலையின் தரமும் பெருமையும் நிலையான பயனைத் தரும்.

நடனத்துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் அனைவரும் தமது கவனத்தை நாட்டிய நாடகத்தில் ஈடுபடுத்திப் பல புதுமைகளைச் செய்து காட்டும் ஆர்வத்தைப் பெறவேண்டும்.



வேளாண்மையில் பழமொழிகள்

பேராசிரியர் இல. செ. கந்தசாமி

பழமொழி என்பது பட்டறிவால் தோன்றிய அனுபவ மொழி. இது பல நூறு ஆண்டுகளாகப் பல்லாயிரம் மக்களால் வழிவழியாக வழங்கப்பட்டு வரும் பழமையான மொழி. காலவெள்ளத்தில் அம்மொழிகளில் சில வளர்ந்தும் தேய்ந்தும் மாறுபட்டும் வழங்கிவருவது உண்டு. எவ்வாறாயினும் அம்மொழிகள் பல காலங்களில் மிகப் பலரால் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் தெளிந்த முடிபுகளாகும். முன்னையோர் கண்ட அம்முடிவுகள் பின்னையோர்க்கு வாழ்வில் தெளிவினை உண்டாக்குவதால் அவை மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவிட்டன. பழம் இனிமை தருவதுபோல அம்மொழிகள் நன்மையைத் தருவதால் பழம் மொழிகளாகி வாழ்விற்கு வளம் ஊட்டுகின்றன.

பழமொழியின் பண்புகள்

பழமொழிக்கெனச் சில பண்புகள் உண்டு. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் பழமொழிக்கு உள்ள தனிப்பண்பாகும். அவை மக்கள் மனத்தில் ஆழப்பதிந்து நற்செயலைச் செய்யத் தூண்டும் தன்மை உடையன. பழமொழியால் விளையும் பயன் நன்மை உடையதாகவே இருக்கும். செறிவு, சுருக்கம், தெளிவு, எளிமை, ஆற்றல் முதலிய பழமொழியின் பண்புகளை ஒன்றுதிரட்டி 'நூற்பாவாக்கி, பழமொழிக்கு 'முதுமொழி' என்று பெயரிட்டு உரைக்கின்றார் தொல்காப்பியர்.

''நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப''

(தொல் – பொருள்-செய்யுள், 175)

பழமொழிகளின் வடிவம்

பழமொழிகளின் அமைப்பே மக்கள் மனத்தில் பதியக்கூடிய வகையில் எளிய வடிவம் கொண்டது. 'காலப்பயிர் கடக்க நிற்கும்' எனச் செய்திகளை சொல்பவை; 'ஈரநிலத்தில் ஏரைப்பிடி' எனக் கட்டளை இடுபவை; 'அறிவிலே விளையுமா? எருவிலே விளையுமா?' எனக் கேள்வி கேட்டுச் சிந்திக்க வைப்பவை; 'காலப்புழுதி இல்லாதவன் கைமுதல் இழப்பான்' என எச்சரிக்கை விடுபவை; 'எள்ளு விதைக்க எறங்காடு, கொள்ளு விதைக்கக் கல்லங்காடு', 'எண்ணிப்பார் குடித்தனத்தை, எண்ணாதே பார் வெள்ளாமையை' என எதுகை மோனையோடு வருபவை எனப் பழமொழிகளில் பல்வேறு வடிவங்கள் இருப்பினும் அனைத்தும் ஓர் எளிமையை அடிப்படையாகக்கொண்டே விளங்குகின்றன.

பழமொழியின் பயன்

இப் பழமொழிகளின் வாயிலாகப் பண்டைய மக்களின் நாகரிகம், பண்பாடு, சமுதாயநிலை, தொழில்முறைகள் முதலியவற்றை நன்கு அறிந்து

கொள்ளலாம். இலக்கியங்கள் போலப் பழமொழி களும் மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகும்.

இப் பழமொழிகள் தமிழ் மொழியிலன்றி உலகில் உள்ள பழமையான மொழிகள் எல்லாவற்றிலும் உண்டு. பல துறைகளிலும் இப் பழமொழிகளைக் காணலாம்.

வேளாண்மைப் பழமொழிகள்

தமிழில் ஏறத்தாழ 12,000 பழமொழிகள் உள்ளன. அவற்றுள் 4,000-க்கும் மேற்பட்டவை வேளாண் தொழில்பற்றி வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறும் பழமொழிகளாகும். அவை நிலம், நீர், உழவு, பருவம், பயிர், எரு, களை, காப்பு முதலாய வேளாண்மை இயல், வேளாண் பொறியியல், கால்நடை, கால்நடை மருத்துவம், மீனியல், வன இயல், மனையியல், வேளாண் சமுதாய இயல் ஆகியவைபற்றித் தனித்தனியாக விளக்குகின்றன. இவ் வேளாண் பழமொழிகளில் பல அறிவியல் ஆய்வுக்குப் பொருந்த உள்ளன. இன்னும் பல ஆராய்ந்து காணவேண்டிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

1. வேளாண்மை இயல்

உழவியல்

வேளாண்மையில் பருவம் பார்த்துப் பயிரிடல், சரியான அளவில் உழவு செய்தல், போதிய இடைவெளி விட்டு விதைத்தல், நடுதல், களை எடுத்தல், ஊடுபயிர் முறைகள், வானிலை முதலாய பயிரிடுதற்கு ஏற்ற கட்டுக்கோப்புச் சாகுபடி குறிப்புகளை உழவியல் தருகின்றது.

'பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு'

'ஏழுழவு உழுதால் எருப்போட வேண்டாம்'

'அழிய உழுது அடர விதை'

'கார்ப்பயிர் கலந்துகெட்டது, பிசானப் பயிர் நெருங்கிக்கெட்டது'

'களை பிடுங்காப் பயிர் கால் பயிர்'

'காரையும் எள்ளையும் கருதிப் பயிரிடு'

என்பன போன்ற பழமொழிகள் இன்றைய ஆராய்ச்சி முடிவுகளை உள்ளடக்கிக்கொண்டு விளங்குகின்றன.

மண்ணியல்

மண்ணின் தரத்தையும், மண்ணைத் தரப்படுத்தும் விதத்தையும், எந்த மண்ணுக்கு எந்தப் பயிர் பிடிக்கும் என்பதனையும், எந்தப் பயிருக்கு எத்தகைய உரம் போட்டால் மிகுந்த விளைச்சல் காணும், எவ்வெப் பயிர்களுக்கு மிகுந்த உரம் தேவை என்பதையும் ஆய்கின்றது மண்ணியல்.

'காணி தேடினும் கரிசல் தேடு'

'களர் முறிக்க வேப்பந்தழை'

'மஞ்சள் வைப்பது மதவை நிலத்தில்'

'ஆடு பயிர் காட்டும், ஆவரை நெல் காட்டும்'

'எள்ளும் கரும்பும் எடுக்கும் பயிராம்'

முதலாய பழமொழிகள் பண்டைய உழவர் பெருமக்களின் ஆய்ந்து தெளிந்த முடிவுகளாகும். ஆராய்ச்சி செய்து காணவேண்டிய இத்தகைய பழமொழிகள் இன்னும் பல உள.

பயிரியல்

இன்றுபோல் புதிய புதிய பயிர் இரகங்கள் காணப்படவில்லை என்றாலும் பயிர்களின் தரத்தை உயர்த்த பல்வேறு பயிர்களைப் பயிரிட்டுப் பயிரிட்டு, எது விளைச்சல் அதிகம் கொடுத்ததோ அதைத் தேர்ந்தெடுத்து, அப் பயிர்களைப் பயிர் செய்யவேண்டும் என்று கொண்டார்கள். நெல் பயிரிடுதலே பெருவழக்காக இருந்ததால் நெற்பயிர்பற்றிய குறிப்புகளே பழமொழிகளில் மிகுந்து காணப்படுகின்றன.

'கதிருக்கு முந்நூறு நெல் இருந்தால் முழு விளைச்சல்'

'நட்டாலும் தில்லைநாயகம் நடவேணும்'

'கொம்பில் ஒரு நெல் விளைந்தாலும் சம்பாவுக்கு ஈடாகாது'

'நெல்லுக்கு நேரே புல்'

'பனிக்குப் பலிக்கும் வரகு, உளுந்து — மழைக்குப் பலிக்கும் நெல்லு'

இம் முறை இன்றைய பொறுக்கு இரகங்களைக் கண்டறியும் முறைக்கு இணையானதாகும்.

விதையியல்

இத் தகு உயர்விளைச்சல் இரகங்களைப் பயிரிடுதற்கு அடிப்படையான விதையினைத் தெரிவு செய்து, உலர வைத்துப் பக்குவப்படுத்தும் முறையினைக் கூறும் பழமொழிகள் விதை நுண்ணியல் ஆய்வுடன் ஒப்பு நோக்கத்தக்கன.

'காய்ந்த வித்துக்குப் பழுதில்லை'

'சொத்தைப்போல வித்தைப் பேணு'

'ஓடுகள் விதைவைக் கேடறக் காக்கும்'

'கலப்பயர் விதைத்து உழக்குப் பயர் விளைந்தாலும் புதுப்பயர் புதுப்பயர்தான்'

பூச்சி – நோயியல்

எத்தகைய சீரிய முறையில் பயிரிட்டாலும் பயிருக்குப் பாதுகாப்பு இன்றேல் உரிய பலனை எதிர் பார்க்க இயலாது. இன்றுபோல் பண்டை நாளில் நோயும் பூச்சியும் அதிகம் இல்லை. என்றாலும், குறிப்பிடப்பட்டுள்ள சில குறிப்புகள் இன்றைய ஆய்வுக்குப் பொருந்துவதாக உள்ளன.

'அழுகைத் தூத்தல் அவ்வளவும் பூச்சி'

'ஆவணியில் நெல் விதைத்தால் ஆனைக்கொம்பு விழும்'

'ஆயிரம் கலம் நெல்லுக்கு ஓர் அந்து'

'மூலக்காற்று புழுவிழும்'

'செம்பாடு அடிச்சா எம்பாடு தீர்ந்தது'

'கீரைக்குப் புழு வேரில்'

இத்தகைய விளைவுகளைக் குறிப்பிட்டு, அதற்குரிய மருந்திற்கு மாறாக, பூச்சி விழும் பருவங்களில் பயிரிடுவதைத் தவிர்க்கவும் எங்கெங்கே புழு விழும் என்பதை அறிந்து வருமுன் காத்துக்கொள்ளவும் பயன்படும் குறிப்புகள் காணப்படுகின்றன.

தோட்டவியல்

பருவத்திற்கேற்ற காய்கறி இரகங்கள், அவற்றைப் பயிரிடும் முறைகள், உயர் இரகங்களைக் கண்டுபிடித்தல் முதலியவை தோட்ட இயல் ஆய்வுகளில் அடங்குகின்றன.

'ஆடிவாழை தேடிப்போடு'

'ஆடி அவரை தேடிப்போடு'

'ஆறு கொத்து நூறு தண்ணி வாழை'

'எட்டடி வாழை கமுகு, ஈரடி கரும்பு கத்தரி, இருபதடி பிள்ளை'

'இஞ்சி லாபம் மஞ்சளில்'

என்பன போன்ற பழமொழிகள் அறிவியல் நோக்கோடு காய்கறிகள் பயிரிட்டமையைப் புலப்படுத்துகின்றன. இம் முறைகள் இன்றும் பின்பற்றப்படுகின்றன.

வேளாண் பொருளியல்

இன்று பண்ணை நிர்வாகம், இடுமுதல் செலவு, வரவுநிலை, வேளாண் விளைபொருள்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் உரிய சூழ்நிலை ஆகியவற்றை நவீன நுட்பத்தோடு முன்னறிவிப்புச் செய்வதுபோலவே பண்டை நாளிலும் வேளாண்மைப் பொருளாதாரம் போற்றப்பட்டுள்ளது. ஒரு வேலி நிலத்தைப் பராமரிக்க ஆள், அம்பு, விதை முதலியவை குறிப்பிடப்பட்டுள்ளன. எப்போது விளை பொருள்களை விற்பது, எப்போது ஆடுமாடுகளை வாங்குவது என்பது போன்ற குறிப்புகளும் காணப் படுகின்றன.

'வேலி ஒன்றுக்கு ஈரணை மாடும் இரண்டு ஆளும்'

'வேலி ஒன்றுக்குப் பன்னிரண்டு கலம் விரைப் பாடு'

'கார்த்திகைக் கார் கடைவிலை, தைச் சம்பா தலைவிலை'

'சித்திரை மாதம் சிறந்து மழை பெய்யாது போனால் வில்லாததை விற்று வெள்ளாடு கொள்'

வேளாண் விரிவினை

உழவர் பெருமக்கள் அண்மைக்கால நுட்பங்களைக் கடைப்பிடித்து சீரிய முறையில் வேளாண்மை செய்ய அறிவுரை வழங்குவது, செயல் விளக்கங்கள் செய்துகாட்டுவது வேளாண் விரிவினையியலாரின் பணியாக இருந்து வருகின்றது.

நல்ல தலைவர்களை உருவாக்குதல், வெளியீடுகள்மூலம் கருத்துகளைப் பரப்புதல் முதலாய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பண்டை நாளில் ஊரில் யார் சிறந்த முறையில் உழவுத் தொழில் செய்தார்களோ அவர்களே முன்னோடிகளாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தனர்.

'உழவற உழுதவன் ஊரில் பெரியவன்'

'உடையவன் பாராப் பயிர் ஒரு முழம் கட்டை'

என்பன போன்ற பழமொழிகள் விரிவினை நோக்கில் கொள்ளப்பட வேண்டிய பழமொழிகள் என்றாலும், பொது நோக்கில் பழமொழிகள் அனைத்துமே விரிவினை இயலார் பயன்படுத்தவேண்டிய மூலப்பொருளாகும்.

2. கால்நடையியல்

கால்நடை வளர்ப்பு

கால்நடைகள் வேளாண் தொழிலுக்குப் பெரிதும் துணை நிற்பவை. வேளாண்மை விளைபொருள்களைப் 'பகடுதரு செல்வம்' என்றே பண்டை நாளில் போற்றினர். உழவுக்குப் பயன்படும் காளைகள், எருவைத் தரும் ஆடுகள், பால் தரும் பசுக்கள், எருமைகள் ஆகியவையே பழமொழிகளில் பெரிதும் போற்றப்பட்டுள்ளன. குறிப்பாக, ஆடு வளர்ப்பது மிகச் சிறந்த தொழிலாகவும் போற்றப்பட்டு வந்துள்ளது.

'குண்டை பெருத்தால் குடி பெருக்கும்'

'மாட்டை நடையில் பார், ஆட்டைக் கெடையில் பார்'

'ஆடே பாட்டாமை ஆரியமே வெள்ளாமை'

'ஆவும் தேவும் ஐந்து வருசத்தில் பலன் ஈயும்'

'வடவியை வெட்டி ஆள்; எருமையைக் கட்டி ஆள்'

என்பன போன்ற பழமொழிகள் கால்நடைகளின் இன்றியமையாமையையும் வளர்ப்பையும் பற்றிக் குறிப்பிடுகின்றன. இன்று வேளாண் மக்கள் கால்நடை வளர்ப்பை வருவாய் தரும் துணைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

கால்நடை மருத்துவம்

கால்நடைக்கு வரும் நோய் நொடிகளுக்குரிய மருத்துவ முறைகள் பாமர மக்கள் தெரிந்துகொள்ளும் அளவிற்கு வெளிப்படையாக இல்லை. மனிதர்களைக் கேட்டு அறிந்து நோய்க்குரிய மருந்து கொடுக்கலாம். ஆனால், கால்நடைகளைப் பார்த்து ஊகித்து அறிந்தே கொடுக்கவேண்டி இருந்ததால் அனுபவம் நிறைந்தவர்களே அதில் ஈடுபட்டு இருந்தனர்.

'வெக்கைக்கு வேலி மறைப்பு'

'எருத்துப் புண்ணுக்குச் சாம்பல் மருந்து'

என்பனவற்றில் பரவலாக இருந்த நோய்களும் மருந்துகளுமே கூறப்பட்டுள்ளன. இன்று இத்துறை மிக வளர்ந்துள்ளது என்பதைக் கால்நடை வளர்ப்போரும் நன்கு அறிவர்.

3. வேளாண் பொறியியல்

வேளாண்மைப் பொறியியலில், வேளாண் கருவிகள், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, வேளாண்மைக் கட்டமைப்புகள், விளைப்பொருள் பதன் செய்தல் முதலியவை ஆராயப்படுகின்றன. இன்று போல் பண்டை நாளில் வேளாண் கருவிகள் அதிகமில்லை. கலப்பை, பரம்பு முதலியவை பற்றிய ஓரிரு பழமொழிகள் மட்டுமே வழக்கில் உள்ளன.

'கொம்பால் உழுது குண்டியால் மரமடி'

'மண்ணைப் புரட்டும் பண்ணைக் கலப்பை'

'நாட்டுக் கலப்பையால் நான்குமுறை உழு'

என்பன போன்ற சில பழமொழிகளே வேளாண் கருவிகள்பற்றி விளக்குகின்றன.

மண் வளத்தைப் பாதுகாத்தல், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் போன்றவற்றை மிக நுட்பமாக ஆராய்ந்து உள்ளனர்.

'கல் உள்ளதே கிணறு, கரையுள்ளதே தோட்டம்'

'புடைக்கட்டுப் பயிருக்கு மடைக்கட்டுத் தண்ணீர்'

என்பன இன்றைய ஆய்வுக்கும் பொருந்தி வருகின்றன.

பாசன நீரைக் கொண்டுசெல்லும் வாய்க்கால்கள் மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும் என்பதையும், விளைந்ததை அறுவடை செய்வதில் காலமும் கவனமும் செலுத்தவேண்டும் என்பதையும்,

'முடப்புல்லும் முக்குறுணித் தண்ணீரைச் செறுக்கும்'

'எள்ளும் தினையும் எழுபது நாள்'

'சேற்று முகத்தில் சிரிப்பு, நெல்லு முகத்தி நெருப்பு'

என்பன போன்ற பழமொழிகள் விளக்குகின்றன.

4. மீன்வள இயல்

தமிழகம் மீன்வளம் நிறைந்தது. கடலோரப் பகுதிகளே அன்றி, உள்நாட்டில் ஆறு, குளம், கிணறுகளிலும் மீன் வளர்ப்பு நடைபெற்றது. 20 நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய சங்க இலக்கியத்தில் இருபதுக்கும் மேற்பட்ட மீனின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய பள்ளு இலக்கியங்களில் இருநூறுக்கும் மேற்பட்ட மீனின் பெயர்கள் காணப்படுகின்றன. எனினும், மீனியல்பற்றிய பழமொழிகள் மட்டும் மிகுதியாகக் காணப்படவில்லை.

'சூலாகும் மீன்கள் ஒன்றை ஒன்று மோந்து கொள்ளும்'

'சிறுமீனெல்லாம் பெருமீனுக்கு இரை'

'தூண்டில்காரனுக்கு மிதப்புமேலே கண்'

'நீர் உள்ள மட்டும் மீன்குஞ்சு துள்ளும்'

என்பன போன்ற மிகச் சில பழமொழிகளே காணப்படுகின்றன. இவைகளும் மீனியல்பற்றி விளக்குவனவாக அமையவில்லை. இன்று நன்னீரில் அன்றி கழிவு நீரில் மீன் வளர்த்தல், மின்தூண்டலால் கருவேற்றி மீன் உற்பத்தியைப் பெருக்குதல், பண்ணைகளில் மீன் வளர்ப்பை வருவாய் உள்ள தொழிலாகச் செய்தல் போன்றவற்றில் சீரிய முன்னேற்றம் கண்டுள்ளனர் மீனியலார்.

5. வனஇயல்

இன்று வன இயலின் இன்றியமையாமை பெரிதும் உணரப்பட்டு வருகின்றது. மழை வளம் பெருகவும், மண் அரிப்பைத் தடுக்கவும் மரங்கள் தேவைப்

படுகின்றன. இயற்கையாக இருக்கவேண்டிய மூன்றில் ஒருபங்கு காடுகளில் பெரும்பகுதி அழிக்கப்பட்டுவிட்டதால் இயற்கைச் சூழ்நிலையியலில் சமநிலை குறைந்து தீமைகள் விளைகின்றன.

'காடு அழிந்தால் நாடு அழியும்'

'காடுகள் இருப்பின் நாடுகள் செழிக்கும்'

'மலைவளம்தானே நிலவளம் என்பர்'

ஆகிய பழமொழிகள் காட்டியலின் சிறப்பை உணர்த்துகின்றன. ஆனால், இன்றைய வனவள அறிவியல் பண்ணைகளில் காடு வளர்ப்பு முறைகளை ஆய்கின்றன. பயிர்கள் வளராத தரிசு நிலங்களிலும் பண்ணையின் புறம்போக்கு நிலங்களிலும் வேலிக்கால்களிலும் எவ்வித மரங்களைப் பயிரிட்டால் மிகு பலன் அடையலாம் என்பதையும், குறைந்தகாலத்தில் மரங்களின் நிறைந்த வளர்ச்சிக்குரிய வழிவகைகள் என்ன என்பதையும் வன இயலார் ஆய்ந்து வருகின்றனர்.

6. மனையியல்

பண்டை நாளில் பாட்டிமார்கள் செய்த செயல்கள் இன்று மனையியல் என்ற அறிவியல் துறையாக வளர்ந்து உள்ளது. மனையியலில் குடும்ப நிர்வாகம், குழந்தை வளர்ப்பு, உணவு, உடை, உறையுள், சமூக உறவுகள் ஆகிய பகுதிகள் ஆராயப்படுகின்றன.

குடும்ப நிர்வாகம்

ஒரு குடும்பம் செம்மையாக இயங்க வேண்டுமாயின் அக் குடும்பத்தின் தலைவி சிறந்தவளாக இருத்தல் வேண்டும். 'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்று பெண்களுக்கு வள்ளுவர் கூறும் இலக்கணம், இன்று அறிவியல் விதியாக மலர்ந்து உள்ளது. வாழ்விலும் தாழ்விலும் வருவாய்க்கு ஏற்ப வாழவேண்டும் என்பதை,

'பங்குனி என்று பருக்கிறதும் இல்லை,
சித்திரை என்று சிறுக்கிறதும் இல்லை'

என்று குறிப்பிடுகின்றது பழமொழி. எக்காலத்திலும் சமநிலையாக வாழ வேண்டும் என்பதைப் பொது அறமாகக்கொண்டிருந்தனர் என்பதே இப்பழமொழியின் கருத்தாகும்.

குழந்தை வளர்ப்பு

உடல் வளத்தோடும் உள நலத்தோடும் குழந்தைகளைப் பேணி வளர்க்கவேண்டிய நுட்பங்களைப் பல்வகையில் விரித்துரைக்கிறது குழந்தை வளர்ப்பியல். குழந்தைக்கு வழிகாட்டியாகத் தாய் விளங்க வேண்டுவதே மிகவும் இன்றியமையாதது என்பதை,

'குழந்தை வளர்ப்பது ஒரு கோயில் கட்டுவதற்குச் சமம்'

'தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சீலை'

'தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளு,
பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு'

என்ற பழமொழிகள் அறிவிக்கின்றன. இவை வளர்ந்த நிலையை அறிவிப்பன என்றாலும் அடிப்படையாக மேற்கொள்ள வேண்டிய நடைமுறையினைக் குறிப்பிடுகிறது என்பதே உண்மையாகும்.

உணவியல்

உணவின்றி யாரும் உயிர் வாழ்தல் இல்லை. எனினும் எல்லாரும் ஒரே மாதிரி உண்பதில்லை; எளிய, சத்தான, அளவான உணவே எல்லோராலும் விரும்பிப் போற்றப்படுகின்றது. உணவை முறையாகக் கடைப்பிடிப்பதற்கு ஏற்ப உடல் வளம் பெறும் என்பதை,

'உண்ட உடம்பிற்கு உறுதி உழுத நிலத்தில் நெல்லு'

'மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டும்'

என்பன போன்ற பழமொழிகளால் அறியலாம். இன்றைய உணவு நுண்ணியல் மிக விரிவாக வளர்ந்துள்ளது. உணவுப் பொருள்களைப் பதப்படுத்துதல், குறைந்த விலையில் சத்தான உணவு தயாரித்தல், அறிவியல் நுட்பத்தோடு அண்மைக்கால வசதிகளைப் பயன்படுத்தி உணவு தயாரித்தல் போன்ற பல்வேறுவகையில் முன்னேற்றம் காணப்படுகிறது.

உடை

இன்றைய நாகரிக உலகில் உடை இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது.

'ஆள் பாதி ஆடை பாதி'

'ஆடை இல்லா மனிதன் அரை மனிதன்'

முதலாய பழமொழிகள் ஆடையின் சிறப்பை வலியுறுத்துகின்றன. பண்டை நாளில் விலைகுறைந்த ஆடையே போற்றப்பட்டது. 'வல்விலைக் கூறையும் மெல்நிலைக் காளையும் ஆகாது' என்பது வாழ்வில் மேற்கொள்ளவேண்டிய சிக்கனத்தைத் தெளிவுபடுத்துகின்றது. இன்று துணிகளின் நயம், அமைப்பு, அதன் உழைப்பு, வண்ணம் முதலிய பலவற்றை மனையியல் கல்வி ஆராய்கிறது. எளிமையும் தூய்மையுமே எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும்.

உறையுள்

உண்டு, உடுத்து, உறைய இடம் வேண்டும். தேவைக்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்பவும்

உறையுளை, இல்லங்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டு வந்த பொதுவான உண்மை ஆகும்.

'இடம்பட வீடு எடேல்'
'சிறுகக் கட்டிப் பெருக வாழ்'

என்பன பழமொழிகள். மக்கள்தொகை பெருகி வரும் இக்காலத்தில் இக் கருத்துகள் மிகவும் போற்றிக் கடைப்பிடிக்கவேண்டியவையாகும். குறைந்த இடத்தில் எப்படி வசதியாக வாழ்வது, வீட்டுப் பொருள்களை முறையாக அழகாக எப்படி அமைத்துக்கொள்வது என்பனவற்றில் இன்றைய மனையறிவியல் பெரிதும் கவனம் செலுத்தி வருகின்றது.

வேளாண்மையும் பெண்களும்

உழவுத் தொழிலில் ஒரு பகுதி வேலையைப் பெண்களே செய்து வந்துள்ளனர்; இன்றும் செய்து வருகின்றனர். கணவன் எவ்வளவுதான் திறமை உள்ளவனாக இருந்தாலும் மனைவி பொறுப்பற்றவளாக இருந்தால் விளைந்ததும் வீடு வந்து சேராது. சேர்ந்ததும் பாதுகாக்கப்படாமல் வீணாகிவிடும் என்பதை,

'மேனா மினுக்கியைக் கொண்டவனும் கெட்டான்
மேட்டிலே பயிரிட்டவனும் கெட்டான்'

'ஏர் பிடித்தவன் என்ன செய்வான்?
பானை பிடித்தவள் பாக்கியம்'

என்று குறிப்பிடுகின்றது பழமொழி. உழுதொழிலில் மென்மையான பணிகளை எவ்வாறு திறமையாகச் செய்து, வருவாய் உள்ளதாக ஆக்கிக்கொள்ள முடியும் என்பதில் இன்று பெரிதும் முன்னேற்றம் காணப்படுகிறது. நாற்று நடுதல், களை பறித்தல், கதிரறுத்தல் போன்ற பணிகளே அன்றிக் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்புப் போன்ற வேளாண்மைத் தொழிலும் பெண்களுக்கு ஏற்ற தொழிலாகக் கொள்ளப்படுகின்றது.

7. சமுதாய இயல்

உழவர் சமுதாயம்பற்றிய பல்வேறு கருத்துகளைப் பழமொழிகள் விளக்குகின்றன. காலங்காலமாகத் தழும்பேறிப்போன வேண்டாத சில கருத்துகளிலிருந்து விடுபட முடியாமல் மக்கள் தொடர்ந்து அதனையே போற்றி வருகின்றனர். அதற்கு அறியாமையும் பொருள் வசதி இல்லாமையுமே காரணங்களாகும். பெரிய மாற்றம் ஏற்படவேண்டுமாயின் உழவர் சமுதாயம் ஏற்றத்தாழ்வு அற்ற பொருளாதார வளம் பெற்றாலன்றி உய்யமுடியாது என்பதையே இப் பழமொழிகள் உணர்த்துகின்றன.

தனிப் பண்ணை முறை

உழுதொழிலில் தனித்தன்மையே போற்றப்பட்டது. கூட்டுப்பண்ணைகள் நடைமுறைக்கு ஒத்துவராது என்பதைக் 'கூடி இருந்துபார், கூட்டுப் பயிர் இட்டுப்பார்' என மற்றவர்கள் முடிவுக்கே விட்டுவிடுகிற பழமொழியும், 'இனக்கூட்டு ஆனாலும் நிலக்கூட்டு ஆகாது' என முடிவுக்கே வந்துவிட்ட பழமொழியும் தெளிவாக உணர்த்துகின்றன. உழவுத்தொழிலில் அவரவர் திறமைக்கு ஏற்ப விளைவு பெறப்படுவதால் கூட்டு முயற்சி பலன் அளிக்கவில்லை. அதனாலேயே 'பொதுமாடு புழுத்துச் செத்தது' என மறைமுகமாகக் குறிப்பிட்டனர்.

வருவாய் குறைந்த தொழில்

தனித்து நின்று எவ்வளவு பாடுபட்டாலும் உழவுத்தொழிலில் வருவாய் குறைவு என்பது அன்றும் இன்றும் உணரப்பட்டு வருகின்றது.

'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது'

'ஊண் மிச்சம் உழவில் இல்லை!'

என்பன இன்றும் மாற்ற முடியாத விதிகளாக இருந்து வருகின்றன. அதனாலேயே உழவுத் தொழிலை வணிகத் தொழில்போல் வருவாய் தரும் தொழிலாக மாற்றி அமைக்க முயல்கின்றது இன்றைய அறிவியல்.

நம்பிக்கை அதிகம்

மனிதனுக்குத் துன்பங்கள் அதிகம் ஆக ஆக அவனுக்கு வேண்டாதவற்றில் எல்லாம் நம்பிக்கை அதிகமாகிவிடுகின்றது. அதனால் அவன் பருவம், விதை முதலியவற்றில் தொழில்நுட்பங்களைக் கருதாமல் நாளும் கோளும் பார்ப்பதில் முனைந்துவிடுகின்றான்.

'ஆழ உழுது அரும்பாடு பட்டாலும்
பூமி விளைவது புண்ணியவான்களுக்கே'

'சனிப் பயிர் சாத்திரத்திற்கு உதவும்'

என்பனவாகிய பழமொழிகள் அழுத்தமான நம்பிக்கையில் எழுந்தவையே. அதனால், இன்று ஆழ உழுதும், சனியன்று நட்டும் விளைவை எடுத்துத் தவறான நம்பிக்கைகளைப் போக்க முனைகிறது அறிவியல்.

சில குறைபாடுகள்

உழவுத்தொழில் செய்ய குறிப்பிட்ட சாதியினரே சிறந்தவர் என்ற மனப்போக்கும், பிற சாதியினர் பயிர் செய்தால் பயன் விளையாது என்பதும், உழவுக் கூலிகளைக் கூலியில் ஏமாற்றினால் அவர்களும்

வேலையில் ஏமாற்றுவார்கள் என்பதும், கடன்பட்டுப் பயிரிடக் கூடாது என்பதும் ஆன சில மனப் போக்குகள் தவிர்க்கப்படவேண்டியவை அல்லது ஆராய்ந்து களையப்படவேண்டியவையே.

'மேழிக்குடையவன் வெள்ளாளனே'

'செட்டிக்கு வெள்ளாமை சென்மப் பகை'

'ஆண்டைக் கூலியைக் குறைத்தால்
சாம்பன் வேலையைக் குறைப்பான்'

'கடன் வாங்கிப் பயிரிட்டவனும்
மரமேறிக் கைவிட்டவனும் ஒன்று'

முன்னர் இருந்த நிலைகளுக்குக் காரணம் என்ன? இன்று அவற்றை எவ்வாறு மாற்றி அமைத்து மக்களை வளமாக வாழச் செய்யலாம்? என்று தீவிரமாக ஆராய்ந்து முடிவு காண வேண்டுவது இன்றைய தலையாய கடமையாகும். எவ்வளவு தொழில் நுட்பங்கள் பெருகினாலும் மக்களின் மனம் மாற்றம் பெறவில்லையாயின் அவற்றால் பயனில்லை.

இன்றைய நிலை

கூட்டுறவு முறைகளும், வேளாண் தொழில் நுட்பங்களும், பூச்சி மருந்துகளும் பிறவும் அறிவியல் தந்த பயன் என்றாலும், அவற்றை முழுமையாகப் பயன்படுத்தச் செய்யவேண்டுவது இன்றியமையாததாகும். அவர்கட்கு அடிப்படையான தொழில்நுட்ப அறிவு வாய்க்குமாறு செய்யவேண்டும். இன்றைய சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பழமொழிகள், குறிப்பாக உழவர் சமுதாயம்பற்றிக் குறிப்பிட்டுள்ள பழமொழிகள் பெரிதும் உதவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

8. ஒட்டுப் பழமொழிகள்

வேளாண் சொற்களைக் கொண்டு வேளாண்மைக் கருத்துகளை அன்றி, வேறு ஒரு பொருளையும் விளக்கி நிற்பது ஒட்டுமொழிகள் ஆகும். இத்தகைய பழமொழிகளில் வேளாண்மைக் கருத்துகளைவிட அவற்றின் வெளியே தொக்கி நிற்கும் கருத்துகளே சிறப்புப் பெற்று விளங்கும். பயன்படுத்தும் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பப் பொருளின் ஆழமும் அகலமும் விளங்கும். ஆதலின் இவற்றை வேளாண் பழமொழிகள் என்பதைக் காட்டிலும் ஒட்டுப் பழமொழிகள் என்பதே பொருந்தும்.

'தானே கனியாததை தடி கொண்டு அடித்தால்
மட்டும் கனியுமா?'

'கொடிக்குக் காய் பாரமா?'

'கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா?'

'கொட்டி கொட்டி அளந்தாலும் குறுணி பதக்கு
ஆகாது'

என்பன ஒட்டுமொழிகள். தானே உணர்ந்து செயல்படாதவன் பிறர் சொல்லியா கேட்கப்போகிறான்? எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் பெற்றவர்கள் அவர்களை பாரமாகக் கருதமாட்டார்கள் எனும் பொருள்கொண்ட இவை வேளாண்மையை விளக்குவதைக் காட்டிலும் சமுதாய நோக்குடையவை என்பது அறியத்தக்கது.

9. வேளாண்மை உவமைகள்

பழமொழிகள் முழுமையான பொருள் தருவன. உவமைகள் முழுமையான பொருள் தருபவை அல்ல. அதனால் பழமொழிகளை ஆய்ந்த அறிஞர்கள் உவமைகள் பழமொழிகள் அல்ல என்பதைக் குறிப்பிட்டுள்ளனர். ஒட்டு மொழிகள் போலவே வேளாண்மை உவமைகளும் இடத்திற்கு ஏற்ப வேறு பொருளை விளக்கி நிற்கின்றன.

'காலத்தில் பெய்த மழை போல'

'ஆடு தழை தின்பது போல'

'எலுமிச்சம் செடிக்கு எருப் போட்டாற் போல'

'ஆட்டுக்கிடையில் ஓநாய் புகுந்ததுபோல'

'நடு உழவிலே நத்தை தெறித்தாற் போல'

எனும் உவமைகளை இடத்திற்கு ஏற்பப் பயன்படுத்தி உரிய பொருள்களை உணர்த்த வேண்டும். 'நடு உழவிலே நத்தை தெறித்தாற் போல' என்பதற்குப் படைச்சாலுக்குள் விதை சீராக விழுந்துள்ளது போல அவன் செய்யும் செயல்கள் செம்மையாக இருக்கும் என்பது பொருள். அதனால் இதுவும் வேளாண்மையை விளக்கவில்லை என்பது தெளிவு.

10. உலகப் பழமொழிகள்

தமிழ்நாட்டு வேளாண்மைப் பழமொழிகளைப் போலவே, இந்திய நாடு, உலக நாடுகள் ஆகியவற்றின் வேளாண்மைப் பழமொழிகளை மேம்போக்காக ஆராயும்பொழுதே அடிப்படையான இரண்டு உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. உழுதொழிலைப் பொறுத்த அளவில் உழவனின் நேரடிப் பார்வையே மிகச் சிறந்தது என்பது ஒன்று. மற்றொன்று, தனிப் பண்ணை முறையே போற்றப்படுவது. இக் கருத்துகளை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து பயனுள்ளவற்றை நிறைவேற்றவும் வேண்டும்.

'உடையவன் பார்வையில் பயிர் வளரும்'
(ஹங்கேரி)

'உடையவன் இல்லாத நிலம் அனாதைக்குழந்தை'
(ரஷ்யா)

'உடையவன் கால் தடங்களே வயலுக்குச் செழிப்
பளிக்கும்' (ஜெர்மனி)

'கூட்டாக உள்ள வயலைக் கரடிகள் அழிக்கும்'
(அமெரிக்கா)

'அரை ஏக்கரில் அதிகம் விளையும்'
(ஸ்காட்லாந்து)

'பொது மாடு புழுத்துச் செத்தது' (இந்தியா)

இப் பழமொழிகள் வேளாண்மைச் சமுதாயத்தின் அழுத்தமான உணர்ச்சிகளைப் புலப்படுத்து கின்றன.

11. புதுமொழிகள்

பழமொழிகள் போல் இனிப் புதுமொழிகள் தோன்றுமா என்றால் வாய்ப்பு இல்லை என்றுதான் குறிப்பிடவேண்டும். இன்றைய அறிவியல் உலகில் நாளும் புதுமைகள் தோன்றிக்கொண்டே இருக்கின் றன. எதுவும் நிலைத்து நிற்பதில்லை. ஒன்றைப் பற்றிய அனுபவம் வெளிவருவதற்கு முன் அடுத்த ஒன்று தோன்றிவிடுகின்றது. அதனால், விளம் பரங்களாகச் சில அழகிய தொடர்கள் தோன்றுதற் குரிய வாய்ப்பு உள்ளனவே அன்றி, அவை பழ மொழிகளாக நிலைத்து நிற்பதற்குரிய வாய்ப்பு இல்லை. அவை பழமொழிகளும் ஆகா.

இன்றைய விளம்பர உலகில் பழமொழிகளின் அமைப்பைப் பயன்படுத்தி, புதிய மொழிகளை உரு வாக்கி, புதிய இரகங்கள், புதிய உழவியல் முறை கள், புதிய உரங்கள், புதிய மருந்துகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தலாம். தகவல் அறிவிக்க இம் முறை பெரிதும் பயன்படும்.

'களரை முறிக்க வேப்பந் தழை' (பழமொழி)

'களரை முறிக்க ஜிப்சம் உப்பு' (புதுமொழி)

'உரம் ஏற்றி உழவு செய்' (பழமொழி)

'நிலத்தை அறிந்து உரத்தை இடு' (புதுமொழி)

என்பன போன்ற புதுமொழிகளை உருவாக்கிப் பயன்படுத்தலாம்.

ஆராய்க

பழமொழிகள் மனித சமுதாயத்திற்குக் கிடைத் தற்கரிய செல்வம். செல்வத்தைப் பாதுகாக்கவும் வேண்டும்; அதனைப் பயனுள்ள வகையில் பயன் படுத்தவும் வேண்டும். இவ்விரண்டு வகையான பணிகளும் தொடர்ந்து நடைபெறுமாயின் இன் றைய சமுதாயத்தில் அவிழ்க்க முடியாத பல சிக்கல் களை அவிழ்க்கவும் முடியும்; அவிழ்த்த பிறகு அவற் றில் இருந்து புதியவற்றை ஆக்கவும் முடியும். அத னால் வேளாண்மை அறிஞர்கள் இத்தகைய ஆய் வினை ஒரு பொதுத்தொண்டாகக் கருதி ஆராய வேண்டும்.

பொதுத் தொண்டிற்கு வரையறை ஏது? அதற்கு விலை மதிப்புதான் ஏது? மேழிச்செல்வம் கோழை படுமோ?

தமிழகத்தில் நுண்கலைப் புரட்சி

K. M. ஆதிமூலம்

உன்னதமான கலை — மனித குலம் முழுமைக்கும் பொதுவாகி, மொழி, கலாசார வேறுபாடுகளைத் தகர்த்து, தேசங்களுக்கிடையிலான விரிந்த எல்லைகளைக் கடந்து, மனிதர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் மகத்தான சாதனம் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இலக்கியம், சிற்பம், ஓவியம், இசை ஆகிய கலைகளின் வளர்ச்சிதான், ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை, முன்னேற்றத்தை அளக்கவல்ல அளவுகோலாக இதுகாறும் மதிப்பிடப்பெற்று வருகிறது. உலகம் முழுவதற்கும் இக் கருத்து பொதுவான ஒன்று. இக்கலைகள் மக்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தாலும் தீவிரப் போக்குக்கொண்ட கலைஞர்களின் படைப்புகள் — இலக்கியம், சிற்பம், ஓவியம், இசை எதுவாயினும், அவை சராசரி மனிதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் சிறப்பை உணர இயலாத நிலையில், படைப்பவனுக்கும் பாமரனுக்கும் பெரும் இடைவெளி ஏற்பட்டு — படைப்பவன் ஒரு புதிராகவே தோற்றமளிக்கிறான். இன்றைய ஓவியங்களும் சிற்பங்களும் ('Modern Art' என்னும் இன்றைய நவீன கலை) அதற்கு விதி விலக்கல்ல என்பதை நாம் அனுபவபூர்வமாக உணர முடியும். சாதாரண மக்களும், படித்துப் பட்டம் பெற்றவர்களும்கூட இன்றைய கலைஞர்களை, கிறுக்கர்கள் — குழப்பவாதிகள் என்றும் அவர்களது படைப்புகளை எந்தச் செய்தியும் தராத, குழந்தைத்தனமான அறியாமையின் அவலங்கள் என்றும் கடுமையாக விமர்சித்து வருவதையும் — நாம் நன்கு அறிவோம். ஆனால் அறிவுபூர்வமாக இதில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் இந்த விமர்சனங்களைக் கண்டு துவண்டு போகாமல் வேகத்துடன் முன் செல்லக் காரணம் இன்றைய ஓவியங்களும் சிற்பங்களும் வெறும் வெளித்தோற்ற அழகை மட்டும் வெளிப்படுத்தும் படைப்புகளாக இல்லாமல், இயற்கை அம்சங்களின், ஜீவராசிகளின் உள் அழகையும், புலன்களுக்கு எட்டாத சில உண்மைகளையும் வெளிக்கொணர்ந்து நிறுத்தவல்ல கருவிகளாயிருப்பதேயாகும். இன்றைய கலைஞனின் வேலை — பார்த்த ஒன்றிற்கு, நிஜமான காட்சி ஒன்றிற்கு நகல் படைக்கும் எந்திரத்தின் (Camera) வேலையல்ல. மாறாக, கண் என்ற வல்லமை பொருந்திய புலன் வழியாக ஊடுருவிச் செல்லும் அனைத்தையும் மனத்தில் உள்ளடக்கி, அந்த மனத்தின் உள்ளொளியின் மூலமாக உண்மை காணுதல், அல்லது தேடல் இவைதான் இன்றைய கலைஞனின் ஓய்வில்லாப் பணி. அத்தேடலின் பிரதிபலிப்புகளே அவனது ஓவியங்களும் சிற்பங்களுமாகும்.

19ஆவது நூற்றாண்டின் பாதி வரையில் மேற்கத்திய நாடுகளில் புழக்கத்தில் இருந்த, மதவழி, மரபுவழி, ஓவிய, சிற்ப விதிமுறை, செய்முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மேலே சொல்லப்பட்ட விஷயங்களைப் பிரதானமாகக் கொண்டு — தத்துவரீதியான புதுவகை ஓவியங்களை 'Cubism', 'Impressionism' படைத்தார்கள் சில ஃபிரஞ்சு நாட்டுத் தீவிரவாதிகள். மக்களிடத்தில் பெரும் எதிர்ப்பையும் வெறுப்பையும் இவர்கள் சந்திக்க நேர்ந்தபோதிலும், இதே சமயத்தில் இலக்கியப்புரட்சியும் அங்கே வலுப்பெற்றிருந்தமையால், இலக்கியவாதிகளின் பெரும் ஆதரவு

இந்தச் 'சுயசிந்தனாவாதி'க் கலைஞர்களுக்கு நம்பிக்கை உரமாய் வேர்விட்டு வளரச் செய்தது. பலவிதமான சிறு தடைகள், துன்பங்கள் ஆகிய வற்றை இக் கலைஞர்கள் பொருட்படுத்தாமல் ஒரு பெரிய இயக்கத்தை இவர்கள் முன் நின்று நடத்திச் செல்லக் காரணமாயிருந்ததும் இந்த இலக்கிய நண்பர்களின் ஏகோபித்த ஆதரவுதான். இந்தச் சமயத்தில்தான் அங்குள்ளவர்கள் இவ்வகை ஓவியங்களை 'Modern Art' என்று பொதுத் தலைப்பிட்டு அடையாளம் காட்டத் தொடங்கினார்கள். பல இளம் கலைஞர்களும் இந்த இயக்கத்தில் நம்பிக்கைகொண்டு தங்கள் ஓவியங்களைத் தீட்டினார்கள். பிறகு இது ஐரோப்பா முழுவதிலும், அமெரிக்காவிலும், சில கீழ்த் திசை நாடுகளிலும் பரவி, இன்று உலகத்தின் பல நாடுகளிலும் – பல்வேறு நிலைகள், மாற்றங்களுடன் வளர்ந்து வருவதுடன், நுண்ணறிவு படைத்த எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் வருகின்றன. 'நவீன பாணி' என்ற வார்த்தையே அர்த்த மற்ற ஒன்றாக எண்ணும் அளவுக்கு இக்கலை இன்றைய சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் சிற்பமும் ஓவியமும் நீண்ட வரலாறும், பாரம்பரியத் தொன்மையுங் கொண்டவை. உலக வரலாற்றில் இந்தியாவின் அமரத்தன்மை கொண்ட சிற்பங்கள் உன்னதமான இடத்தை வகித்து வருகின்றன. புறத்தோற்றத்தின் அழகையும், வடிவமைப்புகளையும் அப்படிக்கின்றி, தத்ரூபமாக, நிஜத்தின் நகல்களாக (Renaissance Paintings) ஐரோப்பியக் கலைஞர்கள் செய்து கொண்டிருந்த காலத்திலும், அதற்குப் பல நூறு ஆண்டுகள் முற்பட்ட காலத்திலும் நமது கலைஞர்கள் வெகு தொலைவுக்குப் போய் 'Spiritual Beauties' என்ற ஆழமான அம்சங்களை உண்மையான பாவங்களுடன், உணர்ச்சிப் பாங்குடன் தெளிவான படைப்புகள் மூலம் வெளியிட்டார்கள். மனிதர்கள், பிற உயிரினங்கள், தாவரங்கள், பொருள்களின் வெளித் தோற்றத் தன்மைகள், அளவுகள் மீறப்பட்ட (Stylized) – ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கட்டவிழ்க்கப்பட்ட படைப்புகளாக இவை இருந்தன. சில புராதனச் சிற்பங்களைக் காணும்போது, அவற்றைப் படைத்த கலைஞர்கள் தவ வலிமை மிக்கவர்களாக இருந்திருப்பார்களோ என்றுகூட எண்ணத் தோன்றும். ஆனால், இவற்றைத் தனிப்பட்ட ஒரு கலைஞனின் படைப்பு என்பதைக் கடந்து, ஒரு சமூகத்தின் முழுக் கலைநோக்கையும், பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பதான கூட்டு முயற்சிகளாகவே தோற்றமளிக்கின்றன – (பிரமாண்டமான கோயில் நிர்மாணங்கள், கற்கோயில்கள், குகைக்கோயில்கள், பெரும் சிற்பங்கள், விகாரங்கள் ஆகியவற்றை உதாரணத்திற்குக் கூறலாம்). அதுவும் நூற்றுக்கு நூறு சமயங்களின் அடிப்படையில் உருவாக்கப் பட்டவையே.

இருநூறு வருட ஆங்கில ஏகாதிபத்தியத்தில் மேற்சொன்ன ஒரு தொடர்பான வளர்ச்சியினின்றும் நமது கலை மரபு துண்டிக்கப்பட்டு, சிறு கோயில்களுக்குச் சிலை வடிப்பதோடு நின்றுவிட்டது. கலையைப் பார்த்து இரசிக்கின்ற ஒரு பாரம்பரியமே கூட இல்லாமல் போய்விட்டது. அதன் காரணமாகவே கலைஞர்களின் இன்றைய படைப்புகள் மக்களிடத்தில் குறைந்த அளவு பாதிப்புக்கூட ஏற்படுத்த முடியவில்லை என்பதோடு கலைஞர்களைப்பற்றிய உயர்வான அபிப்பிராயம்கூட கொள்ள முடியாமல் போய்விட்டது.

ஓவிய, சிற்பக் கலைகளைப்பற்றி எந்தப் பிரக்ஞையும் இந்திய மக்களிடம் இல்லாத சமயத்தில் 19ஆவது நூற்றாண்டின் இரண்டாம் கட்டத்தில்—தெற்கில்—முதல் இந்தியர் என்ற பெருமையுடன் ரவிவர்மா (1848-ல் கேரளத்தில் அரச குடும்பத்தில் பிறந்து, தியோடர் ஜான்சன் என்னும் ஆங்கில ஓவியரிடத்தில் அடிப்படைப் பயிற்சி பெற்றவர்) பிரமுகர்களையும், தனிப்பட்ட மனிதர்களையும், மேற்கத்திய பாணி நகல்களாக (Realistic) அவர்களின் தளவாடங்களைக் கொண்டு திரைச்சீலையில் (Canvas) தீட்டினார். பெரும்பாலான இவரது படைப்புகள் நெய் வண்ணங்களைக் கொண்டு தீட்டப்பெற்றவைகளாகும். இந்து மதத்தின்மேல் இவருக்கிருந்த அளவுகடந்த நேசம் காரணமாக, புராண, இதிகாசக் காட்சிகளையும் கடவுள் அவதாரங்களையும், அதே மேற்கத்திய உடலமைப்பு பாணியில் தென்னிந்திய வகை ஆடை ஆபரணங்களைப் பூட்டி, சாதாரண ஆண், பெண்களாக அசைய வைத்தார்.

இவரையடுத்து அதாவது இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், வங்காளத்தில் சில முக்கியக் கலைஞர்கள் (அபனேந்திரநாத தாகூர், ககனேந்திரநாத தாகூர், நந்தலால் போஸ், ஜாமினி ரே போன்றவர்கள்) சேர்ந்து முன் நின்று நடத்திய இயக்கம்தான் அநேகமாக இந்தியாவில் கலை சம்பந்தமான முதல் இயக்கமாகும். இது கவிஞர் தாகூர் அவர்களின் குடும்பத்தை மையமாகக் கொண்டு இயங்கியதால் மக்களது கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை. இக்கலைஞர்கள் யாவரும் மேற்கத்திய பயிற்சி முறை, செய்முறை உபகரணங்கள் யாவற்றையும் ஒதுக்கி விட்டு, சுதேசிகளாக, முழுக்க முழுக்க இந்திய உபகரணங்களைக் கொண்டு மக்களின் அன்றாட வாழ்க்கையை மையமாகக் கொண்டு இந்தியத் தன்மை கொண்ட ஓவியங்களை வரைந்தனர். இதற்குக் காரணமாக இருந்தவரும், ஊக்கமளித்தவரும் அந்நாளில் கல்கத்தா ஓவியக் கல்லூரி முதல்வராக இருந்த திரு. ஹேவல் என்பவர்தாம்.

அசலான ஒரு வங்க மரபு அங்கே உதயமாகி, அதன் ஒளிக்கதிர்கள் பல திசைகளிலும் பரவி இளங்கலைஞர்களிடத்தில் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தபோதிலும் இந்த இயக்கத்தில்

ஈடுபட்டிருந்தவர்களே சிலர் நம்பிக்கையிழந்து வெளியேறி, எந்தக் கட்டுப்பாடுமில்லாத சுதந்திரப் பறவைகளாக, பரீட்சார்த்தமான ஓவியங்களைப் படைத்தார்கள்.

அவ்வாறு வெளியேறியவர்களில் திரு. ஜாமினி ரே முக்கியமானவர். சுய தேடல் மூலமாக ஒரு புதுப் பார்வையைத் (New Vision) தந்து, இந்தியாவில் கலை இயக்கத்திற்கு நம்பிக்கை தந்தவர் இவரே யாவர். இவர் தமது ஓவியங்களில் கையாண்ட அம்சங்கள் — கிராமிய பாணி ஓவிய, சிற்பங்களின் வெளியீட்டுக் குறிகளை எளிமைப்படுத்தி நவீன பாணிக்கு எடுத்துச் சென்றது. இவரைத் தொடர்ந்து அமிர்தா செர்ஜில் (Amrita Sergil) என்ற பெண் ஓவியர் தம் ஓவியங்கள் மூலம் நிச்சயமான ஒரு சூழ்நிலைக்கு வித்திட்டார். இவரது இளமைப் படிப்பு, ஓவியப் பயிற்சி பாரிஸ் நகரத்தில் நிறைவு பெற்றதால், அங்கு ஏற்பட்டிருந்த நவீன கலை இயக்கம் (Contemporary Art Movement) அர்த்த புஷ்டியான படைப்புகள் யாவும் இவரைப் பெரிதும் பாதித்திருந்தன. அவர் இந்தியாவில் தங்கி தீட்டிய ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களின் வண்ணச் சேர்க்கை கொண்டு, சாதாரண மக்களை அவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை எளிமையான உருவ அமைப்புகளுடன் பாவங்களைப் பிரதானப் படுத்திப் படைக்கப்பட்டன.


ஒட்டுமொத்தமான இந்திய நவீன ஓவிய - சிற்ப வளர்ச்சியில், தமிழகத்தின் பங்கு என்னவென்று அறிய முற்பட்டால் தேவி பிரசாத் ராய் சௌத்ரி யின் பெயரை முன்வைத்துத்தான் பின் தொடர வேண்டும். 19ஆவது நூற்றாண்டின் மத்தியில் நிறுவப்பட்டு இயங்கி வந்தாலும் 1930ஆம் ஆண்டில் திரு. சௌத்ரி முதல்வர் பொறுப்பை ஏற்றபிறகு தான், சென்னை ஓவிய சிற்பக் கல்லூரிக்கு — அன்றைய 'School of Arts and Crafts' புதுப்பொலிவு உண்டாயிற்று. இருபத்தெட்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக முதல்வராக பணிபுரிந்த காலத்தில் ஓவியராகவும் சிற்பியாகவும் அவர் செய்த படைப்புகளும், நல்ல ஆசிரியராக இளம் கலைஞர்களிடத்தில் அவர் மூட்டிவிட்ட ஆர்வமும்தான் தமிழகத்தில் ஓவியக்கலை வளர்ச்சிக்கு முதல் ஆதாரமாக இருந்தன. வங்காளத்தைச் சேர்ந்த இவர் அபனேந்திரநாத தாகூர், நந்தலால் போஸ் போன்றவர்களிடம் நன்மதிப்பும், ஈடுபாடும் கொண்டிருந்தாலும் மேற்கத்திய பாணி ஓவிய, சிற்பங்களிலும் அவற்றின் பயிற்சி முறை, செய்முறைகளில் அதிக நம்பிக்கை கொண்டிருந்ததால், அதே முறையில் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தார். மாணவர்களது விருப்பமறிந்து வங்க மரபு ஓவியங்கள் தீட்டுவதற்கும் இவர் ஆதரவு தந்தார். 1950-க்கு முன் இவர் படைத்த ஓவியங்களும் சிற்பங்களும் (ஒரு சில 'வங்க மரபு' ஓவியங்களைத் தவிர) மேற்கத்திய பாணியைத் தழுவிய நிஜத்தின் நகல்களே. அடுத்தகட்டமாக இவர் உருவாக்கிய சிற்பங்களில் பெருமளவு ரோடீன் (Rodin) என்ற ஃபிரான்ஸ் நாட்டுச் சிற்பியின் பாதிப்பைக் கொண்டிருந்தன என்றாலும் தமிழ்நாட்டின் உழைக்கும் வர்க்கத்தை — அவர்களது வாழ்க்கைப் போராட்டங்களை — கருவாகக் கொண்டு பார்ப்போரின் அனுதாபத்தை எளிதில் கவரும் தன்மை கொண்டிருந்தமையால்—ரோடீனிலிருந்து வெளிப்பட்டவராகவே மதிக்கப்பட்டார்.



வறுமையால் வாடும் தாய்-சேய்
திரு. டி. பி. ராய் செய்த சிற்பம்

'உழைப்பின் வெற்றி', 'வறுமையால் வாடும் தாய் சேய்' போன்ற சிற்பங்கள் பொதுமக்கள் இரசனைக்குட்பட்டுப் பாராட்டுப்பெற்றவை. இவரது தேடல் அநேகமாக ரோடீன் வகைச் சிற்பங்களோடு நின்றுவிட்டன எனலாம். 'உழைப்பின் வெற்றி' சிலை (உழைப்பாளர் சிலை என்று பொதுமக்களால் அழைக்கப்படும் இது அண்ணா சதுக்கத்திற்கு அருகில் உள்ளது.) திரு. சௌத்ரியின் பெயரைத் தமிழகமெங்கும் பரவச்செய்தது. இதன் பிறகு இவரது கவனம் பெரும்பாலும் தேசியத் தலைவர்கள், பிரமுகர்கள், சுதந்திர வீரர்கள் போன்ற சிற்பங்களில் ஈடுபட்டது.

திரு. பணிக்கர்: இவரது தொடக்ககால நீர் வண்ண, நிலக்காட்சி ஓவியங்கள். அப்பட்டமான ஆங்கில முறை நீர்வண்ண ஓவியங்களாகும். ஆனால், கேரள, தமிழக இயற்கை வளங்களை அந்தந்த மக்களோடு இணைத்து வெளிப்படுத்திய முறை அவரது தழுவலை மறக்கச் செய்தன. அதன் பிறகு 50-களில் 'Garden Series' என்ற பொதுத் தலைப்பில் இவர் தீட்டிய நெய்வண்ண ஓவியங்கள் இவரை அடுத்த ஸ்தானத்திற்கு உயர்த்திய படைப்புகளாகும். இவை அப்போதைய இளம் கலைஞர்களிடத்தில் பாதிப்பையும் ஏற்படுத்தத் தவரவில்லை. இவை செய்முறையில் ஃபிரஞ்சு நாட்டு **வான் கோவை** (Van Gogh) நினைவுபடுத்தினாலும், மனிதர்களும் மற்ற விஷயங்களும், இந்தியத் தன்மை நிறைந்த சுயமான அம்சங்களாகும். இதன் பிறகு சற்று முன் நகர்ந்து 60-ன் மத்தியிலிருந்து கடைசிவரை எளிமையான



வார்த்தைகளும் வடிவங்களும்
திரு. கெ. சி. எஸ். பணிக்கர் வரைந்தது

வெளியீடுகளாக வெறும் எழுத்துகள், கோட்டுருவங்களைக் (Words and Symbols) கொண்ட ஓவியங்களைத் தீட்டினார். இவை பழமையான கேரள ஜாதகக் குறிப்புகளைப் போன்ற தோற்றத்தைத் தந்தாலும், அதில் காணப்படும் மலையாள வார்த்தைகள் எந்த அர்த்தத்தையும் செய்தியையும் தராத, ஓவியத்தின் ஓர் அங்கமாகவே கையாளப்பட்டுள்ளன. அதேபோன்று மற்றக் கோட்டுருவங்களும் அவரது சுயபாணி வெளியீடுகளாகவே இடம் பெற்றிருந்தன. இந்த வகை ஓவியங்களே திரு. ப்ணிக்கருக்குப் பெரும் அளவுக்குப் புகழ் தேடித் தந்தது.

திரு. தனபால்: அடிப்படையில் ஓவியரான இவர், நாற்பதுகளிலும் ஐம்பதுகளின் பாதி வரையிலும் வரைந்த கோட்டுச் சித்திரங்களும் வண்ண ஓவியங்களும் மிகப் பிரசித்தமானவை. எந்த முன்னேற்பாடும் இல்லாமல் யதார்த்தமான முறையில் தூரிகை கொண்டு வரையப்பட்ட இவரது கோட்டுச் சித்திரங்கள் கலை அபிமானிகளிடத்தில் நல்ல பாராட்டைப் பெற்றதோடு மற்றக் கலைஞர்களிடத்திலும், கலை மாணவர்களிடத்திலும் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தின. இந்த ஓவியங்கள் தமிழகத்து கிராமப்புற மக்களைச் சார்ந்த சிறப்பியல்புகளாக, அவர்களின் பல்வேறு அசைவுகளை உணர்ச்சி பாவங்களுடன் சிக்கனமான கோடுகளின் மூலம் வெளிப்படுத்திய முறையில் எளிமை நிறைந்த கிராமச் சூழ்நிலையில் இவரது மனம் எந்த அளவுக்கு ஈடுபட்டிருந்தது என்பதைத் தெளிவாக உணர முடியும். பழைமையான இந்தியச் சிற்பங்களின், சுவர் ஓவியங்களின் தன்மைகள் நிறைந்திருந்தாலும், நவீன பாணியின் அவசியமும் பாதிப்பும் இழைந்தோடத் தவறவில்லை.

இவரது முந்திய ஓவியங்களின் சில தன்மைகளினின்றும் முற்றிலும் மாறிப் போகாத ந்த முப்பரிமாண வடிவங்கள் எளிமையான வெளித் தோற்றத்தில், உணர்ச்சி பாவங்கள் நிறைந்த சிற்பங்களாகும். கலைஞரின் அவ்வப்போதைய தேடலின் உத்வேகத்தையும், இவை புலப்படுத்தத் தவறவில்லை. 'ஔவையார்', 'தாய் சேய்', 'சிலுவை சுமந்த ஏசு', 'நமாஸ்' போன்றவை இந்தியாவின் பல



தாய் சேய்
திரு. எஸ். தனபால் செய்த சிற்பம்

நகர்களிலும், வெளி நாடுகளிலும் முக்கியக் காட்சி களில் வைக்கப்பட்டு, பெரும் புகழை ஈட்டித் தந்த சிற்பங்கள் மட்டுமல்ல; என்றென்றும் மனத்தில் நிற்கக்கூடிய அமரத்துவம் பெற்ற படைப்பு களாகும். இவை தவிர, பெரியார் ஈ. வெ. ரா., டாக்டர் இராதாகிருஷ்ணன், தலைவர் காமராஜ், பாரதிதாசன் போன்ற தலைவர்களது சிற்பங்கள் இவரது ஆற்றலைப் பறைசாற்றிய சிற்பங்களாகும். இவரது சிற்பங்களில் பல வெளிநாட்டு, உள்நாட்டு அருங்காட்சியகங்களில் நிரந்தரமாக இடம் பெற் றிருப்பதை இங்கே நினைவுகூர்தல் வேண்டும்.

திரு. கே. சீனிவாசலு: 'கலாக்ஷேத்ரா' வைத் தன் இருப்பிடமாகக் கொண்டு தமிழகத்தின் ஓவியக் கலை வளர்ச்சிக்குத் தனது பங்கைச் செலுத்தியவர் திரு. கே. சீனிவாசலு. தொடக்கத்திலேயே தனக் கென்று ஒரு பாணியை நிறுவிக்கொண்ட இவரது ஆரம்ப கால ஓவியங்கள் ஆந்திர மாநிலத்தின் புகழ்பெற்ற 'லேபாக்சி' (Lepakshi) சுவரோவியங் களை நினைவு கொள்ளும்படியாகப் பாத்திரப் படைப்புகள், உருவ அமைப்புகள், வண்ணத் தேர்வுகளில் ஓர் ஒற்றுமையிருந்தன. ஆடையாபர ணங்கள் போன்ற அம்சங்கள், பாவங்களுக்கு ஏற்ற வகையில் மிக நேர்த்தியான முறையில் கையாளப் பட்டு, பார்ப்போரின் மனத்தை முழுவதுமாக ஆக்ர மித்துக்கொள்ளும்படியாக அமைந்திருந்தன. முதல்நிலை ஓவியங்களில் அதிகமாக—நெருக்கமாக இடம் பெற்றிருந்த அலங்கார விஷயங்கள் பெரும் அளவில் புறக்கணிக்கப்பட்டு, உருவங்கள் சிக்கன மான, அதே நேரத்தில் அழுத்தமான கோடுகளால் வரையப்பட்டிருந்தன. ஜாமினி ரேயின் அடிப்படை யான, தத்துவரீதியான சில அம்சங்கள், இவரது சுயபாணி குணாம்சங்களாக இவற்றில் வெளிப் பட்டன.

திரு. பி. எல். நரசிம்மமூர்த்தி: இவரது ஓவியங் கள் நாற்பதுகளில் சற்று மாறுபட்ட வடிவமைப் பைக் கொண்டிருந்தாலும் அநேகமாக திரு. சீனி வாசலுவின் முதல்நிலை ஓவிய வகையைச் சேர்ந் தவையே. இன்றுவரை பெரிய மாற்றங்கள் எதை யும் கொண்டிராத அதே வகை ஓவியங்களையே தீட்டி வருகிறார். என்றாலும் நிலை நிற்காத தொடர்ச்சியான அவரது கலைப்பயணம் தெளிவும் நம்பிக்கையும் கொண்டிருப்பதால், புதிய உத்தி களுடன் மாற்றங்கள் நிகழாதது ஒரு குறையாகக் கொள்ளவேண்டியதில்லை.

திரு. சி. டி. பால்ராஜ்: அப்பழுக்கற்ற மேற்கத் திய பாணியில், நீர்வண்ண, நெய் வண்ணங்களில் இவர் தீட்டிய 'நிலக்காட்சிகள்' (Landscapes) 'கடற்புறக்காட்சிகள்' (Seascapes) பார்ப்போரை எளிதில் கவர்ந்தீர்க்கும் தன்மைகள் கொண்டு, கவர்ச்சியான காட்சிகளமைந்தவகை ஓவியங்களாக இருந்ததால். பொதுமக்கள் ஆதரவும் பாராட்டும் இவரது ஓவியங்களுக்குத் தடையின்றிக் கிடைத்து வந்தன. ஒருகாலத்தில் இவரைப் பின்பற்றிய கலைஞர்களும் எண்ணற்றோர் உண்டு.

திரு. எச். வி. ராம்கோபால்: இவரது கோட்டுச் சித்திரங்கள் வண்ண ஓவியங்கள் எல்லாம் செம்மை யான அடிப்படைப் பயிற்சியின் பிரதிபலிப்புகளே. மாதிரி உருவங்களை வைத்து இவர் தீட்டிய (Portraits, Nudes, Still Life) ஓவியங்கள், வெறும் நகல்களாக இல்லாமல் இவரது தீவிர மனப்பாங்கை வலியுறுத்தும் படைப்புகளாக இருந்தமையைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

திரு. ஆர். கிருஷ்ணாராவ்: தமிழ்நாட்டு கலா சாரம், நாகரிகம், கட்டடக் கலையில் சிறப்பான வளர்ச்சி, மதப்பற்று இவற்றை ஒட்டுமொத்தமாகப் பிரகடனப்படுத்தும் நெடிதுயர்ந்த கோபுரங்கள்,

நுழைவாயில்கள், உள், வெளிப் பிரகாரங்கள் ஆகிய விஷயங்களைக் கருவாகக் கொண்ட ஓவியங்களை இவர் ஏராளமாகத் தீட்டியுள்ளார். இதுபோன்ற விஷயங்களைக் கண்ணுற்ற மாத்திரத்திலேயே திரு. கிருஷ்ணாராவின் பெயர் நினைவுக்கு வரும் அளவுக்குத் தனதாக்கிக் கொண்டவர்.

இதுகாறும் பேசப்பட்ட மூத்த கலைஞர்கள் தங்கள் படைப்புகளின்மூலம் ஒருவருக்கொருவர் இடைவெளியுடனும், ஏற்ற இறக்கங்களுடனும் காணப்பெறினும், அடுத்து வந்த கலைஞர்களுக்கு இவர்களே பெரும் நம்பிக்கை ஒளியாய்க் காட்சி தந்தார்கள். அப்படிச் சிறந்தவர்களாகக் கருதப்பட்டவர்கள் திரு. எஸ். முனுசாமியும், திரு. எ. பி. சந்தானராஜுமாவார்கள். 50-களின் ஆரம்பத்தில் சிறந்த மாணவர்களாக வெளிவந்த இவர்கள் அதே சென்னை ஓவியக் கல்லூரியில் போதகர்களாகப் பணி ஏற்றனர். நவீன கலை இயக்கத்தின் நடப்பை நன்கு அறிந்திருந்த இவர்களின் எந்தவொரு படைப்பிலும் அதன் பாதிப்பு அழுத்தமாக விழுந்திருந்தன. இவர்களின் எந்தவொரு சாதனையும் பரீட்சார்த்த முறையிலேயே இருந்தது. பெரும்பாலான ஓவியங்கள் இவர்களது மனோவேகத்தின் பிரதிபலிப்புகளாகவே அமைந்தன.

அகில இந்திய அளவில் சிறந்த சிற்பக் கலைஞராக இன்று மதிக்கப்படுபவர் திரு. ஜானகிராமன். இவரது செப்புத்தகட்டுச் சிற்பங்கள் (Copper Sheet Relief), அவற்றின் உருவ அமைப்பு, செய்யப்பட்ட முறை, இவற்றால் புதுமையின் ஆதிக்கம் மேலோங்கி நின்றாலும், பழைய மரபு வெங்கலச் சிற்பங்களின் உணர்ச்சி பாவங்களைப் பொதுவான இந்தியத் தன்மையை வெளிப்படுத்தத் தவறவில்லை. இரசனைக் குறைவாக உள்ள சாதாரண மக்களைக் கூட இவரது சிற்பங்கள் கவர்ந்திழுக்கக்கூடியவை. பல்வேறு பரிசுகள், சிறப்புகள் பெற்றவர். அநேகமாக இந்தியாவின் அனைத்து அருங்காட்சியகங்களிலும் இவரின் படைப்புகள் இடம் வகிக்கின்றன எனலாம். மற்றொரு கலைஞரான திரு. கன்னியப்பனும் பல சோதனைகளை மேற்கொண்டு சாதனைகள் புரிந்து சிறந்த சிற்பியாக தெரியப்படுபவர் எந்தவொரு மூலப்பொருளையும் கொண்டு சிறந்த சிற்பம் ஒன்றை உருவாக்கும் திறன் கொண்டவர். மரபு, பாரம்பரியம் போன்ற கால்கட்டுகளை உடைத்தெறிந்துவிட்டு, இன்றைய, இந்த வினாடியின் மனிதனாகவே அவர் தன் படைப்புகளின் மூலம் நமக்குக் காட்சியளிக்கிறார். 'Construction' என்ற தலைப்பில் இவர் உருவாக்கிய செப்புத் தகட்டுச் சிற்பங்கள் என்றும் நம் நினைவில் நிற்பவை.

திரு. மூக்கையா: ஆரம்பகாலத்தில் நல்ல ஓவியரெனப் பெயர் பெற்றவரானாலும் இன்று ஒரு நல்ல சிற்பியாகவே மற்றவர்களுக்கு அறிமுகமானவர். அன்றைய இவரது வண்ண ஓவியங்களும் சரி, இன்றைய சிற்பங்களும் சரி, தென்பாண்டி நாட்டுச் சிற்றூர் ஒன்றின் மனிதர்களைப் பற்றியதாக அவர்களது கால்நடைகளைப் பற்றியதாக, ஊர் சூழ்ந்த நிலங்களைப் பற்றியதாகவே இருந்திருக்கின்றன. பழைய 'அய்யனார்' பாணி சிற்பங்களின் (Terracotta Sculptures) எளிமை, கம்பீரம், அசைவுகள் போன்ற முக்கிய அம்சங்கள், இன்றைய அறிவார்த்த சிதைவுகளுடன் இழைந்தோடுகின்றன.

திரு. ரெட்டப்ப நாயுடு: கலைத்துறையில் மேற்கில் நிகழ்கின்ற சலனங்களைத் தெளிவாக உணர்ந்தவரானாலும், தன் கலைப் பயணத்தில் தனக்கென ஒரு பாதையைத் தீர்மானித்து, அதில் நம்பிக்கையுடன் பயணம் மேற்கொண்டவர். இன்று அதில் இந்திய அளவில், கலைஞர்களிடத்தும், கலைப் பற்றாளர்களிடத்தும் நன்கு அறிமுகமானவர். இவருடைய எந்த ஓவியமானாலும், கோடுகள் தான் பிரதானமாக இடம் வகிக்கின்றன. அவை எதார்த்த ரீதியில் முழு சுதந்திரப் போக்குடன் சிக்கனமாக, எளிமையாக, ஜீவன் நிறைந்ததாக அமைந்துவிடுகின்றன.

திரு. அந்தோனிதாஸ்: ஸ்திரமான அடித்தளத்தைக் கொண்டிருப்பவர். எந்த மீடியத்தையும் நீர் வண்ணம், நெய் வண்ணம், ஒட்டு வண்ணம் (Oil, Water colour, Tempera) மிக லாவகமாகக் கையாளும் திறன் பெற்றவர். ரியலிசத்தில் அதிக நம்பிக்கையுடையவர்.

திரு. பெருமாள்: 60-களில் தீட்டிய ஓவியங்களே இவருக்குச் சிறப்பையும் புகழையும் தேடித் தந்தவையாகும். பல கோணங்களிலும் இவரது ஓவியங்கள் தனித்தன்மை கொண்டதாக இருந்தன. கற்கால மனிதர்களின் குகை ஓவியங்களுடன் ஒப்புநோக்கும் அளவுக்கு எளிமையான உருவ அமைப்புகள், அசைவுகளைக் கொண்டதாகவும் இருந்தன.

திரு. வரதராஜன்: ஆரம்ப நாட்களிலிருந்து இன்று வரை தொடர்ச்சியான ஈடுபாட்டுடன் ஓவியங்கள் தீட்டி வருபவர். ஆங்காங்கே

ஒன்றிரண்டு குறிப்பிட்டுச் சொல்லும்படியான நல்ல படங்களைத் தவிர, பெரும்பாலானவை மற்றவர்களது கவனத்தை ஈர்க்க முடியாமல் ஒதுங்கி விட்டவைகளே.

திரு. எஸ். முருகேசன்: 50-களின் கடைசியில் இவர் தீட்டிய நிலக்காட்சி, நிலைப்பொருள்கள் (Landscapes, Still Life) வண்ண ஓவியங்கள் ஃபிரெஞ்சு ஓவியர் சிசானை (Cezanne) நினைவு படுத்தும் வகையில் நேர்த்தியான வண்ணச் சேர்க்கையுடன், தமிழ்நாட்டு நிலவளங்கள் செம்மையாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிறகு இவரது ஆர்வம் சிற்பத்தில் திரும்பி, பரிட்சார்த்தமாக ஏராளமான சிற்பங்களைச் செய்துள்ளார்.

திரு. சுரேந்திரநாத்: நீண்ட காலமாக நீர்வண்ண நிலக்காட்சி (Water colour Landscapes) ஓவியங்களைத் தீட்டிப் புகழ்பெற்றவர். திரு. சி. டி. பால்ராஜ் பாணியை ஒத்த இந்த வகை ஓவியங்கள் சாதாரண இரசனைக்குட்பட்டதாகவே இருந்தன. வெகுசமீபத்தில் இவரது கவனம் சிற்பம் செய்வதில் திரும்பியது.

தமிழகத்தில் ஓவியக்கலை மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்த, இருக்கும் கலைஞர்கள், அவர்களது படைப்புகள், அவற்றின் சிறப்பு அம்சங்கள் இவற்றைப் பற்றி இதுவரை விரிவாக எழுதப்படாமையால், தனிப்பட்ட கலைஞர்களைப் பற்றிக்கூட சற்று விரிவாகச் சொல்லும்படியாயிற்று. பல்வேறு துறைகளில் நாம் பின்தங்கியவர்களாக மதிப்பிடப் பெறினும், ஓவிய, சிற்பக் கலை வளர்ச்சியில், நமது கலைஞர்களின் சாதனை, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் நவீன கலை வளர்ச்சியோடு, பல அம்சங்களிலும் இணையானதாகவே இருப்பதைப் பெருமையோடு கூற வேண்டும். இன்றைய ஓவியங்கள், சிற்பங்களைப்பற்றிப் பலரும் பலவிதமான மதிப்பீட்டுடன் விமர்சனம் செய்வதும், பெரும்பாலோருக்கு இவை புரியாத புதிராய், குழப்பமான விஷயங்களாக இருப்பதுவும் நாம் நன்கு அறியக்கூடும்.

ஆனால், எந்தச் சூழ்நிலையிலும் இக்கலை வளர்ச்சி தளர்ந்து போகாமல், மேலோங்கிச் செல்வதற்குக் காரணம், இது ஓர் உண்மையான, உயர்ந்த தத்துவங்கள் கொண்ட ஒரு நுண்கலையாக இருப்பதுதான் என்னலாம்.





கற்பின் தெய்வம்

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க்(கு) அணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து.


ஒன்றிரண்டு குறிப்பிட்டுச் சொல்லும்படியான நல்ல படங்களைத் தவிர, பெரும்பாலானவை மற்றவர்களது கவனத்தை ஈர்க்க முடியாமல் ஒதுங்கி விட்டவைகளே.


திரு. எஸ். முருகேசன்: 50-களின் கடைசியில் இவர் தீட்டிய நிலக்காட்சி, நிலைப்பொருள்கள் (Landscapes, Still Life) வண்ண ஓவியங்கள் ஃபிரெஞ்சு ஓவியர் சிசானை (Cezanne) நினைவுபடுத்தும் வகையில் நேர்த்தியான வண்ணச் சேர்க்கையுடன், தமிழ்நாட்டு நிலவளங்கள் செம்மையாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிறகு இவரது ஆர்வம் சிற்பத்தில் திரும்பி, பரீட்சார்த்தமாக ஏராளமான சிற்பங்களைச் செய்துள்ளார்.

திரு. சுரேந்திரநாத்: நீண்ட காலமாக நீர்வண்ண நிலக்காட்சி (Water colour Landscapes) ஓவியங்களைத் தீட்டிப் புகழ்பெற்றவர். திரு. சி. டி. பால்ராஜ் பாணியை ஒத்த இந்த வகை ஓவியங்கள் சாதாரண இரசனைக்குட்பட்டதாகவே இருந்தன. வெகுசமீபத்தில் இவரது கவனம் சிற்பம் செய்வதில் திரும்பியது.

தமிழகத்தில் ஓவியக்கலை மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்த, இருக்கும் கலைஞர்கள், அவர்களது படைப்புகள், அவற்றின் சிறப்பு அம்சங்கள் இவற்றைப் பற்றி இதுவரை விரிவாக எழுதப்படாமையால், தனிப்பட்ட கலைஞர்களைப் பற்றிக்கூட சற்று விரிவாகச் சொல்லும்படியாயிற்று. பல்வேறு துறைகளில் நாம் பின்தங்கியவர்களாக மதிப்பிடப் பெறினும், ஓவிய, சிற்பக் கலை வளர்ச்சியில், நமது கலைஞர்களின் சாதனை, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் நவீன கலை வளர்ச்சியோடு, பல அம்சங்களிலும் இணையானதாகவே இருப்பதைப் பெருமையோடு கூற வேண்டும். இன்றைய ஓவியங்கள், சிற்பங்களைப்பற்றிப் பலரும் பலவிதமான மதிப்பீட்டுடன் விமர்சனம் செய்வதும், பெரும்பாலோருக்கு இவை புரியாத புதிராய், குழப்பமான விஷயங்களாக இருப்பதுவும் நாம் நன்கு அறியக்கூடும்.

ஆனால், எந்தச் சூழ்நிலையிலும் இக்கலை வளர்ச்சி தளர்ந்து போகாமல், மேலோங்கிச் செல்வதற்குக் காரணம், இது ஓர் உண்மையான, உயர்ந்த தத்துவங்கள் கொண்ட ஒரு நுண்கலையாக இருப்பதுதான் என்னலாம்.




மணியம்
1960

திருமூலர்-வள்ளலார் காட்டும் ஒளி வழிபாடு

அ. மறைமலையான்

ஒளி ஒன்றே உலகை இயக்கும் ஒப்பற்ற பேராற்றல்.

ஒளி ஒன்றினால்தான் உயிர்களே பிறக்கின்றன; விழிக்கின்றன; உழைக்கின்றன; சிறக்கின்றன.

ஒளி ஒன்றில்தான் நிலம், நீர், வளி, வான் ஆகிய ஏனைய நால்வகை ஆற்றல்களும் உள்ளடங்கி நிற்கின்றன.

ஒளி வடிவான வெப்பம் மிகுந்த ஒரு பெருங் கோளத்தின் சிறு துண்டுதான் மண்ணுலகாகக் குளிர்ந்து மலர்ந்தது — அதில் மாக்கடல்களும் தேங்கின — என்பது அறிவியல் ஆராய்ச்சியே அறிவுறுத்தும் உண்மை.

வானும் வளியாகிய காற்றும்கூட அந்தத் தீப் பிழம்பான பேரொளிக் கோளத்தின் உட்கூறுகளே என்பது உன்னி நோக்கின் உணரத்தக்க மெய்ம்மை.

'ஐம்பூதங்கள்' என்னும் ஐவகை ஆற்றல்களும் உலகை இயக்கும் சிறப்பான விசைகளே எனினும், ஒளி வடிவான நெருப்பு ஆற்றலே தனிச் சிறப்பான பயன்தரு விசை.

'ஐம்புலன்கள்' என்னும் ஐவகை உறுப்புகளும் உடலையும் உயிரையும் இயக்கும் விசைகளே எனினும் ஒளி வடிவான கண்தான் மிக இன்றியமையாத பயன்தரு உறுப்பாகி வழிகாட்டுகிறது.

எனவே, புறத்திலே தோன்றும் பருப்பொருள்களாயினும், அகத்திலே காணும் நுண்பொருள்களாயினும், அவற்றில் தனியாற்றல் கொண்டது — தனிசிறந்த நன்மைகளை விளைவிப்பது — ஒளியே!

செங்கதிரோன் வழிபாடு

அத்தகைய ஒளியின் அருமை, பெருமைகளைப் பன்னெடுங்காலத்துக்கு முன்னரே அறிந்து வணங்கியவர் திராவிட இனத்தவரே. கடல்கோளுக்கு இரையாகிவிட்ட குமரிக்கண்டத்தில் வாழ்ந்த, செந்தமிழ் மொழியைத் தாய்மொழியாகப் பேசிவந்த திராவிட இனத்தவரே உலகில் தோன்றிய மனிதப் பிறவியருள் முதல் இனத்தவர் என்பதும், இன்றைய தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கருநாடகம் ஆகிய மாநிலங்களில் வாழும் பெரும்பான்மையான மக்கள் திராவிட இனத்தைச் சார்ந்தவர் என்பதும் வரலாற்றாசிரியர் பலர் வடித்துத் தந்துள்ள ஆராய்ச்சி முடிவு.

உலக நாகரிகத்தின் தந்தையராய் விளங்கிய திராவிடர், ஒளியின் பயனை, பேராற்றலை உணர்ந்து ஒளிப் பெருங்கோளாகிய செங்கதிரோனைத் தங்கள் முதல் வழிபடு தெய்வமாக வணங்கினர்.

செங்கதிரோனின் ஒளித் தழுவலினால்தான், உயிர்வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத உணவுப் பொருளான செந்நெல் செழிக்கிறது — அதனை விளைவிப்பதற்குரிய விழிப்புணர்வும் உடல்வலியும்

தங்களுக்கு ஏற்பட்டுள்ளது — என்னும் பேருண்மையை உணர்ந்தவராகவும் திராவிடர் செங்கதிரோனை வழிபட்டனர்; தங்களின் நன்றியறிதலுக்கு அடையாளமாகத் தைத் திங்கள் முதல்நாள் 'பொங்கல்' படைத்தும் அப் பேரொளியை வணங்கினர்.

அந்தச் செங்கதிரோன் செம்மை நிறம் கொண்டதாகத் திகழ்ந்ததால் அந்தச் சிவப்பு வண்ணத்தின் அடிப்படையிலேயே அப் பேரொளியைச் 'சிவம்', 'சிவன்' என்றும் திராவிடர் வழங்கத் தலைப்பட்டனர். செம்மை — சிவப்பு — சிவம் — சிவன் என்பன வாக உச்சரிப்புகள் மாறி, செங்கதிரோனையே அவை குறிப்பனவாக அமைந்தன என்பது எண்ணி உணரற்பாலது.

வெளியுலகின் பெருவிளக்காம் ஞாயிறு ஒளிக்கோளத்தை வழிபட்டாற்போன்றே வீட்டினுள்ளே அந்தப் பேரொளியின் சிறு சின்னமாக விளக்கை ஏற்றிவைத்துத் திராவிடர் வழிபட்டனர். அந்த விளக்கின் ஒளிக்கொழுந்தையும் சிவம் — சிவன் என்றே பெயரிட்டுத் துதித்தனர்.

இதிலிருந்து வேத சமயத்தவரின் கற்பனையில் முகிழ்த்த புராணங்களில் வரும் பாம்புகளை அணிந்த 'பரமசிவன்' என்னும் பிற்காலத் தெய்வத்திற்கும், பண்டை நாளில் திராவிடர் வழிபட்ட 'சிவன்', 'சிவம்' என்னும் செங்கதிர்ப் பேரொளிக் கோளத்திற்கும் தொடர்பு ஏதும் இல்லை என்பது தெளிவாகும். வேண்டுமாயின், 'அந்தச் செங்கதிரோன் ஆகிய சிவனைத்தான் மனித வடிவில் உள்ள பரமசிவன் ஆகப் படைத்துக் கல்லாத (பாமர) மாந்தரைக் கடவுள் நெறி நோக்கிக் கவர்வதற்காகப் பொய் என்று தெரிந்தும் புராணக் கதைகளைத் தீட்டியிருக்கக்கூடும்' என்னும் கருத்தை ஏற்கலாம்.

இறைவழிபாட்டில் அரிச்சுவடி நிலை ஏன் ?

இவ்வாறு இறைவழிபாட்டிலேயே அறிவுக்கொத்த உயர்வழிபாடான 'ஒளி வழிபாடு' புரிந்துவந்த திராவிடர், காலப்போக்கில் ஆரிய இனத்தவர் பரப்பிய வேத சமயத்தைச் சார்ந்த விந்தையான தெய்வங்களை வியப்பு மேலிட வணங்க முற்பட்டனர். ஒளிவழிபாட்டைக் கைவிட்டு 'உருவ வழிபாட்டில்' உள்ளத்தைப் பறிகொடுத்தனர்.

'உருவ வழிபாடு' என்பது இறைப் பற்றாகிய 'பக்தி'யில் மிகவும் அடிமட்டத்தில் உள்ள 'அரிச்சுவடி' நிலை. பள்ளியில் படிக்கப் புகும் சிறுவர் — சிறுமியருக்கு முதலில் படங்களைக் காட்டித்தான் கல்வியின்பால் கவர்ச்சியை ஊட்டுவர். அதுவே 'அரிச்சுவடி நிலை' என்பது. பிஞ்சு நெஞ்சங்களில் எழுத்துகளை ஆழப் பதிவதற்காகவும் கண்ணால் கண்ட அளவிலேயே அவற்றைப் புரிந்துகொள்வதற்காகவும் 'அ' என்னும் எழுத்துக்கு 'அணில்' படத்தையும் 'ஆ' என்னும் எழுத்துக்கு 'ஆடு' படத்தையும் காட்டுவர். அவ்வாறுதான் கல்லாத மாந்தரைக் கடவுள் நெறியின்பால் கவர்ந்து இழுப்பதற்காக அந்நாளில் திராவிடர் அல்லாத ஏனைய இனத்தவர் 'உருவ வழிபாட்டு' முறையை உருவாக்கிப் பரப்பினர். எனவேதான் இதனை இறைவழிபாட்டில் 'அரிச்சுவடி நிலை' என்கிறோம்.

ஒரு மனிதர் கற்றுத் தேர்ந்தவராக — அஃதாவது சிந்தித்துத் தெளிவடையக்கூடியவராக — அறிவு முதிர்ச்சி அடைந்த பின்னும் இந்த உருவ வழிபாட்டிலேயே முடங்கிக் கிடக்கவேண்டுமா என்பது ஆராயத்தக்கது.

அத்தகைய ஆழ்ந்த ஆராய்ச்சியின் விளைவாகத்தான், இடைக்காலத்திலே உருவ வழிபாட்டில் மனத்தைத் திரியவிட்ட மக்களிடையே மீண்டும் 'ஒளி வழிபாடு' குறித்துத் திருமூலர் உரக்கக் குரல் எழுப்ப முற்பட்டார்.

மனிதனின் அறிவு வளர வளர மற்ற மற்றத் துறைகளில் எப்படி அவன் படிப்படியாக முன்னேறுகிறானோ, அங்ஙனமே இறைவழிபாட்டுத் துறையிலும் இருந்த இடத்திலேயே இல்லாமல் எழுந்து மேலேறிச் செல்ல வேண்டும்.

குருட்டுநிலை என்பது கண்ணுக்கும் வரக்கூடாது; கருத்துக்கும் வரக்கூடாது. கண் குருடு ஆயினும் தீமை; அறிவோடு செயலாற்ற வேண்டிய கருத்துக்கு ஆயினும் அதைவிடத் தீமை.

சிந்திக்கத் தெரியாத — கல்வி அறிவு இல்லாத — அகவையில் (வயதில்) குறைந்த மக்கள், எல்லாம் கடந்த பேராற்றலான 'கடவுள்' அருளை எய்த முதலில் 'உருவ வழிபாடு' புரிதல் ஓரளவு ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருக்கலாம். ஆனால், கல்வியில் தேர்ச்சி பெற்றுச் சிந்திக்கும் தெளிவினை அடைந்த பின்னரும் — முதுமைப் பருவத்தை எய்திய பின்னரும் — தான் ஏழு வயதில் கை கூப்பித் தொழுத கற்சிலைத் தெய்வத்தையே எழுபது 'வயதிலும்' ஒருவன் கும்பிட்டுக் கிடக்கிறான் எனில் — அவனது இறைவழிபாட்டில் எள்ளளவும் முதிர்ச்சியோ முன்னேற்றமோ இல்லை என்றுதானே பொருள்.

திராவிடத் தமிழ்ச் சான்றோர் வழிபாட்டுத்துறையில் ஒரு முன்னேற்ற முறையைக் கண்டனர். அதுவே ஒளி வழிபாடு. இனி, திருமூலரும் இராமலிங்க அடிகளும் அந்த ஒளி வழிபாட்டை எங்ஙனம் உணர்த்தினர் என்பதைக் காண்போம்.

கடவுள் வணக்கம் தொடங்கியது ஏன் ?

உலகில் தோன்றியுள்ள உயிர்கள் அனைத்திலும் மனிதப் பிறவியே மிகவும் உயர்ந்தது. மற்ற உயிர்களை ஆட்டிப் படைக்கும் — ஆற்றலை அளிக்கும் —

அறிவும் உணர்வும் மனிதப் பிறவியிடம் மிகுதியாக அமைந்திருப்பதே இந்தத் தனிச் சிறப்பான உயர்வுக்குக் காரணம் ஆகும். ஏனைய உயிர்கள் யாவும் ஓரறிவு முதல் ஐந்து அறிவோடு நின்றுவிட, மனிதன் மட்டும் பகுத்தறிந்து உணர்த்தவல்ல ஆறாவது அறிவையும் படைத்திருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இங்ஙனம் அறிவில் — உணர்வில் — ஆற்றலில் — மேம்பட்டு நின்றபோதிலும், பிணி, மூப்பு, இறப்பு, இன்னல் — ஆகியவற்றைத் தன்னால் வெல்ல முடியாது என்பதை மாந்தன் தெளிந்தான். தன்னிடம் எத்துணைதான் ஆற்றல்கள் அடங்கியுள்ளபோதிலும் அந்த ஆற்றல்களையும் விஞ்சிய 'பேராற்றல்' ஒன்று இருக்கவேண்டும் என எண்ணினான். அதனையே 'இறைவன்', 'கடவுள்', 'தெய்வம்', 'தேவதை', 'பரம்பொருள்', 'பரமபிதா', 'அல்லா' என்றெல்லாம் பொதுப்பெயர்கள் சூட்டி வணங்கத் தலைப்பட்டான்.

திராவிட இனத்தவர் அந்தப் 'பேராற்றலை'ச் செங்கதிரோன் வழியில் கண்டு தொழுதனர் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

இங்ஙனம் புறத்திலே உள்ள பருப்பொருளான ஞாயிறுபோன்றே மனித உடலினுள்ளேயே அகத்திலும் ஒரு 'பேரொளி' உறைகிறது என்பதைத் திராவிட இனத்தவரான தமிழ்ச் சான்றோர் கண்டு தெளிந்தனர். அந்தப் 'பேரொளி'யை உள்முகமாகக் கண்டு தெளியும் வழிமுறைகளையும் அவர்கள் ஆராயத் தலைப்பட்டனர். அயல் சமயத்தினர் காட்டிய உருவ வழிபாடு — அதனை ஒட்டிய சாத்திரங்கள், சடங்குகள், தெய்வங்களைப்பற்றிய கற்பனைக் கதைகளாகிய புராணங்கள் முதலியவற்றில் ஆழ்ந்துவிட்ட தமிழ் மக்களுக்கு உண்மையான 'பேரொளிக் கடவுள்' எங்கே, எப்படி உறைகிறார் என்னும் மெய்ந்நிலையை உணர்த்தவேண்டிய இன்றியமையாக் கடமையும் அச் சான்றோர்களுக்கு ஏற்பட்டது.

உயர்ந்தோர் கண்ட ''உள்ளொளி''

அத்தகைய வழிகாட்டும் ஒளிவிளக்குச் சான்றோர்களுள் ஒருவராகத்தான் திருமூலர் — அந்தப் 'பேரொளி'யை அறியத்தக்க வழிமுறைகளைத் தாம் இயற்றிய திருமந்திரப் பாடல்களில் தெளிவுறுத்தியுள்ளார்.

அங்ஙனமே வடலூரில் 'ஞான சபை'யைத் தோற்றுவித்த வள்ளலார்-இராமலிங்க அடிகளாரும் 'சோதி' வடிவில் பரம்பொருளைத் தொழவேண்டிய நெறிகளைத் தமது திருவருட்பா பாடல்களில் வகுத்தளித்துள்ளார்.

திருமூலர், இராமலிங்க அடிகள் இருவருமே தத்தம் இளம் பருவத்தில் உருவ வழிபாட்டில் ஊறித் திளைத்தவர்களே! சிறு தெய்வ வணக்கத்தில் சிந்தையைப் பறிகொடுத்தவர்களே! ஆரிய இன வேத சமயத்தினர் பரப்பி வந்த புராண, இதிகாச, சாத்திர, உபநிடத, ஆகம அறநெறிகளை நம்பி நடந்தவர்களே! அதே நேரத்தில், இறைப் பற்றுத் தொடர்பான தலையாய நூல்கள் அனைத்தையும் கற்றுத் தெளிந்தவர்களே! இந்தச் செய்திகளை அவர்களுடைய தொடக்ககாலப் பாடல்களே புலப்படுத்துகின்றன.

நாளாக நாளாக, பழைமையிலேயே முடங்கிக் கிடந்த அவர்தம் சிந்தனையில் 'புதுமையொளி' படரத்தொடங்கிற்று. அதுகாறும் தாங்கள் நம்பிக் கொண்டிருந்த மறைகள், புராணங்கள், சாத்திரங்கள், அவை காட்டிய தெய்வங்கள் யாவும் உருவமாக வடிக்கப்பெற்ற கற்பனைகளே என்பதையும் உண்மையான பகுத்தறிவுக்கு அவை ஒவ்வாதவை என்பதையும், மெய்யான இறையாற்றல் அவரவர் மெய் என்னும் உடல் வீட்டிலேயே உறைகிறது — ஒளிர்கிறது — என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டனர். கடவுளைத் தேடிக் காடு, மலைகளுக்குச் சென்று கடுந்தவம் புரிவதோ, யாகமும் வழிபாடும் செய்வதோ தேவையே இல்லை என்னும் தெளிவையும் அவர்கள் பெற்றனர். அவரவர் உள்ளத்தின் உள்ளேயே இறைவனை 'உள்ளொளி' வடிவில் கண்டு களிக்கலாம் என்று மற்றவர்க்கும் தெளிவுறுத்தினர்.

இதுபற்றித் திருமூலர் இவ்வாறு கூறுகிறார்:

''ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகிஎன் உள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழும் கடந்தஅத்
தண்சுடர் ஓமத் தலைவனும் ஆமே.''

இவ்வாறு உள்ளத்தின் உள்ளேயே ஒளி வீசும் சுடராக - இறைவனைத் திருமூலர் கண்டாற் போன்றே வள்ளலார் இராமலிங்க அடிகளும் அந்தப் 'பேரொளியைக்' காண்கிறார். அவர்தம் 'திருவருட்பா' பாடல் வரிகள் வருமாறு:

''என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை அன்பே!
அருளொளி விளங்கிட ஆணவம் எனுமோர்
இருளை வென்னுளத் தேற்றிய விளக்கே!
'உள்ளொளி' ஓங்கிட உயிரொளி விளங்கிட
வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே!''

மேற்காணும் பாடல்களால், திருமூலரும் வள்ளற் பெருமானும் தத்தம் இதயக் கோயிலிலேயே 'இறை' என்னும் 'உள்ளொளி' சுடர் விளக்காக எரிவதைக் கண்டிருக்கின்றனர் என்பதை அறிகிறோம்.

சாதி வளர்க்கும் சமயம் தவிர்க்க

சமய வழிபாட்டில் முதிர்ச்சியடையாத நிலையில் அவர்களும் ஊருக்கு ஊர் ஓடி ஆலயங்களை வலம் வந்திருக்கின்றனர்; ஆறு குளங்களில் நீராடியிருக்கின்றனர்; கற்பனையாகப் பற்பல அற்புதக்கோலங்களில் வடிக்கப்பெற்ற மனித வடிவுத் தெய்வங்களையும் இன்னும் எண்ணற்ற சிறு தெய்வங்களையும் வணங்கியிருக்கின்றனர். அவர்கள் பெற்ற அனுபவத்தின் பயனாக மனிதரை இழி குலத்தவர், உயர் குலத்தவர் எனப் பிளவுபடுத்தும் சாதி முறையைப் பரப்பும் ஒரு சமயநெறி, ஒரு சமுதாய நலனைக் காக்கும் தீநெறி ஆகாது என்பதையும் அறிந்தனர்.

எனவேதான், சாதிப் பாகுபாடுகளைச் சாடிக் கண்மூடித்தனமான மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்ததுடன் நில்லாமல் அவற்றை விடாப்பிடியாகக் கடைப்பிடிக்கும் அயல் இனத்தவரின் சமய நெறிகளையும் விலக்குமாறு அறிவுறுத்தினர்.

''ஆயத்துள் நின்ற அறுசம யங்களுங்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலர்.''

என்றும்,

''ஞான மிலாதார் சடைசிகை, நூல்நண்ணி
ஞானிகள் போல நடக்கின் றவர்.....''

என்றும்,

''ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி;
கானங் கடந்த கடவுளை நாடுமின்;
ஊனங் கடந்த வுருவது வாமே!''

என்றும் திருமூலர் போலிச் சமயநெறிகளை மனித மனத்தை மடமைப் படுகுழியில் ஆழ்த்தும் பொல்லாங்கான இறைக்கொள்கையைப் புறக்கணிக்குமாறு சொல்கிறார்; உண்மையான மெய்ப்பொருளைத் தேடித் தெளியுமாறும் கூறுகிறார்.

அவரைப் போன்றே வள்ளலார் இராமலிங்க அடிகளும், சாதிப்பாகுபாடுகளை விதைத்துவளர்த்த சமயநெறியைக் கடுமையாகவே சாடுகிறார்.

''சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே''

என்றும்,

''சாதிசம யங்களிலே நீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரமன்
றெனவே
ஆதியிலென் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பாலின் றுண்மைநிலை அறிவிக்க வந்தேன்''

என்றும் வள்ளற்பெருமான் சாதிக் கொடுமை நீங்கிய ஏற்றத் தாழ்வற்ற சமூகநீதி தழைப்பதற்காகப் பாடியுள்ளார்.

உடம்பே ஒளிக்கோயில்

அடுத்து, மனித உடலைப்பற்றியும் ஒரு தவறான கருத்தை அயல் சமயங்கள் நெடுங்காலமாகப் பரப்பி வருகின்றன. 'மாந்தரின் யாக்கை நிலையற்றது; அழியப்போவது; எனவே, அதனை அக்கறையோடு பேணிக் காக்கவேண்டிய தேவை இல்லை' என்பது அவற்றின் கூற்று.

அந்தப் பகுத்தறிவுக்குப் புறம்பான நிலையாமைக் கோட்பாட்டைத் தகர்த்தெறிந்த புரட்சியாளர் திருமூலர்,

''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்.''

என்று இடித்துரைத்து உயிர் வளர்ச்சிக்கு உடல் வளர்ச்சியும் இன்றியமையாததே என்று ஆணித்தரமாக அவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே!''

இந்த உடலே ஓர் ஆலயம் போன்றது; அவ்வாலயத்தின் முதல் கோபுரத்தின்கீழ் உள்ள நுழைவாயில் போன்றது நம் வாய்; நம் உள்ளம்தான் கருவறை; (இதனையே பெருங்கோயில் என்று சிறப்பித்துச் சொல்கிறார்.) அந்தக் கருவறையில் வழிபடு தெய்வமாக அமர்ந்துள்ள சிவலிங்கம், சீவன் என்னும் உயிர் போன்றது. அந்தத் தெய்வச் சிலையருகே ஒளிவெள்ளத்தைப் பாயவிடும் ஐந்து திரிகளைக் கொண்ட விளக்குக்கு இணையானவை நம் புலன்கள். எனவே, 'வெளியிலே தெரியும் கற்கோயிலை மட்டுமே சுற்றிக்கொண்டிராமல் உங்கள் உடலாகிய ஆலயத்தினுள்ளேயே உள்ளக் கருவறையில் உறையும் 'உள்ளொளியைக் காணுங்கள்!' என உணர்த்துகிறார் திருமூலர்.

அவரைப் போன்றே வள்ளற்பெருமானும் இந்த ஊன் உடம்பை உயர்த்தியே பாடுகிறார். இவ்வுடம்பென்னும் கோயிலிலேயே 'அருட்பெருஞ்சோதி' ஆகிய ஆண்டவரைக் காணலாம் என்கிறார். அழியக்கூடியது என்று ஏனைய சமய நெறியினரால் புறக்கணிக்கப்பட்ட இந்த யாக்கை ஒளி வடிவாகவே மாறி ஓங்கத்தக்கது எனவும் அவர் உரைக்கின்றார். அடியிற்காணும் அவரது அழகிய பாடல் இந்தக் கருத்தை நேர்த்தியாக நம் நெஞ்சில் பதியச் செய்கிறது.

''ஊன வுடம்பே யொளியுடம்பா யோங்கிநிற்க
ஞான அமுதெனக்கு நல்கியதே—வானப்
பொருட்பெருஞ் சோதிப் பொதுவில் விளங்கும்
அருட்பெருஞ் சோதி யது.''

மேற்கூறியவற்றால் மனித யாக்கை புறக்கணிக்கத் தக்கது அன்று—போற்றிப் பேண வேண்டிய இறையொளியின் திருக்கோயிலே—என்னும் பேருண்மையைத் திருமூலர், வள்ளலார் ஆகிய இருபெருஞ் சான்றோர்களுமே ஒரே குரலில் முழங்கியிருப்பதை உணர்கிறோம்.

ஒளிவழிபாடு ஓங்குக!

மேலே எடுத்துக்காட்டியுள்ளவற்றால், 'திருமந்திரம்' பாடிய திருமூலரும், 'திருவருட்பா' பாடிய இராமலிங்க அடிகளும் எல்லாக் கருத்துகளிலும் ஒத்த உள்ளம் படைத்தவர்களாய் ஒளி வீசுவதைக் காண்கிறோம்.

உண்மையான இறையாற்றலைக் காணல், அதனை அவரவர் உடம்பிலேயே 'உள்ளொளி'யாக உணர்தல், அதற்கு நடுநிலையோடு நிற்றல், சாதிப்பிளவுகளுக்கு வழிவகுத்த—மூட நம்பிக்கைகளைப் பரப்பிய—'உருவ வழிபாட்டிலேயே' முடங்கிக் கிடக்கச் செய்த—புறச் சமய நெறியைப் புறக்கணித்தல்—ஆன்ம நேய ஒருமைப்பாடு தழைக்கச் சன்மார்க்க நெறியின் வழி நடத்தல்—முதலான பல நிலைகளிலும் திருமூலர்—வள்ளலார் இருவரும் ஒரே குரலில் முழங்குவதைக் காண்கிறோம்.

அவர்களின் 'ஒளி வழிபாடு' என்னும் முறை இறை வழிபாட்டில் ஒரு முதிர்ச்சியான நிலை என்பதையும் உணர்கிறோம்.

அவர்கள் இருவரும் ஒத்த கருத்தினராய் உருவாக்கித் தந்துள்ள சன்மார்க்கப் புதுமை நெறி வாழ்க! வழி நடத்துக!!





தமிழில் தெருக்கூத்து

ந. முத்துசாமி

"நாட்டிய சாஸ்திரம்'' என்னும் சொல் சமீபத்தில் மிகுந்த கௌரவத்திற்கு ஆளாகியிருக்கிறது. அதில் சொல்லப்படும் செய்திகளோடு தெருக்கூத்தைச் சேர்த்துப் பேசும் காரியத்தில் ஈடுபடுகிறது இந்தக் கட்டுரை. நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் 'விக்ருஸ்ட நாட்டியக்ரஹம்' என்ற அரங்க அமைப்பு ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு தெருக்கூத்தில் அது எப்படி எளிமைப்பட்டிருக்கிறது என்பதை இங்குப் பார்க்கலாம். இந்த நாடக அரங்கின் அமைப்பை 'The Indian Theatre, its Origin and development upto the present day' என்னும் சந்திரபான் குப்தாவின் புத்தகத்திலிருந்து எடுத்துக்கொண்டிருக்கிறேன். இந்த அமைப்பின் எல்லா விவரங்களையும் இங்கே தரப்போவதில்லை. என் நோக்கத்திற்கு அவை தேவையில்லை.

நேபத்ய க்ரஹம்		
ரங்கசிரிஷம்		
மத்வானி	ரங்கபீடம்	மத்வானி
ரங்க மண்டலம்		

'நேபத்யக்ரஹம்' என்பது நடிகர்கள் வேஷமிட்டுக்கொள்ளும் இடம். அப்போதைக்கு உண்டாக்கிக்கொள்ளப்படும் தெருக்கூத்தின் நடிப்பிடத்தில் சேர்ந்த அங்கமாய் இது இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. வேஷம் கட்டிக்கொள்ளும் இடம் தெருக்கூத்தில் தனியாக இருக்கிறது. கூத்தர்கள் அமர்ந்து வேஷம் கட்டிக்கொள்ள வசதியான ஓர் இடத்தைப் பிடித்துக்கொள்கிறார்கள். திரௌபதி அம்மன் கோயில் விழாவில் கூத்து 10 நாள்கள் சடங்காக நிகழ்கிறபோது வசதிப்பட்டால் நடிப்பிடத்தின் பின்னாலேயே ஒரு கொட்டகை போட்டுக்கொள்கிறார்கள். நிரந்தரமான ஓர் அமைப்பை அவர்களுக்குக் கொடுப்பதானால் அவர்கள் அதை நடிப்பிடத்திற்குப் பின்னால்தான் வேண்டுவார்கள். இந்திய மரபில் நடிகர்கள் இங்கிருந்துதான் மேடையில் தோற்றமாய்த் தேவைப்படாத குரலாய்க் கேட்கவேண்டிய சப்தங்களை உண்டாக்குகிறார்கள். அசரீரி போன்ற குரல்கள் இங்கிருந்துதான் பேசப்படுகின்றன. வேஷம் கட்டிய பாத்திரங்களும் கூத்தின் பின்பாட்டில் கலந்துகொள்கிற மரபில், இந்த அமைப்பு உண்டானால் இங்கிருந்து அப்போது வேஷம் போட்டுக்கொண்டிருக்கிற கூத்தனும் குரல் கொடுப்பான். பங்குபெறச் சந்தர்ப்பம் உண்டாகும்போது கூத்தனால் சும்மா இருக்க முடியாது. அவனுடைய மரபு அவனை எந்நேரமும் ஈடுபாட்டோடுதான் வைத்துக்கொண்டிருக்கிறது.

'வேஷமிட்டுக்கொள்வது', 'வேஷம் போட்டுக் கொள்வது' என்றில்லாமல், சொற்பிரயோகம் 'வேஷம் கட்டிக்கொள்வது' என்றிருப்பதைக் கவனிக்க வேண்டும். தெருக்கூத்தில் 'கட்டை கட்டிக் கொண்டு ஆடுவது' என்னும் சொல்லாட்சி இருக்கிறது. கூத்தில் வேஷம், முகத்தில் பூசிக்கொள்ளும் வர்ணப் பூச்சுகளோடு மட்டும் அமைந்துவிடுவதில்லை. அலங்காரங்கள் எல்லாவற்றையும் கட்டிக் கொள்ளவேண்டியிருக்கிறது. இந்த அலங்காரங்களில் பெரும்பாலானவை மரத்தால் ஆனவை. ஆகாரியாபிநயத்துக்கு வேண்டிய ஆடை அணிகலன்களைக் கூத்தன் கட்டிக்கொள்கிறான். பெரிய தலைக்கிரீடம், புஜகீர்த்திகள், பெரிய காதுகள், மார்பணிகள், விரிந்த பெரிய பாவாடை, கால்களில் கஜ்ஜை எல்லாவற்றையும் கயிறுகளைக்கொண்டு கட்டிக்கொள்ளவேண்டியிருக்கிறது. சிக்கலான நேர்த்தியான இந்த அலங்காரங்களைச் செய்து கொள்கிற கூத்தனுக்கு வசதியைக் கொடுத்தால் அவன் வேஷம் கட்டிக்கொள்ளும் இடத்தை நடிப் பிடத்திற்குப் பின்னால்தான் அமைத்துக்கொள்வான். தெருக்கூத்து, யக்ஷகானம், கதகளி, சாக்கையன் கூத்து, கூடியாட்டம், கிருஷ்ணனாட்டம் போன்றவற்றில் இந்த அலங்காரங்கள் பொதுவாக ஒத்திருக்கின்றன. ஒரு முழுப்புடவையும் கொசுவிக் கயிறுபோலக் கூத்தர்களின் உடம்பில் சுற்றப்பட்டு விடுகின்றன. ஒரு பாத்திரத்தை உண்டாக்குகிற வேலையில் சில புடவைகள் அவன் உருவத்தில் மறைந்துபோய்விடுகின்றன. இந்த வேலையில் அவன் மனிதனைவிடக் கம்பீரமாக ஆகிருதி பெற்றவனாகத் தோற்றமெடுக்கத்தொடங்கிவிடுகிறான்.

இந்த வேஷங்கள் கேரளத்தில் இருக்கும் தெய்யும், கர்நாடகத்தில் இருக்கும் பூதம் ஆகியவற்றை ஒத்திருக்கின்றன. தெய்யுமிலும் பூதத்திலும் இருக்கும் அலங்காரங்கள் சடங்குச் செயல்களுக்கு உகந்திருப்பவை. சடங்கின் அலங்காரங்கள் ஆடற்கலைக்கு வேண்டிய அபிநயமாக உருமாற்றமடைந்தபோது இந்த அளவு குறுக்கம் நேர்ந்திருக்கலாம். தெய்யும் பூதத்தின் தோற்றத்தைக் காட்டிலும் இவற்றின் தோற்றங்கள் சிறியவை. தோற்றத்தைத் தரித்துக் கொள்வதுமட்டுமன்றி ஆட்ட மரபுக்கு இவை ஒத்து வரவேண்டும். தெய்யுமும் பூதமும் மூதாதையர்களுக்குச் செய்யும் பூசை. ஆடற்கலை தோன்றுவதற்கு முன்பிருந்தே இருக்கும் பண்டை மரபாகலாம் இவை. இந்தப் பண்பைத் தான் தென்னக ஆட்டக்கலை மரபுகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனவோ என்னவோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

கூத்துகள் புராண இதிகாசக் கதைகளைத்தாம் ஆட எடுத்துக்கொள்கின்றன. புராண இதிகாசக் கதைகள் இறந்தகால மனிதர்களைப்பற்றியவை. இறந்தகாலப் பாத்திரங்களை மனித மனம் அதீதக் கற்பனையில்தான் ஆளாக்கிக்கொள்கிறது. நாம் அறிந்த, மனிதர்களிடையில் மனிதர்களாக வாழ்ந்த வரலாற்று நாயகர்கள் நம்மைவிடப் பெரிய ஆகிருதி பெற்றவர்களாகத் தோன்றத் தொடங்குவது நம் அனுபவம். கூத்துப் பாத்திரங்கள் தோற்றமெடுத்துக்கொண்டதற்கு அடிப்படையில் இந்த மனோதத்துவக் கூறு காரணமாக இருந்திருக்கலாம். இறந்தகால மனிதர்களான தங்கள் மூதாதையர்களுக்கு இவர்கள் கொடுத்த வடிவத்தையே இந்தப் புராண இதிகாசப் பாத்திரங்களுக்கும் கொடுத்திருக்கலாம். கூத்தர்களுக்கு, தெய்யுமும் பூதமும் தங்கள் கூத்துப் பாத்திரங்களுக்கு உருவம் கொடுக்க உத்வேகம் கொடுத்திருந்தால் அது மிகவும் பிரமாதமான விஷயம். இந்தப் பெருமையை அழகை ஒரு படைப்பாளியின் மனம்தான் உணர முடியும். கூத்தின் குரலிலும் இந்த அதீதத் தன்மை இருந்து கொண்டிருக்கிறது. அசரீரி போன்றவையும் இந்த மனோதத்துவக் கூறுபாட்டின் நீட்சிதான். அப்போதைக்கு உண்டாக்கிக்கொள்ளப்படும் வசதிகள் நிரந்தர வசதிகளாக மாற்றம் பெறுமானால் வேஷம் கட்டும் இடம் நடிப்பிடத்திற்குப் பின்னால்தான் அமையும். இதில் காலப்பிரக்ஞையும் சேர்ந்திருக்கிறது. நிகழ்காலத்திற்குப் பக்கத்தில் இன்றி, இறந்காலம் நிகழ்காலத்திற்கு முன்சென்று மறைந்திருக்கிறது. காலமின்றி, இடம் என்னும் பிரக்ஞை வரும்போது அது நடிப்பிடத்தில் ஒரு பிரிவினையாக 'மத்வானிகள்' என்ற பெயரில் நடிப்பிடத்தின் பக்கங்களில் அமைகின்றன. இப்பிரிவினைகள் தெருக்கூத்தின் நடிப்பிடத்தில் கலந்து மறைந்துபோயிருக்கின்றன. நிகழ்ச்சிகளில் அவ்வப்போது இடைத்தூரமுள்ள இரண்டு இடங்கள் ஒன்றன்மேல் ஒன்றாய்ப் படிவதைப் பார்க்க முடியும்.

நேபத்யக்ரஹத்துக்கு முன்னுள்ளது ரங்கசிரீஷம். இது வாத்யகோஷ்டிக்கான இடம். தெருக்கூத்தில் இந்தப் பெயர்கள் எல்லாம் இல்லை. ஒரு விசுப் பலகையைப் போட்டு அதில் வாத்தியக்காரர்கள் அமர்ந்துகொள்கிறார்கள். முகவீணைக்காரரும் மிருதங்கக்காரரும் அமர்ந்துகொள்கிறார்கள். பின்பாட்டுக்காரர்கள் இடவசதியைப் பொறுத்து அமரவோ நின்றுகொண்டிருக்கவோ செய்கிறார்கள். பின்பாட்டுக்காரர்களின் கையில் தாளம் இருந்து கொண்டிருக்கிறது. ஆர்மோன்யக்காரர் விசுப்பலகையை ஒட்டித் தனியாக அமர்ந்துகொள்கிறார்.

ரங்கசிரீஷத்திற்கு முன்னுள்ளது ரங்கபீடம். நாட்டிய சாஸ்திரத்தின் திரை, இவை இரண்டிற்கும் இடையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் திரை வாத்யகோஷ்டியை மறைத்துக்கொண்டிருக்கும். வாத்ய கோஷ்டி வெளியில் தெரியவேண்டியபோது மட்டும் விலகிக்கொள்ளும். வேண்டாதபோது மூடிக்கொண்டுவிடும். இதை விலக்கிக் கொண்டுதான் நடிகர்கள் ரங்கபீடத்திற்கு வருவார்கள். ரங்கபீடம் என்பது நடிப்பிடம். ரங்கமண்டலம் என்பது பார்வையாளர் அமரும் அரங்கம்.

நடிப்பிடமான ரங்கபீடத்திற்கும் ரங்க மண்டலத்திற்கும் இடையில் திரையில்லை. நடிப்பிடம் பார்வையாளர்களுக்கு எப்போதும் திறந்தே வைக்கப்பட்டிருக்கும். நிகழ்காலத்தைப்போல் அது திறந்தே இருக்கும்.

அப்போதைக்கு உண்டாக்கிக்கொள்ளப்படும் நடிப்பிடங்களை மட்டுமே கொண்டிருக்கும் தெருக்கூத்து இந்தப் பிரிவினைகளை எல்லாம் மிகவும் வெளிப்படையாகச் செய்துகொள்ள முடியாது. இவற்றைச் சூட்சுமமாக வைத்துக்கொள்வதே அதற்குக் கட்டுபடியாகும். அப்படித்தான் அது வைத்துக்கொண்டிருக்கிறது. இயல்பாக இப்படி அமைந்திருக்கிறது; மரபாக அமைந்திருக்கிறது. யார் யோசித்து இப்படி அமைத்துக்கொண்டார்கள்? பழக்கத்தில் சுலபமானது மரபாக அமைந்துவிட்டதுபோலிருக்கிறது. நடிகர்களைப் பார்த்து வாத்யக் கோஷ்டி அமர்ந்துகொணடால் அவர்கள் மேடை இயக்கங்களைப் பார்த்துக்கொண்டிருக்க வசதியாக இருக்குமே; ஏன் அப்படிச் செய்யவில்லை? அப்படிச் செய்ய முடியாது. அது இந்த மரபில் இல்லை. அப்படி அவர்களால் சிந்திக்கவே முடியாது. நடிகனுக்கும் பார்வையாளர்களுக்கும் இடையில் வேறு எதையும் அனுமதிக்கவே மாட்டார்கள். திரையைக்கூட அனுமதிக்கவில்லை. நடிகனுக்கும் பார்வையாளனுக்கும் இடையில் பிரிவினை அற்றுப்போவதிலேயே அவர்கள் குறியாக இருந்துவந்திருக்கிறார்கள். இதற்காகவே தெருக்கூத்து கட்டியக்காரனை வைத்துக்கொண்டிருக்கிறது. அது தத்துவார்த்தத் தரத்ததாகவே இருந்துகொண்டிருக்கிறது. தான் சொல்ல விரும்புவதை ஏற்கும் பார்வையாளன் தன்னைப்போல் ஆவதில் உண்டாகும் வேற்றுமை இன்மையைக் கெடுக்கும் திரையையும் அது விலக்கி வைத்துவிட்டது. திரையை நடிகனுக்குப்பின் எடுத்துச் சென்று, இதற்குப்பின் அர்த்தமிருக்கிறது; அற்புதம் இருக்கிறது; இறந்தகால அனுபவம் இருக்கிறது; இறந்தகாலம் போல அளவிட இயலாத புதிர்கள் நிரம்பியது என்ற அர்த்த பாவங்களைத் தோற்றுவிக்கிறது இந்தக் கூத்து. இது இலக்கிய மரபான சமஸ்கிருத நாடகங்களை மிஞ்சியது.

பின்பாட்டுக்காரனை எப்போதும் பார்வையாளர் பார்வையிலிருந்து மறைத்து வைக்க வேண்டுமானால், அது முடியும். ஆனால், ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? நடிகனைத் தாண்டியிருக்கும் வடிவங்களில் எளிமையை நோக்கிப் போகும் கூத்துக்கு இது தேவையில்லை. உண்மை நிகழ்ச்சி ஒன்று நடந்துகொண்டிருப்பதன் பிரமையைத் தோற்றுவிக்க முனையவில்லை கூத்து. பின்பாட்டுக்காரர்களில் ஒரிருவர் அவ்வப்போது தேவைப்படுமானால் நடிப்பிடத்தில் வந்து நடக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்கள். கிரேக்க நாடகத்தில் கோரஸ் உள்ளதுபோல இங்குப் பின்பாட்டுக்காரர்கள் முற்றிலும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாவிட்டாலும் நிகழ்கால மக்களின் தோற்றத்தில் இருக்கும் அவர்கள் தங்கள் வருகையால் இறந்தகால மனிதர்கள் தேவர்களின் உருவத்தில் இருக்கும் கூத்துப் பாத்திரங்களின் பொலிவு கெட்டுப்போகும் என்றோ ரசனைக்குக் குந்தகம் நேர்ந்துவிடும் என்றோ அஞ்சுவதில்லை. கிராமத்தான் கலைவயின் லலித குணங்கள் தெரியாமல் வறட்டுத்தனமாக நிகழ்ச்சியின் இடையில் வந்து கெடுக்கும் விகாரம் இல்லை இது. நிகழ்காலத் தோற்றத்தில் இருக்கும் கட்டியக்காரன் அங்கு ஏற்கெனவே இருந்துகொண்டிருக்கிறான். பார்வையாளர்களுக்கு எப்போதும் நிகழ்காலத்தை நினைவுபடுத்திக்கொண்டேயிருக்கிறான். அப்போதைக்கு அவனோடு வார்த்தையாடப் பின்பாட்டுக்காரர்கள் வருகிறார்கள்; அல்லது இரண்டு பாத்திரங்களுக்கு இடையில் நேரும் மோதலை உக்கிரமாக்க வருகிறார்கள். புராணப் பாத்திரங்கள் அந்தக் கட்டத்தில் மோதிச் செத்திருக்கின்றன. அவற்றைத் தடுத்திருக்க முடியும் என்ற நியாயம் அவர்கள் வருகையால் தோன்றுகிறது. வேஷமணிந்த கூத்தன் அவ்விதம் மோதிச் செத்துவிடமுடியாது. வேஷமணிந்த கூத்தன் பாத்திரமாக மாறிப் பிரக்ஞை கெட்டுவிடக்கூடாது. அவர்கள் வருகை பார்வையாளர் பார்வைக்கு நோக்கைக் கொடுப்பதாக இருக்கிறது. பாத்திரத்திற்குப் பின்னால் கூத்தனுக்கு ஒரு வாழ்க்கை இருக்கிறது. பார்வையாளனுக்குப் பின்னும் ஒரு வாழ்க்கை இருக்கிறது. வாழ்க்கைக்கு வேண்டிய உத்வேகத்திற்காகத்தான் அவன் கூத்தனாக வந்திருக்கிறான், இவர்கள் பார்வையாளர்களாக வந்திருப்பதைப் போல. பாத்திரங்களை ஏற்று யாரும் கெட்டுவிடாமல், பாத்திரங்களையும் கூத்தர்களையும் அன்னியப்படுத்திக் காண்பிக்கிறார்கள். எனவே, பின்பாட்டுக்காரர்கள் திரை மறைவில் இருக்கவேண்டிய அவசியம் அற்றுப் போகிறது.

பின்பாட்டுக்காரர்கள் திறந்துவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக, கூத்து, திரையைக் கைவிட்டுவிடவில்லை. அதைக் கையடக்கத் திரையாக மாற்றிக்கொண்டுவிட்டது. திரை கையடக்கத் திரையாக மாறுகிறபோது அது இரண்டு ஆட்களையும் உடன்சேர்த்துக்கொண்டு வருகிறது. கூத்தில் என்ன நேர்ந்தாலும் அது மனிதர்களுடைய பிரமை கலைந்து போவதற்காகத் தோன்றியதாகத் தோன்றுகிறது. பார்வையாளர்களின் மனத்தில் நிகழ்ச்சியைப் பார்த்துத் தோன்றும் எழிலின் தோற்ற குணங்களை எல்லாம் அது அறிந்துகொண்டே செயல்படுவதாகத் தோன்றுகிறது. பிரமையைக் கலைப்பது மன மேன்மையைக் கலைப்பதில்லை. உரிய பரிமாணத்தின் மன மேன்மையைக் கொடுப்பதே அது.

இரண்டு மனிதர்கள் கூத்தில் திரை பிடிக்கிறார்கள். பின்பாட்டுக்காரர்கள் திறந்து வைக்கப்

பட்டதால் கிடைத்த சுதந்திரம் இது. அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்திருக்கவேண்டும். அதை வளத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எப்போது வேண்டுமானாலும் திரையைக் கொண்டு வந்து பிடித்துவிடலாம் என்று சுலபமான பிறகு அது தாராளமாகப் பயன்படத் தொடங்கிவிட்டது. நிரந்தரமாகத் தொங்கும் திரையில் இவ்வளவு சுதந்திரம் இல்லை. என்றாலும் இந்தத் திரையை விலக்கிக்கொண்டுதான் பாத்திரங்கள் நடிப்பிடத்தில் புகுகின்றன. இந்த மரபில்தான் கூத்தில் பாத்திரத்திற்கு முன் திரை பிடிக்கப்படுகிறது.

இந்த மரபு அடிக்கடி திரை குறுக்கிடும் தொந்தரவைப் புதிதாக உண்டாக்குகிறது. இது தொந்தரவாகாமல் ஓர் அங்கமாக இணையும் இணக்கத்தை இதற்குக் கொடுக்க வேண்டும். அந்தக் குணத்தைக் கூத்து, திரைக்குக் கொடுத்துவிட்டது. திரைக்காரர்கள் பிடிக்கும் திரைக்குப் பின்னால் தோன்றும் பாத்திரம் ஒவ்வொன்றும் தன்னைப் பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்திக்கொண்டு வருகின்றது. அந்தப் பாத்திரத்தை அதை அணிந்துகொண்ட கூத்தன் அறிமுகப்படுத்துவதாக 'வந்தானே' என்று வருகின்றன. 'வந்தேனே' என்னும் பாத்திரங்கள் தங்களைத் தாங்களே அறிமுகப்படுத்திக்கொண்டும் வருகின்றன. திரைக்கும் பின்னிருந்து சற்றுத் திரையைத் தணித்துத் தன் தோற்றத்தைக் காட்டிப் பார்வையாளர்களை ஆச்சரியம்கொண்டிருக்கச் செய்கின்றன. திரைக்குப் பின்னால் முக்கியமாக இருப்பது திரையை விலக்கிக்கொண்டு இரகசியமின்றி வருவதாக வருகின்றன. ஒவ்வொரு பாத்திரத்திற்கு முன்னும் திரை பிடிக்கப்படும்போதும் அப்பாத்திரங்களில் இரகசியங்கள் இருக்கின்றன என்று சுட்டுவதாக இருக்கிறது. அதை விலக்கிக்கொண்டு வருவதாகவே வருகின்றன. அந்த இரகசியத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டியது பார்வையாளர்கள் பொறுப்பு. அதற்குக் கட்டியக்காரன் உதவுகிறான். அவனால் உதவ முடியாதவையும் இருக்கின்றன. அவன் காட்டிய பாதையில் போய் அவற்றைக் கண்டுகொள்ள வேண்டும்.

இந்தக் கட்டத்தில் இருக்கும் நுணுக்கத்தை மேம்போக்காக இருந்து கைவிட்டுவிடக்கூடாது. எல்லோரும் அறிந்த புராணப் பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் நிகழ்காலத்தோடு தொடர்புபடுத்தி ஒவ்வொரு முறையும் புதிதாகத் தெரிந்துகொள்வதற்கு அதில் என்ன இருக்கிறது? கட்டியக்காரன் நிகழ்காலத்தில் நின்று நிலைத்திருக்கிறான் என்பது நினைவிருக்குமானால் அவனுடைய தன்மைக்குள் இறந்தகால மரபிற்கும் நிகழ்காலச் சமூக நியாயத்திற்கும் இடையில் போராட்டம் இருந்துகொண்டிருப்பது புலப்படும். இக்காலங்களுக்கு இடையிலான முரண்பாட்டுச் சிக்கல் கலைஞனின் படைப்பார்வத்திற்குச் சக்தியூட்டிக்கொண்டிருக்க வல்லது. கூத்தன் உண்மையான கலைஞனாக இருப்பானானால் கூத்துப் பாத்திரங்களும் சம்பவங்களும் பழகி அலுத்துப் போகாமல் அவனுடைய நியாயத்திற்கான குறியீடுகளாக அவை மாறிப் புத்துணர்ச்சியோடு தொடர்ந்துகொண்டிருக்கும். இந்தக் காலத்தைத் தொடர்புபடுத்தும் பண்பு, கூத்துக்கு மரபு அறாத தொடர்ச்சியைக் கொடுத்து வந்திருக்கலாம் என ஊகிக்க வைக்கிறது. மேலும், நமக்குக் கிடைத்திருக்கும் பழமையான சங்க இலக்கியங்களில் கவிஞர்களின் நோக்கைக் கொண்டு பார்க்கும்போது இந்த அரிய ஆட்ட மரபைத் தமிழர்கள் கைவிட்டிருக்க மாட்டார்கள் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

கட்டியக்காரனைப் போல நிகழ்காலம் காட்டும் கடிகை சமஸ்கிருத நாடக மரபில் இல்லை. அது இலக்கிய மரபு. அது கவிஞனின் சொல்லைக் கைக்கொண்டு ஆடும் ஆட்ட மரபு. அந்த மரபைத் திராவிட மரபான கூடியாட்டம் எடுத்துக்கொள்ளும்போது அதைத் தன்வயமாக்கிக்கொண்டிருக்கிறது. கேரள சாக்கையர்கள் சமஸ்கிருத நாடகங்களில் ஓர் அங்கத்தை மட்டுமே எடுத்துக்கொண்டு அந்த நாடாகாசிரியனின் சொல்லை மீறித்தான் விஸ்தாரப்படுத்துகிறார்கள்.

நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அரங்க அமைப்பிலிருந்துதான் தெருக்கூத்து, யக்ஷகானம் போன்றவை தங்களுக்கான அமைப்பை எடுத்துக்கொண்டனவா? கூரையில்லாத அரங்கைப்பற்றிய குறிப்பு நாட்டிய சாஸ்திரத்தில் ஒரே ஒரு இடத்தில்தான் வருகிறது என்கிறார் சந்திரபான் குப்தா. அப்போது கூரையில்லாத அரங்குகளும் கூரையுள்ள அரங்குகளும் இருந்திருக்கின்றன. சமஸ்கிருதத்தில் இருக்கும் மகாநாடகம் என்பது பொது மக்களுக்காகத் திறந்த வெளியில் அப்போதைக்கு உண்டாக்கிக்கொள்ளப்பட்ட மேடைகளில் நடக்கப்பட்ட நாடக வகையைச் சேர்ந்ததாகும் என்கிறார் மன்மோகன் கோஷ். அது சமஸ்கிருத நாடகங்கள் தோன்றுவதற்கு முன்பிருந்த நாடக மரபாக இருக்கக்கூடும் என்றும் அவர் கருதுகிறார். அசாமில் உள்ள 'ஆங்கில நாட்' என்ற கூத்தைப்பற்றிச் சொல்லும்போது அது ஒரு கிராமிய நாடகம் என்றும், மிகவும் பழமையானதல்ல என்றும், சுலபமாகத் தவறாகக் கருதிக்கொள்ள நேரலாம் என்றும், ஆனால் கவனத்தோடு அதன் பல அம்சங்களை ஆராய்ந்தால் வரலாற்றுக் காலத்துக்கு முந்தி இந்தியாவில் இருந்த நாடக வடிவத்தின் ஒரு சின்னம் என்றே கருதவேண்டியிருக்கிறது என்றும் சொல்கிறார் அவர்.

பதினாறாம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய கபூசி நாடகங்கள் அப்போதைக்கு உண்டாக்கிக் கொள்ளப்பட்ட அமைப்பின்கீழ்தான் நடந்தன. நடிப்பிடத்தின்மீது மட்டுமே அப்போதைக்கு உண்டாக்கிக்கொள்ளப்பட்ட கூரையிருந்தது.

பிறகுதான் முழு நாடக அரங்கம் அங்கு எழுந்தது. இது வரலாற்றுடன் இருக்கும் விஷயம். அப்படித் தான் இங்கும் இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்க லாம். அப்படியானால் அந்தப் பழமையான வடிவத் தில் அப்படியே இருக்கிறது கூத்து என்று சொல்வதா?

நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் நாடக அரங்கு இந்தியாவில் எங்கும் இல்லை. நாடக அரங்கைப்பற்றி நாட்டிய சாஸ்திரம் விரி வாகச் சொல்லும்போது, இங்குச் சான்றுக்கு ஒன்று கூட இல்லாமல் போனது துரதிஷ்டமானதுதான். கேரளத்தில் இருக்கும் கூத்தம்பலங்கள் கூடியாட்டம் நடிக்கப்படுவதற்காக மட்டுமே உண்டாக்கப் பட்டவை. நாட்டிய சாஸ்திர அரங்கின் அம்சங்கள் அதில் காணப்பட்டாலும் எல்லாம் அப்படியே ஒன்றிப்போகாமல் கூடியாட்டத்திற்கான மாற்றங் களைக்கொண்டிருக்கிறது.

கர்நாடகத்தில் யக்ஷகானத்திற்கும் அம்பலம் இல்லை. பதினைந்தாம் நூற்றாண்டில்தான் அது பழக்கத்திற்கு வந்திருக்கவேண்டும் என்கிறார் டாக் டர் சிவராம கரந்த். அவர், பன்னிரண்டாம் நூற் றாண்டுக்கு முன்பு வரை அது ஒரு சங்கீத பாணி யாகத்தான் அழைக்கப்படுகிறது என்கிறார். கதகளி பதினாறாம் நூற்றாண்டில்தான் தோற்றம் கொள்கிறது. அதற்கு முன்பிருந்தே அங்குக் கிருஷ்ணனாட்டம் இருந்துகொண்டிருக்கிறது. அது முற்றிலும் சமஸ்கிருதத்தில் இருக்கிறது. கதகளியை விடக் கிருஷ்ணனாட்டம் இன்னும் பூரணமானது; கவிதைத் தன்மை கொண்டது. அது நாடகப் பண்பு களை முழுமையாகவும் கலை நோக்குடனும் பயன் படுத்திக்கொள்கிறது. அங்குச் சாக்கையர் கூத்தும் இருக்கிறது. இந்தச் சாக்கையர் நடிக்கும் கூடியாட் டம், சமஸ்கிருத நாடகங்களை நடிப்பதற்குப் பயன் படுத்திக்கொள்ளப்பட்ட, ஏற்கெனவே அங்கிருந்த ஓர் அம்பலக் கலை வடிவம் என்றே சொல்லப் படுகிறது. கேரளத்தில் இருக்கும் சாக்கையர் கூத் தையும் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் சாக் கையர் கூத்தையும் ஒப்பிட்டு இன்னும் ஆராய வில்லை. இவை நாட்டிய சாஸ்திரத்திலிருந்து தங்கள் வடிவங்களை எடுத்துக்கொண்டனவா?

நாட்டிய சாஸ்திரத்தின் காலத்தைக் கி.மு. 500 வரை கொண்டு போகிறார் மன்மோகன் கோஷ். அதற்கு முந்தியிருந்த நட சூத்திரங்களையும் அது உட்கொண்டிருக்கிறது என்றும் சொல்கிறார். மேலும், பரதமுனி என்பவர் ஒருவர் இல்லை என் றும், பலரால் நாட்டிய சாஸ்திரம் தொகுக்கப்பட் டிருக்கவேண்டும் என்றும், அதன் இன்றைய வடி வைப் பெற அதற்குப் பல நூற்றாண்டுகள் ஆகி யிருக்கலாம் என்றும் அபிப்பிராயங்கள் இருக்கின் றன. இந்தியாவின் பல பகுதிகளில் இருந்த அரங் கக் கலை மரபுகளை எல்லாம் தொகுத்து இலக்க ணப்படுத்தப்பட்ட நூல்தான் நாட்டிய சாஸ்திரம். அரங்கங்கள் தோன்றிய பிறகு அரங்கக் கலைகள் தோன்றின என்பது அபத்தமாக இருக்கும். அரங் கக் கலைகள் தோன்றிய பிறகுதான் அரங்கங்கள் தோன்றும், கபூசிக்குத் தோன்றியதுபோல. ஆனால் காலப்போக்கில் இவற்றின்மேல் சோதனைகள் மேற் கொள்ளப்பட்ட புதிய வடிவங்கள் தோன்றக்கூடும். எனவே, தெருக்கூத்து, நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அரங்க அமைப்பை எடுத் துக்கொண்டு அதைத் தனக்குச் சாதகமாகச் சுலபப் படுத்திக்கொண்டிருக்கிறது என்றும் சொல்லலாம். தெருக்கூத்தின் உருவம் நாட்டிய சாஸ்திர உருவத் திற்கு முந்தியது என்றும் சொல்லலாம் 'ஆங்கில நாட்'டிற்குச் சொல்வதைப் போல.

சமஸ்கிருத நாடகங்களை நடிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கூடியாட்டத்தைப் போலவே, கூடி யாட்டம் என்னும் பெயரிலேயே கேரளத்தில் கீழ் மட்டத்தில் உள்ள மக்களிடம் ஒரு கலை வடிவம் இருக்கிறது என்றும், அது இன்றும் ஆராயப்பட வில்லை என்றும் திருச்சூர் நாடகப் பள்ளியின் இயக் குநர் சங்கரப் பிள்ளை சொல்கிறார். நாட்டிய சாஸ்திரமும் அதற்குப் பின் தோன்றிய அரங்கக் கலைகளைப்பற்றிய நூல்களும் மேடையில் போர், மரணம் ஆகியவற்றைக் காட்டுவதைத் தடுக்கின் றன. சமஸ்கிருத நாடகங்கள் இந்த விதியைத் தாண்டிப் போகவில்லை. பாசன், விதிவிலக்கு. ஆனால், யக்ஷகானம், கதகளி, தெருக்கூத்து ஆகி யவை தடுக்கப்பட்டவற்றைத் தாராளமாய்க் காட்டு கின்றன. யுத்தம், சம்ஹாரம் என்ற சொற் சேர்க்கைகளோடான தலைப்புகளில் கூத்துகளும் யக்ஷகானங்களும் கதகளிகளும் உள்ளன.

மேற்கண்ட கேள்விகளுக்கு பதிலைச் சொல்லு முன் தெருக்கூத்தை மதிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். மதிப்பிடுகிறபோது தெருக்கூத்தின் பண்புக்கு இணங்க, பிரமைகளுக்கு ஆட்படாத மனம் வேண்டும். பலதுறை நிபுணர்களின் ஒத்துழைப்பு வேண்டும். தெருக்கூத்து நசித்து விடாமல் அதைக் காப்பாற்றும் வேலையை உடனடி யாக மேற்கொள்ள வேண்டும்.

பாரதிதாசனும் இரசூல் கம்சதோவும்

டாக்டர் தி. லீலாவதி

"உலக மொழிகளின் வேறுபட்ட இலக்கியங்களில் மன்னும் உறவை இணைத்துக் காட்டலே ஒப்பிலக்கிய இயல்பின் நோக்கமாகும்'' என்பர் ஆஸ்கர் ஜே. கம்பெல். மொழி கடந்த, யாப்பு அமைப்பினைக் கடந்த உணர்வின் வெளிப்பாடுகள் இலக்கியங்கள். மொழியாக்கங்கள் வழியே இன்னொரு நாட்டின் ஆன்மாவினை உணரும்போது, எல்லைகள் கடந்து மானுடம் ஒத்திசைக்கும் உண்மை பெறப்படும். மனித ஆன்மாவின் குரல்தானே இலக்கியம்? இருவேறு மொழிகளின் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராய்தல் வாயிலாக, இனம், மொழி, நாட்டு எல்லைகளைக் கடந்த உலக இலக்கியப் பொதுமைக் கூறுகளை நாம் காண இயல்கிறது. உலகளாவிய திறனாய்வுப் பார்வைக்கு இது வழியாகிறது!.

மானுடத்தின் அடிப்படை அனுபவத்தினை, உள்ளார்ந்த பரிவுடன் வெளிப்படுத்தும் கவிதைகள், சமுதாய நலம் கருதி படைக்கப்பட்டவைகளாகும். கவிஞர்கள், ஆன்மாவின் உள்ளே துடிக்கும் உணர்வுகளை, உலகிற்கு உணர்த்தக் கவிதையெனும் பயன் மிகு கருவியைக் கையாள்கின்றனர். சொந்த மண்ணின் மக்களுடன் உயிர் உறவு பூண்டு, வாழும் நாட்டிடத்துப் பெருங் காதல் கொண்டவனாய், உலக அரங்கில் தன் நாட்டிற்காகப் பெருங்குரல் எடுத்து முழங்குபவன் கவிஞன் என்பார் இரசூல் கம்சதோவ். இந்த இலக்கணத்தின் இலக்கியமாகக் கவிஞர்கள் காலந்தோறும் தோன்றிக் காலமெல்லாம் வாழுகின்றனர்.

தமிழ் மண்ணின் குரலை எதிரொலித்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும், சோவியத் ஒன்றியத்தின் கீழ் தன்னாட்சி பெற்று விளங்கும் தாகஸ்தானின் (Dhagestan) குரலினை உலகமெலாம் ஒலிக்கச் செய்த மக்கட் கவிஞர் இரசூல் கம்சதோவும், இருபதாம் நூற்றாண்டு பெற்றெடுத்த இணையற்ற கவிஞர்கள் ஆவர். தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு வாழப் போர்ப்பரணி பாடி மறைந்தவர் பாரதிதாசன். தன் அவார் மொழி, தன் தாகஸ்தான், தன் இரஷ்ய நாடு என உயிர்த்துடிப்புடன் கவிதைகள் பாடி நம்மிடை உலவி வருகின்றார் இரசூல் கம்சதோவ். மொழியுணர்வு, நாட்டுப்பற்று, சமுதாயம் என்ற முப்பெரும் கூறுகளில் இருபெரும் கவிஞர்களும் பெரிதும் ஒன்றுபடுகின்றனர். கவிஞர்கள் வாழ்கின்ற சமுதாயம், காலம், பண்பாடு ஆகியவை, அவர்கள் படைப்புகளில் பாதிப்பினை ஏற்படுத்துவன. ஆயினும், மாறுபட்ட சூழல்களில், வேறுபட்ட மொழிகளில், படைப்புகள் அமையினும் 'மானுடம் பாடிகளின்' இதய வெளியீட்டில், ஒற்றுமைப் பண்பு ஒலிப்பது இயல்பானது என்பதை ஒப்பியல் ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன.

பாரதிதாசன் படைப்புகளிலும், இரசூல் கம்சதோவின் கவிதைத் தொகுதிகள் இரண்டு, 'என் தாகஸ்தான்' என்ற உரைநடை நூல் தொகுதிகள் இரண்டு, அவர்பற்றி வெளிவந்த குறிப்புகள், 1980 சோவியத் லிட்டரேச்சர் தாகஸ்தான்பற்றிய வெளியீடு ஆகியவற்றிலும் காணலாகும் மொழி, இனம், நாடு, சமுதாய நலம்பற்றிய இருபெருங் கவிஞர்களின்

சிந்தனைகளை இக் கட்டுரை 'அறிமுகம்' என்ற அளவில் சில பக்க வரையறைக்குட்பட்ட எல்லையில் நின்று எடுத்துரைக்கின்றது.

தமிழ்க்கவிஞர் வாழ்நிலை

பாரதிதாசனின் முப்பெரும் பார்வைகளாக, மொழி உணர்வு, வகுப்புத் தேசியம், பொதுவுடைமைத் தத்துவம் என்ற மூன்றனையும் குறிக்கலாம். அவர் வாழ்வில் இவை பெறும் இடங்கள் கவிதைப் படைப்புகளைக் கணித்து முடிவுகள் காண வழி வகுக்கின்றன. விடுதலைக்கு முன்னர் தோன்றி, சுதந்திர மண்ணில் வாழ்ந்து மறைந்தவர் புரட்சிக் கவிஞர். காலம் கவிஞர்களை மாற்றும். மாறாமல் இருக்கும் கவிஞர்களும் உண்டு. பாரதிதாசனைப் பொறுத்தவரையில் காலத்துக்கு ஏற்ப வாழ்ந்தவர் என முடிவு செய்தலே சாலப் பொருந்தும் என்பர்.[1]

விடுதலைப் போராட்டகாலத்தில் பாரதியின் தாக்குறவால் கதர்ப்பாட்டுப் பாடிய கவிஞர், பின்னர் நாட்டுத் தேசிய உணர்வினை இழந்து வகுப்புத் தேசியத்தினை வளர்த்தார். விடுதலை பெற்ற நாட்டில், பொதுவுடைமைக் கண்ணோட்டத்தில் உலக தேசியம் பாடினார். பாரதிதாசன், சுயமரியாதை இயக்கக் கவிஞராக மலர்ந்தபோது, தமிழ் நாடு, திராவிடநாடு, முதாயசச் சீர்திருத்தம் என்று சார்புநிலைக் கவிஞராகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார். இவை எல்லாவற்றிலும் மேலாக உயர்ந்து, தனித்து நின்ற உணர்வு, மொழி, இனம் பற்றியதேயாகும். பாரதியின் வழியில் அடியெடுத்து வைத்தாலும், அவரின் நிழலாக மாறாது, பாரதிதாசன் பரம்பரையை உருவாக்கிப் புதுமைநெறி கண்ட புரட்சிக் கவிஞராகக் காட்சியளிக்கின்றார்.

அரசியல் விடுதலை பெற்ற நாடு, சமுதாயப் புன்மைகளினின்றும் விடுதலை வேண்டி நின்றது. தமிழகச் சமுதாய அமைப்பு நிலை, காலநிலை, வடவர் எதிர்ப்பு, இந்திமொழி எதிர்ப்பு, சாதி-சமய-பார்ப்பனர் எதிர்ப்பு இவையெல்லாம் பாரதிதாசன் கவிதை வாழ்வினை நிர்ணயம் செய்த சக்திகளாக அமைந்தன. ''தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ் நாட்டிற்கும் ஆக்கம் தராத சக்தி அரசியலில் வகுப் புணர்ச்சியை வளர்த்து வந்தது கண்டு, அரசியல் விடுதலையைவிட, இந்தப் பாரம்பரியத் தமிழ்ச் சமுதாய விடுதலையே முதன்மையானது''[2] என்று போர்க்குரல் எழுப்ப வழி வகுத்தது. வகுப்புத் தேசியம் பாடியதுகூடத் தமிழர் மேம்பாடு அமையவேண்டும் என்ற ஆவலின் அடிப்படையில் அமைந்ததாகிறது. காதற் கவிதைகளையும் கவிஞர் சீர்திருத்தக் குரலிலேயே பாடவேண்டிய தேவையும் ஏற்பட்டது. சமுதாயச் சீர்திருத்த மறுமலர்ச்சிக் கவிஞராகப் பாரதிதாசன் விளங்கியமைக்கு அவர் வாழ்ந்த காலமும், சூழலும், சார்பும் அடிப்படைக் காரணங்கள் என்பது இங்குப் பெறப்படுகின்றது.

தமிழகச் சூழல் மட்டுமன்றி, இந்திய நாட்டு அமைப்பு முறை, மொழிகளின் பெருக்கம்—சிலவற்றின் ஆதிக்கம், அடிமை மண்ணில் வேரூன்றிய மரபுகள், பல்வேறு இனங்களின் பண்பாட்டுக் கலப்பின் இயைபுகள், முரண்பாடுகள், மொழிக் கலப்பினால் விளைந்த தீமைகள், சாதி-சமயப் பூசல்கள், இனவுணர்வுப் போராட்டம் — இவற்றினூடே தன் இனம், மொழி, நாடு காக்கப்பட வேண்டும் என்ற பாதுகாப்பு உணர்ச்சி கவிஞருக்கு மிகுந்து இருந்தது. திராவிடநாடு என்ற எல்லைகூட, நாளடைவில் தமிழ்நாடு எனச் சுருங்கிவிட்டது. கவிஞர் சார்ந்துகொண்ட இயக்கம், இவரை வளர்க்கவும், அதன் போர்க்குரலாக இவர் ஒலிக்கவுமான சூழலையும் இங்குச் சிந்தித்துப் பார்த்தல் நலம். இந்தப் பின்னணியில்தான், கவிஞர் பாரதிதாசன் மொழிமீது கொண்ட காதலை அவர்க்கு முன்னும் பின்னும் யாரும் வெளியிடாத நிலையில் பாடிக் காட்டினார். இன எழுச்சிக்காகவும் சமுதாய சீர்திருத்தத்திற்காகவும் தம் எழுத்துத் தொழிலைப் பயன்படுத்தினார். தமிழ்நாடு உரிமைபெறக் கனவு கண்டார். 'அழகின் சிரிப்பை'யும் 'குடும்ப விளக்கை'யும் பாடிப் புனைவியல் கவிஞராக நின்றவர்தாம், கொலைவாளினை எடுக்கும் போர்க் கவிதை பாடும் புரட்சிக்கவியாகவும் கோலம்கொண்டார். அவர் வாழ்ந்தகாலத் தமிழ்ச்சமுதாயம் அவரை உருவாக்கிய நிலை இது. காலத்தின் தேவைக் கேற்பத் தன்னை உருவாக்கிக்கொண்ட கவிஞர் நிலை இது எனவும் கொள்ளலாம்.

இரஷ்யக் கவிஞர் சூழ்நிலை

''தாகஸ்தான் என் மண். என் கவிதையின் உயிர் நாடி. என் தாய்த் திருநாட்டின் கவிதைக் களஞ்சியத்திற்கு என் கவிதையின் ஓர் அடியைச் சேர்த்தாலும் போதும்'' என்ற உரிமைக் குரல் எழுப்பி, மொழி, நாடு, உலகம் என்ற விரிந்த பெருவெளிகளில் வலம் வருகிறார் இரசூல் கம்சதோவ். 'மொழிகளும் இனங்களும் குவிந்து கொட்டிக்கிடக்கும் மலைநாடு' என்று பேசப்படுகின்ற தாகஸ்தான், இரஷ்யாவின் காகஸஸ் மலைத்தொடர்களின் ஒரு பகுதியில் அமைந்துள்ள மலைநாடாகும். தாகஸ்தான் என்றாலே மலைநாடு என்று பொருள். முப்பத்து மூன்று தேசிய இனங்கள், பல்வேறு மொழிகள் பேசுகின்ற இனங்கள் வாழ்கின்ற பகுதி. காலமெல்லாம் அந்நியர் படையெடுப்பில் வாளெடுத்துப் போர் புரிந்து, நாட்டு உரிமை காக்கும் வெறி கொண்ட இனங்கள் வாழும் பகுதி. ஜாரின் கொடுங்கோல் ஆட்சியினின்றும் இரஷ்யப் புரட்சிக்குப் பின் விடுதலை பெற்றுச் சோவியத் ஒன்றியத்தில் இணைந்து தன்னாட்சி பெற்ற நாடு தாகஸ்தான். வரிவடிவம் இல்லா வாய்மொழிகளைக் கொண்ட மலைநாடு,

---

[1] 'பாரதிதாசனின் புதிய பார்வை', அறிவோளி, அ., பக். 17.
[2] ஷை பக். 151.

விடுலைக்குப் பின்னர், இரஷ்ய மொழியின் வரிவடிவத்தினை ஏற்றது. ஆனாலும் அவரவர் மொழி உணர்வில், வளர்ச்சியில் தனிப் பெருமை கொண்டனவாய், அவ்வினங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த மலைநாட்டில் அவார் மொழி வழங்கும் பகுதியினைச் சார்ந்த இரசூல் கம்சதோவின் தந்தை ஸாடஸா கம்சாத், மலைநாட்டுக் கவிஞர் ஆவார். தந்தைவழிக் கவிபாடும் ஆற்றல் பெற்று, மலைநாட்டு எல்லைகளைக் கடந்து, உலகக் கவிஞர் வரிசையில், தம் மொழிபெயர்ப்புகள்வழி, செல்வாக்குப் பெற்றவராய் உயர்ந்து நிற்கின்றார் இரசூல். இவர் கவிதைகள், உரைநடை இலக்கியங்கள், மலைநாட்டுக்குரிய நாட்டுப் பாடல்கள், மொழி வழக்குகள், பழமொழிகள், மரபுநெறிகள் என்ற பாரம்பரியச் செல்வங்களையும், விடுதலை பெற்ற இரஷ்ய மண்ணின் புதிய சமுதாய மலர்ச்சிச் சிந்தனைகளையும் கருவாகக் கொண்டவை. சொந்த மண்ணின் உயிர்ப்போடு, இரஷ்யமொழிப் பற்றினையும் கொண்டு, மானுடம் தழுவிய பொதுமைப் பார்வையுடன் கவிதைகள் பிறந்தன. உலகின் பலமொழிகளிலும் இவர் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்தியநாட்டு அறிஞர் சாபுர் உதீன், அண்மையில் இரசூல்பற்றி ஆய்வுஏடு ஒன்றினை "The patriotic and International Elements in the works of the Dhagestan writer Razul Gamsotov" என்று படைத்தளித்துள்ளனராம்.[3]

"முந்தையர் மரபுகளினின்றும் பண்புகளைப் பெறாத இலக்கியங்கள்—அயல் மரபுகளை எளிதில் பின்பற்றும் படைப்புகள்—மரபு வழிப்பட்ட பழக்கங்களை மதிக்காதவை—சொந்த நாட்டிற்குரிய மொழி, பண்பாட்டினைப் போற்றாதவை—பிறந்த மண்ணிற்கு உண்மையாகாதவை—இவை நோய்ப்பட்ட இலக்கியங்கள் ஆகும். நாளடைவில் நைந்து மெலியும் இயல்புகொண்ட இவற்றின் பிணியைத் தீர்த்து உயிர் ஊட்ட எந்த மருந்தாலும் ஆகாது" என மிக அழுத்தமாக ஒரு நாட்டு இலக்கியத்தின் இயல்பினை, எதிர்மறையாகத் தெளிவாக்குகின்றார் இரசூல். உயிரினை, உணர்வினை வளர்ப்பது தாய்மொழி எனக் கண்ட இரஷ்யக் கவிஞர், மொழி, இனம், நாடுபற்றிய சிந்தனைகளில் தமிழ்க்கவிஞரோடு நெருங்கிய உறவுகொண்டவராய்த் திகழ்கிறார்.

பாரதிதாசன் பார்வை

மொழி: பாரதிதாசனின் முன்னோடியான பாரதியார் மொழிப்பற்று, நாட்டுப் பற்றிற்கு வித்திட்டவர் எனினும், பாரதம் அளாவிய நாட்டுத் தேசிய உணர்வு, இந்திய ஒருமைப்பாட்டுணர்வு அவர் படைப்புகளின் அடிநாதமாகும். ஆயின், இயக்கக் கவிஞராகிய பாரதிதாசன், தமிழ் மண்ணின், மொழியின் வாழ்வே உயிர் மூச்சாகக் கொண்டவர்.

"உடல் பொருள் ஆவியெல்லாம்—எங்கள்
இன்பத் தமிழ் மொழிக்கே தருவோம்"

என்பது அவர் உயிர்க்கொள்கை.

"நல்ல வளமான மொழியானது சிறந்த பாரம்பரியம் கொண்டதாய், ஆயிரக்கணக்கான ஆண்டுப் பழமை படைத்ததாய்த் திகழவேண்டும். அதன் பிறகே, அது பயில வழங்கும் தகுதி பெறுகிறது"[4] என்பார் இரசூல்.

"மனித வாழ்வினை இனிய நற்றமிழே
நீதான் எழுப்பினை"

என்பது பாரதிதாசனின் மொழித் தொன்மை பற்றிய முடிந்த முடிபாகும். இயற்கை உலகு படைக்கப்பட்டபோதே எழுந்ததும் தமிழ் அல்லவா?[5]

"மூதறிவுள்ளது வாழ்வு—நல்ல
முத்தமிழ் கற்பது வாழ்வு"[6]

என்று வாழ்வே தமிழாக, தமிழ் கற்பதே வாழ்வாகக் காண்கின்றார்.

மொழி வாழ, வளர்ந்திட, துறைதோறும் துறைதோறும் ஆக்கம் தரும் முயற்சிகள் நடைபெறவேண்டும் என விரும்பினார். தமிழின் பல்துறை வளர்ச்சிக்குத் 'தமிழ் இயக்கம்' தோன்ற வேண்டுமெனப் பாடினார். "சாவை விலக்கித் தமிழ்த்தொண்டு செய்யேனோ" என அவாவிற்று அவர் தமிழ் உள்ளம்.

மொழிப்பற்று :

மொழிக் காதல்வெறி முன்னி மூண்டு எழுந்த போது, அதற்கு எதிரான போக்குகள் தலை தூக்கியபோதெல்லாம், சிலிர்த்துப் போர்க்குரல் எழுப்பினார்.

"செந்தமிழ்க்குத் தீமை வந்த பின்னும்—இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ?"

என முழங்கினார்.

மொழிப்பற்று ஒவ்வொருவர்க்கும் இருத்தல் வேண்டும் என்பதனை,

"கமழும் தமிழினை உயிரென ஓம்பு
காணும் பிறமொழிகளோ வெறும் வேம்பு"

என்று முடிவு கட்டுகின்றார்.

---

[3] Soviet Literature 1980, p. 6.
[4] 'My Dhagestan', Razool Gamsotov, p. 69.
[5] 'அழகின் சிரிப்பு', பாரதிதாசன், தமிழ், பாடல் 1.
[6] 'பாரதிதாசன் கவிதைகள்', 3ஆம் தொகுதி, பன்மணித் திரள், பக். 159.

தமிழ் வாழ்ந்தால் தமிழர் வாழ்வர்; தாழ்ந்தால் தமிழினம் தாழும்.

''தாழ்ந்திடும் நிலைதனில் உனை விடுப்பேனோ
தமிழன் எந்நாளும் தலை குனிவேனோ?''

என்பது அவர் உயிர்ப்பாட்டு.

நாடு: 'தமிழாகிய உயிர் தழையும் விழுமிய தமிழ் நாடே' என்று அன்னை நாட்டின் அழகுகளைப் பாராட்டிப் பாடுவார். குமரி முதல் வேங்கடம் வரை பரந்த நாட்டின் வளங்களைக் காட்டி மகிழ்வார். சிலகாலம் தமிழகம் இணைந்த வளமார் திராவிட நாட்டின் சிறப்பினைப் பாடியும் களித்தார்.

சமுதாயச் சிந்தனைகள்

பாரதிதாசனின் கனவு, எல்லார்க்கும் எல்லாம் என்ற பொதுவுடைமைச் சமுதாயத் தோற்றமாகும்.

''உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகழ்வேன்; உடைமை மக்களுக்குப் பொது''

என்று அறிவுறுத்தினார்.

உலகச் சமத்துவம் விழைந்த கவிஞர், நல்வாழ்வுச் சமுதாயம் வளரக் கொலைவாளினை எடுக்க வேண்டும் எனக் கூறவும் தயங்கவில்லை. தமிழ் மண்ணிற்கே உரிய சாதிப்பிணக்குகள், விதவைக் கொடுமை, குழந்தைமணக் கொடுமை, பெண்ணுரிமை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போர்க்கவிதைகள் பாடினார்.

மொழி, இனம், நாட்டு எல்லை கடந்து மானுடம் பாடிய சிறப்பினையும் மனங்கொள்ள வேண்டும்.

''அறிவினை விரிவு செய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்து கொள்! உன்னைச் சங்கமமாக்கு!
மானிட சமுத்திரம் நானென்று கூவு''

எனப் பாடினார்.

பாரதிதாசன், இரசூலைப்போல உரைநடை இலக்கியங்களைப் படைப்பதில் ஈடுபாடு காட்டவில்லை. உரைநடையினும் கவிதையில் பாடுவதே எளிமை என்பது அவர் கொள்கை. எளிய நடையில் தமிழின் மேன்மையை உணர்த்தலாம் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த அளவில் பாரதிதாசனின் படைப்புகள் வழி அவர் உள்ளம் காண்கிறோம். விரிவஞ்சி, சிலவே சுட்டப்பட்டுள்ளன.

இரசூல் கம்சதோவ் பார்வை

கவிதைகள் படைப்பதோடு நின்றுவிடாமல், உரைநூல்கள் வாயிலாக, மொழி, நாடு, இலக்கியம், திறனாய்வு என்று பல்துறைச் சிந்தனைகளை இரசூல் வெளியிடக் காணலாம். புதுமைக் கோட்பாடுகள் சில பெறப்படுகின்றன.

''இதயத் தீயினை மூட்ட இரவல் நெருப்புக் கேட்பாருண்டோ?''—இது இரசூலின் கேள்வி. எனவே, மொழியுணர்வு இயல்பாக எழுவது. மக்கள் தம் புலமைத் திறத்தால் பன்மொழிகளைக் கற்கலாம். ஆனால், தம் தாய்மொழியினை விட்டு, வேற்று மொழி நாடுவோரை நினைத்தால், 'அவார்' மொழி கதைபோன்றுதான் அவர் நினைவில் தோன்றுகிறதாம்: ''நரிபோல வாலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சென்ற ஆடு, தன் கொம்பினையும் இழந்து மீண்டதாம்.''

உலகம் தோன்றுவதற்கு முன்பே கவிஞன் தோன்றிவிட்டான் என்பது இரசூலின் நம்பிக்கை. மொழியினை வாழ்விக்க வந்த கவிஞன் படைப்புகளில் இதயத்தினைச் சென்று தடவாத சொல் ஒன்றுகூட வெளிப்படக்கூடாது என்பார்.

''என் நாட்டு மொழி திறமற்றது என்று யார் வேண்டுமானாலும் சொல்லட்டும். நான் எதனையும் என் மொழியில் வெளிப்படுத்த முடியும். என் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும்வெளிப்படுத்த வேற்றுமொழியினை நாடவேண்டிய தேவை எனக்கில்லை''[7] என்று தன் தாய்மொழியின் ஆற்றல் பற்றிச் செம்மாப்புடன் பேசுவார் இரசூல்.

மலைநாட்டுச் சுடுசொற்கள் எவை தெரியுமா? ''அன்னை பேசும் மொழி உன் பிள்ளைகளுக்குத் தெரியாமல் போகட்டும்'', ''உன் பிள்ளைகளுக்குத் தாய்மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர் கிடைக்காமல் செய்வாராக, அல்லா''. தாகஸ்தான் பகுதியினைச் சார்ந்தவன் இத்தாலிக்குச் சென்று தன் தாய்மொழியில் பேசுவதை விட்டுவிட்டான் என்று கேள்விப்பட்ட மலைநாட்டு அன்னை ஒருத்தி, ''நான் கற்றுத் தந்த மொழியினை மறந்தவன் செத்தவனே'' எனத் தலையில் முக்காடிட்டுக்கொண்டாளாம். இந்த எண்ணம் வேரோடிய மண்ணில் பிறந்த இரசூல் பாடுகிறார்:

''சாவின் நுனியில்
நான் தளர்ந்திடும்வேளை
எது எனைக் காக்கும்?
மருத்துவன் மருந்தா?
இல்லை............
என் அன்னை மொழிதான்.

[7] 'My Dhageston', Razool Gamsotov, p. 54.

ஏனை மொழிகள்
பேசுவோர் பிணிதனை
அவரவர் வழி
அவை போக்கட்டும்.
ஆனால்............
நாளை என் அவார் மொழி
அது அழியும் என்றால்
இன்றே சாவு
எனை அணுகிடும் தானே.''

(But if tomorrow Avar die
I'd rather die to-day.)

'நைந்தாய் எனில் என் வாழ்வு நைந்தே போகும்' என்ற தமிழ்க்கவிக் குரலையன்றோ இங்குக் கேட்கின்றோம்.

நாடு: பிறந்த மண்ணின் பெருமையினைப் பேசும் போது, தன் தாகஸ்தான் மண்ணே, எண்ணங்கள் உருவாகும் ஊற்று—வாழ்வின் ஆசைகள்—வளர்ந்த கூடு—ஆடிய தொட்டில்—உரம் ஊட்டிய சாலை என்பார். 'என் சொந்த மண்ணே என் கவிதையின் பாடுபொருள்' என்று பெருமிதமாகக் கூறுவார். 'ஒவ்வொரு கவிதையிலும் என் பிறந்த மண்ணினைப் புதிதாகப் புரிந்து கொள்கிறேன். புதிதாகக் காதலிக்கிறேன். என் தாகஸ்தான் எல்லையற்றது—அழியாதது—முடிவில்லாதது' எனக் கூறும் இரசூல் உலக நாடுகளின்முன் தன்னைத் தாகஸ்தானின் பிரதிநிதியாக வெளிப்படுத்துவதில் பெருமைகொள்கிறார். இரசூல் என்ற சொல்லிற்கே பிரதிநிதி என்பதன்றோ பொருள்?

சமுதாயச் சிந்தனை

கவிஞன் காலத்தின் நிழலாக இல்லாமல் 'பற்றிக் கொள்ளும் நெருப்புப் பொறியாக, ஒளியின் மூலமாக இருக்க வேண்டும்' என்பது இரசூலின் கொள்கை. 'நான் கவிதைக்கு அடிமை' என்று கூறும் கவிஞர் தாம் காணும் உலகம் எப்படி அமைய வேண்டும் என்பதைக் காட்டுவார்:

விதியே............
என்னிடம் அன்பு கொண்டாய்.
நான் குருடனுமில்லை.
பைத்தியமா? இல்லவே இல்லை.
ஆயின்............
உலகில்
ரொட்டித் துண்டின்
விலை மலிவு பெற...........
மனித உயிர்
மதிப்பின்றி உயர...........
இதுவே என் ஆசை.''

(Fate has been kind
I am neither blind nor mad
yet still desire
To see the world's bread lower priced
and human life priced higher)

சமுதாய மறுமலர்ச்சி பெற,

''கலைநயம் கனியும் பாட்டால்
கடுகேனும் பயனுண்டோ?
நிலையினைத் திருத்துதற்கே
நெருப்பினால் பாட்டு வேண்டும்''[8]

என 'நெருப்புப்பாட்டு' என்ற தலைப்பில் பாடுகிறார்.

பிற கவிதைகள்

இரசூல் உள்ளம் குளிர்ந்தபோதெல்லாம் உகந்து உகந்து பாடிய பாடல்கள் இனியவை; அழகியவை; பொருள் நலம் கனிந்தவை. 'உலகம் ஒரு கடல்', 'இரயில் பயணம்', 'உலகம் ஒரு புத்தகம்' என்பன போன்ற தலைப்புகளில் பாடல்களைக் காணலாம். உலகில் மூவகைப் பாடல்களே உண்டு. ஒன்று அன்னையின் தாலாட்டு. இரண்டாவது மகனை இழந்த அன்னையின் ஒப்பாரிப் பாட்டு. மூன்றாவது பிற பிற பாடல்கள் என்று பாடுகின்றார்.

இலக்கியச் சிந்தனைகள்

இரசூலின் 'என் தாகஸ்தான்' என்ற நூல் இரண்டு தொகுதிகளாகக் கிடைக்கின்றது. இவ்வுரை நடை இலக்கியம் கவிஞரின் திறனாய்வு உள்ளத்தை நாம் காண வழிவகுக்கின்றது.

பாடுபொருள்

''என் தாகஸ்தானே
என் பரந்த உலகமே
நீயே என் உயிர்
நீயே என் ஒத்திசை
நீயே என் புத்தகம்
நீயே என் பாடுபொருள்.''

கவிஞன் இதயத்து மகிழ்ச்சி கவிதையாக உருவாகும் போது உலகம் சிரிக்கிறது. இதய வேதனை பாடலாக வெளிவரும்போது துக்கத்தில் ஆழ்கிறது.

பாடுநெறி

''அறிவிலி வியப்பில் கூச்சல் இடுவான்
அறிஞன் வியப்பில் பொன்மொழி உதிர்ப்பான்
வசந்தம் வரும்போது கவிதை பாடுங்கள்
மழைக்காலம் வரும்போது கதைகள்
சொல்லுங்கள்''

[8] 'மலைநாட்டு மலர்கள் - இரசூல் கவிதைகள்', மொழியாக்கம், ம. லெ. தங்கப்பா,

என்பார் இரசூல். இலக்கணம் ஆளுகின்ற மொழியாக இல்லாமல் இலக்கணத்தை ஆளுகின்ற மொழியினை விரும்புகின்றார். கவிதை தம்மை உருவாக்குகின்றது, தாம் கவிதையை உருவாக்குவதாகக் கூறுவார். ''குதிரையில் ஏறி ஓடுவது கவிதை. மண்ணில் நடப்பது உரைநடை'' எனக் கவிதைக்கும் உரைநடைக்கும் இலக்கணம் சொல்கிறார். ''கதை சொல்ல முடியவில்லை என்றால் பாடு. பாட முடியவில்லை என்றால் கதை சொல்.'' உருவம் பற்றிக் கவலைப்படுவானேன்? சொல்லும்பொருளே காணத்தக்கது என்று குறிப்பிடுகின்றார்.

''தன் நடையை உருவாக்குதல்
தன்னை உணர்தல்''

இரண்டும் கவிஞனாதல் என்ற பொருளைத்தரும். ''புஷ்கின் போல நான் பாடக்கூடாது. இரசூல், இரசூலாகத்தான் பாடவேண்டும்'' என்கிறார். செயற்கைத் தன்மையின்றி இயல்பாக எழுத வேண்டும் என்று கூறும் கவிஞர், ''கவிஞனே கவிதையின் பிறந்தகம். அவன் இதயமே கவிதை வாழும் வீடு'' என முடிவு கொள்வார். கவிஞனுக்கெனத் தனிநடை இருந்தாலும் பிறந்த மண்ணின் மணம் கமழ அமைவதே சிறப்பு என்பது அவர் கொள்கை.

கவிஞன் பிறப்பு

யாராலும் கவிஞனை உருவாக்கிவிட முடியாது. கவித்துவம் இருந்தால் அவனே உருவாகிவிடுவான். இனிய புன்னகையிலும் துன்பக் கண்ணீரிலும் கவிதை பிறக்கும். வாழ்வுக்கு எல்லைகள் உண்டு; நிலையானதும் இல்லை. ஆனால், நம் கனவுகளோ எல்லையற்றவை. கனவுகள் இருக்கின்ற வரை கவிதைகள் உண்டு; கவிஞனும் பிறப்பான்.

கவிதைத் தொழில்

உழுதொழில் போலக் கவிதை பாடுதலும் தொழிலே; குருதி சிந்திப் பெற்ற வெற்றிகள் வெற்றிகள் போலக் கவிதைப் படைப்புகள் அமைகின்றன. மக்களின் குரலாக ஒலிக்கும் கவிஞன், மனித சமுதாயம் வாழத் தன் தொழிலை நடத்துகின்றான்.


திறனாய்வாளன்

''திறனாய்வாளனும் கவிஞனும் கவிஞர்களே. நான் கவிதை எழுதுகிறேன். திறனாய்வாளன் கவிதைகளைப்பற்றி எழுதுகிறான்'' என்று பேசுவார் இரசூல். திறனாய்வாளனுக்கு உண்மையினைக் கூறிடும் துணிவு வேண்டும். ''என்ன இருக்கிறது என்று சொல்லுங்கள். என்ன இல்லை என்று சொல்ல வேண்டாம்''—இரசூலின் அறிவுரை இது. ''நீங்கள் புரிந்துகொள்ள முடியாததை மற்றவர்க்குப் புரிய வைக்காதீர்கள். இல்லாததை இருப்பதாகப் பாவனை செய்யாதீர்கள். தெளிவான சிந்தனைகளைத் தெளிவான சொற்களாலேயே கூறுங்கள்'' என்று இரசூல் கேட்டுக்கொள்கிறார்.

நிறைவு

''நல்ல கவிதை, உன் அன்னைக்கு, சகோதரிக்கு, குழந்தைக்கு, கிராமத்திற்கு, நாட்டிற்கு என்று எங்கு வேண்டுமானாலும் பாடிக்காட்டுவதாக அமைய வேண்டும்'' என்று கவிதை இலக்கணம் காட்டுவார் இரசூல். புரட்சிக் கவிஞர் பாடல்களும், மக்கட் கவிஞர் பாடல்களும் மனித சமுதாயம் வாழ எழுந்தவை—மக்கள் மன்றத்தில் காலமெலாம் ஒலிக்கப்பிறந்தவை.

மக்கட் கவிஞர் இரசூல் கம்சதோவ் படைப்புகள் நமக்குப் புத்துணர்ச்சி தருகின்றன. வாழும் கவிஞராகிய அவர் ஓரிடத்தில் குறிப்பிட்டதுபோல ''எழுத்தாளனின் மிகச் சிறந்த புத்தகம் அவர் இன்னும் எழுதாதது. இனி எழுத இருப்பதாகும்''. இரசூலிடமிருந்து, இன்னும் இன்னும் சிறந்த படைப்புகளை எதிர்பார்ப்போம்.



மூங்கில் இலைமேலே...

வயல்வெளி மனிதர்களின்
உழைப்பை அலங்கரிப்பவை
வியர்வைத் துளிகளா?
அவர் உதிர்க்கும்
கவிதைத் துளிகளா?
மௌனத்தை
விடையாகப் பெறும் கேள்வி இது!

**மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே...**

ஏற்றம் இறைப்பவர்கள் இத்தோடு
பாடலை முடித்துக்கொண்டு
உண்ணப் போய்விடுகிறார்கள்.
பாடலின் சுவையில் மயங்கியிருந்த
கவிப்பெரு வேந்தன் கம்பன்...
பாடலை முழுமையாக்கச்
சிந்தனை செய்கிறான்...
அவன் சிந்தனை கருவுறும் முன்னதாகவே
உண்டு முடித்த அவர்கள்
ஏற்றம் இறைத்தபடி பாடத்தொடங்குகிறார்கள்..

**தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே!**

கம்பன் வியப்பில் ஆழ்கிறான்...
இது... வரலாற்றுச் செய்தியல்ல...
வாய்மொழிச் செய்திதான்.

என்பார் இரசூல். இலக்கணம் ஆளுகின்ற மொழியாக இல்லாமல் இலக்கணத்தை ஆளுகின்ற மொழியினை விரும்புகின்றார். கவிதை தம்மை உருவாக்குகின்றது, தாம் கவிதையை உருவாக்குவதாகக் கூறுவார். ''குதிரையில் ஏறி ஓடுவது கவிதை. மண்ணில் நடப்பது உரைநடை'' எனக் கவிதைக்கும் உரைநடைக்கும் இலக்கணம் சொல்கிறார். ''கதை சொல்ல முடியவில்லை என்றால் பாடு. பாட முடியவில்லை என்றால் கதை சொல்.'' உருவம் பற்றிக் கவலைப்படுவானேன்? சொல்லும்பொருளே காணத்தக்கது என்று குறிப்பிடுகின்றார்.

> ''தன் நடையை உருவாக்குதல்
> தன்னை உணர்தல்''

இரண்டும் கவிஞனாதல் என்ற பொருளைத்தரும். ''புஷ்கின் போல நான் பாடக்கூடாது. இரசூல், இரசூலாகத்தான் பாடவேண்டும்'' என்கிறார். செயற்கைத் தன்மையின்றி இயல்பாக எழுத வேண்டும் என்று கூறும் கவிஞர், ''கவிஞனே கவிதையின் பிறந்தகம். அவன் இதயமே கவிதை வாழும் வீடு'' என முடிவு கொள்வார். கவிஞனுக்கெனத் தனிநடை இருந்தாலும் பிறந்த மண்ணின் மணம் கமழ அமைவதே சிறப்பு என்பது அவர் கொள்கை.

கவிஞன் பிறப்பு

யாராலும் கவிஞனை உருவாக்கிவிட முடியாது. கவித்துவம் இருந்தால் அவனே உருவாகிவிடுவான். இனிய புன்னகையிலும் துன்பக் கண்ணீரிலும் கவிதை பிறக்கும். வாழ்வுக்கு எல்லைகள் உண்டு; நிலையானதும் இல்லை. ஆனால், நம் கனவுகளோ எல்லையற்றவை. கனவுகள் இருக்கின்ற வரை கவிதைகள் உண்டு; கவிஞனும் பிறப்பான்.

கவிதைத் தொழில்

உழுதொழில் போல் கவிதையும் ஒரு தொழிலே; குருதி சிந்திப் பெற்ற வெற்றிகள் போலக் கவிதைப் படைப்புகள் அமைகின்றன. மக்களின் குரலாக ஒலிக்கும் கவிஞன், மனித சமுதாயம் வாழத் தன் தொழிலை நடத்துகின்றான்.

திறனாய்வாளன்

''திறனாய்வாளனும் கவிஞனும் கவிஞர்களே. நான் கவிதை எழுதுகிறேன். திறனாய்வாளன் கவிதைகளைப்பற்றி எழுதுகிறான்'' என்று பேசும் இரசூல், திறனாய்வாளனுக்கு உண்மையினைக் கூறிடும் துணிவு வேண்டும். ''என்ன இருக்கிறது என்று சொல்லுங்கள். என்ன இல்லை என்று சொல்ல வேண்டாம்'' என்பது இரசூலின் அறிவுரை. உங்களால் புரிந்துகொள்ள முடியாததை மற்றவர்களுக்குப் புரிய வைக்காதீர்கள். இல்லாததை இருப்பதாகப் பாவனை செய்யாதீர்கள். தெளிவான சிந்தனைகளைத் தெளிவான சொற்களாலேயே கூறுங்கள் என்று இரசூல் கேட்டுக்கொள்கிறார்.

நிறைவு

''நல்ல கவிதை, உன் அன்னைக்கு, சகோதரிக்கு, குழந்தைக்கு, நண்பருக்கு, நாட்டிற்கு என்று எங்கு வேண்டுமானாலும் பாடிக்காட்டுவதாக அமைய வேண்டும்'' என்று கவிதை இலக்கணம் கூறும் இரசூல் போன்ற புரட்சிக் கவிஞர் பாடல்களும், மக்கள் கவிஞர் பாடல்களும் மனித சமுதாயம் வாழ எழுந்தவை—மக்கள் மன்றத்தில் காலமெலாம் ஒலிக்கப் பிறந்தவை. மக்கள் கவிஞர் இரசூல் கம்சதோவ் படைப்புகள் நமக்குப் புத்துணர்ச்சி தருகின்றன. வாழும் கவிஞராகிய அவர் ஓரிடத்தில் குறிப்பிட்டதுபோல ''என்னுடைய மிகச் சிறந்த புத்தகம் அவர் எழுத இருப்பதாகும்''. இரசூலிடமிருந்து இன்னும் சிறந்த படைப்புகளை எதிர்பார்ப்போம்.



பழந்தமிழரின் சில திறனாய்வு நெறிகள்

பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்

திறனாய்வு நெறி என ஒரு துறையினை மேனாட்டுத் தாக்கம் ஏற்பட்ட பின்பு, ஆங்கில மொழியில் உள்ள திறனாய்வு நெறிகளையொட்டித் தமிழ்ப் பேராசிரியர்கள் ஒரு கலையாக வளர்த்து வருவது யாவரும் அறிந்த செய்தி. இதுவரை இக்கலையையொட்டி வெளிவந்துள்ள நூற்கள் பெரும்பாலும் மேனாட்டு எண்ணங்களைத் தமிழில் தந்து அவற்றிற்குத் தமிழ் நூல்களில் சான்றுகள் காட்டுவனவாகவே அமைந்துள்ளன. ஆனால், நெடுங்காலமாக வாழ்ந்துவரும் சிறந்த இலக்கிய இலக்கணங்களைக்கொண்ட ஒரு மொழியில் அதற்கெனத் திறனாய்வு நெறிகள் இல்லாமலிருக்குமா எனச் சிந்திப்பது அறிஞர் கடமை.

இன்றைய தமிழரிடம் தமிழகக் கட்டடக் கலையைப்பற்றியோ, சிற்பக் கலையைப்பற்றியோ, சித்த மருத்துவம்பற்றியோ விரிவான நிலையில் தொன்றுதொட்டு வரும் நூல்கள் இல்லை. ஆனால் அதன் காரணமாக நமக்கு இவைகளைப்பற்றிய விரிந்த அறிவு இல்லையெனச் சொல்லவியலுமா? நீள, அகல, உயர அளவுகளைப்பற்றிய தெளிவும், கோணங்களைப்பற்றிய நுட்பமும், கோள்களின் போக்குவரவைப்பற்றிய காலத்தெளிவும் அறியாமலிருந்தால் இன்று உலகம் போற்றும் கோயில்களை அவர்களால் கட்டியிருக்கவியலுமா? ஆண்டு தோறும் குறிப்பிட்ட நாள்களில் ஞாயிற்றொளி வாயில்களைக் கடந்து குறிப்பிட்ட நேரத்தில் இறை வடிவத்தின்மீது விழுமாறு கட்டட அமைப்பைச் செய்ய வேண்டுமானால், அதற்குரிய கணக்கியலறிவில்லாமல் இயலாததன்றோ? விரிந்த அளவில் இன்று நம்மிடையே அவற்றுக்குரிய நூல்களில்லை என்பதால், அவர்களுக்கு அவ்வகையான நூல்கள் இருந்திரா எனக் கூறுவது பொருத்தமாகாது இன்று தமிழகத்திலுள்ள பல்வேறு கோயில்களையும் உருவச் சிலைகளையும் சிற்பங்களையும் ஓவியங்களையும் நன்கு ஆராய்ந்தால் அவை அவ்வாறு அமைவதற்கு அடிப்படையாக அமைந்த அறிவுகளையெல்லாம் அலசிப் பார்த்து அவர்களின் கொள்கைகளையும் கையாண்ட நெறிமுறைகளையும் கண்டு பிடித்து அவர்கள் கைக்கொண்ட முறைகளை நூல்களாக வெளியிடவியலும் என்பது என் கருத்து. அதேபோலப் பரந்த இலக்கியங்களைக் கொண்ட தமிழ் மொழியிலும் தனக்கென ஒரு திறனாய்வு மரபு இருந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை. அந்தத் திறனாய்வு நெறிகள் யாவை என்பதை விளக்கி இதுவரை தனியாகத் தமிழில் நூல் செய்தார் யானறிய எவருமில்லை. ஆகவே, அந்த உணர்வைத் தூண்டும்பொருட்டுப் பரந்துபட்ட இலக்கியங்களிற் காணப்படும் திறனாய்வு நெறிகளை நுணுகிப் பார்ப்பதற்கு ஏதுவாகச் சில கருத்துகளை இக் கட்டுரையில் எழுதத் துணிந்தேன்.

எந்தவொரு நூலை எடுத்துக்கொண்டாலும் அதில் மொழி, கருத்து என்ற இரு பிரிவுகளடங்கும். கருத்தைக் கூறுவதற்கு மொழி ஒரு கருவியாகும். ஆனால், கருவியைப்பற்றிய அறிவுத் தெளிவு, அதைப் பயன்படுத்தும் முறைகள் — திறன்கள் — இல்லையானால் அதனால் யாது பயன்? கருவி செவ்வையானதானாலும் அந்தக் கருவியைப்

பயன்படுத்துகின்ற நெறிகளைத் தெரியவில்லையானால், அக் கருவி பார்வைக்காக அமைகின்ற ஒன்றேயல்லாமல் பயனேதும் தராது. நல்ல வாள் ஒருவன் கையிலிருப்பினும் அதனையாளும் நெறியும் நெஞ்சுறுதிப்பாடும் இல்லையானால் அந்த வாளைக் கொண்டவனை எவ்வாறு வீரன் என முடியும்? 'பகையகத்துப் பேடி கைவாளால்' என்ன பயன்? அதனால் எந்த ஒரு நூலைக் கற்பதானாலும் அந்த நூலில் சொல்லப்படுகின்ற கருத்தைத் தெரிவிக்கின்ற கருவியாகிய மொழியின் தன்மைகளை— இலக்கணங்களைத் தெளிவாகத் தெரிந்திருந்தாலன்றி அந்த நூல் கூறும் கருத்துகளை உண்மையாகப் புரிந்துகொள்ளவியலாது. எனவேதான், எந்தவொரு நூலையும் ஆராய வேண்டுமானால் அந்த நூல் எழுதப்பெற்ற மொழியின் இலக்கணங்களைத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டுமென்று தமிழறிஞர்கள் கண்டார்கள். எந்தத் திறனாய்வாளனுக்கும் இது தேவைப்பட்டது. எனவே, மொழியின் இலக்கணங்களைத் தெளிவாகத் தெரிவது, திறனாய்வு செய்பவனுக்கு ஒரு அடிப்படைத் தேவையாகும். இதனை ஓர் நெறியாகக் கொண்டதனால்தான் தமிழ் இலக்கண இலக்கியங்களைத் திறனாய்வு செய்த தமிழறிஞர்கள் இலக்கணக் குறிப்புகளை ஆங்காங்கே காட்டி நூலாசிரியனின் உண்மைக் கருத்தைக் காட்ட முனைந்திருக்கிறார்கள். சான்றாகத் திருக்குறள் ஒன்றினைக் காண்போம்.

> ''பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
> மக்கட் பதடி எனல்.''

இக் குறளுக்கு உரிய பொருளைப் புரிந்துகொள்வதற்கு 'எனல்' என்ற சொல் உடன்பாட்டுப் பொருளிலும் எதிர்மறைப் பொருளிலும் வரும் என்கின்ற சொல்லமைப்பு ஆராய்ச்சியினைத் தெரியாத ஒருவன் புரியவியலாதல்லவா? இதேபோலப் பல இடங்களில் ஒரு சொல் நீர்மைக்காக வருவதை எடுத்துக்காட்டி உரையாசிரியர்கள் நூலாசிரியர் கருத்தை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறார்களன்றோ?

எனவே, திறனாய்வாளன் மொழியின் அழகுகளை இலக்கணங்களைத் தானறிவது மட்டுமல்லாமல் நூலைத் திறனாய்வு செய்யும்போது அதன் நுட்பங்களை விளக்கிக் காட்டி, நூலாசிரியன் மொழியைக் கையாளும் திறனைச் சுட்டிக்காட்டி, கற்போனுக்கு விமர்சனம் செய்வதை ஓர் அடிப்படை நெறியாகத் தமிழ் ஆய்வுகள் நமக்குக் காட்டுகின்றன. இவ்வாறாகத் திறனாய்வாளன் இம்முறையில் கையாளுகின்ற நெறிகளையும் நூல்களிலமைந்துள்ள பாங்கினையும் ஒரு தனி நூலாக எழுதுமளவிற்குச் செய்திகள் இருப்பதால் இதனைச் சுட்டிக் காட்டுவதோடு இக் கருத்து இத்துடன் நிற்கின்றது.

நூல் செய்பவன் — அதிலும் குறிப்பாக முதனூல் செய்பவன் — எவ்வாறிருத்தல் வேண்டுமென்பதைத் தொல்காப்பியம் ஒரு நூற்பாவில் அறிவிக்கின்றது.

> ''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதனூ லாகும்.''

திறனாய்வு நெறியில் நூல்களை முதனூல் என்றும் வழிநூலென்றும் சார்புநூலென்றும் பிரிக்கின்ற மரபைத் தமிழர் கொண்டிருந்தனர். அவற்றுள் முதனூலைச் செய்பவன் வினையின் நீங்கியவனாக, விளங்கிய அறிவினனாக இருத்தல்வேண்டும் என நூற்பா குறிக்கின்றது. ஒன்று எதிர்மறையிலும் ஒன்று உடன்பாட்டிலும் சொல்லப்பெற்றுள்ளதைக் கவனித்தல் வேண்டும்.

(1) விளங்கிய அறிவு என்ற தொடரின் நுட்பத்தையும் (2) வினையின் நீங்கி என்பதன் உள்பொருளையும் இங்கு விளக்குவது என் நோக்கமில்லை. ஆனால் இவ்வாறு அமைந்தவனைத்தான் முனைவன் எனத் தொல்காப்பியம் கூறுவது எண்ணத்தக்கது. தமிழில் முனைவன் கண்ட முதல் நூல் என்று இப்போது எதைக் கூற முடியும்? ஆகவே இது ஒரு கருதுகோளா என ஆராயத்தக்கது. முதல் நூலுக்குரிய இலக்கணங்களைச் சொல்லாமல் முதனூலாசிரியனுக்குரிய இலக்கணங்களைத் தொல்காப்பியர் சொல்லியிருப்பது ஏன் என்பதனையும் ஆராய வேண்டும். நூலாசிரியன் எவ்வாறு அமையவேண்டுமென்பதைத் திறனாய்வு செய்வோன் மனத்தில் கொள்வதற்காகவா இது கூறப்பெற்றுள்ளது?

தமிழிலக்கியங்களைத் திறனாய்வு செய்தவர்கள் எவருமே நூலாசிரியன்மீது குற்றங்காணாமல் அவன் உள்ளத்தைப் புரிந்துகொண்டு அவனுக்குப் பெருமை சேர்க்கின்றவாறே செய்திகளை எடுத்துரைத்திருப்பதை யாவருமறிவோம். இவ்வாறு ஏன் நூலாசிரியன் பக்கமாக இவர்களமைந்துள்ளார்கள் என்பதையும் சிந்திக்க வேண்டும். நூலாசிரியன் பிழைகள் செய்வான் என எண்ணிவிடுவாரானால், திறனாய்வு செய்வோர் எவரும் முற்றிய அறிவுடையாரல்லராதலால், தாம் அறியாதனவற்றையும் தமக்குப் புரியாதனவற்றையும் நூலாசிரியனின் குற்றமாகச் சொல்லிவிடக்கூடும். மேலும் நூலாசிரியனின் உள்ளத்தைப் புரிந்துகொள்வதற்கு முயற்சி செய்யாமலுமிருத்தல்கூடும். நூலாசிரியன் எவ்விதத் தவறும் செய்யமாட்டான் என்ற ஓர் அடிப்படைக் கருதுகோளை வைத்துக்கொண்டால்தான் ஆய்வு நெறி சிறக்கும். ஆனால் முதனூலாசிரியனல்லாத எவரையும் தவறமாட்டான் எனக் கருதுவது இவர்களுடைய ஆராய்ச்சி நெறியிலில்லை. எவன் ஒருவன் எவ்வாறு விளங்கிய நிலையில் ஆராய்ந்திருந்தாலும் அது முழுமையானது என்று நினைக்காமல் அந்தத்

திறனாய்வாளன் புரிந்துகொள்ளும் நிலையில் குறைகளிருக்கக்கூடும் என நினைந்துதான் எதனையும் சிந்திக்கிறான். அதன் காரணமாகத் தான் ஒரே நூலுக்குப் பல்வேறு உரைகளும்[1] திறனாய்வு நூல்களும் வந்துள்ளன.[2] எனவே முதல் நூலாசிரியன் குறை செய்யமாட்டானென்றும் எஞ்சியோர் குறை செய்வாரென்றும் ஓர் அடிப்படை நெறியை மனத்தில் வைத்துக்கொண்டுதான் திறனாய்வு செய்யவேண்டுமென்பது தமிழர் நெறியாக இருந்திருத்தல்வேண்டும்.

எந்த ஒரு நூலிலும் மூன்று பிரிவுகள் அடங்கும். (1) வடிவம்; (2) கருத்து; (3) அதைப் புலப்படுத்திய முறை. அவரவரின் பட்டறிவிற்கும் நூலறிவிற்கும் நுண்ணறிவிற்கும் செயலறிவிற்கும் நுழைபுலத்திற்கும் ஏற்றவாறு கருத்துகள், வடிவங்கள், புலப்படுத்தும் நெறிகளமையும். ஆனாலும் ஒருவன் தன் நுகர்வு வெளிப்பாட்டினை — தன் அனுபவத்தை — இன்னொருவன் அப்படியே கொள்வது என்பது இயலாதது. எனவே, தன் நுகர்வைத் திறனாய்வு செய்வது என்பது இயலாத நிலையில் அமைந்துவிடுகிறது. ஆகவே வாழ்க்கையைத் திறனாய்வு செய்து நூலாக வடித்திருக்கும் எந்த ஆசிரியனுடைய தன் நுகர்வு வெளிப்பாட்டை (அனுபவத்தை) இன்னொருவன் மறுக்கவியலாது. ஆகவேதான் நூலாசிரியன் அந்தத் தன் நுகர்வு வெளிப்பாட்டை (அனுபவத்தை)க் கொடுத்திருக்கும் வடிவத்தையும், அதனைப் புலப்படுத்தியுள்ள நெறிகளையும் ஆய்வாளர்கள் திறனாய்வு செய்கிறார்கள். நூலாசிரியனின் கண்ணோட்டமும் காலச்சூழலும் திறனாய்வாளனுக்குக் கிடைப்பது அருமையல்லவா? எனவே பெரும்பாலும் நூலாசிரியனின் கருத்துகளை மறுத்துச் சொல்லவோ திரித்துச் சொல்லவோ மாற்றிச் சொல்லவோ தமிழர் திறனாய்வு நெறி விடவில்லை. இதன் காரணமாகவும் நூலாசிரியன்மீது அவர்கள் குறை காணக்கூடாது என எண்ணியிருக்கலாம். காட்டாக, திருத்தக்கதேவர் கருத்தையோ கம்பன் கருத்தையோ ஏன் அக்கொள்கைகளிலிருந்தும் அடிப்படையிலேயே வேறுபாடு கொண்ட வீரமாமுனிவர் எதிர்க்கவில்லை? அதற்கு மாறாக அவர்களுடைய நூல்களில் நுழைந்து கற்று அவர்களுடைய புலப்படுத்தும் நெறியைப் பின்பற்றியிருக்கிறாரே! கிறித்தவ மதத்திற்குப் புறம்பான சைவ சமயத்தாரின் உயிர்நூலாகிய திருவாசகத்தைக் கிறித்து மதத்தில் ஊன்றிய பற்றுள்ள போப்பையர் போற்றுவானேன்? இவற்றை நன்கு ஆராயின் நூலாசிரியனின் கருத்து மீது ஏன் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லையென்பது புலனாகலாம்.

நூலாசிரியன் வீணாகவும் ஏதோ உணர்ச்சிவசப்பட்டும் சில சொற்களை அடுக்கியிருக்கிறான் என்று பின்வரும் பாடலைப் பார்த்தவுடன் சொல்லிவிடலாமா?

''கரும்பே தேனே யமிர்தே காமர்மணி யாழே
அரும்பார் மலர்மே லணங்கே மழலை யன்னம்மே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய் பூவாய் பிணை
மானே.''

—சிந்தாமணி, 2453

ஒரு பெண்ணைப் பார்த்துக் கரும்பு, தேன், அமிர்து, யாழ், அணங்கு, அன்னம், மயில், குயில், பாவை, பூவை எனப் பல்வேறு சொற்களால் அடுக்கியிருப்பதைப் பார்க்கும்போது உணர்ச்சிவயத்தனாய், ஆசை மீக்கூருதலினாலே இச் சொற்களுக்குப் பொருளேதும் கொள்ளாமல் தான் அருமையாகக் கருதிய பொருள்கள் எல்லாவற்றையும் அடுக்கிக் கூறியுள்ளான் என்று மேலோட்டமாகத் திறனாய்வு செய்வார் கூறக்கூடும். ஆனால், இந்த நூலாக்கியோனுடைய உள்ளத்தைத் தொட்டு இந்தச் சமுதாயத்தின் மரபுகளை யுணர்ந்து மொழியின் எழிலைக் கண்ட திறனாய்வாளன் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் விரிப்பதைப் பார்ப்பின் இப்பாடல் எவ்வாறு ஓர் ஓவியச் சிற்பமாக அமைந்துள்ளதென்பதையுணரலாம். பெண்ணைத் தேன் என்பானேன்? நல்லார் உறுப்பெல்லாங் கொண்டு இயற்றலின் தேன் என்கிறார் நச்சினார்க்கினியர். இதுபோல ஒவ்வொரு சொல்லிற்கும் பொருள் விரிப்பதை அறிஞர்கள் அங்குக் கண்டு வியந்திருப்பார்கள் எனக் கருதுகிறேன். ஆகவே நூலாசிரியன் குறை செய்யமாட்டான் என்பதனாலன்றோ நுழைந்து பார்த்து ஒவ்வொன்றுக்கும் நுண்ணிய விளக்கம் தர முடிகிறது. ஆதலால் தமிழ்த் திறனாய்வு நெறியில் இது ஒரு நல்ல கருதுகோள் அடிப்படை என்பதனை அறிஞர் ஏற்பர்.

ஒரு நூலுக்குத் தமிழ்த் திறனாய்வாளர்கள் இரண்டு அடிப்படைத்தன்மைகள் வேண்டும் என்று கண்டிருக்கின்றனர். ஒரு நூலைக் கற்பதனாலே கற்பவன் அறிவு பெறுதல் வேண்டும். 'கற்றனைத்து ஊறும் அறிவு'. ஆகவே அறிவை நல்காத நூல் எதுவும் நூலாக மதிக்கத்தக்கதில்லை. சிறந்த நூலென்பது ஏதோ ஒரு முறை கற்பதற்காக மட்டும் அமைந்ததன்று. பலமுறை கற்று அதில் மூழ்கி அறிவை எடுக்கத் தக்கதாய் அமைந்திருத்தல்வேண்டும். எவ்வாறு சட்ட நிபுணர் சட்ட நூல்களையெல்லாம் கற்றிருந்தாலும், அந்த நூல்களையெல்லாம் அடுக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது மீண்டும் மீண்டும் பார்ப்பதற்குப் பயன்படுத்துகிறாரோ அதைவிடப் பல மடங்கு இந்த நூல் உயர்ந்ததாகும். வாழ்க்கையின் நுகர்வறிவினையொட்டி அறிவு வளர்கின்றபோது நூலில் முன் காணப்பட்ட அறிவு இப்போது கற்கும்போது மேலும்

[1] திருக்குறள் — பல உரைகள்
[2] சிலப்பதிகாரம் — பல திறனாய்வுகள்

விளக்கமாவதை யாவரும் அறிவர். எனவே 'அறிதொறும் அறியாமை'யைக் காட்டுகின்றவாறு நூலின் தன்மையிருத்தல் வேண்டும். பொழுது போக்கிற்காக எழுதப்படும் நூல்களை அக்காலத் திறனாய்வாளர்கள் போற்றியதாகத் தெரியவில்லை. ஏனெனில், அவை நிலைத்து நிற்கக் கூடியனவல்ல. இதனைத் திறனாய்வு செய்வோன் அடிப்படையாக உணர்ந்துதான் எந்த நூலையும் ஆய்வு செய்தல் வேண்டும். இந்த அடிப்படைத் தன்மையை, நெஞ்சிற்கொண்டுதான் தமிழ்த் திறனாய்வாளர்கள் நூற்களை மதிப்பீடு செய்துள்ளார்கள். திருவள்ளுவர், 'நல்ல மனைவியோடு வாழுங்காலத்து மேன்மேலும் புதிய நுகர்வறிவைப் பெறுவதைப்போல ஒரு நல்ல நூலைக் கற்குங்காலத்தும் புதிய அறிவு கிடைக்கப் பெறும்' என்னும் கருத்தை மாற்றிக் குறளமைத்திருப்பது சிந்தித்தற்குரியது.

வெறும் அறிவை மட்டும் ஒரு நூல் நல்குமானால் அது ஏதோ செய்திகளைப் பட்டியல்படுத்தித் தருவதுபோல் அமைந்துவிடும். அதில் இன்பமோ அதற்கு மூலமான சுவையோ இல்லையெனில் அதனைக் கற்க வருவோர் இரார். அதனால் நல்ல நூலுக்கு அமையவேண்டிய இன்னொரு அடிப்படைத் தன்மை இன்பம் தருதல் ஆகும். அது கருத்தையொட்டியதன்று; சொல்லும் முறையையும் திறனையும் பெரும்பாலும் ஒட்டியதாகும். அவை போன்றவற்றை 'நயம்' என்கிறோம். எனவே, எந்த ஒரு நூலும் கற்குந்தோறும் சுவை முளைகளையுள்ளடக்கி இன்பக்கனிகளைத் தருதல் வேண்டும். நல்ல நண்பன் எவ்வாறு பழகப் பழக மென்மேலும் இனிமையுடையவனாக, கவர்ச்சியுடையவனாக, ஈடுபாடுடையவனாக அமைகின்றானோ அதைப்போல நவில நவில நூல், நயம் வழங்கும் என்ற கருத்தை மாற்றி, வள்ளுவர் அமைத்திருப்பது இங்குக் கருதத்தக்கது. எனவே திறனாய்வாளன் ஒரு நூலை மதிப்பிடுங்காலத்து அந்நூல் இன்பம் எவ்வாறெல்லாம் கற்பானுக்கு ஊட்டுகிறது என்பதனை விளக்கித் தந்தாக வேண்டும் என்பது தமிழர் நெறியாகும்.

ஆகவே நிலைபேறுடைய இலக்கியத்திற்குத் தேவையான இரண்டு அடிப்படைத் தன்மைகளைப் பற்றி நுண்மாண் நுழைபுலத்தால் எடுத்துக்காட்டி நூலை மதிப்பீடு செய்வது தமிழர் கண்ட திறனாய்வு நெறியாகும். அதனால் அறிவும் நயமும் ஒவ்வொரு நூலிலும் இருக்கின்ற தன்மையைத் திறனாய்வு செய்வோன் காட்டவேண்டும் என்பது பொதுத் திறனாய்வு நெறி என்பதில் ஐயமில்லை.

நூலைப் படிக்கின்ற எவர்க்கும் அதில் அறிவு இருக்கிறதா இல்லையா என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் கற்கும்போதே அவர்கள் அறியாமையும் நூலாசிரியரின் அறிவும் அவர்களுக்கு எளிமையாகத் தெரியும். ஆனாலும் தமிழ்த் திறனாய்வாளர்கள் நூலாசிரியர்களின் நுண்ணறிவினைச் சுட்டிக்காட்டி விரித்துரைத்து ஆங்காங்கே விளக்கியிருப்பதை நாம் பல்வேறு உரைகளிலும் காணலாம். இங்கு அறிவினை எடுத்துக்காட்டும் நெறிகளைப்பற்றி விரிக்கவில்லை.

இனித் திறனாய்வாளர்கள் நூலாசிரியன் புலப்படுத்தும் நெறி — நயம் — இன்பம் — முறை ஆகியவற்றைச் சீரும் சிறப்புமாக எடுத்து மொழியும் நிலை குறித்துப் பார்ப்போம். ஒருவன் நூல் செய்யும் போது எக்காரணங்கொண்டும் தேவையற்ற சொல்லைப் பயன்படுத்தக்கூடாது. அப்படிச் செய்வானேயானால் அவனை ஆசிரியரல்லன் எனக் கூறுவதோடுமட்டுமமைவதில்லை. அவனை இழிவாகவும் கருதினார்கள். 'பயனில்சொல் பாராட்டுவானைப் பதடி' என்றார்கள். மேலும் சொல்லைப் பயன்படுத்தும்போது பொருத்தமான, தக்க சொல்லைத் தெரிந்து அந்தச் சொல்லை எடுத்துவிட்டு வேறு எந்தச் சொல்லைப் போட்டாலும் பொருந்தாத நிலையில் சொல்லை எழுத்தில் இழைக்க வேண்டும். இதுகுறித்த வள்ளுவர் கருத்து எண்ணத்தக்கது.

> ''சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.''

இது பேச்சு வன்மையைக் குறிப்பினும் எழுத்து நெறிக்கும் ஏற்றதே. இக் குறட்கருத்து இலக்கியத் திறனாய்வாளன் கோல்ரிட்ஜ் கூறியதோடு ஒத்ததாகும். மேலும் கூறப்படும் சொல் படிப்போரை ஈர்ப்பதாகவும் தன் எதிரியும் விரும்பியேற்கக்கூடியதாகவும் அமைய வேண்டும். எனவே தமிழர் திறனாய்வு நெறியில் சொல் நிற்குமிடம், சொல்லின் பொருத்தம், சொல்லின் தெரிவு போன்ற தன்மைகள் திறனாய்வு செய்யப்பட வேண்டும் என்ற முறை காணப்படுகிறது. மேலும் திறனாய்வாளன் நூல் ஆசிரியன் தன் நுகர்வுணர்வை வெளியிடும்போது நயம்படச் சொல்வதற்குப் பல்வேறு அணிகளையும் சுவைகளையும் கையாண்டிருப்பதை எடுத்துக் காட்டுதல் இன்றியமையாதது. அவைகள் எவ்வாறெல்லாம் அமைந்தால், எவ்வெவ்வகையான அழகுகளைக் காட்டுமென்றும், எவ்வெவ்வகைச் சுவைகளையூட்டுமென்றும் விரிவான அளவில் நூல்கள் உள்ளன. அந்த நெறிகள் தமிழர் திறனாய்வு நெறிகளே ஆகும்.

தொல்காப்பியத்தில் பத்துக் குற்றங்களும் முப்பத்திரண்டு உத்திகளும் கூறப்பட்டிருப்பதைத் தமிழறிஞர் அறிவர். அவைகள் திறனாய்வு செய்யும் நெறிகள் என்பது என் கருத்து. ஓர் ஆசிரியன் கற்போனுக்குத் தெளிவு பிறக்குமாறு நிறைவாகச் சொல்லாமல் குறைவாகச் சொன்னால் அவன் எண்ணிய எண்ணத்தைக் கற்போன் அறிய இயலுமா? எனவே அது 'குன்றக் கூறல்' அல்லவா ஆகும்?

கற்போனுக்கு ஓரளவு அறிவிருப்பதனாலே அவன் தரமறிந்து அவனுக்குச் சில செய்திகளைச் சொன்னாலே புரியும். அவ்வாறிருக்க அவற்றை மிகையாக விளக்கிக்கொண்டிருப்பது 'மிகைபடக் கூற' லாமன்றோ? பல பக்கங்களில் எழுதும் நூலொன்றில் ஆசிரியனே மறந்து தான் பத்தாவது பக்கத்தில் சொன்ன கருத்தை நானூறாவது பக்கத்தில் கூறுவது குற்றந்தானே? அது 'கூறியது கூறல்' ஆகுமல்லவா? பெரிய காப்பியத்திலோ நாவலிலோ பல பாத்திரங்கள் படைக்கும்போது இரண்டு பாத்திரங்களுக்கு ஒரே பெயரைச் சூட்டினால் மயக்கம் வராதா? 'மயங்கக் கூறல்' குற்றம்தானே? இவ்வாறே தொல்காப்பியர் பல்வேறு குற்றங்களை எடுத்துக் காட்டியிருப்பது திறனாய்வு செய்பவன் ஒரு நூலில் இந்தத் தன்மைகளிருப்பின் அது சிறந்த நூல் ஆகாது என மதிப்பிட வேண்டும் என்பதற்கு வகுத்த திறனாய்வு நெறி. கட்டுரையின் அளவு கருதி சிலவே மிகச் சுருக்கமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் கூறும் முப்பத்திரண்டு உத்திகளும் திறனாய்வு நெறிகளே எனக் காட்டி நிறுவ இயலும். ஆயினும் இங்கு சிலவே சுட்டப்படுகின்றன. முதல் உத்தி 'நுதலியதறிதல்' ஆகும். திறனாய்வாளனுக்கு இது முதன்மையாக வேண்டற்பாலது. நூலாசிரியன் என்ன 'கருதி' இந்த நூலைச் செய்திருக்கிறான் என்பதை அறியவில்லையானால் எவ்வாறு மதிப்பீடு செய்ய முடியும்? எனவே, திறனாய்வாளன் நூலிலிருந்து அறியப்பட்டவற்றை நமக்குப் புரியுமாறு தெரிவித்தலும் ஒரு திறனாய்வு நெறியாகும்.

ஒரு நூல் செய்பவன் எல்லாச் செய்திகளையும் ஒன்றுவிடாமல் சொல்லியிருக்க வேண்டுமென்று திறனாய்வாளன் நினைக்கக்கூடாது. ஒன்றோ சிலவோ மொழிந்திருப்பானாயின் அதனோடொத்திருக்கின்ற சிலவற்றையும் திறனாய்வாளன் எடுத்துக் காட்டி ஆசிரியர்க்கு அவையும் ஏற்புடையனவே எனக் காட்டவேண்டுமேயன்றி அவன் அறியான் எனக் கொள்ளலாகாது. அந்த நெறியைத்தான்

> ''மொழிந்த பொருளோடு ஒன்ற—அவ்வயின்
> மொழியா ததனை முட்டின்று முடித்தல்''
> —தொல். 665

என்னும் உத்தியாகத் தொல்காப்பியம் கூறுகிறது. இவ்வாறே பல்வேறு உத்திகளும் திறனாய்வாளன் கைக்கொள்ளவேண்டிய திறனாய்வு நெறிகள் என்பதனை விளக்க இயலும். திறனாய்வு முறைகளில் பல முறைகள் இருக்கின்றன என்பதை அறிஞர் அறிவரானதால் அதனை இங்குப் பிரித்து எடுத்துக் காட்டவில்லை.

திறனாயும்போது இரண்டு வழக்குகளைத் தமிழர்கள் மனத்திற் கொண்டிருந்தார்கள். அவை உலகியல் வழக்கு, செய்யுள் வழக்கு என்பனவாகும். செய்யுள் வழக்கு என்பதைப் புலனெறி வழக்கு என்றும் கூறுவர். அதாவது நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கலந்த ஒன்றாம். ஆகவே, ஆராயும்போது உலக வழக்கு என்றும் செய்யுள் வழக்கு என்றும் எடுத்துக்காட்டுகின்ற போக்கினைத் தமிழ்த் திறனாய்வு நெறியில் பின்பற்றியிருக்கிறார்கள் எனச் சொல்லலாம். இலக்கியங்களை ஆய்வு செய்யும் அடியார்க்குநல்லார், நச்சினார்க்கினியர் போன்றவர்கள் ஆங்காங்கே உலக வழக்கினை அக்கால மரபு என எடுத்துக்காட்டியுள்ளமை குறிக்கத்தக்கது. காட்டாகச் சிந்தாமணியில் பதுமையாரிலம்பகத்தில் 'ஏழடி' (பாட்டு, 219) என வருந் தொடர்க்கு நச்சினார்க்கினியர் 'ஏழடி செல்வது ஒரு மரபு' எனச் சொல்வதைக் காண்க. எனவே, மரபுகளாக இருக்கின்றவற்றைப்பற்றித் திறனாய்பவன் தன் கருத்தைச் சொல்வதால் ஏதும் பயனில்லையென எண்ணி, அந்த மரபைச் சுட்டிக் காட்டுவதோடு மட்டும் நிறுத்துவது இயல்பாகத் தெரிகிறது. அதனால்தான் தொல்காப்பியத்தில் மொழி மரபு, தொகை மரபு, விளி மரபு, மரபியல் போன்றவை இடம்பெற்றுள்ளன போலும்.

அறிவு நல்க இன்பம் பயக்கும் முறையில் கூறப்படும் செய்திகள் யாவற்றிற்கும் தக்கதொரு வடிவம் இருத்தல் வேண்டுமென்பதனையும் திறனாய்வாளர்கள் மதிப்பிடும்போது கருதியிருக்கிறார்கள். ஆகவேதான் கருத்துக்கிசைந்த பாவங்கள் அமைவது குறித்து ஆய்வாளர்கள் எடுத்துப் பேசியுள்ளார்கள். யாப்பிலக்கணமே அதையொட்டியதாகும். இது குறித்துப் பல்வேறு ஆய்வுகளிருப்பதனால் விளக்கமாகக் கூறவேண்டிய தேவையில்லை என்பது என் கருத்து.

இதுவரை ஆய்ந்து காட்டி எடுத்து மொழிந்திருப்பதைக் கற்கும் எவரும் தமிழர்கள் தமக்கெனத் தனித்திறனாய்வு நெறிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற கருத்தை ஏற்று மேலும் இதனை விரிவான நெறியில் காண முயல்வர் என நம்புகிறேன்.

பயன்படுத்தப்பட்ட துணை நூல்கள் :

1. சிலப்பதிகாரம்—உரையுடன்
2. சீவகசிந்தாமணி— ,,
3. திருக்குறள்— ,,
4. திருவாசகம்— ,,
5. தொல்காப்பியம்— ,,

சமுதாய மொழியியல்

டாக்டர் முத்துச்சண்முகன்

மொழியை — அதன் ஒலி, இலக்கண அமைப்பு, பயன்பாடு இவைகளைச் சமுதாயம், பண்பாடு இவற்றுடன் இணைத்து ஆராய்வது சமுதாய மொழியியல். இங்கு மொழியியல் கோட்பாடுகளும் சமுதாயவியல் கோட்பாடுகளும் பயன்படுகின்றன. ஒன்றுக்கொன்று துணையாகவும் ஆதாரமாகவும் அமைகின்றன.

மொழியாராய்ச்சி தொடக்க காலத்தில், சென்ற நூற்றாண்டில், நூல்களைக் கருவியாகக் கொண்டு, அவற்றிலுள்ள தரவுகளை ஆதாரமாகக் கொண்டு எழுந்தது. அப்பொழுது அதற்கு பீலாலஜி (Philology) என்று பெயர். மொழியியல் கோட்பாடுகள் தெளிவாக உருவாகாத அந்தக் காலத்தில் மொழியை இலக்கியம், பண்பாடு இவற்றோடு இணைத்தே ஆராய்ந்துவந்தனர். கால்டுவெல் திராவிட மொழியில் பெண்கள் அஃறிணைச் சுட்டுப் பெயர்களால் குறிப்பிடுவதால், பெண்களை அஃறிணைப் பொருள்களுக்கு ஒப்பவே அவர்கள் கருதினர் என்று திராவிட மொழி ஒப்பிலக்கண ஆராய்ச்சியில் கூறினார். இத்தகைய போக்குகள், தொடக்ககாலத்தில் இருந்தன.

இந்த நூற்றாண்டின் முதற்பகுதி வரை அமெரிக்க மொழியியல் ஆராய்ச்சியில் இருவிதப் போக்குகள் இருந்தன. மொழியாராய்ச்சி, மொழி இலக்கணம் ஓர் அமைப்பியல் நெறியாக (formal discipline), அறிவியல் நெறியாக, பிற இயலின் துணையின்றித் தனித்தியங்கும் நெறியாக ஏகதேசம் கணிதவியலைப் போன்று வளர்ந்தது. புளூம்பீல்டு போன்ற மொழியியலார் இப் போக்கின் — அமைப்பியல் போக்கின் முன்னோடிகள். இவர்கள் மொழியியலைச் சமுதாயப்படுத்துவதையும், உளவியலாக்குவதையும் புறக்கணித்துத் தாக்கவும் செய்தனர். இவர்களே பெரும்பான்மையினராகவும் அக்காலத்தில் இருந்தனர். அதே காலகட்டத்தில் ஒரு சிறுபான்மையினர் மானிடவியலோடு, மக்கட் பண்பாட்டோடு மொழியமைப்பை இணைத்து ஆராய்ந்தனர். போயஸ், க்ரோபர், சப்பீர், வார்ப் போன்றோர் இப் போக்கில் குறிப்பிடத்தக்கவர்கள். சப்பீர் - வார்ப் (Edward Sapir - Benjamin lee Whorf) கருதுகோள் இப்போக்கில் குறிப்பிடத்தக்க ஒன்று. 'ஒவ்வொருவனும் அவனுடைய தாய்மொழியின் இலக்கண அமைப்பின் அடிப்படையிலேயே உலகியலை வகுத்துக் காண்கிறான்' என்று இவர்கள் வகுத்த இக் கோட்பாட்டைப் பொதுவாகக் கூறலாம்.

எனினும், நெடுங்காலமாகச் சமூகவியலும் மொழியியலும் ஒன்றற்கொன்று தொடர்பின்றித் தனித்தனியாகவே வளர்ந்தன. அமைப்பியலார் இவ்வாறு தனித்து நின்று மொழியை ஆராய்ந்ததும் ஒரு வகையில் நன்மையே. இதனால், மொழியாராய்ச்சிக்கு நுட்பமான தெளிவான கோட்பாடுகளை உருவாக்கினர். இதன் பயனாக இப்பொழுது மொழியின் புறத்தே சென்று, அப் புறச்சூழல்களோடு மொழியைத் தொடர்புபடுத்தி ஆராய்வதில் நம்பிக்கையும், அவ்வாறு ஆராய்வதற்குரிய நெறிமுறைகள், கோட்பாடுகள் இவைகளை உருவாக்குவதில் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளன.

இதைப் போலவே, அமெரிக்கச் சமூகவியலாரும் தம் துறை ஆராய்ச்சியில் அமைப்பினையும் செறிவினையும் தேடி, ஆராய்ச்சிமுறைகளையும் கோட்பாடுகளையும் உருவாக்கினர். தொடக்ககாலத்தில் பண்பாடு, சமுதாய முன்னேற்றம், சமுதாயச் சிக்கல்கள் போன்றவைகளை ஆராய்ந்த இவர்கள், இவற்றைத் தவிர்த்துச் சமுதாய அமைப்பு, அவற்றை வகைப்படுத்தும் முறை ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். இதற்கு மொழி தேவை இல்லை. மொழி எப்பொழுதும் எவருக்கும் உரியது; அதனால், அதைப்பற்றிய சிந்தனை தேவை இல்லை; என்று இவர்கள் கருதினர். எனினும், அமெரிக்கச் சமுதாயவியலார் ஒப்பியல் ஆய்வினை மேற்கொள்ளாததால் அவர்கள் தம் ஆராய்ச்சிக்கு மொழியின் இன்றியமையாமையை உணரவில்லை. சமூகவியலார் பெரும்பாலும் ஒரே மொழியில் வல்லுநர்களாக இருந்தனர். முன்னேறும் நாடுகளைப்பற்றியும், சிறுகுழு, குழுவின் பண்பாடு, செயற்பாடு இங்கெல்லாம் இவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்திய பின்பே தங்கள் ஆய்விற்கு மொழியின் இன்றியமையாமையை இவர்கள் உணர்ந்தனர்.

இந்த நூற்றாண்டின் ஐம்பதுகளில் மொழியியலார் சமூகத்தால் கட்டுப்பட்டியங்கும் சில மொழிக் கூறுகளைக் கண்டனர். அதைப்போலவே சமூகவியலாரும் மொழியின் சமூகப் போக்கைக் காணத் தலைப்பட்டனர். அதே காலத்தில் அமெரிக்க மொழியியலார் நம் இந்திய மொழிகளின் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இந்தியச் சமூக அமைப்பும், சாதி - இன வேறுபாடுகளும், அவர்கள் பேசும் மொழியும் - கிளை மொழிகளும், ஒன்றற்கொன்று துணையாக இணைந்து செயற்படுவதைக் கண்டனர். இக் காலகட்டத்திலேயே சமுதாய மொழியியல் என்ற தனித்துறை தோன்ற ஆரம்பித்தது.

சமுதாய மொழியியலில், சமூக அறிவியல் (social sciences) என்ற பெரும் பிரிவில், அரசியல், மதம், சாதி, இடம், குழு, தேசியம், உளவியல், பண்பாடு ஆகிய இவற்றோடெல்லாம் மொழித் தொடர்பு கொண்டு செயற்படும் போக்கை ஆராய்கின்றோம். சமுதாய மொழியியலார் ஏற்றுச் செயற்படவேண்டிய மொழிச் சிக்கல்கள் பல.

மொழி எது? கிளைமொழி எது? இக் கேள்விக்கு மொழியியல் அடிப்படையிலேயே சமுதாயவியலின் துணையின்றி, விளக்கம் கூற முடியும் என்பது ஐயப்பாடே. தமிழ்மொழி என்று எதனைக் கூறுகிறோம்? எழுதும் தமிழ் மட்டும்தான் தமிழா? அப்படியானால் வெள்ளைக்காரன் தமிழ் பேசுகிறான் என்பதன் பொருள் என்ன? ஈழம், மலேசியா, சிங்கப்பூர் இங்கெல்லாம் தமிழ் பேசுகிறார்கள் என்பதன் பொருள் என்ன? சென்னைவாசியார் பேசும் தமிழும், திருநெல்வேலியார் பேசும் தமிழும் ஒன்றுபோல் இல்லையே. கொல்லிமலை மலைவாசிகள் பேசுந்தமிழ் எனக்குப் புரியவில்லை. ஈழநாட்டுக் கிராமத்தார், அங்குத் தீவுகளில் வாழ்வோர் பேசுவது தமிழா? மலையாளமா? எழுதுந் தமிழையே எடுத்துக்கொள்வோம். சங்கத் தமிழும் பாரதிதாசன் தமிழும் ஒன்றுபோல் இல்லையே. திரு. வி.க. தமிழும், மறைமலையடிகள் தமிழும் ஒன்றுபோலவா இருக்கின்றன? இவையெல்லாம் அடங்கிய ஒன்றே, அல்லது இவற்றையெல்லாம் அடக்கிய ஒன்றே தமிழ்மொழி. இதில் அடங்கிய ஒவ்வொன்றும் அம் மொழியின் இணைமொழி. இப்போக்கு உலகில் உள்ள ஒவ்வொரு மொழிக்கும் பொருந்தும்.

மொழி எது? கிளைமொழி எது? இணைமொழி எது? என்ற கேள்விக்கு இன்னும் விடை கூறவில்லை. சமூகம், அரசியல், பண்பாடு இவற்றின் துணை இல்லாமல் இவற்றைப் பிரித்துக் காண முடியாது. ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியவில்லை என்றால் இரண்டும் தனித்தனி மொழிகள் என்று கூறி விடலாம். இது மொழியின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு கூறும் விளக்கம். ஆனால், நடைமுறையில் இவ்வாறு இல்லை. இந்தியாவில் பேசப்படுகின்ற மொழிகள் எத்தனை என்பதற்கு இன்னும் தெளிவான விடை இல்லை. இந்தியும் உருதும் ஒரே மொழியா அல்லது இரண்டு மொழிகளா? இரண்டுவிதமாகவும் கூறுகின்றனர். அவரவர் சமுதாயம், அரசியல், நோக்கு இவற்றை அடிப்படையாகக் கொண்டு தம் முடிவுக்கு வருகின்றனர். ராஜஸ்தானி தனிமொழி என்பர் ஒரு சாரார்; இந்தியின் கிளைமொழி அது என்பர் மற்றொரு சாரார். இந்திய சுதந்திரத்திற்கு முன் பஞ்சாபி இந்தி மொழியின் கிளைமொழி என்று கருதப்பட்டது. அப்பொழுதெல்லாம் சீக்கியர் தம் வீட்டிலும் மதச் சடங்குகளிலும் தங்கள் பேச்சு மொழியைப் பயன்படுத்தினர். கல்விக்கூடங்களில் இந்தி, ஆங்கிலம், உருது இவைகளே மொழிகளாகக் கற்பிக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின்பு சீக்கியர் தங்களுக்கெனத் தனிப் பிரதேசமாகப் பஞ்சாபைப் பெற்றனர். ஹரியானா, இந்தி பேசும் பகுதியாகவும், பஞ்சாப், பஞ்சாப் மொழி பேசும் பகுதியாகவும் பிரிந்தது. பஞ்சாப் சீக்கியர் தாம் பேசிய மொழியைக் குருமுக எழுத்தில் எழுதினர். கல்விக்கூடங்களில் அவ்வெழுத்திலேயே அம் மொழியைக் கற்பித்தனர். இப்பொழுது பஞ்சாபி தனி மொழியாகக் கருதப்படுகிறது. அரசியல் கிளர்ச்சியும் சீக்கியர் பண்பாடும் இதற்குக் காரணம். ஆனால், பீகாரிலும், நேப்பாளத்தின் தென்பகுதியிலும் பேசப்படுகின்ற மைதிலி போன்ற சில வட இந்திய மொழிகள், தனி இலக்கண அமைதியுடையனவாயினும், அவற்றில் இலக்கியங்கள் தோன்றி இருப்பினும் தனிமொழிகளாகக் கருதப்படவில்லை.

டச், ஜெர்மன் இரண்டும் வெவ்வேறு மொழிகள் எனக் கருதப்படுகின்றன. இரண்டும் அவ்விரு

நாடுகளிலும் பேசப்படுகின்றன. ஆனால், டச் ஜெர்மனி எல்லைப் பகுதிகளில் வாழும் மக்கள் அவரவர் மொழியைப் பேசினாலும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதில் எத்தகைய இடர்ப்பாடும் இருப்பதில்லை.

இந்தியாவில் திராவிட மொழிகள், இந்திய ஆரிய மொழிகள், ஆஸ்திரோ ஏஸியாட்டிக் மொழிகள், திபத்தோ பர்மன் மொழிகள், இரானியன் மொழிகள் என்று ஐந்து குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் பேசப்படுகின்றன. எனினும், இந்திய எல்லைக்குள் பேசப்படுகின்ற இம் மொழிகளின் இலக்கண அமைப்பில் அவை வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்தவையாயினும், சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவை வேறு இடங்களில் வழங்கும் மொழிகளில் காணப்படவில்லை. இப் பண்புகள் எப்பொழுது எவ்வாறு தோன்றின? இந்த அரசியல் எல்லைக்குட்பட்ட மொழிகளில் இவ்வொற்றுமைகள் காணப்படுதற்குரிய சமுதாயப் போக்குகள் எவை?

சுற்றுப்புறச் சூழ்நிலைகள் — நிலம், பொழுது முதலியன அங்கு வழங்கும் மொழியில் பிரதிபலிக்கும். ஆங்கிலத்தில் 'snow' என்ற ஒரு சொல் வழங்குகின்றது. இச்சொல் குறிக்கும் பொருளை, எஸ்கிமோ மொழி, பல்வேறு சொற்களால் விளக்குகிறது. ஸ்னோவின் பல்வேறு வகைகளுக்கும் தனித்தனி பெயர்கள் இருக்கின்றன. 'Fine snow', 'dry snow', 'soft snow' போன்ற சொற்றொடர்களாலேயே ஆங்கிலத்தில் அவற்றை விளக்கவேண்டும். தமிழில் ஸ்னோ என்பதற்கு நேரான சொல் கிடையாது. பனி என்பது அதனைக் குறிக்காது. உறைந்திருப்பதைப் பனிக்கட்டி என்போம். மூடுபனி என்போம். எஸ்கிமோவின் தினசரி வாழ்வு, அவர் வாழ்க்கை முறை ஸ்னோவின் பல்வேறு நிலைகளைப் பொறுத்தது. ஆகையால், அதைப்பற்றி அவர்களுக்கு இன்றியமையாத விரிந்த அறிவு தேவை. ஆங்கில நாட்டில் 'ஸ்னோ' பெய்கிறது. ஆனால், அவர்களுடைய வாழ்க்கை முறை அதனையே அடிப்படையாகக் கொண்டு அமையவில்லை. தமிழ்நாட்டில் ஸ்னோவே கிடையாது. அதனால் அதற்கு ஒரு சொல்லும் தேவை இல்லை.

நமக்கு வெம்மை — கோடைக்காலம் எவ்வளவு கொடியதோ அவ்வளவு கொடியது ஆங்கிலேயர்களுக்குக் குளிர்காலம். கோடைக்காலத்தில் நம் நாட்டில் மரங்களில் இலைகள் உதிர்ந்துவிடும். பட்ட மரங்கள்போல் அவை காட்சியளிக்கும். புல் பூண்டுகள் காய்ந்து கருகிவிடும். வெயிலின் கொடுமையால் இறப்பவரும் உண்டு. இத்தகைய காட்சியை ஆங்கில நாட்டில் குளிர்காலத்தில் காணலாம். நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் மரங்கள் இலை இன்றி, பட்டவைபோல் காட்சியளிக்கும். புல் பூண்டுகள் கருகிக் காணப்படும். நமக்கு மழைக்காலம் தொடங்கியதும் (குளிர்காலம்) புல் பூண்டுகள் தழைக்கும். மரங்கள் தளிர்விட்டுப் பூக்கும். நம் மனம் கொடிய வெயில் காலத்தை மறந்து இக்காலத்தில் மகிழும். இதைப்போலவே ஆங்கில நாட்டில் வெயிற்காலம் தொடங்கியதும், புல் பூண்டுகள் தழைக்கும். மரஞ்செடி கொடிகள் தளிர்த்தும் பூத்தும் குலுங்கும். மக்களும் மகிழ்வர். எப்பொழுதும் கனத்த கம்பளி ஆடைகளுடன் குளிரில் விறைத்து நடுங்கி உலாவிய ஆங்கிலேயர் வெயிற் காலம் தொடங்கியதும் மெல்லிய ஆடைகளை அணிந்து உல்லாசமாகத் திரிவர். இளம் வெயிலில் படுத்துக் காய்வதில் அவர்கள் காணும் இன்பம் மிகப் பெரியது. இந்த இயல்பினை மொழியின் பயன்பாட்டிலும் காணலாம். ஆங்கிலத்தில் 'warm hearted' என்றால் அன்புடையவன் என்பது பொருள். இதனைத் தமிழில் சொல்லுக்குச் சொல் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தால் 'வெவ்விய நெஞ்சினன்', 'வெம்மையோன்' எனல் வேண்டும். தமிழில் இது கொடியவன் என்ற பொருளையே தரும். தமிழில் இதற்குப் பொருத்தமான சொற்றொடர் ஈர நெஞ்சினன். இதனை ஆங்கிலத்தில் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால் 'cold hearted man' எனல் வேண்டும். இது ஆங்கிலத்தில் கொடியவன் என்ற பொருளைத் தரும். சுற்றுப்புறச் சூழல் — காலம், மக்கள் விருப்பு, வெறுப்பு இவைகளெல்லாம் இந்தத் தொடர்களில் தெளிவாகத் தெரிகின்றன.

இதைப்போலவே சமூக அமைப்பும் — சூழ்நிலையும் மொழியில் வெளிப்படக் காணலாம். ஒரு சமூகத்தின் உறவு முறை, அம் மொழியில் வழங்கும் உறவு முறைச் சொற்களால் நன்கு விளங்கும். இதனாலேயே மானிடவியலார் உறவுமுறைச் சொற்களின் ஆராய்ச்சியில் மிகவும் ஈடுபட்டனர். ஆங்கிலமொழியில் உறவுமுறையைக் காட்டும் அடிப்படைச் சொற்கள், son, daughter, grand son, grand daughter, brother, sister, father, mother, husband, wife, grand father, grand mother, uncle, aunt, cousin என்பவற்றை மற்றச் சமூக அமைப்போடு ஒப்பிடும்போது சமூக உறவுகளை ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு விதமாக அமைத்திருப்பது விளங்கும்.

ஆங்கிலத்தில் 'brother', 'sister' என்ற இரு சொற்களையும் எடுத்துக் கொள்வோம். இவற்றிற்கு நேரான தனித் தமிழ்ச் சொற்கள் கிடையா. உடன் பிறந்தவர்கள் என்பது இரண்டு சொற்களால் ஆனது. இது 'brother's and sisters' என்பதைச் சுட்டும். 'brother' என்பதற்கு நேராக அண்ணன் தம்பி எனவும், 'sister' என்பதற்கு நேராக அக்காள் தங்கை எனவும் கூறவேண்டும். தமிழில் அண்ணனை, நீங்கள், அவர், அவர்கள் எனவும், தங்கையை நீ, அவள் எனவும் சுட்டிக்கொள்கின்றனர். ஆங்கிலத்தில் இவர்கள் அனைவரையும் ஒருவருக்கொருவர் 'you' என்ற சொல்லால் சுட்டிக்கொள்கின்றனர். தமது அண்ணன் தம்பிகளை 'he'

என்ற சொல்லாலும், அக்காள் தங்கையரை 'she' என்ற சொல்லாலும் சுட்டிக்கொள்கின்றனர். நமது சமூகம் உடன்பிறப்புகளை வயதின் அடிப் படையிலும் பிரித்துக் காட்டுகிறது. வயதில் மூத்த வர்களுக்கு மதிப்புக் கொடுத்துப் பேசுவது, பாராட் டுவது நமது பண்பாடு. அந்த மதிப்பை வயதில் குறைந்தவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. கொடுத் தால் அது அவர்களை அவமதிப்பதாக முடியும். தம்பியை அவர்கள் அண்ணன் என்று கூறுவாரா?

நம் மொழியில், அம்மாவின் உடன்பிறந்தவள் நமக்குச் சித்தி அல்லது பெரியம்மா; உடன்பிறந் தவர் நமக்கு மாமா. அப்பாவின் உடன்பிறந்தவர் சிற்றப்பா, பெரியப்பா; உடன்பிறந்தவள் நமக்கு அத்தை. இது நமது மணமுறையைக் காட்டும். மாமா வின் அல்லது அத்தையின் மகனையோ மகளையோ மணந்துகொள்ளலாம். ஆனால், இத்தகைய மண முறை ஆங்கிலேயர் சமுதாயத்தில் இல்லை. இத னால் அம்மா, அப்பா இவர்களுடன் பிறந்த ஆண்கள் எல்லாம் 'uncle', பெண்கள் எல்லாம் 'aunt'.

ஆஸ்திரேலியாவில் இஞ்சமல் (Njamal) என்போர் மலைவாசிகள். இவர்கள் மொழியில் மம (mama) என்பது ஓர் உறவுப் பெயர். ஆனால் இதனை ஆங் கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமானால் இடத் திற்குத் தகுந்தவாறு 'father', 'uncle', 'male', 'cousin' என்று மொழிபெயர்க்கவேண்டும். அதாவது, தந்தை பரம்பரையைச் சார்ந்த ஆண்கள் அனைவரையும் இச்சொல் குறிக்கும். அப்பாவும் அப்பாவின் உடன் பிறந்தவரும் ஆங்கில நாகரிகத்தில் வெவ்வேறு தகுதி யுடையவர். எனவே, இவர்களை 'father', 'uncle' என்று பிரித்துக் காண்கின்றனர். தமிழர்களோ ஆங் கிலத்தில் 'uncle' என்பதை பெரியப்பா, சிற்றப்பா என வயதில் அடிப்படையிலும் பிரித்துக் காண்கின் றனர். ஆனால், இஞ்சமல் உறவுப் பெயர்கள் பரம் பரையின் எல்லையை வேறுபடுத்திக் காட்டுகிறது. 'maili' என்ற சொல் அப்பாவின் அப்பாவையும், மகளின் அல்லது மகனின் மனைவியின் உடன்பிறந் தாளையும் குறிக்கும். இரண்டு பரம்பரை விலகின வர்களை இச்சொல் சுட்டுகிறது.

மக்கள் பண்பாடு சமுதாயத்தில் வெளிப்படுவது போன்று, சமுதாய மாற்றமும் மொழியில் வெளிப் படும். இஞ்சமல் மக்கள் ஆங்கிலேயர்களுடைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றத் தலைப்பட்ட தும் அவர்களுடைய உறவுமுறைச் சொற்களும் ஆங் கில வழக்கைப்போல மாற ஆரம்பித்தன. 1860 முதல் இன்று வரை ரஷ்ய மொழியில் உறவுமுறைச் சொற்களை வரலாற்று முறையில் ஆராய்ந்தால் இந்த உண்மை வெளிப்படும். 1881-ல் செர்ப் (Serf) விடுதலை ஏற்பட்டது. பின்பு முதல் உலகப் போர், ரஷ்யப் புரட்சி, விவசாயக் கூட்டுப்பண்ணை, இரண் டாவது உலகப் போர் இவைகளெல்லாம் அரசிய லிலும் சமுதாயத்திலும் ரஷ்யாவில் பெரும் புரட்சியை ஏற்படுத்தின. இவை, மொழியிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தின. சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலும் மனைவியின் உடன்பிறந்தான் சூரின் (shurin) என்ற சொல்லால் சுட்டப்பட்டான், இப்பொழுது இந்தச் சொல் மறைந்துவிட்டது. அதற்குப் பதில் 'bratzheny' மனைவியின் உடன் பிறந்தான் என்று வழங்குகிறது. அதைப்போலவே உடன்பிறந்தானின் மனைவி, முன்பு 'nevestha' என்று அழைக்கப்பட்டாள். இப்பொழுது உடன் பிறந்தானின் மனைவி 'zhenabrata' என்று அழைக் கப்படுகிறாள். அதாவது முன்பு முக்கியமான உறவு முறையாக இருந்து தனித்தனி சொல்லால் வழங் கிய இந்த உறவு முறைகள், இப்பொழுது அவற்றின் சிறப்பினை இழந்துவிட்டமையால் விளக்கச் சொற் றொடர்களால் குறிக்கப்படுகின்றன. ரஷ்ய சமுதாய மாற்றம் அடிப்படைச் சிறுகுடும்ப அளவில் குறுகி விட்டமையால் இம்மாற்றம் மொழியிலும் ஏற்பட்டது. முன்பெல்லாம் ஆண் வாரிசு முறை யில், பெரிய குடும்பம் ஒரே ஆண் (தந்தையின்) தலைமையில், ஒரே வீட்டில் வாழ்ந்தது. அந்தக் காலத்தில் உடன்பிறந்தானின் மனைவியும் குடும் பத்தில் ஒருத்தி. இப்பொழுது அக் குடும்பம் தனியாக வாழ்கிறது. இதைப் போலவே, 'yatrov' என்ற கணவனின் உடன்பிறந்தானின் மனைவியின் பெய ரும் மறைந்துவிட்டது.

இவற்றைத் தவிர, சமுதாய மதிப்புகளும் மொழி யில் பிரதிபலிக்கிறது. குறிப்பாக, ஒவ்வொரு மொழி யிலும் வழங்கும் குழூஉக்குறிச் சொற்களை ஆராய்ந் தால், இதைப்பற்றிச் சில செய்திகள் கிடைக்கும். சில பொருள்களை அல்லது பெயர்களை வெளிப் படையாக ஒருவருக்கொருவர் பேசும்பொழுதோ அல்லது கூட்டத்திலோ கூறுவது பண்பாடற்ற செய லாகக் கருதப்படும். தமிழ்ச் சமுதாயத்தில் ஆண், பெண் உறுப்புகளைக் கூறுவதோ, அவர்களுடைய உடலுறவைக் கூறுவதோ ஒழுக்கமற்ற செயல் எனக் கருதப்படுகிறது. ஒழுக்கத்தைப்பற்றிய சமூகக் கருத்துகளையே இவை காட்டும். ஆனால் இச் சொற்களை, செயல்களை, கல்லாதவர்கள் ஏசும் பொழுது பயன்படுத்தக் காண்கிறோம். படித்த வர்கள் தமிழில் சொல்லத்தகாத இச் சொற்களை ஆங்கிலத்தில் கூறிவிடுகின்றனர். ஒழுக்கமும் ஒரே சமூகத்தில் பல்வேறு நிலைகளில், பல்வேறு விதமாகப் பல்வேறு மக்களிடையே கருதப் படுவதையே இது விளக்குகிறது.

இவ்வாறு சமூகவியலும் மொழியியலும் பல்வேறு நிலைகளில் ஒன்றற்கொன்று துணையாக ஒன்றை ஒன்று பாதிப்பதாகக் காணப்படுகின்றன.

தமிழர் சமுதாய இயல்

சோ. இலக்குமிரதன் பாரதி

கலைச்சொற்கள்— வரைவுரை

நாள்தோறும் பெருகி வளரும் பற்பல கலைகளின் வெள்ளங்களில் 'அறிவியல்' (Science) என நாம் ஏற்பது வள்ளுவர் குறிக்கும் 'எண்' எனப்படும். 'ஏனை எழுத்தென்ப' என்றார். எண் கலைகளை 'இயற்கைக் கலைகள்' (Natural Sciences) என்னும்போது, அவற்றினுள் 'இயற்பியல்' (Physics), 'இயைபியல்' (Chemistry) என்பனவும், 'சமூகவியற் கலைகள்' (Social Sciences) என்னும்போது அவற்றினுள் 'சமூகவியல்' (Socialogy), 'உளவியல்' (Psychology), 'அரசியல்' (Politics) என்பனவும் அடங்கும்.

சொற்கள் தருவாய் நோக்கி வழக்கில் பொருள் பிறழ்தலும் உறழ்தலும் உண்டு ஆகலின், வரையறை கைகூடாதாயினும், அவை குறிக்கும் கருத்துகளை, புரிந்து பரிமாறிக் கொள்வதற்கு எண் இயல் கட்டுரைகளில் வரைவுரை தருதல் தேவை. அன்றேல் வீண் குழப்பங்களுக்கு இடமேற்படும்.

'சமூகம்', 'சமுதாயம்', 'குமுதாயம்', 'இனம்', 'குழுவினம்', 'குழுவனம்' போன்ற சொற்கள் ஒரே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. மக்கள் தம்முள்ளே உறவுகளுடைய தொகுதிகளைச் 'சமூகம்' (Soceity) என்றும், அவரிடையே 'நாகரிகம்', 'பண்புகள்', 'மொழி', கொள்கை,' 'உடைமை', 'சமயம்' போன்றவற்றில் ஒன்றையோ பலவற்றையோ தம்முள் பொதுவாகக் கொண்டிருக்கும் பான்மைபற்றி அத் தொகுதிகளைச் 'சமுதாயம்' (Community) என்றும் வரைவுரை கொள்ளல் ஏற்புடைத்து. தம்முள் 'நிலம்' அனையவற்றைப் பொதுவுடைமையாகக் கொண்டுள்ள தொகுதிகளைச் 'சமுதாயங்கள்' (Village Communities) எனும் வழக்கில் காணலாம். அத்தகைய பொதுமையின் நயங்கருதி தேசியக் கவி பாரதியார் ''முப்பது கோடி முகமுடையாள்—உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்; செப்புமொழி பதினெட்டு உடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்' எனப் பாரத சமுதாயத்தைப் பாடியது கவனிக்கத் தக்கது. 'சமுதாயம்', சமூகத்திற்குள் அடங்குவது. 'சமூகம்' என்பதின் பொருளாட்சி மிக விரிவானது.

எனவே, சமூகவியலில் தமிழ் மொழியைப் பொதுவாகக் கொண்ட தமிழர் சமுதாயத்தைப் பற்றி அறிவது கட்டுரையின் நோக்கு ஆகும். தமிழர்கள் தாம் பிறந்தும், வரித்தும் உரிமையாகக் கொள்ளும் நாட்டில் வாழ்வதுடன், பிற நாடுகளிலும் குடி ஏறி வாழுகிறார்கள். 'உலகத் தமிழர் மாநாடு' நடத்தப்படுவது இதை விளக்குகிறது. எனினும் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பது அவர்களுடைய பழம்பெரும் பண்பு. அவர்களுடைய சொந்த நாட்டின் பரப்பு நெடுகிலும் குறுகிக்கொண்டே வந்ததுடன் அதில் பிறமொழி பேசும் மக்கள் குடி ஏறி இருப்பது வரலாற்றுண்மை.

மக்கள், மாக்கள் (Society), ஒக்கல் (உறவினர்), இனம் (குறள் 452, 457; Race - பொதுவியல்புடையவர்), குலம் (குடும்ப வழித் தோன்றல்கள்—குறள் 956, 1019—பாரம்பரியம்), பால் (இயல் வேறுபாடுகள்), வருணம் (நிறம்), சாதி(வர்க்க வேறுபாடு—தொல். மரபியல், 43, 64 'நீர் வாழ் சாதி'),

அந்தணர் (குறள் - அறவோர்), ஐயர் (உயர்ந்தோர்), பார்ப்பனர், மணம் (களவு, கற்பு, சடங்கு), 'முறை' (வழக்கு, சட்டம், ஒழுங்கு) போன்ற சொற்களை வேண்டுமென்றோ, அறியாமையாலோ வரைவுரையின்றி எடுத்தாளுவதினால் ஏற்படும் குழப்பம் சமுதாய இயலில் இடர்ப்பாடுகளை விளைவிக்கின்றன.

தமிழர் சமுதாய நிலை

தமிழர் சமுதாயத்தின் உறவுகளையும், கோள்வுகளையும் பொதுமைகளையும் கணிப்பதற்கு வரலாற்றின் துணையைக் கிடைக்கும் அளவிற்குப் பயன்படுத்த வேண்டியதாயுள்ளது. தமிழர் சமுதாயம் பற்றிப் பொதுவாகப் பார்க்கும்பொழுது, அது அன்னியர் படை எடுப்புகளினாலும் ஆட்சிகளினாலும் பாதிக்கப்பட்டதைவிட, தன் நேர்மை கெடுமளவிற்குப் பிற நாகரிக—பண்பாட்டு மேவல்களினால், பின்தங்கிவிட்டதையும், பின்னர் அண்மையில் சில நூற்றாண்டுகளில் இந்திய நாடு, பிரிட்டிஷ் ஆட்சிக்கு உள்பட்டிருந்ததில் ஐரோப்பிய நாகரிக — பண்பாடுகளின் மோதல்களினால் மீட்சியுறும் அதன் திருப்பத்தையும் அறியலாம்.

சமுதாய இயல் எண்கலையா ?

இயற்பியல், இயைபியல் பொருள்களை ஆய்ந்து அறிவதற்குரிய வழிகளும் முறைகளும், உளப்பாங்குகளும், பகுத்தறிவும், துணிந்து செயல்படும் ஆற்றலும் கொண்டு மாறுதல் ஏற்படுகின்ற சமுதாய இயலைப்பற்றி ஆய்வதற்குப் பயன்படாமல் போகலாம். ''எண்கலை (Science) அதனுடைய மிக்குயர்ந்த நிலையில், வியப்பையும், மருட்சியையும், மறைந்து கிடக்கும் அதிசயத்தையும் முறையாகக் கண்டறிவதில் முற்பட்டு, வகைப்படுத்தி, பட்டறிவு பெறுவதில்தான் இறுதியாக அமைகிறது'' (Moslow, A.H., 'The Psychology of Science'). மேலும் இயற்கைக் கலைகளில் இன்று அவற்றின் 'உறுதிக் கோள்வும் முன்கூட்டிக் கணிக்கும் திறனும் (Certainity Principle) குன்றியும், சமூகவியற் கலைகளில் அநேகமாக இப்படி நேரலாம் எனச் சொல்லக்கூடிய திறன் (Probability) மிகுந்தும் வரும் போக்கில், சமூகவியல் கலைகளும் விருப்பு வெறுப்புகளை அகற்றி முன்னிறுத்தி ஆய்வதற்குரிய எண்கலைகளாக ஏற்கப்படுகின்றன.

சமூகத்தில் நிகழும் உறவுகளையும் செய்வுகளையும் ஆய்ந்து கணிப்பதில் மற்றொரு புதிரையும் எழுப்பக் காணுகிறோம். அவை 'செய்வுகள்' (Facts) என்ற மெய்ம்மையும் (True), அவற்றில் இணைந்த 'மதிப்பீடுகள்' (Values) என்ற சீர்தூக்கியறியும் நயமும், ஒன்றுபட்டு இயங்கக் காணுகிறோம். இயற்கைகளில் இந்தச் சிக்கல் பெரும்பாலும் நிகழ்வதில்லை.' பொன்னாற் பயன் பொன் படைத்தாருக்கு உண்டு, பொன்னுக்கு அங்கு ஏதுண்டு காண்' என்பதறிக. மதிப்பீடுகள் இடம், பொருள், ஏவல், காலம் போன்ற அம்சங்களைப் பொறுத்து அவரவர்களுக்கேற்ப வேறுபடுவன. தமிழர் சமுதாயத்தின் நிறுவனங்களோ (Institutions), முறைவனங்களோ (Systems), கணம், கோட்டிகளோ (குறள் 720, 401) தமிழர்களுடைய மதிப்பீடுகளின் நயம், இடர்ப்பான்மை கொண்டிருத்தலால் அவற்றைக் காய்தல் உவத்தலகற்றி ஆய்தல் அறிவுடையார் கண்ணும் அரிதாகும்.

சமுதாய முற்போக்குக் குறிக்கும் சான்றுகள்

மக்கள் தொகுதிகளின் போக்கும் முன்னேற்றமும் அவற்றில் உள்ள மக்கள், தமக்கு இயல்பாக அமைந்த பதவி நிலையிலிருந்து, தாம் உடன்பாடு மூலம் ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகளிலும் (From Status to Contract), மேலும் அவர்களுக்குள் நிகழ்கின்ற மணவழக்கு அவர்களுக்குள் அமைந்த நிறுவன ஆளுகையில் இருந்து (சான்று, கொடைக்குரி மரபினோர் கிழத்தியைக் கொடுக்க கொளற்குரி மரபின் கிழவன் கொள்ளுதல் — கன்னிகாதனம் போல்வன), தாமாக வரித்துக்கொளளும் துணைமையிலும் (களவு — கற்பு) காணப்படுகிறதாகக் கூறுவர்.

மற்றும் ஒரு முக்கியமான உரைகல், வாழ்வாங்கு வாழும் மக்களுக்குத் தலையாக ஆக்கம் அளிப்பது வளம் பெருக்கும் பொருள் உற்பத்திக்காகும் உழைப்பு. ''பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்; சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்'' என்பது குறள். பதவியும், பொருளும், புகழும் தம்தம் வினைவழி விளைதலே சிறக்கும்.

இந்தியச் சமூகவியல்

இந்தியச் சமூகத்தைப் பற்றி எழுதும் அறிஞர் கிராமச் சமுதாயங்களையும் (Tribal Village Communities) விரிந்த பொதுக் குடும்பங்களையும் (Extended joint Families—முன் மூன்றுடன், பின் மூன்று கூடிய எழுபிறப்பான ஞாதிகள்—சபிண்டர்கள்) வருணாசிரம முறையையும் (Caste) அதன் சிறப்பு அம்சங்களாகக் குறிப்பிடுவார்கள். இவை மூன்றுமே பிறப்பின் அடிப்படையிலான பதவி நிலைகளை உணர்த்துவன. ஒரு முன்னோனை முதல்வனாகக் கொண்ட (Gotra) ஆண்வழித் தலைமுறைகளையும் பாரம்பரியங்களையும் (Heritage) ஏற்ற பூர்விக இனங்களிடையே பிறப்பிற்கே தொடர்ந்து முதன்மை அளிக்கப்பட்ட பிரிவுகளாக இவை தோன்றின. வேட்டையாடி வாழ்ந்த படிவத்திலிருந்து ஆடு மாடுகளைப் பிடித்து வளர்க்க மேய்ச்சல் புலன்களைத் தேடி நாடோடிகளாக மாறிய ஆரிய இனத்தவர் இந்தியாவில் குடியேறிய பின்னர் (Postoral), அவர்கள் தொகுதிகளில் கூட்டுப் பொறுப்பாக விருந்த தலைமைப் பதவி (Chief), பின்னர், தெய்வ, சமயச் சடங்குகளுக்காகப் பிரிக்கப்பட்ட

புரோகிதனுக்கு (Priest) முதலிடமும், உலக காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட அரசனுக்கு (King) அடுத்த இடமும் தரப்பட்டது. உழவும் வாணிகமும் சிறந்து இருந்த திரவிட நகர நாகரிகங்களிடையே ஆரியர் புகுந்த காலத்து, அவர்கள் பிறப்பின் அடிப்படையிலேயே வாணிகம் செய்வோரை வைசியர் என்ற மூன்றாம் பிரிவாகவும், உழவும் தொழிலும் செய்வோரை ஏனையோருக்குத் தாசர்களாககி உடல் உழைப்பினை அவர்கள்பால் சுமத்திச் சூத்திரர் என்ற பிரிவினராகவும் செய்தனர். ''மேலோர் மூவர்'' மட்டுமே கலை பயிலும் மறுபிறப்புடைய இருபிறப்பாளர் ஆயினர். நால்வருண தருமமும், மாறா நிலைமையும் வற்புறுத்தும் சனாதன தருமம், ஆதிக்கமும் ஆட்சியும் பெற்றது. ஆண்வழித் தலைமை வகிக்கும் சமுதாயங்களாக (Patriarchal Societies) மாறுங் காலத்து நிகழும் வீறும் வெறியுமான உந்துதல்களால் ஆண்கள், பெண்கள் அனைவரையுமே தங்களுக்கு அடிமையாகவும் வெறும் பிள்ளை பெறுவதற்கான கருவிகளாகவும் ஆக்கினர். தம் காப்புறுதி வேண்டிப் புதல்வர்களையே நாடினர். அவர்களே 'புத்' எனும் நரகத்தில் இருந்து பெற்றோரை விடுவிப்பர் என்ற நம்பிக்கையை வளர்த்தனர்.[1] எனவே ஆரியருள் இராட்சசமும் (வலிந்து கைப்பற்றல்), பைசாசமும் (மயக்கி முயங்கல்) உள்பட எண் வகையான பெண்கொள்ளும் முறைகளும் புதல்வனை அடைவதற்கு தத்து, நியோகம் முதலிய அறுவகை வழிகளும் அவற்றிற்கான சடங்குகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆரியர்களுள் ஒருத்தி, பலரை, சிறப்பாகச் சகோதரர்களை மணக்கும் வழக்குண்டு (Polyandry).

தமிழர் சமுதாயம் அன்றும் இன்றும்

மேற்கூறிய சமுதாய முன்னேற்றப் பாணிகளை சீர்தூக்கும் கோலாகக் கொண்டு பார்த்தால் தமிழர் சமுதாயம் அன்றிருந்த முன்னேற்ற நிலையும் பின்னர் அந்நியரின் ஊடுருவலால் இன்றைய தாழ்ந்த நிலையும் எளிதில் புலனாகும்.

அன்று: குறிஞ்சி, நெய்தல், முல்லை, மருதம், பாலை என்ற ஐந்திணை நிலங்கள்; பருவகாலங்கள், பொழுதுகள் முதலியவற்றை முதற் பொருளாகவும் அவை சார்ந்த பிறவற்றைக் கருப்பொருளாகவும் கொண்டு (Ecology), அவற்றிற்குப் பொருந்திய செயல்களை ஓர்ந்து தேர்ந்து வாழும் முறையை வகுத்துக்கொள்ளும் உரிமைசால் மக்களே உயர்திணையாகக் கணித்துக் கொண்ட பெருமையைக் காணுகிறோம். திணையும் வினையுமே அவர்களது பெயர் வேற்றுமைகளுக்கு அடிப்படை; பிறப்பு அன்று. மேலும் தமிழினத்தில், வயது வந்த காதலிருவர் களவு — கற்பு வழக்கில் கருத்தொருமித்து இல்வாழ்க்கையைத் தனித்த சிறு குடும்பங்களாக அமைத்துக்கொண்டதைப் பார்க்கிறோம். 'இல்லாள்' என்பது குடும்பத் தலைவியைச் சுட்டும். எதிராக 'இல்லான்' என்பது இன்மையையே சுட்டும். இதில் பெண்ணின் பெருமை விளங்கும். இற்பிறந்த 'அன்புடைமை', 'ஆன்ற குடிமை', ஆகிய பண்புகளுடன் தமிழர் சிறந்து வாழ்ந்தனர் எனபது அவர்களது இலக்கியங்கள், தொல்பொருள் ஆய்வுகள், வரலாறு முதலிய சான்றுகளால் அறியக் கிடக்கின்றது. 'சுதந்திரமுடன் மேற்கொள்ளும் வினைகளுக்கும் அவற்றின் பொறுப்புகளுக்கும் ஆய பான்மைக்குத் தக்கவாறு செயலாற்றலே சிரிய ஒழுக்கமாகக் கருதினர்[2] 'தகுதி என ஒன்று நன்றே, பகுதியால் பால்பட்டு ஒழுகப் பெறின்' (குறள்).

இன்று: தமிழர்களுடைய திணை, வினை அடிப்படைகளில் எழுந்த பிரிவுகளையும், பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு வளர்த்த வருணாசிரம முறைகளையும் ஒன்றாய்க் கலந்து குழப்பி, அவற்றுள் உயர்வு-தாழ்வுகளைப் புகுத்தி, தமிழக மக்கள் அனைவரையும் சூத்திரர்கள் ஆக்கிய விந்தை வரலாற்றில் நிகழ்ந்த அற்புதமாகும். இப்போக்கு அவர்களுள் சில பிரிவினர் தம்மை பிராமணரென்றும், க்ஷத்திரியரென்றும், வைசியர் என்றும் கூறிக்கொள்ளும் வழக்கை உண்டு பண்ணியது. அவலட்சணமான அறிஞனும் மதியிலா மங்கையும் மணந்தால் குரூபமும் மடமையும் கூடிய பிள்ளை பிறக்கலாமென்பது போன்று, திராவிட-ஆரியக் கலப்பு, ஆரியர்களுடைய பிரதிலோமா மணத்தில் பிறப்பிக்கும் சண்டாளர்கள் அனைய சூத்திரர்களாகவும் தீண்டாதவர்களாகவும் தமிழர்களை ஆக்கிவிட்டது.

கணக்கற்ற சாதிகள், பிறப்பினால் மேலோர் — கீழோர், தீண்டாமை,[3] பின்தங்கிய வகுப்புகள், பெண் அடிமை, பால்ய விவாகம் (இளஞ்சிறார் திருமணம்), கைம்பெண்கள் துயரம், வரதட்சனை பேரம், உழவு முதலாய உற்பத்தித் தொழில்களின் இழிமை, பொருளற்ற சடங்குகள், விழாக்கள், மூட நம்பிக்கைகள் முதலிய கொடிய பழக்க வழக்கங்கள் தமிழர் சமுதாயத்தை அலங்கரிக்கும் அணிகளாக ஏற்கப்பட்டன.

மேலும் ஆரியமும், அதன் வழிப் பிறந்த சமயங்களும் அவற்றின் கோட்பாடுகளான ஆன்மா, பிரமம், கர்மவினை, மறுபிறவிகள்,[4] ஊழ்வலி முதலியவற்றைக் கொண்ட முறைவனம் அவர்களுடைய

---

[1] ''நாகரிகத்தின் உறுதிப் பொருளாகவும் அனைத்துத் தொழில்களின் இறுதிப் பற்றுக்கோடாகவும் உள்ள இல்வாழ்க்கையின் அரண், அறம் ஆகிய இயல்புகளைக் காணவில்லை.

[2] சோ. இலக்குமிரதன் பாரதியார்: 'நமது சமூகம்' பக்கம் 8; பழந்தமிழர் உறவுகள், பக். 74-86 மற்றும் Sarva Damar Singh, "Polyandry in Ancient India".

[3] பரிபாடல். 5.—'சிறப்பினுள் உயர்வு ஆகலும், பிறப்பினுள் இழிவு ஆகலும் - நின் வலத்தினதே'

[4] பரிபாடல், 5: 76—''மறுபிறப்பு இல்எனும் மடவோரும் சேரார் நின் நிழல்''

சாதி உயர்வு-தாழ்வுகளுக்கு வலிதந்து விளக்குவதற்கே பயனுறுத்தப்படுகின்றன. ''பொருளாதாரத்திலும் உறவு முறை வாழ்விலும், பண்பாட்டுப் பாதுகாப்பிலும் உயர்நிலையாக அமைந்ததால் தொன்றுதொட்டு நின்று நிலைத்தது சாதி'' என சாதி வழக்கைப் பாராட்டுபவருமுளர்.[1] இதனால் தமக்குள்ளே உறவுகளை வேரறுக்கும் மணத் தடைகளையும் விதிவிலக்குகளையும் (Exogamy, Endogamy) ஏற்று, தவிர்க்கொணாத கட்டுப்பாடுகளை வகுத்து, ஒவ்வொரு சாதியும் தன்னைத் தீவு ஆக்கிக்கொண்டு சமுதாய ஒற்றுமையைக் குலைத்து, நாட்டு – இனப் பற்றைக் கொன்று, அரசியலுக்கு ஊறு விளைப்பதை நாம் காணுகின்றோம். மற்றும் தென்னாட்டில் புரிந்துகொள்ள இயலாத புதிராக 'வலங்கை', 'இடங்கை'ச் சாதிகளின் கலகங்களும், சேதங்களும் – தம் ஆதிக்கத்திற்கு உள்பட இணங்காத சாதிகளைத் தீண்டாதவர்களாகச் செய்தது போலவே – இடங்கையினரை பிராமணீயம் பிரித்து வைத்ததனால் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.[2] மேலும் மாநிலத்தின் தென்பகுதிகளில் தேவர்களாக்கப்பட்ட மறவர்களுக்கும், நாடார்கள் எனும் சாணார்களுக்கும் ஏற்பட்ட கடும் பகையும் சண்டைகளும்[3] சாதிச் சனியனால் விளைந்த கேடாகும்.

பிராமணீயம் மேவிய பாணி

அகத்தியர், தொல்காப்பியர் கால முதலே தமிழர் சமுதாயம், சமஸ்கிருத – பிராமணீயம் மேவலினால் அதன் முறைவனப்படுத்தலுக்கு இலக்காகியது. அதற்கு ஆரியம் கையாண்ட வழிகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை:

(1) அரசர்களையும் குறுநில மன்னர்களையும் வருணாசிரம முறையை ஏற்கச் செய்தல் (தொல், மரபியல். 71-85).

(2) பின்னர் அம் முறைகளையும் மெல்ல மெல்ல ஏனையோர்பாலும் பரப்புதல்.

(3) ஆரிய தெய்வங்களைப் புகுத்தியும், தமிழர் வழிபடும் தெய்வங்களுடன் இணைத்தும் கூட்டியும், புராண இதிகாசங்களைச் சுமத்துதல் (ஆதி-பகவதி-காளி-பார்வதி; மாயோன்- விஷ்ணு- கிருஷ்ணன், நப்பின்னை-ராதா-சத்யபாமா-உருக்மணி-இலட்சுமி முருகன் - ஸ்கந்தன்- குமரன் - சுப்பிரமணியன்[4] சிவன் - ருத்ரன், ஐயனார் - அய்யப்பன் - ஹரிஹர புத்ரன்.)

(4) வேள்வி முதலிய சடங்குகள் மூலம், கோரிய பலன்களைப் பெறும் ஆசைகளை வளர்த்தல் (மாடலமறையோன் - செங்குட்டுவன்).

(5) சைவ நாயன்மார்கள் வைணவ ஆழ்வார்கள் மூலம் வேதநெறிகளைப் புகுத்தி, கோவில்களையும் விழாக்களையும் பெருக்கி, புத்த சமய நெறிகளை அழித்தல்.

(6) ஊர், இடப் பெயர்களைச் சமஸ்கிருதப் படுத்தித் தமிழ் மொழியிலும் சமஸ்கிருதச் சொற்களைப் புகுத்தல் (மறைக்காடு – வேதாரண்யம், தண்ணீர் – ஜலம்).

(7) இளஞ்சிறார் திருமணம், மறுமண விலக்கு, கைம்பெண்களை ஒதுக்கித் துன்புறுத்தல் போன்ற பெண்களை அடிமையாக்கும் வழக்குகளைப் புகுத்தல். ''ஈர் ஆறு ஆண்டு அகவையாள் (கண்ணகி), ஈர் எட்டு அகவையான் (கோவலன்), அவரை இரு பெருங்குரவரும் மண அணிகாண, மகிழ்ந்துழி - மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத தீவலம் செய்வது காண்பார்'' (சிலப்பதிகாரம்).

(8) திராவிட மொழி இலக்கியங்கள், அவற்றிற்கான உரைகள் யாவற்றையும் சமஸ்கிருத வழிப்படுத்தல். வெள்ளையர் ஆட்சியும் தேசிய இயக்கங்களும் இப் பிராமணீயப்படுத்தும் போக்கிற்குப் பெரிதும் சாதகமாக இருந்ததை டாக்டர் எம். என். சீனிவாஸ் போன்ற சமூகவியல் ஆய்வாளர்கள் விளக்கி இருக்கின்றனர்.[5]

இப்போக்கில் மாற்றம்

எனினும் மேலைநாட்டுக் கலைகளும், ஐரோப்பியருடைய கலாசாரங்களும், அரசியல் முறைகளும் தமிழர்களை விழிப்படையச் செய்து, தமக்குத் தனித்தாய பழைய பண்புகளையும் மரபுகளையும் மீண்டும் சிந்திக்கத் தூண்டி, தீவிர மாறுதல்களை விரும்பும் இயக்கங்களையும் தோற்றுவித்திருக்கின்றன.

ஆற்றல்சால் சமனீயம்

உயிர்களினுடைய உடலும் உறுப்புகளும் தம்தமிலும், ஒன்றிற்கொன்று இணங்கி இசைந்தும், ஆற்றல்சால் சமனீயத்துடன் (Dynamic Equilibrium) செயல்படுவதற்கேற்ற கட்டுமான அமைப்புகளை (Structures) தமக்குப் புறம்பான சூழ்நிலைகளில் நடத்தும் வாழ்க்கைப் போராட்டத்தில் இயல்பாக

1 எஸ். இராமகிருஷ்ணன், '' இந்தியப் பண்பாடும் தமிழரும் '' பக்கம். 272

2 Srinivasa Iyangar, M. ''Tamil Studies'' (1914), pages 98- 112.

சோ. இலக்குமிரதன், பாரதி, ''நமது சமூகம்'' (1969) பக். 219.

3 See Ed. Thurston E. ''Castes and Tribes of Southern India''.

4 பரிபாடல், 5. '' உமை - காமவதுவையுள் அமையாப் புணர்ச்சி - ஆல்உறை மகளிருள் அறுவர் சூலினர் - நிவந்து ஓங்கு இமையத்து நீலப் பைஞ்சுனை பயந்தோர் என்ப''

5 Nair, Balakrishnan, N. ''The Dynamic Brahmin''

சோ. இலக்குமிரதன் பாரதி, ''நமது சமூகம்'; பக்கம் 87-97, 110-230.

வளர்த்துக் கொள்கின்றன. அதன் மாறுதல்களுக்கு ஏற்ப மாறுதல்களை அடைகின்றன, அல்லது அழிவுறுகின்றன. இத்தகைய படிமலர்ச்சிப் (Evolution) போக்கில், அது தன்—உணர்வு (Self-consciousness) அடைதலே மனிதன், என்பர். ஆறறிவு பெற்ற மனித வர்க்கம் வாழ்வாங்கு வாழும் சமனீய நிலையை எண்ணித் துணிந்து எய்த வேண்டியதாயுள்ளது. எனவே ''பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல் குறும்புமாகக்'' குழம்பிக் கிடக்கும் தமிழர் சமுதாயம் மீட்சிபெறும் வழிவகைகளைக் காணவேண்டும். ''என்று தணியுமிந்தச் சுதந்திர தாகம், என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'' என இந்த நிலை கெட்ட மனிதரைப் பற்றிப் பாடினார் தேசிய கவி.

அரசியல் முகப்புரை

நாடு விடுதலையுற்ற பின்னர் அதன் அரசியலை வகுத்த அறிஞர்கள், அதன் முகப்புரையாக, ''குடிகள் அனைவருக்கும் சமுதாய, பொருளியல் அரசியல் **நீதி;** கருத்து, தெரிப்பு, நம்பு கொள்கை, சமயம், வழிபாடு இவற்றின் **உரிமானம்;** மதிநிலை வாய்ப்பு, இவற்றில் **சமன்மை;** ஆகியவற்றைக் காப்புறுதி செய்யவும் தனியொருவர் மாண்பு, நாட்டின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் ஒப்புரவினை அனைவரிடையும் வளர்ப்பதற்கும், ஆன அரசியல் சட்டம்'' எனத் தீட்டியுள்ளார்கள்.

தமிழர் சமுதாய இயக்கங்கள்

அதற்கு முன்னரே தமிழகத்தில் நீதிக் கட்சியின் மூலம் சமூக நீதிக்கு வகுப்புவாரித் தெரிவாண்மையைச் செயலுக்குக் கொண்டுவரவேண்டி பிராமணரல்லாதார் இயக்கமும், பெரியார் ஈ. வே. இராமசாமியார் தோற்றுவித்த சுயமரியாதை, பகுத்தறிவு, திராவிட நாட்டுப் பிரிவினை, சமதர்மம், ஆகிய புரட்சி இயக்கங்களும் தோன்றின.[1]

மற்றும் நல்லதோர் இயக்கத்தைமறக்கமுடியாது. விடுதலைக்குப் பின்னர் காந்திய வழியில் அவர் வகுத்த நிர்மாணத் திட்டங்களை ஊர் ஆட்சி (பஞ்சாயத்து — ராஜ்) மூலம் செயலுறுத்தும் சமுதாய வளர்ச்சி திட்டம் துவக்கப்பட்டது. பின்னர் அவ்வியக்கம் அறிவாற்றலைப் பரப்பும் தேசியப் பணியாக (National Extension Service) நாடெங்கும் விரிவாக்கப்பட்டது. அரசுகளின் பணியாகத் துவங்கி, பின்னர் ஊராட்சி, கூட்டுறவுச் சங்கங்கள் முதலிய நிறுவனங்களுடனும் அரசின் ஒத்துழைப்புடனும் நடைபெறவேண்டிய மக்கள் இயக்கமாகத் திருப்பப்பட்டது. 'ஊர்ப்பணி' என்பது கல்வி, ஆனால் எழுதப் படிப்பதும் கணக்கும் அல்ல, மக்கள் என்ற தகுதிக் குகந்த தேவைகளை உணரும் படியாக அவர்களது மனத்தைத் திறப்பதாகும் என்பது காந்தியாரின் கூற்று.

முடிவுரை

இதுவரை கூறியவற்றிலிருந்து தமிழர் சமுதாயம் இந்திய சமூகத்தின் ஒரு பதியாகவும், அதில் காணும் பல விதமான சக்திகளின், முக்கியமாக அரசியல் உறுதி இன்மையின் பாதிப்புகளால் குழப்பமானதும் மாறி வருவதுமான போக்குகளில் சிக்குண்டிருப்பதில், அவற்றின் திசைகளும் நயமிடர் விளைவுகளும் திட்டமாகக் கணிப்பதற்கு இயலாதெனத் தெரிகிறது; வெறியூட்டும் மத நம்பிக்கைகளும் அரசியல் ஆசைகளும் அறிவு, அற ஆளுகைக்கு இயையக் கட்டுப்படுத்தப்பட்டால் அன்றி முன்னேற்றம் காணுதலரிது.

சோ. இலக்குமிரதன் பாரதி, ''நமது சமூகம்''. பக், *189-192, 240.* History of the Rationalist Movement in Tamil Nadu.





வண்டு மயங்கும் வளமும் நலமும்

மலர்ப் பொய்கை; முழுமதியின் நிழல் வட்டமாகப் படிந்துள்ளது. நீருள் தெரியும் அம் மதியின் தோற்றம் மங்கையின் முகமெனக் காட்சி தருகிறது. மதிநிழல் படிந்துள்ள இடத்தில், நிழலின் இடையில், ஒன்றுக்கொன்று மிக நெருங்கி, இணையாக உள்ள இரு நீலமலர்த் தண்டுகள் மேலெழுந்து, பக்கத்திற்கு ஒன்றாகச் சாய்ந்துள்ளன. நிலவின் வெண்மை நிழலில், இரு நீலமலர்கள் இணைந்த தோற்றம் மங்கையின் முகமெனத் தோன்றுகிறது. அருகே ஒரு மங்கை! இப்போது வண்டுக்கு மயக்கம். மங்கையின் முகமெது, மலர்ப் போதெது எனத் தெரியாது வண்டு ஊசலாடுகிறதாம்! புகாரின் வளத்தைப் பாடவந்த இளங்கோ அடிகள் இவ்வாறு பாடுகிறார்:

மாதரார் கண்ணும் மதிநிழல்நீர்
இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டுஊசல்
ஆடும் புகாரே எம்மூர்!

(சிலப். கானல் வரி, 6: 3-4)

வளர்த்துக் கொள்கின்றன. அதன் மாறுதல்களுக்கு ஏற்ப மாறுதல்களை அடைகின்றன, அல்லது அழிவுறுகின்றன. இத்தகைய படிமலர்ச்சிப் (Evolution) போக்கில், அது தன்—உணர்வு (Self-consciousness) அடைதலே மனிதன், என்பர். ஆறறிவு பெற்ற மனித வர்க்கம் வாழ்வாங்கு வாழும் சமனீய நிலையை எண்ணித் துணிந்து எய்த வேண்டியதாயுள்ளது. எனவே ''பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல் குறும்புமாகக்'' குழம்பிக் கிடக்கும் தமிழர் சமுதாயம் மீட்சிபெறும் வழிவகைகளைக் காணவேண்டும். ''என்று தணியுமிந்தச் சுதந்திர தாகம், என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'' என இந்த நிலை கெட்ட மனிதரைப் பற்றிப் பாடினார் தேசிய [illegible].

அரசியல் முகப்புரை

நாடு விடு[illegible] வகுத்த அ[illegible]கள் அதன் முகப்புரையாக, ''குடிகள் அனைவருக்கும் சமுதாய, பொருளியல் அரசியல் நீதி; கருத்து, தெரிவிப்பு, [illegible] சமயம், வழி[illegible] வாய்ப்பு, இவற்றில் சமன்மை; ஆகியவற்றைக் காப்புறுதி செய்யவும் தனியொருவர் மாண்பு, நாட்டின் ஒற்றுமை[illegible] வரிடையும் [illegible] சட்டம்'' என்று தீட்டியுள்ளார்கள்.

தமிழர் சமுதாய இயக்கங்கள்

அதற்கு முன்னரே தமிழகத்தில் நீதிக் கட்சியின் மூலம் சமூக நீதிக்கு வகுப்புவாரித் தெரிவாண்மையைச் செயலுக்குக் கொண்டுவரவேண்டி. பிராமணரல்லாதார் இயக்கமும், பெரியார் ஈ. வே. இராமசாமியார் தோற்றுவித்த சுயமரியாதை, பகுத்தறிவு, திராவிட நாட்டுப் பிரிவினை, சமதர்மம், ஆகிய புரட்சி இயக்கங்களும் தோன்றின.[1]

மற்றும் நல்லதோர் இயக்கத்தை மறக்கமுடியாது. விடுதலைக்குப் பின்னர் காந்திய வழியில் அவர் வகுத்த நிர்மாணத் திட்டங்களை ஊர் ஆட்சி (பஞ்சாயத்து — ராஜ்) மூலம் செயலுறுத்தும் சமுதாய வளர்ச்சி திட்டம் துவக்கப்பட்டது. பின்னர் அவ்வியக்கம் அறிவாற்றலைப் பரப்பும் தேசியப் பணியாக (National Extension Service) நாடெங்கும் விரிவாக்கப்பட்டது. அரசுகளின் பணியாகத் துவங்கி, பின்னர் ஊராட்சி, கூட்டுறவுச் சங்கங்கள் முதலிய நிறுவனங்களுடனும் அரசின் ஒத்துழைப் [illegible] பெறவேண்டிய மக்கள் இயக்கமாகத் திருப்பப்பட்டது. 'ஊர்ப்பணி' என்பது கல்வி, ஆனால் எழுதப் படிப்பதும் கணக்கும் அல்ல, மக்கள் என்ற தகுதிக்கு உகந்த தேவைகளை உணரும் படியாக அவர்களது மனத்தைத் திறப்பதாகும் என்பது காந்தியடிகளின் கருத்து.

இவ்வளவு கூறியவற்றிலிருந்து தமிழர் சமுதாயம் இந்திய சமூகத்தின் ஒரு பகுதியாகவும், அதில் காணும் பல விதமான சக்திகளின், [illegible] அரசியல் [illegible]ப்பமானதும் மாறி வருவதுமான போக்குகளில் சிக்குண்டிருப்பதில், அவற்றின் திசைகளும் நயமிடா விளைவுகளும் [illegible] தனத் தெரி[illegible] களும் அரசியல் ஆசைகளும் அறிவு, அற ஆளுகைக்கு இயையக் கட்டுப்படுத்தப்பட்டால் அன்றி முன்னேற்றம் காணுதலரிது.

---

1. சோ. இலக்குமிரதன் பாரதி, ''நமது சமூகம்''. பக், 189-192, [illegible] History of the Rationalist Movement in Tamil Nadu.



தமிழ் இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள்

பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன், பி.எஸ்சி., எம்.ஏ.,

இயற்கைபற்றிய உண்மைகளையும் முறைமைகளையும் வகைப்படுத்தி ஆய்வதனையே அறிவியல் என அழைக்கின்றோம். தமிழைத் தாய்மொழியாகக்கொண்டு வாழ்ந்திருந்த மக்களும் இத்துறையில் உலகம் வியக்கும் வகையில் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர் என்பதனை நம்மிடையே உள்ள இலக்கியங்கள் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகின்றன. கரிகாலன் காலத்தில் ஒரு கல்லணையும், இராசராசன் காலத்தில் ஒரு பெரிய கோயிலும் எழவேண்டுமானால் எந்த அளவிற்கு நம் நாட்டுப் பழம்பெரும் அறிஞர்கள் அறிவியல்பற்றிப் பழங்கால முதல் எண்ணி வந்திருக்கவேண்டும் என்பதை ஏனோ நாம் நினைத்தும் பாராமல் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கின்றோம்!

அறிவியல் அயல்நாட்டுச் சரக்கா?

இன்று தமிழில் அறிவியல் நூல்கள் மிகுதியாக வெளிவந்துள்ளன என ஆறுதலடைகிறோம். ஆனால் அவற்றில் பெரும்பகுதி வெறும் மொழிபெயர்ப்பு என்ற அளவிலேயே உள்ளன. அந் நூல்களும் அறிவியற் கலையினை முற்றிலும் அயல்நாட்டுச் சரக்கு என்ற அளவிலேயே அறிமுகப்படுத்துகின்றன. 'மேற்கத்திய நாடுகளின் தொடர்பு தமிழ்நாட்டில் ஏற்பட்ட பின்பே விஞ்ஞானம் இங்கே தலைகாட்டத் தொடங்கிற்று' என்று பேசுகிறவர்களையும் நாம் பார்க்கின்றோம். தமிழ் மண்ணில் அறிவியல் பயிர் தழைக்குமா என்று அய்யுற்றுக் குழம்பிக்கொண்டிருக்கும் நாம் இன்று நம் நாட்டு அறிவியலாளர்களாகிய ஜே. சி. போசு, சி. வி. இராமன், பிரபுல சந்திரராய், ஹோமிபாபா, விக்கிரம் சாராபாய் போன்றவர்களை நம் நாட்டு மக்களுக்கு இன்று எப்படி அறிமுகப்படுத்துவதெனத் தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறோம்! இந் நிலையில் அறிவியல் உண்மைகளை ஆங்காங்குப் பெய்து இலக்கியத்தைப் படைத்தருளிய தமிழ்ச் சான்றோர்களை நாம் இன்றுவரை அறியாமல் இருப்பதில் வியப்பதற்கொன்றுமில்லையன்றோ? குழந்தைகளுக்காக எழுதப்படும் இன்றைய அறிவியல் ஏடுகளில் அறிவியலில் முன்னோடிகளாகத் திகழ்ந்த நம் நாட்டுப் பெரியார்களின் கருத்துகளைச் சிறிதேனும் குறிப்பிட்டுச் சொல்லும் நிலை நாடு விடுதலை பெற்று முப்பத்துமூன்றாண்டுகளான பின்னரும்கூட ஏற்படவில்லை.

நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையில் சென்னைக் கடற்கரையில் அவ்வையாருக்குச் சிலையெடுத்தபோது 'அவ்வையாருக்குக் கடற்கரையில் என்ன வேலை?' எனக் கேட்டவர்களும் உண்டு. ஆம் அறிவியல் கண்கொண்டு அவ்வையாரைக் காணத் தவறியதாலேயே 'அவ்வையாருக்கும் ஆழ்கடலுக்கும்' உள்ள தொடர்பினையும் உணரத் தவறிவிட்டோம். பொதுவாக நாம் உலகில் காணும் பொருள்களை, அவை காணப்படும் உருவ நிலைக்கு ஏற்பத் திண்பொருள், நீர்ப்பொருள், வளிப்பொருள் எனப் பிரித்துப் பேசுகிறோம். திண்பொருளையும் வளிப்பொருளையும் அழுத்தம் கொடுத்து அளவில் சுருங்கும்படி செய்யலாம். ஆனால், எவ்வளவுதான்

அழுத்தி அளந்தாலும் ஒரு படிப் பாலையோ, நீரையோ முக்கால் படியாகக் குறைத்து அளந்து காட்ட முடியாது! நீர்ப்பொருள்களின் இச் சுருங்கா வியல்பினைக் (Non Compressibility of liquids) கண்டுபிடித்து உலகுக்கு உணர்த்தியவர் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த பாஸ்கல் (Pascal) என நம் மொழிபெயர்ப்பு நூல்கள் உரைத்துக்கொண்டிருக்கின்றன. நீர்ப்பொருளை அழுத்திச் சுருக்க முடியாது என்னும் உண்மையைப் பாஸ்கல் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்ப் பாட்டி அவ்வையார் கூறிச் சென்றிருக்கிறார் என்ற உண்மையைப் பாடநூல்களில் இடம் பெறச் செய்திருந்தால் 'அவ்வையாருக்குக் கடற்கரையிலே என்ன வேலை?' என்று எவரும் கேட்டிருக்கமாட்டார்!

இயல்பாக நிகழ்ந்துவருகின்ற ஒரு முறைமையினை எவரும் எளிதில் மாற்றிவிட முடியாது என்ற உண்மையை வலியுறுத்த விரும்பிய அவர், நீர்ப் பொருளின் இந்தச் சுருங்கா இயல்பினை உவமையாகக் கொண்டு,

> ''ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
> நாழி முகவாது நால்நாழி — தோழி
> நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்
> விதியின் பயனே பயன்''

என்னும் வெண்பாவால் வெளியாரும் வியந்து பாராட்டும் வகையில் வெளியிடுகின்றார். இங்கு 'ஆழ்கடல் நீர்', 'ஆழ அமுக்குதல்' ஆகிய தொடர்கள் அறிவியல்நுட்பம் வாய்ந்தவை. நீருக்கு இயல்பாகவே அழுத்தம் உண்டு. நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஆழத்தில் அமிழ்ந்து செல்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அது மிகுதியாக நம்மை அழுத்தும். அஃதாவது ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் அதிகமாகும். இவ்வுண்மையினையும் பாஸ்கலே கண்டு கூறியதாக அயல்மொழி ஏடுகள் பேசுகின்றன. இங்கு அவ்வையாரின் 'ஆழ்கடல்நீர்', 'ஆழ அமுக்கி முகக்கினும்' என்னும் தொடர்கள் 'ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் மிகுகின்றது' என்னும் உண்மையை நன்கு குறிப்பிட்டுக் காட்டுகின்றனவல்லவோ? இன்று ஆழ்கடல் சோதனையை (Deep Sea Experiment) வெற்றியுடன் முடித்துக் கோலூன்றித் திரும்பி வரும் அவ்வையாரைச் சென்னைக் கடற்கரையிலே கண்குளிரக் காண்கின்றோம்! அறிவியல் பெண்மணி ஒருவரின் பெயரைக் கூறுக எனக் கேட்டால், இனி, 'மாடம் கியூரி' என்றுதான் சொல்ல வேண்டும் என்பதில்லை; அவ்வையார் என்றும் பெருமையுடன் கூறலாம்.

ஊசலின் நீளமும் காலமும்

கோவிலில் தொங்கிய விளக்கிலே காலம் ஏறி அமர்ந்து ஊசலாடுவதைக் கலீலியோ கண்டார். ஆடுகின்ற விளக்கின் ஒவ்வோர் அசைவும் (Oscillation) ஒரே அளவு காலத்தை எடுத்துக்கொள்வதை உணர்ந்தார். ஆலயத்திலிருந்து அறிவியற் செல்வம் பெற்று வீடு திரும்பிய அவர் பல சோதனைகள் செய்து நீளம் மிகுந்த பொருள்கள் மெல்ல அசைந்தாடுவதையும், நீளம் குறைவாக உள்ள பொருள்கள் விரைந்து அசைந்தாடுவதையும் கண்டுபிடித்தார். இந்த அடிப்படையில் எழுந்தவைதாம் இன்று நம் கடிகார முள்ளின் வேகத்தைக் கட்டுப்படுத்தியபடி அசைந்தாடிக்கொண்டிருக்கும் ஊசலிகள். கடிகார முள் விரைந்து நகர வேண்டுமானால் ஊசலியினைத் திருகி மேலே ஏற்றி அதன் நீளத்தைக் குறைக்கின்றோம். கடிகாரம் மெல்லச் செல்ல வேண்டுமானால் திருகாணியைத் தளர்த்தி இறக்கி ஊசலியின் நீளத்தை அதிகப்படுத்துகிறோம். நீளத்திற்கும் காலத்திற்கும் உள்ள இந்தத் தொடர்பைத் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த ஒரு தமிழ்ப் புலவரும் அறிந்திருந்தார் என்பதை இன்று உலகம் அறியுமா?

கலீலியோ கோவிலில் ஆடிய விளக்கைக்கொண்டு வெளியிட்ட அதே இயற்கை முறைமையை வீட்டில் ஆடிய ஊஞ்சலிலும், மகளிர் காதில் தொங்கிய குழையிலும் கண்டு வெளிநாட்டவரும் வியக்கும் வண்ணம் திறமான புலமையுடன் வெளியிட்டார் சிவஞான முனிவர். ஆம். நீண்டு தொங்கும் ஓர் ஊஞ்சலிலே தென்குளத்தூரில் எழுந்தருளிய அமுதாம்பிகையை அமர்த்தி அலைமகளையும் கலைமகளையும் இருபக்கமும் நிறுத்திக் கைகளால் அவ்வூஞ்சலை அசைத்தாட்டச் செய்கிறார். ஊசலிக்கு இன்று விளக்கம் தருகின்றவர் 'மெல்லிய இழையில் தொங்கும் ஒரு பளுவான குண்டு' (A heavy bob suspended by a fine thread) என்கின்றனர். அமுதாம்பிகை மலைமகளின் மாற்றுருவம்! மலையிலும் மாணப் பளுவானதொரு பொருளும் உலகில் உண்டோ? எனவே, அமுதாம்பிகை அமர்ந்திருக்கும் அவ்வூசல் இலக்கணத்தோடு கூடிய நல்லூசலாக இருக்கிறது! ஆனால், அதைவிட விரைந்து அசைந்து ஆடுகிறது மற்றோர் ஊஞ்சல். அந்த ஊஞ்சல் நீளத்தில் குறைந்தது. அதுவே அமுதாம்பிகையின் காதில் தொங்கும் குழை! அந்தச் சிறிய குழைபோல அந்த ஊஞ்சலும் விரைந்து ஆட வேண்டும் என்று விரும்பிய அலைமகளும் கலைமகளும் ஊஞ்சலைத் தம் கையால் 'வலித்து வலித்து' ஆட்டிப் பார்த்தனர். ஆனால், வேகம் மிகுந்ததாகத் தெரியவில்லை. அவர்களின் அறியாமையைக் கண்டு அமுதாம்பிகை சிரித்தாள். தாமரைப் பெண்கள் இருவரும் நாணத்தால் முகங்கவிழ்ந்தனர்! அமுதாம்பிகை ஞால முழுவதும் ஒருங்கீன்ற நங்கை; இயற்கைச் சட்டங்களெல்லாம் அவளுக்குத்தானே தெரியும்? அலைமகளென்ன, கலைமகளென்ன, அவர்தம் கணவன்மாராகிய திருமாலும் பிரமதேவனுமே வந்து ஆட்டினாலும் ஊஞ்சலின் நீளம் குறைந்தாலொழிய அதன் வேகத்தில் விரைவு காண முடியாதே! அறிவியல் கருத்துகளைத் தாங்கி மிளிரும் அவர் பாடல் வருமாறு:

''திங்களொளி காட்டுமுக மீதுலவு நாட்டச்
செழுங் கயல்உதைந் தூக்கலால்
செம்பொன் இழைத்தமக ரக்குழை களும்
செங்கனக ஊச லாடப் [செவிச்
பங்கய இருக்கைமட மாதர்அது நோக்கி' இரு
பாலும் இருவேம் ஆட்டவும்
பாயும் கயல்குலம் அசைக்கும்அவ் ஊசலின்
பாய்ந்திலது இவ்ஊசல்' எனநீள்
அங்கையின் வலித்துநனி ஆட்டுதொறும் நின்
அரும்புநகை நிலவெழி லினுக்கு [வாய்
ஆங்கவர் முகத்திங்கள் சாயப் புராணமறை
ஆகமம் அளந்து அறிவரும்
புங்கவன் மருங்குகுடி கொண்டஅமு தாம்பிகை
பொன்னூ சல்ஆடி யருளே!
பூரண மதிக்குஅருள் புரிந்த கமலாகரீ
பொன்னூசல் ஆடி யருளே!''

ஒளியும் உருவமும்

ஒளிக்கதிர்களைக் கோட்டம் (Refraction) அடையச் செய்வதால் தொலைவில் உள்ள பொருள்களை அண்மையில் வந்து தோன்றச் செய்யலாம் என்று கண்டவர் கலீலியோ எனச் சொல்கிறோம். ஒருநாள் வீட்டின் மேல் மாடத்தில் இருந்தபடி கலீலியோ தமது மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துத் தூசி போய்விட்டதா என அறிவதற்காக ஒளிவரும் வழியில் உயர்த்திப் பிடித்துப் பார்த்தார். அது இரண்டாக மடிக்கும் அமைப்புடன் கூடிய கண்ணாடி ஆனதால் அவர் மடித்து வைத்திருந்த நிலையில் அதன் ஒரு வில்லை (lens) மற்றொரு வில்லைக்கு நேராகப் பொருந்தியிருந்தது. என்ன விந்தை! தொலையில் உள்ள ஒரு கோபுரத்தின் உருவம் அருகே வந்து அவர் கண்ணாடியில் சிறியதாகத் தெரிந்தது! இணைந்துள்ள இரு கண்ணாடி வில்லைகளுக்குத் தொலைவிலுள்ள பொருளை அருகில் கொணர்ந்து காட்டும் ஆற்றல் இருப்பதை அறிந்துகொண்டார்! உடனே ஈயக் குழாய் ஒன்றின் இரு கோடியிலும் இரு கண்ணாடி வில்லைகளைப் பொருத்தித் தமது தொலைநோக்குக் கருவியை (Telescope) உருவாக்கி விண்ணியல் கலை வரலாற்றில் பெரும் புரட்சியைச் செய்து விட்டார்!

கலீலியோ கண்ட இதே காட்சியை வீட்டு மேல் மாடமும், மூக்குக் கண்ணாடியும் இல்லாமல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலே ஒரு தமிழன் கண்டு கூறியுள்ளான்! வள்ளுவரின் குறட்பாக்கள் ஞாலமுற்றிலுமுள்ள பெரும் பொருள்களையெல்லாம் தம்மகத்தே கொண்டு காட்டுகின்றன. இதற்கு உவமை தேடித் தன் வீட்டை விடுத்து நெடுந் தொலைவு சென்றான் ஒரு தமிழன். வழியிலே சிறியதொரு புல்; அதன் தலைமீது தினையினும் சிறிதான ஒரு பனித் துளி; நெடுந் தொலைவிலே ஒரு பனைமரம் வானுற ஓங்கி வளம்பெற்று வளர்ந்து நிற்கின்றது. என்ன வியப்பு! தொலைவிலுள்ள அந்தப் பெரிய பனைமரத்தின் உருவம் அவ்வளவு அருமையாக அந்தச் சிறிய பனித்துளியிலே தெரிகிறதே! இந்த அரிய காட்சியினையே வள்ளுவரின் குறளைப் பெருமைப்படுத்தும் உவமையாகத் தேர்ந்தான் அத் தமிழன்!

''தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
வள்ளைக்கு உறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி''

அறிவியல் அச்சில் வார்த்தெடுத்த வள்ளுவரின் குறட்பாக்களை அறிவியல் உவமை தந்து பாராட்டும் கபிலரின் இப் பாடல் திருவள்ளுவமாலையில் இடம் பெற்று மணம் வீசுவதை அறிவோம்.

பறத்தல்பற்றிய ஆராய்ச்சி

பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் மேல்நாட்டினர் பறவைகளின் எலும்புக் கூட்டில் இடம் பெற்றுள்ள காற்று உடல் வெப்பத்தால் விரிந்து இலேசாவதால் பறவைகள் காற்றிலே மிதக்கின்றன என்று அஞ்ஞான பேசிக்கொண்டிருந்ததைக் காண்கின்றோம்! ஆனால் 9ஆம் நூற்றாண்டிலேயே பறவைகள் காற்றைவிடக் கனமானவை என்றும், அவை சிறகசைத்து உந்தி எழுவதாலேயே பறக்க முடிகின்றது என்றும் கண்டு தாம் படைத்த 'மயில் பொறி'யினையும் காற்றினும் கனமான கருவியாக (Heavier than air device) அமைத்துப்

''பண்தவழ் விரலின் பாவை
பொறிவலம் திரிப்பப் பொங்கி
விண்தவழ் மேகம் போழ்ந்து
விசும்பிடைப் பறக்கும் வெய்ய
புண்தவழ் வேல்கண் பாவை
பொறிஇடம் திரிப்பத் தோகை
கண்டவர் மருள வீழ்ந்து
கால்குவித்து இருக்கும் அன்றே''

என நம்மைத் தெளிவித்துச் செல்கிறார்.

அளத்தல் அறிவியலின் அடிப்படை

பொதுவாக இயற்பியல் துறையில் பருப்பொருள்களேயன்றி ஒலி, ஒளி, வெப்பம் போன்ற பல்வேறு ஆற்றல்களையும் ஆய்கின்றோம். பருப்பொருள்களின் பண்புகளை அறிந்து ஏற்ற வகையில் கோட்பாடுகளை வகுக்க முதலில் அளவீடுகள் செய்ய வேண்டுவது இன்றியமையாததாகும். எனவேதான், இயற்பியலை அளப்பது பற்றிய அறிவியல் (Science of measurement) என்று அழைக்கின்றோம். பொதுவாக நீள அகல உயரங்களை அளப்பதற்கு நீட்டியளக்கும் கோலை அலகாகக் (Unit) கொண்டு செயல்படுகின்றோம். ஒரு காலத்தில்

நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர் அலகுகள் வேறுபட்டிருந்தன. அடி என்பது ஆங்கில மன்னனின் பாதத்தைக் குறிப்பதாக அந்நாட்டு மக்கள் கருதினர். 'எறும்பும் தன் கையால் எட்டுச் சாண்' என்னும் பழமொழியையும் நாம் அறிவோம்! அவ்வளவு ஏன்? 'மூன்றடி மண்' என்பதற்கு மகாபலி மன்னன் கொண்ட மதிப்பீட்டிற்கும் மகாவிஷ்ணு கொண்ட மதிப்பீட்டிற்கும் உள்ள வேறுபாட்டையும் நாம் அறிவோம்! எனவேதான் வள்ளுவரும் அளக்க விரும்பிய இடங்களிலெல்லாம் நிலையாக வரையறுக்கப்பட்ட நீட்டி அளப்பதொரு கோலையே கையாளுகின்றார். ஆம்,

''கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்''

கேடும் ஒருவனுக்கு நன்மையாகவே முடியும். அவனது நண்பரின் இயல்புகளை நீட்டியளந்து மதிப்பீடு செய்வதற்கு அதனினும் சிறந்ததொரு அளவுகோல் இருக்க முடியாதன்றோ? சாதாரண அளவுகோலால் 1/10 அங்குலம் அல்லது சென்டிமீட்டருக்குத் திருத்தமாகத்தான் அளக்க முடியும். இதனினும் சிறு அளவிற்குத் திருத்தமாக அளக்கவேண்டுமானால் 'வர்னியர் காலிபர்ஸ்' போன்ற நுட்ப அளவுகோலைப் பயன்படுத்துகின்றோம். 'அளவுகோலில் நுட்பம் இன்றியமையாதது' என்ற அறிவியல் கருத்தோட்டத்தை,

''நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற''

என்னும் குறளில் கண்டு சுவைக்கின்றோம். ஆம், கண்களே ஒருவரைத் துல்லியமாக அளந்து காட்டும் 'நுட்ப அளவுகோல்'!

நீளத்தையும் அகலத்தையும் பெருக்கப் பரப்புக் கிடைக்கின்றது. இந்தப் பரப்பை அளப்பதே சதுர அளவு; சதுர அடி, அல்லது சதுர சென்டிமீட்டரை அலகாகக் கொண்டு இன்று நாம் பரப்பை அளக்கின்றோம். இன்பம், துன்பம், காமம் ஆகியவற்றை அளவிறந்து பரவச் செய்து அவற்றை அளந்து கூறுவதற்குப் 'பரப்பு அலகாக' கடலையே கைக்கொள்ளும் வள்ளுவர் அழகினை,

''கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்''

''இன்பம் கடல்மற்று காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது''

என்னும் குறட்பாக்களில் காண்கின்றோம். ஆம்; கடலின் பரப்பின் முன்னர் அதன் ஆழம் பொருளற்றுச் சுருங்கிவிடுவதால் கடலை நீள அகலங்களை மட்டும் கொண்ட ஈரளவுப் பொருளாகவே (Two dimension object) கொண்டு 'பரவை' எனப் பெயரிட்டு அழைக்கின்றோம்!

நீள அகலத்தோடு உயரத்தையும் பெருக்கினால் கன அளவு கிடைக்கும். குன்றிமணியிலிருந்து குன்றுவரை, தினையிலிருந்து பனைவரை இந்தக் கன அளவைக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். வள்ளுவரும் சிறிய, பெரிய கன அளவுகளை அளக்க முறையே குன்றிமணியையும் குன்றையும் அல்லது தினையையும் பனையையும் அலகுகளாகக்கொண்டு செயல்படும் அருமையினை,

''குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்''

''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்''

என்னும் குறட்பாக்களில் காணலாம். ஒரு பொருளின் கனத்தில் இருந்து உயரம் முற்றிலும் நீங்கினால் அது பரந்து பரந்து விரிந்து மறைவது தவிர அதற்கு வழியே இல்லை.

எடை நுட்பமும் இடை நுட்பமும்

இன்று ஒரு கிலோ பஞ்சும், ஒரு கிலோ இரும்பும் ஒப்பவைத்துப் பார்த்தால் எது கனமாக இருக்கும் எனக் கேட்டால் இரும்பே கனமாக இருக்கும் என்று விடை தருபவர்கள் பலராக உள்ளனர்! இவ்வாறே உயரத்திலிருந்து வீழும் இருபொருள்களில் எடை மிகுந்தது வேகமாகவும், எடை குறைந்தது தாமதமாகவும் வந்து பூமியில் வீழும் என்று பலர் ஒரு காலத்தில் நம்பிக்கொண்டிருந்தனர். இவர்கள் எல்லாப் பொருள்களையும் பூமி ஒரே தன்மையில் இழுக்கின்றது என்ற உண்மையை ஏனோ உணர்வதில்லை! கலீலியோ பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்தில் ஏறி ஒரு பவுண்டு, நூறு பவுண்டு எடையுள்ள இரு குண்டுகளை ஒரே சமயத்தில் விடுவித்து வீழச் செய்து அவை இரண்டும் ஒரே காலத்தில் பூமியை வந்து தொடுவதை நிறுவிக் காட்டினார். நம் வள்ளுவரோ சாய்ந்த கோபுரமும் இரும்புக் குண்டுகளும் இல்லாமல், எப்பொருளும் பூமி நோக்கி வீழ்ந்துகொண்டிருப்பதால் பொருள் அனைத்துக்கும் எடை உண்டு என்பதை இன்றைய அறிவியலாரும் பாராட்டும் வகையில் இரு சோதனை வழி நிறுவிக் காட்டுகின்றார். நுட்பமான ஒரு பொருளின் எடையைக் காண இருவேறு முறைகளை நாம் கையாளலாம். சமன்செய்து சீர்தூக்கும் கோல் நுட்பம் குறைந்ததாக இருந்துவிட்டால் ஒரு தனிப் பொருளின் எடையைக் காண முதலில் அதனையொத்த பல பொருள்களின் கூட்டு எடையைக் கண்டு பின்னர்ப் பொருள்களின் எண்ணிக்கையினால் அதனை வகுத்துத் தனிப்பொருளின் எடையைக் காண வேண்டும். இன்றும் சோதனைக்கூடங்களில் ஓர் ஈயக் குண்டின் எடையைக் காண நூறு ஈயக் குண்டுகளின் கூட்டு எடையைக் கண்டு அதனை நூறால் வகுத்து ஒரு குண்டின் சராசரி எடையைக் காண்கிறோம். வள்ளுவரும் ஒரு மயிற்

பீலியின் எடையை உணர்த்தி வலியுறுத்த இம் முறையைக் கையாளுகிறார். கருங்கற்களையும் கலங்காமல் ஏற்றிச் செல்லும் ஒரு வண்டியில் அள வுக்கு அதிகமான மயில் பீலிகளை ஏற்றி அவற்றின் கூட்டு எடையைக் கொண்டு வண்டியின் அச்சையே முறித்துக் காட்டுகிறார்.

''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''

என்னும் குறள் மயில் பீலியின் எடை ஆற்றலை விளக்குகின்றது.

நுட்பமான சீர்கோல் இருந்துவிட்டால் நுட்பமான ஒரு பொருளின் எடையை நேரடியாக உணரலாம். பல பொருள்கள் வேண்டுவதில்லை. அனிச்சப்பூ மிகவும் மென்மையானது. அது மோப்பக் குழைந்துவிடும் என்பதை நாம் அறிவோம். அதுவே எடை காணவேண்டிய பொருள்! அனிச்சத்தினும் 'மென்னீரள்' ஒரு பெண். அவளுடைய மின்னிடை நுட்பத்தைச் சொல்ல வேண்டுவதில்லை! அதுவே சமன்செய்து சீர்தூக்கும் கோல்! பாவம், அந்தப் பெண் அனிச்சப் பூ ஒன்றைக் காம்பு களையாமல் தலையில் சூடிவிட்டாள். அதன் விளைவு, அந்தோ அவள் இடை முரிந்தது! பறைகள் நல்லனவாக இனி அவளுக்கு ஒலிக்கப் போவதில்லை!! ஆம்,

''அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்
நல்ல படாஅ பறை.'' [நுசுப்பிற்கு

இனியும் அனிச்சப்பூவின் காம்பிற்கு எடை இல்லை என்று யாரே சொல்வார்? கலீலியோவின் இரும்புக் குண்டும், வள்ளுவரின் அனிச்சப் பூக் காம்பும் பைசா நகரத்துக் கோபுரத்திலிருந்து விடு விக்கப்பட்டால் அவை இரண்டும் ஒரே வேகத்தில், ஒரே காலத்தில் வந்து பூமியைத் தொடும்.

உயரமும் ஆற்றலும்

ஓடிக்கொண்டிருக்கும் ஒரு பொருளுக்கு வழியில் உள்ள தடையை மோதித் தள்ளும் ஆற்றல் உண்டு என்பதை நாம் கண்ணால் காண்கின்றோம். அதனை இயக்கவிசை (Kinetic energy) என்கிறோம். ஆனால், நிலையில் திரியாது நின்றுகொண்டிருக்கும் பொருளுக்கு ஆற்றல் உண்டா? உயரத்தில் தேங்கி யுள்ள நீர் புவிக்கவர்ச்சியின் ஆற்றலால் வீழ்ந்து செயலாற்றுவதை அறிகின்றோம். ஒரு பாறைத் துண்டு தரையில் கிடந்தால் யாரும் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால், அதே கல் சற்று உயரத்தில் ஒரு சுவரின்மேல் இருந்தால் நாம் சற்று எச்சரிக்கையுடன் அதை நோக்குகின்றோம்! இனி உயர்ந்த மலைமுகடுகளில் நின்றுகொண்டிருக்கும் கல்லுருண்டைகளைப்பற்றி நாம் என்ன நினைப்பது? அவை தம் எடைக்கும், புவிக்கவர்ச்சிக்கும், உயரத் திற்கும் ஏற்ப ஆற்றலைப் பெற்று அடக்கி வைத் திருக்கின்றன. அக் கற்கள் நிலையில் திரியாது நின்று கொண்டிருக்கும் வரையில் எவர்க்கும் இன்னல் இல்லை. சிறிது நிலைபெயர்ந்தாலோ? நிகழ்ச்சி கணநேரம் மட்டுமே நீடித்தாலும் விளைவு சொல்ல வும் முடியாத அளவிற்கு மிகுதியாகிவிடும். உய ரத்தில் இருக்கும் பொருள்கள் தம்முள் தேக்கி வைத்திருக்கும் ஆற்றலை 'உள்ளாற்றல்' (Potential energy) என்கிறோம். வள்ளுவர் குன்றின்மீது நிற்கும் கல்லுருண்டைகளைக் கண்டு கண்டு பழகி யவர். அவற்றின் ஆற்றலையும் உணர்ந்தவர். எனவேதான் குணக் குன்றின்மேல் நிற்கும் பெரி யோர்கள் நிலைமாறிச் சினந்தால் அச்சினம் கணப் பொழுதே நிற்குமாயினும் அதைத் தடுத்துக் காத் தல் இயலாது என்பதை,

''குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது''

என்னும் குறட்பாவினால் உருவகப்படுத்திக் குறிப் பிடுகின்றார்.

ஒளியும் ஒலியும்

உள்ளத்தில் மிகும் உணர்ச்சிகளை முகம் அடுத்தது காட்டும் பளிங்குபோல் எடுத்துக் காட்டும். உள் ளத்தில் எழும் கருத்துகள் கண்களால் ஒளியாகவும், வாயால் ஒலியாகவும் வெளிப்படுகின்றன. ஒளியும் ஒலியும் அலைகளாக அசைந்து பரவினாலும் அவற் றிடையே வேற்றுமைகள் மிகுதியாக உள்ளன. வள்ளுவர் ஒளியையும் ஒலியையும் நுட்பமாக வேறுபடுத்தி ஒரு கோட்பாட்டைத் (Theory) துணிந்து கூறிவிட்டார்.

''கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின்
என்ன பயனும் இல'' [வாய்ச்சொற்கள்

என்பதே அது. இந்தக் கோட்பாட்டைச் சோதனை வழி நிறுவ முற்பட்ட பேரறிஞர்களையும் பின்னா ளில் காண்கின்றோம். இதற்கெனச் சாத்தனார் கண்ணுக்கு வழியும், காதுக்குத் திரையும் கொண்ட தொரு சோதனைக் கூடத்தையே உருவாக்கிவிட் டார்! மணிமேகலையையும் உதயகுமாரனையும் பிரித்து வைக்க இருவருக்கும் இடையில் அவர் எழுப் பிய புதுமைச் சுவர் ஒளிக்கு வழிவிடும்; ஆனால் ஒலியைத் தடுத்து நிறுத்திவிடும். ஆம்; அச் சோத னைக்கூடம்,

''விளிப்பறை போகா மெய்புறத் திடூஉம்
பளிக்கறை மண்டபம்!''

உதயகுமாரன் மணிமேகலையைப் பார்த்தான். மணிமேகலை உதயகுமாரனைப் பார்த்தாள். ஆனால் உதயகுமாரன் பேசிய ஆர்வ மொழிகள் மணிமேகலையின் செவிகளைச் சேரவில்லை.

மணிமேகலை பேசியிருந்தாலும் உதயகுமாரன் கேட்டிருக்கமாட்டான்; கண்ணும் கண்ணும் உறவாடின; வாய்ச்சொற்கள் பயனற்றுப் போகும்படி பளிங்குச் சுவர் வழியடைத்துவிட்டது! சோதனையின் முடிவு வள்ளுவருக்கு வெற்றியைத் தேடித் தந்தது. வாய்ச்சொல் பயனற்றுப்போன நிலையிலும் உதயகுமரன், மணிமேகலை காதல் வளரவே செய்தது. வள்ளுவர் கோட்பாடு தக்க சோதனைவழி அறிவியல் அடிப்படையில் நிறுவப்பட்டுவிட்டது. இனி, கம்பர் போன்ற பிற்காலத்தோர்,

''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்''
''இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்''

என்று எளிதில் சொல்லிச் செல்லலாம்!

மறைக்கும் திங்களும் மறையும் திங்களும்

தலைவி ஒருத்தி, தலைவனைச் சென்று கண்டாள் என்ற செய்தி ஊர் முழுவதும் அலராகப் பரவி விட்டது. இக் கொடுமையை எடுத்து மொழியும் தலைவி,

''கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று''

எனக் கூறியதாக வள்ளுவர் பேசுகிறார். இங்கு வள்ளுவர் 'ஞாயிற்றைப் பாம்பு கொண்டற்று' என்று பேசாமல், 'திங்களைப் பாம்பு கொண்டற்று' என்று ஏன் பேசுகிறார் என்பதற்கு மணக்குடவரோ, பரிமேலழகரோ, மற்ற உரையாசிரியர்களோ விளக்கம் கூறியிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும்! வள்ளுவர் ஞாயிற்று மறைவையும் (Solar eclipse) ஆய்ந்திருக்கின்றார்; திங்கள் மறைவையும் (Lunar eclipse) ஆய்ந்திருக்கின்றார். இரண்டிற்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டையும் அறிந்திருக்கின்றார்.

ஞாயிற்றை நம் பார்வையிலிருந்து தன்னொளியற்ற திங்களுருண்டை குறுக்கிட்டு மறைப்பதால் ஞாயிற்று மறைவு ஏற்படுகிறது. ஆனால், பூமியின் நிழலில் திங்கள் அகப்பட்டுக்கொண்டு இருளுவதால் திங்கள் மறைவு ஏற்படுகிறது. எனவே, ஞாயிறு திங்கள் வழியாக வரும் நேர்கோட்டில் இருப்பவருக்கு மட்டுமே ஞாயிற்று மறைவு புலப்படும். பூமியின் மற்ற இடங்களில் உள்ளவர்கள் ஞாயிற்று மறைவை—ஞாயிற்றைப் பாம்பு கொள்வதை—காண முடியாது. சென்னையில் இருப்பவர் ஞாயிற்று மறைவைக் காணும்போது கல்கத்தாவிலோ கன்னியாகுமரியிலோ இருப்பவர்கள் அதனைக் காண முடியாமலும் இருக்கலாம்! ஆனால் திங்கள் மறைவின்போதோ, நிலைமை முற்றிலும் வேறாக உள்ளது. திங்கள்மீது பூமியின் நிழல் படிவதை—திங்கள் பாம்பு கொள்வதை – பூமியிலிருந்தபடி திங்களைக் காணும் வாய்ப்புடைய அவ்வளவு பேராலும் காண முடிகிறது! வேறு வார்த்தைகளில் விளக்க வேண்டுமானால் ஞாயிற்றைக் கண்விழித்துக் கண்டுகொண்டிருக்கும் உலகத்தின் பகுதியிலுள்ள அவ்வளவு பேருக்கும் ஞாயிற்று மறைவு தெரிவதில்லை. ஆனால் இரவுக் காலத்தில் திங்களைக் காணும் வாய்ப்புடைய உலகப் பகுதியிலுள்ள அவ்வளவு பேருக்கும் திங்கள் மறைவு புலப்படும்.

தலைவன் தலைவனைக் கண்டது ஏதோ ஒரு நாள் தான்! அதனால் உண்டான அலரோ, 'திங்களைப் பாம்பு கொண்டது' போன்று தலைவியை அறிந்த அவ்வளவு பேருக்கும் (ஞாயிற்றைப் பாம்பு கொண்டது போன்று சிலருக்கு மட்டுமன்று) பரவிவிட்டது! அலர் அதிக அளவில் பலர் அறியும்படி பரவிற்று என்பதை வற்புறுத்தவே வள்ளுவர் 'ஞாயிற்றைப் பாம்பு கொண்டற்று' என்னாமல் 'திங்களைப் பாம்பு கொண்டற்று' எனக் கூறுகிறார்.

சொல் வணக்கமும் வில் வணக்கமும்

மீள்வன்மையோடு (elasticity) கூடிய பொருளை 'வில்' என அழைக்கின்றோம். அத்தகைய பொருள்கள் தகைவால் (Stress) திரிபடைந்து வளையும் போதும், நீளும்போதும் மீட்சியெல்லையைக் கடவாமல் இருந்தால் மட்டுமே பழைய நிலைமையை மீண்டும் எய்தும். அந்நிலையில் தகைவும் (Stress) அது ஏற்படுத்துகின்ற திரிபும் (Strain) சமவிகிதத்தில் இருக்கும். வணங்கி வளையும் வில்லும் மீட்சி எல்லையைக் கடந்தால் இராமன் கைப்பட்ட மிதிலை வில்லாக இற்றுவிடும்! எனவே, வில் வணங்குவது மீண்டும் நிமிர்ந்து அம்பைப் பாய்ச்சுதற்கே என்பதை நினைவுபடுத்தும் வள்ளுவரும்,

''சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க
தீங்கு குறித்தமை யான்'' [வில்வணக்கம்

எனக் கூறுகின்றார். ஆம், பகைவர்கள் சொல்லால் வணங்கிக் கெஞ்சுவது மீட்சி எல்லையைத் தொடாது மீண்டும் நிமிர்ந்து நின்று மிஞ்சுவதற்கேயாம்!

துணிதலும் தெளிதலும்

ஒரு பொருள்பற்றிய உண்மையைக் காணவேண்டுமானால் முதலில் அப் பொருளைக் கண் திறந்து காண வேண்டும். அதே சமயத்தில் 'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' என்னும் பழமொழியையும் அறிவியல் பாதையில் நடக்க விரும்புவோர் மறந்துவிடல் ஆகாது. எனவேதான் வள்ளுவரும்,

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'' [பொருள்

என்று வலியுறுத்திச் செல்கின்றார். மேலும், காண வேண்டிய பொருள்களைக் கசடு நீங்கக் கண்ட பிறகு அது அப்படி இருக்குமா? இப்படி இருக்குமா? என்று அய்யுற்று ஆய்ந்து இப்படித்தான் இருக்க முடியும் என்று துணிந்து நிற்கவேண்டும். இவ்வறிவியல் படிகளையே,

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என அறிமுகப்படுத்திச் செல்கின்றார். கற்றதற் கேற்பத் துணிந்து நில்லாமல் தொடர்ந்து அய்யுற்று ஊசலாடிக்கொண்டிருந்தால் உண்மையை ஒரு நாளும் தெளிய முடியாது! துணிதலையும் தெளிதலையும் அருமையாக விளக்கிச் செல்கிறார்.

''ஒற்றொற் றுணராமல் ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்''

என்னும் குறட்பாவில்! ஆம், ஒற்றாடல் அறிவியல் அடிப்படையில் நிகழவேண்டுமானால் ஓர் ஒற்றனை மற்றொரு ஒற்றன் அறியாதபடி ஆள வேண்டும். அவ்வாறு ஆளப்பட்ட ஒற்றர் மூவரின் முடிவான சொல்லும்ஒத்திருந்தால் மட்டுமே அவர் கொணர்ந்த செய்தியினை உண்மையாகக் கொள்ளவேண்டும். உண்மையைக் காண ஒற்றர் இருவரையோ, ஒற்றர் நால்வரையோ கொள்ளாமல் ஒற்றர் மூவரைக் கொள்வது ஏன் என்ற கேள்வியை உரையாசிரியர்கள் எழுப்பி விடை கூறியிருப்பார்களானால் நலமாயிருந்திருக்கும்.

ஒற்றாடல்பற்றிப் பேசும் வள்ளுவர் தொடக்கத்திலேயே 'ஒற்றும் உரைசான்ற நூலும்' மன்னவனது கண்கள் எனச் சுட்டிச் செல்கின்றார். ஆம், அளவை முறைவழி அமைந்த அறிவியல் ஆய்வுநெறிபற்றிப் பேசும் நூலே 'உரைசான்ற நூல்' ஆகும். நாம் ஒரு புள்ளியை மையமாகக் கொண்டு ஒரு வட்டத்தையோ, வட்டத்தின் பகுதியையோ(arc) எளிதில் வரைந்துவிடலாம். ஆனால், வட்டத்தின் பகுதியை வைத்துக்கொண்டு அதன் மய்யப் புள்ளியைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதான செயல் அன்று. அதற்கு 'ஒற்றாடல்' தேவைப்படுகின்றது! வட்டப் பகுதியின் ஓரிடத்திலிருந்து செங்குத்துக் கோட்டுப் பாதையில் ஓர் ஒற்றனை நடந்து முன்னேறச்செய்ய வேண்டும். இப்பொழுது அவன் சென்ற பாதையில் எங்கோ ஓரிடத்தில் நாம் தேடுகின்ற மய்யம் இருக்கிறது எனக் கொள்ளலாம். ஆனால், எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்றுமட்டும் நம்மால் முடிவு செய்துவிட முடியாது! அதற்கு வட்டப் பகுதியின் முற்றிலும் வேறானதொரு இடத்திலிருந்து செங்குத்துக்கோட்டுப் பாதையில் இரண்டாவது ஒற்றன் ஒருவனை அனுப்ப வேண்டும். அவன் சென்ற பாதையிலும் நாம் தேடுகின்ற மய்யம் இருந்தாக வேண்டும்! மய்யம் முதல் ஒற்றன் பாதையிலும் உள்ளது; இரண்டாவது ஒற்றன் பாதையிலும் உள்ளது என்றால் இவ்விரு பாதையும் சந்திக்கும் இடத்தில்தான் அந்த மய்யம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்துவிடலாம்! ஆனால் ஒன்று, ஒற்றர் இருவருள் ஒருவன் வட்டப் பகுதிக்குச் சரியான செங்கோட்டுப் பாதையில் செல்லாமல் சற்று வழுவியிருந்தாலும்கூட வட்டப் பகுதியின் மய்யம் பற்றி நாம் கொண்ட முடிவு பொய்த்துவிடும்! ஒற்றர் இருவரும் தம் கடமையினின்று தவறவில்லை என்பதை எப்படி அறிவது? இங்குதான் அரசனுக்கு மூன்றாவதாக ஓர் ஒற்றனின் உதவி தேவைப்படுகிறது! மூன்றாம் ஒற்றன் மற்ற ஒற்றர்கள் இருவர் பற்றிய எந்தச் செய்தியும் அறியாதவனாக வட்டப் பகுதியின் முற்றிலும் புதியதோர் இடத்திலிருந்து செங்கோட்டுப் பாதையில் சிறிதும் வழுவாமல் செல்கிறான். அவன் செல்லும் பாதையும் இருவர் பாதையும் ஒன்றை ஒன்று வெட்டும் இடத்தில் சந்தித்தால் முதல் இருவரும் சரியாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதுடன் அரசன் கொண்ட முடிவும் சரியானது என ஏற்படுகிறது! வட்டப் பகுதியின் மய்யத்தைக் காண இரு செங்குத்துக் கோடுகள் தேவை. கண்ட முடிவைச் சரிபார்க்க மூன்றாவது செங்குத்துக் கோடு பயன்படுகிறது. நான்காவது கோடு தேவை இல்லை! ஆயிரம் செங்கோடுகள் ஆயிரம் இடங்களிலிருந்து வரைந்தாலும் அவை மய்யத்தின் வழியாகவே செல்லும். மேற்கொண்டு புதிய செய்தி எதனையும் அவை தரமாட்டா. அரசனுக்கு உண்மை காண ஒருவரை ஒருவர் அறியாத மூன்று ஒற்றர்களே தேவை!

அறிவியல் சோலை

தமிழ் இலக்கியம் அறிவியல் மணம் கமழும் பசுஞ்சோலையாகத் திகழ்கின்றது. அறிவியல் தமிழர்கள் அதனைக் கண்டு மகிழ்வதற்கு முன் வருதல் வேண்டும்.

வாழ்க இலக்கியம்!

வளர்க அறிவியல் கருத்துகள்! !

வில்லுப்பாட்டு தோற்றமும் வளர்ச்சியும்



'கலைமாமணி' கவிஞர் சுப்பு ஆறுமுகம்

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!'' என்று மணிவாசகப் பெருந்தகையார், இறைவனுக்குச் சூட்டிய சொல் மாலையை நாம் வில்லிசைக் கலைக்கும் சூட்ட வேண்டும். முத்தமிழ்க் கலைகளிலே மூத்த கலை வில்லுப் பாட்டு; இது மட்டுமல்ல, முத்தமிழும் இணையும் ஒரு கூட்டுக்கலை, பாட்டுக்கலை, நாட்டுக்கலை!

மிகவும் மூத்தது வில்லுப்பாட்டு என்னும் ஒரு தகுதியால் மட்டும், இந்தக் கலை தனக்குரிய சிறப்பை யாரிடமும் இரந்து கேட்கவில்லை! முந்தியவை யாவுமே வந்தனத்துக்குரியதல்ல; முந்தியிருக்கும் சகதியினும் பிந்தி வந்த தாமரையே பெருமைக்குரியது. முந்தினாலும் ஒரு சிறப்போடு முந்தியிருக்க வேண்டும். அந்தச் சிறப்புதான், தந்தனத்தோம் வில்லிசையின் தலைமுறைச் சிறப்பாகும். மயிலின் மூத்த குஞ்சுதான் கொண்டைப் புகழ் கொண்டது என்பர். அவ்வண்ணம் புகழ் கொண்டது பண்டைத் தமிழ் வில்லுப்பாட்டு!

மண்ணுக்குள் தங்கிய மரத்துண்டுகள், யார் கவனிப்புமின்றியே பல்லாயிரம் ஆண்டுகள் புதையுண்டு கிடந்து, ஒரு கதையென்று வளர்ந்து, தன்னை நம்பியே தான் வாழ்ந்து, தன்மான ஒளியேறி ஏறி, பின்னொரு நாளில் வைரமாக வளர்ந்துவிடுகிறதே; அந்த வைர வரலாறுதான் வில்லிசையின் வாழும் வரலாறு!

பாணர்கள் மீட்டும் யாழுக்கு அன்னையே வில்லிசைக் கருவிதான் என்பது இசைப்புலவர்களின் பொருந்தும் ஆராய்ச்சியாகும்! வில்லிலே மாட்டுத் தோலை உரித்து இரு துருவங்களையும் வளைத்து இணைந்துக் கட்டி, கைக்கருவியாகிய வீசுகோலால் தட்டும்பொழுது பிறப்பதே 'தனத்-தனத்' ஒலி! அதைத் தழுவியவண்ணம் வில்லின் ஓரத்தில் தாயைத் தழுவிய குழந்தைகள்போலிருந்து ஒலிப்பதே மணிகளின் நாதம்! இதில் முதலில் பிறந்த ஒலியைத் தொடர்ந்த சிந்தனைதான், யாழ்! இன்றும் வில்லைக் குறிப்பிடும்போது, விவரம் அறிந்தோர் 'ஆதியாழ்' என்றே சிறப்பாகச் சொல்வர். தோலை உரித்துக் கயிறு போலாக்கித் தட்டும்போது இந்த நாதமெனில், இதனினும் மெல்லிய நரம்பினைக் கட்டி விரலினால் மெதுவாக மீட்டிக் கேட்டுப் பார்ப்போமா? இதுவே வில்லைத் தொடர்ந்த சிந்தனை!

வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் என்றாரே, அதுபோல் வில்லின்வழி யாழ் பிறக்க அதில் வீணை மகள் என்றொரு நாதக் குழந்தை பிறந்தது! ஆக, வில்லிசைக் கருவி என்னும் பாட்டியின் செல்லப் பேத்திதான் சிங்கார வீணை!

இவ்வண்ணமே வில்லுப்பாட்டுக் கலையின் தோற்றமும், விரும்பி அறிந்துகொள்ள வேண்டிய கலைகளில் ஒன்றாகும்!

எந்த இசைக்கருவிக்கும் இல்லாத சந்தச்சுகம் மட்டுமல்ல, இறைமையும் வில்லுக்கு உண்டு!

கதைகள் பல கூறுவதையே பிறவிக் கடமையாகக் கொண்டிருக்கும் வில் தோன்றிய கதை வணக்கத் துக்குரியதாகும்!

தென் பாண்டி நாட்டிலே, ஒரு குறுநில மன்னன் வீரர்களையும் தன் பரிவாரங்களையும் கூட்டிக் கொண்டு காட்டுக்கு வேட்டையாட வந்தான். அன்று நல்ல வேட்டை! சிங்கம், புலி, கரடி முதல் மான், நரி, மத்தகம் வரை அத்தனையும் வேட்டையாடிக் களித்தான்! அந்த வனத்தின் மர(ற) நிழலில், மன்ன னும் கூட வந்தோரும் குளுமையைச் சுவைத்துக் கொண்டிருந்தனர்! அந்தி வேளை வந்தது. அனை வரும் கூடாரங்களில் வந்து இளைப்பாறினர். எங்கோ ஒரு மான்! ஏதோ ஒரு புலி! ஒரு மத்தகம்! குற்றுயிராக கிடந்தழும் அவல அழுகைக் குரல்கள் மன்னனின் செவியைச் சிந்தனையை முற்றுகையிட் டன....!

மேதினி ஆள்வோனின் மெழுகு உள்ளம் உருகி யது. இருவிழிகளும் அதனை அள்ளி அள்ளி வெளியே கொட்டிக்கொண்டிருந்தது!

''வாழும் உயிரினை வாங்கிவிடல்— இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்!
வீழும் உயிரை எழுப்புதலோ — ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதய்யா!

என்னும் இருபதாம் நூற்றாண்டுக் கவிமணியின் இதய ஒலி, அந்த முடிவேந்தனின் இதயத்தில் முந்திப் போய் ஒலித்ததோ!

சிறு பிள்ளையைப் போல் தேம்பித் தேம்பி அழு தான்!

செத்துக்கொணடிருந்த கால், அரை, முக்காற் புள்ளிகள் இதற்குள் முற்றுப்புள்ளிகள் ஆகிவிட் டன!

''இறைவா! நான் மன்னனாம்! மனிதனாம்! மதி யிலும் விதியிலும் உயர்ந்தவனாம்! தென்பாண்டி மாநில ஆட்சி என்னதாம்! என்னை மதிக்கிறார்கள்! துதிக்கிறார்கள்! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்து கிறார்கள். ஆனால், வேட்டை என்ற பெயரால் வெறியாட்டம் நடத்திக்கொண்டிருக்கிறேனே; சாய்ந்துவிட்ட ஒரு மான் குட்டியின் உயிரைக்கூடத் திருப்பிக் கொடுக்க முடியாத என் கரங்களில்தான் எத்தனை எத்தனை சட்டங்களின் பின்னல் வேலை கள் நடந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது என் மனச்சான்று என்னை வேட்டையாடுகிறதே! ஆடட்டும்! நன்கு ஆடட்டும்! எனது கொல்லும் அறிவைக் கொல்லட்டும்! கொல்லாமை என்னுள் கொலுவிருந்து ஆடட்டும்! வாழட்டும் உலக உயிர் கள்! ஆண்டவன் எழுதிய உயிர்ச் சித்திரங்களை அழிக்க நான் யார்? அவன் படைத்த உயிர்ப் பொம்மைகளை உடைக்க நான் யார்? ஊரும், நாடும், காடும், மலையும், என் மனையின் கொலுப் படிகள் அல்லவே! அமைச்சரே!''

''மன்னா! தன்னை உணரும் தங்களுக்குத் தகுந்த பரிகாரம் கூறுகிறேன்—கொலைக்கருவி, கலைக்கருவி ஆகட்டும்! இதுவரை தோளில் கிடந்த வில்லை மடியின் பக்கம் படுக்கப்போடுவதுபோல் போட்டு, கீழ்நுனியில் ஒரு கயிறு கட்டி, அசையாவண்ணம் வில்லின் அடிப்பகுதியை, அதோ காட்டுத்தேன் கொண்டுபோக கொண்டுவந்திருக்கிறோமே—மண் குடம்—வில்லோடு இணைத்துக் கட்டி, அம்பறாத் தூணியிலிருந்து அம்புகளை எடுத்துத்தாளத்தோடு தட்டித் தட்டி தமிழில் பாடுங்கள்! தலைமுறைப் பாவங்கள் எல்லாம் நீங்கும்! தமிழ்மறை திருக்குற ளைப் பாடுங்கள்! கம்பராமாயணத்தைப் பாடுங்கள், முத்தமிழ்க் காப்பியத்தைச் சிலம்பொலி செய்யுங் கள்! புறம், அகம் இதற்குப் புறம்பானதல்ல! ஒல்காப்புகழ் தொல்காப்பியம் முதல் நல் காப்பியங்களை எல்லாம் வில் காப்பியமாக - சொல் காப்பியமாக - வில்லிசைத்துப் பாடுங்கள்!''

அவ்வளவுதான்!

அரசன் மடியிலே வில்லிசைக்கலை பிறந்து விட்டது! அருகிருந்த அனைவரும் கூட்டுக்குரல் கொடுத்தனர்! ஆமோதித்தனர்! ச...ரி...சம...... மா...க...ப...த...மா...க...நீ... என்ற சப்த ஸ்வரம் வேண்டுமானால் ஏற்றத்தாழ்வோடு இசையாய் ஒலிக்கட்டும்! ஆனால், நாம் நமக்குள் பதமாக நீ சரிசமமாக.... அமர்ந்து பாடுவோம்! என்று கதை பாட ஆரம்பித்தான், பூவேந்தன்! காளிதாசன் நாவில் எழுதிய சக்தித்தாய் இந்தக் காவலன் நாவி லும் எழுதினாளோ! அவன் கவியரசன்! இவன் புவியரசன்—என்ற கட்சி பேதம், கலைமகளிடம் ஏது...?

இவ்வாறு ஒரு வித்தையையே வேட்டையாடி வந்த வேந்தன், இயலிசைப் புலவர்களை அழைத் தான்! இந்த வில்லிசைக்கலைக்கு ஒரு புதிய உருவம் வேண்டினான்! இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கேட்டான்!

வில், உடுக்கை, குடம், தாளம், கட்டை ஆகிய ஐந்து கருவிகள் தொடக்கத்தில் பயன்பட்டன. வளர வளர பம்பை, உருமி, தக்கை, துந்துமி ஆகிய கருவிகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. 'தன்தன்' என்று குடம் ஒலிக்க, 'தனத் தனத்' என்று வீசு கோல் பேச, 'ஓம்ஓம்' என்று உடுக்கை ஓங்கார நாதம் முழங்க, 'தந்தனத்தோம்' – என்று சொல் லியே வில்லினில் பாட வந்தருள் புரிந்துகொண் டிருந்தாள், கலைமகள்!

ராஜ கம்பீர நாடாளும் நாயகனிடம் தோன்றிய நாட்டுப்புறக்கலை, ராஜகம்பீரத்தோடு நாடாண்டு, வீடாண்டு, நல்ல பல கோவில் சன்னிதிகளை ஆண்டு

ஆளும் மன்னவனின் கொலு மண்டபங்களை ஆண்டு, பல்லாண்டு பல்லாண்டு வளர்ந்து வந்தது.

''குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி''

என்ற கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படை (வரிகள் 180-182) வில்லின் மூத்த புகழைக் காத்து வைத்திருக்கிறது. வைணவம் ஓங்கிய காலத்தில் வில்லை நேசித்து இராமபிரானை நினைத்து இக்கலைக்கு இடம் கொடுத்தனர்! சைவம் கொடிகட்டிப் பறந்த மண்டலங்களில் சிவபெருமானின் உடுக்கை ஒலியை இதில் கேட்டுச் சிவனே வந்ததுபோல் கருதிக்கொண்டாடினர்! இரண்டும் ஒன்றே என்னும் பெருமக்கள் இக்கலை, இரண்டையும் இணைக்கும் பாலம் என்று போற்றிப் புகழ்ந்தனர்.

இன்னொரு சிறப்பும் இக்கலைக்கு உண்டு. தேசிய ஒருமைப்பாட்டையே வில்லுப்பாட்டில் காணலாம். 'வில்' என்றால் நமக்கு உடன் நினைவு வருவது 'இராமேசுவரம்'; 'உடுக்கை'யெனில், 'காசி விசுவநாதர்'; வடக்கையும் தெற்கையும் இவ்வாறு வாழ்த்தி இணைத்து வரும் கலையைச் சுவைப்பது மட்டுமா? வணங்கவும் வேண்டுமே. தெய்விகத்தின் மூலம் தேசியத்தைக் காணவும் இக்கலை வழி வகுக்கிறது.

''மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே''

என்ற சாத்தனாரின் கூத்த நூல், உடுக்கையின் மிடுக்குபற்றி அடுக்கியுரைக்கின்றதுவே!

''உடுக்கையில் பிறந்தது ஓம்எனும் ஒலியே
ஓம்எனும் ஒலியே நாட்டியத்து ஒலியாம்''

இவ்வாறு கூத்த நூலில், தொடர்ந்து வில்லிசைக் கருவியாகிய உடுக்கையின் வெற்றிக் குரலைக் கேட்க முடிகிறது.

கால வெள்ளத்தில், எத்தனையோ கதைகள்! வில்லிசையிலே பிறந்தன! நீலி கதை, கண்ணகி கதை, மகிடாசூரன் கதை, இரணியன் சம்ஹாரம், சுடலைமாடன் கதை, ஐயனார் கதை, வள்ளியம்மன் கதை, பார்வதியம்மன் கதை, மார்க்கண்டன் தபசு, அரிச்சந்திரன் கதை, கிருஷ்ணசாமி கதை, குசேலர் கதை, பெருமாள்சாமி கதை, மாகாளியம்மன் கதை, வில்லடிச்சான் கதை (அதாவது, இராமாயணத்துக்கு மறுபெயர்), மகாபாரதக் கதைகள்—எல்லாம் வில்லிசையில் மலர்ந்த கதைகள்! நாட்டுப்புறத்து இசையிலே மலர்ந்த சொல்லிசை பூக்கள்! இவ்வாறு நுகர்வார் சிலருக்காக மட்டும் மலர்ந்திருந்த காட்டுப்பூ போன்ற வில்லிசைக் கலையை, நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன் படும்வண்ணம் பண்படுத்தித் தந்த முதல் பெருமை — இந்த இருபதாம் நூற்றாண்டில் — கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களையே சாரும்! பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் சீர்திருத்தக் கருத்துகளை வில்லுப்பாட்டு மூலம் நாட்டு மக்களுக்குச் சொன்ன அழியாப் புகழும் இவருக்கே உரியது!

வில்லிசை உலகில் வித்தகர்களாகப் புகழ்பெற்ற இன்னும் சில மேதைகளை இங்கு நினைவில் கொள்வது பொருந்தும். எனது தமிழாசிரியர் நெல்லை வித்துவான் திரு. அ. க. நவநீதகிருஷ்ணன் அவர்களின் 'கப்பலோட்டிய தமிழன்' — வில்லுப்பாட்டு நூல் வில்லிசை உலகுக்கே ஒரு கலங்கரை விளக்கம். தமிழ்ப் பேராசிரியர் திரு. தி. சி. கோமதிநாயகம் அவர்கள் எழுதிய 'தமிழ் வில்லுப்பாட்டுகள்' — எனும் ஆராய்ச்சி ஏடு நமக்குக் கிடைத்த பெரும் பேறு!

தோவாளை சுந்தரம் பிள்ளை, நெல்லை புலவர் ஐயம் பிள்ளை, சாத்தூர் புலவர் பிச்சைக்குட்டி, கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு முதலியோருக்கு இக் கலையின் வரலாற்றில் பெரும்பங்கு உண்டு. தனித்தனி பாணியில் இவர்கள் வில்லிசையை கண்ணாகப் போற்றி வளர்த்தார்கள்; வாத்தியக் கருவிகளை இவர்கள் கையாணடதில் வேறுபாடு இருந்த போதிலும், வில்லிசைத் தாளமே இவர்களின் நாடித் துடிப்பாக இருந்து நாட்டு மக்களை மகிழச் செய்தது.

நமது வானொலி நிலையம், தொலைக் காட்சி நிலையம் இவ்விரண்டு அமைப்புகளுக்கும் வில்லிசைக் கலையின் வளர்ச்சி வரலாற்றில் மிகச் சிறந்த இடம் உண்டு. இன்றும் தேசியத் தலைவர்கள், தேச முன்னேற்றத் திட்டங்கள் ஆகியவற்றை மக்களுக்கு நன்கு எடுத்துச் சொல்ல வில்லிசைக் கலை பயன்பட்டு வருகின்றது.

நமது தமிழக அரசு, கிராமியக் கலைகளுக்கு ஊக்கம் அளிக்கும்பொழுதெல்லாம் வில்லிசைக் கலைக்குச் சிறப்பிடம் தந்து வளர்த்துவருகிறது. தமிழக அரசின் சார்பில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னையில் நடத்திய கிராமியக் கலைவிழாவில் (1978) வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை இரண்டு நாள்கள் நடத்திச் சிறப்பித்தது. இன்னும், இன்றும், எங்கும் நடக்கும் அரசு விழாக்களில் வில்லிசை முழக்கத்தைக் கேட்கலாம்.

வில், வயிரம் பாய்ந்த பனையில் செய்யப்பட்டதாயினும், வானவில் போல வளைந்து கொடுத்துக் காட்சியளிக்கிறது. அவ்வண்ணமே இக் கலையும்

சாதி சமய பேதமின்றி, மேலும் படித்தோர் பாமரர் வேற்றுமையின்றி, மக்களுக்கு நடுநாயகமாக இருந்து, நல்ல கருத்துகளை வழங்கி வருகிறது.

நாடு தழுவிய கலையாக, இக்கலை நல்லதோர் ஏற்றம் பெற்றுவிட்ட இந்தக் காலத்தில், வில்லிசைக் கலைஞர்கள், முற்றிலும் மக்கள் கலையாகவே இதை மாற்ற முயலவேண்டும். இதற்கென்றே இசைவளம் செழித்திருக்கும்போது, இரவல் இசையை இரந்து பெறுவானேன்?

நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தொட்ட நேரப் பலன், இக்கலையிலிருந்த அவலச் சுவைகளெல்லாம் நீங்கிவிட்டன! சிரிக்கவும் சிந்திக்கவும் என்றே இந்தச் செந்தமிழ்க்கலையைக் கலைவாணர் சீர்திருத்தி வெற்றி பெற்றிருக்கிறார். ஆகவே, இயல், இசை, நாடகம் — முத்தமிழ் மட்டுமல்லாது, நான்காவது தமிழ் என்று ஒன்றை வகுத்தேனும், அதற்கு 'நகைச்சுவைத் தமிழ்'- என்று பெயரிட்டேனும், நாலும் அறிந்துகொண்டு நாலும் தெரிந்தவராக வில்லிசைக் கலைஞன் மேடைக்கு வந்தால்தான், நாலுபேர் பாராட்டும் வண்ணம் நல்லபடி வளர முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், எனது வில்லிசை நிகழ்ச்சி ஒன்றுக்கு, கடலூரில், தலைமைதாங்கி வாழ்த்தும் பேறு எனக்குக் கிடைத்தது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக் கட்டளைப்படியே, இன்னும் வில்லிசை நிகழ்ச்சிகளை நான் நடத்தி வருகிறேன்.

அன்னாரை வணங்கித் தொடங்கும் வில்லிசைக் கலையிலே அவரது வாழ்த்துகளையே எல்லா அரங்கங்களிலும் பெற்றுவருவதாக நான் உணர்ந்து மகிழ்ச்சியடைகிறேன்.


'பேரறிஞர் அண்ணாவின் வரலாறு' எனும் வில்லுப்பாட்டில் எனது அன்புக் கவிதை. அவருக்கே காணிக்கையாக்கி, எனது கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

(வில்லிசைப் பாடல்)

அன்பினில் சிறு குழந்தை!
அறிவினில் இமயமலை!
பண்பினில் திருக்குறளாம்! — அண்ணா
பாசத்தின் இன்னுருவாம்!

பார்க்கப் பத்தாயிரம் பேர்
பழகப் பத்து லட்சம்பேர்!
பாதையில் எண்ணற்றபேர்! — அவர்க்கு
பகையிடமும் நல்ல பேர்!

'அண்ணா வாழ்க!' — என்று சொல்லும்
ஆறெழுத்துக் குள்ளேதான்
தமிழர்கள் தலையெழுத்து — இருக்
தம்பி நான் பாட வந்தேன்!



அகவொழுக்கம்

'திருக்குறள் பீடம்' அழகரடிகள்

ஒருநாள் காலை 9 மணி இருக்கும். ஆசிரியர், நீராடி வழிபாடு முடித்துக்கொண்டு கடவுளுக்குப் படைத்த படையலை உண்டபின், சிலர்வந்து 'அகவொழுக்கம்' பற்றிக் கேட்டனர். வழிபாடு முடித்து வந்தமையால், உண்மை பளிச்சென்று புரிந்தது. கேட்டவர்க்குப் பின் வருமாறு விடை சொன்னார் ஆசிரியர்.

'அகவொழுக்கம் என்பது உள் ஒழுக்கம். புறவொழுக்கம் என்பதும் அதிலிருந்தே தெளிவாகும். அதாவது, வெளிமுக ஒழுக்கம்.'

உள்ளொளி

இவ்வாறு விடை சொன்னபின், வந்தவரில் ஒருவர், 'உள்ளொளி' என்றால் என்ன? அதில் விளங்குவது எது? என்று கேட்டார்.

நமக்கு, மெய் வாய் கண் மூக்கு செவி என ஐந்து பொறிகள் உள்ளன. இவற்றால் அறியப்படுவன புலன்கள்; மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்று உட்கருவிகள் உண்டு. மேலும் உண்டு; அவற்றில் மனம் என்பது, மெய் வாய் முதலான பொறிகளில் புகுந்து உலகச் செய்திகளை உணர்கின்றது. அது உள் கருவியாய் இருத்தலால், 'உள்ளும் நோக்கு கிறது; புறத்திலும் நோக்குகிறது.' புறத்தில் பொறி யால், பகலவன் நிலவு விண்மீன்களின் ஒளி உண் டாகிறது. அகத்திலும் அகக்கருவிகளால் கடவுள் ஒளி உண்டாகிறது. மனம் முதலிய அகக் கருவிகள் உள்ளே திரும்பி, உயிர்க்குள் உள்முகமாகக் கலந் திருக்குங் கடவுளை அறிதலே 'உள்ளொளி'யாகும். எல்லாரிடமும் கடவுள் உள்ளே கலந்திருக்கிறார். அதற்கும் அகமான பொருள் வேறு எதுவும் இல்லை. 'மனம்' முதலான அகக்கருவிகள் ஒளி பெறுதலே 'உள்ளொளி' எனப்படும்.

''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி''

என்றார் மாணிக்கவாசகர். இங்கே ஞானம், 'உள்ளொளி' எனப்பட்டது. மனம் முதலியன உள்ளே இருத்தலாலும், அவைதாமும் உயிரும் ஞான ஒளி பெறுதலாலும், அங்ஙனம் பெயராயிற்று. ஞானத்தால் விளங்குவது கடவுள்; 'ஊனினை உருக்கி' என்றது, உடம்பை அதற்கேற்றபடி ஒழுகச் செய்வது. இவ்வாறு திருவாசகத்தில் வந்தது. இதை 'உண்முகப்படுதல்' என்று சொல்வதும் உண்டு. கடைசி அகப்பொருள், கடவுள் என்பது.

அம்மையப்பர்

கடவுளை – கடவுள் என்றும், அவர் திருவருள் என்றும் – அம்மையப்பராக அறியலாம். அம்மையிடம் சேர்ந்தால் அதாவது திருவருளிடம் சேர்ந்தால், அவர் கடவுளிடம் சேர்ப்பார்; இது முறை. ஆதலால், திருவருளைக் காதலால் சேருவதைத் திருக்கோவையார் கூறியது. முதல் பாட்டிலேயே இவ்வுண்மை வருகின்றது.

''உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன்று
ஒளிர்கின்றதே''

என்று அச் செய்யுள் முடிகின்றது. 'ஒளிர்கின்றது' என்று இங்கே குறிப்பிடப்பட்டது, திருவருளாகிய அம்மை; காமனது வென்றிக்கொடியாவது, காதல்; தலைப்பட்டால் மற்றவற்றையெல்லாம் அடக்கி வெற்றி பெறும் கொடியாகும். காமம் என்றது இங்கே காதல். காதல் கொள்வது, திருவருளாகிய அம்மையிடம்!

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி''

என்று காதற் பெயரால் கூறினார் திருஞானசம்பந்தரும். அன்பின் மிகுதியே காதல் என்பது. அது மிகுதியானால் உருக்கம் வரும். ''உருகுதலைச் சென்ற'' என்றார் மாணிக்கவாசகர். ''உள்ளம் உருகில் உடனாவர்'' என்பது திருவுந்தியார். உருகினால் உடனாகலாம். அன்பின் மிகுதியான காதலால் கசிந்து, அம்மையப்பர் செய்கின்ற அருமைப் பாடுகளை, நன்றியோடு நினைந்தால், உருக்கம் வரும்.

இவ்வாறு உருக்கமாய் நினைந்து திருவருளைக் கூடுவது முதற்கடமையாகும். திருவருள் அப்பனோடு கூட்டும்!

''மாயநட் போரையும் மாயா
மலமெனும் மாதரையும்
வியவிட் டோட்டி வெளியே
புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன் சென்றுபின் தாதையைக்
கூடிப்பின் தாயைமறந்து
ஏயுமதேநிட்டை யென்றான்
எழில்கச்சி யேகம்பனே''

என்று பட்டினத்தார் பகர்வர். காதலால் அம்மையைக் கூடிப் பின் அப்பனைச் சேர்வது இதனால் தெரிகிறது.

இவ்வாறு அகப்பொருள் என்பது, கடைசி அகப் பொருளாய் இருக்கிற கடவுளை உணர்த்தும். இதனால் சமய ஒழுக்கமே 'அகவொழுக்கம்' எனப் பட்டமை விளங்கும். உள்ளொளி என்பது ஞானமாதலால் ஞானத்தால் வீடு அடையலாம். 'ஞானத்தால் வீடு' என வந்தது. சிவஞானசித்தியாரிலும், ''உயர்சிவ ஞானத்தாலே ஓரிள மதியினானைப் போற்றுவார் அருள்பெற் றாரே'' என்பதும் அது.

நானிலம்

இங்ஙனம் அருள் பெறுதற்குத் துணையாய் இருப்பது பாசப் பொருள்களாகிய உலகம். குறிஞ்சி என்ற மலை நிலமும், பாலை என்னும் வழி நிலமும், முல்லை என்னும் காட்டு நிலமும், மருதம் என்னும் வயல் நிலமும், நெய்தல் என்னும் கடல் நிலமும் அதற்கு உதவியாய் இருப்பன. மலையிலிருந்து வர வரத் தாழ்ந்து கடைசியாகக் கடல் எனத் தாழ்வாய் விளங்கும். மலை நிலம் கூடுதலுக்கு உரியது; வழி நிலம் பிரிதலுக்குரியது. காட்டு நிலம் இருத்தலுக்குரியது; வயல் நிலம் ஊடலுக்குரியது; கடல் நிலம் உருக்கத்துக்குரியது. கூடல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பன முறையே விளையும். புணர்ந்தவர் பிரிவார். பிரிந்தவர் இருத்தலுக்கும், ஊடலுக்கும், உருக்கத்துக்கும் உரியவர். அது, உருக்கத்தில் கொண்டுபோய் விட்டு மீண்டும் கூடுதலாகும். கூடுதலும் பிரிதலும் இருத்தலும் ஊடுதலும் இரங்கலும் மீண்டும் கூடுதலும் எச்செயல்களுக்கும் உண்டு. மலை நிலமும் காட்டு நிலமும் அதாவது குறிஞ்சியும் முல்லையும் திரிந்து பாலை நிலம் என்னும் வழி நிலம் ஆகும். ஆகவே, அது குறிஞ்சியோடாவது முல்லையோடாவது சேரும். ஆதலால், உலகம் 'நானிலம்' எனப்படுவதுண்டு.

குறிஞ்சி என்பது குறுகுதல்; முல்லை என்பது முன் வருதல்; மருதம் என்பது மருவுதற்கு முந்துதல்; நெய்தல் என்பது உருகுதல்; குறுகுதலைக் கூடல் என்ப. மலை அதற்கு ஏற்ற தனிமையும் புறச்செறிவால் காட்சியும் உண்டுபண்ணுவது. முல்லை முன் வருதலால், பிரிதலுக்கு முன் வருதலை உணர்த்திற்று. கூடினவர் பிரிவது இயல்பு. ஆதலால், குறிஞ்சியும் முல்லையும் திரிந்து 'பாலை நில'மாதல் காண்க. முன் வருதலால் 'மு' எழுத்தை முதலில் பெற்றது. 'மூக்கு' என்பது காண்க. 'முன்' என்பதும் எண்ணத் தகுந்தது. மருதம் என்பது, மருவுவதற்கு ஏதுவானது. அதாவது ஊடல்; ஊடல் என்பது, உள்ளம் ஒன்றோடு ஒன்று ஊடுருவுதல்; அது உருக்கம் உண்டாக்கிச் சேர்க்கை பிறக்கும். நெய்தலாவது இரங்குதல்; நெய் உருகுதற்கு உரியது; ஆதலால், நெய்தல் என வந்தது. மிக்க இரக்கம் உண்டாகிக் கூடுதலுக்கு வழி செய்யும். மருதமும் நெய்தலும் புலவியையும் புலவி நுணுக்கத்தையும் உணர்த்தும். இவை ஊடலில் உவகையை உண்டுபண்ணிக் கூடுதற்கு ஏதுவாம்.

குறிஞ்சி என்னும் கூடுதல், இவ்வாற்றால், வாழ்க்கைக்குத் துணையாக, ஒரு மாது ஆடவனோடு ஒருங்கு கூடுதலாகும். பிரிவு, பொருள் காரணமாகப் பிரிதல் முதலியன.

குறுகுதல் என்பது தோன்றிய பின்பே 'குறிஞ்சி' என்பது தோன்றியது. அப்படியே பிரிதல் தோன்றிய பின்பே அதற்குரிய ஒரு பகுதியான நிலமாகப் 'பாலை' தோன்றியது. முன்வருதல் என்பது தோன்றிய பின்பே 'முல்லை'யும் தோன்றியது. 'மருவுதல்' தோன்றிய பின்பே 'மருதமும்', உருகுதல் தோன்றிய பின்பே 'நெய்தல்' என்பதும் தோன்றின. தொழில் தோன்றிய பின்பே பெயர் தோன்றுவது இயற்கை!

உதவியாயிருக்கும் உலகப் பொருள்களைச் சமய நூலார் 'மாயை' என்பர்.

அக நூல்கள்

தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் என்று ஒரு பிரிவு உண்டு. பொருள் என்பது இங்கே வாழ்க்கைக் கருத்து. வாழ்க்கைக் கருத்தாக வருவனவெல்லாம் பொருளதிகாரமே. அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்பன வெல்லாம் வாழ்க்கைக் கருத்துகளே. இவற்றில், மனிதர் வாழ்க்கைகளும் சிற்றுயிர் வாழ்க்கைகளும் உள்ளன; மெய்ப்பாட்டியலில் இரண்டும் வரு கின்றன.

தொல்காப்பியத்தின் வழி வந்தனவே சங்க இலக் கியங்கள் முதலியன. அத்தகைய பழைய தொல் காப்பியம் திருக்குறள் என்னும் மிகப் பழைய தமிழ் மறையின் வழியே வந்தது.

தமிழ்மறையில்,

''மறைமொழி காட்டி விடும்''

என்று வந்தது.

''மறைமொழி தானே மந்திரம் என்ப''

என்று அதற்கு வேறொரு பெயரும் விதந்து தொல் காப்பியம் சொல்வது, இதற்குச் சான்று. திருக் குறளில் தமிழ்மொழியைப்பற்றியாவது, தமிழ் மன்னர்களைப்பற்றியாவது, தம்மைப்பற்றியாவது, பிற முன்னோர்களைப்பற்றியாவது ஒரு குறிப்பும் வராததனால் அது ஒரு காலத்தில் ஓர் ஆசிரியரால் தோன்றியதேனும், அஃது இன்ன காலத்தில்தான் தோன்றியதென்று கூற முடியாததாய் உள்ளது; அகச்சான்று இல்லை.

'மொகஞ்சதாரோ', 'அரப்பா' அகழ் நிலங்களால் தமிழர் தொன்மை விளங்குதலின், அதன் கால மாகிய 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டது 'தமிழ் மறை' என்று ஒருவாறு கூறலாம்.

தமிழ் மொழியிலுள்ள நூல்கள் பெரும்பாலும் 'அகத்திணை' பற்றியே வருகின்றன. புறக்கருவி கள் சிலதாம்; அகக் கருவிகளே பல. ஆதலால், 'அகத்திணை' பற்றியே பெரும்பான்மையாய் வந்தன.

இன்பத்திணை

மக்கள் பெரும்பாலும் இன்பத்தையே விரும்பு கின்றனர். இன்பம் சிற்றின்பம் என்றும் பேரின் பம் என்றும் இரண்டு வகைப்படும்.

சிற்றின்பம் என்பது புற இன்பம். பேரின்பம் என்பது அக இன்பம்.

''பெற்றசிற் றின்பமே பேரின்பமாம் அங்கே
முற்றவரும் பரிசு''

என இரண்டும் வந்தன. பேரின்பத்தை மட்டுங் கூறும்போது,

''பேரின்ப மான பிரமக் கிழத்தியொடு
ஓரின்பத் துள்ளான்''

எனவும் திருவுந்தியாரில் வந்தது.

இன்பம் இருவினைகளுள் ஒன்றான நல்வினை யினால் வருவது; இருவினையும் இறைவனுக்கு இல் லாமையால் இங்கே பேரின்பம் எனக் குறிப்பிடுவது நல்வினையினால் வரும் இன்பத்தின் மிகுதியன்று; இறைவனால் உண்டாகும் நலத்தையே பேரின்பம் என்னும் சொல்லால் குறிப்பிடப்பட்டது. மற்றப் படி, இறைவனால் உண்டாகும் நலத்துக்குப் பேரின் பம் எனப் பெயரில்லை. அது இன்பப் பெயரால் வருவதன்று. இன்பதுன்பம் அல்லாத ஒரு நிலையே அது. அது, பற்று நீங்கிய வெளியில் உண்டாவது.

''இரவுபகல் இல்லா இன்பவெளி ஊடே
விரவி விரவி நின்று''

எனவும் வரும்.

இறைவன் நலத்தை நுகர்தற்குச் சிற்றின்பம் படிப்படியே உயர்த்தி நலத்தில் உய்க்கும். படிப் படியே உணர்த்தும் முறைதான் அகத்திணை என்பது. மக்களுள் ஆண் பெண் ஒருவரை ஒருவர் விரும்புவதும் மிகுதி; திருக்கோவையார் இம் முறையில் எழுந்து அருளைத் துய்ப்பதற்கும் வந்தது.

முதலில் ஐம்பொறிகளான புலன்கள் வாயிலாகத் துய்த்தபின், அவை நிலையில்லாமற் போவதால், நிலைகொண்ட கடவுள் நலத்தைத் துய்ப்பதற்கு, அகக்கருவிகள் உள்முகமாகச் சென்றன. வெளி முகமாக வருவது, முதலில் இன்பம்போல் தோன் றிப் பின்பு பெரிதும் துன்பங்களே உண்டாவதனால், புறத்திணை என்பது 'துன்பத்திணை' அல்லது 'பொருள்திணை' எனவும், அகத்திணை என்பது உள்நோக்கிச் சென்று இன்பங் கொள்ளுதலால், 'இன்பத்திணை' எனவும் கொள்ளப்படும். புறத் திலேயாயினும் அகத்திலேயாயினும் துன்ப இன்பங் கள் இரண்டும் அகத்திலுள்ள உயிரில் உண்டா வனவே. மாதர் சிற்றின்பம், உலக இன்பங்களில் மேம்பட்டதாயினும், நிலையில்லாமற் போதலால், 'சிற்றின்பம்' எனப்பட்டது. அதனை விளைக்கும் உடம்பு, உலகப் பொருள்கள் முதலிய புறப்பொருள் நுகர்வுகளே மிகுதியானவை. சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டில் ஒன்றான 'பட்டினப்பாலை' என் னும் பகுதியில், மொத்தம் முன்னூற்றோரடி களில் நான்கு அடிகளே அகப்பொருள் நுவலும்

அகத்திணைக்குரியன; மற்ற இருநூற்றுத் தொண்ணூற்றேழு அடிகளும் புறத்திணைக்குரியன; புறமும் அகமும் ஒன்றுக்கொன்று உதவியாயின.

இல்வாழ்க்கை

இயற்கையின் வழி நின்று, இங்ஙனம் புறப்பொருள்களை விரித்து அகவொழுக்கத்தில் கொண்டு போய் விடுகின்ற, அதாவது பொருளில் இருந்து விரித்து அருளிற் கொண்டுபோய் விடுகின்ற, அகத்திணை நூன்முறையே தமிழின் முறை; எல்லாம் அறம் பொருள் இன்பம் வீடு வருவனவே. இங்ஙனம் காதல் வயப்பட்டு உலகத்தில் வாழ்ந்து,


''காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

என்று இல்வாழ்க்கைத் துணைவரின் கடமை வந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த நூல்களெல்லாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் முறையிலேதான் வந்தன. தமிழ் மறையில் வந்த எல்லாச் செய்யுள்களும் இல்வாழ்வார்க்கே உரியன. துறவறம் என்பது திருக்குறள் என்னும் தமிழ்மறையில் துறவு என்றே வந்தது. இல்வாழ்க்கையில் இருந்தபடியே பற்றுத் துறத்தல் துறவு எனப்பட்டது. உலகத்தில் இன்பம் முதன்மையாதலால், களவியலின் முதற் நூற்பா தொல்காப்பியத்தில்,

''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புனைந்த ஐந்திணை மருங்கின்
காமக்கூட்டம்''

என்று வந்தது.

ஊழ்வினை முறைப்படியே 'ஒத்த கிழவனும் கிழத்தியும்' காண்ப. இங்கே 'ஒத்த' என்று வந்தமையால் கிழவர்க்கும் கிழத்தியர்க்கும் 'ஒத்த தன்மை'கள் பெறப்பட்டன. இருவர்க்குள், மதிப்பும் மரியாதையும் இருந்தன என்பது இதனால் தெரிகின்றது என்று கூறினார் ஆசிரியர்.





தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்

"பாவலரேறு" பெருஞ்சித்திரனார்

முன்னுரை

1. மொழியும் அதன் படிநிலை வளர்ச்சியும்

மொழி என்பது மாந்தனின் உள்ளுயிரில் தோன்றி, உணர்வு வளர்ச்சிக்கேற்ப முகிழ்த்து ஒலி வடிவாய் வெளிவரும் ஓர் இயற்கை வெளிப்பாடு. அஃது அவன் அறிவு வளர வளர, ஒலித்தொகுதிகளாய் விரிந்து, கருத்துகளைப் புலப்படுத்தும் சொற்களாய் இணைந்து, சொற்றொடர்களாய் விளங்கி, கால அடைவிலும் அறிவுப் படிநிலை வளர்ச்சியிலும் மலர்ச்சியுற்று, மக்களுக்கு ஓர் இணைப்புணர்வுப் பாலமாய் நின்று, வாழ்வெலாம் அவர்களுக்கு வழித்துணையாய் இருந்து, அவர்களைக் கடைத்தேற்றுவது. அஃது, ஒரு சொற்கூட்டமென்றோ, வெறும் கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் கருவி மட்டுமென்றோ கொள்ளாது, மக்களினத்தின் உள்ளுணர்வுகளோடு, பின்னிப் பிணைந்து, பண்பாட்டால் அவ்வினத்தை வளர்த்தெடுக்கும் ஒரு வாழ்வியல் கூறு என்று அறிந்துகொள்ளுதல் வேண்டும். செயற்கையாக, நாம் ஒரு மொழியை உருவாக்கவோ, உருவாக்கிப் பேசவோ, பேசி அறிவு பெற்று அனைவரும் உணர்வொத்து வாழ்க்கை நடத்தவோ இயலாது. அப்படி நடந்ததாக வரலாறும் இல்லை. முன்பொருமுறை மேனாட்டில், 'எசுப்பெரண்ட்டோ' (Esperanto) என்பதாக ஒரு செயற்கை மொழியையும், அதற்கான எழுத்து வகைகளையும், உலக ஒற்றுமை கருதிப் பல்வேறு மொழிகளுக்கும் பொதுவான சில ஒலிநிலைகளைக் கொண்டு உருவாக்கிப் பார்த்தனர் (1887). ஆனால், அம் முயற்சி படுதோல்வி அடைந்தது.

தொடக்கத்தில் இயற்கையாக விளைந்த நெற்பயிரை, மாந்தன் எப்படி மீண்டும் மீண்டும் விளைவித்துண்ணக் கற்றுக்கொண்டானோ, அப்படியே தொடக்கத்தில் இயற்கையாக வெளிப்பட்ட மூல வொலிகளினின்றே இவன் கருத்துகளைப் படைத்துக்கொண்டு, அவற்றினின்று பலவகை அறிவையும் உணர்வையும் ஒரு சேர வளர்த்து, இறுதியில் முழுமொழி மாந்தனாக மாறினான். அவன் மொழி வளர்ச்சியொடு இணைந்து வளர்ந்தன, அவன் இலக்கிய வளர்ச்சியும், இலக்கண வளர்ச்சியும், கலைகளும், பண்பாடும். அவற்றால் அவன் அறிவு மேலும் மேலும் வளர்ச்சியுற்றது: அறிவு வளர்ச்சி அவனிடத்தில் புறக்கூறாகிய நாகரிகத்தையும் அகக்கூறாகிய பண்பு வளர்ச்சியையும் தோற்றுவித்தது. இக்கால் அவன் முழுமை மாந்தனாக வளர்ந்துள்ளான். இனி அவன் மீமிசை மாந்தனாகவும் வளர்ச்சியுறல் வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மொழியின் படிநிலை வளர்ச்சியே அடிப்படைக் கரணியம் என்று அறிதல் வேண்டும்.

2. தமிழ்மொழியின் தோற்றமும் அதன் சிறப்பியல்புகளும்;

தமிழ்மொழியின் தோற்றம் மிகத் தொன்மையானது. அது, தெற்கே, இந்துமாக்கடலில் மூழ்கிப் போன குமரிக்கண்டத்தில் தோன்றியதென்பது நடுநிலை ஆராய்ச்சியாளர்கள் கூற்று. நிலத்தின் உள்ளும் புறமும் ஏற்படும் வேதியியல் மாற்றங்களால் குமரிக்கண்டம் முழுகிப்போனதும், வடக்கே பனிமலை (இமயமலை) தோன்றியதும் நிலவியல்

வரலாறு. மிகப் பழங்காலத்தில் நடந்தது இது. இந்நிலை ஒரே காலத்தில் ஏற்பட்டது அன்று. படிப்படியாய் மூன்று கடல்கோள்களால் நேர்ந்தது. முதற் கடல்கோளால் குமரிமலையும், பஃறுளியாறும், தலைக்கழகத் தென்மதுரையும் அழிந்தன. இரண்டாம் கடல்கோளினால் இடைக்கழகம் இருந்த கபாடபுரம் அழிந்தது. மூன்றாம் கடல்கோள் குமரியாற்றையும் காவிரிப்பூம்பட்டினத்தையும் அழித்தது. குமரிமலைத் தொடரும் பஃறுளியாறும் அழிக்கப்பட்டபின் பாண்டியர்கள் வடக்கே வந்து, இமயமலை வரையும் பரவி அரசாண்டனர். இச்செய்தி 'பஃறுளியாற்றுடன்' என்று தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுளடிகளாலும், 'மலிதிரையூர்ந்து' என்று தொடங்கும் கலித்தொகைச் (104) செய்யுளாலும், 'வடாஅது' என்று தொடங்கும் புறநானூற்றுச் (6) செய்யுளடியாலும் தெரியவருகிறது. அதனுடன் இமயமலைக்கும் தமிழர்க்கும் உள்ள தொடர்பு நம் இலக்கியங்களில் பரவலாகக் குறிக்கப்பெறுகிறது.

தமிழர்கள் குமரிக்கண்டத்தில் தோன்றியதால், தமிழும் அக்காலத்திலேயே, ஏறத்தாழ 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருத்தல் வேண்டும் என்பர் மொழியறிஞர் பாவாணர். தமிழ்மொழி தோன்றி நீண்ட நெடுங்காலத்திற்குப் பின் மிகச் சிறந்தோங்கியிருந்திருத்தல் வேண்டும். அதற்குச் சான்றாகக் கழகப் பாடல்கள் பல மிகவும் இனிமை வாய்ந்தனவாகவும் அரிய வாழ்வியல் கருத்துகளைத் தெரிவிப்பனவாகவும் உள்ளன. நம் கைக்குக் கிடைத்த இவையே இத்துணைச் சிறப்புகள் வாய்ந்திருந்தால், ஏற்கெனவே பலவகையிலும் அழிந்து போய், நம் கைக்குக் கிடைக்காத இலக்கியங்கள் எத்துணைச் சிறப்பு வாய்ந்தனவாக இருந்திருத்தல் வேண்டும். நம் தமிழ்மொழி, செந்தமிழ், பைந்தமிழ், அந்தமிழ், அருந்தமிழ், இன்றமிழ், தென்றமிழ், தீந்தமிழ், தேன்றமிழ், நறுந்தமிழ், நற்றமிழ், தண்டமிழ், வண்டமிழ், முத்தமிழ், கன்னித்தமிழ் என்றெல்லாம் போற்றப்பெறுவதுடன், அது தொன்மையும் முன்மையும், தாய்மைமையும் தூய்மையும், இளமையும் வளமையும், உண்மையும் நுண்மையும், தனிமையும் இனிமையும் நிறைந்து விளங்குவதாகப் பெருமை பேசப்பெறுகிறது. இதுபோல் வேற்று மொழியினர் எவரும் தம் தாய்மொழியைச் சிறப்பித்துப் பேசுவதில்லை. தமிழ் மொழி மிகவும் சொல்வளம் மிகுந்த மொழி. இதில் பல அறிவியல் கூறுகளும் உள்ளன. ஆனால், தமிழர்கள் இம்மொழியை இக்கால் சரிவரப் பேணுவதில்லை; புரப்பதில்லை. இது மிகவும் வருந்தத் தக்கது.

3. தமிழ்மொழியின் வரலாற்று வீழ்ச்சியும் அதன் சீரழிவுகளும்

கழகக்காலம் வரையில் மிகச் செழிப்பாக வளர்ந்திருந்த, நம் தாய்மொழியாகிய தூய, இனிய செந்தமிழ், அதற்குப் பின் வரவர, ஆரியரின் வேதமதத்தாலும், சமண, பௌத்த மதங்களாலும் தாக்குண்டு, படிப்படியாய்ச் சீர்கெட்டது. அதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் ஏராளமாகவுள்ளன. தொல்காப்பியத்துள் கூறப்பெறும் வடமொழிச் சேர்ப்பு இலக்கணமும், அம் மொழி வந்து தமிழில் கலந்து வழங்குவதற்கு வழிவகுத்ததாகவே அமையும்.

ஆரியரின் வேதமொழியும் வடதிரவிட மொழிகளான பிராகிருதமும் பாலியும் கலந்து செய்யப்பெற்ற சமற்கிருதமும் சமய நோக்கத்துடன் தமிழ் மொழியொடு (பலவாறு, கலக்கப்பெற்று) அதைச் சீர்குலைத்தன. அதனால் தமிழ்மொழி பல்வேறு வகையாகத் திரிபுற்றுச் சிதைந்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய இருபத்திரண்டு மொழிகளாகப் பிரிந்தது. மொழிகள் வேறுபட்டுப் பிரியவே தமிழ் மக்கள் தொகுதியும் நிலமும் மிக மிகச் சிறுத்தன. வேத ஆரியர்களும், தமிழ் மூல நூல்களைத் தம் மொழியாகிய சமற்கிருதத்தில் பெயர்த்தெழுதித் தம் மொழிக்கு ஏற்றம் தேடிக் கொண்டு, தமிழ் மூலநூல்களை அழித்தனர். அது போலவே, புறச் சமயங்களான சமண, பௌத்த மதங்களின் உட்கூறுகளையும், ஏற்கெனவே தமிழர்களின் மதங்களாகவிருந்த அகச் சமயங்களான, சிவனிய (சைவ), மாலிய (வைணவ) மதங்களின் தெய்வ வணக்கங்களையும், தம் வேத மதத்தில் இணைத்துக்கொண்டு அம் மதங்களின் தனித்தன்மைகளை அழித்து, இந்துமதம் என்ற பெயரில் வேத மதத்தை வளர்த்தனர். மதப் போராட்டங்களாலும், வேதமதத்தின் அளவிறந்த வளர்ச்சியாலும் தமிழ்மொழி மேன்மேலும் சீரழிந்து கலப்பு மொழியாய்ப் பெருமை குன்றி வாழ வேண்டுவதாயிற்று. ஊர்ப் பெயர்களும் இறைப் பெயர்களும் வடமொழியாகிய சமற்கிருதத்தில் மொழிபெயர்க்கப் பெற்று வழக்கூன்றின. கழகக் காலத்தில் தூய தமிழ்ப் பெயர்களாகவே வைத்துக்கொண்டிருந்த மக்களும் அரசர்களும் வடமொழிப் பெயர்களைத் தாங்கினர். ஏராளமான வடசொற்கள் மக்கள் வாழ்வியலின் அன்றாடப் புழக்கத்தில் ஏறின. மிக எளிமையாகவும் இனிமையாகவும் இருந்த சமயச் சொற்களெல்லாம் வடமொழியாயின. நூல்களுள் வடமொழியே வரவரப் பல்கிப் பெருகியது. உரைநடை நூல்கள், செய்யுள் நூல்கள், இசை, நாடகம் எனும் அனைத்திலும் வடமொழி ஆட்சி செலுத்தியது.

சமயத் தாக்கங்கள் இவ்வாறு ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்கையில், தமிழக அரசியலில் வந்து வாய்த்த ஆட்சித் தாக்கங்களும் பல வகையில் தமிழைச் சீர்குலைத்தன. களப்பிரர், பல்லவர் ஆட்சியரசுகள் வடமொழியாளர்க்கும் அவரின் வேத மதத்துக்குமே ஊக்கமளித்துப் போற்றிப் புரந்தன. மக்களுக்குள் சாதி வேறுபாடுகள் கற்பிக்கப்பெற்று,

இனவொற்றுமையும் சீர்குலைக்கப்பெற்றது. வட மொழியாளர்களாகிய பிராமணர்களின் கை, மிக்க மேலோங்கியிருந்தது. அரசியல், குமுகாயம், சமயம் ஆகிய முத்துறைகளிலும் அவர்களின் ஆளுமை கொடிகட்டிப் பறந்தது. வேற்று அரசர்களின் ஆட்சிக் காலங்களில், தமிழ்நாட்டில் அரபியர்கள், யூதர்கள், பார்சியர்கள், சீனர்கள், போர்ச்சுகீசியர்கள் முதலிய பல இனத்தவரும் வந்து வாழவும் வாணிகம் நடத்தவும் தொடங்கினர். அவர்களின் மொழிகளாலும் தமிழ் மேலும் கலப்புற்றது. தொல்காப்பியமும் திருக்குறளும் பிற கழக இலக்கியங்களும் தவிர, பின்னர் எழுந்த நூல்கள் அனைத்திலும் வடமொழி பேரளவிலும், பிறமொழிகள் சிற்றளவிலும் ஆளுமை செய்தன. அதன் பின்னர் வந்த ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலமும் தமிழொடு கலந்து, தமிழரின் பேச்சு வழக்கையும் நூல் வழக்கையும் மேலும் சிதைத்தது. இக்கால் கணக்கற்ற உருதுச் சொற்களும், அரபுச் சொற்களும், இந்துத்தானிச் சொற்களும் தமிழ்மொழியில் கலந்து வழங்கிவருகின்றன. இவையன்றி, அகப் பகைவராலும் தமிழ்மொழி சீரழிவுற்றது. பார்ப்பனத் தமிழ்ப் பேரறிஞர்களும் மறைமுகமாக வடமொழிக்கே பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் தந்து போற்றினர். தமிழ்ப் பேராசிரியர்களில் சிலரும் தமிழ்மொழியின் தனித்தன்மைகளைக் கெடுத்தனர்.

இச் சூழ்நிலையில் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழ்மொழியைப்பற்றிக் கவலையும், அக்கறையும், ஆர்வமும், ஊக்கமும், விடா முயற்சியும் கொண்ட தமிழ்ப் பேரறிஞர்களும், பொதுமக்களில் பலரும் விழிப்புணர்வு பெற்றுத் தமிழ்மொழியை அயல்மொழிச் சீர்குலைவினின்றும் கலப்பினின்றும் தடுத்து, அதன் தூய தன்மையையும் பழஞ் சிறப்பையும் கட்டிக் காத்தற்கு ஓர் இயக்கமாக நின்று முனைப்புடன் பாடாற்றினர். அது பற்றிய செய்திகளைச் சுருக்கமாக இனி வரும் பகுதிகளில் காண்போம்.

தனித்தமிழியக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்

1. தொடக்கக்கால முயற்சிகள்

தனித்தமிழ் என்பது வேறு ஒரு தனிமொழியன்று. கலப்புத்தமிழினின்று அதை வேறு பிரிக்கவே, அதைத் 'தூயதமிழ்' என்றும் 'தனித்தமிழ்' என்றும் அடை கொடுத்து வழங்க வேண்டுவதாயிற்று. தமிழ் மேன்மேலும் கலப்புற்றுத் தன் இயற்கையாந் தன்மை கெடுவதைக் கண்டு பொறாத அறிஞர்களும், தமிழ்ப் பற்றாளர்களும், அதனைப் பலவகையிலும் அச்சீரழிவினின்றும் தடுத்து நிறுத்த எண்ணங்கொண்டு நூல்கள், இதழ்கள் வழியாக எழுதியும் பேசியும் வந்தனர். இம் முயற்சி பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கக்காலத்திலேயே தொடங்கியது.

தூய தமிழுணர்வு தொடக்கத்தில் திராவிடர் உணர்வெழுச்சியாகத் தோன்றியது. ஆரியம் மதத்தாலும் மொழியாலும் இனத்தாலும் குமுகாயத்தில் மேலாளுமை செலுத்தியதும், 17ஆம் நூற்றாண்டிறுதியில் சாமிநாத தேசிகர் என்ற 'இலக்கணக் கொத்து' ஆசிரியர், 'அன்றியும் தமிழ் நூற்களவில; அவற்றுள் ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ?' என்றெழுப்பிய வினாவும், இதற்குக் கரணியமாகும். கால்டுவெல் (Rev. Robert Caldwell, 1814—1891) அவர்களின் 'திரவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல்' மொழி நூலறிஞர்களிடம் தனி மதிப்புப் பெற்றது. அது தமிழ்மொழியின் பெருஞ்சிறப்பை உணர்த்தியதுடன், தமிழ் ஆரியத்தினின்று தோன்றியதென்னும் தவறான கருத்தை உடைத்தெறிந்தது; தமிழின் தனித் தன்மையை உயர்த்தி, அஃது ஓர் உயர்தனிச் செம்மொழி என்னும் உண்மையை நிலைநாட்டியது. இன்னும் வெளிநாட்டுக் கிறித்தவக் குருமார்களாகிய இராபர்ட்டு நொபிலி (Robert De-Nobili), எல்லிசு, வீரமாமுனிவர் (Constantine Joseph Beschi, 1680–1746), போப் (G. U. Pope, 1820–1903) ஆகியோரின் தமிழ்மொழி மதிப்பீடுகளும் 'தமிழ் தனித்தியங்க வல்ல நல்ல செம்மொழி' என்னும் கருத்தை வலியுறுத்தியது. 16ஆம் நூற்றாண்டிலேயே பரஞ்சோதி முனிவர் 'பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப் பசுந்தமிழ், ஏனை மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல், எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?' என்றொரு வினாவை யெழுப்பி, வடமொழி, தென்மொழி இவற்றின் இறக்கத்தையும் ஏற்றத்தையும் வெளிப்படுத்தினார். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பேரா. மனோன்மணீயம் சுந்தரனார் ''ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாத தமிழின் சீரிளமைத் திறத்தை வியந்து, சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் தமிழே'' என்று கூறி, ஆரியத்தை விடத் தமிழ் உயர்ந்தது என்னும் கருத்தைத் தெரிவித்தார். இசைத்துறையில் தமிழின் தனித்தன்மையைத் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் (1859-1919) நிலைநாட்டினார். அயோத்திதாசப் பண்டிதர் (1845-1914) என்பார் தமிழில் 'தருக்கநூல்' ஒன்றெழுதியும் 'தமிழன்' என்றொரு தாளிகை நடத்தியும் தமிழுணர்வைப் பரப்பினார். ஆங்காங்கே திரவிடர் இயக்கங்கள் தோன்றின. திருக்குறளுக்கு நல்ல ஆக்கம் ஏற்பட்டது. திருக்குறள் தூய தமிழில் எழுதப்பெற்ற முதல் நூலாகையால், ஆரியக் கருத்துகளை அது முறியடித்துத் தமிழின் பெருமையையும் அறத்தையும் வேறு பிரித்துக் காட்டியது. திருவள்ளுவரே (கி.மு. 3 ஆம் நூற்றாண்டு) அக்கால் வழங்கிய பல வடமொழிச் சொற்களை முதன்முதலாகத் தமிழ்ப்படுத்தித் திருக்குறளை

எழுதினார். வேதமதக் கருத்தின் பல கொள்கைகளை முறியடித்தார். அவர் தந்த திருக்குறளில் அக்காலத்தில் புழக்கத்திலிருந்த கீழ்க்காணும் வடசொற்கள் தமிழாக்கப் பெற்று, இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
புதல்வர்	மக்கள்
அமிர்தம்	அமிழ்தம்
கருணை	அருள்
தர்மம்	அறம்
தர்மநூல்	அறநூல்
நீதி	நயன்
தராசு	துலை
பதுமை	பாவை
சத்தியம்	வாய்மை
விதி	ஊழ்
பூமி	நிலம்
அங்கம்	உறுப்பு
யாகம்	வேள்வி
சந்தேகம்	ஐயம், ஐயுறவு
சாதி	பிறப்பு, குலம்
இலக்குமி	செய்யாள், திரு, தாமரையினாள்
பயம்	அச்சம்
தேகம்	யாக்கை, உடம்பு, உடல்.

மற்றும் வடலூர் இராமலிங்க அடிகள் (1823-1874) ஆரிய மதத்தின் போலித் தன்மைகளையும், வடமொழியின் போலிப் பெருமையையும் தம் திருவருட்பாக்களால் சுட்டெரித்தார். 1862-ல் வின்சுலோ எழுதிய ஆங்கிலம்-தமிழ் அகரமுதலியும், கு. கதிரைவேல் (பிள்ளை) (1829-1904) அவர்களின் 'தமிழ்ச்சொல் அகராதி'யும் வெளிவந்தன. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகவிருந்தது, ஏற்கெனவே வீரமாமுனிவர் செய்த 'சதுர் அகராதி' (1732) என்னும் முதல் அகராதி நூலாகும். அதற்கு முன் நிகண்டுகளே தமிழில் வழங்கி வந்தன. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் (1822-1879) தமிழ்மொழிக்கு ஆக்கமான பல நூல்களும் பாடப் பொத்தகங்களும் எழுதினார். மதுரையில் பாண்டித்துரைத் தேவரால் 'தமிழ்ச்சங்கம்' தொடங்கப்பெற்றது (1901). தமிழ் மக்களிடையே தமிழ்மொழியுணர்வு பரவுவதற்கு இச் சங்கத் தோற்றம் நல்ல வழிகள் பல வகுத்துச் செயற்பட்டது. மாணவர்களுக்குத் தமிழ்த் தேர்வுகளை நடத்தியது; சேதுபதி செந்தமிழ்க் கல்விக்கூடம் நிறுவி, மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் தந்து தமிழ்மொழி கற்பித்தது. பாண்டியன் பொத்தகசாலை நிறுவிப் பல அரிய ஏட்டுச் சுவடிகளைத் தொகுத்து அவற்றை வெளியிட்டது. இச் சங்கத்தின் ஆண்டு மாநாடுகள் தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் நடைபெற்றதால், ஆங்காங்கே இதற்குக் கிளைச் சங்கங்கள் தோன்றி, அவையும் தமிழ் வளர்க்கத் தொடங்கின. இத்தகைய தமிழ்ப் பணிகளால் மக்களிடையில் தமிழுணர்வு பரவத் தொடங்கியது. தமிழில் மொழியியல் ஆய்வுக்கு அடிகோலியது, 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வெளிவந்த யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசரின், 'சொற்பிறப்பியல் அகராதி'யே எனலாம். அதன்பின் இத்துறையில் வெளிவந்த நூல் 1913-ல் மாகறல் கார்த்திகேயனார் எழுதிய 'மொழிநூல்' என்னும் ஆராய்ச்சி நூலாகும். இது மொழியியல் துறையில் பெரியதொரு விழிப்புணர்வைத் தோற்றுவித்ததுமன்றி, இவரைத் தொடர்ந்து பலரும் அத்துறையில் ஈடுபடவும் ஆராய்ச்சி செய்யவும் வழி வகுத்தது.

இவற்றையெல்லாம் அடுத்து, வீ. கனகசபை (பிள்ளை) (1885-1906) அவர்கள் '1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர்' என்னும் வரலாற்று நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். எம். எசு. பூரணலிங்கனார் (1866-1947) 'தமிழ் இந்தியா' எனும் வரலாற்று நூலை வெளிப்படுத்தினார். பூபாலனார் (1860-1920) அவர்களின் 'தமிழ் வரலாறு' எனும் நூல் வந்தது. த.வே. உமாமகேசுவரனாரால் (1883-1941) கரந்தைத் தமிழ்ச்சங்கம் 1911-ல் தொடங்கப்பெற்றது. இச் சங்கம் தோன்றிய பின், அதன் சார்பில் நடத்தப்பெற்ற கூட்டங்களில் அறிஞர்கள் நிகழ்த்திய தூயதமிழ்ச் சொற்பொழிவுகளும், அவற்றுக்கென விடுத்த அழைப்பு, அறிக்கை இவற்றில் கையாண்டிருந்த நல்ல தமிழ்நடையும், தமிழ் மக்களிடையில் தம் தாய்மொழிப்பற்றும், உணர்வும் வளரத் துணைநின்றன. கே. எசு. சீனிவாச (பிள்ளை) (1842-1929) என்பாரின் 'தமிழ் வரலாறு' வெளிவந்தது. யாழ்ப்பாணம் விபுலானந்த அடிகள் (1892-1947) 'யாழ்நூல்' என்றோர் அரிய இசைத்தமிழாராய்ச்சி நூலை வெளியிட்டிருந்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் 'செந்தமிழ்' (1909) என்னும் இதழ் தொடங்கப்பெற்று, அறிஞர் பலரின் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் வெளிவரத் தொடங்கியது. பர். உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஆங்காங்கே கிடைத்த பழம் பெரும் ஓலைச்சுவடிகளை, அரிதின் முயன்று திரட்டி பலரும் வியக்குமாறு அவற்றை வெளிப்படுத்தியிருந்தார். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து முதலியன இவரின் முயற்சியால் வெளிப்போந்த கழக நூல்கள்.

இவை வெளிவந்த பின், தமிழர்தம் பழம்பெரும் இலக்கியச் சிறப்புகளும், கலை, நாகரிகப் பண்பாடும்

யாவராலும் நன்கு உணரப் பெற்றன. அதனுடன் கலித்தொகை, குறுந்தொகை, அகநானூறு முதலியவை வேறு அறிஞர் பலராலும் வெளிக் கொணரப்பெற்றன. இன்னோரன்ன பலவகை யான முயற்சிகளாலும், நூலாக்கங்களாலும் தமிழ் மொழி முன்னையினும் வலிவும் பொலிவும் பெற விளங்கியது. அறிஞர்களுக்குத் தமிழார்வம் கிளர்ந் தெழுந்தது.

2. தனித்தமிழ் உணர்வெழுச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்மொழியின் வளர்ச்சியில் ஒரு புதுவகைத் திருப்பம் நேர்ந்தது. வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் (1870-1903) அவர்கள், தமிழ் ஆர்வத்தினால் தம் வடமொழிப் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று தூய தமிழில் மொழிபெயர்த்து வைத்துக்கொண்டார். இவ்வகையில் இவரே மற்றெவர்க்கும் எடுத்துக்காட்டாய்த் தனித்தமிழ் உணர்வுக்கு வித்தூன்றினார் எனலாம். இவரை யடுத்து 1916ஆம் ஆண்டு 'பல்லாவரம் சமரச சன்மார்க்க' நிலையத்தை நிறுவிய சுவாமி வேதாசலனார் அவர்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தகுந்த ஒரு நிகழ்ச்சி நடந்தது. அவரும் அவருடைய அருமை மகளார் திருவாட்டி நீலாம்பிகையும் (அக்கால் அகவை 13) ஒருநாள் மாலை, தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கையில், அடிகள், வடலூர் இராமலிங்க அடிகளார் எழுதிய 'பெற்றதாய்தனை' என்று தொடங்கும் பாடலை வாய்விட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள். அதுபொழுது, அப் பாடலின் இரண்டாம் அடியாகிய 'உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்' என்னும் பகுதியில் வரும் 'தேகத்தை' என்னும் வடசொல்லுக்குப் பகரமாக 'யாக்கையை' என்னும் தனித்தமிழ்ச் சொல்லைப் பெய்திருந்தால் அவ்வடி இன்னும் சிறப்பாகவும் விளக்கமாகவும் இருக்குமே என்று தம் மகளாரிடம் கூறினார். தமிழார்வமிக்க மகளாரும் அம் மாற்றத்திற்கு மகிழ்ந்து, அவ்வாறாயின், 'இனி நாமும் வடசொற் கலந்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும்' என்று கூற, இருவரும், 'இனி, அவ்வாறே தனித்தமிழையே கையாளுவோம்' என உறுதி பூண்டு, அதுமுதல் அனைத்து நூல்களிலும் தனித்தமிழையே பேச்சிலும் எழுத்திலும் பயில்வாராயினர். உடனே, அடிகள் 'சுவாமி வேதாசலம்' என்ற தம் வடமொழிப் பெயரை, 'மறைமலையடிகள்' என்று மாற்றி வழங்குவாராயினர். அதனுடன், 'சமரச சன்மார்க்க நிலையம்', 'பல்லாவரம் பொதுநிலைக் கழகம்' ஆயிற்று. அடிகள் நடத்தி வந்த 'ஞானசாகரம்' என்ற இதழின் பெயர் 'அறிவுக்கடல்' என்று மாற்றப் பெற்றது.

3. தனித்தமிழ் ஆக்கங்கள்

தமிழ்மொழிக்கும் வரலாற்றுக்கும் ஆக்கமான அரிய ஆராய்ச்சி நூல்களையும், வரலாற்று நூல்களையும் பலர் எழுதி வெளியிட்டனர். இரா. இராகவையங்கார் (1870-1948), மு. இராகவையங்கார் ஆகிய இருபெரும் புலவர்களும் தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி நூல்களை எழுதினர். பி. டி. சீனிவாசையங்கார், எசு. கிருட்டிணசாமி அய்யங்கார், டி. சேச அய்யங்கார் ஆகியோர் எழுதிய ஆராய்ச்சி நூல்கள் தமிழ்மொழிக்கும் தமிழர் வரலாற்றுக்கும் மேலும் வலிவூட்டின. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் 'தமிழ்ப்பொழில்' (1925) என்றோர் இதழையும், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் (1920), 'செந்தமிழ்ச்செல்வி' (1927) என்றோர் இதழையும் வெளிக் கொணர்ந்தனர். மதுரைச் 'செந்தமிழி' லும், கரந்தைத் 'தமிழ்ப்பொழிலி' லும், நெல்லைச் 'செந்தமிழ்ச் செல்வி'யிலும், அவ்வப்பொழுது, தமிழில், பிறமொழிக் கலப்பைக் கண்டித்தும், தனித் தமிழில் எழுதுவதை வற்புறுத்தியும் பல கட்டுரைகள் வெளிவந்தன. யாழ்ப்பாணம் சுன்னாகத்திலிருந்து, ந. சி. கந்தையா அவர்களால், 'தமிழன்' என்றொரு மாத இதழ் 1926-லிருந்து வெளியிடப்பெற்றது. இது தமிழ்மொழியின் அருமை பெருமைகளையெல்லாம் கூறித் தனித்தமிழ்க் கொள்கையைப் போற்றியது.

தனித்தமிழ்க் கொள்கையை வலியுறுத்தி அறிஞர்கள் ஆங்காங்குச் சொற்பொழிவுகளும் நூல்களும் செய்தவண்ணமிருந்தனர். தமிழவேள் உமாமகேசுவரனார் இக்கொள்கையில் மிக ஊக்கம்காட்டினார். தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் (1883-1953) தமிழிலேயே பொதுக்கூட்டங்களில் பேசியதும் இனிய தமிழில் தம் தாளிகையில் எழுதியதும் தமிழுக்கு ஆக்கம் செய்தன. மற்றும் அறிஞர்கள் ச. சோமசுந்தரபாரதியார் (1878-1959), 'தமிழ் மொழியமைப்பும் மொழிநூற் கொள்கையும்', 'தமிழ் இலக்கிய வரலாறு' ஆகிய நூல்களின் ஆசிரியர், கா. சுப்பிரமணியனார் (1889-1945), பொறியியலறிஞர் பா. வே. மாணிக்கனார் (1871-1971), அரசஞ்சண்முகனார் (1868-1915), பண்டிதமணி மு. கதிரேசனார் (1881-1953), சாமிவேலாயுதனார் (1895), செல்வகேசவராயனார் (1864-1921), 'சொற்பொழிவாற்றுப்படை' இயற்றிய நெல்லைப் பால்வண்ணனார், 'தமிழ் வரலாறு' எழுதிய தஞ்சை சீநிவாசனார் (1842-1929), திருவாட்டி நீலாம்பிகையம்மையார், 'சேந்தன் செந்தமிழ்', 'குமாரசாமியம்' நூல்கள் ஆசிரியர் பாம்பன் குமரகுருதாச அடிகள், தமிழின் தனி மாண்பை நாட்டிய விருதை சிவஞான ஓகிகள், கருவூர் அறிவுதயக் கழக ஆசிரியர் ஈழத்துச் சிவானந்த அடிகளார், தமிழ்ப்புலவர் தேர்விற்குப் பாடமாக வைக்கப்பெற்றிருந்த சமற்கிருதப் பகுதியை

நீக்க ஏற்பாடு செய்த கா. நமச்சிவாயனார் (1876-1937), க. ப. மகிழ்நனார், ந. மு. வேங்கடசாமியார் (1884-1940), வரகுண பாண்டியனார், தாரமங்கலம் வரதநஞ்சையனார், சென்னை மாநில 'ஆட்சிச்சொல் அகரவரிசை'யைத் தொகுத்துதவிய கணிய அறிஞர் இ. மு. சுப்பிரமணியனார், முதலிய நூற்றுக்கணக்கான புலவர்கள் தமிழ் மறுமலர்ச்சிக்கும், தூய தமிழ் வளர்ச்சிக்கும் ஆக்கமாயிருந்து, தங்கள் அரிய நூல்களாலும் சொற்பொழிவுகளாலும் தமிழ்த்தாய்க்கு வலிமை சேர்த்தனர். பொறியியலறிஞர் பா. வே. மாணிக்கனார் தமிழில் உள்ள அறிவியல் ஆக்கக் கூறுகளை எடுத்துக்காட்டி அறிவியலையும் தமிழில் செய்ய முடியும் என்னும் உண்மையை நிலைநாட்டினார். அவர், அதுபற்றிக் கீழ்வருமாறு கருத்துரைப்பார். ''...பிறமொழிக்கலப்பில்லாமல் தமிழ் அறிவியற் சொற்களையும் அமைத்துக்கொள்ளலாம்.... எல்லா அறிவியற் சொற்களையும் தூய தமிழாக்கலாம். இரவல்பெறுமாறு வறுமையுடைய மொழியன்று நமது உயர்மொழியாய தமிழ்மொழி என்பது கருத்திற் பதியவைத்தல் வேண்டும். ....அறிவு வளர வளர மொழி வளரும். இரவலால் வளராது. ஆகலான் நமது நுட்ப அறிவினைக் கொண்டு, எல்லா அறிவியற் சொற்களையும் தூய தனித்தமிழ் மொழியிலேயே அமைத்து, நமது தாய்மொழியை வளம்பெறச் செய்வோமாக. இம்முயற்சியில் தமிழ் மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் புகுதல் வேண்டும்.'' (தமிழ் அறிவியற் சொற்பொழிவு, 23-4-1927).

4. தனித்தமிழ் இயக்கத்தின் மலர்ச்சியும் வளர்ச்சியும்

(அ) கருவி நூல்களும் அறிஞர் முயற்சிகளும் : மறைமலையடிகள் தனித்தமிழ் உணர்வை ஒரு முற்றுணர்வாக்கி அறிஞர்களிடையில் அதனை ஓர் இயக்கவுணர்வாகக் கால்கொள்ளும்படி செய்தனர். எனினும், அறிவியல் முறைப்படி அன்றைய நிலையில் அவ்வியக்கம் வளர்வதற்குத் தேவையான அடிப்படையான மொழியியல் நன்கு வளராமல் இருந்தது. ஒப்பீட்டிலக்கண முயற்சியும் கால்டுவெல் அளவில் நின்றது. அவர் காலத்திலும் தொல்காப்பியமும், வேறு பல கழக நூல்களும் வெளிவராமலிருந்தமையால், அவருடைய ஒப்பியல் இலக்கண ஆய்வு நூலும், தமிழ் மொழியில் உண்மையான ஆற்றலை அவ்வளவு முழுமையாக வெளிப்படுத்திவிடப் போதுமானதாக இல்லை. யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசரின் 'சொற்பிறப்பியல் அகராதி' இத்துறையை முழுவதும் நிறைவு செய்வதன்று. (இந்நூல் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்தது). மொழியியல் துறையில் முதல் முயற்சியாக மாகறல் கார்த்திகேயனாரின் 'மொழிநூல்' என்னும் நூலே ஓர் அடிப்படை விளக்கத்தைத் தந்து நின்றது. சில இன்றியமையாத கருத்துகள் சொல்லப்பெற்றிருந்தன. அவை: தமிழ் ஆரியத்திற்கு முற்பட்டதெனல்; தமிழ் மொழியில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் வேர் 'சுல்' எனல்; தமிழ் ஒரு காலத்தில் உலகம் முழுவதும் பரவியிருந்ததென்பது; குமரிக்கண்ட உண்மை தெளிவும் பொலிவும் பெறக் கூறப்பெற்றது; வடமொழியின் இலக்கணச் சிறப்பின்மை காட்டப் பெற்றது. அறிஞர்கள் பலரும் பலவகையான இலக்கிய முயற்சிகளிலும் வேறு பல அறிவாராய்ச்சிகளிலும், கலை, பண்பாட்டு வளர்ச்சிகளிலும் கருத்துகளைச் செலுத்தினரேயொழிய, மொழியியல் துறையில் முறையாக ஈடுபட்டு ஒலியியல், சொல்லியல், ஒப்பீட்டியல், பன்மொழி இலக்கண அறிவு, மாந்த வரலாறு, நில வரலாறு, முழுமையான தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சி, திரவிட மொழிகளின் ஒப்பீட்டறிவு, கூர்மைவாய்ந்த இயற்கையான நுண்ணறிவு முதலியவற்றில் நிறைவுற விளக்கும் மொழியியல் பேராசிரியர் ஒருவரை இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை காண முடியவில்லை. அதன்பின் இக்குறையை நிறைவு செய்யும்படி, பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் தோன்றினார். இவரின் 'ஒப்பியன் மொழிநூல்' முதல் மடலம்—முதற்பாகம் 1940-ல் வெளிவந்தது. அதன்பின் அவர் எழுதிய சுட்டு விளக்கம், முதல் தாய்மொழி, திரவிடத்தாய், கட்டுரை வரைவியல், வேர்ச்சொல் கட்டுரைகள், தமிழர் திருமணம், தமிழ் வரலாறு, வடமொழி வரலாறு, தமிழர் வரலாறு, 'The Primary Classical Language of the World' 'வண்ணனை மொழி நூலின் வழுவியல்' முதலிய அரிய மொழியாய்வு நூல்களும், நூற்றுக்கணக்கான தமிழாராய்ச்சிக் கட்டுரைகளும், தனித்தமிழ் இயக்கத்திற்கு நல்ல உரனாகவும் ஊற்றாகவும் இருந்தன. இவருடைய சொல்லியல் ஆய்வுக் கட்டுரைகள் ஏராளமான புதுச் சொற்களைப் புனைய அடிப்படையாகவிருந்தன என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

சென்னை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பாக, சென்னைத் தமிழ்ப், பாதுகாப்புக் கழகம், நீலாம்பிகையம்மையாரின் 'வடசொற்றமிழ் அகரவரிசை'யைச் சிறு வெளியீடாக (1938) வெளியிட்டது. அதைத் தொடர்ந்து 'தமிழ்ச்சொற்களைப் பிழைநீக்கி எழுதும் முறை', 'மக்கட்பெயர் அகரவரிசை', 'தமிழ்நாட்டுப் பழமொழி அகரவரிசைச் சுருக்கம்', 'அழைப்பிதழ் எழுதுமுறை', 'உவமையகரவரிசை', 'மரபுத்தொடர் அகரவரிசை', 'இல்லப்பெயர் அகரவரிசை' முதலிய சிறுசிறு நூல்களை வெளியிட்டுப் பரப்பி, மக்களிடம் தூயதமிழ் உணர்வு பரவும்படி செய்தது.

பர். அ. சிதம்பரநாதனார், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் பெரு முயற்சியால் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக (1965) வந்த 'ஆங்கிலம்-தமிழ் சொற்களஞ்சியம்' என்னும் அகர முதலியில் ஆயிரக்கணக்கான தூய தமிழ்ச் சொற்கள் கையாளப்பெற்றிருந்தன.

அறிஞர் கி. இராமலிங்கனார் ஆட்சிச்சொல் அகரவரிசை (1924), நகராட்சிமுறை (1954), தமிழ் ஆட்சிச்சொற்கள் (1960), ஆட்சித்துறைத் தமிழ் (1968) முதலிய நூல்களை எழுதினார். நல்ல தமிழ் வளர்ச்சியில் அறிஞர் பலரும் ஈடுபட்டனர். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் நல்ல தமிழ்ச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். பர். மு. வரதராசனார் 'மொழி வரலாறு', 'தமிழ் இலக்கிய வரலாறு' மற்றும் நல்ல தமிழ் நடையில் முப்பதுக்கு மேற்பட்ட புதினங்களை எழுதிப் பொதுமக்களிடம் நல்ல தமிழ்நடை வளரத் துணைநின்றார். அவர்தம் கதை நூல்களில் வரும் உறுப்பினர்கள் பெயர்களெல்லாம் நல்ல தமிழில் இலங்கின. சட்ட அறிஞர் மா. சண்முக சுப்பிரமணியனார் சில சட்டத்துறை நூல்களைத் தமிழில் எழுதினார். அவரெழுதிய நூல்கள் சட்ட நூல்கள், சட்ட இயல், குற்ற இயல், தீங்கியல் சட்டம், குற்றமும் தண்டனையும், சட்டத்தமிழ் முதலியனவாகும். புதுவை, புலவர் சுந்தர சண்முகனார், 'தனித்தமிழ்க் கிளர்ச்சி' எனும் செய்யுள் நூலை 1947-ல் எழுதி வெளியிட்டுள்ளார்.

தூய தமிழ் வளர்ச்சியில் பாவேந்தர் பாரதிதாசனாரின் பங்கும் மிகப் பெரிதாகும். அவருடைய 'தமிழியக்கம்' என்னும் அரிய பாடல் நூல் தனித்தமிழ் வளர்ச்சிக் கருத்துகளையே பெரிதும் கொண்டதாகும்.

(ஆ) அரசியல் மாற்றமும் தமிழ் வளர்ச்சி ஆக்கங்களும்: இனி, மறைமலையடிகளுக்குப் பின், மக்களுக்கிடையில் தமிழுணர்வே சிறிது காலம் வளர்ச்சியின்றியிருந்தது. ஏனெனில், மறைமலையடிகள் காலத்திலேயே இந்தித் திணிப்பு முயற்சி நடந்தது. அதன் பின்னர் நாடு விடுதலை பெற்றபின் அனைவரும் இந்தி படிக்கத் தொடங்கினர். எனவே, தமிழ்பற்றி எவரும் அக்கறை கொள்ளவில்லை. தமிழ்ப் புலவர்களும் திரவிட இயக்கத்தவர்களும் மட்டும் இந்தி வந்தால் தமிழ் அழிந்துபோகும் என்ற கவலையில் இந்தித் திணிப்புக்கு எதிராகக் கருத்தறிவித்துப் போராடி வந்தார்கள். பெரியாரும், பிற அரசியல் இயக்கங்களும் தீவிரமாகப் போராடிய நிலையில், இந்தித் திணிப்பு ஒருவாறு தணிந்திருந்தாலும், இந்தி என்றைக்கோ வந்துதான் தீரும் என்ற அச்சம் இருந்ததால், பெரும்பாலான மக்கள் இந்தியும் ஆங்கிலமுமே படிக்க விரும்பினர். இந்நிலை, அறிஞர் அண்ணா அவர்களின் திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ல் பதவிக்கு வரும் வரை நீடித்திருந்தது. அண்ணா அவர்கள் பதவிக்கு வந்தபின் 'சென்னை' தமிழ் நாடானது (1969). இந்தித் திணிப்புக்கு ஒருவாறு முட்டுக்கட்டை யிடப்பெற்றது. ஏற்கெனவே இருந்த பேராயக்கட்சியரசு தமிழை ஆட்சி மொழியாக்கச் சட்டம் (1956) கொண்டுவந்திருந்ததை அண்ணா அரசு நல்ல முறையில் அழுத்தமாகச் செயற்படுத்தியது. இந்தச் சூழ்நிலையில் தமிழ் வளர்ச்சிக்கு நல்ல ஆக்கங்கள் ஏற்பட்டன.

திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இயல்பாகவே தமிழ்ப்பற்று மிக்கிருந்தது. அவர்களுக்கிருந்த ஆரிய எதிர்ப்புணர்வால் தமிழின, மொழி வளர்ச்சியில் அவர்கள் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டினர். புலவர் வை. பொன்னம்பலனார் திரவிட இயக்கக் கொள்கைகளுடன் தனித்தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார்.

அறிஞர்கள் பலர் நல்ல நூலாக்க முயற்சியில் ஈடுபட்டனர். அரசியல் கட்சி சாராத நடுநிலையுணர்ச்சியுள்ளவர்கள் தமிழ் வளர்ச்சியில் மிகுதியும் ஈடுபட்டனர். தமிழ் பயிற்சிமொழி ஆக்கப்பட்டது (1970). உலகத் தமிழ் மாநாடுகள் மலேசியாவிலும் (1966), சென்னையிலும் (1968), பாரீசிலும் (1970) நடந்தன. அரசு அதிகாரிகளின் பதவிப் பெயர்களெல்லாம் தமிழில் மாற்றப்பெற்றன. 'செகரடேரியட்', 'தலைமைச் செயலகம்' ஆனது. 'ஆகாஷ்வாணி', 'வானொலி நிலையம்' ஆனது. 'போலீஸ் ஸ்டேஷன்' 'காவல் நிலையம்' என்று பெயர்பெற்றது. சென்னையில் பல பகுதிப் பெயர்கள் நல்ல தமிழில் தெளிவாகவும் திருத்தமாகவும் வழங்கப்பெற்றன. பெயர்களுக்கு முன்னால் ஸ்ரீ போடுவதைத் தவிர்த்து, 'திரு' என்று போடுமாறு அரசு கட்டளை பிறப்பித்தது. 'தமிழ்நாடு டிரான்ஸ் போர்ட்', 'தமிழ்நாடு போக்குவரத்துக் கழக'மாக மாறியது. சென்னை 'சங்கீத நாடக சபா', 'தமிழ் நாடு இயலிசை நாடக மன்றம்' ஆனது. பொதுப் புழக்கச் சொற்கள் பல தமிழில் கொணரப் பெற்றன. இந்த விளைவுகளுக்கெல்லாம் அடிப்படையாக 1959 இறுதியிலேயே முற்றும் தனித்தமிழ் வளர்ச்சிக்கெனவே தோன்றியிருந்த தென்மொழி இயக்கம் ஒரு பெருங் கரணியமாகும்.

(இ) தென்மொழி இயக்க முயற்சிகள்: தூய தமிழ் வளர்ச்சியில், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடான 'செந்தமிழ்ச் செல்வி'யினதும், கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'தமிழ்ப் பொழி'லினதும் பங்கு பேரளவில் இருந்ததேனும், இவ்விரண்டு இதழ்களும் புலவர்கள் நடுவிலேயே புழக்கம் கொண்டிருந்தன. பொதுமக்களிடையில் அவற்றிற்கீடுபாடில்லை. எண்ணிக்கையிலும் அவை ஆயிரத்துக்கும் குறைவான படிகளே அச்சிடப் பெற்றன. அடிகளாரின் 'அறிவுக்கடல்' அக்காலத்தில் நூற்றைம்பதுக்கும் குறைவான படிகளே வெளியிடப்பெற்றன. மேலும், 'செல்வியும்' 'பொழிலும்' இலக்கிய இலக்கண வாழ்வியல் துறைகளைப் பற்றியே கருத்துச் செலுத்தின. அறிவியல் துறையில் கோவைக் 'கலைக்கதிர்' ஒன்று மட்டுமே தமிழுக்குழைத்தது. எனினும் இம் மூன்றிலும்

முழுக்கவும் தனித்தமிழ் கையாளப் பெறவில்லை. ஆண்டுப் பெயர்கள், மாதப் பெயர்கள், பட்டப் பெயர்கள், தலைப்பெழுத்துகள், இடையிடையில் பல சொற்கள் முதலியன வடசொற்களாகவே இருந்தன.

இந் நிலையில் 1959ஆம் ஆண்டு இறுதியில் முற்றும் தனித் தமிழுக்கென்றே **தென்மொழி** என்னும் தூயதனித்தமிழிதழ் நெல்லிக் குப்பத்தில் பெருஞ்சித்திரனாரால் தொடங்கப்பெற்றது. அவ்விதழ் தாளிகைத் துறையிலும் தனித்தமிழ் வளர்ச்சித் துறையிலும் பெரும்பணி செய்தது. 1967-ல் அவ்விதழோடு 'தமிழ்ச்சிட்டு' என்னும் சிறுவர் இதழும் அச்சிடப்பெற்று வெளிவந்து கொண்டிருக்கின்றது.

ஆசிரியரின் தொடர்ந்த நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகளாலும், இவ்விதழ்களின் இடையறாப் பணியாலும், மாணவர்களுக்கிடையிலும் ஆசிரியர்களுக்கிடையிலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. ஆயிரக்கணக்கான மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் பெயர்களைத் தனித்தமிழ்ப் பெயர்களாக வைத்துக்கொண்டனர். தங்கள் பேச்சிலும் எழுத்திலும் தூய தமிழ் நடையைக் கையாண்டனர். நாளடைவில் தென்மொழி ஓர் இயக்கமாகவே இயங்கியது.

இவ்வகையில், கோவையில் தென்மொழி மறைநித்தலின்பனாரும் அவரன்பர்களும் 'சேரர் கொற்றம்' தொடங்கி, விளம்பரப் பலகைகளில் தூயதமிழ் விளங்குமாறு போராடி ஓரளவு வெற்றியும் கண்டனர். பூதவியல் பேராசிரியர் திரு. இல. க. இரத்தினவேல் அவர்கள், தென்மொழி இதழில் தனிமப்பட்டியல் முழுவதும் தூயதமிழில் ஆக்கி வெளியிட்டார். காரைக்குடி அழகப்பர் தமிழ் மன்றம் 1970-ல் அறிவியல் கலைச்சொற்பட்டி ஒன்று வெளியிட்டது. இவ்வகையில் கிண்டி பொறியியற் கல்லூரி, கோவை தொழில்நுட்பக் கல்லூரி, நெல்லை மருத்துவக் கல்லூரி, புதுவை சிப்மெர் மருத்துவக் கல்லூரி முதலியவை அரும்பாடாற்றின. (இவ் வரலாற்றின் மிக விளக்கமான விரிவையெல்லாம் இக் கட்டுரையாசிரியர் இக் கட்டுரைத் தலைப்பின்கீழ் எழுதிவரும் தனிநூலில் கண்டுகொள்ளலாம்.) இம் முயற்சிகள் புதுவைத் தனித்தமிழ்க் கழகத்தினராலும், புதுச்சேரி தமிழ்க் காவற் குழுவாலும் மேற்கொள்ளப்பெற்று, ஆங்குள்ள பெரும்பாலான விளம்பரப் பலகைகள் தூய தமிழில் இயங்கும்படி செய்யப்பெற்றுள்ளன. மற்றும் மதுரையிலும் சிவகாசியிலும் இதுபோலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. மற்றும் பண்ணாய்வறிஞர் குடந்தை ப. சுந்தரேசனார் தூய தமிழில் இசை நுணுக்கங்களை நூல் வடிவில் வெளியிட்டு வருவதும், அவற்றைப்பற்றி நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருவதும் குறிப்பிடத்தக்கன.

அடுத்துச் செய்ய வேண்டுவன

கடந்த நாற்பதாண்டுகளுக்குமேல் செய்யப்பெற்ற தொடர்ந்த தனித்தமிழியக்க முயற்சிகளால் அளவிறந்த மாறுதல்கள் அரசு துறையிலும், பொது மக்களிடத்திலும், ஆசிரியர், மாணவர்களிடையிலும், சில இதழ்களிடையிலும் ஓரளவு நல்ல தமிழ் காணப்பெறுகிறது.

''அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.''

இது போதாது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ்; அதுவும் தூய தனித்தமிழ் என்ற நிலை மலர வேண்டும்.

அன்னை மொழியே!
அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை
முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக்
கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த
மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே!
திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே!
எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே!
மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால்
முடிதாழ வாழ்த்துவமே!

சிந்தா மணிச்சுடரே!
செங்கைச் செறிவளையே!
தந்த வடமொழிக்கும்
தாயாகி நின்றவளே!
சிந்து மணற்பரப்பில்
சிற்றில் விளையாடி
முந்தை எகுபதியர்
மூத்த சுமேரியத்தார்

செந்திரு நாவில்
சிரித்த இளங்கன்னீ!
சிந்துங் கலைவடிவே!
சீர்த்த கடற்கோளில்
நந்தாக் கதிரொளியே!
நாடகத்துப் பண்ணியலே!
வந்த குடிமரபோர்
வாழ்த்தி வணங்குவமே!

எனத் தமிழ்த் தாயை அனைவரும் வாழ்த்தி மகிழ்வோமாக.

தமிழும் ஒப்பியலாய்வும்

டாக்டர் இராம. பெரிய கருப்பன்

ஒப்பியலாய்வு தமிழுக்குப் புதிய துறை; ஆனால் புதிய முறையன்று. நம்மிடம் முன்பே ஒப்பியலாய்வு முறைகள் பலவுண்டு. எனினும் அதனை நாம் ஒரு 'துறை'யாக (Discipline) வளர்க்கவில்லை. அதுவே நம் குறை. தமிழில் வடமொழியுடன் ஒப்பிடும் ஆய்வு, மிகப் பழங்காலந்தொட்டு இருந்துவருகிறது.

தொல்காப்பியர் 'ஐந்திரம்' நிறைந்தவர்; அஃதாவது அவ்வடமொழி நூலைக் கற்றவர்; அவர் நூலை அரங்கேற்றியபோது, தலைமை ஏற்ற அதங்கோட்டாசான் 'நான்மறை' முற்றியவர். இவை பனம்பாரனார் தரும் பாயிரச் செய்திகள். வடமொழியாளர் எழுத்திற்கு மாத்திரை கணக்கிடும்போது 'அகத்தெழு வளியிசை' யையும் கணக்கிடுவதைத் தொல்காப்பியர் தமிழுடன் ஒப்பிடுவார் (*102*). ''மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள், துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே'' (*1038*) எனக் காந்தர்வத்துடன் களவை ஒப்பிட்டு விளக்குவார், அவர்.

திருவள்ளுவமாலையில் திருக்குறளை வடமொழி வேதத்துடன் ஒப்பிடும் பல பாடல்கள் காணப்படுகின்றன.

''ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்—ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.''

''செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல்.''

இவை முறையே கோதமனாரும் வெள்ளிவீதியாரும் பாடியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. திருமங்கையாழ்வார் தமிழ் அக இலக்கிய மரபொன்றை வடமொழியுடன் ஒப்பிட்டுப் பேசும் இடம் ஒன்றுண்டு. தொல்காப்பியர் 'மகளிர் மடலேறல் பண்பாகாது' எனக் குறிப்பிடுகிறார். ''எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல் பொற்புடை நெறிமை இன்மை யான'' (*981*) என்பது அவர் கூற்று. இதனை நினைவுகொண்டுதான்போலும் திருமங்கையாழ்வார்,

''மான்நோக்கின்
அன்ன நடையார் அலர்ஏச, ஆடவர்மேல்
மன்னும் மடல்ஊரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவ துண்டு - அதனை
யாம் தெளியோம்;
மன்னும் வடநெறியே வேண்டினோம்''

(பெரிய திருமடல், 21-22)

என்று, மரபு வேறுபாட்டை அழுத்தமாகச் சுட்டிச் செல்கிறார். நம் உரையாசிரியர் பலர் வடநூற் புலமை மிக்கவர்கள். சேனாவரையரும் சிவஞான முனிவரும் இவ்வொப்பீட்டில் தலைநின்றவர் எனில் மிகையாகாது.

இன்று வ. வே. சு. அய்யரின் கம்பராமாயண ஒப்பீட்டு ஆய்வும், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரின் வடமொழி ஒப்பீட்டுக் கட்டுரைகளும், தனிநாயக அடிகளாரின் 'திருவள்ளுவர்' அனைய ஒப்பீட்டுப் பொழிவுகளும், டாக்டர் வி. சச்சிதானந்தனின் விட்மன்-பாரதி ஒப்பீடும், டாக்டர் எஸ். ஆர். கே - யின் மில்டன் - கம்பன் ஒப்பீடும் போல்வன குறிப்பிடத்தக்கனவாகும்.

இவையெல்லாம் 'ஒப்பியல் முறை' ஆய்வுகள்; இவை ஒப்பியல்துறையாக வளர்ச்சிபெற உதவுபவை. டாக்டர் வி. சச்சிதானந்தன் இவ் வரன்முறையை நன்கு கடைப்பிடித்து, ஒப்பியலாய்வு தமிழில் கால் கொள்ள முயன்றுவருவது குறிப்பிடத்தக்கது. 'ஒப்பியலாய்வு' என்பது உறவுடைய இருமொழிகளின் இலக்கியங்களிடையே உள்ள 'கொள்வினை, கொடுப்பினை'களை; தாக்குரவு, செல்வாக்குகளை ஆராய்வதென்பது அதன் தொடக்கநிலையாகும். தொடர்பும் உறவுமற்ற மொழிகளில் காணப்படும் இலக்கியங்களாயினும், தம்முள் ஒப்புமை உடையவற்றை ஒப்பிட்டாராயலாம் என்பது இன்றைய வளர்ச்சி நிலையாகும். 'ஒப்பீட்டறிஞன் குறைந்தது இருமொழி யறிவாவது பெற்றவனாக இருக்க வேண்டும்' என்பது ஒரு விதி. அதுபோல் குறைந்தது இரண்டு மொழிகளின் இலக்கியங்களையாவது ஒப்பிட்டால்தான் அது ஒப்பியல் துறையாகும் என்று கருதப்பட்டதுண்டு. ஒரே மொழியில் உள்ளவற்றை ஒப்பிடுவதெல்லாம் 'ஒப்பீட்டு முறை'யாகுமேயன்றி, ஒப்பியல் துறையில் அடங்காது என அவர்கள் விவாதித்தனர்.

புதிய விளக்கம்

இலக்கியத்தை இலக்கியத்துடன் ஒப்பிடும்போது வெவ்வேறு மொழி இலக்கியங்களை ஒப்பிடுவதே ஒப்பியலாகும். அது தவிரவும் இலக்கியத்தை ஒரு புறம் நிறுத்தி, அதனுடன் அறிவும் உணர்வும் சார்ந்த பல்வேறு துறைகளை ஒப்பிடுவதும் ஒப்பியலாகும். கலைத்துறைகள், தத்துவம், வரலாறு, சமூக அறிவியல்கள், அறிவியல், சமயம் ஆகிய அனைத்தையும் இங்ஙனம் ஒப்பிடலாம் என்பர். இசையும் இலக்கியமும், கணிதமும் இலக்கியமும், சமயமும் இலக்கியமும் என இவ்வாறு வெவ்வேறு துறைகளை ஒப்பிடுவதையும் ஒப்பியலென்றனர்.

மேலும் இதனைத் தெளிவுபடுத்திச் சுருக்கமாக விளக்குவாரும் உண்டு. 'உலகப் பார்வையுடன் அறிவியல் நெறி சார்ந்து எழுதப்படும்' எக்கட்டுரையும் ஒப்பியலில் அடங்கும். அது 'ஒப்பீட்டிற்காக ஒப்பீடு' என நம்மைத் தவறான வழிக்கு இட்டுச் செல்வதன்று. இலக்கியத்தை மேன்மேலும் தெளிவுறக் கற்பதற்கும் முருகியல் உணர்ச்சி பெறுவதற்கும் அவ்வாய்வு உதவவேண்டும்; அல்லாதனவெல்லாம் மிகையெனத் தள்ளப்படும்.

வெறுப்பு நோக்கு

சிலர் இவ்வொப்பியலை வெறுப்பு நோக்குடன் அணுகுகின்றனர். ''முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடலாமா?'' என அவர்கள் முணுமுணுக்கின்றனர். ''கிரேக்க மொழி இலக்கியம் எங்கே? தமிழிலக்கியம் எங்கே? இவற்றின் மரபும் வளர்ச்சியும் வேறுபட்டவை. இவற்றை ஒப்பிடுவதாக ஏன் ஊரை ஏமாற்றுகிறீர்கள்?'' என்று அவர்கள் கடிந்து பேசவும் முற்படுகின்றனர்.

வேறுபட்டவற்றையும் ஒப்பிடலாம். வேறுபாடுகளைக் காட்டுவதும் ஒப்பியலாய்வே. ஒற்றுமைகளைக் காட்டுவன மட்டுமே ஒப்பியலாய்வு எனக் கருதுவது தவறு. இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம். வேற்றுமை அணி என்பது என்ன?

''கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே'' (48)

என்பது தண்டியலங்காரம். குறிப்பாகவோ வெளிப்படையாகவோ ஒப்புமை உடையவற்றை ஒப்பிட்டு அவற்றிடையே வேற்றுமை காண வேண்டும். ஞாயிறு புற இருளைப் போக்கும்; தமிழ் அக இருளைப் போக்கும். இருளைப் போக்குகிற பண்பு இரண்டிற்கும் பொது. எனவே இவற்றை ஒப்பிடலாம். இவற்றில் உள்ள வேற்றுமையையும் கண்டறியலாம். ஒப்பீட்டுப் பொதுக்கூறுகள் உள்ளனவா என்பதுதான் கேள்வி.

முல்லைப்பாட்டு

முல்லைநிலப் பாடல் ஒரு நிலவழிப் பாடல். இது, நிலப் பின்னணியை முக்கிய அடிப்படையாகக் கொண்டது. மேட்டு நில வெளிகளைப் புனையும் முல்லைப்பாட்டு (Pastoral Poetry) உலகெங்கும் இந் நில வருணனையில் ஒருபடித்தாயிருக்கிறது. தமிழ் முல்லைத்திணைப் பாடலிலும் ஏனையவற்றிற் போல நிலவழிப் புனைவு மிகுதி. உலக மொழிகளில் வருவனபோன்று ஆயனும் புல்லாங்குழலும், மேட்டுநிலவெளியும் ஆனிரையும் குளிர்காலமும், குளிர்காய்தலும் தமிழ் முல்லைப் பாடல்களிலும் இடம் பெறுகின்றன. ஆனால், தமிழ்ப்பாட்டு உரிப்பொருளால் பெரிதும் வேறுபடுகிறது. மேலை நாட்டுப் பாடல்களில் 'இரங்கற்பொருளே' மிகுதி. அவை முல்லைக் கையறுநிலை என அழைக்கப்படும். தமிழில் இரங்கற்பொருளைப் பெரிதும் தருவது நெய்தற்பாட்டேயாகும். அதிலும் மேலைநாட்டிற் போன்ற 'கையறுநிலை'கள் இங்கே புறத்திணை சார்ந்துவிடும். மேலைநாட்டு முல்லைப் பாட்டுகளில் 'பொற்காலம்', 'மிக அழகிய நிலப்புனைவு' என்ற சில புனைவு மரபுகளைக் காணலாம். தமிழில் கற்பு, அமைதி, சிக்கனம், கொடும்பாடின்மை என்ற சில புனைவு மரபுகளை முல்லைப் பாடல்கள்

தருகின்றன. பாடல்களை எடுத்துவைத்துக் கொண்டு, இவ்வொப்பீடு மேற்கொள்ளப்படும் போது இன்பம் மிகுகிறது; இலக்கிய விளக்கம் சிறக்கிறது.

கம்பரின் ஓவியப் பற்று

கம்பர் ஓவியத்திற்கொண்டிருந்த பற்று அள விடற்கரியது. 'அமிழ்து கொண்டு அனங்கவேள் செய்த ஓவியம்' எனவும், 'ஓவியம் புகையுண்டதை ஒக்கும் உரு' எனவும் இதுபோல் வரும் கம்பர் உவமைகள் நூற்றுக்கணக்கின. அவர் காலத்தில் ஓவியக் கலை மிகச் சிறப்புற்றிருந்ததைச் சோழர்களின் கோயிற்பணிகளால் அறியலாம். அவர்களுக்கு முன்னதாகப் பல்லவர் காலத்திலேயே ஓவியக்கலை முன்னேறியிருந்ததைச் சித்தன்னவாசல் இன்றும் சித்திரித்துக் காட்டுகிறது. இடைக்கால ஓவிய வளர்ச்சியை ஒருபுறம் நாம் கணித்தறிந்துகொண்டு, மறுபுறம் கம்பர் கூறும் உவமைகளைப் படித்தால்தான் அவை மேலும் தெளிவுற விளங்கும். இவ்வாறு கம்பர்கால ஓவியச் செழுமையையும் அதன் இலக்கியத் தாக்குரவையும் கணித்தறிய வேண்டும். இத்தகைய ஆய்வுகளே தமிழர்களின் கலையார்வத்தையும் இலக்கியப் படைப்பாற்றலையும் உலகிற்குணர்த்தும்.

கணிதமும் இலக்கியமும்

கணக்கையும் இலக்கியத்தையும் ஒப்பிடலாம் என்று செருமன் நாட்டு அறிஞர் ஒருவர் நூல் எழுதியுள்ளார். இலக்கிய உருவாக்கத்தில் கணிதத்தின் பங்கு மிகுதி. தொல்காப்பியர் சீர்களையும் தொடைகளையும் கணக்கிட்டுக் கூறும்போதும் எழுத்தெண்ணிச் சீர்களை வகைப்படுத்தும்போதும் கணித அறிவுடையவராக இல்லாதிருந்தால், தமிழ் யாப்புப் பிடிபடுதல் அரிது என்பது போதரும். மேலைநாட்டு அறிஞர் ஒருவர் தம் ஒப்பியற் கட்டுரையில் நான்கு என்ற எண் மிகவும் சிறந்தது என விளக்கியிருந்தார். 1, 2, 3, 4 என எழுதி, இவை நான்கையும் கூட்டினால் பத்து என்ற முழுமை கிடைக்கிறது. இதைக்காட்டி அவர் நான்கு என்பது பத்திற்கு ஈடானது எனவும், நான்கு என்ற எண்ணிலும் பத்தின் முழுமையுளது எனவும் கூறியிருந்தமை எனக்கு வியப்பளித்தது. நம் முன்னோர்களும் நான்கைக் கூறினால் அது பத்திற்குச் சமம் என்று கருதியிருக்க வேண்டும். நான்கிலே முழுமை கண்ட ன் தமிழன் எனலாம். நானிலம் கண்ட மரபால் இது வளர்ந்திருக்கலாம். நானூறு நானூறாகவும், நாற்பது நாற்பதாகவும் அவர்கள் நூற்றொகை கண்டதற்கு இவ்வுணர்வும் காரணமாக இருக்கலாமன்றோ?

'உலகம் சிரிக்கும்' என்பதை 'நாலுபேர் சிரிப்பார்கள்' என்றும், 'எல்லாம் தெரிந்தவன்' என்பதை 'நாலும் தெரிந்தவன்' என்றும் இவ்வாறு வழங்கும் உலகத் தொடர்கள் பலவன்றோ?

முருகனை வணங்கும் திரிகூட ராசப்பக் கவிராயர் பத்திலிருந்து ஒன்று வரை எண்ணுகிறார்:

''பன்னிருகை வேல்வாங்கப் பதினொருவர்
படைதாங்கப் பத்துத்திக்கும்
நன்னவ வீரரும்புகழ மலைகள்எட்டும்
கடல்ஏழும் நாடிஆடிப்
பொன்னின்முடி ஆறேந்தி, அஞ்சுதலை
எனக்கொழித்துப் புயம்நால் மூன்றாய்த்
தன்னிருதாள் தரும்ஒருவன் குற்றாலக்
குறவஞ்சித் தமிழ்தந்தானே.''

இங்ஙனம் கணிதம், எண்கள் என்ற நோக்குடன் அணுகினால், அக் குறிப்பிட்ட அறிவியலால் தமிழிலக்கியம் பெற்ற வளர்ச்சியை நம்மால் கணித்தறிய முடியும்.

சாகுந்தலமும் குறுந்தொகையும்

சாகுந்தல நாடகத்தைப் படிக்கும்பொழுது, பல தமிழ் அகப்பொருள் மரபுகள் நினைவிற்கு வரும். சகுந்தலையைக் கண்டு காதல்கொண்ட துஷ்யந்தன் கூற்றாக ஒரு பாடல் உண்டு. சகுந்தலை பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்கிறாள். அப்போது அவள் முகத்தருகே வண்டு ஒன்று பறக்கிறது. துஷ்யந்தன் தன்னைவிட அவ்வண்டு தவம் செய்ததென நினைக்கிறான். அதனைப் போல அவள் முகத்தருகே அவன் மனம் பறந்து செல்கிறது. ஆனால், அவனால் அங்ஙனம் அவளை அணுக முடியவில்லை. இது அவனுக்கு ஒருவிதப் பொறாமையுணர்வை, அவ் வண்டின்மீது தூண்டுகிறது. அவன் அவ்வண்டைப் பார்த்துப் பேசுகிறான்: ''ஏ வண்டே! நான் உன்னைப்போல் தவம் செய்யவில்லை. நீயோ சகுந்தலையின் கடைக்கண்ணை ஒட்டிப் பறக்கிறாய். காதுக்குள் இரகசியம் பேசுபவர்போல் நீ அவளுடைய செவியருகே ஒலிக்கின்றாய்! உன்னை விரட்ட நீண்ட கரத்தை அவள் அசைத்தாலோ, அவள் இதழருகே பறந்து அதை நீ சுவைக்கின்றாய்! நீயே பேறு பெற்றனை! அதனை அறிந்து நான் மனம் அழிந்து வருந்துகின்றேன்.''

''தேன்செய் வண்டே! யாம்தவம் இலமே!
மருளும் கடைக்கண் மருவு கின்றனைநீ
மறைபொருள் செவிக்குள் உரைப்பவர் எனவே
சகுந்தலை மடந்தைதன் செவியரு கொலிப்பாய்!
நின்னை விரட்ட நீள்கரம் அசைத்திடின்
தேன்சுவை நிதியாம் இதழைநீ சுவைப்பாய்!
ஆதலின் நீயே பேறு பெற்றனை!
அறிந்து மனம்மிக அழிந்தனம் யாமே!''

அகத்திணையில் 'வண்டோச்சி மருங்கணைதல்' அல்லது 'மெய்தொட்டுப் பயிறல்' என்ற துறையுண்டு. தஞ்சைவாணன் கோவையில் 'மெய்தொட்டுப் பயிறற்கு' ஒரு செய்யுள் வருகிறது. தலைமகன் வண்டைப் பார்த்துப் பேசுகிறான்: ''ஏ வண்டே! ஏற்கெனவே அவளுடைய இடை சுமை தாங்காமல் தள்ளாடிக்கொண்டிருக்கிறது. மேலும் நீயும் போய் அவள் கூந்தலில் உட்காருவதுபோல் பறக்கிறாய்! அப்படி நீ உட்கார்ந்தால், நில்லாது இடை. உனக்குத்தான் பழி வந்து சேரும்! பெண்கள் விழிபோல இருந்தும் 'அளி' எனும் நாமம் பெற்றும் என்ன பயன்?''

''நல்லார் விழிபோல் இருந்தும்
அளியெனும் நாமம்பெற்றும்
அல்லார் குழலில் அமர்ந்திருந்
தால்அம ராரைவெல்ல
வல்லான் வரோதயன் வாணன்தென்
மாறை மதுகரங்காள்!
நில்லா திடையுமக் கோபழி
சால நிலைநிற்குமே.''

—தஞ்சைவாணன் கோவை, 8

துஷ்யந்தன் வண்டோச்சி மருங்கு அணைய முற்படுபவனாகவே காணப்படுகிறான். தான் நாடும் கடைக்கண்ணை வண்டு நாடுவதாலும், தான் இரகசியம் பேச விரும்பும் செவியில் வண்டு சென்று ரீங்காரமிடுவதாலும், தான் சுவைக்க விரும்பும் இதழருகே வண்டு செல்வதாலும் மனமழிந்த துஷ்யந்தன் அதைப் பார்த்துப் பேசுவான்போல அவளருகே சென்றுவிடத் துடிக்கின்றான். இங்குத் தலைவியின் தலையிலுள்ள மலர்களில் மதுவுண்ண அமரும் வண்டினைக் கண்டு, தலைமகன் அதனை விரட்ட முயல்கிறான்.

இரண்டும் 'களவி'ற்கு முன்னோடியான தலைமகன் கூற்றுகள். இரண்டிலும் தலைமகனின் ஏக்கம் தொனிக்கிறது. இரண்டின் கண்ணும் வண்டின் மீதான மன வருத்தம் வெளிப்படுத்தப்படுகிறது. காளிதாசர் வண்டினைத் தன்னுடன் ஒப்பிடும் தலைமகனைக் காட்ட, பொய்யாமொழிப் புலவரோ தான் விலகி நின்று வண்டினைப் பார்த்துப் பழி சுமத்தும் தலைமகனைக் காட்டுகிறார்.

குறுந்தொகையில் ஒரு தலைமகன் வருகின்றான். அவன் தலைவியைக் கூடி மகிழ்ந்தவன்; அவள் கூந்தலின் நறுமணத்தில் திளைத்தவன்: அவனும் ஒரு வண்டைப் பார்த்துப் பேசுகிறான்; ''வண்டே! நீ எத்தனை பூக்களை நாடிச்சென்று, அவற்றின் மணத்தை நுகர்ந்து பார்த்திருக்கிறாய்! உன்னை ஒன்று கேட்கிறேன். இவ்வுலகிலேயே இவள் கூந்தலுக்கு நிகரான மணமுடைய பிறிதொரு பூவை நீ பார்த்ததுண்டா? விருப்பு வெறுப்பின்றிச் சொல்'' என்று அவன் வினவுகின்றான்:

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ!
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்று அறிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ அறியும் பூவே?''

(குறுந்தொகை, 2)

துஷ்யந்தனுக்கு ஏக்கம்; குறுந்தொகைத் தலைவனுக்கோ விரும்பியதைப் பெற்ற எக்களிப்பு. முன்னவன் பெருமூச்சு விடுகிற நிலை; பின்னவன் 'சவால்' விடுகிற நிலை. இரண்டு காதல் உள்ளங்களின் நினைவோட்டம் ஒன்றே. ஆயினும் விரும்பிய காதலியைக் கூடப்பெறுமுன் உள்ள மன நிலையைச் சாகுந்தலத்திலும், பெற்ற பின் உள்ள மனநிலையைக் குறுந்தொகையிலும் காண்கிறோம். ஒரே நிகழ்ச்சியின் முற்கூறினைச் சாகுந்தலமும், அதன் பிற்கூறினைக் குறுந்தொகையும் பாடுவது போல் இருக்கின்றன.

வண்டினைப் பார்க்கும் தலைமகனின் எண்ண ஓட்டங்களை இவை புனைவதால், இவற்றிடையே ஒருமையிழையொன்று ஓடுவதை உய்த்துணரலாம். இங்ஙனம் ஒருமையுடையனவற்றைத் தேடிக் கண்டு பிடித்து, ஒப்பிட்டாய்வது சிறந்ததொரு இலக்கிய இன்பத்தை நல்குகிறது. ஒப்பிலக்கிய நெறிசார்ந்த ஆய்வுகளால் இனித் தமிழ் இலக்கியம் வளரும் என்பது உறுதி.



அருச்சுனன் தவக்காட்சி — பாறைச்சிற்பம் — மாமல்லபுரம்.
பல்லவர் காலம்; கி.பி. ஏழாம் நூற்றாண்டு

தமிழ்நாட்டுக் கலைச் செல்வங்கள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர்

தமிழகத்திலே காணப்பெறும் கலைச் செல்வங்களைக் காணும்போது தமிழர்கள் மிகப் பழங் காலம்தொட்டே கலையைப் பேணிப் பாதுகாத்து வந்திருக்கின்றனர் என்பது தெரியவரும். ''ஆய கலைகள் அறுபத்து நான்கு'' என்ற முதுமொழிக் கேற்ப, பல்வகையான கலைகளைப் பாங்குற வளர்த் திருக்கின்றனர். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை என்று பல்வகையாகப் பிரித்து நாடோறும் வளர்த்திருக் கின்றனர். அவற்றுள் கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை ஆகியவை மிகமிகப் பழங்காலம் முதலே தமிழகத்தில் சிறப்புப் பெற்று விளங்கியிருக் கின்றன.

கட்டடக்கலை

கட்டடக்கலை என்றால் கோயில்களின் கட்டடக் கலையைத்தான் கூறமுடிகிறது. மற்றபடி அரசர் கள் வாழ்ந்த அரண்மனைகள்பற்றியோ, செல்வந் தர்கள் வாழ்ந்த மாளிகைகளைப்பற்றியோ, பொது மக்கள் வீடுகளைப்பற்றியோ கூற முடியவில்லை. ஏனெனில், அவற்றைப்பற்றி இலக்கியங்கள் கூறும் செய்திகள் அல்லாது, நேரிடைச் சான்றுகள் ஏதும் கிட்டாததனாலேயாகும். இலக்கியங்களில் மன்னர்கள் வாழ்ந்த அரண்மனைகள்பற்றிய செய்தி உள்ளது; நகர அமைப்புப்பற்றிப் பேசப் படுகிறது; யானைமீது போர்வீரன் ஒருவன் அமர்ந்து, தன் கையில் மிக உயர்ந்த கொடியை ஏந்திச் செல்லும் அளவுக்கு உயர்ந்த வாயில்கள் அரண்மனைகளில் இருந்திருக்கின்றன; பெரும் மாளிகைகள் இருந்திருக்கின்றன; ஐவகை நிலங் களுக்கு ஏற்பச் சிறு வீடுகள் கட்டிக்கொண்டு மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆனால், அவற்றின் நேரி டைச் சான்றுகள் இன்னமும் கண்டுபிடிக்கப்பட வில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகாரில் நடை பெற்ற அகழ்வாய்வில் புத்த விகாரம் ஒன்றும், பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் முகத்துவாரக் கட்டமும் அகழ்வாய்வில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. ஆனால், மக்கள் வாழ்ந்த கட்டடப் பகுதி (Secular building) ஏதும் வெளிப் படுத்தப்படவில்லை. கொற்கையில் நிகழ்ந்த அகழ்வாய்விலும், உறையூரில் மேற்கொண்ட அகழ் வாய்விலும் கி.பி. 11-12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடப் பகுதிகள் கிடைத்தன. அவை அக்காலத்திய கட்டடங்கள்பற்றித் தெளிவாகத் தெரிவிப்பனவாக இல்லை.

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கங்கைகொண்ட சோழபுரத் தின் பகுதியான உள்கோட்டையில் முதலாம் இராசேந்திர சோழன் எடுப்பித்து, வாழ்ந்த அரண் மனைப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முழுப் பகுதியும் வெளிப்படுத்தப்பட்டால் கி.பி. 10-11ஆம் நூற்றாண்டில் மன்னர்களது அரண்மனை எவ்வடி வில் இருந்தது என்பதை உணர்ந்துகொள்ள உறு துணையாக இருக்கும்.

ஆனால், கோயிற் கட்டடக்கலை என்று எடுத்துக் கொண்டால் கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து நாம் கூறமுடியும். தமிழகத்தின் தென்பகுதியான இராம

நாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிள்ளையார் பட்டி என்னும் ஊரில் உள்ள குடைவரைக் கோயிலே தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் பழமையானதாகும். இது பாண்டியர் களது படைப்பாகும். இதனை அடுத்து, தமிழகத் தின் தலைநகரான சென்னையிலிருந்து பல பகுதி களில் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. பல்லவர்கள், பாண்டியர்கள், அதி யர், முத்தரையர் ஆகியோர் அமைத்தவைகளாகும் அவை. கி.பி. 9ஆம் நூற்றாண்டோடு குடைவரைக் கோயில்கள் அமைக்கும் பணி நின்றுவிட்டது.

தனித்தனி குன்றுகளைச் செதுக்கிக் கோயிலாக் கும் முறை பல்லவர், பாண்டியர் காலத்தில் இருந் திருக்கிறது. மாமல்லபுரத்தில் உள்ள ஐந்து ரதங் களும், கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயிலும் முறையே அவர்களது படைப்புகளாகும். இம்முறை கி.பி. 8ஆம் நூற்றாண்டளவிலேயே நின்றுவிட்டது.

கற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயிற்பணி பல்லவர், பாண்டியர் காலந்தொட்டு ஏற்பட்டு இந்நாள் வரை தொடர்ந்து நிலவி வரு கிறது. பல்லவர் காலத்துச் சிறந்தவைகளாக மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலையும், காஞ்சி புரத்துக் கைலாயநாதர் கோயிலையும், பாண்டியர் காலத்ததாகத் திருப்பத்தூர் தளிநாதர் கோயி லையும், சோழர் காலத்துச் சிறந்தவைகளாக நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரம், தஞ்சை இராசராசேச்சுரம் என்னும் தஞ்சைப் பெருவுடை யார் கோயில், கங்கைகொண்ட சோழபுரத்து கங்கைகொண்ட சோழீச்சுரம், தாராசுரம் ஐராவ தேசுவரர் கோயில், திரிபுவனம் திரிபுவன வீரேச் சுரம் முதலானவற்றைக் காட்டலாம்.

இக் கலையின் வளர்ச்சியைத்தான் பிற்காலப் பாண்டியர், விசயநகர மன்னர்கள், நாயக்கர் காலங்களில் காணமுடிகிறது.

கோயில்களில் கோபுரம் அமைத்தல் பல்லவர் காலத்தில் தொடங்கி விசயநகர மன்னர்கள் காலத்தில் மிகவும் உன்னத நிலை எய்தியது.

சிற்பக்கலை

தமிழிலக்கியங்கள் சிற்பங்கள் செய்யும் முறை தொடர்ந்து வழக்கிலிருந்தன என்பதைக் காட்டி நிற்கும். கொல்லிப்பாவை, கண்ணகிசிலை, பெரும் மாளிகைகளில் சுதை உருவங்கள் அமைத் திருத்தல் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

பல்லவர் காலந்தொட்டு, கோயில்களில் பல்வகை யான சிற்பங்களைக் காண முடிகிறது. கடவுளர் களின் திருவுருவங்கள், அக்காலத்திய மக்களின் உருவங்கள், மற்றும் விலங்கினங்கள், பறவையினங் கள் ஆகியவற்றின் உருவங்களாகும் அவை. கடவு ளர்களது உருவங்களாயினும், சாதாரண மக்களின் உருவங்களாயினும் அவ்வவற்றிற்கு ஏற்ற வகையில் உடல் அமைப்பு, முகப் பொலிவு, அவயவங்களின் அளவு மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருப் பது தமிழர்தம் கலைத்திறனுக்குச் சிறந்த எடுத் துக்காட்டுகளாகும். விலங்கினங்களில் குறிப்பாக, யானையின் உருவத்தைச் செதுக்குவதில் பல்லவர் காலத்துச் சிற்பிகள் கைதேர்ந்தவர்களாக விளங்கி யிருக்கின்றனர். பல்லவர்காலச் சிற்பங்களை மாமல்லபுரம் ஒன்றிலேயே கண்டு களித்துவிடலாம். பல்லவர்காலத்துச் சிற்பிகள் கோயிலையே ஒரு சிற் பமாக வடித்தெடுத்துள்ளார்கள் என்று சிற்ப இயல் வல்லுநர்கள் பாராட்டிப் பேசுவர்.

சோழர்காலத்துச் சிற்பிகள், பல்லவர்காலத்துச் சிற்பிகள் போன்று மிகப் பெரிய அளவில் சிற்பங் களைச் செதுக்கியிருக்காவிட்டாலும் கலையழகை அதிக அளவில் காண்பித்திருக்கிறார்கள் என்று கூற லாம். கோயில்களின் அதிட்டானத்தில் காணப் படும் சிறு சிற்பங்கள் சோழர்காலச் சிற்பிகளின் வல்லமையைப் புலப்படுத்துவனவாகும். இராமா யணக் காட்சிகளையும், சிவபுராணக் காட்சிகளையும் தேர்ந்தெடுத்துச் சிறுசிறு புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கியிருப்பது அவர்களின் சிற்பக்கலைத் திற னுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். கடவுளர் களது உருவங்களாயினும் அரச, அரசியர்கள் உருவங்களாயினும் அவற்றில் காணப்பெறும் உருவ அமைப்பு, முகப்பொலிவு, கடவுள் தன்மை, விழியோட்டம், புருவ நெளிவு, கை அசைவு ஆகி யவை பல்லவர்காலத்துச் சிற்பிகளைவிடச் சோழர் காலத்துச் சிற்பிகள் ஒருபடி மேலும் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதைக் கூறாநிற்கும்.

சோழர் காலத்தைத் தொடர்ந்து வந்த பிற் காலப் பாண்டியர் காலத்தில், சோழர் காலத்திய கலைத்தன்மையைச் சிற்பங்களில் காண முடிய வில்லை. விசயநகர நாயக்கர் காலங்களில், முகம் மதியர், வெளிநாட்டார் ஆகியோரின் கலாசாரத் தாக்குதல் ஏற்படவே சிற்ப அமைப்புகளிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. கடவுள் தன் மைக்கும் கலை அம்சத்துக்கும் தரப்பட்ட முக்கியத் துவம், விசயநகர நாயக்கர் காலங்களில் மனிதத் தன்மைக்கும் உடற்கூறுகளுக்கும் தரப்படலாயின.

செப்புப்படிமக்கலை

இன்றைக்குச் சுமார் 2800 ஆண்டுகட்கு முன் பிருந்தே தமிழ்நாட்டில் செப்புப்படிமக் கலை மிக உன்னத நிலையில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கிடைத் துள்ள தெய்வச் செப்புத் திருமேனி இதற்குத் தக்க தொரு சான்றாகும். பல்லவர்காலத்தில் செப்புப் படிமக்கலை பழக்கத்தில் இருந்ததா இல்லையா என்பதுபற்றி ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடு காணப்பட்டது. அண்மைக்காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளினால்

பல்லவர் காலத்தில் இக்கலை நல்ல வளர்ச்சியுற்ற நிலையில் விளங்கியிருந்தது என்பதை அறியமுடிகிறது. கூரம் நடராசர், கொடுமுடி திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி போன்ற படிமங்களைப் பல்லவர் காலத் திருமேனிகளுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம். சிற்பங்களில் காணப்பெறும் அதே கலைப்பாணியைச் செப்புத் திருமேனிகளிலும் காணமுடிகிறது.

செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எனச் சோழர் காலத்தைக் குறிப்பிடலாம். எண்ணிக்கையிலும் அதிக அளவில் சோழர் காலத்தில்தான் செய்யப்பட்டிருக்கின்றன. செம்பியன் மாதேவி போன்ற சோழப் பேரரசிகள், செப்புத் திருமேனிகள் செய்தளிப்பதைத் தாம் இம்மண்ணுலகில் பிறந்ததன் கடமை என்று எண்ணிச் செய்தளித்திருக்கின்றார்கள் போலும். சோழர் காலத்திய செப்புத் திருமேனிகள் கலை அழகும், கடவுள் தன்மையும் பொருந்தியவை. உயிர்பெற்றெழுந்துவிட்டனவோ என்னும் அளவுக்குக் காணப்படும் உன்னதப் படைப்புகள். சிவன் மூர்த்தங்களாயினும் திருமால் மூர்த்தங்களாயினும் அவை எவ்வாறு செய்யப்பட வேண்டுமென்று ஆகம நூல்களில் குறிக்கப்பட்டுள்ளனவோ அதற்கேற்பச் செய்யப்பெற்றவை. ஒவ்வொரு திருமேனியிலும் அக்காலச் சிற்பியின் கைத்திறன் பளிச்செனக் காணப்படும்.

சிற்பக்கலை எவ்வாறு பிற்காலத்தில் சீரழிந்ததோ அதே போன்று செப்புப் படிமக்கலையும் விசயநகர நாயக்கர் காலத்தில் சிறப்பிழந்து காணப்படுகிறது.

ஓவியங்கள்

ஓவியக்கலை தமிழகத்தில் சிறந்த நிலை எய்தியிருந்தது. உலகில் காணப்பெறும் உயிருள்ளன, உயிரல்லன ஆகிய எல்லாப் பொருள்களையும், கற்பனையால் காணப்பெறும் பொருள்களையும் அவ்வவற்றின் உருவங்கள் போலத் தோற்றும்படி தமிழ்நாட்டு ஓவியர்கள் ஓவியங்களாகத் தீட்டினர். 'எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி' **(516)** என மதுரைக்காஞ்சியும், 'மையறு படிவத்து வானவர் முதலா — எவ்வகையுயிர்களும் உவமங் காட்டி' ***(3:128-129)*** என மணிமேகலையும் கூறுகின்றன. ஓவியத்தை வெறுந் தொழிலாகக் கருதாது ஒரு யோக சாதனமாகவே கருதினர்.

தமிழ்நாட்டில் இப்பொழுது எஞ்சியுள்ள ஓவியங்களில் மிகவும் தொன்மையானவை பல்லவப் பெருமன்னர் காலத்தவையே யாகும். ஏறக்குறைய கி.பி. 7ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் ஓவியங்கள் காணப்படுகின்றன. இதற்கு முற்பட்டவை காலப்போக்கில் அழிந்து மறைந்து போயின. இத்துறையில் பல்லவ மன்னர்கள் பெரும்பணி புரிந்துள்ளனர். இதில் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் தானே ஒரு சிறந்த ஓவியனாகத் திகழ்ந்துள்ளான். அதுபோன்றே சோழ மன்னர்களும் ஓவியக்கலைப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ் மன்னர் இவ்வாறு வளர்த்த ஓவியங்களை அவர்கள் கட்டிய கோயில்களின் நுழைவாயிலின் இரு பக்கங்களிலும், கருப்பக்கிரகச் சுவர்களிலும், பிரகாரங்களிலும், விதானத்திலும் தீட்டினர். அவ்வாறு தீட்டப்பட்ட ஓவியங்கள் மாமண்டூர்க் குகைகளின் வெளி மண்டபத்திலும், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனமலைக் கோயில், தஞ்சைப் பெருவுடையார் கோயில் முதலிய பல இடங்களிலும் காணப்பெறுகின்றன. இதில் பனமலையில் உள்ள மண்டபத்தில் காணப்படும் எழிலார்ந்த ஆடல் மகளின் ஓவியம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச்செறிவும் உணர்ச்சிப் பொலிவும் நம்மைக் கவர்கின்றன.

மரச் சிற்பக்கலையும் தந்தச் சிற்பக்கலையும்

மரச் சிற்பக்கலை கி.பி. 16ஆம் நூற்றாண்டிலிருந்தே காணப்படுகிறது. கோயில்களில் திருவிழாக்கள் அதிகமாக அதிகமாக மரச் சிற்பங்கள் செய்யும் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது என்று கூறலாம். குறிப்பாக, தேர்த்திருவிழா ஏற்பட்ட பிறகே, தேர் செய்கையில் அத்தேரில் சிற்பங்களைச் செதுக்குவதும் நடைபெற்றிருக்கிறது. சில ஆலயங்களில் கோபுர வாயில் கதவுகளிலும் சிறந்த மரச் சிற்பங்களைக் காண முடிகிறது. பிற்காலத்தில் செட்டிநாட்டார் வீடுகளில் வாயில் நிலைகளில் மரச்சிற்பங்கள் செய்து அழகுபடுத்தியிருந்ததையும் அறியலாம்.

தந்தச் சிற்பக்கலை குறிப்பாக, நாயக்க மன்னர்கள் காலங்களில்தான் சிறப்புப்பெற்றிருக்கிறது. கடவுளர் உருவங்களும், அரச, அரசியர் உருவங்களும், மற்றும் பெட்டி, பல்லக்குத் தண்டு போன்ற பொருள்களும் தந்தத்தால் செய்யப்பட்டிருக்கின்றன.

திருவரங்கத்தில் நாயக்க மன்னர், அவரது பட்டத்தரசி ஆகியோரது உருவங்கள் நான்கடி உயரத்தில் தந்தத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. அதே கோயிலில் திருமலை நாயக்கர் தம் பட்டத்தரசியோடு இருப்பது, மற்றும் கடவுளர் உருவங்கள் ஆகியவை சிறிய அளவில் நிரம்ப உள்ளன. அவை இப்பொழுது அங்குள்ள காட்சிக் கூடத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.


மதுரைக்கு அருகிலுள்ள அழகர் கோயிலிலும் தந்தச் சிற்பங்கள் நிரம்ப இருக்கின்றன. இவையும் சிறிய அளவிலானவை.

செப்புத் திருமேனிகள்



மாதங்கி

11 அல்லது 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்த ஓவிய வடிவின் உண்மைத் திருமேனி இன்று வாஷிங்டனில் உள்ள ஃபிரியர் கலைக் கூடத்தில் உள்ளது.



பார்வதி

சோழர் காலத்தது. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இப்பொழுது இத் திருமேனி அகமதாபாத்தில் உள்ள கவுதம் சாராபாய் கலைத் தொகுப்பில் உள்ளது.

லவர் காலத்தில் இக்கலை நல்ல வளர்ச்சியுற்ற லயில் விளங்கியிருந்தது என்பதை அறியமுடி து. கூரம் நடராசர், கொடுமுடி திரிபுராந்தகர், புரசுந்தரி போன்ற படிமங்களைப் பல்லவர் லத் திருமேனிகளுக்கு எடுத்துக்காட்டாகக் ட்டலாம். சிற்பங்களில் காணப்பெறும் அதே லப்பாணியைச் செப்புத் திருமேனிகளிலும் ண முடிகிறது.

செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று ாழர் காலத்தைக் குறிப்பிடலாம். எண்ணிக்கை லும் அதிக அளவில் சோழர் காலத்தில்தான் ய்யப்பட்டிருக்கின்றன. செம்பியன் மாதேவி ான்ற சோழப் பேரரசிகள், செப்புத் திருமேனி செய்தளிப்பதைத் தாம் இம்மண்ணுலகில் பிறந் தன் கடமை என்று எண்ணிச் செய்தளித்திருக்கின் ர்கள் போலும். சோழர் காலத்திய செப்புத் ருமேனிகள் கலை அழகும், கடவுள் தன்மையும் பாருந்தியவை. உயிர்பெற்றெழுந்துவிட்டனவோ ன்னும் அளவுக்குக் காணப்படும் உன்னதப் டைப்புகள். சிவன் மூர்த்தங்களாயினும் திருமால் ர்த்தங்களாயினும் அவை எவ்வாறு செய்யப்பட வண்டுமென்று ஆகம நூல்களில் குறிக்கப்பட்டுள்ள வோ அதற்கேற்பச் செய்யப்பெற்றனை. ஒவ் வாரு திருமேனியிலும் அக்காலச் சிற்பியின் கைத் றன் பளிச்செனக் காணப்படும்.

சிற்பக்கலை எவ்வாறு பிற்காலத்தில் சிறந் தோ அதே போன்று செப்புப் படிமக்கலையும் சயநகர நாயக்கர் காலத்தில் சிறப்பிழந்து ணப்படுகிறது.

வியங்கள்

ஓவியக்கலை தமிழகத்தில் சிறந்த நிலை ய்திருந்தது. உலகில் காணப்பெறும் உயி ள்ளன, உயிரல்லன ஆகிய எல்லாப் பொருள் ளையும், கற்பனையால் காணப்பெறும் பொருள் ளையும் அவ்வவற்றின் உருவங்கள் போலத் தோன் ும்படி தமிழ்நாட்டு ஓவியர்கள் ஓவியங்களைத் தீட்டினர். 'எவ்வகைச் செய்தியும் உவமங் ாட்டி' (516) என மதுரைக்காஞ்சியும், மையறு படிவத்து வானவர் முதலா — எவ்வகை யிர்களும் உவமங் காட்டி' (3:128-129) என ணிமேகலையும் கூறுகின்றன. ஓவியத்தை வெறுந் தொழிலாகக் கருதாது ஒரு யோக சாதன ாகவே கருதினர்.

தமிழ்நாட்டில் இப்பொழுது எஞ்சியுள்ள ஓவியங் ளில் மிகவும் தொன்மையானவை பல்லவப் பேர ன்னர் காலத்தவையே யாகும். ஏறக்குறை கி.பி. 7ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தான் ஓவியங்கள் காணப்படுகின்றன. இதற்கு ற்பட்டவை காலப்போக்கில் அழிந்து மறைந்து போயின. இத்துறையில் பல்லவ மன்னர்கள் பெரும்பணி புரிந்துள்ளனர். இதில் பல்லவ

மன்னன் மகேந்திரவர்மன் தானே ஒரு சிறந்த ஓவியனாகத் திகழ்ந்துள்ளான். அதுபோன்றே சோழ மன்னர்களும் ஓவியக்கலைப் பணியில் ஈடு பட்டிருந்தனர்.

தமிழ் மன்னர் இவ்வாறு வளர்த்த ஓவியங்களை அவர்கள் கட்டிய கோயில்களின் நுழைவாயி லின் இரு பக்கங்களிலும், கருப்பக்கிரகச் சுவர் களிலும், பிரகாரங்களிலும், விதானத்திலும் தீட்டினர். அவ்வாறு தீட்டப்பட்ட ஓவியங்கள் மாமண்டூர்க் குகைகளின் வெளி மண்டபத்திலும், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனமலைக் கோயில், தஞ்சைப் பெருவுடையார் கோயில் முதலிய பல இடங்களிலும் காணப்பெறுகின்றன. இதில் பனமலையில் உள்ள மண்டபத்தில் காணப் படும் எழிலார்ந்த ஆடல் மகளின் ஓவியம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச்செறிவும் உணர்ச்சிப் பொலிவும் நம்மைக் கவர்கின்றன.

மரச் சிற்பக்கலையும் தந்தச் சிற்பக்கலையும்


மரச் சிற்பக்கலை கி.பி. 16ஆம் நூற்றாண்டி லிருந்தே காணப்படுகிறது. கோயில்களில் திரு விழாக்கள் அதிகமாக அதிகமாக மரச் சிற்பங்கள் செய்யும் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது என்று கூறலாம். குறிப்பாக, தேர்த்திருவிழா ஏற்பட்ட பிறகே, தேர் செய்கையில் அத்தேரில் சிற்பங்களைச் செதுக்குதலும் நடைபெற்றிருக்கிறது. சில ஆலயங் களில் கோபுர வாயில் கதவுகளிலும் சிறந்த மரச் சிற்பங்களைக் காண முடிகிறது. பிற்காலத்தில் செட்டிநாட்டார் வீடுகளில் வாயில் நிலைகளில் மரச்சிற்பங்கள் செய்து அழகுபடுத்தியிருந்ததையும் அறியலாம்.

தந்தச் சிற்பக்கலை குறிப்பாக, நாயக்க மன் னர்கள் காலங்களில்தான் சிறப்புப்பெற்றிருக் கிறது. கடவுளர் உருவங்களும், அரச, அரசியர் உருவங்களும், மற்றும் பெட்டி, பல்லக்குத் தண்டு போன்ற பொருள்களும் தந்தத்தால் செய்யப் பட்டிருக்கின்றன.

திருவரங்கத்தில் நாயக்க மன்னர், அவரது பட்டத்தரசி ஆகியோரது உருவங்கள் நான்கடி உயரத்தில் தந்தத்தில் கம்பீரமாகக் காட்சியளிக் கின்றன. அதே கோயிலில் திருமலை நாயக்கர் தம் பட்டத்தரசியோடு இருப்பது, மற்றும் கடவுளர் உருவங்கள் ஆகியவை சிறிய அளவில் நிரம்ப உள்ளன. அவை இப்பொழுது அங்குள்ள காட்சிக் கூடத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளன.


மதுரைக்கு அருகிலுள்ள அழகர் கோயிலிலும் தந்தச் சிற்பங்கள் நிரம்ப இருக்கின்றன. இவை யும் சிறிய அளவிலானவை.








கொடும்பாளூர் மூவர் கோயில், சோழர் காலம், கி.பி. 9ஆம் நூற்றாண்டு.



மேற்குக் கோபுரம், திருவாரூர் சோழர் காலம், கி.பி. 12ஆம் நூற்றாண்டு.



தந்தச் சிற்பம்—திருமலை நாயக்கர் காலம்—கி.பி. 17ஆம் நூற்றாண்டு
திருவரங்கம், திருச்சி மாவட்டம்.



ஆறுமுகப்பெருமான்——மரச்சிற்பம்——கி. பி. 18ஆம் நூற்றாண்டு
சென்னைப் பொருட்காட்சி சாலை, சென்னை.

உலக மொழிகளும் தமிழும்

டாக்டர் ச. அகத்தியலிங்கம், M.A., Ph.D. (Kerala), Ph.D. (Indiana, U.S.A.)

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய முதுமொழி தமிழ்மொழி'' என்ற வரிகள் நமது காதுகளிலே ஒலித்து நெஞ்சிலே நிலைத்து நீங்காது நிற்பன. இவ்வரிகளுக்கேற்பவே தமிழ்மொழி பழைமையும் தொன்மையும்கொண்டு பன்னெடுங்காலமாக மாறா இளமையுடனும் மங்காப் பொலிவுடனும் வாழ்ந்து வளர்ந்துவரும் மொழியாக உள்ளது. இம் மொழியின் தோற்றமும் பிறப்பும் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளன. உலக மொழிகளாக விளங்குகின்ற ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் ஆகிய மொழிகள் தனி மொழிகளாகத் தோற்றம் பெறாத காலத்திலேயே இலக்கண இலக்கிய வளத்தோடு உயர்தனிச் செம்மொழியாக விளங்கியது தமிழ் என்பது அறிஞர் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இந்திய மொழிகளிலேயே தமிழ்மொழிதான் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், கயானா, தென்னாப்பிரிக்கா, பர்மா, பீஜி, மோரிசு, மடகாஸ்கர், வியட்னாம், மார்ட்டினிக், டிரினிடாட் போன்ற நாடுகளில் எல்லாம் பேசப்படுகின்றது.

இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தனக்கென ஒரு வரலாற்றையும் வாழ்வையும் வகுத்துக்கொண்ட பெருமையுடையது இந்திய நாடு. இந்திய நாட்டின் இலக்கிய, இலக்கண வரலாற்றில் தமிழுக்கெனத் தனியிடம் உண்டு. இன்றைய உலக மொழியாகிய ஆங்கிலம் பிறப்பதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே சிறந்தொரு இலக்கியப் பரப்பினையும் இலக்கண வரம்பினையும் கொண்டு வாழ்ந்த மொழி தமிழ்மொழி. இந்தியப் பண்பாட்டின் இரு முக்கிய மொழிகளாகத் தமிழும் வடமொழியும் திகழ்கின்றன. வேதங்களையும் உபநிஷத்துகளையும் கொண்டு வாழ்ந்த மொழி சமஸ்கிருதம்; இன்றைய இலக்கண உலகில் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கும் பாணினியையும் காளிதாசனையும் பெற்றெடுத்த மொழி; கீதையையும் வால்மீகியையும் பெற்றெடுத்த மொழி இன்று பேச்சு மொழியாக (Spoken Language) வழக்கில் இல்லை. இன்று கோயில் மொழியாகவும் ஆராய்ச்சி மொழியாகவும் பண்டிதர் நாவில் நடமாடுகிறதேயன்றி, நாட்டுப்புற மக்களிடமோ அல்லது நகரப்புற மக்களிடமோ இன்று காண முடியவில்லை. ஆனால், நமது தமிழ்மொழி பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கி உலக அரங்கிலே தனியொரு நிலையை எய்தி நிற்கிறது என்பது நன்கு விளங்கும்.

இன்றைய உலக மொழிகளில் ஆங்கிலம் தலைசிறந்த உலக மொழியாகக் கருதப்படுவதற்கு முக்கியக் காரணம், அது இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தாய்மொழி, தேசிய மொழி, ஆட்சிமொழி, கல்விமொழி ஆகிய நிலைகளில் பயன்படுவதோடு பல்வேறு நாடுகளில் துணை ஆட்சிமொழி, கல்விமொழி ஆகிய நிலைகளிலும் பயன்படுத்தப்படுவதுதான். நமது தமிழ்மொழி இப்படிப்பட்ட உலக மொழியாக இல்லாவிட்டாலும் ஒரு பன்னாட்டு மொழியாக வழங்கிவருவதும், வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு

ஆகியவற்றால் பல நாடுகள் தமிழ்மொழிக் கல்வியில் ஆர்வம் காட்டுவதும், உலக அரங்கில் தமிழ் மொழி வளர்ச்சியும் பயிற்சியும் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்க செய்திகள். தமிழ்மொழி தமிழ் நாட்டில் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தாய்மொழியாக, கல்வி மொழியாக, துணை ஆட்சிமொழியாக, செய்திப் பரவல் தொடர்பு மொழியாக, இலக்கிய மொழியாகப் பயன்பட்டு வருகிறது. அங்கெல்லாம் புதிய இலக்கியங்கள் நாளும் தோன்றி வருகின்றன. மேலும் இந்தோனேஷியா, மொரிஷியஸ், டிரினிடாட் போன்ற நாடுகளில் தாய்மொழியாகப் பேசப்பட்டு வருகிறது. இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா, ஃபிரான்சு, ஜெர்மனி, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் எல்லாம் நமது தமிழ் மொழி பல்கலைக்கழகங்களில் அறிஞர்கள் விரும்பிப் பயிலும் மொழியாக அமைந்துள்ளது. இப்படித் தமிழ்மொழி உலக அரங்கில் வளர்ச்சி பெற்றுள்ளதை நாம் காண்கிறோம்.

உலகில் இன்று எத்தனையோ மொழிகள் உள்ளன. மூவாயிரத்துக்கும் அதிகமான மொழிகள் இன்றைய உலகில் காணக்கிடக்கின்றன எனக் கூறுவர் மொழியியல் அறிஞர்கள். இவற்றுள் சில, பல கோடி மக்களால் பேசப்படுவன; சில, ஒருசில ஆயிரம் மக்களால் வாழ்வன; சிறந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் கொண்ட மக்களால் பேசப்படுவன சில; காட்டில் வாழும் நாகரிகமற்ற மக்களிடையே பயிலப்படுவன பல; சிறந்த இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கொண்டன சில; இலக்கியம் எதுவுமின்றி இருப்பன பல; அழிந்த மொழிகள் சில; அழிந்துகொண்டிருக்கின்றன ஒருசில; கம்பன், வள்ளுவன், காப்பிய அரசன் இளங்கோ, கவிதை மழை காளிதாசன் போன்ற கவிஞர்களைப் பெற்றெடுத்த மொழிகள் சில; வாழ்ந்து இறந்த மொழிகள் எத்தனையோ!

உலகில் வழங்கும் மொழிகளனைத்தையும் இந்தோ-ஐரோப்பிய மொழிகள், தென் கிழக்காசிய மொழிகள், அமெரிக்க-இந்திய மொழிகள், ஆப்ரிக்கா மொழிகள், வழக்கிழந்த மொழிகள் எனப் பல்வேறு பிரிவின்கீழ் அடக்கலாம். இந்தோ-ஐரோப்பிய மொழி இனம் இன்று உலகில் வழங்கும் மொழி இனங்களில் மிக முக்கிய இனமாகக் கருதப்படுகின்றது. இந்த இனத்தின் மொழிகள், ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆப்ரிக்கா ஆகிய கண்டங்களிலும் பல்வேறு தீவுகளிலும் வாழும் பல கோடி மக்களால் பேசப்படுகின்றன. இந்த மொழியினம் இந்தோ-இரானியன், பால்டோ-சிலாவிக், ஜெர்மானிக், இத்தாலோ-கெல்டிக் போன்ற பல்வேறு பிரிவுகளைக் கொண்டது. இந்திய நாட்டில் வழங்கப்படும் இந்தி, வங்காளி, குஜராத்தி, மராத்தி, அஸ்ஸாமி, பஞ்சாபி போன்ற மொழிகள் இதனுள் அடங்கும். ஆசியா மைனரில் வழக்கிலிருந்து பின்னர் இறந்துவிட்ட ஹிட்டைட் மொழிக்கும் இவ்வினத்திற்கும் மிகுந்த தொடர்புண்டு.

இவற்றை இணைத்து இந்தோ-ஹிட்டைட் என அழைப்பர். ஹெமிட்டோ-செமிட்டிக் என்றழைத்த மொழிகளையே இன்று ஆப்பிரிக்கா-ஆசிய மொழிகள் (Afro-Asiatic) என்றழைக்கின்றனர். இதனை எகிப்திய மொழிகள், பெர்பர் (Berber), குஷிட்டிக் (Cushitic), சாட் (Chad), செமிட்டிக் என ஐந்து பிரிவுகளாகப் பிரிப்பர். பண்டைக் காலத்தில் உலக மொழியாய் விளங்கிய அக்கேடியன் (Akkadian) கிழக்குப் பிரிவினையும், ஹீப்ரு, பினீசியன், அராபிக் போன்றவை மேற்குப் பிரிவினையும் சார்ந்தவை. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் வழங்கும் மற்றொரு இனம் உராலிக்-அல்டாய்க் (Uralic-Altaic). இதன் கண் நாற்பது மொழிகள் உள்ளன. இவற்றை உராலிக், அல்டாய்க் என இருபெரும் பிரிவாகப் பிரிப்பர். பின்னிஷ், ஹங்கேரியன், துருக்கி, மங்கோலியன், துங்கூஸ் போன்ற மொழிகள் இவற்றுள் அடங்கும். இம் மொழிகள் பின்லந்து, ஹங்கேரி, எஸ்தோனியா, துருக்கி, ரஷ்யா, சீனா, மங்கோலியா போன்ற நாடுகளில் வழங்குகின்றன. இவற்றை டாக்டர் கால்டுவெல் சித்திய இனம் என அழைத்தார்.

தென்கிழக்காசிய மொழிகள் வியட்னாம், கம்போடியா, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் வாழும் 45,000,000 மக்களால் பேசப்படும் இருபதுக்கும் அதிகமான மொழிகள் இதனுள் அடங்கும். இவற்றை முண்டா (Munda), மோன்-கொமர் (Mon Kohmer), அன்னாம் முவாங் (Annam Muong) என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றை ஆஸ்டிரிக் மொழியினம் எனக் கூறுவர். முண்டாரி, ஹோ, சந்தாலி, கொர்வாரி, பூமிஜ், துரி, அசுரி, அகரியா, குர்க்கு, கரியா, ஜுவாங், சவரா, போண்டோ, பெரங்கி, டிட்டை போன்ற மொழிகள் இந்தியாவில் வாழும் பழங்குடி மக்களால் பேசப்படுவன. நிக்கோபர் தீவில் வாழும் நிக்கோபரிகள் பேசும் நிக்கோபரி மொழியும் இம் மொழியினத்தைச் சார்ந்ததாகும். வியட்னாமீஸ், கம்போடியன், மோன் போன்ற மொழிகளும் இதனுள் அடங்கும். கிழக்கே பசிபிக் கடல் தீரத்தில் உள்ள ஈஸ்டர் தீவு முதல் மேற்கே ஆப்ரிக்காவின் கிழக்குக் கரையிலுள்ள மடகாஸ்கர் வரையிலும், வடக்கே பார்மோசா முதல் தெற்கே நியூசிலாந்து வரையிலும் பரந்து வழங்கும் மொழியினம் ஒருவகை. இவற்றை இந்தோனேசியன், மலேசியன், மைக்ரோனேசியன், பாலினேசியன் என நான்கு பிரிவுகளாகப் பிரிப்பர். தகலாக், இலகானோ, படக், மலகாசி, மாவோரி, ஹவாய் போன்ற மொழிகள் இதனுள் அடங்கும்.

பாப்பன் (Papuan) மொழியினத்தில் நூற்றி ஐம்பது மொழிகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. நியூ கினியிலும் அதைச் சுற்றிலும் வழங்கும் இம் மொழிகளைப்பற்றி ஆராயப்படவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலியா மொழியினத்தில் நூற்றுக்கும் அதிகமான மொழிகள் உள்ளன.

அமெரிக்க-இந்திய மொழியினத்தில் எழுநூறுக் கதிகமான மொழிகளைக் காண்கிறோம். இவற்றை வட அமெரிக்க மொழிகள், மெக்சிகோ மொழிகள், நடு அமெரிக்க மொழிகள், தென் அமெரிக்க மொழிகள் எனப் பிரிப்பர். வட ஸ்பெயினிலும் ஃபிரஞ்சு நாட்டின் தென்மேற்குப் பகுதிகளிலும் பாஸ்க் (Basque) மொழி வழங்குகிறது. ஜப்பானிய மொழி ஜப்பான் நாட்டிலும், கொரியன் கொரிய நாட்டிலும் வழங்கும் மொழிகளாகும்.

உலக மொழிகளை இன உறவு அடிப்படையில் இவ்வாறு பல்வேறு வகைகளாக இன்று பிரிக்க முடியினும் இதுபற்றிய ஆராய்ச்சி மிகப் பழங்காலத்திலேயே ஆரம்பமாயிற்று எனக் கூறலாம். வேதாகமத்திலே 'உலகம் முழுதும் ஒரே மொழி பேசப்பட்டது என்றும், மனிதன் கடவுளுக்கெதிராகப் பாபல் கோபுரத்தை எழுப்ப முயன்றபோது கடவுள் மனிதனின் மொழியைக் குளறுபடி செய்து ஒருவருக் கொருவர் புரிந்துகொள்ளாமல் செய்துவிட்டார்' என்றும் கூறுதலைக் காண்கிறோம். முதன்முதல் பேசப்பட்ட மொழி ஹீப்ரு என்றும் அதிலிருந்து தான் உலக மொழிகளனைத்தும் கிளைத்தன என்றும் சிலர் எண்ணிவந்தனர். ஹீப்ருவே உலக முதன் மொழி என்ற எண்ணம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலும் வழக்கிலிருந்தமையைக் காணலாம். ஹெர்வாஸ் (1809) எனும் பாதிரியார் ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் பேசப்படும் முன்னூறு மொழிகளின் சொற்களைச் சேகரித்து 1805-ல் வெளியிட்டார். 1702-ல் லுடால்ப் (Job Ludolf) பல செமிட்டிக் மொழிகளை ஒற்றுமைப்படுத்தி ஆராய்ந்து நூல் ஒன்று வெளியிட்டார். லூயிட் (Lhuyd, 1709) கெல்டிக் மொழி பற்றிய நூல் ஒன்றை வெளியிட்டார். கியார்மதி (Gyarmathi) வெளியிட்ட ஹங்கேரியன்-பின்னிஷ் தொடர்புபற்றிய நூலும் குறிப்பிடத்தக்கன. மொழிகளிடையே உள்ள இனத் தொடர்புக்கு வித்திட்டவர் சர் வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones) அவர்களே. வடமொழிக்கும், கிரீக், இலத்தீன் மொழிகட்குமிடையே காணப்படும் இன உறவினைப்பற்றி ஆராய்ந்து ஒரே மூல மொழியினின்றும் இம் மொழிகள் கிளைத்தன என்று திட்ட வட்டமாகக் கூறிய பெருமை ஜோன்சையே சேரும். இந்நிலையில் பல்வேறு மொழியியல் அறிஞர்கள் பல்வேறு மொழிகளை ஆராய்ந்தனர். ராஸ்க், ஜேக்கப் கிரீம், ஃபிரான்ஸ் பாப் போன்றோர் இந்தோ-ஐரோப்பிய மொழிகளை ஆராய்ந்து மொழியியல் வளர்ச்சிக்கு வித்திட்டனர்.

இந்திய நாட்டில் 1700-க்கு அதிகமான மொழிகள் உள்ளன என்பர். இவற்றுள் பல தனிமொழிகள், பல கிளைமொழிகள். சில நன்கு அறியப்பட்டு அறுதியிடுவதற்குரிய நிலையில் இருக்கும்; இன்னும் பல அறியப்படாத நிலையில் அறுதியிட முடியாத தன்மையில் இருக்கும். இந்திய நாட்டில் பேசப்படும் மொழிகளனைத்தையும்,

1. இந்தோ-ஆரிய மொழிகள் (321,720,700)
2. திபெத்திய-பர்மிய மொழிகள் (3,183,801)
3. ஆஸ்டிரிக் மொழிகள் (6,192,495)
4. திராவிட மொழிகள் (107,410,820)

என்ற நான்கு பெரும் பிரிவில் அடக்குவர். இந்தோ-ஆரிய மொழிகளை 73 சதவீதத்தினரும், திராவிட மொழிகளை 24.4 சதவீதத்தினரும், ஆஸ்டிரிக் மொழிகளை 1.5 சதவீதத்தினரும், திபேத்திய-பர்மிய மொழிகளை 73 சதவீதத்தினரும் பேசி வருகின்றனர். இந்தோ-ஆரிய இனத்தில் 66-க்கும் அதிகமான மொழிகளும், திராவிட மொழி இனத்தில் 23-க்கும் அதிகமான மொழிகளும், ஆஸ்டிரிக் மொழி இனத்தில் 20-க்கும் அதிகமான மொழிகளும், திபெத்திய-பரிமிய இனத்தில் 100-க்கு அதிகமான மொழிகளும் உள்ளன எனக் கணக்கிடுவர் மொழியியல் அறிஞர்கள். திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள் (தமிழ், மலையாளம், கன்னடம், துளு, குடகு, கோத்தா, தோடா) என்றும், மத்திய திராவிட மொழிகள் (தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கொண்டா, நாயக்கி, பெங்கோ, மண்டா) என்றும், வட திராவிட மொழிகள் (குரூக், மால்டோ, பிராகுவி) என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர்.

திராவிட மொழிகள் மிகப் பழைமையான மொழிகள் என்பதும் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இந்திய நாட்டில் வழக்கிலிருந்து வந்துள்ளன என்பதும் இன்றைய மொழியியலாளர்களின் கொள்கை. இந்தோ-ஆரிய மொழியாகிய சமஸ்கிருதம் இந்நாட்டில் நுழைவதற்கு முன்னமே திராவிடமொழிகள் வழக்கில் இருந்தன. மொஹஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் திராவிட மொழியைச் சார்ந்தன என ஹீராஸ் போன்றவர்கள் குறிப்பிடுகின்றனர். பிராகுவி மொழி பலுசிஸ்தானத்திலும், மால்டோ மொழி வங்காளத்திலும், குரூக், கோண்டி போன்ற மொழிகள் மத்திய இந்தியாவிலும் பேசப்படுவதைக் கொண்டு திராவிட மொழிகளின் பரப்பினையும் அவற்றின் பழைமையையும் அறியலாம். திராவிட மொழிகளில் ஒன்றாகிய தமிழ்மொழியைப் பேசும் தமிழ்மக்கள் மிகப் பன்னெடுங் காலமாகவே தங்களுக்கெனச் சிறந்த

தொரு இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்கி அதனைக் கட்டிக்காத்து வந்துள்ளனர். மிகப் பழங் காலத்தே ஆரிய மொழியான சமஸ்கிருதத்துடன் தொடர்பு கொண்டிருந்தபோதிலும் தனக்குரிய தனிப் பண்புகளைப் பேணி வந்திருத்தலை அன்று முதல் இன்று வரை காண முடியும். ஆனால், காலப் போக்கில் சமயம், வாழ்வுச் சடங்குகள் போன்ற வற்றில் எல்லாம் சமஸ்கிருத மொழியின் செல் வாக்கு ஊடுருவி நிற்றலைக் காணலாம். சமஸ்கிருத மொழியில் காணப்படும் நாமடி ஒலிகளைப்பற்றி (Retroflex) பேசப் புகுந்த பாட் இவ்வொலிகள் 'இம் மொழியில் ஏராளமாகக் காணப்படுகின் றன' என்றும், 'இவை அனைத்தும் இந்திய நாட்டில் பேசப்படும் பிற மொழிகளிலிருந்து வந் தவை' என்றும் குறிப்பிடுவார். திராவிட மொழி யியலின் தந்தையாகக் கருதப்படுகின்ற கால்டுவெல் லும் இதுபற்றி விளக்கமாக ஆராய்ந்துள்ளார். திராவிட மொழிகள் சமஸ்கிருத மொழியினின்றும் பிரிந்தவை அல்ல என்றும் இவை தனியொரு இனம் என்றும் விளக்கப் பேசுவார் இவர். திராவிடச் சொற்களாக இருபதுக்கும் அதிகமானவை வேதத்தில் உள்ளன என்றும் இன்றும் பல இடப் பெயர்கள் அம் மொழியில் இடம் பெற்றுள்ளன என்றும் கூறுவார். இவரைப் போன்றே மோரிஸ் (Morris), பென்பே (Penbey), ஆஸ்கொலி (Ascoli) போன்றவர்களும் திராவிட மொழிகளின் செல்வாக்கைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். சமஸ்கிருதத்திலும் இந்தோ-ஆரிய மொழிகளிலும் ஏராளமான வேற்றுச் சொற் கள் காணப்படுகின்றன என்றும் அவற்றுள் பல திராவிடச் சொற்கள் என்றும் ஸ்டென்கனோவ் (Stenkonov) குறிப்பிடுகின்றார். திராவிட மொழிகளில் உள்ள பின்னுருபுகள் (Post position) மராத்தி, பீஹாரி போன்ற மொழிகளில் இடம் பெற்றிருத்தலைக் காணலாம். ரிக் வேதத்தில்கூட திராவிடச் சொற்கள் கலந்துள்ளன என டாக்டர் பர்ரோ (T. Burrow) குறிப்பிடுகின்றார். மேலும் பிராகிருத மொழிகளிலும் பலப்பல புதிய திராவிடச் சொற்கள் புகுந்துள்ளன. இச்சொற்கள் அனைத் தும் இன்று வாழ்கின்ற திராவிட மொழிகளில் இல்லை. வட இந்தியாவில் வாழ்ந்திருந்த பல திராவிட மொழிகள் காலப்போக்கில் அழிந்து விட்டன என்று எண்ணலாம். ஏறத்தாழ இரண் டாயிரம் ஆண்டுக் கால வரலாற்றில் தமிழ்மொழி, சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம் முதலிய மொழிகளோடு தொடர்புபெற்றுச் சொற் களைக் கொடுத்திருக்கின்றது. தமிழர்களுடைய நாவில் தவழ்ந்ததோடு மட்டுமன்றித் தமிழ் இத்தா லியர், போர்த்துகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய பிற மொழியாளர்களுடைய நாவிலும் தவழ்ந்திருக்கின்றது. தமிழர்களும் அரசியல், வாணிபம், தொழில் முதலிய பல்வேறு காரணங் களுக்காகப் பிற நாடுகளில் குடியேறி அந்தந்த நாடுகளில் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் அறிமுகப்படுத்தியதோடு, அந்தந்த நாட்டு மொழி களையும் பண்பாடுகளையும் இணக்கமாக ஏற்றுக் கொண்டனர்.

திராவிட மொழிகளில் காணப்படும் மிகவும் பழையான நூல்களில் முதன்மையானது தொல் காப்பியம். இஃது ஓர் இலக்கண நூல் என்பது உல கறிந்த உண்மை. இந்நூல் கி.மு. மூன்றாவது நூற்றாண்டில் தோன்றியது எனக் கருதலாம். உலக மொழிகளில் காணப்படும் பிற முதல் நூல்களை யெல்லாம் ஆராயின் இந்நூலின் போக்கும் அமைப் பும், அதில் காணப்படும் செய்திகளின் வளமும் பிற மொழிகள் எதுவாயினும் அவற்றில் காணப்படும் செய்திகளுக்குக் குறைந்தன அல்ல என்பது தெளி வாகும். வாழ்க்கையோடு தோன்றியதே மொழி. மனிதனின் வளத்தையும் வாழ்வையும் பிரதிபலித்து நிற்பது மொழி. வடமொழியினை ஆராயின் அம் மொழியில் காணப்படும் மதக் கோட்பாடுகள், தெய்வ வழிபாடு போன்றவற்றை அது பிரதிபலித்து நிற்பதைக் காணலாம். தொல்காப்பியர் பொருளதி காரம் என்ற ஓர் அதிகாரத்தை அமைத்து, அதன் வாயிலாகத் தமிழ் மக்களின் சமூக வாழ்வையும் வரலாற்றையும் குறிப்பிட்டுச் செல்வது பொருத்த மாகும். தொல்காப்பியத்துக்கு முன்னால் தமிழ் இலக்கிய மொழி எத்துணை அளவு வளர்ந்திருந்தது என்பதுபற்றியோ அம் மொழி எப்போது உருவா யிற்று என்பதுபற்றியோ அறிய முடியவில்லை. வளமார் இலக்கியங்கள் வாய்மொழி இலக்கியங்க ளாகவாவது இருந்திருக்கவேண்டும். அத்தகைய இலக்கியங்களைப் பல்வேறு வகையாகப் பிரித்துத் திறனாய்வு செய்திருக்கவேண்டும். எனவேதான், தொல்காப்பியரால் செய்யுளியல் போன்ற இயல் களை உருவாக்கி, கவிதைகளுக்கும் பிற இலக்கிய வகைகளுக்கும் இலக்கணம் கற்பிக்க முடிந்தது எனக் கருதலாம். தொல்காப்பியம் உலகப் பேரிலக்கணங் களுள் ஒன்று என்பது பிற மொழிகளில் எழுந்துள்ள இலக்கணங்களை ஆராய்கின்ற எவரும் கூறுவர்.

தொல்காப்பியத்தின்கண் எத்தனையோ சிறந்த இலக்கணக் கருத்துகளை வெளிப்படையாகக் காண முடியும். இன்னும் பல்வேறு கருத்துகளை இலை மறை காயாகக் காணலாம். எத்தனையோ கருத்து களும் இலக்கணக் கொள்கைகளும் இன்றைய மொழி யியல் கருத்துகளோடு ஒத்திருக்கக் கண்டு இறும் பூது எய்தலாம். மொழியியல் அறிவோடு இன்று தமிழ்மொழியில் நாம் காணும் உண்மைகள் பல வற்றைத் தொல்காப்பியர் அன்றே குறிப்பிட் டிருக்கக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக ஆங்கில மொழியில் காணப்படும் பெயரெச்சத் தொடர்பற்றி மாற்றிலக்கண அறிஞர்கள் பலர் நன்கு ஆராய்ந்து பல்வேறு உண்மைகளைக் கூறியுள்ளனர். இப் பெயரெச்சத் தொடர்களை இவர்கள் முறையே 1. பிரிநிலை பெயரெச்சத் தொடர் (Restrictive relative clause); 2. பிரிநிலையில்லாப் பெயரெச்சத்

தொடர் (Non-restrictive relative clause) என்று அழைப்பர். தமிழ் மொழியில் காணப்படும் பெயரெச்சத் தொடரைப் புரிந்துகொள்வதற்கு மொழியியல் அறிவு துணை புரிகிறது. தொல் காப்பியர் இத்தகையதொரு பண்பினையும் புலப்படுத்துகின்றார் என்பது அவருடைய நூலைப் படிப்பார்க்கு நன்கு புலனாகும்.

''இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே''

என்ற நூற்பாவில் (501) மேற்கண்ட கருத்தினுடைய விதை அமைந்துகிடத்தலைக் காணலாம். இத் தகைய ஒரு பெருநூலை அன்றே தமிழ்மொழி கண் டிருக்கவேண்டுமாயின் என்றோ ஒப்பற்ற வளர்ச்சி யையும் வனப்பையும் கொண்டு திகழ்ந்திருத்தல் வேண்டும்.

ஆங்கில மொழியின் முதல் எழுத்துச்சான்று கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந் நூற்றாண் டைச் சார்ந்த பட்டயம் (Charter) ஒன்று இலத்தீனில் எழுதப்பட்டது என்பதும் அம் மொழியி னிடையே காணப்படும் சில இடப்பெயர்களும் மக்கட்பெயர்களுமே ஆங்கில மொழியில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். ஆனால், தமிழின் முதல் எழுத்துச்சான்று கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தொல்காப்பியமாகும். கன்னடமும் தெலுங்கும் முறையே கி.பி. ஐந்தாவது, ஏழாவது நூற்றாண்டுகளிலேயே கல்வெட்டுகளைக் கொண்டிருக்கின்றன. கன்னட மொழியைப்பற்றி, கி.பி. இரண்டாவது நூற்றாண்டு முதலே குறிப்பு கள் காணப்படுகின்றன. கி.மு. இரண்டாவது நூற் றாண்டு முதலே தெலுங்குச் சொற்களைச் சமஸ் கிருதக் கல்வெட்டுகளில் காண முடிகிறது.

இன்று சிறந்து விளங்கும் பல மேனாட்டுமொழி கள் காலத்தால் மிகப் பிந்தியன. அறிவியல் மொழி யாகக் கருதப்படும் ஜெர்மன் மொழியின் முதல் எழுத்துச் சான்று கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. ஜெர்மன் மொழி இந்நூற்றாண்டு முதல் தான் நாட்டுமொழியாகக் கருதப்பட்டுச் சில உடன் படிக்கைகளிலும் பத்திரங்களிலும் (deeds) புக ஆரம்பித்தது. ஆங்கில மொழியைப் போலவே சில மக்கட் பெயர்களும் இடப் பெயர்களுமே முதல் முதலில் இடம் பெற்றன. இவையன்றி இலத்தீன் நூல்களில் உள்ள வரிகளின் மேலோ அல்லது பக்கங் களிலோ சொற்களின் பொருள்களைக் குறிக்கும் பொருட்டு எழுதி வைத்துள்ள சில ஜெர்மன் சொற்களுமே இந்நூற்றாண்டைச் சார்ந்தவையாக உள்ளன.

சாலமன் காலம் (கி.பி.742-814) முதற்கொண்டு தான் தொடர்ச்சியாக எழுதப்பட்ட ஜெர்மன் எழுத்துகள் கிடைக்கின்றன. இவையும் பெரும்பா லும் சமயத் தொடர்புகொண்ட மொழி பெயர்ப்பு களாகவும் கவிதைகளாகவும் சில நாடோடிப் பாடல்களின் தொகுதிகளாகவும் உள்ளன. இவை யனைத்தும் ஒரே நிலைமொழியில் இல்லாமல் பல்வேறு கிளைமொழிகளாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

இன்று அறிவியல் மொழியாக விளங்கும் ஜெர்மன் கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரையிலும் தனக்கென ஒரு நிலைமொழியைக் கொண்டிருக்கவில்லை என்ப தும், 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மார்ட்டின் லூதரால்தான் (1483-1546) இம்மொழிக்கு நிலைமொழி ஏற்பட்டது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. ஆனால், திராவிட மொழியாகிய தமிழ் மொழியோ தொல்காப்பியர் கால முதலே நிலைமொழி ஒன்றைக் கொண்டு விளங்கியது என்பதும், இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு எனப் பிரிந்துநின்று வளர்ந்துள்ளது என்பதும் கண்கூடு.

நாகரிக மொழியாகக் கருதப்படும் ஃபிரெஞ்சு மொழியின் நிலையும் ஜெர்மன் மொழியின் நிலை யினையொத்தே காணப்படுகின்றது. கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் உலக மொழியாகக் கருதப்பட்ட இது மிகப் பிந்திய வரலாற்றைக் கொண்டது. இலத்தீன் மொழியிலிருந்து பிறந்த இம்மொழியின் முதல் இலக்கியச் சான்று கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. கி.பி. 842-ல் எழுதப் பட்ட ஸ்டிராஸ்பர்க் சூளுரையே (Strasburg Oath) இது. கி.பி. 842, பிப்ரவரித் திங்கள் 14ஆம் நாளன்று சார்லசும் லூயிசும் உலோதயருக்கு எதிராக ஒன்று சேர்ந்து இணைந்தபோது, படை களும் அரசர்களும் உறுதிமொழி எடுத்துக்கொள் வதற்காக எழுதப்பட்ட சூளுரையே இப்பெயரால் அழைக்கப்பெறுகிறது. இதனையடுத்து எழுந்தது பிக்கார்ட் கிளைமொழியில் எழுதப்பட்டிருக்கும் இருபது வரிகளைக் கொண்ட கவிதையொன் றாகும். இதுவும் கி.பி. 9ஆவது நூற்றாண்டைச் சார்ந்ததே.

ஆனால், தமிழ் மொழியோ இந்நூற்றாண்டில் எத்தனையோ கவிஞர்களையும் காப்பியங்களையும் கண்ட நிலையில் வரலாறு படைத்து நின்றது. வள்ளுவரையும் இளங்கோவையும் ஈன்றுவிட்ட நிலையில் இறும்பூது எய்தி நின்றது. 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்றெல்லாம் பாடிய தேவார ஆசிரியர்களையும் திருத்தக்கதேவரையும் கண்டு வாழ்ந்த பெருமைகொண்டது.

இன்று ஆங்கிலத்தோடு ஓரளவு ஒப்ப வைத்து எண்ணப்படுவது ரஷிய மொழியாகும். அறிவியல் போன்ற துறைகளுக்கு உரிய ஆக்கமொழியாக இது வளர்ந்துநிற்றல் காணலாம். இம் மொழியின் வரலாறும் பிற ஐரோப்பிய மொழிகளைப் போன்றே காணப்படுகிறது. ரஷியன், கிழக்கு சிலாவிய மொழிகளுள் ஒன்று என்பதும் இவற்றில் கிடைக்கும் பழைமையான எழுத்துச் சான்று கி.பி. 10ஆவது

நூற்றாண்டைச் சார்ந்தது என்பதும் வரலாறு காட்டும் செய்திகள். இவ்வெழுத்துச் சான்று பழைய ரஷியன் மொழியில் எழுதப்பட்டதாகும். பழைய ரஷியன் எனக் குறிக்கப்படுவது ரஷ்யன், உக்ரேனியன், பைலோரஷ்யன் என மூன்று மொழிகளாகப் பிரிவதற்கு முன்னால் இருந்த பொதுமொழியாகும். இப் பிரிவிற்குப் பின்னர் கி.பி. 11ஆம் நூற்றாண்டையொட்டி, ஒரு சில கையெழுத்துப் படிகள் தோன்றின. இந்நிலையில் எழுதப்பட்ட வேதாகமமே (1056—1057) ரஷ்யன் மொழியில் காணப்படும் பழைமையான எழுத்துச்சான்று. இஃது ஒரு மொழிபெயர்ப்பு நூல். இவ்வாறு வளர்ந்த ரஷியன், புஷ்கின் (1799-1837) காலத்திலேதான் சிறந்ததொரு இலக்கிய நடையைப் பெற்றது.

இந்நிலையில்தான் பிற ஐரோப்பிய மொழிகளும் உள்ளன. ரொமான்ஸ் மொழிகள் என வாழும் இன்றைய பல மொழிகள் கி.பி. 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டுகளில்தான் எழுத்து வடிவம் பெற்றன. ஸ்பானிஷ் மொழியின் முதல் எழுத்துருவமாகக் கருதப்படுவது கி.பி. 9ஆவது நூற்றாண்டைச் சார்ந்த ஒரு வழிபாட்டு உரையாகும். இதுபோன்றே போர்த்துகீஸ் மொழியும் கி.பி. 12ஆவது நூற்றாண்டில்தான் தன்னுடைய முதல் எழுத்துருவத்தைக் கண்டது. இதே நிலைதான் காட்டலன் மொழிக்கும். ஆர்க்கானியாவில் கண்டெடுக்கப்பட்ட ஆறு துதிப்பாடல்களே இதன் முதல் எழுத்துச்சான்று. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகின்ற இத் துதிப்பாடல்கள் காட்டலோனியாவின் தலைநகரான பார்சிலோனாவிலுள்ள நூலகத்தில் இன்றும் உள்ளன.

'இசைக்கு இத்தாலியன்' எனக் கருதப்படும் இன்றைய இத்தாலிய மொழியும் இலத்தீனிலிருந்து உருவானதுதான். ரோமானியாவில் வழங்கிய இலத்தீன் பேச்சு மொழியிலிருந்து பிறந்த இம்மொழி கி.பி. 10ஆவது நூற்றாண்டில்தான் எழுத்து வடிவில் இருக்கக் காண்கிறோம். இம்மொழியில் காணக்கிடக்கும் முதல் எழுத்துச் சான்று 'வெரொனிஸ் புதிர்' (Veronese riddle) என்பர் சிலர். இன்னும் சிலரோ கி.பி. 960—963-ல் நடைபெற்ற வழக்கொன்றில் சாட்சியமளித்த சாட்சியொருவனின் பேச்சே அது என்பர். எவ்வாறாயினும் கி.பி. 10ஆவது நூற்றாண்டில்தான் இம்மொழி எழுத்துருவத்தைக் காண முடிந்தது.

அறிஞர் சாக்ரடீஸ் பேசிய கிரேக்கமும் அனைத்து உலகையும் ஆளக் கங்கணம்கட்டிய வீரனாம் சீசர் பேசிய இலத்தீனும், கவிஞன் காளிதாசனையும் பாணினியையும் பெற்றெடுத்த சமஸ்கிருதமும், கன்பூசியஸைக் கண்டெடுத்த சீனமும் குறிப்பிடத் தக்கவை. இவற்றைப் போன்றே நைல் நதிப் பெருக்கில் இறுமாந்து வாழ்ந்த எகிப்திய மொழியும், நபிநாயகத்தைக் கண்ட அராபியும், வேதாகமத்தைத் தந்த ஹீப்ருவும் நம் நெஞ்சிலிருந்து நீங்காத மொழிகளாம். அரேபியப் பெனின்ஸுலா பகுதிகளிலே எத்தனையா நூற்றாண்டுகள் வாழ்ந்து இறுதியில் வீழ்ந்த ஆரமைக்கும், இன்றைய சிரியா பகுதியில் சீரும் சிறப்பும் கொண்டு பெருவழக்குப் பெற்று வாழ்ந்த பினீசிய மொழியும், மெசபடோமியா பள்ளத்தாக்கில் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து உலக மொழியாகத் திகழ்ந்து நின்ற அக்கேடியனும், சிறந்ததொரு நாகரிகத்தைத் தன்னகத்தே சுமந்து வாழ்ந்து மறைந்த சுமேரிய மொழியும் பழைமையின் சின்னங்களாகவும் பல பண்டைய நாகரிகங்களின் பிரதிபலிப்பாகவும் உள்ளன.

அறிஞன் சாக்ரடீஸைப் பெற்றெடுத்தது கிரேக்கம். ஆனால், அவனை மட்டுமன்றி எத்தனையோ அறிஞர்களையும் கவிஞர்களையும் பெற்றெடுத்த பெருமை இதற்குண்டு. இன்றைய மேனாட்டு மொழிகளிலே இம் மொழிக்குத் தனியொரு இடமுண்டு.

ஆனால், அராபிய மொழியோ இன்றும் வீறு கொண்டு வாழக் காண்கிறோம். பழைமைக்கும் பழைமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய் உள்ளது இம்மொழி. கி.மு. எட்டாவது நூற்றாண்டு முதலே இம்மொழியில் கல்வெட்டுகள் பலவற்றைக் காணலாம். இஸ்லாம் மதம் எங்கெங்குப் பரவியதோ அங்கெல்லாம் பரந்து வளர்ந்து பல செமிட்டிக் மொழிகளிடையே காலூன்றி ஏராளமான இலக்கியங்களைத் தோற்றுவித்து உலக மொழிகளுள் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

இதே நிலையில்தான் ஹீப்ரு மொழியும் உள்ளது. கானனைட் மொழிகளுள் இன்றும் வழக்கிலிருந்து வருகிற மொழி இம்மொழி. கி.மு. 13ஆவது நூற்றாண்டிலிருந்தே பல இலக்கியங்கள் இம்மொழியில் தோன்றியுள்ளமை காணலாம். 4000 வருடங்களாக வாழ்ந்த இம்மொழி கி.பி. 2ஆவது நூற்றாண்டிலேயே வழக்கிழந்து வெறும் எழுத்து மொழியாகிவிட்டபோதிலும் இன்றைய இஸ்ரேல் நாட்டினரால் வாழும் மொழியாகிவிட்ட நிலையைக் காணலாம்.

அரேபியப் பெனின்சுலாவில் வாழ்ந்த ஆரமைக்கு இன்று நலிந்து அழிவுறக் காண்கிறோம். கி.மு. 2000 ஆண்டுகட்கு முன்னமேயே வழக்கிலிருந்த இம்மொழியில் கி.மு. 9ஆவது நூற்றாண்டு முதலே கல்வெட்டுகள் தோன்றின. கி.மு. 8ஆவது நூற்றாண்டு முதல் கி.பி. 500 வரை சமீபக் கிழக்கு நாடுகளில் முக்கியமான மொழியாக இருந்தது.

பழைமையான மொழிகளுள் அக்கேடியனும் ஒன்றாகும். கி.மு. 3000 முன்பே வழக்கிலிருந்து கி.மு. முதல் நூற்றாண்டில் வழக்கிறந்த மொழி அது. அசீரியன் என்றும் பாபிலோனியன் என்றும்

அழைக்கப்பட்ட அது மெசபடோமியா பள்ளத் தாக்கில் வாழ்ந்த செமிட்டிக் பேரரசின் மொழியாகத் திகழ்ந்தது. பாபிலோனிய வீழ்ச்சிக்குப் பின்னரும் வாழ்ந்த பெருமை கொண்டது.

இதே நிலையில்தான் சுமேரிய மொழியினையும் காணுகிறோம். சிறந்த நாகரிகத்தையும் பரந்த பண்பாட்டினையும் கொண்டிருந்தவர்கள் இம் மொழியினர். 4000 ஆண்டுகட்கு முன்பே வியக்கத் தக்க வளர்ச்சியைக் கண்டிருந்த இம் மொழி தமிழோடு கலந்து உறவாடியது என்றும் அதோடு இனத்தொடர்பு உடையது என்றும் கூறுவர் சிலர். இது களிமண் தட்டுகளிலேயே பரந்த இலக்கியங்களைக் கொண்டுள்ளது. மத்திய ஆசியாவில் சிறந்த நாகரிகத்தை நிலைநிறுத்திய இம் மொழி வழக்கற்ற நிலையைக் காண்கிறோம்.

சீன மொழியும் பழைமையின் சின்னமாகவே உள்ளது. தொன்மைக்குத் தொன்மையாய் விளங்கும் இம்மொழி எத்தனையோ நூற்றாண்டைய வரலாறுகளைக் கொண்டது. கி.மு. 4000-க்கு முன்பே வழக்கிலிருந்த மொழி இன்றும் (எழுத்துருவில்) வாழக் காண்கிறோம். பேச்சு வழக்கில் பல்வேறு கிளைமொழிகளாகப் பிரிந்துள்ளமையைக் காணலாம். எழுத்து மொழியில் ஒன்று, பேச்சு மொழியில் பல என்ற நிலையிலே வழங்குகிறது.

பழைமையான மொழிகளுள் இலத்தீன் மொழியும் ஒன்று. சீசரைத் தோற்றுவித்ததும் இம்மொழியேயாகும். கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே பிறந்து வளர்ந்தது இம் மொழி. ரோமில் பிறந்த இம் மொழி ஐரோப்பா, ஆசியா மைனர் போன்ற இடங்களில் எல்லாம் பரந்து வளர்ந்ததோடுமட்டுமன்றி ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ், இத்தாலியன், போர்த்துகீஸ் போன்ற பல்வேறு மொழிகளைத் தோற்றுவித்துநின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று உலக அரங்கில் இந்திய மொழிகளில் இந்தி, சமஸ்கிருதத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ் மொழிதான் பயிற்றுவிக்கப்படுகின்றது. இந்திய மொழிகளில் தமிழைப்பற்றியும் சமஸ்கிருதத்தைப் பற்றியும் நிகழ்த்துகிற ஆய்வுகள் மற்ற இந்திய மொழிகளின் ஆய்வுக்குத் துணையாக உள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. சமஸ்கிருதம், இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளையொத்த பழைமையும் சிறப்பும் உடையதாய், இன்றும் வழக்கில் உள்ளதாய், தொடர்ச்சியாக இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாற்றை உடையதாய் விளங்கும் தமிழ்மொழி இந்தியப் பெருநாட்டின் தனிப்பெருஞ் சிறப்புச் செல்வங்களில் ஒன்றாகும். 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்று பாடிய புலவனை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோற்றுவித்த தமிழினம் தனது நாட்டையும் மொழியையும் பண்பாட்டையும் தான் மதிப்பதுபோலவே மற்றவர்களும் தத்தம் நாட்டையும் மொழியையும் பண்பாட்டையும் மதிப்பார்கள் என்கிற உண்மையை உணர்ந்து நட்புறவிற்கே முதன்மை கொடுத்திருக்கின்றது. தமிழகத்திற்கும் இந்தோனேஷியாவுக்கும் நீண்ட காலமாகவே தொடர்பு உண்டு. இந்தோனேஷிய மொழியில் பல தமிழ்ச் சொற்களைக் காணலாம். காவலர், தோழன், இடம், வட்டில் முதலிய பல தமிழ்ச் சொற்கள் இந்தோனேஷிய மொழியில் உள்ளன. கிரந்த எழுத்துகளும் தென்னிந்தியாவிலிருந்தே இந்தோனேஷியாவிற்குச் சென்றது என்பதை வரலாற்று ஆசிரியர் ஒப்புக்கொள்வர். இந்தோனேஷியா பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறை எனும் துறையில் இரண்டாண்டுக் காலம் தமிழ்மொழி பயிற்றுவிக்கப்பட்டது. ஹாலந்து நாட்டில் கெர்ன் நிறுவனத்திலும், ஸ்டேட் யுனிவர்சிடி ஆப் யூட்ரெஹ் (State University of Utrecht) என்ற பல்கலைக் கழகத்திலும் இந்தியவியல் எனும் துறையில் இந்தியமொழிகள் கற்பிக்கப்படுகின்றன. லெய்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி பயிற்றுவிக்கப்படுகின்றது. யூட்ரெஹ் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி பயிற்றுவிக்கப்படுகின்றது. திராவிடமொழிப் பேராசிரியர் கமில் சுவலபில் தமிழ் கற்பிக்கின்றார். சிங்கப்பூரில் சீனம், ஆங்கிலம், மலாய்மொழியுடன் தமிழ்மொழியும் ஆட்சி மொழியாக (Official language) விளங்குகின்றது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. செக்கோஸ்லோவாக்கியா நாட்டிலுள்ள பிராகில் உள்ள 'தி ஓரியண்டல் இன்ஸ்டியூட்' என்ற நிறுவனத்தில் திராவிட மொழிக் கல்விக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. டாக்டர் கமில் சுவலபில் இங்குப் பணியாற்றியபொழுது தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். சார்லஸ் பல்கலைக் கழகத்திலுள்ள டாக்டர் ஜே. வாசெக் (Vacek) திராவிட மொழியியலில் ஆர்வமுள்ளவர். செனகல் நாட்டிலுள்ள டாக்கர் பல்கலைக்கழகத்தில் திராவிடவியலுக்குப் பேராசிரியர் ஒருவர் உள்ளார். திராவிட மொழிகளுக்கும் ஆப்ரிக்க மொழிகளுக்குமுள்ள உறவினைக்குறித்து, செனகல் நாட்டு மொழியியல் மாணவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜப்பானிலுள்ள க்யோடா பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பண்பாடு, வரலாறுபற்றிக் கற்பிக்கப்படுகின்றது. இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் ஆட்சி மொழியாக உள்ளன. இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ்மொழி பயிற்றுமொழியாக உள்ளது. டென்மார்க்கிலுள்ள கோப்பன்ஹெகனிலுள்ள 'ஸ்கேண்டிநேவியன் இன்ஸ்டிட்யூட் ஆப் ஏசியன் ஸ்டடீஸ்' என்ற நிறுவனத்தில் தமிழ் ஆராய்ச்சி நடைபெறுகின்றது. சிந்துச் சமவெளி நாகரிகம்பற்றிய ஆய்வும் இங்குதான் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. தாய்லாந்து நாட்டிற்கும் தமிழகத்திற்கும் நீண்ட காலமாகவே தொடர்பு உண்டு. தாய்லாந்து நாட்டு அரசர்

களின் முடிசூட்டு விழாவின்போது தமிழ்ப் பாடல்களைப் பாடுவது வழக்கமாக இருந்தது. மணிமேகலைத் தெய்வ வழிபாடு இந்நாட்டில் பரவியுள்ளதாகத் தனிநாயக அடிகள் குறிப்பிடுகின்றார். தென் ஆப்ரிக்காவிலுள்ள டர்பன் பல்கலைக் கழகத்தில் இந்தியவியலுக்குத் தனியொரு துறை உண்டு. தமிழ்மொழியும் கற்பிக்கப்படுகின்றது. பர்மாவில் இரங்கூனிலுள்ள தாகூர் கல்லூரியில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. போலந்து நாட்டிலுள்ள வார்சாப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி கற்பிக்கப்படுகின்றது. ஃபிரான்சு நாட்டுத் தலைநகரான பாரிசில் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு உண்டு. பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சின்கி பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. மேற்கு ஜெர்மனியிலுள்ள கொய்லோன் பல்கலைக்கழகத்திலும், ஹைடல்பர்க்கிலுள்ள தெற்கு ஆசியக் கலைக் கழகத்திலும், ஹேம்பர்க் பல்கலைக்கழகத்திலும் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகின்றது. மோரிசு தீவில் ஏறத்தாழ ஒரு இலட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். தமிழ்க்கல்விக்கு தற்போதுதான் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. தமிழில் உயர்நிலை ஆய்வுகட்கும் இங்கு வாய்ப்புண்டு. அமெரிக்காவில் சிக்காகோ பல்கலைக்கழகத்திலும், கார்னல் பல்கலைக்கழகத்திலும், பென்சில்வேனியா பல் கலைக்கழகத்திலும், கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலும், வாஷிங்டன் பல்கலைக்கழகத்திலும், ஹவாய் பல்கலைக்கழகத்திலும், டெக்ஸாஸ் பல் கலைக்கழகத்திலும் தமிழுக்கும் தமிழாய்வுக்கும் வாய்ப்பு உள்ளது. இரஷ்யாவில் மாஸ்கோவிலுள்ள கீழைக் கலையியல் நிறுவனத்திலும், ஆசிய ஆப்ரிக்க கலையியல் நிறுவனத்திலும், லெனின்கிராட் பல் கலைக்கழகத்திலும் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு உண்டு. உலக நாடுகள் பலவற்றில் தமிழ்மொழி பேசப்படுவதோடு மட்டுமன்றி மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் பயிற்றுவிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இதுகாறும் கூறியவற்றால் தமிழ்மொழி பன்னெடுங் காலத்துக்கு முன்பே தனக்கென ஒரு பாரம்பரியத்தைத் தோற்றுவித்து வாழ்ந்தது என்பதும், எனினும் சில மொழிகளைப் போல வளர்ந்து வீழ்ந்துவிடாத ஒரு வீறு கொண்ட மொழியென்பதும் விளங்கும். பழைமையைக் கண்டது எனினும், பாபிலோனிய மொழியைப் போலவோ பண்டைய எகிப்திய மொழியைப் போலவோ அழிந்துவிடவில்லை. ஆக்கம் பல கண்டு இன்றும் வாழக் காண்கிறோம்; வளரக் காண்கிறோம். இலத்தீனைப் போன்றோ சமஸ்கிருதத்தைப் போன்றோ வாழ்வில் நலிந்து கோயில்களிலும் குகைகளிலும் பண்டிதர் நாவுகளிலும் கரந்துறையவில்லை. அறிஞர்களின் ஆராய்ச்சியில் மட்டுமன்றிப் பாமர மக்களின் மத்தியிலும் வாழக் காண்கிறோம். வாழும் மொழியாகவும் வளரும் மொழியாகவும் வரலாற்று மொழியாகவும் இருக்கக் கா கிறோம். ஆங்கிலம் ஃபிரெஞ்சு போன்று பழைமை ஃ இல்லாத நிலையில் இல்லை இம்மொழி. எத்தனையோ நூற்றாண்டு வாழ்வுகொண்டு வரலாறுகொண்டு விளங்குகிறது. நாகரிக மொழிகளாகக் கருதப்படும் ஆங்கிலமும் ஃபிரெஞ்சும் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே வளர்ந்துநின்ற பெருமையையும் வாழ்ந்து நின்ற சிறப்பையும் கொண்டுள்ளது. சிந்தனைத் தெளிவையும் சிறந்த கற்பனையையும் கொண்ட இம் மக்களிடையே தோன்றிய கவிதைகளும் காப்பியங்களும் பலப்பல. அவர்களின் சிந்தனையில் சிந்தி நின்ற காவிய மலர்கள் பலப்பல! வாடாத எண்ணத்திலும் வற்றாத கற்பனை ஓட்டத்திலும் கருக்கொண்ட வாழ்வு நூற்கள் பலப்பல!

மானிடவியலும் தமிழும்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

I

மானிடவியல் (Anthropology), மனிதவியல்கள் (Humanities) என்ற இரு சொற்களும் ஒன்றோடொன்று ஒன்றிய உறவின; ஆனால் தாயும் சேயும் போல வேறானவை! இவற்றுள் எது தாய், எது சேய் என்பதும் ஒரு கேள்வியே (சிக்கலே)-முட்டை முந்தியதா? கோழி முந்தியதா என்பது போல. ஒருமை பன்மை கூறு விளங்க மேற்குறித்த மானிடவியல், மனிதவியல்கள் என்ற இரண்டில் முன்னதில் பின்னவை அடங்கும்; பின்னவற்றுள் முன்னது அடங்கும்–'மரத்தில் மறைந்த மாமத யானை, மாமத யானையில் மறைந்த மரம்' போல!

'Anthropology' என்ற சொல்லுக்கு 'The study of the man' என்பதே சுருங்கிய பொருள். The Random House Dictionary of the English Language (The College Edition — India, 1972-75). 'Anthropology' என்ற சொல்லுக்கு 'The Science that deals with the origins, physical and cultural development, racial characteristics and social customs and believes of mankind' என வழங்கும் சுருக்க விளக்கம் ஈண்டு சாலும். விரிவான விளக்கங்கட்குப் பல்வேறு கலைக்களஞ்சியங்களும் நூல்களும் ஆய்விதழ்க் கட்டுரைகளும் பார்த்தல் தகும்.

II

முதற்கண் தமிழ்மொழியிலே உள்ள சில சொற்களிலே செறிந்திருக்கும் மானிடவியல் கூறுகளைப் பார்த்தல் பொருத்தம். அப் பொருத்தத்தின் அழுத்தம், மொழியே மானிடவியலுக்கும் விழியென அத்துறை வல்லுநராலும் போற்றப்படுதலால் புலப்படும். ஓர் எடுத்துக்காட்டு:

> All in all, anthropology is more immediately concerned with nationalities than with nations, with ethnic than with political groupings. And in nationalities and ethnic units, Language is always a factor, and often the basic one.
>
> —*Kroeber Anthropology*
>
> Oxford & IBH Publishing Co. (1948), *p*. 228.

மேற்கண்ட மேற்கோளைப் படிக்கும்போது முதற்கண் தமிழ் மொழியிலே உள்ள சில சொற்களில் செறிந்திருக்கும் மானிடவியல் கூறுகளைப் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை தமது 'Words and their significance (1974)' என்ற நூல் வாயிலாகச் செய்துள்ள கன்னி முயற்சியை நினைத்து மெய்சிலிர்க்கவேண்டியுள்ளது. பேராசிரியரின் அப் பணியை மேலும் அகலமும் ஆழமும் உடையதாக்குவதால் பேராசிரியர் அவர்கள் தமது நூலில் ஆய்ந்துள்ள சொற்களின் தொகை விரிவு பெறும். விளக்கங்களும் வீறிடும்.

III

மனிதன் தோன்றியபோதே மானிடவியலும் தோன்றிவிட்டது. ஆயினும் 'எல்லாம் தம் காலத்ததே' என்று எண்ணினர் புதுமை போற்றிகள்! ஆனால், மானிடவியல் அண்மைக்காலத்தது என்னும் அந்த மாயை மேற்கு நாடுகளிலேயே இப்போது

கீழ்நோக்கி வருகிறது. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு:

> One of the recent discoveries in anthropology is that of its own historical perspective. For a while, anthropologists held a narrow view of the history of their science, fixing its birth date somewhere in the nineteenth century. This presumed youthfulness was often invoked as an excuse for paucity of data and inconclusive findings. It is now generally recognized that anthropology did not begin with Tylor, Frazer, or Morgan, but that it has its roots in the ancient past. Anthropological questions are timeless because they center around the universal concern to understand human existence and human behaviour. Writing in 1904, Boas said, "Up to ten years ago we had no trained anthropologists". Yet two millennia earlier, scholars were already speculating on the origin of man and his culture, analyzing and comparising social institutions, writing grammatical analyses of old languages, and reporting on foreign people and their customs. The study of man – anthropology write large – is one of the oldest subjects of serious thought. Nevertheless, the development of anthropology has not been arrested in time, but has brought about refinement of methods and increased insights into the nature of man and his culture. This evolution has taken place not by repudiating older questions, but by raising problems that were inherent in earlier formulations and by seeking alternative solutions. If a true understanding of the foundations of our discipline is to be reached, it is necessary to consider its whole history rather than that of the least hundred years.
>
> —*IMAGES OF MAN, A History of Anthropological Thought, Annemarie De Waal Malefijt, Alfred A. Knopf, New York*, 1974.

மேற்கு நாட்டாருக்கு அரிஸ்டாட்டில் அறிவுத் தந்தை. நமக்கோ அவர் பாட்டனாரையெல்லாம் பறிகொடுத்த நிலையில் தொல்காப்பியரும் தொகை நூற் சான்றோர்களும் தலையாய துணை.

IV

மானிடவியலை 'உடற்கூற்று மானிடவியல்' (Physical Anthropology) என்றும் 'உளக்கூற்று மானிடவியல்' (Cultural Anthropology) என்றும் இரு பெருங்கூறாய்ப் பிரிப்பர். பின்னதைக் காட்சிப்பொருள் பண்பாடு அல்லது ஐம்புலப் பண்பாடு (Material Culture) என்றும் கருத்துப் பொருள் பண்பாடு அல்லது அறுபுலப் பண்பாடு (Non-material/Mental Culture) என்றும் பாகுபாடு செய்வர். இப் பாகுபாட்டின் அடிப்படையிலேயே மானிடவியல் எப்பொருளையும் தன்பால் அடக்கும் ஆற்றல்/ஆளுமை பெற்றிருப்பினும் மாந்தர் பற்றிய உடனடிப் பொருத்தப் பொருண்மை (Immediate relevance) கொண்ட பழந்தமிழ்ச் சொற்களை மட்டும் புதுவை–பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகத்தார் 1967-ல் வெளியிட்டுள்ள பழந்தமிழ்ச் சொல்லடைவு நூலிலுள்ள அகரமுதற் சொற்களிலிருந்து மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில சொற்களை மட்டுமே மானிடவியல் மாண்பாய்வு கருதி எடுத்துக்காட்டாக ஈண்டு வகை தொகை செய்து காண்போம்.

V

மாந்தர் உடலியல் மானிடவியல்
(Physical Anthropology)

ஆண்

மார்பு

அகல் மார்பு
அணிகிளர் மார்பு
அணியகலம்
அம்பகட்டு மார்பு
அலர் மார்பு

பெண்

1. **உடல்**
   அணிநல் ஆகம்
   அம்மேனி
2. **சுணங்கு**
   அம்நுண் சுணங்கு
3. **கூந்தல்**
   அணி கூந்தல்
   அஞ்சில் ஓதி
   அறல் அவர் நீள் ஐம்பால்
   அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
4. **நுதல்** (நெற்றி)
   அணிநுதற் குறுமகள்

மாந்தர் உடலியல் மானிடவியல் —(தொடர்ச்சி)

பெண்

5. கண்
   அமருண் கண்
   அரிமதர் உண்கண்

6. வாய்
   அணி பவளச் செவ்வாய்
   அமிழ்தம் ஊறும் செவ்வாய்
   அமிழ்து பொதி துவர் வாய்

7. நா
   அமிழ்து பொதி செந்நா

8. தோள்
   அணைமென் தோள்
   அப்பணைத் தடமென் தோள்
   அமைமருள் பணைத்தோள்

9. முலை
   அணி முலை
   அலர் முலை

10. மயிர்
   அரிமயிர்

11. கை
   அரிமயிர் முன்கை

12. அல்குல்
   அகன்ற அல்குல்

13. இயல்
   அணைமெல்லியல்

14. சாயல்.
   அடங்கிய சாயல்

VI

இனி, உளக்கூற்றுப் பண்பாட்டு இயலைக் காட்சிப் பொருள் ஐம்புலப் பண்பாடு (Material culture) என்றும் ஆறாம் புலனாகிய அறிவுக்கு மட்டுமே புலனாகும் — புலன்கள் ஐந்தும் அற்று ஒய்ந்த நிலையிலும் புலனாகும் - பண்பாடு (Non - material culture) என்றும் பாகுபாடு செய்யலாம். இப் பாகுபாட்டுக்கு ஒளிகாட்டி வழிகாட்டும் வலிமையும் வளமையும் வாய்ந்ததொரு விளக்கம் வருமாறு:

Material and non-material culture

A distinction often made between material and non-material culture is mentioned here only as probably having no first rank significance. The literal difference is of course obvious; Physical objects as against institutions and ideas (Material culture and content of culture partly overlap, but are conceptually different. Objects of material culture are part of culture content; but a lot of culture content is not material; monogamy, for instance, or mother-in-law avoidance, or belief in ghosts). But do they stand for something basically different? Do they function with significant difference in culture? The answer seems No. What counts is not the physical ax or coat or wheat but the idea of them, the knowledge how to produce and use them, their place in life. It is this knowledge, concept, and function that got themselves handed down through the generations, or diffused into other cultures, while the objects themselves are quickly worn out or consumed. It is the ax itself that is effective in chopping, the idea of the ax that is effective in getting axes made and available for use. In fact we can almost conceive of the ax at an institution, as we can certainly speak of lumbering and wearing clothes and grain farming in a sense entirely parallel to the institutions of marriage on church going.

The attempt to segregate material from non material traits of culture perhaps derives from a white coller distinction unfortunately long made in Germany between Naturwissenschaften and Geisteswissenschaften; Sciences dealing with nature and sciences dealing with the human spirit. The latter correspond to what we call the humanities and the social sciences. But there is nothing gained by implying that since humanistic and social studies have to do with the " spirit " or " mind ", whereas natural science deals with tangible objects, the latter is therefore of a different and lower order. Such a point of view smacks of old fashioned theology with its contrasting of body and soul. Genuine science is characterized first of all by its method, only secondarily by subject matter, except that this must be in nature and must consist of phenomena. My having learned how to write or being a christian are phenomena; and equally so are the alphabet and christinality and ax-using; and so are axes and clothes and chairs; and they are all parts of culture. Accordingly we may forget about this distinction between material and non-material culture, except as a literal difference that it is sometimes of practical convenience to observe.

—*KROBER Anthropology OXford & IBH Publishing Co.* (1923-1948), *p.* 295.

VII

இனி, உளக்கூற்று பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology) பற்றிய பழந்தமிழ்ச் சொற்களை வகை தொகை செய்து பார்ப்போம். அவ்வாறு பார்க்குமிடத்து 'கைபுனைந்து' இயற்றிய ஐம்புல அறிவின — ஐம்புல அறிவிற்கு அப் பாற்பட்டன (ஆறாம் புல அறிவின அல்லது புலன் களற்ற நிலையிலும் (அறுபுல நிலையிலும்) புலப் படுவன — என்ற இருபெரு பாகுபாடுகளைச் செய்து கொள்வது பயன் தரும்.

உளக்கூற்றுப் (பண்பாட்டு) மானிடவியல்

ஐம்புலப் பண்பாடு
(Material Culture)

1. உணவு - தொழில்
   - அடுதொழில்
   - அடுபால்
   - அடுபுற்கை
   - அம்புளிங்கூழ்
   - அம்புளி மிதவை
   - அவரை வாள் புழுக்கு
   - அவிழ் பதம்
   - அளைவிலை உணவு
   - அருங்கள்

2. உடை
   - அகன்றுமடி கலிங்கம்/அடிதாழ் கலிங்கம்
   - அந்துகில் போர்வை
   - அந்துவர் ஆடை
   - அவிர் துகில்
   - அவிர் நூற் கலிங்கம்

3. உறையுள் - சார்ந்தவை
   - அகன்மனை
   - அத்தக குடிஞை
   - அந்தணர் பள்ளி
   - பேர் இல்
   - நல் இல்
   - நெடுநிலை
   - அயல்திணி நெடுங்கதவு

4. அணிகலன் - ஒப்பனை
   - அகன்தொடி
   - அகிலார் நறும்புகை
   - அஞ்சிலம்பு
   - அணி அரிதாரம்
   - அணி இழை/அவிர்குழை
   - அணி கிளர் சாந்து
   - அணி தரு கலன்கள்
   - அணி பயில் தொழில்
   - அணி பூண்/அவிர்பூண்
   - அணி மணி
   - அணி மணி நீள்முடி
   - அணி மலர்த் தார்
   - அணி முத்து
   - அணி மேகலை
   - அணி யணி
   - அணி வளை
   - அதிர் குழல்
   - அம் குழை
   - அம் தொடலை
   - அரவுறழ் ஆரம்
   - அரி ஆர் சிலம்பு

அறுபுலப் பண்பாடு
(Non-material culture)

1. மரபு
   - அணங்குடை மரபு
   - அரும்பெறல் மரபு
   - அரும்பொருள் மரபு
   - அமிழ்தன மரபு

2. அறம்
   - அருளறம்
   - அறக்களம்
   - அறத்தாறு
   - அறம்புரி கொள்கை
   - அறமனை

3. நம்பிக்கை
   - அணங்கறி கழங்கு
   - அமுதசுரபி
   - அருங்கடி வேலன்
   - அற்புதம்

4. ஒழுக்கம்
   - அசைவில் நோன்தாள்
   - அசைவில் கொள்கை
   - அஞ்சா மறவர்
   - அடக்கம்
   - அடங்கிய கற்பு
   - அடங்கிய கொள்கை
   - அடங்கிய நெஞ்சம்
   - அடங்கு அறிஞர்
   - அடியுறை
   - அடைக்கலம்
   - அடையாப்பேரில்
   - அடையா வாயில்
   - அணங்குடை அருஞ்சூள்
   - அருங் கற்பு
   - அருந்தவம்

5. அறிவும் பண்பும்
   - அளந்தறிதல்
   - அளவறிதல்
   - அளவளாவல்

ஐம்புலப் பண்பாடு

அரிதாரம்
அரிபெய் கிண்கிணி
அரிமான் அவிர் குழை

5. **மர-உலோக-தோற்பொருள்**

அகல மண்டை (உண்கலம்)
அடல் வெந்நாஞ்சில் } உழவு
அசை நுகம் } உழவு
அசைவால் ஊசல் } உழவு
அச்சாணி } போக்குவரத்து
அச்சுடைச் சகட்டாரம் } போக்குவரத்து
அசைவரல் ஊசல் } பொழுதுபோக்கு இன்பம்
அமளி } பொழுதுபோக்கு இன்பம்
அரிதுபெறு பொலங்கலம் } பொழுதுபோக்கு இன்பம்
அருங்கலப் பாவை } பொழுதுபோக்கு இன்பம்
அடுத்தெறி குறடு
அஞ்சில் வல்வில்
அடல்வேல்
அடிஅமை பகழி
அடுதேர்/அணிதேர்
அணங்குடைப் பகழி
அணிகிளர் தேர்
அணிதரு கலன்கள்
அணிபயில் தொழில்
அணி புரவி
அணி முரசு
அணி மாவுளி
அம்சுடர் நெடுவேல்
அம்பு
அயில்வாய் நேமி
அரக்குநிற உரு
அரசு கட்டில்
அரவு வாள்
அரும
அருங்கலம்
அரிமாண் அவிர்குழை
அருங்கலப் பாவை
கழல்
நெடுநிலை

6. **கட்டடக் கலை/நகரமைப்பு**

அங்கனம்
அகன்நகர்
அருஞ்சிறைக்கோட்டம்
அல்லங்காடி
புறநகர்

7. **தொழில்/பிற மாநிலத் தொடர்பு**

அவந்திக் கொல்லர்

8. **பந்தர்**

அகப்பெரும் பந்தர்

அறுபுலப் பண்பாடு

6. **தீயொழுக்கம்**

அழுக்காறு

7. **கலை/இலக்கியம்**

அருவிப்பாட்டு
அவைபுகழ் அரங்கு
அழகு
அயரும் குரவை

8. **கடவுள்**

அருந்திறல் கடவுள்
அரும்பெறல் ஆதிரையான்

9. **தெய்வங்கள்**

அறனில் கூற்றம்

10. **தெய்வம் - அணங்கு**

அணங்குடை முருகன் கோட்டம்
அணங்குடை முன்றில்
அணங்குடை அவுணர்
அணங்குடை வச்சிரத்தோன்
அணங்குறு கழங்கு
அணங்குறு பொழுது
அணங்குடை அருஞ்சூள்
அணங்குடைத் துப்பு
அணங்குடைப் பனித்துறை
அணங்குடை முருகன் கோட்டம்
அணங்குடைக் கடம்பு
அணங்குடை நல்வில்
அணங்குடை நெடுங்கோடு
அணங்குடை நெடுநிலை
அணங்குடை முன்றில்

11. **போதி மாதவன்**

அணிதிகழ் போதி அறவோன்

12. **வாழ்க்கை**

அமைதி
அமையா வாழ்க்கை

* * *

9. பொழில்
அகன்பொழில்

10. நீர் நிலைகள்
அகன்கண் கேணி
அகன்துறை
அகன்பொய்கை

11. உழவிடங்கள்
அகன்கண் கொல்லை
அகன் கிடக்கை

12. நிறுத்தல் அளவை
அகல்பெய் குன்றி

13. வாணிபம்
அல்லங்காடி

14. போரிடங்கள்
அகன்கண் நட்பு
அகன்கண் பாசறை

15. கோட்டை
அரைமண் இஞ்சி

16. நீர் மிதவை
அம்பி

17. கோயில்
அம்பலப் பீடிகை

18. ஊர்
அம்குடிச் சீறூர்
அலர்வாய் அம்பல் மூதூர்
அறம் துஞ்சு உறந்தை

19. நகர்
அருங்கடி வியல்நகர்

20. அரசன்-அரசியல்
அடல்வேல் மன்னர்
அடுதானை
அடுதேர்த்தானை
அடுபுகழ்
அடுபோர்
அண்ணல்யானை வேந்தர்
அதிர்கழல் வேந்தன்
அரசர்
அரசுகட்டில்
அரண்
அரிமான் ஏந்திய முறைமுதல் கட்டில்
அருஞ்சமம்
அருந்தமிழ் ஆற்றல்
அரைசு விளங்கு அவையம்
அறனில் வேந்தன்
அறவாழி
அறிவுடை வேந்தன்

21. பொருளியல்
அருவிலை
அறிவுகெட நின்ற நல்கூர்மை

22. நீதி
அறங்கூற வையம்

23. போக்குவரத்து/அறம்
அறத்துறை அம்பி

24. விலங்குகள்
அணிபுரவி
அணியிவுளி
அலமரல் யானை

25. மக்கள் - புலவர்
அந்தண் புலவர்

26. அந்தணர்/தொழில்
அடுநெய் ஆவுதி
அந்தணர் பள்ளி
அந்தணன் எரிவலம் செய்வான்
அறம்புரி அந்தணர்
அறிவுடை அந்தணன்
அறுமறை நாவின் அந்தணர்

27. அரக்கர்
அசுரர்
அவுணர்
அரக்கர்

28. சமயச் சார்பினர்
அமணர்
அமயக் கணக்கர்

29. மக்கள் பிரிவு
அருவாளர்

30. மகளிர்
அந்தீஞ்சொல் நல்லார்
அரங்கக் கூத்தி
அலர்வாய்ப் பெண்டிர்
அடித்தொழிலாட்டி
அடித்தோழி
அடுமகள்

31. ஆடவர் ஒழுக்கம்
அவன் தமர் உவத்தல் (துறை)
அவன் புணர்வு மறுத்தல் (துறை)

ஐம்புலப் பண்பாடு—(தொடர்ச்சி)

32. மக்கள் நிலை

அறிஞர்
அடிமை

33. மக்கள்-உறவுப் பெயர்கள்

அம்மாமி
அம்முறைப் பெயர்
அன்னை

34. மக்கள் ஒழுக்கம்-அகம்

அகமலி ஊடல்
அம்பல் வாய் மூதூர்
அருஞ்சுரம் இறந்த கொடியோர்
அருஞ்சூள்
அல்குல் தைவரல் (துறை)
அவன் தமர் உவத்தல் (துறை)
அவன் புணர்வு மறுத்தல் (துறை)
அன்பின் ஐந்திணை.

35. பழக்க வழக்கங்கள் (குழந்தை விளையாட்டு)

அம்புலி காட்டல்

36. நம்பிக்கைகள்

அமுதசுரபி
அரவுமிழ் மணி
அரும்பெறல் பிண்டம்
அரும்பெறல் புதல்வன்
அற்புதம் அமிழ்தம்
அரும்பெறல் அமிழ்தம்
அரும்பெறல் உயிர்

37. நோயாளர் வகை

கழுகு மெய்யாளர்

38. சமயவாதி

அளவைவாதி

39. குற்றமும் தண்டனையும்

அருஞ்சிறைக் கோட்டம்

40. அறநிலையம்

அருந்தூள் சாலை

41. சாச் சடங்கு

அரும்பெறல் பிண்டம்

42. விழவு

அழியா விழவு

43. குடி

அம்சிறுகுடி

44. கலைஞர் (விறலியர்)

அசைநடை விறலியர்

45. கலைஞர் (பொருநர்)

அவைபுகு பொருநர்

46. இசைக்கருவிகள்

அகச்சிறு முழா
அருவி முழவு
அங்கண் மாக்கிளை
அடுக்கிய பண்ணமை நரம்பு
அணி முரசு
அரிக்குரல் தடாரி
அரிக்குரல் தண்ணுமை
அரிக்கூட்டின்னியம்
அரிக்கூடு மாக்கிணை
அரிபெய் கிண்கிணி

47. சொல் நாகரிகம்

அவையல் மொழி (அவையல் கிளவி)

VIII

'பழந்தமிழ்ச் சொல் அடைவு' அகராதியில் அகர முதலாக உள்ள சொற்களைப் பட்டியலிட்டு வகை தொகை செய்து பார்க்கும்போதே இவ்வளவு வளம்! 'பழந்தம்ழ்ச் சொல்லடைவு' மொத்தம் 1491 பக்கங்கள். அதில் நாம் ஈண்டு பட்டியலுக்கு எடுத்துக் கொண்ட அகர முதல் சொற்களின் பக்கங்கள் 118! எனவே, 1491 பக்கங்களில் 118 பக்கங்கள் போக மீதி உள்ள பக்கங்களில் உள்ள சொற்களையும் பட்டியலிட்டு வகை தொகை செய்தால் 'மானிடவியலும் பழந்தமிழும்' என்னும் கருத்துத் களஞ்சியத் திற்குத்தான் எவ்வளவு ஆய்வு மணிகள் கிடைக்கும் என்பது எளிதில் உய்த்துணர்ந்து மகிழத்தக்கது! அந்நிலையில் மானிடவியல் தமிழ் மன்பதையின் தொன்மை முகட்டையும் தொடுவது துலங்கும்!

மொழியும் பெயர்ப்பும்

டாக்டர் ஒளவை நடராசன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

வாழ்க்கையைப் பயனுடையதாக்கிச் செழுமைப் படுத்தும் அறிவுத் துறைகள் நாளும் பலவாக வளர்ந்து வருகின்றன. மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் ஒன்றுபட்டுச் செயலாற்றுவதால் எத்துறையிலும் விழுமிய பயன் விளையும். மொழி உணர்வின் சீர்த்தியைக் கருதியே மனம் - மொழி - மெய் என்ற மூன்றனுக்கும் நடுவில் மொழி நலம் வைத்துப் போற்றப்பெறுகிறது. மொழியால் மனப் பண்பாகிய உணர்வுகளும், உணர்வுகளினால் மெய்ப் பாடுகளான செய்கைகளும் பிறக்கின்றன.

ஒருவருக்கொருவர் கருத்தைப் பரிமாறிக்கொள்ள அமைந்த கருவிதானே மொழி என்று சிலர் மயங்கி உரைப்பதும் உண்டு. அவ்வாறானால் உலகப் பொருள்கள் அனைத்துமே கருவிகள்தாம். உடம்பு ஒரு கருவி; பொருள் ஒரு கருவி; கல்வி ஒரு கருவி; கடவுளும் ஒரு கருவி; குழந்தை, மனைவி, தாய், தந்தை, அனைவருமே கருவிகள்தாமே. உடம்பு என்ற கருவியை நோயுறாது செலவழித்துக் காக்கிறோம்! உடையாலும் பொன்னாலும் எத்துணை அழகுபடுத்துகிறோம்! உடலுக்கு இத்தகைய மதிப்பை நாம் வழங்கும்போது - உடல்நலம் காப்பதற்கு மருத்துவமனைகளையும் மருத்துவ அறிஞர்களையும் கொண்டு கோடிக்கணக்கில் செல விடும்போது - உடம்பில் - உணர்வில் பிறக்கும் மொழிக்கு மதிப்பும், காப்பும், முயற்சியும் வழங்க வேண்டாவோ! சமயப்பணி போலவும், சமுதாயப் பணி போலவும் மொழிப்பணியையும் உயர்வாகக் கருதி மொழி நலத்தைப் பரிந்தோம்பிக் காத்து வளர்க்க வேண்டும்.

மொழி வறுமை என்பது ஓர் இனத்துக்கும் ஒரு நாட்டுக்கும் விளையும் வறுமையாகும்; மக்களின் அறிவுக்கும் அவர் தொடங்கும் முயற்சிக்கும் நேரும் வறுமையாகும். மொழி வளத்தை இனவள மாகவும், நாட்டுக்கு வாய்த்த பொருள் வளமாகவும், முயற்சி வளமாகவும், அறிவு வளமாகவும் நாம் கருதவேண்டும். எனவே, பல வறுமைகளுக்கு அடிப்படையான மொழி வறுமையை அகற்றவும், பல வளத்துக்கும் முழு முதலான மொழி வளத்தைப் பெருக்கவும் நாம் முனைந்து பணியாற்ற வேண்டும்.

''மொழித்தொண்டு என்பது பிறப்புத் தொண்டு. குடும்பம் காப்பதைப் போன்ற மாறாக் கடமைத் தொண்டு; ஊனும் உயிரும் கொண்டு, மனிதப் பிறப்பெடுத்தார் அனைவர்க்கும் அது பெரிதும் உண்டு என்று கருத்திற்கொண்டு செயலாற்ற வேண்டும்'' என்று துணைவேந்தர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் குறிப்பது நினைவிற் கொள்ளத் தக்கது. காலத்திற்கேற்ற புத்துரம் பூண்ட மொழியாக நம் மொழியை வளர்த்துத் துறைதோறும் புதுச் சொற்களைப் படைத்துப் பரப்பிப் பதிய வைக்கும் பணியாற்றுவதில் 'மொழி பெயர்ப்புக்கும்' முதன்மையான பங்குண்டு.

ஒரு மொழியின் இலக்கியங்களையோ, எண்ணங்களையோ, செய்திகளையோ பிறிதொரு மொழியில் பெயர்த்தெழுதலை மொழிபெயர்ப்பு என்பர். எல்லா வகையிலும் உலக நாடுகள் தம்முள் ஒருங்கிணைந்து ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கும் இந்நாளில்,

'மொழிபெயர்ப்புப் பணி' ஓர் இணைப்பு வாயிலாக இலங்கிச் சிறப்பெய்துகிறது.

தொல்காப்பியர் செய்யுளியலில் 30 பாகுபாடு களைத் தமிழிலக்கிய வகையாகக் குறித்தார். இலக்கியங்களின் தோற்ற வாயில்களைச் சுட்டும் தொல்காப்பிய நூற்பா ''தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தலோடு அவை மரபினவே'' என்பதாகும். முதல் நூலுள் விரிவாகப் பரந்து கிடக்கும் பொருள்களைத் தொகுத்து வழங்குதல் ஒருவகை; முதல் நூலில் குறிப்பாகச் சுட்டப்படும் செய்திகளை விரித்தல் இரண்டாம் வகை; வேண்டுமிடங்களில் தொகுத்தும் உரிய இடங்களில் விரித்துரைத்தும் வழங்குதல், மூன்றாம் வகை; மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என்னும் நான்காம் வகையோ பிற மொழியிற் செய்யப்பட்ட நூல்களைத் தமிழில் தருவதாகும். பெயர்க்கப்படும் மொழியின் இயல்பிற்கேற்ப அதர்ப்பட நெறிப்பட ஒழுங்குபட மொழியாக்கம் அமையவேண்டும். மொழி வளர்ச்சிக்குரிய இலக்கிய வாயிலாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழிபெயர்ப்பைப் போற்றினர். அந்நாளில் 'மொழிபெயர்த்தற்குரிய மொழியாக வடமொழி' ஒன்றே வழக்கத்திலிருந்ததுபோலும்! அதனால் மொழிபெயர்ப்பாளரின் நலங்கருதி, வடமொழிச் சொற்களைத் தமிழில் எழுதுங்கால் ஏற்கவேண்டிய இலக்கண வரையறைகளைத் தொல்காப்பியனார் குறித்தார். பொதுவாக 'மொழிபெயர்த்து' என்றே நூற்பா குறிப்பதால் 'வேறு மொழியி'லிருந்தும் நூல்களை அந்நாளில் தமிழில் மொழிபெயர்த்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு.

கிரேக்க நாட்டை வென்று பேரரசு நிறுவிய உரோமானிய கிரேக்க மொழியில் நிலவிய கருத்துகளையும் பழைய நூல்களையும் தம் இலத்தீன் மொழியில் பெயர்த்தனர். அதனால் இலத்தீன் மொழி வளம் பெற்றதோடு, இலக்கிய எழிலும் பெற்று மிளிர்வதாயிற்று. கிரேக்க மொழியிலிருந்து மெய்ப்பொருள் நூல், எண்ணூல், மருத்துவம் முதலிய அரிய நூல்களை அராபிய மொழியில் பெயர்த்ததோடு, பாக்தாதுப் பெருநகரில் நூல்நிலையம், கலைமன்றம், மொழிபெயர்ப்பு நிறுவனம் என்ற மூன்று அரங்கங்களையும் ஓரிடத்திலேயே அராபியர்கள் அடுத்தடுத்து அமைத்திருந்தனர். கிரேக்க மூல நூல்கள் பின்னொரு காலத்தில் அழிந்துபட்டன என்றும், அராபிய மொழியில் முன்னாளில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த அக் கலைச் செல்வங்களைத் தம் மொழியில் பின்னாளில் மீளவும் கிரேக்கர்கள் ஆக்கிக்கொண்டனர் என்றும் அறிஞர் குறிப்பிடுவர். அந்நாளில் அராபிய மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்படாதிருந்தால், கிரேக்கக் கலைச் செல்வங்களை உலகம் மீளக் கண்டிருக்கவே முடியாது. இதனால் மொழியாக்கக் கலையின் அருமையையும் பெருமையையும் அறியலாம்.

மொழிபெயர்ப்பு என்பது மூல உரு ஒன்றின் நிழல் தோற்றமேயன்றி, உண்மைத் தோற்றமாகாது. எனவே, எம்மொழியிலும் இயலும் கருத்தைப் பிற மொழியில் திருத்தமாகப் பெயர்த்து வெளிப்படுத்த முடியும் என்ற கருத்தில் மொழிபெயர்ப்பாளர் முரண்படுகின்றனர். 'ஆசான் உரைத்தது அமைவறக் கொளினும் காற் கூறு அல்லது பற்றலனாகும்' என்றும், 'முற்றும் உணர்ந்தவர் முழுவதுமில்லை' என்றும் சான்றோர் கூறுவர். படித்தாலோ, கேட்டாலோ ஒருண்மையை முழுமையாக விளங்கிக்கொள்பவர் சிலரே. அச் சிலருள்ளும் அதனைப் பிறர்க்குத் தெளிய விளக்குவார் ஓரிருவரே. எனவே, பெயர்ப்பு என்பதும் அரிதிலும் அரிது. மூல உருவின் முழுநலங்கள் அனைத்தையும் முறைப்படப் பெயர்த்துப் பிறிதொரு மொழியில் வரைந்து காட்ட ஏலாது என்பர்.

தமது எண்ண அலைகளையும், கருத்தூற்றுகளையும், நினைவுப் புனைவுகளையும் ஒரு மொழியின் துணைகொண்டு வடித்து வெளிப்படுத்துவது மனம் பெற்ற மாந்தர் அனைவர்க்கும் பொதுவாயமைந்த இயல்பாகும். மனித வாழ்வின் நுகர்வுகள் முழுவதும் மனிதனின் உணர்வுகள், எண்ணங்கள், அவற்றை வெளிப்படுத்தும் பாங்கு என்று மூன்று நிலையில் அடங்கும். உணர்வுகளோ அனைவர்க்கும் பொதுவானவை. எண்ணங்களும் வெளிப்படுத்தும் பாங்கும் அவரவரளவில் வேறுபடுவன. மனத்தில் தோன்றும் ஒரு கருத்து, எண்ணத்தின் பெயர்ப்பாக மொழி வடிவம் பெறுவதால், எழுதப்பெறும், உரைக்கப்பெறும் அனைத்தையும் ஒரு வகையில் மொழிபெயர்ப்பு என்றே கூறலாம். எனவே, மொழிபெயர்க்க இயலாதது ஏதுமில்லை. இன்றைய நிலையில் அனைத்து உலகச் செய்திகளும், மொழிபெயர்க்கப்பட்டே அறியவேண்டியனவாகும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர்.

மொழிபெயர்ப்பை மூவகையாக்கிச் சொற்பெயர்ப்பு (Translation) என்றும், மறு படைப்பு (Re-creation) என்றும், மாற்றுப் படைப்பு (Trans-creation) என்றும் குறிப்பிடலாம். சொற்பெயர்ப்புக்குச் சட்ட மொழிபெயர்ப்பும், அறிவியல் நூல்களின் பெயர்ப்பும் சான்றாகும். கம்பராமாயணம், பிட்ஜிரால்டின் உமர்கயாம் பாடல்கள் போன்றவை மறுபடைப்பாகும். மனோன்மணீயம் மூன்றாவது வகைக்குரிய பெயர்த்த மாற்றுப் படைப்பாகும்.

மொழிபெயர்க்கப்பெறும் பெயர்ப்பு மொழியிற் புலமையும், மொழிபெயர்க்கப்படும் மூல மொழியறிவும், பெயர்க்கப்பெறும் பொருளைப் புரிந்து தெளிவாக வழங்கும் ஆற்றலும் மொழிபெயர்ப்பாளருக்கு வேண்டிய மும்மைத் தகுதிகளாகும். இம் மூன்றனுள் ஒன்றையொன்று விஞ்சுவதாலும், ஒன்றற்கு ஒன்று குறைபடுவதாலும்,

ஒன்றின் நீங்கி ஒன்றே நிலைபெறுதலாலும், நிகழ்வன பற்றியும் நாம் கருதிப் பார்க்கவேண்டும். மூல மொழியைவிட, பெயர்ப்பு மொழியில் தேர்ச்சி பெற்றவர்களால் மூல மொழியின் அருஞ்சொற்களையும், மரபுத் தொடர்களையும், நிகரி முரணிகளையும், அகராதிகள், நிகண்டுகள் ஆகியவற்றின் துணையோடு தம் தாய்மொழித் தகுதி காரணமாக அறிந்து வழங்க முடியும். மூல மொழியின் உணர்வுகளை எல்லாம், பெயர்ப்பு மொழியிலேயே பெய்து காட்டவேண்டி இருப்பதால், பெயர்ப்பு மொழியின் இயல்புகளை நன்குணர்ந்த புலமை வாய்ந்தவரே - பெயர்ப்பு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களே இப் பணியில் தலைப்படுதற்குத் தக்கவராவர். விளங்கிக் கோடலும், வெளிப்படுத்தலும் என இரு கூறாக மொழிபெயர்ப்பு அமைந்தாலும், வெளிப்படுத்தும் திறனைக்கொண்டே மொழியாக்கத்தின் அழகை முழுவதும் அறிய முடியும்.

மொழிபெயர்ப்பு அழகுடையதானால், மெய்ம்மைக் குறைவுடையதாகும். மெய்ம்மை நலனே பெயர்ப்பில் மேலோங்குமானால் புலப்பாட்டுக் கவின் குன்றும். எனவே, மெய்ம்மையையும் அழகையும் இணையாக மேவுமாறு செய்வது மொழிபெயர்ப்பில் பெருந்திறன் என்று அறிஞர் கூறுவர். பிட்சிரால்டுப பெருமகனார் இயற்றிய உரூபாயத் என்னும் செய்யுள்கள் உமர்கயாமின் மூலத்தினின்று பெயர்க்கப்பட்டவை. மொழியாக்கத்தைக் கொண்டே உமர்கயாம் உலகறிந்த புகழ் பெற்றார். மூல நூலையும் மொழிபெயர்ப்பு விஞ்சியதற்கு இஃதொரு சான்றாகும். மொழியும், நடையும், கருத்து வளமும் காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றன என்பதை மொழியியல் பயிற்சியால் நாம் நன்கு அறிவோம். அவ்வாறே மொழியாக்கமும் காலத்திற்குக் காலம் வடிவத்தாலும் வேறுபட்டு நிலவுவதைக் காணலாம். பல்வேறு காலத்தில், பல்வேறு ஆசிரியர்களால் ஒரே நூல் மொழிபெயர்க்கப்படும் பொழுது விளையும் வேறுபாடுகளை அந் நூல்களின் துணைகொண்டு காணலாம். நான்கு வேறு காலத்தில் வேறு ஆசிரியர் நால்வர் ஒரு பகுதியை மொழிபெயர்த்த முறைமையை இங்குக் காணலாம்.

History make men wise; poets, witty; the mathematics subtle; natural philosophy, deep; moral, grave; logic and rhetoric, able to contend. Nay, there is no stand or impediment in the wit, but may be wrought out by fit studies, like as diseases of the body may have appropriate exercise.

— *Lord BACON* (1561-1626)

சரித்திரம் விவேகத்தையும், காவியம் சாதுரியத்தையும், பிரகிருதி சாஸ்திரம் ஆழ்மையையும், நீதி சாஸ்திரம் சேஷ்ந்துவத்தையும், தற்காலங்கள் சர்ச்சா சக்தியையும் தரும். இவ்வாறே உடலுக்குரிய பிணிகளுக்குப் பரிகாரமுள்ளனபோல, புத்திக்குரிய தடைகளை நீக்கவும் தகுந்த சிகிச்சைகளுண்டு.

—தத்துவ போதினி, 7-7-1864-ல்

சரித்திர ஞானம் மனிதரைப் புத்திசாலிகளாக்குகிறது. கவிதை மனிதரைச் சொல்லாளராக்குகிறது. கணிதம் மனிதரை நுட்பதரிசிகளாக்குகிறது. இயற்கை அறிவு ஆழ்ந்த புத்தியைக் கொடுக்கிறது. நீதி சாஸ்திரம் கௌரவம் கொடுக்கிறது. தருக்கமும், வியாகரண அலங்கார ஞானமும் வாதத்தில் பயன்படுகின்றன. இவ்வாறு கல்வியின் பல துறைகளில் பலவாறு பயன்தருவது. உண்மையில் அறிவுக்கு இடையூறான தடங்கலாயுள்ள எதையும், தேகத்து நோய்களை வெவ்வேறு தேகப்பயிற்சி மார்க்கங்களால் நீக்கிக்கொள்வதைப்போல், தகுந்த கல்வித் துறைகளில் பயின்று விலக்கக் கூடும்.

— வே. நாராயணையர்
தமிழர் நேசன், 'பஞ்சாமிர்தம்' 1914.

வரலாறு மனிதர்களை அறிஞர்களாக்குகிறது. கவிதை, கற்பனையுள்ளவர்களாக்குகிறது. கணக்கு திடமுள்ளவனாக்குகிறது. தத்துவம் ஆழமுள்ளவனாக்குகிறது. அறநூல் சிந்தனையாளனாக்குகிறது. அளவை நூல் மனநிறைவடையச் செய்கிறது. நுண்ணறிவுத் திறனுக்குத் தடையோ குறையோ எதுவும் கிடையாது. அதைப் போதுமான படிப்பின் மூலம் பெற்றுவிடலாம். உடலிலுள்ள பலவித நோய்களைப் போக்குவதற்கு அதற்கேற்ற உடற்பயிற்சியிருப்பது போல தேவையான பயிற்சியின் வழி நுண்ணறிவைப் பெறலாம்.

— இரா. முத்துக்குமாரசாமி.
(தொகுப்பு குமரிமலர்)

வரலாறு ஒருவனை அறிஞனாக்குகிறது. கவிதை சிந்தனையாளனாக்குகிறது. கணக்கு நுண்ணறிவாளனாக்குகிறது. இயற்கை நூல் அறிவை ஆழப்படுத்துகிறது. அறநூல் ஒருவனை அமைதியாளனாக்குகிறது. அளவையும், அணிநூலும் ஒருவனுக்கு மன நிறைவை வழங்குகின்றன. உரிய உடற்பயிற்சிகளின்மூலம் நோய்களைப் போக்குதல் போல, தக்க நூலறிவின்மூலம் அறிவுக்குத் தடையாகும் குறைகளை நாம் நீக்கிக்கொள்ளலாம்.

— மொழிபெயர்ப்புத் துறை, 1978.

தமிழில் மொழிபெயர்த்துச் செய்திகளை எழுதும்போது ஆங்கிலத்தில் உள்ள சொற்றொடர் இயல்பு முறைமையைத் தெளிய உணர்ந்து, தமிழில் புது வடிவமாகத் தமிழியல்பிலேயே எழுத முற்படவேண்டும். ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை ஆங்காங்கே இணைப்பதன் வழியாகக் கருத்தமைவில்லாத சொற்றொடர்களை, மரபுக்கு

மாறான வகையில் பொருள் முடிவின்றி எழுதும் இயல்பைப் பல்வேறு மொழிபெயர்ப்பு நூல்களில் காணலாம். எனவே, மொழி நலமும் பெயர்ப்புப் பொருண்மையும் முரண்படாதவாறு, தொடரமைப்பை மரபு மாறாமல் அமைத்தல்வேண்டும். இருநூறு ஆண்டுகளாக ஆங்கில மொழி ஆட்சியில் ஊறியதாலும், ஆங்கிலச் சொற்பரப்பும் நிலைக்கேற்பப் பரவியிருப்பதாலும் சொற்களை ஆய்ந்து தெளிந்து உரிய தமிழில் கலைச்சொற்களைப் புனைதல் அரும்பணியாகவே அமைகிறது. எனவே, பல நிலைகளில் மொழிபெயர்ப்பு ஒரு சிக்கலாகவே உள்ளது. தமிழில் வனப்புறச் சொல்ல முடியவில்லையே என்று சிலர் ஆற்றாதுரைக்கின்றனர். மொழிபெயர்ப்புத் தமிழ் என்றே ஒருவகைத் தமிழ் அமைகிறது என்பாரும் உளர். சப்பானிய மொழியிலும் இக் கருத்தே நிலவுவதுபற்றித்'தோயமா ஷிஜிகிோ' என்ற அறிஞர் பின்வருமாறு உரைப்பது தமிழுக்கும் பொருந்துவதாகும்.

''ஐரோப்பிய மொழிகளோடு ஒப்பிடும்போது சப்பானிய மொழி ஒத்து வராது முரண்படுகிறது என்று சப்பானில் வெளிவந்துள்ள மொழிபெயர்ப்புகளைப்பற்றிச் சிலர் கருதுகின்றனர். மெய்ஜி காலந்தொட்டே 'மொழிபெயர்ப்பு வழிப்பட்ட பண்பாடு' என்ற ஒரு சொற்றொடரில் சப்பானிய நாட்டு அறிவு வளம் முழுவதையும் குறிக்கலாம். இன்றுங்கூட மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடுவதில் முன்னணியில் நிற்கும் நாடாக சப்பான் திகழ்கிறது. ஏராளமான அளவில் மொழிபெயர்ப்புகள் வெளியாகி சப்பானியரிடையே அவை பெருஞ் செல்வாக்கு அடைந்துள்ளன. எனினும், மொழிபெயர்ப்பு நிலையில் சப்பானிய மொழி பொலிவிழப்பதோடு, மொழிபெயர்ப்புகள் விளங்கிக் கொள்ள அரிதாக உள்ளனவாகவும் கருதப்படுகிறது. மொழிபெயர்ப்பு ஒருவருக்கு முதலில் விளங்காதது இயல்பே. மொழிபெயர்ப்பை எளிதாக விளங்கிக் கொள்ள சில நேரங்களில் மூலமொழிதான் துணை செய்கிறது. இவ் 'விளங்காமை' இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்களில் அவ்வளவாக இடம் பெறவில்லை. மெய்ந்நூல், சமூக அறிவியல் முதலிய மொழிபெயர்ப்புகளில்தாம் 'விளங்கா நிலை' யாகிய இடர்ப்பாடு இருந்துவருகிறது. எளிதில் சில பகுதிகள் விளங்கவில்லை என்றாலும், முன்னேற்றமடைந்துவரும் சமுதாயங்களை வழிப்படுத்தும் நெறிமுறைகள் முதலிய இன்றியமையாத செய்திகளை மொழிபெயர்ப்புகளின் வழியே நாம் அறிய வேண்டியிருப்பதால், 'மொழிபெயர்ப்பு நூல்களை' நாம் பயின்றே ஆகவேண்டும். இந்நிலையில் மொழிபெயர்ப்பு நூல்களின் முதன்மையைக் கருதி மொழிபெயர்ப்பைக் குறைகாண்பதற்குப் பதிலாகச் சப்பான் மொழியையே 'முரண்நிலை கொண்ட மொழி' என்று சிலர் உரைக்கத் தலைப்பட்டுள்ளனர்.


மொழிபெயர்ப்புச் சிக்கலைப் பொறுத்தவரை மொழிபெயர்க்கப்படும் கருத்துகளுக்கு இணையான சப்பானியச் சொற்களை ஆங்காங்கே பொருத்துவதாலேயே மொழிபெயர்ப்புப் பணி முடிவதாகக் கருதுகின்றனர். சொற்கள் மட்டுமே ஆங்காங்கே சேர்க்கப்படுகின்றனவே தவிர, கருத்துத் தொடர்பற்ற சொற்றொடராகவே அது அமைகிறது. உரிய கலைச்சொற்களைச் சொல்லாமல் சப்பானிய மொழியில் அக் கருத்தைச் சொல்ல இயலாது என்பது உண்மைதான். ஆனாலும், சொற்றொடர் முறைமையை நன்கு தெளிந்து, சொற்களுக்குகேற்ப நுட்பமாகத் தொடர்களை மாற்றி அமைப்பதன் வழியாகவே சப்பானிய மொழியை இயல்பாகவே நாம் வழங்க முடியும். சொற்றொடர் அமைப்பை மாற்றாமல் இருப்பதாலேயே 'மொழி பெயர்ப்பு' நம்மை இருளில் திகைக்க வைக்கிறது. எனவே, முழுநிறைவாகாத மொழிபெயர்ப்பைக் கொண்டு சப்பானிய மொழியே காரண காரியத் தொடர்பற்ற மொழி என்றுரைப்பது பொருந்தாது.''

சப்பானிய மொழியிலும் இந் நிலைமை இருப்பதால் பிற மொழிச் செய்திகளையும் கருத்துகளையும் மொழிபெயர்ப்போர், உரிய சொல்லுக்குச் சொல்லைப் பொருத்துவதைக் காட்டிலும், கருத்து விளக்கத்தை நன்கறிந்து மரபுத் தொடர்புகளாகவே எழுதவேண்டும் என்று தெளியலாம்.

அறிவியல் பெரிதும் வளர்ந்து வரும் இந்நாளில், பல்வேறு தொழில்நுட்பங்களை அறிவியலாளர் படைத்து வருகின்றனர். நூல்களைப் பதிப்புச் செய்யவும், வெளியிடவும், அச்சுத்துறை வாயிலாக ஆற்றும் சாதனை பெரிது. இந் நிலையில் இப்போது மொழியாக்கம் செய்யும் பணியையும் அறிவியல் கருவியே மேற்கொண்டிருப்பது வியப்புக்குரியது. 'பொறிவழி மொழியாக்கம்' என்னும் சாதனையை அமெரிக்க அறிவியலாளர் கண்டுள்ளனர். தமது அறிவியல் ஆற்றலால் படைத்த விந்தைக் கருவிகளின் துணைகொண்டு இரஷ்ய மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும், அதுபோல், ஆங்கில மொழியிலிருந்து இரஷ்ய மொழிக்கும் 'மொழி பெயர்க்கும்' பொறித் தொகுதியை 1958ஆம் ஆண்டுக்குப் பின்னர் கண்டுபிடித்து, அமெரிக்கர் தங்கள் அறிவியலுக்குப் பெருவளம் சேர்த்துள்ளனர். தொலைதூரக் கிழக்கில் வியத்நாம் நாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரில் தலையிட்டு அமெரிக்கப் படையினர் போர்க்களத்தில் பின்தங்கியபோதும், அமெரிக்க அறிவியல் நூலாரும் மொழி நூலாரும் ஒன்றாக இணைந்து, அமெரிக்க மொழிக்கும் வியத்நாம் மொழிக்கும் இடையே 'பொறிவழி மொழி ஆக்கம் செய்யும்' அரும் பணியை நிறைவேற்றியுள்ளனர்.

ஆற்றலுடையவர்களுக்குத் தாயாக ஒன்றைப் புனைதல் எளிதில் முடியும். ஆனால், மொழி

மாற்றம் செய்ய அவ்வாற்றலுக்கும் மேலாக மூல நூலாசிரியரின் எண்ண ஓட்டத்தையும் அறிந்து கொள்ளும் பயிற்சியும் இருமொழித் தேர்ச்சியும் வேண்டும். எனவே, மொழிபெயர்ப்பாளரையும் படைப்பு நூலாசிரியர்க்கு நிகராகக் கருதவேண்டும். மொழிபெயர்ப்பாலேயே உலக வளர்ச்சியை, உலகச் செல்வங்களை நாம் கண்டு மகிழ்ந்து துய்க்க முடியும். நமது கடமை பெரிது. தமிழில் அவ்வகையில் மொழிபெயர்ப்புகள் கோடிக்கணக்கில் குவிந்தாக வேண்டும். ஆனால், உலகின் வர்ச்சியோ நமக்கு மருட்சியைத் தருகிறது. சான்றாக, உலகில் இப்பொழுது ஏறத்தாழ ஓரிலக்கம் தாளிகைகள், பல துறைகளில் அறிஞர்கள், வல்லுநர்கள், தங்கள் ஆய்வின் அறிவுப் பயிற்சியின் அடிப்படையில் வரைந்த கட்டுரைகளை ஏந்தி வருகின்றன. இவற்றில் ஆண்டுதோறும் 12 இலக்கத்துக்கு மேல் கட்டுரைகள் வெளிவருகின்றன. பல்வேறு துறைகளில், பல்வேறு நாடுகளில் ஏராளமான ஆய்வு நிலையங்கள், எண்ணற்ற ஆய்வாளர்கள், புதியன காணும் முயற்சியில் அன்றாடம் இரவு பகலாக உழைக்கின்றனர். அதன் விளைவாகப் பொறியியல் போன்ற அறிவியல் துறைகளில் 10 ஆண்டுகட்கு ஒருமுறை இரட்டிப்பாகும் அளவிற்கு அறிவு வளர்வதை டாக்டர் குழந்தைசாமி குறிப்பிடுவதோடு, நமது இன்றைய போக்கில், மேற்கு செருமனி, ஓராண்டில் வெளியிடும் நூல்களை நாம் வெளியிட 45 ஆண்டுகள் ஆகும் என்கிறார். அமெரிக்கா ஓராண்டில் வெளியிடும் நூல்களை நாம் வெளியிட 80 ஆண்டுகள் ஆகுமே என்று விழிப்பூட்டுகிறார். நாம் விரைந்த வேகத்தில் நிறைந்த பணிகளைத் தமிழில் மொழிபெயர்ப்பு வடிவில் முடித்தாக வேண்டும்.



பழந்தமிழ் இலக்கியங்களில் ஆழ்கடல் சிந்தனைகள்

டாக்டர் கு. மோகனராசு

நோக்கம்

ஆழ்கடல் ஓர் விந்தை உலகம்; பெரிதும் ஆராயப் படாமல் இருக்கும் இயற்கையின் அரிய கலைக்கூடம்; ஆராய ஆராய எண்ணரும் புதுமைகளை வாரிவாரி வழங்கும் புதுமைப் புதைவிடம். நிலப்பரப்பினும் பெரும்பரப்பைத் தன்னுள் அடக்கி, பெருவளன் தரும் உழா நன்செய்யாக விளங்கி நானிலத்தை வாழ்விப்பது.

விரிந்து பரந்து ஆழ்ந்து கிடக்கும் அலைகடலை அறிவியல் துணைகொண்டு ஆராயும் ஆய்வு கடந்த 30 ஆண்டுகளாகத்தான் வளர்ந்து வருகின்றது. அதற்குமுன் ஆழ்கடல்பற்றிய ஆய்வு குறிப்பிடத் தக்க அளவு இருந்ததில்லை. ஆழ்கடல் உலகம் என்பதே ஒரு கற்பனைப் பொருள் போன்றே பன்னூறு ஆண்டுகளாக எல்லா நாடுகளிலும் காட்டப் பட்டு வந்தது.

இன்று ஆழ்கடல் ஆய்வாளர்கள் - சிந்தனையாளர்கள் கூறும் ஒரு சில கருத்துகள் சங்கத் தமிழ் நூல்களிலும் காணப்படுகின்றன. அவற்றைச் சுட்டிக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

கடலும் இயல்பும்

நிலமும் கடலும்

நாம் வாழும் புவிக்கோளத்தின் வெளிப்பரப்பு (Surface area of the earth) 510,100,934 ச.கி.மீ. இதில், 29.2% அளவே நிலப்பரப்பு; 70.8% அளவு நீர்ப்பரப்பு. நிலப்பரப்பு முழுவதும் நீர்ப்பரப்பால் சூழப்பட்டுள்ளது. நிலப்பரப்பு முழுவதும் நீர்ப்பரப்பால் சூழப்பட்டுள்ளது என்னும் உண்மையைப் பண்டைத் தமிழர் மிகத் தெளிவாக அறிந்திருந்தனர். இதனை,

> ''இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து' (திருமுருகு. 293)
> ''கடல்சூழ் மண்டிலம்'' (குறுந். 137:7).
> ''புலவுக்கடல் உடுத்த.......
> மலர்தலை உலகம்'' (பெரும். 409-410)
> ''விரிகடல் வேலி வியலகம்'' (சிறுபா. 114)
> ''விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகம்'' (குறுந். 41:1)

என வரும் சங்கநூல் தொடர்கள் தெளிவுப்படுத்து கின்றன.

ஒன்றன் பரப்பை மற்றொன்று வளைத்துக் கொள்ள வேண்டுமாயின், இரண்டாவது பொருள் தொடர்ச்சியானதாக இருத்தல் வேண்டும்; முன்னதன் பரப்பைவிடக் கூடுதலான பரப்பை உடையதாக இருத்தல் வேண்டும். மேற்சுட்டிய தொடர்களில் வரும் உடுத்த, சூழ், வளைஇய, வேலி என்னும் சொற்கள் கடல் ஒரே தொடர்ச்சியானது என்பதையும், கடலின் பரப்பு நிலத்தின் பரப்பைவிடக் கூடுதலானது என்பதையும் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர் என்பதைத் தெளிவாக உணர்த்து கின்றன.

மேலும் உயரத்திற்கு உயர் வரம்பாக மலை உச்சியையும் (மதுரைக். 3 - 4), ஆழம், பரப்பு ஆகியவற்றிற்கு உயர் வரம்பாகக் கடலையும்

(குறுந். 17:2; மதுரைக். 1-2; ஐங்குறு. 184:4) பண்டைத் தமிழர் கொண்டுள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

முதுநீர் - முந்நீர்

கடல் மிகப் பழைமையானது; அது பன்னெடுங் காலத்துக்கு முன்னரே உருவாகி இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தினால் அதனை 'முதுநீர்'[1] எனப் பண்டைத் தமிழர் வழங்கி இருத்தல்கூடும். இக் கடல் எவ்வாறு தோன்றியது என்பது இன்றும் முடிவு செய்ய இயலாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கடல் தோற்றம் பற்றிய கருத்துரைகள் இல்லை எனினும், ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் என்னும் மூவகை நீர்களும் கலந்த ஒரு கலவையாகவே கடல் நீர் விளங்குகின்றது என்பதில் பண்டைத் தமிழர் உறுதி உடையவர்களாக இருந்துள்ளனர். இக் காரணம் பற்றியே கடலை 'முந்நீர்'[2], 'புணரி'[3] என்று பெயரிட்டும் வழங்கி உள்ளனர்.

> 'யாற்று நீரும் ஊற்று நீரும் மழை நீரும் உடைமையால் கடற்கு முந்நீர் என்று பெயராயிற்று'[4]

எனப் புறநானூற்றுப் பழைய உரைகாரர் கூறுவதும் உளங்கொளத் தக்கதாகும்.

'கடல்நீர் கதிரவனின் வெப்பத்தால் ஆவியாகிறது; மேகமாகிறது; ஆவியான நீர், பின்னர் மழை, ஆறு, ஊற்று என்னும் மூவகைகளில் மீண்டும் கடலை வந்து அடைகின்றது' என்னும் கருத்து, சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. இதனால் கடல்நீர் எவ்வகையிலும் குறைவது இல்லை என அவர்கள் கருதினர். இதனை,

"மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு முந்நீர் போல"
(மதுரைக். 424-425)

என வரும் சங்க உவமை உறுதி செய்கின்றது.

மிதக்கும் பனிப்பாறைகள் (ice bergs) உருகுவதால் உண்டாகும் நீர், கடல் நீரின் அளவை உயர்த்துகின்றது எனக் கொள்ளும் இன்றைய கொள்கை[5] சங்க இலக்கியங்களில் இடம்பெறவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் தமிழ் நாட்டை ஒட்டியுள்ள கடல்கள் வெப்பப் பகுதியைச் சார்ந்தவையாதலின் பனிப்பாறைகள் அவற்றில் மிதக்க வழி இல்லாமல் போனமையே எனத் துணியலாம்.

கடலின் நீர்மை

கடல்நீர் பல்வேறு உப்புகள் கரைந்துள்ள ஒரு கரைசல் ஆகும். இதில் சோடியம் குளோரைடு, மக்னீசியம் குளோரைடு, மக்னீசியம் சல்பேட், கால்சியம் சல்பேட், பொட்டாசியம் சல்பேட், கால்சியம் கார்பனேட், மக்னீசியம் புரோமைடு என்னும் உப்புகள் கரைந்துள்ளன. இவற்றுள், சோடியம் குளோரைடு என்னும் சாதாரண உப்பே உப்பளவில் ¾ பங்கிற்கும் சற்றுக் கூடுதலாகக் கலந்து உள்ளது.

கடல் நீரில் கலந்துள்ள உப்புகளுக்கும் மொத்த கரைசலுக்கும் உள்ள விகிதம் உப்பளவு (salinity) எனப்படும்.

$$\text{உப்பளவு} = \frac{\text{கடல் நீரில் உள்ள உப்புகளின் அளவு}}{\text{கரைசலின் மொத்த அளவு}} \times 100$$

கடல் நீரின் சராசரி உப்பளவு 3·5%. தமிழ் நாட்டைச் சூழ்ந்துள்ள கடல்களின் சராசரி உப்பளவு 3·2% - 3·5% என்பர்.

கடல்நீரில் கலந்துள்ள தூய நீருக்கும் மொத்த கரைசலுக்கும் உள்ள விகிதத்தை நீரளவு - நீர்மை எனலாம். அதாவது,

$$\text{நீர்மை} = \frac{\text{கடல்நீரில் உள்ள தூய நீர் அளவு}}{\text{கரைசலின் மொத்த அளவு}} \times 100$$

கடல் நீரின் நீராம் தன்மை - நீர்மை இடத்துக்கு இடம் மாறுபடுகின்றது. அந் நீர்மைக்குத் தகவே ஆங்காங்கே உயிரினங்கள் வாழ்கின்றன. கடல் தன் நீர்மையில் மாறுபடின் - அதாவது தன் நீர்மை குன்றின், அங்கு வாழும் உயிரினங்கள் இடம் விலகும்; மடிதலும் உண்டு. புதிய உயிரினங்கள் தோன்றாமையும் உண்டு. இதனால் கடல்வளம் குன்றும். ஆகவே, எந்த இடத்திலும் கடல் தன் நீர்மை குன்றாது இருப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

கடல் தன் நீர்மை குன்றாது இருப்பதற்கு அடிப்படைக் காரணங்களாக விளங்குவன மழை நீர், ஊற்று நீர், ஆற்று நீர், ஆவியாதல் ஆகியனவாகும்.[7] இவை அனைத்திற்கும் மழையே அடிப்படை. ஆகவே, மழையே கடல் தன் நீர்மை குன்றாமைக்கு முதன்மையான காரணமாகின்றது. மழை பெய்யாது பொய்க்குமாயின், கடல் தன் நீர்மை குன்றி உப்பளவில் மிகும். இதனால் முன்னர்க் கூறியவாறு வளம் கெடும். இதனையே வள்ளுவர்,

"நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்" (குறள், 17)

என்னும் குறள்வழி வெளிப்படுத்துகின்றார் எனலாம். இக் குறளுக்கான உரை விளக்கத்தில் பரிமேலழகர்,

---

1 குறுந். 379:1; ஐங்குறு. 21:1; அகம். 80:7.
2 நற். 288:6; புறம். 66:1, 382:17; மதுரைக். 361, 768.
3 பட்டினப். 97; முல்லைப். 28; நற். 395:6; குறுந். 109:2.
4 புறம். 9-ன், உரை.
5 Scientific American, *The Ocean*, W. H. Freeman and Company, San Francisco, 1969, pp. 15-26.
6 Preece and Wood, *Modern Geography, Tee Foundations of Geography*, University Tutorial Press, Foxton, 1968, p. 90.
7 *Ibid.*, p. 89.

'தன்னியல்பு குறைதலாவது, நீர்வாழும் உயிர்கள் பிறவாமையும், மணி முதலாயின படாமையும்'

எனக் கூறி இருப்பதும் இங்குக் கருதத் தக்கது.

அலைகள்

அலையின் தோற்றம்

கடலில் அலைகள் (waves) எழுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது காற்று. காற்றிலிருந்து சக்தி நீருக்கு மாற்றப்படுவதால் கடல் அலைகள் தோன்றுகின்றன என்பர்.[8] கடல் அலைகளைத் 'திரை' என்னும் பெயரால் சங்கப் புலவர்கள் வழங்கி உள்ளனர்.

அலை தோன்றுவதற்கான காரணத்தைச் சங்கப் புலவர்கள் வெளிப்படையாக எடுத்துரைக்கவில்லை; என்றாலும், காற்றுக்கும் அலைக்கும் தொடர்பு இருப்பதைச் சுட்டிக்காட்டி உள்ளனர். மேலும்,

''மாகா லெடுத்த முந்நீர்'' (மதுரைக். 361).

என வரும் தொடர், அலையின் தோற்றத்திற்கான காரணத்தைக் குறிப்பிடுகின்றது எனக் கொள்ளவும் இடமுண்டு.

அலை வகைகள்

வெவ்வேறு புறச் சூழல்களால் வெவ்வேறு வகையாகத் தோன்றும் கடல் அலைகளின் நிலைகளை நுணுகி நோக்கி வெளிப்படுத்தி உள்ளார்கள் சங்கப் புலவர்கள். அவர்கள் காட்டும் படப்பிடிப்புகளை இன்றைய ஆழ்கடல் சிந்தனையாளர்களின் கடல் மட்ட அலைவு அளவொடு (Sea Disturbance Scale)[9] ஒப்பிட்டுக் காணலாம்போல் தோன்றுகிறது. ஆனால், ஒரு வேறுபாடு; பண்டைத் தமிழர் அலை வகைகளாகக் கண்டதை உரைத்தனரே தவிர, கணக்கிட்டு உரைக்கவில்லை. அவர்கள் குறிப்பிடும் அலைநிலை வகை சில வருமாறு:

1. ''தயங்குதிரைப் பெருங்கடல்'' (நற். 18:7)
   ''திரைதபு கடல்'' (அகம். 263:1)
   ''தெண்கடல் திரை'' (மதுரைக். 450)
2. ''ஓங்குதிரை வியன்பரப்பு'' (மதுரைக். 1)
   ''ஓங்குநிலை ஒட்டகம் துயில்மடிந் தன்ன
   வீங்குதிரை'' (சிறுபா. 154-155)
3. ''உடைதிரை'' (நற். 159:10)
   ''ஒல்லெனத்
   திரை பிறழிய இரும்பௌவம்''
   (பொருந. 177-178)
4. ''வெண்திரைப் பரப்பு'' (பெரும். 457)
5. ''பொங்குதிரை'' (நற். 35:1)
6. ''நுரைபிதிர்ப் படுதிரை'' (அகம். 270:5)
   ''மயங்குபிசிர் மல்குதிரை'' (அகம். 250:1-2)
   ''வில்லெறி பஞ்சு போல மல்குதிரை
   வளிபொரு வயங்குபிசிர் பொங்கும்
   நளிகடல்'' (நற். 299:7-9)

அலையின் செயல்கள்

கடற்கரையில் தோன்றும் மணற்குவியலை (sand spit) எக்கர், சேர்ப்பு எனச் சங்கப் புலவர் வழங்குவர். இம் மணற் குவியல்கள் உருவாவதற்கான அடிப்படையான காரணங்களுள் ஒன்று கடலலை என்பர்.[10] இச் சிந்தனை பண்டைத் தமிழர்களிடமும் தெளிவாகக் காணப்படுகிறது. இதற்கு,

''எறிதிரை தொகுத்த எக்கர்'' (நற். 211:6)
''கரைபொரு திரங்கும் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணல்'' (மதுரைக். 234-235)

என வரும் சங்க இலக்கியத் தொடர்களே அரிய சான்றுகளாகும்.

நில அரிப்புக்கும் (Erosion) கடலலைகள் காரணமாக அமைகின்றன என்பதையும் சங்கப் புலவர்கள் எடுத்துக்காட்டி உள்ளனர்.[11]

ஓதங்கள்

ஓதமும் காரணமும்

கடலில் காலவரையறைக்கு உட்பட்டு ஏற்படும் கடல்மட்ட ஏற்றத் தாழ்வுகளுக்கு ஓதங்கள் (Tides) என்று பெயர். இவற்றை வேலை ஏற்றங்கள் அல்லது கடல் ஏற்றங்கள் என்றும் வழங்குவர்.

ஓதங்களுக்கு அடிப்படையான காரணங்களாக விளங்குவன ஞாயிறும் திங்களும். நாம் வாழும் புவி, ஞாயிறு, திங்கள் ஆகியவை ஒன்றையொன்று ஈர்க்கின்றன. ஈர்ப்பு விசை, கோள்களின் பொருண்மைக்கு நேர் விகிதத்திலும் அவற்றின் இடையே உள்ள தொலைவிற்கு எதிர் விகிதத்திலும் அமைந்துள்ளது. ஞாயிற்றின் பொருண்மை அதிகமாயினும், அது வெகு தொலைவில் இருப்பதால், அதனினும் பொருண்மையில் பெரிதும் குறைந்திருப்பினும் வெகு அண்மையில் இருக்கும் திங்களே, புவியில் உள்ள பொருள்களை ஈர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. ஆகவே, ஓதங்களுக்குக் காரணங்களாக விளங்கும் ஞாயிறு, திங்கள் ஆகிய இரண்டுள் திங்களே முதன்மையான காரணமாக

---

[8] கோ. இராமசாமி, **சமுத்திரவியல்** (*Oceanography*), தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1933, ப. 78.

[9] International Leaning System Corporation Limited, – Sea disturbance Scale, *The New Universal Library*, Vol. 12, London, 1969.

[10] Preece and Wood, *Ibid.*, p. 140.

[11] அகம். 10:8-9; ஐங்குறு. 113:2; நற். 35:1; கலி. 132:1; 135:1-5.

அமைகின்றது.[12] இதனால்தான் நிறைமதி நாளிலும் மறைமதி நாளிலும் கடலில் ஓதங்கள் அளவில் மிக்கு விளங்குகின்றன. இதனை வாழ்நாளில் கண்டு அனுபவித்த பண்டைத் தமிழர்கள் திங்களுக்கும் ஓதங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைத் தெளிந்துள்ளனர்.

''திங்களும் திகழ்வான் ஏர்தரும்; இளநீர்ப்
பொங்குதிரைப் புணரியும் பாடோ வாதே;
ஒலிசிறந்து ஓதமும் பெயரும்'' (நற். 335:1-3)

''உவவுத் திரையோதம்'' (நற். 31:11)

''.................................பெருங்கடல்
இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென உரவுத் திரை
எறிவன போல வருஉம்.'
(நற். 375 : 6-8)

என்பன அவர்தம் தெளிவிற்குச் சில சான்றுகள்.

ஓதமும் பயனும்

ஆழம் குறைவான துறைமுகங்களில் அல்லது கழிகளில் அமைந்திருந்த துறைமுகங்களில் வாணிகக் கப்பல்கள் எளிதில் சென்று வர இவ்வோதங்கள் பெருந்துணையாக இருந்துள்ளன. இக்கூற்றுக்குச் சான்றுகளாக,

''வாலிதை எடுத்த வலிதரு வங்கம்
....
பெருங்கடல் குட்டத்துப் புலவுத்திரை யோதம்
இருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்து
உருகெழு பானாள் வருவன''
(மதுரைக். 536-542)

''......... .... கழிய
ஓதமொடு பெயரும் துறைவன்''
(ஐங்குறு. 155:3-4)

என வரும் சங்க இலக்கிய அடிகளைக் கொள்ளலாம்.

மேலும், இவ்வோதங்கள், கடலில் வாழ் மீன்கள் கழிகளிலும் ஆறுகளிலும் புகுதற்குக் காரணங்களாக அமைந்துள்ளதை,

''இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கடல் ஓதம் போல'' (அகம். 123:12-13)

என்னும் சங்கப் பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றன.

கடல்வாழ் உயிரினங்கள்

கடலில் இடத்திற்குத் தக—ஆழத்திற்குத் தக பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றன. இன்னும் அவற்றை முழுமையாக அறிவியல் துணைகொண்டும் அறிய முடியவில்லை. அறிவியல் பெரிதும் வளராத இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நாட்டில், புலவர்கள் தாம் அறிந்தனவற்றுள் சில உண்மைகளை மட்டுமே இலக்கியங்களில் வெளிப்படுத்தி உள்ளனர். அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் செய்திகளில், கடலில் வாழ் சுறவும் இறாலும் சிறப்பிடம் பெற்றுள்ளன; இவற்றொடு பனைமீன், ஆமை, இப்பி, சங்கு முதலியன பற்றிய சில குறிப்புகளும் காணப்படுகின்றன.

சுறா

சங்க இலக்கியங்களில், சுறா இனத்து மீன்கள் பலவற்றுள்ளும் வாள் சுறா குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. இஃது, தலைப்பகுதியில் நீண்ட கொம்பினைக் கொண்டிருக்கும்; அதில் இருபுறமும் கூரிய முட்கள் இருக்கும். இதனை 'Pristophorus saw shark' என்பர். சங்க இலக்கியங்கள் இதனை எறிசுறா, கடுஞ்சுறா, கோட்சுறா, வயச்சுறா, வாள்வாய்ச் சுறவு எனப் பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியங்களில் பெருமீன் என வழங்கப்படுவதும் இச் சுறா மீன்களே என்பார் டாக்டர் தி. முத்து-கண்ணப்பர் அவர்கள்.[13]

வெப்பக் கடற்பகுதிகளில் வாழும் இந்த மீன் பற்றிச் சங்க இலக்கியம் கூறும் சில செய்திகள் வருமாறு: இம் மீன், கடலின் மேற்பரப்பில் காணப்படுவது (குறுந். 318:1); சில வேளைகளில் தானே கடற்கரையில் ஒதுங்கிவிடுவதும் உண்டு (அகம். 10:11); இது வலிமை மிக்கது (நற். 111:7); எதிரிகளைத் தன் கொம்பினால் தாக்கி வீழ்த்த வல்லது (குறுந். 269; 3-4); மீன்பிடி வலைகளைத் தன் கொம்பினால் அறுத்துவிடும் (நற். 303:8-12). இச் சுறாவில் ஆண் இனத்தை ஏறு எனத் தொல்காப்பியம் (1540) குறிப்பிடுகின்றது.

இறால்

சுறாவை அடுத்து, சங்க இலக்கியங்களில் மிகுதியாகச் சுட்டப்படும் மீனினம் இறால். கடலில் ஆழம் அற்ற பகுதிகளில் கூட்டம் கூட்டமாக வாழும் இவ்வகை மீன்களைப்பற்றிச் சங்க இலக்கியம் கூறும் செய்திகள் வருமாறு: இவை, இருப்பைப் பூவைப்போன்ற தலையை உடையவை (நற். 111:1-2); முற்றாத பசுமஞ்சள் கிழங்கின் புறத்தைப் போன்ற உடற்புறத்தை உடையவை (நற். 101:1-2); முட்கள் போன்ற காலினை உடையவை (குறுந். 109:1); பூட்டிய அம்பு விடுபடத் தெறிக்கும் நாண்போலத் துள்ளும் இயல்பினை உடையவை (அகம். 96:1-2); இவை அலைப் பரப்பிலே கூட்டம் கூட்டமாகக் காணப்படுபவை (அகம். 270:5).

பனைமீன்

வாய்வழியாகக் கடல் நீரைப் பனை உயரத்திற்குப் பீறிட்டு அடிக்கும் ஒருவகை மீன் இது. இம் மீன் மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப்படுகிறது.

---

[12] கோ. இராமசாமி, **சமுத்திரவியல்**, பக். 114-133.

[13] டாக்டர் தி. முத்து-கண்ணப்பன், **சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்**, அதிபத்தர் பதிப்பகம், சென்னை-20, 1978, பக். 106-107.

''பனைமீன் வழங்கும் வளைமேல் பரப்பு'' (மதுரைக். 375) என்னும் அடியால், இம் மீன் கடலின் மேற் பரப்பில் வாழ்வது என அறிய முடிகின்றது.

ஆமை

கடற்கரை மணலைத் தோண்டிப் பெண் ஆமை முட்டை இடுவதும், அம் முட்டைகள் பொரிந்து குஞ்சுகளாகும் வரை ஆண் ஆமை அவற்றைக் காவல் காக்கும் என்ற செய்தியும் நப்பசலையார் பாடல்வழி (அகம். 160:3-8) அறிய முடிகிறது.

பண்டைத் தமிழ் மக்கள் அறிந்திருந்த கடல் வாழ் உயிரினம்பற்றிய செய்திகளுள் பொருண்மை கருதி ஒரு சிலவே புலவர் பெருமக்களால் வெளிப் படுத்தப்பட்டுள்ளன எனக் கருதுவதில் தவறில்லை.

பிற செய்திகள்

பண்டைத் தமிழ் மக்கள் கடலில் உள்ள மலைகளைப்பற்றியும் (திருமுரு. 45), கடலில் தோன்றும் நீர்ச்சுழிகள்பற்றியும் (மதுரைக். 379; கலி. 140:25) அறிந்திருத்தல்கூடும் என்பதற்குச் சங்க இலக்கியங்களில் ஒரு சில குறிப்புகளே கிடைக்கின்றன; விரிவான விளக்கங்கள் இல்லை.


''நிலம் பெயரினும்'' (புறம். 3:14), ''நிலம் புடை பெயர்வ தாயினும்'' (புறம். 34:5-6) என வரும் தொடர்களுக்கும் இன்று வளர்ந்து வரும் 'நிலம் புடைபெயர் கொள்கை' (Plate tectonics theory)[14]-க்கும் ஏதேனும் சிந்தனை ஒப்புமை இருத்தல் கூடுமோ எனத் துணிய இயலவில்லை.

முடிவுரை

இதுவரை கூறியவற்றால், இன்றுபோல் அறிவியலில் பெருவளர்ச்சி பெறாத இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்த தமிழ் மக்கள், இன்று வளர்ந்துவரும் ஆழ்கடல் ஆய்வுகள் தரும் முடிவுகளோடு ஒத்து அமையும் ஒருசில கருத்துகளைக் கருதி இருந்தனர் என்பது தெளிவு. அவற்றுள், எவை எவை அளவைகளான் அறியப்பட்டவை எவை எவை அனுபவத்தான் அறியப்பட்டவை, எனப் பிரித்தறிய இயலவில்லை. எனினும், பெரும்பான்மையும் அனுபவத்தால் பெற்ற சிந்தனைகள் ஆகலாம். இவ்வகையில் ஆய்வுகள் மேலும் தொடரின் பண்டைத் தமிழரின் ஆழ்கடல் சிந்தனைகள் பற்றிய பல உண்மைகள் புலனாகலாம்.

---

[14] Scientific American, *Ibid.*, pp. 24-25.



நெடும்புகழ்க் கொடுமணம்

புலவர் செ. இராசு, எம்.ஏ.

பழங்காலத்தில் ஆற்றங்கரைகளில்தான் பண்டைய ஊர்கள் அமைந்திருந்தன. நாகரிகத் தொட்டில்களை வளர்த்த பெருமையும் அந்த ஆற்றங்கரைகட்கே உண்டு. அந்த வகையில் தமிழ் நாட்டிலும் காவிரி, அமராவதி, தாமிரபரணி, வைகை, பாலாறு ஆகிய ஆறுகளின் ஓரங்களிலேயே பழம்பெரும்பகுதிகள் பல அமைந்திருக்கக் காணுகின்றோம்.

நீடு புகழ் நொய்யல்

கொங்கு நாட்டில் தோன்றிக் கொங்கு நாட்டிலேயே ஓடிக் கொங்கு நாட்டுக்குள்ளேயே காவிரியாற்றுடன் கலக்கும் ஒரு சிற்றாறுதான் 'நொய்யல்'. கோயமுத்தூர் மாநகருக்கு வடமேற்கே உள்ள போளுவாம்பட்டிப் பள்ளத்தாக்கில் தோன்றிச் சுமார் 170 கிலோ மீட்டர் கிழக்கு நோக்கி ஓடிக் கொடுமுடிக்குத் தென்கிழக்கில் காவிரியுடன் கலக்கிறது.

நள்ளாறு, வண்ணாற்றங்கரை, நன்காஞ்சி, நீலிப்பள்ளம் முதலிய சிற்றாறுகளையும், சில ஓடைகளையும், காட்டாறுகளையும் துணையாகப் பெறுகிறது நொய்யல்.


மிகு காஞ்சி

இன்று நொய்யல் என்ற பெயரைப் பெற்றிருந்தாலும், சங்க இலக்கியத்திலும், பழம் பாடல்களிலும் இந்த ஆறு காஞ்சி என்ற பெயரையே பெற்று விளங்கி வந்துள்ளது. பெரும்பாலும் வரலாற்றுச் செய்திகளைப் பெய்தே சங்கப் பாடல் பாடிய பரணர் பதிற்றுப்பத்தில் காஞ்சி ஆற்றைக் குறிப்பிடுகின்றார். 'வேனில்காலத்தில் எடுக்கும் நல்ல நீர் விழாவின்போது மக்கள் தங்கள் வீட்டினுள் தங்காமல் சுற்றத்தாருடன் அழகிய சோலைகளில் தங்கி இன்பமாகப் பொழுதைப் போக்கி நீராடி உண்டு மகிழும்படியான காஞ்சியாற்று மணலினும் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனின் வாழ்நாட்கள் மிகுவதாக' என்கிறார் பரணர்.

> ''மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவில்
> பொழில்வதி வேனில் பேரெழில் வாழ்க்கை
> மேவரு சுற்றமோடு உண்டினிது நுகரும்
> தீம்புனல் ஆயம் ஆடும்
> காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே''
> (பதிற்றுப்பத்து, 48; 14-18)

என்பது அவர் பாடிய தொடர்களாகும். 'மீ கொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்' என்பது சுந்தரர் தேவாரம். 'காஞ்சிவாய்ப் பேரூர்' என்பது பாண்டியர் செப்பேட்டு வாசகம் ஆகும். (காஞ்சி-நொய்யலாக மாற்றம் பெற்றது ஆய்வுக்குரியது.)

இக் காஞ்சியம்பெருந்துறையின் இரு கரைகளிலும் அமைந்த பேரூராக முன்பு கொடுமணல் இருந்துள்ளது. இன்றும் நொய்யலாற்றின் இருகரைகளிலும் 18 கோயில்களைத் தன்னகத்தே பெற்று 6 கிலோ மீட்டர் சுற்றளவில் அப் பழம்பதி அமைந்துள்ளது. இன்றைய பெரியார் மாவட்டத்தில் உள்ள பெருந்துறை வட்டத்தின் தென் கோடியில் கொடுமணல் அமைந்துள்ளது.




வண்ணக் கல் மணிகள்



வண்ணக் கல் வளையல் துண்டுகள்



வண்ணக் கற்களும் மணி திருப்ப கற்களும்



[illegible]

கொங்கு வஞ்சி

சேரர், தலைநகர் வஞ்சிமா நகர் பற்றிய கருத்து மாறுபாடுகள் இருப்பினும் சேர மன்னர்களில் ஒரு கால்வழியினர் கொங்கு நாட்டுக் கருவூரைத் தலை நகராகக் கொண்டு அரசு புரிந்து வந்துள்ளனர் என்பது யாவரும் ஏற்றுக்கொள்ளும் கருத்தாகும்.

புகழூர் அருகே உள்ள ஆறுநாட்டார் மலையில் உள்ள தமிழ்க் கல்வெட்டு,

''மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன்
கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் [உறைய்
பெருங்கடுங்கோன் மகன் இளங்
கடுங்கோ இளங்கோ ஆக அறுத்த கல்''

என்பதாகும்.

இக் கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ள மூன்று சேர அரசர்களும், பதிற்றுப்பத்தின் 7, 8, 9ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவர்களான,

செல்வக் கடுங்கோ வாழியாதன்
தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை

ஆகிய மூவரும்தாம் என்பது ஆய்வாளர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்ட கருத்தாகும். இவர்களின் தலைநகராகிய கொங்குநாட்டுக் கருவூரும் இங்குள்ள ஒரு கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றது.

கொடுமண நன்கலம்

இதில் கண்ட மூன்று அரசர்களில் இறுதி இரண்டு அரசர்களும் கொடுமணம் என்ற ஊரில் செய்யப் பட்ட தொழில் வேலைப்பாடு சிறந்த அணிகலன் களைப் பாணருக்கும், பிற இரவலர்க்கும் வழங்குவர் என்று பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளது.

''கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபின் கைவல் பாண
தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை''
(67:1-5)

''கொடுமணம் பட்ட வினைமாண் நன்கலம்
பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்
வரையக நண்ணிக் குறும்பொறை நாடித்
தெரியுநர் கொண்ட சிரறுடைப் பைம்பொறிக்
கவைமரம் கடுக்கும் கவலைய'' (74: 5-9)

இந் நன்கலம் தரும் கொடுமணம் எது? அதுவே இன்றைய நொய்யலாற்றின் கரையில் உள்ள கொடுமணல்தான் என்பது ஈரோடு கலைமகள் கல்வி நிலையத் தலைமையாசிரியை செல்வி எம். முத்தையா அவர்களும், இக் கட்டுரையாளரும் கண்டு பிடித்த தொல்பொருள்கள் மூலம் உறுதிப் படுகிறது.

ரோம் நாட்டினரைக் கவர்ந்த மணிகள்

கி.மு. 4ஆம் நூற்றாண்டு முதலே ரோம் நாட்டினர், கிரேக்கர், யூதர், அராபியர் முதலிய தரகர் மூலம் தமிழ்நாட்டோடு வாணிகத் தொடர்புகொண்டிருந்தனர். மிளகு, ஏலக்காய், தந்தம் முதலிய மலைபடு பொருட்காகவும், முத்து முதலிய கடல் படு பொருட்காகவும் தமிழகத்திற்கு நேரில் வந்த ரோமானியரைக் கொங்குநாட்டு நீலம், பச்சை, சிவப்பு, படிகம் முதலிய பல வண்ணக் கற்கள் கவர்ந்தன. ரோம் பெண்கள் கடல்நீலம், பச்சைக் கற்களை மிகவும் விரும்பினர். மேற்குக் கடற்கரையில் இறங்கிப் பாலக்காட்டுக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டுக்குள் நுழைந்த ரோமானியர் நொய்யல் ஆற்றங்கரையில் இருந்த பெருவழிமூலம் கரூர், உறையூர் முதலிய ஊர்களுக்குச் சென்றனர்.

கிழக்கு நோக்கிச் செல்லும் வழியில் கொங்கு நாட்டில் படியூர், பட்டாலி போன்ற இடங்களில் அவர்களைக் கவர்ந்த வண்ணக் கல் மணிகளையும் தங்கள் நாட்டுக்கு வாங்கிச் சென்றனர். இதனைத் தாலமி, பிளைனி போன்றவர்களும் குறிப்பிடுகின்றனர். பிளைனி இந்தியாவையே 'இரத்தின பூமி' என்றான். இம் மணிகளுக்காக ரோம் நாட்டிலிருந்து கொங்கு நாட்டுக்கு ஏராளமாகத் தங்கமும் தங்கக் காசுகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. டைபீரியஸ் என்ற ரோம் நாட்டு மன்னன் தன் நாட்டுத் தங்கம் வெளி நாட்டுக்கு ஏற்றுமதியாவதைத் தடுக்க முயன்றான். ஆனால் முடியவில்லை ('பெரில்' என்று இம்மணிகளைக் குறிக்க எழுந்த கிரேக்கச் சொல் 'பரல்' (கல்) என்ற தமிழ்ச்சொல்லாக இருக்கக்கூடும்).

தென்கிழக்கு ஆசியாவில் கிடைக்கும் ரோமானிய அரசர்களின் காசுகள் மிகுதியான இடங்களிலும், மிகுதியான அளவிலும் நொய்யல் ஆற்றுப் பள்ளத் தாக்குகளிலேயே கிடைத்துள்ளன. இம் மணி வணிகத்தின் சிறப்பும் ரோமானியர்கட்கு அதில் இருந்த ஈடுபாடும் இதனால் விளங்கும்.

எங்கும் எழில் மணிகள்

பதிற்றுப்பத்தில், கால்நடைகளை ஓட்டிக் கொண்டு காடுகட்குச் செல்லும் இடையர்கட்கும், புன்செய் நிலத்தைக் கலப்பையால் உழுவார்க்கும், மழை பெய்தவுடன் காட்டுப் பகுதிக்குச் செல்லும் மக்களுக்கும் அவர்கள் கால்பட்ட இடமெல்லாம் மணிகள் பல கிடைக்கும் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

''முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்''
(21: 20-22)

"......கானத்துக்
கறங்கிசைச் சிதடி பொரியரைப் பொருந்திய
சிறியிலை வேலம் பெரிய தோன்றும்
புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்
சீருடைப் பல்பகடு ஒலிப்பப் பூட்டி
நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்
அலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு" *(58: 12-19)*

"கடத்திடைப் பிடவின் தொடக்குலைச் சேக்கும்
வான்பளிங்கு விரைஇய செம்பரல் முரம்பின்
இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு" *(66 : 17-20)*

"கருவி வானம் தண்டுளி சொரிந்தெனப்
பல்விதை உழவில் சில்லே ராளர்
பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்
கழுவுறு கலிங்கம் கடுப்பச் சூடி
இலங்குகதிர் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு" *(76 : 10-15)*

என்பன முறையே பாலைக் கவுதமனார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், கபிலர், அரிசில் கிழார் ஆகியோர் பாடிய பாடல்களாகும்.

இவை கற்பனையல்ல, புலவர்கள் நேரில் கண்டு அறிந்து பாடியவையே என்பது இன்றைய கொடுமணலில் கலைமகள் கலைக்கூடக் குழுவினரும், தமிழக அரசின் தொல்பொருள் துறையினரும் கண்ட வியக்கத்தக்க அரும்பொருள்கள் மூலம் அறியலாகும்.

இன்றும் பதிற்றுப்பத்து வருணனைபோல் மழை பெய்தவுடனும், ஆடுமாடு மேய்க்கும்போதும், உழவு உழும்பொழுதும் பல வண்ண மணிகள் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன.

கொங்குக் கொடுமணலில் ரோமர்

அகஸ்டஸ், ட்ரூஸஸ், அந்தோணியா, ஜெர்மேனிக்கஸ், டைபீரியஸ், கேலிகுலா, கிளாடியஸ், நீரோ, டோமிஷியஸ், நெர்வா, டிராஜன், கம்மோடியஸ், கான்ஸ்டாண்டினஸ் ஆகிய ரோமானிய அரசர்களின் காசுகள் கொங்கு நாட்டில் வெள்ளலூர், கலையமுத்தூர், பொள்ளாச்சி, கரூர், கத்தாங்கண்ணி, பேரூர், வடக்குப்பூதிநத்தம், ஆனைமலை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

உலகெங்கும் அன்று வழக்கில் இருந்த ரோமானியர்தம் தங்கக் காசுகள் சுத்தமாகவும், தேயாமலும், புத்தம் புதியதாகவும், கொங்கு நாட்டில் கிடைப்பதால் ரோமானியர் குடியிருப்புகளும், நாணயச் சாலையும் கொங்கு நாட்டிலேயே இருந்திருக்கவேண்டும் என்பது அறிஞர் கருத்து.

கொடுமணலிலும் இரண்டு ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. அவற்றுடன் கறுப்பாகவும், கலவைப் பூச்சுகளால் மிளிரும்படியாகவும், வழவழப்பாகவும், பளப்பளப்பாகவும் கண்ணாடிபோல் காட்சி அளிப்பதும், ஒன்றுக்கு மேற்பட்ட பல வட்டங்களையுடைய 'ரவுலடெட்' ஓடும், மங்கலான குங்கும நிறம் கொண்ட 'அரிடைன்' ஓடும் கிடைத்துள்ளன. கொடுமணலுக்கும் ரோமானியருக்கும் உள்ள தொடர்பை இவை விளக்கும்.

கொடுமணல் கொடுக்கும் மணிகள்

கொடுமணலில் கிடைக்கும் தொல்பொருள்கள் பல சங்க இலக்கியங்களோடு பொருத்தமாகக் காணப்படுகின்றன. மணிகளைப்பற்றியும், அவைகளைத் துளையிடுவதுபற்றியும் மதுரைக்காஞ்சி முதலிய சங்க இலக்கியங்கள் பேசும்.

கொடுமணலில் பல வண்ணக் கற்களுடன் அழகாகச் செதுக்கிப் பட்டை தீட்டித் துளையிடப் பெற்ற பல நிற மணிகளும் கிடைத்திருக்கின்றன. அவை மணிகளின் இருபுறமிருந்து துளையிடும் வேலைப்பாட்டினையும் நமக்குக் கூறுகின்றன. அழகிய வெண்படிகக் கற்களுடன், மாணிக்கம், வைடூரியம், கோமேதகம், பவளம், செவ்வந்திக்கல், குருந்தக்கல், கடல் நீலம், பச்சை, சிவப்பு, இளஞ்சிவப்பு, கருஞ்சிவப்பு நிறத்தில் செதுக்கிய மணிகளும் கிடைக்கின்றன.

இத்தகு கற்களில் பாசிகளும் பதக்கமும் கிடைக்கின்றன. உயர்ந்த இப் பொருள்களுடன் சுட்ட மண்ணில் செய்யப்பட்ட பாசிகளும் காதணிகளும் கிடைத்திருப்பது வியப்புக்குரியது.

சங்க காலத்தில் சங்கு வளைகள்

கடலில் கிடைக்கும் பெரிய சங்குகளை அறுத்து, வளையல் முதலிய அணிகளாகச் செய்வது சங்ககால வழக்கம். சங்கு எடுப்போர் கொற்கையில் தனி இடத்தில் வாழ்ந்தனர் என்று மதுரைக் காஞ்சி கூறும். கூர்மையான இரும்புக் கருவிகளைக் கொண்டு சங்குகளை அறுத்துப் பின் அதை வளையல் முதலிய பல அணிகளாகக் கடைவர். அச் சங்குகள் வளைவாக இருக்கும். சங்குகளின் அறுத்த மீதிப் பகுதிகள் கண்களைப் போன்று இருக்கும். இச் சங்குகள் ஒளி வீசும்படியாகவும் வெண்மையாகவும் இருக்கும்.

இலங்கு வளை இருசேரி *(மதுரைக். 136)*
வாள்அரம் துமித்த வளை *(அக. 125)*
அரம்போழ் அவ்வளை *(அக. 349)*
சுரிவளை *(குறு. 260)*
அரம்போழ்ந்து அறுத்த கண்நேர் இலங்கு வளை
(மதுரைக். 316)
கோடீர் எல்வளை *(ஐங். 135)*
கோடீர் இலங்கு வளை *(குறு. 11)*

என்பன சங்க இலக்கியத் தொடர்கள். நூற்றுக் கணக்காக அறுத்த சங்குகளும், சங்கு வளையல் களும், மோதிரம், காதணி, பாசிகள் போன்ற சங்கில் செய்த பல வேலைப்பாடு மிக்க அணி கலன்களும் கொடுமணலில் கிடைத்துள்ளன. சங்கு வளையல்கள் மட்டுமன்றிக் கறுப்பு, சிவப்பு, பச்சை முதலிய வண்ணக் கற்களிலும் செய்யப்பட்ட வளையல் துண்டுகள் கிடைத்துள்ளன.

பிற தொல்பொருள்கள்

பழங்காலத்து எழுத்தான தமிழ் (பிராமி) எழுத் துகள் பொறிக்கப்பட்ட ஓடுகள் பல கொடுமணலில் கிடைத்துள்ளன. அவை ''குதிர்ரா, மா, தா, கோ, வேன்கு'' போன்றவையாகும். 'கிராபிடி' எனப்படும் அடையாளக் குறியீடுகள் உள்ள பானை ஓடுகள் பல கிடைத்துள்ளன. சுடுவதற்கு முன் அழகிய பல தோற்றங்களில் முத்திரை பதிக்கப் பட்டுப் பின் சுட்டுப் பயன்படுத்திய பானை ஓடு களும் கிடைத்துள்ளன.

திராவிட நாகரிகத்திற்கே உரிய மெல்லிய பளப் பளப்பான, கறுப்பு சிவப்பு ஓடுகளும், கறுப்பு ஓடு களும், சிவப்பு ஓடுகளும், பழுப்பு நிற ஓடுகளும், ரசக் கலவையும் வண்ணமும் பூசப்பட்ட ஓடுகளும் கொடுமணலில் கிடைத்துள்ளன.

கோயமுத்தூர் வகை என்று தொல்லியல் நிபுணர் களால் கூறப்படும் வெள்ளை, சிவப்பு நிறத்தில் அலை அலையாக வளைந்தும் நெளிந்தும் அழகிய கோடுகளை உடைய பானை ஓடுகள் கொடுமண லில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. அக் கோடுகள் வெளிப்பக்கம் மட்டும் பெரும்பாலும் இருப்பது வழக்கம். ஆனால் கொடுமணலில் உள் பக்கமும் அக் கோடுகள் இருப்பது சிறப்பானதொன்றாகும். பூவேலைப்பாடு, கட்டங்கள், நேர்க்கோடு, குறுக் குக்கோடு ஆகிய வரைந்த பானை ஓடுகளும் கிடைத் துள்ளன.

பழங்கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலக்கருவிகளான நுண்கற்கருவிகள் பளப்பளப்பான பல கற்களில் இங்குக் கிடைக்கின் றன. படிகக் கல்லில் செய்யப்பட்ட அழகிய கைக் கருவி ஒன்றும் மிக அரிதாகக் கிடைத்துள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. 4000 ஆகும்.

இரும்புத் தாதுக் கற்களும், உருக்கி எடுத்த இரும்பின் பகுதிகளும், இரும்பு உருக்கும் குழாய் களும் கிடைத்துள்ளன. செங்கற்களும் செதுக்கிய பெரிய கற்களும் கிடைத்துள்ளன.

இவைகள் அனைத்தும் கிடைக்கும் மக்கள் வாழிடத்தின் அருகே பெருங்கற்காலப் புதைகுழிகள் பலவும், நெடுநிலை நடுகல்லும் உள்ளன. மான் கொம்பு, விலங்கின் பற்கள், பெரிய எலும்புகள் ஆகியவையும் கிடைத்திருக்கின்றன.

இலக்கியங்களும் கல்வெட்டுகளும்

பிற்காலததும் கொடுமணல் மிகச் சிறப்பாக விளங் கியுள்ளது. 24 கொங்கு நாடுகளில் ஒன்றான குறுப்பு நாட்டில் தென் குறுப்பு நாடான வீர சோழவள நாட்டைச் சேர்ந்தது கொடுமணல். வடகரைக் கொடுமணல், தென்கரைக் கொடுமணல் என்று ஆற்றின் இரு பகுதி ஊர்களும் அழைக்கப்பட்டன. சிவாலயத்திலும் பெருமாள் கோவிலிலும் மிகச் சிதைந்த நிலையில் கொங்குச் சோழர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

தனிப்பாடல்களும், காணிப்பாடல்களும், பதிகம்—பந்தடி—காதல் போன்ற பிரபந்தங்களும் பிற்காலக் கொடுமணலைப் பெரிதும் பாராட்டு கின்றன.

அருள்பரவு கொடுமணல்
ஆதி கொடுமணல்
ஆலயஞ்செறி கொடுமணல்
ஏர்மேவு கொடுமணல்
கார்மேவு கொடுமணல்
குலவுபுகழ் கொடுமணல்
சிறப்பான கொடுமணல்
தங்கம் விளங்கும் கொடுமணல்
தருமம் வளர் கொடுமணல்
திருமருவும் கொடுமணல்
தேர் பரவும் கொடுமணல்
தேர்ந்த கொடுமணல்
மோதுபுகழ்க் கொடுமணல்

என்றெல்லாம் கொடுமணல் பெரிதும் பாராட்டப் பெறுகின்றது.

மேல்பரப்பில் கண்டெடுக்கப்பட்ட இச் சில பொருள்களே அரியவையாகவும், பழம்பெருமையை கூறுவனவாகவும் உள்ளன. முறையான அகழ் வாராய்ச்சி அங்கு நடைபெறுமானால் பழந்தமிழ் நாகரிகம் நன்கு வெளிப்படுவதுடன், சங்க இலக்கி யத்தின் தொன்மையும் புலப்படும்.

தொகுக்கப்பட்ட பொருள்கள் ஈரோடு கலை மகள் கல்வி நிலையத்தின் கலைக்கூடத்தில் காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர்கள் வந்து கண்டு ஆராய்ச்சியை மேற்கொள்வார்களாக!

பெருவழிகள்

க. குழந்தைவேலன், எம்.ஏ.,

நாடுகளின் முன்னேற்றமும் பண்பாட்டு வளர்ச்சியும், அவை பிற நாடுகளோடும் மக்களினங்களோடும் கொள்ளும் தொடர்பால் அமைவதாகும். இத்தொடர்புக்கு முதுகெலும்பாய் அமைவன குறியவும் நெடியவுமான வழிகள். தம் மந்தைகட்குப் பசிய புல்வெளி தேடிய நாள் தொடங்கி அறிவியல் ஊழியில் தம் கண்டுபிடிப்புகளுக்குச் சந்தை தேடும் இந்நாள் வரை இன்றியமையாத் தேவையாய் இருப்பது வழிகளே.

பண்டைத் தமிழகத்தில் வாணிகம் மிகச் சிறந்திருந்தது. யவனரும் உரோமானியரும் தமிழகத்தின் பல பகுதிகளில் வாணிகம் செய்த குறிப்புகளும், அவர்கள் நாட்டுக் காசுகளும் பரவலாகக் கிடைத்துள்ளன. பாலைப்பாடல்களில் பெரும்பாலும் தலைவர்கள் பொருளீட்டுவதற்காக மொழிபெயர் தேயங்களுக்கெல்லாம் சென்றுள்ளனர். வேந்தரும், மன்னரும், மண் வேட்கையாலும் புகழ் வேட்கையாலும், ஓயாது போர்மேற் சென்றவண்ணமிருந்தனர். செந்நாப் புலவர்தம் கால்கள் தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் அலைந்து திரிந்தன. சாத்தர்கள் (வணிகர்கள்) மிளகையும் பிற பொருட்களையும் கழுதைகள்மீதும் எருதுகளின்மீதும் சுமத்திச் சென்றனர். கடலிலே விளைந்த உப்பு, வண்டிகள்மூலம் மலைநாடுகளுக்கு ஏற்றிச் செல்லப்பட்டன. உள்நாட்டுச் சரக்குகள் வெளிநாட்டுச் செலவுக்காகத் தமிழகத் துறைமுகங்களில் மலைபோல் குவிந்து கிடந்தன என்பதைச் சங்க இலக்கியங்களும் பின்வந்த காப்பியங்களும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைந்த வழிகளை அத்தம், அதர்சுரம், இட்டுச்சுரம், நெறி, இட்டுநெறி, கை இட்டு நெறி, வழி, பெருவழி, காட்டுப் பெருவழி, நாட்டுப் பெருவழி என்று சங்க நூற்களும் காப்பியங்களும் கூறுகின்றன. இவற்றோடு தடம், கைவழி, வதி போன்ற புதுவழிகளையும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ் வழிகளில் வணிகர்கட்கும் வழிப்போக்கர்கட்கும் ஆறலைக் கள்வர்கள் ஊறு நேராவண்ணம் கலனேந்திய காவலர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.[1]

இவ் வழிகள் யாவும் இன்று நாம் காணும் பெருவழிகள் போன்று அமையாவிடினும் அற்றைநாள் போக்குவரத்துத் தேவையினை நிறைவு செய்தன என்பதில் ஐயமில்லை. தமிழகத்துப் பெருவழிகள் பெரும்பாலும் ஆறுகளை ஒட்டியே சென்றன. கண்ணகி வையைக்கரை வழியாகச் சென்றனள் என்ற சிலம்புக் கூற்று இதனை உறுதிப்படுத்தும். காஞ்சிபுரத்திலிருந்து பூனா வரையில் ஒன்றும், கோவாவிலிருந்து தஞ்சாவூர், நாகை வரை ஒன்றும், கள்ளிக்கோட்டையிலிருந்து இராமேசுவரம் வரை ஒன்றுமாக மூன்று பெருவழிகள் பண்டை நாளில் சென்றதாகக் கூறுவர்.[2]

சங்க காலத்திற்குப் பின் அரசாண்ட பல்லவ, பாண்டிய, சோழ, விசயநகர, நாயக்க மன்னர்களின் கல்வெட்டுகளில், கோயில்கட்கும், பிராமணர்கட்கும்

---

[1] மலைபடுகடாம், 14-20; பெரும்பாண், 78-82;

[2] மோதிசந்தர் : இந்திய வணிக நெறிகள், பக். 70.

அளிக்கப்பட்ட கொடை நிலங்களுக்கும், ஊர் களுக்கும் எல்லை கூறும்போது பல பெருவழிகளும் இட்டுநெறிகளும் சுட்டப்படுகின்றன.

1. ''நின்றவூர் பெருவழிக்கு வடக்கும்''[3]

2. ''வடபார்க் கெல்லை ஈகைக்குப் போன பெருவழிக்குத் தெற்கும்''[4]

3. ''வழுதவூரிலே நின்று வடக்கு நோக்கிப் போகிய பெருவழி''[5]

4. ''தண்டலத்தினின்று மேற்போன பெருவழி''[6]

5. ''கீழெல்லை திருவரங்க நல்லூர் நின்று தெற்கு நோக்கிப் போன பெருவழிக்கு மேற்கும் தென்பால் எல்லை அள்ளியூருக்குப் போன விலக்குப் பெருவழிக்கு வடக்கும் மேலெல்லை திருக்கண்ணமங்மை ஆழ்வார் திருவிடையாட்டத்துக்குங் கோட்டாற்றுக்குப் போகிற பெருவழிக்குக் கிழக்கும்''[7]

என எல்லைகளாக இவை போன்ற பல பெருவழி கள் சுட்டப்படுகின்றன. மேலே ஐந்தாவதாகச் சுட்டப்பட்ட கல்வெட்டில் ஒரே இடத்தில் மூன்று பெருவழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை பெருவழிகள் சேருமிடமாக இருக்கவேண்டும். விலக்குப் பெருவழி என்பது இன்றைய புறச்சாலை போன்றதாக இருக்கவேண்டும்.

எல்லைகளாக மட்டுமன்றிப் பல பேரூர்கட்குப் போகும் பெருவழிகள் கல்வெட்டில் சுட்டப்பட் டுள்ளன. இவை யாவும் நெடுந்தொலை செல்லும் பெருவழிகள் போலும்.

''தஞ்சாவூர் பெருவழி''[8]

''வஞ்சி வழி''[9]

மன்னர்கள், அரசமாதேவியர் பெயர்களால் பல பெருவழிகள் பெருவழக்காக இருந்துள்ளன.

வீரநாராயணன் பெருவழி,[10] ஆதன் பெருவழி,[11] சேரனை மேற்கொண்ட சோழன் பெருவழி,[12] சோழ மாதேவிப் பெருவழி,[13] இராசமகேந்திரன் பெருவழி,[14] இராசகேசரிப் பெருவழி,[15] அதியமான் பெருவழி,[16] மகதேசன் பெருவழி[17] எனப் பல பெருவழிகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

மலைகளில் இருந்து பல பெருவழிகள் கீழ்நாடு கட்கு வந்துள்ளன. அதனை இம் மலைக்கிரங்கின பெருவழி என்றும், அச் சிற்றூர்க் கிரங்கின பெரு வழி[18] (கொல்லிமலைக் கல்வெட்டு) மலைகளை ஒட்டிச் செல்லும் பெருவழிகள் அம் மலைகளின் பெயரால் அசுரமலைப் பெருமலைப் பெருவழி[19], என்றும் காரைத் தொழுவுப் பெருவழி[20] என்றும் குறிப்பிடுகின்றன.

கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் சுட்டப் படும் பெருவழிகளையெல்லாம் விரிக்கின் பெருகும். பொதுவாக இவை காடும் காடு சார்ந்த இடமுமா கிய முல்லை நிலத்தில் மிகுதியாகச் செல்வது குறிப் பிடத் தக்கது. இவற்றைத் தொகுத்து ஆராயும் பொழுது இன்றைய பெருவழிகளையும் ஆறுகளை யும் ஒட்டிச் செல்வனவாகவே அவ்வழிகள் அமை கின்றன. இப் பண்டைப் பெருவழிகளில் உள்ள ஊர்களில் வணிகமோ, போக்குவரத்தோ சிறப்பாக நடைபெற்றமைக்கான உரோமக் காசுகள், மற்றும் பிற தொல்பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன. அவ் வழிகளில் சிலவற்றை விரித்துக் காணல் இன்றி யமையாதது.

இராசகேசரிப் பெருவழி

கோவை மாவட்டம் பேரூர் வட்டம் சுண்டைக்கா முத்தூருக்குத் தெற்கில் சுமார் 4 கி.மீ. தொலைவில் பச்சைப் பாழி என்ற இடத்தில் இராசகேசரிப் பெரு வழி என்ற ஒரு பெருவழிக் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. அக் கல்வெட்டு,

''ஸ்வஸ்திஸ்ரீ—இராசகேசரிப் பெருவழி'' எனத் தொடங்கி 'சோழர்தம் புகழை'

''திருநிழலு மன்னு யிருஞ்சிறந் திமைப்ப
ஒருநிழல் வெண்டிங்கள் போலோங்கி—ஒரு
நிழல்போல்
வாழியர்கோச் சோழன் வளங்கா விரிநாடன்
கோழியர்க் கோக்கண்டன் கோ''

என்று கொங்கு நாட்டில் பயின்ற எழுத்தாகிய வட் டெழுத்தில் எழுதப்பட்டுள்ளது. சோழர்களின் ஆட்சியெழுத்துத் தமிழ் எழுத்தாக இருந்தபோதி லும் கொங்குநாடு தமிழ் எழுத்தை அறிந்திராமை யால் வட்டெழுத்திலேயே எழுதியுள்ளனர். எனி னும் அவர்களது மீயாட்சி காரணமாக இக் கல் வெட்டை ஒட்டி தமிழ் எழுத்திலும் இராசகேசரிப் பெருவழி என்று எழுதப்பட்டுள்ளது.

இக் கல்வெட்டு முதலாம் ஆதித்த சோழனுடைய தாதல் வேண்டும். தஞ்சை மாவட்டம் தில்லைத் தானம் கல்வெட்டில்[21] முதலாம் ஆதித்தன்

---

[3] தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 16, எண் : 731.
[4] ,, ,, ,, 5, எண் : 465.
[5] ,, கோயிற் கல்வெட்டுகள் எண் : 842.
[6] ,, கல்வெட்டுகள் தொகுதி 7, எண் : 97.
[7] ,, ,, ,, 14, எண் : 264.
[8] தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை குடந்தைக் கல் வெட்டுகள் தொகுதி-1. எண் 149/1979.
[9] ஸ்ரீரங்கம் கல்வெட்டு.
[10] கொழுமம் கோயிற் கல்வெட்டுகள்.
[11] குளித்தலை வட்டம், இரத்தினபுரிக் கல்வெட்டு.
[12] [13], [14] கொழுமம் கோயிற் கல்வெட்டுகள்.
[15] [16], [17] தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடிப்புகள்.
[18] கொல்லிமலை அறப்பளீசுவரர் கோயில் கல்வெட்டு.
[19] [20] கொழுமம் கோயில் கல்வெட்டுகள்.
[21] தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 3, எண்: 89.

''பல்யானைக் கோக்கண்டனான தொண்டை நாடு பாவிய இராசகேசரி'' என்று குறிப்பிடப்பட்டுள்ளமையால் இப் பெருவழி குறிப்பிடும் கோழியர் கோக்கண்டனும் இவனாகவே இருக்கவேண்டும். எனவே, இப்பெரும்வழி கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நிலவி இருந்ததெனலாம். இப் பெருவழி இவனுக்கு முன்னமே சேரனாட்டு மேலைப் பகுதிக்கும் கரூர் மற்றும் சோனாட்டுக்கும் இது தொன்று தொட்டு வழக்கில் இருந்திருந்தது. பாலக்காட்டுக் கணவாய் வழியாகப் பண்டைக் காலத்திலேயே உரோமானியர்கள் தமிழகத்தின் உட்பகுதியில் நொய்யலாற்றின் கரை வழியாக வணிகம் செய்துள்ளமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இப் பெருவழி பேரூர், வெள்ளளூர், சூலூர், பல்லடம், காங்கேயம், கரூர் வழியாகத் திருச்சி வரை சென்ற இப் பண்டைப் பெருவழியில் உரோமக் காசுகள் கிடைத்துள்ளன. மேலும் இந்திய வணிக நெறிகளின் ஆசிரியர் பாலக்காட்டைக் கடந்து பின் மலபாருக்கும் சோழநாட்டுக்குமிடையே அமைந்ததாகக் குறிப்பிடும் நெடுஞ்சாலை இதுவே.

எனவே, கோச்சோழன் கொங்கு நாட்டைக் கைப்பற்றியவுடன் அதனைப் புதுக்கித் தன் பெயரை வைத்துள்ளான் என்பதே பொருத்தமானது. இப் பெருவழி மலை இடுக்குகளின் வழியே பெருங்கற்களையிட்டு அதன்மேல் சிறு கற்களைப் பாவி அமைக்கப்பட்டுள்ளது. இன்று கேரளம், செல்லும் பெருவழியும் இதற்குச் சற்று தொலைவிலேயே செல்வது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கல்லையிட்டு கிட்டித்து அமைக்கும் வழியைப் பத்துப்பாட்டு சுரம் என வழங்கும்.[22]

அதியமான் பெருவழி

அதியமான்களின் தலைநகரான தகடூரிலும் (தருமபுரி) அதில் இருந்து கிருட்டிணகிரி செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் மாட்டலாம்பட்டி என்ற ஊரிலுமாக இரண்டும் பெருவழிக் கற்கள் கிடைத்துள்ளன. இராசகேசரிப் பெருவழியில் பெருவழியைக் குறிக்கும் கல்வெட்டு மட்டுமே கிடைத்துள்ளது. ஆனால், அதியமான் பெருவழி எந்த ஊர் செல்கின்றது, எவ்வளவு தொலைவு செல்ல வேண்டும் என்பதை இன்றை 20ஆம் நூற்றாண்டு வழிக்கல்லிலும் மேலான செய்தியைக் கொடுக்கும் பெருவழிக் கல்லே கிடைத்துள்ளது. இதில் மேலும் ஒரு பெருஞ்சிறப்பு இவ்வளவு தொலைவு என்பது எண்ணால் மட்டுமன்றிக் கற்றாரோடு கல்லாரும் களிக்கும்வண்ணம் குறியீடுகளாலும் சுட்டப்பட்டுள்ளது.

தமிழ் எண் முறையில் இருபத்து ஏழு என்பதைக் குறிக்க இரண்டு பத்து, ஏழு என்று எண்ணிட்டுக் காட்டவேண்டும். அதே முறையில் 27 காதம் என்பதை மேலே எண்ணால் எழுதி, பின்னர் இரண்டு பெரிய குழிகளிட்டு அதன் கீழ் ஏழு சிறிய குழிகள் இடப்பட்டுள்ளன. பெரிய குழிகள் ஒவ்வொன்றும் பத்தையும் சிறிய குழிகள் ஒவ்வொன்றும் ஒன்றையும் குறிக்கும். பண்டைத் தமிழர்கள் இது போன்று புள்ளிகளிட்டுக் கணக்கிட்ட முறையைக் குறளில் பிரிந்த தலைவன் வரும் நாளைச் சுவரில் விரலால் புள்ளியிட்டுக் கணக்கிடும் ''நாளொற்றித் தேய்ந்த விரலின்'' கல்லாத் தலைமகளின் நிலையால் உணரலாம்.

தகடூரின் மேற்கெல்லையில் கிடைத்துள்ள பெருவழிக் கல்லில்,

''அதியமான் பெருவழி
நாவற்றாவளத்துக்குக்
காதம் உ௰எ.

○○
○○○○
○○○

என்றும் மாட்டலாம்பட்டிப் பெருவழிக்கல்லில் உ௰கூ காதம் என்றும் எழுதப்பட்டுள்ளன. இரண்டு கல்லுக்கும் இன்றைய இடைவெளி எட்டு கற்கள். எனவே, ஒரு காதம் என்பது நான்கு கற்களாக (ஏறத்தாழ 11 கி.மீ.) இருக்க வேண்டும்.

இதில் குறிப்பிடும் **நாவற் தாவளம்** என்பது தங்குமிடமாகும். (தாவளம் - தங்குமிடம்) வணிகர்களும், பிறரும் நெடுந்தொலைவு செல்லும்பொழுது இடையிடையே தங்கித் தம் செலவுகளைத் தொடர வேண்டிய நிலையில் இருந்தனர். அதற்கு ஏந்தாக ஆங்காங்கே தாவளங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இத்தகைய பல தாவளங்கள் இன்றும் அப் பெயரால் வழங்குகின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள வேம்படி தாவளமும் (வேம்படி தாளம்), கோவை மாவட்டத்திலுள்ள மஞ்சிப்புலத் தாவளத்தையும்[23] - தாவளம் - (கிருட்டிணகிரி மாவட்டம்), வேலந்தாவளம், வண்டித் தாவளம் (கேரள மாநிலம்) 64 கடிகைத் தாவளம்[24] ஆகியவற்றையும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

இனி, இப் பெருவழி கி.பி. 13ஆம் நூற்றாண்டில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் தகடூர்ப் பகுதியை ஆண்ட இராசராச அதிகமானுடையதாக இருக்கவேண்டும். சங்க காலத்திற்குப் பின் கி.பி. 8ஆம் நூற்றாண்டிலும் 13ஆம் நூற்றாண்டிலுமே அதியர்கள் ஆட்சி வெளிப்படுகிறது. இவ்வெழுத்து 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக் காலத்தில் சோழர்களின்கீழ் மிகச் சிறப்பாக விளங்கியவன் இராசராச அதிகமானே. இவன் கல்வெட்டுகள் பல தகடூர் பகுதியில் கிடைத்துள்ளன.[25] வடஆர்க்காடு

---

[22] மலைபடுகடாம், அடி 20.
[23] பேரூர்-சிறுநூல்.
[24] K. V. Subramaniya Iyer, Largest Provincial Organisation, pp. 50, 60, 66.
[25] தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் 2ஆம் தொகுதி.

மாவட்டம் திருமலையில் உள்ள குந்தவை சினாலயத்தில் குந்தவையால் செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளின் அழிவைத் திருத்தியவன் இவனே என்பதை அங்குள்ள பாடற் கல்வெட்டுக் கூறுகிறது.[26] இப் புகழ் பெற்றவனே இப் பெரு வழியை உண்டாக்கியவன் என்பது வெள்ளிடை மலை. இப் பெருவழி இன்றைய தேசிய நெடுஞ் சாலையை ஒட்டிச் சென்றிருக்கவேண்டும்.

மகதேசன் பெருவழி

சோழர் காலத்தின் இறுதிக் கட்டத்தில் சோழர் கட்கும் பின் பாண்டியர்க்கும் கீழ்ப்பட்டு, சிற்றரசர் களாய் ஆறகழூரைத் (சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம்) தலைநகராகக் கொண்டு பாண அரசர்கள் மகதை மண்டலத்தை ஆண்டு வந்தனர்.[27] அவர் களுள் சிறந்தவன் வாணாதிராயன். இவன் மக தேசன் எனச் சிறப்பாக வழங்கப்பட்டான். இவ னுடைய பாடற் கல்வெட்டுகள் பல திருவண்ணா மலையில் உள்ளன.[28] பல கோயில்கட்குக் கொடை பல வழங்கியவன் இவன். காஞ்சியிலுள்ள இறைவர் மீதுள்ள பற்றினாலோ, சேந்தமங்கலத்தைத் தலை நகராகக் கொண்டாண்ட கோப்பெருஞ்சிங்கன் நட்பினாலோ காஞ்சிபுரம் வரை ஒரு பெருவழியை அமைத்துத் தன் பெயரால் மகதேசன் பெருவழி எனப் பெயரிட்டான். அவனுடைய பெருவழிக் கல்லொன்று ஆறகழூர் காமநாதீசர் கோயிற் திருச் சுற்றில் பாவு கல்லாகக் கிடத்தப்பட்டிருந்தது கிடைத்துள்ளது. அதில் "ஸ்வஸ்திஸ்ரீ மதகேசன் பெரு வழி காஞ்சீபுரம்" என எழுதப்பட்டு அதன்கீழ் அதிகமான் பெருவழியில் ஒரு காதத்தைக் குறிக்கும் குழிகளைப்போலப் பல குழிகள் வரிசை வரிசையாகக் குறிக்கப்பட்டுள்ளன. இது காஞ்சிபுரம் எத்தனை காதம் என்பதைக் குறிக்கும் காதக் குழிகளாகும். போகூழமாக இக் கல்லின் இடப்புறமும் கீழ்ப் பகுதியும் உடைந்துவிட்டமையால் சரியாக எத்தனை காதம் என அறிய இயலவில்லை. இப் பெருவழி வெள்ளாற்றைக் கடந்து சின்னசேலம் கூட்டுச்சாலை கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், திருவண்ணாமலை வழியாகக் காஞ்சிபுரம் சென் றிருக்க வேண்டும். இப் பெருவழி இந்திய வணிக நெறிகள் எனும் நூலுள் குறிப்பிடப்பட்டுள்ள, கோவா முதல் காஞ்சி வரை வந்த பெருவழியோடு தொடர்புகொண்டு மொழிபெயர் தேயப் பெரு வழியாக ஒரு காலத்து விளங்கியிருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பெருவழிகளினின்று வேறுபட்ட ஒரு வழியைக் இங்குக் குறிப்பிடுதல் சிறப்பாக அமை யும். கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன் விக்கிரம பாண்டியன் என்பவன் திருவண்ணாமலை இறைவரிடத்தில் மிகுந்த ஈடுபாடு உடை யவன். திருவண்ணாமலையை இறைவனின் திருவுரு வாகக் கருதுவது சைவர் மரபு. இம் மலையை வலமாக வந்தால் இறைவனையே வலமாக வந்த நிறைவைப் பெறுவர். இம் மலையைச் சுற்றி வர திருவீதி ஒன்றைத் தன் பெயரால் அமைத்தான் இம் மன்னன். பெருவழிகளைக் காதம் எனக் குறித்தல் போல இத் திருவீதியைப் பல வகுப்புகளாகப் பிரித்துத் திருவீதி கற்களை நாட்டினான்.

இத்தகைய இரண்டு திருவீதிக் கற்கள் கிடைத் துள்ளன. அவற்றில் ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம பாண்டியன் திருவீதி 'ஆறாம் வகுப்பு' என்றும் 'நான்காம் வகுப்பு' என்றும் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் தலைப்பகுதியில் இணைக்கயலும் நடுவிலே செண்டும் அமைந்துள்ளன. இச் சின்னங்கள் பாண்டியருடைய முத்திரைகளாகும். இவற்றில் ஒரு பெருஞ் சிறப்பு, இவை இன்றைய மைல் கற்களின் அமைப்பிலே உள்ளவையாகும். இவற்றி னிடையே உள்ள தற்போதைய இடைவெளி 7 கி.மீ. எனவே, ஒரு வகுப்பு என்பது 3½ கி.மீ. ஆதல் வேண்டும்.

அதோடு, இதன் அகலத்தை இன்றும் காணுமாறு திருவீதியின் இருபுறங்களிலும் திருவீதிக்கற்கள் நடப்பட்டுள்ளன. பெருவழிகளின் தொலைவை அறியும் நமக்கு அவற்றின் அகலம் அறிய முடிய வில்லை. சங்ககாலப் பேரூர்களில் தெருக்களே "ஆறுகிடந்தன்ன அகன்நெடுந்தெருவாக"[29] இருந்துள்ளமையும் இத் திருவீதியின் அகலத்தையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது பெருவழிகளும் பரந் தனவாகத்தான் இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை.

இவைகளேயன்றி, கல்வெட்டில குறிக்கப்படா பெருவழிகள் எத்துணை வழங்கினவோ, அவை இன்னும் வரும் ஆய்வை எதிர்நோக்கியுள்ளன. கோவை, பொள்ளாச்சி, சி. கலையமுத்தூர், திண்டுக் கல் வழியாகச் செல்லும் இன்றைய நெடுஞ்சாலை சங்ககாலந் தொட்டு இருந்த ஒன்றேயாம். இச் சாலையையொட்டியுள்ள பொள்ளாச்சி, வடக் குப் பூதிநத்தம், சி. கலையமுத்தூர் ஆகிய

[26] தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 4.
[27] செ. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, பக். 188-89.
[28] தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 8.
[29] நெடுநல்வாடை, அடி, 30

ஊர்களில் இதற்குச் சான்றாக உரோமக் காசுகள் கிடைத்துள்ளன. மேலும் வடுக வழி,[30] கொங்கப் பெருவழி[31] போன்ற நாட்டடிப்படையில் அமைந்த பெருவழிகளும் இடப்பட்டுள்ளன.

தனக்கும், தன் மந்தைகட்குமாக உணவு தேடத் தொடங்கி இடப்பட்ட காலடிக் கொடிவழி, அரசியல், வணிகம், சமயம், பண்பாட்டுப் பரிமாற்றம், செலவு, உறவுகள் காரணமாக வளர்ந்து பெருவழிகளாக மாறின. இட்டுநெறிகளாக இருந்து சிற்றூர்களை இணைத்த சிறுநெறிகள் இட்டேறியாகி இவ்விருபதாம் நூற்றாண்டில் ஊராட்சிச்சாலைகளாக மாறியுள்ளன. பண்டையோரிட்ட பெருவழிகளே இன்றைய நெடுஞ்சாலைகளாகவும், தேசிய நெடுஞ்சாலைகளாகவும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தொலைவைக் குறிக்க அவர்களிட்ட குறியீடுகளும், நட்ட காதக்கற்களும் இன்றைய நிலைக்கற்களாக வளர்ந்துள்ளன. வணிகரும் பிறரும் தாம் சென்ற பெருவழிகள்தோறும் இட்டுச்சென்ற பொருள்கள் இன்று தொல்பொருள்களாய் வரலாற்றுக்குப் பெருவழி காட்டுகின்றன. காலங்காலமாக அவ்வழிகள் புதுப்பிக்கப்பட்டு, மன்னர்களாலும் மக்களாலும் புதுப்பெயர் சூட்டப்பெற்றுப் பொலிவு பெற்றன. இவ்வாறு பண்டையோர் வாழ்வுக்கும் செலவுக்கும் ஆறு இட்ட நெறிகளும் பெருவழிகளும் நமது வாழ்வின் அடித்தளத்திற்கான வழிகள் என்பதில் ஐயமில்லை. நாட்டின் வழிகள் நமது வாழ்வின் வழிகள்.

[30] பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 67.
[31] கொழுமம் கோயிற் கல்வெட்டு.



தமிழ் இதழியலில் அங்கத ஓவியங்கள்

மா. ரா. இளங்கோவன், எம்.ஏ.

‘கார்ட்டூன்’ என்பதற்கு அரசியல் வசைக் கேலிச் சித்திரம், வசைக் கேலிப்படம், கேலிப் படம், ஏளன ஓவியம், வேடிக்கை ஓவியம் என்னும் பல பொருள்களைப் பல்கலைக்கழக ஆங்கிலம்-தமிழ் அகராதி தருகின்றது. இதனை ‘அங்கத ஓவியம்’ என்று நாம் வழங்கலாம்.

‘பேனா மன்னர் சொக்கலிங்கம்’ என்னும் பாராட்டைத் தாம் வாழும் காலத்திலேயே பெற்ற இதழாசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம், ‘கார்ட்டூன்’ என்பதற்குக் ‘கூடார்த்தப் படம்’ என்னும் பொருள் தந்து தமது ‘‘காந்தி மலரி’’ல் இரண்டு கட்டுரைகள் எழுதியுள்ளார்.[1]

இதழ்களின் உள்ளடக்கம் எதுவானாலும் கார்ட்டூன்களை வெளியிடுவது என்பது இப்போது நடைமுறைப் பழக்கமாகிவிட்டது. அரை நூற்றாண்டுக்கு முன்னர் வெளிவந்த இதழ்களில் இவற்றைக் காண்பது அரிதாகும்.

1841ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் ‘பஞ்ச்’ என்ற பெயரில் முதன்முதலாகக் கார்ட்டூன் இதழ் வெளிவந்தது. டேவிட்லோ, பெர்னார்ட் பார்ட்ரிட்ஜ், பிராங் டைசன், மாக்ஸ் பீர்பாம், டாம் வெப்ஸ்டர், மற்றும் பல சிறந்த ஓவியர்களின் ஓவியங்களைக் கொண்டு ‘பஞ்ச்’ மக்களிடையே செல்வாக்கினைப் பெற்றது.

1851ஆம் ஆண்டில், இந்தியாவில் ‘‘டெல்ஹி ஸ்கெட்ச் புக்’’ (Delhi Sketch Book) என்னும் பெயரில் கார்ட்டூன்களையே கொண்ட மாத இதழ் முதன்முதலாக வெளி வந்தது. ஏழாண்டுகள் வரை லார்ட் டல்ஹௌசி, லார்ட் கானிங் ஆகியோர் ஆட்சிக் காலத்தில் இவ்விதழ் சிறப்புற நடைபெற்றது. ‘டெல்ஹி கெசட்’ என்னும் இதழ் அச்சடிக்கப்பட்ட அச்சகத்தில் இவ்விதழும் அச்சாயிற்று. தொடக்கத்தில் குனியா லால் என்பவரும் பின்னர் ஏ. டிஸௌஸா என்பவரும் இவ்விதழின் அச்சாளராயிருந்தனர். ஆசிரியர் பெயர் இதழில் வெளியிடப்படவில்லை. இதழின் ஒரு பக்கம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பத்துப் பக்கங்களைக் கொண்ட இவ்விதழ் படிப்பவர்க்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் வெளிவந்தது. பலர் இவ்விதழில் எழுதினர். ஆயினும் ஒருவர் பெயரும் வெளியிடப்படவில்லை. படங்களை வரைந்தவர்களும் துணுக்குகளை எழுதியவர்களும் புனைபெயர்களையே குறித்தனர். ஆயினும் ஓர் எழுத்தாளர் மட்டும், அவர் தமது பெயரைக் குறிப்பிடவில்லையென்றாலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டார். அவர் பெயர் சர் ஹெஸ்ர்ட் பெஞ்சமின் எட்வர்ட் என்பதாகும். அவர் 1853ஆம் ஆண்டில் பெஷாவர்-அம்பாலா ஆகிய பகுதிகளின் கமிஷனராக இருந்த சர் ஹென்றி லாரன்ஸ் என்பவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர். ‘அரசர்கள், தலைமை ஆளுநர்கள், மகாராஜாக்கள், ராணுவ வீரர்கள், இந்திய மக்களின் வாழ்க்கை நிலை பற்றியெல்லாம் எவருடைய குறுக்கீடுமில்லாமல் இவ்விதழில் ஓவியங்கள் தீட்டப்பட்டன’ என்கிறார் ஏ. ஏ. நாயர் என்பவர்.[2]

---

[1] காந்தி மலர், ஏப்பிரல்-மே, 1933; ஜூன், 1933.

[2] A. A. Nair, Peeps at the Press in South India, p. VI.

இவ்விதழில் டல்ஹௌஸியின் வெற்றிகள், இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், பர்மியப் போர், கிரீமியாப் போர் தொடர்பான குறிப்புகள் ஓவியங்களாக இடம் பெற்றன. வடமேற்கு மாநிலங்களின் ஆளுநராக இருந்த ஜேம்ஸ் தாம்ப்ஸன் என்பவர் இவ்விதழின் ஆதரவாளராக இருந்தார். அவர் மரத்தில் செதுக்கப்பட்ட அச்சுப் படிமைகளைக் கொண்டு இதழை வெளியிடுமாறு இதழை நடத்தியவர்களுக்கு ஆலோசனை கூறினார். இந்த முறையில் இதழை வெளியிடுவதற்காகும் செலவில் ஒரு பகுதியைத் தாம் கொடுத்துதவுவதாகவும் தெரிவித்தார்.

1857-ல் ஏற்பட்ட இந்தியப் பெருங்கிளர்ச்சியின் போது, கிளர்ச்சியாளர் சிலர் 'டெல்ஹி கெசட்' அச்சகத்தைத் தாக்கியதுடன், அச்சு யந்திரங்களையும், அச்செழுத்துகளையும் யமுனையாற்றில் எறிந்து விட்டனர். இந்தியாவின் முதல் கார்ட்டூன் இதழின் வரலாறு இது.

இதனைத் தொடர்ந்து ஐம்பதாண்டுக் காலம் இந்திய இதழ்களில் கார்ட்டூன்கள் இடம் பெறவில்லை.

கார்ட்டூன்களை வெளியிடும் வழக்கம் பாரதியாரின் 'இந்தியா'விலிருந்துதான் தொடங்குகிறது என்று சிலர் கூறுவர். ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வெளிவந்த தமிழ் இதழ்கள் சில இம் முயற்சியை மேற்கொண்டுள்ளன. அவை சமுதாய சீர்திருத்தம்பற்றிய சித்திரங்களாக அமைந்தன. அவற்றுள்ளும் பல மேலை நாட்டு இதழ்களில் வெளிவந்தவற்றின் மறுபதிப்பாகவும் இருந்தன. அரசியல் துறையில் கார்ட்டூன்களை வெளியிட்டு வாசகர்களைக் கவர்ந்த சிறப்பு, பாரதியாருக்கு உரியதாகும்.

1906ஆம் ஆண்டில் பாரதியார் தமது 'இந்தியா' வார இதழில் கார்ட்டூன்களைத் தொடர்ந்து வெளியிட்டார். அவை மக்களைக் கவர்ந்தன. இதழின் விற்பனைப் பெருக்கத்திற்கு அவை பெரிதும் துணை செய்வன என்னும் உண்மை உணரப்பட்டபோதிலும் பாரதியாருக்குப் பின் தொடர்ந்த பன்னிரண்டு ஆண்டுகளில் வெளிவந்த தமிழ் இதழ்களில் கார்ட்டூன்கள் வெளியிடப்படவில்லை.

தமிழ்த்தென்றல் திரு. வி. க.வை முதலாசிரியராகக் கொண்டு வெளிவந்த 'தேசபக்தன்' நாளிதழின் ஆசிரியராக வ. வெ. சு. அய்யர் பொறுப்பேற்றபின் வாரத்திற்கு ஒருமுறை 'கார்ட்டூன்' வெளியிடுவதை வழக்கமாகக்கொண்டிருந்தார். அவர் பொறுப்பில் ஒன்பது மாதங்களே 'தேசபக்தன்' நடைபெற்று நின்றுவிட்டதால் அதனைத் தொடரமுடியவில்லை.

பின்னர் கே. ஆர். சர்மா சகோதரர்கள் டி. என். நடராசப் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு நடத்திய 'விநோதினி' என்னும் இதழில் கார்ட்டூன்கள் மிகுதியாக வெளிவந்தன. 'விநோதினி' குறுகிய கால வாழ்வுடைய இதழாயிற்று.

1920-ல் வெளிவந்த 'தமிழ்நாடு' வார இதழில் தான் அதன் ஆசிரியர் டாக்டர் பி. வரதராசலு நாயுடு, கார்ட்டூன்களைத் தொடர்ந்து வெளியிட்டு, இதழின் ஓர் அங்கமாக அதனைப் பிறர் கருதுமாறு செய்தார். அதனால், இதழின் விற்பனை அதிகரிப்பதைக் கண்ட பிற இதழாசிரியர்களும் கார்ட்டூன் வெளியிடத் தொடங்கினர்.

ஆயினும் கார்ட்டூன்களுக்குத் தனிச் செல்வாக்கை அளித்த இதழ்கள் 1930ஆம் ஆண்டு தொடங்கி வெளிவந்த காலணா இதழ்களேயாகும். எட்டுப் பக்கங்களைக் கொண்டு காலணா விலையுடன் வெளிவந்த இந்த இதழ்களிலும் முன்னோடியாக விளங்கும் பெருமைக்குரியது 1931ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள்முதல் வெளிவந்த 'காந்தி' இதழ்தான். இவ்விதழின் ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் தொடக்க காலத்தில் இதழின் முன் பக்கத்தை மட்டும் கார்ட்டூனுக்காக ஒதுக்கினார். 1933ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் இதழிலிருந்து இதழின் எட்டாம் பக்கத்தில் பிற நாட்டு இதழ்களில் வெளியான முக்கியமான கார்ட்டூன்கள் மறுபதிப்புச் செய்யப்பட்டன. மக்கள் அவற்றை விரும்பி வரவேற்ற நிலையையே இப்போக்கு உணர்த்துகின்றது. 'காந்தி' பிற நாட்டு இதழ்களில் வெளியான கார்ட்டூன்களை வெளியிட்டது போலவே, 'காந்தி'யில் வெளியான கார்ட்டூன்களை லண்டனிலிருந்து வெளியான 'ரெவ்யூ ஆஃப் ரெவ்யூஸ்' என்னும் திங்கள் இதழ் வெளியிட்டது. தமிழகத்து இதழான காந்தியின் கார்ட்டூன்கள் லண்டன் இதழால் கொள்ளப்படுகின்றன என்பதொன்றே 'காந்தி'யின் கார்ட்டூன்களுக்குள்ள சிறப்பினை உறுதிப்படுத்துவதாகும். இதுபற்றி இதழாசிரியர் கூறுவது இது:

> ''காந்தியில் முதல் பக்கத்தில் வெளியாகும் கார்ட்டூன்கள் என்ற கூடார்த்தப் படங்கள் உலகப் பிரசித்தி அடைந்துவருகின்றன என்பதை நண்பர்களுக்குச் சந்தோஷத்தோடு அறிவித்துக் கொள்ளுகிறோம். லண்டனில் 'ரெவியூ ஆஃப் ரெவியூஸ்' என்ற சிறந்த மாத சஞ்சிகை நடக்கிறது. பேர்பெற்ற பத்திரிகையாசிரியரான டபிள்யூ. டி. ஸ்டெட் என்பவர் சுமார் 43 வருஷங்களுக்கு முன்பு அதை ஆரம்பித்தார். அந்தப் பத்திரிகை போகாத இடம் உலகில் எதுவும் கிடையாது. ....பூலோகத்திலுள்ள சகல நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளியாகும் கூடார்த்தப் படங்களில் சிறந்தவைகளைப் பொறுக்கி எடுத்து ஒவ்வொரு மாதமும் அது பிரசுரித்து வருகிறது.

''இப்பேர்ப்பட்ட 'ரெவியூ ஆஃப் ரெவியூஸ்' 'காந்தி'யில் பிரசுரமாகும் கூடார்த்தப் படங்களில் சிலவற்றைப் பிரசுரிக்க ஆரம்பித்திருக்கிறது. 'ரெவியூ ஆஃப் ரெவியூஸ்' நமது படங்களைப் பிரசுரிப்பதால், நமது தேசத்தில் சுதந்திர தாகம் எவ்வளவு பலமாய் இருக்கிறது என்பதை உலகமெங்கும் பரப்புவதற்கு மிகவும் உதவியாய் இருக்கும்.''

''காலணா பத்திரிகையான 'காந்தி' தமிழ் நாட்டில் நுழையாத கிராமம் கிடையாது. இப்போது அதன் படங்கள் உலகில் நுழையாத தேசமிருக்காது.''[3]

பாரதியாரின் 'இந்தியா'வில் வெளிவந்த சில கார்ட்டூன்களின் கருத்துகளைக் காண்போம். அவை நையாண்டியாகவும், நகைச்சுவையாகவும், ஆத்திரத்தை உண்டாக்கத் தக்கனவாகவும், கடுமையான முறையில் குறைகளைச் சுட்டுவனவாகவும் அமைந்தன.

1909ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் தேதி இதழில், வெடிகுண்டு வீசி இழப்புகளை விளைவித்தவனும், எதேச்சதிகாரப் போக்குடைய பிரிட்டிஷ் காரனும் தராசில் தங்களுடைய எடையைக் காணுவதாகவும், பின்னவனே அதிகக் குறையுடையவனாகவும் (தராசின் எடையளவைக் கொண்டு) குறிக்கப்பட்டுள்ளது. அதே இதழில் வெளியான பிற கார்ட்டூன்களில் ஒன்று, தீபாவளி தேவி இந்தியர்களுக்குச் சுதேசிப் பொருள்களைப் பரிசளிப்பதாக உள்ளது. மற்றொன்று, மின்டோ-மார்லி சீர்திருத்தங்களைப் பற்றியது. பிரபுக்கள் மலையைக் கிள்ளி எலியைப் பிடிப்பது போன்ற படம் வரையப்பட்டுள்ளது. வேறொன்று, தீபாவளி நீராடல் பற்றியது. பிறிதொன்று பாரததேவி மகாலட்சுமியாகச் சித்திரிக்கப்பட்டு இந்தியாவுக்குச் செல்வத்தை வாரி வழங்குவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆறாவது கார்ட்டூன், பாரததேவி தீபாவளி அன்னையை வணங்குவது போலுள்ளது. அடுத்தது, கிருஷ்ண பரமாத்மா (அருச்சுனன் வடிவில்) இந்தியர்களை நோக்கி, சுதந்திரத்திற்கான செயல்களை மேற்கொண்டு சுயராஜ்யம் பெறுமாறு கூறுவது போன்றுள்ளது.

டிசம்பர் 4ஆம் நாளன்று வெளிவந்த இதழில், முதல் பக்க கார்ட்டூன் இந்திய தேசியவாதிகள் ஒளிவிளக்காகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அதிகாரபூர்வமான செயல்களை மேற்கொள்வதாகக் குறிக்கப்பட்டுள்ளது. சுதேசியத்தின் புனிதத் தன்மை வேறொரு கார்ட்டூன்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சண்முகக் கடவுளின் ஆறுமுகங்களின் ஒருமைத் தோற்றம் இந்தியாவின் ஆறு மாகாணங்களை உணர்த்துவதாக மற்றொரு கார்ட்டூன் குறிப்பிடுகின்றது. சுதேசியத் தோட்டத்தின் காப்பாளராகக் கெய்க்வாரைச் சித்திரித்து மற்றொரு கார்ட்டூன் உள்ளது. சுரேந்திரநாத் பானர்ஜியின் உருவப்படத்தில் அவர் கண்களைத் திறப்பது போன்ற காட்சியினை வழங்குகின்றது ஒரு கார்ட்டூன்.

கார்ட்டூன்கள்மூலம் பிறர் கருத்தினைக் கவரும் கலையில் பாரதியார் எவ்வளவு நம்பிக்கை உடையவராக விளங்கினார் என்பதற்கு அவருடைய 'இந்தியா' சான்றாக உள்ளது. ஒவ்வொரு இதழிலும் மூன்றுக்குக் குறையாத கார்ட்டூன்கள் வெளியிடப்பட்டுள்ளன. சில இதழ்களில் ஏழு கார்ட்டூன்களும் வெளிவந்துள்ளன.

காந்தி மலரில் மலர்-2 இதழ் 27-லிருந்துதான் கார்ட்டூன்கள் முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கு முன்னர் முதல் பக்கத்தில் தனிக் கட்டுரைகளோ அல்லது தலையங்கங்களோதான் வெளிவந்தன.

காந்தி மலரில் 1931ஆம் ஆண்டின் இதழொன்றில் வெளிவந்த கார்ட்டூன் ஒன்றின் தலைப்பு, 'தலையைத் தடவ முயற்சி' என்பதாகும். அரசாங்கம் செய்துவந்த ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கவேண்டும் என்று மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். மக்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டது போல நடித்த அரசாங்கம், புது வரிகள் போட்டுச் சிக்கனம் காப்பதாகச் சொல்லிச் செயல்படத் தொடங்கிவிட்டது.

சமயக் கதையொன்றின் அடிப்படையில் இக் கார்ட்டூன் அமைந்துள்ளது. தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று கேட்டுச் சிவனாரிடம் வரம் பெற்ற அசுரன், அவர் தலையிலேயே கை வைக்க முயன்றதுபோலுள்ளது, சிக்கனம் தேவையென்று சொன்ன பொதுமக்கள்மீது, புது வரிகளைத் திணிப்பது என்று எண்ணச் செய்வதுதான் இந்தக் கார்ட்டூனின் கருத்து.

சிவனார் வேடத்தில் நிற்பது பொதுஜனம். இந்தியாவின் பொக்கிஷ மந்திரி அசுரன். சிக்கனம் பற்றிச் சொன்னவன்மீது புதிய வரிகளைத் திணிக்கின்றார் பொக்கிஷ மந்திரி ஸர் ஜார்ஜ் ஷுஸ்டர். முன்னவர் பிடிபடாமல் நகர்கின்றார்.

இதுவே படக்கருத்து. இக் கார்ட்டூனின்கீழ் ஆசிரியரின் குறிப்புப் பின்வருமாறு அமைந்துள்ளது:

''(தொட்டதெல்லாம் பஸ்மீகரமாக வேண்டும் என்று ஓர் அசுரன் கேட்டான். பரமசிவம் கொடுத்தார். உடனே அசுரன் அவர் தலையிலேயே கைவைக்க முயற்சித்தான். இது ஒரு கதை).

சிக்கனத் திட்டம் வேண்டியதுதான் என்று ஜனங்கள் சம்மதம் கொடுத்தார்கள். பொக்கிஷ மந்திரி உடனே ஜனங்கள் தலையில் 'புதிய வரிகள்' என்ற தமது கைகளை வைக்க ஓடுகிறார்.''[4]

[3] காந்தி வார இதழ், மலர் 6, இதழ் 28.
[4] காந்தி வார இதழ், மலர் 2, இதழ் 34.

1932ஆம் ஆண்டின் இதழ் ஒன்றில் வெளிவந்த கார்ட்டூனின் தலைப்பு, 'மாமியாள் கொடுமை' என்பதாகும்.

இக் கார்ட்டூனின் கருத்து இதுவாகும் :

பெரம்பூரில் உள்ள தொழிற்சாலையில் ஏற்பட்ட வேலைநிறுத்தம் காரணமாக அல்லல்பட்டு, அழுத கண்ணீருடன் உள்ள தொழிலாளர்க்கு உதவுவதற்காகச் சென்னைக் கார்ப்பரேஷன் ஐயாயிரம் ரூபாய்க்கு அரிசி, பருப்பு முதலிய உணவுப் பொருள்களை வாங்கிக் கொடுப்பதென்று தீர்மானித்தது. ஆனால், சென்னை அரசாங்கம் அதனைத் தடுத்து விட்டது. சென்னை மக்களின் பணத்தைக்கொண்டு சென்னைத் தொழிலாளர்க்கு உதவுவதை அரசாங்கம் எப்படித் தடுக்கலாம் என்ற இன உணர்வு எல்லார்க்கும் வந்தது. இந்நிலையில் காந்தியின் கார்ட்டூனும் தன் பங்கைச் செலுத்தத் தவறவில்லை.

கார்ட்டூனில் பெரம்பூர் தொழிலாளர் அமர்ந்திருக்கிறார். அவர்முன் உணவு பரிமாற இலை விரித்து வைக்கப்பட்டுள்ளது. கார்ப்பரேஷன் என்னும் அழகிய மங்கை தட்டில் சோற்றை ஏந்தியபடி இலையில் பரிமாறச் செல்கிறாள். அவள் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்துகிறாள் சர்க்கார் என்னும் மாமியார்க்காரி.

இது கார்ட்டூன் வழங்கும் காட்சி. இதற்குக் கீழ் ஆசிரியர் தந்துள்ள விளக்கம் இது:

"சென்னை சர்க்கார் மாமியார், பசியால் வாடுபவனுக்கு பரிமாறப் போகும் அன்னத்தைத் தடுப்பதைவிட மகாபாவம் வேறில்லை. பெரம்பூர் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர் பசியால் வாடுகிறார்கள். அவர்கள் பசியைத் தீர்க்க சென்னைக் கார்ப்பரேஷன் 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கத் தீர்மானித்தது. இதைக் கொடுக்கக் கூடாதென்று சென்னை சர்க்கார் தடுத்திருக்கிறது."[5]

1933ஆம் ஆண்டின் இதழொன்றில் வெளிவந்த கார்ட்டூன் ஒன்றின் தலைப்பு 'மாளவியாவின் சங்கீதம்' என்பது.

ஆலயப் பிரவேசம்பற்றி நாடெங்கும் கிளர்ச்சிகள் நடந்த காலம் அது. பழைமை விரும்பிகள் தங்கள் சமயநெறிகள் தீண்டப்படாதவரை ஆலயத்துள்விட்டால் அழிந்துபோகும் என்று ஆர்ப்பரித்தனர். அவர்களுக்குப் பின்பலமாகப் பதவியிலிருந்த சிலரும் மறைவாக ஊக்கம் அளித்தனர். இந்த ஒற்றுமையில்லாக் கோலத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் அமைதியைக் கடைப்பிடித்தது. தீண்டாமையைப் போக்க — ஆலயப் பிரவேசத்துக்கு வழிகாண தன் எழுத்துத் துறையையே ஒரியக்கமாகக் கொண்டது 'காந்தி'. அமைதியான வழிகளில் ஆலயப்பிரவேசம் கண்டுவிட முடியாது என்பதும், சட்டத்தில் உள்ள தடைகள் நீக்கப்பட்டாலொழிய பயன் விளையாது என்பதும் 'காந்தி' யின் கருத்தாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே கார்ட்டூன் அமைந்தது.

கார்ட்டூன் வழங்கும் காட்சி இது:

அழகான மண்டபம், அதன் நடுவாக மூடப்பட்ட அறையின் கதவு. அக் கதவில் 'ஆலயப் பிரவேச அனுமதி மறுப்பு' என்று எழுதப்பட்டுள்ளது. அந்த அறையின் படிகளுக்குச் சற்றுத் தொலைவில் பண்டித மதன்மோகன் மாளவியா தாளமிட்டுப் பாடியவாறு பணிந்து நிற்கின்றார். இந்தக் காட்சியினை மண்டபத்தின் மேற்பகுதியிலிருந்து சமயவாதிகள் தத்தம் சமயச் சின்னங்களை அணிந்து சாய்வுச் சுவரில் சாய்ந்தபடி மாளவியாவின் நிலையைக் கண்டு பெருஞ்சிரிப்புச் சிரிக்கின்றார்கள். அவர்களிடையே அரசாங்க அதிகாரி ஒருவரும் நின்றபடி புன்னகைக்கின்றார்.

கார்ட்டூனின் கீழே உள்ள ஆசிரியர் குறிப்பு இது:

"தாளிடப்பட்ட கதவு தாளம் போடுவதால் திறந்துவிடாது. சமரசப் பாட்டுகளால் வெற்றியடைந்துவிடலாமென்று பண்டித மாளவியா மனோராஜ்யம் செய்கிறார். சட்டத்திலுள்ள தீமைகளைச் சட்டபூர்வமாய் நீக்காவிட்டால் அவை எப்படி நீங்கும்?"[6]

இதுகாறும் கண்டவற்றால்,

1. பாரதியாரின் 'இந்தியா', சர்மா சகோதரர்களின் 'விநோதினி', வ. வெ. சு. அய்யரின் 'தேசபக்தன்' இதழ்களின்வழி தமிழ் இதழுலகில் கார்ட்டூன் கலை அறிமுகமாகியது.


2. 1920ஆம் ஆண்டு வெளி வந்த 'தமிழ்நாடு' வார இதழ், கார்ட்டூன், இதழின் இன்றியமையாத உறுப்பாகக் கருதுமாறு செய்தது.

3. 1930ஆம் ஆண்டில் வெளிவந்த டி. எஸ். சொக்கலிங்கத்தின் 'காந்தி' (வார இதழ், மாத இதழ்), கணேசன், சுப்பிரமணியன் ஆகியோரின் 'சுதந்திரச் சங்கு' (வார இதழ்) ஆகியவை தொடர்ந்து கார்ட்டூன்களை வெளியிட்டன. விநோத, விகட இதழ்களும் கார்ட்டூன்களை வெளியிட இவை வழிகாட்டியாய் அமைந்தன என்னும் செய்திகளை அறிய முடிகிறது.

நாட்டு விடுதலைப் போராட்ட வரலாற்றையும், தேசிய உணர்வுடைய இயக்கங்களின் தொண்டுகளையும் எழுத அக்கால இதழ்களில் வெளிவந்த கார்ட்டூன்கள் பெருந்துணை செய்யும் என்பது உறுதி.

---

[5] காந்தி வார இதழ், மலர் 4, இதழ் 31.
[6] காந்தி வார இதழ், மலர் 5, இதழ் 10.



சிறுவை நச்சினார்க்கினியன்

"செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்"

என்பது திருவள்ளுவர் கூறிய பொய்யாமொழி. 'பருவத்தே பயிர் செய்' என்பது தமிழகப் பழமொழிகளுள் ஒன்று. தமிழகம் 'திருவள்ளுவர் அஞ்சல் தலை' வெளியிட்டதன்மூலமும், சட்ட மன்றப் பேரவையில், 'திருவள்ளுவர் திருவுருவம்' அமைத்ததன்மூலமும், சென்னை மாநகராட்சியும் தமிழக அரசும், 'திருவள்ளுவர் சிலை' அமைத்ததன்மூலமும், தமிழக அரசு 'திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை' அளித்ததன் மூலமும், 'திருக்குறள் ஆராய்ச்சிக்கெனத் தமிழகத்தின் மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் 'வைப்பு நிதி' அளித்துப் பெருமை கொண்டதன்மூலமும், தமிழ்நாடு தனது பழம்பெருமையை உலகம் உவப்பச் சிறக்கச் செய்து வருவது கண்டு தமிழ் உள்ளங்கள் யாவும் ஒரு புதிய மன நெகிழ்ச்சி உடல் சிலிர்ப்பு, உள்ளப்பூரிப்பு ஆகிய உணர்வுகள் பெற்று, இன்ப நிலையால் உவகையில் திளைத்து நிற்கின்றது.

இந்நிலையில் நாம் மறந்திருக்கும் ஒரு செய்தியை நாமே நம் நினைவிற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டுள்ளோம். அதுதான் நமக்கென்று அமைய வேண்டிய தொடராண்டு. தமிழ் இனத்திற்கு நீண்டதோர் வரலாறு உண்டு. உலக மொழிகளில் காணக் கிடைக்காத ஒப்பற்ற இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் தமிழில் இருக்கின்றன. தமிழ் மொழி அமைப்பு இன்ன காலத்தில் உண்டானது என்று சொல்ல முடியாத ஒரு வரலாற்று முற்காலச் சிறப்புடையது என்பது மொழி வல்லுநர்கள் கண்ட முடிவு. இத்தகைய சிறப்புகள் இருந்தும் தமிழ் இனத்துக்கு என்று இருந்த தமிழ் ஆண்டுக் கணக்கு எங்ஙனமோ மறக்கப்பெற்று, நடைமுறையில் இல்லாது போயிற்று. இதற்குப் பற்பல உண்மையான வரலாற்றுக் காரணங்கள் உண்டு. அவை இங்கு விரித்துக் கூறின் பெருகும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழகத்தின் நெடு நாளைய பழமொழி. சூரியன் சுற்றும் நிலையின் கணக்கினைக் கொண்டு, அந்நாளில் தை முதல் ஆனி ஈறாக ஒரு பகுதியும், ஆடி முதல் மார்கழி ஈறாக மற்றொரு பகுதியும் விளங்கின. ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள காலம் இருள் நிலை கொண்டது. தை முதல் ஆனி ஈறாகக் கொண்ட காலம் பகல்நிலை கொண்டது. ஆண்டின் இரவுக் காலமாகிய ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள காலத்தில்—அதாவது ஆடிக் காற்றிலும், அடுத்துள்ள ஐப்பசி மழையிலும், மார்கழிப் பனியிலும் குளிரிலும் இடர்ப்படும்பொழுது மக்கள் உள்ளத்தில் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கை ஒலி பேரொலியாய்க் கேட்கிறது.

இந்த இரவுநிலை மாறிப் பகல்நிலை பெற்றுப் பயன்தரும் தைப் பிறப்பு நாளைப் புத்தாண்டின் புனித நாளாய், பிறப்பு நாளாய்ப் பழந்தமிழர் கொண்டாடி வந்தனர். இன்றுங்கூட, தைப் பிறப்பைத் தனிப் பெருஞ் சிறப்பாகத் தமிழர்கள் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே, நாம் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாய்க் கணக்கெடுத்துச் செயற்படுத்துவோம்.

'தமிழ்நாடு குறிப்பிட்ட ஓர் ஆண்டிற்கு முன்னே இப்படி இருந்தது. பின்னர் இப்படி ஆயது' என்று சொல்வதற்கு ஓர் ஆண்டுக் கணக்கு இல்லை. மேலை நாட்டினர் கிறித்துவுக்கு முன் இப்படி இருந்தோம் கிறித்துவுக்குப் பின் இப்படி இருக்கிறோம் என்று ஒரு கால அளவை வைத்துக்கொண்டிருக்கின்றனர். நம்மிடமிருந்து நேற்றுப் பிரிந்து சென்று இன்று மலையாளம் என்ற பெயர் தாங்கியுள்ள சேர நாட்டுத் தமிழர்களும் தமக்கென்று 'கொல்லம் ஆண்டு' என்ற கணக்கை வகுத்துக்கொண்டனர். ஆனால் தமிழர்களாய நாமோ அறுபது ஆண்டு வட்டத்திலேயே சுற்றிச்சுற்றி சுழன்று வருகிறோம். இந்த அறுபது ஆண்டு வட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பிறப்பு அல்லது இழப்பு நிகழ்ச்சி, ஒரு நள ஆண்டில் ஏற்பட்டு, இரண்டு மூன்று நள ஆண்டுகள் சுற்றிக் கழிந்துவிட்டால் எந்த நள ஆண்டில் அந்தப் பிறப்போ இழப்போ ஏற்பட்டது? என்ற மருட்சி ஏற்படவே செய்கிறது. ஆகவே 60 ஆண்டு வட்டத்தில் சுழலாது நமக்கென ஒரு வரலாற்றுக் காலத்தை நாம் வகுத்துக் கொள்ளவேணடும். பாரதி கூறியது போல் பெயரளவில் தமிழரெனக்கொண்டு வாழ்ந்திருத்தல் நலம் அன்று.

அங்ஙனம் நாம் அமைத்துக்கொள்ளும் தொடர் ஆண்டு நம்மிடை வாழ்ந்த, நமக்கு என்றும் மங்காத புகழினைத் தேடித் தந்த—நாமும் அவரை உலகினுக்கே அளித்து வான்புகழ் கொண்ட—ஒரு தலைமை சான்ற புலவன் பெயரால், மனித குலத்திற்கு வாழ்க்கை அமைப்பு முறை சட்டத்தையே உருவாக்கி அளித்த உலகக் கவிஞன் திருவள்ளுவர் பெயரால் தொடர் ஆண்டு அமைதல் வேண்டும். அவ்வாறு தொடராண்டு அமைத்து நடைமுறைக்குக் கொண்டு வந்த பின், இனித் தமிழர்களுக்கு ஒரு தொடராண்டில்லை என்ற பேச்சும் இல்லை, குறையும் இல்லை.

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பே இக் குறையினை உணர்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் 1935-ல் சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் பேராசிரியர் கா. நமச்சிவாயர் அமைப்பாளராய் இருந்து கொண்டாடிய திருவள்ளுவர் திருநாளில், தலைமை வகித்துப் பேசிய ஆசிரியர் மறைமலையடிகளார் பல ஆய்வுரைகளைக் கூறி, முடிவாக, ''எனவே, திருவள்ளுவனார் காலம் 2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறித்துப் பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிபாகும்'' எனக் கூறினார்கள்.

எனவே, இன்று திருவள்ளுவர் தொடர் ஆண்டு 2011 நடைபெற்று வருகிறது. இன்றைய முறைப்படி இதுவரை பல நாள், கிழமை, திங்கள் இதழ்களில், ஆண்டு மலர்களில், அழைப்பு இதழ்களில் எல்லாம் மிக வேகமாகத் திருவள்ளுவர் தொடர் ஆண்டு பரவிவிட்டது. இன்றும் சில இதழ்கள் 'ஶ்ரீ' என்ற சொல்லை விடாது தொடர்ந்து பிடித்திருப்பது போல, 60 ஆண்டுகள் வட்டத்திலேயே சுற்றி வருகின்றன. இனி, அவ்விதழ்களும் உலகத்தோடு ஒட்ட ஒழுகி மாறிவிடும் என்பதில் ஐயம் இல்லை. திரு. ஆ. 2031-குள் (கி.பி. 2000-க்குள்) தமிழகத்தில் உள்ள எல்லா எழுத்தாளர்களும் அறிஞர் பெருமக்களும் இதனையே கடமையாகக் கொண்டு அவரவர்கள் தொடர்பு கொண்டுள்ள ஆட்சிக்கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள், இலக்கிய நிறுவனங்கள் அனைத்திலும்—தங்களது தலைப்புத்தாள்களில்—தங்கள் கடிதப் போக்குவரத்துகளிலும் திருவள்ளுவர் ஆண்டினையே இட்டு வழக்கப்படுத்த வேண்டியது அவரவர் கடமையாகும்.

ஒரு சிலருக்கு இத் தொடர் ஆண்டில் ஐயம் இருக்குமாயின் பின்னர் தக்க ஆய்வு தலைப்படுங்கால் நாம் மாற்றிக்கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை. இதுபோழ்து இருப்பதைக் கொண்டு, தக்கார் எடுத்த ஆய்வினை ஒட்டி உலகத்தோடு பீடு நடைபோட்டு முன்னே செல்வோம். தமிழ் இனம், தமிழ்மொழியின் வளம் திருவள்ளுவருக்கு முன்பு இப்படி இருந்தது; திருவள்ளுவருக்குப் பின்பு இப்படி ஆயிற்று என்ற முடிபுகளை உலகத்திற்கு எடுத்துச் சொல்வோம்.

''இனி ஒரு விதி செய்வோம் அதை எந்தநாளும் காப்போம்'' என்ற பாரதியாரின் தூய மொழிப்படி, இனியாவது அறிஞர்கள் அனைவரும் தங்களது வேற்றுமைகளை மறந்து, தமிழின் பெயரால் ஒன்று கூடி, திருவள்ளுவர் ஆண்டினைப் பரப்புவோம். அதன் மூலம் தமிழ் இனத்திற்கு ஒரு தொடராண்டில்லை என்ற அவச் சொல்லை அழித்தவர்களாவோம். தமிழன் தலை நிமிர்ந்து வரலாற்றுச் சுவடியில் நேரே செல்ல வழி வகுத்தவர்களாவோம். நம்மை நாம் உணர்ந்தவர்ளாகவும் ஆவோம். ஒற்றுமைக்கு வழி வகுத்தவர்களாவோம்.

திருக்குறள் பணி சிறந்தோங்க, தமிழர் அனைவரும் தங்கள் தங்கள் வருவாயில் ஒரு சிறு பகுதியை அரசுக்குப் பகிர்ந்தளித்து ஊக்குவிக்கலாம். திரு. ஆ. 2030-க்குள் குறள் நூல் இல்லாத குடும்பமே தமிழகத்தில் இல்லை என்ற பெருமையைத் தேடிக் கொள்ள வேணடும். மக்கள்தொகை கணிப்பிலும் (பிறப்பு, இழப்பு) திருவள்ளுவர் ஆண்டினையே கைக்கொள்ளலாம். அத் தகு பெருமையால் குறள் வழி அரசும், அரசுவழி குறள் நெறியும் சிறப்பெய்தும். அந்நாளே, ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே ஈந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்ற பாரதியாரின் பொன்மொழியை உணர்ந்து மகிழும் நன்னாளாகும்.



தமிழில் யாழ்க் கருவிகள்

'கலைமாமணி' ப. தாமோதரன்

பண்டைத் தமிழர் இசையை மிக விழுமிய கலையாகக் கருதி அதை ஆழ்ந்து பயின்றனர். தமிழ்மொழியை இயல், இசை, கூத்து என முக்கூறு படுத்தியதிலிருந்தே அவர்கள் இசையின் பெருமையை உணர்ந்திருந்தனர் என்பது புலனாகும். உலகிலேயே இசை நூல்களைச் சுவடி வடிவில் முதன் முதலாக வெளியிட்டவர்கள் தமிழர்களேயாவர். கடைச் சங்க காலத்தில் அதாவது, சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே அத்தகைய நூல்கள் பல இருந்தன என்பது சிலப்பதிகார உரைகளின் வாயிலாக நமக்குத் தெரியவருகின்றது. சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சூளாமணி, கல்லாடம் முதலிய பழந்தமிழ் நூல்களிலும் இசையின் இலக்கணங்களும் இசைபற்றிய பல குறிப்புகளும் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம், பரிபாடல் முதலியன இசைத்தமிழ் விரவிய இலக்கிய நூல்களே. தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளும், திவ்விய பிரபந்தமும், திருப்புகழ் முதலியனவும் இசைப் பாட்டுகளாலாகிய நூல்களே. பண்டைத் தமிழ் வேந்தர் மூவரும் தமிழிசையைப் பெரிதும் ஆதரித்துப் போற்றி வந்தனர். அவர்கள் மண்டபங்களில் இசையொலி எப்பொழுதும் கேட்ட வண்ணமாக இருக்கும். அவர்கள் இசைப் பாணர்களுக்கும் விறலியர்களுக்கும் பெருங் கொடைகள் வழங்கினர். இவ்விதமாக வளர்க்கப்பட்ட இசையானது இசை வல்லுனரிடத்தும் உயர்ந்தோரிடத்தும் மட்டுமே நின்றுவிடவில்லை. பாமர மக்களும் இசைக்கலையை ஆர்வத்தோடு உணர்ச்சியோடும் பாராட்டினர். ஐந்திணை மக்களிடத்தும் தனித் தனி பெயர் கொண்ட இசைக் கருவிகளாய யாழும், பண்ணும், பறையும் வழக்கத்திலிருந்தன.

இசை தோன்றியபொழுதே இசைக் கருவியும் தோன்றின. இசைக்கருவிகளில் மிகப் பழைய காலத்திலிருந்து வருவன தோற் கருவிகளேயாகும். மானிட வரலாற்றின் பிற்காலங்களில்தான் துளைக் கருவிகளும் நரம்புக் கருவிகளும் ஏற்படலாயின. பண்டைத் தமிழர்களிடையே தோலால் செய்யப்பட்ட முப்பத்தொரு முழவுகள் வழங்கின என்று சிலப்பதிகாரம் (3: 27) அடியார்க்குநல்லார் உரையிலிருந்து தெரிய வருகிறது. புறநானூறு, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, பெருங்கதை, இறையனார் அகப் பொருள் ஆகிய பழைய நூல்கள் வேறு சில முழவுகளின் பெயரையும் நமக்கு அறிவிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான ஒலியோடு கூடியிருந்தன எனவும் தெரிகிறது. தமிழகத்தில் யாழ், குழல், முரசு போன்ற இசைக்கருவிகள் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டன என்பர் தமிழறிஞர்கள்.

இயற்கையோடு ஒத்து வாழ்ந்த பழந்தமிழர்கள் இயற்கையில் காணும் பொருள்களின் அசைவினாலும், அவை ஒன்றோடொன்று மோதிக்கொள்வதனால் உண்டாகும் அதிர்ச்சியினாலும் ஏற்படும் பலவித ஒலிகளைத் தங்களது நுண்ணிய செவியால் உணர்ந்து அனுபவித்தனர். வேட்டுவர் தங்கள் தொழிலைச் செய்யுங்கால் இறுகக் கட்டிய வில் நாணினின்று எழும் இன்னொலிகளைக் கேட்டு இன்புற்று, அவ் வில்லும் ஓர் இசைக் கருவியாகப் பயன்

படக்கூடுமென்பதை நாளடைவில் உணரலாயினர். அங்ஙனமிருக்க, பசுத்திரளைக் கானகத்தில் மேய்க்கச் சென்ற இடையன் தானே செய்துகொண்ட குழலில் பாலைப்பண் வாசித்து அனுத்திருக்கையில், வேடன் வில்லின்மீது கவனஞ் செலுத்தலானான். அவன் உடனே குமிழ மரத்தின் உள் துளையுடைய கொம்பு ஒன்றை வெட்டி வளைத்து, அதன் இரு நுனியிலும் துளையிட்டு, அத்துளையின் வழியாக மரல் என்னும் மரத்தின் நாரை உரித்துத் திரித்த கயிற்றை நாணாகக் கட்டினான். நாண்கள் சிறிதும் பெரிதுமாய் உயர்த்தியும் தாழ்த்தியும் கட்டப் பெற்றன. ஆயன், நரம்புகளைத் தொட்டு யாழை மீட்டி இசை யொப்புமை செய்கின்றான். சோலையெல்லாம் இன்னொலி பரவி அங்கிருந்த அனைத்து உயிர்களும் அந்த இன்னொலியைக் கேட்டு இன்புற்று மெய்மறந்து நின்றன.

இந்த வில் யாழ்தான் தமிழன்—ஏன் முல்லை நில ஆயன் முதன்முதலாகக் கண்ட இசைக்கருவி. இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் முதலாவதாக ஒரு நரம்புடைய வில் யாழ் எழுந்தது. இது சங்க காலத்திற்கு முற்பட்டது. இது பழங்கற் காலம். இரும்பாணியோ, செம்பாணியோ, உளியோ, சுத்தியோ இல்லாத காலம். எனவே, கையால் கம்புகளை வளைத்து மர நார்களால் வில்லைக் கட்டி மரல் நாரினைத் திரித்து நரம்பாகக் கட்டி யாழை உருவாக்கினர். அப்பால் நாளடைவில் அது வளர்ச்சி அடைந்து மூன்று நரம்புகளும், ஐந்து நரம்புகளும், பின் ஏழு நரம்புகளுமாக எழுந்தன. இதற்கு இலக்கணமும் வகுத்தனர். யாழுக்கு எத்தனை வில்கள்? எத்தனை நரம்புகள்? என்ன கொம்பால் யாழ் செய்யப்பட வேண்டும்? யாழின் நீளம் அகலம் ஆகிய அளவுகள், முறுக்காணிகளின் எண்ணிக்கை, ஒற்றுறுப்புகள் அமைக்கும் முறை இவைகளுக்கெல்லாம் இலக்கணம் வகுத்தனர். அவை மிகவும் விரிவுடையன. வில் யாழைப் பற்றிய செய்தி பெரும்பாணாற்றுப்படை 175-184 அடிகளில் காணப்படுகின்றது. தமிழகத்தில் மிகப் பழைய காலத்தில் தோன்றிய இவ் வில் யாழே வளர்ச்சியுற்று, பல்வேறு அனுபவங்களுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் பின்னர் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் நுண்ணிய உறுப்புகள் அமைந்த பலவித யாழ்களாக உருப்பெறலாயிற்று எனத் திண்ணமாக கூறலாம். பண்டைத் தமிழர்கள் உபயோகித்து வந்த இக் கருவிகளைப்பற்றிய செய்திகள் யாவும் பழந்தமிழ் நூல்களிலிருந்து நமக்குக் கிடைத்துள்ளன. சங்க காலத் தமிழ் மக்கள் பேரியாழ், செங்கோட்டுயாழ், சகோடயாழ், மகரயாழ் என்னும் நால்வகை யாழ்களை உபயோகித்தனர். மகரயாழ் மகரமீனின் உருவமுடையதாகலின் அப்பெயர் கொண்டது என்பது பொருநராற்றுப்படை (4-18), சிறுபாணாற்றுப்படை (221-229), பெரும்பாணாற்றுப்படை (10-16) முதலிய பாட்டுகளிலிருந்து தெரிகிறது.

தமிழ் மக்களின் பண்டைச் சிறப்பாக இருந்த இந்த யாழ்கள் அதிக வேலைப்பாடமைந்தனவென்றும், பாணர்கள் விலையுயர்ந்த இரத்தினங்களை இக் கருவிகளில் பதித்து இருந்தனர் என்றும், அவர்கள் இவற்றைப் பட்டுத் துணியால் போர்த்திப் பெட்டிக்குள் வைத்திருந்தனரென்றும் பத்துப்பாட்டிலிருந்து தெரியவருகின்றது. இவை மைதீட்டிய கண்களையுடைய மணப்பெண்போல அழகு வாய்த்திருந்தன வென்றும், இவற்றின் கோடுகளில் மலர் மாலைகள் கட்டப்பட்டிருந்தன வென்றும், இவை சித்திரம் எழுதிய அழகிய உறையினுள் வைக்கப் பட்டிருந்தன வென்றும் சிலப்பதிகாரம் கானல்வரிப் பாடல் கூறுகின்றது. சிந்து வெளியில் சிறப்பாக, ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் அகழ்ந்து ஆய்ந்து கண்ட அரிய தெய்வத் திரு உருவங்கள், குழல் உருவங்கள், யாழ் உருவங்கள், பல்வேறு விதமான பறை உருவங்கள், வெண்கலத்தாலான நாட்டிய நங்கையின் படிமங்கள், சுண்ணாம்பிலான அழகிய சிவன் உருவங்கள், கொற்றவை உருவங்கள், இன்னோரன்ன பலவும் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவை. இவற்றிலிருந்து 5000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் முன்னோர்கள்—சிந்துவெளியில் வாழ்ந்து வந்த பண்டைய திராவிட மக்கள்—இசை பயின்றிருந்ததோடு இணையற்ற தெய்வீக இசைக் கருவிகளாகிய யாழும் குழலும் இசைத்துவந்தார்கள் என்பதை அங்குள்ள முத்திரைகள் மெய்ப்பிப்பதாக இருக்கின்றன. திரு. ஸ்டூவர்டு பிக்காட் என்ற அறிஞர், "சிந்துவெளிச் சீரிய மக்கள் கண்ட ஏழிசை எழுப்பும் இனிய இசைக் கருவியை உறுதிப் படுத்தியிருப்பது அவர்களது நனிசிறந்த நாகரிகத்தையும் நுண்ணிய இசையறிவையும் உணரப் போதிய சான்றாகும்" என்று அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இதுபோன்ற எடுத்துக்காட்டுகள் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பாபிலோனியப் பண்பாடுகளில் பெரிதும் காண்கின்றோம். ஒருசில இசைக் கருவிகள் பாபிலோனிய நாட்டின் அகழ்வாராய்ச்சியில் கண்டு ஆராயப்பெற்றுள்ளன. ஆராய்ச்சியாளர் திரு. K. N. தீக்சித் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

> "Some of the pictographs appear to be representations of a crude stringed instruments a proto type of the modern Veena - While a pair of castnuts like the modern karatala have also been found."[1]

மங்காப் புகழ் வாய்ந்த வங்கப் பேரறிஞரும் சிந்துவெளி நாகரிகத்தை ஆரம்பகாலத்திலேயே அகழ்ந்து கண்ட பேரறிஞருமான ஆர். டி. பானர்ஜி அவர்கள், "சிந்துச் சமவெளியில் இருந்த

[1] Pre-Historic Civilization of the Indus Vally,' (Madras) 1939, p. 29.

முந்தைய நாகரிகம் திராவிட நாகரிகம் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை'' என்று உறுதி கூறி யுள்ளார்.[2]

சிந்துவெளி நாகரிகத்தை அகழ்ந்து கண்ட சர் ஜான், மார்சல் என்பவரோடு சேர்ந்து அகழ்ந்து ஆராய்ந்தவர். மார்சலுக்குப் பிறகு அங்கு நீண்ட காலம் அகழ்ந்து பல நூற்கள் எழுதியவர். சிந்துவெளிப் பண்பாடு உலகில் உச்ச கட்டத்தை அடைந்த உயரிய பழம்பெரும் பண்பாடு. அங்கு அகழ்ந்து கண்ட முத்திரைகளில் பொறிக்கப்பட்ட யாழ் உருவங்கள்—சுமேரிய நாட்டில் மன்னர்களின் கல்லறைகளில் கண்டெடுக்கப்பெற்ற யாழ்கள்-தமிழ் நாட்டில் கண்ட யாழ்களோடு ஒப்புமை உடையன. (Father Hearas Lecturer, 1937—'Madras Mail'—21-10-1937.) சுமேரியர்கள் யாழ்ப் பண் என்று பகர்ந்தனர். அப் பதம் தமிழர் கண்ட தனித் தமிழ்ச் சொல்லான பண், பண்ணியம், பாண், பாணி என்ற வார்த்தைகளோடு மிக நெருங்கிய தொடர் புடையதாக மிளிர்கிறது. இக்காலத் தமிழர்கள் பண் என்பதை இசை என்றும் இராகம் என்றும் கூறுவர். சிலப்பதிகார உரையுள், ''பண்ணென்பது நரப்படைவால் நிறந் தோன்றப் பண்ணப்படா நின்ற பண்ணும் பண்ணியற்றிறமும் திறத்திறமும் என்றவாறு'' (சிலப். அரங்கேற். வரி 46 உரை)

என்றும்,

''பண் பண்ணியம் திறம் திறத்திறம்
என்னு மிவை
சம்பூரணம், சாடவம், ஔடவம்,
சதுர்த்தம் எனும்
வடமொழிப் பெயரானும் வழங்கும்''

(சிலப். புறஞ்சேரி, வரி 106 உரை) என்றும் கூறப் படுவது ஆராயத்தக்கது.

டாக்டர் எண்டிறிசியார்க் பிர்மர், பழைய பாபிலோனிய இசையைப் பற்றி ஆய்ந்து சுமேரியர் களிலிருந்து அசீரியர்கள் காலம் வரை மக்களின் சமுதாய வாழ்வில் இசை ஒரு சிறப்பான இடம் பெற்றிருந்தது என்று கூறியுள்ளார்.

டாக்டர் பால்மர் என்ற அறிஞர், இசை நிபுணர் களின் இதயத்தை ஈர்க்கும் மெசபடோமிய இசைக் கருவிகள், நரம்புக் கருவிகளின் உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவை என்று போற்றுகிறார். அவை அனைத்தும் அழகிய அமுதூறும் யாழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று அறிஞர்களால் கருதப்படுகின்றன.

1926ஆம் ஆண்டில் சால்டியா (கல்தேய) நாட்டின் தலைநகரான 'ஊர்' என்னும் இடத்தில் அரச குடும்பத்தார்களின் கல்லறைகளை அகழ்ந்து ஆய்ந்த அறிஞர் சி. எல். உல்லி என்பவர் பல அரிய பொருள்களைக் கண்டெடுத்துள்ளார். அவற்றில் இங்குக் குறிப்பிடத்தக்கது கலைநயம் வாய்ந்ததும் கவர்ச்சி மிக்கதும் காளை தலை யுள்ளதுமான யாழ் உருவமேயாகும். இந்த யாழில் முன் பக்கம் உள்ள எருதுத்தலை பத்தரை மாற்றுப் பசும் பொன்னால் ஆனது. யாழின் ஏனைய உறுப்புகள் எல்லாம் சிவப்பு, நீல வண்ணந் தீட்டப்பெற்று எழில் பெற்றிலங்குகின்றன. இந்தப் பழம்பெரும் யாழ் கிறிஸ்துவ ஊழிக்கு 2600 ஆண்டுகளுக்கு முன்னர் – அதாவது இன் றைக்கு 4600 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது பேரரசி சுபாத்தின் அழகிய யாழாக மதிக்கப் படுகிறது. அவளைப் புதைத்த கல்லறையில் அவளுக்குப் பிரியமான ஆடைகள், அணிகலன்கள், பண்ட பாத்திரங்கள், இசைக் கருவிகள் எல்லாம் வைத்து மூடப்பட்டிருக்கின்றன. இந்த சுபாத் அரசியின் யாழ் செங்குத்தாகச் சிறிய ஒலிப் பலகை கள் இலங்க நன்மரத்தினால் செய்யப்பட்டுள்ளது. இதில் ஏழு நரம்புகள் கட்டப்பட்டுள்ளன. இந்த யாழ் தமிழக யாழினின்று சில வேறுபாடுகள் உள்ள தாய்க் காணப்பட்டாலும் தமிழக யாழ் இனத்தைச் சேர்ந்தது என்று திட்டவட்டமாகக் கூற முடியும். 1947ஆம் ஆண்டில் அறிஞர் திருமிகு. விபுலாநந்த அடிகள் தமது யாழ் நூலில் இந்த யாழைப்பற்றி ஆய்ந்து இதன் புனையா உருவத்தையும் தீட்டிக் காட்டியுள்ளார்.

மேனாட்டுப் பேராசிரியர் பானும் என்பவர் எகிப்தியச் சுவர் ஓவியங்களில் வில்யாழ், கிறிஸ்துவ ஊழி எழுவதற்கு 3000 ஆண்டு முதல் 4000 ஆண்டு வரையுள்ள கால எல்லையை உடையது என்று கூறியுள்ளார். தமிழகத்தில் கிடைக்கும் சான்றுகள்மூலம் யாழ் என்னும் தொன்மையான இசைக் கருவியே எகிப்தியச் சுவர் ஓவியங்களில் ஒளிர்கின்றது என்பதை நாம் நன்கு மெய்ப்பிக்க முடியும். மேலும் ஆசிரியர் பானும் அரிஸ்டாட் டிலும் குறிப்பிடும் கி.மு. 4ஆம் நூற்றாண்டிலுள்ள சுருதி வாத்திய இசையைச் சேர்ந்த இசைக் கருவி களும் அடியிலிருந்து நுனிவரை நாண்கள் கட்டப் பட்டதாக இருந்தன என்று தெரிகிறது. இத்தகைய முறை தமிழக இசைக் கருவிகளான பண்டைக் கால வில் வடிவமான இசைக் கருவியினின்று பிற் காலத்தில் தோன்றியது என்று எண்ணப்படுகிறது. மேலும், எகிப்தியர்கள், பண்டு என்ற நாட்டினின்று வந்து எகிப்தில் குடியேறியவர்கள் என்று தங்களைக் கூறிவருகிறார்கள். பண்டு நாடு என்பது பாண்டிய நாடு என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.[3]

[2] Dravidian Civilization — R. D. Banarji (Article) — Modern Review, Sep. 1927.

[3] This part of India could have been no other than the Malabar coast people by the pandus, which was probably called the land of the pandias after wards corrupted in Egypt in to the land of part. It would be interesting to note here that among the eariler students of the the subject of the origin of the Egyption Heeran was prominent in pointing out on alleged analogy between the form of the skull of the Egyption and that of Indian races he belived in the Indian Origin of the Egyptions—Rigvedic India by Abinas Chandra Das, p. 34.

இதன்மூலம் எகிப்தியர்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள தொடர்பு நன்கு தெரிகிறது. இதனால் தமிழகத்தினின்று வில்யாழ் எகிப்திற்குப் போயிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. எகிப்தியரும் பழந்தமிழரைப் போலவே, தாரம் முதலாக நரம்புகளைப் பிறப்பித்தார்களென அறிகின்றோம். எகிப்து நாட்டிலே இறந்த மன்னர்களுடைய உடலினைப் பாதுகாத்து வைத்திருக்கும் ஈமக் கோபுரங்களிலே வரையப்பட்ட யாழ் வடிவங்களைக் கண்ட மேனாட்டறிஞர்கள் அவற்றின் உருவச் சாயல்களை வெளியிட்டிருக்கின்றனர். எகிப்திய மொழியிலே யாழ் 'நங்கா' எனப்பட்டதென்பர். இன்றைக்கு மூவாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த எகிப்திய யாழ்கள் சிலவற்றை பிரித்தானிய காட்சிச் சாலையிலே (British Muscum) நாம் இன்றுங் காணலாம். அனைத்துலகக் கலைமேதை உயர்திரு ஆநந்த குமாரசுவாமி அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் பழமையான யாழ் என்னும் இசைக் கருவியை அமராவதியில் உள்ள சிற்பத்தில் கண்டு களித்து, பண்டைக்காலத் தமிழர்கள் கண்ட இச் சீரிய இசைக்கருவி தமிழ் நாட்டிலே வழங்கி வந்தது என்பதையும் உலகில் உள்ள இசை நிபுணர்களுக்கு எடுத்துக் காட்டினார். யாழின் சிற்ப வடிவில் அதன் உருவினைத் தமிழகத்தில் திருமெய்யம் (திருமயம்), திருஎருக்கத்தம்புலியூர், தாராசுரம் முதலிய இடங்களில் உள்ள கோயில்களில் இன்றும் காண முடிகிறது. திருஎருக்கத்தம்புலியூர்க் கோயிலில் உள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணர் சிலையில் ஒரு யாழை அவர் தாங்கி நிற்பதைக் காண முடிகிறது.

இஃதன்றி ஆந்திராவில் உள்ள அமராவதியில் உள்ள கோலி என்னும் இடத்தில் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுந்த சிற்ப வடிவங்களில் அழகிய யாழையும் காண முடிகிறது. அவை இன்றும் இலண்டன் தொல்பொருள் காட்சிசாலையில் உள்ளன. அவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் தீட்டப்பெற்றுள்ளன என்று தெரிகிறது. இவற்றில் சில யாழ் உருவங்கள் காணப்படுகின்றன. இவை திராவிடச் சிற்பக் கருவூலமாக அறிஞர்களால் போற்றப்படுகின்றன. இவற்றில் யாழ் வாசிக்கும் அணங்குகளுடைய அழகிய சிற்பங்கள் பல உள. இவற்றை அனைத்துலகக் கலை அறிஞர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் கண்டு ஆய்ந்தார். சிலப்பதிகாரக் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தமிழ்நாட்டிலே பழமையான யாழ்கள் வழங்கி வந்துள்ளன. பழமையான இசை மரபு நிலவி வந்தது. அதை மெய்ப்பிப்பதுபோல் அமராவதி—கோலி சிற்பம் காணப்படுகின்றது என்று முதன் முதலாக உலகிற்கு எடுத்துக்காட்டினார், அறிஞர் ஆநந்தகுமாரசுவாமி.[4]

கும்பகோணத்திற்கு அண்மையில் உள்ள தாராசுரம் என்னும் கோயிலிலும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் உருவச் சிற்பத்தில் யாழ் உருவம் காணப்படுகிறது.

தமிழ் நாட்டிற்கும் யவனபுரம் எனப்படும் கிரேக்க நாட்டிற்கும் பண்டைக்காலத்திலே நெருங்கிய தொடர்பிருந்தது. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாண்டியன் இலவந்திகைபள்ளித் துஞ்சிய நன்மாரனைப் பாடிய புறப்பாட்டினுள்ளே,

"..................யவன
நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினி தொழுகுமதி யோங்குவாள் மாற"

எனக் கூறியிருக்கிறார்.

சென்னைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுப் பேராசிரியர், திரு. வி. ஆர். இராமசந்திர தீட்சிதர் அவர்கள், ''தென்னாட்டிலிருந்து தமிழ் நாகரிகம் உரோமாபுரிக்கும் கிரேக்க நாட்டிற்கும் பரவியது. இன்னும் தக்காண பீடபூமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சி நில மக்கள், யவன தேசத்திற்குச் சென்று தங்கள் அரசை நிலைநிறுத்தித் தங்கள் பெயரையும் அந் நாட்டிற்குக் கொடுத்தார்கள். இதுவே கிரீட் (Crete) தேசம். இதன் நாகரிகத்திற்கும் தமிழ் நாகரிகத்திற்கும் ஒப்புமை மிகுதியுள்ளது'' என எழுதியிருக்கிறார்கள். 'வில்லவர்' என்னும் சேரர் குடிப்பெயரை 'Hunters' என மேனாட்டார் மொழிபெயர்க்க, அது திரும்பவும் தமிழுக்கு மொழி பெயர்க்கப்படும்போது 'வேட்டுவர்' என அமைவது இயல்பு. ஆதலினாலே, 'தக்காண பீடபூமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சி நில மக்கள்' என, தீட்சிதரவர்களுடைய உரையிலே குறிக்கப்பட்டோர், வில்லவராகிய சேரர் குலத்தவரே என்பது தெளிவாகின்றது.

சிலப்பதிகாரத்திலும் பதிற்றுப்பத்திலும் காணப்படும் சேரர் தீவு கிரீத் ஆகியிருக்கலாம். தமிழ் நாட்டு வேந்தர் யவனர்களைத் தமது கோட்டை வாயில்களிலே காவலர்களாக வைத்திருந்த செய்தியும், உரோமாபுரி வேந்தனாகிய அகஸ்டஸ் மன்னனுக்குப் பாண்டியன் தூதனுப்பிய செய்தியும் பிறவும் ஆதாரமாகக் கொண்டால், மத்தியதரைக்கடல் நாகரிகம் என்று இப்போது வழங்கப்படுவது தென்னிந்திய நாகரிகம் (அ) தமிழ் நாகரிகம் என்று துணிவாய்ச் சொல்லலாம்.

---

[4] The Old Indian Veena — Ananda Coomarswamy Article— Journal, Oriental SOCL (1931) No. 47 : 50.



இலக்கியத்தில் மகளிர் கூந்தல்

புலவர் தாமரைக்கண்ணன்

முன்னுரை

கூந்தல், மகளிரின் மங்கலப் பொருள்களான தாலி, வளையல், மஞ்சள், குங்குமம், பூ, சிலம்பு, மெட்டி முதலியவற்றைப் போன்று புனிதமானது. இம் மங்கலப் பொருள்கள், மகளிர் அணியும் புறப் பொருள்கள். கற்புடை மகளிர் அணிவதால் இவற்றுக்கும், இவற்றை அணிவதால் மகளிர்க்கும் சிறப்பு உண்டாகிறது.

ஆயினும்...

கூந்தலோ, அவள் பிறக்கும்போதே அவளுடன் சேர்ந்து பிறந்து... அவள் வளரும்போது தழைத்து நீண்டு அவளுடனேயே சேர்ந்து வளர்ந்து... அவள் மூப்பெய்தியகாலத்து தானும் முதிர்ந்து நரைத்து அவளோடேயே சேர்ந்து மறையும் தனிச் சிறப்பு உடையது.

குஞ்சியும் கூந்தலும்

பொதுவாக, இருபாலார்க்கும் உரிய தலைமயிருள், குதிரைவாற்சாமை போன்றும், கமுகோலை போன்றும், மயிற்றோகை போன்றும் அடர்ந்தும் தழைத்தும் நீண்டும் இருப்பதால் மகளிர் தலைமயிரை ஓதி, குழல், கூந்தல், கூழை என்று கூறினர். ஐம்பாற் கூந்தல் என்றும் அலங்கரித்தனர்.

மயிலின் உச்சி மயிர் போன்று சிறியதாகவும் சிறுமையானதாகவும் இருத்தலால், ஆண்களின் தலைமயிர் குடுமி என்றும் குஞ்சி என்றும்கூறப் பெற்றது.

கோவலன் தலைமயிரைக் 'குஞ்சி' என்றும், கண்ணகியின் தலைமயிரை 'வார்குழல்' என்றும் குறிப்பிடும் 'வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன் மேல் கொண்டா டழிஇ...' என வரும் இளங்கோ வடிகளின் பாடல் வரி இவ் வேறுபாட்டினை நன்கு உணர்த்தும்.[1]

'கதுப்பு' எனும் சொல்லால் ஆண் பெண் இருபாலாரின் தலைமுடியைக் குறித்தனர்.

பாவையும் பைங்கூந்தலும் ஒன்றே

கூந்தலையும் மகளிரையும் நம் முன்னோர் ஒன்றாகவே கருதினர். அதனால்தான், மகளிரைத் தழுவு தலைக் கூந்தல் கொள்ளுதல் என்றனர்.[2]

இவ்வாறு கூந்தலையும் தம்மையும் ஒன்றாக உயர்த்தி எண்ணியதாலேயே, பிற ஆடவர் கை, தம் கூந்தல்மீது படுவதைக்கூட கற்புள்ள மகளிர் ஒப்புவதில்லை.

பெண்ணை நுகர்வோர், கூந்தலையும் நுகர்தலால் கூந்தலின் மேன்மை புலனாகிறது.

இன்ப நுகர்ச்சிக்கோர் இன்துணை

தொடுதலால் மட்டும் அல்லாமல் இருபாலார்க்கும் பார்த்தபோதே, உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கும் மென்மையான வன்மையைப் பெற்றது,

---

[1] சிலப்பதிகாரம் — மதுரைக் காண்டம் — 19. ஊர்சூழ் வரி, 35 - 36.

[2] மதுரைத் தமிழகராதி — முதல் பாகம். பக். 709.

கூந்தல்! மாந்தர், கூந்தலைக் கோதி கிளர்ச்சி கொள்ளுதலைப் போலவே, புறா, கோழி போன்ற பறவையினங்களும் அலகால் துணைகளின் சிறகைக் கோதி உணர்வுகொள்கின்றன.

தலைவன் உடன் இருக்கும்போது மட்டும், கூந்தலில் நெய் தடவி, வகிர்ந்து வாரி மலர் சூடித் தங்களையும் கூந்தலையும் மகளிர் விதவிதமாக அழகுபடுத்திக்கொள்கின்றனர்.

தலைவன் பிரிவின்போதும் மறைந்த பின்னரும் இன்ப நுகர்ச்சிக்குரிய உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கும் கூந்தலில் நெய் தடவாமலும் மலர் சூடாமலும் விடுகின்றனர்.

காவியங்கள் கூறும் காரிருங் கூந்தல்

மகளிரை நிலைக்களனாகக் கொள்ளாத காவியம் ஏதும் இல்லை. காரணம், காவியங்களுக்கு அழகு சேர்ப்பவர், மகளிர்! மகளிர்க்கு அழகு தருவதோ, அவர்தம் கூந்தல்!

எனவே...

மொழி வேறுபாடு இன்றி, எல்லாக் காவியங்களிலும், காரிகையரும் காரிருங் கூந்தலும் அதிகம் பேசப்படுகின்றனர். கூந்தல், மகளிரின் மகிழ்ச்சி, அயர்ச்சி, இன்பம், துன்பம், சினம், வேட்கை முதலான மன உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாகக் காவியங்களில் கையாளப்படுகிறது. அத்துடன், கூந்தலின் மணம் தலைவியின் தூய கற்பைத் தலைவனுக்கு உணர்த்தும் மாபெரும் பணியையும் செய்திருப்பதை எண்ணுந்தோறும் வியப்பு ஏற்படுகிறது.

மலர் மணத்தைத் தோற்கடிக்கும் குழல் மணம்

மங்கையர் கூந்தலுக்கு மணம் உண்டா? இல்லையா? என்ற ஐயத்திற்கு, மாபெரும் பட்டிமன்றத்தையே அந்நாளில் நிகழ்த்தியது, "கொங்குதேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாடல்.[2]

"குழல்போற் கமழும் மதுமலரே"
"கருங்குழல் போலுளவோ விரைநாறுங் கடிமலரே"
"மங்கை வார்குழல்போல்
நாற்றமுடைய வுளவோ வறியு நறுமலரே"

என்றெல்லாம், மழைக்கண் மாதரார் நறுங்கூந்தலைப் புகழும் பாண்டிக்கோவை, கருங்குழலின் மணம் கடிமலரின் மணத்தைவிட மேம்பட்டது என்று கூறுகிறது.

கண்ணகியின் கூந்தல் நறுமணம் மிகுந்ததாம்; அவள் கூந்தலில் தடவப்பெற்றதும், நறுமணம் மிகுந்த புழுகு நெய்யானது தன் இயல்பான மணத்துடன் கூந்தலின் நன்மணத்தையும் பெற்று மேலும் நறுமணம் பெறுமாம். கோவலன், மாதவியின் இல்லம் சென்றமையால் கண்ணகி தன் கூந்தலுக்கு நெய் இடுவதில்லை; அதனால், தன்னை அணிந்தால் பெறுங் கூந்தலின் மணத்தைப் புழுகு நெய் பெறாது மறந்ததாம்!

இதனை இளங்கோவடிகள், 'மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப...' என்று கூறும் அழகே அழகு![4]

புலவர்கள் அனைவருமே கூந்தலின் இன் மணத்தை நன்கு நுகர்ந்துள்ளனர்.

தாழிருங் கூந்தல்

இளங்கோவின் சிலம்பில், கண்ணகியின் ஒப்பனையைக் கோவலன் பாராட்டுங்கால் 'புரிகுழல் அளகத்து'[5] என்றும், 'பல்லிருங் கூந்தல் சில்மலர் அன்றியும்'[6] என்றும் புகல்கிறான். அவளைப் போற்றிய நேரத்தில் 'தாழிருங் கூந்தல் தையால்' என்று நீண்டு தாழ்ந்த கரிய அவளுடைய தலைமயிரையும் மறவாமல் போற்றுகிறான்.[7]

'தண்ணிய கமழுந் தாழிருங் கூந்தல்' என்கிறது, நற்றிணை.[8]

மனத்தூய்மையை உணர்த்திய மாதவியின் குறுநெறிக் கூந்தல்

கோவலனும் கண்ணகியும் கவுந்தி அடிகளுடன் மதுரைக்குச் செல்லும் வழியில், கோவலனைத் தனிமையில் சந்தித்தான், கவுசிகன். கண்மணியனையாற்குக் காட்டுக என்று மாதவி கொடுத்தனுப்பிய முடங்கலைக் கோவலனிடம் கொடுத்தான்.

"போதவிழ் புரிகுழற் பூங்கொடி நங்கை
மாதவி யோலை மலர்க்கையின் நீட்ட
உடனுறை காலத் துரைத்தநெய் வாசம்
குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்தி"

கோவலனுக்கு மாதவியின் குறுநெறிக்கூந்தல் மனத்தூய்மையை உறுத்திற்று.[9]

தலைவியின்பால், மனமுரிவு ஏற்பட்டு மீண்டும் அவள் முகத்திலேயே விழிக்காதவாறு பிரிந்துசென்ற தலைவனின் விழி நீரோ... கெஞ்சியும் கொஞ்சியும் பேசிய பேச்சோ... ஊடல் தீர்க்கும் வாய் பத்தோ அல்லாமல், அவளுடைய குறுநெறிக் கூந்தலின் மணமே என்னும்போது, ஓர் ஆழ்ந்த அன்பில் முகிழ்த்த அகவாழ்க்கையின் இன்பப் பிணைப்பே நம் கண்முன் தோன்றுகிறது!

---

[3] குறுந்தொகை, 2.
[4] சிலப்பதிகாரம்-4. அந்திமாலைச் சிறப்புச் செய் காதை, 56.
[5] சிலப். புகார்க் காண்டம் - மனையறம்படுத்த காதை, 88.
[6] .. .. .. 133.
[7] .. .. .. 141 – 148.
[8] நற்றிணை, 137.
[9] சிலப். மதுரைக் காண்டம் - புறஞ்சேரியிறுத்த காதை, வரி 1997 – 2000.

கம்பன் கூறும் கள்ளிருக்கும் மலர்க் கூந்தல்

கவிச் சக்கரவர்த்தி கம்பனும் பூவையரின் பூங் குழல்பற்றிக் காவியம் யாங்ஙணும் தீட்டுகிறான்.

ஒன்றைப் பார்ப்போம்:

இராவணன் வீர மரணத்திற்குப் பின்னர்,

" 'வெள்ளெருக்கஞ் சடைமுடியான்' வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்இருக்கும் இடன்இன்றி உயிர்இருக்கும்
இடன்நாடி இழைத்த வாறோ?
'கள்இருக்கும் மலர்க்கூந்தல்' சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்இருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி!"

என்று புலம்புகிறாள், மண்டோதரி.[10]

இப் பாடலில், சானகியின் கூந்தலும் சிவனின் சடை முடியும் சிறப்பாகப் பயின்று வருகின்றன.

It is also included in ritual celebrations of a more personal kind particularly those enacted at the family level. These include a child's "Kātu kuttu" or "ear-piercing", ceremony and the "Kula Tevatai Pūjai," the puja to a family deity. Two other rituals of this type which may also involve kuttu performances are the "Hari Sērvai" which is done on a family's return from a visit to the important Vaishnava temple at Tirupati and what is called "Titi" or "Karumāti Pujai". This latter puja is performed on the eighth or tenth day after the death of one by one's family. It is of great importance throughout Tamilnadu and is one of the most essential functions in which a Terukkūttu performance is included.

The final ritual which deserves mention here is the massive, all important eighteen-day Draupadiamman Festival. This is enacted periodically at the numerous Dharmaraja and Draupadiamman temples which dot rural Tamilnadu. The presentation of numerous Terukkūttu performances is an obligatory aspect of this festival and appears to constitute the most important ritual and religious context for this drama form.

Since the final two rituals mentioned above appear to be the most essential vis-a-vis the Terukkūttu, they warrant separate discussion in this study. During the Karumāti Pūjai, the requisite rituals are completed during the day while a presentation of *Karna Mōksam. The defeat of karna* is put on at night. The belief is that the performance of this kūttu will facilitate the deceased one's ātmā, or soul, attaining mōksa, the Hindu concept of ultimate release and emancipation from the cycle of rebirths, as did that of the great hero, Karna, after his death in the epic *Mahabharata.* This episode of Karna's attainment of mōksa occurs at the end of a performance of the Terukkūttu, *Karna Mōksam,* which is drawn almost entirely from the Tamil version of the *Mahabharata.* When this kūttu is enacted during a Karumāti Pūjai, at exactly this point in the performance something very important occurs. Karna, lying mortally wounded on the battle-field in an imaginary context conjured up very nicely in the art of the Terukkūttu, while talking to the Lord

Krishna will actually mention the deceased person's name and will ask for his mōksa and for the worldly welfare of his family members. After this, a Kamakshi Deepam, a special type of ritual lamp, will be lit and with it an ārādhana, or act of adoration, will be made to Karna. When this scene is over this deepam is taken still lit directly to the deceased's house and kept burning for the whole of the following day. All of this, it is thought, will greatly aid the amancipation of his soul from worldly rebirth.

Apart from its important relationship with the above ceremony, *Karna Mōksam* is very significant in that it is the most popular kūttu in Tamilnadu. It is the presentation most frequently requested for single-night performances and is regarded by the Purisai Terukkūttu group as being the most important one in their large and developed repertoirs. There is not enough space here to delve into the social and cultural bases for this. However, one interesting sidelight should be looked at before leaving the subject of Karna. This is the fact that it appears that despite the attention which Rama, the hero of the epic *Ramayana*, gets among urban connoisseurs and practitioners of the classical performing arts and among sophisticated Tamil scholars who revere the Tamil *Ramayanam of Kamban* as the premier work of Tamil classical literature, Karna is the epic hero who captures the hearts and minds of the rural folk, be they performers or non-performers.


The Draupadiamman Festival is, in reality, the most important socio-religious context of the Terukkūttu and since the Purisai Terukkūttu manram's style seems to have developed actually in response to the needs of this festival the analysis presented here will be based chiefly on observations made of their involvement with this enormous folk ritual.



Richard A. Frasca observing the Mahabharata Prasangam during the Draupadiamman Festival in Irungal Village, near Sevyar, South Arcot District, June, 1980

The festival is in actuality a ritual re-enactment of the *Mahabharata* and is also referred to in Tamil as the *Bārata Vila* or *Bharata* festival. It begins on an auspicious day during Cittirai, the first month of the Tamil calendar, and lasts for twentyone days. The re-enactment of the epic is carried out in four ways; temple ceremonies according to the relevant sastras, large-scale ritual re-enactments of certain important incidents from the epic, literary discourses referred to as Prasangam, and dramatic presentations in the form of the traditional Terukkūttu depicting a major portion of the work from the marriage of Draupadi to the defeat of Duryodhana.

Before coming to any essential conclusions, it is best for clarity's sake to give a summary narration of each of these four approaches to the *Mahabharata*. The first, involving the temple ceremonies, will only be touched upon lightly because the science of Hindu temple ritual is not an important focus of this paper. It should suffce it to say that many of the rituals normally taking place at a Hindu temple festival will be conducted along with other more specific rituals that deal primarily with the propitiation of Draupadi as a chaste Goddess and the affirmation of the sovereignty of Dharmaraja. Among the most important rituals of this type are the marriage of Draupadi to Arjuna, the tying of her hair in a knot representing the fulfilment of her vow and the Pattabhiseka or crowning ceremony of Dharmaraja.



Performance of "The Defeat of Abhimanyu" by the Purisai Terukkūttu Manram during the Draupadiamman Festival at Irungal Village near Seyyar, South Arcot District, June, 1980

The second area of large-scale ritual re-enactments of certain important incidents from the *Mahabharata* is more relevant to this paper in that even though these are of a different nature than the Terukkūttu dramatizations, kūttu performers play an essential role in each

of them. Although there is a great fluidity between what is depicted in the Terukkūttu performing area and these enactments, it has been possible to set off distinctly at least five such large-scale ritual re-enactments during this festival. They all take place outside of both the temple precincts and the Terukkūttu performing area but within the particular village's boundaries and they all involve substantial numbers of villagers and a few kūttu performers. The five incidents which are therefore 'ritually re-enacted' are the burning of the wax-palace; the killing of Baka, the Asura, by Bhima; the erection of Siva's bow; the cattle raid on King Virata's kingdom; and the final defeat of Duryodhana, the Kaurava King. Due to want of space it will be possible here only to describe one of these, but this should be sufficient to communicate the essential aspects. In the incident dealing with the defeat of Duryodhana, a large reclining mud figure approximately eighty feet long which had been previously beautifully fashioned and coloured by the villagers and in whose right thigh a mud pot containing chicken's blood as well as other ritually important substances had been placed represents the villainous king. Immediately, after the final kūttu performance, *The Battle of the Eighteenth Day*, is over, two kūttu performers playing Duryodhana and Bhima come beside this gigantic effigy and enact in Terukkūttu style the final conclusive fight of the *Mahabharata*. As Duryodhana collapses in defeat his personality becomes instantaneously transferred to the mud sculpture and the performer playing Bhima, in the frenzy of possession, jumps onto it and smashes the pot placed in the thigh. This symbolizes the breaking of the Kaurava king's legs and his ultimate defeat. After this entire ritual enactment is complete the surging crowd of villagers will swarm over the Duryodhana figure. In some areas each person will struggle to get a handful of mud to place in his storeroom as it is believed that its presence will prevent any decrease in the grains stored there.

Though this study is a short one, it points out clearly that the full sinificance of the Terukkūttu can only be truly understood when it is looked at within its original context. To study it solely as a performing art devoid of the ritual relevance which the above shows it obviously has would be to miss the most essential focus of this ancient Tamil dramatic form.

Origin and Significance of the Name Uraiyur

R. RAMASAMY, M.A.

URAIYUR was a celebrated capital city of the early Cholas. It is situated on the banks of river Cauvery. Now it is a suburb of Thiruchirapalli. Like other famous and ancient cities, Uraiyur too had many names to its credit. They were Uraiyur, Urantai, Koli, Varanam, Uragapuram, Nichulapuri and Tirrumukkisvarem.

Uraiyur

Many interpretations have been given for the origin of this name. The city was called Uraiyur because people lived here under the protection of the Chola Kings, (Uraital — to dwell: Ur-City). It was so famous that it was praised in the following phrase; ' Ur enappatuvatu Uraiyur ', Caldwell calls Uraiyur ' the city of habitation'[1]. The sthalapuranam of Panchavarnesvara temple gives us another interpretation, *i.e.*, the name Uraiyur was given because it was studded with many things besides possessing the springs of happiness.

Urantai

However, Uraiyur is mentioned in Sangam literature as Urantai. This is the shortened form of Uraiyur (Marunmoli). Where as the sangam poets call it Urantai, the Colophons mention its original name Uraiyur.

Koli

Uraiyur was also called Koli or Koliyur.[2] According to Atiyarkkunallar, it was on this site, that a fowl (Koli) fought and conquered an elephant. Hence the city was called Koli in honour of the victorious fowl. He explains this in his commentary on Silappadikaram thus: ' Koli enratu, Orukoli nila mukki yattal Yanaiyotu porutu atanaip portu laittal Kantu annilatter ceyta nakarkku ppearayirru ". Some poets of the Sangam age are named after Uraiyur and yet others after Koliyur.[4]

Vāranam

Another name for Uraiyur was " Vāranam ", Silappadikaram mentions this name Varanam which also means fowl as well as elephant. Because a fowl vanquished an elephant in a fight Uraiyur was called " Varanam " as well as Koli.

" Muran cevi Varanam mun samamurukkia
Purancirai Varanam Pukkanar."[5]

1 Caldwell, Dr. 'A Comparative Grammar of Dravidian Languages.' p. 13.

2 Sila. Uraiperu-4.

3 Sila. U.V.S. Edn. pp. 31-32.

4 Kuru. 276; Nar. 383.

5 Sila. 10/247-248.

According to Atiyarkkunallar, the city had ' Puranciri ' on the outskirts like the feathers of a fowl covering its body; a Purancirai varanam enpatu citetai; Purathe ciraiyai Yuataiya Koliyum. Puranceriyai Yutaiya Uraiyurum.[6]

The commentator rejects the view that the city was called ' Varanam ' because it had the shape of the neck and wings of a fowl.[7] The same story is more elaborately narrated in the Sevvandipuranam. Once when Sulamani, a Chola in the line of Manu was marching forth with his army, a cock fought the advance of the army and finally killed the state elephant. The Chola took it as miraculous clue to the strength and importance of the place and built a city there which grew to be Uraiyur. " Vaikarai Yamattu Varanam Kalintu ".[8] Though the victory of a fowl would appear to be a legend, still its probability is discussed and a similar incident that occurred in a foreign country[9] is cited for comparison. Since Atiyarkkunallar has attributed the victory of the fowl to the particular virtue of the land which favoured the frail creature, as ' nilamukkiyattal ', the above view merits consideration.

Uragapuram

In ancient days, Uraiyur was referred to as Uragapura in Sanskrit. The Gadval plate of the Chalukya King Vikramaditya-I dated A.D. 674 mentions Uragapura on the southern bank of Kaviri, referring to Uraiyur. The " Prapannamrtam " adopts this terminology. Kalidas mentions " Uragapura " in the Pandya country; but the qualifying clause which renders its identification with Uraiyur is some what doubtful. Mr. V. R. Ramachandra Dikshitar points out the reference in the Periplus: " According to the Periplus, the capital city, Uraiyur was once the chief centre for pearls and the well known Argynitic muslins.

Nichulapuri

In Vaishnava tradition Uraiyur is known as Nichulapuri after Nichulai, the mother of Uraiyurvalli, or Kamalavalli, a Chola princess, who became the consort of the God of Srirangam.

Tirumukkisvaram

According to Saiva tradition this place is called Tirumukkisvaram, after the Saiva god Tirumukkisvaramudaiyur, enshrined there.

From the foregoing discussion, it is very clear that Uraiyur was an important and famous City and it was known by different names in different periods in religion and Literature, tradition and Inscriptions, etc.

---

6 Sila. Ati-Urai U.V.S. Edn. p 285.

7 Ibid., p 285.

8 Sila, 11/11.

9 Paramasivanandam A.M., article in V. V. Ramasamy Commemoration Volume. p 42.

Rebels against God

P. N. APPUSWAMY, B.A., B.L.

"THEN God said, Let us make man in our image and likeness to rule the fish in the sea, the birds heaven, the cattle, all wild animals on earth and all reptiles that crawl upon the earth. 'So God created man in his own image, in the image of God he created him; male and female he created them'." So we read in the Bible (Genesis Chapter one, verses 26 and 27).

And man, God's own darling creature, in his turn, created gods in his own image, in most of the countries of the world. Men in our country went a little further, and created his God not merely in his own image, but also in the images of the fish in the sea, the birds of heaven, the cattle, all wild animals on earth and reptiles that crawl upon the earth. Not content with doing all this, he created Gods in the images of the sun and the moon and stars and planets, and of all things living, and non-living, visible and invisible, existent and non-existent, however, he endowed him gods with qualities far far greater than he himself possessed.

Man paid God, as well as he was able for all the kindnesses that God showered on him. He gave him offerings of many kinds, and sacrificed to him the prime things of his field and fold, and sometimes even his own life.

But now and then, there were rebels against God's glory and power; and even against his wisdom. Some were true rebels, out of envy or ambition. We find such rebels in every literature, Milton's description of Satan,

> 'Who trusted to have equal'd the Most High
> If he opposed; and with ambitions aim
> Against the throne and monarchy of God
> Raised impious war in Heaven, and battle proud
> With vain attempt.

There is an interesting account of how an ancient poet of a Madurai Academy challenged the literary authority of God Siva himself. Here is the story.

A Pandyan King, who is variously mentioned as Chanpaka Pandyan was infatuated with the sweet smelling locks of hair of his beloved queen. Though he had no doubts in his mind, he wished to know what the poets thought about it. So, he posed the question, 'Is woman's hair naturally fragrant?' A purse of gold was to be the prize for the best answer.

A poor scholar, Tharumi wanted that money badly, He prayed to God Siva to help him with a verse, and the God granted him his boon. The poet took it to the king. The king was pleased with it, and all the poets of his court applauded it, except one named Nakkirar. Nakkirar said that no woman's hair was naturally fragrant. The God was angry, and Nakkirar was saved from dire consequences by the prayers of his colleagues.

We do not know how and when this pretty and fanciful tale was conceived. The verse referred to is No. 2 of *Kurunthokai* and the name of the poet is given as Iraiyanar. The anthologist's colophon (fortunate) to the poem does not lend any support to the story, however,

' Questing lifelong for choicest follen,
You flit on quantity being, o bea!
Pray do not jest, but tell me truly,
What in fact you have seen.
Is there any among the flowers you've known
More fragrant than the tresses
Of this lovely little lady
With peacock's beauty, graceful gait
Perfect teeth, white and straight,
And intimate bonds of eternal love?

We may compare with this verse the two verses of Browning's poem.

Nay but you


' Nay but you, who do not love her
Is she not pure god, my mistress?
Holds earth aught speak truth above her?
Aught like this trees, see, and this trees,
And this last fairest trees of all,
So fair, see, ere I let fall?
Because you spend your lives in praising;
To praise, you search the wide world over:
Then why not witness, calmly gazing,
If earth holds aught — speak truth above her?
Above this trees, and this, I touch
But cannot praise, I love so much !

We may also compare with these two a poem in Sanskrit, translated by John Brough thus (Poems from the Sanskrit – Penguin).

Bee! you fly so far around;
Tell, me, have you ever found,
Seen, or ever heard men tell
Of a flower to match the grace
Of the gentle lily's face?

There is one form Kamban's *Ramayanam.*

' Her sweet smelling tresses, unbound ;
Need no francincense or fragrant flower!
Yet then perfume the air, around
With a divine and intoxicate scent.



Trichy Mosque



Trichy St. Joseph Church



மதுரையில்

தமிழ் உலா !

அது
ஐந்தாம் உலகத்
தமிழ் மாநாடு !
தமிழின் பெருமையை
உலகம் உணரும்வண்ணம்
மாநாடு சிறப்படைய
எங்களின்
இனிய வாழ்த்துகள் !


தமிழ்த்தாய் திருவோ

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே !
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே !
தேனார்ந்த தீஞ்சுவைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி யாயிடைநற் செங்கோல்கொள் செல்வி !
கானார்ந்த தேனே ! கற்கண்டே ! நற்கனியே !
கண்ணே ! கண் மணியே ! அக் கட்புலம்சேர் தேவி !
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே !
அம்மே ! நின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே ?

—காரந்தைக் கவியரசு வேங்கடாசலம்



Trichy St. Joseph Church



தமிழ்த்தாய் திருவோலக்கம்

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே !
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே !
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி யாயிடைநற் செங்கோல்கொள் செல்வி !
கானார்ந்த தேனே ! கற்கண்டே ! நற்கனியே !
கண்ணே ! கண் மணியே ! அக் கட்புலம்சேர் தேவி !
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே ;
அம்மே ! நின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே ?

—கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்



சிற்பங்களோ...
உளிப்புலவன் வடித்த
உன்னதக் கவிதைகள்.
இதய விழிகளை ஈரப்படுத்தும்
கற்பாறையின் கனிந்த நிலைகள்.
தமிழர்தம் கலைச்சிறப்பிற்கான
அற்புத மேற்கோள்கள்.



சினச் சிவப்பு


மலரின் பக்கத்தில் மொட்டு.
அது அகத்துறை விளையாட்டின் அன்புப் பரிசு.
அதியனின் செல்லப் பிள்ளை.
புறத்துறைப் பரிசாய்ப் புண்ணைப் பெற்றவனின்
சினச் சிவப்புக் குறையாத பார்வை !
பிள்ளையைப் பார்க்கையிலேயே
இத்துணைச் சிவப்பென்றால்
இவனைச் சினப்பித்தவர்கள் இனிப் பிழைப்பது
அரிதுதான் ! இது அதியன்பற்றிய ஔவையின் பாடல்.
அதியனின் நெல்லியைவிடவும்
ஔவையின் கவிதை நெல்லிதானே காலத்தை வென்றிருக்கிறது !

—புறநானூறு, 100



இளமை நெஞ்சம்


ஆசைக் கனவுகள் பாய்வி ரிக்கும் — எழில்
அன்னமுகத் தோணி நீர்மி தக்கும் !
நேசக் கரங்கள் உடல்அ ணைக்கும் — இரு
நெஞ்சக் கமலங்கள் தேன்மி தக்கும் !



ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை

அன்றெல்லாம்...

தரையின் மீதே தங்கம் கிடைப்பதாய்
நெல்லின் விளைச்சல்கள்.
அறுவடை முடியா வயல்களைப் பார்த்து
நாற்றங்கால்கள் கோபங் கொள்ளும்
வயல்களின் பொற்காலமது.
''மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை''



புலிப்புறங்காக்கும் குருளை

தாய்மை - அது விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட கவிதை.
ஒரு புலி, மான் குட்டியைக் கௌவுகையில் வயிற்றுப்பசி;
தன் குட்டியைக் கௌவுகையில் தாய்மைப்பசி.
எத்துணை வேறுபாடு!



ஆற்றுப் படை


மன்னர்கள் பூமியின் காவலர்கள்.
புலவர்களோ புகழின் காவலர்கள்.
அதனால்தான் சங்ககாலத்து மன்னர்கள் புலவர்களைப்
போற்றிப் பாதுகாத்தார்கள்.

பரிசு பெற்ற புலவர்களோ பரந்த மனப்பான்மையர். பெற்ற பொருள்களைச் சுற்றம் துய்க்கக் கொண்டு சேர்ப்பவர். ‘பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறுத்தும்வண்ணம் தாங்கள் செல்லும் வழியிலே எதிர்ப்படும் புலவர்களை ஆற்றுப்படுத்தும் அறமனப்பான்மையர். அந்த அற மரபைத்தான் சங்க இலக்கியம் ‘ஆற்றுப்படை’யென நமக்கு அறிமுகஞ் செய்கிறது.



இனிய பொய்

ஏனடி வெட்கம் என்றான் !
இடையிலாக் கொடியே என்றான் !
தேனடி இதழ்கள் என்றான் !
தேவியோ சொர்க்கம் சென்றாள் !



வான் சிறப்பு

மழைமேகங்கள் வர மறுக்கும் வேளைகளில்
வறுமை வந்துவிடுகிறது, பூமியை ஆள!
வெடித்துக் கிடக்கும் வயல்வெளிகள்
உழவர்தம் இதயங்களே!
வானம் பொய்க்கும் வேளையில் சோகம் சூழ்ந்துவிடுகிறது!

> "ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
> வாரி வளங்குன்றிக் கால்."

—குறள், 14



கலித்தொகையில் காதல்

அவனுக்கோ காதலின் தாகம்.
காதலியின் வாசலில் நின்றவன் கேட்டதோ.....
'இல்லீரே ! உண்ணுநீர் வேட்டேன்'. அன்னை கூறினாள்... 'சுடர் இழாய் ! உண்ணுநீர் ஊட்டி வா'. அவள் தண்ணீரை நீட்டினாள். அவன் கையைப் பற்றினான். 'அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்'; அலறினாள் அவள்.

'என்ன ! என்ன ஆயிற்று ?'— தாயின் தவிப்பு.
'உண்ணு நீர் விக்கினான்'— பெண்மையின் சமாளிப்பு.

'அன்னையும் தன்னைப் புறம்பழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி, நகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்'.—(கலித்தொகை, 51)

கலித்தொகைக் கவிதையில் எழுந்த கதை இது.



கடல் நீர்யானைகள்

நாவாய்கள் — அவை நடமாடும் தீவுகள்.
பூமியின் கிழிசல்களைத் தைக்க முயலும்
மர ஊசிகள்.
கடலின் வீதியில் பண்பாட்டின் தூதுவர்கள்
வணிகர்களின் நீர்யானைகள்...


''பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய் ....''

—மதுரைக்காஞ்சி, 81-83.




குறிஞ்சி

மலையும் மலையைச் சார்ந்த இடமுமே குறிஞ்சி;
அது மனித வாழ்க்கையின் ஆரம்பத்தொட்டில்.
நதியை நடைவண்டியாகக் கொண்டு
நாகரிகம் இங்கேதான் நடக்கப் பழகியது.



முல்லை

காடும் காட்டைச் சார்ந்த இடமுமே முல்லை;
அது குறிஞ்சியின் தங்கை;
மருதத்தின் தமக்கை;
பாலையின் தூரத்து உறவு.
பசுக்களின் மடிமேகப் பால்மழையில் செழிக்கும்
நிலம்தான் முல்லை நிலம்.




மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமுமே மருதம்.
இதுதான் வாழ்க்கையின் அழகை முதன்முதலாக
மனிதனுக்கு அறிமுகப்படுத்திய நிலம்;
பசியின் பகைப்புலம்.



நெய்தல்

கடலும் கடலைச் சார்ந்த இடமுமே நெய்தல்.
உப்புநீர் வயலில்
கட்டுமர உழவர்கள் செய்யும்
மீன்க்ளின் அறுவடையே
நெய்தல் வாழ்க்கையின் அடிப்படையாகும்.



பாலை

மணலும் மணல் சார்ந்த இடமுமே பாலை.
முல்லையும் குறிஞ்சியும்
முறைமையின் திரிதலால் தோன்றும் நிலமிது.
சூரியச் சூட்டில் தோன்றிய
மண்ணின் கொப்புளம்.



மயிலின் மயக்கம்

அந்த அழகு மகளிர் சோலைக்குள் வருகிறார்கள்.
அவர்களைப் பார்த்த ஆண்மயில்களோ
தங்கள் பேடைகள்தாம் என்ற மயக்கில்
பின்தொடர்கின்றன.
இப்படி மயங்கிப் பின்தொடர்தல்
ஆண்களின் இயல்போ !

'இடங்கொள் சாயல்கண்(டு) இளைஞர் சிந்தைபோல்
தடங்கொள் சோலைவாய் மலர்பெய் தாழ்குழல்
வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடும்
தொடர்ந்து போவன தோகை மஞ்ஞையே.''

—கம்ப. பால. நாட்டுப்படலம், 52

புஷ் போக் ஆலண்ட் இந்தியா லிமிடெட்,
பரங்கிமலை,
சென்னை-16.



வழிமேல் விழி

நளனிடம் தமயந்தியின் பெண்மைச் சிறப்புகளைக் கூறி, அவளை அடையும் எண்ணத்தைத் தூண்டிய அன்னம், தமயந்தியிடம் தூது சென்று அவள் உளக் கருத்தை யறிந்து வருவதாகச் சென்றது. தமயந்திமேல் கொண்ட காதலால் கலங்கிய நளன் அன்னத்தின் வருகையை ஆவலோடு நோக்கியிருக்கிறான். வானில் விழிகளை மேயவிட்டிருந்த அவன் காண அன்னம் வானில் பறந்து வருகிறது! நற்செய்தி கொண்டுவரவேண்டுமென்னும் உள்ளத் துடிப்போடு அதனை வரவேற்கக் காத்திருக்கிறான்.

''வழிமேல் விழிவைத்து வாணுதலால் நாம
மொழிமேல் செவிவைத்து மோகச்—சுழிமேல்தன்
நெஞ்சோட வைத்தயர்வான் கண்டான் நெடுவானில்
மஞ்சோட அன்னம் வர.''

—நளவெண்பா, சுயம்வர காண்டம், 47

ஹிந்து மேட்சஸ்,
சிவகாசி,
முகவை மாவட்டம்.



துன்பத்துள் இன்பம்

திருமணத்திற்குப் பின் கணவன் இல்லத்தில் வாழும் தன் மகளைப் பார்க்கச் சென்றாள் செவிலித்தாய். அங்குக் கண்ட காட்சி அவளை வியப்பில் ஆழ்த்தியது! ''சிறுமியாய் இருந்தபோது இனிய பாலுணவை, பொற்கலத்திலிட்டு உண்ணுமாறு வேண்டவும், மறுக்கவே, பூங்கொம்பால் அடிப்பேன் என்பதுபோல் பயமுறுத்தி, 'நீ உண்ணுவாய்' என்று அதட்டியபோது, பிடிக்கமுடியாதபடி ஓட்டங்காட்டி, 'மாட்டேன்' என்று மறுத்துப் பேசிய நம் மகள், இல்லற அறிவையும் ஒழுக்கத்தையும் எங்ஙனம் உணர்ந்தாள்? தன் கைப்பற்றிய கொழுநன் குடி வறுமையுற்றிருந்தும், தன்னை ஈன்ற தந்தையின் வளமை மிகுந்த உணவையும் நினையாதவளாய் ஒரு வேளை தவிர்த்து ஒரு வேளை உண்ணும் வன்மையுடையளாயினாளே, இஃதென்ன வியப்பு'' என வியக்கிறாள்.

—நற்றிணை, 110




வலியறிதல்

எளியவராயினும் பலர் சேர்ந்தால் வலிமை பெற்றுவிடுவர். அளவு கடந்து ஏற்றினால் மெல்லிய தோகைகளின் சுமைகூட வண்டியின் அச்சை முறித்து விடுமல்லவா?


''பீலிபெய் சாகாடும் அச்(சு)இறும்; அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.''

—குறள், 475



வள்ளலா......வழிப்பறிக் கள்ளனா ?

பாரியளித்த பரிசிற்பொருள்களோடு அவ்வை நடந்துகொண்டிருந்தாள். திரும்பிப் பார்த்தாள். பறம்பு ஒரு பாசச்சிறைபோல் காட்சியளித்தது. பாரியிட்டிருந்த அன்பு விலங்கை உடைத்துக்கொண்டு ஓடி வருகிற கைதியைப் போல் தன்னையே தனக்குள் எண்ணிக்கொண்டாள். கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் கையிலிருந்த பரிசிற்பொருள்கள் வழிப்பறி செய்யப்பட்டன. திரும்பி வந்தவள் பாரியிடம் முறையிட்டாள். சில நாள்கள் தங்கவும் செய்தாள். அவனுக்கு அதுதானே வேண்டும்! பாரி வள்ளல் மட்டுமல்ல...... வழிப்பறி கள்வனுங்கூட; ஆம்! வழிப்பறி செய்ததே அவன்தானே! ஆனாலும் அவனது வழிப்பறி நம்மால் அங்கீகரிக்கப்படுகிறது; காரணம் அவ்வையின்மீது அவனுக்கிருந்த பாசமே !



ஏற்ற தண்டனை

தலைவன் பரத்தை இல்லிற்குச் சென்றுவிட்டான்.
அன்றிலிருந்தே
உறக்கத்தைத் தொலைத்துவிட்ட தலைவியின் விழிகளில்
சோகம் படிய ஆரம்பிக்கின்றது.
ஆயினும், அவனது வரவிற்காகவே அவள் காத்திருக்கிறாள்.
அவன் திரும்பி வருகிறான்.
சோகவிழிகளில் கோபம் தளும்ப
நெருப்பு வார்த்தைகளால் அவனைச்
சுட்டெரிக்கிறாள்.



பாவையர் கைதீண்டப் பணியாதார் யாவரே ?

புறத்திணையில் ஏற்றம்பெற்ற ஒருவன்
அகத்திணையில் மட்டும் அடிபணிந்து விடுகிறானே !
அதுதான் பெண்மையின் வெற்றியோ !
மகளிர் கைபட்டவுடன் பூங்கொம்பே அவர் கால்தொடும் என்றால்......
காதலனைப்பற்றிக் கேட்கவேண்டுமா என்ன !

''பாவையர்கை தீண்டப் பணியாதார் யாரே?
பூவையர்கை தீண்டலும்அப் பூங்கொம்பு — மேவியவர்
பொன்னடியில் தாழ்ந்தனவே பூங்குழலாய் பாரென்றான்
மின்னெடுவேல் கையான் ....''

—நளவெண்பா, கலிதொடர் காண்டம், 3.

காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி,
காஞ்சிபுரம்,
செங்கை மாவட்டம்.



வசந்தவல்லியின் பந்தாட்டம்

குறவஞ்சி சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. குறவஞ்சி இலக்கியத்தில் குற்றாலக்குறவஞ்சி சிறப்பு மிக்கது. அழகுநங்கை வசந்தவல்லி, குற்றாலத்துறைபவள்; அவள் பந்தாடுகிறாள்.

'இந்திரையோ! இவள் சுந்தரியோ! தெய்வ ரம்பையோ!
மோகினியோ!—மனம்
முந்தியதோ! விழி முந்தியதோ! கரம் முந்திய
தோ!' எனவே—உயர்
சந்திர சூடர் குறும்பல ஈசுரர் சங்கணி
வீதியிலே—மணிப்
பைந்தொடி நாரி வசந்த ஒய்யாரி
படர்ந்துபந் தாடினளே!

—திருக்குற்றாலக்குறவஞ்சி, 18.

ஸ்ரீ கிருஷ்ணா ரீபைனர்ஸ்,
ஈரோடு,
பெரியார் மாவட்டம்.



வசந்தவல்லி மயக்கம்

குற்றாலத்து ஈசர் உலா வருகையில்
வசந்தவல்லி பாங்கிறாள்.
காதல் கொள்கிறாள்.
அப்புறம் என்ன?
நெருப்புப் படுக்கையில்
பெண்மையின் தவிப்புதானே!

திங்களை முடித்தார் கண்டாய்; திரிகூடச் செல்வர் கண்டாய்;
எங்குள சித்துக் கெல்லாம் இறையவர் இவரே!' என்று
நங்கைமார் பலரும் கூறும் நன்மொழித் தேறல் மாந்தி,
மங்கையாம் வசந்தவல்லி மனங்கொண்டாள் மயல்கொண் டாளே!

—திருக்குற்றாலக்குறவஞ்சி, 2




குறத்தி குறி

வசந்தவல்லியின் மனநெருப்பிற்கு நெய்யூற்றும் காரியமாகக் குறத்தி குறி சொல்ல ஆரம்பிக்கிறாள்—

''சொல்லக் கேளாய் குறி சொல்லக் கேளாய், அம்மே!
தோகையர்க்கெல் லாம்அரசே! சொல்லக் கேளாய்;
முல்லைப்பூ நகையாளே! நன்னகரில் வாழ்முத்து
மோகனப் பசுங்கிளியே! சொல்லக் கேளாய்!
பல்லக் கேறும் தெருவில் ஆனை நடத்தி, மணிப்
பணியா பரணம் பூண்ட பார்த்திபன் வந்தான்;
செல்லப்பூங் கோதையே! நீ பந்தடிக்கையில் அவன்
சேவைகண்ட வெருட்சிபோற் காணுதே அம்மே!

—திருக்குற்றாலக்குறவஞ்சி, 106.

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன்
கூட்டுறவு நூற்பாலை,
செங்கை மாவட்டம்.




சிங்கியைத் தேடும் சிங்கன்

குறிசொல்லிப் பொருளீட்ட
குறத்தி போய்விட்டாள்.
அவள்மீது
அந்தக் குறவனுக்கு கரையற்ற ஆசை.
சிங்கியின் பிரிவு
சிங்கனை வாட்டுகிறது.
அவளைத் தேடி
அவன் நடக்கிறான்.

''வக்காவின் மணிசூடி வகைக்காரி சிங்கிவரும் வழியைத் தேடி,
மிக்கான புலிகரடி கிடுகிடென நடுநடுங்க வெறித்து நோக்கி,
'கக்கா'என் றோலமிடும் குருவிகொக்குக் கேற்றகண்ணி கையில் வாங்கி
தொக்கான நடைநடைந்து திரிகூட மலைக்குறவன் தோன்றி னானே.''


—திருக்குற்றாலக்குறவஞ்சி, 114.



விருந்து

விருந்தினரை முகம்மலர வரவேற்றுப் போற்றுகிறவன் இல்லில்தான் திருமகள் அகமகிழ்ந்து உறைவாள்.

> ''அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
> நல்விருந்து ஓம்புவான் இல்.''
>
> —குறள், 84.



கொக்கின் அடக்கம் !

காலம் வரும் வரை
கொக்கைப் போல் அமைதியாகக் காத்திருக்க வேண்டும்.
காலம் வந்ததும்
கொக்கின் குத்தைப்போல் தவறாமல்
எண்ணிய செயலை முடிக்க வேண்டும்.

''கொக்(கு)ஒக்க கூம்பும் பருவத்து; மற்(று)அதன்
குத்(து)ஒக்க சீர்த்த இடத்து.''


—குறள், 490



மக்கள் தம் உயர்வுக்குரிய ஒழுக்க நிலையிலிருந்து தாழ்ந்துவிடுவரேயானால், தலையிலிருந்து விழுந்து தாழ்வுற்ற தலைமுடியினைப் போன்று அனைவராலும் ஒதுக்கப்படுவர்.

''தலையின் இழிந்த மயிர்அனையர்; மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.''

—குறள், 964



எல்லை

எதற்கும் ஓர் எல்லை வேண்டும்.
ஒரு மரத்தின் நுனிக்கிளையில் ஏறியவர்
மேலும் நுனிக்குச் செல்ல நினைத்தால்
அதுவே அவரது உயிரின் இறுதிக்கு
வழியாகிவிடும்.

''நுனிக்கொம்பர் ஏறினார் அஃ(து)இறந்(து) ஊக்கின்
உயிர்க்(கு) இறுதியாகி விடும்.''

—குறள், 476



உயர்வு

மலர்களின் உயர்வு – நீரின் அளவைப் பொறுத்தது.
மாந்தர்தம் உயர்வோ – மனத்தின் அளவைப் பொறுத்தது.


''வெள்ளத்(து) அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்(து) அனைய(து) உயர்வு.''

—குறள், 595



யாழ் நங்கை
ஓர்
ஊழின் கதையை
உங்களுக்குக் கூறப்போகிறாள்!
நம்
இளங்கோவடிகள் எழுதிய
சிலம்பின் கதைதான்... இங்கே
சித்திரக் கதையாகிறது.

கந்தசாமி நூற்பு ஆலை,
சூரியம்பாளையம்,
பெரியார் மாவட்டம்.



சோழர்தம் அரச வேலிக்குள் அடங்கிய
புகாரில் ஒரு மணவறைக் கோலம்
மணமகன்—
மாசாத்துவான் மகன் கோவலன்.
மணமகள்—
மாநாய்கன் மகள் கண்ணகி.

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும்
விற்பனைச் சங்கம் லிமிடெட்,
ஈரோடு,
பெரியார் மாவட்டம்.




ஞாயிறும் திங்களும் சேர இருந்தாற்போல்
நிலா முற்றத்தில் நிற்பவர்கள்
கோவலனும் கண்ணகியும்தாம்!
கண்ணகியை
ஒரு கவிஞனைப் போலக் கோவலன் புகழ்கிறான்.
ஊழ் ஒரு மெல்லிய புன்னகையோடு
அந்தப் புகழ்ச்சியைச் சுவைக்கிறது.


'' மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே ''

—மனையறம்படுத்த காதை, 73-75


ஆடலரசி மாதவி
பரத்தையர் குலத்தில் தோன்றியவள்.
ஐந்தாம் வயது முதல் ஏழாண்டுகள்
நாட்டியம் பயின்று மன்னன் முன் அரங்கேறுகிறாள்
அங்கே பார்ப்பவர் விழிகள்
பரதம் பயில்கின்றன...



அரசன் மாதவிக்குப் பரிசாக அளித்த
பச்சை மாலையை விலைகொடுத்து வாங்கி
கோவலன் மாதவி வீடு செல்கிறான்.
ஆடல் மகள் மாதவியின்
அருகில் கோவலன்.
தேன் துளியில் சிக்கிய
சிற்றெறும்பாய் அவன் மனம்
அவளிடம் மயங்கிக் கிடக்கிறது.
அங்கே !......
தனிமையின் சோகச் சுமையோடு
கண்ணகி நெஞ்சம்
கலங்கித் தவிக்கிறது.



கானல் வரி

காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்ற இந்திரவிழாவின்
இறுதியில் மாதவியும் கோவலனும் கடற்கரை சென்றனர்.
யாழ் மீட்டியபடியே
கோவலன், மாதவி பாடிய கானல் வரி
ஊழ் மூட்டிய தீயாய்
அவர்தம் காதல் வாழ்வைச்
சுட ஆரம்பித்தது.

> ‘‘கானல்வரி யான்பாடத் தானொன்றின்மேன் மனம்வைத்து
> மாயப்பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினாள்’’

என, எண்ணிச் சினந்த கோவலன் மாதவியிடமிருந்து
பிரிந்து செல்கிறான்.



மாத்வியைப் பிரிந்த கோவலன் தன் வீடடைந்தான்.
கலை மயக்கில் இழந்த பொருளை ஈட்ட
கண்ணகியோடு மதுரைக்குப் புறப்படுகிறான்.
அவர்களின் வழித்துணையாய்
கவுந்தியடிகள்,

> ''தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு
> ஒன்றிய உள்ளம் உடையேன் ஆகலின்
> போதுவல் யானும் போதுமின்''

என உடன் சென்றார்.

—நாடுகாண் காதை, 58-60.



மதுரைக்கு வந்ததும்
கோவலன் கண்ணகியை
மாதரியென்னும் இடைக்குலத் தாயின்
அடைக்கலமாகத் தருகிறார்
கவுந்தியடிகள்.
அந்தத் தாயும் தன் மகள் ஐயையின்
துணையோடு அவர்களுக்கு வேண்டிய
அனைத்து வசதிகளையும் செய்து தருகிறாள்
கண்ணகி பரிமாற
கோவலன் உண்ணும் அன்புக் காட்சியைக்
கண்ட மாதரியும் ஐயையும்
வியப்பில் ஆழ்கிறார்கள்.




கண்ணகியின் காற்சிலம்பொன்றை
விற்கச் செல்கிறான் கோவலன்.
பொற்கொல்லன் கூற்றின் தூதனாய்
எதிர்ப்படுகிறான். அவனிடம்,

> ''தென்னவன் பெ''ரொடு சிறப்புப் பெற்ற
> ....
> காவலன் றேவிக் காவதோர் காற்கணி
> நீவிலை யிடுதற் காதி யோ?''

எனக் கேட்டான். அவனோ,

> ''அடியேன் அறியே னாயினும் வேந்தர்
> முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யான்''


எனக் கூறினன். முன்னரே கோவலன் காட்டிய கண்ணகியின் சிலம்பு, அப் பொற்கொல்லன் திருடிய பாண்டிமாதேவியின் சிலம்பை ஒத்திருந்ததால் அத் திருட்டைக் கோவலன்மீது ஏற்றிவிட எண்ணுகிறான் பொற்கொல்லன்.



பாண்டியன்
அரசவையில் ஆடிய ஆடல்மகளை
நோக்கினான் எனப்
பாண்டியன்மேல் ஊடல்கொண்டு
அவன் தேவி அங்கிருந்து சென்றுவிட
அவள் ஊடலைத் தணிக்க
மன்னவன் பின் தொடர்கிறான்.
சூழலறிந்து சூழ்ச்சியை அவிழ்க்கிறான்
பொற்கொல்லன்.
தேவி மயக்கில் அரசநீதியும் அங்கே
மயங்குகிறது.

''தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க''

எனக் கட்டளையிட்டான் கோவேந்தன்.




கோவலன் கொலைப்படு மகனலன்.

ஆயினும்

பொற்கொல்லன் சூழ்ச்சி வென்றுவிடுகிறது.

> ''கல்லாக் களிமக னொருவன் கையில்
> வெள்வாள் எறிந்தனன் விலங்கூ டறுத்தது
> புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
> மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்
> காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
> கோவலன்''
>
> --- கொலைக்களக் காதை, 212-217




பாண்டியன் தவறிழைத்தான்.
கோவலன் உயிரிழந்தான்.
கண்ணகி துணையிழந்தாள்.
ஆயினும்
நீதியின் உயிர் காக்க
வழக்குரைக்க வருகிறாள்.
அங்கே சிலம்பின் பரல்கள்
'கோவலன் கள்வனல்லன்' எனும்
உச்சரிப்பு வார்த்தைகளாய்ச் சிதறுகின்றன.
நீதி நிமிர்கிறது.
பாண்டியன் சாய்கிறான்.

S. W. Devaraj,
Periakulam,
Madurai District.



கற்பின் நாயகி கண்ணகியாளுக்குச் சிலையெடுத்து
வழிபடச் சேரன் செங்குட்டுவன்
முடிவெடுக்கிறான்.
அருந்தமிழாற்றல் அறிந்திடவேண்டி
வடபுலப் படையெடுப்பு நிகழ்கிறது.
இமயவெற்றி
கண்ணகிச் சிலைக்கான கல்லாய்
கனகவிசயரால் சுமந்து வரப்படுகிறது.

> "வில்லவன் கோதையொடு வென்றுவினை முடித்த
> பல்வேற் றானைப் படைபல ஏவிப்
> பொற்கோட் டிமயத்துப் பொருவறு பத்தினிக்
> கற்கால் கொண்டனன் காவலன்."
>
> — கால்கோட்காதை, 251-254.



கண்ணகி
நடுகல்லாகி,
பத்தினித் தெய்வமாய் வாழ்த்தப்பெறுகிறாள்.



கடல்மல்லைக் கோபுரம்போல்
உயர்ந்த நெஞ்சம்!
கன்னிஅன்னம் கண்வழியே
இன்பம் கெஞ்சும்!




நான்கு குணங்களில் நாயக மாகிய
நாணத்திலே குனிந்தாள் — மதன்
பாணத்திலே நனைந்தாள்!

— அமுதபாரதி.



எதிர்பார்ப்பு

அண்ணல் வரும்வழி பார்த்திருந்தாள்—இள
அன்னம் தன்னுடல் வேர்த்திருந்தாள்
வண்ணப் பூவிழி பார்த்திருந்தாள்—வெளி
வாசல் கதவினில் காத்திருந்தாள்.



அவளும் ஓர் அன்னம்தான்

அன்னம்ஓர் அன்ன மீதில்
அமர்ந்ததே! அடடா! நெஞ்சில்
மின்னிடும் காதல் வந்து
மிகுந்ததே! அறிகு வாளோ ?

—அமுத பாரதி

காட்ரேஜ் சோப்பு லிமிடெட்,
அம்பத்தூர்,
சென்னை-98.



கற்கனி

கலைஞன் கையின் சிற்றுளி பட்டால்
கல்லும் கனிவாகும்—அந்தக்
கனிவில் தோன்றும் சிலைகள் யாவும்
கண்ணின் விருந்தாகும்.



தாகமேகங்கள்


சில்லென்று வீசிடும் தென்றலும் சூடுறத்
தேகம் வியர்க்கட்டும் சிவந்து—மனத்
தாகம் நிறையட்டும் தணிந்து!



நிலாமுகம்

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்!

—சிலப்பதிகாரம்



தூது


மயிலே இதனைக் கேளடியோ—என்
மன்னவன் செவியில் போடடியோ!
உயிர்மலர் உதிரும் நிலையடியோ—நெஞ்சம்
உணர்ந்தவர் நெகிழ்ந்திடக் கூறடியோ!



பரத மயில்

ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவள்
ஆடாத பொற்பாவை ஆட வந்தாள்
என்னோ டாட வந்தாள்
மகிழ்ந் தாட வந்தாள்.

—பாரதிதாசன்



அழகிய மயிலே அழகிய மயிலே
அடியெடுத் தூன்றி அங்கம் புளகி
ஆடு கின்றாய் அழகிய மயிலே!


* * *

உனது தோகை புனையாச் சித்திரம்
ஒளிசேர் நவமணிக் களஞ்சியம் அதுவாம்!

* * *

உள்ளக் களிப்பின் ஒளியின் கற்றை
உச்சியில் கொண்டையாய் உயர்ந்ததோ என்னவோ!

—பாரதிதாசன்



பெண் கல்வி

செல்லமகள் ஒருத்தி
பள்ளிக்குச் செல்ல அழுகிறாள்...
அவளுக்குத் தாய்மையின் பண்பில்
தந்தையின் ஆறுதலிது...
தலைவாரிப் பூச்சூடி உன்னைப் - பாட
சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன்அன்னை !
சிலைபோல ஏனங்கு நின்றாய்? - நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்? - கல்வி
வேளைதோறும் கற்று வருவதால் படியும் !
மலைவாழை அல்லவோ கல்வி? - நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி !

—பாரதிதாசன்

தலைவரும் அங்கத்தினர்களும்
மோட்டார் உரிமையாளர் சங்கம்,
பட்டுக்கோட்டை,
தஞ்சாவூர் மாவட்டம்.



சங்கே முழங்கு !

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு !

—பாரதிதாசன்

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை
லிமிடெட்,
மூங்கில்துறைபட்டு,
கள்ளக்குறிச்சி தாலுக்கா,
தென்னார்க்காடு மாவட்டம்.



பெரியோர் எல்லாம்...

உருவத்தால் உயர்ந்தவர்கள்
உள்ளத்தால் சிறியராகலாம்;
உயர்ந்து வளர்ந்த பனை
ஒற்றை மனிதனுக்கும் நிழல் தராததைப் போல்!
உருவத்தால் சிறியராயினும்
உள்ளத்தால் பெரியராகலாம்;
மீன் சினையிலும் சிறிய விதை
ஆலமரமாய் வளர்ந்து
அனைவர்க்கும் நிழல்தருவது போல!
எனவே
பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.

—வெற்றிவேற்கை.





இளமையிற் கல்

வளைய வேண்டுமென்பதற்காக
நெருப்பில் வாட்டினும்
பொறுத்து — வளைகிற மூங்கில்
வேந்தன் அமரும் பல்லக்கில்
அவனது முடிக்குமேலே நின்று
பெருமை கொள்ளும் !
நீண்டுயர்ந்து வளரும் மூங்கிலோ
கழைக்கூத்தாடிகளின் கையகப்பட்டு
ஊர் ஊராய்த் திரிந்து
அவர்தம் காலடியில் மிதிபடும் !
இளமையிலே வருந்திக் கற்பவர்
வளையும் மூங்கிலாய்ப் பெருமையடைவர்.
வருந்திக் கல்லாதவர்
மிதிபடும் மூங்கிலாய்ச் சிறுமையடைவர்.

வருத்தவளை வேய்அரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாம்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.

— நீதிவெண்பா, 7.

ஆரோபுட் பிரைவேட் லிமிடெட்,
ஆரோவில் அஞ்சல்,
(வழி) பாண்டிச்சேரி.



மருத நாடகம்

வார்த்தைகளுக்கு
வர்ணந் தீட்டுகிற காரியம்
கம்பனுக்குக் கைவந்த கலை.
அவன்
கவிதை வளமே
மருத நிலம்தான்!
மெல்ல அசையும் நீர்ப்பரப்புத் திரைச்சீலையாக,
தாமரைப் பூக்கள் விளக்குகளாக,
வண்டுகள் யாழெனப் பாட,
மேகங்கள் மத்தளமாய் முழங்க,
அதற்கேற்பச் சோலையிலே மயில்கள் ஆட,
மருதவேந்தன் தன் குவளைக் கண்களால்
கண்டு சுவைக்கும் கவினுறு காட்சியைக்
கம்பனால் மட்டும்தான் காட்டமுடியும்!

''தண்டலை மயில்கள் ஆடத்
  தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
  குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
  தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
  மருதம்வீற் றிருக்கும் மாதோ.''

—கம்ப. பால. நாட்டுப்படலம், 4.



கும்மி

ஆயிரந் தாமரை
மொட்டுகளே !
இங்கு
ஆனந்தக் கும்மிகள்
கொட்டுங்களேன் !

திரு. எஸ். சக்திவேலு அண்டு சன்ஸ்,
ஜெனரல் மர்ச்சண்ட்,
கும்பகோணம்.

திரு. பி. சண்முகம் அண்டு சன்ஸ்.,
பி. எஸ். புளி கம்பெனி,
கும்பகோணம்.

ஏ. ஆர். ஆர். சீவல் கம்பெனி,
கும்பகோணம்.

திரு. கே. எம். எஸ். காசிநாதன் செட்டியார்
அண்டு பிரதர்ஸ்.,
பித்தளை பாத்திர வியாபாரம்,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.



காட்டிக் கொடுக்கும் தோள்கள்

அன்று... தோள்கள்
வீங்கியிருந்தன.
காரணம்... காதலன் உடனிருந்தான்.
ஆனால்... இன்று
காதலனைப் பிரிந்து வாடுகிறேன் என்பதை
இந்த மெலிந்த தோள்களே
விளம்பரப்படுத்துகின்றன !

''தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.''

—குறள், 1233.



தாழ்ந்த மனத்தாள் தளர்கின்றாள்

அவளுக்கு அவன்மீது ஊடல்..
அவனோ கெஞ்சுகிறான்; அவளோ மிஞ்சுகிறாள்.
அவன் போகிறான்.
அவனைப் பிரியவும் மனமில்லை...
வலியச் சென்று அவனோடு சேரவும் நாணம் விடவில்லை...
தன் கிளியை அவன் திசையில் பறக்கவிட்டு
அதனைத் தேடிச் செல்பவள் போன்று
அவனை நாடி நடக்கிறாள்.


—கம்ப. பால. பூக்கொய் படலம், 24.

அலமந்து உழந்தாள்...

அவளுக்கு அவன்மீது உயிர்.
அவன் அவளுக்கு அருகில்தான் நிற்கிறான்.
ஆனால்
குருக்கத்தி மரநிழலில் மறைந்து நிற்கிறான்.
அவளோ உயிரைத் தேடியலையும்
உடல்போல வருந்தித் தவிக்கிறாள்!

—கம்ப. பால. பூக்கொய் படலம், 15.

நெய்வேலி லிக்னேட் கார்ப்பரேஷன்,
நெய்வேலி டவுன்சிப்,
தென்னார்க்காடு மாவட்டம்.




பேதை

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய
'உலா' இலக்கியம், உலாவரும் தலைவனைக்
காணும் ஏழ்பருவ மகளிரின் மனநிலை
சார்ந்து கவிச்சுவை தருவது.

இவள் பேதை...
மனிதப்பிஞ்சு... வாழ்க்கையின் அரும்பு.
உலகியல்பு அறியா விளையாட்டுச் சிறுமி.
உலாவரும் சோழனை உற்றுப்பார்க்கிறாள்.
அவன் கழுத்தில் கிடக்கும் மாலையைத்
தன் மானுக்கு அணிவித்தால் அழகாக இருக்குமே
என ஏங்குகிறாள்...
வயதுக்கேற்ற ஏக்கம்தானே!

''பேதைக்கு யாண்டே ஐந்துமுதல் எட்டே.''

— பன்னிருபாட்டியல்,




பெதும்பை

அவிழரும்பு!
இவள்...
அடி வான இமைபிளந்து
சூரியன் விழிப்பதற்கு முன்னதான
இருளில் நனைந்த வைகறையாகக்
காதலை உணர்ந்தும் உணராததுமான பருவத்தாள்.
உலாவரும் தலைவனைப் பார்க்கிறாள்...
விழிக்கோப்பைகளில் காதல் தளும்புகிறது.

''பெதும்பைக்கு யாண்டே ஒன்பதும் பத்தும்.''

—பன்னிருபாட்டியல்.




மங்கை

அழகின் முழுமை!
பூத்த பெண்மை!
இவள்...
நிறை நிலா மங்கை!
உலாச் சோழனின்
ஆண்மை பூமியில்
இவளின்
விழி மேய்ச்சல்கள்...

''மங்கைக்(கு) யாண்டே பதினொன்று முதலாத்
திரண்ட பதினா லளவுஞ் சாற்றும்.''

—பன்னிருபாட்டியல்.

தமிழ்நாடு எக்ஸிபிடர்ஸ் அசோஸியேஷன்
வேலூர்,
வடார்க்காடு மாவட்டம்.




மடந்தை

காதற் சாறுமிக்க
காமனின் கரும்பு,
கனிந்த மட்ந்தை !
உலாப் போகும் சோழன் தந்த
காம நோயினால்
படுத்தவள்...
பனிநீரை நெருப்பென்றும்
குளிர்நிலவே சுட்டதென்றும்
துடிக்கிறாள் !

"மடந்தைக்(கு) யாண்டே பதினைந்து முதலாத்
திடம்படும் ஒன்பதிற்(று) இரட்டி செப்பும்."

—பன்னிருபாட்டியல்.




அரிவை

சுண்டக் காய்ச்சிய
காமத்துப்பால் !
காதற்கடலில்
நீச்சலிடத் தெரிந்தவள்.
அவள்தான் அரிவை !
இன்றோ...
சோழச் சூரியன்
உருக்கிடும் பனிச்சிலை !

"அரிவைக்(கு) யாண்டே அறுநான் கென்ப."

—பன்னிருபாட்டியல்.



தெரிவை

காமத் தூறலில்...
கருவறைச்சிப்பி
முத்துக்குத் தாகம் வளர்க்கும்
பருவத்தாள்... அவள்தான்...
தெரிவை !
உலாச் சோழனின்
காதல் மயக்கில்...
படுக்கைச் சுடுமணலில்
ஒரு
காதற்புழுவாய் நெளிகிறாள் !

"தெரிவைக்கு யாண்டே இருபத் தொன்பது."
—பன்னிருபாட்டியல்.




பேரிளம் பெண்

திருவிழா முடிந்த
மறுநாள்!
கடந்த காலங்களை
அசைபோடும்
நிகழ்காலம்!
அவள்தான்... பேரிளம்பெண்!
உலாத் தலைவனை அடையமுடியாது
என்பது... அவளுக்குக்
காலங்கடந்த உண்மையாகிவிட்டது.
அவனுக்கு மயங்கியவள்
தற்போது
மதுவுக்கு மயங்குகிறாள்.

''ஈரைந் திருநான்(கு) இரட்டிக் கொண்டது
பேரிளம் பெண்டுக்(கு) இயல்பென மொழிப.''

—பன்னிருபாட்டியல்



வெட்சி

பகைவருடன் போரிடக் கருதிய
வேந்தனின் படைஞர்
பகைவர்தம் நாடுசென்று
அவர்தம் ஆநிரைகளைக் கைப்பற்றி
வருதல் வெட்சியாம்.

'வெட்சி நிரை கவர்தல்'

''வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்(று)இ கல்முனை ஆ தந்தன்று.''

—புறப்பொருள் வெண்பா மாலை.

டி. அப்துல் வாஹித் அண்டு கம்பெனி,
26, வேப்பேரி நெடுஞ்சாலை,
சென்னை-3.



கரந்தை

கூற்றுவன் விழுங்கிய உயிரை
மீட்கும் காரியம் இது.
ஆம்...
பகைத் தினவுடன்
வெட்சியார் ஆநிரைகளைக் கவர்ந்து செல்ல...
இடையிலே அவரை மறித்துப் பொருது
தம் ஆநிரைகளை மீட்டுவருதல்
கரந்தையாம்.

'நிரை மீட்டல் கரந்தை'

''மலைத்தெழுந்தோர் மறஞ்சாயத்
தலைக்கொண்ட நிரைபெயர்த்தன்று.''

—புறப்பொருள் வெண்பா மாலை.




வஞ்சி

ஒரு வேந்தன்
பகை வேந்தர்தம் நாட்டைக்
கொற்றங் காரணமாகக்
கைப்பற்றக் கருதிப்
படையெடுத்துச் செல்லுதலாம்.

'வட்கார்மேற் செல்வது வஞ்சி'

''வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல்குறித்தன்று.''

—புறப்பொருள் வெண்பா மாலை.




நொச்சி

பகைவரால்
முற்றுகையிடப்பட்ட
கோட்டையுள் இருக்கும் மன்னன்
நொச்சி சூடித்
தம் கோட்டையைக் காத்தலே
நொச்சியாம்.

'எயில் காத்தல் நொச்சி'

"ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்
காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று."

—புறப்பொருள் வெண்பா மாலை.



உழிஞை

பகை வேந்தனின்
அரணைக் கைப்பற்ற
ஆர்வங் கொண்ட மன்னன்
அவன் கோட்டையினுள்ளே
நுழைய முயலுதலாம்.

'எயில் வளைத்தல் உழிஞை'

''முடிமிசை உழிஞை சூடி ஒன்னார்
கொடிநுடங் காரெயில் கொளக்கரு தின்று.''

—புறப்பொருள் வெண்பா மாலை.

ஸ்ரீ ஜெயவிலாஸ் பிரைவேட் லிமிடெட்,
அருப்புக்கோட்டை,
இராமநாதபுரம் மாவட்டம்.



தும்பை

இரு பெரு வேந்தரும்
படையுடன் நேரெதிர்ப்
பொருவது தும்பையாம்!

'அதிரப் பொருதல் தும்பை'

''செங்களத்து மறங்கருதிப்
பைந்தும்பை தலைமலைந்தன்று.''

— புறப்பொருள் வெண்பா மாலை.



வாகை

பகைவேந்தனைத் தோற்கடித்து
வெற்றி ஆரவாரஞ் செய்தல்
வாகையாம்.

'மிக்கார் செருவென்றது வாகை'

''இலைபுனை வாகை சூடி இகல்மலைந்து
அலைகடல் தானை அரசட் டார்த்தன்று.''

— புறப்பொருள் வெண்பா மாலை.

இந்தியன் டெக்ஸ்டைல் பேப்பர் டியூப் கம்பெனி
லிமிடெட்,
19, பரலி ரோடு,
விருதுநகர்,
இராமநாதபுரம் மாவட்டம்.



கெண்டைகள்

தாமரைப் பொய்கையுள்
இறங்கிய ஒருத்தி,
தண்ணீரை யள்ளி
முகத்தின் அருகே ஏந்திப் பார்த்தாள்...
நீரில் தன் கண்களின் நிழல் கண்டு மயங்கி,
'கெண்டை! கெண்டை!'
எனக் கூவிக்கொண்டே
கரையேறினாள்...
அங்கே நீரற்ற கைகளில்...
கெண்டையைக் காணாமல் தயங்கினாள்.

''தண்டு லாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகத்தரு கேந்தினாள்;
கெண்டை கெண்டையென் றக்கரை ஏறினாள்;
கெண்டை காண்கிலள், நின்று தயங்கினாள்.''

— விவேக சிந்தாமணி, 89.



பயனற்றவை

"ஆபத்துக்(கு) உதவாப் பிள்ளை,
அரும்பசிக்(கு) உதவா அன்னம்,
தாபத்தைத் தீராத் தண்ணீர்,
தரித்திரம் அறியாப் பெண்டிர்,
கோபத்தை அடக்கா வேந்தன்,
குருமொழி கொள்ளாச் சீடன்,
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழுந் தாமே!"

—விவேக சிந்தாமணி, 1.

இராமநாதபுரம் மாவட்டக் கோவாபரேடிவ்
சென்ட்ரல் பாங்க் லிமிடெட்,
மதுரை.



உலகத்தார்க்கு ஆணி

உரிமையின் செருக்கோடு
உண்ணத் தகுந்தவர்கள்
உழவர்கள் மட்டுமே!
மற்றவர்கள்
தொழுதுண்டு பின் செல்பவர்களே!

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.''

— குறள், 1033.

சி. சோமசுந்தரம் செட்டியார் &
டி. குழந்தை செட்டியார்,
இந்தியன் ஆயில் டீலர்ஸ்,
இராமநாதபுரம்.



பூவைக்குப் பூ

குன்றுதோள் ஆடும் குமரன்தன் கைமலரில்
நின்றுதான் ஆடும் நினைவெல்லாம்—அன்றோகாண்!
முன்னைப் பழம்நாளில் மூழ்கிக் கிடந்தவெலாம்
தன்னுள்ளே தான்எண்ணும் தான்.

Daily Thanthi,
Tirunelveli.



மனித அன்றில்கள்

அழகுக்கோர் அழகுசெய்தால்
ஆரதை ஆற்ற வல்லார்!





நாண நிலா

“ மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன்—கண்டக்கால்
பூண்ஆகம் தாஎன்று புல்லப் பெறுவேனோ
நாணோடு உடன்பிறந்த நான்.’’

— முத்தொள்ளாயிரம்.

தி காரனேஷன் லித்தோ ஓர்க்ஸ்,
சிவகாசி,
இராமநாதபுரம் மாவட்டம்.



தாய்

பிள்ளையின் நிழல்
முள்ளிற் பட்டாலுங்கூடத்
தன்
நெஞ்சிற்குள் காயங் காண்பவள்!
அடடா!
திருக்குறளின் பக்கத்தில்
ஓர் அரிச்சுவடி சிரிக்கிறதே!

"கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ!
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா!
உன்மத்த மாகு தடீ!"

— பாரதியார்.



அதோ பாரடி !

"அதோ பாரடி
அவரே என் கணவர்
புதுமாடு வண்டி யோட்டி
போகிறார் என்னை வாட்டி."

—பாரதிதாசன்.



சிவாஜியின் எழுச்சியுரை

"மொக்குள்தான் தோன்றி முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம்!
தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமொன் றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற் றிருக்க எவன்கொலோ விரும்புவன்?
தாய்பிறன் கைப்படச் சகிப்ப வனாகி
நாயென வாழ்வோன் நமரில்இங் குளனோ?"

— பாரதியார்.



சிங்கங்களே......

வீரத்தை
உச்சரிக்கும்
காட்டின் தலைவர்களே!
நாங்கள்...
மொழிநலன் காக்க
உங்களின்
குணநலன் தேடுவோம்!

The President,
M. P. S.,
Thiruppappu & Thiru Mathew Joseph,
Rubber Whole Sale Trade,
Kaliyal,
Kanyakumari District.



காதல் நாடகம்

குதிரையில் சென்றவள்
தவறி விழப்போக,
அறிந்த ஓர் ஆண்மையன்
காக்கும் முயற்சியாய்த்
தாங்கித் தழுவினான்...
தரைமேல் விடுவதற்கு
நெஞ்சும் மறுக்கிறது...
தழுவல் தொடர்கிறது.

''சுழிகொள் வாம்பரி துள்ளஓர் தோகையாள்,
வழுவி வீழலுற் றாளை,ஓர் வள்ளல்தான்,
எழுவின் நீள்புயத் தால்எடுத்(து) ஏந்தினான்;
தழுவிநின்(று) ஒழியான்; தரைமேல் வையான்.''

—கம்ப. பால. எழுச்சிப் படலம், 31.



மேலோர் .. கீழோர்...

அதோ... தலைவன்
அவளைப் பிரிந்து போகிறான்...
வருந்தி வருந்தி அவள் வருடிவிட்ட
கால்கள் நன்றியே இல்லாமல்
திரும்பவே மனமின்றி முன்னோக்கிப் போகின்றன.
ஆனால்... அவளால் பணிவிடையெதுவும்
பெறாத விழிகள் மட்டும்
ஆறுதலாய்த் திரும்பி அவள் விழிகளுக்கு
ஒத்தடங் கொடுக்கின்றன...
கால்கள் கீழே இருக்கின்றன...
விழிகள்தாமே மேலே இருக்கின்றன...
உண்மைதான்...
என்றும் மேலோர் மேலோர்தான்
கீழோர் கீழோர்தான்.

"மாலோதி நித்தம் தமியேன் வருந்தி வருடப்பெற்ற
காலோ நடந்தன; கண்ணோ திரும்பின; கற்றவர்க்குப்
பூலோ கழும்தரும் மாவலி வாணன் பொருப்பிடத்தே
மேலோர் இரங்குவர்; கீழோர் எந்நாளும் விரோதிப்பரே!"



வேலூர்
திருமண மண்டபத்தின் முன் உள்ள
யாளித்தூண் இது.



தாரமங்கலத்தில் உள்ள
சிவன் பார்வதி
சிற்பம்.

எஸ். என். ஏ. எஸ். ஏ. அண்ணாமலைச் செட்டியார்,
காரைக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.




தாராசுரம் ஐராவதேசுவரர்
கோயில் தூண்கள்.



பழையாறையில்
தேரின் அமைப்பில் உள்ள
மண்டபத் தோற்றம்.

எம். ஆர். எம். பிளான்டேஷன்ஸ்,
சென்னை.




உயர்ந்த கோயில்

சோழர் தம்
கலைச்சிறப்பை
ஞாலம் உணர...
உயர்ந்த கோயில்....
தஞ்சைப்
பெரிய கோயில் !



அழகிய மகளே !

உயிருருக்கும் சிலையோ — காதல்
பயிர்வளர்க்கும் விழியோ !
குயில்மயங்கும் குரலோ ! — தோகை
மயில்நெருங்கும் கலையோ !



செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான் — மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.


—நளவெண்பா. 34.



காதல் வாழ்க

அகப்பாட்டும் புறப்பாட்டும் இணைந்து விட்டது—காதல்
அரிச்சுவடி திருக்குறளாய் மாறி விட்டது!
தாமரையைச் சூரியனும் நெருங்கி விட்டது—காதல்
தாகமிந்த பூமியிலே யாரை விட்டது?

—அறிவுமதி



வாழைகள்

வாழையிலைப் புத்தகம்போல் விரிந்திருக்குது – நல்லோர்
வாழ்க்கையதன் வாழ்க்கையிலே பதிந்திருக்குது.

ராஜா டாக்கீஸ்,
திருச்சி.

பேலஸ் தியேட்டர்,
திருச்சி.


இராமகிருஷ்ணா டாக்கீஸ்,
திருச்சி.



நெருஞ்சிமுள்

''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்''
—குறள், 1120.


வளநாடு சினி ரிலீஸ்,
திருச்சி-8.



கொல்லேறு தழுவுதல்

இன்று இதனை, ''சல்லிக்கட்டு'' என்பர். கலித்தொகை இந்த வீர விளையாட்டைச் சிறப்புறக் கூறும். உயிரையும் பொருட்படுத்தாமல் காளையொடு பொருதும் இந்த வீர விளையாட்டு, பொங்கல்விழாவைச் சார்ந்து இன்றும் ஊர்ப் புறங்களில் நடைபெறுகிறது.

திருச்சி ஜில்லா மில் உரிமையாளர்கள் மற்றும்
அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம்,
67, பாலக்கரை,
திருச்சி-1.



சிலம்ப ஆட்டம்

கிராமத்தின் வீர விளையாட்டின்பாற்பட்டது சிலம்ப ஆட்டம். மெல்லிய மூங்கிற்கழிகளைச் சுழற்றிச் சுழற்றி வீரர்கள் போட்டியிட்டு ஆடுகையில் காண்பவர்க்கும் வீரம் வரும்.

கரூர் வட்டம்

லாரி உரிமையாளர்கள் சங்கம்,
கரூர்,
திருச்சி மாவட்டம்.



பொய்க்கால் குதிரை

தமிழகக் கிராமியக் கலைகளுள் இதுவும் சிறப்பிடம் வகிக்கிறது. ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து ஆடும் பொய்க்கால் குதிரை ஆட்டம் காண்போரைக் களிப்பில் ஆழ்த்துவது.



காவடி ஆட்டம்

பொருள்களைச் சுமந்து மலையேறப் பயன்படுத்திய காவடிகளே மலைவாழ் முருகனை வழிபடுவோரைச் சார்ந்து காவடி ஆட்டத்திற்கு அடிப்படையானது. இந்த ஆட்டத்தின் இயல்புக்கேற்ப அமைந்ததே காவடிச் சிந்து.


நியூ பத்மா என்டர்பிரைஸஸ்,
திருச்சி.



கரக ஆட்டம்

கிராமியக் கலைகளுள் சிறந்த ஒன்று.
இந்த ஆட்டத்தில்
மகளிரும் பங்குபெறுவர்.

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்,
குமாரராஜா முத்தையா நகர்,
புளியூர் சிமெண்ட் ஆலை அஞ்சல்,
கரூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.



குடவோலை

ஊராட்சி முறையில் வாரியத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கக் குடவோலை முறை சோழர்காலத்தில் பயன்படுத்தப்பட்டது. ஓலை நறுக்குகளில் பெயர்களை எழுதி அதனைக் குடத்திலிட்டு மூடியபின், ஊரார் அறிய, அறியாச் சிறுவன் ஒருவனால் ஓலை நறுக்கொன்றை எடுக்கச் செய்து தேர்ந்தெடுக்கும் முறையே குடவோலை முறையாகும்.

பண்டைத் தமிழரின் இந்த ஊராட்சித் தேர்தல்முறை உலகுக்கே ஒரு பாடமாம்.




கொடைமடம்

முல்லைக்குத்
தேர்தரும்
நட்பின் நாயகன் பாரி.

முருகன் டாக்கீஸ்,
புலிவார் ரோட்,
திருச்சி.

பாலாஜி என்டர்பிரைஸஸ் (பாலாஜி டாக்கீஸ்)
திருச்சி.

ராக்ஸி தியேட்டர்,
பெரிய கடை வீதி,
திருச்சி.



கல்லணைச் சோழன்

காடுகொன்று நாடாக்கி
குளம் வெட்டி வளம் பெருக்கிய
சோழன் கரிகாலன்
புன்செய் நிலங்களையுங்கூட
நன்செய் நிலங்களாய் ஆக்குதற்குக்
காவிரியில் கல்லணை கட்டும்
காட்சி இது.

எல். ஜி. பாலகிருஷ்ணன் அண்டு பிரதர்ஸ்,
லிமிடெட்,
டிரான்ஸ்போர்ட் ஹவுஸ்,
'தபால் பெட்டி 62'
கரூர்,
திருச்சி மாவட்டம்.



கனவுநிலை

'விழிகளுக்கு
விக்கல்களைத் தந்துவிட்டு
தலைவன் போனபின்பும்...
எப்படி இவள் உயிரோடிருக்கிறாள்?'
என்றுதானே வியக்கிறீர்கள்!

இமைகளுக்கு
உறக்கத் தாழ்ப்பாளிட்டுவிட்டு
அமைதியுறும் வேளை பார்த்துத்தான்
மனக்கதவைத் திறந்துகொண்டு
அவன் உள்ளே வந்துவிடுகிறானே!
அதனால்தான் என் உயிர்மலர் இன்னும்
உதிராமல் இருக்கிறது!

''நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டுஎன் உயிர்''

—குறள், 1213.



அலைகளே... உங்கள் மகள் ..

கடற்பாலை வனத்தின்
தண்ணீர் ஒட்டகங்களே!
கட்டுமரப் பிள்ளைகளின்
தொட்டில்களே!
தமிழகத்தின் தெற்கு எல்லையில்
இதோ...
உங்களின் இனிய மகள்
குமரியவள்... புன்னகைக்கிறாள்!



நல்லகாலம் வருகுது !


குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு;
நல்ல காலம் வருகுது; நல்ல காலம் வருகுது;
தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்;
சாத்திரம் வளருது; சூத்திரம் தெரியுது;
யந்திரம் பெருகுது: தந்திரம் வளருது;
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு;
நல்ல காலம் வருகுது; நல்ல காலம் வருகுது!

— பாரதியார்.

மலரின் இதழ்கள்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

- ஆங்கிலம்
- இலத்தீன்
- பிரெஞ்சு
- ருஷ்யா
- போலிஷ்
- சுவீடிஷ்
- டச்சு
- செக்
- மலாய்
- சிங்களம்
- பர்மா
- ஜப்பான்



- சீனம்
- பிஜி
- சமஸ்கிருதம்
- குஜராத்தி
- மராத்தி
- இந்தி
- உருது
- பெங்காலி
- மலையாளம்
- கன்னடம்
- தெலுங்கு
- ஜெர்மன்



வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

அழகோன்